## முன்னுரை

ஆதியாகமம் புஸ்தகத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய சபையின் வரலாறு தனிப்பட்ட குடும்பங்களில் ஆரம்பமாயிற்று. யாத்திராகமம் புஸ்தகத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய சபையார், ஒரு தேசமாக வளர்ச்சி பெறுகிறார்கள்.

ஆதியாகமம் புஸ்தகத்திலே, தேவன் இந்த பூமியை தமக்காக எவ்வாறு உருவாக்கினார் என்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் புஸ்தகத்திலே, தேவன் இஸ்ரவேலை தமக்காக எவ்வாறு உருவாக்கினார் என்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் நடப்பிக்கிற ஒவ்வொரு கிரியையும், அவருக்கு துதியையும் மகிமையையும் கொடுக்கிறது. "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" (ஏசா 43:21).

ஆதியாகமம் புஸ்தகத்தில் இந்த உலகமானது சரித்திரத்திலே சிருஷ்டிக்கப்படுகிறது. யாத்திராகமம் புஸ்தகத்தில் இந்த உலகம் அடையாளத்தில் இரட்சிக்கப்படுகிறது.

யாத்திராகமம் என்னும் பெயருக்கு வெளியே புறப்பட்டுப்போதல், பிரயாணம்பண்ணுதல் என்று பொருள் சொல்லலாம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போன சம்பவங்கள் யாத்திராகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு புது சிருஷ்டியாக உருவாக்கப்படுகிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்முடைய வாக்குத்தத்தங்களை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறுகிறது (யாத் 1-19 ஆகிய அதிகாரங்கள்).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறார்கள் (யாத் 20-40 ஆகிய அதிகாரங்கள்).

மோசே யாத்திராகமம் புஸ்தகத்தின் ஆசிரியர். இந்த புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு சம்பவத்திற்கும், மோசே கண்ணாரக்கண்ட சாட்சியாகவும், காதார கேட்ட சாட்சியாகவும் இருக்கிறார்.

யாத்திராகமம் புஸ்தகத்தில் கிறிஸ்துவுக்கு அடையாளங்களாக ஒரு சிலரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் மற்ற ஆகமங்களில், கிறிஸ்துவுக்கு அடையாளமாக சொல்லப்பட்டிருப்பதைவிட, யாத்திராகமம் புஸ்தகத்தில் அவருக்கு அடையாளமாக அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே இயேசுகிறிஸ்துவைக் குறித்தும் எழுதியிருக்கிறார். "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே" (யோவா 5:46).

மனுஷன் தேவனோடு ஒப்புரவாவதற்கும், மனுஷன் தேவனோடு உடன்படிக்கைக்குள் வருவதற்கும், அவரோடு ஐக்கியமாகயிருப்பதற்கும் மத்தியஸ்தர் ஒருவர் தேவைப்படுகிறார். ஆதியாகமம் புஸ்தகத்தில் அந்த மத்தியஸ்தரைப்பற்றி அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள், புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியங்களை விளக்குவதற்கு, நமக்கு அதிகமாய் உதவிசெய்கிறது.

கி.மு. 1688 ஆவது வருஷத்தில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டது. நியாயப்பிரமாணத்திற்கு முன்னுரையாக சீனாய் மலையிலிருந்த 11 மாத காலத்தில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கலாம்.

மோசே இஸ்ரவேலருக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தவர். எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தாரை விடுவித்து, வனாந்தரத்தில் வழிநடத்திச் சென்றவர்.

பூர்வகாலத்தில் பஞ்சாகமம் முழுவதும் ஒரே புஸ்தகமாக இருந்தது. இதை ஒரே சுருளில் எழுதி வைத்திருந்தார்கள். இந்தப் புஸ்தகம் "ஹா-தோரா" என்று அழைக்கப்பட்டது. இதற்கு நியாயப்பிரமாணம் என்று பொருள். சேபேர் என்னும் எபிரெய வார்த்தைக்கு புஸ்தகம் என்று பொருள். "சேபேர் ஹா-தோரா" என்பது இந்தப் புஸ்தகத்தின் பெயர். இதற்கு "நியாயப்பிரமாணப் புஸ்தகம்" என்று பொருள்.

காலப்போக்கில் ஐந்தாகமப் புஸ்தகம் ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் அந்தப் புஸ்தகத்தின் முதல் வார்த்தையே பெயராயிற்று.

யாத்திராகமம் புஸ்தகத்தின் பெயர் "எல்லே-ஷேமோவ்த்" "பெயர்களாவன" என்பது இதன் பொருள். சிலர் யாத்திராகமம் புஸ்தகத்தை "ஷேமோவ்த்" "பெயர்கள்" என்று அழைக்கிறார்கள்.

யாத்திராகமம் புஸ்தகத்தின் முதல் வசனத்தை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அது ஆதியாகமம் புஸ்தகத்தின் தொடர்ச்சி என்பது தெரியவருகிறது. இஸ்ரவேலரின் வரலாற்றில் மற்றுமொரு முக்கியமான நிகழ்ச்சியை இந்தப் புஸ்தகம் விவரிக்கிறது.

ஆதியாகமம் புஸ்தகத்தில் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் யாத்திராகமம் புஸ்தகத்தில் வரலாற்று நிகழ்ச்சிகளாக நிறைவேறுகின்றன.

யோசேப்பின் காலத்திலிருந்து இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தில் இருக்கிறார்கள். எகிப்திலிருந்து வெளியேறிய காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எவ்வாறு பலுகிப் பெருகியிருக்கிறார்கள் என்பதை யாத்திராகமம் விளக்குகிறது.

யாத்திராகமம் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் முக்கியமான நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. எகிப்தில் இஸ்ரவேலரின் அடிமைத்தனமும், பாடுகளும்.
2. தேவனுடைய வல்லமையினால் இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்திலிருந்து விடுவிக்கப் படுதல்.
3. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்திலிருந்து புறப்பட்டுப்போதல்.
4. இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல்.
5. ஆசரிப்புக் கூடாரம் கட்டுதல்.
6. ஆரோனுடைய ஆசாரியத்துவத்தின் ஆரம்பம்.
7. மோசேயினுடைய ஜீவியத்தின் ஆரம்பப் பகுதி.
8. எகிப்திலிருந்து இஸ்ரவேலரை விடுவிப்பதற்கு தேவன் மோசேயை அழைப்பது.
9. பார்வோன்மீதும், அவன் ஜனங்கள்மீதும் வந்த வாதைகள்.
10. யூததேசம் ஸ்தாபிக்கப்பட்ட விவரம்.
11. இஸ்ரவேல் தேசத்தாரின் அரசியல், மார்க்க அமைப்பு.
12. புறஜாதியார் மத்தியில் இஸ்ரவேல் ஜனத்தார் தேவனுடைய ஜனமாகவும், வல்லமையுள்ள தேசமாகவும் இருப்பது.

யாத்திராகமம் புஸ்தகத்தை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. சரித்திரப்பகுதி (யாத் 1:1-19:25)
2. நியாயப்பிரமாணப்பகுதி (யாத் 20:1-40:38).

யாத்திராகமம் புஸ்தகம் எழுதப்பட்டிருப்பதற்கான நோக்கங்களின் விவரம் வருமாறு :

1. தேவனுடைய உடன்படிக்கையின் நிறைவேற்றமாக இஸ்ரவேலரின் வரலாறு தொடருகிறது.
2. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு அவர்களுடைய சந்ததியைப் பற்றி கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசனங்களும்.
3. மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த காலமும், சூழ்நிலைகளும், நோக்கமும்.
4. இஸ்ரவேல் ஒரு தேசமாக உருவாகிறது.
5. தம்முடைய ஜனங்கள் மத்தியில் வாசம் பண்ணும் தேவனைப் பிரத்தியட்சமாக ஆராதிக்கும் முறைமைகள்.

## 1 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது தமது அன்பையும் கிருபையையும் வெளிப்படுத்துகிறார். அவர்களை திரளாய் பலுகிப் பெருகப்பண்ணுகிறார் (யாத் 1:1-7).

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்கு செய்கிறார்கள். எகிப்தியர்கள் அவர்களை ஒடுக்கி அடிமைப்படுத்துகிறார்கள் (யாத் 1:8-14). அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகளை கொன்றுபோடுகிறார்கள் (யாத் 1:15-22).

### எகிப்துக்குப்போன இஸ்ரவேலர் யாத் 1:1-7

**யாத் 1:1. எகிப்துக்குப் போன இஸ்ரவேலுடைய குமாரரின் நாமங்களாவன: ரூபன், சிமியோன், லேவி, யூதா,**

**யாத் 1:2. இசக்கார், செபுலோன், பென்யமீன்,**

**யாத் 1:3. தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவைகளே.**

**யாத் 1:4. இவர்கள் யாக்கோபுடனே தங்கள் தங்கள் குடும்பத்தோடுங்கூடப் போனார்கள்.**

**யாத் 1:5. யோசேப்போ அதற்கு முன்னமே எகிப்தில் போயிருந்தான். யாக்கோபின் கர்ப்பப்பிறப்பாகிய யாவரும் எழுபது பேர்.**

**யாத் 1:6. யோசேப்பும் அவனுடைய சகோதரர் யாவரும், அந்தத் தலைமுறையார் எல்லாரும் மரணமடைந்தார்கள்.**

**யாத் 1:7. இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர்களால் நிறைந்தது.**

எபிரெய மொழியில் யாத்திராகமம் புஸ்தகத்தின் முதலாவது வார்த்தை "வேலே" என்பதாகும். இது இரண்டு வார்த்தைகளை இணைக்கும் சொல். இந்த வார்த்தை ஆதியாகமம் புஸ்தகத்தையும், யாத்திரகாமம் புஸ்தகத்தையும் இணைக்கிறது. ஆதி 15:13-16; ஆதி 46:3-4; ஆதி 50:24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகளின் நிறைவேற்றத்தை யாத்திராகமம் புஸ்தகத்தோடு இந்த வார்த்தை இணைக்கிறது. லேவியராகமம் புஸ்தகமும், எண்ணாகமம் புஸ்தகமும் இதுபோன்றே துவங்குகிறது. ஆகையினால் ஆதியிலே பஞ்சாகமம் முழுவதும் ஒரே புஸ்தகமாக இருந்திருக்க வேண்டும்.

யாக்கோபின் பன்னிரண்டு குமாரரும் எகிப்து தேசத்திலே இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலரின் முற்பிதாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். "ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்றார்கள்" (அப் 7:8).

இஸ்ரவேலின் பன்னிரண்டு முற்பிதாக்களுடைய பெயர்களும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"எகிப்துக்குப் போன இஸ்ரவேலுடைய குமாரரின் நாமங்களாவன: ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன், பென்யமீன், தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவைகளே. யோசேப்போ அதற்கு முன்னமே எகிப்தில் போயிருந்தான்" (யாத் 1:1-5).

"நாமங்களாவன" என்பதற்கான எபிரெய வார்த்தை "வே-எல்லே-ஷேமோத்" என்பதாகும். எபிரெய மொழியில் யாத்திராகமம் புஸ்தகத்திற்கு இந்தப் பெயரே வழங்கப்பட்டிருக்கிறது. ஆங்கில மொழியில் "எக்ஸோடஸ்" என்னும் பெயர் செப்துவஜிந்த் கிரேக்க பழைய ஏற்பாட்டிலிருந்து வந்ததாகும். கிரேக்க மொழியில் வெளியே புறப்பட்டுப்போதல் என்பதற்கான வார்த்தை "எக்ஸோடஸ்" என்பதாகும். யாத்திராகமம் புஸ்தகத்தில் இஸ்ரவேல் ஜனம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப் போவதாக 35 தடவைகள் கூறப்பட்டிருக்கிறது.

யாக்கோபு தன்னுடைய குமாரரோடும், அவர்களுடைய குடும்பத்தாரோடும் எகிப்து தேசத்திற்குப்போனார். யாக்கோபின் கர்ப்பப்பிறப்பாகிய யாவரும் எழுபது பேர் (யாத் 1:4,5). ஆரம்பத்தில் எழுபது பேராயிருந்தவர்கள், இப்போது மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகி பலத்திருக்கிறார்கள். எகிப்து தேசம் அவர்களால் நிறைந்திருக்கிறது.

யோசேப்பும் அவருடைய சகோதரர் யாவரும், அந்தத் தலைமுறையார் எல்லாரும் மரணமடைகிறார்கள் (யாத் 1:6). யாக்கோபின் குமாரர்கள் எல்லோரும், ஒரே காலத்தில் மரித்துப்போகிறார்கள். பென்யமீன் மாத்திரமே யாக்கோபின் குமாரரில் குறைந்த வயதுள்ளவனாயிருக்கிறான். மற்ற எல்லா சகோதரருக்கும் சுமார் ஏழு வயது மாத்திரமே வித்தியாசம் இருக்கிறது. ஆகையினால் யோசேப்பின் சகோதரர் யாவரும், ஒரே காலத்தில் மரித்துப்போகிறார்கள்.

எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் அதிகமாய் பெருகியிருக்கிறார்கள். அவர்களுடைய பெருக்கத்தை விளக்குவதற்கு, நான்கு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. பலுகினார்கள் 2. பெருகினார்கள் 3. பலத்திருந்தார்கள் 4. நிறைந்திருந்தார்கள்.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு ஏற்கெனவே வாக்குப்பண்ணின பிரகாரம், "இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர்களால் நிறைந்தது" (யாத் 1:7).

## இஸ்ரவேலருக்கு நெருக்கம் யாத் 1:8-14

**யாத் 1:8. யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.**

**யாத் 1:9. அவன் தன் ஜனங்களை நோக்கி: இதோ, இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள்.**

**யாத் 1:10. அவர்கள் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால், அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி, நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, தேசத்தை விட்டுப் புறப்பட்டுபோகாதபடிக்கும், நாம் அவர்களைக்குறித்து ஒரு உபாயம் பண்ணவேண்டும் என்றான்.**

**யாத் 1:11. அப்படியே அவர்களைச் சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைத்தார்கள்; அப்பொழுது அவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டினார்கள்.**

**யாத் 1:12. ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள். ஆகையால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து எரிச்சல் அடைந்தார்கள்.**

**யாத் 1:13. எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடுமையாய் வேலைவாங்கினார்கள்.**

**யாத் 1:14. சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், அவர்களுக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள்; அவர்களைக்கொண்டு செய்வித்த மற்ற எல்லா வேலைகளிலும், அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே திரளாய்ப் பெருகியிருக்கிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்தில் குடியேறின காலத்திலிருந்து, இந்தக் காலம் வரையிலும், அந்த தேசத்தில் சந்தோஷமாயும், சம்பூரணமாயும் ஜீவிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்து தேசத்திலே இதுவரையிலும் எந்த ஒரு பிரச்சனையும் வரவில்லை.

இந்தக் காலத்தில், யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றுகிறான். இந்த ராஜா மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு பிரச்சனைகள் வருகிறது. அவர்கள் நெருக்கப்படுகிறார்கள். இதுவரையிலும், எகிப்து தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு குடியேறின தேசமாயிருந்தது. இப்போதோ அது அவர்களுக்கு அடிமைத்தனத்தின் தேசமாயிற்று.

புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றுகிறான். ஏசா 52:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அசீரியன் இந்தப் புதிய சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தவன். அவன் எகிப்தை ஜெயித்தான். ஒருவேளை இவன் இரண்டாம் ராமசேஸ் ஆக இருக்கலாம். இவனுடைய குமாரன் மேநெப்தா. இஸ்ரவேல் புத்திரர் எகிப்தை விட்டு வெளியேறிய போது இவன் எகிப்தின் பார்வோனாக இருந்திருக்க வேண்டும்.

எகிப்தின் புதிய ராஜா யோசேப்பை அறியாதவன். இஸ்ரவேல் ஜனம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப் போவதற்கு 144 வருஷங்களுக்கு முன்பாகவே யோசேப்பு மரணமடைந்தார். மோசே பிறப்பதற்கு 64 வருஷங்களுக்கு முன்பாக யோசேப்பு மரித்தார். கடந்த 64 வருஷ காலங்களில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான்.

மோசே பிறந்தபோது, இஸ்ரவேலரின் அடிமைத்தனப் பிரமாணம் அமுலில் இருந்தது. (யாத் 1:8-22; யாத் 2:1-9). பார்வோனின் குமாரத்தி மோசேயை எடுத்து வளர்த்தாள். மோசே வனாந்தரத்திலிருந்து மறுபடியும் எகிப்துக்கு வந்து இஸ்ரவேலை விடுதலை பண்ணி அழைத்துச் சென்றபோது, பார்வோனின் குமாரன் மேநெப்தா எகிப்தின் ராஜாவாக இருந்திருக்க வேண்டும்.

எகிப்து தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டானபோது, யோசேப்பு எகிப்தியருக்கு மிகப்பெரிய உதவியை செய்திருக்கிறார். ஆனால் காலம் செல்ல செல்ல, எகிப்தியர்கள் யோசேப்பு தங்களுக்கு செய்த உதவிகளை மறந்துவிடுகிறார்கள். எகிப்து தேசத்தின் புதிய ராஜாவாகிய பார்வோன்கூட, யோசேப்பை அறியாதவனாயிருக்கிறான்.

நாம் இந்த உலகத்தில் மனுஷருக்காக மாத்திரம் வேலை செய்தால், நாம் மரிக்கும்போது, நாம் செய்த வேலைகளும் மரித்துப்போகும். ஜனங்கள் மரித்துப்போனவர்களை மறந்துவிடுவதுபோல, நாம் செய்த வேலைகளையும் மறந்துவிடுவார்கள். நாம் இந்த உலகத்தில் கர்த்தருக்காக ஊழியம் செய்தால், அந்த ஊழியம் நிலைத்திருக்கும்.

"பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடையகிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று" (வெளி 14:13).

எகிப்து தேசத்தின் புதிய ராஜா இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்கவேண்டுமென்றும், அவர்களை நெருக்கி கட்டுப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானம்பண்ணுகிறான். அதற்கான காரணத்தையும் அந்த ராஜா எகிப்து தேசத்தாருக்கு சொல்லுகிறான்.

எகிப்து தேசத்தின் புதிய ராஜா, தன் ஜனங்களை நோக்கி: "இதோ, இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள். அவர்கள் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால், அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி, நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, தேசத்தை விட்டுப் புறப்பட்டுபோகாதபடிக்கும், நாம் அவர்களைக்குறித்து ஒரு உபாயம் பண்ணவேண்டும்" (யாத் 1:9,10) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலுக்கு எதிராக எகிப்தியர் பண்ணிய உபாயம் அவர்களுக்கே கேடாக அமைந்தது. இஸ்ரவேலை விடுதலை செய்து, வழிநடத்திய மோசேயை பார்வோனின் அரண்மனையிலுள்ளவர்கள் வளர்த்தார்கள். அவருக்கு கல்வி கற்றுக் கொடுத்தார்கள். அவரை நல்ல தலைவராக ஆயத்தம் பண்ணினார்கள் (ஏசா 19:11,13, சங் 78:12-13).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தாரைவிட பலசாலிகளாயிருக்கிறார்கள் என்று எகிப்து தேசத்து ராஜா சொல்லுகிறான். ஆனால் உண்மையில், இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரைவிட பலசாலிகளல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆடுகளை மேய்த்துக்கொண்டு, தங்களுக்கு கிடைக்கும் தானியத்தை புசித்து ஜீவனம் பண்ணுகிறார்கள். மேலும், மேய்ப்பர்கள் எகிப்தியருக்கு அருவருப்பானவர்கள்.

ஆனாலும், எகிப்தின் புதிய ராஜா இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கவேண்டும் என்பதற்காக, அவர்களைப்பற்றி தன் ஜனத்தாரிடம் பொய்யான குற்றச்சாட்டுகளை சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரைவிட ஏராளமானவர்களாகவும் பலத்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே குடியிருந்தாலும், அந்த தேசம் அவர்களுக்கு சொந்த தேசமல்ல. கானான் தேசமே இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்த தேசம். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைப்பற்றியும், எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு திரும்பிப்போவது பற்றியும், அவ்வப்போது தங்களுக்குள்ளே பேசிக்கொள்வது வழக்கம்.

எகிப்து தேசத்தின் புதிய ராஜா, இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு திரும்பிப்போவது பற்றி தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதை, தன்னுடைய வேவுகாரர் மூலமாக கேள்விப்படுகிறான். அவன் இஸ்ரவேல் புத்திரரை எப்படியாவது ஒடுக்கவேண்டுமென்று ஏற்கெனவே தீர்மானம்பண்ணியிருக்கிறான். இப்போது, இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குப் போகவேண்டுமென்று தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதையும், எகிப்தின் ராஜா அவர்களுக்கு விரோதமாக திருப்புகிறான்.

எகிப்து தேசத்திற்கு விரோதமாக யுத்தமுண்டானால், இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரின் பகைஞரோடே கூடிக்கொண்டு, எகிப்தியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப் போய்விடுவார்கள் என்று எகிப்தின் புதிய ராஜா தன் ஜனங்களை நோக்கி சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திற்கு துரோகிகள் என்றும், அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்றும் பார்வோன் இஸ்ரவேலரைக் குறித்து சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து ஒரு உபாயம் பண்ணவேண்டும் என்றும், அவர்களை எப்படியாவது ஒடுக்கவேண்டும் என்றும் அவர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்றும் எகிப்தின் ராஜா திட்டமிடுகிறான். இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்காவிட்டால் அவர்கள் எகிப்து தேசத்திற்கே ஆபத்தாயிருப்பார்கள் என்பது பார்வோனுடைய பொய் பிரச்சாரம்.

எகிப்து தேசத்தின் புதிய ராஜா சொன்ன ஆலோசனையின் பிரகாரம், எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைக்கிறார்கள்; அப்பொழுது அவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டுகிறார்கள் (யாத் 1:11).

விசாரணைக்காரர் என்பதற்கான எபிரெய வார்த்தை "சாரே - மிசீய்ம்" என்பதாகும். இவன் வேலைகள் அல்லது கப்பம் கட்டுதலுக்குத் தலைவன். இந்த விசாரணைக்காரர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வேலைகளைப் பிரித்துக் கொடுப்பார்கள். அவர்களிடமிருந்து கப்பம் வசூலித்துத் தருவார்கள்.

"பண்டசாலைப் பட்டணங்கள்" என்பது சேமிப்பு களஞ்சியங்கள். இவற்றில் தானியங்களையும், யுத்த தளவாடங்களையும் சேமித்து வைப்பார்கள் (1இராஜா 9:19; 2நாளா 8:4; 2நாளா 32:28)

"பித்தோம்" என்பது தும் என்னும் தெய்வத்தின் பட்டணம். இது பத்துமோஸ் என்று அழைக்கப்பட்டது.

"ராமசேஸ்" என்னும் பட்டணத்தை இரண்டாம் ராமசேஸ் கட்டினபடியால், இதற்கு இப்பெயர் வழங்கப்படலாயிற்று. இது கோசேனின் தலைநகரம். இதற்கு ஒன் ஹெலியோபோலிஸ் என்னும் மறுபெயர்களும் உண்டு. இதற்கு சூரியனின் பட்டணம் என்று பொருள்.

ஆனால் எகிப்தியர்களால் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்க முடியவில்லை. எகிப்தியர்கள் இஸ்ரவேலரை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகுகிறார்கள். ஆகையால் எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து எரிச்சல் அடைகிறார்கள் (யாத் 1:12).

உபத்திரவம் ஜனங்களையும், தேசத்தையும், சபையையும் பலப்படுத்தும். உபத்திரவப்படும் ஜனங்கள் உபத்திரவத்தை எதிர்த்து நிற்பதற்குப் பழகிக்கொள்வார்கள். உபத்திரவப்படுத்துபவர்களை அகற்றுவதற்கு வலிமை பெறுவார்கள் (யாத் 1:12). உபத்திரவத்தினால் சபை எப்பொழுதும் வளர்ச்சி பெற்றிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் பலுகிப்பெருகக்கூடாது என்பது எகிப்தியரின் திட்டம். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தொடர்ந்து பலுகிப்பெருகிக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேலரை ஒடுக்கினாலும் அவர்கள் பலுகிப்பெருகுகிறார்கள்.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குவதற்கு புதிய உபாயங்களை பண்ணுகிறார்கள். எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடுமையாய் வேலைவாங்குகிறார்கள். அவர்கள் சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்குகிறார்கள்; எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரைக்கொண்டு செய்வித்த மற்ற எல்லா வேலைகளிலும், அவர்களைக் கொடுமையாய் நடத்துகிறார்கள் (யாத் 1:13,14).

எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமாய் வரிவிதிக்கிறார்கள். இதன் மூலமாக எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் தரித்திரராக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை அடிமைகளாக ஆக்கவேண்டும் என்பது எகிப்தியரின் திட்டம். இதற்காக அவர்கள் உபாயம்பண்ணி, இஸ்ரவேல் புத்திரரை கொடுமையாய் வேலை வாங்கி, அவர்களுடைய ஜீவனை கசப்பாக்குகிறார்கள்.

இயல்பாகவே இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரைவிட கடினமாய் உழைக்கக்கூடியவர்கள். ஆகையினால் எகிப்து தேசத்தாருக்கு இஸ்ரவேல் புத்திரரின் உழைப்பு தேவைப்படுகிறது. எகிப்து தேசத்திலே கட்டிடங்களை கட்டுவதற்கும், அந்த தேசத்திலே விவசாய வேலைகளை செய்வதற்கும் இஸ்ரவேல் புத்திரர் தேவைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்விட்டால், அவர்களுக்கு கட்டிட வேலைகளை செய்வதற்கோ, விவசாய வேலைகளை செய்வதற்கோ வேலையாட்கள் கிடைக்கமாட்டார்கள். ஆகையினால் எகிப்தியர்கள் இஸ்ரவேலரை சுமை சுமக்கிற வேலையினால் ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் பார்வோனுக்காக பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டசாலை கட்டிடங்களை கட்டுகிறார்கள்.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை சாந்தும் செங்கலுமாகிய வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும் மிகவும் கொடுமையாய் வேலை வாங்குகிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய ஜீவனும் கசப்பாயிற்று. இஸ்ரவேல் புத்திரரின் ஆவிகள் முறிந்துபோயிற்று. அவர்களுடைய சரீர ஆரோக்கியமும் சீர்குலைந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரரால் அநேக வருஷங்களுக்கு ஆரோக்கியமாய் ஜீவிக்க முடியவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கடினமான வேலைகளை செய்கிறார்கள். எகிப்தியர்கள் அவர்களை கொடுமையாய் வேலை வாங்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு போதுமான அளவு போஜனம் கிடைக்கவில்லை. அவர்கள் பசியும் பட்டினியுமாக இருந்து, கடினமாய் வேலை செய்வதினால், அவர்களுடைய சரீர ஆரோக்கியம் கெட்டுப்போகிறது. இஸ்ரவேலரில் அநேகர் நோய்வாய்ப்பட்டு, பூரண வயசு வரை ஜீவிக்காமல், சீக்கிரத்திலேயே மரித்துப்போகிறார்கள். இதனால் எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கையும் குறைந்துபோகிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அடிமைகளுக்கு பிறக்கும் குழந்தைகளும் அடிமைகளாகவே எண்ணப்படுவார்கள். ஆகையினால் அடிமைகளாகயிருக்கும் இஸ்ரவேல் புத்திரரை யாரும் திருமணம் செய்ய முன்வரவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைத்தன நுகத்தினால் நெருக்கப்படுகிறார்கள். இதனால் எகிப்து தேசத்திலே அவர்களுடைய எண்ணிக்கை குறைந்துபோகிறது.

எகிப்தியர் தங்களுக்கு செய்யும் கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக, இஸ்ரவேலரில் சிலர் எகிப்தியரின் விக்கிரகாராதனையை பின்பற்றுகிறார்கள். ஒருவேளை எகிப்தியரைப்போல விக்கிரகங்களை ஆராதனை செய்தால், எகிப்தியர்கள் தங்களை கொடுமைப்படுத்துவதைக் குறைத்துக்கொள்வார்கள் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நினைக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரில் ஒரு சிலர் எகிப்தியரின் விக்கிரகங்களை ஆராதித்து, அவர்களோடு ஐக்கியமாகயிருந்தாலும், இஸ்ரவேலரில் அநேகர் தங்கள் தேவனாகிய கர்த்தரையே ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஒடுக்கப்பட்டாலும், நெருக்கப்பட்டாலும், உபத்திரவப்படுத்தப்பட்டாலும் அவர்கள் கர்த்தரைவிட்டு விலகவில்லை. அவர்கள் விக்கிரகங்களை பின்பற்றிப்போகவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் எகிப்தியரின் பழக்க வழக்கங்களுக்கும், விக்கிரகாராதனைக்கும் அடிமைகளாகவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரை விட்டு வேறுபிரிந்து கர்த்தருக்கு பிரியமானவர்களாக, பிரயோஜனமுள்ளவர்களாக ஜீவிக்கிறார்கள். இதுவும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தர் செய்கிற அற்புதமாயிருக்கிறது. கர்த்தருடைய செய்கைகள் எல்லாமே ஆச்சரியமாயிருக்கிறது.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை எவ்வளவு ஒடுக்குகிறார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப்பெருகுகிறார்கள். ஆகையால் எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து எரிச்சலடைகிறார்கள். இரத்தசாட்சியாக மரிக்கிறவர்களின் இரத்தம், திருச்சபைக்கு விதையாகயிருக்கிறது.

## எபிரெய மருத்துவச்சிகள்
## யாத் 1:15-22

**யாத் 1:15. அதுவுமன்றி, எகிப்தின் ராஜா, சிப்பிராள் பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி:**

**யாத் 1:16. நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மனையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண்பிள்ளையானால் கொன்றுபோடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான்.**

**யாத் 1:17. மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.**

**யாத் 1:18. அதினால் எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளை அழைப்பித்து: நீங்கள் ஆண்பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற காரியம் என்ன என்று கேட்டான்.**

**யாத் 1:19. அதற்கு மருத்துவச்சிகள் பார்வோனை நோக்கி: எபிரெய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப்போல் அல்ல, அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சி அவர்களிடத்துக்குப் போகுமுன்னமே அவர்கள் பிரசவித்தாகும் என்றார்கள்.**

**யாத் 1:20. இதினிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மைசெய்தார். ஜனங்கள் பெருகி மிகுதியும் பலத்துப்போனார்கள்.**

**யாத் 1:21. மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்.**

**யாத் 1:22. அப்பொழுது பார்வோன், பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண்பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்கும் கட்டளையிட்டான்.**

இஸ்ரவேல் புத்திரர் பலுகிப்பெருகுவதைப் பார்த்து எகிப்தியர்கள் அவர்களைக் குறித்து எரிச்சலடைகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை எவ்வளவு ஒடுக்கினாலும், அவர்கள் ஒடுங்கிப்போகவில்லை. இஸ்ரவேல் புத்திரரை அழிப்பதற்கு எகிப்து தேசத்தின் ராஜா புதிய உபாயங்களை பண்ணுகிறான். எபிரெயருக்கு பிறக்கிற சிறுபிள்ளைகளை கொன்றுபோடலாம் என்று பார்வோன் தீர்மானம்பண்ணுகிறான்.

சிறுபிள்ளைகளைக் கொன்றுபோடுவது மகாபெரிய பாவம். பரிசுத்த வேதாகமத்தில் சிறுபிள்ளைகளைக் கொன்றுபோட்ட பார்வோனைப்பற்றியும் ஏரோதைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் பிசாசின் கிரியைகளை செய்கிறார்கள். பார்வோனும் ஏரோதும் சிவப்பான வலுசர்ப்பங்களாயிருக்கிறார்கள்.

"அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது. அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது" (வெளி 12:3,4).

பிலாத்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசாரித்தான். கிறிஸ்துவானவரிடத்தில் ஒரு குற்றமும் இல்லை என்பதை பிலாத்து அறிந்துகொண்டான். ஆனாலும் அவன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைவதற்கு ஒப்புக்கொடுத்தான். மனுஷனால் நம்முடைய சரீரத்தை மாத்திரமே அழிக்க முடியும். நம்முடைய ஆவியின்மீதும் ஆத்துமாவின்மீதும் மனுஷருக்கு அதிகாரமில்லை.

எகிப்து தேசத்திலே எபிரெய மருத்துவச்சிகள் இரண்டுபேர் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் சிப்பிராள், பூவாள் என்பதாகும். எகிப்தின் ராஜா எபிரெய மருத்துவச்சிகள் இரண்டு பேரோடும் தன்னுடைய துன்மார்க்கமான திட்டத்தைக் குறித்து சொல்லுகிறான்.

எகிப்தின் ராஜா, சிப்பிராள் பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசுகிறான். ராஜா அவர்களை நோக்கி, "நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண்பிள்ளையானால் கொன்று போடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும்" (யாத் 1:15,16) என்று சொல்லுகிறான்.

எபிரெயருடைய பாரம்பரிய புராணத்தின் பிரகாரம், பார்வோன் ஒரு தராசைச் சொப்பனத்தில் காண்கிறான். தராசின் ஒருபகுதியில் எகிப்து தேசமும், மறுபகுதியில் ஒரு ஆட்டுக்குட்டியும் இருக்கிறது. எகிப்து தேசத்தை விட ஆட்டுக்குட்டியின் எடை அதிகமாக இருக்கிறது. எகிப்திய மந்திரவாதிகள் இதற்கு வியாக்கியானம் கொடுத்தார்கள். எகிப்து தேசத்தில் இஸ்ரவேலருக்குள்ளே ஒரு குழந்தை பிறக்கும். அது எகிப்தியர் அனைவரையும் அழித்துப்போடும் என்று மந்திரவாதிகள் அர்த்தம் கூறினார்கள்.

"மணை" என்பது குழந்தை பிறப்பதற்குப் பயன்படுத்தும் மணையாகவோ அல்லது பிறந்த குழந்தையை குளிப்பாட்டும் மணையாகவோ இருக்கலாம்.

"ஆண்பிள்ளையானால் கொன்று போடுங்கள்" என்று எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளுக்கு சொல்லுகிறான். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார். மேசியாவை வரவிடாமல் தடுப்பதற்காகச் சாத்தான் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறான். இஸ்ரவேலின் ஆண்பிள்ளைகள் எல்லோரையும் கொன்று போட்டால், தன்னை நசுக்குவதற்கு ஸ்திரீயின் வித்து வராது என்பது அவனுடைய எண்ணம். (ஆதி 3:15; ரோமர் 16:20).

மருத்துவச்சிகள் பிறக்கும் பிள்ளைகளை, உயிரோடே காப்பாற்றவேண்டியவர்கள். ஆனால் எகிப்தின் ராஜாவோ, எபிரெய ஸ்திரீகள் பெற்றெடுக்கும் ஆண்பிள்ளைகளை கொன்றுபோடுமாறு மருத்துவச்சிகளுக்கு கட்டளை கொடுக்கிறான். மருத்துவச்சிகள் ஆண்பிள்ளைகளைக் கொன்றுபோட்டு, அதற்கு ஏதாவது மருத்துவ காரணங்களை சொல்லவேண்டுமென்று எகிப்தியன் ராஜா எதிர்பார்க்கிறான். ஒருவேளை பிரசவ வேதனையை தாங்க முடியாமல், எபிரெய ஸ்திரீகளால் பிள்ளைகளை உயிரோடு பெற்றெடுக்க முடியவில்லை என்று மருத்துவச்சிகள் பொய்சொல்லலாம்.

எபிரெய ஸ்திரீகளின் வயிற்றில் பிள்ளைகள் இருக்கும்போது, அது ஆண்பிள்ளையாகயிருக்குமென்றால், அந்தப் பிள்ளையை கர்ப்பத்திலேயே கொன்றுபோடலாம் என்றும் எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளுக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

"நான் கர்ப்பத்தில்தானே அழியாமலும், கர்ப்பத்திலிருந்து புறப்படுகிறபோதே சாகாமலும் போனதென்ன?" (யோபு 3:11).

எபிரெய மருத்துவச்சிகளோ தேவனுக்கு பயப்படுகிறவர்கள். அவர்கள் எகிப்தின் ராஜா சொன்ன துன்மார்க்கமான கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறார்கள். மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றுகிறார்கள் (யாத் 1:17).

எபிரெய மருத்துவச்சிகள் தேவனுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் பயப்படுகிறார்கள். பார்வோனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவனுடைய கோபம் மருத்துவச்சிகள்மேல் வரும். மருத்துவச்சிகள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும். எபிரெய மருத்துவச்சிகளோ, மனுஷருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதைவிட, தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதே உத்தமம் என்று நினைக்கிறார்கள். எபிரெய மருத்துவச்சிகள், எபிரெய ஸ்திரீகள் பெற்றெடுக்கிற ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றுகிறார்கள்.

இந்த வாக்கியத்தில் தேவன் என்பதற்கான எபிரெய வார்த்தை "எத்-ஹா-எலோஹிம்" என்பதாகும். இது இஸ்ரவேலின் மெய்யான தேவனை வலியுறுத்திக் கூறும் வாக்கியமாகும். பிறந்த பிள்ளைகளைக் கொல்வது மிகப்பெரிய பாவம் என்பது மருத்துவச்சிகளுக்குத் தெரியும். இந்தப் பாவத்தைச் செய்தால், தங்களைத் தேவன் தண்டிப்பார் என்று மருத்துவச்சிகள் பயந்தார்கள் (ஆதி 9:6).

ஆகையினால் அவர்கள் எந்த ஆண்பிள்ளைகளையும் கொல்லாமல், அவர்களை உயிரோடே காப்பாற்றினார்கள். இஸ்ரவேல் புத்திரர் மரித்துப் போகாமல், தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். தேவனுடைய கரம் அவர்கள்மீது இருக்கிறபடியினாலே அவர்களை யாராலும் அழிக்க முடியவில்லை.

எபிரெய ஸ்திரீகள் பெற்றெடுக்கிற ஆண்பிள்ளைகள் கொல்லப்படவில்லை என்பதையும், அந்தப் பிள்ளைகள் உயிரோடே காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் எகிப்தின் ராஜா கேள்விப்படுகிறான்.

எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளை அழைப்பித்து, "நீங்கள் ஆண்பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற காரியம் என்ன" என்று கேட்கிறான். அதற்கு மருத்துவச்சிகள் பார்வோனை நோக்கி, "எபிரெய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப்போல் அல்ல, அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சி அவர்களிடத்துக்குப் போகுமுன்னமே அவர்கள் பிரசவித்தாகும்" (யாத் 1:18,19) என்று சொல்லுகிறார்கள்.

எபிரெய புருஷர்களும், ஸ்திரீகளும் வயலில் வேலை செய்கிறார்கள். (யாத் 1:14) ஆகையினால் அவர்கள் உடல் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். எகிப்திய ஸ்திரீகள் எந்த வேலையும் செய்யாமல், வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய சரீரத்தில் பெலனில்லை. குழந்தைப் பிரசவத்தின்போது எகிப்திய ஸ்திரீகள் அதிக பாடுகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் எபிரெய ஸ்திரீகளோ மருத்துவச்சிகளின் உதவியில்லாமலேயே குழந்தைகளைப் பிரசவிக்கிறார்கள்.

எபிரெய மருத்துவச்சிகள் எகிப்து தேசத்து ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறார்கள். எகிப்தின் ராஜா தங்கள்மீது குற்றம் சொல்லும்போது, அந்தக் குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக, மருத்துவச்சிகள் சாதுரியமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் எகிப்தின் ராஜாவுக்கு விரோதமாக உபாயம்பண்ணுகிறார்கள். கர்த்தர் மருத்துவச்சிகளுக்கு இதின் நிமித்தம் நன்மை செய்கிறார். இஸ்ரவேல் ஜனங்களும் எகிப்து தேசத்திலே பெருகி மிகுதியும் பலத்துப்போகிறார்கள் (யாத் 1:20).

தேவன் எபிரெய ஸ்திரீகளை ஆசீர்வதிக்கிறார். சுகப்பிரசவத்திற்குக் கட்டளையிடுகிறார். பிறக்கும் பிள்ளைகளும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரிடம் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுகிறார். அவர்களுடைய சந்ததி கடற்கரை மணலைப் போலவும், வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும் பெருகியிருக்கும் (யாத் 1:7).

மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்கிறார் (யாத் 1:21). கர்த்தர் மருத்துவச்சிகளின் குடும்பங்களை ஆசீர்வதித்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் கட்டியெழுப்பப்படுகிறது. அவர்களுடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். கர்த்தர் மருத்துவச்சிகளுடைய கைகளின் பிரயாசங்கள் எல்லாவற்றையும் ஆசீர்வதிக்கிறார்.

மருத்துவச்சிகளின் உதவியினால் எபிரெய ஸ்திரீகள் பெற்றெடுக்கும் ஆண்பிள்ளைகளை கொன்றுபோட வேண்டுமென்று எகிப்தின் ராஜா திட்டமிட்டான். ஆனால் அவனுடைய திட்டம் தோல்வியடைந்தது. எபிரெயருடைய ஆண்பிள்ளைகளையெல்லாம் எப்படியாவது கொன்றுபோடவேண்டும் என்றும், எகிப்து தேசத்திலே அவர்கள் பலுகிப்பெருகுவதை தடைபண்ணவேண்டும் என்றும் எகிப்தின் ராஜா திட்டமிடுகிறான்.

அப்பொழுது பார்வோன், பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண்பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்கும் கட்டளையிடுகிறான் (யாத் 1:22).

பிறக்கும் ஆண்பிள்ளைகள் என்பது எபிரெயருடைய ஆண்பிள்ளைகளை மட்டும் குறிக்கும். எகிப்தியருடைய ஆண்பிள்ளைகளை நதியில் போட்டுவிடக்கூடாது. எபிரெய ஆண்குழந்தைகளைக் கொன்றுபோடுமாறு பார்வோன் எகிப்தியருக்குக் கட்டளை கொடுத்தான். ஒருசில மூலபாஷை பதிப்புக்களில் "எபிரெயருக்குப் பிறந்தவர்கள்" என்றுள்ளது. இஸ்ரவேலின் ஆண்பிள்ளைகளை அழித்துப்போடுவதற்கு பார்வோன் முயற்சிபண்ணுகிறான் (யாத் 1:15-19).

## 2 அதிகாரம்

மோசேயின் சரித்திரம் இந்த அதிகாரத்தில் ஆரம்பமாகிறது. பரிசுத்தவேதாகமத்தில் மோசே மிகவும் பிரபல்யமானவர்களில் ஒருவர். அவர் பரலோகத்தின் தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தவர். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஜனங்களுக்கும் அவர் அதிக பிரயோஜனமுள்ளவராக இருந்தவர்.

மோசே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். பழைய ஏற்பாட்டிலே மோசே ஒரு தீர்க்கதரிசியாகவும், இரட்சகராகவும், நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவராகவும், மத்தியஸ்தராகவும் சொல்லப்பட்டிருக்கிறார்.

மோசேயின் பிறப்பு (யாத் 2:1-4). மோசே தன்னுடைய குழந்தை பருவத்தில் கர்த்தருடைய கிருபையினால் பாதுகாக்கப்படுகிறார் (யாத் 2:5-10). மோசேயின் வாலிபப்பிராயம். மோசே தேவஜனத்தோடு ஐக்கியமாயிருக்க விரும்புகிறார்.

மோசே பெரியவனான காலத்தில் எபிரெயருக்கு உதவி செய்ய விரும்புகிறார். அவர்கள் ஏற்றுக்கொண்டால், மோசே அவர்களுக்கு சேவை செய்ய ஆயத்தமாயிருக்கிறார் (யாத் 2:11-14).

மோசே எகிப்து தேசத்தைவிட்டு தப்பி ஓடுகிறார். பார்வோன் மோசேயை கொலை செய்ய வகை தேடுகிறான். மோசே மீதியான் தேசத்திலே போய்ச்சேருகிறார். அங்கே சிப்போராள் என்பவளை விவாகம் செய்கிறார் (யாத் 2:15-22).

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவிக்கிறார்கள். அவர்கள் தேவனை நோக்கி முறையிடுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்குகிறார் (யாத் 2:23-25).

### மோசே
### யாத் 2:1-4

**யாத் 2:1. லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான்.**

**யாத் 2:2. அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள்.**

**யாத் 2:3. அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல், ஒர நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள்.**

**யாத் 2:4. அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்.**

மோசே ஒரு லேவியன். மோசேயின் தாயும் தகப்பனும் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். யாக்கோபு தன்னுடைய குமாரரை ஆசீர்வதித்தபோது, லேவிக்கு மேன்மையான ஆசீர்வாதம் எதையும் சொல்லவில்லை. யாக்கோபு சிமியோனுக்கும் லேவிக்கும் சாபமான வார்த்தைகளை சொன்னார்.

"சிமியோனும், லேவியும் ஏகசகோதரர்; அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள். என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே. உக்கிரமான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்" (ஆதி 49:5-7).

யாக்கோபு லேவி கோத்திரத்தை ஆசீர்வதிக்கவில்லை. ஆனாலும் மோசே லேவி கோத்திரத்தில் பிறக்கிறார். மோசே கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறவர். கிறிஸ்துவானவர் பாவமான மாம்ச சாயலிலே இந்த உலகத்திற்கு வந்தார். அவர் நமக்காக சாபமானார்.

லேவி கோத்திரம் சபிக்கப்பட்ட கோத்திரமாக இருந்தாலும், மோசே அந்த கோத்திரத்தில் பிறந்த பின்பு, கர்த்தர் லேவி கோத்திரத்தை ஆசீர்வதிக்கிறார். லேவி கோத்திரத்தார் கர்த்தருக்கு மிகவும் விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். லேவி கோத்திரத்திலிருந்து ஆசாரியர்கள் வருகிறார்கள்.

லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணுகிறார். அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைக்கிறாள் (யாத் 2:1,2). இதுவே மோசேயின் பிறப்பைப்பற்றிய சரித்திரம்.

"லேவியின் குடும்பத்தாரில் ஒருவன்" என்பது அம்ராமைக் குறிக்கும். இவர் யோகெபேத்தை விவாகம் பண்ணினார். இவர்களுக்கு மிரியாம் என்னும் குமாரத்தியும், ஆரோன், மோசே ஆகிய குமாரர்களும் பிறந்தார்கள். அம்ராம் கோகாத்தின் புத்திரன். கோகாத் லேவியின் புத்திரன். இவர் எகிப்திற்குப் போவதற்கு முன்பாகப் பிறந்தவர் (ஆதி 46:11). அம்ராமும், யோகெபேத்தும், எகிப்தில் பிறந்தவர்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தில் தங்குவதற்கு ஆரம்பித்த நாட்களில் இவர்கள் பிறந்தார்கள். (எண் 26:59).

மோசே ஆபிரகாமிலிருந்து ஏழாவது சந்ததியில் வருகிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, லேவி, கோகாத், அம்ராம், மோசே. ஆபிரகாம் ஏபேரிலிருந்து ஏழாவது சந்ததியில் வருகிறார். (ஏபேர், பேலேகு, ரெகூ, செரூகு, நாகோர், தேராகு, ஆபிரகாம் (ஆதி 11:16-26). ஏனோக்கு ஆதாமிலிருந்து ஏழாவது சந்ததியில் வருகிறார். (ஆதாம் , சேத், ஏனோஸ், கேனான், மகலாலெயேல், யாரேது, ஏனோக்கு (ஆதி 5:1-18; யூதா 1:14).

மோசேயின் பெற்றோருக்குத் தேவனுடைய வார்த்தை கிடைத்திருக்கிறது. (ரோமர் 10:17) தேவனுடைய வார்த்தையை அவர்கள் நம்புகிறார்கள் (எபி 11:23) தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, பிள்ளையை மூன்றுமாதம் ஒழித்து வைத்திருக்கிறார்கள். அதன் பின்பு, பார்வோனுடைய குமாரத்தி நதியில் ஸ்நானம் பண்ண வரும்போது அவளுடைய பார்வையில் படும்படி ஒரு பெட்டியில் மோசேயை வைத்து, நதியில் மிதிக்க விடுகிறார்கள் (யாத் 2:3-6).

மோசே பிறப்பதற்கு முன்பாகவே, அவருடைய பெற்றோருக்கு மிரியாமும் ஆரோனும் பிறந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரும் மோசேக்கு மூத்தவர்கள். பார்வோன் எகிப்து தேசத்தில் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவேண்டுமென்று எல்லோருக்கும் கட்டளையிட்டிருக்கிறான். இந்தக் கட்டளை பிறப்பதற்கு முன்பாகவே ஆரோன் பிறந்திருக்கிறார். ஆகையினால் ஆரோன் இந்த மரணதண்டனைக்கு தப்பிக்கிறார்.

மோசே பிறக்கும்போதே, அவர் அழகுள்ளவராயிருக்கிறார். மோசேயின் தாயார் அவர்மீது மிகவும் பிரியமாயிருக்கிறாள். அவளுக்கு மோசேயின் எதிர்காலத்தைக் குறித்து ஏராளமான எதிர்பார்ப்புக்கள் இருக்கிறது. இந்தக் குழந்தையை எப்படியும் பாதுகாக்கவேண்டும் என்று மோசேயின் தாயார் விரும்புகிறாள். இதற்காக அவள் மோசேயை மூன்றுமாதம் ஒளித்து வைக்கிறாள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் விசேஷமானவர். ஆனால் பார்வோனோ எபிரெயருக்கு பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்களை விடுவிக்கும் இரட்சராக மோசே பிறந்திருக்கிறார்.

மனுஷர் கர்த்தருடைய சபையை அழிப்பதற்காக முயற்சி பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய சபையின் மீட்புக்காக திட்டமிட்டு, அதற்கான ஆயத்த வேலைகளை செய்கிறார். எபிரெயரில் பிறக்கும் எல்லா ஆண்பிள்ளைகளையும் கொன்றுபோடவேண்டுமென்று எகிப்தின் ராஜா திட்டமிடுகிறான். கர்த்தரோ, எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருக்கும் இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சிக்க வேண்டுமென்று திட்டமுள்ளவராயிருக்கிறார். அவர்களை இரட்சிப்பதற்கு கர்த்தர் மோசேயை ஆயத்தம்பண்ணுகிறார்.

மோசே தன் தாயாருக்கு அழகுள்ளவராகயிருக்கிறார். எல்லா குழந்தைகளும் அழகாகயிருக்கும். ஆனால் மோசேயோ மற்ற குழந்தைகளைவிட விசேஷித்த அழகுள்ளவராயிருக்கிறார். மோசே தன்னுடைய தாயாரின் பார்வையில் அழகுள்ளவராயிருப்பதுபோல, அவர் தேவனுடைய பார்வையிலும் அழகுள்ளவராயிருக்கிறார்.

"அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்" *(அப் 7:20).*

மோசே திவ்விய சவுந்தரியமுள்ளவராயிருப்பதினால், அவரை நதியிலே தூக்கிப்போடாமல், எப்படியாவது பாதுகாக்கவேண்டுமென்று அவருடைய பெற்றோர் விரும்புகிறார்கள். அவர்கள் மோசேயை நதியிலே தூக்கிப்போடாமல், அவரை மூன்றுமாதம் ஒளித்து வைக்கிறார்கள். ஒருவேளை மோசேயின் தாயார், அவரை தங்கள் வீட்டில், ஒரு தனி அறையில் ஒளித்து வைத்திருந்திருக்கலாம்.

மோசே சிறுபிள்ளையாயிருக்கும்போது மூன்றுமாதம் ஒளித்து வைக்கப்படுவது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவும் சிறுபிள்ளையாகயிருந்தபோது, அவருடைய பெற்றோர் அவரை எகிப்து தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போனார்கள்.

"அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான். அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான்" *(மத் 2:13-15).*

ஏரோது ராஜா சிறுபிள்ளைகளையெல்லாம் கொலை செய்தபோது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவனுடைய கொலைவெறிக்கு தப்பிக்கிறார். மோசேயின் காலத்திலே, எகிப்தின் ராஜா எபிரெயருடைய ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே தூக்கிப்போட்டு கொலைசெய்தான். மோசே எகிப்து ராஜாவின் கொலைவெறிக்கு தப்பிக்கிறார்.

மோசேயின் பெற்றோர், அவரை பாதுகாப்பதற்காக மூன்றுமாதம் ஒளித்து வைக்கிறார்கள். அவர்கள் மோசேயை பாதுகாக்க தங்களால் முடிந்ததை செய்கிறார்கள். கடமை நம்முடையது. சம்பவங்களோ கர்த்தருடையது. கர்த்தர் நமக்கு நியமிக்கும் வேலைகளை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம், தமக்கு பிரியமான காரியங்களை நிறைவேற்றுவார்.

நாம் எதை செய்தாலும் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து செய்யவேண்டும். கர்த்தரை நம்புகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். மனுஷருடைய கண்ணிகளிலும் வலைகளிலும் சிக்கிக்கொள்ளுவோமோ என்னும் பயம் விசுவாசிகளுக்கு வராது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்தில் பாதுகாப்பாகயிருக்கிறது.

மோசேயின் தாயாரால் மூன்றுமாதம் மாத்திரமே அவரை ஒளித்து வைக்க முடிகிறது. அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைக்கிறாள் (யாத் 2:3).

நாணற்பெட்டி என்பதற்கான எபிரெய வார்த்தை "தேபா" என்பதாகும். நோவாவின் பேழைக்கும், இதே வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 6:14-9:18) மோசேயின் நாணற்பெட்டிக்கும் இதே வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 2:3,5). நோவாவின் பேழையைப் போலவே மோசேயின் பேழையும் தெய்வீக ஏவுதலினாலும், தெய்வீக கட்டளையினாலும் செய்யப்பட்டிருக்கிறது. (எபி 11:23; ரோமர் 10:17 ).

மோசேயின் தாயார் அவரை நாணல் பெட்டியில் வைத்து, நதியிலே போட்டுவிட்டு தன் வீட்டிற்கு வந்துவிடவில்லை. அந்தப் பெட்டியை நதியோரமாய் நாணலுக்குள் வைக்கிறாள். அது மாத்திரமல்ல. அந்தப் பெட்டிக்கும், அந்தப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் மோசேக்கும் என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருக்கிறாள் (யாத் 2:4).

மோசேயின் தாயார் நாணல் பெட்டியை செய்வது, அந்தப் பெட்டிக்குள்ளே மோசேயை வைப்பது, அந்தப் பெட்டியை நதியோரமாய் நாணலுக்குள்ளே வைப்பது, மோசேயின் தமக்கை தூரத்திலே நின்று அந்தப் பெட்டியை பார்த்துக்கொண்டிருப்பது ஆகியவையெல்லாம் எதேச்சையாய் நடைபெறுகிற சம்பவங்களல்ல. இந்த சம்பவங்களெல்லாமே கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாய் நடைபெறுகிறது.

இவையெல்லாவற்றையும் செய்யுமாறு, தேவனாகிய கர்த்தரே அவர்களுடைய இருதயங்களை ஏவுகிறார். கர்த்தர் தம்முடைய சித்தத்தை அவர்கள் மூலமாய் நிறைவேற்றுகிறார். மோசே பார்வோனுடைய குமாரத்தியின் கைகளில் கிடைக்கவேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. மோசே கைவிடப்பட்டவராகயிருக்கிறார். மோசேயின் பெற்றோரால் அவரை மூன்று மாதத்திற்குமேல் பாதுகாக்க முடியவில்லை.

மோசேயின் குடும்பத்தாரும், அவருடைய உற்றார் உறவினர்களும், சிநேகிதர்களும், பெற்றோரும் அவரை கைவிட்டுவிடுகிறார்கள். மோசேயை மூன்று மாதத்திற்கு மேல் பாதுகாக்க அவர்களில் யாருக்கும் தைரியமோ, துணிச்சலோ இல்லை. அப்போது கர்த்தர் மோசேயை தமக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார். அவரை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்புக்களை கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார். விசுவாசிகளாகிய நம்மை மனுஷர் கைவிடும்போது, கர்த்தர் நம்மை கைவிடாமல் பாதுகாக்கிறார்.

"என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்" (சங் 27:10).

## பார்வோனுடைய குமாரத்தி
## யாத் 2:5-10

**யாத் 2:5. அப்பொழுது பார்வோனுடைய குமாரத்தி நதியில் ஸ்நானம்பண்ண வந்தாள்; அவளுடைய தாதிகள் நதியோரத்தில் உலாவினார்கள்; அவள் நாணலுக்குள்ளே இருக்கிற பெட்டியைக் கண்டு, தன் தாதியை அனுப்பி அதைக் கொண்டுவரும்படி செய்தாள்.**

**யாத் 2:6. அதைத் திறந்தபோது பிள்ளையைக் கண்டாள்; பிள்ளை அழுதது; அவள் அதின்மேல் இரக்கமுற்று, இது எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று என்றாள்.**

**யாத் 2:7. அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியை நோக்கி: உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி, எபிரெய ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா என்றாள்.**

**யாத் 2:8. அதற்குப் பார்வோனுடைய குமாரத்தி: அழைத்துக்கொண்டுவா என்றாள். இந்தப்பெண் போய்ப் பிள்ளையின் தாயையே அழைத்துக்கொண்டுவந்தாள்.**

**யாத் 2:9. பார்வோனுடைய குமாரத்தி அவளை நோக்கி: நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன் என்றாள். அந்தஸ்திரீ பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை வளர்த்தாள்.**

**யாத் 2:10. பிள்ளை பெரிதானபோது, அவள் அதைப் பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விட்டாள்; அவளுக்கு அவன் குமாரனானான். அவள்: அவனை ஜலத்தினின்று எடுத்தேன் என்று சொல்லி, அவனுக்கு மோசே என்று பேரிட்டாள்.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மோசே அழிவுக்கு தப்பிக்கிறார். மோசேயின் தாயார் அவரை ஒரு நாணல் பெட்டியில் வைத்து, அந்தப் பெட்டியை நதியோரமாக நாணலுக்குள்ளே வைக்கிறாள். அந்தப் பிள்ளையை ஒருவரும் கவனிக்காவிட்டால், அது பசியினாலும் பட்டினியினாலும் வேதனைப்பட்டு மரித்துப்போகும்.

ஒருவேளை, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைக்கப்பட்ட பெட்டியை, தண்ணீர் நதியின் நடுப்பகுதிக்கு இழுத்துக்கொண்டுபோகும் ஆபத்துக்கள் உள்ளது. நதியில் முதலைகள் ஏராளமாயிருக்கிறது. நாணல் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிற மோசே, பசியாயிருக்கிற முதலைகளுக்கு இரையாகும் வாய்ப்புமுள்ளது.

மோசே வைக்கப்பட்டிருக்கிற நாணல் பெட்டியை எகிப்து தேசத்தாரோ அல்லது ராஜாவின் அரண்மனையிலுள்ளவர்களோ பார்த்தால், பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கிற எபிரெய குழந்தையை நதியிலே தூக்கிப்போட்டு விடுவார்கள். எபிரெயருக்கு பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவேண்டுமென்று எகிப்தின் ராஜா எல்லோருக்கும் கட்டளை கொடுத்திருக்கிறான். எகிப்தியர்கள் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, மோசேயை நதியிலே தூக்கிப்போடுவதற்கும் வாய்ப்புள்ளது.

மோசே அழிந்துபோவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருந்தாலும், அவர் அழிந்துபோவது கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தர் மோசேயை பாதுகாக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் பார்வோனுடைய குமாரத்தி அப்பொழுது நதியிலே ஸ்நானம்பண்ண வருகிறாள்.

அவளுடைய தாதிகள் நதியோரத்தில் உலாவுகிறார்கள்; பார்வோனுடைய குமாரத்தி நாணலுக்குள்ளே இருக்கிற பெட்டியைக் கண்டு, தன் தாதியை அனுப்பி அதைக் கொண்டுவரும்படி செய்கிறாள். அதைத் திறந்தபோது பிள்ளையைக் காண்கிறாள்; பிள்ளை அழுகிறது; பார்வோனுடைய குமாரத்தி அதின்மேல் இரக்கமுற்று, இது எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று என்கிறாள் *(யாத் 2:5,6).*

எகிப்திய அரண்மனையிலுள்ள ஸ்திரீகள் தங்கள் தாதிகளோடு நதிக்கரையில் நீராடுவது வழக்கம். பார்வோனுடைய குமாரத்தி மோசேயின்மீது இரக்கமுற்றாள். அவளுடைய இரக்கம் சாத்தானுக்குத் தோல்வியாயிற்று. தேவன் ஒரு தேசத்தைப் பாதுகாக்கிறார். தம்முடைய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகிறார். ஸ்திரீயின் வித்தைப் பற்றிய தேவனுடைய திட்டம் தடைபடாமல் தொடர்கிறது.

பார்வோனுடைய குமாரத்தி, இந்தக் குறிப்பிட்ட வேளையில், நதியிலே ஸ்நானம்பண்ண வருவதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. மோசேயின் தாயார் மோசேயை, நதியோரமாய் எந்த நாணலுக்குள்ளே வைத்திருக்கிறாளோ, அந்த ஸ்தலத்திலே பார்வோனுடைய குமாரத்தியும் ஸ்நானம்பண்ண வருகிறாள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், நாணல் பெட்டியிலிருக்கும் மோசே அழும்போது, பார்வோனுடைய குமாரத்தியின் இருதயத்தில், மோசேயின்மேல் இரக்கமுண்டாயிற்று.

மோசேக்காக இதுவரையிலும் யாரும் இரக்கப்படவில்லை. மோசேயின் தாயார்கூட அவரை ஒரு நாணல் பெட்டியில் வைத்து நதியிலே விட்டுவிடுகிறாள். ஆனால் பார்வோனுடைய குமாரத்தியோ, மோசேயை கண்டு, அந்தப் பிள்ளையின்மேல் இரக்கப்படுகிறாள்.

பார்வோனுடைய குமாரத்தி அந்தப் பிள்ளையைக் கண்டபோது, அந்தப் பிள்ளை அழுகிறது. மோசே அந்த வேளையில் அழுவதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் ஏற்ற வேளையிலே அந்தப் பிள்ளையை அழவைக்கிறார்.

பார்வோனுடைய அரண்மனையிலுள்ளவர்கள் எபிரெயருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். ஆனால் பார்வோனுடைய குமாரத்தியோ, மோசே எபிரெய பிள்ளைகளில் ஒன்று என்று தெரிந்தும், அவள் அந்தப் பிள்ளையின்மேல் இரக்கமுறுகிறாள். விசுவாசிகளாகிய நாம், நம்முடைய சத்துருக்கள் மத்தியிலே இருந்தாலும், நம்முடைய தேவனாகிய கர்த்தர், அவர்கள் மத்தியிலும் நமக்கு சிநேகிதர்களை எழுப்புவார்.

எபிரெயர்களை அழிக்கவேண்டும் என்பது பார்வோனுடைய தீயகுணம். ஆனால் அவனுடைய குமாரத்தியோ எபிரெய பிள்ளையின்மீது அன்பாயும், மனவுருக்கமாயும் இருக்கிறாள். பார்வோன் எபிரெயர்களை அழிப்பதற்கு திட்டமிடுகிறார். கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கவேண்டுமென்று திட்டமிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும் கருவியாக மோசேயை பயன்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார். பார்வோனுடைய குமாரத்தியோ, இஸ்ரவேலரின் இரட்சிப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிற மோசேயின்மீது இரக்கமுற்று, அந்தக் குழந்தையை, தன் குழந்தையாக பாவித்து, எடுத்து வளர்க்கிறாள்.

நாணல் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிற குழந்தை பசியினால் அழுகிறது. மோசே பிறந்து மூன்று மாதமே ஆயிற்று. அந்தப் பிள்ளைக்கு பால் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், நாணல் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் மோசேக்கு, என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி, அதன் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருக்கிறாள். பார்வோனுடைய குமாரத்தி அந்த நாணல் பெட்டியை கண்டு, அதைத் திறந்து, அதற்குள்ளே வைக்கப்பட்டிருக்கிற பிள்ளையை கண்டு அதின்மேல் இரக்கமுற்றதை, மோசேயின் தமக்கை பார்க்கிறாள். மோசே பசியினால்அழுவதையும் அவருடைய தமக்கை கேட்கிறாள். இதுவும் தேவனுடைய தெய்வீக சித்தமாயும், அவருடைய கிருபையுள்ள வழிநடத்துதலாயும் இருக்கிறது.

அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியை நோக்கி, "உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா" என்று கேட்கிறாள். அதற்குப் பார்வோனுடைய குமாரத்தி: "அழைத்துக்கொண்டுவா" என்று சொல்லுகிறாள். இந்தப்பெண் போய்ப் பிள்ளையின் தாயையே அழைத்துக்கொண்டுவருகிறாள் (யாத் 2:7,8).

"உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா" என்று அந்தப் பிள்ளையின் தமக்கை, பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கேட்பதுவும் தெய்வீக வழிநடத்துதலே. மோசேயை வளர்ப்பதற்கு மோசேயின் தாயாரே அழைத்து வரப்படுகிறாள். பார்வோனுடைய திட்டம் தோல்வியடைகிறது. மோசேயின் தாய் தன்னுடைய சொந்தப் பிள்ளையை வளர்ப்பதற்கு பார்வோனின் குமாரத்தியிடமிருந்து சம்பளம் பெற்றுக் கொள்கிறாள். (யாத் 2:9).

மோசேயின் பெற்றோர் பார்வோனுடைய அரண்மனைக்கு அருகில் வசித்திருக்க வேண்டும். பார்வோனின் குமாரத்தி எப்பொழுது நீராட வருவாள். அவளுடைய சுபாவங்கள் என்ன என்பதெல்லாம் மோசேயின் தாயாருக்குத் தெரிந்திருக்கிறது.

நாணல் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிற பிள்ளை, எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று என்பதை பார்வோனுடைய குமாரத்தி அறிந்துகொள்கிறாள். அந்தப் பிள்ளையை பால்கொடுத்து வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால் கொடுக்கிற ஒருத்தி கிடைத்தால் நன்றாயிருக்கும் என்று பார்வோனுடைய குமாரத்தி நினைக்கிறாள். அப்போது மோசேயின் தமக்கை அங்கு வந்து, பார்வோனுடைய குமாரத்தியின் மனதிற்கு பிரியமானபடி பேசி, மோசேக்கு பால்கொடுக்க, மோசேயின் தாயாரையே அழைத்துக்கொண்டு வருகிறாள். இதுவும் கர்த்தருடைய வழிநடத்துதலாயிருக்கிறது.

பார்வோனுடைய குமாரத்தி மோசேயின் தாயை நோக்கி, "நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்" என்று சொல்லுகிறாள். மோசேயின் தாயார், தன் குமாரனாகிய மோசேயை எடுத்துக்கொண்டுபோய், அதை வளர்க்கிறாள் (யாத் 2:9).

மோசேயின் தாயாரால், பிள்ளையை மூன்று மாதத்திற்குமேல் ஒளித்து வைக்க முடியவில்லை. இப்போதோ பார்வோனுடைய குமாரத்தி, மோசேயை அவருடைய தாயாரிடத்திலேயே வளர்க்குமாறு கொடுக்கிறாள். மோசேயை வளர்ப்பதற்கு, அவருடைய தாயாருக்கு சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இப்போது மோசேயின் தாயார், பார்வோனுடைய அரண்மனையிலிருந்து எந்தவிதமான அச்சுறுத்தலுமில்லாமல், மோசேயை வளர்க்கிறாள். மோசேயை பால் கொடுத்து வளர்ப்பதற்கு, அவருடைய தாயாரைவிட வேறு எந்த ஸ்திரீயும் ஏற்ற ஸ்திரீயாக இருக்கமாட்டாள்.

பிள்ளை பெரிதானபோது, மோசேயின் தாயார், பிள்ளையை பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விடுகிறாள்; மோசே பார்வோனுடைய குமாரத்திக்கு குமாரனாகிறார். பார்வோனுடைய குமாரத்தி, "அவரை ஜலத்தினின்று எடுத்தேன்" என்று சொல்லி, அவருக்கு மோசே என்று பேரிடுகிறாள் (யாத் 2:10).

யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தில் பார்வோனுடைய குமாரத்தியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவளுக்கு பிள்ளையில்லையென்றும், பார்வோனுக்கு அவள் மாத்திரமே குமாரத்தி என்றும், பார்வோன் மரித்த பின்பு, அந்த ஸ்தானத்தில் மோசே எகிப்து தேசத்தின் சிங்காசனத்தில் அமர்ந்து ராஜ்யபாரம் பண்ணவேண்டியவர் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது

மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையில் வளர்ந்தபோது, ஒரு ராஜாவுக்கு கொடுக்கவேண்டிய விசேஷித்த பயிற்சிகளெல்லாம் அவருக்கு கொடுக்கப்படுகிறது. ஒரு தேசத்தை ஆளுகை செய்வதற்கு தேவையான நிர்வாக திறமைகள் அவருக்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது. மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையிலே வளர்ந்து உயர்ந்த கல்வி கற்கிறார். இதுவும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. மோசேயின் உயர்ந்த கல்வி, பஞ்சாகமம் புஸ்தகத்தை தெளிவாக எழுதுவதற்கு உதவியாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக, தம்முடைய பிள்ளைகளை பயன்படுத்துவதற்கு முன்பாகவே, அவர்களுக்கு பயிற்சிகளை கொடுக்கிறார். தம்முடைய ஊழியங்களை நேர்த்தியாய்ச் செய்வதற்கு, கர்த்தர் அவர்களை ஆயத்தம்பண்ணுகிறார். மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையில் வளர்ந்தாலும், கர்த்தருடைய பார்வை மோசேயின்மீது இருக்கிறது.

பார்வோனுடைய குமாரத்தி, அந்தக் குழந்தைக்கு "மோசே" என்று பேரிடுகிறாள். இந்தப் பெயருக்கு "ஜலத்தினின்று எடுத்தேன்" என்று பொருள். மோசே என்பது ஒரு எகிப்திய பெயர். யூதர்கள் மோசேயை எபிரெய பெயரினால் அழைக்காமல், எகிப்திய பெயரினால் அழைக்கிறார்கள். கர்த்தருடைய சபையிலே புறஜாதியாரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதற்கு, மோசே என்னும் எகிப்திய பெயர் ஆரம்பத்திலேயே ஒரு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் எகிப்தியரைக் குறித்து சொல்லும்போது, "எகிப்தியராகிய என் ஜனம் ஆசீர்வதிக்கப்பட்டது" என்று சொல்லுகிறார்.

"அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர்: எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்" (ஏசா 19:25).

மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையிலே வளருகிறார். இதன் மூலமாக கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது.

"ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்" (ஏசா 49:23)

பிள்ளைக்குப் பால் மறக்கும் வயது வருகிறது. மோசே அப்போது ஈசாக்கைப் போல ஐந்து வயதாயிருக்கும். (ஆதி 21:8). மோசே அரண்மனையில் பார்வோனின் குமாரத்தியினுடைய குமாரனாக வளருகிறார். மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும், செய்கையிலும் வல்லவராகிறார் (அப் 7:22).

யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் பார்வோனின் குமாரத்தியினுடைய பெயரை தெர்முதிஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார். தன்னுடைய தந்தைக்குப் பின்பு, எகிப்தை ஆளுகை செய்வதற்கு தெர்முதிஸ் மோசேயை ராஜாவாக சுவிகாரம் எடுத்திருக்கிறாள். எத்தியோப்பியருக்கு எதிராக நடைபெற்ற யுத்தத்தில் மோசே எகிப்திய சேனைக்கு தலைமை தாங்கி, எகிப்தியருக்கு பெரிய வெற்றியைத் தேடி தந்தார் என்று யோசபஸ் எழுதியிருக்கிறார்.

மோசே என்னும் பெயருக்கு "எடுக்கப்படுதல்" என்று பொருள். மோசே ஜலத்தினின்று எடுக்கப்பட்டவர். 2சாமு 2:17, சங் 18:16 ஆகிய வசனங்களிலும் இந்தப் பெயருக்கான வேர்ச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மோசேயின் வரலாறு யாத் 2:10-உபா 34:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

## மீதியான் தேசத்திலே மோசே யாத் 2:11-15

**யாத் 2:11. மோசே பெரியவனான காலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமைசுமக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு.**

**யாத் 2:12. அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லை என்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப்போட்டான்.**

**யாத் 2:13. அவன் மறுநாளிலும் வெளியே போனபோது, எபிரெய மனுஷர் இருவர் சண்டைபண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவன் அநியாயஞ்செய்கிறவனை நோக்கி: நீ உன் தோழனை அடிக்கிறது என்ன என்று கேட்டான்.**

**யாத் 2:14. அதற்கு அவன்: எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ என்றான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான்.**

**யாத் 2:15. பார்வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்பட்டபோது, மோசேயைக் கொலைசெய்ய வகைதேடினான். மோசே பார்வோனிடத்தினின்று தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்கி, ஒரு துரவண்டையிலே உட்கார்ந்திருந்தான்.**

மோசேயின் ஜீவிய சரித்திரம் மூன்று பிரிவாக பிரிக்கப்படுகிறது. மோசே ஒவ்வொரு பிரிவிலும் நாற்பது வருஷம் ஜீவிக்கிறார். மோசேயின் ஜீவியத்தில் முதலாவது நாற்பது வருஷ ஜீவியகாலம் முடிவு பெறுகிறது. அவர் இந்த நாற்பது வருஷ காலத்தில் பார்வோனுடைய அரண்மனையில் வாசம்பண்ணுகிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் ஊழியத்திற்கு, மோசே பார்வோனுடைய அரண்மனையில் பயிற்சி பெறுகிறார். இப்போது மோசேயின் இரண்டாவது நாற்பது வருஷ ஜீவியகாலம் ஆரம்பமாகிறது.

எகிப்து தேசத்திலே அடிமைகளாக பாடுகளை அனுபவிக்கிற இஸ்ரவேல் புத்திரரை, மோசே தன்னுடைய சொந்த ஜனமாக அங்கீகரிக்கிறார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற கர்த்தர் மோசேயை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். மோசே கர்த்தருக்காக ஊழியம் செய்யும் காலம் இப்போது ஆரம்பித்திருக்கிறது.

மோசே பெரியவரான காலத்தில், அவர் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமைசுமக்கிறதைப் பார்க்கிறார். தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதை மோசே காண்கிறார். மோசே அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லை என்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப்போடுகிறார் (யாத் 2:11,12).

மோசேக்கு இப்போது 40 வயதாயிற்று (அப் 7:23-24) இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தியரிடமிருந்து விடுவிப்பதற்குத் தேவன் தன்னை அழைத்திருக்கிறார் என்பதைத் தன்னுடைய சகோதரர்கள் புரிந்து கொள்வார்கள் என்று மோசே நினைக்கிறார். ஆனால் மோசேயை நம்புவதற்கு அவர்களுக்கு மேலும் 40 வருஷங்களும், ஏராளமான அற்புதங்களும் தேவைப்படுகிறது. (யாத் 4:1-12:51; அப் 7:22-29) இந்தக் காலதாமதத்தினால் இஸ்ரவேல் எகிப்து தேசத்தில் 215 வருஷங்கள் பரதேசிகளாய்ச் சஞ்சரிக்கிறார்கள்.

எகிப்தியன் ஒருவேளை எபிரெயனைக் கொன்று போட்டிருக்கலாம். ஆதி 9:6 ஆவது பிரமாணத்தின் பிரகாரம் பழிவாங்குதல் சரியானது என்று மோசே நினைத்திருக்கலாம்.

மோசே இதுவரையிலும் பார்வோனுடைய அரண்மனையில் வளர்ந்தவர். அவர் பார்வோனுடைய குமாரத்தியின் குமாரனுக்குரிய அந்தஸ்துகளை அனுபவித்தவர். எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர், மோசேயைப்பற்றி இவ்வாறு சொல்லுகிறார்.

"விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்" (எபி 11:24-27).

மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையிலே பார்வோனுடைய குமாரத்தி என்று அழைக்கப்பட்டு, அரண்மனையின் சுகங்களை அனுபவிக்க விரும்பவில்லை. மோசே அரண்மனை ஜீவியத்தை தெரிந்துகொள்ளாமல், எபிரெய ஜனங்களோடே பாடுகளை அனுபவிப்பதை தெரிந்துகொள்கிறார். மோசேக்கு உலகப்பிரகாரமான மேன்மைகளும், மாம்சப்பிரகாரமான சந்தோஷங்களும் பார்வோனுடைய அரண்மனையில் அதிகமாய்க் கிடைக்கும். ஆனால் மோசேயோ உலகப்பிரகாரமான சந்தோஷங்களை விரும்பவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் அநேக வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரரோடு பாடுகளை அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை. அவர் பார்வோனுடைய அரண்மனையிலே சந்தோஷமாயிருக்கலாம். ஆனால் மோசேயோ, தன் ஜனத்தாரோடு பாடுகளை அனுபவிப்பதையே தெரிந்துகொள்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து, ஸ்தேவானும் மோசேயைக் குறித்து சாட்சியாய்ச் சொல்லுகிறார். மோசே தேவனுக்காகவும், தேவனுடைய இஸ்ரவேலுக்காகவும் செய்த ஊழியங்களை ஸ்தேவான் விரிவாக எடுத்துச் சொல்லுகிறார்.

"மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். அவனுக்கு நாற்பது வயதான போது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று"

"அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான்"

"தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை".

"மறுநாளிலே சண்டைபண்ணிக் கொண்டிருக்கிற இரண்டுபேருக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ்செய்கிறதென்ன என்று, அவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசினான். பிறனுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி: எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்? நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ என்றான்"

"இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்" (அப் 7:22-29).

எகிப்தியர் ஒருவர் இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனை அடிக்கிறதை மோசே பார்க்கிறார். இந்த எகிப்தியன் ஒருவேளை இஸ்ரவேல் புத்திரரை அடித்து வேலை வாங்குகிற ஆளோட்டியாகயிருக்கலாம். எகிப்து தேசத்தினுடைய பிரமாணத்தின்படி, ஆளோட்டிக்கு இஸ்ரவேல் புத்திரரை அடிப்பதற்கு உரிமை உண்டு. ஆனால் தன்னுடைய எபிரெய சகோதரனை, எகிப்தியன் ஒருவன் அடிப்பதை மோசே விரும்பவில்லை. மோசே இதைப் பார்த்து, அந்த எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப்போடுகிறார்.

மோசே அந்த எகிப்தியனை ஆயுதத்தினால் வெட்டிப்போடவில்லை என்றும், தன்னுடைய வாயின் அதிகாரத்தினால் அவனுக்கு மரணதண்டனை கொடுத்தார் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையிலிருக்கிறார். அவருக்கு பார்வோனுடைய குமாரத்தியின் குமாரன் என்னும் அதிகாரம் உள்ளது. அவர் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, எபிரெயனை அடித்த எகிப்தியனுக்கு மரணதண்டனை கொடுக்கிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே அனனியாவும், சப்பிராளும் தேவனுக்கு முன்பாக பொய்சொன்னார்கள். பேதுரு அவர்களுக்கு விரோதமாக சாபவார்த்தைகளை சொன்னார். உடனே அனனியாவும் சப்பிராளும் மரித்துப்போகிறார்கள். இதுபோன்ற மரணம் எகிப்தியனுக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று யூதமார்க்கத்து ரபீமார்கள் சொல்லுகிறார்கள்.

மோசே எகிப்து தேசத்து அரண்மனையிலிருக்கும்போது, அவர் இஸ்ரவேல் புத்திரரை விசாரித்து, அவர்களை ஆளுகை செய்கிற அதிகாரியாகவும் இருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்யவேண்டும் என்பது மோசேயின் விருப்பம். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ மோசேயின் ஆளுகைக்கு தங்களை உட்படுத்த மறுக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக இந்த வசனப்பகுதியில் ஒரு சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே மறுநாளிலும் வெளியே போனபோது, எபிரெய மனுஷர் இருவர் சண்டைபண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது மோசே, அநியாயஞ்செய்கிறவனை நோக்கி, "நீ உன் தோழனை அடிக்கிறது என்ன" என்று கேட்கிறார். அதற்கு அவன், "எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ" (யாத் 2:13,14) என்று சொல்லுகிறான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயப்படுகிறார்.

சண்டை பண்ணிக்கொண்டிருக்கிற இருவருமே எபிரெய மனுஷர். அவர்கள் மத்தியிலே சகோதர சிநேகம் காணப்பட வேண்டும். அவர்கள் அன்பின் கயிறுகளால் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அந்த எபிரெய மனுஷர் இருவரும், கோபத்தினாலும், விரோதத்தினாலும் நிரம்பி சண்டைபண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மோசே இவர்கள் இருவரையும் பார்க்கிறார். இவர்கள் இருவருமே எபிரெயர் என்பது மோசேக்கு தெரிகிறது. இவர்கள் இருவரில் ஒருவன் அநியாயம் செய்கிறான் என்பதையும் மோசே அறிந்திருக்கிறார்.

மோசே இதற்கு முன்பு, எபிரெயரில் ஒருவனை அடித்த எகிப்தியனை பார்த்தார். இப்போது தங்களுக்குள் சண்டைபண்ணிக்கொண்டிருக்கிற இரண்டு எபிரெய மனுஷரைப் பார்க்கிறார். ஊழியம் செய்கிறவர்களுடைய நிலமை, மோசேக்கு ஏற்பட்ட நிலமை போலவே இருக்கிறது.

எகிப்தியன் எபிரெயனை அடித்து துன்பப்படுத்தியபோல, சபைக்கு விரோதமாக சத்துருக்கள் எழும்பி, விசுவாசிகளை துன்பப்படுத்துகிறார்கள். நாம் அந்த சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். இரண்டு எபிரெய மனுஷர் தங்களுக்குள் சண்டைபண்ணிக் கொண்டதுபோல, பல சமயங்களில் விசுவாசிகள் மத்தியிலும், ஊழியக்காரர்கள் மத்தியிலும் பிரச்சனைகள் வந்துவிடுகிறது. அவர்கள் தங்களுக்குள் சண்டைபண்ணிக்கொள்கிறார்கள். அவர்களை சமாதானப்படுத்தி, அவர்களை ஒருவரோடொருவர் ஒப்புரவாகச் செய்வதும் நம்முடைய ஊழியமாயிருக்கிறது.

எபிரெய மனுஷர் இருவர் சண்டைபண்ணிக்கொண்டிருப்பதை மோசே பார்க்கிறார். அவர்கள் ஒற்றுமையாயிருக்க வேண்டியவர்கள். இவர்களுடைய சண்டையினால் எபிரெயர் மத்தியிலே பிரிவினை உண்டாகும். இருவரில் ஒருவன் அநியாயம் செய்கிறான். மோசே அவனை நோக்கி, "நீ உன் தோழனை அடிக்கிறது என்ன" என்று கேட்கிறார்.

சண்டைபண்ணிக்கொண்டிருக்கிற எபிரெய மனுஷர் இருவருமே தோழர்கள் என்பதை மோசே அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். மோசே எபிரெய மனுஷர் மத்தியிலே சமாதானம்பண்ணுகிற ஊழியத்தை செய்கிறார். ஆனால் அநியாயம் செய்கிறவனோ மோசேயின் ஆலோசனைகளை கேட்கவில்லை. அவன் மோசேக்கு விரோதமாக எதிர்த்துப் பேசுகிறான்.

அநியாயம் செய்கிறவன் மோசேயை நோக்கி, "எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்?" என்று கேட்கிறான். அநியாயம் செய்கிற ஒருவனை யார் வேண்டுமானாலும் பாசத்தோடும், சிநேகத்தோடும் கடிந்துகொள்ளலாம். தப்பு செய்கிறவனை கடிந்துகொள்வதற்கு, பெரிய அதிகாரம் எதுவும் தேவையில்லை. ஒருவன் அநியாயம் செய்யும்போது, அவனைக் கடிந்துகொள்கிறவன் அதிகாரியாகவும், நியாயாதிபதியாகவும் இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை.

மோசே சண்டைபண்ணிக் கொண்டிருக்கிற இரண்டு எபிரெயர் மேலும் அன்பும் பாசமுமுள்ளவர். அவர்கள்மீது மோசேக்கு மெய்யாகவே அன்பும் கரிசனையும் இருக்கிறது. ஆகையினால்தான் மோசே அநியாயம் செய்கிறவனை நோக்கி, "நீ உன் தோழனை அடிக்கிறது என்ன" என்று கேட்கிறார்.

அநியாயம் செய்கிறவனோ, மோசே தனக்கு சொன்ன வார்த்தைகளை தப்பிதமாக வியாக்கியானம்பண்ணுகிறான். மோசேயின் வார்த்தைகள் சமாதான வார்த்தைகள் என்பது அவனுக்கு தெரியவில்லை. அவருடைய வார்த்தைகளெல்லாமே அதிகாரத்தின் வார்த்தைகள் என்று அந்த மனுஷன் வியாக்கியானம்பண்ணுகிறான்.

அநியாயம் பண்ணுகிற எபிரெய மனுஷனால், மோசேயின் நல்ல மனதை புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த மனுஷனைப்போலவே இக்காலத்தில் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் தப்பிதம் செய்யும்போது, நாம் அவர்களுக்கு நல்ல புத்திமதிகளை சொன்னால், அவர்கள் அந்த வார்த்தைகளை கேட்க மறுக்கிறார்கள். இக்காலத்தில் அநேகர் தங்களுக்கு யாரும் புத்திசொல்லுவதை விரும்புவதில்லை. இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்றும், தாங்கள் செய்வதெல்லாம் நீதியும் நேர்மையானதுமாயிருக்கிறது என்றும் நினைக்கிறார்கள்.

நாம் அநியாயம் செய்கிறவர்களுக்கு புத்திசொன்னால், அவர்கள் நம்முடைய வார்த்தைகளை நல்ல ஆலோசனைகளாக எடுத்துக் கொள்வதில்லை. நாம் அவர்களுக்கு தேவையில்லாத பிரசங்கத்தைப் பண்ணுவதாக நினைக்கிறார்கள். நாம் ஜனங்களுக்கு தேவனைக் குறித்தும், பாவத்திற்கு விரோதமாகவும் நல்ல வார்த்தைகளைப் பேசினால், ஜனங்கள் நம்முடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், நமக்கு பிரசங்கம்பண்ண ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்கள் நம்மைக் குற்றப்படுத்துகிறார்கள்.

மோசே அநியாயம் செய்கிறவனை நோக்கி, "நீ உன் தோழனை அடிக்கிறது என்ன" என்று கேட்கிறார். அதற்கு அந்த மனுஷன், "நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ" என்று சொல்லுகிறான். அநியாயம் செய்கிறவனுக்கு மனந்திரும்ப விருப்பமில்லை. அவன் தனக்கு நல்ல புத்தி சொல்லுகிற மோசேயை குற்றப்படுத்துகிறான்.

இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயை தங்களுடைய தலைவராக ஏற்றுக்கொண்டு, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்திருந்தால், இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இப்போதே விடுதலை கிடைத்திருக்கும். அவர்கள் மேலும் நாற்பது வருஷங்களுக்கு எகிப்து தேசத்திலே அடிமைத்தனத்தின் நுகத்தை சுமந்து பாடுகளை அனுபவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ இப்போது மோசேயின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்க ஆயத்தமாயில்லை. அவர்களால் மோசேயின் நல்ல இருதயத்தை புரிந்துகொள்ள முடியவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் மீட்பராகிய மோசேயை அங்கீகரிக்காமல் புறக்கணித்துவிடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பு உண்டாகவில்லை. அவர்களுடைய அடிமைத்தனம் மேலும் நாற்பது வருஷங்களுக்கு நீடிக்கிறது. இதனால் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு நாற்பது வருஷங்கள் தாமதமாகிறது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், நம்முடைய ஜீவியத்திலும் தேவையில்லாத காலதாமதங்கள் ஏற்படும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, நம்மைக் கடிந்துகொள்ளும்போது, நம்முடைய பாவங்களை நாம் உணரவேண்டும். நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக சுத்தம்பண்ணவேண்டும். நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நம்மோடு பேசினாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பேசுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், நமக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளை சொல்லுகிற, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மீது குற்றமும் குறையும் சொல்லிக்கொண்டிருந்தால், நமக்கு தெய்வீக ஆசீர்வாதம் கிடைக்காது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை யூதமார்க்கத்து தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்துவானவர் கட்டுகிறவர்களால் ஆகாத கல் என்று தள்ளப்பட்டவராயிருந்தார். ஆனாலும் கிறிஸ்துவானவரே மூலைக்கு தலைக்கல்லாயிருக்கிறார்.

இக்காலத்திலும் அநேகர் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்கு செவிகொடுத்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், அவர்களுக்கு ஆத்தும இரட்சிப்பு கிடைக்கும். அவர்கள் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்காமல், இயேசுகிறிஸ்துவின்மீது குற்றமும் குறையும் சொல்லிக்கொண்டிருந்தால், அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பு உண்டாகாது. ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், அவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால், அவனுக்கு ஒரு லாபமும் இல்லை.

மோசே அநியாயம் செய்கிறவனை நோக்கி, "நீ உன் தோழனை அடிக்கிறது என்ன" என்று கேட்கிறார். அவனோ மோசேயை நோக்கி, "நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ" என்று கேட்கிறார். அப்பொழுது மோசே, காரியம் நிச்சயமாய் வெளிப்பட்டது என்று பயப்படுகிறார் (யாத் 2:14).

எகிப்து தேசத்தினுடைய சட்டத்தின்படி, எகிப்தியனை கொலைசெய்வது மிகப்பெரிய குற்றம். மோசே ஒரு எகிப்தியனை வெட்டி அவனை மணலிலே புதைத்துப்போட்டார். தான் செய்த கொலைக்குற்றம் யாருக்கும் தெரியாது என்று மோசே இதுவரையிலும் நினைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர் செய்த காரியம் இஸ்ரவேல் புத்திரருக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. தான் எகிப்தியனை கொலை செய்தது, மறைவான இரகசியமல்ல என்றும், அது அநேகருக்கு தெரிந்திருக்கிறது என்பதையும் கண்டு மோசே பயப்படுகிறார்.

எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனும் அந்தக் காரியத்தை கேள்விப்படுகிறான். மோசே எகிப்தியனை வெட்டிக்கொன்றுபோட்ட செய்தியைக் கேட்டு பார்வோன் அவர்மீது கோபப்படுகிறான். அவன் மோசேயை கொலை செய்ய வகைதேடுகிறான். மோசே எகிப்தின் அரண்மனையில், பார்வோனுடைய குமாரத்தியின் மகனாக வளர்க்கப்பட்டாலும், எகிப்து தேசத்தின் சட்டப்படி மோசே கொலை குற்றவாளியாயிருக்கிறார். அவர் தண்டிக்கப்படவேண்டியவராயிருக்கிறார்.

மோசே தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக, பார்வோனிடத்திலிருந்து தப்பி ஓடுகிறார். அவர் எகிப்து தேசத்தை விட்டு தப்பி ஓடி மீதியான் தேசத்திலே போய் தங்குகிறார். மோசே அந்த தேசத்தின் ஒரு துரவண்டையில் உட்கார்ந்திருக்கிறார் (யாத் 2:15).

மீதியான் தேசம் செங்கடலின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதி. மோவாபின் வெளிகளிலும், அரபிய தீபகற்பத்திலும் மீதியானிய தேசம் பரந்து விரிந்திருக்கிறது. ஆபிரகாம், கெத்தூராள் ஆகியோருக்கு பிறந்த நான்காவது குமாரனின் பெயர் மீதியான் (ஆதி 25:1-2).

மோசே கடந்த நாற்பது வருஷங்களாக எகிப்து தேசத்தின் அரண்மனையில் வளர்ந்ததும் கர்த்தருடைய சித்தமாகயிருக்கிறது. அந்த நாற்பது வருஷம் முடிந்த பின்பு, மோசே இப்போது எகிப்து தேசத்தைவிட்டு மீதியான் தேசத்திற்கு ஓடிப்போவதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு ஏற்றவேளை இன்னும் வரவில்லை. அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க, மோசேக்கு இன்னும் பயிற்சி தேவைப்படுகிறது. கர்த்தர் மோசேயை எகிப்து தேசத்திலிருந்து மீதியான் தேசத்திற்கு அழைத்து வருகிறார். மீதியானியர்களும் ஆபிரகாமின் சந்ததியாராயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்திற்கு பிரயாணம்பண்ணியபோது, மோசே அவர்களை மீதியான் தேசத்து வழியாக வழிநடத்தி கொண்டு வந்தார்.

மோசே இப்போது மீதியான் தேசத்திலே ஒரு தூரவண்டையில் உட்கார்ந்திருக்கிறார். அவர் பிரயாணக்களைப்பிலிருக்கிறார். எகிப்து தேசத்தைவிட்டு ஓடிவந்ததை குறித்து மோசே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். இதற்குமேல் என்ன செய்ய வேண்டும் என்பதும், எங்கே போகவேண்டும் என்பதும் மோசேக்கு தெரியாது. மோசே தேவனுடைய வழிநடத்துதலை பெற்றுக்கொள்வதற்காக கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கிறார்.

மோசேயின் ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர் இதுவரையிலும் பார்வோனுடைய அரண்மனையில், பார்வோனுக்கு அருகிலே சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தவர். இப்போதோ அந்த பார்வோனுக்கு பயந்து, மீதியான் தேசத்திலே ஒரு துரவண்டையில் உட்கார்ந்திருக்கிறார். மோசேயின் ஜீவியத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும், கர்த்தர் மாறாதவராயிருக்கிறார். மோசே எகிப்து தேசத்திலிருந்தபோதும், அவர் இப்போது மீதியான் தேசத்து துரவண்டையில் உட்கார்ந்திருக்கும்போதும், கர்த்தர் அவரோடு கூடவே இருக்கிறார். கர்த்தர் மோசேயின் விசுவாசத்தை சோதிக்கிறார்.

## மோசேயின் குடும்பம் யாத் 2:16-22

**யாத் 2:16. மீதியான் தேசத்து ஆசாரியனுக்கு ஏழு குமாரத்திகள் இருந்தார்கள்; அவர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும்படிக்கு அங்கே வந்து, தண்ணீர் மொண்டு, தொட்டிகளை திரப்பினார்கள்.**

**யாத் 2:17. அப்பொழுது மேய்ப்பர்கள் வந்து, அவர்களைத் துரத்தினார்கள்; மோசே எழுந்திருந்து, அவர்களுக்குத் துணை நின்று, அவர்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.**

**யாத் 2:18. அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரெகுவேலிடத்தில் வந்தபோது, அவன்: நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்தது என்ன என்று கேட்டான்.**

**யாத் 2:19. அதற்கு அவர்கள்: எகிப்தியன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு எங்களைத் தப்புவித்து, எங்களுக்குத் தண்ணீர்மொண்டு கொடுத்து, ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டினான் என்றார்கள்.**

**யாத் 2:20. அப்பொழுது அவன் தன் குமாரத்திகளைப் பார்த்து: அவன் எங்கே? அந்த மனிதனை நீங்கள் விட்டுவந்தது என்ன? போஜனம்பண்ணும்படிக்கு அவனை அழைத்துக்கொண்டுவாருங்கள் என்றான்.**

**யாத் 2:21. மோசே அந்த மனிதனிடத்தில் தங்கியிருக்கச் சம்மதித்தான். அவன் சிப்போராள் என்னும் தன் குமாரத்தியை மோசேக்குக் கொடுத்தான்.**

**யாத் 2:22. அவள் ஒரு குமாரனைப் பெற்றாள். நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று சொல்லி, அவனுக்கு கெர்சோம் என்று பேரிட்டான்.**

மோசே மீதியான் தேசத்தில் தங்குகிறார். மோசேயின் முற்பிதாவாகிய யாக்கோபு சீரியா தேசத்திலே தங்கியதுபோல, மோசே மீதியான் தேசத்திலே தங்குகிறார்.

"யாக்கோபு பிரயாணம் பண்ணி, கீழ்த்திசையாரின் தேசத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே வயல்வெளியிலே ஒரு கிணற்றையும், அதின் அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் கண்டான்; அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; அந்தக் கிணற்றின் வாய் ஒரு பெரிய கல்லினால் அடைக்கப்பட்டிருந்தது" (ஆதி 29:1,2).

மோசேயின் ஜீவியத்தில் அவர் மீதியான் தேசத்திற்கு வந்தது, அவர் ஒரு துரவண்டையிலே உட்கார்ந்திருப்பது ஆகியவையெல்லாம் எதேச்சையாக நடைபெறுகிற சம்பவம் போல இருக்கிறது. ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறுகிறது. கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், தம்முடைய பிள்ளைகளின் ஜீவியத்தில் நடைபெறுகிற ஒவ்வொரு காரியத்தையும், தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துகிறார். தேவனுடைய தெய்வீக ஞானத்தினால், அவருடைய தெய்வீக நோக்கங்கள் நிறைவேறுகிறது.

விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியத்தில் ஒரு சில சம்பவங்கள் எதேச்சையாக நடைபெறுவதுபோல இருக்கும். ஆனாலும் பிற்காலத்தில் அந்த சம்பவத்தைப்பற்றி யோசித்துப் பார்க்கும்போது, அது கர்த்தருடைய தெய்வீக கிருபையினால், நம்முடைய ஜீவியத்தில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திற்று என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நம்முடைய ஜீவியத்தில் நடைபெறும் சாதாரண சம்பவங்கள்கூட, நமக்கு மிகவும் முக்கியமான சம்பவங்களாயிருக்கும்.

ரெகுவேல் என்பவர் மீதியான் தேசத்து ஆசாரியராயிருக்கிறார். ஆசாரியர் என்பது பிரபுவையும் குறிக்கிறது. ரெகுவேலின் மறுபெயர் எத்திரோ என்பதாகும். இவருக்கு ஏழு குமாரத்திகள் இருக்கிறார்கள். மோசே மீதியான் தேசத்திலுள்ள ஒரு துரவண்டையில் உட்கார்ந்திருக்கும்போது, ரெகுவேலின் ஏழுகுமாரத்திகளும், தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும்படிக்கு அங்கே வந்து, தண்ணீர் மொண்டு, தொட்டிகளை நிரப்புகிறார்கள் (யாத் 2:16).

மீதியான் தேசத்து ஆசாரியனுடைய பெயர் எத்திரோ என்பதாகும். இவருக்கு ரெகுவேல் (யாத் 2:18, எண் 10:29), ஒபாப் (நியா 4:11) ஆகிய மறுபெயர்களுமுள்ளது. மெல்கிசேதேக்கைப் போல எத்திரோ ஆசாரிய ஊழியம் செய்து வருகிறார். இவர் பெரிய கோத்திரத்தாருக்குத் தலைவர் (ஆதி 14) யோபுவும் ஒரு கோத்திரத்தலைவன். (யோபு 1).

தங்களுடைய முன்னோரைப் பற்றி மோசேக்கும், எத்திரோவிற்கும் தெரிந்திருக்கிறது. ஆபிரகாமின் குடும்பத்திலிருந்து தங்களுடைய சந்ததி பிரிந்து வந்திருப்பது அவர்கள் இருவருக்கும் தெரியும். ஒருவர் ஈசாக்கின் மூலமாகவும், மற்றவர் மீதியான் மூலமாகவும் வருகிறார்கள். (ஆதி 25:1-7).

மோசே எத்திரோவோடு இருந்த 40 வருஷ காலத்தில் ஆதியாகமம் புஸ்தகத்தையும், யோபுவின் புஸ்தகத்தையும் எழுதியிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

எத்திரோவிற்கு ஏழு குமாரத்திகள் இருக்கிறார்கள். அவருக்கு குறைந்தபட்சம் ஒரு குமாரனும் இருந்திருக்க வேண்டும். அவன் பெயர் ஒபாப் (எண் 10:29).

ரெகுவேலின் குமாரத்திகள் சோம்பேறியாக சும்மாயிருக்கவில்லை. அவர்கள் பெண்களாகயிருந்தாலும், தங்கள் தகப்பனாருடைய ஆடுகளை மேய்க்கிறார்கள். ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாகயிருப்பது, யாவருக்கு கனத்தையும் மேன்மையையும் கொடுக்காது. ரெகுவேலின் குமாரத்திகள் நற்குணமுள்ள ஸ்திரீகள். அவர்கள் ஆடுகளுக்கு தண்ணீர் காட்டும்படி, தண்ணீர் மொண்டு தொட்டிகளை நிரப்புகிறார்கள். அப்பொழுது மேய்ப்பர்கள் வந்து, அவர்களைத் துரத்துகிறார்கள்; மோசே எழுந்திருந்து, அவர்களுக்குத் துணை நின்று, அவர்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறார் (யாத் 2:17).

எத்திரோவின் குமாரத்திகள் துரவிலிருந்து தண்ணீர் இறைத்து, தொட்டியில் நிரப்பி வைத்திருக்கிறார்கள். மேய்ப்பர்கள் வந்து, அவர்களைத் துரத்திவிட்டு, அவர்கள் நிரப்பிய தண்ணீரைத் தங்கள் ஆடுகளுக்குக் காட்டுகிறார்கள். மோசே எத்திரோவின் குமாரத்திகளுக்கு உதவி புரிகிறார். அதனால் அந்தக் குமாரத்திகள் சீக்கிரமாக வீட்டிற்கு வருகிறார்கள். (யாத் 2:18).

மோசே தங்களுக்கு உதவிசெய்தார் என்பதற்காக, ரெகுவேலின் குமாரத்திகள் மோசேயை தங்கள் வீட்டிற்கு உடனே அழைத்துக்கொண்டு வரவில்லை. ரெகுவேலின் குமாரத்திகள் நற்குணமும் கண்ணிமுமுள்ளவர்கள். அவர்கள் அந்நிய தேசத்து புருஷரிடத்தில் நெருங்கி பழகாதவர்கள். தங்களுக்கு முன் பின் அறிமுகமில்லாத புருஷனை, அந்த ஸ்திரீகள் தங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வரவில்லை.

ஆனாலும் மோசே தங்களுக்கு செய்த உதவியை அந்த ஸ்திரீகள் மறந்துவிடவில்லை. அவர்கள் மோசேயைப்பற்றி தங்கள் தகப்பனாருக்கு சொல்லுகிறார்கள்.

அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரெகுவேலிடத்தில் வந்தபோது, அவர் தன்னுடைய குமாரத்திகளை நோக்கி, "நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்தது என்ன" என்று கேட்கிறார். அதற்கு அவர்கள், "எகிப்தியன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு எங்களைத் தப்புவித்து, எங்களுக்குத் தண்ணீர்மொண்டு கொடுத்து, ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டினான்" (யாத் 2:18,19) என்று சொல்லுகிறார்கள்.

எத்திரோவின் குமாரத்திகள் தங்களுக்கு மேய்ப்பர்களால் வந்த பிரச்சனைகளைக் குறித்து (யாத் 2:17) தங்கள் தகப்பனிடம் ஏற்கெனவே விவரித்துக் கூறியிருக்க வேண்டும். அவர்கள் மோசேயை எகிப்தியன் என்று சொல்லுகிறார்கள். மோசே எகிப்தியனைப்போல வஸ்திரம் அணிந்திருக்கிறார். அவர் எகிப்தியனைப் போல முக சவரம் பண்ணியிருக்கிறார் (ஆதி 41:14).

அப்பொழுது ரெகுவேல் தன் குமாரத்திகளைப் பார்த்து, "அவன் எங்கே? அந்த மனிதனை நீங்கள் விட்டுவந்தது என்ன? போஜனம்பண்ணும்படிக்கு அவனை அழைத்துக்கொண்டுவாருங்கள்" (யாத் 2:20) என்று சொல்லுகிறார். மோசேயை அழைத்துக்கொண்டு வருமாறு, தங்கள் தகப்பனார் அனுமதி கொடுக்கும் வரையிலும், ரெகுவேலின் குமாரத்திகள் மோசேயை தங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வரவில்லை. இது ஸ்திரீகளிடத்தில் காணப்படவேண்டிய பொதுவான நற்குணம். நற்குணமே ஸ்திரீகளுக்கு மெய்யான ஆபரணம்.

ரெகுவேலின் குமாரத்திகள் மோசேயை எகிப்தியன் என்று சொல்லுகிறார்கள். மோசே இயல்பாகவே பிறருக்கு உதவி செய்யக்கூடிய நல்ல குணமுள்ளவர். ரெகுவேலின் குமாரத்திகள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்டும்படிக்கு, தண்ணீர் மொண்டு, தொட்டிகளை நிரப்புகிறார்கள். அப்பொழுது மற்ற மேய்ப்பர்கள் வந்து அந்த ஸ்திரீகளை துரத்துகிறார்கள். ரெகுவேலின் குமாரத்திகளால் அந்த மேய்ப்பர்களை எதிர்க்க முடியவில்லை. அப்போது மோசே, அந்த மேய்ப்பரின் கைகளுக்கு, ரெகுவேலின் குமாரத்திகளை தப்புவிக்கிறார். மோசே அந்த ஸ்திரீகளுக்கு தண்ணீர் மொண்டு கொடுத்து அவர்களுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்டுகிறார்.

மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையில் உயர்ந்த கல்வி கற்றவர். ஆனால் இப்போது அவர் ஆடுகளுக்கு தண்ணீர் காட்டிக்கொண்டிருக்கிறார். அவருடைய உயர்கல்வி, மற்றவர்களுக்கு உதவி செய்ய தடையாயில்லை. மோசே அந்நிய தேசத்து ஸ்திரீகளுக்கு தண்ணீர் மொண்டு கொடுக்கிறார். அவர் தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார்.

பொதுவாக மனுஷர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களை மாத்திரமே பார்ப்பார்கள். அவர்கள் எந்த வேலைகளை செய்தாலும், தங்களுடைய வேலைகளை மாத்திரமே செய்வார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்னும் விருப்பம் அநேகருடைய மனதில் இருக்காது. ஆனாலும் பிறருக்கு உதவிசெய்ய நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்போது, அந்த வாய்ப்பை நாம் சந்தோஷமாய் பயன்படுத்தவேண்டும். பிரதிபலன் எதிர்பாராமல் பிறருக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

மோசே நற்குணமுள்ளவர். அவர் நன்மை செய்ய விரும்புகிறவர். அவர் மனுஷர்மீது பிரியமாயிருக்கிறவர். அதே வேளையில் அவர் எல்லோருக்கும் பிரயோஜனமுள்ள வேலைகளை செய்கிறவர். மோசேயைப்போல, விசுவாசிகளாகிய நாமும், மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு எப்படிப்பட்ட வாய்ப்புக்களைக் கொடுத்தாலும், நாம் அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். மற்றவர்கள் எதிர்பார்க்கிற உதவிகளை நம்மால் செய்ய முடியாவிட்டாலும், நம்மால் செய்ய முடிகிற உதவிகளை, நாம் மற்றவர்களுக்கு செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்.

மோசேயை போஜனம்பண்ணும்படிக்கு அழைத்துக்கொண்டு வருமாறு ரெகுவேல் தன்னுடைய குமாரத்திகளிடம் சொல்லுகிறார். மோசே ரெகுவேலின் குமாரத்திகளுக்கு உதவிசெய்தார். ரெகுவேலோ மோசேக்கு போஜனம் கொடுத்து, அவரை உபசரிக்க விரும்புகிறார். அவர் மோசேயை தன்னுடைய வீட்டிலே தங்கியிருக்குமாறு கேட்டுக்கொள்கிறார். மோசே ரெகுவேலின் வீட்டில் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கும்போது, அவர் தன்னுடைய சரித்திரம் முழுவதையும் ரெகுவேலுக்கு சொல்லியிருக்கலாம்.

மோசே அந்த மனிதனிடத்தில் தங்கியிருக்கச் சம்மதிக்கிறார். அவர் சிப்போராள் என்னும் தன் குமாரத்தியை மோசேக்குக் கொடுக்கிறார் (யாத் 2:21). மோசே ரெகுவேலின் வீட்டிற்கு போஜனம் பண்ணுவதற்காக வந்தார். இப்போதோ அவர் ரெகுவேலின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம் செய்து ரெகுவேலுக்கு மருமகனாயிருக்கிறார்.

கிழக்கு தேசங்களில் திருமணப் பேச்சு வார்த்தைகளை மணமகனின் பெற்றோர் ஆரம்பித்து வைப்பது வழக்கம். இந்த வசனத்திலும், யோசு 15:16-17; 1சாமு 18:27 ஆகிய வசனங்களிலும் இந்தப் பழக்கம் மாறியிருக்கிறது.

சிப்போராள் எத்திரோவைவிட்டு மோசேயோடு புறப்பட்டுப் போகிறாள். அவர்கள் தங்குமிடத்தில் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பின்பு அவள் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து விடுகிறாள். (யாத் 4:24-26) சீனாய் வனாந்தரத்தில் சிப்போராள் மோசேயோடு மறுபடியும் ஒன்று சேருகிறாள் (யாத் 18:1-27, எண் 12:1).

மோசேயின் மனைவியாகிய சிப்போராள் ஒரு குமாரனைப் பெறுகிறாள். "நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன்" என்று சொல்லி, மோசே அவனுக்கு கெர்சோம் என்று பேரிடுகிறார் (யாத் 2:22). தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரம், மோசே மீதியான் தேசத்திலே தங்கியிருக்கிறார். இப்போது மோசேக்கு தங்குவதற்கு ஒரு இடம் தேவைப்படுகிறது. கர்த்தர் மீதியான் தேசத்திலுள்ள ரெகுவேலின் வீட்டை, மோசேக்கு ஏற்கெனவே ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்.

கெர்சோம் என்பதற்கு "பரதேசி" என்று பொருள். ஒருசில மூலபாஷை சுவடிகளில் இந்த வாக்கியத்தைத் தொடர்ந்து, "மோசேயின் இரண்டாம் குமாரனின் பெயர் எலியேசர். என் பிதாவின் தேவன் எனக்கு துணையாக இருக்கிறார். பார்வோனின் கரத்திலிருந்து என்னை விடுவித்தார்" என்னும் வாக்கியமும் வருகிறது. யாத் 4:20, 18:4 ஆகிய வசனங்களில் மோசேயின் "பிள்ளைகள்" என்று பன்மையில் கூறப்பட்டிருப்பதினால் மூலபாஷை சுவடிகளில் காணப்படும் இந்த வாக்கியம் முக்கியத்துவம் பெறுகிறது.

மோசே ரெகுவேலின் வீட்டில், தன்னுடைய ஜீவியகாலமெல்லாம் தங்கியிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. அவர் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, இங்கிருந்து புறப்பட்டுப்போகவேண்டும். கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை செய்வதற்கு, மோசே மீதியான் தேசத்திலே தன்னை ஆயத்தம்பண்ணிக்கொள்கிறார்.

மோசே மீதியான் தேசத்திற்கு வருவதற்கு முன்பு, அவர் எகிப்து தேசத்திலே பார்வோனுடைய அரண்மனையிலிருந்தவர். மோசே எகிப்து தேசத்திலே அதிகாரத்திலும், அந்தஸ்திலும் இருந்தவர். ஆனால் இப்போதோ அவர் மீதியான் தேசத்திலே, ஒரு சாதாரண மனுஷனாகயிருக்கிறார். அவர் அந்நிய தேசத்திலே பரதேசியாய்த் தங்கியிருக்கிறார். மோசே ரெகுவேலின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார். மோசே மீதியான் தேசத்தில் என்ன வேலை செய்தாலும், மோசே தமக்கு ஊழியம் செய்யவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக மோசேயை மீதியான் தேசத்திலே உருவாக்குகிறார்.

மோசே எகிப்து தேசத்திலே செல்வச்செழிப்பில், ஆடம்பரமாய் வாழ்ந்தவர். ஆனால் இப்போதோ அவர் மீதியான் தேசத்திலே ஏழ்மையாய் ஜீவிக்கிறார். அநேக பாடுகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்கிறார். மோசே ஒவ்வொரு நாளும், தன்னுடைய போஜனத்திற்காக வேலை செய்கிறார்.

மோசேக்கு ஆடுகளை மேய்க்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. மேய்ப்பர்களுக்கு ஓய்வு நேரம் அதிகமாய்க் கிடைக்கும். மோசே தன்னுடைய ஓய்வுநேரத்தையெல்லாம், கர்த்தரைப்பற்றித் தியானிப்பதற்கும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கும் செலவுபண்ணுகிறார். மோசே எகிப்து தேசத்திலிருந்தபோதோ, அவருக்கு ஓய்வு நேரமே கிடைக்கவில்லை. அவர் பார்வோனுடைய அரண்மனை காரியங்களில் எப்போதுமே சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

மோசே எகிப்து தேசத்தில் ஒரு பராக்கிரமசாலியாகவும், ஒரு யுத்தவீரனாகவும், ராஜதந்திரியாகவும், அதிக கல்வி கற்றவராகவும் இருந்தார். மோசேக்கு எகிப்து தேசத்திலே பேரும் புகழும் இருந்தது. ஆனால் அங்கு, கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கு, அவருக்கு ஓய்வு நேரம் கிடைக்கவில்லை. பார்வோனுடைய அரண்மனை, மோசேயின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆதரவாகயில்லை.

மோசே மீதியான் தேசத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது, பல சமயங்களில் தனிமையில் அமர்ந்திருக்கிறார். அவர் ஆடுகளை மேய்ச்சலுக்கு விட்டு விட்டு ஓய்வாக அமர்ந்திருக்கிறார். மோசேயின் ஓய்வு நேரமும், அவருடைய தனிமையும், கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கு அவருக்கு மிகவும் உதவியாயிருக்கிறது.

மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையில் பயிற்சி பெற்றதினால் அவர் யெஷூரனுக்கு ராஜாவாயிருக்கிறார். மோசே மீதியான் தேசத்தில் கர்த்தரோடு ஐக்கியமாயிருந்ததினால், ஓரேப் மலையிலே கர்த்தரோடு சம்பாஷணை பண்ணுகிறார். மோசே மீதியான் தேசத்தில் இருந்த காலங்களில், அவர் கர்த்தருடைய பரிசுத்த பர்வதமாகிய ஓரேபிலே, கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார்.

## இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சு யாத் 2:23-25

**யாத் 2:23. சிலகாலம் சென்றபின், எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது.**

**யாத் 2:24. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்.**

**யாத் 2:25. தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே இன்னும் அடிமைத்தனத்திலேயே இருக்கிறார்கள். மோசே பிறந்த காலத்தில், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், எபிரெயரில் பிறந்த ஆண்பிள்ளைகளை யெல்லாம் நதியிலே தூக்கிப்போட வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தான். அந்தக் கட்டளை இன்னும் அமுலிலிருக்கிறதா அல்லது அந்தக் கட்டளை ஒழிந்துபோயிற்றா என்பது தெரியவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் பலுகிப்பெருகுவதை, எகிப்தியர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். எகிப்தியர்கள் அவர்களை அடிமைப்படுத்தி தங்களுக்கு வேலை செய்ய வைக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரின் நன்மைகளை விசாரிப்பதில்லை. இஸ்ரவேலர் மூலமாக தங்களுக்கு எவ்வளவு வேலைகள் நடக்கும் என்பதே எகிப்தியருக்கு முக்கியமாயிருக்கிறது.

எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோன் மரித்த பின்பு, அந்த தேசத்திற்கு மற்றொரு பார்வோன் ராஜாவாக வருகிறான். அவனும் இஸ்ரவேல் புத்திரரை விடுதலை பண்ணாமல், அவர்களை மேலும் அதிகமாக ஒடுக்குகிறான். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே, தங்கள் முன்னோர்களைப் போலவே, தொடர்ந்து பாடுகளை அனுபவித்து வருகிறார்கள்.

சிலகாலம் சென்றபின், எகிப்தின் ராஜாமரித்துப்போகிறான். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் இன்னும் அதிகமாய் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டுகிறது (யாத் 2:23).

யாத்திராகமம் வரலாற்றில் உண்மையான வரலாறு இங்குதான் ஆரம்பமாகிறது. இஸ்ரவேலின் ஆண்பிள்ளைகளைக் கொன்றுபோட்ட ராஜா மரித்துப்போகிறான். அவனுக்குப் பின்பு, அவனுடைய குமாரன் எகிப்தின் ராஜாவாகிறான். அவனும் செங்கடலில் மூழ்கிவிடுகிறான். யாத் 1:8-2:22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளின் கால அளவு 80 வருஷங்களாகும். (அப் 7:22-30). இந்த நாற்பது வருஷ காலத்தில் அடுத்த நாற்பது வருஷ காலத்து ஊழியத்திற்கு மோசே பயிற்சி எடுத்துக் கொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்திலிருந்தாலும், அவர்கள் இதுவரையிலும் தேவனை நினைக்கவில்லை. தங்களுடைய வேதனைகளை தங்களுக்குள்ளேயே சொல்லிக் கொள்கிறார்கள். இப்போதோ அவர்கள் அடிமைத்தனத்தினால் தவித்து, தேவனிடத்தில் முறையிடுகிறார்கள். அவர்கள் பல வருஷங்களுக்கு பின்பு தேவனை நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைத்தனத்தில் வேதனையையும், துன்பத்தையும் அனுபவிக்கிறார்கள். 88-89 ஆகிய சங்கீதங்கள் இஸ்ரவேலரின் அடிமைத்தனத்தை விளக்கிக் கூறுகிறது. இத்தனை பாடுகள் வந்ததினால் தான் இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தை விட்டுப் புறப்பட்டுப்போக ஆயத்தமாக இருக்கிறார்கள். எகிப்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்புகூட எகிப்து தேசத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்னும் ஆவல் அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது (யாத் 16:3; யாத் 17:3; எண் 14:2-4).

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் தேவபக்தியோடு இருந்தார்களா அல்லது தேவனை முழுவதுமாக மறந்து விட்டார்களா என்பது தெரியவில்லை. தேவன் இஸ்ரவேலரின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக இஸ்ரவேலரை விடுவிக்கும் காரியங்களில் அவரே முதலாவதாகக் கிரியை செய்கிறார் (யாத் 2:24). எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலருக்குள் ஒருசிலருக்கு மட்டுமே தேவனைப் பற்றி தெரிந்திருக்கிறது. மற்ற அனைவரும் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி, தேவதூஷணம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்ததினால், அவர்கள் எகிப்தியரின் பழக்க வழக்கங்களை கற்றுக்கொள்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை முறைகளை பின்பற்றுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் எகிப்தியரைப்போலவே விக்கிரகங்களை பின்பற்றிப்போகிறார்கள். இப்போதோ இஸ்ரவேல் புத்திரரின் உபத்திரவம் அதிகரித்திருக்கிறது. அவர்கள் அடிமைத்தனத்தினால் தவிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு வேதனைகள் அதிகரிக்கும்போது, அவர்கள் விக்கிரகங்களை விட்டு விலகி, கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். தங்கள் பிரச்சனைகளை அவர்கள் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள்.

"கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; அவர் எங்களுக்குச் செவி கொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம்" *(எண் 20:16).*

தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்கிறார். தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை தேவன் நினைவுகூருகிறார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்குகிறார்; தேவன் அவர்களை நினைத்தருளுகிறார் *(யாத் 2:24,25).*

இஸ்ரவேல் புத்திரர் பெருமூச்சு விட்டாலும், பெருமூச்சின் சத்தம் தேவசந்நிதியில் எட்டுகிறது. கர்த்தர் அவர்கள் முறையீட்டையும் கேட்கிறார். அவர்கள் பெருமூச்சையும் கேட்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பெருமூச்சுக்கு பின்பு, அவர்களுக்கு ஆசீர்வாதம் காத்திருக்கிறது. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர்கள் தங்கள் பாரங்களை சுமக்க முடியாமல் பெருமூச்சுவிட்டாலும், அந்தப் பெருமூச்சுக்கு பின்பு, அவர்கள் ஆசீர்வாதங்களை சுமக்கப் போகிறார்கள் என்பதும் கர்த்தருக்கு தெரியும்.

கர்த்தர் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் அவர்களோடு செய்த தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூருகிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே சுமை சுமந்தார்கள். மோசே அதைப் பார்த்து அவர்கள்மீது பரிதாபப்பட்டார் *(யாத் 2:11).* கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கிப் பார்த்து, அவர்களுக்கு உதவிசெய்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குரியவர்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது எப்போதுமே கண்ணோக்கமாயிருக்கிறார். கர்த்தர் அவர்களை தம்முடைய சொந்தஜனமாக பாவித்து அவர்களுக்கு நன்மை செய்கிறார்.

## 3 அதிகாரம்

கர்த்தர் எரிகிற அக்கினி ஜுவாலையிலே நின்று மோசேக்கு தரிசனமாகிறார். ஆனாலும் மோசே தம்மை கிட்டிச்சேருவதை கர்த்தர் தடைபண்ணுகிறார் (யாத் 3:1-5).

கர்த்தர் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறார் (யாத் 3:6).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை மீட்டுக்கொள்ள சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை கானான் தேசத்தில் கொண்டு போய் சேர்க்கவும் சித்தமுள்ளவராயிருக்கிறார் (யாத் 3:7-9).

இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி கர்த்தர் மோசேயை பார்வோனிடத்திற்கும் (யாத் 3:10), இஸ்ரவேலின் மூப்பரிடத்திற்கும் (யாத் 3:16), அனுப்ப சித்தமுள்ளவராயிருக்கிறார்.

பார்வோனிடத்திற்கு போகவும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் "நான் எம்மாத்திரம்" என்று மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார் (யாத் 3:11,12).

மோசே பார்வோனிடத்திலும், இஸ்ரவேல் புத்திரரிடத்திலும் என்ன சொல்லவேண்டுமென்று, கர்த்தர் அவருக்கு தெளிவாக சொல்லுகிறார் (யாத் 3:13-18).

மோசே எகிப்து தேசத்திற்குப்போய், பார்வோனை பார்ப்பதற்கு முன்பாகவே, அந்த தேசத்தில் என்னென்ன காரியங்கள் சம்பவிக்கும் என்பதை கர்த்தர் மோசேக்கு முன்னறிவிக்கிறார் (யாத் 3:19-22).

## தேவபர்வதமாகிய ஓரேப் யாத் 3:1-6

**யாத் 3:1. மோசே மீதியான தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான்.**

**யாத் 3:2. அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது.**

**யாத் 3:3. அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான்.**

**யாத் 3:4. அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.**

**யாத் 3:5. அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.**

**யாத் 3:6. பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான்.**

மோசேயின் ஜீவியசரித்திரம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் நாற்பது வருஷங்கள் வருகிறது. மோசே தன்னுடைய முதலாவது நாற்பது வருஷகாலத்தில், எகிப்து தேசத்தில் பார்வோனுடைய அரண்மனையில் ஒரு பிரபுவாகயிருக்கிறார்.

மோசே தன்னுடைய இரண்டாவது நாற்பது வருஷகாலத்தில் மீதியான் தேசத்திலே ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பராயிருக்கிறார். அவர் தன்னுடைய மூன்றாவது நாற்பது வருஷகாலத்தில் யெஷூரனுக்கு ராஜாவாயிருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர், மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா" *(யாத் 3:10)* என்று சொல்லும்போது, மோசேயின் இரண்டாவது நாற்பது வருஷ ஜீவியசரித்திரம் முடிவுபெறுகிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை, ஊழியத்திற்கு அழைக்கும் முன்பாகவே, தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார். ஊழியக்காரர்களுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து கிடைக்கும் பயிற்சிகள் மிகவும் விசேஷமானவை. அவை கர்த்தருடைய கிருபையினால் அவருடைய ஊழியக்காரர்களுக்கு கிடைக்கிறது.

மோசே மீதியான தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவருகிறார். மோசே ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப் மட்டும் வருகிறார் *(யாத் 3:1)*.

வனாந்தரத்தின் பின்புறம் என்பது வனாந்தரத்தின் மேற்கு பகுதியைக் குறிக்கும். இது விளைச்சல் மிகுந்த பூமி. மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை இதுபோன்ற விளைச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் சென்று மேய்ப்பார்கள். மேய்ப்பர்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியேறினால், சில சமயங்களில் பல மாதங்கள் கழித்தே வீட்டிற்குத் திரும்பி வருவார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சில பரிசுத்த பர்வதங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சீனாய் மலை = ஓரேப் மலை *(யாத் 3:1; யாத் 4:27; யாத் 18:5; யாத் 24:13; எண் 10:33; 1இராஜா 19:8)*. சீனாய் ஒரு வனாந்தரமாகவும், 37 இடங்களில் ஒரு பர்வதமாகவும் கூறப்பட்டிருக்கிறது. *(யாத் 19:1-23; எண் 1:1; எண் 3:1; கலா 4:24-25)*. அதுபோலவே இதே வனாந்தரமும், இதே பர்வதமும் ஓரேப் என்றும் 17 இடங்களில் அழைக்கப் பட்டிருக்கிறது. *(யாத் 3:1; யாத் 33:6; உபா 1:6; உபா 4:10-15; உபா 5:2; உபா 29:1; 1இராஜா 19:8; சங் 106:19; மல் 4:4)*

2. மோரியா மலை *(ஆதி 22:2; 1நாளா 21:18; 2நாளா 3:1)*

3. சீயோன் மலை *(சங் 48:2; ஏசா 2:2-4; ஏசா 8:18; ஏசா 24:23; ஏசா 66:20; மீகா 4:7; தானி 11:45; யோவே 3:17; சக 8:3)*

4. ஒலிவமலை *(சக 14:4; மத் 24:3; மத் 26:30; அப் 1:12)*

5. மறுரூபமலை *(2பேதுரு 1:18)*

6. கல்வாரி மலை *(லூக்கா 23:33)*

7. பரலோக சீயோன் பர்வதம் *(எபி 12:22; வெளி 14:1; வெளி 21:10)*

ஆடுகளை மேய்ப்பது மோசேயைப் பொறுத்தவரையில் மிகவும் தாழ்மையான வேலை. அவர் எகிப்து தேசத்திலே உயர்ந்த கல்வி கற்றவர். ஒரு தேசத்தை ஆளுகை செய்யுமளவுக்கு மோசே பயிற்சி பெற்றிருக்கிறார். ஆனால் கர்த்தரோ மோசேக்கு ஆடுகளை மேய்க்கும் வேலையை கொடுத்திருக்கிறார்.

மோசே எந்த வேலையையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். அவர் எகிப்து தேசத்திலிருந்தபோது பார்வோன் அவரைக் கொலைசெய்ய வகைதேடினார். மோசே மரணத்திற்கு தப்பித்து மீதியான் தேசத்திற்கு வந்திருக்கிறார். அவர் எகிப்து தேசத்திலேயே இருந்திருந்தால், அவருடைய உயர்ந்த படிப்போ அல்லது அவருடைய ராஜாங்க பயிற்சிகளோ அவரைப் பாதுகாத்திருக்காது.

மோசே இப்போது மீதியான் தேசத்தில் நாற்பது வருஷங்களாக ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார். இது மிகவும் எளிமையான வேலை. மோசே இந்த தேசத்திலே தனிமையாகயிருந்தாலும், அவர் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியதிலிருக்கிறார். மோசேயைப்போலவே நாமும், கர்த்தர் நமக்கு கொடுக்கும் வேலைகளை உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார். அவருடைய பிரசன்னம் நம்மோடுகூட எப்போதும் இருக்கும்.

மோசே எகிப்து தேசத்தில், பார்வோனுடைய அரண்மனையிலிருந்த நாற்பது வருஷ காலத்தில், அவரால் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்க முடியவில்லை. மோசே எகிப்து தேசத்திலே கர்த்தருடைய பிரசன்னத்தை உணரவில்லை. அவர் இப்போது மீதியான் தேசத்தின் வனாந்தரத்திலிருக்கிறார். மோசே இங்கு இருந்த நாற்பது வருஷ காலத்தில், கர்த்தரிடத்தில் நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். அவர் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து ஜீவிக்கிறார்.

மோசே ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டிக்கொண்டு போகிறார். அங்கே அவர் தேவபர்வதமாகிய ஓரேப் மட்டும் வருகிறார். அப்போது அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று மோசேக்குத் தரிசனமாகிறார். அப்பொழுது மோசே உற்றுப்பார்க்கிறார்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருக்கிறது *(யாத் 3:2)*.

தேவன் தாமே கர்த்தருடைய தூதனானவர் என்று இங்கு அழைக்கப்பட்டிருக்கிறார். *(யாத் 3:2,4-22; யாத் 4:1-17; மாற்கு 12:26; அப் 7:30-35; உபா 4:15)*.

முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருக்கிறது. முட்செடி எரிகிறது. ஆனால் அது வெந்துபோகவில்லை. எரியும் அக்கினிச் சூளையிலிருந்து தேவன் மூன்று எபிரெய வாலிபர்களைப் பாதுகாத்தார். *(தானி 3)* அதே தேவன் இங்கு முட்செடியை வெந்து போகாமல் பாதுகாக்கிறார். கடைசி காலத்தில் இந்தப் பூமி அக்கினியினால் புதுப்பிக்கப்படும். அப்போது பூமியும், அதிலுள்ள ஜனமும் வெந்துபோகாதவாறு, தேவன் அவர்களைப் பாதுகாப்பார். *(ரோமர் 8:19-24; எபி 1:10-12; எபி 12:25-28; 2பேதுரு 3:10-13; வெளி 20:7-10)*.

எரிகிற முட்செடியில் அதிசயம் எதுவுமில்லை. எல்லா முட்செடியும் எரியும். ஆனால் இந்த முட்செடியோ மிகவும் விசேஷமாயிருக்கிறது. இந்த முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமலிருக்கிறது. பொதுவாக முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரியும்போது அது வெந்துபோகும். இது இயற்கையின் பிரமாணம். ஆனால் இந்த முட்செடி வெந்துபோகாமலிருப்பது, மோசேக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

முட்செடியின் கீழேயுள்ள பூமியிலிருந்து அக்கினி உற்பத்தியாகவில்லை. வானத்திலிருந்து அக்கினி கீழே இறங்கி, அந்த முட்டிசெடியை ஜுவாலித்து எரியப்பண்ணவில்லை. ஆனால் அந்த முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிகிறது. அது வெந்துபோகாமலும் இருக்கிறது. இது தேவனுடைய தெய்வீக பிரசன்னத்திற்கும், அவருடைய மகிமைக்கும் அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய தெய்வீக பிரசன்னமும் அவருடைய மகிமையும், முட்செடியின் நடுவிலிருந்து வெளிப்படுகிறது. கர்த்தருடைய தூதனானவர் அக்கினி ஜுவாலையிலே நின்று மோசேக்கு தரிசனமாகிறார்.

மோசே அக்கினி ஜுவாலையால் எரியும் முட்செடியைப் பார்க்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணியபோது, ஆபிரகாம் அக்கினி ஜுவாலையை பார்த்தார். இந்த ஜுவாலை சந்தோஷத்தின் வெளிச்சத்திற்கு அடையாளமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மீட்பு வரப்போகிறது என்பதை இந்த ஜுவாலையின் வெளிச்சம் உறுதிபண்ணுகிறது.

"சூரியன் அஸ்தமித்து காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிஜுவாலையும் தோன்றின" (ஆதி 15:17).

ஆபிரகாம் பார்த்த ஜுவாலையின் வெளிச்சத்தைவிட, மோசே இப்போது பார்க்கிற அக்கினி ஜுவாலையின் வெளிச்சம் மிகவும் பிரகாசமாகயிருக்கிறது. வனாந்தரத்திலே மிகவும் உயரமான கேதுரு மரங்கள் உள்ளன. அப்படிப்பட்ட கேதுரு மரங்களில் எதுவும் இங்கு எரியவில்லை. ஒரு சாதாரண முட்செடியின் நடுவிலிருந்து அக்கினி ஜுவாலை உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய மகிமை மிகவும் பெரியது. அவர் தம்மை சாதாரண முட்செடியில் வெளிப்படுத்துகிறார்.

முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிகிறது. ஆனால் அது வெந்துபோகாமலிருக்கிறது. இதைப் பார்க்கும்போது மோசேக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. அப்பொழுது மோசே, "இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன்" (யாத் 3:3) என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்.

மோசே அந்த அற்புத காட்சியை பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் காண்கிறார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் மோசேயை நோக்கி, "மோசே, மோசே" என்று கூப்பிடுகிறார். அப்பொழுது மோசே, "இதோ, அடியேன்" (யாத் 3:4) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை தமக்கு அருகாமையில் வருமாறு அழைக்கிறார். ஆனாலும் மோசே அவசரப்பட்டு, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு முன்பாக நெருங்கி, கிட்டி சேர்ந்துவிடக்கூடாது. மோசே முட்செடிக்கு அருகாமையிலும் வரவேண்டும். அதே வேளையில் அவர் அந்த முட்செடியை கிட்டிச்சேரவும் கூடாது. மோசே கர்த்தருடைய சமுகத்தில் அவசரப்படாமல், நீடிய பொறுமையாய் இருக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை அன்பாகவும் கிருபையாகவும் அழைக்கிறார். அவர் மோசேயை நோக்கி, "மோசே மோசே" என்று கூப்பிடுகிறார். மோசேயும் கர்த்தர் தன்னைக் கூப்பிடும்போது, உடனே கீழ்ப்படிந்து, "இதோ அடியேன்" என்று சொல்லுகிறார். நாம் கர்த்தருக்கு சமீபமாய்ச் சேரும்போது, கர்த்தரும் நமக்கு சமீபமாய் வருவார்.

கர்த்தர் மோசேயை பொதுவாக அழைக்காமல், "மோசே, மோசே" என்று அவருடைய பெயரைச் சொல்லி அவரை தனிப்பட்ட முறையில் விசேஷமாக அழைக்கிறார். கர்த்தருடைய வார்த்தையில், அவருடைய மகிமை எப்போதும் கலந்திருக்கும். தேவனுடைய ஒவ்வொரு தெய்வீக தரிசனமும், அவருடைய தெய்வீக வெளிப்பாடுகளாயிருக்கும். கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே, தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். நம்முடைய சுயமுயற்சியினாலோ, சுயபக்தியினாலோ நம்மால் கர்த்தரைத் தெரிந்துகொள்ள முடியாது. நம்மால் கர்த்தர் தம்மைப்பற்றி நமக்கு வெளிப்படுத்தினால் மாத்திரமே, நம்மால் அவரை அறிந்துகொள்ள முடியும்.

"அது ஒரு உருப்போல என் கண்களுக்குமுன் நின்றது, ஆனாலும் அதின் ரூபம் இன்னதென்று விளங்கவில்லை; அமைதலுண்டாயிற்று, அப்பொழுது நான் கேட்ட சத்தமாவது: மனுஷன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுபுத்திரன் தன்னை உண்டாக்கினவரைப் பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ? கேளும், அவர் தம்முடைய பணிவிடைக்காரரிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை; தம்முடைய தூதரின்மேலும் புத்தியீனத்தைச் சுமத்துகிறாரே" (யோபு 4:16-18).

"தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருந்துகிறவரல்லவே. கனநித்திரை மனுஷர்மேல் இறங்கி, அவர்கள் படுக்கையின்மேல் அயர்ந்திருக்கையில், அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரை போட்டு, மனுஷன் தன்னுடைய செய்கையைவிட்டு நீங்கவும், மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார்" (யோபு 33:14-17).

தேவனுடைய தெய்வீக அழைப்புக்கு நாம் உடனே செவிகொடுக்கவேண்டும். கர்த்தர் நம்மை அழைக்கும்போது, நாம் மிகுந்த பணிவோடும், கீழ்ப்படிதலோடும், அவருக்கு பிரதியுத்தரம் சொல்லவேண்டும். கர்த்தர் தன்னை கூப்பிடும்போது, மோசே, "இதோ அடியேன்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு "உமது அடியேனாகிய நான் இங்கே இருக்கிறேன், உமது அடியேனுக்கு நீர் என்ன சொல்லுகிறீரோ அதற்கு நான் கீழ்ப்படிவேன்" என்பது பொருளாகும்.

மோசே முட்செடி வெந்துபோகாதிருக்கிற அந்த அற்புத காட்சியைப் பார்ப்பதற்கு, அதன் கிட்டே வருகிறார். அப்போது கர்த்தர் மோசேக்கு தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" (யாத் 3:5) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அருகாமையில் வரலாம். ஆனாலும் அவர் கர்த்தருக்கு சமீபமாய் மிகவும் அருகாமையில் வரக்கூடாது. மோசேயின் மனதிலே அந்த அற்புத காட்சியை பார்க்கவேண்டும் என்னும் ஆவல் உண்டாயிற்று. கர்த்தர் நம்முடைய எல்லா ஆசைகளையும் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்க முடியாது. அதே வேளையில், கர்த்தர் நம்முடைய தேவைகளையெல்லாம் சந்திப்பார் என்று நம்பிக்கையோடிருக்கலாம்.

கர்த்தர் மோசேயின் இருதயத்தில் ஏற்பட்டிருக்கிற வாஞ்சையை திருப்திபண்ணுகிறார். ஆனாலும் கர்த்தர் மோசேயின் ஆசைகளையெல்லாம் நிறைவேற்றினார் என்று சொல்ல முடியாது. மோசே கர்த்தருடைய சமுகத்தில் தன்னுடைய பக்தியையும், கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்த வேண்டும். ஒரு வேலையாள் தன் எஜமானுக்கு முன்பாக, தன்னுடைய கால்களில் பாதரட்சைகளை போட்டுக்கொண்டு நிற்கக்கூடாது.

கர்த்தர் மோசேயின் எஜமானராயிருக்கிறார். மோசே கர்த்தருடைய அடியானாயிருக்கிறார். மோசே கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய பணிவை வெளிப்படுத்தவேண்டும். மோசே தன்னை கர்த்தருடைய அடியானாகவும், ஊழியக்காரனாகவும் உறுதிபண்ணவேண்டும்.

இதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் கால்களில் இருக்கிற பாதரட்சையை கழற்றிப்போடு" என்று சொல்லுகிறார். பாதரட்சைகளை கழற்றிப்போடுவது, பிறருக்கு மரியாதை காண்பிப்பதற்கும், அவர்களுக்கு கீழ்ப்படிவதற்கும் அடையாளம். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அந்தப் பூமியில் காணப்படுகிறது. ஆகையினால் மோசே நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது. கர்த்தர் எந்த ஸ்தலத்தில் தம்மை வெளிப்படுத்தினாலும், அந்த ஸ்தலம் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலமாயிருக்கும்.

உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு என்பது மரியாதையைக் குறிக்கும் அடையாளம். (யாத் 3:5; யோசு 5:15). கிழக்கு தேசத்தார் வீடுகளிலும், ஆராதனை ஸ்தலங்களிலும் பாதரட்சைகளை அணிவதில்லை. பாவத்தில் நடக்கும்போது, உண்டாகும் எல்லா அசுத்தங்களையும், வெளியே போட்டுவிடுவது என்பது இதன் அடையாள அர்த்தமாகும்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக கிருபையினால், தம்முடைய பரிசுத்த நாமத்தை மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" (யாத் 3:6) என்று தம்முடைய நாமத்தை சொல்லுகிறார். இந்த நாமத்தையே கர்த்தர் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார்.

"நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று கர்த்தர் தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். "உன் பிதாக்கள்" என்பது அம்ராமைக் குறிக்கும். மூல எபிரெய சுவடிகளில் "உன்பிதா" என்று ஒருமையில் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தை மத் 22:31-32 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறியிருக்கிறார்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் உயிர்த்தெழுதலின் நாளிலே உயிர்த்தெழுவார்கள். ஒருவர் மரிக்கும்போது அவருடைய சரீரம் மட்டுமே மரிக்கிறது. அவருடைய ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. (யாக் 2:26) மரித்துப்போன அந்தச் சரீரம் உயிர்த்தெழுதலின் நாளில் உயிர்த்தெழும். (யோவான் 5:28-29; தானி 12:2).

மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், அவர் தன் முகத்தை மூடிக் கொள்கிறார். இதே மோசே ஒரு சமயம் தேவனுடைய மகிமை முழுவதையும் காண வேண்டுமென்று விரும்பினார். (யாத் 33:18) ஒருவன் தேவனைப் பார்த்து விட்டால், அவன் மரித்துப் போவான் என்பது யூதருடைய பூர்வகாலத்து நம்பிக்கை (ஆதி 32:30).

ஆபிரகாம் மரித்துப்போனார். ஆனாலும் தேவனாகிய கர்த்தர் இன்னும் ஆபிரகாமின் தேவனாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தை மோசேக்கு சொல்லும்போது, "நான் உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். மோசேயின் பிதாக்கள் மரித்துப்போனாலும், தேவன் ஜீவனுள்ளவராகயிருக்கிறார்.

கர்த்தர் ஆபிரகாமின் தேவனாகயிருக்கிறார். ஆபிரகாமுடைய சரீரம் மரித்துப்போனாலும், அவருடைய ஆத்துமா இன்னும் ஜீவனோடிருக்கிறது. கர்த்தர் ஆபிரகாமின் ஆத்துமாவோடு இன்னும் ஐக்கியமாயிருக்கிறார். இதனால் ஆபிரகாமின் ஆத்துமா கர்த்தருக்குள் பரிபூரணமாக சந்தோஷப்படுகிறது. ஆபிரகாம் மறுபடியும் தன்னுடைய சரீரத்திலே, கர்த்தர் நியமிக்கும் காலத்தில், வெளிப்படுவார்.

கர்த்தர் தம்மை, "ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்" என்று சொல்லும்போது, அவர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு செய்துகொண்ட தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூருகிறார்.

"தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்" (யாத் 2:24).

கர்த்தர் மோசேயினிடத்தில் தம்முடைய பரிசுத்த நாமத்தைச் சொல்லும்போது, மோசே தேவனை நோக்கிப் பார்க்க பயப்படுகிறார். ஆகையினால் அவர் தன் முகத்தை மூடிக்கொள்கிறார். மோசே கர்த்தரை நோக்கி பார்க்க பயப்படுவதோடு, வெட்கப்படவும் செய்கிறார். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நிற்கும்போது, மோசேயின் மனதிலே பயமும், வெட்கமும், அவமானமும் உண்டாயிற்று.

முட்செடி அக்கினியினால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமலிருப்பதைப் பார்த்து மோசே பயப்படவில்லை. ஆனால் அந்த முட்செடியின் நடுவிலிருந்து, கர்த்தர் தம்மை வெளிப்படுத்தும்போது, மோசேக்கு பயமுண்டாயிற்று. நாம் கர்த்தருடைய சமுகத்தில் வந்து நிற்கும்போது, மோசேயைப்போல பயபக்தியோடு நிற்கவேண்டும்.

## இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் யாத் 3:7-10

**யாத் 3:7. அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்.**

**யாத் 3:8. அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்.**

**யாத் 3:9. இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்.**

**யாத் 3:10. நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் அந்த தேசத்தில் அநேக உபத்திரவங்களை அனுபவித்து வேதனைப்படுகிறார்கள். எகிப்தியரின் ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை அடித்து வேலை வாங்குகிறார்கள். கர்த்தருடைய ஜனமோ, எகிப்தியருடைய ஆளோட்டிகளினிமித்தம் கூக்குரலிடுகிறார்கள். கர்த்தர் எகிப்திலிருக்கிற தம்முடைய ஜனத்தின் உபத்திரவத்தைப் பார்க்கிறார். அவர்கள் ஆளோட்டிகளினிமித்தம் இடுகிற கூக்குரலையும் கர்த்தர் கேட்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்தரிர் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் உபத்திரவங்களை சாதாரணமாகப் பார்க்காமல், மிகவும் கவனமாகப் பார்க்கிறார். இதை உறுதிபண்ணும் வண்ணமாக, ''நான் பார்க்கவே பார்க்கிறேன்'' என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய உபத்திரவங்களில் ஒவ்வொரு பகுதியையும் கர்த்தர் உன்னிப்பாக கவனித்துப் பார்க்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் உபத்திரவங்களைப்பற்றிச் சொல்லும்போது, ''இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்'' (யாத் 3:9) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எகிப்து தேசத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரரிடத்தில் மூன்று காரியங்களை கரிசனையோடு பார்க்கிறார். அவையாவன: 1. இஸ்ரவேல் புத்திரருடைய உபத்திரவம் 2. அவர்கள் இடுகிற கூக்குரல் 3. அவர்கள் படுகிற வேதனைகள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் அங்கே உபத்திரவப்படுகிறார்கள். ஆளோட்டிகள் அவர்களை அடிக்கிறார்கள். பார்வோன் எகிப்து தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் அந்த தேசத்திலே உபத்திரவப்பட்டாலும், வேதனைகளை அனுபவித்தாலும், அவர்களால் பார்வோனுக்கு முன்பாக தங்களுடைய கஷ்டங்களை முறையிட முடியவில்லை.

ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுடைய வேதனைகளை கர்த்தருடைய சமுகத்தில் கூக்குரலிடுகிறார்கள். கர்த்தர் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் கர்த்தருடைய சந்நிதியில் வந்து எட்டுகிறது. எகிப்தியர் அவர்களை கடினமாய் ஒடுக்குகிறார்கள். எகிப்தியரின் ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை அடித்து துன்புறுத்துகிறார்கள். எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கர்த்தர் காண்கிறார்.

தேவன் இஸ்ரவேல் ஜனத்தின் உபத்திரவத்தைப் பார்க்கிறார். அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்கிறார். அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்திருக்கிறார். ஆகையினால்தான் சரீரத்தில் பாடுகளை அனுபவிப்பதற்காகத் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்தப் பூமிக்கு மனுஷனாக அவதரிக்க அனுப்பினார்.

"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்" *(எபி 4:14-16)*.

எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கவேண்டும் என்று கர்த்தர் சித்தங்கொள்கிறார். அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து கானான் தேசத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமென்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தர் மோசேயினிடத்தில், எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருக்கிற, இஸ்ரவேல் புத்திரரைக் குறித்த தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்துநீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்" *(யாத் 3:8)* என்று சொல்லுகிறார்.

தேவன் மோசேயிடம் கானான் தேசத்தைப் பற்றிக் கூறியபோது, அதன் மேன்மையை மோசே புரிந்து வைத்திருப்பார். எகிப்தின் சேனையால்கூட கானானிலுள்ள ஜனங்களை ஜெயிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட தேசத்தை தேவன் இஸ்ரவேல் ஜனத்தாருக்குத் தருவதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் இதுபோல மிகவும் விசேஷமான காரியங்களை செய்யும்போது, அவர் தம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து, இந்தப் பூமிக்கு இறங்கி வருவது வழக்கம்.

"ஆ, உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன் தத்தளிப்பதற்கும், தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப்பண்ணுமாப்போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்" *(ஏசா 54:1,2)*.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்குவது, நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு அடையாளமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு மீட்பு நியமிக்கப்பட்டிருக்கிறது. நித்திய வார்த்தையாகிய கிறிஸ்துவானவர், நம்மை மீட்பதற்காக, பரலோகத்திலிருந்து இந்தப் பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார்.

எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் விடுவிப்பதோடு, அவர்களை பாலும் தேனும் ஓடுகிற, நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய்ச்சேர்ப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரின் அடிமைத்தனம் விடுதலையாக மாறும். அவர்களுடைய தரித்திரம் ஐசுவரியமாக மாறும். அவர்களுடைய அடிமை வேலைகள் ஓய்வுகாலமாக மாறும். இஸ்ரவேல் புத்திரரின் துக்கம் சந்தோஷமாய் மாறும். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஒரு மாற்றத்தைக் கொடுப்பதற்காக, பரலோகத்திலிருந்து, இந்தப் பூமிக்கு இறங்கி வருகிறார். கர்த்தர் மாறாத தேவனாகயிருந்தாலும், அவர் மாற்றுகிற தேவனாகயிருக்கிறார்.

"எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்" என்னும் இந்த வாக்கியத்தில் "ஒடுக்குதலையும்" என்னும் வார்த்தையில் "-யும்" என்னும் வார்த்தையும் உள்ளது. தேவன் இஸ்ரவேலரின் ஒடுக்குதலைக் கண்டபோது, வேறொருவரும் அதைக் கண்டிருக்கிறார். தம்முடைய ஆதீனத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் காரியங்களைத் தேவனிடத்தில் முறையாக அறிவிப்பதற்கு கர்த்தருக்குத் தெய்வீக தூதர்கள் இருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவதில் மோசேக்கும் ஒரு பங்கு கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா" (யாத் 3:10) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு தீர்க்கதரிசியாகவும் அனுப்புகிறார். அவர் மோசேயை பார்வோனுக்கு முன்பாக தம்முடைய ஸ்தானிகராகவும் அனுப்புகிறார். மோசே பார்வோனோடு பேசி, இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து அழைத்து வரவேண்டும். கர்த்தர் மோசேயை இஸ்ரவேலுக்கு அதிபதியாகவும் அனுப்புகிறார். மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கட்டளை கொடுத்து, அவர்களை கர்த்தருடைய பாதையிலே வழிநடத்திக்கொண்டு வரவேண்டும்.

கர்த்தரே மோசேயை எகிப்து தேசத்திலுள்ள பார்வோனிடத்திற்கு அனுப்புகிறார். மோசே பார்வோனிடத்தில் பேசினாலும், கர்த்தருடைய பலத்த கரமே கிரியை நடப்பிக்கிறது. கர்த்தருடைய கரம், மீதியான் தேசத்திலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த மேய்ப்பனாகிய மோசேயை, தனியாக பிரிக்கிறது. அதேகரம் அவரை பார்வோனிடத்திற்கு அனுப்புகிறது. கர்த்தருடைய கரமே இஸ்ரவேல் புத்திரரை சபையாக உருவாக்குகிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய கரமே மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை, மனுஷரைப் பிடிக்கிறவர்களாக வேறு பிரிக்கிறது. கர்த்தருடைய கரமே புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையை ஸ்தாபிக்கிறது.

## தேவனுடைய நாமம்
## யாத் 3:11-15

**யாத் 3:11. அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான்.**

**யாத் 3:12. அதற்கு அவர்: நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்.**

**யாத் 3:13. அப்பொழுது மோசே தேவனை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான்.**

**யாத் 3:14. அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்.**

**யாத் 3:15. மேலும், தேவன் மோசேயை நோக்கி: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்.**

கர்த்தர் மோசேயோடே பேசும்போது, மோசே தம்மோடு பேசுவதற்கும் கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா" என்று சொல்லும்போது, மோசே, "நான் எம்மாத்திரம்" என்று சொல்லி, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார். மோசே தன்னைத் தாழ்த்தினாலும், அவர் தன்னை வெகுவாகத் தாழ்த்தி, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய தயங்குகிறார்.

கர்த்தர் கொடுக்கும் ஊழியத்தை செய்வதற்கு தனக்கு எந்தவித தகுதியுமில்லை என்று மோசே தன்னைப்பற்றி தாழ்வாய் நினைக்கிறார். பார்வோனிடத்தில் பேசுவதற்கு தனக்கு துணிச்சலும் தைரியமும் தேவைப்படுகிறது என்றும், அது தன்னிடத்தில் சிறிதுமில்லை என்றும் மோசே நினைக்கிறார்.

மோசே தேவனை நோக்கி, "பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம்" (யாத் 3:11) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வருவதற்கு, தனக்கு ஆற்றலும் திறமையும் இல்லை என்று மோசே தன்னைப்பற்றி நினைக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் ஆயுதம் எதுவுமில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள்.

மோசே மனத்தாழ்மையோடு பேசுகிறார். அதற்கும் ஒரு வரையறை உண்டு. மனத்தாழ்மையோடு இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, தேவனிடத்தில் வைக்க வேண்டிய நம்பிக்கையை இழந்துபோகக்கூடாது. மோசே தேவனைச் சந்திப்பதற்கு முன்பாக அவர் மனத்திடமாகவும், சுயநம்பிக்கையோடும் இருந்தார் (யாத் 2:11-15).

அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு, யுத்தம்பண்ணும் பயிற்சி எதுவுமில்லை. அவர்களிடத்தில் இராணுவத்திற்கு தேவையான கட்டுப்பாடுகளும் இல்லை. அவர்கள் ஒவ்வொரு நாளும் எகிப்து தேசத்திலே ஏனோதானோவென்று அடிமை வேலைகளை செய்து வருகிறார்கள். அவர்களிடத்தில் தெம்பும் தைரியமுமில்லை. அவர்களுடைய ஆவி முறிந்துபோயிருக்கிறது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு தங்களுக்கு வாய்ப்பே இல்லை என்று நினைத்து இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சோர்ந்துபோயிருக்கிறார்கள்.

பார்வோனிடத்திற்குப்போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் கர்த்தர் மோசேயை தெரிந்தெடுத்திருக்கிறார். கர்த்தருடைய பார்வையில், இந்த ஊழியத்தை செய்வதற்கு, மோசேயே தகுதியுள்ளவராகயிருக்கிறார். மோசே எகிப்து தேசத்தின் அரண்மனையில் உயர்ந்த கல்வி கற்றவர். அவர் ஞானத்தில் சிறந்தவர். மோசே எகிப்திலே ஏராளமான ஜனங்களை வழிநடத்தி, அவர்களை ஆளுகை செய்யும் அனுபவமுள்ளவர்.

மோசே ஒரு பராக்கிரமசாலி. அவர் மனவுறுதியும் தைரியமுமுள்ளவர். இந்த தகுதிகள் எல்லாவற்றையும்விட, அவர் கர்த்தர்மீது வைத்திருக்கிற விசுவாசமும், அவருடைய பரிசுத்தமான ஜீவியமும், மோசேயின் விசேஷித்த குணாதிசயங்களாயிருக்கிறது. ஆகையினால்தான் கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா" என்று சொல்லுகிறார். ஆனால் மோசேயோ கர்த்தரை நோக்கி, "நான் எம்மாத்திரம்" என்று சொல்லுகிறார்.

நம்முடைய பார்வையில் நாம் தாழ்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். தன்னைத்தானே உயர்த்துகிறவன் வாழ்வடையமாட்டான். தன்னைத் தாழ்த்துகிறவன் கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வான். ஒருவர் சமுதாயத்திற்கு சேவை செய்யவேண்டுமென்றால், அவர் மனத்தாழ்மையுள்ளவராகயிருக்கவேண்டும். பிறருக்கு நன்மை செய்ய விரும்புகிறவர்கள், தங்களைக் குறித்து மேன்மையாக நினைக்காமல், தாழ்மையாக நினைக்கவேண்டும்.

"விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு ஒலிவமரம்: தேவர்களும் மனுஷரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது" (நியா 9:8,9).

கர்த்தர் மோசேக்கு கொடுக்கும் வேலை மிகவும் பெரியது. அதிலே பல பிரச்சனைகள், போராட்டங்கள் இருக்கிறது. மோசே ஆரம்பத்தில், கர்த்தர் தனக்கு கொடுக்கும் வேலையை செய்ய மறுத்தாலும், முடிவிலே கர்த்தருடைய கிருபையினால் அந்த வேலையை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கிறார். மோசே கர்த்தருக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்தியதினால், மனத்தாழ்மையுள்ள அவருக்கு, கர்த்தர் தம்முடைய கிருபைகளை தாராளமாய்க் கொடுக்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "நான் எம்மாத்திரம்" என்று சொன்னாலும், கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம்" (யாத் 3:12) என்று சொல்லுகிறார். தம்முடைய பிரசன்னம் மோசேயோடு கூடயிருக்குமென்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரைத் தேவன் எகிப்து தேசத்திலிருந்து வெளியே அழைத்து வருவார். தம்முடைய ஊழியத்தைக் கர்த்தர் நிறைவேற்றுவார். இஸ்ரவேல் ஜனத்தார் சீனாய் மலையில் கர்த்தரை ஆராதனை செய்வார்கள். தேவன் தாம் வாக்குப்பண்ணியதை நிறைவேற்றுவார்.

கர்த்தருடைய ஊழியத்தை நாம் சிறப்பாக செய்யவேண்டுமென்றால், கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கவேண்டும். நம்மிடத்தில் பணம், பதவி, அதிகாரம், அந்தஸ்து, திறமை ஆகியவை இல்லாவிட்டாலும், கர்த்தருடைய கிருபை நம்மோடு கூடயிருந்தால், அது மாத்திரமே நமக்கு போதுமானது.

மோசே எகிப்து தேசத்திற்குப்போய், இஸ்ரவேல் ஜனத்தை அங்கே இருந்து அழைத்து வருவார் என்று கர்த்தர் அவருக்கு வாக்குப்பண்ணுகிறார். அவருடைய வேலையில் அவருக்கு கிடைக்கும் வெற்றியை கர்த்தர் உறுதிபண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இந்த மலையிலே தமக்கு ஆராதனை செய்வார்கள் என்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். அவர் வாக்குமாறாத தேவன்.

மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து எகிப்து தேசத்திற்குப்போக சம்மதிக்கிறார். ஆனால் அங்கே என்ன சொல்லவேண்டும் என்றோ, அங்கே என்ன செய்யவேண்டும் என்றோ மோசேக்கு தெரியவில்லை. மோசே தேவனை நோக்கி, "நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்" (யாத் 3:13) என்று கேட்கிறார்.

மோசே எகிப்தியரைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார். எகிப்தியருக்குப் பல தெய்வங்கள் உண்டு. ஒவ்வொரு தெய்வத்திற்கும் அவர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள். இஸ்ரவேல் தேவனைப் பற்றி மோசே அவர்களிடத்தில் கூறும்போது, அவருடைய பெயரையும் எகிப்தியர் நிச்சயமாகவே கேட்பார்கள்.

கர்த்தர் தன்னை எகிப்து தேசத்திற்கு போகச்சொல்லுகிறார் என்பது மோசேக்கு தெரிகிறது. ஆனால் தன்னைப்போகச் சொல்லுகிற கர்த்தருடைய நாமம் என்ன என்பது மோசேக்கு தெரியவில்லை. மோசேக்கு கர்த்தருடைய நாமம் தெரிந்திருக்கவேண்டும். அப்போதுதான் மோசேயால், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தருடைய நாமத்தினால் பேச முடியும்.

எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரரும், மோசேயை நோக்கி, "அவருடைய நாமம் என்ன" என்று கர்த்தருடைய நாமத்தைக் கேட்பார்கள். மோசே அவர்களுடைய கேள்விக்கு சரியான பதில் சொல்லவேண்டுமென்றால், அவருக்கு கர்த்தருடைய நாமம் என்ன என்பது தெரிந்திருக்கவேண்டும். தனக்கு தெரிந்ததை மாத்திரமே மோசேயால், எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்ல முடியும்.

கர்த்தர் மோசேயை நோக்கி எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரரிடத்திலும், எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திலும், பேசுமாறு அனுப்புகிறார். ஆனால் அவர்களிடத்தில் என்ன பேசவேண்டும் என்பது மோசேக்கு தெரியவில்லை. மோசே தேவனை நோக்கி, "நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்" என்று கேட்கிறார். மோசேக்கு தன்னை அனுப்பினவருடைய நாமம் தெரியவில்லை. மோசே எகிப்து தேசத்திற்குப்போனால், அங்கே என்ன பேசவேண்டும் என்பதும் அவருக்கு தெரியவில்லை.

மோசே எந்த அதிகாரத்தினால் தங்களிடத்தில் பேசுகிறார் என்று இஸ்ரவேல் புத்திரரும் கேட்பார்கள். எகிப்தின் அதிபதியாகிய பார்வோனும் கேட்பான். அவர்களுக்கு சரியான பிரதியுத்தரம் சொல்லவேண்டுமென்றால், மோசே கர்த்தருடைய நாமத்தை அறிந்திருக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய நாமத்தை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். தேவனுடைய இரண்டு பெயர்கள் இந்த வசனப்பகுதியிலே மோசேக்கு வெளிப்படுத்தப்படுகிறது. அவையாவன : 1. இருக்கிறவராக இருக்கிறேன் 2. உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர்.

"இருக்கிறவராக இருக்கிறேன்" என்னும் பெயர் கர்த்தரைக் குறிக்கிறது. அவர் தாமாகவே இருக்கிறார். கர்த்தர் யாரையும் சார்ந்திருக்கவில்லை. அவர் தாமாக இருப்பதினால், அவர் போதுமானவராகயிருக்கிறார். எல்லா ஆசீர்வாதங்களும் கர்த்தராகிய ஊற்றிலிருந்து புறப்பட்டு வருகிறது.

இருக்கிறவராக இருக்கிறேன் என்னும் பெயருக்கு, அவர் நித்தியமானவர் என்றும், அவர் மாறாதவர் என்றும் பொருள். நம்முடைய சுயமுயற்சியினால், நம்மால் கர்த்தரைத் தேடி கண்டுபிடிக்க முடியாது. கர்த்தரே நமக்கு தம்மை வெளிப்படுத்த வேண்டும். இருக்கிறேன் என்பவர் மோசேயை இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு அனுப்பியிருக்கிறார் என்பதை, இஸ்ரவேல் ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

தேவன் தம்முடைய நாமத்தை மோசேக்கு சொல்லும்போது, "இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக" (யாத் 3:14) என்று சொல்லுகிறார்.

"இருக்கிறவராக இருக்கிறேன்" என்னும் பெயருக்கு நான் நித்தியமானவர். நான் எப்போதும் இருந்தேன். எப்போதும் இருக்கிறேன். இனிமேலும் இருப்பேன் என்பது இதன் பொருளாகும். யெகோவா என்னும் பெயருக்கு நித்தியமானவர் என்று பொருள். இருக்கிறவராக இருக்கிறேன் என்பதற்கான எபிரெய வாக்கியம் "எகேயே - ஆசேர் - எகேயே" என்பதாகும்.

தேவனுடைய மற்றொரு நாமம், "உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர்" என்பதாகும். தேவன் மோசேயை நோக்கி, "ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்" (யாத் 3:15) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களுக்கு தேவனாயிருப்பதுபோல, அவர்களுக்கும் தேவனாயிருக்கிறார். கர்த்தர் ஏற்கெனவே, மோசேயினிடத்தில் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது, "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனு, யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" (யாத் 3:6) என்று சொன்னார். அந்த நாமத்தையே கர்த்தர் இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கும் வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய முற்பிதாக்கள் கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள். அவர்கள் கர்த்தரையே ஆராதித்தார்கள். எகிப்து தேசத்திலே இப்போது அடிமைகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரும், தங்கள் முற்பிதாக்களைப்போல, கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களுக்கு தம்முடைய வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். தங்களுடைய பிதாக்களுக்கு கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தங்கள் சீக்கிரத்தில் நிறைவேறும் என்று இஸ்ரவேல் புத்திரர் விசுவாசிக்கவேண்டும்.

கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். கர்த்தர் தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிற சத்தியங்கள் ஒருபோதும் மாறாது. கர்த்தருடைய நாமம் நித்தியமானது. அவர் இருக்கிறவராகவே இருந்தார். இப்போது அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். கர்த்தர் இனிமேலும் இருக்கிறவராகவே இருப்பார். கர்த்தர் மாறாதவராயிருப்பதுபோல அவருடைய நாமமும் மாறுவதில்லை. கர்த்தர் நித்தியமானவராகயிருப்பதுபோல அவருடைய நாமமும் நித்தியமானது.

கர்த்தரை ஆராதிக்கிற விசுவாசிகளாகிய நமக்கு, நாம் ஆராதிக்கிற தேவன் இன்னார் என்பது தெரிந்திருக்கவேண்டும். உண்மையான மெய்த்தேவனாகிய கர்த்தருக்கும், பொய்த்தேவர்களாகிய விக்கிரகங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களை விசுவாசிகள் அறிந்திருக்கவேண்டும்.

"அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்" (1இராஜா 18:36).

## கர்த்தருடைய கை வல்லமை யாத் 3:16-22

**யாத் 3:16. நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக்கூட்டி, அவர்களிடத்தில்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனமாகி, உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, எகிப்தில் உங்களுக்குச் செய்யப்பட்டதைக் கண்டேன் என்றும்,**

**யாத் 3:17. நான் உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து நீக்கி, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய கானானியர் ஏத்தியர் எமோரியர் பெரிசியர் ஏவியர் எபூசியருடைய தேசத்துக்குக் கொண்டுபோவேன் என்றும் சொன்னேன் என்றார் என்று சொல்லு.**

**யாத் 3:18. அவர்கள் உன் வாக்குக்குச் செவிகொடுப்பார்கள்; அப்பொழுது நீயும் இஸ்ரவேலின் மூப்பரும் எகிப்தின் ராஜாவினிடத்தில் போய்: எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார்; இப்பொழுதும் நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி எங்களைப் போகவிடவேண்டுமென்று சொல்லுங்கள்.**

**யாத் 3:19. ஆனாலும், எகிப்தின் ராஜா கைவல்லமை கண்டாலொழிய, உங்களைப் போகவிடான் என்று நான் அறிவேன்.**

**யாத் 3:20. ஆகையால், நான் என் கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நான் செய்யும் சகலவித அற்புதங்களாலும் அதை வாதிப்பேன்; அதற்குப்பின் அவன் உங்களைப் போகவிடுவான்.**

**யாத் 3:21. அப்பொழுது இந்த ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவுகிடைக்கப்பண்ணுவேன்; நீங்கள் போகும்போது வெறுமையாய்ப் போவதில்லை.**

**யாத் 3:22. ஒவ்வொரு ஸ்திரீயும், தன்தன் அயலகத்தாளிடத்திலும் தன்தன் வீட்டில் தங்குகிறவளிடத்திலும், வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள்; அவைகளை உங்கள் குமாரருக்கும் உங்கள் குமாரத்திகளுக்கும் தரிப்பித்து, எகிப்தியரைக் கொள்ளையிடுவீர்கள் என்றார்.**

மோசே எகிப்து தேசத்திலே செய்ய வேண்டிய ஒவ்வொரு வேலையையும் கர்த்தர் அவருக்கு விவரமாகச் சொல்லுகிறார். மோசே எகிப்து தேசத்திற்குப்போவதற்கு முன்பாகவே, அவருக்கு ஜெயமுண்டாகும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

மோசே எகிப்து தேசத்திற்குப்போய், அங்கே இஸ்ரவேலின் மூப்பரைக் கூட்டவேண்டும். அவர்களிடத்தில் கர்த்தர் தனக்கு சொன்ன செய்தியை, மோசே அவர்களுக்கு சொல்ல வேண்டும். இஸ்ரவேலின் மூப்பரிடத்தில் கர்த்தர்மீது வைக்கும் விசுவாசமும், கர்த்தர் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திலே கொண்டுபோய்ச் சேர்ப்பார் என்னும் எதிர்பார்ப்பும் காணப்படவேண்டும். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை சீக்கிரத்தில் நிறைவேற்றப்போகிறார் என்னும் நம்பிக்கையும் இஸ்ரவேலின் மூப்பரிடத்தில் ஏற்படவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக்கூட்டி, அவர்களிடத்தில்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனமாகி, உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, எகிப்தில் உங்களுக்குச் செய்யப்பட்டதைக் கண்டேன்" (யாத் 3:16) என்றும்,

"நான் உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து நீக்கி, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய கானானியர் ஏத்தியர் எமோரியர் பெரிசியர் ஏவியர் எபூசியருடைய தேசத்துக்குக் கொண்டுபோவேன் என்றும் சொன்னேன் என்றார் என்று சொல்" (யாத் 3:17) என்றும் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேலர்கள் அடிமையாக இருக்கிறபோது, அவர்களை ஆளுகை செய்வதற்கு மூப்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலர்களுக்குள் ஏற்படும் வழக்குகளையும், பிரச்சனைகளையும் இவர்கள் தீர்த்து வைத்து விசாரிக்கிறார்கள். (யாத் 3:16,18; யாத் 4:29; யாத் 5:19).

"எகிப்தில் உங்களுக்குச் செய்யப்பட்டதைக் கண்டேன்" என்று தேவன் மோசேயிடம் இவ்வாறு கூறியிருக்கிறார். தேவன் மனுஷரோடு ஒரு கிரியை செய்வதற்கு முன்பாக அவர் அந்த மனுஷனையும், அவனுடைய சூழ்நிலைகளையும் சோதித்தறிகிறார். எகிப்தில் காணப்படும் உண்மை நிலைமையை அறிந்து கொள்வதற்காக தேவன் எகிப்திற்கு நேரடியாக வந்து, இஸ்ரவேலரின் உபத்திரவங்களைக் காண்கிறார் (ஆதி 3:8-19; ஆதி 4:6,9; ஆதி 6:5-22)

வேதாகமத்தில் சிறுமை என்னும் வார்த்தை பல இடங்களில் பலபொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சில வசனங்களில் சிறுமை என்பது சரீர வியாதியைக் குறிக்கும். பொதுவாக இது மனுஷருடைய பாடுகளையும், உபத்திரவங்களையும் குறிக்கும் வார்த்தையாகும். (ஆதி 15:13-17)

இஸ்ரவேலர்கள் கீழ்ப்படிவார்கள் என்பதைத் தேவன் முன்னறிந்திருக்கிறார். அதற்கு முன்பாக அவர்களுக்கு பலவிதமான உபத்திரவங்களும், கசப்பான அனுபவங்களும் உண்டாகும் (யாத் 3:18; யாத் 4:29-31; யாத் 5:7-23).

இஸ்ரவேலின் மூப்பர்கள் மோசேயின் வாக்குக்கு செவிகொடுப்பார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பார்வோனிடத்தில் போய், அவனிடத்தில் சொல்லவேண்டிய செய்தியையும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயும் இஸ்ரவேலின் மூப்பரும் எகிப்தின் ராஜாவினிடத்தில் போய்: எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார்; இப்பொழுதும் நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி எங்களைப் போகவிடவேண்டுமென்று சொல்லுங்கள்" (யாத் 3:18) என்று சொல்லுகிறார்.

பார்வோனுக்கு முன்பாக மோசே நிற்கும்போது இஸ்ரவேலின் மூப்பரும், அவருக்கு அருகில் நிற்க வேண்டும். அப்போதுதான், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் மோசே பிரதிநிதியாக நிற்கிறார் என்பது பார்வோனுக்குத் தெரிய வரும்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம் பண்ணினால், வெகுதூரம் போய்விடுவார்கள். எகிப்தியரின் அரண்களையெல்லாம் தாண்டி, சீனாய் வனாந்தரத்திற்குச் சென்று விடுவார்கள். இஸ்ரவேல் ஜனம் எகிப்தை விட்டுப் புறப்பட வேண்டுமென்பதுதான் தேவனுடைய பிரதான எண்ணம்.

இஸ்ரவேலின் மூப்பர் தன்னுடைய வாக்குக்கு செவிகொடுப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுவது மோசேக்கு ஆறுதலாகயிருக்கிறது. நாற்பது வருஷங்களுக்கு முன்பு இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் மோசேயை தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அவரை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் இப்போதோ அவர்கள் மோசேயின் வாக்குக்கு செவிகொடுப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசே எகிப்து தேசத்திற்குப்போய் இஸ்ரவேலின் மூப்பரோடு பேசினால் மாத்திரம் போதாது. அவர் இஸ்ரவேலின் மூப்பரை அழைத்துக்கொண்டுபோய், எகிப்தின் ராஜாவினிடத்திலும் பேசவேண்டும். அவர்கள் ராஜாவுக்கு கட்டளை கொடுக்க முடியாது. மோசேயும், இஸ்ரவேலின் மூப்பரும், பார்வோனுக்கு முன்பாக தங்களுடைய கோரிக்கைகளை பணிவாய் விண்ணப்பம்பண்ணவேண்டும். அவர்கள் பார்வோனை நோக்கி, "எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலியிடும்படி எங்களைப் போக விடவேண்டும்" என்று பணிவோடு சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலைக்குப்போய் அங்கே கர்த்தருக்கு பலியிடவேண்டும். பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை சீனாய் மலை வரைக்கும் போவதற்கு அனுமதி கொடுத்தாலே அவர்களுக்கு போதுமானது. இஸ்ரவேல் புத்திரரின் எதிர்பார்ப்பும் இதுதான். பார்வோன் அவர்களை சீனாய் மலைக்குப்போய் பலியிடுவதற்கு அனுமதி கொடுக்கவில்லையென்றால், அவர்கள் கானான் தேசத்தில் போய் குடியேறுவதற்கு நிச்சயமாய் அனுமதி கொடுக்கமாட்டான்.

ஆனால் கர்த்தரோ, எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேலரை, பாலும் தேனும் ஓடுகிற, நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். பார்வோன் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கமாட்டான் என்பதை கர்த்தர் அவருக்கு அறிவிக்கிறார்.

மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும், பார்வோனை நோக்கி, "நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம் போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலியிடும்படி எங்களைப் போகவிடவேண்டும்" என்று சொல்லவேண்டும். இது கர்த்தர் மோசேக்கு கொடுத்திருக்கிற கட்டளை. மோசே கர்த்தரிடத்தில், "நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்" என்று கேட்டார். மோசே எகிப்து தேசத்திலே என்ன சொல்லவேண்டுமென்று கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேக்கு, பார்வோனிடத்தில் பேசவேண்டிய காரியங்களை சொல்லிவிட்டு, "ஆனாலும், எகிப்தின் ராஜா கைவல்லமை கண்டாலொழிய, உங்களைப் போகவிடான் என்று நான் அறிவேன்" (யாத் 3:19) என்றும் சொல்லுகிறார். மோசேயின் வார்த்தைக்கோ அல்லது இஸ்ரவேலின் மூப்பருடைய விண்ணப்பத்திற்கோ எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் செவிகொடுக்கமாட்டான். பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்ப வேண்டுமென்றால், அவனுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எகிப்தின் ராஜா கைவல்லமை கண்டாலொழிய, உங்களைப் போகவிடான் என்று நான் அறிவேன். ஆகையால், நான் என் கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நான் செய்யும் சகலவித அற்புதங்களாலும் அதை வாதிப்பேன்; அதற்குப்பின் அவன் உங்களைப் போகவிடுவான்" (யாத் 3:19,20) என்று சொல்லுகிறார்.

பார்வோனைப் பற்றி தேவன் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார். அவனுடைய கௌரவம், ஆணவம், மேலும் அவனுடைய எல்லா சுபாவங்களையும் கர்த்தர் அறிந்து வைத்திருக்கிறார். எகிப்தின் ராஜா மனுஷனுக்கும் கீழ்ப்படியமாட்டான். தேவனுக்கும் கீழ்ப்படியமாட்டான். தேவனுடைய சித்தத்திற்கு எகிப்தின் ராஜா இணங்க வேண்டுமென்றால், அதற்காக என்னென்ன காரியங்களையெல்லாம் செய்ய வேண்டும் என்பதை தேவன் அறிந்து வைத்திருக்கிறார் (யாத் 3:19-20).

தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவன் எப்போதும் கிரியை செய்து கொண்டிருக்கிறார். பூமியில் மனுஷருடைய பாவங்களை அழித்து அவர்களை இரட்சிக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டம். தம்முடைய கையை நீட்டி, எகிப்து தேசத்தில் தேவன் பலஅற்புதமான காரியங்களைச் செய்யும்போது எகிப்து தேசத்தாரும், மற்ற தேசத்தாரும் கர்த்தரே மெய்யான தேவன் என்பதைப் புரிந்து கொள்வார்கள். தம்முடைய சித்தம் நிறைவேறும் வரையிலும் தேவன் தம்முடைய கிரியைகளை நிறுத்திக் கொள்ளுவதில்லை. (2கொரி 15:24-28; வெளி 20-22).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே பல வருஷங்களாக அடிமைகளாயிருக்கிறார்கள். எகிப்தியர்கள் அவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுக்கமாட்டார்கள். அவர்களுக்கு திருப்தியான போஜனம்கூட கொடுக்கமாட்டார்கள். ஆனாலும் எகிப்தியரின் ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை அடித்து, வேதனைப்படுத்தி, கடினமாய் வேலை வாங்குவார்கள்.

கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி, கானான் தேசத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வெறுமையாய் அனுப்ப விரும்பவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்க பண்ணுவார். அவர்கள் எகிப்து தேசத்தைவிட்டுப்போகும்போது, வெறுமையாய்ப் போகமாட்டார்கள் (யாத் 3:21).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் பல வருஷங்களாக அடிமைகளாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய எந்த ஊதியமும் கொடுக்கப்படவில்லை. ஆகையினால், இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்திலிருந்து வெளியேற்றி வழிநடத்தும்போது அவர்களுக்கு வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும் எகிப்தியரிடமிருந்து வாங்கித்தரவேண்டுமென்று, தேவன் சித்தம் கொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு எவ்வாறு புறப்பட்டுப்போவார்கள் என்பதையும் கர்த்தர் மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஒவ்வொரு ஸ்திரீயும், தன்தன் அயலகத்தாளிடத்திலும் தன்தன் வீட்டில் தங்குகிறவளிடத்திலும், வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள்; அவைகளை உங்கள் குமாரருக்கும் உங்கள் குமாரத்திகளுக்கும் தரிப்பித்து, எகிப்தியரைக் கொள்ளையிடுவீர்கள்" (யாத் 3:22) என்று சொல்லுகிறார்.

"கேட்டு வாங்குவாள்" என்னும் வாக்கியத்திற்கு உலகப் பிரகாரமாக கடன் வாங்குதல் என்பது பொருளல்ல. கேட்டுப் பெற்றுக் கொள்ளுதல் என்பது இதன் பொருளாகும். சுமார் 100 வருஷங்களாக இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தியரிடம் நியாயமான சம்பளம் பெற்றுக் கொள்ளாமல், வேலை செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான சம்பளத்தைக் கேட்டு வாங்கிக் கொள்வார்கள்.

"அவைகளை உங்கள் குமாரருக்கும் உங்கள் குமாரத்திகளுக்கும் தரிப்பீர்கள்" என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் ஒடுக்கப்பட்ட போது, அவர்களிடமிருந்த வஸ்திரங்களையும், பொன்னுடைமைகளையும், வெள்ளியுடைமைகளையும் எகிப்தியர்கள் கொள்ளையிட்டிருப்பார்கள்.

இப்போது இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்திலிருந்து விடுதலை பெற்று, பிரயாணம் பண்ணப்போகிறார்கள். தாங்கள் எகிப்தியரிடமிருந்து இழந்து போனவற்றை, மறுபடியும் அவர்களுக்குத் தருவதாக தேவன் வாக்குப்பண்ணுகிறார். (யாத் 12:35). இஸ்ரவேல் ஜனங்கள் பொன்னாபரணங்கள், வெள்ளி ஆபரணங்கள், வஸ்திரங்கள் ஆகியவற்றைத் தரித்துக் கொள்ள வேண்டும்.

"எகிப்தியரைக் கொள்ளையிடுவீர்கள்" என்பது பலாத்காரத்தினால் செய்யப்படும் கொள்ளையல்ல. இது எகிப்தியரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளுவதாகும். எகிப்தியரிடம் கேட்கும்போது அவர்கள் பொதுவாகக் கொடுக்கமாட்டார்கள்.

தேவன் இஸ்ரவேலரோடு கூட இருப்பதினால் இஸ்ரவேல் ஜனத்தார் கேட்பது அவர்களுக்குக் கொடுக்கப்படும். (யாத் 3:21; யாத் 11:2-3). தாங்கள் இழந்து போன உடைமைகளைக் கொள்ளையிட்டு, வருவது பற்றி 1சாமு 30:22 ஆவது வசனம் விளக்கிக் கூறுகிறது.

அப்பொழுது தாவீதோடே நடந்து வந்த மனுஷரில் பொல்லாதவர்களும் பேலியாளின் மக்களுமான எல்லாரும்: அவர்கள் எங்களோடே வராதபடியினால் நாங்கள் திருப்பிக்கொண்ட கொள்ளையுடைமைகளில் அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் மனைவியையும் தன்தன் பிள்ளைகளையுமே அழைத்துக்கொண்டு போகட்டும் என்றார்கள் (1சாமு 30:22).

## 4 அதிகாரம்

கர்த்தரும் மோசேயும் தொடர்ந்து சம்பாஷணை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரும் பொறுப்பை கர்த்தர் மோசேக்கு கொடுக்கிறார். மோசேயோ இஸ்ரவேல் புத்திரர் தன்னை நம்பமாட்டார்கள் என்று சொல்லுகிறார் (யாத் 4:1).

கர்த்தர் மோசேக்கு அற்புதங்களை செய்யும் வல்லமையைக் கொடுக்கிறார். மோசே இந்த அற்புதங்களை செய்யும்போது இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நம்பி, அவருடைய வாக்குக்கு செவிகொடுப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயின் கோல் சர்ப்பமாயிற்று. அது மறுபடியும் கோலாயிற்று (யாத் 4:2-5). மோசேயின் கை வெண்குஷ்டம் பிடித்திருக்கிறது. அது திரும்ப அவருடைய மற்ற சதையைப்போலாயிற்று (யாத் 4:6-8). நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையில் இரத்தமாகும் (யாத் 4:9).

தான் வாக்குவல்லவன் அல்ல என்றும், தான் திக்குவாயும் மந்தநாவுமுள்ளவன் என்றும் மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார் (யாத் 4:10). ஆகையினால் கர்த்தர் தன்னை அனுப்பாமல், தனக்கு பதிலாக கர்த்தர் அனுப்ப சித்தமாயிருக்கிற வேறு யாரையாகிலும் அனுப்புமாறு மோசே கர்த்தரிடத்தில் கேட்டுக்கொள்கிறார் (யாத் 4:13).

மோசே சொல்லுகிற சாக்குபோக்குகளுக்கு கர்த்தர் பதில் சொல்லுகிறார். கர்த்தரே மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர். கர்த்தர் மோசேயின் வாயோடே இருந்து, அவர் பேசவேண்டியதை அவருக்கு போதிப்பார் (யாத் 4:11,12).

மோசேயின் சகோதரனாகிய ஆரோனும் அவரோடுகூட சேர்ந்துகொள்வார். ஆரோன் மோசேக்கு பதிலாக இஸ்ரவேல் ஜனத்தாரோடே பேசுவார் (யாத் 4:14-16). மோசேயின் கையிலுள்ள கோல் அடையாளங்களை செய்யும் (யாத் 4:17).

மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போக ஆயத்தமாகிறார். அவர் தன் மாமனாகிய எத்திரோவிடம் எகிப்திற்குப் புறப்பட்டுப்போக உத்தரவு பெற்றுக்கொள்கிறார் (யாத் 4:18). கர்த்தர் மோசேக்கு உற்சாகமான வார்த்தைகளை சொல்லுகிறார் (யாத் 4:19,21-23). மோசே தன் குடும்பத்தாரை அழைத்துக்கொண்டு எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகிறார் (யாத் 4:20).

மோசே எகிப்துக்கு போகும் வழியிலே அவருக்கு பிரச்சனை உண்டாயிற்று. சிப்போராள் தன் புத்திரனுக்கு விருத்தசேதனம்பண்ணுகிறாள் (யாத் 4:24-26).

மோசேயும் அவருடைய சகோதரராகிய ஆரோனும் சந்தித்துக்கொள்கிறார்கள் (யாத் 4:27,28). மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் எல்லோரையும் கூடிவரச்செய்கிறார்கள் (யாத் 4:29-31). இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் வார்த்தைகளை நம்புகிறார்கள். அவர்கள் கர்த்தரைத் தொழுதுகொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆரம்பமாகிறது.

### மோசேயின் அவிசுவாசம் யாத் 4:1-9

**யாத் 4:1. அப்பொழுது மோசே: அவர்கள் என்னை நம்பார்கள்; என் வாக்குக்குச் செவிகொடார்கள்; கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை என்று சொல்லுவார்கள் என்றான்.**

**யாத் 4:2. கர்த்தர் அவனை நோக்கி: உன் கையிலிருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான்.**

**யாத் 4:3. அதைத் தரையிலே போடு என்றார்; அவன் அதைத் தரையிலே போட்டபோது, அது சர்ப்பமாயிற்று; மோசே அதற்கு விலகியோடினான்.**

**யாத் 4:4. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: உன் கையை நீட்டி, அதின் வாலைப் பிடி என்றார்; அவன் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தபோது, அது அவன் கையிலே கோலாயிற்று.**

**யாத் 4:5. ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குத் தரிசனமானதை அவர்கள் நம்புவதற்கு இதுவே அடையாளம் என்றார்.**

**யாத் 4:6. மேலும், கர்த்தர் அவனை நோக்கி: உன் கையை உன்மடியிலே போடு என்றார்; அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே எடுக்கும்போது, இதோ, அவன் கை உறைந்த மழையைப்போல் வெண்குஷ்டம் பிடித்திருந்தது.**

**யாத் 4:7. அவர்: உன் கையைத் திரும்பவும் உன் மடியிலே போடு என்றார். அவன் தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, தன் மடியிலிருந்து அதை வெளியே எடுத்தபோது, அது திரும்ப அவனுடைய மற்றச் சதையைப்போலாயிற்று.**

**யாத் 4:8. அப்பொழுது அவர்: முந்தின அடையாளத்தை அவர்கள் கண்டு, உன்னை நம்பாமலும் உனக்குச் செவிகொடாமலும் போனால்,பிந்தின அடையாளத்தைக் கண்டு நம்புவார்கள்.**

**யாத் 4:9. இவ்விரண்டு அடையாளங்களையும் அவர்கள் நம்பாமலும், உன் வாக்குக்குச் செவிகொடாமலும் இருப்பார்களானால், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்றுவாயாக; நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாகும் என்றார்.**

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா" (யாத் 3:10) என்று சொல்லுகிறார். ஆனால் மோசேயோ, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், "பார்வோனிடத்திற்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம்" (யாத் 3:11) என்று சொல்லி கர்த்தரோடு விவாதம்பண்ணுகிறார்.

மோசே எகிப்து தேசத்திற்கு போகாமலிருப்பதற்கு என்னென்ன சாக்குபோக்குகளை சொல்லமுடியுமோ, அதையெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். கர்த்தரும் மோசே சொல்லுகிற சாக்குபோக்குகளுக்கு பதில் கொடுக்கிறார். ஆனாலும் மோசே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய இன்னும் ஆயத்தமாயில்லை.

மோசே கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. அவர் கர்த்தரிடத்தில் எகிப்து தேசத்திற்கு போகாமலிருப்பதற்கு சாக்குபோக்குகளை ஒவ்வொன்றாய் சொல்லும்போது, "அவர்கள் என்னை நம்பார்கள்" என்றும், "என் வாக்குக்கு செவிகொடார்கள்" (யாத் 4:1) என்றும் சொல்லுகிறார்.

எகிப்தியர் மத்தியிலே தேவன் நடப்பித்த அற்புதங்களை இந்த அதிகாரம் விளக்குகிறது. இதன் விளைவாக இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். தேவன் மோசேயை அழைத்திருக்கிறார். அது தெய்வீக அழைப்பு. ஆயினும் ஜனங்கள் தன்னை ஏற்றுக் கொள்வார்களா என்னும் சந்தேகம் மோசேயின் உள்ளத்தில் இருக்கிறது.

தன்னுடைய அழைப்பிற்குத் தெய்வீக அங்கீகாரம் தேவை என்பது எல்லா ஊழியக்காரர்களும் எதிர்பார்க்கும் காரியம்தான். தேவன் ஒரு ஊழியத்திற்காக ஒருவரை அழைக்கும்போது, அதைச் செய்யும் வல்லமையினால் அவரை அபிஷேகம் பண்ணுகிறார். தேவன் யாரையும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இல்லாமல் தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு அனுப்புவதில்லை.

கர்த்தர் சொன்ன பிரகாரம் மோசே எகிப்து தேசத்திற்கு போய், அங்கே இஸ்ரவேலின் மூப்பரோடு பேசும்போது, அவர்கள் தன்னுடைய வார்த்தைகளை நம்பமாட்டார்கள் என்று மோசே சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. ஆகையினால்தான் அவருடைய வாயிலிருந்து இதுபோல அவிசுவாசமான வார்த்தைகள் வெளிப்படுகிறது.

மோசே இஸ்ரவேலின் மூப்பரோடு வெறும் வார்த்தைகளைப் பேசினால், அவர்கள் நம்பமாட்டார்கள் என்றும், தன்னுடைய வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்கு ஏதாவது அடையாளங்களை காண்பிக்கவேண்டும் என்றும் மோசே எதிர்பார்க்கிறார். எகிப்து தேசத்திலே இருக்கிற இஸ்ரவேலின் மூப்பர்கள் வெறும் வாக்குக்கு செவிகொடுக்கமாட்டார்கள். அவர்கள் வார்த்தைகளோடு, அற்புதங்களையும் அடையாளங்களையும் பார்த்தால் தான் நம்புவார்கள் என்று மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்களில் சிலர் சுயநலமுள்ளவர்களாகவும், தங்களுடைய சொந்த ஆதாயத்தைத் தேடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே தொடர்ந்து அடிமைகளாகயிருக்கவேண்டும் என்பது சுயநலக்காரரின் விருப்பம். இதனால் ஒருவேளை அவர்களுக்கு ஆதாயம் கிடைக்கலாம். அப்படிப்பட்டவர்கள் மோசேக்கு விரோதமாகப் பேசுவார்கள். அவர்கள் மோசேயின் அதிகாரத்திற்கு கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்பார்கள்.

மோசே அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னாலும், அவர்கள் மோசேயை நம்பமாட்டார்கள். அவர்கள் மோசேயின் வாக்குக்கு செவிகொடுக்க மாட்டார்கள். அது மாத்திரமல்ல, "கர்த்தர் உனக்கு தரிசனமாகவில்லை" என்றும் சொல்லுவார்கள். இவையெல்லாம் மோசேயின் சொந்தக்கற்பனை. அவர் இன்னும் எகிப்து தேசத்திற்கே போகவில்லை. அங்கே போகும் முன்பாகவே, மோசே இதுபோன்ற காரியங்களை யோசித்து, அவிசுவாச வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேக்கு அற்புதங்களை செய்யும் வல்லமையைக் கொடுக்கிறார். மோசே கர்த்தருடைய வல்லமையினால் மூன்று அற்புதங்களை செய்யலாம். மோசேக்கு விசுவாசமும், திருப்தியும் உண்டாகவேண்டும் என்பதற்காக, அந்த மூன்று அற்புதங்களில் இரண்டு அற்புதங்களை, கர்த்தர் இங்கு நடைபெறச் செய்கிறார்.

முதலாவது அற்புதம் மோசேயின் கையிலுள்ள கோல் சர்ப்பமாயிற்று. அதன் பின்பு அந்த சர்ப்பம் அவருடைய கையிலே கோலாயிற்று. இரண்டாவது அற்புதம், மோசேயின் கை வெண்குஷ்டம் பிடித்திருக்கிறது. அது திரும்ப அவருடைய மற்ற சதையைப் போலாகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் கையிலிருக்கிறது என்ன" என்று கேட்கிறார். மோசே, "ஒரு கோல்" என்று சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "அதைத் தரையிலே போடு" என்று சொல்லுகிறார்; மோசே அதைத் தரையிலே போட்டபோது, அது சர்ப்பமாயிற்று; மோசே அதற்கு விலகியோடுகிறார் (யாத் 4:2,3).

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் கையை நீட்டி, அதின் வாலைப் பிடி" என்று சொல்லுகிறார்; மோசே தன் கையை நீட்டி, அதைப் பிடித்தபோது, அது அவருடைய கையிலே கோலாயிற்று (யாத் 4:4).

எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் தன்னை நம்பமாட்டார்கள் என்றும், தன் வாக்குக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்றும் மோசே கர்த்தரிடத்தில் சாக்குபோக்குகளை சொன்னார். கர்த்தர் இப்போது மோசேக்கு அற்புதத்தை செய்யும் வல்லமையைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வல்லமையினால் மோசேயின் கையிலுள்ள கோல் சர்ப்பமாயிற்று. அந்த சர்ப்பம் மறுபடியும் அவருடைய கையிலே கோலாயிற்று.

மோசே இந்த முதலாவது அற்புதத்தை நடப்பித்த பின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குத் தரிசனமானதை அவர்கள் நம்புவதற்கு இதுவே அடையாளம்" (யாத் 4:5) என்று சொல்லுகிறார்.

தேவன் நடப்பிக்கும் அற்புதங்களுக்குக் காரணம் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். ஜனங்கள் கர்த்தரைத் தங்கள் தேவனாக அங்கிகரிக்க வேண்டும்.

கர்த்தர் இந்த அற்புதத்தை செய்வதற்கு, மோசேயை பயன்படுத்துகிறார். சர்ப்பமாக மாறின கோல் மோசேயின் கையிலிருந்தது. மோசே அந்தக் கோலை தரையில் போட்டபோது அது சர்ப்பமாயிற்று. அவர் தன் கையை நீட்டி அந்த சர்ப்பத்தைப் பிடித்தபோது, அது அவருடைய கையிலே கோலாயிற்று. மோசே மந்திர வார்த்தைகள் எதையும் சொல்லவில்லை. எகிப்து தேசத்தார் மந்திரம் ஓதுவதுபோல மோசே மந்திரம் ஓதவும் இல்லை.

மோசே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன பிரகாரம், மோசே தன் கையிலுள்ள கோலைப்போடுகிறார். கீழே கிடக்கிற சர்ப்பத்தை தன் கையில் பிடிக்கிறார். அற்புதம் கர்த்தருடைய வல்லமையினால் நடைபெறுகிறது.

கோலும் சர்ப்பமும் இயற்கையில் இருக்கிற சாதாரண காரியங்கள். கர்த்தரோ தம்முடைய தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தி, கோலை சர்ப்பமாகவும், சர்ப்பத்தை கோலாகவும் மாற்றுகிறார். இந்த அற்புதத்தின் மூலமாக கர்த்தருடைய வல்லமையும், அவருடைய அதிகாரமும் வெளிப்படுகிறது. சகலமும் கர்த்தருடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் என்பதற்கு இது ஒரு அடையாளம்.

சர்ப்பம் தீயகுணத்திற்கு அடையாளம். எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோன் சர்ப்பத்தைப்போல இருக்கிறான். அவன் இஸ்ரவேல் புத்திரரை அடிமைப்படுத்தி அவர்களை ஒடுக்குகிறான். பார்வோனுடைய கையில் எகிப்து தேசத்தை ஆளுகை செய்யும் கோல் இருக்கிறது. ஆனால் பார்வோனோ தன்னுடைய கையிலுள்ள கோலை, சர்ப்பத்தைப்போல மாற்றி, இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறான்.

மோசே தன் கையிலுள்ள கோலை தரையிலே போட்டபோது அது சர்ப்பமாயிற்று. மோசே அந்த சர்ப்பத்திற்கு விலகி ஓடுகிறார். எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனின் கையிலுள்ள கோல் சர்ப்பத்தைப்போல கொடுங்கோலாக மாறினபோது, அவனுடைய கொடுங்கோல் ஆட்சிக்கு பயந்து, மோசே எகிப்து தேசத்தைவிட்டு மீதியான் தேசத்திற்கு ஓடிப்போகிறார்.

மோசே தன் கையை நீட்டி சர்ப்பத்தின் வாலை பிடிக்கிறார். அப்போது சர்ப்பம் அவருடைய கையில் கோலாயிற்று. எகிப்து தேசத்திலே பார்வோனுடைய ஆட்சி சர்ப்பத்தைப்போல கொடுங்கோல் ஆட்சியாகயிருந்தாலும், மோசே சர்ப்பத்தை கோலாக மாற்றியதுபோல, அந்த கொடுங்கோல் ஆட்சியை மறுபடியும் நல்லாட்சியாக மாற்றுவார்.

கர்த்தர் முதலாவது அடையாளமாக, மோசேயின் கையிலுள்ள கோலை சர்ப்பமாகவும், அந்த சர்ப்பத்தை மறுபடியும் கோலாகவும் மாற்றுகிறார். இப்போது இரண்டாவது அடையாளமாக, கர்த்தர் மோசேயின் கையிலே அற்புதம் செய்கிறார். மோசேயின் கையில் குஷ்டரோகம் பிடிக்கிறது. அந்தக் கை மறுபடியும் சுத்தமாகிறது. இது இரண்டாவது அற்புதமாகும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் கையை உன்மடியிலே போடு" என்று சொல்லுகிறார்; மோசே தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே எடுக்கும்போது, இதோ, மோசேயின் கை உறைந்த மழையைப்போல வெண்குஷ்டம் பிடித்திருக்கிறது.

கர்த்தர் மறுபடியும் மோசேயை நோக்கி, "உன் கையைத் திரும்பவும் உன் மடியிலே போடு" என்று சொல்லுகிறார். மோசே தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, தன் மடியிலிருந்து அதை வெளியே எடுத்தபோது, அது திரும்ப அவருடைய மற்றச் சதையைப்போலாயிற்று (யாத் 4:6,7).

கர்த்தர் நடப்பிக்கிற இரண்டாவது அடையாளத்திற்கும், வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். மோசே தேவனுடைய வல்லமையினால் எகிப்து தேசத்தார் மீது வியாதியை அனுப்பவேண்டும். மோசேயின் கையிலே குஷ்டரோகம் பிடித்தது, எகிப்தியருக்கு வியாதிகள் வரும் என்பதற்கு அடையாளம். மோசே எகிப்தியருக்காக ஜெபம்பண்ணும்போது, அவர்கள் மீதுள்ள வியாதி அவர்களை விட்டு நீங்கும். மோசேயின் கை மறுபடியும் சுத்தமானது இந்த சம்பவத்திற்கு அடையாளம்.

எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருக்கும் இஸ்ரவேல் புத்திரர், குஷ்டரோகம் பிடித்தவர்களைப்போல அசுத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்தின் பாவத்தினால் கறைபட்டிருக்கிறார்கள். மோசே குஷ்டரோகம் பிடித்திருந்த தன் கையை, தன் மடியிலிருந்து வெளியே எடுக்கும்போது, அந்தக் கை மறுபடியும் சுத்தமாகிறது. அதுபோலவே பாவத்தினால் கறைபட்டிருக்கிற இஸ்ரவேல் புத்திரர், மோசேயின் மடியில் கூடிவரும்போது, அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவார்கள்.

எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரர், தங்கள் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பதற்கும், அவர்கள் தங்களுடைய பாவக்கறைகளிலிருந்து நீங்கி, சுத்திகரிக்கப்படுவார்கள் என்பதற்கும், இரண்டாவது அற்புதம் அடையாளமாகயிருக்கிறது.

மோசே தன்னுடைய சொந்த பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ, வல்லமையினாலோ மந்திர சக்தியினாலோ இந்த அற்புதங்களை செய்யவில்லை. கர்த்தரே மோசேக்கு அற்புதங்களை செய்யும் வல்லமையைக் கொடுக்கிறார். மோசே கர்த்தரிடத்திலிருந்து வல்லமையையும், அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டு, இந்த அற்புதங்களை செய்கிறார்.

மோசே எகிப்து தேசத்திற்குப்போய், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்களுக்கு முன்பாக இவ்விரண்டு அற்புதங்களையும் செய்து காண்பிக்கவேண்டும். தான் அங்கு போகும்போது, இஸ்ரவேல் புத்திரர் தன்னை நம்பமாட்டார்கள் என்றும், தன்னுடைய வாக்குக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்றும் மோசே கர்த்தரிடத்தில் அவிசுவாசமான வார்த்தைகளை சொன்னார்.

எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நம்பவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் மோசேயின் வாக்குக்கு செவிகொடுக்கவேண்டும் என்பதற்காகவும் கர்த்தர் இவ்விரண்டு அற்புதங்களையும் செய்யும் வல்லமைகளை மோசேக்கு கொடுத்திருக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "முந்தின அடையாளத்தை அவர்கள் கண்டு, உன்னை நம்பாமலும் உனக்குச் செவிகொடாமலும் போனால், பிந்தின அடையாளத்தைக் கண்டு நம்புவார்கள்" (யாத் 4:8) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்கள் இவ்விரண்டு அற்புதங்களை பார்த்த பின்பும், அவர்கள் தன்னை நம்பாமல், தன்னுடைய வாக்குக்கு செவிகொடுக்காமல் போனால் என்ன செய்வது என்னும் சந்தேகம் மோசேயின் மனதில் உண்டாயிற்று. கர்த்தர் மோசேயின் சந்தேகத்தை நீக்குகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இவ்விரண்டு அடையாளங்களையும் அவர்கள் நம்பாமலும், உன் வாக்குக்குச் செவிகொடாமலும் இருப்பார்களானால், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்றுவாயாக; நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாகும்" (யாத் 4:9) என்று சொல்லுகிறார்.

மோசே இவ்விரண்டு அற்புதங்களையும், தன்னுடைய ஜனத்தாருக்கு முன்பாகச் செய்கிறார். அவர்கள் மோசேயை நம்பி, அவருடைய வாக்குக்குச் செவிகொடுக்கிறார்கள். ஆகையினால் மூன்றாவது அற்புதம் தேவையில்லாமற் போயிற்று. (யாத் 4:29-31).

மோசே கர்த்தர் சொன்ன முதல் இரண்டு அற்புதங்களையும், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாகவே செய்து பார்க்கிறார். கர்த்தர் தனக்கு சொன்னபடி மோசே செய்கிறார். அப்போது அங்கே அற்புதம் நடக்கிறது. தண்ணீர் இரத்தமாகும் அற்புதமோ எகிப்து தேசத்திலே நடைபெறும். இந்த அற்புதத்தை மோசே கர்த்தருக்கு முன்பாக செய்து பார்க்கவில்லை.

## திக்குவாயும் மந்த நாவும் யாத் 4:10-17

**யாத் 4:10. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான்.**

**யாத் 4:11. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?**

**யாத் 4:12. ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.**

**யாத் 4:13. அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்.**

**யாத் 4:14. அப்பொழுது கர்த்தர் மோசேயின் மேல் கோபம்மூண்டவராகி: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப்புறப்பட்டுவருகிறான்; உன்னைக்காணும் போது அவன் இருதயம் மகிழும்.**

**யாத் 4:15. நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன்.**

**யாத் 4:16. அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்.**

**யாத் 4:17. இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய் என்றார்.**

மோசே இரண்டு அற்புதங்களையும் செய்து பார்த்த பின்பும், அவர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய தயங்குகிறார். மோசேயின் வார்த்தைகள் அவருடைய மனத்தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக இருந்தாலும், அந்த வார்த்தைகள் அவருடைய அவிசுவாசத்திற்கும், கோழைத்தனத்திற்கும், சோம்பேறிதனத்திற்கும் அடையாளமாகயிருக்கிறது.

கர்த்தர் மோசேக்கு ஒரு ஊழியத்தை நியமித்து வைத்திருக்கிறார். மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தனக்கு கொடுக்கும் ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தருடைய திட்டமும், அவருடைய சித்தமும் மோசேயின் திட்டமாகவும், சித்தமாகவும் மாறவேண்டும். ஆனால் மோசேயோ தன்னுடைய சொந்த திட்டத்திற்கும், சொந்த சித்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், இன்னும் சாக்குபோக்குகளை சொல்லுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்" (யாத் 4:10) என்று சொல்லுகிறார்.

மோசே தேவனிடம் தன்னைப் பற்றியே குறை கூறுகிறார். தான் வாக்குவல்லவன் அல்ல. மந்த நாவுடையவன் என்று முறையிடுகிறார். தேவன் மோசேயைப் பயன்படுத்த வாக்குப்பண்ணுகிறார். ஆனால் மோசே தேவனிடத்தில் எதிர்த்து முறையிடுகிறார். மோசேக்காகப் பேசுவதற்குத் தேவன் ஆரோனை அனுப்புகிறார். (யாத் 4:11-17). இந்த நிகழ்ச்சி அப் 7:22 ஆவது வசனத்தோடு முரண்படவில்லை. ஒருசிலர் வார்த்தைகளில் வல்லவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் சாதுரிய பேச்சாளர்களாக இருக்க மாட்டார்கள்.

மோசே வாக்குவல்லவன் அல்ல என்பதும், அவர் திக்குவாயும், மந்தநாவுமுள்ளவர் என்பதும் கர்த்தருக்கு தெரியும். கர்த்தர் மோசேயின் பலத்தையும் அறிந்திருக்கிறார். அவருடைய பலவீனத்தையும் அறிந்திருக்கிறார். தம்முடைய ஊழியத்தில் அதிக திறமைகளும் தாலந்துகளும் இல்லாத சாதாரண ஜனங்களை பயன்படுத்துவது கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக ஒரு சிலரை தெரிந்தெடுக்கும்போது, அவர்களிடத்தில் போதுமான திறமைகளோ, தாலந்துகளோ இருக்காது. ஆனாலும் கர்த்தர் அவர்களை தம்முடைய ஊழியத்தை செய்வதற்காக தெரிந்தெடுத்து, அவர்கள்மீது தம்முடைய பரிசுத்த ஆவியானவரை ஊற்றுகிறார். தம்முடைய ஊழியத்தை அவர்கள் நேர்த்தியாய்ச் செய்வதற்கு, பரிசுத்தஆவியானவர் அவர்களுக்கு பயிற்சி கொடுத்து, தகுதிப்படுத்துகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய சீஷர்களை தெரிந்தெடுத்தபோது, அவர்கள் சாதாரண ஜனங்களாயிருந்தார்கள். அவர்களில் சிலர் மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்கள். அவர்களில் ஒருவரால்கூட கர்த்தருடைய சுவிசேஷத்தை சாதுரியமாய் பிரசங்கம்பண்ண முடியாது. பரிசுத்த ஆவியானவர் சீஷர்களை அபிஷேகம்பண்ணும் வரையிலும், அவர்களில் ஒருவர்கூட கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணவில்லை. சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றபின்பு, அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை வல்லமையாய்ப் பிரசங்கம்பண்ணினார்கள்.

மோசே கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது, கர்த்தருடைய பலத்தையும், அவருடைய வல்லமையையும் நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக, தன்னுடைய பலவீனத்தை நோக்கிப் பார்க்கிறார். மோசே மெய்யாகவே வாக்குவல்லவரல்ல. அவர் மெய்யாகவே திக்குவாயும் மந்தநாவுமுள்ளவர்.

மோசே தன் சரீரத்திலுள்ள குறைபாடுகளை கர்த்தரிடத்தில் சொல்லும்போது, கர்த்தர் மோசேயை நோக்கி, "மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்" (யாத் 4:11,12) என்று சொல்லுகிறார்.

மோசேயோ கர்த்தருடைய கட்டளைக்கு இன்னும் கீழ்ப்படியாமல், "ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்" (யாத் 4:13) என்று சொல்லிவிடுகிறார். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து எகிப்து தேசத்திற்கு போவதற்கு பதிலாக, மோசே மீதியான் தேசத்திலே ஆடுகளை மேய்க்க ஆயத்தமாயிருக்கிறார்.

எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்னும் ஆர்வம் மோசேயின் மனதிலிருக்கிறது. ஆனால் அந்த ஊழியத்தை செய்ய மோசே ஆயத்தமாயில்லை. கர்த்தர் மோசேயை எகிப்து தேசத்திற்கு அனுப்ப விரும்புகிறார். ஆனால் மோசேயோ, எகிப்துக்கு தன்னை அனுப்பாமல், வேறு யாரையாவது அனுப்பும் என்று கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவர். ஆனாலும் மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், தொடர்ந்து சாக்குபோக்குகளை சொல்லிக் கொண்டிருக்கிறார். இதனால் கர்த்தர் மோசேயின்மேல் கோபமூண்டவராகிறார். கர்த்தருக்கு கோபம் வந்தாலும், அவர் மோசேயை தண்டிக்கவில்லை. "ஆண்டவரே, நீர் அனுப்ப சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்" என்று மோசே சொல்கிறார். கர்த்தர் மோசேயின் வார்த்தையைக் கேட்டு, மோசேக்கு பதிலாக வேறு யாரையும் எகிப்து தேசத்திற்கு அனுப்பவில்லை. மோசேயை எகிப்துக்கு அனுப்பவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

மோசே கர்த்தரிடத்தில், "நான் வாக்குவல்லவனல்ல, நான் திக்குவாயும் மந்தநாவுமுள்ளவன்" என்று தன்னுடைய வாயின் குறைபாடுகளை சாக்குபோக்காக சொல்லுகிறார். கர்த்தரோ மோசேயின் ஒவ்வொரு சாக்குபோக்குக்கும் பதில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார், கர்த்தராகிய நானல்லவா" என்று சொல்லுகிறார்.

கர்த்தரே மனுஷனை சிருஷ்டித்தார் என்பது மோசேக்கு தெரியும். மனுஷரை சிருஷ்டித்த கர்த்தர், அவனுடைய வாயையும் சிருஷ்டித்திருக்கிறார். இந்த சத்தியத்தை கர்த்தர் மோசேக்கு தெளிவுபடுத்த விரும்புகிறார். மனுஷனுடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும், கர்த்தருடைய வல்லமையினால் இயங்குகிறது. கர்த்தருடைய வல்லமையினாலே மனுஷருடைய கண்கள் பார்க்கிறது. வாய்கள் பேசுகிறது. காதுகள் கேட்கிறது.

"காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ? ஜாதிகளை தண்டிக்கிறவர் கடிந்து கொள்ளாரோ? மனுஷனுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ?" (சங் 94:9,10).

கர்த்தரே மனுஷருக்கு மனக்கண்களைக் கொடுத்து, அந்தக் கண்களை திறக்கவும் செய்கிறார். கர்த்தர் வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும் கிருபைகளையும் மனுஷருக்கு கொடுக்கிறார். "அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி" (லூக் 24:45).

கர்த்தர் ஏற்கெனவே மோசேயினிடத்தில், "நான் உன்னோடே கூடயிருப்பேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். "நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம்" (யாத் 3:12).

கர்த்தரோ இப்போது மோசேயை உற்சாகப்படுத்தும் வண்ணமாக, தாம் ஏற்கெனவே சொன்ன வாக்குத்தத்தை இங்கு மறுபடியுமாக அவருக்கு சொல்லுகிறார். இந்த வாக்குத்தத்தை கர்த்தர் மோசேக்கு பொதுவான வார்த்தைகளாக சொல்லாமல், மிகவும் விசேஷித்த வார்த்தைகளாக சொல்லுகிறார். "நான் உன் வாயோடே இருப்பேன்" (யாத் 4:12) என்று கர்த்தர் மோசேக்கு வாக்குப்பண்ணுகிறார்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. மனுஷனுடைய உடல் உறுப்புக்களைக் கர்த்தர் சிருஷ்டித்திருக்கிறார். அவற்றை அவரால் பயன்படுத்த முடியும்.

மோசேக்குத் தன்மீது நம்பிக்கையில்லை. தேவனால் தன்னைப் பயன்படுத்த முடியும் என்னும் விசுவாசமும் மோசேயிடம் காணப்படவில்லை. தேவனால் தன்னைப் பேச வைக்க முடியும், இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலை செய்து வழிநடத்த முடியும் என்னும் நம்பிக்கை மோசேயிடம் இன்னும் வரவில்லை. ஆகையினால் தனக்குப் பதிலாக வேறு யாரையாவது அனுப்புமாறு மோசே தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில், "நான் வாக்குவல்லனல்ல, நான் திக்குவாயும் மந்தநாவுமுள்ளவன்" என்று சொன்னார். கர்த்தரோ மோசேயை நோக்கி, "நான் உன்னுடைய திக்குவாயோடும், மந்தநாவோடும், வாக்குவல்லமையில்லாத வாயோடும் இருப்பேன்" என்று வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயின் வாயோடு இருக்கும்போது, அவர் அங்கே சும்மா இருக்கமாட்டார். கர்த்தர் மோசேயின் வாயிலுள்ள குறைபாடுகளை நீக்கி அதைப் பூரணப்படுத்துவார். கர்த்தர் மோசேயின் வாயை ஆசீர்வதிப்பார். அப்போது இதுவரையிலும் வாக்குவல்லமையில்லாத மோசேயின் வாய், இனிமேல் வாக்குவல்லமையுள்ள வாயாக மாறும். கர்த்தர் மோசேயின் வாயோடு இருக்கும்போது, அவருடைய திக்குவாய் குணப்படுத்தப்படும். அவர் இனிமேல் திக்காமல், திணராமல் தெளிவாகவும், சரளமாகவும் பேசுவார். கர்த்தர் மோசேயின் மந்த நாவையும் குணப்படுத்துவார். ஆகையால், மோசே இனிமேல் பேசுவதற்கு திணரமாட்டார். சாதுரியமாய்ப் பேசுவார்.

உலகப்பிரகாரமான பேச்சாளர்கள் சாதுரியமான வார்த்தைகளை பேசுவார்கள். அவர்களிடத்தில் சொல்நயம் இருக்கும். அவர்கள் வேகமாகவும் விருவிருப்பாகவும் பேசுவார்கள். கர்த்தரோ மோசேயின் வாயோடே கூடயிருந்து, மோசே பேசவேண்டியதை அவருக்கு போதிப்பார். அப்போது மோசே தன்னுடைய சுயபலத்தினாலோ அல்லது சுயபலவீனத்தினாலோ, தனக்கு இஷ்டமான வார்த்தைகளை பேசாமல், கர்த்தர் தனக்கு போதிக்கிற வார்த்தைகளை மாத்திரம் பேசுவார். மோசேயின் வார்த்தைகளில் தேவனுடைய வல்லமை வெளிப்படும். சாதுரியமான வார்த்தைகளை பேசுவதைவிட, தேவனுடைய வல்லமை நிரம்பிய ஜீவனுள்ள வார்த்தைகளை பேசுவதே முக்கியம்.

மோசே கர்த்தரிடத்தில் தன்னுடைய சரீர பலவீனங்களை திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார். இது மோசேயின் பலவீனம். கர்த்தர் மோசேயின்மேல் கோபமூண்டவராகயிருந்தாலும், அவர்மீது கிருபையுள்ளவராகவும் இருக்கிறார். கர்த்தர் மோசேக்கு உதவிசெய்ய விரும்புகிறார். மோசே எகிப்து தேசத்திற்குப் போகும்போது கர்த்தரும் அவரோடுகூடயிருப்பார். ஆனாலும் மோசேக்கு உதவியாக, அவருடைய சகோதரனாகிய ஆரோனையும் அனுப்ப கர்த்தர் திட்டமிடுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப்புறப்பட்டுவருகிறான்; உன்னைக்காணும் போது அவன் இருதயம் மகிழும்" என்றும்,

"நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன்" என்றும்,

"அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்" என்றும்,

"இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய்" (யாத் 4:14-17) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கோபப்படுவது தேவனுடைய சுபாவமல்ல. ஆயினும், நியாயமான காரணம் இருக்கும்போது, தேவன் மனுஷர்மீது கோபப்படுகிறார். தேவன் தம்முடைய சுபாவத்தில் கோபப்படுவதற்குத் தாமதிக்கிறவர் (நெகே. 9:17; சங் 103:8; சங் 145:8) தேவனுடைய கோபம் ஒரு நொடிப் பொழுது மட்டுமே இருக்கும். (சங் 30:5; சங் 103:9). மோசே இறுமாப்புடன் இருக்கிறார். தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார். தன்னுடைய பலவீனத்தைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். தேவன் ஆரோனை அனுப்பி, மோசேயின் பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறார்.

கர்த்தருடைய தெய்வீக சித்தத்தினாலும் அவருடைய தெய்வீக வழிநடத்துதலினாலும், ஆரோன் மோசேயை சந்திக்க புறப்பட்டு வருகிறார். இவர்கள் இருவரும் சகோதரர்கள். ஆரோன் மோசேயின் மூத்த சகோதரர். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து, முகமுகமாய் சந்தித்து பேசி, பல வருஷங்களாயிற்று. கர்த்தருடைய கிருபையினால் இந்த சகோதரர்கள் இருவரும் இனிமேல் சந்திக்கப்போகிறார்கள். மோசேயைக் காணும்போது ஆரோனின் இருதயம் மகிழும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆரோனைப் பற்றிய முதலாவது குறிப்பு இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோன் இஸ்ரவேலின் முதலாவது பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்தவர். லேவியன் என்னும் வார்த்தையும் இங்கு தான் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. லேவி கோத்திரத்திலிருந்து வந்த ஆசாரியர்களில் ஆரோன் முதன்மையானவர். லேவியன் என்னும் வார்த்தை லேவி கோத்திரத்தைச் சேர்ந்த எல்லோரையும் குறிக்கும். இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆசாரியராகவும், தேவனுடைய ஊழியக்காரர்களாகவும் இருந்தார்கள். *(யாத் 6:16-25; எண் 3:45; உபா 10:8-9).*

ஆரோன் நன்றாய்ப் பேசுகிறவர் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். தேவன் சர்வ ஞானமுள்ளவர். நம் ஒவ்வொருவரும் நம்முடைய தாயின் கர்ப்பத்தில் உருவாவதற்கு முன்பாகவே தேவன் நம்மைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறார். ஆரோனைப் பற்றி தேவனுக்குத் தெரிந்திருப்பது ஆச்சரியமான காரியமல்ல. நம்முடைய சிந்தனைகளையும், செயல்களையும் தேவன் முன்கூட்டியே அறிந்திருக்கிறார். *(சங் 139:2)*

மனுஷனுக்குத் தன்னைப் பற்றிக் கூடச் சரியாகத் தெரியாது. ஆனால் தேவனோ சர்வ சிருஷ்டியைப் பற்றியும் சம்பூரணமாகத் தெரிந்து வைத்திருக்கிறார். மோசே தன்னைப் பற்றி முறையிடுவார் என்று தேவனுக்கு ஏற்கெனவே தெரியும். ஆகையினால் இங்கு தேவன் ஆரோனை ஆயத்தப்படுத்தி அவரைக் குறித்து மோசேயிடம் பேசுகிறார். *(யாத் 4:27; அப் 9:10-19; அப் 10:7-33).*

மோசே எகிப்து தேசத்தில் இஸ்ரவேலின் மூப்பரிடத்திலும், பார்வோனிடத்திலும் என்னென்ன வார்த்தைகளை பேசவேண்டும் என்று கர்த்தர் அவருக்கு சொல்லியிருக்கிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை, மோசே ஆரோனுடைய வாயிலே போடவேண்டும். கர்த்தர் இதற்கு முன்பு "நான் உன் வாயோடே இருப்பேன்" என்று மோசேக்கு வாக்குப்பண்ணினார். இப்போதோ, "நான் உன் வாயிலும், அவன் வாயிலும் இருப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இதற்கு முன்பு மோசேயை நோக்கி, "நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்" என்று சொன்னார். இப்போதோ, "நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன்" என்று சொல்லுகிறார். ஆரோன் மோசேக்கு பதிலாக, எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் ஜனங்களோடே பேசுவார். ஆரோன் மோசேக்கு வாயாகயிருப்பார். இவர்கள் இருவரும் சேர்ந்து, எகிப்து தேசத்திலே கர்த்தருடைய ஊழியத்தை செய்யப்போகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பியபோது, அவர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பினார். அதுபோலவே, மோசேயின் காலத்திலும், கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் இணைத்து, இரண்டு பேரையும், எகிப்து தேசத்திற்கு அனுப்புகிறார்.

"நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். தெய்வீக ஏவுதலை இந்த வாக்கியம் விளக்குகிறது. தீர்க்கதரிசிகளின் வாயில் தேவன் ஏற்ற வார்த்தைகளைப் போடுகிறார். அவர்கள் சொல்ல வேண்டியவை அனைத்தையும் தேவனே அவர்களுடைய உள்ளத்தில் ஏவுகிறார் *(யாத் 4:15-16; எண் 23:5,16; எண் 22:35; உபா 18:18; யோவான் 17:8).* ஆரோன் மோசேயின் வாயாக இருப்பார். *(யாத் 4:16)* ஆரோன் தீர்க்கதரிசியாக இருப்பார் *(யாத் 7:1).*

கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் வெவ்வேறு திறமைகளையும் தாலந்துகளையும் கொடுத்திருக்கிறார். ஆரோன் வாக்குவல்லவர். அவர் சாதுரியமான வார்த்தைகளை பேசக்கூடியவர். ஆரோன் மோசேக்கு பதிலாக, எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரரோடே பேசுவார். ஆரோன் மோசேக்கு வாயாகயிருப்பார்.

மோசேயினிடத்தில் கர்த்தருடைய சிந்தையும், அவருடைய இருதயமும் இருக்கிறது. மோசே ஆரோனுக்கு தேவனாகயிருப்பார். மோசேயும் ஆரோனும் சேர்ந்து எகிப்து தேசத்திற்கு போய், கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும். ஆரோன் வாக்குவல்லவராகவும், சாதுரியமாக பேசக்கூடியவராகவும் இருந்தாலும், அவர் பேசுகிற வார்த்தைகளில் கர்த்தருடைய கிருபை இருக்கவேண்டும். அப்போதுதான் அந்த வார்த்தைகள் பெலமும், வல்லமையும், கிருபையும் நிரம்பியதாகயிருக்கும். ஆகையினால் கர்த்தர் ஆரோனுடைய வாயிலும் இருப்பதாக வாக்குப்பண்ணுகிறார். ஆரோன் தன்னுடைய சுயமாய்ப் பேசக்கூடாது. அவர் கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டுமென்றால், கர்த்தருக்கு சித்தமான வார்த்தைகளை பேசவேண்டும்.

"அவன் உனக்கு வாயாக இருப்பான்" என்று கர்த்தர் மோசேக்கு ஆரோனைப் பற்றிச் சொல்லுகிறார். யாத் 7:1 ஆவது வசனத்தில் "உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான்" என்று தேவன் மோசேயிடம் ஆரோனைப் பற்றிக் கூறுகிறார். தீர்க்கதரிசிகள் தேவனுக்காகப் பேசுகிறவர்கள். தேவனுடைய ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பவர்கள். அவர்கள் தேவனிடத்திலிருந்து தீர்க்கதரிசன வரத்தைப் பெற்று, தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். (அப் 3:21; 2கொரி 12:1-11; 2தீமோ 3:15-17; 2தீமோ 4:1-4; 2பேதுரு 1:21). தீர்க்கதரிசிகள் மனுஷரிடத்தில் பேசுகிறார்கள். ஆரோன் மோசேயின் வாயாக இருந்தபோதிலும், மோசேயே தேவனிடத்தில் மத்தியஸ்தனாக இருந்து ஜெபிக்கிறார்.

மோசே எகிப்து தேசத்திற்கு போகும்போது, தன்னிடத்திலுள்ள கோலையும் கொண்டு போகவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய்" (யாத் 4:17) என்று சொல்லுகிறார்.

மோசே தன் கையிலுள்ள கோலை, மீதியான் தேசத்திலே ஆடுகளை மேய்ப்பதற்கு பயன்படுத்துகிறார். இது மேய்ப்பரின் கோல். கர்த்தர் மேய்ப்பரின் கோலை அதிகாரத்தின் கோலாக மாற்றுகிறார். ராஜாக்கள் கையிலே பட்டயமும் செங்கோலும் இருக்கும். மோசேயின் கையிலோ அதற்கு பதிலாக, சாதாரண கோல் இருக்கிறது. மோசேயின் கையிலிருக்கும் கோலே, அவருக்கு ராஜாவின் கையிலிருக்கும் பட்டயம் போலவும், செங்கோல் போலவும் இருக்கும். அந்தக் கோல் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யும்.

"இந்தக் கோல்" என்பது ஆடுகளை மேய்ப்பதற்குப் பயன்படுத்தும் கோலாகும். தேவன் நடப்பிக்கும் அற்புதங்களில் இந்தக் கோலைப் பயன்படுத்துமாறு அவர் மோசேக்குக் கட்டளை கொடுக்கிறார். சாதாரண ஆடு மேய்க்கும் கோலைக்கூட தேவனால் அற்புதமாகப் பயன்படுத்த முடியும்.

## மோசேயின் குடும்பம்
## யாத் 4:18-23

**யாத் 4:18. மோசே தன் மாமனாகிய எத்திரோவினிடத்திற்கு வந்து: நான் எகிப்திலிருக்கிற என் சகோதரரிடத்துக்குத் திரும்பிப்போய், அவர்கள் இன்னும் உயிரோடே இருக்கிறார்களா என்று பார்க்கும்படிப் புறப்பட்டுப்போக உத்தரவு தரவேண்டும் என்றான். அப்பொழுது எத்திரோ மோசேயை நோக்கி: சுகமாய்ப்போய்வாரும் என்றான்.**

**யாத் 4:19. பின்னும் கர்த்தர் மீதியானிலே மோசேயை நோக்கி: நீ எகிப்துக்குத் திரும்பிப் போ, உன் பிராணனை வாங்கத்தேடின மனிதர் எல்லாரும் இறந்துபோனார்கள்.**

**யாத் 4:20. அப்பொழுது மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்துக்குத் திரும்பினான்; தேவனுடைய கோலையும் மோசே தன் கையிலே பிடித்துக்கொண்டுபோனான்.**

**யாத் 4:21. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ எகிப்திலே திரும்பிப்போய்ச் சேர்ந்தபின், நான் உன் கையில் அளித்திருக்கிற அற்புதங்கள் யாவையும் பார்வோனுக்கு முன்பாகச் செய்யும்படி எச்சரிக்கையாயிரு; ஆகிலும், நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்துவேன்; அவன் ஜனத்தைப் போகவிடான்.**

**யாத் 4:22. அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்.**

**யாத் 4:23. எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்றுசொல் என்றார்.**

மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போக ஆயத்தமாகிறார். அவர் இப்போது மீதியான் தேசத்திலே இருக்கிறார். மோசே நாற்பது வருஷங்களுக்கு முன்பாக எகிப்திலிருந்து மீதியான் தேசத்திறகு வந்தபோது தனிமனிதனாக வந்தார். இப்போதோ அவர் குடும்பத்தலைவராயிருக்கிறார். அவருக்கு மனைவியும் பிள்ளைகளும், மாமனாரும் இருக்கிறார்கள். மோசே எகிப்து தேசத்திற்கு போகும் முன்பு தன்னுடைய மாமனாரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, போக ஆயத்தமாயிருக்கிறார்.

மோசே தன் மாமனாகிய எத்திரோவினிடத்திற்கு வந்து, "நான் எகிப்திலிருக்கிற என் சகோதரரிடத்துக்குத் திரும்பிப்போய், அவர்கள் இன்னும் உயிரோடே இருக்கிறார்களா என்று பார்க்கும்படிப் புறப்பட்டுப்போக உத்தரவு தரவேண்டும்" என்று சொல்லுகிறார். அப்பொழுது எத்திரோ மோசேயை நோக்கி, "சுகமாய்ப்போய்வாரும்" (யாத் 4:18) என்று சொல்லி உத்தரவுகொடுக்கிறார்.

மோசே மீதியான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு திரும்பி போவதற்கு முன்பாக, கர்த்தரும் அவருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் மீதியானிலே மோசேயை நோக்கி, "நீ எகிப்துக்குத் திரும்பிப் போ, உன் பிராணனை வாங்கத்தேடின மனிதர் எல்லாரும் இறந்துபோனார்கள்" (யாத் 4:19) என்று சொல்லுகிறார்.

"நீ எகிப்துக்குத் திரும்பிப் போ" என்று கர்த்தர் மோசேயிடம் சொல்லுகிறார். தன்னுடைய ஜனத்தாரிடம் எகிப்துக்குத் திரும்பிப் போகுமாறு தேவன் மோசேயிடம் கூறுகிறார். (ஆதி 31:3; ஆதி 32:9) மோசேயின் மாமனாகிய எத்திரோவைப் பற்றி இங்கு எதுவும் கூறப்படவில்லை. மோசேயின் அழைப்பு, தேவன் மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தியது, மோசே எகிப்துக்குத் திரும்பிச் செல்வதன் நோக்கம் ஆகியவை எத்திரோவிற்குத் தெரியுமா என்பது தெரியவில்லை.

மோசேயின் பிராணனை வாங்கத்தேடின மனிதர் எல்லாரும் இறந்து போனார்கள். ஆகையினால்தான், ஆரோன் மோசேயைத் தேடி வருகிறார் (யாத் 4:14,27; மத் 2:15,20). எல்லோரும் இறந்து போனார்கள் என்பதற்கு மோசேயின் காலத்திலிருந்த பார்வோனும், அவனுடைய ராஜாங்கத்தில் இருந்த எல்லோரும் இறந்து போனார்கள் என்பது பொருள்.

மோசேயின் பழைய சத்துருக்களெல்லாம் மரித்துப்போனார்கள். ஒருவேளை மோசே புதிய சத்துருக்களை சந்திக்க வேண்டியது வரலாம். கர்த்தர் மோசேயோடு கூடயிருப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.கர்த்தர் அவருக்கு அற்புதங்களை செய்யும் வல்லமையைக் கொடுத்திருக்கிறார். மோசே இஸ்ரவேலின் மூப்பர் மத்தியிலும், பார்வோனுக்கு முன்பாகவும் இந்த அற்புதங்களை செய்யவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ எகிப்திலே திரும்பிப்போய்ச் சேர்ந்தபின், நான் உன் கையில் அளித்திருக்கிற அற்புதங்கள் யாவையும் பார்வோனுக்கு முன்பாகச் செய்யும்படி எச்சரிக்கையாயிரு" (யாத் 4:21) என்று சொல்லுகிறார்.

மோசே எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, அங்கே என்னென்ன காரியங்கள் சம்பவிக்கும் என்பதையும் கர்த்தர் மோசேக்கு முன்னறிவிக்கிறார். மோசே எதிர்பார்க்கிற காரியம் எகிப்து தேசத்திலே நடைபெறவில்லையென்றால் அவருடைய மனதிலே சோர்வும் ஏமாற்றமும் உண்டாகும். கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்துவேன்; அவன் ஜனத்தைப் போகவிடான்" (யாத் 4:21) என்று சொல்லுகிறார்.

தேவன் அனுமதிக்கும் காரியங்கள் நடைபெறுகிறது. தம்மை எதிர்ப்பதற்கும், தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துவதற்கும் தேவன் பார்வோனை அனுமதிக்கிறார். (யாத் 4:21; யாத் 9:12; யாத் 10:1,20,27; யாத் 11:10; யாத் 14:8; ரோமர் 9:18). ஒவ்வொரு முறையும் மனந்திருந்தி, நமக்குக் கீழ்ப்படிவதற்கு தேவன் பார்வோனுக்கு வாய்ப்பளிக்கிறார். ஆனால் பார்வோன் தேவனுடைய இரட்சிப்பை நாடாமல், தன்னுடைய அழிவைத் தேடிக் கொள்கிறான்.

இக்காலத்திலும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காக சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. ஆனால் சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள். (ரோமர் 2:4-11; 2கொரி 2:15-16). சூரிய வெளிச்சம் களிமண்ணைக் கடினமாக்குகிறது. அதே சமயத்தில் அது மெழுகை உருக்குகிறது. பொருளின் தன்மையைப் பொறுத்து விளைவுகள் மாறுபடும்.

பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டிருப்பதைப் பார்த்து மோசே ஆச்சரியப்படக்கூடாது. பார்வோன் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை போகவிடாமல் இருப்பதைப் பார்த்து, மோசே ஏமாற்றமடையக்கூடாது.

கர்த்தர் மோசேயின் வாயிலே வார்த்தைகளைப் போட்டிருக்கிறார். கர்த்தர் மோசேயின் வாயோடு கூடயிருப்பார். மோசே பேசவேண்டியதை கர்த்தர் அவருக்கு போதிப்பார். மோசே செய்யவேண்டியதை கர்த்தர் அவருக்கு உணர்த்துவார். மோசே கர்த்தரை நம்பி எகிப்து தேசத்திலே கிரியை செய்யவேண்டும்.

மோசே எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, அவர் பார்வோனோடே சொல்லவேண்டிய ஒவ்வொரு வார்த்தைகளையும் கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்றுசொல்" (யாத் 4:22,23) என்று சொல்லுகிறார்.

தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரைத் தம்முடைய குமாரன் என்றும், தம்முடைய சேஷ்டபுத்திரன் என்றும் அழைக்கிறார். பார்வோன் இந்த வாக்கியத்தை எளிதாகப் புரிந்து கொள்வான். ஏனெனில் எகிப்து தேசத்து ஜனங்கள் பார்வோனை "ரா" என்னும் தெய்வத்தின் சேஷ்டபுத்திரனாக அங்கிகரிக்கிறார்கள். பார்வோன் தன்னுடைய சேஷ்டபுத்திரனை நேசிப்பது போன்று, தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரைத் தம்முடைய சேஷ்டபுத்திரனாக நேசிக்கிறார். (யாத் 4:23).

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனத்தாரால் தேவனுக்கு ஆராதனை செய்ய முடியவில்லை. இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் காளைகளைப் பலியிட வேண்டும். ஆனால் எகிப்தியர்கள் காளைகளைப் புனிதமான மிருகங்களாகக் கருதியதினால், இஸ்ரவேலரால் அவற்றை எகிப்து தேசத்தில் பலியிட முடியவில்லை. (யாத் 8:26)

"நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். பார்வோன் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பிவிடுவதற்கு முன்பாகவே தேவன் இங்கு கூறியிருக்கும் வார்த்தை நிறைவேறிற்று (யாத் 11:4-10; யாத் 12:1-36).

மோசே பார்வோனிடத்தில் பேசும்போது தன்னுடைய சொந்த நாமத்தினால் பேசக்கூடாது. அவர் கர்த்தருடைய நாமத்தினால் பேசவேண்டும். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே பார்வோனுக்கு சொன்ன பின்பு, இந்த வார்த்தைகளை, "கர்த்தர் சொன்னார்" என்று சொல்ல வேண்டும். "கர்த்தர் சொன்னார்" என்னும் வாக்கியத்தை தீர்க்கதரிசிகள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனாலும் பரிசுத்த வேதாகமத்தில் "கர்த்தர் சொன்னார்" என்னும் வார்த்தை முதல் தடவையாக இங்கு பயன்படுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கும் கர்த்தருக்கும் இடையே உள்ள ஐக்கியத்தையும், தொடர்பையும் பார்வோன் அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது அன்பாயும், கரிசனையாயும் இருக்கிறார் என்பதையும் பார்வோன் உணரவேண்டும். மோசே இந்த சத்தியங்களை பார்வோனுக்கு உணர்த்தவேண்டும்.

மோசே பார்வோனை நோக்கி, "எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பி விடு என்று கட்டளையிடுகிறேன், என்று கர்த்தர் சொன்னார்" என்று சொல்லவேண்டும். மோசே பார்வோனுக்கு முன்பாக கர்த்தருடைய நாமத்தினாலும், அவருடைய அதிகாரத்தினாலும் பேசவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய குமாரனாகிய இஸ்ரவேல்மீது அன்பாயும் வைராக்கியமாயும் இருக்கிறார். அவர்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருப்பது கர்த்தருடைய சித்தமல்ல.

இஸ்ரவேல் கர்த்தருடைய குமாரன், அவருடைய சேஷ்டபுத்திரன். சேஷ்டபுத்திரன் விடுதலையோடும், கனத்தோடும் இருக்கவேண்டும். ஆனால் பார்வோனோ, கர்த்தருடைய சேஷ்டபுத்திரனை, எகிப்து தேசத்திலே அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான். ஆகையினால் கர்த்தர், "என் குமாரனை அனுப்பிவிடு" என்று பார்வோனுக்கு கட்டளையிடுகிறார்.

பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்துவான் என்பதும், அவன் இஸ்ரவேல் புத்திரரை போகவிடான் என்பதும் கர்த்தருக்கு தெரியும். பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை போகவிடவில்லையென்றால், அவனுக்கு என்னென்ன தண்டனை கொடுக்கப்படும் என்பதையும், கர்த்தர் மோசேயின் மூலமாக அவனுக்கு சொல்லுகிறார். "என் குமாரனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன்" (யாத் 4:23) என்று கர்த்தர் பார்வோனுக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேவனுடைய குமாரன். இஸ்ரவேல் தேவனுடைய சேஷ்டபுத்திரன். தேவனுடைய குமாரனாகவும், சேஷ்டபுத்திரனாகவும் இருக்கிற இஸ்ரவேல் புத்திரரை, தேவனுக்கு ஆராதனை செய்யும்படி பார்வோன் அனுப்பிவிடவில்லையென்றால், கர்த்தர் பார்வோனுடைய குமாரனை, அவனுடைய சேஷ்டபுத்திரனை சங்கரிப்பதாக சொல்லுகிறார். கர்த்தர் இந்த வார்த்தைகளையெல்லாம் மோசேயின் வாயிலே போட்டிருக்கிறார். மோசே கர்த்தருடைய வார்த்தையோடு எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகிறார்.

## விருத்தசேதனம்
## யாத் 4:24-26

**யாத் 4:24. வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப்பார்த்தார்.**

**யாத் 4:25. அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள்.**

**யாத் 4:26. பின்பு அவர் அவனைவிட்டு விலகினார் அப்பொழுது அவள்: விருத்தசேதனத்தினிமித்தம் நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள்.**

பிரயாணம் பண்ணுகிறவர்கள் ஏதாவது ஊற்றண்டையில் இரவில் தங்குவது வழக்கம். (ஆதி 42:27). மோசே தன்னுடைய குமாரருக்கு விருத்தசேதனம் பண்ணவில்லை. ஆகையினால் மோசேயின் குமாரரில் ஒருவனைக் கர்த்தர் கொல்லப் பார்த்தார். விருத்தசேதனம் பண்ணாத ஆண்பிள்ளை அறுப்புண்டுபோவான் என்று கர்த்தர் கூறியிருக்கிறார் (ஆதி 17:14).

தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆபிரகாமின் சந்ததியில் வரும் ஆண்பிள்ளைகள் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டும். தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரை விடுவிப்பதற்காகக் கிரியை செய்து கொண்டிருக்கிறார். இது தேவனுடைய உடன்படிக்கை. இந்த உடன்படிக்கையிலுள்ள ஷரத்துக்களை ஆபிரகாமின் சந்ததியாரும் அங்கிகரித்து அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

தன் மகனைத் தேவன் எதற்காகக் கொல்லப் பார்த்தார் என்று சிப்போராளுக்குத் தெரிய வருகிறது. ஆகையினால் அவள், கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள்.

மோசே மீதியான் தேசத்திலிருந்து, எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகும் முன்பாக, தன் மாமனாகிய எத்திரோவின் உத்தரவைப் பெற்றுக்கொள்கிறார். அதன் பின்பு மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்துக்குத் திரும்புகிறார்; மோசே தேவனுடைய கோலையும் தன் கையிலே பிடித்துக்கொண்டுபோகிறார் (யாத் 4:20).

யாத் 2:22 ஆவது வசனத்தில் மோசேயின் ஒரு குமாரனைப் பற்றி மட்டும் கூறப்பட்டிருக்கிறது. அவனுக்கு கெர்சோம் என்று பெயர். இங்கு குமாரர் என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு என்ன வயது என்று தெரியவில்லை.

இந்த வசனத்தில் கழுதை என்று ஒருமையில் கூறப்பட்டிருந்தாலும், செப்துவஜிந்த் பதிப்பில் "கழுதைகள்" என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. மோசேக்குப் பிரயாணம் பண்ண ஒன்றுக்கும் மேற்பட்ட கழுதைகள் வேண்டும். மோசேக்கு ஒன்றும், அவனுடைய மனைவிக்கு ஒன்றும், அவருடைய குன்ரார் ஒவ்வொருவருக்கும் ஒன்றாக குறைந்தது நான்கு கழுதைகளாவது வேண்டும்.

இதுவரையிலும் மோசேயின் கோலாக இருந்தது இப்போது தேவனுடைய கோலாயிற்று. ஏனெனில் தேவன் அற்புதம் செய்வதற்கு இந்தக் கோலைப் பயன்படுத்துகிறார். (யாத் 4:2-4,17,20; யாத் 7:9-20; யாத் 8:5,16-17; யாத் 9:23; யாத் 10:13; யாத் 14:16; யாத் 17:5-9; எண் 20:11).

மோசேயும் அவருடைய குடும்பத்தாரும், எகிப்து தேசத்திற்கு போகும் வழியிலே, வழியிலே ஒரு இடத்தில் தங்கியிருக்கிறார்கள். அந்த இடத்தில் கர்த்தர் அவருக்கு எதிர்ப்பட்டு, அவரைக் கொல்லப்பார்க்கிறார் (யாத் 4:24). சற்று நேரத்திற்கு முன்பு கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உன்னோடே கூடயிருப்பேன்" என்று சொன்னார். ஆனால் இப்போதோ கர்த்தர் மோசேயைக் கொல்லப்பார்க்கிறார். கர்த்தர் மோசேயின் பிள்ளையைக் கொல்லப்பார்த்தார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

இந்த சம்பவம் மோசேயின் ஜீவியத்தில் நடைபெறுகிற சோகமான சம்பவமாயிருக்கிறது. மோசே தன்னுடைய குமாரனுக்கு இன்னும் விருத்தசேதனம் பண்ணவில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் மோசேயின் மேல் உண்டாயிற்று. மோசே மீதியான் தேசத்திலே, தன் குடும்பத்தாரோடு இதுவரையிலும் இருந்தார். அவர் எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். மோசே உலகப்பிரகாரமான வேலைகளில் அதிகமாய் ஈடுபட்டு, தன்னுடைய குமாரனுக்கு விருத்தசேதனம் பண்ணாமல், தன்னுடைய ஆவிக்குரிய கடமையை மறந்துவிட்டார். மோசே மீதியான் தேசத்து ஸ்திரீயாகிய சிப்போராளை விவாகம் செய்திருக்கிறார். சிப்போராளுக்கு விருத்தசேதன பிரமாணத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. மோசே அவிசுவாசியோடு இணைக்கப்பட்டதுபோல, சிப்போராளோடு விவாகத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார். ஆகையினால் மோசே விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர் தன் குமாரனுக்கு விருத்தசேதனம் பண்ணாமல், அசட்டைபண்ணினாரா அல்லது மறந்துவிட்டாரா என்பது தெரியவில்லை.

ஆனாலும் மோசே தன்னுடைய குடும்பத்தில் செய்யவேண்டிய கர்த்தருடைய நியமத்தை செய்ய தவறியதினால், கர்த்தருடைய கோபம் அவர் மேல் வருகிறது. கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்வதும் பாவம். கர்த்தர் செய்யச் சொல்லியிருக்கிற காரியங்களை செய்யாமலிருப்பதும் பாவம்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கடமைகளை நாம் நிறைவேற்றாமல் அசட்டையாயிருக்கும்போதும், நம்முடைய கடமைகளை மறந்துவிடும்போதும், நம்முடைய மனச்சாட்சி நம்மை எச்சரிக்க வேண்டும். கர்த்தரும் நம்முடைய கடமைகளை நமக்கு ஞாபகப்படுத்துவார். நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நடைபெறுகிற சம்பவங்கள், நம்முடைய கடமைகளையும், கர்த்தருக்காக நாம் செய்ய வேண்டிய காரியங்களையும் நமக்கு ஞாபகப்படுத்தும். அதுபோன்ற சம்பவம், இங்கு மோசேயின் ஜீவியத்தில் நடைபெறுகிறது.

மோசேயும், அவருடைய மனைவியும், அவருடைய பிள்ளைகளும் எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போகும் வழியிலே தங்கியிருக்கிறார்கள். அப்போது கர்த்தர் மோசேக்கு எதிர்ப்பட்டு, மோசேயைக் கொல்லப்பார்க்கிறார். கர்த்தர் மோசேயை எப்படி கொல்லப்பார்த்தார் என்பது இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. ஒருவேளை மோசேக்கு வியாதியோ, விபத்தோ ஏற்பட்டிருக்கலாம்.

அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து, "நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன்" (யாத் 4:25) என்று சொல்லுகிறாள். இந்த சம்பவம் நடைபெற்ற பின்பு, மோசேயை கொல்லப் பார்த்த கர்த்தர், அவரை விட்டு விலகுகிறார்.

தன் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணாமல், சிப்போராள் தவிர்த்து வந்தாள். இப்போது விருத்தசேதனத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்கிறாள். ஆகையினால் தன் புருஷனை "இரத்தசம்பந்தமான புருஷன்" என்று அழைக்கிறாள்.

மோசே கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்காக எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார். எகிப்து தேசத்திலிருக்கிற இஸ்ரவேலின் மூப்பரும், பார்வோனும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும் என்று மோசே எதிர்பார்க்கிறார். மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறவர்கள், முதலாவதாக தாங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். மோசேயினிடத்தில் கர்த்தருக்கு கீழ்ப்படிகிற சுபாவமில்லை. ஆனால் அவர் இஸ்ரவேல் புத்திரரும் பார்வோனும் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். மோசேயின் ஜீவியத்தில் இந்த முரண்பாடு காணப்படுகிறது. கர்த்தர் இந்த முரண்பாட்டை, மோசேயை விட்டு நீக்குவதற்காக, அவரை கொல்லப்பார்க்கிறார்.

மோசே இப்போது வியாதிப்பட்டிருக்கிறாரா அல்லது, விபத்தினால் காயம்பட்டிருக்கிறாரா என்பது தெரியவில்லை. மோசேயால் தன்னுடைய புத்திரனுக்கு விருத்தசேதனம்பண்ண முடியவில்லை. இந்த சூழ்நிலையில் மோசேயின் மனைவியாகிய சிப்போராள், காலதாமதம்பண்ணாமல், தன்னுடைய புத்திரனுக்கு விருத்தசேதனம்பண்ணுகிறாள்.

மோசேயின் புத்திரனுக்கு விருத்தசேதனம்பண்ணிய பிற்பாடு, மோசேயை கொல்லப்பார்த்த கர்த்தர், அவரை விட்டு விலகிப்போகிறார். அப்பொழுது சிப்போராள், "விருத்தசேதனத்தினிமித்தம் நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன்" (யாத் 4:26) என்று சொல்லுகிறாள். இந்த சம்பவம் சிப்போராளின் மனதிலே பயத்தையும், திகிலையும், திகைப்பையும் உண்டாக்கிற்று. இதனால் சிப்போராளும், அவளுடைய பிள்ளைகளும், மோசேயோடுகூட எகிப்து தேசத்திற்கு போகவில்லை. மோசே சிப்போராளையும் தன் பிள்ளைகளையும், மீதியான் தேசத்திலிருக்கும் தன் மாமனாகிய எத்திரோவினிடத்திற்கு திரும்பவும் அனுப்பி வைத்துவிடுகிறார்.

## மோசேயும் ஆரோனும்
## யாத் 4:27-31

**யாத் 4:27. கர்த்தர் ஆரோனை நோக்கி: நீ வனாந்தரத்தில் மோசேக்கு எதிர்கொண்டுபோ என்றார். அவன் போய், தேவபர்வதத்தில் அவனைச் சந்தித்து, அவனை முத்தஞ்செய்தான்.**

**யாத் 4:28. அப்பொழுது மோசே தன்னை அனுப்பின கர்த்தருடைய சகல வார்த்தைகளையும் அவர் தனக்குக் கட்டளையிட்ட சகல அடையாளங்களையும் ஆரோனுக்குத் தெரிவித்தான்.**

**யாத் 4:29. மோசேயும் ஆரோனும் போய், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் எல்லாரையும் கூடிவரச்செய்தார்கள்.**

**யாத் 4:30. கர்த்தர் மோசேக்குச் சொல்லிய சகல வார்த்தைகளையும் ஆரோன் சொல்லி, ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அந்த அடையாளங்களையும் செய்தான்.**

**யாத் 4:31. ஜனங்கள் விசுவாசித்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும், அவர்கள் படும் உபத்திரவங்களைக் கண்ணோக்கிப்பார்த்தார் என்றும், அவர்கள் கேட்டபோது, தலைகுனிந்துத் தொழுதுகொண்டார்கள்.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், மோசேயும் ஆரோனும் மறுபடியும் ஒருவரையொருவர் முகமுகமாக சந்தித்துக்கொள்கிறார்கள். கர்த்தர் ஆரோனை நோக்கி, "நீ வனாந்தரத்தில் மோசேக்கு எதிர்கொண்டுபோ" என்று சொல்லுகிறார். அப்பொழுது ஆரோன் போய், தேவபர்வதத்தில் மோசேயைச் சந்தித்து, அவரை முத்தஞ்செய்கிறார் (யாத் 4:26).

மோசேயை எங்கே சந்திக்க முடியும் என்பது ஆரோனுக்கு தெரியாது. கர்த்தரே அந்த வனாந்தரத்தில் ஆரோனை வழிநடத்துகிறார். ஆரோன் கர்த்தருடைய தயவினாலும், வழிநடத்துதலினாலும் மீதியான் தேசத்திற்கு வருகிறார். மோசே தேவபர்வதமாகிய ஓரேபிலே இருக்கிறார். இந்த பர்வதத்தில்தான் கர்த்தர் மோசேயை சந்தித்தார். இங்கே சகோதரர்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்து முத்தம் செய்துகொள்கிறார்கள்.

ஆரோன் மோசேயைச் சீனாய் மலையில் சந்தித்தார். மோசே எகிப்துக்கு தன் மனைவியையும், குமாரர்களையும் அழைத்துக் கொண்டு, போவதற்கு முன்பாகவும், (யாத் 4:14,27-28). தன் மாமனாகிய எத்திரோவிடம் இதுபற்றி பேசுவதற்கு முன்பாகவும், ஆரோன் மோசேயைச் சந்தித்திருக்கலாம். இவ்விரண்டு சகோதரர்களும் 40 வருஷங்களாகப் பிரிந்திருக்கிறார்கள்.

அப்பொழுது மோசே தன்னை அனுப்பின கர்த்தருடைய சகல வார்த்தைகளையும் அவர் தனக்குக் கட்டளையிட்ட சகல அடையாளங்களையும் ஆரோனுக்குத் தெரிவிக்கிறார் (யாத் 4:28). மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள்.

# யாத்திராகமம் - விரிவுரை
# EXODUS - COMMENTARY



மோசேயும் ஆரோனும் எகிப்து தேசத்திற்குப்போய், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் எல்லாரையும் கூடிவரச்செய்கிறார்கள். கர்த்தர் மோசேக்குச் சொல்லிய சகல வார்த்தைகளையும் ஆரோன் அவர்களுக்கு சொல்லுகிறார். மோசே ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அந்த அடையாளங்களையும் செய்கிறார். ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள் (யாத் 4:29,30).

இஸ்ரவேல் புத்திரர் உன் வாக்குக்கு செவிகொடுப்பார்கள் (யாத் 3:18) என்று கர்த்தர் மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன பிரகாரம் அவர்கள் மோசேயின் வாக்குக்கு செவிகொடுக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும், அவர்கள் படும் உபத்திரவங்களைக் கண்ணோக்கிப்பார்த்தார் என்றும், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்கள் கேட்டபோது, தலைகுனிந்து தொழுதுகொள்கிறார்கள் (யாத் 4:31).

## 5 அதிகாரம்

வனாந்தரத்திலே கர்த்தருக்கு பண்டிகை கொண்டாடும்படி இஸ்ரவேல் ஜனங்களை போகவிடவேண்டுமென்று மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்திலே சொல்லுகிறார்கள். அவர்கள் இருவரும் பார்வோனிடத்திலே கர்த்தருடைய நாமத்தினாலே பேசுகிறார்கள் (யாத் 5:1). பார்வோனோ கர்த்தரை அறியேன் என்று சொல்லி, இஸ்ரவேல் ஜனங்களை போகவிட மறுத்துவிடுகிறான் (யாத் 5:2).

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலியிடாவிட்டால், தங்கள்மீது கொள்ளைநோயும் பட்டயமும் வரும் என்று மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் சொல்லுகிறார்கள் (யாத் 5:3). பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரின் வேலையை கடினமாக்குகிறான். அவர்களை இன்னும் அதிகமாய் ஒடுக்குமாறு பார்வோன் தன் ஆளோட்டிகளுக்கு கட்டளையிடுகிறான் (யாத் 5:4-9).

இஸ்ரவேல் ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அறுக்கவேண்டிய செங்கல்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படவில்லை. ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை அடித்து துன்பப்படுத்துகிறார்கள் (யாத் 5:10-14).

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர், தாங்கள் அனுபவிக்கும் வேதனைகளை பார்வோனிடத்தில் முறையிடுகிறார்கள். ஆனால் பார்வோன் அவர்களுக்கு சகாயம் காண்பிக்கவில்லை (யாத் 5:15-19).

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் அனுபவிக்கும் வேதனைகளுக்கு மோசேயும் ஆரோனுமே காரணம் என்று சொல்லி, அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்கள் (யாத் 5:20,21). மோசே இஸ்ரவேல் புத்திரரின் வேதனைகளை கர்த்தரிடத்தில் பாரத்தோடு சொல்லுகிறார் (யாத் 5:22,23).

### பார்வோனுடைய பிடிவாதம் யாத் 5:1,2

**யாத் 5:1. பின்பு, மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள்.**

**யாத் 5:2. அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை என்றான்.**

மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்திலே போய், தங்களுடைய கோரிக்கையை சொல்லுகிறார்கள். அவர்கள் பார்வோனுக்கு பயப்படாமல், கர்த்தருடைய நாமத்தினால் தைரியமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் பார்வோனை நோக்கி, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார்" (யாத் 5:1) என்று சொல்லுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரிடத்தில் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார். ஆனால் அவர் இப்போது, பார்வோனிடத்தில் பேசும்போது, கர்த்தரை "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார்.

தேவனாகிய கர்த்தர் "இஸ்ரவேலின் தேவன்" என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறார். அப்போது அந்தப் பெயர் யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையே குறித்தது. அவர் ஒரு தனிமனிதரின் தேவனாகிய கர்த்தராயிருந்தார்.

"அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான்" (ஆதி 33:20).

மோசே இப்போது கர்த்தரை, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்தில் இஸ்ரவேல் என்பது, இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரை மொத்தமாய்க் குறிக்கிறது. தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தராயிருக்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் முதன்முறையாக தேவனுக்கு, இந்த வாக்கியத்தில் "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போதுதான் கர்த்தருடைய ஜனமாக கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள். தேவனும் தம்மை, அவர்களுடைய தேவனாக வெளிப்படுத்துகிறார். மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் பேசும்போது, "என் ஜனங்களை போகவிடவேண்டும்" என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று தைரியமாய்ச் சொல்லுகிறார்கள்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும், மோசே, ஆரோன் ஆகியோர் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டு பயப்படவில்லை. பார்வோன் மனுஷருக்கும் பயப்படவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும் பயப்படவில்லை. பார்வோன் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய் எதிர்த்து நிற்கிறான். பார்வோன் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்கிறதற்கு அவர் யார்" என்று துணிகரமாய்ப் பேசுகிறான். அவன் தேவனுக்கு விரோமாகத் தூஷண வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

மோசேயும் ஆரோனும், கர்த்தரை, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லி மகிமைப்படுத்துகிறார்கள். ஆனால் பார்வோனோ அந்த கர்த்தரைப்பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், தான் அவருக்கு மதிப்பு கொடுப்பதில்லை என்றும், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியப்போவதில்லை என்றும், தான் கர்த்தருக்கு பயப்படப்போவதில்லை என்றும் தைரியமாய்ச் சொல்லுகிறான்.

பார்வோனிடத்தில் கர்த்தரைப்பற்றிய அறிவுமில்லை. அவனிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் அநேகருக்கு, பார்வோனைப்போல கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை, அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய அறிவுமில்லை. ஆகையினால் அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இந்த உலகத்தில் காணப்படும் ஏராளமான துன்மார்க்கங்களுக்கு, இவ்விரண்டு காரியங்களும் அடிப்படை காரணமாயிருக்கிறது.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய அவர் யார்" என்று கேட்கிறான். பார்வோன் தேவனுடைய இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்கிறான். இஸ்ரவேல் புத்திரர் தன்னுடைய ஆளுகைக்கு கீழ்ப்படியவேண்டுமென்று எதிர்பார்க்கிறான். ஆனால் அந்தப் பார்வோனோ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு கீழ்ப்படிய மறுக்கிறான்.

கர்த்தர் நம்மை ஆளுகை செய்யவேண்டுமென்றால் நாம் கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படிய வேண்டும். நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் நம்மை ஆளுகை செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது. கர்த்தர் நம்மை ஆளுகை செய்யவேண்டும் என்று விரும்புவதும், அதே வேளையில் நாம் கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படியக்கூடாது என்று நினைப்பதும், ஒன்றுக்கொன்று முரண்பாடான காரியம்.

இக்காலத்திலும் ஒரு சில விசுவாசிகள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். ஆனால் கர்த்தர் தங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதுபோலவே விசுவாசிகளில் அநேகர் கர்த்தருடைய வாக்குத்தத்தம் தங்களுக்கு நிறைவேற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனாலும் அந்த வாக்குத்தத்தங்களோடு கர்த்தர் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறார்கள். இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பாடாயிருக்கிறது.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், மோசேயும் ஆரோனும் தன்னிடத்தில் சொல்லுவதை கவனமாய்க் கேட்கிறான். அதன்பின்பு பார்வோன் அவர்களை நோக்கி, "நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" (யாத் 5:2) என்று தீர்மானமாகவும், தெளிவாகவும் சொல்லிவிடுகிறான்.

## பார்வோனுடைய கடின இருதயம் யாத் 5:3-9

**யாத் 5:3. அப்பொழுது அவர்கள்: எபிரெயருடைய தேவன் எங்களைச் சந்தித்தார்; நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம் போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி போகவிடவேண்டும்; போகாதிருந்தால், அவர் கொள்ளைநோயும் பட்டயமும் எங்கள்மேல் வரப்பண்ணுவார் என்றார்கள்.**

**யாத் 5:4. எகிப்தின் ராஜா அவர்களை நோக்கி: மோசேயும் ஆரோனுமாகிய நீங்கள் ஜனங்களைத் தங்கள் வேலைகளை விட்டுக் கலையப்பண்ணுகிறது என்ன? உங்கள் சுமைகளைச் சுமக்கப்போங்கள் என்றான்.**

**யாத் 5:5. பின்னும் பார்வோன்: இதோ, தேசத்தில் ஜனங்கள் மிகுதியாயிருக்கிறார்கள்; அவர்கள் சுமை சுமக்கிறதை விட்டு ஓய்ந்திருக்கும்படி செய்கிறீர்களே என்றான்.**

**யாத் 5:6. அன்றியும், அந்நாளிலே பார்வோன் ஜனங்களின் ஆளோட்டிகளையும் அவர்கள் தலைவரையும் நோக்கி:**

**யாத் 5:7. செங்கல் வேலைக்கு நீங்கள் முன்போல் இனி ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்கவேண்டாம்; அவர்கள் தாங்களே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கட்டும்.**

**யாத் 5:8. அவர்கள் முன் செய்துகொடுத்த கணக்கின்படியே செங்கல் செய்யும்படி சொல்லுங்கள்; அதிலே நீங்கள் ஒன்றும் குறைக்கவேண்டாம், அவர்கள் சோம்பலாயிருக்கிறார்கள்; அதினால் நாங்கள் போய் எங்கள் தேவனுக்குப் பலியிடுவோம் என்று கூக்குரலிடுகிறார்கள்.**

**யாத் 5:9. அந்த மனிதர்மேல் முன்னிலும் அதிக வேலையைச் சுமத்துங்கள், அதில் அவர்கள் கஷ்டப்படட்டும்; வீண்வார்த்தைகளுக்கு அவர்கள் செவிகொடுக்க விடாதிருங்கள் என்று கட்டளையிட்டான்.**

பார்வோனுக்கு கர்த்தரிடத்தில் பயமுமில்லை, பக்தியுமில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் மனதும் அவனுக்கு இல்லை. அவன் ஆரம்பத்திலேயே, "கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்" என்று சொல்லிவிடுகிறான். பார்வோனுக்கு இஸ்ரவேல் புத்திரர்மீது கரிசனை இருக்கிறதா என்பதுகூட மோசேக்கும் ஆரோனுக்கும் தெரியவில்லை. அவர்கள் முதலாவதாக அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் மிகவும் பணிவாகவும் கண்ணியமாகவும் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை அடிமைப்படுத்தி, அவர்களைக் கடினமாய் வேலை வாங்குகிறான். எகிப்தியரின் ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை அடித்து துன்பப்படுத்துகிறார்கள். மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் அவனுடைய கடினமான ஆட்சியைப்பற்றியும், இஸ்ரவேல் புத்திரர் அனுபவிக்கும் பாடுகளையும் வேதனைகளையும் பற்றியும் ஆரம்பத்தில் ஒன்றுமே சொல்லவில்லை. அவர்கள் இருவரும் அதுபற்றி பார்வோனிடத்தில் முறையிடவுமில்லை.

மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் தங்களுடைய கோரிக்கைகளை பணிவாகவும் கண்ணியமாகவும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை மிகவும் சாதாரணமானது. அது நீதியானது. இஸ்ரவேல் புத்திரருக்கு மூன்றுநாள் விடுப்பு கொடுக்கப்படவேண்டும் என்று மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்போய் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலியிடவேண்டும். அவர்கள் போவதற்கு பார்வோன் அனுமதி கொடுக்கவேண்டும். எபிரெயருடைய தேவன் தங்களை சந்தித்து இந்த செய்தியை சொல்லியிருக்கிறார். தாங்கள் வனாந்தரத்தில் கர்த்தருக்கு பலியிடப்போகாதிருந்தால், கர்த்தர் தங்கள்மீது கொள்ளைநோயும் பட்டயமும் அனுப்புவார் *(யாத் 5:3)* என்று மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரரைப்போல மற்ற ஜாதியாரும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் தேவர்களுக்கு பண்டிகைகளை கொண்டாடுகிறார்கள். அந்த தெய்வங்களுக்கு அவர்கள் பலிகளை செலுத்துகிறார்கள். அதுபோலவே தாங்கள், தங்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்தில் பலியிடவேண்டுமென்று மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் சொல்லுகிறார்கள்.

அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு அநேக நாள் விடுப்பு கேட்கவில்லை. இஸ்ரவேல் புத்திரரை அடிமைத்தனத்திலிருந்து முற்றிலுமாய் விடுவிக்கவேண்டுமென்று கோரிக்கை வைக்கவுமில்லை. அவர்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம் பண்ணுவதற்கு அனுமதி கேட்கிறார்கள்.

மோசேயும் ஆரோனும் தன்னிடத்தில் கேட்கிற கோரிக்கை பார்வோனுடைய மனதிலே நியாயமாக படவில்லை. அவர்கள் இருவரும் தன்னிடத்தில் அநியாயமாய் இந்தக் காரியங்களை கேட்கிறார்கள் என்று பார்வோன் நினைக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே வேலை செய்கிறார்கள். அந்த வேலையை கெடுப்பதற்காக மோசேயும் ஆரோனும் தன்னிடத்தில் இவ்வாறு கோரிக்கை வைக்கிறார்கள் என்று பார்வோன் நினைக்கிறான்.

எகிப்தின் ராஜா அவர்களை நோக்கி: "மோசேயும் ஆரோனுமாகிய நீங்கள் ஜனங்களைத் தங்கள் வேலைகளை விட்டுக் கலையப்பண்ணுகிறது என்ன? உங்கள் சுமைகளைச் சுமக்கப்போங்கள்" *(யாத் 5:4)* என்று சொல்லிவிடுகிறான்.

ஜனங்கள் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கிறார்கள். அவர்கள் சோம்பலாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் வனாந்தரத்திற்குப்போய் தேவனுக்கு பலியிடுவோம் என்று கூக்குரலிடுகிறார்கள் என்று பார்வோன் சொல்லுகிறான்.

பார்வோன் நினைக்கிற பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கவில்லை. அவர்கள் சோம்பலாயும் இருக்கவில்லை. அவர்கள் கடினமாய் உழைக்கிறவர்கள் என்பதற்கு, எகிப்து தேசத்திலே அவர்கள் இதுவரையிலும் கட்டியிருக்கிற பட்டணங்களும், பண்டகசாலைகளும் அடையாளங்களாயிருக்கிறது.

பார்வோனுடைய வார்த்தை சாத்தானுடைய தந்திரமான வார்த்தைகளாகயிருக்கிறது. இக்காலத்தில் அநேகர் கர்த்தருடைய ஆராதனைக்கு விரோதமாக பார்வோனைப்போலவே பேசுகிறார்கள். கர்த்தரை ஆராதிப்பது, ஆலயத்திற்குப்போவது ஆகியவையெல்லாம் சும்மாயிருக்கிற சோம்பேறிகளின் பொழுதுபோக்குகள் என்று உலகப்பிரகாரமான ஜனத்தார் நினைக்கிறார்கள். மனுஷருக்கு ஒரு வேலையும் இல்லையென்றால் அவர்கள் ஆலயத்திற்குப்போய் கர்த்தரை ஆராதிக்கலாம் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மனுஷருடைய வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி கடினமான வார்த்தைகளை பேசுகிறான். அவர்கள் இருவரும் இஸ்ரவேல் புத்திரருக்காக பார்வோனிடத்தில் பரிந்து பேச வந்திருக்கிறார்கள். ஆனால் பார்வோனோ, மோசேயையும், ஆரோனையும் நோக்கி, "உங்கள் சுமைகளை சுமக்கப்போங்கள்" என்று கட்டளையிடுகிறான். எகிப்து தேசத்திலுள்ள இஸ்ரவேல் புத்திரர் சுமைகளை சுமப்பதுபோல, இனிமேல் மோசேயும் ஆரோனும் தங்கள் சுமைகளை சுமக்கவேண்டும்.

எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அடிமைகளாயிருப்பதுபோல, மோசேயும் ஆரோனும் இப்போது அந்த தேசத்திலே அடிமைகளாகப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக வந்திருக்கிற மோசேயும் ஆரோனும், இப்போது அவர்களோடுகூட அடிமைகளாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு சுமை சுமக்கும் வேலை கொடுக்கப்படுவதுபோல, மோசேக்கும் ஆரோனுக்கும் அந்த வேலை கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுமைகளை சுமப்பதுபோல, இனிமேல் மோசேயும் ஆரோனும் தங்கள் சுமைகளை சுமக்கவேண்டும்.

மோசேயும் ஆரோனும் ஒரு வேலையும் செய்யாமல், சும்மாயிருப்பதினால், அவர்கள் தன்னிடத்தில் வந்து வனாந்தரத்திற்கு பிரயாணமாய்ப்போய், கர்த்தருக்கு பலியிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்று சொல்லி பார்வோன் அவர்களையும் குற்றப்படுத்துகிறான். மோசேயும் ஆரோனும் சும்மாயிருக்கக்கூடாது என்று பார்வோன் தீர்மானிக்கிறான். ஆகையினால் பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "உங்கள் சுமைகளை சுமக்கப்போங்கள்" என்று கட்டளையிடுகிறான்.

மோசேயும் ஆரோனும் தன்னிடத்திலே வந்து இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுவதன் நிமித்தம், பார்வோன் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறான். பார்வோன் அவர்கள் இருவரையும் நோக்கி, "இதோ, தேசத்தில் ஜனங்கள் மிகுதியாயிருக்கிறார்கள்; அவர்கள் சுமை சுமக்கிறதை விட்டு ஓய்ந்திருக்கும்படி செய்கிறீர்களே" (யாத் 5:5) என்று அவர்களை குற்றப்படுத்துகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் ஓய்வில்லாமல் வேலை செய்யவேண்டும் என்பதும், அவர்கள் கடினமாய் வேலை செய்யவேண்டும் என்பதும் பார்வோனுடைய விருப்பம். இஸ்ரவேல் புத்திரர் வேலை செய்யாமல் சோம்பலாயிருக்கிறார்கள் என்று நினைத்து, பார்வோன் அவர்களுக்கு கடினமான வேலைகளைக் கொடுக்கிறான். அவர்களுடைய வேலை பளுவையும் அதிகப்படுத்துகிறான்.

அந்நாளிலே பார்வோன் ஜனங்களின் ஆளோட்டிகளையும் அவர்கள் தலைவரையும் நோக்கி, "செங்கல் வேலைக்கு நீங்கள் முன்போல இனி ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்கவேண்டாம்; அவர்கள் தாங்களே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கட்டும்" என்றும்,

"அவர்கள் முன் செய்துகொடுத்த கணக்கின்படியே செங்கல் செய்யும்படி சொல்லுங்கள்; அதிலே நீங்கள் ஒன்றும் குறைக்கவேண்டாம், அவர்கள் சோம்பலாயிருக்கிறார்கள்; அதினால் நாங்கள் போய் எங்கள் தேவனுக்குப் பலியிடுவோம் என்று கூக்குரலிடுகிறார்கள்" என்றும்,

"அந்த மனிதர்மேல் முன்னிலும் அதிக வேலையைச் சுமத்துங்கள், அதில் அவர்கள் கஷ்டப்படட்டும்; வீண்வார்த்தைகளுக்கு அவர்கள் செவிகொடுக்க விடாதிருங்கள்" (யாத் 5:6-9) என்றும் கட்டளையிடுகிறான்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வைக்கோலும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அறுக்கவேண்டிய செங்கலின் எண்ணிக்கையும் குறைக்கப்படவில்லை. அவர்கள்மீது அதிகமான வேலை சுமத்தப்படுகிறது. அவர்கள் அதிகமாய் கஷ்டப்படுகிறார்கள். அதிகமாக வேலை செய்தால், அவர்கள் வீண்வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்று பார்வோன் நினைக்கிறான்.

செங்கல் அறுக்கும்போது, மண்ணையும் வைக்கோலையும் கலந்து செங்கல் அறுப்பது வழக்கம். செங்கலை சுடுவதற்கும் வைக்கோலை பயன்படுத்துவார்கள். இதற்கு முன்பு இஸ்ரவேல் புத்திரருக்கு மண்ணும் வைக்கோலும் கொடுக்கப்பட்டது. அவர்கள் இரண்டையும் கலந்து செங்கல் அறுத்தார்கள்.

இப்போது அவர்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படவில்லை. ஆகையினால் அவர்கள் வைக்கோல் சம்பாதிப்பதற்காக எல்லா இடங்களிலும் தேடி அலைந்து வைக்கோல் சேகரிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வேலையில் ஒன்றும் குறைக்கப்படவுமில்லை.

தேவனுடைய கட்டளைக்குப் பார்வோன் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கிறான். தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய ஜனத்தாருக்கு விரோதமாகவும் பார்வோன் செயல்படுகிறான். (யாத் 5:2,6-9). ஆளோட்டிகள் என்பதற்கான எபிரெய வார்த்தை "நாகாஸ்" என்பதாகும். இவர்கள் ஜனங்களை அடித்து துன்புறுத்தி, வாட்டி வதைத்து வேலை வாங்குவார்கள்.

ஆளோட்டிகளும் விசாரணைக்காரரும் (யாத் 1:11) வெவ்வேறு வேலைகளைச் செய்கிறவர்கள். "அவர்கள் தலைவர்கள்" என்பது எபிரெய தலைவர்களைக் குறிக்கும். எகிப்தியரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு இந்தத் தலைவர்கள் தங்கள் ஜனங்களிடம் வேலை வாங்குவார்கள் (யாத் 5:6,14-15).

கிழக்கு தேசத்தில் களிமண்ணோடு வைக்கோலைச் சேர்த்து, செங்கல் அறுப்பார்கள். அதை சூரிய ஒளியில் உலர வைப்பது வழக்கம். எகிப்தியர் அறுக்கும் செங்கல் இருபது அங்குல நீளமும், எட்டு அங்குல அகலமும், ஏழு அங்குல கனமும் உடையதாக இருக்கும். செங்கல் அறுப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதற்கு முன்பு வைக்கோல்களைக் கொடுத்தார்கள். இப்பொழுது அவர்களே தாளடிகளைச் சேர்க்க வேண்டும். செங்கல் அறுக்கும் எண்ணிக்கையிலும் அளவிலும் குறைவு ஏற்படக்கூடாது. (யாத் 5:7-13) எகிப்தை விட்டு வெளியேற வேண்டும் என்று மோசே விண்ணப்பம் பண்ணியதினால் இஸ்ரவேல் புத்திரருக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது. (யாத் 5:8-9)

செங்கல் அறுக்கும் எண்ணிக்கையில் குறைவுபடக்கூடாது. செங்கலுடைய அளவிலும் குறைவு ஏற்படக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலியிடவேண்டும் என்று சொல்லுவது, பார்வோனுக்கு வீண் வார்த்தைகளாக தெரிகிறது. தேவன் வெளிப்படுத்திய வார்த்தைகள் எகிப்தியருக்கு வீண் வார்த்தைகளாகத் தெரிகிறது. (யாத் 5:8-9).

எபிரெய தலைவர்களை ஆளோட்டிகள் அடிக்கிறார்கள். எபிரெயரிடம் வேலை வாங்குவது அவர்களுடைய தலைவர்களின் பொறுப்பாகும். எபிரெய தலைவர்களைக் கட்டுப்படுத்துவது ஆளோட்டிகளின் பொறுப்பு. இதற்கு முன்பு செங்கல் அறுப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வைக்கோல் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது அவர்களே வைக்கோலையும் சேகரிக்க வேண்டும். செங்கலையும் அறுக்க வேண்டும். செங்கலுடைய எண்ணிக்கையும், அளவும் குறையக்கூடாது. இது நடைமுறைக்கு ஒத்து வராத கடினமான காரியம். எபிரெயரின் தலைவர்கள் தங்களுக்கு இரக்கம் காண்பிக்குமாறு எகிப்தியரிடம் கெஞ்சுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கப்படவில்லை (யாத் 5:15-18).

மனுஷனால் செய்ய முடியாத வேலையைச் செய்யுமாறு எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை கட்டாயப்படுத்துகிறார்கள். மனுஷனால் செய்ய முடியாத வேலையை இஸ்ரவேலர்கள் செய்யவில்லையென்பதற்காக அவர்களைத் தண்டிக்கிறார்கள்.

இஸ்ரவேலரின் தெய்வ நம்பிக்கையைப் பார்வோன் சோம்பலான காரியமென்று வியாக்கியானம் பண்ணுகிறான். பக்தியில்லாதவர்கள் பக்தியுள்ளவர்களை ஏதாவது ஒரு பழிச்சொல் சொல்லி, ஏளனமாகப் பேசுவது எக்காலத்திலும் வழக்கமாய் உள்ளது.

## ஆளோட்டிகளும் தலைவர்களும் யாத் 5:10-14

**யாத் 5:10. அப்பொழுது ஜனங்களின் ஆளோட்டிகளும் அவர்கள் தலைவர்களும் புறப்பட்டுப்போய் ஜனங்களை நோக்கி: உங்களுக்கு வைக்கோல் கொடுப்பதில்லை;**

**யாத் 5:11. நீங்களே போய் உங்களுக்கு அகப்படுகிற இடங்களில் வைக்கோல் சம்பாதியுங்கள்; ஆனாலும் உங்கள் வேலையில் ஒன்றும் குறைக்கப்படுவதில்லை என்று பார்வோன் சொல்லுகிறார் என்றார்கள்.**

**யாத் 5:12. அப்பொழுது வைக்கோலுக்குப் பதிலாகத் தாளடிகளைச் சேர்க்கும்படி ஜனங்கள் எகிப்து தேசம் எங்கும் சிதறிப்போனார்கள்.**

**யாத் 5:13. ஆளோட்டிகள் அவர்களை நோக்கி: வைக்கோலிருந்த நாளில் செய்தபடியே உங்கள் வேலைகளை ஒவ்வொரு நாளிலும் செய்து முடியுங்கள் என்று சொல்லி, அவர்களைத் துரிதப்படுத்தினார்கள்.**

**யாத் 5:14. பார்வோனுடைய ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரர்மேல் வைத்த அவர்களுடைய தலைவர்களை நோக்கி: செங்கல் வேலையில் நீங்கள் முன்செய்ததுபோல நேற்றும் இன்றும் ஏன் செய்யவில்லை என்று கேட்டு, அவர்களை அடித்தார்கள்.**

எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரரை வேலை வாங்குவதற்கு இரண்டு விதமான ஜனங்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களில் ஒன்று ஆளோட்டிகள். மற்றொன்று இஸ்ரவேல் ஜனங்களின் தலைவர்கள். ஆளோட்டிகள் பொதுவாக எகிப்து தேசத்தை சேர்ந்தவர்களாயிருப்பார்கள். ஜனங்களின் தலைவர்களோ இஸ்ரவேல் புத்திரராயிருப்பார்கள். எகிப்தின் ராஜா இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளை கொடுக்கும்போது, அவர்களுக்கு நேரடியாக கட்டளை கொடுக்காமல், ஆளோட்டிகள் மூலமாகவும், இஸ்ரவேல் ஜனங்களுடைய தலைவர்கள் மூலமாகவும் கட்டளை கொடுப்பது வழக்கம்.

பார்வோன் ஆளோட்டிகளுக்கும் ஜனங்களின் தலைவர்களுக்கும் கட்டளை கொடுத்திருக்கிறான். அப்பொழுது ஜனங்களின் ஆளோட்டிகளும் அவர்கள் தலைவர்களும் புறப்பட்டுப்போய் ஜனங்களை நோக்கி, "உங்களுக்கு வைக்கோல் கொடுப்பதில்லை; நீங்களே போய் உங்களுக்கு அகப்படுகிற இடங்களில் வைக்கோல் சம்பாதியுங்கள்; ஆனாலும் உங்கள் வேலையில் ஒன்றும் குறைக்கப்படுவதில்லை என்று பார்வோன் சொல்லுகிறார்" (யாத் 5:10,11) என்றார்கள்.

அப்பொழுது வைக்கோலுக்குப் பதிலாகத் தாளடிகளைச் சேர்க்கும்படி ஜனங்கள் எகிப்து தேசம் எங்கும் சிதறிப்போகிறார்கள் (யாத் 5:12).

எகிப்தியருடைய ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை கடினமாய் வேலை வாங்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கொஞ்சம் நேரம் கூட வேலை செய்யாமல் சும்மாயிருக்க முடியாது. ஆளோட்டிகள் அவர்களை நோக்கி: "வைக்கோலிருந்த நாளில் செய்தபடியே உங்கள் வேலைகளை ஒவ்வொரு நாளிலும் செய்து முடியுங்கள்" (யாத் 5:13) என்று சொல்லி, அவர்களைத் துரிதப்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரால் முன்பு செய்ததுபோல, இப்போது செங்கல் வேலையை துரிதமாய் செய்ய முடியவில்லை. அவர்கள் வைக்கோலுக்கு பதிலாக தாளடிகளை சேர்க்கும்படி எகிப்து தேசமெங்கும் சிதறிப்போகிறார்கள். இதனால் அவர்கள் செய்கிற செங்கலின் எண்ணிக்கை குறைந்துபோகிறது. ஆனாலும் அவர்களுடைய வேலையில் ஒன்றும் குறைக்கப்படுவதில்லை என்று பார்வோன் கட்டளையிட்டிருக்கிறான்.

பார்வோனுடைய ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரர்மேல் வைத்த அவர்களுடைய தலைவர்களை நோக்கி, "செங்கல் வேலையில் நீங்கள் முன்செய்ததுபோல நேற்றும் இன்றும் ஏன் செய்யவில்லை" (யாத் 5:14) என்று கேட்டு, அவர்களை அடிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களோ வேலைகளையும் செய்கிறார்கள். ஆளோட்டிகள் அடிக்கிற அடிகளையும் வாங்குகிறார்கள். அவர்களுக்கு ஜீவியம் கசப்பாயும் வேதனையாயும் இருக்கிறது. இதுவே அடிமைத்தனத்தின் கொடுமை.

நாம் அடிமைகளாயிராமல், சுயாதீனராயிருப்பதற்காக கர்த்தரை துதிக்கவேண்டும். நம்மை யாரும் ஒடுக்கவில்லை. அதற்காக நாம் கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். நம்முடைய ஜீவியத்தில், நாம் அனுபவிக்கிற விடுதலையும் சுயாதீனமும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு கொடுத்திருக்கிற பெரிய ஈவு.

எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். ஆனால் அவர்களோ விடுவிக்கப்படுவதற்கு பதிலாக, அதிகமான வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அவர்கள்மீது அதிகமான பாரம் சுமத்தப்படுகிறது.

"கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து, அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப்பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்" (உபா 32:36).

## பார்வோனின் கோபம் யாத் 5:15-19

**யாத் 5:15. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் பார்வோனிடத்தில் போய்ச் சத்தமிட்டு: உமது அடியாருக்கு நீர் இப்படிச் செய்கிறது என்ன?**

**யாத் 5:16. உமது அடியாருக்கு வைக்கோல் கொடாதிருந்தும், செங்கல் அறுத்துத் தீரவேண்டும் என்று எங்களுக்குச் சொல்லுகிறார்கள்; உம்முடைய ஜனங்களிடத்தில் குற்றம் இருக்க, உமது அடியாராகிய நாங்கள் அடிக்கப்படுகிறோம் என்றார்கள்.**

**யாத் 5:17. அதற்கு அவன்: நீங்கள் சோம்பலாயிருக்கிறீர்கள், சோம்பலாயிருக்கிறீர்கள்; அதினால் தான் போகவேண்டும், கர்த்தருக்குப் பலியிடவேண்டும் என்கிறீர்கள்.**

**யாத் 5:18. போய், வேலைசெய்யுங்கள், உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படுவதில்லை; ஆனாலும் கணக்கின்படியே நீங்கள் செங்கலை ஒப்புவிக்கவேண்டும் என்றான்.**

**யாத் 5:19. நீங்கள் ஒவ்வொரு நாளிலும் அறுத்துத் தீரவேண்டிய செங்கலிலே ஒன்றும் குறைக்கப்படாது என்று சொல்லப்பட்டதினாலே, இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் தங்களுக்கு இக்கட்டு வந்தது என்று கண்டார்கள்.**

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள், தாங்கள் அனுபவிக்கும் வேதனைகளை பார்வோனிடத்தில் முறையிடுகிறார்கள். அவர்கள் பார்வோனுக்கு முன்பாக அழுது புலம்புகிறார்கள். அவர்களுடைய வேதனைகள் மிகவும் அதிகமாயிருப்பதினால், அவர்கள் பார்வோனுடைய சமுகத்திலே சத்தமிட்டு அழுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் பார்வோனிடத்தில் போய்ச் சத்தமிட்டு, "உமது அடியாருக்கு நீர் இப்படிச் செய்கிறது என்ன? உமது அடியாருக்கு வைக்கோல் கொடாதிருந்தும், செங்கல் அறுத்துத் தீரவேண்டும் என்று எங்களுக்குச் சொல்லுகிறார்கள்; உம்முடைய ஜனங்களிடத்தில் குற்றம் இருக்க, உமது அடியாராகிய நாங்கள் அடிக்கப்படுகிறோம்" (யாத் 5:15,16) என்று முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் பார்வோனிடத்தில் தங்களைப்பற்றிச் சொல்லும்போது, தங்களை "உமது அடியார்" என்று சொல்லுகிறார்கள். இந்த வாக்கியத்திற்கு "நாங்கள் உமது அடிமைகள்" என்று பொருள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு செங்கல் தயாரிக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எகிப்தியர்களோ இஸ்ரவேல் புத்திரருக்கு, செங்கல் தயாரிப்பதற்கு தேவையான பொருட்களை கொடுக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரருக்கு வைக்கோல் கொடாதிருந்தும், அவர்கள் செங்கல் அறுத்து தீரவேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்படுகிறது. குற்றம் எகிப்தியரிடத்திலும், அவர்களுடைய ஆளோட்டிகளிடத்திலும் இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களை ஆளோட்டிகள் அடிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை பார்வோனிடத்தில் சொல்லுகிறார்கள். ஆனால் பார்வோனோ அவர்களுடைய கோரிக்கைகளுக்கு செவிகொடுக்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கிறார்கள் என்றும், அவர்கள் சோம்பலாயிருக்கிறார்கள் என்றும் பார்வோன் தன் மனதிலே தீர்மானம் செய்திருக்கிறான்.

தன்னிடத்தில் முறையிட வந்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரின் தலைவரை நோக்கி, "நீங்கள் சோம்பலாயிருக்கிறீர்கள், சோம்பலாயிருக்கிறீர்கள்; அதினால் தான் போகவேண்டும், கர்த்தருக்குப் பலியிடவேண்டும் என்கிறீர்கள்" (யாத் 5:17) என்று பார்வோன் அவர்கள்மீதே குற்றம் சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரோ அதிகமான வேலையினாலும், ஆளோட்டிகள் அடிப்பதினாலும் செத்துப்போகும் நிலமையிலிருக்கிறார்கள். ஆனால் பார்வோனோ அவர்கள் சோம்பலாயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறான். பார்வோன் எகிப்து தேசத்திற்கு ராஜாவாகயிருந்தாலும், அவனிடத்தில் நீதியில்லை. கர்த்தரே நம்முடைய நீதிபரராயும், நியாயாதிபதியாயும் இருக்கிறார். கர்த்தர் நம்முடைய இருதயத்தின் நினைவுகளையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் பார்வோனிடத்தில் தங்களுடைய கஷ்டங்களை முறையிட வந்திருக்கிறார்கள். ஆனால் பார்வோனோ அவர்களை நோக்கி, "போய், வேலைசெய்யுங்கள், உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படுவதில்லை; ஆனாலும் கணக்கின்படியே நீங்கள் செங்கலை ஒப்புவிக்கவேண்டும்" (யாத் 5:18) என்று சொல்லி விடுகிறான்.

பார்வோனுக்கு இஸ்ரவேல் ஜனத்தார்மீது அன்புமில்லை, கரிசனையுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் கடினமாய் வேலை செய்யவேண்டும் என்பதும் அவர்கள் அதிகமான செங்கல்களை அறுத்து முடிக்கவேண்டும் என்பதும் மாத்திரமே பார்வோனுடைய நோக்கமாகயிருக்கிறது. அவன் இஸ்ரவேல் புத்திரரின் நன்மையையோ, அவர்களின் ஆரோக்கியத்தையோ கரிசனையோடு பார்ப்பதற்கு மறுத்து விடுகிறான்.

தங்களுக்கு இக்கட்டு வந்திருக்கிறது என்பதை இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் காண்கிறார்கள். பார்வோன் அவர்களை நோக்கி, "நீங்கள் ஒவ்வொரு நாளிலும் அறுத்துத் தீரவேண்டிய செங்கலிலே ஒன்றும் குறைக்கப்படாது" (யாத் 5:19) என்று சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரரால் செய்ய முடியாத வேலையை, அவர்கள்மீது கட்டாயமாக சுமத்துகிறான். வைக்கோல் கொடாதிருந்தும், செங்கல் அறுத்து தீரவேண்டும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு இயலாத காரியம்.

இஸ்ரவேல் புத்திரர் பழைய கணக்கின்படியே செங்கலை ஒப்புவிக்கவேண்டும் என்று பார்வோன் கட்டளையிடுகிறான். இதனால் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு இக்கட்டு வந்திருக்கிறது என்பதை அவர்களுடைய தலைவர்கள் காண்கிறார்கள்.

தலைவர்கள் பார்வோனிடத்தில் முறையிட்டுப் பார்த்தார்கள். ஆனால் அவனோ தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேலரைக் கடினமாக உழைக்குமாறு கூறிவிடுகிறான். இஸ்ரவேலர் தங்கள் நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். பார்வோனிடமிருந்து இரக்கம் பெற முடியவில்லை. எகிப்தியரிடமிருந்து விடுதலை பெறுவதும் கூடாத காரியமாகத் தெரிகிறது. ஆகையினால் தங்களுக்கு இக்கட்டு வந்தது இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் காண்கிறார்கள்.

## மோசேயின் விண்ணப்பம் யாத் 5:20-23

**யாத் 5:20. அவர்கள் பார்வோனுடைய சமுகத்தை விட்டுப் புறப்படுகையில், வழியில் நின்ற மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்ப்பட்டு,**

**யாத் 5:21. அவர்களை நோக்கி: நீங்கள் பார்வோனின் கண்களுக்கு முன்பாகவும் அவருடைய ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் எங்கள் வாசனையைக் கெடுத்து, எங்களைக் கொல்லும்படி அவர்கள் கையிலே பட்டயத்தைக் கொடுத்ததினிமித்தம், கர்த்தர் உங்களைப் பார்த்து நியாயந்தீர்க்கக்கடவர் என்றார்கள்.**

**யாத் 5:22. அப்பொழுது மோசே கர்த்தரிடத்தில் திரும்பிப்போய்: ஆண்டவரே, இந்த ஜனங்களுக்குத் தீங்குவரப்பண்ணினதென்ன? ஏன் என்னை அனுப்பினீர்?**

**யாத் 5:23. நான் உமது நாமத்தைக் கொண்டு பேசும்படி பார்வோனிடத்தில் பிரவேசித்தது முதல் அவன் இந்த ஜனங்களை உபத்திரவப்படுத்துகிறான்; நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே என்றான்.**

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் பார்வோனுடைய சமுகத்தை விட்டு புறப்படுகிறார்கள். அவர்கள் வழியிலே மோசேயையும், ஆரோனையும் பார்க்கிறார்கள். ஜனங்களின் தலைவர்கள் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் பார்வோனின் கண்களுக்கு முன்பாகவும் அவருடைய ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் எங்கள் வாசனையைக் கெடுத்து, எங்களைக் கொல்லும்படி அவர்கள் கையிலே பட்டயத்தைக் கொடுத்ததினிமித்தம், கர்த்தர் உங்களைப் பார்த்து நியாயந்தீர்க்கக்கடவர்" (யாத் 5:20,21) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் மோசேயின்மீதும், ஆரோனின்மீதும் குற்றம் சொல்லுகிறார்கள். அவர்களுடைய குற்றச்சாட்டுக்களில் நீதியில்லை. அவர்கள், மோசேயையும், ஆரோனையும் நோக்கி, "கர்த்தர் உங்களைப் பார்த்து நியாயம் தீர்க்கக்கடவர்" என்று சொல்லுகிறார்கள்.

தங்களுடைய துன்பத்திற்கு மோசேயும், ஆரோனும் காரணமென்று இஸ்ரவேலர்கள் அவர்களைச் சபிக்கிறார்கள். தங்களுடைய குற்றச்சாட்டுக்குத் தேவனைச் சாட்சியாகக் கூறுகிறார்கள். தங்களால் பார்வோன் நியமித்த வேலையைச் செய்ய முடியாது என்றும், அதற்காக பார்வோனின் ஆளோட்டிகள் தங்களைப் பட்டயத்தால் கொன்றுபோடுவார்கள் என்றும் இஸ்ரவேலின் தலைவர்கள் கூறுகிறார்கள். இந்தப் பிரச்சனைக்கு மோசேயும், ஆரோனும் தான் காரணம் என்று அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் மோசே தேவனிடம் முறையிடுகிறார். தேவன் மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்டு, தமது பலத்த கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார். (யாத் 5:22-23; யாத் 6:1-8).

மோசேயும் ஆரோனும் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்வதற்காகவே வந்திருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலரை எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய ஊழியக்காரர்களாக எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் எகிப்து தேசத்திற்கு வந்த நோக்கம் உடனே நிறைவேறவில்லை. அவர்கள் எதிர்பார்த்த நன்மையான காரியங்கள் உடனே நடைபெறவில்லை. பார்வோன் தங்களுடைய கோரிக்கையை ஏற்று இஸ்ரவேல் புத்திரரை, வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலியிட அனுப்பிவிடுவான் என்று மோசேயும் ஆரோனும் எதிர்பார்த்தார்கள். ஆனால் பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரை மிகவும் கடினமாக வேலை வாங்குகிறான். அவர்களை அனுப்ப மறுக்கிறான்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக, கர்த்தர் தங்களுக்கு சொன்ன அற்புதங்களை செய்தார்கள். இதனால் கர்த்தர் தாமே அவர்கள் இருவரையும் எகிப்து தேசத்திற்கு அனுப்பியிருக்கிறார் என்பது உறுதியாயிற்று. ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களோ, அவர்கள் இருவரையும் பார்த்து தூஷண வார்த்தைகளை சொல்லுகிறார்கள். மோசேயும் ஆரோனும் தங்களை விடுவிக்க வராமல், தங்களை கொல்ல வந்திருக்கிறார்கள் என்று அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்கள் இருவரையும் நியாயந்தீர்க்கக்கடவர் என்றும் சொல்லி அவர்கள் மோசேயையும் ஆரோனையும் சபிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய தலைவர்களின் கோபமான வார்த்தைகளைக் கேட்டு மோசே மனம் வேதனைப்படுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களைப்போல அவர்களிடத்தில் கோபமான வார்த்தைகளைப் பேசவில்லை. அதற்கு பதிலாக மோசே கர்த்தரிடத்திலே போகிறார். மோசே தன்னுடைய மனதின் வேதனைகளையெல்லாம் கர்த்தருடைய சமுகத்திலே சொல்லுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் திரும்பிப்போய், "ஆண்டவரே, இந்த ஜனங்களுக்குத் தீங்குவரப்பண்ணினதென்ன? ஏன் என்னை அனுப்பினீர்? நான் உமது நாமத்தைக்கொண்டு பேசும்படி பார்வோனிடத்தில் பிரவேசித்தது முதல் அவன் இந்த ஜனங்களை உபத்திரவப்படுத்துகிறான்; நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே" (யாத் 5:22,23) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மீதும், ஆரோனின்மீதும் குற்றம் சுமத்துகிறார்கள். (யாத் 5:21) மோசே தேவன்மீது குற்றம் சுமத்துகிறார். (யாத் 5:22). மோசே தேவனுடைய அழைப்பைப் பெற்றிருக்கிறவர். நாற்பது வருஷங்கள் வனாந்தரத்தில் பயிற்சி பெற்றிருக்கிறவர். தேவனுடைய அற்புதங்களைத் தன் கண்களால் கண்டவர். ஆனாலும் மோசே விரைவில் பொறுமையிழந்து, இஸ்ரவேலரைப் போலவே தேவனைக் குற்றப்படுத்துகிறார்.

தேவன் தாம் சொல்லியதுபோன்று, இஸ்ரவேலரை விடுவிக்கவில்லை. பின்பு "ஏன் என்னை அனுப்பினீர்" என்று தன்னை அனுப்பின தேவனிடம் முறையிடுகிறார். எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலரைப் போகவிட வேண்டும் என்று தாங்கள் பார்வோனிடத்தில் விண்ணப்பம் பண்ணியதால்தான் தங்களுடைய துன்பங்கள் மிகுதியாயிற்று என்று மோசேயும், இஸ்ரவேல் ஜனத்தாரும் நினைக்கிறார்கள். பார்வோனிடம் விண்ணப்பம் பண்ணாமல் இருந்திருந்தால், தங்களுக்கு இவ்வளவு பெரிய பிரச்சனைகள் வந்திருக்காது என்று நினைக்கிறார்கள் (யாத் 5:21-23).

மோசே மறுபடியும் எகிப்திற்கு வந்து, ஒருசில நாட்களே ஆயிற்று. ஆயினும் தேவன் இஸ்ரவேலரை இன்னும் விடுவிக்கவில்லை. எகிப்து ஜனத்தின்மீது தேவன் பத்து வாதைகளை அனுப்புகிறார். இந்த வாதைகளெல்லாம் அவர்கள்மீது கடந்து வருவதற்கு மூன்று முதல் ஏழு வாரங்கள் வரையிலும் ஆகியிருக்கலாம். வேதாகமத்தில் இந்த வாதைகளின் காலமாக 26 நாட்கள் கூறப்பட்டிருக்கிறது. இதிலும் சில வாதைகள் தீவிரமாகச் செயல்படுவதற்கு மேலும் சில காலமாகலாம்.

மோசேக்கு வந்ததுபோலவே, நம்முடைய ஜீவியத்திலும் பிரச்சனைகளும், வேதனைகளும், வருத்தங்களும் வரலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் கர்த்தருடைய சமுகத்திலே கருத்தாய் ஜெபிக்கவேண்டும். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிக்கும். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது, கர்த்தர் நம்முடைய பிரச்சனைகளையும் குழப்பங்களையும் நீக்கிப்போடுவார்.

நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்திலே, நாம் தோற்றுப்போய் பின்வாங்கிப்போனாலும், நாம் கர்த்தருடைய சமுகத்திற்குதான் திரும்பிப்போகவேண்டும். கர்த்தரிடத்தில் போகாமல், வேறு இடத்திற்கு திரும்பி போவது நமக்கு பாதுகாப்பானதல்ல. மோசேக்கு எகிப்து தேசத்திலே ஆரம்பத்தில் தோல்வி உண்டாயிற்று. அவரால் முன்னேறி போகமுடியவில்லை. அவர் திரும்பிப்போகவேண்டியதாயிற்று. மோசே மீதியான் தேசத்திற்கு திரும்பிப்போய்விடாமல் கர்த்தரிடத்தில் திரும்பி போகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, இந்த ஜனங்களுக்கு தீங்கு வரப்பண்ணினதென்ன" என்று கேட்கிறார். மோசே கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது அவரால் அமைதியாய் நிற்கமுடியவில்லை. அவர் கர்த்தரை நோக்கி, "ஏன் என்னை அனுப்பினீர்" என்றும் கேட்கிறார்.

பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை உபத்திரவப்படுத்துகிறான். மோசே பார்வோனுடைய சமுகத்திலே போய், இஸ்ரவேல் ஜனங்களுக்காக பரிந்து பேசின பின்பு, பார்வோனுடைய உபத்திரவம் குறையவில்லை. அதற்கு பதிலாக பார்வோன் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்திருக்கிற உபத்திரவம் அதிகரித்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக, கர்த்தர் மோசேயை அந்த தேசத்திற்கு அனுப்பியிருக்கிறார். ஆனால் மோசே எகிப்து தேசத்திற்கு வந்த நாளிலிருந்து, இன்று வரையிலும், இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்படுவதற்கான அடையாளம் எதுவும் காணப்படவில்லை. ஆகையினால் மோசே மிகுந்த மனவேதனையோடு, கர்த்தரை நோக்கி, "என்னை ஏன் அனுப்பினீர்" என்று கேட்கிறார். மோசே கர்த்தரிடத்தில் மேலும் முறையிடும்போது, "நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே" என்றும் சொல்லுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில், "ஏன் என்னை அனுப்பினீர்" என்று கேட்கும் வாக்கியத்திற்கு, "நான் இன்னும் என்ன செய்யவேண்டும்" என்றும், "நான் வேறு எந்த வழிகளில் பார்வோனிடத்தில் பேசவேண்டும்" என்றும், "இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணுதவற்கு நான் இன்னும் என்னென்ன காரியங்களை செய்யவேண்டும்" என்றும் பொருள்.

கர்த்தருடைய சித்தம் நிறைவேறவேண்டும் என்னும் விருப்பமும், கர்த்தருடைய சித்தம் நிறைவேறும் என்னும் நம்பிக்கையும் மோசேயினிடத்தில் இருக்கிறது. ஆனால் எகிப்து தேசத்திலோ, மோசே எதிர்பார்த்த பிரகாரமாக, இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மையான காரியம் எதுவும் நடைபெறவில்லை. மோசேக்கும் என்ன செய்யவேண்டும் என்பது தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களும் மோசேயினிடத்தில் கோபமாகப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மோசே கர்த்தருடைய சமுகத்திலே தன்னை ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறார்.

## 6 அதிகாரம்

மோசே கர்த்தரிடத்தில் திரும்பிப்போய் தன்னுடைய பிரச்சனைகளை முறையிடுகிறார். தேவன் மோசேக்கு தம்முடைய கிருபையுள்ள பிரதியுத்தரத்தை சொல்லுகிறார். எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கும் இஸ்ரவேல் புத்திரரிடத்திலே, மோசே என்னென்ன செய்திகளை சொல்லவேண்டுமென்று, கர்த்தர் அவருக்கு விளக்கமாக சொல்லுகிறார் (யாத் 6:2-8). ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ மோசேயின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை (யாத் 6:9).

கர்த்தர் மோசேயை மறுபடியுமாக பார்வோனிடத்திற்கு அனுப்புகிறார் (யாத் 6:10,11). மோசேயோ பார்வோனிடத்திற்குப்போக தயங்குகிறார் (யாத் 6:12). கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கும், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திற்கும் மறுபடியும் அனுப்புகிறார் (யாத் 6:13).

மோசே, ஆரோன் ஆகியோருடைய பிதாக்கள் வீட்டாரின் தலைவர்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ரூபன், சிமியோன் ஆகிய கோத்திரத்தாரின் வம்சவரலாறு சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 6:14-25).

இந்த அதிகாரத்தின் கடைசிப்பகுதியில் மோசேயைப்பற்றியும், மோசே கர்த்தரிடத்தில் பேசின வார்த்தைகளைப்பற்றியும், கர்த்தர் அவருக்கு சொன்ன வார்த்தைகளைப்பற்றியும் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 6:26-30).

### நான் யேகோவா யாத் 6:1-9

**யாத் 6:1. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய்; பலத்த கையைக் கண்டு அவர்களைப் போகவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர்களைத் தன்தேசத்திலிருந்து துரத்திவிடுவான் என்றார்.**

**யாத் 6:2. மேலும், தேவன் மோசேயை நோக்கி: நான் யேகோவா,**

**யாத் 6:3. சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை.**

**யாத் 6:4. அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிய கானான்தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறேன்.**

**யாத் 6:5. எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சையும் நான் கேட்டு, என் உடன்படிக்கையை நினைத்தேன்.**

**யாத் 6:6. ஆதலால், இஸ்ரவேல் புத்திரை நோக்கி: நானே கர்த்தர், உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவித்து, உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு,**

**யாத் 6:7. உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்; உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள்.**

**யாத் 6:8. ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்; நான் கர்த்தர் என்று அவர்களுக்குச் சொல் என்றார்.**

**யாத் 6:9. இந்தப்பிரகாரமாக மோசே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்; அவர்களோ மனமடிவினாலும் கொடுமையான வேலையினாலும் மோசேக்குச் செவிகொடாமற்போனார்கள்.**

மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்திலே போய், கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தைகளை சொல்லுகிறார்கள். பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தை விட்டு அனுப்ப மறுத்துவிடுகிறான். அது மாத்திரமல்ல, பார்வோன் இஸ்ரவேல் புத்திரரின் வேலைகளை கடினமாக்குகிறான். இதனால் இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். அப்பொழுது மோசே கர்த்தரிடத்தில் திரும்பிப்போய், தன்னுடைய மனதின் வேதனைகளையும், பாரங்களையும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயின் முறையீடுகளை பொறுமையாய் செவிகொடுத்து கேட்கிறார். கர்த்தர் அவருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் மோசேக்கு ஏற்கெனவே சொன்ன வாக்குத்தத்தத்தை, இங்கே மறுபடியுமாய் உறுதிபண்ணுகிறார்.

"ஆகையால், நான் என் கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நான் செய்யும் சகலவித அற்புதங்களாலும் அதை வாதிப்பேன்; அதற்குப்பின் அவன் உங்களைப் போகவிடுவான்" *(யாத் 3:20).*

மோசே கர்த்தருடைய சமுகத்திலே, "நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே" *(யாத் 5:23)* என்று முறையிடுகிறார். அதற்கு கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய்; பலத்த கையைக் கண்டு அவர்களைப் போகவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர்களைத் தன்தேசத்திலிருந்து துரத்திவிடுவான்" *(யாத் 6:1)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தமக்கு சித்தமான வேளையிலே மனுஷருக்கு இரட்சிப்பை கட்டளையிடுகிறார். மனுஷருக்கு கர்த்தருடைய உதவி எப்போதுமே தேவைப்படுகிறது. ஆனாலும் கர்த்தர், தமக்கு ஏற்ற வேளையிலே, மனுஷருக்கு உதவி செய்கிறார். மனுஷருடைய பிரச்சனைகள் அதிகமாகும்போதும், தாங்கள் அந்தப் பிரச்சனையிலே மூழ்கிப்போய்விடுவோமோ என்னும் சூழ்நிலை மனுஷருக்கு வரும்போதும், கர்த்தர் மனுஷருக்கு உதவி செய்கிறார்.

"ஏழைகள் பாழாக்கப்பட்டதினிமித்தமும், எளியவர்கள் விடும்பெருமூச்சினிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(சங் 12:5).*

மனுஷன் தன்னுடைய கஷ்டங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு, ஆரம்பத்திலே சுயமாய் முயற்சிபண்ணுகிறான். தன்னுடைய முயற்சிகளெல்லாம் தோல்வியடையும்போது, இதற்குமேல் என்ன செய்வது என்று தெரியாமல் மனுஷன் தவித்துக்கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட சூழ்நிலையில், கர்த்தர் மனுஷனுக்கு உதவி செய்கிறார். தம்மை நம்புகிறவர்களை கர்த்தர் ஒருபோதும் கைவிடமாட்டார். கர்த்தரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

மோசே கர்த்தரிடத்தில், "நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே" என்று முறையிட்டார். கர்த்தரோ மோசேயை நோக்கி, "பார்வோன் கர்த்தருடைய பலத்த கையைக் கண்டு அவர்களைப் போகவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர்களைத் தன்தேசத்திலிருந்து துரத்திவிடுவான்" என்று சொல்லுகிறார். பார்வோன் கர்த்தருடைய பலத்த கையை காணவேண்டும். அப்போதுதான் பார்வோனுடைய மனம் மாறும். அப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலை கிடைக்கும். கர்த்தருடைய பலத்த கை வெளிப்படும் வரையிலும், இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலை இல்லை.

கர்த்தர் மோசேக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரையும் அவருடைய வல்லமையையும் நம்பவேண்டும். கர்த்தருடைய உதவிக்காக அவர்கள் விசுவாசத்தோடும் பொறுமையோடும் காத்திருக்கவேண்டும்.

மேலும், தேவன் மோசேயை நோக்கி: "நான் யேகோவா, சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" (யாத் 6:2,3) என்று சொல்லுகிறார்.

தேவன் மோசேயை நோக்கி "நான் யேகோவா" என்று சொல்லுகிறார். தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களையும், உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர். இந்தத் தீர்க்கதரிசனத்தில் "நான் யேகோவா" என்னும் வார்த்தையைக் கர்த்தர் நான்கு முறை பயன்படுத்தியிருக்கிறார். (யாத் 6:2,6,7,8).

"சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்" என்று தேவன் மோசேக்கு சொல்லுகிறார். தேவன் இம்மூவருக்கும் தம்மை எல்-ஷடாயாக வெளிப்படுத்தியிருக்கிறார். எல்-ஷடாய் என்னும் நாமத்திற்கு அனைத்தும் போதுமானவர் என்று பொருள். யேகோவா என்னும் நாமத்திற்கு நித்தியமானவர் என்று பொருள்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியதை ஆபிரகாமோ, ஈசாக்கோ, யாக்கோபோ காணவில்லை. எகிப்திலிருந்து விடுதலையாகி, கானான் தேசத்திற்குப் போகும் ஜனங்களே தேவனுடைய வாக்குத்தத்தங்களை அனுபவிக்கிறார்கள்.

தேவன் ஆபிரகாமிற்கும், (ஆதி 12:1-3; ஆதி 13:14-17; ஆதி 15:4-6, 13-21; ஆதி 17:2-8,19-21; ஆதி 18:18-19; ஆதி 21:12-13; ஆதி 22:17-18; ஆதி 24:7), ஈசாக்கிற்கும் (ஆதி 26:3-4,24), யாக்கோபிற்கும் (ஆதி 27:28-29,37; ஆதி 28:3-4, 13-15; ஆதி 32:9; ஆதி 35:11-13; ஆதி 48:15-16) வாக்குப் பண்ணியவையெல்லாம் நிறைவேறுகிறது.

யாத் 6:3-4 ஆகிய வசனங்களில் தேவனுடைய உடன்படிக்கையைப் பற்றி கூறப்பட்டிருப்பதில், அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதும், யேகோவா என்பது அவருடைய நாமம் என்பதும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முற்பிதாக்கள் கானான் தேசத்தில் பரதேசிகளாய்ச் சஞ்சரித்தார்கள். அவர்களுடைய ஜீவிய நாட்களில் கானான் தேசத்தின் எந்தப் பகுதியையும், அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளவில்லை (எபி 11:9; அப் 7:4-7).

கர்த்தர் இப்போது யேகோவா என்னும் தம்முடைய நாமத்தினால் மோசேக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் அறியப்படுகிறார். யேகோவா என்னும் நாமத்திற்கு, கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுவார் என்று பொருள். கர்த்தர் ஆரம்பித்து வைத்ததை பூரணமாய் செய்து முடிப்பார் என்றும் இந்தப் பெயருக்கு பொருள் சொல்லலாம்.

கர்த்தர் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்து முடித்த பின்பே, அவருடைய நாமம் யேகோவா என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

"தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே" (ஆதி 2:4). இந்த வசனத்தில் தேவனாகிய கர்த்தர் என்னும் பெயருக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை "யேகோவா" என்பதாகும்.

பரிசுத்தவான்களுடைய இரட்சிப்பு பூரணமாகும் போது, கர்த்தர் யேகோவா என்னும் நாமத்தினால் அறியப்படுவார். "நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" (வெளி 22:13).

அதுவரையிலும், கர்த்தர் விசுவாசிகளுக்கு "எல்ஷடாய்" என்னும் நாமமுள்ள தேவனாகவே அறியப்படுவார். அவர் விசுவாசிகளின் பலத்திற்கும், ஆதரவுக்கும், பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் போதுமானவராயிருப்பார்.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை ஏற்படுத்தியிருக்கிறார். உடன்படிக்கை பண்ணினவர் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் தம்முடைய உடன்படிக்கையை மறந்துவிடுகிறவரல்ல. கர்த்தர் இப்போது மோசேயிடம் மறுபடியுமாக, தம்முடைய உடன்படிக்கையை ஞாபகப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிய கானான்தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறேன்" (யாத் 6:4) என்று சொல்லுகிறார்.

கர்த்தரே உடன்படிக்கை பண்ணினவர். அவர் தம்முடைய உடன்படிக்கையை மறந்துவிடாமல் நினைவுகூருகிறவர். கர்த்தர் மோசேயை நோக்கி, "எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சையும் நான் கேட்டு, என் உடன்படிக்கையை நினைத்தேன்" (யாத் 6:5) என்று சொல்லுகிறார். உடன்படிக்கை பண்ணின கர்த்தர், கிருபையும் இரக்கமும், மனதுருக்கமுமுள்ளவராயிருக்கிறார்.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். மோசேயும் ஆரோனும், கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே சொன்னார்கள். அப்போது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரரை விடுதலையாக்க மறுத்துவிட்டான்.

இப்போது கர்த்தர் மறுபடியுமாய் தம்முடைய வார்த்தைகளை மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டதைவிட, இப்போது அதிக தெளிவாகவும், விரிவாகவும் வெளிப்படுத்தப்படுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி சொல்ல வேண்டிய வார்த்தைகளை, கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆதலால், இஸ்ரவேல் புத்திரை நோக்கி: நானே கர்த்தர், உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவித்து, உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு, உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்; உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள்" என்றும்,

"ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்; நான் கர்த்தர் என்று அவர்களுக்குச் சொல்" (யாத் 6:6-8) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் இஸ்ரவேல் புத்திரரை மீட்பார். இந்த வாக்கியத்தில் மீட்பது என்பதற்கான எபிரெய வார்த்தை "கால்" என்பதாகும். உறவினருடைய சம்பத்து விற்கப்பட்டிருந்தாலோ அல்லது அடகாக வைக்கப்பட்டிருந்தாலோ அவருடைய உறவினர் ஒருவர் அதை வாங்கி தன் உறவினரிடம் திரும்பவும் கொடுப்பது என்று "மீட்பது" என்னும் வார்த்தைக்கு பொருள் சொல்லலாம்.

எபிரெயரின் வரலாற்றில் இவர்களுக்குச் சுதந்தர முறை மீட்பர் என்று பெயர். தேவன் தம்மை இஸ்ரவேல் ஜனத்தாரின் சுதந்தர முறை மீட்பராக வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தம்முடைய ஜனம் என்பதையும், தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்தெடுத்திருப்பதையும் உறவின் முறை மீட்பர் சத்தியம் தெளிவுபடுத்துகிறது (யாத் 6:6-7).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்கு ஜனங்களாக சேர்த்துக்கொள்வார். இது இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான ஜனங்களும், ஜாதியாரும், தேசத்தாரும் இருந்தாலும், கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை, தம்முடைய ஜனங்களாக சேர்த்துக்கொள்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தேவனாகவும் இருப்பார். இதுவும் இஸ்ரவேல் புத்திருக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே விசேஷித்த பரிசுத்தமோ, அளவுக்கு அதிகமான பக்தியோ, கீழ்ப்படிதலோ காணப்படவில்லை. ஆனாலும் கர்த்தர், தம்முடைய பெரிதான கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரை தமக்கு ஜனங்களாக சேர்த்துக்கொள்கிறார். கர்த்தர் அவர்களுக்கு தேவனாயிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி அவர்களை விடுவிப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார். அப்போது தங்களை விடுவிக்கிற தேவனாகிய கர்த்தர் இவரே என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்வார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுவிப்பது மாத்திரமல்ல, அவர்களுடைய முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தமாய்க் கொடுக்கப்பட்ட கானான் தேசத்திற்கும் அவர்களை அழைத்துக்கொண்டு போவார். கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுப்பார்.

கர்த்தருடைய வார்த்தைகள் எல்லாமே அற்புதமான வாக்குத்தத்தமாயிருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கர்த்தர் தன்னிடத்தில் சொல்லியிருக்கிற வார்த்தைகளை சொல்லும்போது, அவர்கள் மிகவும் சந்தோஷப்படவேண்டும். அவர்கள் மோசேக்கு செவிகொடுக்க வேண்டும். ஆனால் அவர்களோ மோசேக்கு செவிகொடுக்கவில்லை.

கர்த்தர் தனக்கு சொன்ன எல்லா வார்த்தைகளையும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ மனமடிவினாலும் கொடுமையான வேலையினாலும் மோசேக்குச் செவிகொடாமற்போகிறார்கள் (யாத் 6:9).

இஸ்ரவேல் புத்திரரைப்போலவே, இக்காலத்திலும் கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் மனமடிவினாலும், மனவேதனைகளினாலும், கொடுமையான வேலையினாலும், குடும்ப பிரச்சனைகளினாலும், சரீர வியாதிகளினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பிரச்சனைகளையும், வேதனைகளையும் மாத்திரமே நோக்கிப் பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்க தவறிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கும் செவிகொடுக்காமல் போய்விடுகிறார்கள்.

நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் பிரச்சனைகள் அதிகரிக்கும்போது, பாடுகளும் வேதனைகளும் அதிகரிக்கும்போது, நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்க பழகிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தையே நமக்கு ஆறுதலையும், மெய்யான இரட்சிப்பையும் தரும்.

## பார்வோனோடே பேசு
## யாத் 6:10-13

**யாத் 6:10. பின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 6:11. நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்தில் போய், அவன் தன் தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடும்படி அவனோடே பேசு என்றார்.**

**யாத் 6:12. மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் நின்று, இஸ்ரவேல் புத்திரரே எனக்குச் செவிகொடுக்கவில்லை; பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்? நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன் என்றான்.**

**யாத் 6:13. கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படிக்கு, அவர்களை இஸ்ரவேல் புத்திரரிடத்துக்கும் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்துக்கும் கட்டளைகொடுத்து அனுப்பினார்.**

கர்த்தர் இரண்டாம் முறையாக மோசேயை பார்வோனிடத்தில் பேசுவதற்கு அனுப்புகிறார். கர்த்தர் ஏற்கெனவே சொன்ன செய்தியில் மாற்றம் எதுவுமில்லை. மோசே பார்வோனிடத்தில் ஏற்கெனவே சொன்ன செய்தியை மறுபடியுமாய்ப் பேசவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்தில் போய், அவன் தன் தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடும்படி அவனோடே பேசு" (யாத் 6:10,11) என்று சொல்லுகிறார். "இஸ்ரவேல் புத்திரரை போகவிடவேண்டும்" என்பதே மோசே பார்வோனிடத்தில் பேசவேண்டிய வார்த்தை.

ஆனால் மோசேயோ கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படியவில்லை. அவர் பார்வோனிடத்தில் பேசுவதற்கு தயங்குகிறார். மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் நிற்கிறார். ஆனாலும் மோசேயின் விசுவாசம் பலவீனமாயிருக்கிறது.

மோசே கர்த்தரை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரே எனக்குச் செவிகொடுக்கவில்லை; பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்? நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்" (யாத் 6:12) என்று சொல்லுகிறார்.

பார்வோனிடத்தில் பேசும் முன்பாகவே, பார்வோன் தனக்கு செவிகொடுக்கமாட்டான் என்று மோசே தீர்மானித்துவிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு செவிகொடுக்கவில்லை. ஆகையினால் பார்வோன் மோசேக்கு செவிகொடுப்பான் என்று எதிர்பார்க்க முடியாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டியவர்கள். பார்வோன் எகிப்து தேசத்தை சேர்ந்தவன். அவன் ஏற்கெனவே, "தேவன் யார்" என்று மோசேயினிடத்தில் ஆணவமாக கேள்வி கேட்டவன். அப்படிப்பட்ட பார்வோன் தனக்கு எப்படி செவிகொடுப்பான் என்று மோசே கர்த்தரிடத்தில் நம்பிக்கையில்லாமல் பேசுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் பேசும்போது தன்னுடைய பலவீனத்தைப்பற்றியும் சொல்லுகிறார். தான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன் என்று மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். மோசேயின் சாக்குபோக்குகளுக்கு கர்த்தர் போதுமான அளவு பதில் கொடுத்திருக்கிறார். கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவருடைய கிருபை மோசேக்கு போதுமானது.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவர் இயற்கையின்மீதும் ஆளுகை செய்கிறவர். கர்த்தரால் மோசேயை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக பயன்படுத்த முடியும். மோசே தன்னை கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயோடு இதற்கு மேலும் பதில் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. மோசேயை பேசவிட்டால் அவர் பேசிக்கொண்டே இருப்பார் என்பது கர்த்தருக்கு தெரியும். கர்த்தர் மோசேயின் பேச்சை நிறுத்துகிறார். அவர் மோசேயோடும் ஆரோனோடும் தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போகவேண்டும். இதற்காக கர்த்தர் அவர்களை இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கும், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திற்கும், தம்முடைய கட்டளையை கொடுத்து அனுப்புகிறார்.

எகிப்தின்மீது நியாயந்தீர்ப்பை வரவழைப்பதற்கு முன்பாக தேவன் மோசேக்கு இறுதியான கட்டளை கொடுக்கிறார். இஸ்ரவேலுக்குத் தாம் பண்ணிய உடன்படிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவதற்கு முன்பாகத் தேவன் மோசேயிடம் கூறிய கடைசி வார்த்தைகள் இதுவாகும் (யாத் 6:3).

இஸ்ரவேலின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. தேவன் கொடுக்கும் கட்டளைகளை இஸ்ரவேல் ஜனத்தாரிடமும், பார்வோனிடமும் மோசேயும், ஆரோனும் அறிவிக்க வேண்டும். இஸ்ரவேலைப் போகவிடு என்பது தேவனுடைய தெளிவான கட்டளை.

மோசே பெரிய ஊழியக்காரராகயிருந்தாலும் அவருக்கும் கர்த்தருடைய கட்டளை தேவைப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தீமோத்தேயு வல்லமையாய் ஊழியம் செய்தாலும், அப்போஸ்தலர் பவுல் அவருக்கும் கட்டளை கொடுக்கிறார்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துபிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு, எல்லாவற்றையும் உயிரோடிருக்கச்செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (1தீமோ 6:13,14).

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது" (2தீமோ 4:1).

## மோசேயின் பிதாக்கள் வீட்டார்
## யாத் 6:14-27

**யாத் 6:14. அவர்களுடைய பிதாக்கள் வீட்டாரின் தலைவர் யாரென்றால், இஸ்ரவேலுக்கு முதல் பிறந்தவனாகிய ரூபனுடைய குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ; இவர்கள் ரூபனுடைய வம்சங்களின் தலைவர்**

**யாத் 6:15. சிமியோனின் குமாரர் எமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானானிய ஸ்திரீயின் குமாரனாகிய சவுல்; சிமியோனுடைய வம்சங்களின் தலைவர் இவர்களே.**

**யாத் 6:16. உற்பத்திக்கிரமப்படி பிறந்த லேவியின் குமாரருடைய நாமங்களாவன, கெர்சோன், கோகாத், மெராரி என்பவைகள். லேவி நூற்று முப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான்.**

**யாத் 6:17. அவரவர் வம்சங்களின்படி பிறந்த கெர்சோனின் குமாரர் லிப்னீ, சிமேயீ என்பவர்கள்.**

**யாத் 6:18. கோகாத்தின் குமாரர் அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள்; கோகாத் நூற்று முப்பத்துமூன்று வருஷம் உயிரோடிருந்தான்.**

**யாத் 6:19. மெராரியின் குமாரர் மகேலி, மூசி என்பவர்கள்; அவரவர் சந்ததியின்படி லேவியினுடைய வம்சங்களின் தலைவர் இவர்களே.**

**யாத் 6:20. அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்; அம்ராம் நூற்றுமுப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான்.**

**யாத் 6:21. இத்சேயாரின் குமாரர் கோராகு, நெப்பேக், சித்ரி என்பவர்கள்.**

**யாத் 6:22. ஊசியேலின் குமாரர் மீசவேல், எல்சாபான், சித்ரி என்பவர்கள்.**

**யாத் 6:23. ஆரோன் அம்மினதாபின் குமாரத்தியும் நகசோனின் சகோதரியுமாகிய எலிசபாளை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு நாதாபையும், அபியூவையும், எலெயாசாரையும், இத்தாமாரையும் பெற்றாள்.**

**யாத் 6:24. கோராகின் குமாரர் ஆசீர், எல்க்கானா, அபியாசாப் என்பவர்கள்; கோராகியரின் வம்சத்தலைவர் இவர்களே.**

**யாத் 6:25. ஆரோனின் குமாரனாகிய எலெயாசார் பூத்தியேலுடைய குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான், அவள் அவனுக்குப் பினெகாசைப் பெற்றாள்; அவரவர் வம்சங்களின்படி லேவியருடைய பிதாக்களாகிய தலைவர் இவர்களே.**

**யாத் 6:26. இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து நடத்திக்கொண்டுபோவதற்குக் கர்த்தரால் கட்டளைபெற்ற ஆரோனும் மோசேயும் இவர்களே.**

**யாத் 6:27. இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து நடத்திக் கொண்டுபோவதற்கு, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே பேசின மோசேயும் ஆரோனும் இவர்களே.**

யாத் 6:14-25 ஆகிய வசனங்கள் இந்த அதிகாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் ஓர் இணைப்புப் பகுதியாகும். இதில் யாக்கோபு, லேயாள் ஆகியோரின் முதலாவது குமாரரைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலிலிருந்தே எபிரெயரின் தலைவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை இந்த இணைப்புப் பகுதி உறுதிபடுத்துகிறது.

மோசே, ஆரோன் ஆகியோரின் வம்சவரலாறு இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுடைய வம்சவரலாறு முடிவில்லாத வம்சவரலாறு அல்ல (1தீமோ 1:3). இங்கு சொல்லப்படும் வம்சவரலாறு மோசே, ஆரோன் ஆகிய முற்பிதாக்களோடு முடிவு பெறுகிறது.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் என்பதும், எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு, இவர்கள் இருவரும் சதையாகவும் எலும்பாகவும் இருக்கிறார்கள் என்பதும் இந்த வசனப்பகுதியில் உறுதிபண்ணப்படுகிறது. மோசேயும் ஆரோனும், தங்கள் சொந்த ஜனத்தாராகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

மோசே, ஆரோன் ஆகியோருடைய பிதாக்களின் வீட்டாரைப்பற்றி, இந்த வசனத்தில் சொல்லும்போது, அவர்களில் மூன்று தலைவர்களைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 46-ஆவது அதிகாரம்). அவர்கள் ரூபன், சிமியோன், லேவி என்பவராவர்.

அவர்களுடைய பிதாக்கள் வீட்டாரின் தலைவர் யாரென்றால், இஸ்ரவேலுக்கு முதல் பிறந்தவனாகிய ரூபனுடைய குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ; இவர்கள் ரூபனுடைய வம்சங்களின் தலைவர்" (யாத் 6:14).

"சிமியோனின் குமாரர் எமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானானிய ஸ்திரீயின் குமாரனாகிய சவுல்; சிமியோனுடைய வம்சங்களின் தலைவர் இவர்களே" (யாத் 6:15).

யாக்கோபு மரிக்கும்போது தன்னுடைய குமாரருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை சொன்னார்.

மோசேயும் ஆரோனும் லேவி கோத்திரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். ஆரோனுடைய காலத்திலிருந்து ஆசாரிய ஊழியம் லேவி கோத்திரத்தாருக்கு கொடுக்கப்படுகிறது.

லேவியின் குமாரருடைய நாமங்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது அதன் விவரம் வருமாறு:

"உற்பத்திக்கிரமப்படி பிறந்த லேவியின் குமாரருடைய நாமங்களாவன, கெர்சோன், கோகாத், மெராரி என்பவைகள். லேவி நூற்று முப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான். அவரவர் வம்சங்களின்படி பிறந்த கெர்சோனின் குமாரர் லிப்னீ, சிமேயீ என்பவர்கள் (யாத் 6:16,17).

கோகாத்தின் குமாரர் அம்ராம், இத்செயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள்; கோகாத் நூற்று முப்பத்துமூன்று வருஷம் உயிரோடிருந்தான். மெராரியின் குமாரர் மகேலி, மூசி என்பவர்கள்; அவரவர் சந்ததியின்படி லேவியினுடைய வம்சங்களின் தலைவர் இவர்களே. அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்; அம்ராம் நூற்றுமுப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான். இத்சேயாரின் குமாரர் கோராகு, நெப்பேக், சித்ரி என்பவர்கள். ஊசியேலின் குமாரர் மீசவேல், எல்சாபான், சித்ரி என்பவர்கள் (யாத் 6:18-22).

ஆரோன் அம்மனதாபின் குமாரத்தியும் நகசோனின் சகோதரியுமாகிய எலிசபாளை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு நாதாபையும், அபியூவையும், எலேயாசாரையும், இத்தாமாரையும் பெற்றாள். கோராகின் குமாரர் ஆசீர், எல்க்கானா, அபியாசாப் என்பவர்கள்; கோராகியரின் வம்சத்தலைவர் இவர்களே (யாத் 6:23,24).

ஆரோனின் குமாரனாகிய எலெயாசார் பூத்தியேலுடைய குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான், அவள் அவனுக்குப் பினெகாசைப் பெற்றாள்; அவரவர் வம்சங்களின்படி லேவியருடைய பிதாக்களாகிய தலைவர் இவர்களே (யாத் 6:25).

இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து நடத்திக்கொண்டுபோவதற்குக் கர்த்தரால் கட்டளைபெற்ற ஆரோனும் மோசேயும் இவர்களே. இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து நடத்திக்கொண்டுபோவதற்கு, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே பேசின மோசேயும் ஆரோனும் இவர்களே (யாத் 6:26,27).

ஆரோன் அம்மனதாபின் குமாரத்தியும் நகசோனின் சகோதரியுமாகிய எலிசபாளை விவாகம்பண்ணினார் (யாத் 6:23). அமினதாப் யூதாகோத்திரரைச் சேர்ந்தவர். இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திரத்தில் லேவி கோத்திரத்தாரும் யூதாகோத்திரத்தாரும் பெண் கொடுத்து, பெண் எடுத்து தங்களுக்குள்ளே விவாகம் செய்து கொள்கிறார்கள்.

இஸ்ரவேலருடைய பிதாக்கள் வீட்டாரின் தலைவருடைய அட்டவணை இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ரூபனுடைய வம்சங்களின் தலைவர் - நான்கு குமாரர் (யாத் 6:14).
2. சிமியோனுடைய வம்சங்களின் தலைவர் - ஆறு குமாரர் (யாத் 6:15).
3. லேவியினுடைய வம்சங்களின் தலைவர் - கெர்சோன், கோகாத், மெராரி (யாத் 6:16).
4. கெர்சோனின் வம்சங்களின் தலைவர் - இரண்டு குமாரர் (யாத் 6:17).
5. கோகாத் வம்சங்களின் தலைவர் - நான்கு குமாரர் (யாத் 6:18).
6. மெராரி வம்சங்களின் தலைவர் - இரண்டு குமாரர் (யாத் 6:19).
7. கோகாத்திலிருந்து அம்ராமின் வம்சங்களின் தலைவர் - இரண்டு குமாரர் (யாத் 6:20).
8. கோகாத்திலிருந்து இத்சேயரின் வம்சங்களின் தலைவர் - மூன்று குமாரர் (யாத் 6:21).
9. கோகாத்திலிருந்து ஊத்சியேலின் வம்சங்களின் தலைவர் - மூன்று குமாரர் (யாத் 6:22).
10. கோகாத்திலிருந்து அம்ராமுடைய ஆரோனின் வம்சங்களின் தலைவர் - நான்கு குமாரர் (யாத் 6:23).
11. கோகாத்திலிருந்து இத்சேயருடைய கோராகுவின் வம்சங்களின் தலைவர் - மூன்று குமாரர் (யாத் 6:24).

12. கோகாத்திலிருந்து அம்ராமுடைய ஆரோனின் வம்சங்களின் தலைவர் - ஒரு குமாரன் (யாத் 6:25).

பரிசுத்த வேதாகமத்தில் மோசே ஆரோன் ஆகியோருடைய வம்சவரலாறு இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனங்கள் இந்த அதிகாரத்தில் ஓர் இணைப்பு பகுதியாக சேர்க்கப்பட்டிருந்தாலும், அதற்கும் சில விசேஷித்த காரணங்கள் உள்ளது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலரின் வம்சவரலாற்றில் மோசே, ஆரோன் ஆகியோருடைய ஸ்தானத்தைத் தெளிவுபடுத்துதல். தங்களுடைய தலைவர்கள் ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்திக் காண்பித்தல். (யாத் 6:20-26).

2. லேவி கோத்திரம் இஸ்ரவேலின் ஆசாரியக் கோத்திரம் என்பதையும், லேவியின் மூன்று முக்கிய வம்சங்களையும் தெளிவுபடுத்துதல். (யாத் 6:17).

3. லேவி, கோகாத், அம்ராம் ஆகியோரின் ஜீவியகாலத்தை வெளிப்படுத்துதல். (யாத் 6:16,18,20).

4. லேவியின் குமாரரில் கோகாத் முக்கியமான புத்திரன் என்பதைத் தெளிவுபடுத்துதல். (யாத் 6:18, 20-26).

5. இஸ்ரவேலரின் முக்கியமான தலைவர்களான மோசேயும், ஆரோனும் கோகாத் வம்சத்தில் வந்தவர்கள் என்பதைத் தெளிவுபடுத்துதல் (யாத் 6:18, 20,23,25-26).

6. லேவி கோத்திரத்தாரின் தலைவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுதல். (யாத் 6:25) இதன் மூலமாக கோராகு, நாதாப், அபியு, எலியேசர், இத்தாமார், பினெகாஸ் ஆகியோருக்கும், லேவி, மோசே, ஆரோன் ஆகியோருக்கும் இடையிலுள்ள உறவுகளை விளக்குதல். (யாத் 6:21-26).

7. ஆரோனின் குடும்பத்தாரை அட்டவணைப்படுத்துதல் (யாத் 6:23).

யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த மூன்றாவது குமாரனின் பெயர் லேவி. இவர் எல்லா ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் தலைவர். இவர் 137 வருஷம் உயிரோடு இருந்தார் (யாத் 6:16) லேவி யோசேப்பைவிட 27 வருஷமும் (ஆதி 50:26), மோசேயைவிட 17 வருஷம் (உபா 31:2) அதிகமாக உயிரோடு இருந்தார். யாக்கோபோடு லேவி எகிப்திற்குப் போனபோது அவருடைய வயது 49.

லேவியின் குமாரன். அம்ராமைப் பெற்றான். அம்ராம் மோசே, ஆரோன் ஆகியோரின் தகப்பன் (யாத் 6:16,18,20).

கோகாத்தின் புத்திரரில் எப்ரோனின் வம்சத்தைப் பற்றி இங்கு கூறப்படவில்லை. இதற்குக் காரணமும், தெளிவாகத் தெரியவில்லை. எப்ரோன் புத்திரர் எண் 3:27; எண் 26:58; 1நாளா 15:9; 1நாளா 23:19; 1நாளா 24:23; 1நாளா 26:23,30-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

கோகாத் நூற்று முப்பத்துமூன்று வருஷம் உயிரோடிருந்தான். யோசேப்பை விட 23 வருஷமும், மோசேயைவிட 13 வருஷமும் அதிகமாக உயிரோடு இருந்தான். யாக்கோபு எகிப்துக்குப் போவதற்கு முன்பாகவே கோகாத் பிறந்து விட்டான் (ஆதி 46:11).

அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான். இஸ்ரவேலரின் வரலாற்றில் நெருங்கிய உறவினரைத் திருமணம் செய்யும் வழக்கம் ஆரம்ப காலத்தில் அங்கிகரிக்கப்பட்டிருந்தாலும், பிற்காலத்தில் அது தடைபண்ணப்பட்டிருக்கிறது. புறஜாதியாரிடமிருந்து இஸ்ரவேல் தேசம் பிரிந்து தனி தேசமாக ஆனபோது, தேவன் அவர்களுக்கென்று விசேஷித்த குடும்ப உறவு பிரமாணங்களைக் கொடுக்கிறார் (லேவி 18).

அம்ராம் நூற்றுமுப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான். யோசேப்பைவிட 27 வருஷமும், மோசேயைவிட 17 வருஷமும் அதிகமாக அம்ராம் உயிரோடு இருந்தான். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப் போவதற்கு 80 வருஷங்களுக்கு முன்பாக அம்ராம் மோசேயைப் பெற்றான். (அப் 7:22-30). மோசே பிறந்த போது, அம்ராமின் வயது என்ன என்று தெரியவில்லை. அம்ராமின் மனைவியாகிய யோகெபேத் லேவியின் குமாரத்தி (யாத் 6:16-20; எண் 26:59) இவள் லேவியின் குமாரனான கோகாத்தின் சகோதரி.

"கோராகு" என்பவன் மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணியதினால், பூமி இவனை விழுங்கிற்று. (எண் 16). "ஊசியேல்" என்பவன் ஆரோனின் சிறிய தகப்பன் (லேவி 10:4).

"எலிசபாள்" என்னும் இந்தப் பெயருக்குக் "கர்த்தருடைய ஆணை" என்று பொருள். எலிசபெத் என்னும் பெயருக்கும் இதே பொருள்தான். யூதாவின் அரச கோத்திரத்தில் இவள் அரசியாக இருக்கிறாள். (எண் 2:3).

"அமினதாப்" என்பவன் நகசோனின் தகப்பன். இவன் யூதா கோத்திரத்து தலைவன். (யாத் 6:23; எண் 1:7; எண் 2:3; எண் 7:12,17; எண் 10:14) இவனுடைய வம்சவழியில் இயேசு கிறிஸ்து வருகிறார். (மத் 1:4; லூக்கா 3:32).

ஆரோனின் நான்கு குமாரர்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. நாதாப் இவனும், அபியூகுவும், சீனாய் மலையில் தேவனைக் காண்பதற்காக அழைக்கப்பட்டார்கள். (யாத் 24:1-11). ஆசாரிய ஊழியத்திற்காக இவர்கள் இருவரும் வேறுபிரிக்கப் பட்டார்கள். (யாத் 28:1-43). கர்த்தருக்கு முன்பாக இவர்கள் அந்நிய அக்கினியை கொண்டு வந்ததினால், இவர்கள் இருவரும் மரித்துப் போனார்கள் (லேவி 10:1-11).

2. அபியூ

3. எலேயாசார் பினெகாசின் தகப்பன். நாதாபும், அபியூவும் மரித்தபின்பு, எலேயாசார் லேவி கோத்திரத்திற்குத் தலைவனானான். (யாத் 6:23,25; எண் 3:32; எண் 4:16) ஆரோனுக்குப் பின்பு பிரதான ஆசாரியனானான். (எண் 20:26-28; உபா 10:6) மோசேக்கும் (எண் 26:63) யோசுவாவிற்கும் (எண் 34:17) உதவி புரிந்தான். இவனுடைய மரணமும், சந்ததியும் யோசுவா 24:33 ஆவது வசனத்திலும், 1நாளா 24 ஆவது அதிகாரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

4. இத்தாமார் (யாத் 6:23; யாத் 28:1; 1நாளா 6:3) ஆசரிப்புக் கூடாரத்தின் பொக்கிஷங்களுக்கு அதிகாரியாக இருந்தான். (யாத் 38:21; எண் 4:28; எண் 7:8) இவனுடைய சந்ததியைப் பற்றி 1நாளா 24 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பினெகாஸ் பாவத்தை வைராக்கியத்தோடு நியாயம் தீர்த்தான். ஆகையினால் நித்திய உடன்படிக்கையையும், நித்திய ஆசாரியத்துவத்தையும் சுதந்தரித்துக் கொண்டான். (எண் 25:1-15; சங் 106:30). லேவியரின் கோகாத் புத்திரருக்கு பினெகாஸ் தலைவன். (1நாளா 9:19-20, எண் 31:6; யோசு 22:13-32; யோசு 24:33; நியா 20:28.

"மோசேயும் ஆரோனும் இவர்களே" என்னும் வாக்கியத்தோடு, இந்த இணைப்பு பகுதி நிறைவுபெறுகிறது. இந்த இணைப்புப் பகுதி இங்கு இணைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் மறுபடியும் இங்கு வலியுறுத்திக் கூறப்படுகிறது. (யாத் 6:26-27) மோசேயின் பெயரும், ஆரோனின் பெயரும் வரிசை மாற்றி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யாத் 6:26 ஆவது வசனம் ஆரோனை மூத்தவனாகவும், யாத் 6:27 ஆவது வசனம் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திக் கொண்டுபோகும் தலைவனாகவும் வலியுறுத்துகிறது (ஆதி 4:25).

## நானே கர்த்தர்
## யாத் 6:28-30

**யாத் 6:28. கர்த்தர் எகிப்துதேசத்திலே மோசேயோடே பேசின நாளில்;**

**யாத் 6:29. கர்த்தர் மோசேயை நோக்கி: நானே கர்த்தர்; நான் உன்னோடே சொல்லுகிறவைகளையெல்லாம் நீ எகிப்து ராஜாவாகிய பார்வோனுக்குச் சொல் என்று சொன்னபோது,**

**யாத் 6:30. மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில்: நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்; பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான் என்றான்.**

மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் நின்றுகொண்டிருக்கிறார். அவர் கர்த்தரை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரே எனக்குச் செவிகொடுக்கவில்லை; பார்வோன் எனக்கு எப்படிச்செவிகொடுப்பான்? நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்" (யாத் 6:12) என்று அவிசுவாசமாகவும், மனசோர்வாகவும் பேசுகிறார். கர்த்தரோ மோசேயையும் ஆரோனையும் இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கும், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திற்கும் கட்டளை கொடுத்து அனுப்புகிறார் (யாத் 6:13).

யாத் 6:28 ஆவது வசனம் "வாஹிய்" என்னும் எபிரெய வார்த்தையினால் ஆரம்பமாகிறது. இதற்கு "இதற்குப் பின்பு" என்று பொருள். யாத்திராகமம் ஏழாவது அதிகாரம் இங்குதான் ஆரம்பிக்க வேண்டும். இந்த வசனத்திலிருந்து புதிய பகுதி துவங்குகிறது. பழைய ஏற்பாட்டில் 71 அதிகாரங்களின் முதல் வாக்கியம் "வாஹிய்" என்று ஆரம்பமாகிறது.

தேவன் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் உடன்படிக்கை பண்ணினார். ஆனால் அந்த உடன்படிக்கை நிறைவேறுவதில் காலதாமதமாயிற்று. மோசேயிடம் தேவன் கூறிய காரியங்கள்கூட உடனடியாக நிறைவேறவில்லை. ஆகையினால், மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும் மனமடிவோடு சோர்வடைந்துவிட்டார்கள் (யாத் 5:19-23; யாத் 6:9-13, 28-30).

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை மறந்து விடவில்லை. "ஒரு நாளில்" தேவன் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார். (யாத் 6:1,28) எகிப்து தேசத்திலிருந்து தம்முடைய பிள்ளைகளைத் தேவன் விடுவித்து, தாம் வாக்குத்தத்தம் பண்ணிய கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்கிறார் (யாத் 10:7; யாத் 12:31-36; யாத் 14:28).

கர்த்தர் மோசேக்கு சொல்லுகிற எல்லா வார்த்தைகளையும், அவர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்தில் சொல்லவேண்டும். மோசே கர்த்தருக்கு உண்மையுள்ள ஸ்தானிகராகயிருக்க வேண்டும். ஆனால் மோசேயோ, "நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்; பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்" (யாத் 6:30) என்று சொல்லுகிறார்.

# 7 அதிகாரம்

மோசேக்கும் தேவனுக்கும் இடையே நடைபெறுகிற விவாதம் முடிவு பெறுகிறது. மோசே இப்போது தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறார் (யாத் 7:1-7).

மோசேக்கும் பார்வோனுக்கும் இடையே விவாதம் ஆரம்பமாகிறது. மோசே தேவனுடைய நாமத்தினால் பேசுகிறார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பிவிடுமாறு மோசே கட்டளையிடுகிறார். பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தை விட்டு வெளியே அனுப்ப மறுத்துவிடுகிறான்.

மோசே சர்வவல்லமையுள்ள தேவனுடைய வல்லமையினால் பேசுகிறார். பார்வோனோ இருதயத்தில் பெருமையும் ஆணவமுமுள்ள ராஜாவாயிருக்கிறான். மோசே பார்வோனுக்கு முன்பாக, தன் கையிலுள்ள கோலை சர்ப்பமாக மாற்றி, ஒரு அற்புதத்தை செய்கிறார். பார்வோனோ தன்னுடைய மனதைக் கடினப்படுத்துகிறான் (யாத் 7:8-13).

பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. கர்த்தர் எகிப்து தேசத்தை வாதைகளினால் வாதிக்கிறார். முதலாவது வாதையாக எகிப்து தேசத்தின் நதியிலுள்ள தண்ணீர் இரத்தமாக மாறுகிறது. பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ணாமல் தன்னுடைய மனதை இன்னும் கடினப்படுத்துகிறான் (யாத் 7:14-25).

## மோசேயும் ஆரோனும்
## யாத் 7:1-7

**யாத் 7:1. கர்த்தர் மோசேயை நோக்கி: பார், உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்; உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான்.**

**யாத் 7:2. நான் உனக்குக் கட்டளையிடும் யாவையும் நீ சொல்லவேண்டும்; பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து அனுப்பிவிடும்படி உன் சகோதரனாகிய ஆரோன் அவனிடத்தில் பேசவேண்டும்.**

**யாத் 7:3. நான் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்து தேசத்தில் என் அடையாளங்களையும் அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிப்பேன்.**

**யாத் 7:4. பார்வோன் உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டான்; ஆகையால் எகிப்துக்கு விரோதமாக நான் என் கையை நீட்டி, மகா தண்டனையினால் என் சேனைகளும் என் ஜனங்களுமாகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவேன்.**

**யாத் 7:5. நான் எகிப்தின்மேல் என் கையை நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து புறப்படப்பண்ணும்போது, நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள் என்றார்.**

**யாத் 7:6. மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.**

**யாத் 7:7. அவர்கள் பார்வோனோடே பேசும்போது, மோசேக்கு எண்பது வயதும், ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதுமாயிருந்தது.**

கர்த்தர் மோசேயை பார்வோனிடத்திற்கு போகுமாறு உற்சாகப்படுத்துகிறார். அவர் தம்முடைய அதிகாரத்தையும் வல்லமையையும் மோசேயின்மீது தரிப்பிக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்" (யாத் 7:1) என்று சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிற இந்த வாக்கியத்திற்கு, இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலைபண்ணும் ஊழியத்திலே, மோசே கர்த்தருடைய பிரதிநிதியாக இருப்பார் என்பது பொருள்.

"நான் உன்னை பார்வோனுக்கு தேவனாக்கினேன்" என்னும் இந்த வாக்கியத்தில் "தேவன்" என்பதற்கான எபிரெய வார்த்தை எலோஹிம் என்பதாகும். தேவனுக்காக கிரியை செய்கிற மனுஷருக்குத் தேவன் எலோஹிம் என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். (யாத் 7:1; யாத் 21:6; யாத் 22:8-9; சங் 82:1,6; யோவான் 10:34-35).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், நியாயாதிபதிகளும் தேவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். மோசே தேவனுடைய ஸ்தானாபதியாக, பார்வோனுக்கு முன்பாக நிற்பார். கர்த்தருடைய நாமத்தினால் பேசும் அதிகாரமும், அற்புதங்களை செய்யும் அதிகாரமும் மோசேக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரே இந்த அதிகாரங்களை மோசேக்கு கொடுத்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் மோசேயை நோக்கி, "உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்" என்று சொல்லுகிறார்.

மோசே சர்வவல்லமையுள்ள தேவனல்ல. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் "இருக்கிறவராகவே இருக்கிறார்" அவர் நித்தியமானவர். தேவனை யாரும் சிருஷ்டிக்கவில்லை. அவர் எப்போதும் இருக்கிறவர். மோசே அப்படிப்பட்ட நித்திய தேவனல்ல. மோசே ஒரு உண்டாக்கப்பட்ட தேவன். கர்த்தர் மோசேயை பார்வோனுக்கு தேவனாக ஆக்கியிருக்கிறார்.

தேவனுடைய தெய்வீக சுபாவம் மோசேயினிடத்தில் காணப்படவில்லை. ஆனாலும் மோசே தேவனுடைய ஊழியத்தை, அவருடைய அனுமதியோடும், அதிகாரத்தோடும் செய்யும்போது, கர்த்தர் மோசேயை தேவனாக்கியிருப்பதாக சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை பார்வோனுக்கு மாத்திரமே தேவனாக்கியிருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோ, சர்வலோகத்திற்கும், சர்வசிருஷ்டிகளுக்கும் தேவனாயிருக்கிறார். அவர் மெய்யான தேவன். அவர் மாத்திரமே ஜீவனுள்ள தேவன். கர்த்தர் மோசேயை தேவனாக ஆக்கினாலும், அவர் இன்னும் மனுஷனாகவே இருப்பார்.

கர்த்தர் மோசேக்கு உதவி செய்ய ஆரோனை அனுப்புகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான்" (யாத் 7:1) என்று சொல்லுகிறார். ஆரோன் தெளிவாகப் பேசக்கூடியவர். அவர் வாக்குவல்லவர். ஆரோன் மோசேயின் தீர்க்கதரிசியாக நின்று, பார்வோனிடத்திலே, மோசே சொல்லுகிற வார்த்தைகளை சொல்லுவார்.

தீர்க்கதரிசி தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறவர். தேவனுக்காகப் பேசுமாறு அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறவர். (யாத் 4:15-16; அப் 3:21; எபி 1:1-2).

மோசே எகிப்து தேசத்தில் ஒரு தேவனைப்போல இருந்து வாதைகளை உண்டுபண்ணுவார். அந்த வாதைகளை அகற்றுவார். ஆரோனோ ஒரு தீர்க்கதரிசியாகயிருந்து பார்வோனுக்கு மோசேயின் செய்தியை சொல்லுவார். அவர் பார்வோனை தேவனுடைய நாமத்தினால் எச்சரிப்பார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உனக்குக் கட்டளையிடும் யாவையும் நீ சொல்லவேண்டும்; பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து அனுப்பிவிடும்படி உன் சகோதரனாகிய ஆரோன் அவனிடத்தில் பேசவேண்டும்" (யாத் 7:2) என்று சொல்லுகிறார்.

மோசே பார்வோனிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை சொன்னாலும் அவன் அந்த வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டான். கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்துவார். அதே வேளையில் கர்த்தர் எகிப்து தேசத்திலே தம்முடைய அடையாளங்களையும், அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிப்பார்.

தம்முடைய நாம மகிமைக்காகவும், தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவும் தேவன் அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பிக்கிறார். தேவனுடைய ஊழியக்காரர்கள் மூலமாக அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெறும்போது அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்பதும், தேவனுடைய அபிஷேகம் பெற்றிருக்கிறவர்கள் என்பதும் நிரூபணமாகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பார்வோன் உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டான்; ஆகையால் எகிப்துக்கு விரோதமாக நான் என் கையை நீட்டி, மகா தண்டனையினால் என் சேனைகளும் என் ஜனங்களுமாகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவேன். நான் எகிப்தின்மேல் என் கையை நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து புறப்படப்பண்ணும்போது, நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள்" (யாத் 7:4,5) என்று சொல்லுகிறார்.

ஜனங்கள் இஸ்ரவேலரின் தேவனைக் கர்த்தர் என்று அறிய வேண்டும். இதற்காகவே தேவன் அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பிக்கிறார்.

மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தைகளை பார்வோனுக்கு சொல்லுகிறார்கள். ஆனால் பார்வோனோ அவர்களுக்கு செவிகொடுக்கமாட்டான். ஆனாலும் கர்த்தருடைய சித்தம் நிறைவேறும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

எகிப்தியருக்கு இப்போது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி தெரியவில்லை. கர்த்தர் எகிப்தின்மேல் தம்முடைய கையை நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து புறப்படப்பண்ணுவார். அப்போது எகிப்தியர்கள், இஸ்ரவேலின் தேவனே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள்.

மோசே இப்போது கர்த்தரிடத்தில் விவாதம்பண்ணவில்லை. அவர் கர்த்தருடைய சமுகத்திலே சாக்குபோக்குகளை சொல்லவில்லை. மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டபடியே செய்கிறார்கள் (யாத் 7:6).

தேவஊழியக்காரர்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, செயல்பட வேண்டும். ஊழியத்தில் வெற்றி பெறுவதற்கும், நித்திய ஜீவனை அடைவதற்கும் இதுவே இரகசியம் (ரோமர் 1:5; ரோமர் 16:26).

மோசேயும் ஆரோனும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததை, சங்கீதக்காரர் விசேஷமாக சொல்லியிருக்கிறார். "தம்முடைய தாசனாகிய மோசேயையும் தாம் தெரிந்துகொண்ட ஆரோனையும் அனுப்பினார். இவர்கள் அவர்களுக்குள் அவருடைய அடையாளங்களையும், காமின் தேசத்திலே அற்புதங்களையும் செய்தார்கள். அவர் இருளை அனுப்பி, அந்தகாரத்தை உண்டாக்கினார்; அவருடைய வார்த்தைகளை எதிர்ப்பாரில்லை" (சங் 105:26-28).

மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட வார்த்தைகளை பார்வோனுக்கு சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தைகளை எகிப்து தேசத்திலே ஒருவரும் எதிர்க்கவில்லை.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், மோசேயைப்போலவே, யோனாவும் கர்த்தருடைய கட்டளைக்கு ஆரம்பத்தில் கீழ்ப்படியவில்லை. கர்த்தர் சொன்ன பிரகாரம் யோனா நினிவே பட்டணத்திற்கு போகவில்லை. ஆனாலும் முடிவிலே யோனா கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, நினிவேக்கு போனார்.

மோசேயும் ஆரோனும் எகிப்து தேசத்திற்கு போனபோது அவர்களுடைய வயதைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோன் மோசேயின் மூத்த சகோதரன். மோசே பிறப்பதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்பாகவே ஆரோன் பிறக்கிறார். அவர்கள் பார்வோனோடே பேசும்போது, மோசேக்கு எண்பது வயதும், ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதுமாயிருக்கிறது (யாத் 7:7).

மீதியான் தேசத்திற்கு மோசே போனபோது அவருக்கு வயது 40. (அப் 7:22-30). ஆரோன் மோசேயைவிட மூன்று வருஷம் வயதில் மூத்தவர். மீரியாமைவிட வயதில் இளையவர் (யாத் 2:7-10).

## கோல் சர்ப்பமாயிற்று
## யாத் 7:8-13

**யாத் 7:8. கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:**

**யாத் 7:9. உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் உங்களோடே சொன்னால்; அப்பொழுது நீ ஆரோனை நோக்கி: உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடு என்பாயாக; அது சர்ப்பமாகும் என்றார்.**

**யாத் 7:10. மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்தார்கள். ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரருக்கு முன்பாகவும் தன் கோலைப் போட்டான், அது சர்ப்பமாயிற்று.**

**யாத் 7:11. அப்பொழுது பார்வோன் சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள்.**

**யாத் 7:12. அவர்கள் ஒவ்வொருவனாகத் தன் தன் கோலைப் போட்டபோது, அவைகள் சர்ப்பங்களாயின; ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று.**

**யாத் 7:13. கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப்பட்டது, அவர்களுக்குச் செவிகொடாமற்போனான்.**

மோசே இதற்கு முன்பு பார்வோனிடத்தில் பேசியபோது, அவர் கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மாத்திரம் பார்வோனுக்கு சொன்னார். இஸ்ரவேல் புத்திரரை அனுப்பிவிடவேண்டும் என்று மோசே கர்த்தருடைய நாமத்தினால் பார்வோனைக் கேட்டுக்கொண்டார். பார்வோனோ மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல், இஸ்ரவேல் புத்திரரை அனுப்பிவிட மறுத்துவிட்டான்.

இப்போது மோசே இரண்டாம் முறையாக பார்வோனுக்கு முன்பாக நிற்கிறார். கர்த்தரே மோசேயை பார்வோனிடத்திற்கு அனுப்பியிருக்கிறார். இதை உறுதிபண்ணும் வண்ணமாக, மோசே கர்த்தருடைய நாமத்தினால் அற்புதங்களை செய்யப்போகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் உங்களோடே சொன்னால்; அப்பொழுது நீ ஆரோனை நோக்கி: உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடு என்பாயாக; அது சர்ப்பமாகும்" *(யாத் 7:8,9)* என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலே மந்திரவாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் மந்திரவித்தைகளை செய்யக்கூடியவர்கள். பார்வோன் மோசேயையும் ஆரோனையும் பார்த்து, "உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள்" என்று சொல்லுவான். பார்வோன் என்ன சொல்லுவான் என்பது கர்த்தருக்கு தெரியும். ஆகையினால் பார்வோன் சொல்லப்போகிற வார்த்தைகளை, கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் முன்கூட்டியே சொல்லுகிறார்.

ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் மோசேயோடும், ஆரோனோடும் சொன்னால், அவர்கள் என்ன செய்யவேண்டும் என்றும், கர்த்தர் அவர்களுக்கு சொல்லுகிறார். அப்போது மோசே ஆரோனை நோக்கி பேசவேண்டும். மோசே ஆரோனை நோக்கி, "உன் கோலை எடுத்து அதை பார்வோனுக்கு முன்பாக போடு" என்று சொல்லவேண்டும். ஆரோன் அந்தக் கோலை எடுத்து பார்வோனுக்கு முன்பாக போடும்போது அது சர்ப்பமாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சர்ப்பம் என்பதற்கான எபிரெய வார்த்தை "தன்னீய்ன்" என்பதாகும். இந்த வசனத்திலும், யாத் *7:10,12* ஆகிய வசனங்களிலும் இந்த வார்த்தை சர்ப்பம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. எசே *29:3;* மீகா *1:8* ஆகிய வசனங்களில் இந்த வார்த்தை வலுசர்ப்பம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் ஆதி *1:21;* யோபு *7:12* ஆகிய வசனங்களில் மகா மச்சம் எனவும், புல *4:3* ஆவது வசனத்தில் திமிங்கலம் எனவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சீனாய் மலையில் கோல் சர்ப்பமாக மாறிற்று. அது சாதாரண சர்ப்பம். அதற்கான எபிரெய வார்த்தை "நாகாஷ்" என்பதாகும். (யாத் 4:3-4; யாத் 7:15; ஆதி 3) பார்வோனுக்கு முன்பாக மோசேயின் கோல் முதலையாக மாறிற்று என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். முதலை எகிப்தின் அடையாளம். நைல் நதிப் பகுதியில் ஏராளமான முதலைகள் இருக்கும். (சங் 74:13; ஏசா 51:9; எசே 29:3). பழைய ஏற்பாட்டு மூலபாஷை சுவடிகள் சிலவற்றில் கோல் முதலையாக மாறிற்று என்றுள்ளது. செப்துவஜிந்த் பதிப்பில் கோல் வலுசர்ப்பமாக மாறிற்று என்றிருக்கிறது.

கர்த்தர் இந்த அற்புதத்தைப்பற்றி மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். "அதைத் தரையிலே போடு என்றார்; அவன் அதைத் தரையிலே போட்டபோது, அது சர்ப்பமாயிற்று; மோசே அதற்கு விலகியோடினான்" (யாத் 4:3).

மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்கிறார்கள். ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரருக்கு முன்பாகவும் தன் கோலைப் போடுகிறான், அது சர்ப்பமாயிற்று (யாத் 7:10).

கோல் சர்ப்பமானதை பார்க்கும்போது பார்வோனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கும். அவன் ஆச்சரியப்படவேண்டும் என்பதற்காக இந்த அற்புதம் நடைபெறவில்லை. பார்வோனுடைய மனதிலே கர்த்தரைக்குறித்து பயமும், நடுக்கமும் உண்டாகவேண்டும். இதற்காகவே, கர்த்தர் இந்த அற்புதத்தை செய்கிறார். ஆனால் பார்வோனோ தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான்.

பார்வோன் எகிப்து தேசத்திலே இதுபோன்ற மந்திர வித்தைகளை ஏராளமாய்ப் பார்த்திருக்கிறான். கோல் சர்ப்பமாவது பார்வோனுக்கு ஒரு புதுமையல்ல. அது அவனுக்கு அற்புதமாகவும் தெரியவில்லை. பார்வோன் அந்த அற்புதத்தைப் பார்த்து பயப்படவுமில்லை.

அப்பொழுது பார்வோன் சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பிக்கிறான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவனாகத் தன் தன் கோலைப் போட்டபோது, அவைகள் சர்ப்பங்களாயிற்று; ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று (யாத் 7:11,12).

சாஸ்திரிகள் கல்வி கற்றவர்கள். அவர்களுக்கு எல்லாவிதக் கலைகளும் தெரியும். மந்திர தந்திரங்களும் படித்திருக்கிறார்கள். சூனியக்காரர்கள் மந்திரவாதிகளைப் போன்றவர்கள். இவர்கள் மறைந்திருக்கும் இரகசியங்களை அறிவிப்பார்கள். நடைபெறும் காரியங்களுக்கு வியாக்கியானம் கூறுவார்கள். அக்காலத்தில் மந்திர புஸ்தகங்கள் ராஜாவுக்கே உரியவை. ஆசாரியரும், சாஸ்திரிகளும் மட்டும் ராஜாவின் அனுமதிபெற்று மந்திர புஸ்தகங்களை வாசிக்கலாம். 2தீமோ 3:8 ஆவது வசனத்தில் இவர்களில் இருவரான யந்நேயைப் பற்றியும், யம்பிரேயைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

மோசே நடப்பித்த அற்புதத்தை பார்வோனால் மறுக்க முடியாது. அது பிரத்தியட்சமாக நடைபெற்ற அற்புதம். பார்வோனுக்கு முன்பாகவும், அவனுடைய அரண்மனையிலிருக்கிற எல்லோருக்கும் முன்பாகவும் ஆரோன் போட்ட கோல் சர்ப்பமாயிற்று. ஆனாலும் எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள் போட்ட கோல்களும் சர்ப்பங்களாக மாறிற்று. இதனால் பார்வோனுடைய இருதயம் கடினப்படுகிறது.

மோசே தன்னுடைய ஜீவியத்தின் ஆரம்பகாலத்தில், எகிப்து தேசத்திலே இருந்தவர். அவர் நாற்பது வருஷங்களாக எகிப்து தேசத்தின் கல்வியையும், மந்திரவித்தைகளையும் கற்றவர். எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள் என்ன செய்வார்கள் என்பது மோசேக்கு நன்றாய்த் தெரியும். மோசேயைப்பற்றி பார்வோனுக்கும் தெரியும். மோசே ஒரு வேளை, தான் எகிப்து தேசத்தில் கற்ற மந்திரவித்தைகளை, இப்போது இங்கே தனக்கு முன்பாக நடத்தி காண்பிக்கிறார் என்று பார்வோன் நினைக்கிறான்.

பார்வோன் இதற்காகவே தன்னுடைய மந்திரவாதிகளை தனக்கு முன்பாக அழைப்பிக்கிறான். அவர்களும் ஆரோனைப்போல தங்களுடைய கோல்களை போடுகிறார்கள். அவைகள் சர்ப்பங்களாயிற்று.

பார்வோனுடைய மந்திரவாதிகளின் கோல்கள் சர்ப்பங்களானதும், கர்த்தருடைய வல்லமையினாலேயே நடைபெறுகிறது என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். பார்வோனுடைய இருதயத்தை கடினப்படுத்த வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. இதற்காகவே கர்த்தர் எகிப்து தேசத்தின் மந்திரவாதிகளுடைய கோல்களை சர்ப்பங்களாக மாற்றுகிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். வேதபண்டிதர்களில் வேறு சிலரோ, மந்திரவாதிகளின் கோல்கள் சர்ப்பங்களாக மாறினது அசுத்த ஆவிகளால் நடைபெற்ற காரியம் என்று விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் சில சமயங்களில் பொய்சொல்லுகிற ஆவிகளுக்கு அனுமதி கொடுக்கிறார். அந்த ஆவிகள் விநோதமான காரியங்களை செய்யும். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் விசுவாசத்தை சோதிப்பதற்காகவும், தம்முடைய வல்லமையை அவர்களுக்கு விளங்கப்பண்ணுவதற்காகவும், சில சமயங்களில் இது போன்ற காரியங்களை அனுமதிக்கிறார்.

"அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபா 13:3).

"உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே" (1கொரி 11:19).

மந்திரவாதிகளின் கோல்கள் சர்ப்பங்களாக மாறினாலும், இந்த விஷயத்திலும் கர்த்தர் மோசேயை கனம்பண்ணுகிறார். ஆரோனுடைய கோல் மந்திரவாதிகளுடைய கோல்களை விழுங்கிற்று. இந்த சம்பவமே, மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்கள் என்பதற்கும், அவர்கள் இருவரும் கர்த்தருடைய வல்லமையினால் இந்த அற்புதத்தை செய்கிறார்கள் என்பதற்கும் அடையாளமாயிருக்கிறது.

ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று. மந்திரவாதிகளின் கோல்களும் சர்ப்பங்களாயிற்று. (யாத் 7:9) ஆரோனின் கோல் அவர்களுடைய கோல்களை விழுங்கின படியால், சாத்தானின் வல்லமையைவிட தேவனுடைய வல்லமை மகத்துவமானது என்பது இங்கு நிரூபிக்கப்படுகிறது.

மந்திரவாதிகள் ஒருசில அற்புதங்களைச் செய்கிறார்கள். ஆனாலும் தேவன் அனுப்பும் வாதைகளிலிருந்து அவர்களால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. (யாத் 8:18; யாத் 9:11). சாத்தானிடம் குறைவான வல்லமையே இருக்கிறது. ஜனங்களை ஏமாற்றுவதற்காக சாத்தான் சில மாயையான அற்புதங்களைச் செய்து, ஜனங்களை வஞ்சிப்பான். (மத் 24:24; 2தெச 2:8-12; வெளி 13:2,4,11-18; வெளி 16:13-16; வெளி 19:20).

ஆனால் பார்வோனோ மோசேக்கும் ஆரோனுக்கும் செவிகொடுக்கவில்லை. அவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான். கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருந்தபடி பார்வோனுடைய இருதயம் கடினப்படுகிறது. பார்வோன் அவர்களுக்கு செவிகொடாமற்போகிறான் (யாத் 7:13).

மோசே கோலை சர்ப்பமாக மாற்றுவதுபோல, எகிப்து தேசத்தின் மந்திரவாதிகளும் தங்கள் கோல்களை சர்ப்பங்களாக மாற்றுகிறார்கள். ஆகையினால் இந்த சம்பவத்தில் விசேஷித்த அற்புதம் எதுவுமில்லை என்று பார்வோன் சாதாரணமாக நினைத்துவிடுகிறான்.

## தண்ணீர் இரத்தமாய் மாறிற்று யாத் 7:14-25

யாத் 7:14. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: பார்வோனின் இருதயம் கடினமாயிற்று; ஜனங்களை விடமாட்டேன் என்கிறான்.

யாத் 7:15. காலமே நீ பார்வோனிடத்துக்குப் போ, அவன் நதிக்குப் புறப்பட்டு வருவான்; நீ அவனுக்கு எதிராக நதியோரத்திலே நின்று, சர்ப்பமாக மாறின கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு,

யாத் 7:16. அவனை நோக்கி: வனாந்தரத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லும்படி எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் என்னை உம்மிடத்துக்கு அனுப்பியும், இதுவரைக்கும் நீர் கேளாமற்போனீர்.

யாத் 7:17. இதோ, என் கையில் இருக்கிற கோலினால் நதியில் இருக்கிற தண்ணீர்மேல் அடிப்பேன்; அப்பொழுது அது இரத்தமாய் மாறி,

யாத் 7:18. நதியில் இருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரை எகிப்தியர் குடிக்கக் கூடாமல் அரோசிப்பார்கள்; இதினால் நானே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

யாத் 7:19. மேலும், கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனிடத்தில் உன் கோலை எடுத்துக் கொண்டு எகிப்தின் நீர்நிலைகளாகிய அவர்கள் வாய்க்கால்கள்மேலும் நதிகள் மேலும் குளங்கள்மேலும் தண்ணீர் நிற்கிற எல்லா இடங்கள்மேலும், அவைகள் இரத்தமாகும்படிக்கு, உன்கையை நீட்டு; அப்பொழுது எகிப்து தேசம் எங்கும் மரப்பாத்திரங்களிலும் கற்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.

யாத் 7:20. கர்த்தர் கட்டளையிட்டபடி மோசேயும் ஆரோனும் செய்தார்கள்; பார்வோனுடைய கண்களுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் கோலை ஓங்கி, நதியிலுள்ள தண்ணீரை அடிக்க, நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று.

யாத் 7:21. நதியின் மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியின் தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் கூடாமற் போயிற்று, எகிப்து தேசம் எங்கும் இரத்தமாயிருந்தது.

யாத் 7:22. எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள்; கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப்பட்டது; அவர்களுக்குச் செவிகொடாமற்போனான்.

யாத் 7:23. பார்வோன் இதையும் சிந்தியாமல், தன் வீட்டிற்குத் திரும்பிப் போனான்.

யாத் 7:24. நதியின் தண்ணீர் குடிக்க உதவாதபடியால், குடிக்கத்தக்க தண்ணீருக்காக எகிப்தியர் எல்லாரும் நதியோரத்தில் ஊற்றுத் தோண்டினார்கள்.

யாத் 7:25. கர்த்தர் நதியை அடித்து ஏழுநாள் ஆயிற்று.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது அனுப்பின பத்து வாதைகளில் முதலாவது வாதை தண்ணீர் இரத்தமாய் மாறுவதாகும். கர்த்தர் அந்த வாதையினால் எகிப்து தேசத்தை வாதிக்கிறார். தண்ணீர் இரத்தமாக மாறிப்போகும் வாதை, எகிப்தியருக்கு மிகவும் பயங்கரமானதாயிருக்கிறது. அதனால் அவர்களுக்கு மோசமான விளைவுகள் உண்டாயிற்று.

எகிப்தியருக்கு மீன்கள் பிரதான ஆகாரம். "நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம்" (எண் 11:5).

எகிப்து தேசத்திலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போனதினால், அந்த தேசத்தின் மீன்களெல்லாம் செத்துப்போயிற்று. நதியின் மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியின் தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் கூடாமற் போயிற்று, எகிப்து தேசம் எங்கும் இரத்தமாயிருக்கிறது (யாத் 7:21).

பிற்காலத்தில் எகிப்து தேசத்தின்மீது மற்றொரு வாதை வரும். அப்போது மீன் வளர்க்கிற குளங்களில் தண்ணீர் இருக்காது. அவையெல்லாம் உடைந்துபோகும். "மீன் வளர்க்கிற குளங்களைக் கூலிக்கு அணைக்கட்டுகிற அனைவருடைய அணைக்கட்டுகளும் உடைந்துபோம்" (ஏசா 19:10).

கர்த்தர் தம்முடைய நீதியினால் எகிப்தியரை வாதிக்கிறார். எகிப்து தேசத்தில் ஓடுகிற நைல் நதியே பிரதான நதியாகும். எகிப்தியருக்கு நைல் நதி ஒரு விக்கிரகமாக இருக்கிறது. அவர்கள் நைல் நதியை தங்கள் தெய்வமாக நினைத்து, அதற்கு ஆராதனை செய்கிறார்கள். நைல் நதி எகிப்து தேசத்தை செழிப்பாக்குகிறது. நைல் நதியின் மூலமாக எகிப்தியருக்கு ஏராளமான நன்மைகள் உண்டாயிருக்கிறது. எகிப்தியர்கள் நைல் நதியை சிருஷ்டித்த சிருஷ்டிகரை ஆராதியாமல், சிருஷ்டிக்கப்பட்ட நைல் நதியை ஆராதிக்கிறார்கள்.

கர்த்தர் எகிப்தியரை தண்டிக்கிறார். நைல் நதியிலுள்ள தண்ணீர் எகிப்தியருக்கு தெய்வமாயிருக்கிறது. கர்த்தரோ அந்த தண்ணீரை இரத்தமாக மாற்றுகிறார். இதுவரையிலும் அவர்களுக்கு பிரயோஜனமாயிருந்த நைல் நதியின் தண்ணீர், இப்போது நாற்றம் எடுக்கிறது. நைல் நதியின் தண்ணீரை எகிப்தியரால் குடிக்க முடியவில்லை.

நாம் கர்த்தர் சிருஷ்டித்த ஒரு காரியத்தை நமக்கு தெய்வமாக்கும்போது, கர்த்தர் அந்த சிருஷ்டியையும், அதன் மூலமாக நாம் அனுபவிக்கும் நன்மைகளையும் நம்மை விட்டு நீக்கிப்போடுகிறார். கர்த்தர் தம்முடைய மகிமையை யாரோடும் பகிர்ந்துகொள்ளமாட்டார்.

எகிப்து தேசம் முழுவதுமே நைல் நதியை சார்ந்திருக்கிறது. எகிப்தின் விவசாயங்களும், தொழில்களும், வியாபாரங்களும் நைல் நதியை சார்ந்தே நடைபெறுகிறது.

"மழை வருஷிக்காத எகிப்தின் வம்சம் வராமலும் சேராமலும் போனால், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கவராத ஜாதிகளைக் கர்த்தர் வாதிக்கும் வாதையே அவர்கள்மேலும் வரும்" (சக 14:18).

மோசே நைல் நதியை அடிக்கிறார். நைல் நதியின் தண்ணீர் இரத்தமாக மாறிப்போயிற்று. இது எகிப்து தேசம் முழுவதும் அழிந்துபோவதற்கு அடையாளம். எகிப்தியர் சிவப்பு நிறத்தை விரும்பவதில்லை. அந்த நிறம் அழிவுக்கு அடையாளமாயிருக்கிறது. பார்வோனும் அவனுடைய ரதவீரர்களும் செங்கடலிலே மூழ்கி செத்துப்போனார்கள். இந்த சம்பவத்திற்கு பின்பு எகிப்தியர்கள் சிவப்பு நிறத்தை அருவருத்தார்கள். இப்போதோ கர்த்தர் நைல் நதியை சிவப்பு நிற இரத்தமாக மாற்றுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மோசே நடப்பித்த முதலாவது அற்புதங்களில் ஒன்று தண்ணீரை இரத்தமாக மாற்றினது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நடப்பித்த முதலாவது அற்புதம் தண்ணீரை திராட்சரசமாக மாற்றினது.

மோசேயின் மூலமாக நமக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணமானது மரணத்திற்கும், பயங்கரத்திற்கும் அடையாளம். திராட்சரசமானது கிருபைக்கும் சத்தியத்திற்கும் அடையாளம். திராட்சரசம் களைத்துப்போயிருக்கும் இருதயத்தை சந்தோஷப்படுத்தும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக மனுக்குலத்திற்கு சந்தோஷமும் ஆசீர்வாதமும் வருகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பார்வோனின் இருதயம் கடினமாயிற்று. அவன் ஜனங்களை விடமாட்டேன் என்கிறான்" (யாத் 7:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். பார்வோனுடைய கடினமான இருதயத்தை மென்மையான இருதயமாக மாற்றவேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும் என்பது கர்த்தருக்கு தெரியும்.

இதற்காக கர்த்தர் மோசேயை காலமே பார்வோனிடத்திற்கு போகுமாறு சொல்லுகிறார். பார்வோன் அதிகாலையில் நதிக்கு புறப்பட்டு வருவான். அப்போது மோசே பார்வோனுக்கு எதிராக நதி ஓரத்தில் நிற்கவேண்டும். மோசே தன்னுடைய கையிலே சர்ப்பமாக மாறின கோலை பிடித்துக்கொண்டு நிற்கவேண்டும் (யாத் 7:15).

"சர்ப்பமாக மாறின கோல்" என்னும் இந்த வாக்கியத்தில் சர்ப்பம் என்பதற்கு "நாகாஷ்" என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கு "தன்னீய்ன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை.

கர்த்தர் பார்வோனுடைய ஒவ்வொரு அசைவுகளையும் அறிந்து வைத்திருக்கிறார். பார்வோன் அதிகாலை வேளையிலே நைல் நதிக்கு வந்து, அந்த நதியை ஆராதிப்பதற்காக வருவான். அதிகாலை வேளையிலே அவன் நைல் நதிக்கு தூபம் காண்பிப்பான். அந்த வேளையில் மோசே பார்வோனுக்கு எதிராக நதி ஓரத்தில் நிற்கவேண்டும்.

பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருக்கும் இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ணி அனுப்பிவிடவேண்டும். ஆனால் அவனோ இஸ்ரவேல் புத்திரரை அனுப்பிவிட மறுக்கிறான். அவனுடைய மனம் மாறவேண்டும். கர்த்தர் பார்வோனை உடனே அழித்துப்போடாமல் அவனுடைய மனம் மாற்றமடைவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். கர்த்தருடைய கட்டளையை மோசே பார்வோனுக்கு சொல்லவேண்டும். பார்வோன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்தால், அவனுக்கு எப்படிப்பட்ட தண்டனை கொடுக்கப்படும் என்பதையும் மோசே அவனுக்கு அறிவிக்கவேண்டும்.

மோசே பார்வோனுக்கு சொல்லவேண்டிய வார்த்தைகளை, கர்த்தர் மோசேக்கு வெளிப்படுத்துகிறார். மோசே பார்வோனை நோக்கி, "வனாந்தரத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லும்படி எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் என்னை உம்மிடத்துக்கு அனுப்பியும், இதுவரைக்கும் நீர் கேளாமற்போனீர்" என்றும்,

"இதோ, என் கையில் இருக்கிற கோலினால் நதியில் இருக்கிற தண்ணீர்மேல் அடிப்பேன்; அப்பொழுது அது இரத்தமாய் மாறி, நதியில் இருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரை எகிப்தியர் குடிக்கக் கூடாமல் அரோசிப்பார்கள்; இதினால் நானே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (யாத் 7:16-18) என்றும் சொல்லவேண்டும்.

மோசேயும் பார்வோனும் நைல் நதி ஓரமாக நின்றுகொண்டிருக்கிறார்கள். மோசே நைல் நதியின் ஓரத்திலே நின்றுகொண்டு, பார்வோனுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். பார்வோன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவர்கள் எந்த நதியின் ஓரத்திலே நிற்கிறார்களோ, அந்த நதியிலுள்ள தண்ணீர் இரத்தமாய் மாறும்.

நைல் நதியின் தண்ணீர் இரத்தமாய் மாறும்போது அதை ஏதோ ஒரு இயற்கையின் மாற்றம் என்றோ அல்லது ஏதோ ஒரு காரணத்தினால் நதியின் தண்ணீர் சிவப்பு நிறமாக மாற்றிற்று என்றோ பார்வோன் நினைத்துவிடக்கூடாது. கர்த்தரே நைல் நதியின் தண்ணீரை இரத்தமாக மாற்றினார் என்பதை பார்வோன் உணரவேண்டும். இதற்காகவே கர்த்தர் மோசேயின் மூலமாக பார்வோனுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார். எபிரெயரின் தேவன் வல்லமையுள்ளவர். பார்வோனுக்கு கர்த்தருடைய வல்லமையைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவன் கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டும். நைல் நதியின் தண்ணீர் இரத்தமாய் மாறி, எகிப்தியர் அந்த தண்ணீரை குடிக்கக்கூடாமல் அரோசிக்கும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை பார்வோன் அறிந்துகொள்ளவேண்டும்.

கர்த்தர் பார்வோனுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய ஒவ்வொரு வார்த்தையும், அவருடைய ஒவ்வொரு கிரியையும் நீதியும் நியாயமுமுள்ளதாயிருக்கும். கர்த்தர் ஒருவனை காயப்படுத்துவதற்கு முன்பாக அவனுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

ஒருவரும் அழிந்துபோவது கர்த்தருடைய சித்தமல்ல. எல்லோரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி ஜீவனைப்பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். இதற்காகவே கர்த்தர் பாவிகளை உடனே தண்டித்துவிடாமல், அவர்களை உடனே நிர்மூலம்பண்ணிவிடாமல், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்று நீடிய பொறுமையோடு காத்திருக்கிறார். பாவிகளோ கர்த்தருக்கு விரோதமாகத் துணிகரமாய்ப் பாவம் செய்து, தேவனுடைய கிருபைகளையும், அவருடைய பொறுமைகளையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

மோசேயின் கையிலுள்ள கோல் இப்போது ஆரோனின் கையிலே இருக்கிறது. அந்தக் கோலை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனிடத்தில் உன் கோலை எடுத்துக் கொண்டு எகிப்தின் நீர்நிலைகளாகிய அவர்கள் வாய்க்கால்கள்மேலும் நதிகள் மேலும் குளங்கள்மேலும் தண்ணீர் நிற்கிற எல்லா இடங்கள்மேலும், அவைகள் இரத்தமாகும்படிக்கு, உன்கையை நீட்டு; அப்பொழுது எகிப்து தேசம் எங்கும் மரப்பாத்திரங்களிலும் கற்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்கும் என்று சொல்" (யாத் 7:19) என்று சொல்லுகிறார்.

தேவனுடைய சர்வவல்லமை இங்கு வெளிப்படுகிறது. கர்த்தரே சர்வசிருஷ்டிகர். எல்லா சிருஷ்டிகளும் நமக்கு தண்ணீராகவோ அல்லது இரத்தமாகவோ இருக்கிறது. சூரியனுக்கு கீழே உள்ள சிருஷ்டிகளெல்லாவற்றிலும் ஒரு சில மாற்றங்கள் உண்டாகும். அந்த மாற்றங்களை நாம் அன்றாடம் கவனித்துக்கொண்டிருக்கிறோம்.

ஒரு நதியின் தண்ணீர் கலங்கலாகயிருக்கும். அல்லது தெளிவாகயிருக்கும். ஆனால் இங்கோ கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு, நைல் நதியின்மீது வருகிறது. அந்த நதியின் தண்ணீர் முழுவதும் இரத்தமாய் மாறுகிறது.

நைல் நதியின் தண்ணீர் மாத்திரம் என்று அல்லாமல், எகிப்தின் நீர்நிலைகளாகிய அவர்கள் வாய்க்கால்கள்மேலும் நதிகள் மேலும் குளங்கள்மேலும் தண்ணீர் நிற்கிற எல்லா இடங்கள்மேலும் தண்ணீர் இரத்தமாக மாறுகிறது. தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பு சீக்கிரத்தில் வெளிப்படுகிறது.

கர்த்தர் தண்ணீரை மனுஷருக்கு ஆசீர்வாதமாக சிருஷ்டித்திருக்கிறார். மனுக்குலத்திற்கு தண்ணீர் மூலமாக ஏராளமான நன்மைகள் உண்டாகிறது. ஆனால் மனுஷருடைய பாவமோ, நன்மையை தீமையாக மாற்றுகிறது. ஆசீர்வாதத்தை சாபமாக மாற்றுகிறது. எகிப்து தேசத்திலுள்ள மொத்த தண்ணீரையும், பார்வோனுடைய பாவம், இரத்தமாக மாற்றுகிறது.

நம்முடைய அன்றாட ஜீவியத்தில், நமக்கு நன்மையாயிருந்த காரியங்கள் தீமையாக மாறும்போது, நம்மை நாமே சோதித்துப் பார்க்கவேண்டும். நமக்கு வந்துள்ள பிரச்சனைகளுக்கு நம்முடைய பாவம் காரணமாயிருக்கிறதா என்பதை ஆராய்ந்து அறியவேண்டும். பார்வோனுடைய பாவம் நைல் நதியின் தண்ணீரை இரத்தமாக மாற்றினதுபோல, நம்முடைய பாவம் நம்முடைய ஜீவியத்தில், சந்தோஷத்தை துக்கமாக மாற்றும். ஆசீர்வாதத்தை சாபமாக மாற்றும். ஆரோக்கியத்தை வியாதியாக மாற்றும். நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், நாம் கர்த்தருடைய கிருபைகளை மறுபடியும் பெற்றுக்கொள்ளலாம்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. மோசேயும் ஆரோனும் கர்த்தர் கட்டளையிட்டபடி செய்கிறார்கள்; பார்வோனுடைய கண்களுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் அவர்கள் கோலை ஓங்கி, நதியிலுள்ள தண்ணீரை அடிக்க, நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று (யாத் 7:20).

நதியின் மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியின் தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் கூடாமற் போயிற்று, எகிப்து தேசம் எங்கும் இரத்தமாயிருக்கிறது (யாத் 7:21). ஆனாலும் பார்வோன் மனம் மாறவில்லை. அவனுடைய இருதயம் கடினமாயிற்று. அவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பிவிட மறுத்துவிடுகிறான்.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது முதலாவது வாதையை அனுப்பியிருக்கிறார். எகிப்து தேசமெங்கும் இரத்தமாயிருக்கிறது. கர்த்தருடைய கோபத்தினாலும், அவருடைய நியாயத்தீர்ப்பினாலும் எகிப்து தேசத்தின்மீது இந்த வாதை வந்திருக்கிறது என்பதை பார்வோன் அங்கீகரிக்க மறுக்கிறான்.

மோசேயின் கையிலுள்ள கோல் சர்ப்பமாக மாறினபோது, அது ஒரு மந்திர வித்தை என்று பார்வோன் நினைத்தான். அதுபோலவே இப்போதும், நைல் நதியின் தண்ணீர் இரத்தமாய் மாறியது மற்றொரு மந்திரவித்தை என்று பார்வோன் நினைக்கிறான். பார்வோன் எகிப்து தேசத்திலுள்ள மந்திரவாதிகளை வரவழைத்து, மோசேயும் ஆரோனும் தண்ணீரை இரத்தமாக மாற்றியதுபோல அவர்களையும் மாற்றுமாறு சொல்லுகிறான்.

எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்கிறார்கள்; கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப்படுகிறது; பார்வோன் அவர்களுக்குச் செவிகொடாமற்போகிறான். பார்வோன் இதையும் சிந்தியாமல், தன் வீட்டிற்குத் திரும்பிப் போகிறான் (யாத் 7:22,23).

எகிப்தின் மந்திரவாதிகளால் தண்ணீரை இரத்தமாக மாற்ற முடிகிறது. ஆனால் அவர்களால் இரத்தத்தை மறுபடியும் தண்ணீராக மாற்ற முடியவில்லை. பார்வோன் இதை சிந்தித்துப் பார்க்கவில்லை. பார்வோனுடைய மனக்கண்கள் குருடாயிருக்கிறது. அவனுடைய இருதயம் கடினமாயிருக்கிறது.

மந்திரவாதிகளால் தண்ணீரை இரத்தமாக மாற்ற முடிகிறது. அவர்களால் அதை மாத்திரமே செய்ய முடிகிறது. கர்த்தருடைய வல்லமையோ தண்ணீரை இரத்தமாகவும் மாற்றும். அந்த இரத்தத்தை மறுபடியும் தண்ணீராகவும் மாற்றும். இதுவே தேவனுடைய தெய்வீக வல்லமை. கர்த்தருடைய வல்லமை பரிபூரணமானது. அதுவே மெய்யானது. எகிப்தின் மந்திரவாதிகளுடைய வல்லமையானது அறைகுறையானது. அது மாய்மாலமானது. அது மனுஷரை வஞ்சிக்கக்கூடியது.

எகிப்தியரால் நைல் நதியின் தண்ணீரை குடிக்க முடியவில்லை. எகிப்து தேசமெங்கும் இரத்தமாயிருக்கிறது. எகிப்தியருக்கு மாத்திரமல்ல, எல்லா மனுஷருக்குமே தண்ணீர் அத்தியாவசிய தேவை. கர்த்தர் நைல் நதியின் தண்ணீரை இரத்தமாக மாற்றியிருக்கிறார். எகிப்தியர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவதற்கு பதிலாக, வேறு ஏதாவது வழியில், தங்களுக்கு தண்ணீர் கிடைக்குமா என்று தேடிப்பார்க்கிறார்கள்.

நதியின் தண்ணீர் குடிக்க உதவாதபடியால், குடிக்கத்தக்க தண்ணீருக்காக எகிப்தியர் எல்லாரும் நதியோரத்தில் ஊற்றுத் தோண்டுகிறார்கள் (யாத் 7:24) அவர்கள் நைல் நதி ஓரத்தில் ஒரு சில இடங்களில் தண்ணீர் ஊற்றுக்களை கண்டுபிடிக்கிறார்கள்.

பார்வோன் தேவனுடைய செய்தியை மறுபடியும் புறக்கணித்து விடுகிறான். அவன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், தனக்கு அழிவைத் தேடிக் கொள்கிறான்.

எகிப்தியர் எல்லாரும் நதியோரத்தில் ஊற்றுத் தோண்டுகிறார்கள். மோசே ஏற்கெனவே நதியை இரத்தமாக மாற்றிவிட்டார். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்களுக்கு இரத்தமில்லாத நல்ல தண்ணீர் வேண்டும். எகிப்தியர் எல்லோரும் நதியோரத்தில் ஊற்றுத் தோண்டி, நல்ல தண்ணீரைக் காண்கிறார்கள். எகிப்தின் மந்திரவாதிகள் இந்தத் தண்ணீரை இரத்தமாக மாற்றுகிறார்கள்.

பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டிருந்தாலும், கர்த்தர் எகிப்தியர் மீது கிருபையும் மனதுருக்கமுமுள்ளவராகவே இருக்கிறார். கர்த்தர் எகிப்து தேசம் முழுவதும் தண்ணீரை இரத்தமாக மாற்றுகிறார். இது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு. ஆனாலும் கர்த்தர் நைல் நதி ஓரத்தில் ஒரு சில ஊற்றுக்கண்களையும் அவர்களுக்கு திறந்துகொடுக்கிறார். இது கர்த்தருடைய கிருபை. கர்த்தர் எகிப்தியரை தண்டித்தாலும், ஆரம்பத்தில் அவர்களை மொத்தமாய்த் தண்டித்து நிர்மூலம்பண்ணிவிடாமல், அவர்களை மட்டாய்த் தண்டிக்கிறார்.

கர்த்தர் நதியை அடித்து ஏழுநாள் ஆயிற்று. எகிப்து தேசம் முழுவதும் ஏழுநாட்களுக்கு இரத்தமாயிருக்கிறது (யாத் 7:25). இந்த ஏழுநாட்களிலும் பார்வோனும், எகிப்து தேசத்தாரும் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆனாலும் இந்த நாட்களில் பார்வோன் தன்னுடைய தப்பிதத்திற்கு மனம் வருத்தப்பட்டு, மோசேயினிடத்தில் வந்து, எகிப்து தேசத்திலுள்ள இரத்தத்தை தண்ணீராக மாற்றுமாறு விண்ணப்பம்பண்ணவில்லை. பார்வோனுடைய இருதயம் மிகவும் கடினமாயிருக்கிறது. அவன் தன்னுடைய தவறுகளுக்கு மனந்திரும்புவதற்கு பதிலாக, அதனால் வரும் தண்டனைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கிறான்.

எகிப்து தேசத்தின்மீதும், எகிப்து தேசத்தார்மீதும் வந்த நியாயத்தீர்ப்புக்கள், எகிப்தியரின் தெய்வங்கள் மீது வந்த நியாயத்தீர்ப்பாகவே இருக்கிறது. பார்வோனும், எகிப்தியரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை தேவன் என்று அங்கீகரியாமல், தங்களுடைய தெய்வங்களை தேவர்கள் என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை எகிப்தியர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இதற்காகவே கர்த்தர் எகிப்தியர்கள்மீது வாதைகளை அனுப்புகிறார். இந்த வாதைகள் எல்லாம் எகிப்தியரின் தெய்வங்கள்மீது வந்த கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளாகும்.

விக்கிரகாராதனை செய்யும் ஒரு தேசத்திற்கு அழிவு வந்தால் அந்தப் பழி அனைத்தும் அந்தத் தேசத்தின் விக்கிரகங்களையே சேரும். அந்தத் தெய்வங்கள் தங்களுடைய ஜனங்களைத் தண்டிக்கின்றன. அல்லது அந்தத் தேசத்தை விட்டு, ஓடிப்போய் விட்டன என்று ஜனங்கள் நினைப்பார்கள். சில சமயங்களில் வல்லமையான மற்ற தெய்வங்கள் இந்தத் தேசத்தின் தெய்வங்களை மேற்கொண்டு ஜெயித்தன என்றும், தங்களுடைய தெய்வங்களுக்கு வல்லமையில்லை என்றும், நினைப்பார்கள். எகிப்து தேசத்தில் தேவன் பத்து வாதைகளை அனுப்புகிறார். இந்த வாதைகள் அனைத்தும், எகிப்தியரின் தெய்வங்கள்மீது நியாயத்தீர்ப்பாக அனுப்பப்பட்டவையாகும் (ஏசா 37:6-13).

1. எகிப்தியர்கள் நைல்நதியை ஒரு தெய்வமாக வழிபட்டார்கள். இதற்கு பல்வேறு பெயர்களும், பல்வேறு அடையாளங்களும் உண்டு. தெய்வங்களின் பிதா, ஜீவியத்தின் பிதா என்றெல்லாம் எகிப்தியர் நைல் நதியை அழைத்தார்கள். மேலும் எகிப்தியர் இரத்தத்தை அருவருத்தார்கள். தங்களுடைய புனித நதி இரத்தமாக மாறியபோது, எகிப்தியர் அனைவரும் பயந்திருப்பார்கள். தங்களுடைய நதி தெய்வம் வல்லமை இழந்து, ஏன் இரத்தமாயிற்று என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பிப் போயிருப்பார்கள் (யாத் 7:19-21).

2. எகிப்து தேசத்தில் தவளையும், ஒரு தெய்வமாகக் கருதப்பட்டது. ஏராளமான தவளைகள் எகிப்திற்கு வந்தன. இவற்றைக் கண்டு, எகிப்தியர் அருவருப்படைந்தார்கள். தவளை தங்கள் தெய்வமாக இருந்த போதிலும், அவை திரளாக வந்தபடியினால், தங்களுடைய தெய்வத்தையே அருவருக்கிறார்கள் (யாத் 8:5-6).

3. புழுதியிலிருந்து பேன்களும் (யாத் 8:16-19), திரளான வண்டு ஜாதிகளும் (சங் 78:45), எகிப்து தேசத்தின்மீது வருகிறது. எகிப்தியரின் தெய்வங்களினால் அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. அந்தத் தெய்வங்களின் வல்லமையையும் மீறி, எகிப்து தேசம் முழுவதையும் பேன்களும், வண்டு ஜாதிகளும் நிரப்பிற்று.

4. எகிப்தியர் விக்கிரகாராதனை செய்தாலும், தங்களுடைய விக்கிரகக் கோவில்களைச் சுத்தமாக வைத்திருப்பார்கள். எகிப்து தேசம் முழுவதும் வண்டு ஜாதிகள் வந்து நிரம்புகிறது. (யாத் 8:24) பெயல்செபூல் வண்டுகளின் தெய்வம் என்று கருதப்பட்டன. எகிப்து ஜனங்களை அவனால் வண்டுகளிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை. அவனுக்கு வல்லமையில்லை என்பது இதனால் தெளிவாயிற்று.

5. எகிப்தியர்கள் தங்கள் மிருகஜீவன்களைப் புனிதமானவைகளாகக் கருதினார்கள். அவைகளின்மீது கொடிய கொள்ளை நோய் வந்தது. (யாத் 9:5-7) எகிப்தியரின் தெய்வங்களினால் அவர்களுடைய புனிதமான மிருகஜீவன்களைப் பாதுகாக்க முடியவில்லை. எகிப்தியர் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், ஆறுகள், மலைகள், மிருகஜீவன்கள், தாவர வகைகள் ஆகிய எல்லாவற்றையும் தெய்வங்களாக வழிபட்டார்கள். எகிப்தியர்கள் மிருகங்களைப் பலியிட மாட்டார்கள். தங்களுடைய மிருக ஜீவன்களுக்குக் கொடிய வாதைகள் வந்ததினால், தங்கள்மீது ஏதோ ஒரு தெய்வத்திடமிருந்து நியாயத்தீர்ப்பு வந்திருப்பதாகக் கருதினார்கள். அந்தத் தெய்வத்திற்கு முன்பாக எகிப்தியரின் தெய்வத்திற்கு வல்லமையில்லை என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

6. எரிபந்தமான கொப்புளங்கள் எகிப்து தேசத்து மனுஷர்மீதும், மிருகஜீவன்கள் மீதும் எழும்பப்பண்ணிற்று. (யாத் 9:9) இதுபோன்ற வாதைகளிலிருந்து தங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று எகிப்து தேசத்தார் தங்கள் தெய்வங்களிடம் வழிபட்டார்கள். ஆனால் அந்தத் தெய்வங்களால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. (யாத் 9:8).

7. எகிப்து தேசமெங்கும் அக்கினியும், கல்மழையும் பொழிந்தது. (யாத் 9:22-26) எகிப்தியர்கள் தண்ணீரையும், அக்கினியையும், காற்றையும், பூமியையும், தாவரவர்க்கங்களையும் தெய்வங்களாகக் கருதி அவற்றை வழிபட்டார்கள். அக்கினியும், கல்மழையும் பயிர் வகைகளையெல்லாம் அழித்துப் போட்டது. வெளியின் மிருகங்களையெல்லாம் முறித்துப் போட்டது. எகிப்தியர்கள் தங்களுடைய தெய்வமென்று கருதியவைகளெல்லாம் அக்கினியினாலும், கல்மழையினாலும் அழிந்தன. எகிப்தியர்கள் அக்கினியையும், வெளிச்சத்தையும் ஈசிஸ், ஓசிரிஸ் என்னும் தெய்வங்களாகப் பாவித்து அவற்றை வழிபட்டார்கள். எகிப்தியருடைய தெய்வங்களால் தங்களைக் காத்துக் கொள்ள முடியவில்லை. எகிப்திய ஜனங்களுக்கு அவைகளால் உதவி புரியவும் முடியவில்லை.

8. எகிப்தியரின் சேராபீஸ் என்னும் தெய்வம் பயிர் வகைகளை வெட்டுக் கிளிகளிடமிருந்து பாதுகாக்கும் என்று எகிப்தியர் நம்பினார்கள் (யாத் 10:12-15) ஆனால் அந்தத் தெய்வத்தால் வெட்டுக்கிளிகளை ஒன்றும் செய்ய முடியவில்லை. தேவனுடைய கட்டளைப்படி அவை வந்தன. தேவனுடைய கட்டளைப்படியே அவை செயல்படுகின்றன. எகிப்தியரின் தெய்வத்திற்கு அவை கீழ்ப்படியவில்லை. எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சர்வ வல்லமையுள்ள தேவன். எகிப்தியரின் தெய்வங்கள் மாயையானவை (யாத் 10:4).

9. எகிப்தியர் சூரியனைத் தங்கள் தெய்வமாக ஆராதனை செய்தார்கள். சூரிய தெய்வம் தங்களை இருளிலிருந்து பாதுகாத்து வெளிச்சத்தைத்தரும் என்பது எகிப்தியரின் நம்பிக்கை. ஆனால் இந்தத் தெய்வத்தால் எகிப்தியருக்கு வந்த காரிருளிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுக்கு வெளிச்சத்தைத் தரமுடியவில்லை. (யாத் 10:21-23)

10. எகிப்தியரின் தெய்வங்கள் எகிப்தியரையும், அவர்களுடைய மிருகஜீவன்களையும் பாதுகாக்க வேண்டும். எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளுக்கு மரணம் நேர்ந்த போது, எகிப்தியரின் தெய்வங்களால் அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. (யாத் 12:29-30) எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகள் கர்த்தருடைய கட்டளைப்பிரகாரம் மாண்டுபோனார்கள். எகிப்தியரின் தெய்வத்தினால் இஸ்ரவேலின் தேவனுக்கு எதிராக எதிர்த்து நிற்க முடியவில்லை.

## 8 அதிகாரம்

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது மேலும் சில வாதைகளை வரப்பண்ணுகிறார். எகிப்து தேசத்திலே தவளைகள் திரளாய்ப் பெருகுகிறது. அவை வீடுகளிலும் நிறைந்திருக்கிறது (யாத் 8:1-4).

ஆரோன் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், தன் கையை நீட்டியபோது, தவளைகள் வந்து எகிப்து தேசத்தை மூடிக்கொள்கிறது (யாத் 8:5,6).

எகிப்து தேசத்திலுள்ள மந்திரவாதிகளும், தங்கள் மந்திரவித்தையினால், எகிப்து தேசத்தின்மேல் தவளைகளை வரப்பண்ணுகிறார்கள் (யாத் 8:7).

எகிப்து தேசத்திலே தவளைகள் நிரம்பியதினால், பார்வோன் மனந்திரும்புகிறான். மோசேயும் ஆரோனும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, தவளைகள் ஜலங்களை விட்டு நீங்கி நதியில் மாத்திரம் இருக்கிறது (யாத் 8:8-14).

ஆனால் பார்வோனோ மறுபடியும் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான் (யாத் 8:15). கர்த்தர் எகிப்து தேசத்திலே பேன்கள் மூலமாக மற்றும் ஒரு வாதையை அனுப்புகிறார் (யாத் 8:16,17). எகிப்து தேசத்தின் மந்திரவாதிகளால் பேன்களை பிறப்பிக்க முடியவில்லை (யாத் 8:18). பார்வோனுடைய இருதயம் இன்னும் கடினப்படுகிறது (யாத் 8:19).

எகிப்து தேசத்தின்மேல் வண்டுகள் அனுப்பப்படும் என்று பார்வோனுக்கு எச்சரிப்பின் வார்த்தைகள் சொல்லப்படுகிறது (யாத் 8:20,21). வண்டுகள் கோசேன் நாட்டிலே வராது (யாத் 8:22,23). மகாதிரளான வண்டுகள் எகிப்து தேசம் முழுவதும் வருகிறது. தேசம் வண்டுகளினாலே கெட்டுப்போயிற்று (யாத் 8:24).

தனக்காக வேண்டுதல் செய்யுமாறு பார்வோன் மோசேயிடம் கேட்டுக்கொள்கிறான். பார்வோன் மறுபடியும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தக்கூடாது என்று மோசே அவனை எச்சரிக்கிறார் (யாத் 8:25-29).

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் வண்டு ஜாதிகளை எகிப்து தேசத்தைவிட்டு நீங்கும்படி செய்கிறார் (யாத் 8:30,31). பார்வோனோ இந்த முறையும் தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான் (யாத் 8:32).

### தவளைகள்
### யாத் 8:1-15

**யாத் 8:1. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு.**

**யாத் 8:2. நீ அவர்களை அனுப்பிவிடமாட்டேன் என்பாயாகில், உன் எல்லை அடங்கலையும் தவளைகளால் வாதிப்பேன்.**

**யாத் 8:3. நதி தவளைகளைத் திரளாய்ப் பிறப்பிக்கும்; அவைகள் உன் வீட்டிலும் உன் படுக்கை அறையிலும், உன் மஞ்சத்தின் மேலும், உன் ஊழியக்காரர் வீடுகளிலும், உன் ஜனங்களிடத்திலும், உன் அடுப்புகளிலும், மாப்பிசைகிற உன் தொட்டிகளிலும் வந்து ஏறும்.**

**யாத் 8:4. அந்தத் தவளைகள் உன்மேலும், உன் ஜனங்கள் மேலும், உன் ஊழியக்காரர் எல்லார்மேலும் வந்து ஏறும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.**

**யாத் 8:5. மேலும் கர்த்தர் மோசேயினிடத்தில் நீ ஆரோனை நோக்கி: நீ உன் கையில் இருக்கிற கோலை நதிகள் மேலும் வாய்க்கால்கள் மேலும் குளங்கள்மேலும் நீட்டி, எகிப்து தேசத்தின்மேல் தவளைகளை வரும்படி செய் என்று சொல் என்றார்.**

யாத் 8:6. அப்படியே ஆரோன் தன் கையை எகிப்திலுள்ள தண்ணீர்கள்மேல் நீட்டினான்; அப்பொழுது தவளைகள் வந்து, எகிப்து தேசத்தை மூடிக்கொண்டது.

யாத் 8:7. மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்து, எகிப்து தேசத்தின்மேல் தவளைகளை வரப்பண்ணினார்கள்.

யாத் 8:8. பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: அந்தத் தவளைகள் என்னையும் என் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள்; கர்த்தருக்கு பலியிடும்படி ஜனங்களைப் போகவிடுவேன் என்றான்.

யாத் 8:9. அப்பொழுது மோசே பார்வோனை நோக்கி: தவளைகள் நதியிலே மாத்திரம் இருக்கத்தக்கதாய் அவைகளை உம்மிடத்திலும் உம்முடைய வீட்டிலும் இல்லாமல் ஒழிந்து போகும்படி செய்ய, உமக்காகவும் உம்முடைய ஊழியக்காரருக்காகவும் உம்முடைய ஜனங்களுக்காகவும் நான் விண்ணப்பம்பண்ணவேண்டிய காலத்தைக் குறிக்கும் மேன்மை உமக்கே இருப்பதாக என்றான்.

யாத் 8:10. அதற்கு அவன்: நாளைக்கு என்றான். அப்பொழுது இவன்: எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது.

யாத் 8:11. தவளைகள் உம்மையும் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரரையும் உம்முடைய ஜனங்களையும் விட்டு நீங்கி, நதியிலே மாத்திரம் இருக்கும் என்றான்.

யாத் 8:12. மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டுப் புறப்பட்டார்கள். பார்வோனுக்கு விரோதமாக வரப்பண்ணின தவளைகள் நிமித்தம் மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டான்.

யாத் 8:13. கர்த்தர் மோசேயின் சொற்படி செய்தார்; வீடுகளிலும் முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த தவளைகள் செத்துப் போயிற்று.

யாத் 8:14. அவைகளைக் குவியல் குவியலாகச் சேர்த்தார்கள்; அதினால் பூமியெங்கும் நாற்றம் எடுத்தது.

யாத் 8:15. இல்குவுண்டாயிற்றென்று பார்வோன் கண்டபோதோ, தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, அவர்களுக்குச் செவிகொடாமற்போனான்; கர்த்தர் சொல்லியிருந்தபடி ஆயிற்று.

பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருக்கு ஆராதனை செய்ய அனுப்ப மறுக்கிறான். அவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான். கர்த்தர் எகிப்து தேசத்தின்மீதும், அந்த தேசத்து ஜனங்கள்மீதும் ஒவ்வொரு வாதையாக அனுப்புகிறார்.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மேல் தவளைகள், பேன்கள், வண்டுகள் ஆகியவற்றை அனுப்புகிறார். இவையெல்லாம் எகிப்தியருக்கு மிகுந்த வாதைகளாகயிருக்கிறது.

பார்வோனோ தற்காலிகமாக மனந்திரும்புகிறான். ஆனாலும் அவனுடைய இருதயம் மறுபடியும் மறுபடியும் கடினப்படுகிறது. அவன் இஸ்ரவேல் புத்திரரை அனுப்ப மறுக்கிறான்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவர் யானைகளைப்போல பெரிய மிருகங்களையும் சிருஷ்டிக்கிறார். அதே கர்த்தர், பேன்களைப்போல சிறிய வஸ்துக்களையும் சிருஷ்டிக்கிறார். கர்த்தருடைய சிருஷ்டிக்கும் வல்லமையே சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டிக்கிறது. இவையெல்லாம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக சிருஷ்டிக்கப்படுகிறது.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன் இருதயத்தில் பெருமையோடும், அகந்தையோடும் இருக்கிறான். அவனுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. கர்த்தர் பார்வோனை தண்டிப்பதற்கு மிகப்பெரிய மிருகங்களை பயன்படுத்தாமல், தவளைகள், பேன்கள், வண்டுகள் போன்ற மிகவும் சிறிய, சாதாரண வஸ்துக்களை பயன்படுத்துகிறார். பார்வோன் எகிப்து தேசத்திற்கு ராஜாவாகயிருந்தாலும், அவன் தவளைகளுக்கும், பேன்களுக்கும், வண்டுகளுக்கும் பயப்படுகிறான். பார்வோனாலும், அவனுடைய பலத்த சேனையாலும், இந்த வஸ்துக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியவில்லை.

பார்வோன் எகிப்து தேசத்திற்கு ராஜாவாகயிருந்தாலும், அவனுடைய கையில் செங்கோல் இருந்தாலும், பார்வோனுக்கு முன்பாக எகிப்து தேசத்தார் எல்லோரும் முழங்கால் படியிட்டு அவனை வணங்கினாலும், பார்வோன் கர்த்தருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு தன்னை தாழ்த்தி, அவரை ஆராதிக்கவேண்டும். பார்வோனுடைய கடினமான இருதயத்தை உடைப்பதற்காகவும், அவனை தாழ்த்துவதற்காகவும் கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது ஒவ்வொரு வாதையாக அனுப்புகிறார்.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது தவளைகளை வரப்பண்ணுவதற்கு முன்பாக, பார்வோனை எச்சரிக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு. நீ அவர்களை அனுப்பிவிடமாட்டேன் என்பாயாகில், உன் எல்லை அடங்கலையும் தவளைகளால் வாதிப்பேன்" (யாத் 8:1,2) என்று எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லச்சொல்லுகிறார்.

பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. அவன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். பார்வோன் பிடிவாதம்பண்ணக்கூடாது. அவன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் ஜனங்களை, கர்த்தருக்கு ஆராதனை செய்ய அனுப்பிவிடவேண்டும். பார்வோனோ தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரை அனுப்ப மறுத்துவிடுகிறான்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் பாவிகளை தண்டிக்கிறார். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அதற்காக கர்த்தர் பொறுமையோடு காத்திருக்கிறார். பாவிகளை தண்டிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் பாவிகளை தண்டிப்பதற்கு முன்பாக, அவர்களுடைய பாவத்தினால் அவர்களுக்கு வரப்போகும் தண்டனையைப்பற்றி அவர்களுக்கு எடுத்து சொல்லி, அவர்களை எச்சரிக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு விலகி மனந்திரும்பினால், தண்டனைக்கு தப்பித்துக்கொள்ளலாம். பாவிகள் தங்கள் பாவத்தில் நிலைத்திருந்தால், கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை தண்டிப்பார். அவர்களால் கர்த்தருடைய தண்டனைக்கு தப்பிக்க முடியாது. பாவத்தின் சம்பளம் மரணம்.

கர்த்தர் பார்வோனை எச்சரிக்கும்போது, அவன் இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருக்கு ஆராதனை செய்ய அனுப்பவில்லையென்றால், கர்த்தர் அவனுடைய எல்லை அடங்கலை தவளைகளால் வாதிப்பதாக சொல்லுகிறார். பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை அனுப்பிவிட்டால், கர்த்தர் எகிப்து தேசத்தை தவளைகளால் வாதிக்கமாட்டார்.

கர்த்தருடைய வாதை எகிப்து தேசத்திலே மிகவும் பயங்கரமாயிருக்கும். கர்த்தர் பார்வோனிடத்தில் "தவளைகளால் வாதிப்பேன்" என்று சொல்லும்போது, எகிப்து தேசத்தில் ஒன்று அல்லது இரண்டு தவளைகள் வரும் என்பது பொருளல்ல. தவளைகள் திரளாய் வரும். அவை எகிப்து தேசத்தையே மூடும்.

எகிப்து தேசத்திலே தவளைகள் மூலமாக எப்படிப்பட்ட வாதைகள் வரும் என்பதையும், கர்த்தர் மோசே மூலமாக, பார்வோனுக்கு எடுத்து சொல்லுகிறார்.

நதி தவளைகளைத் திரளாய்ப் பிறப்பிக்கும்; அவைகள் பார்வோனுடைய வீட்டிலும் அவன் படுக்கை அறையிலும், அவன் மஞ்சத்தின் மேலும், அவன் ஊழியக்காரர் வீடுகளிலும், அவன் ஜனங்களிடத்திலும், அவன் அடுப்புகளிலும், மாப்பிசைகிற அவன் தொட்டிகளிலும் வந்து ஏறும். அந்தத் தவளைகள் பார்வோன்மேலும், அவன் ஜனங்கள் மேலும், அவன் ஊழியக்காரர் எல்லார்மேலும் வந்து ஏறும் (யாத் 8:3,4).

கிழக்கு தேசங்களில் மண்பானைகளைத் தரையில் புதைத்து, அதற்கடியில் நெருப்பூட்டி, அப்பம் சுடுவது வழக்கம். அந்த அடுப்புப் பானை முழுவதிலும் தவளைகள் நிறைந்திருந்ததால், எகிப்து தேசத்தை ஜனங்களுக்குச் சாப்பிடுவதற்கே வழியில்லை.

பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு செவிகொடுக்காமல் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான். கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது தவளைகள் வருவதற்கு அனுமதி கொடுக்கிறார். கர்த்தர் மோசேயோடு பேசுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தையை ஆரோனிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனை நோக்கி: நீ உன் கையில் இருக்கிற கோலை நதிகள் மேலும் வாய்க்கால்கள் மேலும் குளங்கள்மேலும் நீட்டி, எகிப்து தேசத்தின்மேல் தவளைகளை வரும்படி செய் என்று சொல்" (யாத் 8:5) என்று சொல்லுகிறார்.

மோசேயின் கட்டளைப்படி ஆரோன் நதிகள், வாய்க்கால்கள், குளங்கள் ஆகியவற்றின்மேல் கோலை நீட்டுகிறார். ஏராளமான தவளைகள் உற்பத்தியாகி, அவை எகிப்து தேசத்தையே மூடிக்கொள்கிறது (யாத் 8:5-6).

எகிப்து தேசத்திற்கு விரோதமாக சத்துருக்கள் யுத்தம்பண்ண வருவதுபோல, தவளைகள் திரளாய் வருகிறது. எகிப்தியரால் அந்த தவளைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை. சத்துருக்கள் கோட்டையை முற்றிக்கையிடுவதுபோல, தவளைகள் எகிப்து தேசத்தை முற்றிக்கையிடுகிறது. அவை தேசத்திற்குள்ளே பிரவேசித்து, பார்வோனுடைய மஞ்சத்தின் மேலும் வந்துவிடுகிறது.

வெட்டுக்கிளிகளின் சேனைகளைப்பற்றி யோவேல் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். "அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமானநாள்; விடியற்காலவெளுப்பு பர்வதங்களின் மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை. இனித்தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை" (யோவே 2:2).

"கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். அவரே அவைகளுக்குச் சீட்டுப்போட்டார்; அவருடைய கையே அதை அவைகளுக்கு அளவுநூலால் பகிர்ந்து கொடுத்தது; அவைகள் என்றைக்கும் அதைச் சுதந்தரித்துத் தலைமுறை தலைமுறையாக அதிலே சஞ்சரிக்கும்" (ஏசா 34:16,17).

எகிப்து தேசத்தில் தவளைகள் திரளாயிருப்பது பார்வோனுக்கு பெரிய அதிசயமாக தெரியவில்லை. தன் தேசத்திலுள்ள மந்திரவாதிகளாலும் தவளைகளை வரப்பண்ண முடியும் என்று பார்வோன் நம்புகிறான். அவன் தன்னுடைய இருதயத்தின் கடினத்தினால், கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், தன் மந்திரவாதிகளை நோக்கிப் பார்க்கிறான்.

பார்வோனுடைய மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்து, எகிப்து தேசத்தின்மேல் தவளைகளை வரப்பண்ணுகிறார்கள் (யாத் 8:7). மந்திரவாதிகள் தவளைகளை வரப்பண்ணினாலும், கர்த்தர் வரப்பண்ணின தவளைகளை அவர்களால் வெளியே அனுப்ப முடியவில்லை. கர்த்தருடைய வல்லமைக்கு விரோதமாக மந்திரவாதிகளால் எதிர்த்து நிற்கமுடியவில்லை.

எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் பார்வோனை வஞ்சிப்பதற்காகவே தவளைகளை வரப்பண்ணுகிறார்கள். ஆனால் கர்த்தரோ பார்வோன் மனந்திரும்பவேண்டும் என்பதற்காக தவளைகளை வரப்பண்ணுகிறார். மனுஷரை வஞ்சிக்கிறவர்களை கர்த்தர் அழிப்பார். துன்மார்க்கரை அழிப்பதற்கு பெரிய ஆயுதம் எதுவும் தேவைப்படவில்லை. கர்த்தர் சாதாரண தவளைகளை அனுப்புகிறார். எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனாலும், அந்த தேசத்து மந்திரவாதிகளாலும், கர்த்தர் அனுப்பின தவளைகளை அழிக்க முடியவில்லை.

தவளைகள் மூலமாக எகிப்து தேசத்திற்கு வந்த வாதை மிகவும் பெரிதாயிருக்கிறது. பார்வோனால் இந்த வாதையை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் முதல்முறையாக மோசேயினிடத்தில் உதவி கேட்கிறான். தனக்காக கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுமாறு, பார்வோன் மோசேயினிடத்திலும், ஆரோனிடத்திலும் கேட்டுக்கொள்கிறான்.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, "அந்தத் தவளைகள் என்னையும் என் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள்; கர்த்தருக்கு பலியிடும்படி ஜனங்களைப் போகவிடுவேன்" (யாத் 8:8) என்று சொல்லுகிறான்.

மோசேயும், ஆரோனும் எந்தவிதமான அற்புதங்களையும் செய்வார்கள் என்பது பார்வோனுக்குத் தெரிய வருகிறது. பார்வோனின் மந்திரவாதிகளால் எகிப்தியருக்கு வரும் வாதைகளை அகற்ற முடியவில்லை. ஆகையினால் பார்வோன் எகிப்தின் மந்திரவாதிகளை நம்பவில்லை. எகிப்தியருக்கு வந்த எந்த வாதையையும் எகிப்தின் மந்திரவாதிகள் நீக்கிப்போட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை. தங்கள்மீது வந்த வாதைகள் அகன்றுபோனால், இஸ்ரவேலரை விடுவிப்பதாகப் பார்வோன் கூறுகிறான். ஆனால் பார்வோனோ தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி இஸ்ரவேலரை விடுவிக்க மறுத்துவிடுகிறான். (யாத் 8:8-15).

ஆரோனும் மோசேயும் தனக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுமாறு பார்வோன் அவர்களை கேட்டுக்கொள்கிறான். தவளைகள் எகிப்து தேசத்தை விட்டு வெளியேறிவிட்டால், இஸ்ரவேல் புத்திரரையும் எகிப்து தேசத்தைவிட்டு போகவிடுவதாக பார்வோன் வாக்குப்பண்ணுகிறான்.

மோசே பார்வோனுக்காக ஜெபம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார். எகிப்து தேசத்திலிருக்கிற தவளைகளெல்லாம் கர்த்தர் வரப்பண்ணின தவளைகள். அவை கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும். கர்த்தர் அந்த தவளைகளை எந்த நேரத்திலே எகிப்து தேசத்திற்கு வரவேண்டும் என்று கட்டளையிட்டாரோ, அந்த நேரத்திலே அந்த தவளைகள் எகிப்து தேசத்திலே வந்தது.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக எகிப்து தேசத்திற்கு வந்த தவளைகள், கர்த்தர் மறுபடியும் கட்டளை கொடுக்கும்போது அவை எகிப்து தேசத்தை விட்டு வெளியேறும். எகிப்து தேசத்திற்கு வந்த தவளைகள் தானாய் வந்தவையல்ல. இது எதேச்சையாய் நடைபெற்ற சம்பவமுமல்ல. இவையெல்லாமே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிறது.

கர்த்தர் கட்டளையிட்டால் மாத்திரமே எகிப்து தேசத்திலுள்ள தவளைகள் தங்களை விட்டு நீங்கும் என்பது பார்வோனுக்கு தெரிந்திருக்கிறது. மேலும், மோசே இதற்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினால், கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக்கேட்டு, இந்த தவளைகளை எகிப்து தேசத்தைவிட்டு நீங்கச் செய்வார் என்பதும் பார்வோனுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "அந்த தவளைகள் என்னையும் என் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறான்.

தான் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினால், கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்பது மோசேக்கும் தெரிந்திருக்கிறது. தான் கர்த்தரிடத்தில் எப்பொழுது ஜெபம்பண்ணவேண்டும் என்பதை பார்வோனே தீர்மானித்துக்கொள்ளட்டும் என்று மோசே நினைக்கிறார். கர்த்தருடைய கிரியைகள் ஒவ்வொன்றும், அவருக்கு சித்தமான வேளையில் நிறைவேறும் என்பதை மோசே பார்வோனுக்கு நிரூபிக்க விரும்புகிறார்.

மோசே பார்வோனை நோக்கி: "தவளைகள் நதியிலே மாத்திரம் இருக்கத்தக்கதாய் அவைகளை உம்மிடத்திலும் உம்முடைய வீட்டிலும் இல்லாமல் ஒழிந்து போகும்படி செய்ய, உமக்காகவும் உம்முடைய ஊழியக்காரருக்காகவும் உம்முடைய ஜனங்களுக்காகவும் நான் விண்ணப்பம்பண்ணவேண்டிய காலத்தைக் குறிக்கும் மேன்மை உமக்கே இருப்பதாக" என்று சொல்லுகிறார். அதற்கு பார்வோன், "நாளைக்கு" என்று சொல்லுகிறான் (யாத் 8:9).

தவளைகள் எகிப்து தேசத்தைவிட்டு நாளைக்கு நீங்கவேண்டும் என்பது பார்வோனுடைய விருப்பம். அவனே அந்தக் காலத்தைக் குறித்திருக்கிறான். எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள் நாட்களையும், ஜோசியத்தையும் பார்க்கிறவர்கள். ஒருவேளை நாளைக்கு எந்த அற்புதமும் நடக்காது என்று பார்வோனுடைய மந்திரவாதிகள் சொல்லியிருக்கலாம். பார்வோனும் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு, "நாளைக்கு" என்று சொல்லுகிறான்.

கர்த்தரே எகிப்து தேசத்திலிருந்து தவளைகளை நீக்குகிறவர். மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர் கேட்டுக்கொண்ட பிரகாரம், கர்த்தர் நாளைக்கு, எகிப்து தேசத்திலிருந்து தவளைகளை நீங்கிப்போகும்படி செய்வார் என்று மோசே நம்புகிறார்.

மோசே ஒரு தெய்வீக காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார். மோசே கூறியது ஏதாவது நடைபெறவில்லையென்றால், எகிப்தியர்கள் மோசேயையும், மோசேயின் தேவனையும் நம்பமாட்டார்கள். ஆகையினால், மோசே பார்வோனிடத்தில் கூறும்போது, தான் விண்ணப்பம் பண்ண வேண்டிய காலத்தைப் பார்வோனே தீர்மானம் பண்ணட்டும் என்றுதான் கூறுகிறார். தவளைகள் எப்பொழுது எகிப்து தேசத்தைவிட்டு போகவேண்டுமென்பதை நிர்ணயம் பண்ணுமாறு மோசே பார்வோனை கேட்டுக் கொள்ளவில்லை. பார்வோனும் நாளைக்கு ஜெபம்பண்ணுமாறு கூறுகிறான். கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்கிறார். மோசேயின் சொற்படிச் செய்கிறார். வீடுகளிலும், முற்றங்களிலும், வயல்களிலும் இருந்த தவளைகள் செத்துப்போயிற்று (யாத் 8:10-15).

மோசே ஆரோனை நோக்கி, "எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது. தவளைகள் உம்மையும் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரரையும் உம்முடைய ஜனங்களையும் விட்டு நீங்கி, நதியிலே மாத்திரம் இருக்கும்" (யாத் 8:10,11) என்று சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டுப் புறப்படுகிறார்கள். பார்வோனுக்கு விரோதமாக வரப்பண்ணின தவளைகள் நிமித்தம் மோசே கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறார். கர்த்தர் மோசேயின் சொற்படி செய்கிறார்; வீடுகளிலும் முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த தவளைகள் செத்துப் போயிற்று. அவைகளைக் குவியல் குவியலாகச் சேர்க்கிறார்கள்; அதினால் பூமியெங்கும் நாற்றம் எடுக்கிறது (யாத் 8:12-14).

தேசத்தின்மீது வாதை வந்தபோது, மோசே ஜெபத்தின் மூலமாகவே அவற்றை அகற்றுகிறார். நாமும் ஜெபம் பண்ணித்தான், பிரச்சனைகளைப் போக்க வேண்டும். தேவன் எப்படி கிரியை செய்யப் போகிறார் என்று தெரியவில்லையே என்று நினைத்து பயந்து விடக்கூடாது. நம்மிடம் அவிசுவாசம் இருக்கக்கூடாது. மோசே தேவனை நம்புகிறார். கர்த்தர் அவருடைய விண்ணப்பத்தைக்கேட்டு, அதற்கேற்ற பிரகாரம் கிரியை செய்கிறார். விசுவாசத்தோடு நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் நிச்சயமாகவே நமது ஜெபத்திற்குப் பதில் தருவார்.

பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்துவான் என்று கர்த்தர் மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். இப்போது எகிப்து தேசத்தின் வீடுகளிலும் முற்றங்களிலும், வயல்களிலும் இருந்த தவளைகளெல்லாம் செத்துப்போயிற்று. எகிப்து தேசத்திலே வாதை நீங்கி இலகுவுண்டாயிற்று. இலகுவுண்டாயிற்றென்று பார்வோன் கண்டபோதோ, தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான். அவன் அவர்களுக்குச் செவிகொடாமற்போகிறான்; கர்த்தர் சொல்லியிருந்தபடி ஆயிற்று (யாத் 8:15).

தேவனுடைய கிருபையினால் நம்முடைய இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். இருதயம் புதுப்பிக்கப்படவில்லையென்றால், கர்த்தர் நம்மை எவ்வளவுதான் தண்டித்தாலும், நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்னும் மெய்யான உணர்வு நமக்குள் ஏற்படாது.

கர்த்தர் ஒரு சிலரை அவர்களுடைய பாவங்களினிமித்தமாக தண்டிக்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தண்டனைகளை சகித்துக்கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி, பாவத்தில் நிலைத்திருக்கிறார்கள்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களும், பாவத்தில் நிலைத்திருக்கிறவர்களும், கர்த்தருடைய கிருபையையும், அவருடைய பொறுமையையும் அசட்டைபண்ணுகிறார்கள். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பும்போது, கர்த்தர் நம்மோடு சமாதான உடன்படிக்கை பண்ணுகிறார். அப்போது தேவனோடு ஒப்புரவாகும் சிலாக்கியம் நமக்கு கிடைக்கும். நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பாமல், பாவங்களில் நிலைத்திருப்போமென்றால், நாம் தேவனுக்கு சத்துருக்களாகவே இருப்போம்.

"துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது" (பிர 8:11).

"அவர்களை அவர் கொல்லும்போது அவரைக்குறித்து விசாரித்து, அவர்கள் திரும்பிவந்து தேவனை அதிகாலமே தேடி; தேவன் தங்கள் கன்மலையென்றும், உன்னதமான தேவன் தங்கள் மீட்பர் என்றும், நினைகூர்ந்தார்கள்"

"ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம்பேசி, தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய்சொன்னார்கள். அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை; அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை".

"அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார்; அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப்பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார். அவர்கள் மாம்சமென்றும், திரும்பிவராமல் அகலுகிற காற்றென்றும் நினைவுகூர்ந்தார்" (சங் 78:34-39).

## பேன்கள்
## யாத் 8:16-19

**யாத் 8:16. அப்பொழுது கர்த்தர் மோசேயினிடத்தில்: நீ ஆரோனை நோக்கி: உன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடி; அப்பொழுது அது எகிப்து தேசம் எங்கும் பேன்களாய் போம் என்று சொல் என்றார்.**

**யாத் 8:17. அப்படியே செய்தார்கள்; ஆரோன் தன் கையில் இருந்த தன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடித்தான்; அப்பொழுது அது மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் பேன்களாய் எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் பேன்களாயிற்று.**

**யாத் 8:18. மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் பேன்களைப் பிறப்பிக்கும்படிப் பிரயத்தனஞ் செய்தார்கள்; செய்தும், அவர்களால் கூடாமற்போயிற்று; பேன்கள் மனிதர்மேலும் மிருகஜீவன்கள் மேலும் இருந்தது.**

**யாத் 8:19. அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள். ஆனாலும், கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது; அவர்களுக்குச் செவிகொடாமற்போனான்.**

எகிப்து தேசத்திலே பேன்கள் மூலமாக வாதை உண்டாயிற்று. இந்த வாதை எகிப்து தேசம் எங்கும் வருகிறது. கர்த்தர் மோசேயினிடத்தில், "நீ ஆரோனை நோக்கி: உன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடி; அப்பொழுது அது எகிப்து தேசம் எங்கும் பேன்களாய் போம் என்று சொல்" (யாத் 8:16) என்று சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் அப்படியே செய்கிறார்கள்; ஆரோன் தன் கையில் இருந்த தன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடிக்கிறார்; அப்பொழுது அது மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் பேன்களாய் எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் பேன்களாயிற்று (யாத் 8:17).

தவளைகள் தண்ணீரிலிருந்து வந்தது. இந்தப் பேன்களோ பூமியின் புழுதியிலிருந்து வருகிறது. கர்த்தர் எகிப்தியர்மீது பேன்கள் மூலமாக வாதைகளை அனுப்புவதற்கு முன்பு, அவர் பார்வோனை எச்சரிக்கவில்லை. பார்வோனுக்கு எந்த அளவுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லவேண்டுமோ, அந்த அளவுக்கு கர்த்தர் அவனை எச்சரித்து முடித்துவிட்டார். கர்த்தருடைய ஆவியானவர் மனுஷனோடு எப்போதும் போராடிக்கொண்டிருக்கமாட்டார்.

எகிப்தியர்மீது பேன்கள் மூலமாக வரும் வாதை மூன்றாவது வாதையாகும். இது காலதாமமில்லாமல் உடனே வருகிறது. ஆரோன் தன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடித்தவுடனே எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் பேன்களாயிற்று.

பார்வோன் எப்போதும் போல தன்னுடைய மந்திரவாதிகளைப் பார்க்கிறான். மோசே எதையெல்லாம் செய்கிறாரோ அதையெல்லாம் தன்னுடைய மந்திரவாதிகளாலும் செய்ய முடியும் என்று பார்வோன் நம்புகிறான். மந்திவாதிகளும் எப்போதும்போல தங்களுடைய மந்திர வித்தைகளினால் பேன்களை பிறப்பிக்க மந்திரம் ஓதுகிறார்கள். அவர்கள் தங்கள் மந்திரவித்தையினாலே பேன்களைப் பிறப்பிக்கும்படிப் பிரயத்தனஞ்செய்கிறார்கள்; செய்தும், அவர்களால் கூடாமற்போயிற்று; பேன்கள் மனிதர்மேலும் மிருகஜீவன்கள் மேலும் இருக்கிறது (யாத் 8:18).

மந்திரவாதிகளால் தண்ணீரை இரத்தமாக மாற்றமுடிந்தது. அவர்களால் தவளைகளை வரப்பண்ண முடிந்தது. ஆனால் இப்போது அவர்களால் பேன்களை பிறப்பிக்க முடியவில்லை. பேன்கள் மிகவும் சிறிய வஸ்து. ஆனால் அந்த மந்திரவாதிகளால் சிறிய வஸ்துவாகிய பேன்களைக்கூட பிறப்பிக்க முடியவில்லை. அப்போது அவர்கள் தங்களுடைய மாய்மாலத்தையும், கர்த்தருடைய தெய்வீக வல்லமையையும் புரிந்துகொள்கிறார்கள்.

மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி, "இது தேவனுடைய விரல்" என்று சொல்லுகிறார்கள் (யாத் 8:19). கர்த்தருடைய சர்வவல்லமையையும், அவருடைய சர்வஆளுகையையும் அவருடைய சத்துருக்கள் அங்கீகாரம்பண்ணி அறிக்கை செய்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே காரியங்கள் நடைபெறும் என்பதை எகிப்தின் மந்திரவாதிகள் புரிந்துகொள்கிறார்கள். அவர்கள் "தேவனுடைய விரல்" என்று சொல்லும் வார்த்தைக்கு "தேவனுடைய வல்லமை" என்று பொருள்.

எகிப்தின் மந்திரவாதிகள் மோசேயின் மூலமாக நடைபெறும் அற்புதங்களெல்லாம் கர்த்தருடைய பலத்தினாலே நடைபெறுகிறது என்பதை இறுதியாக அறிந்து கொண்டு, அவர்கள் பார்வோனிடத்தில் "இது தேவனுடையவிரல்" என்று சொல்லுகிறார்கள். தேவனுடைய வல்லமைக்கு முன்பாகத் தங்களுடைய மந்திர சக்திக்கு எவ்விதமான வல்லமையும் இல்லை என்பதை எகிப்தின் மந்திரவாதிகள் அறிக்கை பண்ணுகிறார்கள் (யாத் 8:20; லூக்கா 11:20).

தம்மை எதிர்க்கிறவர்களுக்கு கர்த்தர் பயங்கரமானவராகயிருக்கிறார். சத்துருக்களால் கர்த்தரை மேற்கொள்ளமுடியாது. கர்த்தர் தம்முடைய வல்லமையை, சத்துருக்கள்மீது பிரயோகிக்கும்போது, சத்துருக்களும் கர்த்தருடைய மகிமையை அங்கீகரிப்பார்கள். அவர்களும் கர்த்தரை துதிப்பார்கள்.

எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள் கர்த்தருடைய வல்லமையை அங்கீகரிக்கிறார்கள். ஆனாலும், கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனுடைய இருதயம் கடினப்படுகிறது; பார்வோன் அவர்களுக்குச் செவிகொடாமற்போகிறான். கர்த்தருடைய வார்த்தையினால் மனந்திரும்பாதவர்கள், அற்புதங்கள் மூலமாகவும், அடையாளங்கள் மூலமாகவும் மனந்திரும்புவது சந்தேகமே.

## வண்டுகள்
## யாத் 8:20-32

**யாத் 8:20. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நாளை அதிகாலமே நீ எழுந்து போய், பார்வோன் நதிக்குப் புறப்பட்டு வரும்போது, அவனுக்கு முன்பாக நின்று: எனக்கு ஆராதனை செய்யும்படி என் ஜனங்களைப் போகவிடு.**

**யாத் 8:21. என் ஜனங்களைப் போகவிடாயாகில், நான் உன்மேலும், உன் ஊழியக்காரர் மேலும், உன் ஜனங்கள்மேலும், உன் வீடுகள்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவேன்; எகிப்தியர் வீடுகளும் அவர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டுகளால் நிறையும்.**

**யாத் 8:22. பூமியின் நடுவில் நானே கர்த்தர் என்பதை நீ அறியும்படி என் ஜனங்கள் இருக்கிற கோசேன் நாட்டில் அந்நாளிலே வண்டுகள் வராதபடிக்கு, அந்த நாட்டை விசேஷப்படுத்தி,**

**யாத் 8:23. என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன்; இந்த அடையாளம் நாளைக்கு உண்டாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.**

**யாத் 8:24. அப்படியே கர்த்தர் செய்தார்; மகா திரளான வண்டுஜாதிகள் பார்வோன் வீட்டிலும், அவன் ஊழியக்காரர் வீடுகளிலும், எகிப்து தேசம் முழுவதிலும் வந்தது; வண்டுகளினாலே தேசம் கெட்டுப் போயிற்று.**

**யாத் 8:25. அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்கள் போய், உங்கள் தேவனுக்கு தேசத்திலேதானே பலி யிடுங்கள் என்றான்.**

**யாத் 8:26. அதற்கு மோசே: அப்படிச் செய்யத்தகாது; எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நாங்கள் எகிப்தியருடைய அருவருப்பைப் பலி யிடுகிறதாயிருக்குமே, எகிப்தியருடைய அருவருப்பை நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பலி யிட்டால், எங்களைக் கல்லெறிவார்கள் அல்லவா?**

**யாத் 8:27. நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம் போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்கு பலி யிடுவோம் என்றான்.**

**யாத் 8:28. அப்பொழுது பார்வோன்: நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்தில் பலி யிடும்படிக்கு, நான் உங்களைப் போகவிடுவேன்; ஆனாலும், நீங்கள் அதிக தூரமாய்ப் போகவேண்டாம்; எனக்காக வேண்டுதல் செய்யுங்கள் என்றான்.**

**யாத் 8:29. அதற்கு மோசே: நான் உம்மை விட்டுப்புறப்பட்ட பின், நாளைக்கு வண்டுகள் பார்வோனையும் அவர் ஊழியக்காரரையும் அவர் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி, நான் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்வேன்; ஆனாலும், கர்த்தருக்குப் பலியிடுகிறதற்கு ஜனங்களைப் போக விடாதபடிப் பார்வோன் இனி வஞ்சனை செய்யாதிருப்பாராக என்றான்.**

**யாத் 8:30. மோசே பார்வோனை விட்டுப் புறப்பட்டுப்போய், கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்.**

**யாத் 8:31. அப்பொழுது கர்த்தர் மோசேயின் சொற்படி, வண்டு ஜாதிகள் பார்வோனையும் அவன் ஊழியக்காரரையும் அவன் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி செய்தார்; ஒன்றாகிலும் மீந்திருக்கவில்லை.**

**யாத் 8:32. பார்வோனோ, இந்த முறையும் தன் இருதயத்தை கடினப்படுத்தி, ஜனங்களைப் போகவிடாதிருந்தான்.**

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது வண்டுகளை வரப்பண்ணுகிறார். இது கர்த்தர் வரப்பண்ணுகிற நான்காவது வாதையாகும். கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது தவளைகளை வரப்பண்ணுவதற்கு முன்பாக, அவர் பார்வோனை எச்சரித்தார். அதுபோலவே, கர்த்தர் வண்டுகளை அனுப்புவதற்கு முன்பாக, பார்வோனை எச்சரிக்கிறார். பார்வோனுக்கு அதிகாலையிலே எச்சரிப்பின் வார்த்தைகள் சொல்லப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை மோசேக்கு சொல்லுகிறார். மோசே கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை பார்வோனுக்கு சொல்லவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி: "நாளை அதிகாலமே நீ எழுந்து போய், பார்வோன் நதிக்குப் புறப்பட்டு வரும்போது, அவனுக்கு முன்பாக நின்று: எனக்கு ஆராதனை செய்யும்படி என் ஜனங்களைப் போகவிடு என்று கர்த்தர் சொல்லுகிறார்" (யாத் 8:20) என்று சொல்லுகிறார்.

மோசே காலமே எழுந்திருக்கவேண்டும். பார்வோன் நதிக்கு புறப்பட்டு வரும்போது, மோசே அவனை சந்திக்கவேண்டும். பார்வோன் தன் இருதயத்தில் பெருமையுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவனை தாழ்த்தவேண்டும் என்று சித்தங்கொண்டிருக்கிறார். மோசே பார்வோனுக்கு முன்பாக நின்று, கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி இஸ்ரவேல் ஜனங்களை போகவிடவேண்டும் என்று கர்த்தருடைய நாமத்தினால் பேசவேண்டும்.

பார்வோன் எப்போதும்போல தன் இருதயத்தை கடினப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தரை ஆராதனை செய்யும்படி பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை போகவிடாமல் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. கர்த்தர் மோசேயின் மூலமாக பார்வோனுக்கு தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

மோசே பார்வோனை நோக்கி, "என் ஜனங்களைப் போகவிடாயாகில், நான் உன்மேலும், உன் ஊழியக்காரர் மேலும், உன் ஜனங்கள்மேலும், உன் வீடுகள்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவேன்; எகிப்தியர் வீடுகளும் அவர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டுகளால் நிறையும்" (யாத் 8:21) என்று கர்த்தருடைய நாமத்தினால் சொல்லவேண்டும்.

வண்டுகள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும். பார்வோனும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், வண்டுகள் அவனுக்கு விரோதமாக எழும்பும். எகிப்து தேசம் முழுவதும் வண்டுகளால் நிறையும்.

எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரரும் வாசம்பண்ணுகிறார்கள். அவர்கள் கோசேன் நாட்டிலே இருக்கிறார்கள். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. ஆனாலும் கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது, வண்டுகளை அனுப்பும்போது, அவர் எகிப்தியரையும் எபிரெயரையும் தனித்தனியாகப் பிரிக்கிறார். கர்த்தர் அனுப்புகிற வாதை எகிப்தியர்மீது மாத்திரம் வரும். அந்த வாதைக்கு எபிரெயர்கள் தப்பித்துக்கொள்வார்கள்.

பூமியின் நடுவிலே, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை பார்வோன் அறிந்துகொள்ள வேண்டும். இதற்காக கர்த்தர் தம்முடைய ஜனங்களிருக்கிற கோசேன் நாட்டை வேறு பிரிக்கிறார். அதை விசேஷப்படுத்துகிறார். கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது வண்டுகளை அனுப்பும் அந்த நாளிலே, அந்த வண்டுகள் கோசேன் நாட்டிலே வராது. கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும், பார்வோனுடைய ஜனமாகிய எகிப்தியருக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்கிறார். "இந்த அடையாளம் நாளைக்கு உண்டாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (யாத் 8:22,23) என்று கர்த்தர் மோசேயை பார்வோனுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

"என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியத்தில் "வித்தியாசம் உண்டாக்குதல்" என்பதற்கான எபிரெய வார்த்தை "பெடுத்" என்பதாகும். இதற்கு இரட்சிப்பு அல்லது மீட்பு என்று சங் 111:9; சங் 130:7 ஆகிய வசனங்களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. எகிப்துக்கு அனுப்பப்பட்ட வாதைகளிலிருந்து தேவன் தம்முடைய ஜனங்களை விடுவிப்பார். இதைப் பார்வோன் அறிந்து கொள்ள வேண்டும். கோசேனிலுள்ள இஸ்ரவேலர்கள் பாதுகாக்கப்படுவார்கள். எகிப்தியர்கள் அழிந்துபோவார்கள்.

கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார். கர்த்தருக்கு சொந்தமானவர்கள் அவருடைய செட்டைகளின் மறைவிலே பாதுகாப்பாயிருப்பார்கள். தீங்கு அவர்களை அணுகாது. ஒருவேளை இந்தப் பிரபஞ்சத்தில் விசுவாசிகளாகிய நமக்கும், உலகப்பிரகாரமான ஜனங்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை என்றாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மை உலகத்தார் மத்தியிலிருந்து விசேஷப்படுத்தி வேறுபிரித்திருக்கிற வித்தியாசம் மெய்யாகவே இருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் கலந்திருக்கிறார்கள். இங்கே நீதிமான்களும் துன்மார்க்கரும் ஒன்றாயிருக்கிறார்கள். மந்தையிலே வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் கலந்திருப்பதுபோல, எல்லாவிதமான ஜனங்களும் இந்தப் பூமியிலே கலந்திருக்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தமக்கு சொந்தமானவர்களை விசேஷப்படுத்தி வேறுபிரிப்பார். அவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களையும், தெய்வீக கிருபைகளையும் கொடுப்பார்.

"அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்" (மல் 3:18).

"அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார்" (மத் 25:32).

"என் மந்தையே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, ஆட்டுக்கும் ஆட்டுக்கும், ஆட்டுக்கடாக்களுக்கும், வெள்ளாட்டுக்கடாக்களுக்கும் நான் நியாயந்தீர்ப்பேன்" (எசே 34:17).

கர்த்தர் தாம் சொன்ன பிரகாரமாகவே செய்கிறார். மகா திரளான வண்டுஜாதிகள் பார்வோன் வீட்டிலும், அவன் ஊழியக்காரர் வீடுகளிலும், எகிப்து தேசம் முழுவதிலும் வருகிறது; வண்டுகளினாலே தேசம் கெட்டுப் போயிற்று (யாத் 8:24).

எகிப்து தேசத்திலே வண்டுகள் மூலமாக வந்த வாதைகள் பெரிதாயிருக்கிறது. பார்வோனால் வண்டுகளின் திரள்கூட்டத்தை தாங்கமுடியவில்லை. எகிப்தியருக்கு வேதனைகள் அதிகரிக்கிறது. எகிப்து தேசம் முழுவதிலும் வண்டுகள் நிரம்பியிருக்கிறது. எபிரெயர் தங்கியிருக்கிற கோசேன் நாட்டிலோ ஒரு வண்டுகூட இல்லை.

பார்வோன் வண்டுகள் மூலமாக வந்த வேதனைகளை தாங்க முடியாமல், மோசேயோடும் ஆரோனோடும் உடன்படிக்கை பண்ண முன்வருகிறான். அவன் மோசேயையும் ஆரோனையும் தன்னிடத்தில் அழைப்பிக்கிறான். பார்வோன் அவர்களை நோக்கி, "நீங்கள் போய், உங்கள் தேவனுக்கு தேசத்தில்தானே பலியிடுங்கள்" (யாத் 8:25) என்று சொல்லுகிறான்.

எகிப்தியர்கள் மிருகங்களைப் பலியிட மாட்டார்கள். அது அவர்களுக்கு அருவருப்பான காரியம். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்தில் தொடர்ந்து அடிமையாகத் தங்க வைப்பதற்குப் பார்வோன் அவர்களுடைய பலிசெலுத்தும் முறைமைகளையும் சகித்துக் கொள்கிறான். அந்தப் பலியை எகிப்தில் தேசத்தில் செலுத்துமாறு கூறுகிறான். பார்வோனின் இந்த யோசனையை மோசே நிராகரித்து விடுகிறார். எகிப்தியர்கள் தங்களைக் கல்லெறிவார்கள் என்று முறையிடுகிறார். (யாத் 8:26). ஆகையினால் "நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம் போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்கு பலியிடுவோம்" என்று மோசே பார்வோனிடம் வலியுறுத்திக் கூறுகிறார் (யாத் 8:27).

மோசே தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்திலே பலியிடவேண்டும் என்று விரும்புகிறார். அதுவே கர்த்தருடைய சித்தம். கர்த்தருக்கு வனாந்தரத்திலே ஆராதனை செய்யும்படி இஸ்ரவேல் ஜனங்களை போகவிடவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். ஆனால் பார்வோனோ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனுக்கு எகிப்து தேசத்திலே பலியிடட்டும் என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலியிடுவதை பார்வோன் தடைபண்ணவில்லை. ஆனால் அவர்கள் எகிப்து தேசத்தைவிட்டு, வனாந்தரத்திலே மூன்று நாள் பிரயாணம் செய்து, அங்கே கர்த்தருக்கு பலியிடுவதை பார்வோன் விரும்பவில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலேயே பலியிடட்டும் என்று பார்வோன் சொல்லுகிறான். மோசேயோ பார்வோனுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

மோசே பார்வோனை நோக்கி, "அப்படிச் செய்யத்தகாது; எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நாங்கள் எகிப்தியருடைய அருவருப்பைப் பலியிடுகிறதாயிருக்குமே, எகிப்தியருடைய அருவருப்பை நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பலியிட்டால், எங்களைக் கல்லெறிவார்கள் அல்லவா? நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம் போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்கு பலியிடுவோம்" (யாத் 8:26,27) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தருக்கு பலிசெலுத்தும்போது, அந்தப் பலியை கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும் என்று விரும்புகிறார். இந்தப் பிரபஞ்சத்தின் ஆசாபாசங்களுக்கு விலகி, வனாந்தரத்திலே மூன்று நாள் பிரயாணம்போய், அங்கே தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலியிடவேண்டும் என்பது மோசேயின் விருப்பம். எகிப்து தேசத்திலே இறைச்சி பாத்திரங்களுக்கு மத்தியிலே, மோசே கர்த்தருக்கு பலியிட விரும்பவில்லை. எகிப்து தேசத்திலுள்ள செங்கல் சூளைகளுக்கு நடுவிலும் அவர் கர்த்தருக்கு பலியிட விரும்பவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே பார்வோனுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கும் விஷயத்திலும், அவருக்கு பலிசெலுத்தும் விஷயத்திலும், அவர்கள் யாருக்கும் அடிமையாயிருக்க விரும்பவில்லை. அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு மாத்திரமே கீழ்ப்படியவிரும்புகிறார்கள். கர்த்தருக்கு பலியிடும் விஷயத்தில் இஸ்ரவேல் புத்திரர், பார்வோனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள்.

பார்வோன் மோசேயின் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறான். பார்வோன் மோசேயை நோக்கி, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்தில் பலியிடும்படிக்கு, நான் உங்களைப் போகவிடுவேன்; ஆனாலும், நீங்கள் அதிக தூரமாய்ப் போகவேண்டாம்; எனக்காக வேண்டுதல் செய்யுங்கள்" (யாத் 8:28) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலர் கர்த்தருக்குப் பலியிடுவதற்காகப் போவதைப் பார்வோன் அனுமதிக்கிறான். ஆனால் அவர்கள் அதிக தூரம் போகக்கூடாது. தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுதலை பண்ணி, கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் பார்வோனோ இஸ்ரவேலரை எகிப்து தேசத்தில் அடிமைகளாக வைத்துக் கொள்ளவேண்டுமென்று திட்டமிடுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பலியிடுவதற்கு பார்வோன் சம்மதிக்கிறான். ஆனாலும் அவர்கள் அதிக தூரம் போகக்கூடாது என்றும் சொல்லுகிறான். பார்வோனுடைய மனதிலே பாவத்தைக் குறித்து குற்றவுணர்வு ஏற்பட்டிருக்கிறது. அதே வேளையில் பார்வோனுடைய இருதயம் திருக்குள்ளதாகவும், கேடுள்ளதாகவும் இருக்கிறது.

பார்வோனுடைய குத்தப்பட்ட இருதயம் "நான் உங்களைப் போகவிடுவேன்" என்று சொல்லுகிறது. அவனுடைய கேடுள்ள இருதயமோ "நீங்கள் அதிக தூரமாய் போகவேண்டாம்" என்று சொல்லுகிறது. பார்வோனுடைய இருதயத்தில் உண்மையான மனந்திரும்புதல் காணப்படவில்லை. அவனுடைய பாவம் அவனை மேற்கொள்கிறது. பார்வோனுடைய அக்கிரமமே அவனுடைய அழிவுக்கு காரணமாயிற்று.

தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறவர்கள், முழுவதுமாக மனந்திரும்பவேண்டும். அவர்கள் முற்றிலுமாய் இரட்சிக்கப்படவேண்டும். அறைகுறையாக மனந்திரும்புவது எப்போதுமே ஆபத்தானது. அவர்களுக்கு இரட்சிப்பின் சந்தோஷம் பூரணமாய்க் கிடைக்காது.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் அதிக தூரமாய்ப் போகவேண்டாம் என்றும் ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு பலியிட புறப்பட்டுப்போகலாம் என்றும் பார்வோன் சொன்னதை மோசே ஏற்றுக்கொள்கிறார். பார்வோன் மோசேயிடத்தில், "எனக்காக வேண்டுதல் செய்யுங்கள்" என்று கேட்டுக் கொள்கிறான். மோசேயும் பார்வோனுடைய வார்த்தைகளை நம்பி, அவனுக்காக வேண்டுதல் செய்ய சம்மதிக்கிறார்.

மோசே பார்வோனை நோக்கி, "நான் உம்மை விட்டுப்புறப்பட்டபின், நாளைக்கு வண்டுகள் பார்வோனையும் அவர் ஊழியக்காரரையும் அவர் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி, நான் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்வேன்; ஆனாலும், கர்த்தருக்குப் பலியிடுகிறதற்கு ஜனங்களைப் போக விடாதபடிப் பார்வோன் இனி வஞ்சனை செய்யாதிருப்பாராக" (யாத் 8:29) என்று சொல்லுகிறார்.

பார்வோன் கேட்டுக்கொண்ட பிரகாரம், மோசே பார்வோனை விட்டுப் புறப்பட்டுப்போய், கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்கிறார். அப்பொழுது கர்த்தர் மோசேயின் சொற்படி, வண்டு ஜாதிகள் பார்வோனையும் அவன் ஊழியக்காரரையும் அவன் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி செய்கிறார்; ஒன்றாகிலும் மீந்திருக்கவில்லை (யாத் 8:30,31).

எகிப்து தேசத்திலிருந்து வண்டுகள் நீங்கினவுடனே பார்வோனுடைய இருதயம் மறுபடியும் கடினப்படுகிறது. ஒரு நாளுக்கு முன்பு, "நான் உங்களை போகவிடுவேன்" என்று பார்வோன் சொன்னான். இப்போதோ இந்த முறையும் பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் ஜனங்களை போகவிடாதிருக்கிறான் (யாத் 8:32).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் எகிப்தியருக்காக கடினமான வேலைகளை செய்கிறார்கள். அவர்கள் மூலமாக பார்வோனுக்கு மிகுந்த ஆதாயமுண்டாயிருக்கிறது. பார்வோன் தன்னுடைய ஆதாயத்தை இழந்துபோக விரும்பவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போய்விட்டால், தன்னுடைய வருமானமும், ஆதாயமும் தன்னைவிட்டுப்போய்விடும் என்று நினைத்து பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்தைவிட்டு போகவிடாதிருக்கிறான் (யாத் 8: 32).

## 9 அதிகாரம்

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது மேலும் சில வாதைகளை வரப்பண்ணுகிறார். எகிப்தியருடைய மிருக ஜீவன்கள்மீது மகாகொடிதான கொள்ளை நோய் உண்டாயிற்று (யாத் 9:1-7).

எகிப்து தேசமெங்கும் மனிதர் மேலும் மிருகஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்களை கர்த்தர் எழும்பப்பண்ணுகிறார் (யாத் 9:8-12).

எகிப்து தேசத்தின்மீது இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்புகிறார். இந்த வாதையைக் குறித்து எகிப்தியருக்கு எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது (யாத் 9:13-21). கல்மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருக்கிறது (யாத் 9:22-26).

கல்மழையினால் ஏற்பட்ட அழிவை பார்த்து பார்வோன் பயந்து, மோசேயோடே மறுபடியும் உடன்படிக்கை பண்ணுகிறான். ஆனாலும் பார்வோனுடைய இருதயம் மறுபடியும் கடினப்படுகிறது (யாத் 9:27-35).

### கொள்ளைநோய்
### யாத் 9:1-7

**யாத் 9:1. பின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை போகவிடு.**

**யாத் 9:2. நீ அவர்களை விடமாட்டேன் என்று இன்னும் நிறுத்திவைத்தாயாகில்,**

**யாத் 9:3. கர்த்தருடைய கரம் வெளியிலிருக்கிற உன் மிருகஜீவன்களாகிய குதிரைகளின் மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின் மேலும் இருக்கும்; மகா கொடிதான கொள்ளைநோய் உண்டாகும்.**

**யாத் 9:4. கர்த்தர் இஸ்ரவேலரின் மிருகஜீவன்களுக்கும் எகிப்தியரின் மிருகஜீவன்களுக்கும் வித்தியாசம் பண்ணுவார்; இஸ்ரவேல் புத்திரருக்கு உரியவைகள் எல்லாவற்றிலும் ஒன்றும் சாவதில்லை என்றார்.**

**யாத் 9:5. மேலும், நாளைக்குக் கர்த்தர் இந்தக் காரியத்தை தேசத்தில் செய்வார் என்று சொல்லி, கர்த்தர் ஒரு காலத்தைக் குறித்தார் என்றும், எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றும் அவனிடத்தில் சொல் என்றார்.**

**யாத் 9:6. மறுநாளில் கர்த்தர் அந்தக் காரியத்தைச் செய்தார்; எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று; இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை.**

**யாத் 9:7. பார்வோன் விசாரித்து, இஸ்ரவேலரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை என்று அறிந்தான். பார்வோனுடைய இருதயமோ கடினப்பட்டது; அவன் ஜனங்களைப் போகவிடவில்லை.**

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது மேலும் ஒரு வாதையை வரப்பண்ணுகிறார். எகிப்தியரின் மிருகஜீவன்கள்மீது மகாகொடிதான கொள்ளை நோய் உண்டாகும். கர்த்தர் இந்தக் கொள்ளை நோயை வரப்பண்ணுவதற்கு முன்பாக பார்வோனை எச்சரிக்கிறார்.

மோசே கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை பார்வோனுக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி: "நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை போகவிடு" (யாத் 9:1) என்று சொல்லச் சொல்லுகிறார். பார்வோன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் ஜனங்களை போகவிட்டால், எகிப்து தேசத்தின்மீது வாதை வராது. அவன் இஸ்ரவேல் ஜனங்களை போகவிடாவிட்டால், என்ன நடைபெறும் என்பதையும் மோசே பார்வோனுக்கு சொல்லுகிறார்.

மோசே பார்வோனை நோக்கி, "நீ அவர்களை விடமாட்டேன் என்று இன்னும் நிறுத்திவைத்தாயாகில், கர்த்தருடைய கரம் வெளியிலிருக்கிற உன் மிருகஜீவன்களாகிய குதிரைகளின்மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின் மேலும் இருக்கும்; மகா கொடிதான கொள்ளைநோய் உண்டாகும்" (யாத் 9:2,3) என்று கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார்.

எகிப்தியருடைய மிருகஜீவன்கள்மேல் கர்த்தருடைய கரம் இருக்கும். கர்த்தருடைய பலத்த கரம் எகிப்தியருடைய மிருகஜீவன்களை கொன்றுபோடும். கர்த்தர் இந்த வாதையை எப்போது வரப்பண்ணுவார் என்றும் மோசே பார்வோனுக்கு சொல்லுகிறார். "நாளைக்கு கர்த்தர் இந்தக் காரியத்தை தேசத்தில் செய்வார்" என்று மோசே சொல்லுகிறார். கர்த்தர் இந்தக் காரியத்தை செய்வதற்கு ஒரு காலத்தைக் குறித்திருக்கிறார். அந்தக் காலத்தில் கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் நடைபெறும் (யாத் 8:5).

முற்பிதாக்களின் காலத்தில் பாலஸ்தீன தேசத்தில் குதிரைகள் அதிகமாகப் பயன்படுத்தப் படவில்லை. சாலொமோனின் காலத்தில் எகிப்து தேசத்தில் ஏராளமான குதிரைகள் இருந்தன. இஸ்ரவேல் தேசத்திற்கு சாலொமோன் ராஜா ஏராளமான குதிரைகளை இறக்குமதி பண்ணினார் (1இராஜா 4:26-28; 1இராஜா 10:25-28).

இந்தக் கொள்ளைநோய் மிகவும் கொடியது. மரணத்தை உண்டாக்கக்கூடியது. (யாத் 9:3-4,6) எகிப்தின் தெய்வங்களுக்கு எதிராகவும், இந்தக் கொள்ளை நோய் வருகிறது. எகிப்தின் தெய்வங்களில் பல மிருகங்களின் வடிவில் இருந்தன. அந்த மிருகங்களெல்லாம் கொள்ளைநோயினால் மாண்டுபோயிற்று. மிருகங்கள் எகிப்தியருக்குப் புனிதமானவை. மிருகங்கள் மாண்டுபோகும்போது தங்களுடைய தெய்வங்களே அழிந்துபோவதாக எகிப்தியர்கள் நினைப்பார்கள். எகிப்தின் தெய்வங்களால் தங்களைக் காத்துக் கொள்ள முடியவில்லை என்பதும், இஸ்ரவேலரின் தேவனே மெய்யான தேவன் என்பதும், அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்பதும் மறுபடியுமாக நிரூபணமாகிறது.

எகிப்து தேசத்திலே எகிப்தியருடைய மிருகஜீவன்களும், எபிரெயருடைய மிருகஜீவன்களும் கலந்திருக்கிறது. கர்த்தரோ இஸ்ரவேலரின் மிருகஜீவன்களுக்கும் எகிப்தியரின் மிருகஜீவன்களுக்கும் வித்தியாசம் பண்ணுவார்; இஸ்ரவேல் புத்திரருக்கு உரியவைகள் எல்லாவற்றிலும் ஒன்றும் சாவதில்லை (யாத் 9:4).

கர்த்தர் நாளைக்கு இந்தக் காரியத்தை செய்யவேண்டுமென்று ஒரு காலத்தைக் குறித்திருக்கிறார். நாளைக்கு என்ன நடைபெறும் என்பது நமக்கு தெரியாது. ஆனால் கர்த்தரோ ஒவ்வொரு நாளையும் அறிந்திருக்கிறார். எந்தெந்த நாளில், எந்தெந்த காரியங்களை செய்யவேண்டும் என்பதை கர்த்தர் ஏற்கெனவே தீர்மானம் செய்திருக்கிறார். எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் எதை சொல்லுகிறாரோ, அதை செய்வார்.

கொள்ளை நோய் வரும் காலம் நிர்ணயிக்கப்படுகிறது. தேவன் நியமித்த காலத்தில் அவர் நியமித்திருக்கும் காரியங்கள் நிச்சயமாக நடைபெறும். எகிப்தியரின் மிருகஜீவன்களுடைய அழிவிற்குத் தேவன் நாள் குறித்து விட்டார்.

எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொன்ன பிரகாரம் மறுநாளிலே அந்தக் காரியத்தை செய்கிறார். எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று; இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை (யாத் 9:6).

"எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று" என்னும் இந்த வாக்கியம் ஆகுபெயராக பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (ஆதி 41:56) எகிப்திலுள்ள எல்லா மிருகஜீவன்களும் மரிக்கவில்லை. யாத் 9:3 ஆவது வசனத்தில் "வெளியிலிருக்கிற" மிருகஜீவன்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. யாத் 9:19 ஆவது வசனத்தில் கல்மழையும், வாதையும் வருவதற்கு முன்பாக மிருகஜீவன்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை. தேவன் ஒவ்வொரு இஸ்ரவேலரையும் அவர்களுடைய மிருக ஜீவன்களையும், உடைமைகளையும் பாதுகாக்கிறார். எகிப்தியர்மீது பத்து வாதைகள் வந்தன. அந்த வாதைகளில் எதுவும் இஸ்ரவேல் புத்திரரைப் பாதிக்கவில்லை. (யாத் 9:6-7).

எகிப்தியர்கள் காளைகளை தங்கள் தெய்வங்களாக ஆராதிக்கிறார்கள். எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்த இஸ்ரவேல் புத்திரரில் சிலர், தங்களுக்கு அந்தக் காளைகளை தெய்வங்களாக்கிக் கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களில் சிலர் வனாந்தரத்திலே பொன்கன்றுக்குட்டியை உருவாக்கி, அதை ஆராதனை செய்தார்கள். கன்றுக்குட்டியை ஆராதிக்கும் வழக்கத்தை இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தாரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்.

எகிப்தியருக்கு காளைகள் தெய்வங்களாகயிருக்கிறது. கர்த்தரோ எகிப்தியருடைய மிருகஜீவன்கள் மேல் மகாகொடிதான கொள்ளைநோயை வரப்பண்ணுகிறார். அந்த மிருகஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று. தங்களுக்கு எவை தெய்வம் என்று எகிப்தியர்கள் நம்பினார்களோ அந்த மிருகஜீவன்கள் செத்துப்போயிற்று. ஆகையினால் இந்த வாதை எகிப்தியருடைய மனதிலே மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணிற்று.

எகிப்து தேசத்திலுள்ள எல்லா மிருகஜீவன்களும் செத்துப்போகவில்லை. கர்த்தர் இஸ்ரவேலரின் மிருகஜீவன்களுக்கும், எகிப்தியரின் மிருகஜீவன்களுக்கும் வித்தியாசம் பண்ணியிருக்கிறார். எகிப்தியருடைய மிருகஜீவன்கள் மாத்திரமே கொள்ளைநோயினால் செத்துப்போயிற்று என்பதையும், இஸ்ரவேலரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை என்பதையும் பார்வோன் அறிந்துகொள்கிறான்.

எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் சொன்ன பிரகாரம், எகிப்தியரின் மிருகஜீவன்கள் மாத்திரம் செத்துப்போயிற்று. பார்வோன் இதைப் பார்த்த பின்பும் மனந்திரும்பவில்லை. அவனுடைய இருதயம் கடினப்படுகிறது. பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தைவிட்டுப் போகவிடவில்லை (யாத் 9:7).

இஸ்ரவேலரின் மிருகஜீவன்களும் செத்துப்போயிருந்தால், இது பொதுவான கொள்ளைநோய் என்று பார்வோன் நினைத்திருப்பான். ஆனால் எகிப்தியரின் மிருகஜீவன்கள்மட்டும் செத்துப்போயிற்று. இஸ்ரவேலரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை. ஆகையினால், இதுவும் தேவனுடைய செயல் என்பதைப் பார்வோன் புரிந்து கொள்கிறான். ஆனாலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரரை விடுதலை பண்ணுவதற்குப் பதிலாக பார்வோன் தன் இருதயத்தை மறுபடியும் கடினப்படுத்துகிறான். (யாத் 4:21).

## எரிபந்தமான கொப்புளங்கள் யாத் 9:8-12

**யாத் 9:8. அப்பொழுது கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: உங்கள் கைப்பிடி நிறைய சூளையின் சாம்பலை அள்ளிக்கொள்ளுங்கள்; மோசே அதைப் பார்வோனுடைய கண்களுக்குமுன் வானத்திற்கு நேராக இறைக்கக் கடவன்.**

**யாத் 9:9. அது எகிப்து தேசம் மீதெங்கும் தூசியாகி, எகிப்து தேசமெங்கும் மனிதர்மேலும் மிருக ஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங்களை எழும்பப்பண்ணும் என்றார்.**

**யாத் 9:10. அப்படியே அவர்கள் சூளையின் சாம்பலை அள்ளிக்கொண்டு, பார்வோனுக்கு முன்பாக வந்து நின்றார்கள். மோசே அதை வானத்துக்குநேராக இறைத்தான்; அப்பொழுது மனிதர்மேலும் மிருக ஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று.**

**யாத் 9:11. அந்தக் கொப்புளங்கள் மந்திரவாதிகள்மேலும் எகிப்தியர் எல்லார்மேலும் உண்டானதினால், அந்தக் கொப்புளங்கள் நிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்கக்கூடாதிருந்தது.**

**யாத் 9:12. ஆனாலும், கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தபடியே, கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.**

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது மேலும் ஒரு வாதையை வரப்பண்ணுகிறார். எகிப்து தேசமெங்கும் மனிதர்கள் மேலும் மிருகஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்புகிறது. கர்த்தர் இதற்கு முன்பு எகிப்தியருடைய மிருகஜீவன்கள்மேல் கொடிதான கொள்ளை நோயை அனுப்பினார். அவர்களுடைய மிருகஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று. தங்களுடைய மிருகஜீவன்கள் செத்துப்போன பின்பும், எகிப்தியர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. ஆகையினால் கர்த்தர் இப்போது எகிப்தியர்மீது எரிபந்தமான கொப்புளங்களை எழும்பப்பண்ணுகிறார். இந்தக் கொப்புளங்கள் அவர்களுடைய சரீரங்களை வாதிக்கிறது.

கர்த்தர் பாவிகளை சிட்சிப்பதற்கு, ஆரம்பத்தில் சிறிய தண்டனையைக் கொடுப்பார். அவர்கள் உடனே மனந்திரும்பினால் பெரிய தண்டனைக்கு தப்பித்துக்கொள்ளலாம். அவர்கள் தங்களுடைய ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். பாவிகள் கர்த்தருடைய சிறிய சிட்சைகளை அசட்டைபண்ணும்போது, கர்த்தர் அவர்களுக்கு பெரிய தண்டனைகளைக் கொடுப்பார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு கடுமையாயிருக்கும்.

கர்த்தர் பாவிகளைத் தண்டிக்கும்போது, அந்த தண்டனைக்கான காரணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: "உங்கள் கைப்பிடி நிறைய சூளையின் சாம்பலை அள்ளிக்கொள்ளுங்கள்; மோசே அதைப் பார்வோனுடைய கண்களுக்குமுன் வானத்திற்கு நேராக இறைக்கக் கடவன். அது எகிப்து தேசம் மீதெங்கும் தூசியாகி, எகிப்து தேசமெங்கும் மனிதர்மேலும் மிருக ஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங்களை எழும்பப்பண்ணும்" (யாத் 9:8,9) என்று சொல்லுகிறார்.

சூளை என்பது சாதாரண அடுப்புச் சூளை மட்டுமல்ல. ஆதி 19:28 ஆவது வசனத்தில் இது சோதோமினுடைய அழிவின் புகையாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்தில் சூளை என்பது எகிப்து தேசத்தில் நரபலியிடும் இடத்தைக் குறிக்கலாம்.

எகிப்தியர் தைப்போன் என்னும் உக்கிரமான தெய்வத்தைச் சாந்தப்படுத்துவதற்காக மனுஷரைப் பலிசெலுத்தினார்கள் என்று எகிப்தியரின் வரலாறு கூறுகிறது. தங்கள்மீது வாதைகள் வந்ததினால் அவர்கள் தைப்போன் தெய்வத்திற்கு மனுஷரைப் பலிசெலுத்தியிருக்கலாம். மனுஷரைப் பலியாகச் செலுத்திய அந்த இடத்திலுள்ள சாம்பலை மோசே பயன்படுத்தி எகிப்தியர்மீது வாதையை உண்டுபண்ணுகிறார்.

தங்களுக்கு எந்தத் தெய்வம் பாதுகாப்பு கொடுக்கும் என்று எகிப்தியர் நம்பினார்களோ அந்தத் தெய்வத்தின் பலிபீடத்திலுள்ள சாம்பலையே மோசே பயன்படுத்தி, அவர்களுக்கு மறுபடியும் வாதையை அனுப்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே செங்கல் சூளைகளில் அடிமைகளாக வேலை செய்கிறார்கள். இந்த சூளைகளில்தான் எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறார்கள். இங்கே அவர்களை அடித்து துன்பப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எந்த சூளையிலே வேதனைகளை அனுபவித்தார்களோ, அந்த சூளையின் சாம்பலை கர்த்தர் ஒரு கருவியாகப் பயன்படுத்தி, எகிப்தியரை வாதிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரின் ஆளோட்டிகளை பார்க்கும்போது பயப்படுவார்கள். இப்போதோ, செங்கல் சூளையின் சாம்பலைப் பார்க்கும்போது எகிப்தியர்கள் பயப்படுகிறார்கள். மோசே சூளையின் சாம்பலை பார்வோனுடைய கண்களுக்கு முன் வானத்திற்கு நேராக இறைக்கிறார். அப்பொழுது எகிப்து தேசமெங்கும் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று. எகிப்திருக்கு சூளையின் சாம்பல் மூலமாக மகாபெரிய வாதை உண்டாயிற்று (யாத் 9:10).

மோசேயும் ஆரோனும் சூளையின் சாம்பலை அள்ளிக்கொண்டு, பார்வோனுக்கு முன்பாக வந்து நிற்கிறார்கள். மோசே அதை வானத்துக்குநேராக இறைக்கிறார்; அப்பொழுது மனிதர்மேலும் மிருக ஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று. அந்தக் கொப்புளங்கள் மந்திரவாதிகள்மேலும் எகிப்தியர் எல்லார்மேலும் உண்டாயிற்று. அந்தக் கொப்புளங்கள் நிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்கக்கூடாதிருக்கிறது (யாத் 9:10,11).

எகிப்தியர்மீது எழும்பின எரிபந்தமான கொப்புளங்கள், யோபுவின் சரீரத்தில் வந்த கொப்புளங்களைப்போல இருக்கிறது. இந்தக் கொப்புளங்கள் பிற்காலத்தில் எகிப்தின் எரிபந்தமான பருக்கள் என்று அழைக்கப்படுகிறது. "நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூலவியாதியினாலும், சொறியினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்" (உபா 28:27).

எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள் பார்வோனுடைய இருதயம் கடினப்படுவதற்கு உதவியாகயிருக்கிறார்கள். மோசே கர்த்தருடைய நாமத்தினால் ஒவ்வொரு அற்புதமாக செய்தபோது, எகிப்தியரின் மந்திரவாதிகளும் அதை செய்து காண்பித்தார்கள். அதை பார்த்தபோது பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது. கர்த்தர் பார்வோனை தண்டிக்கும்போது, அவருடைய மந்திரவாதிகளையும் தண்டிக்கிறார்.

எகிப்தியரின் மந்திரவாதிகளுக்கு உண்மையான வல்லமை எதுவுமில்லை. ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு முன்பாக எகிப்தியரின் தெய்வங்களாலும், அவர்களுடைய மந்திரவாதிகளாலும் நிற்க முடியவில்லை. (யாத் 8:19).

கர்த்தர் துன்மார்க்கரை தண்டிப்பார். அதே வேளையில், கர்த்தர் துன்மார்க்கருடைய துன்மார்க்கத்திற்கு துணைபோகிறவர்களையும் தண்டிப்பார். இதுவே கர்த்தருடைய நீதி. மோசே சூளையின் சாம்பலை வானத்திற்கு நேராக இறைத்தபோது, அந்தக் கொப்புளங்கள் மந்திரவாதிகள் மேலும் உண்டாயிற்று. இதனால் மந்திரவாதிகளால் மோசேக்கு முன்பாக நிற்கக்கூடாமற்போயிற்று.

ஆனாலும், கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தபடியே, கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்; அவன் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை (யாத் 9:12). பார்வோன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துவதோடு, அவன் தேவனுடைய கிருபைக்கும் எதிர்த்து நிற்கிறான். ஆகையினால் கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தின் ஆசைகளுக்கு அவனை ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

## கல்மழை
## யாத் 9:13-21

**யாத் 9:13. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ அதிகாலமே எழுந்திருந்து போய், பார்வோனுக்கு முன்பாக நின்று: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு.**

**யாத் 9:14. விடாதிருந்தால், பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நான் சகலவித வாதைகளையும் உன் இருதயத்திலும், உன் ஊழியக்காரர்மேலும் உன் ஜனங்கள்மேலும் அனுப்புவேன்.**

**யாத் 9:15. நீ பூமியில் இராமல் நாசமாய்ப் போகும்படி நான் என் கையை நீட்டி, உன்னையும் உன் ஜனங்களையும் கொள்ளை நோயினால் வாதிப்பேன்.**

**யாத் 9:16. என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்.**

**யாத் 9:17. நீ என் ஜனங்களைப் போகவிடாமல், இன்னும் அவர்களுக்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயா?**

**யாத் 9:18. எகிப்து தோன்றிய நாள்முதல் இதுவரைக்கும் அதில் பெய்யாத மிகவும் கொடிய கல்மழையை நாளை இந்நேரம் பெய்யப்பண்ணுவேன்.**

**யாத் 9:19. இப்பொழுதே ஆள் அனுப்பி, உன் மிருகஜீவன்களையும் வெளியில் உனக்கு இருக்கிற யாவையும் சேர்த்துக்கொள்; வீட்டிலே சேர்க்கப்படாமல் வெளியிலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் மிருகமும் செத்துப்போகத்தக்கதாய் அந்தக் கல்மழை பெய்யும் என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல் என்றார்.**

**யாத் 9:20. பார்வோனுடைய ஊழியக்காரரில் எவன் கர்த்தருடைய வார்த்தைக்குப் பயப்பட்டானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வீடுகளுக்கு ஓடிவரப்பண்ணினான்.**

**யாத் 9:21. எவன் கர்த்தருடைய வார்த்தையை மதியாமற்போனானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வெளியிலே விட்டுவிட்டான்.**

பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கிறான். இதனால் கர்த்தருடைய கோபம் அவன்மீது வருகிறது. கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறார். அவன் இஸ்ரவேல் புத்திரரை அனுப்ப மறுக்கிறான். மோசேயும் ஆரோனும் பார்வோனுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லுகிறார்கள். ஆனால் பார்வோனோ அவர்களுக்கு செவிகொடுக்கவில்லை. பார்வோன் கர்த்தருக்கு கீழ்ப்படியாவிட்டாலும், மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தங்களுக்கு சொன்னதையெல்லாம் அவனுக்கு சொல்லுகிறார்கள்.

கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவர். பாவிகள் இரட்சிக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். பாவிகளும் துன்மார்க்கரும் தேவனுடைய கிருபைகளை பெற்றுக்கொண்டு, தங்கள் பாவங்களுக்கும் அக்கிரமங்களும் மனந்திரும்பவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆனால் பாவிகளில் அநேகர் கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அசட்டைபண்ணி, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள்.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் போனாலும் கர்த்தர் அவர்களை உடனே தண்டித்து சங்காரம்பண்ணிவிடுவதில்லை. அவர்கள் எப்படியாவது மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் நீடியபொறுமையோடு காத்திருக்கிறார். பாவிகளை அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி ஜீவனைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் இதுவரையிலும் ஆறுதடவை மோசேயை பார்வோனுக்கு முன்பாக அனுப்பினார். மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை இதுவரையிலும் ஆறுதடவை சொல்லியிருக்கிறார்கள். பார்வோனோ அந்த ஆறுதடவையும் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனான். கர்த்தரோ தமது கிருபையினால், ஏழாவது தடவையாக, மோசேயை பார்வோனிடத்திற்கு அனுப்புகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி: "நீ அதிகாலமே எழுந்திருந்து போய், பார்வோனுக்கு முன்பாக நின்று: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு" *(யாத் 9:13)* என்று சொல்லச் சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை பார்வோனிடத்தில் சொல்லுகிறார். பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை அனுப்பாவிட்டால் அவனுக்கு எப்படிப்பட்ட தண்டனைகள் வரும் என்று கர்த்தர் மோசே மூலமாக தெளிவாகச் சொல்லுகிறார்.

"விடாதிருந்தால், பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நான் சகலவித வாதைகளையும் உன் இருதயத்திலும், உன் ஊழியக்காரர்மேலும் உன் ஜனங்கள்மேலும் அனுப்புவேன். நீ பூமியில் இராமல் நாசமாய்ப் போகும்படி நான் என் கையை நீட்டி, உன்னையும் உன் ஜனங்களையும் கொள்ளை நோயினால் வாதிப்பேன்" (யாத் 9:14,15) என்று கர்த்தர் பார்வோனுக்கு, மோசே மூலமாக தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

பார்வோன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவன் பூமியிலிராமல் நாசமாய்ப்போவான். கர்த்தர் பார்வோனையும் அவனுடைய ஜனங்களையும் கொள்ளை நோயால் வாதிப்பார். கர்த்தர் இப்போது பார்வோனுக்கு விரோதமாக கோபமான வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தர் பார்வோனுக்கு, "என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன். நீ என் ஜனங்களைப் போகவிடாமல், இன்னும் அவர்களுக்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயா?" (யாத் 9:16,17) என்று சொல்லச் சொல்லுகிறார்.

பவுல் இந்த வாக்கியத்தை இவ்வாறு மேற்கோளாகக் கூறுகிறார். "மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது" (ரோமர் 9:14-21) யாத் 9:16 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. துன்மார்க்கமான பார்வோன் இராஜா தேவனுக்கு எதிர்த்து நிற்பதைக் குறித்து நாம் இந்த வேதவசனப்பகுதியில் வாசிக்கிறோம். தேவன் பார்வோனிடத்தில் பலகிரியைகளைச் செய்திருக்கிறார்.

பார்வோன் அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, தன்னுடைய துர்க்கிரியைகளுக்காக மனம்வருந்தி, தேவனிடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்து, தன்னுடைய தண்டனையிலிருந்து தப்பித்திருக்கலாம். ஆனால் அவனோ தன்னுடைய இருதயத்தில் கடினம் உள்ளவனாக இருந்து, தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணுகிறான். பார்வோனின் பாவத்திற்காகவும், அவனுடைய கீழ்ப்படியாமைக்காகவும், அவனுடைய கடின இருதயத்திற்காகவும் தேவன் தமது நீதியான நியாயத்தின் பிரகாரம் அவனைத் தண்டிக்கிறார்.

சுவிசேஷம் எல்லோருக்கும் பொதுவாக அறிவிக்கப்படுகிறது. அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாமல் போவதும் தனி மனுஷருடைய சொந்தத் தீர்மானமாகும். (மாற்கு 16:16; யோவான் 3:16; 2கொரி 2:15-16). தேவன் பார்வோனைக் கட்டாயப்படுத்தவில்லை. சுயாதீனமாகத் தெரிந்தெடுக்கும் உரிமையைத் தேவன் பார்வோனுக்குக் கொடுத்திருக்கிறார். தேவனுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக அவருக்கு எதிர்த்து நிற்க வேண்டுமென்று பார்வோன் தீர்மானம் பண்ணி, அவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான். இஸ்ரவேல் ஜனத்தாரைப் பார்வோன் விடுதலை பண்ணி அனுப்பிவிட மறுத்துவிடுகிறான். இதனால் அவன் இஸ்ரவேலரை அனுப்பும் வரையிலும் தேவன் அவன்மேலும், அவன் தேசத்தார்மேலும் தமது நியாயத்தீர்ப்புக்களைத் தொடர்ந்து அனுப்புகிறார் (யாத் 9:17).

கர்த்தர் இந்த முறை அனுப்பும் வாதை பார்வோனுடைய சரீரத்தின்மீது மாத்திரமல்ல, அவனுடைய இருதயத்தின்மீதும் வரும். கர்த்தர் பார்வோனை கொள்ளை நோயினால் வாதிப்பார். இது தற்காலிகமான வாதையாயிராது. இந்த வாதை அவனுடைய இருதயத்தை வாதிக்கும் ஆவிக்குரிய வாதையாயிருக்கும். கர்த்தர் அனுப்பும் ஆவிக்குரிய வாதை, பார்வோனுடைய ஆத்துமாவுக்கும் வாதையாயிருக்கும்.

பார்வோன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், இந்த உலகத்தின் சரித்திரத்தில், கீழ்ப்படியாதவர்களுக்கு அவன் அடையாளமாக சொல்லப்படுவான். கீழ்ப்படியாதவர்கள்மீது கர்த்தர் அனுப்பும் வாதைகளுக்கு, பார்வோனுக்கு வரும் வாதைகள் அடையாளமாயிருக்கும். இந்தப் பூமியெங்கும் கர்த்தரைப்போல நீதியான தேவன் வேறு ஒருவருமில்லை. இந்தப் பிரபஞ்சத்தின் ஜனங்கள் இந்த சத்தியத்தை அறியும்போது, இந்தப் பூமியெங்கும் பார்வோனைப்போல மோசமான மனுஷன் ஒருவனுமில்லை என்பதையும் அறிந்துகொள்வார்கள்.

இதற்காகவே கர்த்தர் பார்வோனை நிலை நிறுத்தியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய வல்லமையை பார்வோனிடத்தில் காண்பிக்கும் படியாகவும், தம்முடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் பார்வோனை நிலைநிறுத்தியிருக்கிறார். பார்வோனோ தனக்கு வரும் தண்டனைகளை அறிந்துகொள்ளாமல், தன்னை வீணாய் உயர்த்துகிறான். அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிய மறுக்கிறான்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேறுவதற்காகவே பார்வோனை எகிப்து தேசத்தின் ராஜாவாக சிங்காசனத்திலே அமரச் செய்திருக்கிறார். தம்முடைய சித்தத்தை நிறைவேறுவதற்காகவே கர்த்தர் பார்வோனை நிலை நிறுத்தியிருக்கிறார். கர்த்தருடைய வல்லமையை பார்வோனிடத்தில் காண்பிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தருடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். அவருடைய நாமம் பிரஸ்தாபமாகும்போது, அவருடைய சர்வவல்லமையும், சர்வஆளுகையும், அவருடைய நீதியும் நியாயமும் இந்தப் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும். பார்வோனுடைய காலத்தில் மாத்திரமல்ல, சரித்திரத்தின் எல்லா காலங்களிலும், கர்த்தருடைய நாமம் பிரஸ்தாபமாகும்.

எகிப்து தேசத்திலே பார்வோன் மிகப்பெரிய ராஜாவாயிருக்கிறான். இஸ்ரவேல் ஜனங்களோ அந்த தேசத்தில் ஆடுகளை மேய்க்கிற சாதாரண ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். ஆனால் பார்வோனோ அவர்களுக்கு விரோதமாக தன்னை உயர்த்துகிறான். தனக்கு அழிவு உண்டாவதற்காகவே பார்வோன் தன்னை உயர்த்துகிறான்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், தன்னுடைய தேசத்திலே அடிமைகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாய் தன்னை உயர்த்துவதாக நினைக்கிறான். ஆனால் பார்வோன் மெய்யாகவே தன்னை தேவனுக்கு விரோதமாக உயர்த்துகிறான். தேவனுக்கு விரோதமாக தங்களை உயர்த்துகிறவர்கள் சீரழிந்துபோவார்கள். கர்த்தர் பார்வோனை நோக்கி, "நீ பூமியிலிராமல் நாசமாய்ப்போகும்படி நான் என் கையை உனக்கு விரோதமாக நீட்டுவேன்" என்று சொல்லுகிறார்.

இந்தப் பூமியில் இதற்கு முன்பு கல்மழை பெய்திருக்கிறது. அது இயற்கையின் பிரமாணத்தினால் பெய்கிற கல்மழை. இப்போது எகிப்து தேசத்தின்மேல் பெய்யப்போகிற கல்மழையோ, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் பெய்கிற கன்மலையாயிருக்கும். கர்த்தர் இந்தக் கல்மழையைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்து தோன்றிய நாள்முதல் இதுவரைக்கும் அதில் பெய்யாத மிகவும் கொடிய கல்மழை" (யாத் 9:18) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்முடைய செயலுக்கு மறுபடியும் ஒரு காலத்தை நிர்ணயம் பண்ணுகிறார். (யாத் 8:10,23,29; யாத் 9:5) இதுவரையிலும் "நாளைக்கு" என்று பொதுவாகக்கூறியவர் இப்பொழுது "நாளை இந்நேரம்" என்று நேரத்தை மிகவும் துல்லியமாகக் குறித்து விடுகிறார். (யாத் 9:5) வானத்திலிருந்து மழைத்துளிகள் பூமிக்குக் கீழே இறங்கி வரும்போது, அவை குளிர்ந்த மண்டலப் பகுதியின் வழியாக வரும்போது, மழைத்துளிகள் ஆலாங்கட்டிகளாகும். (சங் 78:47) இந்தக் கல்மழை வெளியின் பயிர் வகைகளை அழித்துப்போட்டு, மரங்களை முறித்துப் போடுகிறது (யாத் 9:25).

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது தம்முடைய கோபமான வார்த்தைகளை சொல்லும்போது, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் நாளை இந்நேரம் கல்மழையைப் பெய்யப்பண்ணுவேன் என்று சொல்லும்போது, அந்தக் கல்மழைக்கு தப்பிப்பதற்கான உபாயத்தையும் சொல்லுகிறார்.

எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் பார்வோனுக்கு, "இப்பொழுதே ஆள் அனுப்பி, உன் மிருகஜீவன்களையும் வெளியில் உனக்கு இருக்கிற யாவையும் சேர்த்துக்கொள்; வீட்டிலே சேர்க்கப்படாமல் வெளியிலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் மிருகமும் செத்துப்போகத்தக்கதாய் அந்தக் கல்மழை பெய்யும்" (யாத் 9:19) என்று மோசேயையும் ஆரோனையும் சொல்லச் சொல்லுகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் எகிப்து தேசத்திலே எகிப்தியரையும் இஸ்ரவேல் புத்திரரையும் வெவ்வேறாகப் பிரித்தார். இப்போதோ எகிப்தியர் மத்தியிலே, தமக்கு கீழ்ப்படிகிறவர்கள் என்றும், தமக்கு கீழ்ப்படியாதவர்கள் என்றும் அவர்களை வெவ்வேறாகப் பிரிக்கிறார்.

பார்வோனுடைய ஊழியக்காரரில் எவன் கர்த்தருடைய வார்த்தைக்குப் பயப்பட்டானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வீடுகளுக்கு ஓடிவரப்பண்ணுகிறான். எவன் கர்த்தருடைய வார்த்தையை மதியாமற்போனானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வெளியிலேவிட்டுவிடுகிறான் (யாத் 9:20,21).

தேவன் நீதியாகச் செயல்படுகிறார். அவர் இஸ்ரவேலருக்குச் சகாயம் செய்வதுபோலவே எகிப்தியருக்கும் சகாயம் செய்கிறார். வரப்போகும் வாதைகளைக் குறித்து பொதுவாக எச்சரிக்கிறார். அவருடைய எச்சரிப்பைக்கேட்டு, கர்த்தருடைய வார்த்தைக்குப் பயப்பட்ட எகிப்தியன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வீடுகளுக்கு ஓடிவரப்பண்ணுகிறான் (யாத் 9:18-21).

நோவாவின் காலத்திலும் இதுபோன்ற சம்பவமே நடைபெற்றது. நோவா தன்னுடைய காலத்திலே இரட்சிப்பின் செய்தியை எல்லோருக்கும் பிரசங்கம்பண்ணினார். நோவாவின் வார்த்தையைக் கேட்டு தங்களுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் பேழைக்குள் பிரவேசிக்கலாம். பேழைக்குள் பிரவேசித்தவர்கள் ஜலப்பிரயளத்திற்கு தப்பினார்கள். பேழைக்குள் பிரவேசியாமல் வெளியிலே இருந்தவர்களோ ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோனார்கள்.

"விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்" (எபி 11:7).

பார்வோன் கர்த்தருடைய வார்த்தையை அசட்டைபண்ணுகிறான். அவன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். ஆனாலும் பார்வோனுடைய ஊழியக்காரரில் சிலர், கர்த்தருடைய வார்த்தைக்கு பயப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கிறார்கள். மற்றவர்கள் பார்வோனைப்போலவே கர்த்தருடைய வார்த்தையை, அசட்டைபண்ணுகிறார்கள்.

## பார்வோனுடைய இருதயம் கடினப்படுகிறது யாத் 9:22-35

**யாத் 9:22. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: எகிப்து தேசம் எங்கும் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் எகிப்து தேசத்திலிருக்கிற சகலவிதமான பயிர் வகைகள்மேலும் கல்மழை பெய்ய, உன்கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார்.**

யாத் 9:23. அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான். அப்பொழுது கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்பினார்; அக்கினி தரையின்மேல் வேகமாய் ஓடிற்று, எகிப்துதேசத்தின் மேல் கர்த்தர் கல்மழையைப் பெய்யப்பண்ணினார்.

யாத் 9:24. கல்மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருந்தது; எகிப்து தேசம் குடியேற்றப்பட்ட நாள்முதல் அதில் அப்படி ஒருபோதும் உண்டானதில்லை.

யாத் 9:25. எகிப்து தேசம் எங்கும் மனிதரையும் மிருகஜீவன்களையும், வெளியிலே இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்தக் கல்மழை அழித்துப்போட்டது; அது வெளியின் பயிர்வகைகளையெல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப்போட்டது.

யாத் 9:26. இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலேமாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.

யாத் 9:27. அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நான் இந்த முறை பாவம் செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர்.

யாத் 9:28. இது போதும்; இந்த மகா இடிமுழக்கங்களும் கல்மழையும் ஒழியும்படிக்கு, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுங்கள்; நான் உங்களைப் போகவிடுவேன், இனி உங்களுக்குத் தடையில்லை என்றான்.

யாத் 9:29. மோசே அவனை நோக்கி: நான் பட்டணத்திலிருந்து புறப்பட்டவுடனே, என் கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்; அப்பொழுது இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை நின்றுபோம்; அதினால் பூமி கர்த்தருடையது என்பதை நீர் அறிவீர்.

யாத் 9:30. ஆகிலும் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னும் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன் என்றான்.

யாத் 9:31. அப்பொழுது வாற்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தாள்ப்பயிருமாயிருந்தது; அதினால் சணலும் வாற்கோதுமையும் அழிக்கப்பட்டுப்போயிற்று.

யாத் 9:32. கோதுமையும் கம்பும் கதிர்விடாதிருந்ததால், அவைகள் அழிக்கப்படவில்லை.

யாத் 9:33. மோசே பார்வோனைவிட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டு, தன் கைகளைக் கர்த்தருக்கு நேராக விரித்தான்; அப்பொழுது இடிமுழக்கமும் கல்மழையும் நின்றது; மழையும் பூமியில் பெய்யாமலிருந்தது.

யாத் 9:34. மழையும் கல்மழையும் இடிமுழக்கமும் நின்றுபோனதைப் பார்வோன் கண்டபோது, அவனும் அவன் ஊழியக்காரரும் பின்னும் பாவம்செய்து, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினார்கள்.

யாத் 9:35. கர்த்தர் மோசேயைக்கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் கடினப்பட்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது கல்மழையை பெய்யப்பண்ணுவார். அது எகிப்து தேசத்தையே அழித்துப்போடும். கல்மழையினால் ஏற்படுகிற விளைவுகள் மிகவும் பயங்கரமாயிருக்கும். கல்மழையும், கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருக்கும்.

கர்த்தர் கல்மழையை அனுப்புவதற்கு முன்பாக, எகிப்து தேசத்தாரை எச்சரிக்கிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு பயப்படுகிறவர்கள், தாங்களும் தங்கள் மிருகஜீவன்களும் வீடுகளுக்குள்ளே இருக்கவேண்டும். அவர்களுக்கு மாத்திரம் கல்மழையினால் அழிவு ஏற்படாது. கர்த்தருடைய வார்த்தையை மதிக்கிறவர்கள் மாத்திரமே வீட்டிற்குள் இருப்பார்கள். மற்றவர்கள் வீட்டிற்கு வெளியே தங்கள் வேலைகளை பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள்மீது கல்மழை பெய்யும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எகிப்து தேசம் எங்கும் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் எகிப்து தேசத்திலிருக்கிற சகலவிதமான பயிர் வகைகள்மேலும் கல்மழை பெய்ய, உன்கையை வானத்திற்கு நேராக நீட்டு" (யாத் 9:22) என்று சொல்லுகிறார்.

தன் கையை வானத்திற்கு நேராக நீட்டுமாறு மோசேக்கு ஐந்து வெவ்வேறு வேளைகளில் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. (யாத் 9:22; யாத் 10:12,21; யாத் 14:16,26) ஆரோனுக்கு மூன்றுமுறை இந்தக் கட்டளை கொடுக்கப் பட்டிருக்கிறது. (யாத் 7:19; யாத் 8:5,16).

அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டுகிறார். அப்பொழுது கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்புகிறார்; அக்கினி தரையின்மேல் வேகமாய் ஓடிற்று. எகிப்துதேசத்தின்மேல் கர்த்தர் கல்மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (யாத் 9:23).

கல்மழை பெரியதாகவும், அதிகமாகவும் பெய்கிறது. அக்கினி ஆறுபோல ஓடிற்று. வானத்தில் சாதாரணமாக மின்னல்களும், இடிகளும் தோன்றுவதுபோலல்ல. அக்கினி தரையின்மேல் வேகமாய் ஓடிற்று. பெரிய கல்மழை பெய்கிறது (யாத் 9:23-25; சங் 78:48).

கல்மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருக்கிறது; எகிப்து தேசம் குடியேற்றப்பட்ட நாள்முதல் அதில் அப்படி ஒருபோதும் உண்டானதில்லை. எகிப்து தேசம் எங்கும் மனிதரையும் மிருகஜீவன்களையும், வெளியிலே இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்தக் கல்மழை அழித்துப்போடுகிறது; அது வெளியின் பயிர்வகைகளையெல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப்போடுகிறது (யாத் 9:24,25).

கல்மழையினால் ஏற்பட்ட விளைவுகள் மிகவும் பயங்கரமாகவும், கொடிதாகவும் இருக்கிறது. வெளியில் பயிர் வகைகளும், மரங்களும் கல்மழையினால் முறிந்துபோகிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு பயப்படாமல் யாரெல்லாம் வெளியே இருந்தார்களோ அவர்களையும் கல்மழை அழித்துப்போடுகிறது. கர்த்தருடைய வார்த்தையை மதிக்காமல், யாரெல்லாம் தங்கள் மிருகஜீவன்களை வெளியிலே விட்டிருந்தார்களோ அந்த மிருகஜீவன்களெல்லாம் கல்மழையினால் அழிந்துபோகிறது.

கல்மழையும், கல்மழையோடு கலந்த அக்கினியும் எகிப்து தேசத்தின்மீது பெய்கிறது. அது வெளியிலிருந்த எல்லா ஜீவராசிகளையும் அழித்துப்போடுகிறது. கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது கல்மழையை பெய்யப்பண்ணும்போது வாற்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தாள்ப்பயிருமாயிருக்கிறது; அதினால் சணலும் வாற்கோதுமையும் அழிக்கப்பட்டுப்போயிற்று. கோதுமையும் கம்பும் கதிர்விடாதிருந்ததால், அவைகள் அழிக்கப்படவில்லை (யாத் 9:31,32).

கல்மழை எகிப்து தேசமெங்கும் மனிதரையும் மிருகஜீவன்களையும், வெளியிலே இருந்த எல்லாவற்றையும் அழித்துப்போட்டாலும், இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலேமாத்திரம் கல்மழை இல்லாதிருக்கிறது (யாத் 9:26).

பார்வோனுடைய ஊழியக்காரரில் அநேகர் கல்மழையினால் அழிந்துபோனார்கள். எகிப்து தேசத்திலே ஏற்பட்டிருக்கிற பயங்கரமான அழிவை பார்வோன் பார்க்கிறான். அவன் தன்னுடைய தப்பிதத்தை உணருகிறான். இதுவரையிலும் பார்வோனுடைய இருதயம் கடினமாயிருந்தது. இப்போதோ அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரோடு ஒப்புரவாக விரும்புகிறான்.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, "நான் இந்த முறை பாவம் செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர். இது போதும்; இந்த மகா இடிமுழக்கங்களும் கல்மழையும் ஒழியும்படிக்கு, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுங்கள்; நான் உங்களைப் போகவிடுவேன், இனி உங்களுக்குத் தடையில்லை" (யாத் 9:27,28) என்று சொல்லுகிறான்.

பார்வோன் "இது போதும்" என்று சொல்லுகிறான். இனிமேல் வாதை எதுவும் தேவையில்லை. தேவனுடைய சித்தத்திற்கு நான் கீழ்ப்படிகிறேன். இனிமேல் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணமாட்டேன் என்னும் பொருளில் பார்வோன் சொல்லுகிறான்.

"மகா இடிமுழக்கங்கள்" என்பதற்கான எபிரெய வார்த்தை "கோலோத்-எலோஹிம்" என்பதாகும். இதற்கு தேவனுடைய பெரும் சத்தம் (சங் 29:3-8; எரே 10:13) என்று பொருள்.

பார்வோன் தன்னைப்பற்றியும், எகிப்து தேசத்தாரைப்பற்றியும் வெகுவாகத் தாழ்த்துகிறான். அவன் தன்னைத்தானே குற்றப்படுத்துகிறான். "நானும் என் ஜனமும் துன்மார்க்கர்" என்று பார்வோன் சொல்லுகிறான். கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது கல்மழையின் மூலமாக தம்முடைய வாதையை அனுப்பியிருக்கிறார். இந்த வாதைகளுக்கு தாங்கள் பாத்திரவான்கள் என்று பார்வோன் அங்கீகரிக்கிறான். அவன் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் நீதியுள்ளவர்" என்றும் சொல்லுகிறான்.

கர்த்தர் தம்முடைய நீதியினால், எகிப்து தேசமெங்கும் கல்மழையை அனுப்பியிருக்கிறார் என்றும், தங்களுடைய பாவங்களினாலேயே, தங்களுக்கு வாதையும், வேதனையும், அழிவும் வந்திருக்கிறது என்றும் பார்வோன் மிகுந்த பணிவோடு சொல்லுகிறான்.

பார்வோனுக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண தெரியாது. அவன் விக்கிரகங்களை ஆராதிக்கிறவன். தன்னுடைய ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுப்பாரா என்னும் நிச்சயமும் பார்வோனுக்கு இல்லை. ஆகையினால் அவன் அவர்கள் மோசேயையும், ஆரோனையும் தனக்காக விண்ணப்பம்பண்ணுமாறு கேட்டுக்கொள்கிறான். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, இந்த மகா இடிமுழக்கங்களையும், கல்மழையையும் ஒழியப்பண்ணுவார் என்று பார்வோன் நம்புகிறான்.

மோசே பார்வோனிடத்தில், "இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தருக்கு ஆராதனை செய்ய போகவிடவேண்டும்" என்று சொன்னார். ஆனால் பார்வோனோ அவர்களைப் போகவிட மறுத்துவிட்டான். எகிப்து தேசத்தின்மீது கர்த்தர் ஒவ்வொரு வாதையாக வரப்பண்ணுகிறார். அந்த வாதைகளில் ஒன்றாக இப்போது கல்மழையோடே கலந்த அக்கினி எகிப்து தேசத்தின்மீது வந்திருக்கிறது. இந்த வாதை மிகவும் கொடிதாயிருக்கிறது. பார்வோன் இந்த வாதையின் வேதனையை தாங்கமுடியாமல், மனந்திரும்புகிறான்.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நான் உங்களைப் போகவிடுவேன், இனி உங்களுக்கு தடையில்லை" என்று சொல்லுகிறான். பார்வோனுடைய வார்த்தைகள் மோசேக்கு ஆறுதலைக் கொடுக்கிறது. மோசே பார்வோனுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண சம்மதிக்கிறார். மோசே கர்த்தருக்கும் ஆரோனுக்கும் நடுவே மத்தியஸ்தராயிருந்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தருடைய சமுகத்திலே பார்வோனுக்காக ஜெபம்பண்ண சம்மதிக்கிறார். ஆனாலும் பார்வோன்மீது மோசேக்கு நம்பிக்கையில்லை. மோசே பார்வோனைப் பார்த்து, "ஆகிலும் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னும் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன்" (யாத் 9:30) என்று சொல்லுகிறார்.

பார்வோன் கர்த்தருக்கு பயப்படமாட்டான் என்பதும், அவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பமாட்டான் என்பதும் மோசேக்கு தெரிந்திருக்கிறது. பார்வோன் பல தடவை இதற்கு முன்பு தன் இருதயத்தைக் கடினப்படுத்தியிருக்கிறான். அவன் இஸ்ரவேல் புத்திரரை போகவிடுவேன் என்று சொல்லிவிட்டு, அதன்பின்பு அவர்களை போகவிடாமல் தடுத்திருக்கிறான். பார்வோனுடைய சுபாவம் மோசேக்கு நன்றாய்த் தெரியும்.

ஆனாலும் மோசே பார்வோனுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண சம்மதிக்கிறார். மோசே பார்வோனை நோக்கி, நான் பட்டணத்திலிருந்து புறப்பட்டவுடனே, என் கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்; அப்பொழுது இடிமுழக்கங்கள் ஒய்ந்து கல்மழை நின்றுபோம்; அதினால் பூமி கர்த்தருடையது என்பதை நீர் அறிவீர்'' (யாத் 9:29) என்று சொல்லுகிறார்.

நாமும் மோசேயைப்போல இந்தப் பிரபஞ்சத்து ஜனங்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ண வேண்டும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்னும் நம்பிக்கை நமக்கு இல்லாவிட்டாலும், நாம் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஊக்கமாய் ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய ஜெபத்தில் நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. நாம் மற்றவர்களுக்காக இடைவிடாமல் தொடர்ந்து ஜெபம்பண்ணவேண்டும். ஜெபம்பண்ணுவது நம்முடைய கடமை. ஜெபத்திற்கு பதில் கொடுப்பது கர்த்தருடைய கிருபை.

“நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்'' (1சாமு 12:23).

மோசே பார்வோனைவிட்டு பட்டணத்திலிருந்து புறப்பட்டவுடன், கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். மோசே தன் கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிக்கிறார். அப்பொழுது இடிமுழக்கமும் கல்மழையும் நின்று போகிறது; மழையும் பூமியில் பெய்யாமலிருக்கிறது (யாத் 9:33).

நாம் கர்த்தரோடு சமாதானமாயிருக்கும்போது, நமக்கு விரோதமாக இடிமுழக்கங்கள் ஏற்படாது. கர்த்தருடைய சத்தம் இடிமுழக்கம் போல இருக்கும். நாம் கர்த்தரோடு சமாதானமாயிராமல், அவருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, நமக்கு விரோதமாக அவர் இடிமுழக்க சத்தம்போல பேசுவார். நாம் கர்த்தரோடே சமாதானமாயிருக்கும்போதோ, அவர் நம்மோடு மெல்லிய சத்தத்திலும், அமர்ந்த குரலிலும், மென்மையாகவும் ஆறுதலாகவும் பேசுவார்.

கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்கிறார். கர்த்தருடைய சமுகத்திலே மோசேக்கு ஜெயமுண்டாயிற்று. ஆனால் பார்வோனுக்கு முன்பாக மோசேக்கு ஜெயமுண்டாகவில்லை.

மழையும் கல்மழையும் இடிமுழக்கமும் நின்றுபோனதைப் பார்வோன் கண்டபோது, அவனும் அவன் ஊழியக்காரரும் பின்னும் பாவம்செய்து, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்கள். கர்த்தர் மோசேயைக்கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் கடினப்படுகிறது; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை (யாத் 9:34,35).

பார்வோன் சற்று நேரத்திற்கு முன்பு, மோசேயை நோக்கி, “நானும் என் ஜனமும் துன்மார்க்கர். நான் உங்களைப் போகவிடுவேன் இனி உங்களுக்கு தடையில்லை'' என்று சொன்னான். ஆனால் இப்போதோ அவன் இஸ்ரவேல் புத்திரரை போகவிட மறுக்கிறான். அவனுடைய இருதயம் மறுபடியும் கடினப்படுகிறது. பார்வோன் தன்னுடைய பாவங்களை வாயினால் அறிக்கை செய்கிறான். ஆனால் அவனுடைய இருதயத்தில் உண்மையான மனமாற்றம் உண்டாகவில்லை.

பார்வோனும், அவன் ஊழியக்காரரும் மேலும் பாவம் செய்கிறார்கள். பார்வோனின் கடினமான இருதயத்தை மென்மையாக்குவதற்குக் கர்த்தர் கிரியை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் பார்வோனோ ஒவ்வொரு அற்புதமும், ஒவ்வொரு வாதையும் நடந்தபின்பு, தன் இருதயத்தை மேலும், மேலும் கடினப்படுத்திக் கொண்டிருக்கிறான் (யாத் 4:21).

## 10 அதிகாரம்

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது வெட்டுக்கிளிகளையும், காரிருளையும் வரப்பண்ணுகிறார். இவை கர்த்தர் அந்த தேசத்தின்மீது வரப்பண்ணின எட்டாவது, ஒன்பதாவது வாதைகளாகும்.

வெட்டுக்கிளிகளினால் உண்டாகும் வாதை. கர்த்தர் தம்முடைய கிரியைகளின் வியாக்கியானத்தை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் செய்யும் அற்புதங்களை, பிற்காலத்து சந்ததியாரும் அறிந்துகொள்ளவேண்டும் (யாத் 10:1,2). கர்த்தர் வெட்டுக்கிளிகளை எகிப்து தேசத்தின்மீது அனுப்பப்போவதாக சொல்லுகிறார் (யாத் 10:3-6).

இஸ்ரவேல் புத்திரரை அனுப்பிவிடும்படி, பார்வோனுடைய ஊழியக்காரர் பார்வோனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். பார்வோனும் இஸ்ரவேல் புத்திரரை அனுப்பிவிடுவது சம்பந்தமாக மோசேயிடம் பேசுகிறான் (யாத் 10:7-9). பார்வோனுடைய ஆலோசனையை மோசேயும் ஆரோனும் ஏற்றுக்கொள்ளவில்லை (யாத் 10:10,11).

எகிப்து தேசத்தின்மேல் வெட்டுக்கிளிகள் திரளாய் வருகிறது (யாத் 10:12-15). தான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்வதை பார்வோன் அங்கீகரிக்கிறான் (யாத் 10:16,17). மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணியபோது, கர்த்தர் மகாபலத்த மேல்காற்றை வீசும்படி செய்கிறார். அந்தக் காற்று வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டுபோய் செங்கடலிலே போடுகிறது. கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார். பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை போகவிடவில்லை (யாத் 10:18-20).

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது காரிருளை வரப்பண்ணுகிறார். எகிப்து தேசம் எங்கும் மூன்றுநாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று (யாத் 10:21-23). இஸ்ரவேல் புத்திரரை அனுப்புவதற்கு பார்வோன் மறுபடியும் சம்மதிக்கிறான். அதன் பின்பு கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறார். பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை போகவிட மனதில்லாதிருக்கிறான் (யாத் 10:24-29).

### வெட்டுக்கிளிகள்
### யாத் 10:1-11

**யாத் 10:1. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போ, அவர்கள் நடுவே நான் இந்த என் அடையாளங்களைச் செய்யும்படிக்கும்.**

**யாத் 10:2. நான் எகிப்திலே நடப்பித்ததையும் நான் அவர்களுக்குள் செய்த என் அடையாளங்களையும், நீ உன் பிள்ளைகளின் செவிகள் கேட்கவும், உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகள் கேட்கவும் விவரித்துச் சொல்லும்படிக்கும், நானே கர்த்தர் என்பதை நீங்கள் அறியும்படிக்கும், நான் அவன் இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின் இருதயத்தையும் கடினப்படுத்தினேன் என்றார்.**

**யாத் 10:3. அப்படியே மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் வந்து: உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? என் சமுகத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை போகவிடு.**

**யாத் 10:4. நீ என் ஜனங்களைப் போகவிடமாட்டேன் என்பாயாகில், நான் நாளைக்கு உன் எல்லைகளுக்குள்ளே வெட்டுக்கிளிகளை வரப்பண்ணுவேன்.**

**யாத் 10:5. தரை காணாதபடிக்கு அவைகள் பூமியின் முகத்தை மூடி, கல்மழைக்குத் தப்பி மீதியாக வைக்கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே துளிர்க்கிற செடிகளையெல்லாம் தின்றுபோடும்.**

**யாத் 10:6. உன் வீடுகளும் உன் ஊழியக்காரருடைய வீடுகளும் எகிப்தியரின் வீடுகளும் எல்லாம் அவைகளால் நிரம்பும்; உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக்களும் தாங்கள் பூமியில் தோன்றின நாள்முதல் இந்நாள் வரைக்கும் அப்படிப்பட்டவைகளைக் கண்டதில்லை என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி, திரும்பிக்கொண்டு பார்வோனை விட்டுப் புறப்பட்டான்.**

**யாத் 10:7. அப்பொழுது பார்வோனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி: எந்தமட்டும் இந்த மனிதன் நமக்குக் கண்ணியாயிருப்பான்? தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனைசெய்ய அந்த மனிதரைப் போகவிடும்; எகிப்து அழிந்துபோனதை நீர் இன்னும் அறியவில்லையா என்றார்கள்.**

**யாத் 10:8. அப்பொழுது மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்துக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்கள். அவன் அவர்களை நோக்கி நீங்கள் போய் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள் என்று சொல்லி; யாரார் போகிறார்கள் என்று கேட்டான்.**

**யாத் 10:9. அதற்கு மோசே: எங்கள் இளைஞரோடும், எங்கள் முதியோரோடும், எங்கள் குமாரரோடும், எங்கள் குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும் எங்கள் மாடுகளையும் கூட்டிக்கொண்டுபோவோம்; நாங்கள் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடவேண்டும் என்றான்.**

**யாத் 10:10. அப்பொழுது அவன்: நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் எப்படி விடுவேனோ, அப்படியே கர்த்தர் உங்களோடிருப்பாராக; எச்சரிக்கையாயிருங்கள், உங்களுக்குப் பொல்லாப்பு நேரிடும்;**

**யாத் 10:11. அப்படி வேண்டாம்; புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்; இதுதானே நீங்கள் விரும்பிக் கேட்டது என்று சொன்னான். அவர்கள் பார்வோன் சமுகத்தினின்று துரத்திவிடப்பட்டார்கள்.**

கர்த்தர் மோசேக்கு தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய கிரியைகளெல்லாமே நீதியும் நியாயமுமுள்ளவை. அவை அற்புதமானவை. கர்த்தர் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு தெய்வீக நோக்கம் இருக்கும். கர்த்தர் எகிப்து தேசத்திலே வாதைகளை வரப்பண்ணுகிறார். இந்த வாதைகள் எகிப்து தேசத்தின்மீது வருவதற்கான காரணத்தையும் கர்த்தர் மோசேக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய அற்புதங்களெல்லாம் அவருடைய மகிமைக்கு அடையாளங்களாயிருக்கிறது. கர்த்தர் நடப்பிக்கிற பலத்த கிரியைகள் அவருடைய ஜனத்திற்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய ஆவி மனுஷரோடு எப்போதும் போராடுவதில்லை. மனுஷர் தங்கள் பாவத்தினால் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணக்கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ பார்வோனிடத்தில் போ, அவர்கள் நடுவே நான் இந்த என் அடையாளங்களைச் செய்யும்படிக்கும். நான் எகிப்திலே நடப்பித்ததையும் நான் அவர்களுக்குள் செய்த என் அடையாளங்களையும், நீ உன் பிள்ளைகளின் செவிகள் கேட்கவும், உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகள் கேட்கவும் விவரித்துச் சொல்லும்படிக்கும். நானே கர்த்தர் என்பதை நீங்கள் அறியும்படிக்கும், நான் அவன் இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின் இருதயத்தையும் கடினப்படுத்தினேன்" (யாத் 10:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எகிப்து தேசத்திலே நடப்பிக்கிற அற்புதங்களெல்லாம், அவருடைய மகிமைக்கும், வல்லமைக்கும் அடையாளங்களாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருடைய பின்சந்ததியார், கர்த்தர் எகிப்து தேசத்திலே நடப்பித்த அற்புதமான காரியங்களையெல்லாம் கேள்விப்படவேண்டும். அவர்களுடைய முற்பிதாக்கள், தங்கள் பின்சந்ததியாருக்கு, கர்த்தர் நடப்பித்த ஒவ்வொரு காரியத்தையும் விவரித்து சொல்லவேண்டும்.

மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து பார்வோனிடத்தில் வருகிறார்கள். அவர்கள் பார்வோனை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறார்கள். அவர்கள் இருவரும் பார்வோனை நோக்கி, "உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? என் சமுகத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை போகவிடு" (யாத் 10:3) என்று சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்திலே எபிரெயர்கள் அதிகமான துன்பங்களை அனுபவிக்கிறார்கள். ஆனால் பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ண மனதில்லாமலிருக்கிறான். அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான். யாரெல்லாம் கர்த்தருக்கு முன்பாக தங்களுடைய இருதயங்களை கடினப்படுத்துவார்களோ, அவர்களை கர்த்தர் தாழ்த்துவார். கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். அவர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார்.

பார்வோன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருக்கு ஆராதனை செய்ய போகவிடாவிட்டால், எகிப்து தேசத்திலே கர்த்தர் எப்படிப்பட்ட தண்டனையை வரப்பண்ணுவார் என்பதை மோசேயும் ஆரோனும் பார்வோனுக்கு சொல்லுகிறார்கள்.

அவர்கள் பார்வோனை நோக்கி, "நீ என் ஜனங்களைப் போகவிடமாட்டேன் என்பாயாகில், நான் நாளைக்கு உன் எல்லைகளுக்குள்ளே வெட்டுக்கிளிகளை வரப்பண்ணுவேன். தரை காணாதபடிக்கு அவைகள் பூமியின் முகத்தை மூடி, கல்மழைக்குத் தப்பி மீதியாக வைக்கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே துளிர்க்கிற செடிகளையெல்லாம் தின்றுபோடும்" என்றும்,

"உன் வீடுகளும் உன் ஊழியக்காரருடைய வீடுகளும் எகிப்தியரின் வீடுகளும் எல்லாம் அவைகளால் நிரம்பும்; உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக்களும் தாங்கள் பூமியில் தோன்றின நாள்முதல் இந்நாள்வரைக்கும் அப்படிப்பட்டவைகளைக் கண்டதில்லை என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (யாத் 10:4-6) என்றும் சொல்லுகிறார்கள்.

வெட்டுக்கிளிகள் சீக்கிரமாக இனவிருத்தி செய்யக்கூடியவை. வேதாகமத்தில் வெட்டுக்கிளிகள் சேனைகளுக்கு ஒப்பாக சொல்லப்பட்டிருக்கிறது (நியா 6:5; நியா 7:12; சங் 105:34; எரே 46:23; எரே 51:14; யோவே 1:4; நாகூம் 3:15).

வெட்டுக்கிளிகளினால் தாவர வகைகளுக்கு காட்டுத்தீயை விட அதிக சேதம் உண்டாகும். காட்டுத்தீயைவிட வெட்டுக்கிளிகள் பயிர் வகைகளை விரைவில் அழித்துப்போடும். சங் 78:46 ஆவது வசனத்தில் இந்த வாதையைப் பற்றி இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது. "அவர்களுடைய விளைச்சலைப் புழுக்களுக்கும், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை வெட்டுக்கிளிகளுக்கும் கொடுத்தார்".

ஆதாமின் காலத்திலிருந்து இப்படிப்பட்ட அழிவு வெட்டுக்கிளிகளினால் இதுவரையும் ஏற்பட்டதில்லை. இது இயற்கையான அழிவல்ல. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் உண்டான வாதை.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் "எபிரெயரின் தேவனாகிய கர்த்தர்" என்று அழைக்கப்படுகிறார். யாத்திராகமம் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் ஐந்து தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 3:18; யாத் 7:16; யாத் 9:1,13; யாத் 10:3). இதற்கு நித்தியமானவர், வாக்குத்தத்தத்தைக் கடைப்பிடிக்கிறவர், பாதுகாக்கிறவர், ஆதரிக்கிறவர், எபிரெயரின் சிருஷ்டிகர் என்று பொருள். யாத் 5:3 ஆவது வசனத்தில் "எபிரெயருடைய தேவன்" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மோசேயும் ஆரோனும், இந்த வார்த்தைகளை கர்த்தருடைய நாமத்தினால் சொல்லியபின்பு, அவர்கள் திரும்பிக்கொண்டு பார்வோனை விட்டுப் புறப்படுகிறார்கள்.

கர்த்தர் ஏற்கெனவே எகிப்து தேசத்தின்மீது கல்மழையை அனுப்பினார். "அப்பொழுது வாற்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தாள்ப்பயிருமாயிருந்தது; அதினால் சணலும் வாற்கோதுமையும் அழிக்கப்பட்டுப்போயிற்று. கோதுமையும் கம்பும் கதிர்விடாதிருந்ததால், அவைகள் அழிக்கப்படவில்லை" (யாத் 9:31,32).

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது வெட்டுக்கிளிகளை வரப்பண்ணுவார். அந்த வெட்டுக்கிளிகள் கல்மழைக்குத் தப்பி மீதியாக வைக்கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே துளிர்க்கிற செடிகளையெல்லாம் தின்றுபோடும்.

மோசே பார்வோனிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை சொன்ன பின்பு, அவர் பார்வோனுடைய பதிலுக்காக அங்கே காத்திருக்கவில்லை. இதற்கு முன்பு மோசே பார்வோனிடத்தில் பேசிய பின்பு, அவர் அவனுடைய வார்த்தைக்காக காத்திருப்பது வழக்கம். ஆனால் இப்போதோ மோசே பார்வோனுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொன்ன பின்பு, திரும்பிக்கொண்டு பார்வோனை விட்டு புறப்பட்டுப்போய்விடுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பல இடங்களுக்கும், ஊர்களுக்கும், கிராமங்களுக்கும் சுற்றி அலைந்து தன்னுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். கிறிஸ்துவானவர் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுமாறு, அவருடைய சீஷர்களுக்கும் கட்டளை கொடுத்தார். சீஷர்களை யாராவது ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், அவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை தட்டிவிட்டு, அந்த ஊரை விட்டு புறப்பட்டுப்போய்விடவேண்டும். இதுவே கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்திருக்கிற கட்டளை.

"எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும்போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்" (மத் 10:14).

மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுத்து, இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பிவிடுமாறு, பார்வோனுடைய ஊழியக்காரரும், அவனிடத்தில் மோசேக்காக பரிந்து பேசுகிறார்கள்.

பார்வோனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி, "எந்தமட்டும் இந்த மனிதன் நமக்குக் கண்ணியாயிருப்பான்? தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனைசெய்ய அந்த மனிதரைப் போகவிடும்; எகிப்து அழிந்துபோனதை நீர் இன்னும் அறியவில்லையா" (யாத் 10:7) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியருக்கு பாரமாயிருக்கிறார்கள். பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரை போகவிடவில்லையென்றால், எகிப்து தேசமே அழிந்துபோகும் என்று பார்வோனுடைய ஊழியக்காரர் பயப்படுகிறார்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து எப்படியாவது அனுப்பிவிட்டால், அதுவே தங்களுக்கு நல்லது என்று எகிப்தியரின் பிரபுக்கள் நினைக்கிறார்கள்.

அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள் (சக 12:3).

பார்வோன் தன்னுடைய ஊழியக்காரரின் பரிந்து பேசும் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறான். அவன் மோசேயோடும், ஆரோனோடும் புதிதாய் உடன்படிக்கை பண்ணிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறான்.

அப்பொழுது மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்துக்குத் திரும்ப அழைக்கப்படுகிறார்கள். பார்வோன் அவர்களை நோக்கி, "நீங்கள் போய் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்" என்று சொல்லுகிறான். மேலும் பார்வோன் அவர்களை நோக்கி, "யாரார் போகிறார்கள்" (யாத் 10:8) என்றும் கேட்கிறான்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திற்குப்போய் கர்த்தருக்கு பலி செலுத்துவதில் பார்வோனுக்கு ஒரு பிரச்சனையுமில்லை. பார்வோன் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறான். ஆனால் வனாந்தரத்திற்கு இஸ்ரவேல் புத்திரரில் யாரெல்லாம் போவார்கள் என்னும் விஷயத்தில் அவர்களுக்குள் கருத்து உடன்பாடு ஏற்படவில்லை. பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "யாரார் போகிறார்கள்" என்று கேட்கிறான்.

அதற்கு மோசே, "எங்கள் இளைஞரோடும், எங்கள் முதியோரோடும், எங்கள் குமாரரோடும், எங்கள் குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும் எங்கள் மாடுகளையும் கூட்டிக்கொண்டு போவோம்; நாங்கள் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடவேண்டும்" (யாத் 10:9) என்று சொல்லுகிறார்.

பார்வோன் மோசேயையும், ஆரோனையும் நோக்கி "நீங்கள் போய் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்" என்று கூறுகிறான். அதன் பின்பு, "யாரார் போகிறார்கள்" என்னும் கேள்வியையும் பார்வோன் கேட்கிறான். அதற்கு மோசே "எங்கள் இளைஞரோடும், எங்கள் முதியோரோடும், எங்கள் குமாரரோடும், எங்கள் குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும் எங்கள் மாடுகளையும் கூட்டிக்கொண்டு போவோம்" என்று பார்வோனிடம் பதில் கூறுகிறார்.

பலியிடுவதற்கு ஆடுமாடுகள் தேவை. கர்த்தருக்கு பண்டிகை கொண்டாடுவதால் இளைஞர், முதியவர், ஆண் பெண், எல்லோரும் போக வேண்டும். எகிப்தியர் தங்கள் தெய்வங்களுக்கு ஆறு விசேஷித்த பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். ஆகையினால் அவர்களுக்குப் பண்டிகை கொண்டாடுவதைப் பற்றி நன்றாகத் தெரியும். எபிரெயரோ வனாந்தரத்தில் ஒரே ஒரு பண்டிகை மட்டுமே கொண்டாட வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, எபிரெயரைப் பண்டிகை கொண்டாட அனுப்புவதுதான் நியாயமானது. ஆனால் எபிரெயரிடத்திலோ வனாந்தரத்தில் பண்டிகை கொண்டாடிவிட்டு, எகிப்துக்குத் திரும்பி வரும் எண்ணமோ, திட்டமோ இல்லை. தங்களைக் குறித்த தேவனுடைய திட்டம் எபிரெயருக்கு நன்றாகத் தெரியும். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு, தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் கானான் தேசத்திற்குள் இஸ்ரவேலர் பிரவேசிக்க வேண்டும். இதுவே தேவனுடைய திட்டம். (ஆதி 15, ஆதி 17).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே, தங்கள் முழுக்குடும்பத்தோடும் வனாந்தரத்திற்குப் போய், கர்த்தருக்கு பலிசெலுத்தவேண்டும் என்றும், அங்கே இஸ்ரவேல் புத்திரரின் குடும்பத்தார் எல்லோரும் கர்த்தருக்கு பண்டிகை கொண்டாடவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார். ஆனால் மோசேயின் கோரிக்கையை பார்வோன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரில் புருஷர் மாத்திரம் வனாந்தரத்திற்குப்போய் கர்த்தருக்கு பலிசெலுத்தினால் போதுமானது என்று பார்வோன் நினைக்கிறான். இஸ்ரவேல் புத்திரருடைய ஸ்திரீகளையும் பிள்ளைகளையும், பார்வோன் எகிப்து தேசத்திலே பிணைக்கைதிகளாக பிடித்து வைத்துக்கொள்ள திட்டமிடுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்கள் முழுக்குடும்பத்தோடு எகிப்து தேசத்தைவிட்டு வனாந்தரத்திற்குப்போனால், அவர்கள் மறுபடியும் திரும்பி எகிப்து தேசத்திற்கு வரமாட்டார்கள் என்று பார்வோன் அவர்கள்மீது சந்தேகப்படுகிறான். எகிப்தியருக்கு இஸ்ரவேல் புத்திரர் தேவைப்படுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தியருக்கு எல்லாவிதமான அடிமை வேலைகளையும் செய்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரை மொத்தமாய் அனுப்பிவிட பார்வோனுக்கு மனதில்லை.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, " நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் எப்படி விடுவேனோ, அப்படியே கர்த்தர் உங்களோடிருப்பாராக; எச்சரிக்கையாயிருங்கள், உங்களுக்குப் பொல்லாப்பு நேரிடும்; அப்படி வேண்டாம்; புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்; இதுதானே நீங்கள் விரும்பிக் கேட்டது" (யாத் 10:10,11) என்று சொல்லுகிறான்.

மோசேயின் கோரிக்கையில் பார்வோனுக்கு சம்மதமில்லை. எபிரெயருடைய புருஷர் மட்டும் போய் கர்த்தருக்கு ஆராதனை செய்யலாம் என்று பார்வோன் கூறுகிறான். இந்த வாக்கியம் மூலஎபிரெய பாஷையில் இவ்வாறு பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. "உங்கள் குழந்தைகளோடு உங்களை அனுப்பினால் கர்த்தர் உங்களோடு இருப்பார்". ஆனால், முழு குடும்பத்தையும் எபிரெயர்கள் அழைத்துச் சென்றால் அவர்களுக்குப் பொல்லாப்பு நேரிடும் என்று பார்வோன் எச்சரிக்கிறான்.

பார்வோன் இஸ்ரவேல் புத்திரரின் குழந்தைகளை எகிப்து தேசத்திலே பிணைக்கைதிகளைப்போல பிடித்துக்கொள்வது பற்றி இதுவரையிலும் ஒன்றும் சொல்லவில்லை. இப்போதோ அவன் இஸ்ரவேல் புத்திரரின் குழந்தைகளைப்பற்றிப் பேசுகிறான்.

மோசேயோ பார்வோனை நோக்கி, "எங்கள் இளைஞரோடும், எங்கள் முதியோரோடும், எங்கள் குமாரரோடும், எங்கள் குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும் எங்கள் மாடுகளையும் கூட்டிக்கொண்டுபோவோம்; நாங்கள் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடவேண்டும்" என்று சொல்லுகிறார். பார்வோன் மோசேயின் வார்த்தைகளைக் கேட்டு கோபமடைகிறான். பார்வோனுடைய ஊழியக்காரர்கள் மோசேயையும் ஆரோனையும் அவனுடைய சமுகத்திலிருந்து துரத்திவிடுகிறார்கள்.

எபிரெயர் தங்களுடைய குடும்பத்திலுள்ள எல்லோரையும் கூட்டிக் கொண்டு வனாந்தரத்திற்குப் போனால் அவர்கள் திரும்பி வரமாட்டார்கள். ஆகையினால் புருஷர்கள் மட்டும் போகட்டும். ஸ்திரீகளும், ஆடுமாடுகளும், எகிப்திலேயே இருக்கட்டும் என்று பார்வோன் கூறுகிறான். ஸ்திரீகளும், பிள்ளைகளும் எகிப்தில் இருந்தால், வனாந்தரத்திற்குப் போகும் எபிரெய புருஷர்கள் இவர்களுக்காகத் திரும்பி வந்துவிடுவார்கள் என்பது பார்வோனின் திட்டம். பார்வோனுடைய விருப்பத்திற்கு விரோதமாக மோசேயும், ஆரோனும் கேட்டதினால் பார்வோனின் வேலையாட்கள் அவர்களைப் பார்வோனுடைய சமுகத்திலிருந்து துரத்திவிடுகிறார்கள்.

## பார்வோனின் கடின இருதயம் யாத் 10:12-20

**யாத் 10:12. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்தின்மேல் வந்து, கல்மழையினால் அழியாத பூமியின் பயிர்வகைகளையெல்லாம் பட்சிக்கும்படிக்கு, எகிப்து தேசத்தின் மேல் உன் கையை நீட்டு என்றார்.**

**யாத் 10:13. அப்படியே மோசே தன் கோலை எகிப்து தேசத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின்மேல் வீசப்பண்ணினார்; விடியற்காலத்திலே கீழ்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்தது.**

**யாத் 10:14. வெட்டுக்கிளிகள் எகிப்து தேசம் எங்கும் பரம்பி, எகிப்தின் எல்லையில் எங்கும் மிகவும் ஏராளமாய் இறங்கிற்று; அப்படிப்பட்ட வெட்டுக்கிளிகள் அதற்குமுன் இருந்ததும் இல்லை, அதற்குப்பின் இருப்பதும் இல்லை.**

**யாத் 10:15. அவைகள் பூமியின் முகம் முழுதையும் மூடிற்று; தேசம் அவைகளால் அந்தகாரப்பட்டது; கல்மழைக்குத் தப்பியிருந்த நிலத்தின் பயிர்வகைகள் யாவையும் மரங்களின் கனிகள் யாவையும் அவைகள் பட்சித்துப்போட்டது; எகிப்து தேசம் எங்குமுள்ள மரங்களிலும் வயல்வெளியின் பயிர்வகைகளிலும் ஒரு பச்சிலையும் மீதியாயிருக்கவில்லை.**

**யாத் 10:16. அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் தீவிரமாய் அழைப்பித்து: உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்தேன்.**

**யாத் 10:17. இந்த ஒரு முறைமாத்திரம் நீ என் பாவத்தை மன்னிக்கவேண்டும்; உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணுங்கள் என்றான்.**

**யாத் 10:18. அவன் பார்வோனை விட்டுப் புறப்பட்டுப்போய், கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்.**

**யாத் 10:19. அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை வீசும்படி செய்தார்; அது வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டு போய் செங்கடலிலே போட்டது; எகிப்தின் எல்லையில் எங்கும் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருந்ததில்லை.**

**யாத் 10:20. கர்த்தரோ பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை.**

மோசேயும் ஆரோனும் பார்வோனுடைய சமுகத்திலிருந்து துரத்திவிடப்பட்டாலும், அவர்கள் கர்த்தருடைய சமுகத்திலே ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். தம்மிடத்தில் வருகிறவர்களை கர்த்தர் ஒருபோதும் புறம்பே தள்ளிவிடமாட்டார். மோசே பார்வோனுடைய சமுகத்திலிருந்து துரத்திவிடப்பட்டு, கர்த்தருடைய சமுகத்திற்கு வருகிறார்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்தின்மேல் வந்து, கல்மழையினால் அழியாத பூமியின் பயிர்வகைகளையெல்லாம் பட்சிக்கும்படிக்கு, எகிப்து தேசத்தின்மேல் உன் கையை நீட்டு" (யாத் 10:12) என்று சொல்லுகிறார்.

வெட்டுக்கிளிகளினால் உண்டாகும் வாதை ஒரு தெய்வீகக் காரியமாகும். தெய்வீக வல்லமையினால் அவை எகிப்து தேசத்திற்கு வருகிறது. அதே வல்லமையினால் அவை எகிப்து தேசத்தை விட்டுப் போகிறது. தேவனுடைய கோலோடு எகிப்து தேசத்தின்மேல் கையை நீட்டுவது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் செயலாகும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறும் என்பதை நம்பி, மோசே எகிப்து தேசத்தின்மேல் தன் கையை நீட்ட வேண்டும்.

கல்மழை எகிப்து தேசத்தின் தாவர வகைகளை அழித்துப்போட்டது. ஆனாலும் கோதுமையும், கம்பும், கதிர்விடாதிருந்ததால் அவைகள் அழிக்கப்படவில்லை. (யாத் 9:32). இப்போது அவையும் அழியப்போகிறது. எகிப்து தேசத்தில் சர்வ நாசம் உண்டாகப் போகிறது.

அப்படியே மோசே தன் கோலை எகிப்து தேசத்தின்மேல் நீட்டுகிறார். அப்பொழுது கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றைக் தேசத்தின்மேல் வீசப்பண்ணுகிறார்; விடியற்காலத்திலே கீழ்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவருகிறது (யாத் 10:13).

கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின்மேல் வீசப் பண்ணுகிறார். இரண்டாம் நாள் விடியற்காலையில் கீழ்க்காற்று வெட்டுக் கிளிகளைக் கொண்டுவருகிறது. இதுவும் ஒரு தெய்வீகக் கிரியையாகும். எகிப்து தேசம் முழுவதையும் வெட்டுக்கிளிகள் மூடிற்று. ஆனாலும் எபிரெயர் வாழ்ந்த கோசேன் பிரதேசத்தில் வெட்டுக்கிளிகள் ஒருசேதமும் உண்டாக்கவில்லை. (யாத் 10:13-14).

வெட்டுக்கிளிகள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறது. கீழ்க்காற்று எகிப்து தேசத்தின்மீது வீசும்போது, அந்தக் காற்றோடு வெட்டுக்கிளிகளும் பறந்து வருகிறது. வெட்டுக்கிளிகள் தேவனுடைய சேனையைப்போல புறப்பட்டு வருகிறது.

"கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்; அவருடைய பாளயம் மகா பெரிது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது; கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?" (யோவே 2:11).

வெட்டுக்கிளிகள் எகிப்து தேசம் எங்கும் பரம்பி, எகிப்தின் எல்லையில் எங்கும் மிகவும் ஏராளமாய் இறங்கிற்று; அப்படிப்பட்ட வெட்டுக்கிளிகள் அதற்குமுன் இருந்ததும் இல்லை, அதற்குப்பின் இருப்பதும் இல்லை (யாத் 10:14).

வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்தின்மீது திரளாய்வருகிறது.அவற்றின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. "அவர் கட்டளையிட, எண்ணிமுடியாத வெட்டுக்கிளிகளும் பச்சைப்புழுக்களும் வந்து, அவர்களுடைய தேசத்திலுள்ள சகல பூண்டுகளையும் அரித்து, அவர்களுடைய நிலத்தின் கனியைத் தின்றுபோட்டது" (சங் 105:34,35).

குதிரைவீரர்களையும், இரதங்களில் வருகிறவீரர்களையும், காலாட்படையினரையும் எளிதாக எதிர்த்து நிற்கலாம். அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணலாம். ஆனால் கர்த்தர் அனுப்புகிற வெட்டுக்கிளிகளின் சேனைக்கு விரோதமாக, எகிப்து தேசத்தாரால் எதிர்த்து நிற்கமுடியவில்லை.

வெட்டுக்கிளிகள் பூமியின் முகம் முழுதையும் மூடிற்று; தேசம் அவைகளால் அந்தகாரப்படுகிறது; கல்மழைக்குத் தப்பியிருந்த நிலத்தின் பயிர்வகைகள் யாவையும் மரங்களின் கனிகள் யாவையும் அவைகள் பட்சித்துப்போடுகிறது; எகிப்து தேசம் எங்குமுள்ள மரங்களிலும் வயல்வெளியின் பயிர்வகைகளிலும் ஒரு பச்சிலையும் மீதியாயிருக்கவில்லை (யாத் 10:15).

இந்த வெட்டுக்கிளிகள் சாதாரணமானவையல்ல. வித்தியாசமானவை. இதற்கு முன்பு இப்படிப்பட்ட வெட்டுக்கிளிகள் பூமியில் காணப்படவில்லை. இவை தேவனுடைய விசேஷித்த சிருஷ்டிப்பு. எகிப்து தேசத்தின்மீது வாதையை அனுப்ப வேண்டுமென்பதற்காகத் தேவன் இந்த வெட்டுக்கிளிகளைச் சிருஷ்டித்தார். வாதை முடிந்த பின்பு, இந்த வெட்டுக்கிளிகள் பூமியில் காணப்படவும் இல்லை.

கர்த்தர் நிலத்தின் பயிர்வகைகளை மனுஷருக்கு போஜனமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் இங்கே வெட்டுக்கிளிகள் நிலத்தின் பயிர் வகைகளை பட்சித்துப்போடுகிறது. மனுஷர் புசிக்க வேண்டிய ஆகாரம், வெட்டுக்கிளிகளுக்கு ஆகாரமாயிற்று. நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை அகற்றிப்போட்டு, அந்த ஆசீர்வாதங்களை தமக்கு சித்தமான வேறொருவருக்கு கொடுத்துவிடுவார். வெட்டுக்கிளிகள் மனுஷர் புசிக்கவேண்டிய பயிர் வகைகளை பட்சிப்பது மாத்திரமல்ல, மனுஷருடைய வாயிலுள்ள அப்பத்தைக்கூட பட்சித்துப்போடும்.

எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிற பேரழிவை பார்வோன் பார்க்கிறான். அவன் தன்னுடைய பாவத்தை உணருகிறான். பார்வோன் மோசேயையும் ஆரோனையும் தன்னிடத்தில் தீவிரமாக அழைத்து வரச்சொல்லுகிறான். பார்வோன் அவர்களை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும், உங்களுக்கும் விரோதமாக பாவம் செய்தேன்" (யாத் 10:16) என்று சொல்லுகிறான்.

வெட்டுக் கிளிகளினால் எகிப்து தேசம் எங்குமுள்ள மரங்களிலும் வயல்வெளியின் பயிர்வகைகளிலும் ஒரு பச்சிலையும் மீதியாயிருக்கவில்லை. வாதை முடிந்தது. பூமியில் ஒரு தாவரமும் இல்லை. பார்வோன் மோசேயையும், ஆரோனையும் மறுபடியும் அழைக்கிறான். இது தேவனுடைய செயல் என்பதை அங்கிகரித்து தனக்காகக் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுமாறு பார்வோன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறான். (யாத் 10:16-17) பார்வோன் இரண்டாம் முறையாகத் தன் பாவத்தை அறிக்கையிடுகிறான். (யாத் 9:27).

பார்வோன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததை அங்கீகரிக்கிறான். கர்த்தரால் மாத்திரமே மனுஷருடைய பாவங்களை மன்னிக்க முடியும். ஆனால் பார்வோனோ மோசேயை நோக்கி, "இந்த ஒரு முறை மாத்திரம் நீ என் பாவத்தை மன்னிக்க வேண்டும்" என்று சொல்லுகிறான். பார்வோன் கர்த்தரிடத்தில் பாவமன்னிப்பு கேட்காமல், மோசேயினிடத்தில் கேட்கிறான்.

பார்வோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லை. மோசேயும் ஆரோனும் தனக்காக ஜெபம்பண்ணவேண்டுமென்று பார்வோன் எதிர்பார்க்கிறான். பார்வோன் அவர்களை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணுங்கள்" (யாத் 10:17) என்று சொல்லுகிறான்.

முதல் தடவையாக இஸ்ரவேலுக்கு எதிராகத் தான் செய்த பாவத்தை மன்னிக்க வேண்டும் என்று பார்வோன் கேட்கிறான். இது இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்கும் துக்கமல்ல. (2கொரி 7:10) இது தேவனுக்கேற்ற துக்கமல்ல. இது லௌகிக துக்கம். பார்வோன் மாறவில்லை. பார்வோன் தன் பாவங்களை மறைக்கிறான். ஆகையினால் அவன் வாழ்வடையமாட்டான். பார்வோன் தன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடவில்லை. ஆகையினால் அவன் தேவனிடத்திலிருந்து இரக்கம் பெறமாட்டான். (நீதி 28:13).

தனக்கு வந்திருக்கும் வாதையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பது பார்வோனின் எண்ணம். தான் செய்த தவறுகளுக்கு எபிரெயரின் தேவன் தனக்கு சாவைக் கொடுத்துத் தண்டிப்பார் என்பது பார்வோனுக்குத் தெரியும். ஆகையினால் பார்வோன் மோசேயிடம் "உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள்" என்று கூறுகிறான்.

மோசேயும் ஆரோனும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினால், கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்று பார்வோன் நம்புகிறான். பார்வோன்மீது வெட்டுக்கிளிகள் மூலமாக சாபம் வந்திருக்கிறது. அந்த சாவு அவனை விட்டு விலகவேண்டும். தன்னுடைய பாவம் தன்னைவிட்டு விலகவேண்டுமென்று பார்வோன் அவர்களை கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ண சொல்லவில்லை. பார்வோனுக்கு பாவம் விலகுவதைவிட, சாவு விலகுவதே முக்கியமானதாயிருக்கிறது.

எகிப்து தேசத்திலே வெட்டுக்கிளிகள் மூலமாக வாதை வந்திருக்கிறது. அந்த வாதையைவிட பார்வோனுடைய இருதயம் மிகவும் கடினமாயிருக்கிறது. பார்வோன் தன்னுடைய கடினமான இருதயத்தை மாற்றிக்கொள்ள ஆயத்தமாயில்லை. வெட்டுக்கிளிகள் மூலமாக வந்திருக்கும் ஆபத்துக்களையும் அழிவுகளையும் விட, பார்வோனுடைய கடினஇருதயத்தின் மூலமாய் வரும் அழிவும் ஆபத்தும் அதிகமாயிருக்கிறது.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள்" என்று மாத்திரமே கேட்டுக்கொள்கிறானேயல்லாமல், தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்றோ அல்லது தன்னுடைய கடினமான இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும் என்றோ கேட்டுக்கொள்ளவில்லை.

மோசே பார்வோனுடைய வேண்டுகோளுக்கு செவிகொடுக்கிறார். அவர் பார்வோனை விட்டுப் புறப்பட்டுப்போய், கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார் அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை வீசும்படி செய்கிறார்; அது வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டு போய் செங்கடலிலே போடுகிறது; எகிப்தின் எல்லையில் எங்கும் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருக்கவில்லை (யாத் 10:18,19).

மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணும் வரையிலும் வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்தை விட்டுப் போகவில்லை. தேவனுடைய விரலினால் இங்கு பலத்த கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேவன் மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை வீசும்படி செய்கிறார்; அது வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டு போய் செங்கடலிலே போடுகிறது;

எகிப்தின் எல்லையில் எங்கும் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருக்கவில்லை. (யாத் 10:18-19). வெட்டுக்கிளிகளைத் தேவனே அகற்றுகிறார். இயற்கையான மேல்காற்று வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டு போகவில்லை.

மேல்க்காற்று வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டு போய் செங்கடலிலே போடுகிறது. ஏதோம், அல்லது ஏசா என்பதற்கு "சிவப்பு" என்று பொருள். இவர்களுடைய நிலங்கள் இந்தக் கடற்கரை பகுதி வரையிலும் பரவியிருக்கிறது. (ஆதி 25:25). செங்கடல் அரபியாவை மேல் எத்தியோப்பியாவிலிருந்தும், எகிப்தின் ஒரு பகுதியிலிருந்தும் வேறுபிரிக்கிறது. செங்கடல் 1350 மைல் நீளமும், அதன் மையப்பகுதியில் 250 அகலமும் கொண்டது.

எகிப்தின் எல்லையில் எங்கும் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருக்கவில்லை. வெட்டுக்கிளிகள் எகிப்து தேசத்திற்குள் வந்தது எப்படியொரு அற்புதமோ அதுபோலவே வெட்டுக்கிளிகளெல்லாம் எகிப்து தேசத்தை விட்டுப் போவதும் ஒரு அற்புதம்தான்.

எகிப்து தேசத்தின்மீது வந்த வெட்டுக்கிளிகள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாகவே அந்த தேசத்தின்மீது வந்திருக்கிறது. அந்த வெட்டுக்கிளிகள் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக எகிப்து தேசத்திற்கு வருகிறது. அவருடைய சித்தத்தின் பிரகாரமாகவே அவை எகிப்து தேசத்தைவிட்டு நீங்குகிறது. வெட்டுக்கிளிகள் விஷயத்திலும் கர்த்தருடைய மகாபெரிய வல்லமை வெளிப்படுகிறது.

கீழ்க்காற்று எகிப்து தேசத்தின்மீது வெட்டுக்கிளிகளை கொண்டு வந்து சேர்க்கிறது. மேல்க்காற்று எகிப்து தேசத்திலுள்ள வெட்டுக்கிளிகளை அடித்துக்கொண்டுபோய் செங்கடலில் போடுகிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக காற்றை வீசப்பண்ணுகிறார். காற்று எந்த திசையில் வீசவேண்டுமென்று கர்த்தர் சித்தங்கொள்கிறாரோ அந்த திசையில் அது வீசும். காற்றும் கடலும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்.

கர்த்தர் மகாபலத்த மேல்க்காற்றை வீசும்படி செய்கிறார். மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் இந்தக் காற்றை வீசப்பண்ணுகிறார். அதுவரையிலும் எகிப்து தேசத்தின்மீது மேல்க்காற்று வீசவில்லை. இந்த சம்பவம் கர்த்தர் மோசேக்கு கொடுத்திருக்கிற அதிகாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது. மோசே எகிப்து தேசத்தின்மேல் தன் கோலை நீட்டியபோது கீழ்க்காற்று வீசுகிறது. அவர் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, அந்த தேசத்தின்மேல் மேல்க்காற்று வீசுகிறது.

கீழ்க்காற்று எகிப்து தேசத்தின்மீது திரளான வெட்டுக்கிளிகளை கொண்டு வருகிறது. இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு அடையாளம். மேல்க்காற்று வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டுபோய் செங்கடலிலேபோடுகிறது. இது கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் அடையாளம். கர்த்தர் தம்முடைய நீதியினால் பாவிகளைத் தண்டிக்கிறார். அதே கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அவர்களுடைய பாவங்களை மன்னிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

இப்பொழுது எகிப்தின் எல்லையில் ஒரு வெட்டுக்கிளிகள்கூட இல்லை. மேல்க்காற்று எல்லா வெட்டுக்கிளிகளையும் செங்கடலுக்கு அடித்துக்கொண்டு போய்விடுகிறது. எகிப்து தேசம் வெட்டுக்கிளிகள் இல்லாமல் துப்புரவாகயிருக்கிறது. அப்பொழுது கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார். அவன் இஸ்ரவேல் புத்திரரை போகவிடவில்லை (யாத் 10:20).

பார்வோன் சற்று நேரத்திற்கு முன்பு, "நீங்கள் போய் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள், யாரார் போகிறார்கள்" என்று கேட்டான். இப்போதோ பார்வோன், தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரைக்கூட போகவிடவில்லை.

## காரிருள்
## யாத் 10:21-29

**யாத் 10:21. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்து தேசத்தின்மேல் உண்டாகும்படிக்கு, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார்.**

**யாத் 10:22. மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது எகிப்து தேசம் எங்கும் மூன்றுநாள்மட்டும் காரிருள் உண்டாயிற்று.**

**யாத் 10:23. மூன்றுநாள்மட்டும் ஒருவரை ஒருவர் காணவும் இல்லை, ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்திருக்கவும் இல்லை; இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது.**

**யாத் 10:24. அப்பொழுது பார்வோன் மோசேயை அழைப்பித்து: நீங்கள் போய்க் கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்; உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும்மாத்திரம் நிறுத்தப்படவேண்டும்; உங்கள் குழந்தைகள் உங்களுடன் போகலாம் என்றான்.**

**யாத் 10:25. அதற்கு மோசே: நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் படைக்கும் பலிகளையும் சர்வாங்க தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்கவேண்டும்.**

**யாத் 10:26. எங்கள் மிருகஜீவன்களும் எங்களோடேகூட வரவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை; எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அவைகளில் இருந்து எடுக்க வேண்டும்; இன்னதைக்கொண்டு கர்த்தருக்கு ஆராதனை செய்வோம் என்பது நாங்கள் அங்கே போய்ச் சேருமளவும் எங்களுக்குத் தெரியாது என்றான்.**

**யாத் 10:27. கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் அவர்களைப் போகவிட மனதில்லாதிருந்தான்.**

**யாத் 10:28. பார்வோன் அவனை நோக்கி: என்னை விட்டு அப்பாலே போ; நீ இனி என்முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு; நீ இனி என் முகத்தைக் காணும் நாளில் சாவாய் என்றான்.**

**யாத் 10:29. அப்பொழுது மோசே: நீர் சொன்னது சரி; இனி நான் உம்முடைய முகத்தைக் காண்பதில்லை என்றான்.**

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது அடுத்த வாதையாக காரிருளை வரப்பண்ணுகிறார். எகிப்து தேசத்தில் காரிருள் இருக்கும் போது ஒருவரையொருவர் காணமுடியாது. நரகத்தில் வெளிச்சம் இருக்காது. எகிப்து தேசத்தில் நரக இருளைப்போல மூன்றுநாள் காரிருள் உண்டாகும்.

"விளக்கு வெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே" (வெளி 18:23).

எகிப்து தேசத்தில் காரிருள் உண்டாகும்போது ஜனங்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் தடவிக்கொண்டிருப்பார்கள். காரிருள் எகிப்தியருக்கு பயத்தையும், திகிலையும், நடுக்கத்தையும் கொடுக்கும்.

யூதர்களுடைய பாரம்பரிய நம்பிக்கையின் பிரகாரம், காரிருளில் பேய்கள் நடமாடும் என்று சொல்லுகிறார்கள். பேய்களின் விநோதமான கூக்குரல்களைக் கேட்டு ஜனங்கள் அதிகமாய்ப் பயப்படுவார்கள். அப்போது அவர்களுடைய மனச்சாட்சியும் அவர்களைக் குற்றப்படுத்தும். காரிருளின் பயங்கரத்தோடு, மனச்சாட்சியின் பயங்கரமும் அதிகமாயிருக்கும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்து தேசத்தின்மேல் உண்டாகும்படிக்கு, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு" என்று சொல்லுகிறார். மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டுகிறார்; அப்பொழுது எகிப்து தேசம் எங்கும் மூன்றுநாள்மட்டும் காரிருள் உண்டாயிற்று (யாத் 10:21,22).

தேவனுடைய கோலை நீட்டிய மோசே, இப்பொழுது தன் கையை வானத்திற்கு நேராக நீட்டுகிறார். வானத்தின் தேவனுக்கு மோசே கீழ்ப்படிகிறார். தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அற்புதங்களைச் செய்கிறவர். அவரை நோக்கி, மோசே கையை நீட்டும்போது கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காகக் கிரியை செய்கிறார்.

தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் என்பது காரிருளைக் குறிக்கிறது. காரிருளில் ஒன்றையும் பார்க்க முடியாது. தடவிப்பார்க்கலாம். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு யாரும் போகமுடியாது. (யாத் 10:23). வேதாகமத்தில் இதுபோன்ற காரிருள் யாத் 10:22; யாத் 20:21; உபா 5:22; 1இராஜா 8:12; 2நாளா 6:1; யோபு 38:9; யோவே 2:2; செப் 1:15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

யாத் 19:9,16; 2சாமு 22:12; யோபு 22:14; யோபு 26:8; யோபு 37:11; சங் 18:11-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரிருளும் இந்தக் கார்மேகமும் ஒன்றாக இருக்கலாம். காரிருளும், கார்மேகமும் ஒரே பொருளை உடையவை. நரகத்தின் இருட்டை விவரிப்பதற்காகக் காரிருள் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 8:12; மத் 22:13; மத் 25:30; 2பேதுரு 2:4,17; யூதா 1:6,13).

நரகத்தில் இருட்டும், அக்கினியும் இருக்கும். இவை ஏன் சேர்ந்திருக்கும் என்று தெரியவில்லை. ஆனால் அவை நித்திய காலமாக இருக்கும். (ஏசா 66:24; மத் 13:42-50; மத் 25:41,46; மாற்கு 9:32-49; வெளி 14:9-11; வெளி 20:10-15; வெளி 21:8; வெளி 22:15).

பரிசுத்த வேதாமத்தில், ஒரு சில இடங்களில் காரிருளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பூமி சிருஷ்டிக்கப்பட்டபோது இருந்த காரிருள். (யோபு 38:9) பூமியின்மீது வருங்காலத்தில் சூரியன் கறுப்புக் கம்பளியைப்போல கறுத்திருக்கும். (வெளி 6:12)
2. பூமியின் ஆழத்தின்மேல் இருள் இருந்தது. (ஆதி 1:2).
3. ஆபிரகாமைத் திகிலும், காரிருளும் மூடிக் கொண்டது. (ஆதி 15:12).
4. எகிப்தின்மீது காரிருள் வாதையாக வந்தது. (யாத் 10:21-22).
5. எகிப்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் நடுவே அந்தகாரம் இருந்தது. (யாத் 14:20; யோசு 24:7).
6. நியாயப்பிரமாணம் சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட போது, தேவன் கார்மேகத்திற்குள் இருந்தார். (யாத் 20:21; உபா 4:11; உபா 5:22-23; எபி 12:18).
7. இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபோது பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. (மத் 27:45; மாற்கு 15:33; லூக்கா 23:44).

எகிப்து தேசத்தில் மூன்றுநாள் காரிருள் உண்டாயிற்று. அவர்களுக்கு பகல் வேளையே இல்லை. மூன்றுநாள் காரிருள் என்பது ஆறு இரவு பொழுதுகளாகும். அவையெல்லாம் ஒரே இரவு பொழுதாக, மூன்று நாட்களுக்கு தொடர்ந்து இருக்கிறது. மூன்று நாள் மட்டும் எகிப்தியர் ஒருவரையொருவர் காணவுமில்லை. அவர்களில் ஒருவரும் தம்மிடத்தை விட்டு எழுந்திருக்கவுமில்லை (யாத் 10:23).

ஆவிக்குரிய காரிருள் என்பது ஆவிக்குரிய அடிமைத்தனமாகும். சாத்தான் மனுஷருடைய ஆவிக்குரிய கண்களைக் குருடாக்குகிறான். அப்போது அவர்களால் ஆவிக்குரிய காரியங்களைக் காணமுடியாது. அது மாத்திரமல்ல. சாத்தான் மனுஷருடைய ஆவிக்குரிய கைகளையும் கால்களையும் கட்டிப்போடுகிறான். அப்போது அவர்களால் கர்த்தருக்காக கிரியை செய்யவும் முடியாது. அவர்களால் பரலோகத்தை நோக்கி போகவும் முடியாது. அவர்கள் காரிருளில் அமர்ந்திருப்பார்கள். தாங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு எழுந்திருக்கவுமாட்டார்கள்.

பார்வோனுடைய மனதும் குருடாயிருக்கிறது. எகிப்து தேசத்திலே காரிருள் உண்டானதுபோல, பார்வோனுடைய இருதயத்திலும் காரிருள் உண்டாயிருக்கிறது. எகிப்து தேசத்தார் தங்களுடைய அக்கிரமங்களினாலும், துன்மார்க்கங்களினாலும், கொடூரமான குணங்களினாலும் இஸ்ரவேலின் விளக்கை அணைத்துப்போட முயற்சி செய்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் எரிகிற விறகை அவித்துப்போட பார்க்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் தம்முடைய நீதியினால் எகிப்தியரின் விளக்கை அணைத்துப் போடுகிறார். எகிப்து தேசமெங்கும் காரிருள் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருக்கிறது (யாத் 10:23). கர்த்தர் எகிப்தியருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் வித்தியாசம் காண்பிக்கிறார். எகிப்தியருக்கு காரிருளும், இஸ்ரவேலருக்கும் வெளிச்சமும் உண்டாயிற்று.

எகிப்து தேசமெங்கும் காரிருள் உண்டானதினால், பார்வோன் மனம்திரும்பி, இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தைவிட்டு அனுப்பிவிடவேண்டுமென்று நினைக்கிறான்.

பார்வோன் மோசேயை அழைப்பித்து, "நீங்கள் போய்க் கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்; உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும்மாத்திரம் நிறுத்தப்படவேண்டும்; உங்கள் குழந்தைகள் உங்களுடன் போகலாம்" (யாத் 10:24) என்று சொல்லுகிறான்.

பார்வோன் இப்போது கர்த்தருக்கு பலியிட இஸ்ரவேல் புத்திரரின் குடும்பத்தாரையெல்லாம் அனுப்புவதற்கு சம்மதிக்கிறான். ஆனால் அவர்கள் ஆடுமாடுகளை எகிப்து தேசத்திலேயே விட்டு விட்டுப்போகவேண்டும் என்று சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலி செலுத்தப்போகிறார்கள். அவர்கள் ஆடுமாடுகளை கர்த்தருக்கு பலியாக செலுத்துவார்கள். ஆனால் பார்வோனோ இஸ்ரவேல் புத்திரரை வெறுங்கையோடு அனுப்பவேண்டுமென்று நினைக்கிறான்.

பார்வோன் எல்லோரையும் போக அனுமதிக்கிறான். ஆனால் இஸ்ரவேலரின் ஆடுகளையும், மாடுகளையும் போக அனுமதிக்கவில்லை. மிருகஜீவன்கள் போகாவிட்டால் இஸ்ரவேலர்கள் வனாந்தரத்திற்குப் போகமாட்டார்கள் என்று பார்வோன் நினைக்கிறான். ஆனால் மோசேயோ பார்வோனிடம் "எங்கள் மிருகஜீவன்களும் எங்களோடேகூட வரவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை" என்று கூறிவிடுகிறார் (யாத் 10:25-26).

மோசேயோ, தங்களோடு ஆடுமாடுகளையும் அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று சொல்லுகிறார். மோசே பார்வோனை நோக்கி, "நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் படைக்கும் பலிகளையும் சர்வாங்க தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்கவேண்டும். எங்கள் மிருகஜீவன்களும் எங்களோடேகூட வரவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை; எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அவைகளிலிருந்து எடுக்க வேண்டும்; இன்னதைக்கொண்டு கர்த்தருக்கு ஆராதனை செய்வோம் என்பது நாங்கள் அங்கே போய்ச் சேருமளவும் எங்களுக்குத் தெரியாது" (யாத் 10:25,26) என்று சொல்லுகிறார்.

எப்படிப்பட்ட ஆராதனை செய்ய வேண்டும் என்பது எவ்வளவு பலிகள் செலுத்த வேண்டுமென்பதும் இஸ்ரவேலருக்குத் தெரியாது. அவர்களுக்கு இன்னும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை. ஆகையினால் தங்களோடு எல்லா மிருகஜீவன்களையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று மோசே விரும்புகிறார். தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அவைகளிலிருந்து எடுத்து, பலிசெலுத்த வேண்டுமென்று மோசே விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலி செலுத்தப்போகிறார்கள். ஆடுமாடுகள் இல்லாமல் பலி செலுத்த முடியாது. ஆகையினால் ஆடு மாடுகளையும் தங்களோடு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். ஆனால் பார்வோனோ, இஸ்ரவேல் புத்திரரோடு ஆடுமாடுகளை அனுப்ப மறுத்துவிடுகிறான்.

கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்; அவன் அவர்களைப் போகவிட மனதில்லாதிருக்கிறான் (யாத் 10:27).

பார்வோன் மோசேயை நோக்கி, "என்னை விட்டு அப்பாலே போ; நீ இனி என்முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு; நீ இனி என் முகத்தைக் காணும் நாளில் சாவாய்" என்று சொல்லுகிறான். அப்பொழுது மோசே, "நீர் சொன்னது சரி; இனி நான் உம்முடைய முகத்தைக் காண்பதில்லை" (யாத் 10:28,29) என்று சொல்லுகிறார்.

மோசே சொன்ன பதில் பார்வோனுக்குக் கோபமூட்டிற்று. மோசே இனிமேல் பார்வோனைப் பார்த்தால் மோசேக்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று கண்டிப்போடு கூறிவிடுகிறான். மோசேயையோ, ஆரோனையோ கொல்வதற்குத் தேவன் பார்வோனை அனுமதிக்கமாட்டார். ஏனெனில் தேவனுடைய திட்டம் இன்னும் நிறைவேறவில்லை. தேவன் அவர்களுக்கு ஒரு விசேஷித்த ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் செல்ல வேண்டும். தேவனுடைய ஊழியத்திற்காகத் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறவர்கள் தேவன் நியமித்து வைத்திருக்கும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக மரித்துப் போகமாட்டார்கள். தேவனுக்குக் கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு மரணம் வரலாம். (1இராஜா 13)

ஒரு சில ராஜாக்கள் கர்த்தருடைய ஊழியக்காரரின் வார்த்தைகளைக் கேட்டு கோபமடைந்திருக்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் அவர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. பார்வோன் ஆபிரகாமால் கோபமடைந்தான். (ஆதி 12:10-20)
2. அபிமெலேக்கு ஆபிரகாமால் கோபமடைந்தான். (ஆதி 20)
3. அபிமெலேக்கு ஈசாக்கால் கோபமடைந்தான். (ஆதி 26:6-16)
4. பார்வோன் மோசேயால் கோபமடைந்தான். (யாத் 10:24-29)
5. பாலாக்கு பிலேயாமினால் கோபமடைந்தான். (எண் 24:10-11)
6. யெரொபெயாம் ஒரு தீர்க்கதரிசியினால் கோபமடைந்தான். (1இராஜா 13:4)
7. ஆகாப் மிகாயாவினால் கோபமடைந்தான். (1இராஜா 22:6-28)
8. நாகமான் எலிசாவினால் கோபமடைந்தான். (2இராஜா 5:10-19)
9. ஆசா அனானியால் கோபமடைந்தான். (2நாளா 16:7-11)
10. யோவாஸ் சகரியாவினால் கோபமடைந்தான். (2நாளா 24:20-22)
11. உசியா அசரியாவினால் கோபமடைந்தான். (2நாளா 26:16-21)
12. யோயாக்கீம் ஊரியாவினால் கோபமடைந்தான். (எரே 26:20-24)
13. செதேக்கியா எரேமியாவினால் கோபமடைந்தான். (எரே 32:1-5)
14. ஏரோது யோவான்ஸ்நானனால் கோபமடைந்தான். (மத் 14:3)

## 11 அதிகாரம்

கர்த்தர் மோசேக்கு மறுபடியுமாக தம்முடைய வார்த்தையை சொல்லுகிறார் (யாத் 11:1,2). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்கிறார் (யாத் 11:3).

மோசே பார்வோனுக்கு சொன்ன கடைசி செய்தி. எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறு அனைத்தும் சாகும் என்று மோசே பார்வோனுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையை சொல்லுகிறார் (யாத் 11:4-8).

பார்வோன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரை போகவிடாதிருக்கிறான் (யாத் 11:9,10).

### பார்வோனின் பிடிவாதம் யாத் 11:1-3

**யாத் 11:1. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இன்னும் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவேன்; அதற்குப்பின் அவன் உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான்; சமூலமாய் உங்களைப் போகவிடுவதும் அல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தியும் விடுவான்.**

**யாத் 11:2. இப்பொழுது ஒவ்வொருவனும் அவனவன் அயலானிடத்திலும், ஒவ்வொருத்தியும் அவளவள் அயலாளிடத்திலும் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் கேட்கும்படி ஜனங்களுக்குச் சொல் என்றார்.**

**யாத் 11:3. அப்படியே கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவுகிடைக்கும்படி செய்தார். மோசே என்பவன் எகிப்து தேசத்தில் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பெரியவனாயிருந்தான்.**

கர்த்தர் மோசேயின்மீதும், இஸ்ரவேல் புத்திரர்மீதும் தம்முடைய விசேஷித்த கிருபைகளை வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்திருக்கிறது.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது ஒவ்வொரு வாதையாக வரப்பண்ணுகிறார். பார்வோனோ தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, கர்த்தரை ஆராதிப்பதற்கு இஸ்ரவேல் புத்திரரை அனுப்ப மறுத்துவிடுகிறான். இதனால் கர்த்தருடைய வாதை எகிப்து தேசத்தின்மீது மறுபடியும் வருகிறது.

இந்த வாதைகள் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று மோசே விரும்புகிறார். பார்வோன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தாமல், இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பிவிட்டால் மாத்திரமே, எகிப்து தேசத்தின்மீது வரும் வாதை முடிவுக்கு வரும். இல்லையென்றால் பார்வோன்மீதும், எகிப்து தேசத்தார்மீதும் கர்த்தர் தம்முடைய வாதைகளை தொடர்ந்து வரப்பண்ணிக்கொண்டிருப்பார்.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலரை ஒடுக்குவதும் நிறுத்தப்பட வேண்டுமென்று மோசே விரும்புகிறார். மோசேயின் இருதயம் மென்மையாயிருக்கிறது. இஸ்ரவேல்புத்திரரும் தீங்குகளை அனுபவிக்கக்கூடாது என்றும், எகிப்தியரும் வாதைகளை அனுபவிக்கக்கூடாது என்றும் மோசே எதிர்பார்க்கிறார். ஆனால் பார்வோன் தன்னுடைய இருதயத்தைத் தொடர்ந்து கடினப்படுத்துவதினால், கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது தொடர்ந்து வாதைகளை வரப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பிரியமானவர்கள். பரலோகத்தின் தேவன் அவர்களுக்கு தம்முடைய விசேஷித்த சிலாக்கியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர்கள் பல வருஷங்களாக எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தாலும், இப்போது கர்த்தருடைய பெரிதான கிருபையினால், அவர்களுடைய அடிமைத்தனம் முடிவுக்கு வந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகப் போகிறார்கள். அவர்களுடைய எஜமான்கள் இத்தனை வருஷங்களாக அவர்களைத் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களை கடினமாய் வேலை வாங்கி, அவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்காமல், அவர்களை ஏமாற்றியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்து தேசத்திலே இதுவரையிலும் தங்களுடைய உழைப்புக்கு தகுந்த ஊதியம் கிடைக்கவில்லை. ஆனாலும் அவர்கள் ஊதியம் இல்லாமலேயே, தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறார்கள். தாங்கள் வெறுங்கையோடு போனாலும் பரவாயில்லை, தங்களுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைக்கவேண்டும் என்பதே இஸ்ரவேல் புத்திரரின் விருப்பம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே இத்தனை வருஷங்களாக, நீடிய பொறுமையோடு, அடிமை வேலைகளை செய்திருக்கிறார்கள். தங்களுடைய சம்பளத்தை இழப்பதற்கும் அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரருக்கு ஆதரவாயிருக்கிறார்.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஏமாற்றுவதற்கு கர்த்தர் அனுமதிக்கவில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து விடுதலை பெற்று வெறுங்கையோடுபோவது கர்த்தருக்கு சித்தமாயில்லை. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தை பெற்றுக்கொண்டு போகவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

கர்த்தர் தம்முடைய விருப்பத்தை மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இன்னும் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவேன்; அதற்குப்பின் அவன் உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான்; சமூலமாய் உங்களைப் போகவிடுவதும் அல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தியும் விடுவான்" *(யாத் 11:1)* என்று சொல்லுகிறார்.

மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி, "இப்பொழுது ஒவ்வொருவனும் அவனவன் அயலானிடத்திலும், ஒவ்வொருத்தியும் அவளவள் அயலாளிடத்திலும் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் கேட்கும்படி ஜனங்களுக்குச் சொல்" *(யாத் 11:2)* என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் எகிப்தியரிடத்தில் பல காரியங்களை கேட்டிருப்பார்கள். ஆனால் எகிப்தியர்களோ அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஒருபோதும் செவிகொடுக்கமாட்டார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு ஒழுங்கான சம்பளம்கூட கிடைக்காது. ஆனால் இப்போதோ இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும், தங்களுடைய எஜமான்களிடத்தில், வெள்ளியுடைமைகளையும் பொன்யுடமைகளையும் கேட்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்கிறார். எகிப்தியர்கள் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரரை வெறுத்தார்கள். இப்போதோ அவர்கள் இஸ்ரவேலருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள்.

மோசே எகிப்து தேசத்தில் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பெரியவராயிருக்கிறார் *(யாத் 11:3)*.

இஸ்ரவேலின் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதை எகிப்தியர் கற்றுக் கொள்கிறார்கள். மோசேயைக் கனப்படுத்த வேண்டுமென்றும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும், ஜனங்கள் பயத்தோடு கற்றுக் கொள்கிறார்கள். எகிப்தியரின் தலைப்பிள்ளைகள் செத்துப் போனதால், இஸ்ரவேலரை எகிப்து தேசத்திலிருந்து எப்படியாவது துரத்தி விடவேண்டுமென்று எகிப்தியர்கள் விரும்புகிறார்கள். (யாத் 11:8; யாத் 12:33-36).

மோசே எகிப்து தேசத்திலிருந்து தன் மாமனாகிய எத்திரோவிடம் போவதற்கு முன்பாக, அவர் எத்தியோப்பியரிடமிருந்து எகிப்தியரை மீட்டார் (யாத் 2:10). ஆனாலும், இப்போது அவர் தேவன் மூலமாகப் பல அற்புதங்களைச் செய்து, இஸ்ரவேல் ஜனங்களை மீட்டபடியினால், மோசே எல்லோருடைய பார்வைக்கும் மிகவும் பெரியவராக இருக்கிறார். பார்வோனுடைய பார்வைக்கு மோசே பெரியவராக இல்லை. பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கு மாத்திரமே மோசே பெரியவராக இருக்கிறார்.

எகிப்தியர்கள் மோசேயிடம் காணப்படுகிற தெய்வீக வல்லமைகளைப் பார்க்கிறார்கள். மோசேயின் கரம் கர்த்தருடைய வல்லமையினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறது. இதனால் எகிப்தியர்களின் பார்வைக்கு மோசே மிகவும் பெரியவராயிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அப்போஸ்தலர்கள் சாதாரண ஜனங்களாகயிருந்தாலும், கர்த்தருடைய வல்லமை அவர்கள் மூலமாய் வெளிப்பட்டது. ஆகையினால் ஜனங்கள் அப்போஸ்தலர்களை மேன்மைப்படுத்தினார்கள்.

"அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள். மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்" (அப் 5:12,13).

தம்மை யார் கனப்படுத்துகிறார்களோ அவர்களை கர்த்தரும் கனப்படுத்துகிறார். பார்வோன் மோசேயை வெறுக்கிறான். ஆனாலும் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கு மோசே பெரியவராயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுலின் பிரசங்க செய்திக்கு ராயனுடைய அரண்மனையிலுள்ளவர்களும் செவிகொடுத்து, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

"அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி, சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்" (பிலி 1:13,14).

## மோசேயின் கோபம்
## யாத் 11:4-10

**யாத் 11:4. அப்பொழுது மோசே: கர்த்தர் நடுராத்திரியிலே நான் எகிப்தின் மத்தியில் புறப்பட்டுப்போவேன்.**

**யாத் 11:5. அப்பொழுது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் ஏந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும் என்று உரைக்கிறார் என்று சொன்னதுமன்றி,**

**யாத் 11:6. அதினால் எகிப்து தேசம் எங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும்.**

**யாத் 11:7. ஆனாலும் கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதர்முதல் மிருகஜீவன்கள் வரைக்கும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை.**

**யாத் 11:8. அப்பொழுது உம்முடைய ஊழியக்காரராகிய இவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து, பணிந்து, நீயும் உன்னைப் பின்பற்றுகிறவர்கள் யாவரும் புறப்பட்டுப்போங்கள் என்று சொல்லுவார்கள்; அதின்பின் புறப்படுவேன் என்று சொல்லி, உக்கிரமான கோபத்தோடே பார்வோனை விட்டுப் புறப்பட்டான்.**

**யாத் 11:9. கர்த்தர் மோசேயை நோக்கி: எகிப்து தேசத்தில் என் அற்புதங்கள் அநேகமாகும்படிக்கு, பார்வோன் உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டான் என்று சொல்லியிருந்தார்.**

**யாத் 11:10. மோசேயும் ஆரோனும் இந்த அற்புதங்களையெல்லாம் பார்வோனுக்கு முன்பாகச் செய்தார்கள். கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினதினால், அவன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிடவில்லை.**

மோசே பார்வோனிடத்தில் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். இதுவே பார்வோனுக்கு சொல்லப்படும் கடைசி எச்சரிப்பு. எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறு அனைத்தும் சாகும் என்பதே கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தை.

கர்த்தர் பார்வோனுடைய குமாரனை, அவனுடைய சேஷ்டபுத்திரனை சங்கரிப்பதாக ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறார்.

"எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்றுசொல் என்றார்" *(யாத் 4:23).*

கர்த்தர் ஆரம்பத்தில் சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகள் இப்போது நிறைவேறப்போகிறது. கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது இதுவரையிலும் பல வாதைகளை வரப்பண்ணியிருக்கிறார். எகிப்து தேசத்தில் கொள்ளைநோய் வந்தபோது தேசத்திலுள்ள மிருகஜீவன்களெல்லாம் செத்துப்போயிற்று. தன்னுடைய மிருகஜீவன்கள் செத்துப்போனதைப் பார்த்து பார்வோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியிருக்கவேண்டும். அவன் அப்போதே இஸ்ரவேல் புத்திரரை விடுதலை செய்திருக்க வேண்டும். அவன் அப்படி செய்திருந்தால், இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற முதற்பேறுகள் செத்துப்போகாமல் பிழைத்திருக்கும்.

கர்த்தர் எகிப்து தேசத்திற்கு வரும் வாதையை தெளிவாகச் சொல்லுகிறார். கர்த்தர் நடுராத்திரியிலே எகிப்தின் மத்தியில் புறப்பட்டுப்போவார். அப்பொழுது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் ஏந்திரம் அரைக்கும் அடிமைப்பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும் *(யாத் 11:4,5).*

கர்த்தர் வரப்பண்ணும் வாதைக்கு சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளையும் தப்பிக்காது. ஏந்திரம் அரைக்கும் அடிமைப்பெண்ணுடைய தலைப்பிள்ளையும் தப்பிக்காது. ஒருவன் உயர்வான சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தாலும், கர்த்தர் வரப்பண்ணும் வாதை அவனையும் வாதிக்கும். ஒருவன் அடிமையாகயிருந்தாலும், கர்த்தர் வரப்பண்ணும் வாதை அவன்மீதும் வரும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் பட்சபாதமில்லை.

பூர்வ காலத்தில் ஏந்திரம் அரைக்கிறவர்கள் அடிமைப்பெண்களாக இருந்தார்கள். இவர்கள் வீடுவீடாகச் சென்று, அவர்களுக்குத் தானியங்களை அரைத்துத் தருவார்கள். ஒரு ஏந்திரத்தை அரைக்க இரண்டு ஸ்திரீகள் தேவை. *(மத் 24:41).* "ஏந்திரம் அரைக்கும் அடிமைப்பெண்" என்பது எகிப்தியருடைய சமுதாயத்தில் மிகவும் பின்தங்கி தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் என்று பொருள்.

எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறு அனைத்தும் சாகும்போது, எகிப்து தேசம் எங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும் *(யாத் 11:6).*

கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் வித்தியாசம் ஏற்படுத்துகிறார். வாதை எகிப்தியர்மீது மாத்திரம் வரும். அந்த வாதை இஸ்ரவேல் புத்திரர்மீது வராது. பார்வோன் கர்த்தருடைய வல்லமையை அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை பார்வோன் புரிந்துகொள்ள வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும், மனிதர் முதல், மிருகஜீவன்கள் வரைக்கும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை.

பொதுவாக மரணம் ஏற்படும்போது நாய்கள் குரைப்பது வழக்கம். எகிப்திலுள்ள தலைப்பிள்ளைகள் எல்லோரும் செத்துப்போகும்போது, எல்லா நாய்களும் ஊளையிடும். ஆனால் இஸ்ரவேலர் இருக்கும் கோசேன் பகுதியிலோ ஒரு நாயும் தன் நாவை அசைப்பதில்லை. அங்கு மரணம் எதுவும் நேரிடவில்லை. ஆகையினால் அங்குள்ள நாய்கள் அமைதியாக இருக்கிறது. இலட்சக்கணக்கான எபிரெயர்கள் எகிப்து தேசத்தை விட்டுப், புறப்பட்டுப்போனபோது கூட, இந்த நாய்கள் தெய்வீக அதிகாரத்தில் தங்கள் நாவை அசைக்காமல், அவர்களோடு பின்சென்றிருக்க வேண்டும்.

எகிப்தியருக்கு நாய்கள் புனித மிருகங்களாகும். எகிப்து தேசத்திலுள்ள அனுபிஸ் என்னும் பட்டணத்திற்கு "நாய்களின் பட்டணம்" என்று பொருள். நாய்களைக் கனப்படுத்துவதற்காக நாய்களின் பேரில் எகிப்தியர் ஒரு பட்டணத்தைக் கட்டியிருக்கிறார்கள். இங்குள்ள கோவிலில் ஒரு நாய் தெய்வமாக இருந்தது. அதற்கு அனுதினமும் விசேஷித்த உணவு பதார்த்தங்களைப் படைத்தார்கள். இந்த வசனத்தில் நாய்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது எகிப்தின் தெய்வத்திற்கு எவ்வித வல்லமையும் இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

மோசே பார்வோனிடத்தில் கோபமாகப் பேசுகிறார். மோசே பார்வோனை நோக்கி, "உம்முடைய ஊழியக்காரராகிய இவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து, பணிந்து, நீயும் உன்னைப் பின்பற்றுகிறவர்கள் யாவரும் புறப்பட்டுப்போங்கள் என்று சொல்லுவார்கள்; அதின்பின் புறப்படுவேன்" (யாத் 11:8) என்று சொல்லி, உக்கிரமான கோபத்தோடே பார்வோனை விட்டுப்புறப்படுகிறார். மோசே சொன்ன பிரகாரமே இந்த வாக்கியம் நிறைவேறிற்று (யாத் 12:33).

மோசே மனத்தாழ்மையுள்ளவர். அவர் அவசரப்பட்டு கோபப்படுகிறவருமல்ல. ஆனாலும் இந்த சந்தர்ப்பத்தில் மோசே பார்வோனைவிட்டு உக்கிர கோபத்தோடே புறப்பட்டுப்போகிறார். பார்வோன் தன்னுடைய தப்பிதத்தை உணரவேண்டும். பார்வோனுடைய சேஷ்டபுத்திரனே இந்த வாதையினால் செத்துப்போவான். ஆனால் பார்வோனோ யாரைப்பற்றியும் கவலைப்படாமல் நிர்விசாரமாயிருக்கிறான். அவன் கர்த்தருக்கு விரோதமாக தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான்.

பார்வோன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், எகிப்து தேசத்தின்மீது வாதை வராது. எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறுகளெல்லாம் சாவுக்கு தப்பிக்கும். பார்வோன் என்னும் ஒரு மனுஷனுடைய இருதயக்கடினத்தினால், எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறு அனைத்தும் சாகப்போகிறது. இதை நினைத்துப் பார்க்கும்போது மோசேக்கு பார்வோன்மீது உக்கிரகோபம் வருகிறது. இந்தக் கோபம் மாம்சப்பிரகாரமான கோபமல்ல. இது பரிசுத்தமான பக்தி வைராக்கியம். மோசேயின் கோபம் பாவத்திற்கு விரோதமான கோபம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் மனுஷருடைய இருதயக்கடினத்தினிமித்தம், அவர்கள்மீது கோபப்பட்டிருக்கிறார்.

"அவர்களைப் பார்த்து: ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ அழிப்பதோ, எது நியாயம் என்றார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று" (மாற் 3:4,5).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். ஜனங்களில் சிலர் எத்தனை தரம் சுவிசேஷத்தைக் கேட்டாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பமாட்டார்கள். அவர்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி துணிகரமாக தொடர்ந்து பாவம் செய்வார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவர்களை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எச்சரித்தாலும், அவர்கள் எச்சரிப்பின் வார்த்தைக்கும் செவிகொடுக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், ஊழியக்காரர்களுடைய மனது வேதனைப்படுகிறது.

கர்த்தர் எசேக்கியேலுக்கு இஸ்ரவேல் வீட்டாரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் எசேக்கியேலுக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஆனாலும் எசேக்கியேல் தன் ஆவியின் உக்கிரத்தினால் மனங்கசந்துபோனார்.

"இஸ்ரவேல் விட்டாரோவெனில், உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்; எனக்கே செவிகொடுக்கமாட்டோம் என்கிறார்களே; இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் கடினமான நெற்றியும் முரட்டாட்டமுள்ள இருதயமும் உள்ளவர்கள்" (எசே 3:7).

"ஆவி என்னை உயர எடுத்துக்கொண்டது; நான் என் ஆவியின் உக்கிரத்தினாலே மனங்கசந்துபோனேன்; ஆனாலும் கர்த்தருடைய கரம் என்மேல் பலமாக இருந்தது" (எசே 3:14).

ஊழியக்காரர்கள் பாவத்திற்கு விரோதமாக கோபப்படலாம். அதே வேளையில் அவர்கள் கோபப்பட்டு பாவம் செய்து விடக்கூடாது.

பரிசுத்த வேதாகமத்தில் கோபப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒரு சிலரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. ஏசா யாக்கோபின்மீது கோபப்பட்டான் (ஆதி 27:45).

2. யாக்கோபு ராகேலின்மீது கோபப்பட்டார். (ஆதி 30:2).

3. சிமியோனும், லேவியும் சீகேமின்மீது கோபப்பட்டார்கள். (ஆதி 49:6-7).

4. மோசே பார்வோன்மீதும், (யாத் 11:8) இஸ்ரவேலர்மீதும் கோபப்பட்டார். (யாத் 32:19).

5. பிலேயாம் கழுதையின்மீது கோபப்பட்டான். (எண் 22:27).

6. பாலாக் பிலேயாம்மீது கோபப்பட்டான். (எண் 24:10).

7. சிம்சோன் பெலிஸ்தியரின்மீது கோபப்பட்டார் (நியா 14:19).

8. சவுல் அம்மோனியர்மீதும் (1சாமு 11:6) யோனத்தான்மீதும் கோபப்பட்டார். (1சாமு 20:30-34).

9. எலியாப் தாவீதுமீது கோபப்பட்டான் (1சாமு 17:28).

10. தாவீது ஒரு ஐசுவரியவான்மீது கோபப்பட்டார். (2சாமு 12:5).

11. அகாஸ்வேரு ராஜா வஸ்தியின்மீது கோபப்பட்டான். (எஸ் 1:12).

12. நேபுகாத்நேச்சார் ஞானிகளின்மீது கோபப்பட்டான். (தானி 2:12).

13. யோனா தேவன்மீது கோபப்பட்டார். (யோனா 4).

14. இயேசு மாய்மாலக்காரர்மீது கோபப்பட்டார். (மாற்கு 3:5).

கர்த்தர் மோசேயை நோக்கி, "எகிப்து தேசத்தில் என் அற்புதங்கள் அநேகமாகும்படிக்கு, பார்வோன் உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டான்" (யாத் 11:9) என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன பிரகாரம் பார்வோன் மோசேக்கு செவிகொடுக்கவில்லை. ஆனாலும் மோசேக்கு பார்வோன்மீது உக்கிரகோபம் வருகிறது.

BELLWETHER INTERNATIONAL

# யாத்திராகமம் - விரிவுரை
# EXODUS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

தேவன் எகிப்து தேசத்தில் அநேக அற்புதங்களைச் செய்கிறார். கர்த்தருடைய வல்லமையையும், அவரே மெய்யான தேவன் என்பதையும் உலகம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தேவன் அநேக அற்புதங்களை நடப்பிக்கிறார். (யாத் 6:7; யாத் 7: யாத் 5,17; யாத் 8:10,22; யாத் 9:14,29-30; யாத் 10:2; யாத் 11:7; யாத் 14:4,18; யாத் 16:6,12)

மோசேயும் ஆரோனும் இந்த அற்புதங்களையெல்லாம் பார்வோனுக்கு முன்பாகச் செய்கிறார்கள். கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினதினால், அவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து போகவிடவில்லை (யாத் 11:10).

## 12 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் சபையாருக்கு பல நியமங்களைக் கொடுத்திருக்கிறார். அவைகளில் பஸ்கா நியமம் மிகவும் பிரதானமானது. புதிய ஏற்பாட்டில் பஸ்காவைப்பற்றி பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

பஸ்கா நியமத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. அவையாவன :

1. பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அதைப் புசிப்பது (யாத் 12:1-6,8-11).

2. அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை, அதைப் புசிக்கும் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிப்பது (யாத் 12:7). பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை இவ்வாறு தெளிப்பதற்கான காரணம் (யாத் 12:13).

பஸ்காவை ஆசரிக்கும்போது, ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்படுவது விசேஷித்த சம்பவமாகும். "விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்" (எபி 11:28).

3. பஸ்காவை தொடர்ந்து, ஏழுநாட்களுக்கு புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆசரிக்கப்படுவது (யாத் 12:14-20).

பஸ்காவைப்பற்றிய நியமம் இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கப்படுகிறது. அவர்கள் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம் பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

முதலாவது பஸ்கா (யாத் 12:21-23). பஸ்காவுக்கு பின்பு (யாத் 12:24-27). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அப்படியே செய்கிறார்கள் (யாத் 12:28).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சங்காரத்திற்கு தப்புவிக்கப்பண்ணுகிறார். இந்த சம்பவம் பரிசுத்த வேதாகமத்தில் பல வசனப்பகுதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சம்பவத்தைவிட, பஸ்காவைப்பற்றிய சம்பவமே பரிசுத்த வேதாகமத்தில் அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறு அனைத்தையும், மிருகஜீவன்களின் தலையீற்று அனைத்தையும் அழிக்கிறார் (யாத் 12:29-30).

பார்வோனும், எகிப்தியரும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து தீவிரமாய் அனுப்பிவிடுகிறார்கள் (யாத் 12:31-33). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பிசைந்த மா புளிக்கும் முன்பாக அதை தங்களோடுகூட எடுத்துக்கொண்டு எகிப்து தேசத்திலிருந்து போகிறார்கள் (யாத் 12:34). அவர்கள் எகிப்தியருடைய பொன்னுடமைகளையும், வஸ்திரங்களையும் கேட்டு வாங்கிக்கொண்டு போகிறார்கள் (யாத் 12:35,36).

இஸ்ரவேல் புத்திரரோடுகூட பல ஜாதியான ஜனங்களில் அநேகரும் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகிறார்கள் (யாத் 12:37,38). இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பங்களை சுட்டுப்புசிக்கிறார்கள் (யாத் 12:39). பஸ்காவின் நியமம் (யாத் 12:40-51).

### கர்த்தருடைய பஸ்கா
### யாத் 12:1-20

**யாத் 12:1. கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:**

**யாத் 12:2. இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக.**

யாத் 12:3. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள்.

யாத் 12:4. ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும்; அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

யாத் 12:5. அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்து கொள்ளலாம்.

யாத் 12:6. அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து,

யாத் 12:7. அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து,

யாத் 12:8. அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள்.

யாத் 12:9. பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக.

யாத் 12:10. அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக.

யாத் 12:11. அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா.

யாத் 12:12. அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர்.

யாத் 12:13. நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும் போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.

யாத் 12:14. அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்.

யாத் 12:15. புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம்நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிருந்து அறுப்புண்டுபோவான்.

**யாத் 12:16. முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும், ஏழாம் நாளிலும் பரிசுத்த சபைகூடுதலும் இருக்கவேண்டும்; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது; அவரவர் சாப்பிடுகிறவதற்குத் தேவையானது மாத்திரம் உங்களால் செய்யப்படலாம்.**

**யாத் 12:17. புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிப்பீர்களாக; இந்த நாளில்தான் நான் உங்கள் சேனைகளை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினேன்; ஆகையால், உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக இந்த நாளை ஆசரிக்கக்கடவீர்கள்.**

**யாத் 12:18. முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலந்தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள்.**

**யாத் 12:19. ஏழுநாளளவும் உங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது; எவனாகிலும் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால், அவன் பரதேசியானாலும் சுதேசியானாலும், அந்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டுபோவான்.**

**யாத் 12:20. புளிப்பிடப்பட்ட யாதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாம்; உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள் என்று சொல் என்றார்.**

கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் பஸ்காவைப்பற்றிய நியமத்தைக் கொடுக்கிறார். கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரானையும் நோக்கி, "இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக" *(யாத் 12:1,2)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும், வருஷத்தின் முதலாவது மாதம் செப்டம்பர் மாதத்தின் நடுவில் வரும். கர்த்தர் முதலாவது மாதத்தை மாற்றுகிறார். இனிமேல் அவர்களுடைய வருஷத்தின் முதலாம் மாதம் மார்ச் மாதத்தின் நடுவில் வரும்.

நாம் ஒவ்வொரு வருஷத்தின் முதல் மாதத்தையும் கர்த்தரோடு ஆரம்பம் பண்ணவேண்டும். நம்முடைய ஜீவியம் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கும்போது, வருஷத்தின் முதலாம் மாதத்தையும், கர்த்தரோடு ஆரம்பிப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, வருஷத்தின் முதலாம் மாதம் வசந்தகாலமாயிருக்கிறது. மரங்களிலும் தாவரங்களிலும் புதிய இலைகள் துளிக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய புதிய கிருபை கிடைத்திருக்கிறது. அவர்களுடைய புதுவாழ்வு இப்போது ஆரம்பமாகிறது.

மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக எகிப்து தேசத்தின்மீது பத்து வாதைகளை வரப்பண்ணுகிறார். ஒவ்வொரு வாதை வரும்போதும், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகும் நாள் சமீபமாய் வருகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே நானூற்று முப்பது வருஷங்கள் அடிமைகளாகயிருந்தார்கள். அவர்கள் இப்போது திடீரென்று விடுவிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு தங்களுடைய உடமைகளையெல்லாம் சேகரித்து எடுத்துக்கொண்டுபோக போதுமான காலஅவகாசம் கொடுக்கப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் அவசரம் அவசரமாக எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிறார்கள். தங்கள் தேசத்தைவிட்டு சீக்கிரத்தில் புறப்பட்டுப்போகுமாறு, எகிப்தியர்களும் இஸ்ரவேல் புத்திரரை துரிதப்படுத்துகிறார்கள். தங்களுக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்னும் நம்பிக்கைகூட இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் இதுவரையிலும் ஏற்படவில்லை. இப்போது இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்படுவது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய சுயபலத்தினாலோ அல்லது சுயபராக்கிரமத்தினாலோ எகிப்து தேசத்திலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. கர்த்தருடைய பலத்த புயத்தினால் அவர்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர், எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகும் முன்பாக, கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிற பஸ்காவை, பயபக்தியோடு ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போவதற்கு, கர்த்தர் ஒரு இரவு வேளையை நியமித்திருக்கிறார். அந்த இரவு வேளையில் தானே, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டுப்போகவேண்டும். அந்த நாளிலே அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் சபையார் யாவரும் பஸ்காவை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் இந்தக் கட்டளையை, மோசே ஆரோன் ஆகியோர் மூலமாக இஸ்ரவேல் சபையார் யாவருக்கும் சொல்லுகிறார்.

பஸ்காவை ஆசரிக்க வேண்டிய விதமாவது இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள்.

ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும்; அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்து கொள்ளலாம் (யாத் 12:3-5).

பஸ்கா ஆட்டுக்குட்டியை, இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடிக்கவேண்டும் (யாத் 12:6).

பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பாகவே, அந்த ஆட்டுக்குட்டியை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை பத்தாம் தேதியிலே தெரிந்துகொண்டு அதை பதினாலாம் தேதி சாயங்காலத்திலே அடிக்கவேண்டும்.

பஸ்கா கர்த்தருடைய நியமம். கர்த்தர் தங்களுக்கு செய்திருக்கிற நன்மைகளை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரித்து கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். பஸ்காவை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரோ, அதன் பிரகாரமாகவே அவர்கள் பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

கர்த்தர் எகிப்து தேசத்தின்மீது வாதைகளை வரப்பண்ணுகிறார். அந்த வாதைகள் இஸ்ரவேல் புத்திரர்மீது வரவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனத்தை வாதைகளுக்கு தப்புவிக்கப்பண்ணுகிறார். எகிப்தியர்மீது வந்த வாதை, இஸ்ரவேல் புத்திரர்மீது வராமலிருப்பது கர்த்தருடைய சுத்தகிருபை. கர்த்தர் தங்களுக்கு செய்த எல்லா நன்மைகளையும் இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூர்ந்து, பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பதினாலாம்தேதி சாயங்காலத்திலே பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும் (யாத் 12:8).

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியை எவ்வாறு புசிக்கவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். "அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா" (யாத் 12:11).

இஸ்ரவேல் புத்திரர் அன்று இராத்திரியிலே பஸ்கா ஆட்டுக்குட்டி முழுவதையும் புசித்துவிடவேண்டும். அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும் (யாத் 12:10).

கர்த்தர் நமக்கு அன்றன்றுள்ள அப்பத்தைக் கொடுத்து, நம்மைப் போஷிக்கிறார். நாம் நாளையதினத்து போஜனத்திற்காக கவலைப்பட வேண்டியதில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பை உணரவேண்டும். ஆகையினால் அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கக்கூடாது. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார். தங்களை வழிநடத்துகிற கர்த்தர், தங்களைப் போஷிப்பார் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்பவேண்டும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும். பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிக்கவேண்டும் (யாத் 12:8,9).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகும் நாளை மறவாமல் நினைவுகூரவேண்டும். அவர்களுடைய பின்சந்ததியாரும் பஸ்கா பண்டிகையை தங்கள் தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்றும் கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார். அதன் விவரம் வருமாறு :

அந்த நாள் அவர்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கவேண்டும்; அவர்கள் அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிக்கவேண்டும். அதை தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கவேண்டும். முதலாம் நாளில்தானே புளித்தமாவை தங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம்நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலரிலிருந்து அறுப்புண்டுபோவான்.

முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும், ஏழாம் நாளிலும் பரிசுத்த சபைகூடுதலும்இருக்கவேண்டும்; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது; அவரவர் சாப்பிடுகிறவதற்குத் தேவையானதுமாத்திரம் உங்களால் செய்யப்படலாம்.

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கவேண்டும்; இந்த நாளில்தான் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சேனைகளை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக இந்த நாளை ஆசரிக்கக்கவேண்டும்.

முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலந்தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கவேண்டும்.

ஏழுநாளளவும் தங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது; எவனாகிலும் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால், அவன் பரதேசியானாலும் சுதேசியானாலும், அந்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டுபோவான்.

புளிப்பிடப்பட்ட யாதொன்றையும் அவர்கள் புசிக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கவேண்டும் (யாத் 12:14-20).

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். இந்த ஏழுநாட்களிலும் அவர்கள் புளிப்பில்லா அப்பத்தை மாத்திரம் புசிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போன அந்த இராத்திரியிலே, புளிப்பில்லா அப்பத்தைப் புசித்தார்கள். அந்த நாளை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், ஒவ்வொரு வருஷமும், பஸ்கா பண்டிகையின்போது, ஏழுநாட்களுக்கு புளிப்பில்லா அப்பத்தை மாத்திரம் புசிக்கவேண்டும்.

பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" (1கொரி 5:7).

பஸ்காவின்போது ஆட்டுக்குட்டி அடிக்கப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தேவஆட்டுக்குட்டியாகயிருக்கிறார். "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா 1:29) என்று சொன்னார்.

வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் ஆட்டுக்குட்டியானவரைப்பற்றி பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் சாந்தகுணமுள்ள ஆட்டுக்குட்டியைப்போல இருக்கிறார். அவர் மயிர்க்கத்தரிக்கிறவர்களுக்கு முன்பாக, சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அமைதியாகயிருக்கிறார். அவர் அடிக்கப்படும் போது தம்முடைய பாடுகளை பொறுமையாக சகித்துக்கொள்கிறார்.

பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஆணும், ஒரு வயது உள்ளதுமாயிருக்கவேண்டும் (யாத் 12:5). ஆட்டுக்குட்டிக்கு ஒரு வயது என்பது, அதன் ஜீவியத்தின் பிரதான பகுதி. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஜீவியத்தின் பிரதான பகுதியில், தம்மை அடிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவானவர் பெத்லகேமிலே சிறுபிள்ளையாகயிருந்தபோது, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முப்பத்து மூன்றரை வயதாகும்போது, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் பாவம் எதுவுமில்லை. அவர் பரிசுத்தர்.

"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது 1:19).

இஸ்ரவேல் புத்திரரின் வீட்டுத்தலைவர்கள் வருஷத்தின் முதலாம் மாதம் பத்தாம் தேதியிலே பஸ்கா ஆட்டுக்குட்டியை தெரிந்துகொள்ளவேண்டும். அதை அவர்கள் அந்த மாதத்தின் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, அன்று சாயங்காலத்திலே அதை அடிக்கவேண்டும் (யாத் 12:3,6).

இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளில் பல ஆடுகள் இருந்தாலும், பஸ்கா ஆட்டுக்குட்டியானது, அடிக்கப்படுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. இது மற்ற ஆடுகளிலிருந்து வேறுபிரிக்கப்பட்ட ஆடாகயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்முடைய ஆத்தும இரட்சகராக வேறுபிரிக்கப்பட்டு, விசேஷித்தவராயிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பஸ்கா பண்டிகையின்போது, கல்வாரி சிலுவையில் அறையப்பட்டார். பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படுகிற அதே நாளிலே, நம்முடைய பஸ்காவாகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் அறையப்பட்டது, தெய்வீக சித்தமாகும்.

பஸ்கா ஆட்டுகுட்டி அடிக்கப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, அது வேறுபிரிக்கப்பட்டு ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பாக, எருசலேம் நகரத்திற்குள் பிரவேசித்தார். அந்த நாளிலேதானே யூதர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை தெரிந்துகொண்டு, அதை வேறுபிரிப்பது வழக்கம்.

பஸ்கா ஆட்டுக்குட்டி, சாயங்காலத்திலே அடிக்கப்படும். அன்று இராத்திரியிலே ஆட்டுக்குட்டியின் மாம்சம் நெருப்பினால் சுடப்படும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அனுபவித்த மகாவேதனைகளுக்கு, பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சம் நெருப்பினால் சுடப்படுவது அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் மரணபரியந்தம் வேதனைகளை அனுபவித்தார். அவர் கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

இஸ்ரவேல் சபையார் யாவரும் பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கவேண்டும். யூதர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து, இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள். கிறிஸ்துவானவர் இந்த உலகத்தின் கடைசி காலத்திலே, யூதர்களுடைய கையினால் பாடுகளை அனுபவித்தார்.

"பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை.அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்" (எபி 9:25,26)

"ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள்" (லூக் 23:18).

இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் விசுவாசிகளாகிய நமக்கு ஜீவன் உண்டாயிருக்கிறது. இஸ்ரவேல் சபையார் யாவரும் பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், விசுவாசிகளாகிய நாமே ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். நம்முடைய நன்மைக்காக கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை, ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியில் ஒரு எலும்பையும் முறிக்கப்படாது (யாத் 12:46). இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்கும்போது அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை.

"அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை" (யோவா 19:33)

"அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது" (யோவா 19:36).

எலும்பு பலத்திற்கும், வல்லமைக்கும் அடையாளம். இயேசுகிறிஸ்துவின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை என்பது, அவருடைய வல்லமை முறிந்துபோகவில்லை அல்லது குறைந்துபோகவில்லை என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்படுவது, மிகவும் விசேஷமான ஒரு சம்பவமாகும் (யாத் 12:7).

பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கும்போது, அதின் இரத்தம் சிந்தப்படும். ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தப்பட்டால் மாத்திரம் போதாது. அந்த இரத்தம் தெளிக்கப்படவும் வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டாகும் நன்மைகள் நம்முடைய ஆத்துமாக்களுக்கும் கிடைக்கவேண்டும். நாம் விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை ஏற்றுக்கொள்ளும்போது, நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படும்.

"அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (ரோம 5:11).

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை ஈசோப் கொழுந்துகளின் கொத்தை எடுத்து, அதை அந்த இரத்தத்தில் தோய்த்து, வாசல் நிலைக்கால்களின் மேல்சட்டத்தில், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளிக்கவேண்டும் (யாத் 12:22). ஈசோப் கொழுந்துகளின் கொத்தை கிண்ணியிலிருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதைத் தெளிக்கவேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஈசோப் கொழுந்துகளின் கொத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கொத்தை கிண்ணியிலிருக்கும் இரத்தத்தில் தோய்ப்பதுபோல, நம்முடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களில் தோய்த்து, அவற்றை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவில் வைத்திருக்கும் விசுவாசத்தை வெளிப்படையாக சாட்சியாய் அறிவிப்பதற்கு இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது. நாம் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிகிறோம் என்பதற்கு இது அடையாளமாகும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகிறது. அந்த இரத்தம் வீட்டு வாசற்படியின்மேல் தெளிக்கப்படவில்லை. வாசல்படியின்மீது கால்பதித்து நடக்கிறோம். பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் உடன்படிக்கையின் இரத்தமாகயிருப்பதினால், அந்த இரத்தத்தை நாம் காலில் போட்டு மிதித்துவிடக்கூடாது இதற்கு அடையாளமாக, பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசல்படியின்மீது தெளிக்கப்படுவதில்லை.

"தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" (எபி 10:29).

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகிறது. இது இஸ்ரவேல் புத்திரருக்கு பாதுகாப்பைத் தருகிறது. சங்காரதூதன், எகிப்து தேசத்திலுள்ள தலைச்சன் பிள்ளைகளை அதம்பண்ணும்போது, எந்த வீட்டின் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த இரத்தத்தைப் பார்த்து, சங்காரதூதன் அந்த வீட்டிலுள்ளவர்களை அழிக்காமல் கடந்துபோவார்.

"அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள் மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும் போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்" (யாத் 12:12,13).

அழிக்கும் வாதை இஸ்ரவேல் புத்திரருக்கு வராதிருக்கும் என்பதற்கு பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம், அடையாளம் எங்கே இரத்தம் தெளிக்கப் பட்டிருக்கிறதோ, அங்கே சங்காரதூதனுக்கு அழிக்கும் வேலை இல்லை.

பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அதின் மாம்சத்தை புசிக்கவேண்டும். ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிப்பது என்பது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நாம் செய்ய வேண்டிய சுவிசேஷ ஊழியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படவேண்டும். அந்த ஆட்டுக்குட்டி வீட்டில் அழகுக்காக கட்டிவைக்கப்படும் ஆடு அல்ல. அல்லது நாம் பார்த்து ரசிக்கவேண்டும் என்பதற்காக பஸ்கா ஆட்டுக்குட்டி தெரிந்துகொள்ளப்படவில்லை. அது அடிக்கப்படுவதற்காகவே தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தால் மாத்திரம் போதாது. அதின் மாம்சத்தைப் புசிக்கவும் வேண்டும். அப்போது ஆட்டுக்குட்டியின் மாம்சம், அதைப் புசிக்கிறவர்களோடு ஐக்கியமாயிருக்கும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்கிறார். நம்முடைய விசுவாசத்தினால், நாம் கிறிஸ்துவானவரை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிப்பதுபோல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் போஜனமாக புசிக்கவேண்டும். இதனால் நமக்கு ஆவிக்குரிய ஆகாரமும், ஆவிக்குரிய போஜனமும், ஆவிக்குரிய பெலனும் கிடைக்கும். போஜனத்திலிருந்து நமது சரீரத்திற்கு பெலன் கிடைப்பதுபோல, இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தை மூலமாய் நம்முடைய ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் ஆவிக்குரிய பெலன் கிடைக்கிறது.

"அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" (யோவா 6:53-55) என்று சொன்னார்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியிலுள்ள யாவையும் ஏகமாய் புசிக்கவேண்டும். அதிலே ஒன்றையும் விடியற்கால மட்டும் மீதியாய் வைக்கக்கூடாது (யாத் 12:9,10).

நாம் விசுவாசத்தினாலே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை போஜனமாகப் புசிக்கிறோம். கிறிஸ்துவானவருடைய வார்த்தைகளை அரையும் குறையுமாக போஜனம்பண்ணக்கூடாது. அவருடைய வார்த்தைகள் அனைத்தையும் நாம் புசிக்கவேண்டும். அப்போதுதான் நமக்குள்ளே கிறிஸ்துவானவர் பூரணமாக உருவாகுவார். நாம் கிறிஸ்துவின் பூரண சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு பூரண பலன் உண்டாகும்.

நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை பூரணமாய் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் இயேசுகிறிஸ்துவையும் அவருடைய நுகத்தையும் ஏற்றுக்கொள்வோம். அதுபோலவே நாம் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையும் ஏற்றுக்கொள்வோம். அது மாத்திரமல்ல, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது அவருடைய கிரீடத்தையும் ஏற்றுக்கொள்வோம்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியை புசிக்கும்போது, அதை ஏகமாய் உடனே புசிக்கவேண்டும். அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கக்கூடாது.

நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து, இன்றைக்கு பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார். ஆகையினால் நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு காலதாமதம்பண்ணாமல், இன்றைக்கே அவரை நம்முடைய ஆத்தும இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரை நாளைக்கு இரட்சகராக ஏற்றுக்கொள்ளலாம் என்று காலதாமதம்பண்ணக்கூடாது.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை, கசப்பான கீரையோடு புசிக்கவேண்டும் (யாத் 12:8). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே 430 வருஷங்களுக்கு அடிமைகளாகயிருந்தார்கள். இது அவர்களுக்கு கசப்பான அனுபவம். எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் அனுபவித்த அடிமைத்தனத்தின் கசப்பான அனுபவத்தை நினைவுகூரும் வண்ணமாக, பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை, கசப்பான கீரையோடு புசிக்கவேண்டும்.

நம்முடைய பாவம் நமக்கு கசப்பாயிருக்கிறது. கசப்பான பாவத்திற்கு, கசப்பான கீரை அடையாளமாயிருக்கிறது. நம்முடைய பாவம் கசப்பாகயிருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் ஆத்தும இரட்சிப்பு, நமக்கு மதுரமான அனுபவத்தைக் கொடுக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை புசிக்கும்போது, தங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், தங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், தங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும், அதை தீவிரமாய் புசிக்கவேண்டும் (யாத் 12:11). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறார்கள். தீவிரமாக பிரயாணம் புறப்படுகிறவர்கள், அவசரம் அவசரமாக போஜனம்பண்ணுவார்கள். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரர் பிரயாண ஆயத்தத்தோடு பஸ்காவை புசிக்க வேண்டும்.

நாம் விசுவாசத்தினாலே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை புசிக்கும்போது, பாவம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. நாம் உலகப்பிரகாரமான ஆசைகளையும், பாவத்தின் சிற்றின்பங்களையும் வெறுத்து ஒதுக்கிவிட வேண்டும். கிறிஸ்துவுக்காக பாவமான எல்லாவற்றையும் விட்டு விலகி வரவேண்டும். நாம் மறுபடியும் பாவத்தோடு உடன்படிக்கை செய்து, அதற்கு பங்காளிகளாகிவிடக்கூடாது.

"ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்" (எபி 13:13,14).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள், அவர்களுக்கு நினைவுகூருதலான நாளாயிருக்கவேண்டும். அதை அவர்கள் கர்த்தருக்கு பண்டிகையாக ஆசரிக்கவேண்டும். இந்தப் பண்டிகை புளிப்பில்லா அப்பப்பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. கர்த்தருக்காக ஆசரிக்கப்படும் இந்தப் பண்டிகையை, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1கொரி 5:7,8).

விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகையினால் நாம் பரிசுத்த சந்தோஷத்தோடே கர்த்தருக்கு பண்டிகையை ஆசரிக்கவேண்டும். இது கர்த்தருடைய பஸ்காவாக இருக்கிறது. ஆகையினால் விசுவாசிகள் எல்லோரும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள், எப்போதும் சந்தோஷமாகயிருந்து, கர்த்தருக்கு பண்டிகையை ஆசரிக்கவேண்டும்.

கர்த்தருடைய பண்டிகையை நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும். கர்த்தருடைய பண்டிகை எப்போதும் தொடர்ந்து ஆசரிக்கப்படவேண்டும். கர்த்தருடைய பண்டிகை என்பது, விசுவாசிகள் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருப்பதற்கு அடையாளம். விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய பண்டிகையை தொடர்ந்து ஆசரித்து, கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம்.

நாம் கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயில்லையென்றால், அதற்கு கிறிஸ்துவானவர் காரணமல்ல. நாம் கர்த்தருடைய பண்டிகையை தொடர்ந்து ஆசரிக்கவில்லை என்பதே காரணம்.

கர்த்தருடைய பண்டிகையில் புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கவேண்டும். ஆகையினால் இது புளிப்பில்லா அப்பப்பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பண்டிகை நாளின்போது நம்முடைய வீடுகளில் புளித்த மா இருக்கக்கூடாது. அவை நம்மைவிட்டு நீக்கப்படவேண்டும். துர்க்குணம், பொல்லாப்பு, மாய்மாலம் ஆகியவையெல்லாம் புளித்த மாவுக்கு அடையாளம். கர்த்தருடைய பண்டிகையை ஆசரிக்கிறவர்கள், தங்களிடத்திலுள்ள அசுத்தத்தை நீக்கிவிட்டு, அதை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

## ஆட்டுக்குட்டியின் இரத்தம் யாத் 12:21-28

**யாத் 12:21. அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து: நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, பஸ்காவை அடித்து,**

யாத் 12:22. ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்து கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்; விடியற்காலம்வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலைவிட்டுப் புறப்படவேண்டாம்.

யாத் 12:23. கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்.

யாத் 12:24. இந்தக் காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய நியமமாகக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

யாத் 12:25. கர்த்தர் உங்களுக்குத் தாம் சொன்னபடி கொடுக்கப்போகிற தேசத்திலே நீங்கள் போய்ச் சேரும்போது, இந்த ஆராதனையைக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

யாத் 12:26. அப்பொழுது உங்கள் பிள்ளைகள்; இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களைக் கேட்டால்,

யாத் 12:27. இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலை வணங்கிப் பணிந்துகொண்டார்கள்.

யாத் 12:28. இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படியே செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

இஸ்ரவேல் சபையார் மத்தியில் மோசே கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரராகயிருக்கிறார். கர்த்தர் தன்னிடத்தில் பஸ்காவைப்பற்றி கட்டளையிட்டு சொன்ன எல்லாவற்றையும், மோசே இஸ்ரவேலின் மூப்பர் யாவரையும் அழைப்பித்து, அவர்களுக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேலின் மூப்பரை நோக்கி, "நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, பஸ்காவை அடித்து, ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்து கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்; விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலைவிட்டுப் புறப்படவேண்டாம்" (யாத் 12:21,22) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எப்பொழுது போகச்சொல்லுகிறாரோ அப்பொழுது அவர்கள், எகிப்தைவிட்டு புறப்பட்டுப்போகவேண்டும். அதற்கு முன்பு இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரும் தங்கள் வீட்டு வாசலை விட்டு புறப்பட்டுப்போகக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா ஆட்டுக்குட்டியை இந்த மாதம் பதினாலாம் தேதி, சாயங்காலத்திலே, அடித்து, இரவிலே அதைப் புசிக்கவேண்டும். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும், நிலைக்கால்கள் இரண்டிலும் தெளிக்கவேண்டும்.

அன்று இரவிலே கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை அவர்கள் வீடுகளில் அவர்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார் (யாத் 1:23).

இந்த நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு நினைவுகூருதலான நாளாயிருக்கவேண்டும். அதை அவர்கள் கர்த்தருக்கு பண்டிகையாக ஆசரிக்கவேண்டும். அதை அவர்கள் தங்களுடைய தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டதை, மோசே இஸ்ரவேலின் மூப்பர் யாவரையும் அழைப்பித்து அவர்களுக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேலின் மூப்பரை நோக்கி, "இந்தக் காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய நியமமாகக் கைக்கொள்ளக்கடவீர்கள். கர்த்தர் உங்களுக்குத் தாம் சொன்னபடி கொடுக்கப்போகிற தேசத்திலே நீங்கள் போய்ச் சேரும்போது, இந்த ஆராதனையைக் கைக்கொள்ளக்கடவீர்கள்" (யாத் 12:24,25) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஆசரிக்கும் இந்தப் பண்டிகையை தங்களுடைய பின்சந்ததியாருக்கும் கற்றுக் கொடுக்கவேண்டும். அவர்கள் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்த பின்பு புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஏழுநாளுக்கு ஆசரிப்பார்கள். அப்பொழுது அவர்களுடைய பிள்ளைகள், "இந்த ஆராதனையின் கருத்து என்ன" (யாத் 12:26) என்று அவர்களைக் கேட்பார்கள்.

தங்களுடைய பிள்ளைகள் தங்களிடத்தில் பஸ்கா பண்டிகையின் கருத்தைப்பற்றிக் கேட்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் அந்த ஆராதனையின் கருத்தை தங்கள் பிள்ளைகளுக்கு விளக்கமாக சொல்லித்தர வேண்டும். பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டுமென்றால், பெற்றோர் அதன் தாற்பரியத்தை அறிந்திருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேலின் மூப்பருக்கு புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் கருத்தை விளக்கமாகக் கற்றுக்கொடுக்கிறார். இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று பிள்ளைகள் தங்களிடத்தில் கேட்கும்போது, பெற்றோர் அவர்களை நோக்கி, "இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார்" (யாத் 12:27) என்று அவர்கள் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையின்போது பஸ்கா ஆட்டின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, அதை புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசிப்பார்கள். பஸ்காவின்போது ஏன் இப்படி புசிக்கவேண்டுமென்று, அவர்களுடைய பிள்ளைகள் கேள்வி கேட்கும்போது, பெற்றோருக்கு விளக்கம் சொல்ல தெரிந்திருக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு பரிசுத்தமான நியமங்களைக் கொடுத்திருக்கிறார். நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தருடைய நியமங்களுக்கு கீழ்ப்படிந்து, அவற்றை ஆசரிக்கிறோம். அந்த நியமங்களின் கருத்து என்ன என்பது விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டும். நாம் கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் கருத்தோடும் தொழுதுகொள்ளவேண்டும். ஆராதனையின் கருத்து என்ன என்பது நமக்கு தெரியவில்லையென்றால், அதைப்பற்றி நம்மால் மற்றவர்களுக்கு விளக்கி சொல்லமுடியாது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பிள்ளைகளுக்கு, பஸ்காவின் கருத்தைப்பற்றிச் சொல்லும்போது, "இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி" என்று விளக்கமாக சொல்லவேண்டும். இஸ்ரவேல் புத்திரர், பஸ்கா பண்டிகையின்போது, பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார்கள். இதன் மூலமாக கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களுக்கு செய்த அற்புதத்தையும், கர்த்தர் அவர்களுக்கு காண்பித்த விசேஷித்த கிருபைகளையும் நினைவுகூருகிறார்கள்.

கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணினார். அவர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணினார். கர்த்தர் எகிப்து தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருகஜீவன்கள் மட்டும் முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணினார். கர்த்தர் எகிப்தியரின் தலைப்பிள்ளைகளையெல்லாம் சங்காரம்பண்ணினார். இதனால் இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு வாசல் திறக்கப்பட்டது.

கர்த்தருடைய பார்வையில் இஸ்ரவேல் புத்திரரும் பாவிகளாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்திருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தமது பெரிதான கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை மன்னிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் ஒவ்வொரு குடும்பத்தாரும், தங்களுடைய எண்ணிக்கைக்கு தக்கதாக ஆட்டுக்குட்டியை தெரிந்துகொண்டு பஸ்காவை அடித்து, அதை கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார்கள்.

கர்த்தர் பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலியை ஏற்றுக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் தலைச்சன் பிள்ளைகளை சங்காரம்பண்ணாமல், அவர்களை இரட்சிக்கிறார். சங்காரக்காரன் இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளுக்கு முன்பாக வரும்போது, அவர்களுடைய வீட்டு நிலையின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டிருப்பதை பார்ப்பார். அப்போது கர்த்தர் சங்காரக்காரனை இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளில், அவர்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகி கடந்துபோகப்பண்ணுவார்.

பஸ்கா என்னும் வார்த்தைக்கு கடந்துபோவது என்று பொருள். சங்கார தூதன் இஸ்ரவேல் புத்திரரை சங்காரம்பண்ணாமல், அவர்களுடைய வீட்டைக் கடந்துபோகிறார். இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளின் நிலைக்கால்களிலும் நிலையின் மேற்சட்டத்திலும் பஸ்காவின் இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வீட்டிலுள்ளவர்கள் பஸ்காவை அடித்து கர்த்தருக்கு பலிசெலுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு, அந்த இரத்தமே அடையாளம்.

ஆபிரகாம் ஈசாக்கை பலியிடாமல் ஒரு ஆட்டுக்கடாவைப் பலியிட்டார். கர்த்தர் அந்தப் பலியை ஏற்றுக்கொண்டார். அதுபோலவே இப்போது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் தலைச்சன் பிள்ளைகளை சங்காரம்பண்ணாமல், பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலியை ஏற்றுக்கொள்கிறார். இஸ்ரவேல் புத்திரரை சங்காரத்திற்கு தப்புவிக்கப்பண்ணுகிறார்.

காலம் நிறைவேறும்போது தேவஆட்டுக்குட்டியானவர் மகாசங்காரமாக பலியிடப்படுவார் என்பதற்கு, பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு பலியிடப்படுவது அடையாளமாயிருக்கிறது. நமக்கு பதிலாகவும், நம்முடைய முதற்பேறுகளுக்கு பதிலாகவும், தேவஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே அடிக்கப்பட்டார். கிறிஸ்துவானவர் நம்மை இரட்சிப்பதற்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களை நீக்கும் பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் நம்மை இரட்சிப்பதற்காக தம்முடைய திருஇரத்தத்தையே மீட்பின் கிரயமாக செலுத்தினார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவே கர்த்தருடைய பஸ்காவாகிய பலியாகயிருக்கிறார். அவர் நமக்காக அடிக்கப்பட்டார். இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் நமக்கு ஜீவன் கிடைத்திருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே உலகம் உண்டானது முதற்கொண்டு அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்கிறார்.

"அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்" (எபி 9:26).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பஸ்காவைப்பற்றிய பிரமாணங்களை தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கி பணிந்துகொள்கிறார்கள் (யாத் 12:27).

இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படியே செய்கிறார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்கிறார்கள் (யாத் 12:28). அவர்களில் ஒருவரும் மோசேக்கு விரோதமாகவோ ஆரோனுக்கு விரோதமாகவோ முறுமுறுக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கலககுணமும், முறுமுறுக்கும் குணமும் இருந்தாலும், இப்போது அவர்களில் ஒருவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கவில்லை. கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்ட படியே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் செய்கிறார்கள்.

"அவர்கள் பார்வோனுடைய சமுகத்தை விட்டுப் புறப்படுகையில், வழியில் நின்ற மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்ப்பட்டு, அவர்களை நோக்கி: நீங்கள் பார்வோனின் கண்களுக்கு முன்பாகவும் அவருடைய ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் எங்கள் வாசனையைக் கெடுத்து, எங்களைக் கொல்லும்படி அவர்கள் கையிலே பட்டயத்தைக் கொடுத்ததினிமித்தம், கர்த்தர் உங்களைப் பார்த்து நியாயந்தீர்க்கக்கடவர் என்றார்கள்" *(யாத் 5:20,21).*

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் காணப்பட்ட இப்படிப்பட்ட கலககுணம், இப்போது காணப்படவில்லை. எகிப்து தேசத்தில் கர்த்தர் வரப்பண்ணின வாதைகள் அவர்களை பக்குவப்படுத்தியிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருடைய தீயசுபாவங்கள் அவர்களை விட்டு நீங்கிப்போயிற்று. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் தங்களை விடுவிப்பார் என்னும் எதிர்பார்ப்பு இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் உண்டாயிற்று.

இதற்கு முன்பு, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு வழியும் வாய்ப்பும் இல்லை என்று இஸ்ரவேல் புத்திரர் நினைத்தார்கள். அப்போது அவர்கள் தங்கள் ஆவியிலே சோர்ந்துபோயிருந்தார்கள். அப்படிப்பட்ட வேளைகளில் அவர்கள் மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். முறுமுறுத்தார்கள். இப்போதோ தங்களுடைய விடுதலையை விசுவாசத்தோடு எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கவனமாய்க் கீழ்ப்படிகிறார்கள்.

## தலைப்பிள்ளைகளின் மரணம் யாத் 12:29-36

**யாத் 12:29. நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்.**

**யாத் 12:30. அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை.**

**யாத் 12:31. இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, என் ஜனங்களைவிட்டுப் புறப்பட்டுப் போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்.**

**யாத் 12:32. நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டுபோங்கள்; என்னையும் ஆசீர்வதியுங்கள் என்றான்.**

**யாத் 12:33 எகிப்தியர்: நாங்கள் எல்லாரும் சாகிறோமே என்று சொல்லி, தீவிரமாய் அந்த ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள்.**

**யாத் 12:34. பிசைந்தமா புளிக்குமுன் ஜனங்கள் அதைப் பாத்திரத்துடனே தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு போனார்கள்.**

**யாத் 12:35. மோசே சொல்லியிருந்தபடி இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள்.**

**யாத் 12:36. கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்.**

கர்த்தர் எகிப்து தேசத்திலுள்ள, எகிப்தியரின் முதற்பேறு அனைத்தையும், மிருகஜீவன்களின் தலையீற்று அனைத்தையும் சங்காரம்பண்ணப்போகிறார். இஸ்ரவேல் புத்திரரோ இந்த அழிவுக்கு தப்பித்துக்கொள்வார்கள். கர்த்தர் எகிப்து தேசத்திலே செய்யப்போகிறதை, மோசே ஆரோன் ஆகியோர் மூலமாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

அவர்கள் இருவரும் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்" (யாத் 12:23) என்று சொன்னார்கள்.

மோசே சொன்னது கர்த்தருடைய வார்த்தை. மோசேயும் ஆரோனும் தங்கள் சுயமாய்ப் பேசாமல், கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு அப்படியே அறிவித்தார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரமாக கிரியை செய்கிறார்.

நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழிக்கிறார்.

அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருக்கிறார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடும் இருக்கவில்லை (யாத் 12:29,30).

எகிப்தியரின் முதற்பேறு அனைத்தையும் கர்த்தர் அழிக்கப்போகிறார் என்னும் எச்சரிப்பு பார்வோனுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பார்வோனோ கர்த்தருடைய எரிச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவன் கர்த்தருடைய கிருபையையும், கர்த்தர் இதுவரையிலும் வரப்பண்ணின வாதைகளையும் அசட்டைபண்ணினான். பார்வோன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்ப மறுத்துவிட்டான்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஒருவேளை, கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தருக்கு ஆராதனை செய்ய அனுப்பியிருந்தால், எகிப்து தேசத்தில் இவ்வளவு பெரிய மரண அழிவு ஏற்பட்டிருக்காது.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தர் நடுஇராத்திரியிலே பார்வோனுடைய தலைப்பிள்ளையையும், காவல்கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளையையும் அழித்துப்போடுகிறார். ராஜாவின் வீட்டிலும் சாவு உண்டாயிற்று. சாதாரண ஜனங்களுடைய வீடுகளிலும் சாவு உண்டாயிற்று. எகிப்து தேசத்திலே எல்லா வீடுகளிலும் மகாகூக்குரல் உண்டாயிற்று. எகிப்தியரின் வீடுகளில் சாவு இல்லாத வீடு ஒன்றுமில்லை. எல்லா வீடுகளிலும் சாவு வந்திருக்கிறது.

கர்த்தர் பட்சபாதமில்லாமல் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயந்தீர்க்கிறார். சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற பார்வோனுக்கும் நியாயத்தீர்ப்பு வருகிறது. எகிப்து தேசத்திலே விவசாய வேலைகளை செய்கிற விவசாயிகளின் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு வருகிறது.

"இப்படியிருக்க, பிரபுக்களின் முகத்தைப்பாராமலும், ஏழையைப்பார்க்கிலும் ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவரை நோக்கி இப்படிச் சொல்லலாமா? இவர்கள் எல்லாரும் அவர் கரங்களின் கிரியையே. இப்படிப்பட்டவர்கள் சடிதியில் சாவார்கள்; ஜனங்கள் பாதிஜாமத்தில் கலங்கி ஒழிந்துபோவார்கள்; காணாத கையினால் பலவந்தர் அழிந்துபோவார்கள்" *(யோபு 34:19,20).*

பார்வோன்மீது வந்த நியாயத்தீர்ப்பு விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது. நாம் தேவனுக்கு முன்பாக நடுக்கத்தோடும், பயத்தோடும், பக்தியோடும் நிற்கவேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து விசுவாசிகள் ஒவ்வொருவரும் பயப்படவேண்டும்.

"உமக்குப் பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்க்கிறது; உமது நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்படுகிறேன்" *(சங் 119:120).*

கர்த்தர் தம்முடைய நீதியினால் எகிப்தியரை அதம்பண்ணினாலும், அவர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாக்கிறார். கர்த்தர் ஒவ்வொரு நாளும் நம்மையும், நம்முடைய குடும்பத்தாரையும் பாதுகாத்து பராமரிப்பதற்காக, நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

எகிப்து தேசத்திலே, எகிப்தியரின் எல்லா வீடுகளிலும் இருக்கிற தலைப்பிள்ளைகள் எல்லாம் செத்துப்போயிற்று. கர்த்தர் அவர்களுடைய தலைப்பிள்ளைகளெல்லாம் அழித்துப்போடுகிறார். அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும், எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருக்கிறார்கள். எகிப்தியரின் எல்லா வீடுகளிலும் சாவு உண்டாயிருக்கிறது. அவர்களால் தூங்க முடியவில்லை. கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணினார் என்பதை பார்வோன் அறிந்துகொள்கிறான்.

அந்த இராத்திரியிலே பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, "நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, என் ஜனங்களைவிட்டுப் புறப்பட்டுப் போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டுபோங்கள்; என்னையும் ஆசீர்வதியுங்கள்" *(யாத் 12:31,32)* என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் எழுந்து எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டுப்போகவேண்டும். பார்வோன் இதற்கு முன்பு, மோசேயை நோக்கி, "உன் முகத்தை நான் இனிமேல் பார்ப்பதில்லை" என்று கடினமாகப் பேசினான். இப்போதோ அதே பார்வோன், மோசேயையும் ஆரோனையும் தன்னிடத்திலே அழைப்பித்து, அவர்களுடைய முகத்தைப் பார்க்கிறான்.

மோசேயையும் ஆரோனையும் பார்க்கும்போது பார்வோனுக்கு இப்போது அவர்கள்மீது கோபம் வரவில்லை. அவர்கள்மீது வெறுப்போ அல்லது விரோதமோ உண்டாகவில்லை. பார்வோன் இப்போது மோசேயையும் ஆரோனையும் பார்த்து பயப்படுகிறான். பார்வோன் அவர்களுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறான். பார்வோன் அவர்களை நோக்கி, "என்னையும் ஆசீர்வதியுங்கள்" என்று பணிவாக வேண்டிக்கொள்கிறான்.

கர்த்தர் வரப்பண்ணின வாதை எகிப்து தேசத்தின்மீது வந்திருக்கிறது. அந்த வாதை நிறுத்தப்படவேண்டுமென்றால், மோசேயும் ஆரோனும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். கர்த்தர் பார்வோனை ஆசீர்வதிக்கவேண்டுமென்றால், கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய மோசேயும் ஆரோனும் அவனை ஆசீர்வதிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போன பின்பு, கர்த்தர் தன்மீது வாதைகளை வரப்பண்ணுவாரோ என்னும் பயம் பார்வோனுக்கு உண்டாயிற்று. பார்வோன் இப்போது கர்த்தர் வரப்பண்ணும் வார்த்தையை நினைத்து பயப்படுகிறான். கர்த்தர் பார்வோனுடைய தலைப்பிள்ளையை அழித்துப்போட்டார். தனக்கும், தன்னுடைய குடும்பத்தாருக்கும் இன்னும் என்னென்ன ஆபத்துக்கள் வரும் என்பது பார்வோனுக்கு தெரியவில்லை. ஆகையினால் பார்வோன் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "என்னையும் ஆசீர்வதியுங்கள்" என்று வேண்டிக்கொள்கிறான்.

பார்வோனைப்போலவே, எகிப்தியரும் இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து பயப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே இனிமேலும் தங்கியிருக்கக்கூடாது என்றும், அவர்கள் தங்கள் தேசத்தைவிட்டு உடனே புறப்பட்டுப்போகவேண்டும் என்றும் எகிப்தியர்கள் கூக்குரலிடுகிறார்கள்.

எகிப்தியருடைய எல்லா வீடுகளிலும் சாவு ஏற்பட்டிருக்கிறது. எகிப்திலே எல்லா வீடுகளிலும் மகாகூக்குரல் உண்டாயிருக்கிறது. அவர்கள், "நாங்கள் எல்லாரும் சாகிறோமே" என்று கூக்குரலிடுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து தீவிரமாய் அனுப்பிவிடவேண்டும் என்று தீர்மானித்து, அவர்கள் எல்லோரும் தங்கள் தேசத்தைவிட்டு சீக்கிரமாய் வெளியேறிப்போகவேண்டுமென்று, அவர்களை மிகவும் துரிதப்படுத்துகிறார்கள் (யாத் 12:33).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே 430 வருஷங்களாக அடிமைகளாக பாடுகளை அனுபவித்திருக்கிறார்கள். எகிப்தியர்களும் அவர்களை கடினமாய் ஒடுக்கி கஷ்டப்படுத்தியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் சரியான போஜனமோ, வேலைக்கு தகுந்த சம்பளமோ கொடுக்கப்படவில்லை. ஆனால் எகிப்தியர்கள் இப்போது, இஸ்ரவேல் புத்திரரை, தங்கள் தேசத்திலிருந்து தீவிரமாய் புறப்பட்டுப்போகவேண்டுமென்று துரிதப்படுத்துகிறார்கள்.

கையில் பணமில்லாமல் இஸ்ரவேல் புத்திரரால் நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ள முடியாது. எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயமான சம்பளத்தைக் கொடுத்தால், அதுவே இஸ்ரவேல் புத்திரருக்கு போதுமானதாயிருக்கும்.

மோசே சொல்லியிருந்தபடி இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்கிறார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள்; இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிடுகிறார்கள் (யாத் 12:35,36).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தாரை, கொள்ளையர்களைப்போல கொள்ளையிடவில்லை. எகிப்தியர்கள் இஸ்ரவேலரை இதுவரையிலும் கடினமாக வேலை வாங்கி, சரியான சம்பளம் கொடுக்காமல் அவர்களை வஞ்சித்து வந்தார்கள். இப்போதோ இஸ்ரவேல் புத்திரர், தங்களுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய சம்பளத்தை எகிப்தியரிடமிருந்து கேட்டு பெற்றுக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், பிசைந்தமா புளிக்குமுன் அதைப் பாத்திரத்துடனே தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு போகிறார்கள். கர்த்தருடைய ஜனம் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போகிறார்கள்.

## இஸ்ரவேல் புத்திரரின் பிரயாணம் யாத் 12:37-42

**யாத் 12:37. இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம்பண்ணி, சுக்கோத்துக்குப் போனார்கள்; அவர்கள் பிள்ளைகள் தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள்.**

**யாத் 12:38. அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று.**

**யாத் 12:39. எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக்கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளியாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வழிக்கென்று ஒன்றும் ஆயத்தம்பண்ணவில்லை.**

**யாத் 12:40. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றுமுப்பது வருஷம்.**

**யாத் 12:41. நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றையத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது.**

**யாத் 12:42. கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், இது அவருக்கென்று முக்கியமாய் ஆசரிக்கத்தக்க ராத்திரியாயிற்று; இஸ்ரவேல் சந்ததியார் எல்லாரும் தங்கள் தலைமுறைதோறும் கர்த்தருக்கு முக்கியமாய் ஆசரிக்கவேண்டிய ராத்திரி இதுவே.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டுப்போகிறார்கள். பார்வோனுடைய மனதிலும் நல்ல மாற்றம் உண்டாயிருக்கிறது. அவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தைவிட்டு துரிதமாய்ப் புறப்பட்டு போகுமாறு சொல்லுகிறான். அவனுடைய மனதில் ஏற்பட்டிருக்கிற மாற்றம் நிலைத்திருக்குமா என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியவில்லை. பார்வோன் பல சமயங்களில் மாறி மாறி பேசியிருக்கிறான்.

இதற்கு முன்பு பார்வோன் பல சமயங்களில் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகுமாறு சொல்லியிருக்கிறான். எகிப்து தேசத்தின்மீது வாதைகள் வந்ததினால், பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை அனுப்புவதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறான். வாதை முடிந்த பின்பு, எகிப்து தேசத்திலே இலகு உண்டாகும். அப்போது பார்வோனுடைய மனதும் மாறும். அவனுடைய இருதயம் கடினப்படும். அதன் பின்பு பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தை விட்டு அனுப்ப மறுத்துவிடுவான்.

அதுபோலவே இப்போதும், பார்வோனுடைய மனம் மாறிவிடுமோ என்றும், அவனுடைய இருதயம் மறுபடியும் கடினப்படுமோ என்றும் இஸ்ரவேல் புத்திரர் சந்தேகப்படுகிறார்கள். ஆகையினால் அவர்கள் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. எகிப்தியரும் இஸ்ரவேல் புத்திரரை தங்கள் தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகுமாறு துரிதப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, எகிப்து தேசத்தைவிட்டு துரிதமாய்ப் புறப்பட்டுப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம்பண்ணி, சுக்கோத்துக்குப் போகிறார்கள்; அவர்கள் பிள்ளைகள்தவிர ஆறுலட்சம் புருஷராயிருக்கிறார்கள் (யாத் 12:37).

எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை ஆறுலட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையில் ஸ்திரீகளும், பிள்ளைகளும் சேர்க்கப்படவில்லை. இவர்கள் எல்லோரையும் கணக்கில் சேர்த்தால், எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரரின் மொத்த எண்ணிக்கை சுமார் பன்னிரண்டு லட்சமாக இருக்கும்.

யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும் எகிப்து தேசத்திற்கு வந்தபோது அவர்களுடைய எண்ணிக்கை எழுபது பேர் மாத்திரமே. சுமார் இருநூறு வருஷகாலத்தில் இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை இந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது. கர்த்தர் வாக்குப்பண்ணின பிரகாரமாக, இஸ்ரவேல் புத்திரர் வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பலுகிப்பெருகியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோடே பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று (யாத் 12:38). பல ஜாதியான ஜனங்களின் எண்ணிக்கையும் திரளாயிருக்கிறது. இவர்கள் ஒருவேளை எகிப்து தேசத்தைவிட்டு வெளியேறிப்போக வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கலாம். கர்த்தர் வரப்பண்ணின வாதைகளினால் எகிப்து தேசம் பாழ்நிலமாய்க் கிடக்கிறது. தேசத்தில் விவசாயம் பண்ண முடியவில்லை. போஜனம் பண்ணுவதற்கு தானியமும் தாராளமாயில்லை. இந்த சூழ்நிலைகளில், பல ஜாதி ஜனங்கள் எகிப்து தேசத்தில் தங்கியிருந்து கஷ்டங்களை அனுபவிப்பதற்கு பதிலாக, இஸ்ரவேல் புத்திரரோடுகூட எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலிசெலுத்தப்போகிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட பலிகளை செலுத்துவார்கள் என்பதையும், வனாந்தரத்திலே அவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும் அறிந்துகொள்ள பல ஜாதி ஜனங்கள் ஆர்வமாயிருக்கிறார்கள். அந்த அதிசய சம்பவங்களையெல்லாம் தங்கள் கண்களால் பார்க்கவேண்டும் என்னும் ஆர்வத்தோடு, பல ஜாதி ஜனங்களில் அநேகர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலி செலுத்தப்போவது பற்றி, எகிப்து தேசத்திலுள்ள ஜனங்கள் அன்றாடம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய மகிமை வனாந்தரத்திலே பிரத்தியட்சமாக வெளிப்படும் என்னும் எதிர்பார்ப்பு இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இருக்கிறது. அவர்கள் தங்கள் எதிர்பார்ப்பை பல ஜாதி ஜனங்களிடத்தில் சொல்லும்போது, கர்த்தருடைய மகிமையைக் காணவேண்டும் என்னும் ஆர்வம் பல ஜாதி ஜனங்களுடைய மனதிலும் உண்டாயிற்று. இதற்காகவும் பல ஜாதி ஜனங்களில் அநேகர் இஸ்ரவேல் புத்திரரோடுகூட எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிறார்கள்.

பல ஜாதி ஜனங்களில் அநேகருக்கு, இஸ்ரவேல் புத்திரரோடு தாங்களும் ஏன் போகவேண்டும் என்பதுகூட தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையில் புறப்பட்டுப்போகும்போது, பல ஜாதி ஜனங்களும், காரணம் தெரியாமலேயே கூட்டத்தோடு கூட்டமாக சேர்ந்து கொள்கிறார்கள்.

பல ஜாதி ஜனங்கள் தங்களோடுகூட எகிப்து தேசத்தைவிட்டு ஏன் புறப்பட்டு வருகிறார்கள் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியவில்லை. பிற்காலத்தில் இந்த பல ஜாதி ஜனங்கள், தங்களுக்கு கண்ணிகளாக ஆவார்கள் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியவில்லை.

"பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள்" *(எண் 11:4-6).*

எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரர், வனாந்தரத்திலே கர்த்தருக்கு பலிசெலுத்திவிட்டு, ஒரு சில நாட்களில் எகிப்து தேசத்திற்கு திரும்பி வந்துவிடுவார்கள் என்று பல ஜாதி ஜனங்கள் நினைத்தார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக பிரயாணம்பண்ணுகிறார்கள். பல ஜாதி ஜனங்களில் அநேகர் இஸ்ரவேல் புத்திரரோடு நீண்ட பிரயாணம் பண்ண மனதில்லாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பி வந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டுப்போகும்போது, அவர்களோடுகூட மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று.

பிசைந்தமா புளிக்குமுன் இஸ்ரவேல் ஜனங்கள் அதைப் பாத்திரத்துடனே தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு போகிறார்கள். எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுடுகிறார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக்கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளியாதிருக்கிறது; அவர்கள் தங்களுக்கு வழிக்கென்று ஒன்றும் ஆயத்தம்பண்ணவில்லை *(யாத் 12:34,39).*

எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிற இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நேர்த்தியான போஜனம் எதுவுமில்லை. அவர்களுக்கு விசேஷமான உணவோ, அல்லது தாராளமான போஜன வகைகளோ இல்லை. அவர்கள் பாத்திரத்திலே புளிக்காத பிசைந்த மாவை மாத்திரம் கொண்டு போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுவதற்கு முன்பாக மாவை பிசைந்து வைக்கிறார்கள். மறுநாள் காலையிலே தாங்கள் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போவோம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்குள் பிசைந்த மா புளித்துவிடும் என்றும், எகிப்து தேசத்தைவிட்டு புறப்படுவதற்கு முன்பாக புளித்த மாவிலே அப்பங்களை சுட்டு புசிக்கலாம் என்றும் இஸ்ரவேல் புத்திரர் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தாங்கள் எதிர்பார்த்ததைவிட சீக்கிரத்திலேயே எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிறார்கள். எகிப்து தேசத்தாரும் இஸ்ரவேல் ஜனங்களை தங்கள் தேசத்திலிருந்து துரிதமாய் அனுப்பிவிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு தீவிரமாய் புறப்பட்டுப்போக வேண்டியதாயிற்று. பிசைந்த மா புளிக்கும் வரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாரால் எகிப்து தேசத்திலே தங்கியிருக்க முடியவில்லை. அவர்கள் பிசைந்த மா புளிக்கு முன், அந்த மாவை பாத்திரத்துடனே, தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு, எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டு கால்நடையாய் பிரயாணம்பண்ணி சுக்கோத்திற்கு வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு போஜனம் தேவைப்படுகிறது. அவர்களிடத்திலுள்ள மாவோ புளிப்பில்லாத மாவாகயிருக்கிறது. ஆனாலும் எகிப்திலிருந்து தாங்கள் கொண்டு வந்த பிசைந்த மாவை புளிப்பில்லாத அப்பங்களாக சுட்டு, அதைப் புசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சுக்கோத்திலே மிகவும் எளிமையான போஜனத்தை புசிக்கிறார்கள். ஆனாலும் அந்தப் போஜனத்தை அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு புசிக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலும் எகிப்து தேசத்திலே அடிமைத்தனத்தின் வேதனைகளை அனுபவித்து போஜனம்பண்ணினார்கள். இப்போதோ விடுதலையோடு போஜனம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டு, விடுதலையோடு போஜனம்பண்ணுவது இதுவே முதலாவது சம்பவமாகும்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணி 430 வருஷமாயிற்று. அந்த வாக்குத்தத்தம் இப்போதுதான் நிறைவேறுகிறது. இஸ்ரவேல் புத்திரர் 430 வருஷங்களாக, கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று காத்திருக்கிறார்கள். பல வருஷங்களாக நிறைவேறாத வாக்குத்தத்தம், இப்போது நிறைவேறுகிறது. கர்த்தர் வாக்குமாறாதவர்.

"ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது" (கலா 3:17).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றுமுப்பது வருஷம். நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றையத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்படுகிறது (யாத் 12:40,41).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்த கடைசி இராத்திரியிலே, தங்கள் வீடுகளிலே பஸ்காவை புசித்தார்கள். அது கர்த்தருடைய பஸ்கா (யாத் 12:11). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, கடைசியாக இராப்போஜனம்பண்ணினார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பஸ்காவை புசிக்கும்போது, அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார்.

எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தவர்கள், கானான் தேசத்தை நோக்கி பிரயாணமாய்ப் புறப்பட்டுப்போனார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ பரம கானானை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை கரம்பிடித்து அழைத்துக்கொண்டு போகிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, பரமகானானை நோக்கி பிரயாணமாய்ப்போகிறோம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், இது அவருக்கென்று முக்கியமாய் ஆசரிக்கத்தக்க ராத்திரியாயிற்று; இஸ்ரவேல் சந்ததியார் எல்லாரும் தங்கள் தலைமுறைதோறும் கர்த்தருக்கு முக்கியமாய் ஆசரிக்கவேண்டிய ராத்திரி இதுவே (யாத் 12:42).

## பஸ்காவின் நியமம்
## யாத் 12:43-51

**யாத் 12:43. மேலும், கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: பஸ்காவின் நியமமாவது, அந்நிய புத்திரன் ஒருவனும் அதைப் புசிக்கவேண்டாம்.**

**யாத் 12:44. பணத்தினால் கொள்ளப்பட்ட அடிமையானவன் எவனும், நீ அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினபின், அவன் அதைப் புசிக்கலாம்.**

**யாத் 12:45. அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்கவேண்டாம்.**

**யாத் 12:46. அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்கவேண்டும்; அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது; அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது.**

**யாத் 12:47. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அதை ஆசரிக்கக்கடவர்கள்.**

**யாத் 12:48. அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று இருந்தால், அவனைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; பின்பு அவன் சேர்ந்து அதை ஆசரிக்கவேண்டும்; அவன் சுதேசியைப்போல் இருப்பான்; விருத்தசேதனம் இல்லாத ஒருவனும் அதில் புசிக்கவேண்டாம்.**

**யாத் 12:49. சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது என்றார்.**

**யாத் 12:50. இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.**

**யாத் 12:51. அன்றையத்தினமே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.**

பஸ்காவின் நியமத்தைப்பற்றி மேலும் சில செய்திகள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இனிமேல் வரப்போகிற நாட்களில், பஸ்காவை ஆசரிக்கும்போது, கர்த்தர் அது குறித்து தங்களுக்கு கட்டளையிட்டிருக்கிற பிரகாரம் அதை ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் (யாத் 12:47). கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் யாரெல்லாம் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருமே கர்த்தரைத் துதிப்பதில் பங்குபெறவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் நன்மை செய்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய பந்தியானது. பஸ்காவுக்கு அடையாளமாக ஆசரிக்கப்படுகிறது. விசுவாசிகள் கர்த்தருடைய பந்தியிலே பயபக்தியோடு பங்குபெறவேண்டும். விசுவாசிகளில் ஒருவரும் கர்த்தருடைய பந்தியை அசட்டைசெய்து, அதில் பங்குபெறாமல் இருந்துவிடக்கூடாது.

அந்நிய புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக் கூடாது. விருத்தசேதனமில்லாத அந்நியருக்கு பஸ்காவை ஆசரிக்க அனுமதியில்லை.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "பஸ்காவின் நியமமாவது, அந்நிய புத்திரன் ஒருவனும் அதைப் புசிக்கவேண்டாம்" என்றும், "அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்கவேண்டாம்" என்றும்,

"அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று இருந்தால், அவனைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் யாவரும் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்; பின்பு அவன் சேர்ந்து அதை ஆசரிக்கவேண்டும்; அவன் சுதேசியைப்போல் இருப்பான்; விருத்தசேதனம் இல்லாத ஒருவனும் அதில் புசிக்கவேண்டாம்" (யாத் 12:43,45,48) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறுகிற விசுவாசிகள் எல்லோரும், கர்த்தருடைய வார்த்தையினால் மறுபடியும் பிறந்தவர்களாகயிருக்கவேண்டும். நம்முடைய இருதயம் முதலாவதாக விருத்தசேதனம்பண்ணப்பட்டிருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பஸ்காவில் பங்குபெறுகிறவர்கள், விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும் என்னும் நியமம் இருந்தது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, மாம்சத்தில் விருத்தசேதனம் நியமிக்கப்படவில்லை. ஆனால் நம்முடைய இருதயம் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது.

"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" (கொலோ 2:11).

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிற விசுவாசிகள், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலிமரணத்தினால் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவர்களாகயிருக்கிறார்கள்.

விருத்தசேதனம்பண்ணப்பட்ட அந்நியன் பஸ்காவை ஆசரிக்கலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது "பணத்தினால் கொள்ளப்பட்ட அடிமையானவன் எவனும், நீ அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினபின், அவன் அதைப் புசிக்கலாம்" (யாத் 12:44).

நாம் கர்த்தருக்கு நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடையது எல்லாமே கர்த்தருடையது என்று அவருக்கு அர்ப்பணிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அந்நியரும் பஸ்காவை ஆசரிப்பதற்கு அனுமதி கொடுக்கிறார். கர்த்தருடைய பஸ்காவிலே, இஸ்ரவேல் புத்திரர் மாத்திரம் என்றல்லாமல், விருத்தசேதனம்பண்ணப்பட்ட அந்நியரும் பங்குபெறுவதற்கு, கர்த்தர் அனுமதி கொடுக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் புறஜாதியாரும் கர்த்தருடைய சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதற்கு, இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய சபையிலே யூதரென்றும் புறஜாதியாரென்றும் வித்தியாசமில்லை. எல்லோரும் கர்த்தருடைய பார்வையில் சமமாகயிருக்கிறார்கள்.

"சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது" (யாத் 12:49) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயின் பிரமாணம் இஸ்ரவேலருக்கு மட்டுமே உரியது. (உபா 4:6-8,44-45; ரோமர் 2:12-16; ரோமர் 3:1-2) இஸ்ரவேலர்கள் மோசேயின் பிரமாணங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். (எண் 15:16). புறஜாதியார் இஸ்ரவேலரைப்போல மோசேயின் பிரமாணத்திற்குட்பட விரும்பினால், அவர்களுடைய ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யப்படவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். இதன் பிரகாரமாக, நாம் ஆபிரகாமின் சந்ததியாராயும் இருக்கிறோம். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தங்கள், ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கும் நிறைவேறும்.

பஸ்காவை ஆசரிக்கும்போது அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்கவேண்டும்; அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது; அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது (யாத் 12:46).

பஸ்காவை ஆசரிக்கும்போது, வீட்டிலுள்ளோர் அனைவரும் சந்தோஷமாயும் ஐக்கியமாயும் இருக்கவேண்டும். அப்போது ஒருவருக்கொருவர் பஸ்காவைக் குறித்து, ஆவிக்குரிய விளக்கங்களையும், புத்திமதிகளையும் சொல்லி, ஒருவரையொருவர் பலப்படுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகிற சம்பவம் இங்கு மறுபடியுமாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் செய்கிறார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்கிறார்கள் (யாத் 12:50).

பரிசுத்த வேதாகமத்தில் பஸ்காவின் நியமத்தைப்பற்றி தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நிசான் மாதம் 10ஆம் தேதி. இது வருஷத்தின் முதலாம் மாதம். ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொண்டு அதைப் பதினாலாம் தேதி வரையிலும் வைத்திருக்க வேண்டும். (யாத் 12:3-6).

2. ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கு வீட்டில் போதுமான நபர்கள் இல்லையென்றால், அவர்கள் அயல்வீட்டுக்காரரைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆட்டுக்குட்டி வீணாகக் கூடாது. (யாத் 12:4).

3. அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்க வேண்டும். (யாத் 12:5).

4. அந்த ஆட்டுக்குட்டி ஆணும், ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும். (யாத் 12:5).

5. நிசான் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலத்தில் அந்த ஆட்டுக்குட்டியை அடிக்க வேண்டும். (யாத் 12:6)

6. அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டின் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டும். (யாத் 12:7,22-23).

7. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும். (யாத் 12:8-9)

8. பச்சையாயும், தண்ணீரில் அவிக்கப் பட்டதாயும், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:9).

9. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும். (யாத் 12:10)..

10. அதைத் தீவிரமாய் புசிக்கவேண்டும். அரைகளில் கச்சை கட்டிக்கொண்டு, கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமாக அதைப்புசிக்க வேண்டும். (யாத் 12:11).

11. ராத்திரியில் அதைப் புசிக்க வேண்டும் (யாத் 12:8,10,18).

12. பஸ்கா நியமம் இஸ்ரவேலருக்கு நித்திய நினைவுகூருதலாக இருக்க வேண்டும். (யாத் 12:14,17,24; எசே 45:17).

13. வீடுகளிலிருந்து புளித்த மாவை நீக்க வேண்டும். புளிப்பில்லா அப்பத்தை மாத்திரம் புசிக்க வேண்டும். (யாத் 12:15,19-20; யாத் 13:3-7).

14. பஸ்காவின்போது, புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஆசரிக்கத் துவங்க வேண்டும். (யாத் 12:15-20).

15. புளிப்பில்லா அப்பத்தை ஏழு நாளளவும் புசிக்க வேண்டும். (யாத் 12:15).

16. முதலாம் நாளிலும், ஏழாம் நாளிலும் ஒரு வேலையும் செய்யப்படலாகாது. அந்த நாட்களில் பரிசுத்த சபை கூடுதல் இருக்க வேண்டும். (யாத் 12:16).

17. ஏழு நாளளவும் வீடுகளில் புளித்தமா காணப்படலாகாது. (யாத் 12:18-19).

18. அந்நிய புத்திரன் ஒருவனும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:43).

19. விருத்தசேதனம் பண்ணாத எந்த மனுஷனும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:44-48).

20. அந்நியனும், கூலியாளும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. (யாத் 12:45).

21. பஸ்காவை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்கவேண்டும்; அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது. (யாத் 12:46).

22. பஸ்கா ஆட்டுக்குட்டியின் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது. (யாத் 12:46; யோவான் 19:33,36).

23. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும். (யாத் 12:47).

24. ஆபிப் அல்லது நிசான் மாதத்தில் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். (யாத் 13:5) பஸ்காவை ஒவ்வொரு வருஷமும் ஆசரிக்க வேண்டும் (எண் 9:2-6).

25. பஸ்காவை ஆசரிக்க வேண்டிய நாளில், ஜனங்கள் தீட்டுப்பட்டிருந்தால், அதை அவர்கள் ஒருமாதத்திற்குப் பின்பு புசிக்கலாம். (எண் 9:2-14).

26. பஸ்கா ஆட்டுக்குட்டியை ஆசரிப்புக் கூடாரத்தில் மட்டுமே அடிக்க வேண்டும். (உபா 16:5-6).

அன்றையத்தினமே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுகிறார் (யாத் 12:51). "அன்றையத்தினமே" என்பது நிசான் மாதம் பதினைந்தாம் நாளைக் குறிக்கிறது (யாத் 12:41,51; எண் 33:3).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுகிறார். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தாலும், அவர்கள் யுத்தம் பண்ணுவதில் பழக்கம் உள்ளவர்கள். எகிப்தியர்களுக்காக அவர்கள் யுத்தம் பண்ணியிருக்கிறார்கள்.

ஆகையினால் குறைந்த கால அவகாசத்தில் இஸ்ரவேல் புத்திரர் போர்வீரர்களைப்போல அணியணியாகப் புறப்பட்டுப்போக ஆயத்தமாக இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தங்களுடைய ஸ்தானத்தையும், கடமையையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

## 13 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன கட்டளைகள் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் முதற்பேறு அனைத்தையும் கர்த்தருக்கு பரிசுத்தம் பண்ணவேண்டும் (யாத் 13:1,2). இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினைவுகூரவேண்டும் (யாத் 13:3,4). இதை நினைவுகூரும் வண்ணமாக அவர்கள் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கவேண்டும் (யாத் 13:5-7).

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய புத்திரருக்கு, புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் கருத்தை விளக்கி சொல்லவேண்டும் (யாத் 13:8-10). மிருகஜீவன்களின் தலையீற்று அனைத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் (யாத் 13:11-13).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். தேவன் அவர்களை தமக்கு சித்தமான வழியாக வழிநடத்துகிறார் (யாத் 13:17,18).

மோசே தன்னோடே கூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போகிறார் (யாத் 13:19).

இஸ்ரவேல் புத்திரர் இரவும் பகலும் வழிநடக்க கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் செல்லுகிறார் (யாத் 13:20-22).

### முதற்பேறு
### யாத் 13:1,2

**யாத் 13:1. கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 13:2. இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார்.**

முதற்பேறு அனைத்தும் கர்த்தருடையது. கர்த்தர் எகிப்து தேசத்திலே எகிப்தியரின் முதற்பேறு அனைத்தையும் அழித்துப்போட்டார். இஸ்ரவேலரின் முதற்பேறுகளை கர்த்தர் பாதுகாத்தார். ஆகையினால் முதற்பேறு அனைத்தும் கர்த்தருடையது. முதற்பேறு அனைத்தையும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்தப்படுத்தவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது" (யாத் 13:1,2) என்று சொல்லுகிறார்.

"எனக்குப் பரிசுத்தப்படுத்து" என்னும் வாக்கியம், பாவத்திலிருந்து சுத்திகரிப்பது என்றோ அல்லது பழைய மனுஷனைக் களைந்துபோடுவது என்றோ பொருள்படாது. தேவனுடைய பரிசுத்தக் காரியங்களுக்காக மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும், மிருகங்களின் தலையீற்றையும் வேறுபிரிக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும் (யாத் 13:2,12).

கர்த்தர் நமக்கு முதன்மையானவராகவும், மேன்மையானவராகவும் இருக்கிறார். அவரே நமக்கு விசேஷமானவர். நம்முடைய குடும்பத்தில் நமக்கு முதற்பேறுகள் முக்கியமானவை. அவை விசேஷமானவை. நம்முடைய ஜீவியத்தில் நமக்கு எது முக்கியமானதாகவும், மேன்மையானதாகவும், விசேஷமானதாகவும் இருக்கிறதோ, அதை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய குடும்பங்களில், அவர்களுக்கு பிறக்கிற முதல் பிள்ளைகள், அவர்களுக்கு மிகவும் விசேஷமானவர்கள். தலைப்பிள்ளைகள் குடும்பத்திற்கு சந்தோஷத்தையும், நம்பிக்கையும் கொடுக்கும். ஆகையினால் அந்த முதற்பேறுகள் தம்முடையது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" *(எபி 12:23,24).*

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" *(ரோம 8:29,30).*

நம்முடைய இரட்சிப்பின் அனுபவம், மறுபடியும் பிறக்கும் அனுபவமாயிருக்கிறது. நாம் பரலோகத்திலிருந்து பிறக்கும் வல்லமையினால் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்திருக்கிறோம். மறுபடியும் பிறந்த விசுவாசிகள் எல்லோருமே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முதற்பேறானவர்களாகயிருக்கிறோம். இந்த சிலாக்கியம் விசுவாசிகளாகிய எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருப்பதினால், அவருக்கு சுதந்தரராகவும் இருக்கிறோம்.

மறுபடியும் பிறந்த விசுவாசிகளாகிய நாம், கர்த்தருக்கு முதற்பேறானவர்களாகயிருப்பதினால் நாம் கர்த்தருடையவர்கள். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், முதற்பேறானவர்களாகிய நாம், நம்மை கர்த்தருக்கு பரிசுத்தப்படுத்த வேண்டும்.

## புளிப்பில்லா அப்பப்பண்டிகை
## யாத் 13:3-10

**யாத் 13:3. அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள்; கர்த்தர் பலத்த கையினால் உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆகையால், நீங்கள் புளித்த அப்பம் புசிக்கவேண்டாம்.**

**யாத் 13:4. ஆபிப் மாதத்தின் இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள்.**

**யாத் 13:5. ஆகையால், கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதும், பாலும் தேனும் ஓடுகிறதுமான தேசமாகிய கானானியர், ஏத்தியர், எமோரியர், ஏவியர், எபூசியர் என்பவர்களுடைய தேசத்துக்கு உன்னை வரப்பண்ணும் காலத்தில், நீ இந்த மாதத்திலே இந்த ஆராதனையைச் செய்வாயாக.**

**யாத் 13:6. புளிப்பில்லாத அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவாய்; ஏழாம்நாளிலே கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக.**

**யாத் 13:7. அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும்; புளிப்புள்ள அப்பம் உன்னிடத்திலே காணப்படவேண்டாம்; உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்.**

**யாத் 13:8. அந்நாளில் நீ உன் புத்திரனை நோக்கி: நான் எகிப்திலிருந்து புறப்படுகையில், கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படி நடப்பிக்கப்படுகிறது என்று சொல்.**

**யாத் 13:9. கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது; பலத்த கையினால் கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்;**

**யாத் 13:10. ஆகையால், நீ வருஷந்தோறும் குறித்த காலத்தில் இந்த நியமத்தை ஆசரித்து வருவாயாக.**

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். இந்த நாளை இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நினைக்கவேண்டும். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள் இஸ்ரவேல் புத்திரருடைய ஜீவியத்திலே மிகவும் விசேஷமான நாள். இந்த நாளில் அவர்களுடைய தேசம் பிறந்தது. அவர்கள் இனிமேல் அடிமைத்தனவீடாகிய எகிப்து தேசத்திற்குரியவர்களல்ல. அவர்கள் கர்த்தருக்கு சுதந்தரமானவர்கள். அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து இந்த நாளிலே இஸ்ரவேல் புத்திரர் விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இந்த நாளை மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும் என்றும், இதை நினைவுகூரும் வண்ணமாக அவர்கள் பண்டிகையை ஆசரிக்கவேண்டும் என்றும் மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள்; கர்த்தர் பலத்த கையினால் உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆகையால், நீங்கள் புளித்த அப்பம் புசிக்கவேண்டாம். ஆபிப் மாதத்தின் இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள்" (யாத் 13:3,4) என்று சொல்லுகிறார்.

இந்த நாள் இஸ்ரவேலர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற நாள். தங்களுடைய யாத்திரையை ஆரம்பம் பண்ணினநாள். அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற நாளைக் கொண்டாடுவதற்காக ஏழாவது நாளை வேறுபிரிக்க வேண்டுமென்று தேவன் இஸ்ரவேலருக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். (உபா 5:15).

ஆபிப் மாதத்தின் இந்த நாளிலே அவர்கள் புறப்படுகிறார்கள். எகிப்திலிருந்து யாத்திரை பண்ணிய நாளே இஸ்ரவேலரின் முதலாவது ஓய்வு நாளாகும். ஓய்வுநாளில் அத்தியாவசியமான காரியங்களையும், நல்ல காரியங்களையும் கட்டாயம் செய்ய வேண்டும். (மாற்கு 3:1-4). வாரஓய்வுநாளையும், விசேஷித்த ஓய்வுநாளையும் இவ்வாறே ஆசரிக்க வேண்டும் (யாத் 12:16; எண் 33:3).

இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட நாளை நினைவுகூருவதுபோல, விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளையும் நினைவுகூரவேண்டும். இந்த நாளிலே, நம்முடைய பாவத்தின் அடிமைத்தன வீட்டிலிருந்து, இயேசுகிறிஸ்துவோடுகூட எழுப்பப்பட்டிருக்கிறோம். விசுவாசிகளாகிய நமக்கு, நாம் இரட்சிக்கப்பட்டு மறுபடியும் பிறந்த நாளானது மிகவும் விசேஷமான நாளாகயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதும், பாலும் தேனும் ஓடுகிறதுமான தேசமாகிய கானானியர், ஏத்தியர், எமோரியர், ஏவியர், எபூசியர் என்பவர்களுடைய தேசத்துக்கு உன்னை வரப்பண்ணும் காலத்தில், நீ இந்த மாதத்திலே இந்த ஆராதனையைச் செய்வாயாக" (யாத் 13:5) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினைவுகூர்ந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் இந்த நாளை பண்டிகையாகவும் ஆசரிக்கவேண்டும். இந்த பண்டிகையை எப்படி ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறாரோ, அதன் பிரகாரமாக அவர்கள் இந்தப் பண்டிகையை ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகையை எவ்வாறு ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிடுகிறார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "புளிப்பில்லாத அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவாய்; ஏழாம்நாளிலே கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக. அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும்; புளிப்புள்ள அப்பம் உன்னிடத்திலே காணப்படவேண்டாம்; உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்" (யாத் 13:6,7) என்று சொல்லுகிறார்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆசரிக்கப்படும் நாளிலே, புளிப்புள்ள அப்பம் அவர்களிடத்தில் காணப்படக்கூடாது. அவர்களுடைய எல்லைக்குள் எங்கும் புளித்த மாவும் காணப்படக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் இந்த ஏழு நாட்களாக புளிப்பில்லா அப்பத்தை புசியாமலிருப்பது மாத்திரமல்ல, அவர்கள் பண்டிகை நாளில் புளிப்பில்லா அப்பத்தை தங்கள் கண்களால் பார்க்கவும் கூடாது. புளிப்பில்லாத மாவு அவர்களுடைய வீடுகளில் எங்கும் காணப்படவும் கூடாது.

யூதர்கள் பஸ்கா பண்டிகையை மிகவும் விசேஷமாய்க் கொண்டாடுகிறார்கள். பஸ்கா பண்டிகை ஆரம்பமாவதற்கு முன்பு, அவர்கள் தங்கள் வீடுகளிலுள்ள புளித்த மாவை மொத்தமாக அப்புறப்படுத்திவிடுவார்கள். புளிப்புள்ள அப்பங்களை அவர்கள் மண்ணிலே புதைத்துவிடுவார்கள் அல்லது தீயிலே சுட்டெரித்துப்போடுவார்கள். யூதர்களில் சிலர் புளிப்புள்ள அப்பங்களை சிறிய தூள்களாக இடித்து, அதைக் காற்றிலே தூவிவிடுவார்கள்.

தங்கள் எல்லைக்குள் எங்கும் புளித்த மாவு காணப்படக்கூடாது என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிட்டிருக்கிறார். அவர்கள் இந்த விஷயத்தில் மிகவும் கவனமாயிருந்து விளக்கை கொளுத்தி, தங்கள் வீடுகளில் புளித்த மாவோ அல்லது புளிப்புள்ள அப்பமோ இருக்கிறதா என்று தேடிப்பார்ப்பார்கள். ஒரு சிலர் மெழுவர்த்திகளை ஏற்றி, தங்கள் வீட்டில் புளித்த மாவு இருக்கிறதா என்று கவனமாய்த் தேடிப்பார்ப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷந்தோறும் குறித்த காலத்தில் பஸ்காவின் நியமத்தை ஆசரித்து வரவேண்டும் (யாத் 13:10). பஸ்காவின் கருத்தை இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும்.

இஸ்வேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும் அந்நாளிலே, அவர்கள் தங்கள் புத்திரனை நோக்கி, "நான் எகிப்திலிருந்து புறப்படுகையில், கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படி நடப்பிக்கப்படுகிறது" (யாத் 13:8) என்று சொல்லவேண்டும்.

கர்த்தருடைய நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் புத்திரருடைய வாயிலிருக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது; பலத்த கையினால் கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (யாத் 13:9) என்று சொல்லுகிறார்.

யூதர்கள் வேதவாக்கியங்களைத் தங்கள் நெற்றிகளிலும், கைகளிலும் எழுதி, அவற்றை சிறிய தோற்பேழைகளில் கட்டிக் கொள்வார்கள். புறஜாதியார் யூதர்களைப் பார்க்கும்பொழுது, அவர்கள் தேவமனுஷர் என்றும் தேவனுடைய வார்த்தைக்குரியவர்கள் என்றும், கருதி அவர்களுக்கு மதிப்புக் கொடுப்பார்கள். காலப்போக்கில் இஸ்ரவேலர்கள் தேவனைவிட்டுப் பின்வாங்கிப்போனபோது, அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்காக இந்தச் சிறிய தோற்பேழைகளைத் தாயத்துக்களைப் போலப் பயன்படுத்தினார்கள் (மத் 23:5).

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை, அதன் கருத்து தெரியாமல், ஒரு பாரம்பரிய சடங்காச்சாரம்போல ஆசரிக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பஸ்காவின் நியமத்தைபற்றிய கருத்து தெரிந்திருக்கவேண்டும். அதன் கருத்தை அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கவும் அறிந்திருக்கவேண்டும்.

## மிருகஜீவன்களின் தலையீற்று யாத் 13:11-16

**யாத் 13:11. மேலும், கர்த்தர் உனக்கும் உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே, உன்னைக் கானானியரின் தேசத்திலே வரப்பண்ணி, அதை உனக்குக் கொடுக்கும்போது,**

**யாத் 13:12. கர்ப்பந்திறந்து பிறக்கும் அனைத்தையும், உனக்கு இருக்கும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும், கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பாயாக; அவைகளிலுள்ள ஆண்கள் கர்த்தருடையவைகள்.**

**யாத் 13:13. கழுதையின் தலையீற்றையெல்லாம் ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்வாயாக; மீட்காவிட்டால், அதின் கழுத்தை முறித்துப்போடு. உன் பிள்ளைகளில் முதற்பேறான சகல நரஜீவனையும் மீட்டுக் கொள்வாயாக.**

**யாத் 13:14. பிற்காலத்தில் உன் குமாரன்: இது என்ன என்று உன்னைக் கேட்டால்; நீ அவனை நோக்கி: கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.**

**யாத் 13:15. எங்களை விடாதபடிக்கு, பார்வோன் கடினப்பட்டிருக்கும்போது, கர்த்தர் எகிப்து தேசத்தில் மனிதரின் தலைப்பிள்ளைகள்முதல் மிருக ஜீவன்களின் தலையீற்றுகள்வரைக்கும் உண்டாயிருந்த முதற்பேறுகள் யாவையும் கொன்றுபோட்டார்; ஆகையால், கர்ப்பந்திறந்து பிறக்கும் ஆணையெல்லாம் நான் கர்த்தருக்குப் பலியிட்டு, என் பிள்ளைகளில் முதற்பேறனைத்தையும் மீட்டுக்கொள்ளுகிறேன்.**

**யாத் 13:16. கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதற்கு, இது உன் கையில் அடையாளமாகவும், உன் கண்களின் நடுவே ஞாபகக்குறியாகவும் இருக்கக்கடவது என்று சொல்வாயாக என்றான்.**

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய தலையீற்று அனைத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "மேலும், கர்த்தர் உனக்கும் உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே, உன்னைக் கானானியரின் தேசத்திலே வரப்பண்ணி, அதை உனக்குக் கொடுக்கும்போது, கர்ப்பந்திறந்து பிறக்கும் அனைத்தையும், உனக்கு இருக்கும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும், கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பாயாக; அவைகளிலுள்ள ஆண்கள் கர்த்தருடையவைகள்" *(யாத் 13:11,12)* என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்காக வேறுபிரிப்பது பரிசுத்தமாக்கப் படுதலாகும். *(யாத் 13:2)*. மனுஷருடைய தலைப்பிள்ளைகளும், மிருகஜீவன்களின் தலையீற்றும், கர்த்தருக்காக வேறுபிரித்து பரிசுத்தமாக்கப்படவேண்டும். *(எண் 18:8,15, யாத் 13:12-13; உபா 15:19)* கழுதைகளின் தலையீற்றையும், அசுத்த மிருகங்களையும் ஆட்டுக்குட்டியால் மீட்க வேண்டும். அதன்பின்பு, அவற்றின் உரிமையாளர் அவற்றைத் தனக்குச் சொந்தமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இல்லையெனில், அவற்றின் கழுத்தை முறித்துப் போடவேண்டும். *(யாத் 13:13)*.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பிள்ளைகளில் முதற்பேறான சகல நரஜீவனையும் மீட்டுக்கொள்ளவேண்டும். புறஜாதியார் தங்களுடைய பிள்ளைகளை மோளேகுக்கு பலியிட்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் அவர்களைப்போல, தங்களுடைய தலைப்பிள்ளைகளை கர்த்தருக்கு பலியிடவேண்டிய தேவையில்லை.

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில், தலைப்பிள்ளைகளை மீட்டுக்கொள்வதற்கான பிரமாணமும், அதற்கான கிரயமும் சொல்லப்பட்டிருக்கிறது.

"மீட்கவேண்டியவைகள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டதானால், உன் மதிப்புக்கு இசைய பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி ஐந்து சேக்கல் பணத்தாலே அவைகளை மீட்கவேண்டும்; ஒரு சேக்கல் இருபது கேரா" (எண் 18:16).

இஸ்ரவேல் புத்திரர் மிருகஜீவன்களின் தலையீற்றுக்களையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அவர்கள் கழுதையின் தலையீற்றையெல்லாம் ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்ள வேண்டும்; அவர்கள் அதை அவ்வாறு மீட்காவிட்டால், அதின் கழுத்தை முறித்துப்போடவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 13:13).

இந்த வசனத்தில், "மீட்டுக்கொள்வாயாக" என்னும் வாக்கியத்திற்கு, யாத் 6:6 ஆவது வசனத்தைப்போல "கால்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக "படஹ்" என்னும் எபிரெய வார்த்தை இங்கு பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (யாத் 13:15; யாத் 34:20; லேவி 27:27; எண் 18:15-17) இதற்குச் சமமதிப்புக் கொடுக்காமல் அடையாளமாக ஒன்றைக் கொடுத்து மீட்பது என்று பொருள்.

கர்த்தருடைய நியமங்களை இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். பிற்கால சந்ததியார் இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆராதனை முறைமைகளைப்பற்றியும், அவர்கள் பலிசெலுத்துகிற முறைமைகளைப்பற்றியும் தங்கள் முன் சந்ததியாரிடத்தில் கேள்வி கேட்பார்கள்.

ஆகையினால் கர்த்தருடைய பரிசுத்தமான நியமங்களையும், அவைகளின் கருத்துக்களையும் அறிந்துகொள்வது இஸ்ரவேல் புத்திரருக்கு அவசியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடத்தில் கர்த்தரைப்பற்றிய காரியங்களை கேள்வி கேட்டு தெரிந்துகொள்வதற்கு அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அவர்கள் தங்களிடத்தில் ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து கேள்வி கேட்கும்போது, அவர்களுடைய கேள்விகளுக்கு அவர்களுடைய பெற்றோர் சரியான பதிலை சொல்லவேண்டும்.

பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரின் குமாரன், "இது என்ன" என்று அவர்களைக் கேட்பான். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியமங்களை ஆசரிக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் அதன் கருத்து என்ன என்று அவர்களிடத்தில் கேட்பார்கள்.

அப்போது பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நோக்கி, "கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். எங்களை விடாதபடிக்கு, பார்வோன் கடினப்பட்டிருக்கும்போது, கர்த்தர் எகிப்து தேசத்தில் மனிதரின் தலைப்பிள்ளைகள்முதல் மிருகஜீவன்களின் தலையீற்றுகள்வரைக்கும் உண்டாயிருந்த முதற்பேறுகள் யாவையும் கொன்று போட்டார்; ஆகையால், கர்ப்பந்திறந்து பிறக்கும் ஆணையெல்லாம் நான் கர்த்தருக்குப் பலியிட்டு, என் பிள்ளைகளில் முதற்பேறனைத்தையும் மீட்டுக்கொள்ளுகிறேன்" (யாத் 13:14,15) என்றும்,

"கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதற்கு, இது என் கையில் அடையாளமாகவும், என் கண்களின் நடுவே ஞாபகக்குறியாகவும் இருக்கிறது" (யாத் 13:16) என்றும் சொல்லவேண்டும்.

தலைப்பிள்ளையின் மீட்பைப் பற்றி யாத் 13:14-16 ஆகிய வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. எகிப்தியரின் தலைப்பிள்ளைகளும், அவர்களுடைய மிருகஜீவன்களின் தலையீற்றுகளும், மாண்டுபோயின. ஆனால் இஸ்ரவேலருக்குரியவை எதுவும் மாண்டுபோகவில்லை. இந்த அற்புதத்தை நினைவு கூருவதற்காகவும், தேவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் இஸ்ரவேலில் பிறக்கும் தலைப்பிள்ளைகளும், தலையீற்றுகளும் தேவனுக்காகப் பரிசுத்தமாக்கப்பட்டு அர்ப்பணிக்கப்படுகிறது. இந்த மீட்பு, ஆத்தும இரட்சிப்பைக் குறிக்காது. ஏனெனில் இங்கு பாவநிவாரணத்திற்காக இரத்தக்கிரயம் எதுவும் செலுத்தப்படவில்லை (லேவி 17:11).

நம்முடைய விசுவாசத்திலும், ஆராதனையிலும், நாம் செய்கிற ஒவ்வொரு காரியங்களின் காரணமும் நமக்கு தெரிந்திருக்கவேண்டும். புறஜாதி ஜனங்கள் தங்கள் முன்னோர்களின் பாரம்பரியங்களை பின்பற்றி விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு தங்களுடைய ஆராதனையின் கருத்து என்ன என்பது தெரியாது. கர்த்தரை ஆராதிக்கிற நமக்கோ, நாம் ஆராதிக்கிற தேவன் இன்னார் என்பதும், அவரை ஏன் இவ்வாறு ஆராதிக்கிறோம் என்பதும் தெரிந்திருக்கவேண்டும்.

கர்த்தருடைய நியமங்கள் எல்லாமே அவருடைய வார்த்தையினால் பரிசுத்தம்பண்ணப்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்த நியமங்கள் அனைத்தையும் கர்த்தருடைய வார்த்தையினால் ஆராய்ந்து பார்த்து, அதன் விளக்கத்தையும் தாற்பரியத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். கர்த்தருடைய நியமங்களை நாம் அறிந்துகொள்வதோடு, அந்த நியமங்களின் கருத்தை மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும் நமக்கு தெரிந்திருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஆராதனை ஆவிக்குரியது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும், கருத்தோடும் ஆராதிக்கவேண்டும் நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது, என்ன செய்கிறோம் என்பதும், அதை ஏன் செய்கிறோம் என்பதும் நமக்கு தெரிந்திருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் முற்பிதாக்களுக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்தினார். அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பரிசுத்தமான நியமங்களைக் கொடுத்தார். கர்த்தர் நம்முடைய பிதாக்களுக்கு கொடுத்த கிருபைகளும் இரக்கங்களும், நமக்குமுரியது. கர்த்தருடைய கிருபையில், நம்முடைய பெற்றோருக்கு பங்கு இருப்பது போல, நமக்கும் பங்கு இருக்கிறது. கர்த்தருடைய கிருபையின் ஆசீர்வாதங்களையும், அவருடைய இரக்கங்களின் நன்மைகளையும் நம்முடைய பெற்றோர் அனுபவித்ததுபோல, நாமும் அனுபவிக்கிறோம். அவற்றின் ஆசீர்வாதங்களை நாமும் அறுவடை செய்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் மரணத்தினாலும், அவருடைய உயிர்தெழுதலினாலும் நாம் மீட்கப்படுகிறோம் என்பது நமக்கு தெளிவாக தெரிந்திருக்கவேண்டும். இந்த சத்தியம் நமக்கு தெரிவது மாத்திரமல்ல, இதை நாம் மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க அறிந்திருக்கவேண்டும்.

## பிரயாண வழி
## யாத் 13:17-20

**யாத் 13:17. பார்வோன் ஜனங்களைப் போகவிட்டபின்: ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி; பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல்,**

**யாத் 13:18. சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் ஜனங்களைச் சுற்றிப் போகப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப்போனார்கள்.**

**யாத் 13:19. மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக் கொண்டு போனான். தேவன் நிச்சயமாய் உங்களைச் சந்திப்பார்; அப்பொழுது உங்களோடேகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோங்கள் என்று யோசேப்பு சொல்லி, இஸ்ரவேல் புத்திரரை உறுதியாய் ஆணையிடும்படி செய்திருந்தான்.**

**யாத் 13:20. அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள்.**

பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து துரிதமாய் அனுப்பிவிடுகிறான். அவர்கள் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தவர்கள். அவர்களுக்கு எகிப்து தேசத்தை தவிர வேறு எந்த தேசமும் தெரியாது. கர்த்தரோ அவர்களுக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு, அந்தக் கானான் தேசம் எங்கே இருக்கிறது என்பதும், அந்த தேசத்திற்கு எந்த வழியாகப் போகவேண்டும் என்பதும் தெரியாது.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவித்த கர்த்தர், அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்தவும் செய்கிறார். அவர்கள் எந்த வழியாகப் போகவேண்டும் என்று கர்த்தரே தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தரே அவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறார்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தை வழிநடத்துகிறார். அவர் தன்னுடைய சொந்த ஆலோசனையின் பிரகாரமாக ஜனங்களை வழிநடத்தாமல், கர்த்தருடைய ஆலோசனையின் பிரகாரமாகவே ஜனங்களை வழிநடத்துகிறார். மோசே கர்த்தரிடத்திலிருந்து போகவேண்டிய வழியைப்பற்றி கட்டளை பெற்றுக்கொண்டு, அந்த வழியாக அவர் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார்.

எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்குப்போவதற்கு இரண்டு வழிகள் இருக்கிறது. ஒன்று தூரம் குறைவான சமீபமான வழி. இந்த வழியாகப்போனால் சமீபமான எகிப்து தேசத்தின் வடக்கு பகுதியிலிருந்து, கானான் தேசத்தின் தெற்கு பகுதிக்கு, நான்கு அல்லது ஐந்து நாட்கள் பிரயாணம் செய்து, அங்கே போய்விடலாம்.

எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு போவதற்கு இரண்டாவது வழி சற்று தூரமான வழியாகும். இந்த வழியாகப்போனால் வனாந்தரத்தைக் கடந்து கானான் தேசத்திற்குப்போகவேண்டும். கர்த்தரோ தம்முடைய ஜனங்களை தூரம் குறைவான சமீபமான வழியில் அழைத்து செல்லாமல், தூரம் அதிகமானாலும், அவர்களை வனாந்தர வழியாக அழைத்து செல்லுகிறார். இதுவே கர்த்தருக்கு சித்தமான வழியாயிருக்கிறது.

பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து போகவிடுகிறான். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து அணியணியாகப் புறப்பட்டுப்போகிறார்கள். கர்த்தர் அவர்களை வழிநடத்துகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று கர்த்தர் நினைக்கிறார். ஆகையினால் கர்த்தர் அவர்களை பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானாலும், அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் ஜனங்களைச் சுற்றிப் போகப்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப்போகிறார்கள் (யாத் 13:17,18).

இஸ்ரவேல் ஜனத்தாரைத் தேவன் பெலிஸ்தரின் தேசவழியாய் வழிநடத்தவில்லை. அதற்குப் பதிலாகத் சுற்றிப்போகும் வழியைத் தெரிந்தெடுக்கிறார். பார்வோன் இஸ்ரவேலரை மறுபடியும் பிடிக்க வருவான். பெலிஸ்தர் ஒருவேளை பார்வோனுக்கு உதவி புரியலாம் என்பது தேவனுக்குத் தெரியும். எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்தவுடன், அவர்களுக்கு யுத்தம் வந்தால், ஒருவேளை இஸ்ரவேலர்கள் எகிப்திற்கே திரும்பிப் போய்விடலாம் என்று நினைப்பார்கள் (யாத் 13:17-18).

430 வருஷம் அடிமைத்தனத்தில் இருந்தபடியினால், விரோதிகளை எதிர்க்கும் சக்தி அவர்களுடைய உள்ளத்தில் குறைந்து போயிற்று. இந்தச் சூழ்நிலையில் தேவன் அவர்களுக்கு உதவி புரிகிறார். வனாந்தரத்தின் வழியாகவும், செங்கடல் வழியாகவும் தேவன் இஸ்ரவேலரை வழிநடத்திச் செல்கிறார். பெலிஸ்தருடைய தென்பகுதியிலுள்ள சீனாய் தீபகற்பத்திற்கு வழிநடத்துகிறார். செங்கடலுக்கு முன்பாக, இஸ்ரவேலர்கள் போனபோது, அவர்களுடைய வடக்குப் பக்கத்திலும், தெற்குப் பக்கத்திலும் உயர்ந்த பர்வதங்கள் இருக்கின்றன. இஸ்ரவேலர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள். வனாந்தரம் அவர்களை அடைத்துப் போட்டது என்று பார்வோன் நினைக்கிறார் (யாத் 14:3)

இஸ்ரவேலரிடம் ஆயுதங்கள் இருந்ததா என்று தெரியவில்லை. அவர்களுடைய ஆயுதங்களை எகிப்தியர்கள் பறித்துக் கொண்டதற்கான சான்றும் இல்லை. எகிப்தியரின் விரோதிகளிடமிருந்து சில சமயங்களில் இஸ்ரவேலர்கள் அவர்களைப் பாதுகாத்திருக்க வேண்டும். இஸ்ரவேலர் தங்கியிருந்த கோசேன் பள்ளத்தாக்கு எகிப்தின் எல்லைப் பகுதியில் அமைந்திருக்கிறது. ஆகையினால், இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு, புறப்பட்டுப்போகும்போது, யுத்த வீரரைப்போல அணியணியாகப் புறப்பட்டுப் போகிறார்கள். (யாத் 12:51).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் தேசவழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் நடத்துவதற்கு ஒரு சில காரணங்கள் உள்ளன. கர்த்தர் காரணமில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார். கர்த்தர் செய்கிற ஒவ்வொரு காரியமும் அவருடைய பிள்ளைகளின் நன்மைக்கேதுவாகவே இருக்கும்.

எகிப்தியர்களை சிவந்த சமுத்திரத்திலே மூழ்கடிக்கப்பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. இதனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் சுற்றிப்போகப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தவர்கள். அவர்கள் பல சமயங்களில் மோசேக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் முறுமுறுத்திருக்கிறார்கள். அவர்களுடைய மனதிலே மனத்தாழ்மையில்லை. கர்த்தர் அவர்களிடத்திலுள்ள பெருமைகளை நீக்கி, அவர்களை தாழ்த்தவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார்.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" (உபா 8:2).

கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான தேசம். கர்த்தர் அவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்கு முன்பாக, தம்முடைய பிரமாணங்களையும், கற்பனைகளையும் அவர்களுக்கு கொடுக்க விரும்புகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இதுவரையிலும் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தவர்கள். அந்த தேசத்தில் அவர்கள் பார்வோனோடும், எகிப்தியரோடும், உடன்படிக்கை செய்து அவர்களுக்கு அடிமைகளாயிருந்தார்கள். அவர்கள் எகிப்து தேசத்தாரின் பழக்க வழக்கங்களை பின்பற்றி வந்தார்கள்.

கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பலத்த புயத்தினால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார். அவர்கள் இனிமேல் பார்வோனுக்கு அடிமைகளல்ல. இஸ்ரவேல் புத்திரர் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது விடுதலை கிடைத்தாலும், இனிமேலும் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களையும், கற்பனைகளையும் கொடுக்க விரும்புகிறார். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்து, தம்முடைய உடன்படிக்கையை முத்திரையிட விரும்புகிறார். இந்தக் காரியங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்காக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் சுற்றிப்போகப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வழி எப்போதுமே சரியான வழியாக இருக்கும். பெலிஸ்தரின் தேசவழியாய்ப்போவது சமீபமான வழியாக இருந்தாலும், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய்ப்போவது சுற்று வழியாக இருந்தாலும், கர்த்தர் எந்த வழியை தம்முடைய ஜனத்திற்கு தெரிந்தெடுக்கிறாரோ, அந்த வழியே அவர்களுக்கு நலமான வழியாக இருக்கும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், கர்த்தர் நமக்கு நியமிக்கும் வழியாக, நம்முடைய இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும். கர்த்தருடைய வழியே நமக்கு பாதுகாப்பான வழி. அந்த வழியே நமக்கு நல்ல வழி. கர்த்தருடைய வழியே நம்மை இலக்குக்கு நேராக வழிநடத்தி செல்லும். கர்த்தர் காண்பிக்கும் வழியிலே நாம் போகும்போது, கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பும், பராமரிப்பும், ஆதரவும் கிடைக்கும். நாம் அந்த வழியிலே காணாமல் போய்விடமாட்டோம். கர்த்தர் நம்மை முடிவுபரியந்தம் கரம்பிடித்து வழிநடத்துவார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் தேசவழியாய் வழிநடத்தாமலிருப்பதற்கு மேலும் ஒரு காரணமுண்டு. இஸ்ரவேல் புத்திரர் இத்தனை வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தவர்கள். அவர்களுக்கு சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி பழக்கமுமில்லை. அவர்களோடு யுத்தம்பண்ணவும் அவர்கள் ஆயத்தமாயில்லை.

இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தரின் தேசவழியாகப்போனால், அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டியது வரும். இஸ்ரவேல் ஜனத்தார் யுத்தத்தைக் கண்டால் மனம் மடிந்துபோவார்கள் அவர்கள் யுத்தம்பண்ணுவதற்கு பயந்து எகிப்து தேசத்திற்கே திரும்பிப்போய்விடுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஆவி அடிமைத்தனத்தினால் முறிந்துபோய்க்கிடக்கிறது. அவர்கள் இதுவரையிலும் அடிமை வேலைகளை செய்து பழக்கப்பட்டவர்கள். தங்கள் கைகளில் ஆயுதம் ஏந்தி யுத்தம்பண்ணும் பயிற்சி அவர்களுக்கு இதுவரையிலும் கிடைக்கவில்லை. திடீரென்று யுத்தம் வந்தால், இஸ்ரவேல் புத்திரர் பயந்துவிடுவார்கள். அவர்களுக்கு ஆயுதம் ஏந்தி யுத்தம்பண்ண தெரியாததினால், அவர்கள் பெலிஸ்தியரிடத்தில் தோற்றுப்போவார்கள்.

பெலிஸ்தர்கள் பலசாலிகள். அவர்கள் ஏராளமான யுத்தங்களை சந்தித்தவர்கள். யுத்தங்களில் வெற்றி பெற்றவர்கள். அவர்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரால் எதிர்த்து நிற்கமுடியாது. இதுவரையிலும் யுத்தம்பண்ணியே பழக்கமில்லாத இஸ்ரவேல் புத்திரரால், யுத்தத்தில் பயிற்சி பெற்ற பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது என்பது கர்த்தருக்கு தெரியும்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஒவ்வொரு காரியத்திலும் பயிற்சி கொடுக்கிறார். எல்லா பயிற்சிகளையும் ஒரே வேளையில் கொடுக்க முடியாது. கழுகு தன்னுடைய குஞ்சுகளுக்கு ஒவ்வொரு பயிற்சியாகக் கொடுப்பதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒவ்வொரு பயிற்சியாகக் கொடுத்து, அவர்களை எகிப்து தேசத்திற்கு வெளியே அழைத்து வந்திருக்கிறார்.

"கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்" (உபா 32:11,12).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு பெலிஸ்தரின் தேசவழியாய்ப்போவது சமீபமான வழியாகயிருந்தாலும், அது குழப்பமான வழியாகவும், ஆபத்தான வழியாகவும் இருக்கிறது. கர்த்தர் குழப்பத்தின் தேவனல்ல. ஆகையினால் கர்த்தர் தம்முடைய ஜனத்தை குழப்பமான வழியாக வழிநடத்தவில்லை.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நல்ல வழியை கட்டளையிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாகப் புறப்பட்டுப்போகிறார்கள். மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போகிறார் (யாத் 13:19).

யோசேப்பு, தான் மரிப்பதற்கு முன்பாகவே, தன்னுடைய எலும்புகளை எகிப்து தேசத்திலே அடக்கம்பண்ணக்கூடாது என்றும், அதை கானான் தேசத்திலே அடக்கம்பண்ணவேண்டும் என்றும் சொல்லியிருந்தார்.

"யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணமடையப்போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார்" என்றும்,

"தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக" என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொண்டார் (ஆதி 50:24,25).

யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவராய் மரித்தார். அவருக்குச் சுகந்தவர்க்கமிட்டு, எகிப்து தேசத்தில் அவரை ஒரு பெட்டியிலே வைத்துவைத்தார்கள்" (ஆதி 50:26).

யோசேப்பு தன்னுடைய சகோதரரிடத்தில் சொன்ன வார்த்தைகள், பிற்காலத்தில் மோசேக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மோசே எகிப்து தேசத்திலுள்ள யோசேப்பின் எலும்புகளை, தன்னோடேகூட எடுத்துக் கொண்டு, எகிப்து தேசத்தைவிட்டு கானான் தேசத்தை நோக்கி புறப்பட்டுப்போகிறார்.

யோசேப்பின் எலும்புகளுக்கு கானான் தேசத்திலே இளைப்பாறுதல் கிடைக்கும்போது, தங்களுக்கும் அந்த தேசத்திலே இளைப்பாறுதல் கிடைக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்புகிறார்கள். தங்கள் நம்பிக்கைக்கு அடையாளமாக அவர்கள் யோசேப்பின் எலும்புகளை கானான் தேசத்திற்கு கொண்டு போகிறார்கள்.

அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயமிறங்குகிறார்கள் (யாத் 13:20).

## மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் யாத் 13:21,22

**யாத் 13:21. அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.**

**யாத் 13:22. பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகும்போது கர்த்தர் அவர்களுக்கு முன் செல்கிறார். நித்திய வார்த்தையாகிய தேவனுடைய ஷேக்கைனா மகிமை அவர்களுக்கு முன்பாக பிரத்தியட்சமாய் முன்செல்கிறது. காலம் நிறைவேறியபோது, நித்திய வார்த்தையானவர் மாம்சமாகி, நம் மத்தியிலே வாசமானார்.

இஸ்ரவேல் சபையார் வனாந்தரத்திலிருந்தபோது கிறிஸ்துவானவர் அவர்களோடு கூடயிருந்தார். "அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக" (1கொரி 10:9).

கர்த்தர் நம்மை வனாந்தரத்தின் அனுபவத்திற்கு அழைத்து வந்தாலும், கர்த்தருடைய தெய்வீக பிரசன்னம் அங்கேயும் நம்மோடு கூடயிருக்கும். கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். நாமும் கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து காணாமல் போய்விடமாட்டோம். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தர பாதையின் வழியாக கானான் தேசத்திற்கு போகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் அந்த வனாந்தரத்தின் வழியாக, அவர்களுக்கு முன்சென்று, அவர்களை பாதுகாப்பாய் வழிநடத்துகிறார்.

நம்முடைய ஜீவியத்தை கர்த்தருடைய வார்த்தை ஆளுகை செய்ய வேண்டும். கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்தவேண்டும். நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் கர்த்தருடைய மகிமையை நாடவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய ஜீவியத்தின் எல்லா பகுதிகளிலும், நம்மோடுகூடயிருப்பார் என்றும், அவர் நமக்கு முன்சென்று நம்மை வழிநடத்துவார் என்றும், நாம் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கலாம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மையும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் வழிநடத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பத்தையும், அக்கினிஸ்தம்பத்தையும் பிரத்தியட்சமாய்ப் பார்த்தார்கள்.

இக்காலத்தில் நாம் மேகஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் பிரத்தியட்சமாய்க் காணாவிட்டாலும் கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கிறது என்பதையும், கர்த்தர் நம்மை வழிநடத்துகிறார் என்பதையும் விசுவாசிக்கவேண்டும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே இரவும் பகலும் வழிநடக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் செல்கிறார். பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை (யாத் 13:21,22).

கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் செல்கிறார். இது தேவனுடைய தூதனானவரின் வாசஸ்தலமும் வெளிப்பாடும் ஆகும். (யாத் 14:19; யாத் 32:34). பகலின் வெயிலிலிருந்து இஸ்ரவேலரைப் பாதுகாப்பதற்காக மேகஸ்தம்பத்திலும், இரவின் இருட்டிலிருந்து இஸ்ரவேலர் தங்கும் பாளயங்களுக்கு வெளிச்சம் கொடுப்பதற்காக அக்கினிஸ்தம்பத்திலும் தேவன் அவர்களுக்கு முன்செல்கிறார் (சங் 105:39; எண் 9:16-18).

பகல்வேளையிலே சூரியவெளிச்சம் அதிகமாயிருக்கும்போது, வெயிலின் உஷ்ணம் அவர்கள்மீது அதிகமாய்த் தாக்கும்போது, கர்த்தருடைய பிரசன்னம் அவர்கள்மீது மேஸ்தம்பமாக வந்து வழிநடத்துகிறது. இஸ்ரவேல் புத்திரர் இரவுவேளையிலே வனாந்தரத்தின் வழியாக நடக்கும்போது அவர்களுக்கு வெளிச்சம் தேவைப்படுகிறது. கர்த்தருடைய பிரச்சன்னம் அந்த இரவு வேளையிலே அக்கினி ஸ்தம்பமாக வெளிப்படுகிறது. அக்கினி ஸ்தம்பம் இஸ்ரவேல் புத்திரருக்கு இரவின் இருளை நீக்கி, வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், மனதுருக்கத்தினாலும், தம்முடைய தெய்வீக பிரசன்னத்தை அவர்கள் மத்தியிலே வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் வானத்திலே மேகஸ்தம்பத்தையும் அக்கினி ஸ்தம்பத்தையும் பார்க்கும்போது, கர்த்தருடைய பிரசன்னம் தங்களுக்கு முன்செல்கிறது என்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

சிவந்த சமுத்திரத்தின் வனாந்தரத்திலே சாலை வசதியோ, பாதையோ இல்லை. அந்த வனாந்தரத்தில் போகவேண்டிய பாதைகளைக் குறிப்பதற்கு அவர்களிடத்தில் வரைபடமும் இல்லை. இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே வனாந்தரத்திற்கு புதியவர்கள். அவர்களில் ஒருவருக்கும் வனாந்தர பாதையில் பழக்கமில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ண அவர்களுக்கு கர்த்தருடைய உதவி தேவைப்படுகிறது. கர்த்தர் அவர்களை வழிநடத்துவதற்காக, அவர்களுக்கு முன்செல்கிறார். கர்த்தரே அவர்களுக்கு வழிகாட்டியாயிருக்கிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பம் பகலிலே அவர்களுக்கு நிழலைக் கொடுக்கிறது.

கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான அக்கினி ஸ்தம்பம் இரவிலே அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அவர்களால் இரவும் பகலும் வனாந்தரத்திலே பிரயாணம் பண்ண முடிகிறது. பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினி ஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான இந்த அற்புதம், இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக எப்போதும் பிரத்தியட்சமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விட்டு விலகிப்போகவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்தின் எல்லைகளுக்கு சமீபமாக அழைத்து வருகிறார். வானத்திலே பலத்த காற்று வீசினாலும், அந்த புயல்காற்று மேகஸ்தம்பத்தை சேதப்படுத்தவில்லை. எவ்வளவு பெரிய சுழல்காற்றாகயிருந்தாலும், அந்தக் காற்றால் மேகஸ்தம்பத்தை கலைக்க முடியவில்லை.

வேதபண்டிதர்கள் அக்கினி ஸ்தம்பத்திற்கும், மேகஸ்தம்பத்திற்கும் ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். இது கிறிஸ்துவுக்கு அடையாளம் என்பது அவர்கள் சொல்லுகிற வியாக்கியானம். கிறிஸ்துவானவர் மாம்சத்தில் வெளிப்பட்டபோது, அவருடைய தெய்வீக வெளிச்சத்திற்கு மேகம் ஒரு திரைச்சீலையைப்போல இருக்கிறது என்றும், அவருடைய தெய்வீக சுபாவத்திற்கு அக்கினியானது ஒரு திரைசீலைப்போல இருக்கிறது என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துவே நமக்கு வழியாகவும், நம்முடைய பாதைக்கு தீபமாகவும், நம்மை வழிநடத்துகிறவராகவும் இருக்கிறார். "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொன்ன இயேசுகிறிஸ்துவானவர், வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரோடு, அக்கினி ஸ்தம்பமாகவும், மேஸ்தம்கபமாகவும் கூடயிருந்து, அவர்களுக்கு முன்சென்று அவர்களை வழிநடத்துகிறார்.

## 14 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப்போகிறார்கள். யூதருடைய சபை பிறக்கிறது. அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட சம்பவம், இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்திலே மிகவும் முக்கியமானது.

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர், இந்த சம்பவத்தை மொத்தமாக தொகுத்து இவ்வாறு சொல்லுகிறார். "விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்துபோனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து அமிழ்ந்துபோனார்கள்" (எபி 11:29).

இஸ்ரவேல் புத்திரருக்கு சிவந்த சமுத்திரத்திலே மிகப்பெரிய ஆபத்து உண்டாயிற்று. கர்த்தர் இதுபற்றிய காரியங்களை தெளிவாகச் சொல்லுகிறார் (யாத் 14:1-4).

பார்வோன் தன்னுடைய ஜனத்தைக் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வருகிறான் (யாத் 14:5-9). இஸ்ரவேல் புத்திரரோ எகிப்தியர் தங்களுக்கு பின்னே வருகிறதைக் கண்டு பயப்படுகிறார்கள். அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள் (யாத் 14:10-12). மோசே இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருடைய நாமத்தினால் உற்சாகப்படுத்துகிறார் (யாத் 14:13,14).

கர்த்தர் தம்முடைய ஜனத்தை, அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து அற்புதமாய் விடுவிக்கிறார். கர்த்தர் இதுபற்றிய காரியங்களை மோசேயினிடத்தில் விரிவாகச் சொல்லுகிறார் (யாத் 14:15-18).

கர்த்தருடைய வல்லமையினால், எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் ஒன்றோடொன்று சேரமுடியவில்லை. கர்த்தருடைய பிரசன்னம் இரண்டு சேனைகளுக்கும் நடுவிலே இருக்கிறது (யாத் 14:19,20).

கர்த்தர் சிவந்த சமுத்திரத்தை ஒதுங்கும்படி செய்கிறார். சமுத்திரத்தின் ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று (யாத் 14:21). இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோகிறார்கள் (யாத் 14:22,29).

எகிப்தியர்களும் இஸ்ரவேல் புத்திரரைத் தொடர்ந்து அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசிக்கிறார்கள். கர்த்தர் எகிப்தியரின் சேனையை கலங்கப்பண்ணுகிறார் (யாத் 14:23-25). கர்த்தர் எகிப்தியரை கடலின் நடுவே கவிழ்த்துப்போடுகிறார். கடல் பார்வோனையும் அவனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொள்கிறது. அவர்கள் எல்லோரும் சிவந்த சமுத்திரத்திலே செத்துப்போகிறார்கள் (யாத் 14:26-28).

எகிப்தியர் கடற்கரையிலே செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் காண்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பயந்து, கர்த்தரிடத்திலும், மோசேயினிடத்திலும் விசுவாசம் வைக்கிறார்கள் (யாத் 14:30,31).

### இஸ்ரவேலரின் பிரயாணம்
### யாத் 14:1-9

**யாத் 14:1. கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 14:2. நீங்கள் திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு; அதற்கு எதிராகச் சமுத்திரக்கரையிலே பாளயமிறங்குவீர்களாக.**

**யாத் 14:3. அப்பொழுது பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து: அவர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள்; வனாந்தரம் அவர்களை அடைத்துப்போட்டது என்று சொல்லுவான்.**

**யாத் 14:4. ஆகையால் பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு, நான் அவன் இருதயத்தைக் கடினப் படுத்தி, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறியும்படி, பார்வோனாலும் அவனுடைய எல்லா ராணுவத்தாலும் மகிமைப்படுவேன் என்றார்; அவர்கள் அப்படியே செய்தார்கள்.**

**யாத் 14:5. ஜனங்கள் ஓடிப்போய்விட்டார்கள் என்று எகிப்தின் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்ட போது, ஜனங்களுக்கு விரோதமாகப் பார்வோனும் அவன் ஊழியக்காரரும் மனம் வேறுபட்டு: நமக்கு வேலை செய்யாதபடிக்கு நாம் இஸ்ரவேலரைப் போகவிட்டது என்ன காரியம் என்றார்கள்.**

**யாத் 14:6. அவன் தன் இரதத்தைப்பூட்டி, தன் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு,**

**யாத் 14:7. பிரதானமான அறுநூறு இரதங்களையும், எகிப்திலுள்ள மற்ற சகல இரதங்களையும், அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக்கொண்டு போனான்.**

**யாத் 14:8. கர்த்தர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான், இஸ்ரவேல் புத்திரர் பலத்த கையுடன் புறப்பட்டுப் போனார்கள்.**

**யாத் 14:9. எகிப்தியர் பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் அவனுடைய குதிரைவீரரோடும் சேனைகளோடும் அவர்களைத் தொடர்ந்துபோய், சமுத்திரத்தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள்.**

இஸ்ரவேல் புத்திரர் எந்த வழியாகப் பிரயாணம்பண்ணவேண்டும் என்றும், அவர்கள் எங்கே பாளயமிறங்கவேண்டும் என்றும், கர்த்தர் அவர்களுக்கு மோசேயின் மூலமாக கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு; அதற்கு எதிராகச் சமுத்திரக்கரையிலே பாளயமிறங்குவீர்களாக" *(யாத் 14:1,2)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ராமசேசிலிருந்து பிரயாணம்பண்ணி ஈரோத் பள்ளத்தாக்குக்கு வருகிறார்கள். அவர்கள் இதுவரையிலும் மேற்கொண்ட பிரயாணத்தின் விவரம் வருமாறு :

1. சுக்கோத்து - இஸ்ரவேலர்கள் இங்கு பாளயமிறங்கியிருந்தார்கள் *(யாத் 12:37; யாத் 13:20)*

2. ஏத்தாம் - இது எகிப்தின் கோட்டை. இங்கு எகிப்தியர் தங்களுடைய சூரிய தெய்வத்தை ஆராதனை செய்தார்கள். *(யாத் 13:20)*

3. ஈரோத் பள்ளத்தாக்கு. இது மிக்தோலுக்கு அருகில் செங்கடல் பகுதியிலுள்ள பள்ளத்தாக்கு. ஆசியாவிலிருந்து எகிப்தைப் பாதுகாக்கும் அரணான பகுதி. இந்தப் பகுதி பாகால்செபோனுக்கு அருகில் உள்ளது. எகிப்தியருடைய புராணத்தின் பிரகாரம் தைப்போன் என்னும் தெய்வத்திற்கு இங்கு ஒரு கோவில் உள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவோ, மோசேக்கு விரோதமாகவோ இப்போது முறுமுறுக்கவில்லை. அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய கிருபையிலும், வழிநடத்துதலிலும் திருப்தியோடிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தி சுக்கோத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார் *(யாத் 12:37)*. அதன் பின்பு அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள் *(யாத் 13:20)*.

ஏத்தாம் ஒரேபுக்கு அருகாமையிலிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஏத்தாமிலிருந்து இன்னும் சிறிது தூரம் பிரயாணம் செய்தால், ஒரேபுக்கு வந்து சேர்ந்துவிடலாம். இந்த ஸ்தலத்தில்தான் இஸ்ரவேல் புத்திரர் தமக்கு ஆராதனை செய்யவேண்டும் என்று, கர்த்தர் நியமித்திருக்கிறார்.

கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரை ஏத்தாமிலிருந்து ஒரேபுக்கு வழிநடத்தவில்லை. அதற்கு பதிலாக கர்த்தர் அவர்களை மிக்தோலுக்கு வழிநடத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது கானான் தேசத்தை நோக்கி முன்னேறிப்போகாமல், திரும்பி, வேறு வழியிலே மிக்தோலுக்கு போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலிருந்து தென்திசையில் பிரயாணம்பண்ணி, சிவந்த சமுத்திரத்திற்கு நேராக போகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, இஸ்ரவேல் புத்திரரை ஏத்தாமிலிருந்து ஒரேபுக்கு வழிநடத்தாமல் அவர்களை அங்கே இருந்து சிவந்த சமுத்திரத்திற்கு நேராக வழிநடத்துகிறார்.

பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடவேண்டும் என்று திட்டம்பண்ணுகிறான். கர்த்தரோ பார்வோனை அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். கர்த்தருடைய திட்டம் மோசேக்கு தெரிந்திருக்கவேண்டும். அது மாத்திரமல்ல, பார்வோனுடைய சதித்திட்டமும் மோசேக்கு தெரிந்திருக்கவேண்டும்.

பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து, "அவர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள்; வனாந்தரம் அவர்களை அடைத்துப்போட்டது" என்று சொல்லுகிறான் (யாத் 14:3). பார்வோன் இவ்வாறு சொல்லுவான் என்பதை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் பார்வோனை அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கிறார். கர்த்தர் பார்வோனுக்கு விரோதமான தம்முடைய சித்தத்தையும் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு, நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்தி, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறியும்படி, பார்வோனாலும் அவனுடைய எல்லா ராணுவத்தாலும் மகிமைப்படுவேன்" (யாத் 14:4) என்று சொல்லுகிறார்.

பார்வோனும் எகிப்தியரும் கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாகவே செய்கிறார்கள். கர்த்தர் மனுஷருடைய நினைவுகளை அறிந்திருக்கிறார். பார்வோன் என்ன நினைக்கிறான் என்பதும், அவன் என்ன செய்யப்போகிறான் என்பதும் கர்த்தருக்கு தெரிந்திருக்கிறது. சத்துருக்களுடைய சதிஆலோசனைகளை கர்த்தர் மோசேக்கு தெரியப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஓடிப்போய்விட்டார்கள் என்று எகிப்தின் ராஜாவுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாகப் பார்வோனும் அவன் ஊழியக்காரரும் மனம் வேறுபடுகிறார்கள். எகிப்தியர்கள் தங்களுக்குள்ளே, "நமக்கு வேலை செய்யாதபடிக்கு நாம் இஸ்ரவேலரைப் போகவிட்டது என்ன காரியம்" (யாத் 14:5) என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

பார்வோன் இஸ்ரவேல் புத்திரை பழிவாங்கவேண்டும் என்றும், அவர்களை அழித்துப்போடவேண்டும் என்றும் திட்டமிடுகிறான். பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் இஸ்ரவேல் புத்திரர்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. கர்த்தர் பார்வோனுடைய திட்டத்தையும் அவனுடைய கோபத்தையும், அவனுக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, பார்வோனுடைய திட்டத்தையே அவனுக்கு விரோதமாக செயல்படுத்துகிறார்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் எகிப்தியர்கள் பார்வோனிடத்தில் வந்து, "இஸ்ரவேல் ஜனங்கள் ஓடிப்போய்விட்டார்கள்" என்று அறிவிக்கிறார்கள். கர்த்தர் பார்வோனுடைய மனதிலே கிரியை நடப்பிக்கிறார். பார்வோனுடைய மனது இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக எழும்புகிறது.

பார்வோனும், எகிப்தியரும் இஸ்ரவேல் ஜனங்களை, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகுமாறு துரிதப்படுத்தினார்கள். ஆனால் இப்போதோ அவர்கள், "நமக்கு வேலை செய்யாதபடிக்கு நாம் இஸ்ரவேலரை போகவிட்டது என்ன காரியம்" என்று சொல்லி தங்கள்மீதே கோபப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதினால், எகிப்தியருக்கு ஆதாயம் குறைந்துபோயிற்று. இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியருக்கு அடிமை வேலைகளை செய்தார்கள். இப்போது எகிப்தியருக்கு வேலை செய்ய ஆட்கள் இல்லை. எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கி வேலை வாங்கினார்கள். அவர்களை ஒடுக்குவதே எகிப்தியருக்கு ஆனந்தமாயிருந்தது. இப்போது எகிப்தியர் தங்கள் ஆனந்தத்தையும், சந்தோஷத்தையும் இழந்துபோனார்கள்.

கர்த்தருடைய ஜனத்திற்கு விடுதலை கிடைக்கும்போது சத்துருக்கள் அதற்காக துக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் சந்தோஷமாயிருப்பதைப் பார்த்து, அவர்களுடைய சத்துருக்கள் மனம் வேதனைப்படுகிறார்கள்.

"பின்னையும் ஆமான்: ராஜஸ்திரீயாகிய எஸ்தரும் தான் செய்த விருந்துக்கு ராஜாவுடனேகூட என்னைத்தவிர வேறொருவரையும் அழைக்கவில்லை; நாளைக்கும் ராஜாவுடனேகூட நான் விருந்துக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறேன். ஆனாலும் அந்த யூதனாகிய மொர்தெகாய் ராஜாவின் அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிறதை நான் காணுமளவும் அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லையென்றான்" (எஸ் 5:12,13).

"அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்" (அப் 5:17,18).

சேவகர் போய், சிறைச்சாலையிலே அவர்களைக் காணாமல், திரும்பிவந்து: சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள் (அப் 5:22,23).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போவதற்கு, எகிப்தியர்களும் சம்மதம் தெரிவித்தார்கள். அவர்களைப் போகவிட்டதற்காக இப்போது எகிப்தியர்கள் வருத்தப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய செய்கைகளை நினைத்து மனம் வேதனைப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் மீதே கோபப்படுகிறார்கள்.

கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக சத்துருக்கள் கோபப்படுகிறார்கள். பொறாமைப்படுகிறார்கள். சத்துருக்களின் கோபத்தினாலும் பொறாமையினாலும் கர்த்தருடைய ஜனத்திற்கு பாதிப்பு ஏற்படாது. சத்துருக்களின் கோபமும் பொறாமையும் அவர்களையே வேதனைப்படுத்தும்.

"துன்மார்க்கன் அதைக்கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்; துன்மார்க்கருடைய ஆசை அழியும்" (சங் 112:10).

பார்வோன் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரரை கைதுபண்ணி, மறுபடியும் தன்னுடைய தேசத்திற்கு இழுத்துக்கொண்டு வரவேண்டும் என்று தீர்மானத்தோடிருக்கிறான். அதற்காக அவன் தன் இரதத்தைப்பூட்டி, தன் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு, பிரதானமான அறுநூறு இரதங்களையும், எகிப்திலுள்ள மற்ற சகல இரதங்களையும், அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக்கொண்டு போகிறான் (யாத் 14:6,7).

கர்த்தர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார். அதனால் அவன் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடருகிறான். கர்த்தர் பார்வோனையும் அவனுடைய சேனையையும் மொத்தமாய் அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானத்தோடிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் பாதுகாக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவதினாலும், எகிப்தியர்கள் அழிக்கப்படுவதினாலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்.

கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவும், எகிப்தியர்கள் கர்த்தருடைய மகத்துவத்தையும், மகிமையையும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவும், பலத்த கிரியைகளை நடப்பிக்கிறார். கர்த்தர் தம்முடைய திட்டத்தை மோசேக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன். இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள்" (யாத் 14:17,18) என்று சொல்லுகிறார்.

பார்வோனை மாத்திரம் அழித்தால் போதாது. அவனோடுகூட அவனுடைய குதிரைவீரரையும், இரதவீரர்களையும் அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. தன்னிடத்தில் ஏராளமான குதிரைகளும், இரதங்களும் இருப்பதைப் பார்த்து பார்வோன் தன்னுடைய இருதயத்தில் மனமேட்டிமையாயிருக்கிறான். பார்வோனை தாழ்த்தவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஏத்தாமிலிருந்து புறப்பட்டுப்போய், ஈரோத் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்குகிறார்கள். எகிப்தியர் பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் அவனுடைய குதிரைவீரரோடும் சேனைகளோடும் அவர்களைத் தொடர்ந்துபோகிறார்கள். எகிப்தியர்கள் சமுத்திரத்தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டுகிறார்கள் (யாத் 14:9).

பார்வோன் தன்னுடைய சேனையுடன் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வருகிறான். எகிப்தியருடைய சேனை பலமுள்ளதாயிருக்கிறது. அந்த சேனையின் விவரம் வருமாறு :

1. பார்வோன் - படைத்தலைவன்

2. பார்வோனின் பிரபுக்கள் - பார்வோனின் உறவினர்களாக இருக்கலாம். இவர்கள் படைத்தளபதிகளாக இருக்கிறார்கள்.

3. அறுநூறு இரதங்கள் - பார்வோனுடைய பாதுகாவலர்கள். இவர்கள் எகிப்தில் பிரதானமானவர்கள் (யாத் 14:7).

4. எகிப்தின் சகல இரதங்களும் அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரர்களும். (யாத் 14:7,9).

யோசபஸ் என்னும் வரலாற்று ஆசிரியர் பார்வோனின் சேனையைப் பற்றி எழுதியிருக்கிறார். பார்வோனுடைய சேனையில் 50,000 குதிரைவீரர்களும், இரண்டு லட்சம் காலாட்படையினரும் இருந்தார்களாம்.

எகிப்தியரின் சேனை இஸ்ரவேல் புத்திரரை கிட்டிச்சேருகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் ராமசேசை விட்டுப் புறப்பட்டு, ஒருவாரமாயிற்று. அவர்கள் ஏத்தாமிலிருந்து 2 அல்லது 3 நாட்கள் பிரயாணம் செய்திருக்க வேண்டும். இப்பொழுது அவர்கள் செங்கடலுக்கு அருகில் வந்துவிடுகிறார்கள். இதற்கு மேல் அவர்களால் பிரயாணம் பண்ண முடியாது. எகிப்தியரும், இஸ்ரவேலரைத் தொடர்ந்துபோய், அவர்களுக்கு அருகில் வந்துவிடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தேவனுடைய திட்டம் என்ன என்பது மோசேக்கு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் வானத்தில் காணப்படுகிற மேஸ்தம்பத்தையும் அக்கினி ஸ்தம்பத்தையும் பார்த்துக்கொண்டு பிரயாணம்பண்ணுகிறார்கள். எகிப்தியர்களோ தங்களுடைய குதிரைகளையும், இரதங்களையும் பார்த்துக்கொண்டு இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து போகிறார்கள். கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள், பரலோகத்தின் தேவனை நோக்கிப் பார்த்து, தங்கள் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்வார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் சாத்தான் நமக்கு பலவிதமான சோதனைகளைக் கொடுப்பான். அவன் நம்மை பயமுறுத்துவான். நாமோ சாத்தானை நோக்கிப் பார்க்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையே நோக்கிப் பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்துவுக்குள்ளே நாம் பயபக்தியாயும் பரிசுத்தமாயும் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவானவர் நம்முடைய கரங்களைப் பற்றிக்கொண்டு நம்மை வழிநடத்துகிறார். நாமோ அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவரோடுகூட நடக்கவேண்டும்.

"அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான்" *(மாற் 9:25,26).*

இதுவே பிசாசின் சுபாவம். பிசாசு நம்மைவிட்டுப் புறப்பட்டுப்போகும்போது, அமைதியாக புறப்பட்டுப்போகமாட்டான். அவன் நம்மை மிகவும் அலைக்கழித்துப்போட்ட பின்பே, நம்மை விட்டுப் புறப்பட்டுப்போவான்.

## இஸ்ரவேல் புத்திரரின் பயம்
## யாத் 14:10-14

**யாத் 14:10. பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.**

**யாத் 14:11. அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால் எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன?**

**யாத் 14:12. நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலைசெய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்.**

**யாத் 14:13. அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.**

**யாத் 14:14. கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.**

பார்வோன் தன்னுடைய குதிரைகளோடும் இரதங்களோடும், குதிரைவீரரோடும், சேனைகளோடும் இஸ்ரவேல் புத்திரரை கிட்டிச்சேருகிறான். இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். பார்வோன் தங்களுக்கு சமீபமாய் வருகிறதை, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்து பார்க்கிறார்கள். எகிப்தியர்கள் தங்களுக்கு பின்னே வருகிறதைப் பார்க்கும்போது இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் பயமுண்டாயிற்று *(யாத் 14:10).*

இஸ்ரவேல் புத்திரருக்கு பார்வோனுடைய பலமும், தங்களுடைய பலவீனமும் நன்றாய்த் தெரியும். பார்வோன் மிகவும் கொடியவன். அவன் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலே அடிமைப்படுத்தி துன்பப்படுத்தினவன். பார்வோனுடைய துர்க்குணத்தையும், கடின இருதயத்தையும் இஸ்ரவேல் புத்திரர் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் பார்வோனும் அவனுடைய சேனையும் தங்களுக்கு பின்னே வருகிறதைக் கண்டு இஸ்ரவேல் புத்திரர் பயப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரால் பார்வோனுக்கு தப்பித்து ஓடமுடியவில்லை. அவர்கள் ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். ஈரோத் என்பது உயர்ந்த மலைப்பகுதி. மற்றொரு பக்கத்தில் மித்தோலும், பாகால் செபோனும் இருக்கிறது. இதுவும் உயர்ந்த மலைப்பகுதி. அவர்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரம் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு பின்பாக பார்வோனும் அவனுடைய சேனைகளும் வருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரால் மலைகளைத் தாண்டியும் போகமுடியாது. சமுத்திரத்தைத் தாண்டியும் போகமுடியாது. இவை இரண்டுமே அவர்களுக்கு இயற்கையான தடைகளாய் இருக்கிறது. மற்றொரு பக்கத்திலோ பார்வோனும் அவனுடைய சேனையும் வருகிறார்கள். தங்கள் சுயமுயற்சியினாலோ, சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தப்பித்துப் போவதற்கான எல்லா பாதைகளும் அடைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பரலோகத்திலுள்ள தேவனை நோக்கிப் பார்க்கும் பாதை மாத்திரமே திறந்திருக்கிறது. ஈரோத் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு பரத்திலிருந்து மாத்திரமே உதவி வரும். வேறு எந்த திசையிலிருந்தும் உதவி வருவதற்கு வாய்ப்பு இல்லை.

இஸ்ரவேல் புத்திரர் ஈரோத் பள்ளத்தாக்கிலே மிகப்பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்கிறார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் சிலர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள் (யாத் 14:10). அவர்களுடைய இருதயத்தில் ஏற்பட்ட பயம், அவர்களை கர்த்தருக்கு முன்பாக ஜெபம்பண்ண வழிநடத்துகிறது.

கர்த்தர் சில சமயங்களில் நம்மையும் இதுபோன்ற நெருக்கத்திலே வழிநடத்துவார். நம்முடைய முழங்கால்களில் நின்று நாம் கர்த்தரை நோக்கி கூப்பிடவேண்டும் என்பதே அவருடைய சித்தம். இதற்காகவே கர்த்தர் சில சமயங்களில் நமக்கு நெருக்கங்களையும், கஷ்டங்களையும், பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுமதிக்கிறார். நமக்கு நெருக்கம் வரும்போது கர்த்தரை நோக்கி கூப்பிடுவது மிகவும் நல்லது. இஸ்ரவேல் புத்திரரில் சிலர், இந்த சூழ்நிலையில் கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறார்கள்.

ஆனாலும் அவர்களில் வேறு சிலரோ மோசேயை நோக்கி கூக்குரலிடுகிறார்கள். அவர்களுடைய மனதில் ஏற்பட்ட பயம் முறுமுறுப்பாய் மாறிற்று. அவர்கள் மோசேயை நோக்கி, "எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால் எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன?" என்றும்,

"நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலைசெய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே" (யாத் 14:11,12) என்றும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயிடம் பன்னிரண்டு முறை முறுமுறுத்தார்கள் (யாத் 5:19) அவற்றில் இது இரண்டாவது முறுமுறுப்பாகும்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நோக்கி "எங்களைச் சும்மா விட்டுவிடும்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேலருக்குத் தோல்வி ஏற்படாது. ஏனெனில் அவர்களுடைய முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரோடு தேவன் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இஸ்ரவேலர் தோற்றுப்போனால், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்னும் குற்றச்சாட்டு தேவன்மீது வரும். தேவன் நீதியுள்ளவர். இரக்கமுள்ளவர். அவர் தம்முடைய வார்த்தையைப் பாதுகாத்துக் கொள்கிறவர்.

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கு எதிராக முறுமுறுத்த போதிலும், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவராக இருக்கிறார். எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று இஸ்ரவேலர்கள் முறையிட்டாலும், தேவன் அவர்களைச் சும்மா விட்டுவிடமாட்டார். அவர்களுடைய முற்பிதாக்களுக்குத் தேவன் ஏற்கெனவே வாக்குத்தத்தம் பண்ணியிருந்த கானான் தேசத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வார். தேவன் எகிப்து தேசத்தில் பல அற்புதங்களை நடப்பித்தார். இவற்றையெல்லாம் கண்டபின்புகூட, தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய இருதயத்தில் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை.

இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் சாகிறது தேவனுடைய சித்தமல்ல. மனுஷன் சூழ்நிலைகளை மட்டுமே பார்க்கிறான். தாங்கள் பிழைப்பதற்கு வேறு வழியில்லை என்று, இஸ்ரவேலர்கள் நினைத்திருக்கலாம். இதுவரையிலும் தேவன் தங்களை அற்புதமாக வழிநடத்தி வந்த காரியங்களை இஸ்ரவேல் ஜனத்தார் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்கள் கர்த்தரையும் நம்பவில்லை, மோசேயையும் நம்பவில்லை. கர்த்தர் பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, இங்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, எகிப்தியருக்கு வேலை செய்கிறது தங்களுக்கு நலமாயிருக்கும் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால் எங்களுக்கு இப்படி செய்தது என்ன" என்று கேட்கிறார்கள்.

மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்கள், தாங்கள் விடுதலை பெற்றதற்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தை விரும்புகிறார்கள். அவர்கள் எகிப்தியருக்கு அடிமை வேலை செய்ய ஆசைப்படுகிறார்கள். தங்களுக்கு சிறிய பிரச்சனை வந்தவுடனே, இந்தப் பிரச்சனையிலிருந்து தப்பிப்பதற்கு, தங்களுடைய பழைய ஜீவியத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள்.

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு பயப்படாமல் போனதினால், பார்வோனுக்கும் அவனுடைய சேனைக்கும் பயப்படுகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருந்தால், இந்த வனாந்தரத்திலே கர்த்தருடைய பிள்ளைகளாக, சுயாதீனத்தோடும், சுதந்தரமாகவும், அடிமைத்தனமில்லாமலும் மரித்துப்போவதையே தெரிந்தெடுப்பார்கள்.

மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிற இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே கர்த்தர்மீது விசுவாசமுமில்லை, அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. அவர்கள் கர்த்தரோடு சரியான ஐக்கியத்தில் இருப்பார்களென்றால், அவர்கள் எகிப்தியருக்கு வேலை செய்கிறதைப் பார்க்கிலும், இந்த வனாந்தரத்தில் சாகிறது தங்களுக்கு நலமாயிருக்கும் என்று சொல்லுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே நன்றி உணர்வு இல்லை. அவர்களை விடுவிப்பதற்காக மோசே உண்மையாய் பாடுபட்டார். அவர் எகிப்து தேசத்திலே பார்வோனுக்கு முன்பாக, கர்த்தருடைய கருவியாக செயல்பட்டார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். "எங்களை வனாந்தரத்திலே சாகும்படி ஏன் கொண்டு வந்தீர்" என்றும், "எங்களை எகிப்திலிருந்து ஏன் புறப்படப்பண்ணினீர்" என்றும் கேட்கிறார்கள்.

பார்வோன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுவிப்பதற்கு முன்பாக, அவனுடைய இருதயம் கடினப்பட்டது. கர்த்தர் அந்த தேசத்தின்மீது ஒவ்வொரு வாதையாக வரப்பண்ணினார். எகிப்தியர்கள் வாதைகளின் வேதனைகளை அனுபவித்தாலும், அந்த வாதைகள் முடிந்தபோது, அவர்களுக்கு இலகு உண்டாயிற்று. அப்போது அவர்கள் வாதைகளையும், வாதைகளை அனுப்பின கர்த்தரையும் மறந்துவிட்டார்கள்.

எகிப்தியர்கள் கர்த்தர் அனுப்பின வாதைகளை மறந்ததுபோல, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் தங்களுக்கு அனுப்பின நன்மைகளையும், கிருபைகளையும், இரக்கங்களையும் மறந்துவிடுகிறார்கள். எகிப்தியர்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தினதுபோல, இஸ்ரவேல் புத்திரரும் இப்போது தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள்.

எகிப்தியர்கள் தங்களுக்கு அழிவு உண்டாகும் வண்ணமாக, கர்த்தர் அனுப்பின வாதைகளின் அற்புதங்களை மறந்துவிட்டார்கள். கர்த்தர் எகிப்தியர்மீது பத்து வாதைகளை வரப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாக தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி, பத்து சந்தர்ப்பங்களில் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அந்தப் பத்து முறுமுறுப்புக்களில், இந்த வசனப்பகுதியில், முதலாவது முறுமுறுப்பு சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வனாந்தரத்திலேயே செத்துப்போனார்கள். இது அவர்கள்மீது வந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

"என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:22,23).

ஈரோத் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் பார்வோனும் அவனுடைய சேனையும் தங்களுக்கு பின்னே வருகிறதைக் கண்டு பயப்படுகிறார்கள். அவர்களில் சிலர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். அவர்களில் அநேகர் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து கோபத்தோடு பேசுகிறார்கள். மோசே கர்த்தருடைய மனுஷன். இஸ்ரவேல் புத்திரர் தன்மீது கோபப்பட்டு முறுமுறுக்கும்போது, மோசே அவர்களுக்கு கோபமான பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அவர் நீடிய பொறுமையுள்ளவர். மோசே எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை நம்புகிறவர்.

இஸ்ரவேல் புத்திரருக்கு மிகுந்த நெருக்கமும் ஆபத்தும் வந்திருக்கிறது என்பது மோசேக்கும் தெரியும். இந்த இக்கட்டான சூழ்நிலையிலே மோசே அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய நாமத்தினாலே மோசே அவர்களை உற்சாகப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் மதியீனர்களைப்போல மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தாலும், மோசே அவர்களைப் போல அவர்களுக்கு மதியீனமான வார்த்தைகளை சொல்லவில்லை. மோசே ஆறுதலான வார்த்தைகளையும், பக்தியுள்ள வார்த்தைகளையும் அவர்களுக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். அதற்காக மோசே அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை. அதற்கு பதிலாக மோசே அவர்களை கர்த்தருக்குள் உற்சாகப்படுத்துகிறார். தனக்கு விரோதமாக முறுமுறுக்கும் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "பயப்படாதிருங்கள்" என்று மோசே ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாக இன்னும் முறுமுறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மதியீனமாய்ப் பேசுகிறார்கள். அவர்களுடைய வார்த்தையிலும் மனதிலும் கோபம் இருக்கிறது. அவர்களுடைய இருதயத்தில் பயம் இருக்கிறது. மோசே முதலாவதாக அவர்களிடத்தில் காணப்படுகிற பயத்தை நீக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

மோசே ஜனங்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத் 14:13,14) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலர்கள் அந்த எகிப்தியரை இதற்குப் பின்பு, உயிரோடு காணவில்லை. எகிப்தியர்கள் அழிக்கப்பட்ட பின்பு, இஸ்ரவேல் புத்திரர் அவர்களுடைய சரீரங்களைச் செங்கடலின் கரையோரங்களில் கண்டார்கள் (யாத் 14:30).

நம்முடைய பிரச்சனைகளிலிருந்தும், நெருக்கங்களிலிருந்தும், பாடுகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் நம்மால் உடனே விடுதலை பெற முடியவில்லையென்றாலும், முதலாவதாக நாம் பயப்படுவதிலிருந்து விடுதலை பெறவேண்டும். பயம் நம்மை விட்டு விலகவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய சமுகத்திலே நம்மால் சமாதானமாக ஜெபம்பண்ண முடியும். மனதில் பயம் இருந்தால், நம்முடைய சிந்தனை தெளிவாயிராது. திகிலும் நடுக்கமும் நம்மை சூழ்ந்துகொள்ளும். பயம் நம்மை விட்டு நீங்கினால், நாம் கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபிப்போம். ஜெபம் ஜெயம் தரும்.

நம்முடைய மனதை பயம் ஆளுகை செய்யும்போது, அது நம்மிடத்தில் காணப்படுகிற விசுவாசத்தை பலவீனப்படுத்தும். மோசே இந்த சத்தியத்தை நன்றாய் அறிந்திருக்கிறார். ஆகையினால் அவர் பயத்தில் நடுங்குகிற இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "பயப்படாதிருங்கள்" என்று ஆறுதலாகச் சொல்லுகிறார். இந்த வார்த்தைக்கு, "கர்த்தர்மீது உங்கள் பாரத்தை வைத்துவிடுங்கள், அவர் உங்களை ஆதரிப்பார்" என்று பொருள் சொல்லலாம்.

இஸ்ரவேல் புத்திரர் நின்றுகொண்டு, இன்றைக்கு கர்த்தர் தங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பார்க்கவேண்டும். அவர்கள் பார்வோனையும் அவனுடைய சேனையையும் பார்த்து அங்கும் இங்கும் பயந்து ஓடிப்போய்விடக்கூடாது. அவர்கள் பார்வோனுடைய சேனைக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு தீவிரித்தும் போகக்கூடாது. அவர்கள் இப்போதிருக்கிற இடத்திலேயே, பயப்படாமல், கர்த்தர்மீது தங்கள் பாரத்தை வைத்து, அப்படியே நிற்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு செய்யப்போகும் அற்புதங்களைப் பார்ப்பதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்காகவும், அவருடைய உத்தரவுக்காகவும் காத்திருக்கவேண்டும். கர்த்தர் இப்போது அவர்களுக்காக கிரியை செய்யப்போகிறார். கர்த்தர் அவர்களுக்காக யுத்தம்பண்ணப்போகிறார். இஸ்ரவேல் புத்திரர் பார்வோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டியதில்லை. அவர்கள் சும்மாயிருந்து, கர்த்தர் தங்களுக்கு செய்யும் இரட்சிப்பை பார்ப்பார்கள். "இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்" என்று மோசே பயந்து நடுங்குகிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் சும்மா இருந்தது போதும். ஜீவன் தப்பிக்க எதையாவது செய்ய வேண்டும். கர்த்தர் சொல்லுகிறபடி புறப்பட்டுப் போகவேண்டும். மோசே தேவனை விசுவாசிக்கிறார். செங்கடல் ஊடே வெட்டாந்தரையில் மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை வழிநடத்திச் செல்லுகிறார் (எபி 11:29).

செங்கடலின் ஆழம் சுமார் 75 அடி முதல் 100 அடி வரையிலும் இருக்கும். இது 12 மைல் அகலமுடையது. இந்தத் தண்ணீர் பிரிந்து உலர்ந்து, வெட்டாந்தரையாயிற்று. இரண்டு புறங்களிலும் தண்ணீர் மதிலைப்போன்று நிற்கிறது. (யாத் 15:8)

## சிவந்த சமுத்திரம்
## யாத் 14:15-20

**யாத் 14:15. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு.**

**யாத் 14:16. நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.**

**யாத் 14:17. எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன்.**

**யாத் 14:18. இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்.**

**யாத் 14:19. அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது.**

**யாத் 14:20. அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.**

எகிப்தியர் தங்களுக்கு பின்னே வருகிறதைக் கண்டு இஸ்ரவேல் புத்திரர் மிகவும் பயப்படுகிறார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி, "பயப்படாதிருங்கள்" என்றும், "கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" என்றும் சொல்லுகிறார்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு" (யாத் 14:15) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தரோ மோசேயை நோக்கி, "நீ என்னிடத்தில் முறையிடுகிறதென்ன" என்று கேட்கிறார். நம்முடைய ஜெபம் எப்போதுமே கர்த்தருடைய சமுகத்தில் பிரியமானதாயிருக்கிறது. மோசே தம்மிடத்தில் ஜெபம்பண்ணி முறையிட்டதற்காக, கர்த்தர் அவர்மீது கோபப்படவில்லை. மோசே தம்மிடத்தில் இதுவரையிலும் ஜெபம்பண்ணியது போதுமானது என்று கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு ஏற்கெனவே செவிகொடுத்து, அவருடைய ஜெபத்திற்கு பதிலும் கொடுத்துவிட்டார். ஆனால் மோசேயோ கர்த்தரிடத்திலிருந்து இன்னும் பதிலைப் பெற்றுக்கொள்ளாதவர் போல ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறார். "நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன" என்று கர்த்தர் மோசேயிடம் சொல்லும் வார்த்தைக்கு, "உன்னுடைய விண்ணப்பத்தை நான் கேட்டு, உன்னுடைய ஜெபத்திற்கு ஏற்கெனவே பதில் கொடுத்துவிட்டேன், ஆகையினால் நீ இனிமேலும் முறையிட வேண்டிய அவசியமில்லை. நான் உனக்கு கொடுத்திருக்கிற கட்டளைக்கு கீழ்ப்படிந்து அதன் பிரகாரம் நீ காரியங்களை நடப்பிக்கவேண்டும்" என்பது பொருளாகும்.

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். மோசே தம்மிடத்தில் ஜெபம்பண்ணினால் மாத்திரம் போதாது, அவர் மேலும் சில காரியங்களை செய்யவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் விசுவாச வார்த்தைகளை சொன்னார். "நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" என்று மோசே அவர்களுக்கு ஆறுதலாக சொன்னார்.

இஸ்ரவேல் புத்திரர் சும்மாயிருக்கவேண்டுமென்றால், மோசே சும்மாயிருக்கக்கூடாது. அவர் கர்த்தருக்கு சித்தமான காரியங்களை உடனே செய்யவேண்டும். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "புறப்பட்டுப்போங்கள்" என்று சொல்லவேண்டும். மோசே சற்று நேரத்திற்கு முன்பு தான் அவர்களிடத்தில், "நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" என்று சொன்னார். ஆனால் கர்த்தரோ, மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் சும்மாயிருப்பதற்கு அனுமதிக்கவில்லை. அவர்கள் எல்லோரும் சும்மாயிராமல் புறப்பட்டுப்போக வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசவேண்டும். அவர் "புறப்பட்டுப்போங்கள்" என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறார். கர்த்தர் தனக்கு பதில் கொடுக்கும் வரையிலும், இஸ்ரவேல் புத்திரர் வேறு ஒன்றும் செய்யாமல், சும்மாயிருக்கவேண்டுமென்று அவர்களுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். இப்போது கர்த்தருடைய சமுகத்திலிருந்து மோசேக்கு கட்டளை வந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய வார்த்தைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் தங்களை இடதுபக்கத்தில் போகச்சொல்லுவார் அல்லது வலதுபக்கத்தில் போகச்சொல்லுவார் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை சமுத்திரத்தின் நடுவாக புறப்பட்டுப்போகச்சொல்லுகிறார். சிவந்த சமுத்திரத்திலே இஸ்ரவேல் புத்திரரை ஏற்றிக்கொண்டு போவதற்கு கப்பல்கள் எதுவும் ஆயத்தமாய் காத்திருக்கவில்லை. ஆனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சமுத்திரத்தின் நடுவாக கடந்துபோகுமாறு கட்டளையிடுகிறார்.

சமுத்திரத்திலே கர்த்தர் பாதையை உண்டுபண்ணினால் மாத்திரமே, இஸ்ரவேல் புத்திரரால் சமுத்திரத்தின் நடுவாக நடந்து போக முடியும். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்யவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்" (யாத் 14:16) என்று சொல்லுகிறார்.

"நீ உன் கோலை ஓங்கு" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் ஒரு சில அற்புதங்களை கோல் மூலமாக நடைபெறப்பண்ணுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. கோல் சர்ப்பமாயிற்று. (யாத் 4:2-3).
2. சர்ப்பம் மறுபடியும் கோலாயிற்று (யாத் 4:4).
3. கோல் சர்ப்பமாயிற்று. (யாத் 4:30).
4. சர்ப்பம் மறுபடியும் கோலாயிற்று (யாத் 4:30).
5. கோல் சர்ப்பமாயிற்று. (யாத் 7:9-10).
6. ஆரோனின் கோல் மற்ற கோல்களை விழுங்கிற்று. (யாத் 7:12).
7. தண்ணீர் இரத்தமாக மாறிற்று. (யாத் 7:15-25).
8. தவளைகள் உண்டாயிற்று (யாத் 8:5).
9. பேன்கள் உண்டாயிற்று (யாத் 8:16-17).
10. அக்கினியும், கல்மழையும் உண்டாயிற்று (யாத் 9:23).
11. வெட்டுக்கிளிகள் உண்டாயிற்று. (யாத் 10:13).
12. செங்கடல் இரண்டாகப் பிளவுண்டது. (யாத் 14:16).
13. தண்ணீர் உண்டாயிற்று. (யாத் 17:6).
14. யுத்தத்தில் வெற்றி (யாத் 17:8-9).
15. தண்ணீர் உண்டாயிற்று (எண் 20:8-11).

மோசே இதுவரையிலும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். இப்போது அவர் தன்னுடைய கோலை ஓங்கி, தன் கையை சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடவேண்டும். சமுத்திரத்தைப் பிளக்கும் வல்லமை மோசேயினிடத்தில் இல்லை. ஆனாலும் அவர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அற்புதம் செய்வார். கர்த்தரிடத்தில் எல்லா வல்லமைகளும் இருக்கிறது.

மோசே தன் கோலை ஓங்கி தன் கையை சமுத்திரத்தின்மேல் நீட்டினால் போதுமானது. அப்போது கர்த்தர் சிவந்த சமுத்திரத்தை பிளந்துவிடுவார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "சிவந்த சமுத்திரத்தின் வழியாகப் புறப்பட்டுப்போங்கள்" என்று சொல்லவேண்டும். அப்போது இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.

எகிப்தியரும் இஸ்ரவேல் புத்திரருக்கு பின்னே வருகிறார்கள். சிவந்த சமுத்திரம் இஸ்ரவேல் புத்திரருக்கு பிளந்திருப்பதுபோல, அது எகிப்தியருக்கும் பிளந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோகும்போது, பார்வோனும் அவனுடைய சேனையும், அவனுடைய குதிரைகளும், அவனுடைய இரதங்களும் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வருவார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன். இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள்" (யாத் 14:17,18) என்று சொல்லுகிறார்.

இதுவரையிலும் தேவதூதனானவர் இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்துபோனார். இப்போதோ அவர் இஸ்ரவேலரின் சேனைக்கு விலகி, அவர்களுக்கு பின்னாக நடக்கிறார். அப்போது அவர்களுக்கு முன்னிருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்களுக்கு பின்னே நிற்கிறது. இதனால் இஸ்ரவேலருடைய சேனையின் பின்பகுதி முழுவதும் மேகமும் அந்தகாரமுமாயிருக்கிறது (யாத் 14:19).

இந்த வசனத்தில் தேவதூதனானவர் என்னும் வாக்கியம் தேவனுடைய பிரத்தியட்சமான பிரசன்னத்தைக் குறிக்கும். யாத் 13:21-22; யாத் 14:21-25,31 ஆகிய வசனங்களில் தேவனுடைய தூதனானவர் "யெகோவா" என்று அழைக்கப்படுகிறார்.

மேகஸ்தம்பம் எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வருகிறது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருக்கிறது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று (யாத் 14:20).

இஸ்ரவேலருடைய பாளயத்திற்கு அக்கினிஸ்தம்பம் வெளிச்சமாக இருக்கிறது. எகிப்தியருக்கு மேகஸ்தம்பம் அந்தகாரமான இருளாக இருக்கிறது.

தேவதூதனானவர் மேகஸ்தம்பத்தையும் அக்கினிஸ்தம்பத்தையும் இஸ்ரவேல் புத்திரருக்கு பிரயோஜனமாகப் பயன்படுத்துகிறார். இதுவரையிலும் கர்த்தர் அவர்களை பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். இப்போது இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக நடந்துபோகப்போகிறார்கள். அந்த சமுத்திரத்திலே அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பமோ அல்லது அக்கினி ஸ்தம்பமோ தேவைப்படாது.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்களை வழிநடத்துவதற்கு அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் தேவைப்பட்டது. கர்த்தர் அவர்களை வனாந்தரத்தில் வழிநடத்தவில்லையென்றால், அவர்கள் பாதை தெரியாமல் காணாமல் போய்விடுவார்கள். சிவந்த சமுத்திரத்தின் நடுவே இஸ்ரவேல் புத்திரர் காணாமல் போவதற்கு வாய்ப்பில்லை. சமுத்திரத்தின் நடுவாக ஒரே ஒரு பாதை மாத்திரமே இருக்கிறது. அந்தப் பாதையின் வழியாக இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டுப்போகவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோகும் போது, அவர்கள் வலதுபுறத்திலும், அவர்கள் இடதுபுறத்திலும், ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கிறது (யாத் 14:22). ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார் சிவந்த சமுத்திரத்திலே பாதை தெரியாமல் காணாமல் போவதற்கு வாய்ப்பில்லை.

அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடக்கிறார்; அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நிற்கிறது. மேகஸ்தம்பம் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வரும் எகிப்தியருக்கு காரிருளைக் கொடுக்கிறது. அக்கினி ஸ்தம்பம் இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

## எகிப்தியரின் சங்காரம்
## யாத் 14:21-31

**யாத் 14:21. மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று.**

**யாத் 14:22. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.**

**யாத் 14:23. அப்பொழுது எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள்.**

**யாத் 14:24. கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து,**

**யாத் 14:25. அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும்பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்**

**யாத் 14:26. கர்த்தர் மோசேயை நோக்கி: ஜலம் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்கள்மேலும் அவர்களுடைய குதிரைவீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு என்றார்.**

**யாத் 14:27. அப்படியே மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பி வந்தது; எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப்போட்டார்.**

**யாத் 14:28. ஜலம் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரைவீரரையும், அவர்கள் பின்னாக சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை.**

**யாத் 14:29. இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.**

**யாத் 14:30. இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள்.**

**யாத் 14:31. கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்தமகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்.**

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தை பிளக்கிறார். மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டுகிறார்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணுகிறார்; சிவந்த சமுத்திரத்தின் ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று (யாத் 14:21).

தாம் ஏற்கெனவே சிருஷ்டித்த காரியங்களைத் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவன் பயன்படுத்துகிறார். பலத்த கீழ்காற்று வீசுவது இயற்கையின் செயலல்ல. இது தெய்வீகச் செயல். தெய்வீக வல்லமையினால் தேவன் நியமித்த காலத்தில் கீழ்காற்று வீசுகிறது. அதுபோலவே தேவன் நியமித்த காலத்தில் கீழ்காற்று வீசுவது நின்றுபோயிற்று. (யாத் 14:21,26-31). 12 மைல் அகலமுள்ள செங்கடலை 100 அடி ஆழத்திற்குப் பிரிக்கும் கீழ்காற்று மெய்யாகவே தேவவல்லமையினால் நடைபெறும் காரியமாகும்.

கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் ஜலத்தை பிளந்த அற்புதமான சம்பவம் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல வசனப்பகுதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. கானானியர்கள் கர்த்தர் நடப்பித்த இந்த அற்புதத்தைப் பார்த்து பயந்து நடுங்குகிறார்கள்.

"கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத் திகில்பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியத்தின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஒகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம்" (யோசு 2:9,10).

கர்த்தர் சிவந்த சமுத்திரத்தைப் பிளந்து இஸ்ரவேல் புத்திரருக்கு அற்புதம் செய்திருக்கிறார். கர்த்தர் நடப்பித்த இந்த அற்புதமோ இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து இஸ்ரவேல் புத்திரர் அவரை நன்றியோடு துதிக்கிறார்கள்.

"கடல் கண்டு விலகி ஓடிற்று; யோர்தான் பின்னிட்டுத் திரும்பினது" (சங் 114:3).

"அவர் சிவந்த சமுத்திரத்தை அதட்டினார், அது வற்றிப்போயிற்று; வெட்டாந்தரையில் நடக்கிறதுபோல அவர்களை ஆழங்களில் நடந்துபோகப்பண்ணினார்" (சங் 106:9).

"சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது. அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" (சங் 136:13,14).

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக நடந்துபோவது, ஞானஸ்நானத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

"இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" *(1கொரி 10:1,2).*

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவது, மனுஷருடைய ஆத்துமாக்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்கும் அடையாளமாயிருக்கிறது.

"எகிப்தின் சமுத்திரமுனையைக் கர்த்தர் முற்றிலும் அழித்து, தம்முடைய காற்றின் வலுமையினால் நதியின் மேல் தமது கையை நீட்டி, ஏழாறுகளாகப் பிரித்து, ஜனங்கள் கால்நனையாமல் கடந்துபோகும்படி பண்ணுவார்" *(ஏசா 11:15).*

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவருக்கு இயற்கையின்மீதும் அதிகாரமுள்ளது. கர்த்தருடைய தெய்வீக வல்லமையே சிவந்த சமுத்திரத்தை பிளக்கிறது. கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்க்காற்றை வீசப்பண்ணுகிறார். அந்த காற்றினால் அவர் சிவந்த சமுத்திரத்தை ஒதுங்கும்படி செய்கிறார். கர்த்தர் இந்தக் கிரியையை நடப்பித்து சிவந்த சமுத்திரத்தை வறண்டுபோகப்பண்ணுகிறார். கர்த்தருடைய பலத்த வல்லமையினால் சிவந்த சமுத்திரத்தின் ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. கர்த்தருடைய கட்டளைக்கு காற்றும் கடலும் கீழ்ப்படியும்.

கர்த்தர் சிவந்த சமுத்திரத்தை பிளந்தது இஸ்ரவேல் புத்திரருக்கு அநுகூலமாயிருக்கிறது. அவர்கள் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக நடந்துபோகவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார். இப்போது கர்த்தர் தம்முடைய வல்லமையினால் சிவந்த சமுத்திரத்தின் ஜலத்தைப் பிளந்து, அதைப் பிரிந்துபோகப்பண்ணியிருக்கிறார். சிவந்த சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையான பாதை உண்டாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து, அக்கரைக்கு போய்ச்சேரவேண்டும்.

கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம் இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோகிறார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கிறது *(யாத் 14:22,29).*

இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலின் வெட்டாந்தரை வெளியில் நடந்து சென்றபோது, அவர்களின் இருபுறங்களிலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கிறது. அது உறைந்த பனிக்கட்டியைப் போன்றிருக்கிறது. *(யாத் 15:8).*

இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக நடந்து போவதற்கு ஆரம்பத்திலே பயப்பட்டிருப்பார்கள். ஆகையினால் ஒருவேளை மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக சமுத்திரத்தின் நடுவாக நடந்து சென்றிருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் அவர்களைப் பின்பற்றி வெட்டாந்தரையிலே நடந்து வந்திருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் திரளான எண்ணிக்கையிலிருந்தாலும், அவர்கள் அணியணியாக புறப்பட்டுப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக நடந்து வருகிற அனுபவம், பிற்காலத்தில் அவர்கள் வனாந்தரத்திலே நடந்து வருவதற்கு பிரயோஜனமாயிருக்கிறது. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை சமுத்திரன் நடுவாக வழிநடத்துகிறார். சமுத்திரத்தின் நடுவாக கர்த்தரை பின்பற்றுகிறவர்கள், அவர் தங்களை எங்கு வழிநடத்தினாலும், பயப்படாமல் அவரை பின்பற்றிப்போவார்கள்.

கர்த்தர் சிவந்த சமுத்திரத்தை பிளந்த சம்பவமும், இஸ்ரவேல் புத்திரரை சிவந்த சமுத்திரத்தின் நடுவாக நடத்திக்கொண்டுபோன சம்பவமும், விசுவாசிகளாகிய நம்மை உற்சாகப்படுத்துவதற்காக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு பாடுகளும் பிரச்சனைகளும் வந்ததுபோல, விசுவாசிகளாகிய நமக்கும் பாடுகளும் பிரச்சனைகளும் வரலாம். நம்முடைய பிரச்சனைகள் பெரிதாயிருந்தாலும், நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிற கர்த்தர் மிகவும் பெரியவராயிருக்கிறார். நாம் பிரச்சனைகளை நோக்கிப் பார்க்காமல், நம்மை வழிநடத்துகிற கர்த்தரை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கவேண்டும்.

சிவந்த சமுத்திரத்தின் நடுவாக நடந்து வந்த இஸ்ரவேல் புத்திரர், அக்கரையில் பாதுகாப்பாக சேர்ந்த பின்பு, கர்த்தருக்குள் களிகூருகிறார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

"கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்; ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம்" (சங் 66:6).

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குரியவர்கள். இஸ்ரவேல் புத்திரருடைய சத்துருக்கள் கர்த்தருக்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள். பார்வோனும் எகிப்தியரும் தங்கள் தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரரை பிடித்து கொன்றுபோடவும் அல்லது அவர்களை மறுபடியும் சிறைப்பிடித்து தங்கள் தேசத்தில் அடிமைகளாக்கவும் தீர்மானித்து, தீவிரமாய் புறப்பட்டு வருகிறார்கள். கர்த்தருடைய நீதியும், அவருடைய நியாயமான கோபமும் எகிப்தியருக்கு விரோதமாக எழும்புகிறது.

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே தங்கள் கால்களால் நடந்துபோகிறார்கள். அவர்களிடத்தில் குதிரைகள், இரதங்கள் போன்ற எந்த வாகனமும் இல்லை. எகிப்தியரோ இஸ்ரவேல் புத்திரரை தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசிக்கிறார்கள் (யாத் 14:23).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியரைக் கண்டு பயந்தபோது, மோசே அவர்களை நோக்கி, "கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" என்றும், "நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" என்று சொன்னார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுகிறார். அவர் எகிப்தியரைக் கலங்கப்பண்ணுகிறார்.

கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து, அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணுகிறார் (யாத் 14:24,25).

"கிழக்கு வெளுத்துவரும் ஜாமம்" என்பது அதிகாலை 3 மணியிலிருந்து காலை 6 மணி வரையிலும் உள்ள மூன்று மணி நேரமாகும்.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக மூர்க்கவெறியோடு வருகிறார்கள். எகிப்தியர்களிடத்தில் குதிரைகளும் இரதங்களும் இருப்பதினால், தங்களால் இஸ்ரவேல் புத்திரரை எளிதாக ஜெயிக்க முடியும் என்று நினைத்து வேகமாக வருகிறார்கள். கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்தில் தங்களுக்கு ஜெயமுண்டாகும் என்று எகிப்தியர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் கர்த்தரோ கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்திலே எகிப்தியரின் சேனையைப் பார்க்கிறார். கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்களுடைய சேனையை கலங்கடிக்கிறார். எகிப்தியர் மத்தியிலே பயமும், திகிலும், நடுக்கமும் உண்டாயிற்று. அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழன்றுபோயிற்று.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு துணை நிற்கிறார் என்பதை எகிப்தியர்கள் புரிந்துகொள்கிறார்கள். அப்பொழுது எகிப்தியர்: "இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்" (யாத் 14:25) என்று சொல்லுகிறார்கள்.

பார்வோனும், எகிப்தியரின் சேனையும் தங்கள் தேசத்தைவிட்டு புறப்பட்டு வந்தபோது மிகவும் வேகமாகவும், கோபமாகவும் வந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் தங்கள் இரதங்களை வருத்ததோடே நடத்துகிறார்கள். அவர்களால் சிவந்த சமுத்திரத்தின் நடுவிலே, தங்கள் இரதங்களை வேகமாக ஓட்டிச்செல்ல முடியவில்லை.

எகிப்தியர்கள் தங்கள் தேசத்தைவிட்டு புறப்பட்டபோது, இஸ்ரவேல் புத்திரர்மீது மிகுந்த கோபத்தோடு வந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்களுடைய இருதயங்களில், கர்த்தரைக் குறித்த பயமும், நடுக்கமும், திகிலும் உண்டாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், சிவந்த சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோகிறார்கள். எகிப்தியர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடு நடத்தினாலும், இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு வருத்தமும் ஏற்படவில்லை. தீங்கு அவர்களை அணுகவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும், ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து அக்கரையிலே பாதுகாப்பாக வந்து சேருகிறார்கள். அதுவரையிலும் பிளந்திருந்த ஜலம், மறுபடியும் ஒன்றுசேருகிறது. இது எதேச்சையாக நடைபெற்ற சம்பவமல்ல. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக சிவந்த சமுத்திரம் மறுபடியும் மூடிக்கொள்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஜலம் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்கள்மேலும் அவர்களுடைய குதிரைவீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு" (யாத் 14:26) என்று சொல்லுகிறார்.

மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டுகிறார்; விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பி வருகிறது; எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப்போடுகிறார்

ஜலம் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரைவீரரையும், அவர்கள் பின்னாக சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொள்கிறது; எகிப்தியரில் ஒருவனாகிலும் தப்பவில்லை (யாத் 14:27,28).

பார்வோனும், எகிப்தியரும் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. பார்வோனுடைய இராணுவத்தார் எல்லோருமே இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். அவர்கள் எல்லோருமே சிவந்த சமுத்திரத்திலே மூழ்கி அழிந்துபோகிறார்கள்.

யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தின் ஆசிரியர்கள், பார்வோன் சிவந்த சமுத்திரத்தை கடந்து வரும்போது, அவனோடுகூட அவனுடைய மந்திரவாதிகளான யன்னேயும், யம்பிரேயும் வந்தார்கள் என்றும், பார்வோன் சிவந்த சமுத்திரத்தில் மூழ்கி அழிந்தபோது, அவனுடைய மந்திரவாதிகளும் அழிந்துபோனார்கள் என்று சொல்லுகிறார்கள்.

மதிலாக நின்ற தண்ணீர் திடீரென்று உருகிற்று. எகிப்தியர் அனைவரையும் சமுத்திரத்தின் ஜலம் மூடிக் கொள்கிறது. இது விடியற்காலத்தில் நடைபெறுகிறது. மதிலாக நின்ற தண்ணீர் உருகி வரும்போது, எகிப்தியர் அதைப் பார்த்து, அதற்கு எதிராக ஓடுகிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப் போடுகிறார் (யாத் 14:26-31; யாத் 15:8).

இஸ்ரவேல் புத்திரருடைய வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலைக் கடந்து சென்றபோது, அந்தக் கடலின் ஆழம் சுமார் 75 அடி முதல் 100 அடி வரையிலும் இருக்கிறது. இவ்வளவு உயரத்திற்கும் தண்ணீர் உறைந்து, இருபுறங்களிலும் மதிலாக நிற்கிறது.

பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான். அவனுடைய மனம் பெருமையாயும், மேட்டிமையாயும் இருந்தது. இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ணி அழைத்து வருவதற்கு, கர்த்தர் மோசேயை தம்முடைய ஸ்தானிகராக பார்வோனிடத்தில் அனுப்பினார். ஆனால் பார்வோனோ தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான். பார்வோன் மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்க மறுத்துவிட்டான். கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்கள் எல்லோரும் அழிந்துபோவார்கள். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும்.

"இப்படிப்பட்ட மகிமையிலும் மகத்துவத்திலும் ஏதேனின் விருட்சங்களில் நீ எதற்கு ஒப்பானவன்? ஏதேனின் விருட்சங்களோடேகூட நீயும் பூமியின் தாழ்விடங்களில் இறக்கப்பட்டு, பட்டயத்தாலே வெட்டுண்டவர்களோடேகூட விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவிலே கிடப்பாய்; பார்வோனும் அவன் கூட்டமும் இதுவே என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எசே 31:18).

இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சிக்கிறார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் காண்கிறார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் காண்கிறார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைக்கிறார்கள் (யாத் 14:30,31).

எகிப்தியர்கள் தங்களுக்கு பின்னே வருகிறதைக் கண்டு இஸ்ரவேல் புத்திரர் ஆரம்பத்திலே மிகவும் பயந்தார்கள். அவர்களில் அநேகர் மோசேக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவது தங்களுக்கு நலமாயிருக்கும் என்று சொன்னார்கள். ஆனாலும் இப்போதோ, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பயப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைக்கிறார்கள். அவர்கள் இப்போது எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போக விரும்பவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சிவந்த சமுத்திரத்திலே மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் "எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1கொரி 10:2).

கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அழைத்து வந்திருக்கிறார். கர்த்தர் அவர்களை சிவந்த சமுத்திரத்தை கடக்கப்பண்ணியிருக்கிறார். தங்களை இம்மட்டுமாக வழிநடத்தி வந்த கர்த்தர், கானான் தேசத்திற்கும் வழிநடத்துவார் என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்திலே விசுவாசம் வைக்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். இஸ்ரவேல் புத்திரரோ பல சமயங்களில் கர்த்தரை நம்பாமல் அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய கோபத்தினால் இஸ்ரவேல் புத்திரரை அழித்துவிடக்கூடாது என்று மோசே கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். தங்களுக்காக கர்த்தரிடத்தில் இம்மட்டுமாக பரிந்து பேசின மோசே, இனிமேலும் பரிந்து பேசுவார் என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் விசுவாசம் வைக்கிறார்கள்.

## 15 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்து, சிவந்த சமுத்திரத்தின் அக்கரையிலே வந்து சேர்ந்திருக்கிறார்கள். அந்தக் கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேல் புத்திரர் காண்கிறார்கள். கர்த்தருடைய பலத்த புயமே தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறது என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் நன்றியுள்ள இருதயத்தோடு நினைத்துப் பார்த்து, கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடின பாட்டு (யாத் 15:1-19). மோசேயின் சகோதரியாகிய மிரியாமும் தன் கையிலே தம்புரு எடுத்துக்கொண்டு, சகல ஸ்திரீகளோடும் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறாள். சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள் (யாத் 15:20,21).

இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரக் கரையிலிருந்து வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணுகிறார்கள் (யாத் 15:22). அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் அவர்களுக்கு கசப்பாயிருக்கிறது (யாத் 15:23,24). மாராவின் கசப்பான தண்ணீர் மதுரமான தண்ணீராயிற்று (யாத் 15:25,26).

இஸ்ரவேல் புத்திரர் ஏலிமுக்கு வருகிறார்கள். அங்கே அவர்கள் தண்ணீர் அருகே பாளயமிறங்குகிறார்கள் (யாத் 15:27).

### கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு
### யாத் 15:1-21

**யாத் 15:1. அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு: கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார்.**

**யாத் 15:2. கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்;**

**யாத் 15:3. கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்.**

**யாத் 15:4. பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார்; அவனுடைய பிரதான அதிபதிகள் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள்.**

**யாத் 15:5. ஆழி அவர்களை மூடிக் கொண்டது; கல்லைப்போல் ஆழங்களில் அமிழ்ந்துபோனார்கள்.**

**யாத் 15:6. கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது; கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது.**

**யாத் 15:7. உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது முக்கியத்தின் மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்; உம்முடைய கோபாக்கினியை அனுப்பினீர், அது அவர்களைத் தாளடியைப்போலப் பட்சித்தது.**

**யாத் 15:8. உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது; வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது; ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்துபோயிற்று.**

யாத் 15:9. தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும் என்று பகைஞன் சொன்னான்.

யாத் 15:10. உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக் கொண்டது; திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்துபோனார்கள்.

யாத் 15:11. கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?

யாத் 15:12. நீர் உமது வலதுகரத்தை நீட்டினீர்; பூமி அவர்களை விழுங்கிப்போட்டது.

யாத் 15:13. நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர்.

யாத் 15:14. ஜனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிப்பார்கள்; பெலிஸ்தியாவின் குடிகளைத் திகில் பிடிக்கும்.

யாத் 15:15. ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடிக்கும்; கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள்.

யாத் 15:16. பயமும் திகிலும் அவர்கள்மேல் விழும். கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்.

யாத் 15:17. நீர் அவர்களைக் கொண்டுபோய், கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்கு நியமித்த ஸ்தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரங்கள் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் அவர்களை நாட்டுவீர்.

யாத் 15:18. கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரீகம் பண்ணுவார்.

யாத் 15:19. பார்வோனின் குதிரைகள் அவனுடைய இரதங்களோடும் குதிரைவீரரோடும் சமுத்திரத்தில் பிரவேசித்தது; கர்த்தர் சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள் மேல் திரும்பப் பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள் என்று பாடினார்கள்.

யாத் 15:20. ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போனார்கள்.

யாத் 15:21. மிரியாம் அவர்களுக்குப் பிரதிவசனமாக: கர்த்தரைப் பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடினாள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வந்த எகிப்தியர்கள் எல்லோரும் சிவந்த சமுத்திரத்தின் கடற்கரையிலே செத்துக்கிடக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தையும், எகிப்தியருக்கு தோல்வியையும் வரப்பண்ணுகிறார். கர்த்தர் தங்களுக்கு காண்பித்த கிருபைகளையும், இரக்கங்களையும், சிலாக்கியங்களையும் நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். அவர்கள் நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

மோசே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு கர்த்தரை புகழ்ந்துபாடும் பாட்டை இயற்றுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் இந்தப் பாட்டை கற்றுக்கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் சிவந்த சமுத்திரத்தின் கடற்கரையிலே இருக்கிறார்கள். அங்கே அவர்களை பின்தொடர்ந்து வந்த எகிப்தியர் எல்லோரும் செத்துக்கிடக்கிறார்கள். அந்த இடத்திலே மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

இது இஸ்ரவேலரின் முதலாவது பாடலாகும். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமையாக இருந்தபோது, பாடல்களைப் பாடியதாகக் குறிப்பு எதுவுமில்லை. கடந்த 80 வருஷங்களுக்கு மேலாக இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் தவித்துக் கொண்டும், முறையிட்டுக் கொண்டும் இருந்தார்கள் *(யாத் 2:23-24; சங் 137:1-4)*.

இந்தப் பாடல் எபிரெயரின் சங்கீதப் பகுதிக்கு ஆரம்பமாகும். மோசேயின் பாடல் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன: *(1) யாத் 15:1-5 (2) யாத் 15:6-10 (3) யாத் 15:11-19*. ஒவ்வொரு பகுதியும் கர்த்தரைத் துதிக்கும் வாக்கியத்தோடு ஆரம்பமாகிறது. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் கர்த்தர் நித்தியமாக ஆளுகை செய்கிறார் என்னும் கருத்தோடு முடிவு பெறுகிறது.

கடைசி காலத்தில் அந்திக் கிறிஸ்துவின்மீது கிறிஸ்து வெற்றி பெறுவார். அப்போது வெற்றிப் பாடல் பாடப்படும் *(வெளி 15:2-4; ஏசா 14:4-17)*. மோசேயின் மற்ற பாடல்கள் *உபா 32:1-43; சங் 90; சங் 91* ஆகிய வசனப்பகுதிகளில் உள்ளன.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நன்றிகளையும், ஸ்தோத்திரங்களையும் கர்த்தருக்கு ஏறெடுக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் நன்றியுள்ள இருதயமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருடைய வாய்களில் கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகள் நிரம்பியிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிற பாட்டு, ஒரு விசுவாச பாடலாகும்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் சிவந்த சமுத்திரத்தின் கடற்கரையிலே கர்த்தரை புகழ்ந்து பாடுகிற இந்தப் பாட்டு, பூர்வகாலத்து பாடலாகும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய சரித்திரத்திலே, இந்தப் பாடலே முதலாவதாக பாடப்பட்ட துதியின் பாடல் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தரை புகழ்ந்து பாடுகிற இந்தப் பாட்டு மிகவும் நேர்த்தியாக இயற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பாடல் இலக்கிய நயத்தோடிருக்கிறது. இந்தப் பாடலில் பாடப்படுகிற ஒவ்வொரு வார்த்தையும் ஜீவனுள்ளது. இந்தப் பாடல் இஸ்ரவேல் ஜனத்தாருடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறது. இந்தப் பாடலின் ஒவ்வொரு வார்த்தையும் கர்த்தரை புகழ்ந்து பாடுகிற வார்த்தையாகும்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரை புகழ்ந்து பாடுகிற பாட்டு, ஒரு பரிசுத்தமான பாடலாகும். கர்த்தரைக் கனம்பண்ணுவதற்காக இந்தப் பாட்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இந்தத் துதிப்பாடலைப் பாடும்போது கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். அவர்கள் இந்தப் பாடலின் மூலமாக கர்த்தருக்கு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறார்கள். கர்த்தர் மாத்திரமே நம்முடைய துதிகளுக்கும் ஸ்தோத்திரங்களுக்கும் பாத்திரமுள்ளவர்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைத் துதிக்கவேண்டும் என்பதற்காகவும், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், இந்தப் பாடலைப் பாடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து விடுதலையும் ஜெயமும் கிடைத்திருக்கிறது. அவர்கள் தங்களுக்கு கிடைத்த இந்த வெற்றியை கர்த்தருக்குள் சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு கிடைத்த வெற்றிக்காக, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதும், அவருடைய நாமத்தை உயர்த்த வேண்டும் என்பதும் இஸ்ரவேல் புத்திரருடைய நோக்கமாகும். இதற்காகவே அவர்கள் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

இந்தப் பாடலின் முதல் வாக்கியமாக, "கர்த்தரை பாடுவேன்" என்னும் வாக்கியம் பாடப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தேவனாகயிருக்கிறார். ஆகையினால் அவர்கள் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன்" (யாத் 15:2) என்று பாடுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த உதவிகளை இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூர்ந்து, "கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார்" (யாத் 15:1) என்று பாடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "அவரே என் தேவன்" என்று சொன்னாலும், அதை தொடர்ந்து அவர்கள், "அவரே என் தகப்பனுடைய தேவன்" (யாத் 15:2) என்றும் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தவர்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணினவர்கள். அவர்கள் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினவர்கள். ஆகையினால் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ள தங்களுக்கு எந்தத் தகுதியுமில்லை என்று நினைத்து, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு முன்பாக தங்களை தாழ்த்துகிறார்கள்.

அவர்கள் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "அவரே என் தேவன்" என்று சொன்னாலும், இந்த வாக்கியத்தை தொடர்ந்து, "அவரே என் தகப்பனுடைய தேவன்" என்றும் சொல்லுகிறார்கள். கர்த்தரிடத்திலிருந்து நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு தங்களுக்கு எந்த தகுதியுமில்லை என்பதை இஸ்ரவேல் புத்திரர் அங்கீகரிக்கிறார்கள்.

கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரவேல் புத்திரர் அபாத்திரராயிருந்தாலும், கர்த்தர் அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்திருக்கிற இந்த நன்மைகளெல்லாம் தங்களுடைய முற்பிதாக்கள் மூலமாக தங்களுக்கு வந்திருக்கிறது என்பதை இஸ்ரவேல் புத்திரர் அங்கீகரிக்கிறார்கள்.

"அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்துகொண்டு, உன்னிலும் பலத்த பெரிய ஜாதிகளை உனக்கு முன்னின்று துரத்தவும், உன்னை அழைத்துக்கொண்டுபோய், இந்நாளில் இருக்கிறதுபோல, அவர்கள் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவும், உன்னைத் தமது முகத்துக்குமுன் தமது மிகுந்த வல்லமையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (உபா 4:37,38).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்" என்றும், "அவரை உயர்த்துவேன்" (யாத் 15:2) என்றும் பாடுகிறார்கள். மேலும் அவர்கள் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்" (யாத் 15:3) என்றும் பாடுகிறார்கள். "கர்த்தர் என்பது அவருடைய நாமம்" என்றும் பாடி, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தி உயர்த்துகிறார்கள். சீனாய் மலையில் இனிமேல் ஸ்தாபனம் பண்ணப்போகிற ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி மோசே இங்கு தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மிகவும் விசேஷமானவர். அவர் மாத்திரமே சர்வவல்லமையுள்ளவர். அவரே மகிமையும், மகத்துவமுமுள்ளவர். இந்த உலகத்திலே கர்த்தருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?" (யாத் 15:11) என்று பாடுகிறார்கள்.

கர்த்தர் எகிப்தியரின்மீது பல வாதைகளை வரப்பண்ணினார். எகிப்தியரின் தெய்வங்களைவிட கர்த்தர் வல்லவர் என்பது நிரூபணமாயிற்று. கர்த்தருடைய வல்லமைக்கு எதிராக எந்த மனுஷனாலும், எந்தத் தெய்வத்தாலும் எதிர்த்துநிற்க முடியவில்லை. தேவனுடைய கிரியையினால் எகிப்து தேசமும், பார்வோனுடைய சேனையும் அழிந்துபோயிற்று. எகிப்து தேசத்தைச் சுற்றிலுமுள்ள தேசத்தார் கர்த்தருடைய மகத்துவமான கிரியைகளைக் கேள்விப்பட்டதினால், அவர்களுக்குக் கர்த்தரைக் குறித்து பயமுண்டாயிற்று (யாத் 15:11-16).

எகிப்து தேசத்திலே ஏராளமான விக்கிரகங்கள் இருக்கிறது. அந்த விக்கிரகங்களை எகிப்தியர்கள் தங்களுடைய தெய்வங்கள் என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் பல வருஷங்களாக எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தவர்கள். அவர்களுக்கு எகிப்தியரின் தேவர்களைப்பற்றி நன்றாய்த் தெரியும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, இப்போது கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். அவர்கள் எகிப்தியரின் தெய்வங்களையும், தங்களுடைய தேவனாகிய கர்த்தரை ஒப்பிட்டுப் பார்த்து, "கர்த்தாவே தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார், ஒருவருமில்லை" என்று கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள்.

எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் எகிப்தியருக்கு விரோதமாக ஏராளமான வாதைகளை வரப்பண்ணியிருக்கிறார். ஆனாலும் அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை அறிந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு கர்த்தரை அறியும் உணர்வுள்ள இருதயம் இல்லை. கர்த்தர் எகிப்தியர்மீது வரப்பண்ணின பயங்கரமான காரியங்களை ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார்.

"தீங்குகளை அவர்கள்மேல் குவிப்பேன்; என்னுடைய அம்புகளையெல்லாம் அவர்கள்மேல் பிரயோகிப்பேன். அவர்கள் பசியினால் வாடி, எரிபந்தமான உஷ்ணத்தினாலும், கொடிய வாதையினாலும் மாண்டுபோவார்கள்; துஷ்ட மிருகங்களின் பற்களையும், தரையில் ஊரும் பாம்புகளின் விஷத்தையும் அவர்களுக்குள் அனுப்புவேன். வெளியிலே பட்டயமும், உள்ளே பயங்கரமும், வாலிபனையும் கன்னிகையையும் குழந்தையையும் நரைத்த கிழவனையும் அழிக்கும்" என்றும்,

"எங்கள் கை உயர்ந்ததென்றும், கர்த்தர் இதையெல்லாம் செய்யவில்லை என்றும் அவர்களுடைய பகைஞர் தப்பெண்ணங்கொண்டு சொல்லுவார்கள் என்று, நான் சத்துருவின் குரோதத்திற்கு அஞ்சாதிருந்தேனானால், நான் அவர்களை மூலைக்குமூலை சிதற அடித்து, மனிதருக்குள் அவர்களுடைய பெயர் அற்றுப் போகப்பண்ணுவேன் என்றும் சொல்லியிருப்பேன்" என்றும்,

"அவர்கள் யோசனைகெட்ட ஜாதி, அவர்களுக்கு உணர்வு இல்லை. அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து, தங்கள் முடிவைச் சிந்தித்துக் கொண்டால் நலமாயிருக்கும்" (உபா 32:23-29) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "கர்த்தர் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர்" (யாத் 15:11) என்று பாடுகிறார்கள். பரிசுத்தமே கர்த்தருடைய மகிமை. கர்த்தர் கிருபையிலும் இரக்கத்திலும் ஐசுவரியமுள்ளவர். இது அவருடைய ஐசுவரியம். கர்த்தர் தம்முடைய பரிசுத்தத்தில் கர்த்தர் மகத்துவமுள்ளவர். இது அவருடைய மகிமை.

பரிசுத்த வேதாகமத்தில் "பரிசுத்தம்" என்னும் வார்த்தை பல்வேறு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தேவனுடைய மெய்யான சுபாவம். *(யாத் 15:11; சங் 30:4; சங் 97:12)*

2. பிரதான ஆசாரியருடைய பட்டயத்தில் "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டப்பட்டிருந்தது. *(யாத் 28:36; யாத் 39:30)*

3. தேவனை ஆராதிப்பது. *(1நாளா 16:29; சங் 29:2; சங் 96:9)*

4. தேவனைத் துதிப்பது. *(2நாளா 20:21)*

5. தேவனுக்காக வேறுபிரிக்கப்படுவது. (2நாளா 31:18)

6. தேவனுடைய சிங்காசனம் (சங் 47:8)

7. தேவனுடைய வாசஸ்தலம். (சங் 48:1; ஏசா 63:15; எரே 31:23)

8. தேவனுடைய வெளிப்பாடு (சங் 60:6; சங் 108:7 ; எரே 23:9)

9. தேவனுடைய ஆணை (சங் 89:35; ஆமோ 4:2)

10. தேவனுடைய வீடு (சங் 93:5; ஏசா 62:9)

11. தேவனுக்காகப் பொருத்தனை செய்யப்பட்டிருக்கிறவைகள் (ஏசா 23:18)

12. தேவனுடைய ஆலயத்திற்குப் போகும் பெரும்பாதை. (ஏசா 35:8)

13. தேவனுடைய ஜனங்கள். (ஏசா 63:18; எரே 2:3)

14. மனுஷருடைய வம்சம். (ஒப 17 ; லூக்கா 1:75)

15. மணிகளிலும், பானைகளிலும் எழுதப்பட்டிருக்கும் விலாசம். (சக 14:20-21)

16. தேவனுடைய ஆவியானவர் (ரோமர் 1:4)

17. கிறிஸ்தவ ஜீவியம் (ரோமர் 6:19,22; 2கொரி 7:1; எபே 4:24; 1தெச 3:13; 1தெச 4:7; 1தீமோ 2:15; தீத்து 2:3; எபி 12:10,14)

18. பரலோகத்தில் விசுவாசிகளுடைய நித்திய ஸ்தானமும், சுபாவமும் (1தெச 3:13)

"கர்த்தர் துதிகளில் பயப்படத்தக்கவர்" என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். கர்த்தருடைய கிரியைகள் அவருடைய ஜனத்திற்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஆனால் கர்த்தருடைய சத்துருக்களுக்கோ, அவருடைய கிரியைகள் ஒவ்வொன்றும் பயங்கரமானதாயிருக்கிறது.

"பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். தேவனை நோக்கி: உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர்; உமது மகத்துவமான வல்லமையினிமித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள்" (சங் 66:1-3).

கர்த்தர் அற்புதங்களை செய்கிறவர். இயற்கையின் வல்லமையைவிட கர்த்தருடைய வல்லமை மிகவும் பெரிதாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய தெய்வீக வல்லமையினால், இயற்கையின் வல்லமைகளுக்கு அப்பாற்பட்ட பெரிய காரியங்களை செய்கிறார். கர்த்தருடைய அற்புத வல்லமைகள், அவருடைய கிருபையின் வல்லமைகளாக வெளிப்படுகிறது. கர்த்தர் நமக்கு அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்யும்போது, நாம் நன்றியுள்ள இருதயத்தோடு, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் சிவந்த சமுத்திரத்தின் கடற்கரையிலே கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். அவர்களை பின்தொடர்ந்து வந்த எகிப்தியர்கள் கடற்கரையில் செத்துக்கிடக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய சொந்த பலத்தினாலோ, சொந்த பராக்கிரமத்தினாலோ விடுதலை கிடைக்கவில்லை. கர்த்தரே தம்முடைய ஓங்கிய புயத்தினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த விடுதலையை நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூர்ந்து, கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த வெற்றியை, இக்காலத்தில் கொடுத்திருந்தாலும், அவர்களும் அவர்களுடைய பின்சந்ததியாரும், எக்காலத்திலும் இதை நினைவுகூரவேண்டும்.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்த மகத்தான வெற்றியை இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூருகிறார்கள். கர்த்தரே பார்வோனையும் அவனுடைய சேனையையும் அழித்துப்போட்டார் என்று அவர்கள் நன்றியுள்ள இருதயத்தோடு சொல்லுகிறார்கள்.

"பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார்; அவனுடைய பிரதான அதிபதிகள் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள். ஆழி அவர்களை மூடிக் கொண்டது; கல்லைப்போல ஆழங்களில் அமிழ்ந்துபோனார்கள்" என்றும்,

"கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது; கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது. உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது முக்கியத்தின் மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்; உம்முடைய கோபாக்கினியை அனுப்பினீர், அது அவர்களைத் தாளடியைப்போலப் பட்சித்தது" என்றும் (யாத் 15:4-7) இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள்.

கர்த்தர் பார்வோனோடு யுத்தம் பண்ணினார். இந்த யுத்தம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமாகவும், மகிமையாகவும் முடிவு பெற்றது (யாத் 14:26-31; யாத் 15:1,4; சங் 24:8).

எகிப்தியர்கள் கல்லைப்போல ஆழங்களில் அமிழ்ந்து போனார்கள். எகிப்தின் போர்வீரர்கள் அதிக எடையுள்ள கவசங்களை அணிந்திருந்தார்கள். ஆகையினால் செங்கடல் உருகி அவர்களை மூடியபோது, அவர்கள் கல்லைப்போல விரைவாக அமிழ்ந்துபோனார்கள் (யாத் 15:5,10).

"வலதுகரம்" என்பது தேவனுடைய வல்லமையின் அடையாளம். (சங் 17:7; சங் 44:3; சங் 60:5; சங் 63:8; சங் 91:7; சங் 110:5; சங் 118:15-16).

பரிசுத்த வேதாகமத்தில் வலதுகரம் என்னும் வாக்கியம், பல்வேறு காரியங்களுக்கு அடையாளமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தேவனுடைய வல்லமை (யாத் 15:6; சங் 17:7; சங் 44:3)

2. உயர்த்தப்படுதல் (சங் 16:11)

3. பாதுகாக்கப்படுதல் (சங் 18:35; சங் 63:8)

4. நீதி (சங் 48:10)

5. நாட்டுதல் (சங் 80:15)

6. தீர்க்காயுசு (நீதி 3:16)

7. ஐக்கியம் (கலா 2:9)

வேதாகமத்தில் கைகள் என்னும் வார்த்தை ஆசீர்வாதத்திற்குப் பயன்படுத்தப்படாமல், தவறான காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (சங் 7:3; சங் 9:16; சங் 26:10; சங் 115:4; நீதி 6:10,17; நீதி 17:18; ஏசா 1:15; எரே 1:16; எரே 10:3-9; எரே 13:22).

பரிசுத்த வேதாகமத்தில் கால்கள் என்னும் வாக்கியம், பல்வேறு காரியங்களுக்கு அடையாளமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. வெற்றி (சங் 8:6; சங் 91:13; மல் 4:3; 2கொரி 15:24-28; எபே 1:22)

2. வேகம் (சங் 18:33)

3. ஸ்திரத்தன்மை (சங் 40:2)

4. நற்செய்தி (ஏசா 52:7; நாகூம் 1:15)

5. வல்லமை (தானி 7:7,19)

6. அழகு (ரோமர் 10:15)

7. வெற்றி (ரோமர் 16:20)

வேதாகமத்தில் கால்கள் என்னும் வார்த்தை ஆசீர்வாதத்திற்குப் பயன்படுத்தப் படாமல், தவறான காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (நீதி 1:16; நீதி 5:5; நீதி 6:18; நீதி 7:11; நீதி 19:2; ஏசா 3:16; ஏசா 59:7; எரே 13:16; மத் 7:6; ரோமர் 3:15).

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது; வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது; ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்துபோயிற்று" (யாத் 15:8) என்று பாடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் நடுவாக, வெட்டாந்தரையின் வழியாய் நடந்து போகிறார்கள். அப்பொழுது அவர்களுடைய வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் சமுத்திரத்தின் ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கிறது.

கர்த்தருடைய நாசியின் சுவாசம் பலத்த கீழ்காற்றாக இருந்து, அது செங்கடலையே இரண்டாகப் பிளந்தது (யாத் 14:21). இதனால் ஜலம் குவிந்து நின்றது. சமுத்திரத்தின் தண்ணீர் உறைந்து போயிற்று.

பார்வோனும் அவனுடைய சேனையும் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து போகிறார்கள். அப்பொழுது சிவந்த சமுத்திரம் அவர்களை நோக்கி பலமாய் திரும்பி வருகிறது. எகிப்தியர் அதற்கு எதிராக ஓடுகிறார்கள். அப்போது கர்த்தர் அவர்களை கடலின் நடுவே கவிழ்த்துப்போடுகிறார். சமுத்திரம் அவர்கள் எல்லோரையும் மூடிக்கொள்கிறது. எகிப்தியரில் ஒருவனாகிலும் தப்பவில்லை.

பார்வோனும், அவனுடைய சேனையும் இருதயத்தில் பெருமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். பெருமையுள்ள பாவிகளுக்கு விரோதமாக, தண்ணீரும் பெருமையுள்ளதாயிருக்கிறது. பாவிகளின் இருதயம் கடினமாயிருப்பதுபோல, அவர்களை மூடிக்கொள்கிற தண்ணீரும் கடினமாயிருக்கிறது. ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்துபோயிற்று. எகிப்தியரின் பாவத்தினால், சிவந்த சமுத்திரத்தின் ஜலம் கல்லைப்போல கடினமாயிற்று. அவர்களுடைய இருதயம் கடினமாயிருப்பதினால், அவர்கள் சிவந்த சமுத்திரத்திலே, கல்லைப்போல மூழ்கிப்போகிறார்கள்.

எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர்ந்து வந்தபோது, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, மிகுந்த ஆணவத்தோடு வந்தார்கள். எகிப்தியர்கள் தங்கள் இருதயத்திலே, "தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும்" (யாத் 15:9) என்று சொல்லிக்கொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரரை சங்காரம்பண்ணவேண்டும் என்பதே எகிப்தியருடைய நோக்கமாயிருக்கிறது. ஆனால் எகிப்தியரை சங்காரம்பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய காற்றை வீசப்பண்ணினார். அப்போது சமுத்திரம் அவர்களை நோக்கி பலமாய் திரும்பி வருகிறது. கடல் அவர்களை மூடிக்கொள்கிறது. எகிப்தியர்கள் திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்துபோகிறார்கள். அவர்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தினார்கள். இப்போது அவர்கள் ஈயம்போல தண்ணீரிலே அமிழ்ந்துபோகிறார்கள். கர்த்தர் தமது வலதுகரத்தை நீட்டுகிறார். பூமி அவர்களை விழுங்கிப்போடுகிறது (யாத் 15:12). பூமி அதிர்ச்சி ஏற்பட்டு, செங்கடலுக்கு அடியில் பிளவு உண்டாயிற்று. அது எகிப்தியரில் அநேகரை விழுங்கிப்போட்டது. (சங் 77:18).

கர்த்தர் எகிப்திரை சிவந்த சமுத்திரத்திலே அழித்துப்போடுகிறார். அந்நாளிலே கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்கு தப்புவித்து இரட்சிக்கிறார். மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர்" (யாத் 15:13) என்று பாடுகிறார்கள்.

கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொள்கிறார். அதே கர்த்தர் இப்போது தமது கிருபையினால், சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் அழிந்துபோகாமல், அவர்களை பாதுகாக்கிறார்.

கர்த்தர் எகிப்தியரை அழித்ததையும், இஸ்ரவேல் புத்திரரை இரட்சித்ததையும், மோசேயும், இஸ்ரவேல் ஜனத்தாரும் நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூருகிறார்கள். அவர்கள் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "பார்வோனின் குதிரைகள் அவனுடைய இரதங்களோடும் குதிரைவீரரோடும் சமுத்திரத்தில் பிரவேசித்தது; கர்த்தர் சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள் மேல் திரும்பப் பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்" *(யாத் 15:19)* என்று பாடுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக தம்மை அற்புதமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, அவர்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய நாமமகிமைக்காக, ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபிக்கவேண்டும். அது கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலமாயிருக்கும். தமக்காக ஆசரிப்புக்கூடாரம் போடுவதற்கு, தம்முடைய ஜனத்திற்கு எந்த வேதனையும், எந்த செலவுகளும் வரக்கூடாது என்பதிலும் கர்த்தர் கவனம் செலுத்துகிறார். கர்த்தரே தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திற்கு நேராக, தம்முடைய பலத்தினால், இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார் *(யாத் 15:11)*.

இஸ்ரவேல் புத்திரருக்கு இப்போதுதான் இரட்சிப்பு ஆரம்பமாயிருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரருடைய இரட்சிப்பின் வளர்ச்சியை தன்னுடைய விசுவாசக்கண்களால் காண்கிறார். இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் வந்து, அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தருக்கு இன்னும் ஆசரிப்புக்கூடாரம் போடப்படவில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய பலத்தினால், தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திற்கு இஸ்ரவேல் புத்திரரை அழைத்து வருவார் என்று மோசேயும், இஸ்ரவேல் ஜனங்களும் விசுவாசத்தோடு பாடுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு இரட்சித்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த இரட்சிப்பின் அனுபவமானது மிகவும் விசேஷமானது. இந்த இரட்சிப்பில் தேவனுடைய மகிமையும், அவருடைய மகத்துவமும், பலமும், பராக்கிரமமும் வெளிப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மீட்டுக்கொள்வதற்காகவும், வழிநடத்துவதற்காகவும் தம்முடைய வல்லமையை பயன்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய சத்துருக்கள், கர்த்தருடைய வல்லமையையும் பலத்தையும் பார்த்து பயந்து நடுங்குகிறார்கள்.

மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "ஜனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிப்பார்கள்; பெலிஸ்தியாவின் குடிகளைத் திகில் பிடிக்கும். ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடிக்கும்; கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள்" என்றும்,

"பயமும் திகிலும் அவர்கள்மேல் விழும். கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்" *(யாத் 15:14-16)* என்றும் பாடுகிறார்கள்.

இந்த வசனத்தில், "உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும்" என்னும் வாக்கியம், இஸ்ரவேல் புத்திரர் செங்கடலைக் கடந்து போவதை குறிப்பிடவில்லை. இஸ்ரவேல் புத்திரர் ஏற்கனவே செங்கடலைக் கடந்து விட்டார்கள். அவர்கள் வாக்குத்தத்த தேசத்திற்குப் போகும் முன்பாக வனாந்தரத்தையும், யோர்தானையும் கடந்து போவதை இந்த வாக்கியம் குறிக்கும்.

கர்த்தருடைய பலத்த கிரியைகளைப் பார்த்து ஏதோமியர்கள் பயந்தார்கள். "ஜனங்களுக்கு நீ கட்டளையிடவேண்டியது என்னவென்றால்: சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான உங்கள் சகோதரரின் எல்லையைக் கடக்கப்போகிறீர்கள்; அவர்கள் உங்களுக்குப் பயப்படுவார்கள்; நீங்களோ மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்" *(உபா 2:4)*.

கர்த்தருடைய பலத்த கிரியைகளைப் பார்த்து மோவாபியரும் பயப்படுவார்கள். "ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் புத்திரரினிமித்தம் கலக்கமடைந்து, மீதியானரின் மூப்பரை நோக்கி: மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும் என்றான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்" (எண் 22:3,4).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுத்திருக்கிறார். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு முன்பாகவே, கானானியர் கர்த்தருடைய பலத்த கிரியைகளைக் கேள்விப்பட்டு பயப்படுகிறார்கள்.

"கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத் திகில்பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியத்தின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம்" (யோசு 2:9,10).

"இஸ்ரவேல் புத்திரர் கடந்து தீருமளவும், கர்த்தர் யோர்தானின் தண்ணீரை அவர்களுக்கு முன்பாக வற்றிப்போகப்பண்ணினதை, யோர்தானுக்கு மேல்கரையில் குடியிருந்த எமோரியரின் சகல ராஜாக்களும், சமுத்திரத்தருகே குடியிருந்த கானானியரின் சகல ராஜாக்களும் கேட்டதுமுதற்கொண்டு, அவர்கள் இருதயம் கரைந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக சோர்ந்துபோனார்கள்" (யோசு 5:1).

இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திரத்தின் ஆரம்பத்திலேயே, கர்த்தர் அவர்களுக்காக செய்யும் பலத்த கிரியைகள் அற்புதமாய் வெளிப்படுகிறது. இவையெல்லாம் கர்த்தர் அவர்களுக்கு செய்யும் பலத்த கிரியைகளுக்கு ஆரம்பம். காலம் நிறைவேறும்போது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக மிகப்பெரிய காரியங்களை செய்வார். அப்போது கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், பலத்த கிரியைகளும் அவர்களுக்கு பரிபூரணமாய்க் கிடைக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது அனுபவிப்பது கர்த்தருடைய கிருபையின் அச்சாரம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து விடுதலை செய்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். அவர் தம்முடைய ஜனங்களை கானான் தேசத்திலே குடியேறப்பண்ணுவார் என்று மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் விசுவாசத்தோடு பாடுகிறார்கள்.

அவர்கள் கர்த்தரை புகழ்ந்து பாடும்போது, "நீர் அவர்களைக் கொண்டுபோய், கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்கு நியமித்த ஸ்தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரங்கள் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் அவர்களை நாட்டுவீர்" (யாத் 15:17) என்று பாடுகிறார்கள்.

"ஆண்டவராகிய தேவரீருடைய கரங்கள் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் அவர்களை நாட்டுவீர்" என்னும் வாக்கியம் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் தேசத்தில் தம்முடைய ஜனங்களைக் குடியேற வைப்பதைப் பற்றி குறிப்பிடுகிறது. மேலும் இந்த வாக்கியத்தில் மோசே கட்டப்போகிற ஆசரிப்புக்கூடாரத்தையும், சாலொமோன் கட்டப்போகிற தேவாலயத்தையும் பற்றிய எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் முரட்டாட்டமுள்ள ஜனங்களாகவும்,கலகக்குணமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் ஜனத்தாருடைய குறைபாடுகளை நோக்கிப் பார்க்காமல், தம்முடைய பலத்தினால் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு பல தடைகள் இருந்தது. கர்த்தரோ தம்முடைய பலத்த புயத்தினால், அந்தத் தடைகளையெல்லாம் நீக்கிப்போட்டு, அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொள்கிறார். இஸ்ரவேல் புத்திரரை மீட்டுக்கொண்ட கர்த்தர், இப்போது அவர்களை வனாந்தரத்திலே வழிநடத்துகிறார். கர்த்தருடைய கிருபை மாறாதது. கர்த்தர் தம்முடைய பூரண கிருபையினால், இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்கும் அழைத்துக்கொண்டுபோய், அங்கே அவர்களை குடியேற்றுவார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருகிறார்கள். "கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரிகம் பண்ணுவார்" (யாத் 15:18) என்று மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். கர்த்தர் சதாகாலங்களிலும் ராஜரீகம்பண்ணுவது, விசுவாசிகளாகிய நமக்கு ஆறுதலான சத்தியமாயிருக்கிறது. கர்த்தருடைய ஆளுகைக்கு முடிவு இருக்காது. அவருடைய ராஜரீகம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

இந்த வசனம், பூமியில் மேசியா நித்திய காலமாக ஆட்சி புரிவார் என்பதைக் கூறும் முதலாவது வசனமாகும். இந்த வசனம் மிகவும் தெளிவான கருத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்பு, இந்தச் சத்தியத்தைக் கூறும் வசனங்கள் இதே கருத்தையே சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகின்றன. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் பூமியின்மீது ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அவர் நித்திய காலமாக மனுஷரை ராஜரிகம் பண்ணுவார்.

ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டு, கர்த்தரை துதித்துப்பாடுகிறாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போகிறார்கள் (யாத் 15:20).

புதிய ஏற்பாட்டில் மரியாள் என்று கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பெயர், பழைய ஏற்பாட்டின் எபிரெய மொழியில் மிரியாம் என்னும் பெயராக உள்ளது. இவள் ஒரு தீர்க்கதரிசியானவள். வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது தீர்க்கதரிசினி. வேதாகமத்தில் முதலாவதாகத் தீர்க்கதரிசனம் உரைத்த ஸ்திரீ ராகேல். ஆனாலும் ராகேல் தீர்க்கதரிசினி என்று அழைக்கப்படவில்லை. (ஆதி 30:24). பூர்வகாலத்தில் தேவன் கிரியை செய்ததுபோன்றே, கடைசி நாட்களிலும் தம்முடைய ஆவியை ஸ்திரீகள்மேல் ஊற்றுவார் (யோவே 2:28; அப் 2:16-21).

மிரியாம் ஒரு தீர்க்கதரிசியானவள். பரிசுத்த வேதாகமத்தில் மிரியாமைப்போல, மேலும் சில பெண் தீர்க்கதரிசிகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ராகேல் (ஆதி 30:24)
2. மிரியாம் (யாத் 15:20)
3. தெபொராள். (நியா 4:4)
4. உல்தாள் (2இராஜா 22:14; 2நாளா 34:22)
5. நொவாதியா (நெகே 6:14)
6. ஏசாயாவின் மனைவி (ஏசா 8:3)
7. எலிசபெத்து (லூக்கா 1:41-45)
8. இயேசுவின் தாயாகிய மரியாள் (லூக்கா 1:46-55)
9. அன்னாள் (லூக்கா 2:36-38)
10. யேசபேல் - கள்ளத்தீர்க்கதரிசினி (வெளி 2:20)

11-14. பிலிப்புவின் நான்கு குமாரத்திகள் (அப் 21:9)

மோசே புருஷரை வழிநடத்துகிறார். புருஷர்கள் எல்லோரும் கர்த்தரை துதித்துப்பாடுகிறார்கள். அப்போது, மோசேயின் சகோதரியாகிய மிரியாம், ஸ்திரீகளை வழிநடத்துகிறாள். ஸ்திரீகளும் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள்.

மிரியாம் அவர்களுக்குப் பிரதிவசனமாக: "கர்த்தரைப் பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார்" (யாத் 15:21) என்று பாடுகிறாள்.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு முக்கியமான வெற்றிகள் கிடைக்கும்போது, ஸ்திரீகளும் ஆடிப்பாடி அந்த வெற்றியைக் கொண்டாடுவது வழக்கம்.

"தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பி வந்தபின்பு, ஜனங்கள் திரும்ப வரும்போதும், ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல்பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்" (1சாமு 18:6,7).

## மாரா
## யாத் 15:22-26

**யாத் 15:22. பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர்வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள்.**

**யாத் 15:23. அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது.**

**யாத் 15:24. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்.**

**யாத் 15:25. மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று. அவர் அங்கே அவர்களுக்கு ஒரு நியமத்தையும் ஒரு நியாயத்தையும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்து:**

**யாத் 15:26. நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.**

மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும், மிரியாமும் சகல ஸ்திரீகளும் கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை துதித்துப்பாடும் துதியின் கீதங்களை பாடி முடித்த பின்பு, மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்துகிறார். அவர்கள் சூர்வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடக்கிறார்கள் (யாத் 15:22).

இஸ்ரவேல் புத்திரர் செங்கடலிலிருந்து சீனாய் மலைக்கு மூன்று மாதங்களாகப் பிரயாணம் பண்ணுகிறார்கள்.

1. செங்கடலிலிருந்து மாராவின் தண்ணீர் வரைக்கும். (யாத் 15:22)
2. மாராவிலிருந்து ஏலிம் வரைக்கும். (யாத் 15:27)
3. ஏலிமிலிருந்து சீன் வனாந்தரம் வரைக்கும். (யாத் 16:1)
4. சீன் வனாந்தரத்திலிருந்து ரெவிதீம் வரைக்கும். (யாத் 17:1)
5. ரெவிதீமிலிருந்து சீனாய் வரைக்கும். (யாத் 19:1-2)

ஆசியாவிலிருந்து எகிப்து தேசத்தைப் பாதுகாப்பதற்கு சூர் வனாந்தரத்தில் மிகப்பெரிய சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு மிக்தோல் கோட்டை என்று பெயர்.

இஸ்ரவேல் புத்திரர் மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடக்கிறார்கள். செங்கடலைக் கடந்து வந்த பின்பு, இது இஸ்ரவேலருக்கு ஏற்பட்ட முதலாவது சோதனை (யாத் 15:22-23).

இஸ்ரவேல் புத்திரர் சூர் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணியபோது அவர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் மாராவிலே வருகிறார்கள். மாராவிலே தண்ணீர் இருக்கிறது. ஆனால் மாராவின் தண்ணீர் கசப்பாயிருக்கிறது. அந்தத் தண்ணீரை இஸ்ரவேல் புத்திரரால் குடிக்க முடியவில்லை. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: "என்னத்தைக் குடிப்போம்" (யாத் 15:23,24) என்று சொல்லுகிறார்கள்.

மாரா என்பதற்கு கசப்பு என்று பொருள். இங்குள்ள துரவின் விட்டம் 8 அடி ஆகும். இதில் பொதுவாக 2 அடி உயரத்திற்குத் தண்ணீர் இருக்கும். இதிலுள்ள தண்ணீரை இப்பொழுதும் பருகமுடியாது. அது அமிலத்தன்மை கொண்டதாக இருக்கும். அரபியர்கள் தங்கள் ஒட்டகங்களுக்குக்கூட மாராவின் தண்ணீரைக் குடிக்கக் கொடுக்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணும்போது, அவர்களுக்கு மாராவிலே கசப்பான அனுபவம் ஏற்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நாம் இதுபோல கசப்பான அனுபவங்களை சந்திக்கிறோம். இதன் மூலமாக கர்த்தர் நமக்கு ஒரு சில ஆவிக்குரிய சத்தியங்களை கற்றுக்கொடுக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. வெளிச்சத்திற்கு முன்பாக இருள். (ஆதி 1:2-5)
2. இரட்சிப்பிற்கு முன்பாக வீழ்ச்சி (ஆதி 3)
3. ஆசீர்வாதத்திற்கு முன்பாக பலி. (ஆதி 4)
4. ஏலிமிற்கு முன்பாக மாரா. (யாத் 15:23-27)
5. கானானுக்கு முன்பாக வனாந்தரம். (யாத் 16)
6. உயர்வுக்கு முன்பாகத் தாழ்மை (லூக்கா 14:11)
7. ஜீவனுக்கு முன்பாக மரணம். (யோவான் 12:24)
8. பிரசவத்திற்கு முன்பாக வேதனை (யோவான் 16:21; கலா 4:19)
9. மீட்பிற்கு முன்பாக மீட்பின் கிரயம். (ரோமர் 5)
10. பொறுமைக்கு முன்பாக உபத்திரவம். (ரோமர் 5)
11. மகிமைக்கு முன்பாக பாடு (ரோமர் 8:18; 1பேதுரு 1:11; 1பேதுரு 4:13; 1பேதுரு 5:1)
12. வெகுமதி முன்பாக உழைப்பு (2கொரி 3:11-15)
13. கிரீடத்திற்கு முன்பாக சிலுவை (கலா 6:14; 2தீமோ 4:8)
14. வெற்றிக்கு முன்பாக யுத்தம். (2தீமோ 4:7-8)
15. மேற்கொள்வதற்கு முன்பாக சோதனை. (யாக் 1:12-16; வெளி 2:7,11,17)

மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே வழிநடத்திக்கொண்டு வருகிறார். அவர் மோசேயை இஸ்ரவேல் ஜனங்களுக்கு தலைவராக நியமித்திருக்கிறார். மோசே அவர்களுக்கு மேய்ப்பராயிருந்தாலும், கர்த்தரே அவர்களுக்கு பிரதான மேய்ப்பராயிருக்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறார்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பிக்கிறார்; மோசே அதை தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று (யாத் 15:25).

மோசே கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுகிறார். அவர் எப்போதெல்லாம் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுகிறாரோ, அப்போதெல்லாம் கர்த்தரிடத்திலிருந்து பதிலையும் பெற்றுக்கொள்கிறார். மோசே தன்னுடைய ஜெபத்திற்கு, கர்த்தரிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக்கொண்ட சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. மோசே பயந்தபோது தேவன் பதில் கொடுத்தார் (யாத் 3:10-12).
2. தேவன் தமது நாமத்தை வெளிப்படுத்தினார் (யாத் 3:13-15).
3. தேவன் அற்புதங்கள் மூலமாக மோசேக்குப் பதில் கொடுத்தார் (யாத் 4:1-9).
4. மோசேயை வாக்கு வல்லவனாக ஆக்குவதாகத் தேவன் வாக்குப் பண்ணினார் (யாத் 4:10-12).
5. மோசேக்கு உதவி புரிய தேவன் ஆரோனை அனுப்பினார்(யாத் 4:13-17).
6. தாம் மோசேயை அழைத்ததைத் தேவன் உறுதிபண்ணினார் (யாத் 5:22-6:8).
7. தேவன் மோசேயைப் பார்வோனுக்கு தேவனைப்போன்றவனாக்கினார் (யாத் 6:30-7:5).
8. தேவன் தவளைகளை அகற்றினார் (யாத் 8:8-15).
9. தேவன் வண்டுஜாதிகளை அகற்றினார் (யாத் 8:29-32).
10. தேவன் அக்கினியையும், கல்மழையையும் அகற்றினார் (யாத் 9:28-35).
11. தேவன் வெட்டுக்கிளிகளை அகற்றினார். (யாத் 10:18-20).
12. தேவன் செங்கடலை இரண்டாகப் பிரித்தார் (யாத் 14:15).
13. தேவன் கசப்பான தண்ணீரை மதுரமான தண்ணீராக மாற்றினார் (யாத் 15:24-25).
14. தேவன் கற்பாறையிலிருந்து தண்ணீர் வரவழைத்தார் (யாத் 17:4-7).
15. தேவன் இஸ்ரவேலரை மரணத்திலிருந்து விடுவித்தார் (யாத் 32:9-14).
16. மோசே தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டார் (யாத் 32:31-35).
17. மோசே கிருபையின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டார் (யாத் 33:12-17).
18. மோசே தேவனுடைய மகிமையின் ஒரு பகுதியைக் கண்டார் (யாத் 33:18-23)
19. மோசே தேவனுடைய நிச்சயத்தை கூடுதலாகப் பெற்றுக் கொண்டார் (யாத் 34:8-17).
20. அக்கினி அவிந்தது (எண் 11:2).
21. மாம்சபோஜனம் கொடுக்கப்பட்டது (எண் 11:10-23,31-35).
22. எழுபது மூப்பர்கள்மீது ஆவியானவர் வந்திறங்கினார் (எண் 11:14-25).
23. மிரியாம் குணமடைந்தாள் (எண் 12:13-16).
24. இஸ்ரவேல் புத்திரர் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (எண் 14:5-20).
25. கோராகுவின்மீது நியாயத்தீர்ப்பு வந்தது (எண் 16:4-33).
26. இஸ்ரவேல் புத்திரர் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (எண் 16:44-50).
27. சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவர்கள் குணமடைந்தார்கள் (எண் 21:5-9).

28. ஆரோன் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டார் (உபா 9:20).

29. இஸ்ரவேல் புத்திரர் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (உபா 10:10).

30. யோசுவாவின்மீது ஆவியானவர் வந்திறங்கினார் (உபா 34:9).

கர்த்தர் மோசேக்கு காண்பித்த மரம் மாராவின் தண்ணீருக்கு அருகாமையிலேயே இருக்கிறது. அந்த மரத்திற்கு கசப்பான தண்ணீரை மதுரமாக மாற்றும் சுபாவமுள்ளது. இந்த மரம் கசப்பான தண்ணீரை மதுரமாக மாற்றினாலும், கர்த்தரே அந்த மரத்தை மோசேக்கு காண்பித்திருக்கிறார். ஆகையினால் கசப்பான தண்ணீர் மதுரமாக மாறியதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரையே துதிக்கவேண்டும்.

கர்த்தர் இந்தப் பிரபஞ்சத்தில் மனுஷருக்கு பிரயோஜனமான ஏராளமான காரியங்களை சிருஷ்டித்திருக்கிறார். அந்த சிருஷ்டிகளெல்லாம் மனுஷருக்கு எவ்வாறு பிரயோஜனமாயிருக்கும் என்பதை கர்த்தரே நமக்கு வெளிப்படுத்துகிறார். இது கர்த்தருடைய கிருபை. கர்த்தர் தம்முடைய சிருஷ்டிப்பின் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்துவதற்காக, நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

வேதபண்டிதர்களில் சிலர், கர்த்தர் மோசேக்கு காண்பித்த மரத்தை, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அறைப்பட்ட சிலுவை மரத்தோடு ஒப்பிடுகிறார்கள். மோசேயின் காலத்தில், அந்த மரம் கசப்பான தண்ணீரை மதுரமாய் மாற்றிற்று. அதுபோலவே, புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிற விசுவாசிகளுக்கு, கிறிஸ்துவானவர் அறையப்பட்ட சிலுவை மரம் ஆறுதலையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறது.

கர்த்தர் மாராவின் தண்ணீரை மதுரமான தண்ணீராக மாற்றுகிறார். கர்த்தர் இதுபோல தண்ணீர் சம்பந்தமாக நடப்பித்த ஒரு சில அற்புதங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தண்ணீர் இரத்தமாக மாறிற்று. (யாத் 7:20-27).

2. செங்கடல் இரண்டாகப் பிரிந்தது. (யாத் 14:21-22).

3. எகிப்தியர் செங்கடலில் மூழ்கிப் போனார்கள். (யாத் 14:26-29; யாத் 15:8-19).

4. கசந்த மாரா மதுரமாக மாறிற்று. (யாத் 15:23-26).

5. பாறையிலிருந்து தண்ணீர் வந்தது. (யாத் 17: 5-7).

6. பாறையிலிருந்து மறுபடியும் தண்ணீர் வந்தது (எண் 20:7-13).

7. யோர்தான் நதி உலர்ந்து போயிற்று. (யோசு 3:13-4:23).

கர்த்தர் அங்கே இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு நியமத்தையும் ஒரு நியாயத்தையும் கட்டளையிடுகிறார். கர்த்தர் அங்கே அவர்களைச் சோதிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் இப்போது பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இனிமேல் வரப்போகிற காலத்திலும், கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று கர்த்தர் இங்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத் 15:26) என்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். அவர்கள் கர்த்தருடைய நியமங்கள் யாவையும் கைக்கொள்ளவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணியிருக்கிறார். அவர்கள் இனிமேல் எகிப்தியருக்கு அடிமைகளல்ல. தாங்கள் இனிமேல் அடிமைகளல்ல என்பதினால், தங்களுக்கு தாங்களே எஜமான்கள் என்று அவர்கள் தங்களைப்பற்றி நினைத்துக்கொள்ளக் கூடாது. கர்த்தரே அவர்களுக்கு எஜமானராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டாலும், அவர்கள் தங்களை நோக்கிப் பார்க்கும்போது, அவர்கள் தங்களை கர்த்தருடைய ஊழியக்காரராக நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தரே தங்களுடைய எஜமானர் என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதினால், அவர்கள் இப்போது கர்த்தருக்குரியவர்களாயிருக்கிறார்கள்.

"கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்" (சங் 116:16). நம்முடைய அடிமைத்தனத்தின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் நாம் கர்த்தரிடத்தில் அன்பின் கயிறுகளால் கட்டப்பட்டிருக்கிறோம்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தியருக்கு அடிமைகளாகயிருந்தபோது, அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஊழியக்காரராயிருக்கும்போது, அவர்களுக்கு அநேக நன்மைகள் உண்டாகும். அந்த நன்மைகளில் ஒன்றை கர்த்தர் இங்கு வாக்குத்தத்தமாக சொல்லுகிறார்.

"நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் எகிப்தியர்மீது பத்து வாதைகளை வரப்பண்ணினார். அந்த வாதைகளில் எதுவும் இஸ்ரவேல் புத்திரர்மீது வராது. இஸ்ரவேல் புத்திரர் இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய நியமங்கள் யாவையும் கைக்கொள்ளவேண்டும். தாங்கள் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்றும், தங்களுக்கு எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைத்திருப்பதினால், தாங்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டியதில்லை என்றும், தங்கள் இஷ்டம்போல தாங்கள் ஜீவிக்கலாம் என்றும் இஸ்ரவேல் புத்திரர் இறுமாப்பாய் நினைக்கக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், கர்த்தர் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் இஸ்ரவேல் புத்திரருக்கு வரப்பண்ணமாட்டார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நியமங்களைக் கைக்கொள்ளவில்லையென்றால், அவர் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் வரப்பண்ணுவார்.

கர்த்தரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. கர்த்தருடைய பார்வையிலே முரட்டாட்டம் பண்ணுகிற எகிப்தியரும், கலகம்பண்ணுகிற இஸ்ரவேலரும் ஒரே மாதிரியான ஜனமாகவே இருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பதன் அவசியத்தை புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால் தாங்கள் எவ்வளவு பெரிய கிரயம் செலுத்தவேண்டும் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் அறிந்திருக்கவேண்டும்.

"நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப்பண்ணுகிறார். மனுஷன் விதைத்ததை அறுக்கிறான். பாவத்தை விதைத்தவன் அநீதியை அறுக்கிறான். அவனுக்கு வியாதி வருகிறது (கலா 6:7-8) பாவத்திற்குத் தண்டனை வருகிறது. மனுஷனுடைய பாவத்தினால் அவனுக்குச் சாபங்கள் வருகிறது.

மனுஷன் பாவம் செய்யவில்லையென்றால் அவனுக்குச் சாபம் இல்லை. இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் நித்திய காலமாக ஆளுகை செய்யும்போது இங்கு வியாதி இராது (ஏசா 33:24; ஏசா 35:5-6). தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோன்று, பூமியில் செய்யப்பட்டால், ஒரு சாபமும் இங்கு இராது. (வெளி 21:1-22:6).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது, "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார். தேவன் தம்முடைய ஜனங்களைக் குணமாக்குகிறவர். இங்கு கர்த்தர் தம்மை யெகோவா-ரப்பாவாக வெளிப்படுத்துகிறார். தேவன் தம்முடைய பிள்ளைகளைக் குணப்படுத்துவதற்குச் சித்தம் உள்ளவர். அவர் தம்முடைய வார்த்தையினால் தம்முடைய பிள்ளைகளைக் குணப்படுத்துகிறார். அவர்களுடைய கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை (சங் 105:37; சங் 107:20).

வருங்காலத்தில் எந்த வியாதிகள் வந்தாலும், அதை எதிர்க்கும் சக்திகள் தம்முடைய பிள்ளைகளுக்கு உண்டாகும் என்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார். (யாத் 23:22-25; சங் 91; ஏசா 58). மனுக்குலத்தார், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், கலகம் பண்ணும்போது வியாதி அவர்களுக்கு ஒரு சாபமாக வருகிறது.

## ஏலிம்
## யாத் 15:27

**யாத் 15:27. பின்பு அவர்கள் ஏலிமுக்கு வந்தார்கள்; அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது; அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள்.**

இஸ்ரவேல் புத்திரர் மாராவிலிருந்து ஏலிமிற்கு வருகிறார்கள். ஏலிமிலே அவர்களுக்கு நல்ல தண்ணீரும் இருக்கிறது. அந்தத் தண்ணீர் அவர்களுக்கு போதுமான அளவும் கிடைக்கிறது. ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகள் இருக்கிறது. இஸ்ரவேலிலே பன்னிரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் ஒரு நீரூற்று வீதமாக, ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகள் இருக்கிறது. இதனால் அவர்கள் தங்கள் முற்பிதாக்கள் தங்களுக்குள் வாக்குவாதம்பண்ணிக்கொண்டதுபோல, ஏலிமிலே இப்போது வாக்குவாதம்பண்ண வேண்டிய அவசியமில்லை.

ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகள் மாத்திரமல்ல, அங்கே எழுபது பேரீச்ச மரங்களுக்கு இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஏலிமிலே தண்ணீர் அருகே பாளயமிறங்குகிறார்கள்.

தற்காலத்தில் ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகளுக்கு பதிலாக, ஒன்பது நீரூற்றுகள் மட்டுமே உள்ளன. மற்ற நீரூற்றுகளைக் காலப்போக்கில் மணல் மூடிவிட்டது.

## 16 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். தாங்கள் பட்டினி கிடந்து செத்துப்போவதாக சொல்லுகிறார்கள் (யாத் 16:1-3).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அற்புதமாக போஷிக்கவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார். கர்த்தர் தம்முடைய திட்டத்தை மோசேக்கு வெளிப்படுத்துகிறார் (யாத் 16:4-12).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாயங்காலத்திலே காடைகளையும், காலையிலே மன்னாவையும் போஜனமாக புசிக்கக்கொடுக்கிறார் (யாத் 16:13-15).

மன்னாவைப்பற்றிய கர்த்தருடைய கட்டளையும், அவருடைய பிரமாணமும் (யாத் 16:16-36).

### இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்பு யாத் 16:1-3

**யாத் 16:1. இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் ஏலிமைவிட்டுப் பிரயாணம் பண்ணி, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்தில் சேர்ந்தார்கள்.**

**யாத் 16:2. அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து:**

**யாத் 16:3. நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டபோது, தங்களோடுகூட ஒரு மாதத்திற்கு தேவையான மாவு, எண்ணெய் போன்ற பொருட்களை கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டு ஒரு மாதமாயிற்று. அவர்களிடத்திலுள்ள பொருட்களெல்லாம் செலவழிந்து விடுகிறது.

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் ஏலிமைவிட்டுப் பிரயாணம் பண்ணி, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்தில் சேருகிறார்கள் (யாத் 16:1). அவர்களிடத்தில் புசிப்பதற்கு போஜனமில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்த மாவு எண்ணெய் போன்ற பொருட்களெல்லாம் செலவழிந்துபோயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து முதலாம் மாதம் பதினைந்தாம் தேதியில் வெளியேறிப் போனார்கள். இப்பொழுது ஒருமாதம் பிரயாணம் பண்ணியிருக்கிறார்கள். (எண் 33:3). அவர்களுடைய பிரயாணம் மெதுவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சில சமயங்களில் பல நாட்கள் ஒருசில இடங்களில் தங்கியிருக்கிறார்கள். சீனாய் வனாந்தரத்திற்கு வரும்போது அவர்களுக்கு ஒருமாதமாயிற்று. (யாத் 19:1).

இந்த சூழ்நிலையில், அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள் (யாத் 16:2). தாங்கள் எல்லோரும் இந்த வனாந்தரத்திலே செத்துப்போவோமோ என்னும் பயம் இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் உண்டாயிற்று. அவர்கள் தங்களுடைய பசியையும் பட்டினியையும் மரணத்தோடு தொடர்புபடுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பன்னிரண்டு முறை முறுமுறுத்திருக்கிறார்கள். அவற்றில் இது நான்காவது முறுமுறுப்பாகும். (யாத் 5:19, யாத் 16:2, 7-12).

சீனாய் தீபகற்பமானது பரந்து விரிந்திருக்கும் பாலைவனப் பகுதி. இதன் வழியாக பெரிய சாலைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. எகிப்தியர்கள் வனாந்தரத்திலுள்ள சுரங்கங்களிலிருந்து செம்பையும், மற்ற உலோகங்களையும் எடுத்து இந்தச் சாலையின் வழியாக அனுப்புவது வழக்கம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தரை நம்பாமல், கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்களே" (யாத் 16:3) என்று சொல்லுகிறார்கள்.

மனுஷனுக்குச் சாதாரண பிரச்சனை வந்துவிட்டாலே அவன் குறைகூற ஆரம்பித்துவிடுவான். உணவு, உடை, பணம், வசதி ஆகியவை போதுமான அளவு இல்லையென்றால் மனுஷனுக்குத் திருப்தியிராது. மனுஷன் தன் சுய ஆசைகளுக்கு அடிமையாக இருக்கிறான். ஒருவனுடைய ஜீவியத்தைக் கர்த்தர் ஆளுகை செய்யவில்லையென்றால், அவன் சூழ்நிலைக் கைதியாகவே இருப்பான். இந்த வசனத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ருசியான போஜனபதார்த்தங்கள் கிடைக்கவில்லை யென்பதற்காக முறுமுறுக்கிறார்கள்.

இந்த வனாந்தரத்திலே தங்களை பட்டினி போட்டு கொல்லும்படியாகவே, மோசே தங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்று, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். கர்த்தர் இதுவரையிலும் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிட்டு, இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே செத்துப்போவது நலமாயிருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

தாங்கள் எகிப்து தேசத்தில் அப்பத்தையும் இறைச்சியையும் திருப்தியாக சாப்பிட்டதாக இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். தங்களுக்கு இந்த வனாந்தரத்திலே போஜனம் ஒன்றும் கிடைக்கவில்லை என்று முறுமுறுக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணினாலும், கர்த்தருடைய கரம் அவர்களை வழிநடத்துகிறது. கர்த்தர் அவர்களுக்கு பகலிலே மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் இருந்து, அவர்களை வழிநடத்துகிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய பிரசன்னத்திலும், அவருடைய வழிநடத்துதலிலும் திருப்தியடையவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே திருப்தியாய்ச் சாப்பிட்டதாக சொல்லுகிறார்கள். ஆனால் அந்த தேசத்தில் அவர்கள் திருப்தியாய்ச் சாப்பிட்டதற்கு வாய்ப்பு எதுவுமில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். எகிப்தியர்கள் அவர்களுக்கு சம்பளமும் கொடுக்கவில்லை. போஜனமும் கொடுக்கவில்லை. எகிப்தியரின் ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரரை கடினமாகவும், அதிகமாகவும் வேலை செய்ய வைத்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபோது, அவர்களோடுகூட அவர்களுடைய ஆடுமாடுகளும் வந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு பசிக்கும் என்றால், அவர்கள் தங்கள் ஆடுமாடுகளை அடித்து சாப்பிடலாம். ஆனால் அவர்களோ தங்களிடத்திலுள்ள ஆடுமாடுகளைப்பற்றி ஒன்றும் சொல்லாமல், இந்த வனாந்தரத்திலே, தாங்கள் பட்டினியினால் செத்துப்போவதாக சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் செய்து ஒரு மாதமாயிற்று. ஒரு மாதமும் கர்த்தருடைய பிரசன்னம் அவர்கள் மத்தியிலே அக்கினி ஸ்தம்பமாகவும், மேகஸ்தம்பமாகவும் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு கர்த்தருடைய பிரசன்னத்தில் திருப்தியில்லை. கர்த்தருக்குள் திருப்தியில்லாதவர்கள், இஸ்ரவேல் புத்திரரைப்போல முறுமுறுப்பார்கள். அவர்கள் தங்களுடைய பழைய வாழ்க்கையை மேன்மைப்படுத்தி பெரிதுபடுத்துவார்கள். தாங்கள் கர்த்தருக்குள் இருப்பதினால் இப்போது அதிகமான துன்பங்களை அனுபவிப்பதாக சொல்லுவார்கள்.

கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்களின் இருதயம் சுத்தமாயிராது. அவர்களிடத்தில் உண்மையிருக்காது. அவர்கள் சத்தியத்திற்கு விரோதமாகவும், யதார்த்தத்திற்கு விரோதமாகவும் பேசுவார்கள்.

## கர்த்தருடைய வார்த்தை
## யாத் 16:4-12

யாத் 16:4. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்.

யாத் 16:5. ஆறாம் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம் பண்ணிவைக்கக்கடவர்கள் என்றார்.

யாத் 16:6. அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரையும் நோக்கி: கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்;

யாத் 16:7. விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்.

யாத் 16:8. பின்னும் மோசே: சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்குக் கர்த்தர் உங்களுக்கு இறைச்சியையும், விடியற்காலத்தில் நீங்கள் திருப்தியடைகிறதற்கு அப்பத்தையும் கொடுக்கையில் இது விளங்கும்; கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான்.

யாத் 16:9. அப்பொழுது மோசே ஆரோனைப் பார்த்து; நீ இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் சேருங்கள், அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டார் என்று சொல் என்றான்.

யாத் 16:10. ஆரோன் இஸ்ரவேல் புத்திரராகிய சபையாருக்கெல்லாம் இதைச் சொல்லுகிறபோது, அவர்கள் வனாந்தரதிசையாகத் திரும்பிப் பார்த்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை மேகத்திலே காணப்பட்டது.

யாத் 16:11. கர்த்தர் மோசேயை நோக்கி:

யாத் 16:12. இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்; நீ அவர்களோடே பேசி, நீங்கள் சாயங்காலத்தில் இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியாகி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்து கொள்வீர்கள் என்று சொல் என்றார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாகவும், ஆரோனுக்கு விரோதமாகவும் முறுமுறுக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையும் இரக்கமுமுள்ள வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் குறைவில்லாமல் திருப்தியாய்ப் போஷிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தையும் விருப்பத்தையும் மோசேக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கும்போது, அவர் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தர் தங்களை கைவிட்டுவிட்டாரோ என்று நினைத்து மோசே பயப்படக்கூடாது. மோசே கர்த்தரை சந்தேகப்படக்கூடாது. வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருப்பதற்கு பதிலாக, எகிப்து தேசத்திலே தனியாகயிருந்தால் தனக்கு நலமாயிருக்கும் என்று மோசே நினைக்கக்கூடாது.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய முறுமுறுப்பை கவனித்துக் கேட்கிறார். இஸ்ரவேல் புத்திரர் முறுமுறுத்தாலும், கர்த்தர் அவர்கள்மீது கிருபையுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய மனதின் விருப்பத்தையும், திட்டத்தையும் மோசேக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்" (யாத் 16:4) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு போஜனத்தைக் கொடுக்கும்போதே, அவர்களை சோதிக்கவும் செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தம்மை நம்புகிறார்களா, தம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறார்களா என்பதையெல்லாம் கர்த்தர் சோதித்து பார்க்க விரும்புகிறார்.

கர்த்தர் தங்களுடைய அன்றாட போஜனத்தைக் கொடுப்பார் என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். கர்த்தர் ஒவ்வொரு நாளும் தங்களை போஷிப்பார் என்று நம்பிக்கையோடிருக்கவேண்டும். இன்றையதினத்திலே தங்களைப் போஷிக்கிற கர்த்தர், நாளைய தினத்திலும் தங்களைப் போஷிப்பார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தமக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பார்களா என்பதையும், தம்மை சேவிப்பார்களா என்பதையும் கர்த்தர் சோதித்து அறிய விரும்புகிறார். அவர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய திட்டத்தை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் வாரத்தில் ஆறுநாட்களுக்கு அவர்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப் பண்ணுவார். ஏழாவது நாளில் அவர் வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப் பண்ணமாட்டார். கர்த்தர் ஏழாம் நாளிலே அப்பத்தை வருஷிக்கப்பண்ணாவிட்டாலும், அந்த நாளிலே அவர்களை பட்டினியாகவும் விடமாட்டார். கர்த்தர் அவர்களை ஏழாம் நாளிலும் போஷிப்பார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆறாம் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம் பண்ணிவைக்கக்கடவர்கள்" (யாத் 16:5) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஆறாம் நாளில் சேர்த்ததை, ஏழாம் நாளில் புசிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய திட்டத்தை மோசேக்கு சொல்லுகிறார். மோசேயும் ஆரோனும், கர்த்தருடைய திட்டத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்கள். மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரையும் நோக்கி, "கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்: விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம்" (யாத் 16:6,7) என்று சொல்லுகிறார்கள்.

மனுஷனுடையஎல்லா வார்த்தைகளையும் தேவன் கேட்கிறார். அவனுடைய எல்லா செயல்களையும் தேவன் பார்க்கிறார். மனுஷன் செய்யும் நன்மை தீமைகளுக்கு மனுஷனே பொறுப்பானவன். (மத் 12:36-37; ரோமர் 2:12-16; 2கொரி 3:11-15). தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாகச் செய்யப்படும் எந்தப் பாவமும், கர்த்தருக்கு விரோதமாகச் செய்யப்படும் பாவமாகவே கருதப்படுகிறது. (1சாமு 8:7; 2கொரி 8:12).

இந்த வசனத்தில் ஆரோன் மோசேயின் தீர்க்கதரிசியாகயிருக்கிறார். மோசே பார்வோனுக்கு முன்பாக நின்றபோது, ஆரோன் பார்வோனுக்கு தீர்க்கதரிசியாயிருந்தார். இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் நோக்கி சொல்லவேண்டிய வார்த்தைகளை மோசே ஆரோனுக்கு சொல்லுகிறார். மோசே ஆரோனை நோக்கி, "கர்த்தருடைய சந்நிதியில் சேருங்கள், அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டார் என்று சொல்" (யாத் 16:9) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். கர்த்தரோ அவர்களுடைய முறுமுறுப்புக்களையும் கேட்கிறார். தாங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்ததாக இஸ்ரவேல் புத்திரர் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமக்கு விரோதமாக முறுமுறுத்ததாக கர்த்தர் அவர்கள்மீது குற்றப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை ஆதரிக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகப் பேசப்படும் வார்த்தைகள், கர்த்தருக்கு விரோதமாக பேசப்படும் வார்த்தைகளாயிருக்கும்.

கர்த்தர் ஒரு சில ஊழியக்காரர்களை நம்மைஆசீர்வதிப்பதற்காக பயன்படுத்துகிறார். வேறு சில சமயங்களில் நம்மைக் குற்றப்படுத்துவதற்காகவும், நம்மை கடிந்து கொண்டு நமக்கு புத்திசொல்லுவதற்காகவும் கர்த்தர் ஒரு சில ஊழியக்காரர்களை பயன்படுத்துகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள்,கர்த்தரால் பயன்படுத்தப்படும் கருவிகளாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறார்கள். ஆகையினால் நாம் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகப் பேசும்போது அல்லது அவர்களைக் குற்றப்படுத்தும்போது, மிகவும் எச்சரிப்போடு பேசவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பட்டினியாயிருப்பதாக சொல்லுகிறார்கள். கர்த்தரோ அவர்களுக்கு வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கப்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் எகிப்து தேசத்திலே திருப்தியாய் இறைச்சியைப் புசித்ததாக சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு இந்த வனாந்தரத்திலே இறைச்சியையும், அப்பத்தையும் திருப்தியாக புசிக்கக்கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்குக் கர்த்தர் உங்களுக்கு இறைச்சியையும், விடியற்காலத்தில் நீங்கள் திருப்தியடைகிறதற்கு அப்பத்தையும் கொடுக்கையில் இது விளங்கும்; கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது" (யாத் 16:8) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்முடைய அற்புதங்களைத் தொடர்ந்து செய்து வருகிறார். எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுதலை பண்ணி அழைத்து வருகிறவர் தாமே என்பதைக் கர்த்தர் ஜனங்கள் மத்தியில் அற்புதங்கள் மூலமாக நிரூபிக்கிறார். கர்த்தர் அவர்களோடுகூட இருந்து, அவர்களைக் கானானுக்கு வழிநடத்திச் செல்கிறார். கர்த்தர் இதுவரையிலும் செய்த அற்புதங்களே இஸ்ரவேல் ஜனங்களுக்குப் போதுமானது. ஆனாலும் அவர்களுக்கு அவிசுவாசம் உண்டாயிற்று. தேவன் தொடர்ந்து அற்புதம் செய்ய வேண்டியதாயிற்று.

தேவன் இப்பொழுது அநுதினமும் அற்புதத்தைச் செய்கிறார். தெய்வீக அற்புதத்தினால் சாயங்கால வேளையில் அநுதினமும் காடைகள் வருகிறது. அதுபோலவே காலை வேளையில் அநுதினமும் மன்னா பெய்கிறது. வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு போதுமான ஆகாரம் தேவனுடைய வல்லமையினால் அற்புதமாகக் கொடுக்கப்படுகிறது. (யாத் 16:12-15,21-30).

எண் 11:4-9 ஆகிய வசனங்களை வாசிக்கும்போது அப்பங்கள் மட்டுமே தினமும் பெய்ததாகவும், காடைகள் தினமும் வரவில்லை என்பதும் தெரியவருகிறது. ஏனெனில் ஜனங்கள் தங்களிடத்தில் மன்னா இருக்கிறது. புசிப்பதற்கு மாம்சம் இல்லையென்று முறுமுறுக்கிறார்கள். தேவன் மறுபடியுமாக இஸ்ரவேல் ஜனத்தாருக்குக் காடைகளை வாக்குப் பண்ணுகிறார். ஓரிரு நாட்களுக்கல்ல, ஒரு மாதமாகக் காடைகள் வருகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் காடைகளை நோய்வாய்ப்படும் அளவிற்கு புசிக்கிறார்கள். (எண் 11:18-34).

வனாந்தரத்தில் மன்னா நாற்பது வருஷங்களாகத் தொடர்ந்து பெய்கிறது. (யாத் 16:35, உபா 8:3,16; யோசு 5:12; சங் 78:24; யோவான் 6:31,49,58). ஒரு பாத்திரத்தில் மன்னாவை வைத்து, உடன்படிக்கைப் பெட்டியில் அதை வைக்கிறார்கள். தேவனுடைய அற்புதமான பராமரிப்பிற்கு நினைவுகூருதலாக இது உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், காடையின் மாம்சம் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்படவில்லை (யாத் 16:33; எபி 9:4).

பரிசுத்த வேதாகமத்தில் மகிமை என்னும் பொருளைக் கொடுப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் 12 எபிரெய வார்த்தைகளும், புதிய ஏற்பாட்டில் 10 கிரேக்க வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய மகிமையை ஜனங்கள் கண்டார்கள் என்று கூறும்போது, தேவனுடைய பிரத்தியட்சமான வெளிப்பாட்டை, அல்லது அவருடைய வல்லமையை ஜனங்கள் கண்டார்கள் என்று அந்த வாக்கியம் பொருள்படும் (யாத் 16:7,10; யாத் 24:16-17). தேவன் வாசம் பண்ணும் மகிமையைக் காணவேண்டுமென்று மோசே விரும்பினார். ஆனால் அவரால் தேவனுடைய மகிமையை முழுமையாகக் காணமுடியவில்லை (யாத் 33:18, 1தீமோ 6:16).

இப்பிரபஞ்சத்தில் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது, நாம் நினைப்பதற்கும் அதிகமாய் நம்மை ஆசீர்வதிக்கிறார் என்று சொல்லுகிறோம். அதுபோலவே கர்த்தர் இந்த வனாந்தரத்தில், இஸ்ரவேல் புத்திரரை, அவர்கள் நினைப்பதற்கும் அதிகமாய் போஷிக்கிறார். ஒரு சிலருக்கு தங்கள் போஜனத்தைப்பற்றி சரியான விளக்கம் தெரியவில்லை. தாங்கள் எதற்காக புசிக்கிறோம் என்பதுகூட தெரியாமல், சிலர் போஜனம் பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தர் தங்களை போஷிக்கிறார் என்பதை விளங்கிக்கொள்வதற்காக, புசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சாயங்காலத்திலே இறைச்சியையும், காலையிலே அப்பத்தையும் திருப்தியாகப் புசிக்கும்போது, கர்த்தர் தங்களை எகிப்து தேசத்தில் புறப்படப்பண்ணினவர் என்பதை அறிந்துகொள்ளவேண்டும் (யாத் 16:6). ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு, தங்களை எகிப்து தேசத்திலிருந்து கர்த்தரே புறப்படப்பண்ணினவர் என்பது தெரியவில்லை. மோசேயும் ஆரோனும் எகிப்திலிருந்து தங்களைப் புறப்படப்பண்ணினார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் அவர்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள் (யாத் 16:3).

கர்த்தரே தங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்வதோடு, அவரே தங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். மோசே இந்த சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு விளக்கி சொல்லவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்; நீ அவர்களோடே பேசி, நீங்கள் சாயங்காலத்தில் இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியாகி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்து கொள்வீர்கள் என்று சொல்" (யாத் 16:11,12) என்று சொல்லுகிறார்.

தேவன் இரண்டாம் முறையாகத் தாம் அற்புதம் செய்வதற்கான காரணத்தை வலியுறுத்துகிறார். (யாத் 16:6,12). இன்னும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அவிசுவாசம் காணப்படுகிறது. தம்முடைய ஜனங்களுடைய உள்ளத்திலிருந்து அவிசுவாசத்தை முழுவதுமாக அகற்றிப்போட வேண்டுமென்று தேவன் தொடர்ந்து முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவரோடுகூடவே இருந்தபோதிலும், அவர்களிடத்தில் பல வேளைகளில் அவிசுவாசம் காணப்பட்டது (லூக்கா 13:6-9) தம்முடைய பிள்ளைகளின் அவிசுவாசத்திற்காகவும், இருதயக் கடினத்திற்காகவும் தேவன் அவர்களைக் கடிந்து கொண்டார். (மாற்கு 16:14).

கர்த்தர் எகிப்தியர்மீது வாதைகளை வரப்பண்ணினார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை எகிப்தியர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக கர்த்தர் அவர்கள்மீது வாதைகளை வரப்பண்ணினார். இப்போது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாயங்காலத்திலே இறைச்சியையும், விடியற்காலத்திலே அப்பத்தையும் புசிக்கக்கொடுக்கிறார். இதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன் என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரராகிய சபையாருக்கெல்லாம்இதைச்சொல்லுகிறபோது, அவர்கள் வனாந்தரதிசையாகத் திரும்பிப் பார்க்கிறார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை மேகத்திலே காணப்படுகிறது (யாத் 16:10). கர்த்தர் தாமே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் தம்முடைய மகிமையை பிரத்தியட்சமாய் வெளிப்படுத்துகிறார். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுப்பதை நிறுத்தவேண்டும் என்பதும், இஸ்ரவேல் புத்திரர் அவர்களை கனம்பண்ணவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

## காடையும் மன்னாவும் யாத் 16:13-21

**யாத் 16:13. சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக் கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது.**

**யாத் 16:14. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது.**

**யாத் 16:15. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம்.**

**யாத் 16:16. கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால், அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக் கொள்ளக்கடவன் என்றான்.**

**யாத் 16:17. இஸ்ரவேல் புத்திரர் அப்படியே செய்து, சிலர் மிகுதியாயும் சிலர் கொஞ்சமாயும் சேர்த்தார்கள்.**

**யாத் 16:18. பின்பு, அதை ஓமரால் அளந்தார்கள்: மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியானதும் இல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள்.**

**யாத் 16:19. மோசே அவர்களை நோக்கி: ஒருவனும் விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் வைக்கக்கூடாது என்று அவர்களுக்குச் சொல்லியும்;**

**யாத் 16:20. மோசேயின் சொல் கேளாமல், சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. அவர்கள்மேல் மோசே கோபங்கொண்டான்.**

**யாத் 16:21. அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள், வெயில் ஏறஏற அது உருகிப்போம்.**

கர்த்தருடைய கரம் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கிறது. கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின பிரகாரமாக வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கப்பண்ணுகிறார். இரவு வேளையிலே இஸ்ரவேல் ஜனத்தார் விருந்து போஜனம் பண்ணுவதுபோல இறைச்சியை புசிக்கிறார்கள். சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக் கொள்கிறது (யாத் 16:13).

காடைகள் புசிப்பதற்கு சுவையாகயிருக்கும். அவை திரளான எண்ணிக்கையில் இஸ்ரவேல் புத்திரருடைய பாளயத்திற்கு வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் காடைகளை வேட்டையாடுவதற்கு எங்கும் போகவேண்டியதில்லை. காடைகளே அவர்களை தேடி வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு தேவையான காடைகளை பிடித்து அதன் இறைச்சியை திருப்தியாய்ப் புசிக்கிறார்கள்.

விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருக்கிறது. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடக்கிறது (யாத் 16:13,14). மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரருடைய பாளத்தின்மீது வானத்திலிருந்து மன்னா மழையைப்போல பெய்கிறது. இந்த மன்னாவே கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின போஜனமாகும். இது அவர்களுக்கு அன்றன்றுள்ள அப்பத்தைக் கொடுக்கிறது.

தீர்க்கதரிசனம் ஏற்ற வேளையில் நிறைவேறும். மோசே சொன்ன பிரகாரமாக காடையும், மன்னாவும் வரவில்லையென்றால், மோசே ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாகக் கருதப்படுவார். மோசே தேவனுடைய வார்த்தையை அறிவித்தார். மோசே சொன்ன பிரகாரமாகவே, சாயங்காலத்தில் காடைகள் வந்து, விழுந்து, பாளயத்தை மூடிக்கொள்கிறது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் அதிகாலையின் குளிர்ச்சியானவேளையில் மன்னாவைச் சேகரிக்க வேண்டும். வெயில் ஏறும்போதோ மன்னா உருகிப்போகும் (யாத் 16:21; எண் 11:9).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலிருக்கும் காலத்தில் கர்த்தர் அவர்களுக்கு மன்னாவை மாத்திரமே புசிக்கக் கொடுக்கிறார். வேறு போஜனம் எதுவும் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் கொடுக்கும் மன்னா அவர்களுடைய சரீரத்தின் ஆரோக்கியத்தைப் பெலப்படுத்துகிறது. அவர்களுக்கு தெம்பையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது. அவர்களுடைய பசியை நீக்கி திருப்தியைக் கொடுக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பு மன்னாவை பார்த்ததில்லை. அது வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்துபோல இருக்கிறது. அது உறைந்த பனிக்கட்டி பொடியத்தனையாக தரையின்மீது கிடக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, "இது என்ன" என்று கேட்கிறார்கள் (யாத் 16:15).

"மன்னா" என்னும் வார்த்தையில் இரண்டு எபிரெய வார்த்தைகள் சேர்ந்துள்ளன. இவை "மன்-ஆ" என்பதாகும். இந்த வார்த்தைகளுக்கு "இது என்ன?" அல்லது "இது என்ன அப்பம்" என்று பொருள். மன்னா என்பது தேவன் தெய்வீகமாகக் கொடுத்திருக்கும் அப்பமாகும்.

மன்னா என்பது தெய்வீக அப்பம். இது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு புசிக்க கொடுத்த அப்பம். பரிசுத்த வேதாகமத்தில் இந்த மன்னாவைப்பற்றி மிகவும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கின பின், மன்னா தரையின்மேல் கிடந்தது. (யாத் 16:13-14).

2. இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும். இதற்கு முன்பு, இயற்கையாக இதுபோன்று மன்னா பெய்ததில்லை. (யாத் 16:8,12).

3. ஜனங்களுடைய தேவையைத் தேவன் பராமரிக்கிறவர் என்பதை நிரூபிப்பதற்காக இது தேவன் திட்டமிட்ட அற்புதமாகும் (யாத் 16:6,8,12).

4. சீனாய் வனாந்தரப் பகுதியில் இயற்கையாக மன்னா விளையுமென்றால், ஜனங்களுக்கு அதற்கு முன்பாகவே அது போஜனமாகக் கிடைத்திருக்கும். (யாத் 16:14).

5. மன்னா ஒரு தெய்வீக அப்பம். ஆகையினால் நாற்பது வருஷத்தின் ஆரம்பத்தில் இது முதல் முறையாகக் கிடைக்கிறது. நாற்பது வருஷம் முடிந்தபின்பு, மன்னா பெய்வது நின்றுபோயிற்று. (யாத் 16:35; யோசு 5:12).

6. மன்னா பெய்வதற்கு முன்பாக ஜனங்களுக்கு இது என்ன என்று தெரியவில்லை. நாற்பது வருஷங்களுக்குப் பின்பு, யாரும் மன்னாவைப் பார்த்ததில்லை. (உபா 8:3,16;யோசு 5:12).

7. தேவன் மன்னாவை வானத்திலிருந்து பெய்யப் பண்ணினார். (சங் 78:24; யோவான் 6:31-32).

8. ஒவ்வொரு வாரமும் ஆறு நாட்களுக்கு மன்னா பெய்தது. ஓய்வுநாளில் மன்னா பெய்யவில்லை. (யாத் 16: 24-27).

9. ஓய்வுநாளைத் தவிர மற்ற நாளில் இரண்டாம் நாளுக்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த மன்னா கெட்டுப் போயிற்று. (யாத் 16:19-23).

10. மன்னா செடிகளிலிருந்து வளரவில்லை. இது தரையில் காணப்பட்டது. (யாத் 16:14).

11. மன்னாவின் ஒரு பகுதியை ஒரு பாத்திரத்தில் எடுத்து, உடன்படிக்கைப் பெட்டியில் ஒரு ஞாபகார்த்தமாக வைத்திருந்தார்கள். பல நூறு வருஷங்களுக்குப் பெட்டிக்குள் மன்னா இருந்தபோதிலும், அது கெட்டுப் போகவில்லை. (யாத் 16:19-20,33; எபி 9:4).

12. வெயில் ஏறஏற மன்னா உருகிப்போகும். (யாத் 16:21,33; எபி 9:4).

13. மன்னாவானது வானத்திலிருந்து வரும் தேவதூதரின் போஜனமாகும். (யாத் 16:4; சங் 78:25; யோவான் 6:31-32)

14. மன்னாவைத் தேவன் வானத்திலிருந்து அனுப்பினார் என்று இயேசு கிறிஸ்து சாட்சி பகர்ந்திருக்கிறார். மோசே இதை அனுப்பவில்லை. (யோவான் 6:31-32). தேவனே மன்னாவை அனுப்பியதாக மோசேயும் கூறியிருக்கிறர். (யாத் 16:6,8,12,15)

பரிசுத்த வேதாகமத்தில் மன்னாவைப்பற்றி ஒரு சில கட்டளைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஒவ்வொருவரும் அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் ஐந்து நாட்களுக்கு இவ்வாறு சேர்க்க வேண்டும். (யாத் 16:16-23).

2. சேகரித்த மன்னாவை அந்தந்த நாளில் புசித்து விடவேண்டும். ஒருவனும் விடியற்கால மட்டும் அதில் ஒன்றும் வைக்கக்கூடாது. (யாத் 16:19).

3. ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத்தனையாய் ஆகாரம் சேர்க்க வேண்டும். ஒரு பங்கு ஆறாம் நாளுக்கும், மற்றொரு பங்கு ஓய்வுநாளுக்கும் உரியது. (யாத் 16:22-30).

4. ஆறாம் நாளில் சேகரித்த இரண்டு பங்கு மன்னாவை அன்றைய தினமே சுட்டு வேவிக்க வேண்டும். ஓய்வுநாளில் சுடவோ, வேவிக்கவோ கூடாது. (யாத் 16:23-30).

கர்த்தர் வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கப்பண்ணியிருக்கிறார். ஆனால் இந்த அப்பம் விசேஷமானது. இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் இந்த அப்பத்தை புசித்ததுமில்லை. பார்த்ததுமில்லை. மோசே இந்த அப்பத்தைப்பற்றி அவர்களுக்கு விளக்கி சொல்லுகிறார்.

மோசே அவர்களை நோக்கி, "இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம். கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால், அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக் கொள்ளக்கடவன்" (யாத் 16:15,16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்க்கவேண்டும். வெயில் ஏறஏற அது உருகிப்போம் (யாத் 16:21). ஜனங்கள் போய் ஒவ்வொரு நாளுக்கும் வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார் (யாத் 16:4).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒவ்வொரு நாளும் வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கப்பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு ஜெபம்பண்ண கற்றுக்கொடுத்தபோது, "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு தாரும்" என்று சொன்னார்.

கர்த்தர் வானத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரருக்கு அப்பத்தை வருஷிக்கப்பண்ணுவதன் மூலமாக, அவர்களுக்கு ஒரு சில சத்தியத்தை கற்றுக்கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக கிருபையினாலும், பராமரிப்பினாலும் நமக்கு போஜனம் கொடுக்கிறார். கர்த்தர் கொடுக்கும் போஜனம் நமக்கும், நம்முடைய குடும்பத்திற்கும் போதுமானதாகயிருக்கும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் கொடுப்பதை, நாம் ஒவ்வொரு நாளிலும் சுறுசுறுப்பாக வேலை செய்து சேர்த்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் நமக்கு கொடுக்கும் போஜனத்தில் நாம் திருப்தியோடிருக்கவேண்டும். அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாக அதில் எடுத்து சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் புசிக்கும் போஜனம் நமக்கு போதுமானது என்று நினைப்பதே மெய்யான விருந்து. போஜனத்தில் திருப்தியில்லாதவர்கள் பெருந்தீனி உண்டு தங்களுடைய சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்துப்போடுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கப்பண்ணி அவர்களை போஷிக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் வானத்திலிருந்து அப்பத்தை திரளாக வருஷிக்கப்பண்ணினாலும், ஒவ்வொருவரும் அதை எவ்வளவு சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் கட்டளைகொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமாக கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால், "அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக் கொள்ளக்கடவன்" என்பதாகும். இஸ்ரவேல் புத்திரர் அப்படியே செய்து, சிலர் மிகுதியாயும் சிலர் கொஞ்சமாயும் சேர்க்கிறார்கள் (யாத் 16:6,17).

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கதாக மன்னாவை சேர்க்கிறார்கள். பின்பு, அதை ஓமரால் அளக்கிறார்கள்: மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியானதும் இல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்க்கிறார்கள் (யாத் 16:18). அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்க்கிறார்கள், வெயில் ஏறஏற அது உருகிப்போம் (யாத் 16:21).

மோசே அவர்களை நோக்கி, "ஒருவனும் விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் வைக்கக்கூடாது" (யாத் 16:19) என்று சொல்லியிருக்கிறார். ஆனால் மோசேயின் சொல் கேளாமல், சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைக்கிறார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றமெடுக்கிறது. அவர்கள்மேல் மோசே கோபங்கொள்கிறார் (யாத் 16:20).

தேவனுடைய சத்தத்தைக் கேட்டும் இஸ்ரவேல் ஜனங்கள் வேண்டுமென்றே தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகிறார்கள். இந்த அதிகாரத்தில் மட்டும் அவர்கள் இரண்டு முறை கீழ்ப்படியாமல் போனதற்கான குறிப்பு உள்ளது. (யாத் 16:20,27-30). முதல் முறை மோசே அவர்கள்மீது கோபப்பட்டார். இரண்டாம் முறை தேவன் அவர்கள்மீது கோபப்படுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, "ஒருவனும் தாங்கள் சேர்த்த மன்னாவில் விடியற்காலமட்டும் ஒன்றும் மீதியாக வைக்கக்கூடாது" என்று கட்டளை கொடுத்திருக்கிறார். அவர்கள் இரவு வேளையிலே தங்கள் படுக்கைக்குப் போகும்போது, மறுநாள் காலையிலே அவர்களுக்கு தேவைப்படும் போஜனம் அவர்களுடைய வீட்டில் இருக்கக்கூடாது.

தங்கள் வீட்டில் மறுநாளைக்கு தேவையான போஜனம் இல்லாவிட்டாலும், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் படுக்கையிலே சமாதானமாக படுத்து தூங்க கற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய கூடாரங்களிலும், அவர்களுடைய பாளயங்களிலும், போஜனம் இல்லாவிட்டாலும், மறுநாளுக்கு தேவையான போஜனத்தை கர்த்தர் கொடுப்பார் என்று நம்பி, கர்த்தருக்குள் சமாதானமாக படுத்து தூங்கவேண்டும்.

ஆனால் ஒரு சிலரோ கர்த்தரையும் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பையும் நம்பாமல், தாங்கள் சேகரித்த மன்னாவில், கொஞ்சம் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கிறார்கள். ஆனால் அந்த மன்னா அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. அது பூச்சி பிடித்து நாற்றமெடுக்கிறது. மறுநாள் காலையிலே வனாந்தரம் எங்கும் மன்னா பெய்திருக்கிறது. தங்கள் கூடாரத்திலே மீதியாக வைக்கப்பட்ட மன்னாவோ பூச்சி பிடித்து நாற்றமெடுக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய வார்த்தையை நம்பவேண்டும். கர்த்தர் நமக்கு அன்றன்றுள்ள போஜனத்தைக் கொடுப்பார் என்று, கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, விசுவாசத்தோடு ஜீவிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே அற்புதமாகப் போஷித்த கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன் என்பதையும், அவர் நம்மையும் போஷிக்க வல்லவர் என்பதையும் நாம் விசுவாசிக்கவேண்டும்.

வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் தேவையான அப்பத்தை கர்த்தர் ஒவ்வொரு நாளும் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தர் கொடுக்கும் மன்னாவை கிரயம் செலுத்தாமல் இலவசமாகப் பெற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை இதுபோல நாற்பது வருஷங்களாக போஷித்து, வனாந்தரத்திலே வழிநடத்தி வருகிறார்.

கர்த்தர் சர்வசிருஷ்டிகர். அவர் எல்லா ஜீவராசிகளுக்கும் போஜனம் கொடுக்கிறார். தானியம் ஏற்ற காலங்களில் விளைகிறது. இயற்கையிலே பருவகாலங்கள், அதனதன் காலங்களில் மாறி மாறி வருகிறது. இந்தப் பூமியிலுள்ள ஜீவராசிகளுக்கு தேவையான போஜனம் கிடைக்கிறது. இவையெல்லாமே கர்த்தருடைய பெரிதான கிருபை. இது அவருடைய தெய்வீக பராமரிப்பு.

## ஓய்வுநாள்
## யாத் 16:22-31

**யாத் 16:22. ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத்தனையாய் ஆகாரம் சேர்த்தார்கள்; அப்பொழுது சபையின் தலைவர் எல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவித்தார்கள்.**

**யாத் 16:23. அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான்.**

**யாத் 16:24. மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள் வரைக்கும் வைத்துவைத்தார்கள்; அப்பொழுது அது நாறவும் இல்லை, அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை.**

**யாத் 16:25. அப்பொழுது மோசே: அதை இன்றைக்குப் புசியுங்கள்; இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள்.**

**யாத் 16:26. ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது என்றான்.**

**யாத் 16:27. ஏழாம்நாளில் ஜனங்களில் சிலர் அதைச் சேர்க்க புறப்பட்டார்கள்; அவர்கள் அதைக் காணவில்லை.**

**யாத் 16:28. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?**

**யாத் 16:29. பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டுநாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்க வேண்டும் என்றார்.**

**யாத் 16:30. அப்படியே ஜனங்கள் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்கள்.**

**யாத் 16:31. இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிட்டார்கள்; அது கொத்துமல்லி அளவாயும் வெண்மைநிறமாயும் இருந்தது; அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது.**

வாரத்தில் ஒருநாள் கர்த்தருக்கு பரிசுத்த ஓய்வுநாளாயிருக்கிறது. கர்த்தர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோது, ஓய்வுநாளையும் பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளில் ஒரு வேலையும் செய்யக்கூடாது. ஏழாம் நாள் அவர்களுக்கு ஓய்வுநாள். ஏழாம் நாளுக்கு தேவையானதை அவர்கள் ஆறாம் நாளிலே செய்து முடித்துக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத்தனையாய் ஆகாரம் சேர்க்கிறார்கள்; அப்பொழுது சபையின் தலைவர் எல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவிக்கிறார்கள் (யாத் 16:22). கர்த்தர் அவர்களுக்கு ஆறாம் நாளிலே இரண்டு நாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார் (யாத் 16:29).

ஏழாம் நாளிலே இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரும் எந்த வேலையும் செய்யக்கூடாது. கர்த்தர் ஏழாம் நாளை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். அது கர்த்தருக்கு பரிசுத்தமான ஓய்வுநாள். ஏழாம் நாளில் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருப்பதினால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் உண்டாகாது. கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் ஒருபோதும் நஷ்டப்பட்டு போகமாட்டார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு, ஆறாம் நாளிலே அவர்கள் என்ன செய்யவேண்டும் என்றும், ஏழாம் நாளிலே அவர்கள் என்ன செய்யக்கூடாது என்றும் கர்த்தருடைய கட்டளையை எடுத்துச் சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச்சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள்" (யாத் 16:23) என்று சொல்லுகிறார்.

"கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு" என்று முதல் முறையாக மனுஷனுக்குரிய ஓய்வைப் பற்றி இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆதி 2:2 ஆவது வசனத்தில் தேவன் ஓய்ந்திருந்தார். அதற்கு 2,513 வருஷங்களுக்கு பின்பு, இப்பொழுது "ஓய்வுநாளைப்" பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள் என்னும் வார்த்தை ஒருமையில் 76 தடவைகளும், பன்மையில் 35 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் ஓய்வுநாளைப்பற்றிய சத்தியம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. "சாபத்" "ஏழாவது" ஆகிய இரண்டு வார்த்தைகளும் ஒரே வார்த்தையிலிருந்து வரவில்லை. சாபத் என்பதற்கான எபிரெய வார்த்தை "சப்பத்" என்பதாகும். இதற்கு வேலை செய்வதிலிருந்து ஓய்வு எடுத்தல், இடைவேளை என்று பொருள். இந்த எபிரெய வார்த்தை "சாபத்" என்னும் வினைச்சொல்லிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு ஓய்ந்திரு என்று பொருள். இந்த ஓய்வை ஏழாவது நாளில்தான் எடுக்கவேண்டும் என்னும் நியதி எதுவும் இல்லை. ஒரு வேலை செய்வதிலிருந்து ஓய்வு எடுப்பதினால் இது "சப்பத்" என்றழைக்கப் படுகிறது. சப்பத் என்பது ஓய்வைக் குறிக்குமேயல்லாமல், ஓய்வு நாளைக் குறிக்காது.

2. ஓய்வை வெவ்வேறு நாட்களில் ஆசரிக்கலாம். ஓய்வு எடுக்கும் கால அளவும் வேறுபடலாம். வேதாகமத்தில் வெவ்வேறு நாட்களில் ஓய்வு எடுத்ததற்கான சான்றுகள் உள்ளன.

   (1) முதலாவது நாளில் (லேவி 23:39)

   (2) ஏழாவது நாளில் (யாத் 20:10)

   (3) எட்டாவது நாளில் (லேவி 23:39)

### ஓய்வு எடுக்கும் கால அளவுகள்

   (1) ஒரு நாள் ஓய்வு. (யாத் 16:23-29)

   (2) இரண்டு நாட்கள் ஓய்வு. (லேவி 23:6-8, 15-22)

   (3) ஒரு வருஷ ஓய்வு (லேவி 25:4)

   (4) எழுபது வருஷ ஓய்வு (2நாளா 36:21)

   (5) நித்திய ஓய்வு (எபி 4:9)

3. இஸ்ரவேலரின் ஏழாம் நாள் ஓய்வுகள் மாறிக் கொண்டே வரும். அவர்கள் ஒவ்வொரு வருஷமும் இரண்டு வெவ்வேறு நாட்களில் ஓய்வுநாளை ஆசரித்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில் கூடுதலாக ஒரு ஓய்வுநாள் ஆசரிக்கப்படுவதால், இப்படியொரு மாற்றம் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து ஆபிப் மாதம் பதினைந்தாம் நாள் புறப்பட்டுச் சென்றார்கள். இந்த ஓய்வுநாள் சனிக்கிழமையில் ஆசரிக்கப்படுவதாக எடுத்துக் கொண்டால், ஏழு வாரங்களுக்கு அதாவது 49 நாட்களுக்கு ஓய்வுநாள் சனிக்கிழமையிலேயே வரும். 50 ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை. அன்று பெந்தெகொஸ்தே நாள் வருகிறது. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, வரும் ஏழாவது நாள் ஞாயிற்றுக் கிழமையாக இருக்கும். அடுத்த வருஷம் பெந்தெகொஸ்தே நாள் வரையிலும், ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்து. அதன்பின்பு மறுபடியும் வேறு நாளுக்கு மாறும். ஆகையினால், ஓய்வுநாள் என்பது நிரந்தரமாகச் சனிக்கிழமையில் வரும் என்று கூறமுடியாது.

4. ஓய்வு எடுப்பது மனம் மகிழ்ச்சியான காரியம். ஓய்வு பாரமானதல்ல. சட்டத்தின் பிரகாரம் யாரையும், ஓய்வு எடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஜனங்கள் உண்மையான ஓய்வையும், ஆராதனையையும் காத்துக் கொள்ள வேண்டும். (ஏசா 58:13).

5. ஓய்வுநாள் பிரமாணம் இஸ்ரவேலருக்கே உரியது. (யாத் 16:29; யாத் 31:14; எசே 20:12). இஸ்ரவேல் தேசத்தில் அங்கம் வகிக்க விரும்பும் புறஜாதியார் ஒருசில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். அதன்பின்பு, ஓய்வுநாள் பிரமாணம் அவர்களுக்கும் பொருந்தும். (யாத் 12:49; எண் 15:16).

6. ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும். (யாத் 16:23; யாத் 20:8; யாத் 35:2; ஏசா 58:13; எரே 17:21-27).

7. ஓய்வுநாளைத் தேவனுக்கென்று ஆசரிக்க வேண்டும். (யாத் 16:25).

8. ஓய்வுநாள் கர்த்தரிடமிருந்து வந்திருக்கிறது. (யாத் 20:10; யாத் 35:2; லேவி 23:3; உபா 5:14).

9. இஸ்ரவேலர் புத்திரர் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும். (யாத் 31:14)

10. ஓய்வுநாளில் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. (யாத் 20:8-11; யாத் 31:15; யாத் 35:3; எண் 15:32; எரே 17: 21-27) ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவன் அறுப்புண்டுபோவான். (எண் 15:30-36).

11. ஓய்வுநாளை ஓய்வு எடுக்கும் வேளையாக ஆசரிக்க வேண்டும் (யாத் 35:2 லேவி 16:31; லேவி 23:3,32).

12. இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை வேறுபிரித்துப் பரிசுத்தப்படுத்தினார்கள். (உபா 5:12).

13. ஓய்வுநாள் பிரமாணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது (யாத் 20:8-11; உபா 5:15).

14. இஸ்ரவேலருக்கு ஓய்வுநாள் என்பது பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான அடையாளமாகும். (உபா 5:15) தேவன் தம்முடைய கிரியைகளைச் செய்து முடித்துவிட்டு, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததை இந்த ஓய்வுநாள் குறிப்பிடாது. தேவனுடைய ஓய்வுநாள் மனுஷனுடைய ஓய்வு நாளாகாது. தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த மறுநாளில் ஓய்ந்திருந்தார். வாரத்தின் ஓய்வுநாளை ஆசரிப்பதற்கு ஆறு நாட்கள் வேலை செய்திருக்க வேண்டும். ஆனால் ஆதியில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டு ஒருநாள் மட்டுமே வேலைசெய்திருக்கிறான். மறுநாள் தேவனுடைய ஓய்வுநாளாக இருக்கிறது. (யாத் 20:8-11) எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பட்டதற்காக இஸ்ரவேலர் ஓய்வுநாளை ஓர் அடையாளமாக ஆசரிக்கிறார்கள். திருச்சபையார் இதை ஓர் அடையாளமாக ஆசரிக்க வேண்டிய அவசியமில்லை. திருச்சபையார் எகிப்தில் அடிமையாயிருந்ததில்லை.

15. ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும், ஓய்வுநாள் ஆசரிக்கப்படும். இதனால் மாம்சமான யாவரும் தேவனுக்கு முன்பாக அவரை ஆராதனை செய்ய வருவார்கள். (ஏசா 66:22-24; எசே 44:24; எசே 45:17; எசே 46:3). எந்த நாளில் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டுமென்று வேதாகமம் தெளிவாக வெளிப்படுத்திக் கூறவில்லை. அதுமட்டுமல்ல, பூமியின் ஒரு பகுதியில் சனிக்கிழமை மாலை என்பது பூமியின் மறுபகுதியில் வெள்ளிக் கிழமை காலையாகவோ, ஞாயிற்றுக்கிழமை காலையாகவோ இருக்கும். உலகம் முழுவதிலுமுள்ளவர்கள் தேவனை ஆராதிப்பதற்குக் கூடிவருவார்கள்.

16. ஒய்வுநாளில் நன்மை செய்வதை ஏற்றுக் கொள்ளலாம். (மத் 12:2,12; மாற்கு 2:27-28; மாற்கு 3:4; லூக்கா 6:9).

17. மனுஷன் ஒய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஒய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. (மத் 12:8; மாற்கு 2:27-28; லூக்கா 6:5)

18. தேவன் ஏழாவது நாளில் ஒய்ந்திருந்தார். அந்த நாளைப் பரிசுத்தப்படுத்தினார். இந்த நாளை ஒய்வுநாளாக ஆசரிக்க வேண்டும் என்று மனுஷனுக்குத் துவக்கத்தில் கூறப்படவில்லை. தேவனும் ஒய்வுநாளை தொடர்ந்து ஆசரிக்கவில்லை. உடனடியாக உலகத்தில் பாவம் வந்துவிட்டபடியினால், தேவன் தமது மீட்பின் கிரியையை ஆரம்பித்து விடுகிறார். வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் தேவன் தம்முடைய மீட்பின் கிரியையைச் செய்து கொண்டிருக்கிறார். (ஆதி 3:8-21) பாவிகள் எந்த நாளிலும் மனந்திருந்தி, தேவனிடம் வந்து அவருடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். சிருஷ்டிப்பின் காலத்தில் தேவன் ஒய்ந்திருந்ததற்குப் பின்பு, 2513 வருஷங்கள் கழித்து, இஸ்ரவேல் புத்திரருக்கு ஒய்வுநாள் பிரமாணம் கொடுக்கப்படுகிறது. (யாத் 16:23-29; யாத் 20:8-11).

19. ஒய்வுநாளில் நன்மை செய்வதையும், அத்தியாவசியமான வேலைகளைச் செய்வதையும் யூதர்கள் அங்கிகரித்திருக்கிறார்கள்.

(1) பலிகளைச் செலுத்துவது (எண் 28:9-10; 1நாளா 9:32)

(2) மிருகஜீவன்களைப் பராமரிப்பது. (மத் 12:11; மாற்கு 2:27; லூக்கா 13:15; லூக்கா 14:5)

(3) விருத்தசேதனம் பண்ணுவது (யோவான் 7:22-23)

(4) அத்தியாவசியமான வேலைகளைச் செய்வது. (மத் 12:5)

20. ஒய்வுநாட்கள் நித்திய ஒய்விற்கு அடையாளமாகும். (கொலோ 2:14-17; எபி 4:1-11; எபி 10:1).

21. ஒய்வுநாள் பிரமாணம் மோசேயின் பிரமாணத்தோடு ஒழிந்துபோயிற்று. (அப் 15:24)

22. கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்றும், ஒய்வுநாளை ஆசரிக்க வேண்டுமென்றும் அப்போஸ்தலர்கள் வலியுறுத்தி உபதேசம் பண்ணவில்லை (அப் 15:5-29; ரோமர் 14:5-6; கலா 4:9-11; கொலோ 2:14-17).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்த நாளாக ஆசரிக்கிறோம். அதற்கான காரணங்கள் வருமாறு :

1. மோசேயின் பிரமாணத்திலுள்ள ஒய்வுநாட்கள் ஒழிக்கப்பட்டு விட்டது.

2. ஒரு குறிப்பிட்ட நாளை ஒய்வுநாளாக ஆசரிக்க வேண்டுமென்று புதிய பிரமாணம் விசுவாசிகளுக்குக் கட்டளையிடவில்லை. (ரோமர் 14:5-6; கலா 4:9-11).

3. தங்களுக்கு உகந்த ஒய்வுநாளைத் தெரிந்தெடுப்பதற்கு விசுவாசிகளுக்குச் சுயாதீனம் உள்ளது. (ரோமர் 14:5-6).

4. ஒய்வுநாளைக் குறித்து, யாரும் யாரையும் நியாயந்தீர்க்கக்கூடாது. (கொலோ 2:14-17).

5. நாட்களைக் கடுமையாக ஆசரிப்பதைப் பவுல் கடிந்து கூறியிருக்கிறார். (கலா 4:9-11).

6. ஒய்வுநாள் ஆசரிப்பது சுவிசேஷத்தின் ஒரு பகுதியல்ல. (அப் 15:1-29).

7. மெய்யான ஓய்வும், நித்திய ஓய்வும் இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. அந்த ஓய்வு எந்த ஒரு நாளிலும் இல்லை. (மத் 11:28-29; எபி 4).

8. பத்து கட்டளைகளில் நான்காம் கட்டளை (யாத் 20:8-11) புதிய உடன்படிக்கையிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறது. (அப் 15:24).

9. யூதருடைய ஓய்வுநாள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் விடுதலை பெற்றதற்கு அடையாளமாகும். கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு எகிப்தின் அடிமைத்தனத்தில் பங்கேதும் இல்லை. (உபா 5:15).

10. ஓய்வுநாள் பிரமாணத்தை ஆசரிக்க விரும்புகிறவர் மோசேயின் எல்லா பிரமாணங்களையும் ஆசரிப்பதற்குக் கடமைப்பட்டவராக இருக்கிறார். (கலா 3:10-14; கலா 5:3,9-11; யாக் 2:10).

11. சனிக்கிழமையில் ஓய்வெடுத்து தேவனை ஆராதிப்பதற்குப் பதிலாக ஞாயிற்றுக் கிழமையில் ஓய்வெடுத்து தேவனை ஆராதிக்கலாம். ஞாயிற்றுக்கிழமை ஆராதிப்பதினால் விசுவாசிகளுக்கு ஒரு பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

12. ஆதித்திருச்சபையின் கிறிஸ்தவ விசுவாசிகள் வாரத்தின் முதலாம் நாளைப் பரிசுத்த நாளாக ஆசரித்தார்கள். (யோவான் 20:1,19, 26-29; அப் 20:6-12; 2கொரி 16:1-2).

13. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் தம்முடைய மீட்பின் கிரியையை நிறைவேற்றினார். மரணம், பாதாளம், கல்லறை ஆகியவற்றிலிருந்து அவர் ஞாயிற்றுக் கிழமையில் வெற்றி சிறந்தார்.

14. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்திய விசேஷித்த சம்பவங்கள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையிலேயே நடைபெற்றது. (மத் 28; மாற்கு 16; லூக்கா 23-24; யோவான் 20:19,26).

15. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, யூதருடைய ஏழாம் நாளின் ஓய்வுநாள் பிரமாணத்தை அப்போஸ்தலர்கள் யாரும் அங்கிகரிக்கவில்லை.

16. வாரத்தின் முதலாம் நாளில் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப் பட்டது. இந்த நாள் யூதருடைய ஏழு ஓய்வுநாட்களுக்குப் பின்பு வரும் ஓய்வுநாளாகும். (அப் 2:1).

17. இயேசு கிறிஸ்து பரமேறியபின்பு, அப்போஸ்தலர்கள் வாரத்தின் முதலாம் நாளில் தங்களது முதலாவது செய்தியைப் பிரசங்கம் பண்ணினார்கள். சுவிசேஷத்தைக் கேட்டு, முதலாவதாக சுமார் 3,000 பேர் வாரத்தின் முதலாம் நாளில் இரட்சிக்கப்பட்டார்கள். (அப் 2:1-42).

18. வாரத்தின் முதலாம் நாளில் தேவனை ஆராதிப்பது "மிருகத்தின் அடையாளம்" என்று ஒருசிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் இதற்கு வேதஆதாரம் எதுவுமில்லை. வாரத்தின் முதலாம் நாளில் ஓய்வெடுத்து, அந்நாளில்தானே தேவனை ஆராதிக்கலாம்.

19. பழைய உடன்படிக்கையிலும், வாரத்தின் முதலாம் நாள் முக்கியமானதாக இருந்தது. முதற்கனிகளின் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை, கூடாரப் பண்டிகை ஆகியவற்றை வாரத்தின் முதலாம் நாளில் கொண்டாடினார்கள். (லேவி 23:8-14, 34-39)..

20. தேவன் முதலாம் நாளில் கற்பனைகளைக் கொடுத்து, அந்த நாளைக் கனப்படுத்தியிருக்கிறார். (யாத் 19:1,3,11; லேவி 23:5-6= யாத் 12:2-18).

21. தேவன் இஸ்ரவேலில் வாரத்தின் பல முதல் நாட்களைக் கனப்படுத்தியிருக்கிறார். (2நாளா 7:10; 2நாளா 29:17; எஸ்றா 3:6; நெகே 8:14-18)

22. வாரத்தின் முதல் நாளில் வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தைக் கொடுத்து, தேவன் அந்த நாளை மறுபடியுமாகக் கனப்படுத்தியிருக்கிறார். (வெளி 1:10, அப் 20:7)

23. பழைய உடன்படிக்கையினால் உண்டான அடிமைத்தனத்திலிருந்து புதிய உடன்படிக்கை ஜனங்களை விடுவிக்கிறது. பழைய உடன்படிக்கையில் ஓய்வுநாளில் சமையல் பண்ணுவது, விறகு பொறுக்குவது, போன்ற காரியங்களைச் செய்வதற்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது. (யாத் 16:23; யாத் 20:8-10; யாத் 31:15; யாத் 35:2-5; லேவி 23:3; எண் 15:32). புதிய உடன்படிக்கை ஜனங்களை இந்தத் தண்டனையிலிருந்து விடுவிக்கிறது.

24. யூதருடைய ஓய்வுநாளில் கிறிஸ்தவ விசுவாசிகள் தேவனை ஆராதனை செய்ததாக ஒரு சம்பவமும் புதிய ஏற்பாட்டில் கூறப்படவில்லை. வாரத்தின் முதலாவது நாள் கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படுகிறது. இந்த நாளில் தேவனுடைய பிள்ளைகள் தேவனை ஆராதனை செய்திருக்கிறார்கள். (வெளி 1:10; யோவான் 20:1,19; அப் 20:7; 2கொரி 16:2).

புதிய ஏற்பாட்டில் "ஓய்வுநாள்" என்னும் வார்த்தை 60 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டதற்கு முன்பாக இந்த வார்த்தை 50 தடவை வந்திருக்கிறது. மீதமுள்ள 10 தடவைகளில் பவுல் யூதருக்குப் பிரசங்கம் பண்ணிய நிகழ்ச்சிகளில் 6 தடவை வந்திருக்கிறது. யூதருடைய ஓய்வுநாளைப் பற்றி பவுல் பிரசங்கம் பண்ணினார் (அப் 13:14, 42,44; அப் 17:1,2; அப் 18:4). மேலும் இரண்டு இடங்களில் ஓய்வுநாள் மோசேயின் பிரமாணத்தைக் குறிக்கிறது.

யூதருடைய ஓய்வுநாட்களில் யூதர்கள் தங்களுடைய ஜெபாலயங்களில் மோசேயின் பிரமாணங்களை வாசித்தார்கள். (அப் 13:27, அப் 15:21) ஒரு இடத்தில் யூதருடைய பிரயாணத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஓய்வுநாளில் யூதர்கள் ஒரு மைலுக்குமேல் பிரயாணம் பண்ணக்கூடாது. (அப் 1:12) மேலும் ஒரு இடத்தில் எல்லா ஓய்வுநாட்களும் ஒழிக்கப்பட்டு விட்டதாகத் தெளிவாகக் கூறுகிறது. (கொலோ 2:14-17).

ஒரு குறிப்பிட்ட நாளில்தான் கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்னும் நியமம் இருந்தால், மோசேயின் பிரமாணத்திற்கு ஜனங்கள் எவ்வாறு அடிமையாக இருந்தார்களோ அதுபோலவே, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளும் இந்தப் பிரமாணத்திற்கு அடிமையாக இருப்பார்கள். கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு நாட்களும், காலங்களும் முக்கியமானவைகளல்ல. இயேசு கிறிஸ்துவே முக்கியமானவர்.

தேவன் இப்படிப்பட்ட காலங்களை ஒழிப்பதாக வாக்குப்பண்ணினார். (ஏசா 1:13; ஓசி 2:11) தாம் சொல்லிய பிரகாரமாகவே அவற்றை ஒழித்தார். (2கொரி 3:6-15; கலா 3:19-25; கலா 4:21-31; கலா 5:1-3; எபே 2:14-15; கொலோ2:14-17; எபி 6:20-10:18)

இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதை ஓய்வுநாளாக ஆசரித்தார்கள். எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் விடுதலை பெற்றார்கள். ஆனால் ஓய்வுநாள் பிரமாணத்திற்கு அவர்கள் அடிமையாகி விட்டார்கள். கிறிஸ்தவ விசுவாசிகளுக்குக் கர்த்தரை எந்த நாளிலும் ஆராதிக்கும் சுயாதீன விடுதலை கொடுக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 14:5-6).

ஓய்வுநாள் பிரமாணம் இஸ்ரவேல் புத்திரருக்கு கண்டிப்பான பிரமாணமாக கட்டளையிடப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த, வாரத்தின் முதலாம் நாள் ஓய்வுநாளாயிருக்கிறது. நாம் இந்த ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். கர்த்தருடைய ஓய்வுநாளில் நாம் போஜனம்பண்ணக்கூடாது என்றோ அல்லது மிகவும் அத்தியாவசியமான வேலைகளை செய்யக்கூடாது என்றோ கட்டுப்பாடு எதுவுமில்லை.

ஆனாலும் கர்த்தருடைய ஓய்வுநாளிலே, கர்த்தருடைய சபைக்குப்போய் அவரை ஆராதிக்கவேண்டும். சகவிசுவாசிகளோடு, சபையின் ஆராதனையில் பங்குபெற்று, கர்த்தரைத் துதிப்பதற்கும், அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.கர்த்தருக்கு பரிசுத்தமான ஓய்வுநாளிலே, உலகப்பிரகாரமான வேலைகளில் கவனம் செலுத்தாமல், கர்த்தரை ஆராதிக்கிற காரியங்களில் கவனம் செலுத்துவது நம்முடைய ஆத்துமாவுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் மோசே சொன்ன வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள் வரைக்கும் வைத்துவைக்கிறார்கள்; அப்பொழுது அது நாறவும் இல்லை, அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை (யாத் 16:24). ஒரு சிலரோ மோசேயின் கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் ஏழாம் நாளிலும், மன்னாவை சேர்க்க வெளியிலே புறப்பட்டுப்போகிறார்கள். ஆனால் அவர்களால் வெளியிலே மன்னாவை காணமுடியவில்லை (யாத் 16:27). கர்த்தர் ஓய்வுநாளிலே வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கப்பண்ணவில்லை.

ஒரு நாளில் சேகரித்த மன்னாவை மறுநாளைக்கு வைத்திருந்தால் அது நாறிப்போகும். அதில் பூச்சி பிடிக்கும். ஆனால் ஓய்வுநாளுக்கு முந்திய நாளில் சேகரிக்கப்பட்ட மன்னா ஓய்வுநாளில் நாறவும் இல்லை. அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை. தேவனுடைய அற்புதத்தினால் மன்னா பாதுகாக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருந்த நாற்பது வருஷ காலங்களில் 2,080 ஓய்வுநாட்களை ஆசரித்தார்கள். தேவன் 2,080 தடவையும் அற்புதம் செய்து, ஓய்வுநாளில் மன்னாவைப் பாதுகாத்தார்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது" (யாத் 16:26) என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார் . ஆனால் இஸ்ரவேல் ஜனங்களில் சிலர் மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. அவர்களுடைய பிரயாசங்கள் எல்லாம் வீணாய்ப்போயிற்று.

கர்த்தர் எல்லாவற்றிற்கும் ஒரு காலத்தை நியமித்து வைத்திருக்கிறார். நாம் ஒவ்வொரு காரியத்தையும், அதனதன் காலத்தில் செய்ய பழகிக்கொள்ளவேண்டும். கர்த்தர் நியமித்திருக்கிற காலமே நமக்கு ஏற்ற காலமாயிருக்கிறது. கர்த்தர் நியமித்த காலத்தில் நாம் தேடினால், கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கண்டுகொள்வோம். நமக்கு இஷ்டமான காலத்திலே தேடிப்போனால் ஒன்றையும் காணமாட்டோம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?" (யாத் 16:28) என்று சொல்லுகிறார். கர்த்தர் இந்த வார்த்தையை மோசேயிடம் சொல்லுகிறார். மோசே கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர். இஸ்ரவேல் ஜனங்களில் சிலர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், ஓய்வுநாளிலே மன்னாவை சேர்க்க புறப்பட்டுப்போனார்கள். அவர்களோடுகூட மோசே போகவில்லை. மோசே தன்னுடைய கூடாரத்திலிருந்து ஓய்வுநாளை ஆசரிக்கிறார். ஆனால் கர்த்தர் மோசேயை நோக்கி, "என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?" என்று கேட்கிறார்.

மோசே கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவராகயிருந்தாலும், அவர் கீழ்ப்படியாத இஸ்ரவேல் ஜனங்களுக்கு தலைவராகவும் அவர்களை ஆளுகை செய்கிறவராகவும் இருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்தை எடுத்து சொன்னார். ஆனாலும் அவர் இந்தப் பிரமாணத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு எப்படி எச்சரித்து சொல்லவேண்டுமோ அப்படி சொல்லவில்லை. அவர் ஜனங்களிடத்தில் எப்போதும் போல சாதாரணமாக பேசினார். இஸ்ரவேல் ஜனங்களும் எப்போதும்போல மோசேயின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் ஏழாம் நாளிலே மன்னாவை சேர்க்க புறப்பட்டுப்போகிறார்கள்.

கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற கடமைகளை மோசே மிகுந்த கவனத்தோடு நிறைவேற்றவேண்டும். அவர் தன்னுடைய கடமையில் கருத்தாயிருக்கவேண்டும். மோசேயின் கவனக்குறைவினால் இஸ்ரவேல் புத்திரர் தவறு செய்யும்போது, கர்த்தர் அந்த தவற்றைக் குறித்து மோசேயிடம் விசாரிக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளின் ஆத்துமாக்களைக் குறித்து கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அவர்கள் மிகுந்த உத்திரவாதத்தோடு ஊழியம் செய்யவேண்டும்.

மன்னாவின் சுவையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. வனாந்தரத்தின் மீதெங்கும், உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்கிறார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: "இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம்" (யாத் 16:14,15) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிடுகிறார்கள்; அது கொத்துமல்லி அளவாயும் வெண்மைநிறமாயும் இருக்கிறது; அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருக்கிறது (யாத் 16:31).

## கலசத்தில் மன்னா
## யாத் 16:32-36

**யாத் 16:32. அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, வனாந்தரத்தில் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும்படிக்கும், அவர்களுக்காக அதைக் காப்பதற்கு, அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்க வேண்டும் என்றான்.**

**யாத் 16:33. மேலும், மோசே ஆரோனை நோக்கி: நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான்.**

**யாத் 16:34. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அது காக்கப்படும்படி ஆரோன் அதைச் சாட்சி சந்நிதியில் வைத்தான்.**

**யாத் 16:35. இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேருமவரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள்.**

**யாத் 16:36. ஒரு ஓமரானது எப்பாவிலே பத்தில் ஒரு பங்கு.**

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது கர்த்தர் அவர்களுக்கு மன்னாவை போஜனமாக புசிக்கக் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பின்சந்ததியாரும் இந்த சம்பவத்தை நினைத்து பார்க்கவேண்டும். இதற்காக ஒரு ஓமர் அளவு மன்னா பொற்பாத்திரத்தில் போட்டு வைக்கப்படுகிறது.

"அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன" (எபி 9:4).

ஆரோன் மன்னா போடப்பட்ட கலசத்தை சாட்சி சந்நிதியில் வைக்கிறார். இவையெல்லாம் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் நடைபெறுகிறது. கர்த்தர் தனக்கு கொடுத்த கட்டளையை மோசே ஆரோனுக்கு சொல்லுகிறார்.

மோசே ஆரோனை நோக்கி , "கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, வனாந்தரத்தில் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும்படிக்கும், அவர்களுக்காக அதைக் காப்பதற்கு, அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்க வேண்டும்" என்றும்,

"நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை" (யாத் 16:32,33) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அது காக்கப்படும்படி ஆரோன் அந்தக் கலசத்தை சாட்சி சந்நிதியில் வைக்கிறார் (யாத் 16:34). நாம் புசித்த போஜனத்தை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு அன்றாடம் போஜனம் கொடுக்கிறார். கர்த்தர் கொடுக்கும் போஜனத்திற்கு நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய அற்புதங்களையும், கிருபைகளையும், இரக்கங்களையும் நாம் மறந்துவிடாமல் நித்திய காலமாக நினைவுகூரவேண்டும். இவை நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும். நாம் கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பதற்கு இவை நமக்கு உதவியாயிருக்கும்.

எல்லா சந்ததியாருக்கும் ஒரு ஞாபகார்த்தமாக மன்னா பாதுகாக்கப்பட்டது (யாத் 16:32-34). கலசம் பொன்னால் செய்யப்பட்டிருக்கலாம். அதில் வைக்கப்பட்டிருக்கும் மன்னாவைக் கர்த்தர் தமது தெய்வீக வல்லமையினால் பாதுகாத்தார். மன்னா மறுநாளில் நாறிப்போகும், பூச்சிபிடிக்கும். கலசத்தில் வைக்கப்பட்டிருக்கும் மன்னா கெட்டுப்போகவில்லை. பல சந்ததியாக அந்த மன்னா கெட்டுப்போகாமல் கடந்து வருகிறது. (யாத் 16:20,24).

"சாட்சி சந்நிதி" என்னும் வாக்கியம் ஆசரிப்புக்கூடார ஆராதனையை விளக்குகிறது. அதிலும் சிறப்பாக இது சாட்சிப் பேழையைக் குறிப்பிடுகிறது . இந்த வசனத்தில் சாட்சி என்பது பத்து கற்பனைகள் அடங்கிய இரண்டு கற்பலகைகளைக் குறிக்கலாம் (யாத் 25:16,21; யாத் 31:18; யாத் 32:15; யாத் 34:29; யாத் 40:20)

பத்து கற்பனைகள் பழைய ஏற்பாடு அல்லது பழைய பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. (2கொரி 3:6-15). ஆசரிப்புக் கூடாரம் சாட்சியின் கூடாரம் (எண் 1:50-53; எண் 10:11) (எண் 9:15). என்றும் அழைக்கப்படுகிறது.

உடன்படிக்கைப் பெட்டியே சாட்சி என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் பெட்டியில் உடன்படிக்கை இருக்கிறது (யாத் 27:21; யாத் 30:36; லேவி 16:13; எண் 17:4,10). தேவனுடைய எந்த உடன்படிக்கையும், எந்த வார்த்தையும் சாட்சி என்றே அழைக்கப்படும். ஏனெனில் தேவனுடைய வார்த்தை தேவனுடைய வெளிப்பாட்டிற்கும், இயேசு கிறிஸ்துவில் உண்டாகும் மீட்பிற்கும் சாட்சி பகருகிறது.

மெய்யான ஆசரிப்புக்கூடாரம், உடன்படிக்கைப் பெட்டி, சாட்சி ஆகியவை பரலோகத்தில் இருக்கிறது. மோசே இதன் மாதிரியைப் பூமியில் செய்தார். (எபி 8:5; எபி 9:23; வெளி 11:19; வெளி 15:5).

தேவனுடைய வார்த்தையின் பல பகுதிகள் சாட்சிகள் என்று அழைக்கப்படுகின்றன. தொடர்ந்து சாட்சிகளும், கற்பனைகளும் வெவ்வேறானவை. (2இராஜா 23:3; 1நாளா 29:19; 2நாளா 34:31; நெகே 9:34) தேவனுடைய உடன்படிக்கை (சங் 25:10), அவருடைய கட்டளைகள் (சங் 99:7), அவருடைய நியமங்கள் (எரே 44:23) எல்லாமே சாட்சிகளாகும்.

கலசத்தில் மன்னா வைத்த போது, ஆசரிப்புக் கூடாரமோ, உடன்படிக்கையோ இன்னும் செய்யப்படவில்லை. உடன்படிக்கைப் பெட்டி செய்த பின்பு, கலசத்தில் வைக்கப்பட்டிருந்த மன்னாவைப் பெட்டிக்குள் வைத்திருப்பார்கள். மோசே ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்வதற்கு முன்பாகவே இஸ்ரவேலர் மத்தியில் ஒருவிதமான ஆசரிப்புக் கூடாரம் இருந்திருக்கலாம் (ஆதி 4:7)

சீனாய் மலையில் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு முன்பு, மோசே பாளயத்திற்கு வெளியே ஒரு ஆசரிப்புக் கூடாரத்தை நாட்டினார் (யாத் 33:7-11). சீனாய் மலையில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரம் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு, இரண்டாவது வருஷம் முதல் மாதத்திற்கு முன்பாக ஸ்தாபிக்கப்படவில்லை. (யாத் 40:2,17) தேவனுடைய கட்டளைப்படி மோசே கட்டிய ஆசரிப்புக் கூடாரம் பாளயத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டது. (எண் 2).

இஸ்ரவேல் புத்திரர் நாற்பது வருஷங்களாக வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசிக்கிறார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேரும்வரைக்கும் மன்னாவைப் புசிக்கிறார்கள்.

அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேர்ந்தபோது, கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவை வருஷிப்பதை நிறுத்திவிடுகிறார். அதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னாவே பிரதான ஆகாரமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் நாற்பது வருஷங்களாக மன்னாவை அப்பங்களாகப் புசித்தார்கள். இவர்கள் இதை மட்டுமே புசித்தார்கள் என்று கூறமுடியாது. ஏனெனில் பலியிடப்பட்ட எல்லா மிருகங்களின் மாம்சத்தையும் அவர்கள் புசித்தார்கள். பாலும், மற்ற உணவுப் பதார்த்தங்களும், அவர்கள் சமைத்ததற்கான குறிப்புக்கள் உள்ளன (யாத் 16:12,23; யாத் 32:6; லேவி 6:16; லேவி 7:21; எண் 9:2-14; எண் 11:20; உபா 14:21). அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேரும் வரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள் (யோசு 5:12)

"இஸ்ரவேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள். பஸ்காவின் மறுநாளாகிய அன்றையதினம் அவர்கள் தேசத்தினுடைய தானியத்தாலாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்ட கதிர்களையும் புசித்தார்கள். அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது; அதுமுதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல்லாமற்போய், அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்தில்தானே புசித்தார்கள்" (யோசு 5:10-12).

மன்னா ஞானபோஜனம் என்று அழைக்கப்படுகிறது. "எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்" (1கொரி 10:3). இது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. ஆவிக்குரிய நன்மைகள் எல்லாமே பரலோகத்திலிருந்து வரும். மன்னாவும் பரலோகத்திலிருந்து வருகிறது.

கிறிஸ்துவானவர் தாமே நமக்கு ஜீவஅப்பமாகவும், மெய்யான மன்னாவாகவும் இருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்து இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் புசித்தது, மெய்யான அப்பமாகிய ஜீவஅப்பத்திற்கு அடையாளம்.

"ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" (யோவா 6:48-51).

கர்த்தருடைய வார்த்தையானது நமக்கு ஆவிக்குரிய மன்னாவாக இருக்கிறது. இது நம்முடைய ஆத்துமாவை போஷிக்கிறது. "அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத் 4:4).

ஆவியானவருடைய ஆசீர்வாதங்களெல்லாம் மன்னாவிலே மறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது" (வெளி 2:17).

மன்னா வானத்திலிருந்து வந்ததுபோல, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் பரலோகத்திலிருந்து வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியதுபோல, விசுவாசிகளாகிய நாம், இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலம் வரையிலும், வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுவதுபோல பரதேசிகளாய் சஞ்சரிக்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது மன்னா அவர்களுக்கு போஜனமாயிருந்தது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆவிக்குரிய மன்னா ஆதரவாயும், ஆறுதலாயும் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே மன்னாவை ஒவ்வொரு நாள் காலையிலும் சேர்த்தார்கள். அதுபோல நாமும், ஒவ்வொரு நாள் காலையிலும், நம்முடைய மன்னாவாகிய கர்த்தருடைய வார்த்தைகளை, தியானித்து, நம்முடைய ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

வனாந்தரத்திலே வெயில் ஏற ஏற மன்னா உருகிப்போகும். அவர்கள் மன்னாவை விடியற்காலத்திலே சேர்க்கவேண்டும். அதுபோல நாமும் காலதாமதம்பண்ணாமல், அதிகாலையிலே கர்த்தருடைய வார்த்தையை தியானிக்கவேண்டும். நேரம் ஆக ஆக உலகப்பிரகாரமான வேலைகளும், இப்பிரபஞ்சத்தின் கவலைகளும் நம்மீது பாரமாக சுமத்தப்படும். அப்போது நம்மால் முழுக்கவனத்தோடு கர்த்தருடைய வசனத்தை தியானிக்க முடியாது.

இஸ்ரவேல் புத்திரர் மன்னாவை சேகரித்து அதைப் புசிக்கவேண்டும். மறுநாள் வரையிலும் அதை சேமித்து வைக்கக்கூடாது. விசுவாசத்தினாலே இயேசுகிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் பெற்றிருக்கிற நாம், அதன் பிரகாரம் ஜீவிக்கவேண்டும். தேவனுடைய கிருபையை நாம் விருதாவாக பெற்றுக்கொள்ளவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே மன்னாவை புசித்தார்கள். அவர்களுக்கு மறுபடியும் பசி உண்டாயிற்று. முடிவிலே அவர்கள் வனாந்தரத்திலே மரித்துப்போனார்கள். கர்த்தர் அவர்களில் அநேகர்மீது பிரியமாயில்லை. கிறிஸ்துவை நம்முடைய ஜீவஅப்பமாக ஏற்றுக்கொள்ளும்போது, நமக்கு ஆவிக்குரிய பசி ஏற்படாது. நாம் அவரை ஜீவத்தண்ணீராக பானம்பண்ணும்போது நமக்கு மறுபடியும் தாகம் ஏற்படாது. கர்த்தர் நம்மீது எப்போதும் பிரிமாயிருப்பார். ஜீவஅப்பத்தை புசிக்கிற நமக்கு ஆவிக்குரிய மரணமுண்டாகாது.

## 17 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கன்மலையிலிருந்து தண்ணீரை புறப்படப்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கியிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லாதிருக்கிறது (யாத் 17:1). ஜனங்கள் மோசேயோடே வாதாடுகிறார்கள் (யாத் 17:2,3). மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்.

கர்த்தர் கன்மலையை கோலினால் அடிக்குமாறு மோசேக்கு சொல்லுகிறார். மோசே அப்படியே செய்கிறார். கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படுகிறது (யாத் 17:5,6). மோசே அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் பேரிடுகிறார் (யாத் 17:7).

அமலேக்கியர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறார்கள். மோசே கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார் (யாத் 17:8-12). யோசுவா அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார் (யாத் 17:13). கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக, இந்த யுத்தத்தை நினைவுகூரும் பொருட்டு, இந்த சம்பவங்களெல்லாம் ஒரு புஸ்தகத்தில் எழுதப்படுகிறது (யாத் 17:14,16).

மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு யேகோவாநிசி என்று பேரிடுகிறார் (யாத் 17:15). நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்திலும், நாம் மேற்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய யுத்தத்திலும் நமக்கு பிரயோஜனம் உண்டாகும்படி இந்த சம்பங்களெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது.

### கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீர்
### யாத் 17:1-7

**யாத் 17:1. பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது.**

**யாத் 17:2. அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி: நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே: என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள் என்றான்.**

**யாத் 17:3. ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த்தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர் என்றார்கள்.**

**யாத் 17:4. மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு: இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே என்றான்.**

**யாத் 17:5. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக் கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ.**

**யாத் 17:6. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாக கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான்.**

**யாத் 17:7. இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரிட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்.**

பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்குகிறார்கள். இஸ்ரவேலர்கள் பாளயமிறங்கிய இரண்டு இடங்கள் இந்தப் பகுதியில் கூறப்படவில்லை (யாத் 16:1=எண் 33:12-14).

அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை (யாத் 17:1). ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர் தவனமாயிருக்கிறார்கள் (யாத் 17:3).

கர்த்தர் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கிறார். அவர்களை திருப்தியாய்ப் போஷிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு சில சமயங்களில் குறைவுகள் வருகிறது. அப்போது அவர்கள் பொறுமையோடிருந்து கர்த்தரை நம்புவதற்கு பதிலாக, கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சுயசித்தத்திற்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ரெவிதீமிலே ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை. அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடுகிறார்கள். அவர்கள் மோசேயை நோக்கி, "நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும்" என்று சொல்லுகிறார்கள் (யாத் 17:2). மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கடன்பட்டவர்போல குற்றம் சுமத்தப்படுகிறார்.

இந்த சம்பவம் இஸ்ரவேலரின் ஐந்தாவது முறையீடு ஆகும் (யாத் 5:19) அவர்கள் மோசேயிடம் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் ஒருவேளை மோசே தங்களுக்கு தண்ணீர் தருவார் என்று அவர்மீது நம்பிக்கை வைத்திருக்கலாம். அல்லது இப்படிப்பட்ட இடத்திற்குத் தங்களைக் கொண்டுவந்ததற்காக அவர்கள் மோசேக்கு எதிராகப் பேசியிருக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தாரைத் தேவனே வழிநடத்திச் செல்கிறார். தேவன் அக்கினிஸ்தம்பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் அவர்களை வழிநடத்துகிறார். இங்கு அவர்கள் பாளயமிறங்குவதற்கும் தேவனே காரணம். தேவன் அவர்களைச் சோதிப்பதற்காகத் இங்கு அழைத்து வந்திருக்கிறார். தண்ணீருக்கு என்ன செய்யவேண்டும் என்பது தேவனுக்குத் தெரியும் (யாத் 17:6).

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாய் முறுமுறுக்கிறார்கள். அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர்" (யாத் 17:3) என்று கேட்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணி அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் கானான் தேசத்தில் குடியேறி, சுகமாய் ஜீவிக்கவேண்டும் என்பது மோசேயின் விருப்பம். ஆனால் மோசே தங்களையும், தங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர் தவனத்தினால் கொன்றுபோடுவதாக, இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். இதற்காகவே அவர் எகிப்திலிருந்து தங்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்று சொல்லி, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு மோசேயின்மீது கோபம் அதிகரிக்கிறது. அவர்களுக்கு தண்ணீர் தவனம் அதிகமாகும்போது, மோசேயின்மீது கோபமும் அதிகமாகிறது. அவர்கள் ஒரு சூழ்நிலையில் மோசேயின்மீது கல்லெறியப் பார்க்கிறார்கள் (யாத் 17:4). தங்களைக் கொன்றுபோடுவதற்காக மோசே எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்றும், அந்த மோசேயை கல்லெறிந்து கொன்றுபோடவேண்டும் என்றும், இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மீது கோபமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மேல் கல்லெறியப்பார்க்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் மனுஷர்மீது கல்லெறியும் ஒரு சில சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தூஷிக்கிறவர்கள் (லேவி 24:11-23)

2. ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்கள் (எண் 15:36)

3. ஆகானும் அவன் குடும்பத்தாரும் (யோசு 7:25)

4. அபிமெலேக்கு (நியா 9:53)

5. அதோராம் (1இராஜா 12:18)

6. நாபோத் (1இராஜா 21:13-15)

7. சகரியா (2நாளா 24:21)

8. ஸ்தேவான் (அப் 7:58-59)

9. பவுல் (அப் 14:5,19; 2கொரி 11:25)

கர்த்தர் தங்களோடு இருக்கிறாரா என்னும் சந்தேகம் இஸ்ரவேல் புத்திரருக்கு வந்திருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, பகலிலே மேகஸ்தம்பமும் இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்கள் மத்தியிலே இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். "கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா, இல்லையா" என்று கேட்கிறார்கள் (யாத் 17:7).

கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறாரா, இல்லையா என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்கும் கேள்விக்கு, மெய்யாகவே தேவன் என்பவர் இருக்கிறாரா அல்லது தேவனே இல்லையா என்பது பொருளாகும்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவர் தம்முடைய தெய்வீக பராமரிப்பினால் சர்வசிருஷ்டிகளையும் போஷிக்கிறார். தேவன் தம்முடைய பொதுவான பராமரிப்பினால் இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் ஆளுகை செய்கிறார். கர்த்தருடைய பொதுவான பராமரிப்பு எல்லா ஜீவராசிகளுக்கும் வெளிப்படுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய விசேஷித்த பராமரிப்புக்களையும், அவருடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு தங்களை விசேஷமாய் ஆதரிக்கிற கர்த்தர்மீது சந்தேகம் வருகிறது. அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராயிருப்பாரா என்று சந்தேகப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ரெவிதீமிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அங்கே ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை. இஸ்ரவேல் புத்திரர் அவ்விடத்திலே தண்ணீர் தவனமாயிருக்கிறார்கள். தங்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டியது மோசேயின் கடமை என்று இஸ்ரவேல் ஜனத்தார் எதிர்பார்க்கிறார்கள். மோசே தங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்ததினால், அவர் தங்களுடைய எல்லா தேவைகளையும் சந்திக்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர், மோசேயின்மீது பொறுப்புகளை சுமத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு குடிக்க தண்ணீர் இல்லாமல் போனபோது, அவர்களுக்கு மோசேயின்மீது நம்பிக்கையும் இல்லாமல் போயிற்று. மோசே தங்களை ஏமாற்றுகிறாரோ என்னும் சந்தேகம் அவர்களுக்கு வந்துவிடுகிறது. ஆகையினால் அவர்கள் மோசேயோடே வாதாடுகிறார்கள். அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் மோசேயின்மேல் கல்லெறியப் பார்க்கிறார்கள்.

கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறாரா என்னும் சந்தேகம் இஸ்ரவேல் புத்திரருக்கு வந்துவிடுகிறது. அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்கவில்லை. கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறார் என்னும் நிச்சயம் இருந்தால் மாத்திரமே, அவர்களால் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண முடியும். அவர்களுடைய விசுவாசக்கண்கள் இருளடைந்திருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பிரத்தியட்சமாயிருக்கிறார். ஜனங்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், மோசேயை நோக்கிப் பார்த்து, அவரோடே வாதாடுகிறார்கள். கர்த்தர் தங்கள் நடுவிலிருக்கிறார் என்னும் நிச்சயம் அவர்களுக்கு இருக்குமென்றால், அவர்கள் தங்கள் தேவைகளையும், கவலைகளையும் கர்த்தரிடத்தில் முறையிடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாக வாதாடி, முறுமுறுக்கும்போது, மோசே அவர்களைக் கடிந்துகொள்கிறார். மோசே அவர்களை நோக்கி, "என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள்" (யாத் 17:2) என்று கேட்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பதில் சொல்லும்போது, அவர்களை மென்மையாக கடிந்துகொள்கிறார். அவர்கள் மோசேக்கு விரோதமாக வாதாடினாலும், அவர்கள் அவருக்கு விரோதமாக முறுமுறுத்தாலும், ஜனங்கள் மெய்யாகவே கர்த்தருக்கு விரோதமாகவே முறுமுறுக்கிறார்கள்.

மோசே தன்னோடே வாதாடுகிற இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள்" என்று கேட்கிறார். அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுப்பதன் மூலமாக, கர்த்தருடைய வல்லமையை சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு கோபம் உண்டுபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தன்னோடே வாதாடும்போது, மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். மோசே கர்த்தரை நோக்கி, "இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே" (யாத் 17:4) என்று சொல்லுகிறார்.

மனுஷர் நமக்கு விரோதமாக அநியாயமாய் வாதாடும்போது, நாம் அவர்களோடு சண்டைபோடக்கூடாது. நாமும் அவர்களைப்போல வாதாடக்கூடாது. அவர்களிடத்தில் அநியாயம் இருந்தாலும், நாம் அவர்களோடே சண்டைபோடாமல், அந்த சூழ்நிலையிலும் மோசேயைப்போல, கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும். நம்முடைய பாரங்களையெல்லாம் கர்த்தர்மீது வைத்துவிடவேண்டும். நாம் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணி, நம்முடைய கவலைகள், கஷ்டங்கள், மனவேதனைகள் ஆகிய எல்லாவற்றையும் கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புவிக்கவேண்டும்.

நம்முடைய பிரச்சனைகளை நாம் மனுஷரிடத்தில் சொல்லும்போது, அவர்கள் ஒருவேளை நமக்கு செவிகொடுக்காமல் போய்விடுவார்கள். நம்முடைய கர்த்தரோ நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவர். நாம் கர்த்தரிடத்தில் நம்முடைய பிரச்சனைகளை சொல்லும்போது, அவர் மிகுந்த கரிசனையோடும், இரக்கத்தோடும் நம்முடைய வார்த்தைகளுக்கு செவிகொடுப்பார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயோடே வாதாடுகிறார்கள். அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் தான் என்ன செய்யவேண்டும் என்பது மோசேக்கு தெரியவில்லை. மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். மோசேக்கு கர்த்தருடைய உதவியும், ஆலோசனையும் தேவைப்படுகிறது. தன்னோடே வாதாடுகிற இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தான் என்ன செய்யவேண்டும் என்று மோசே கர்த்தருடைய ஆலோசனையை கேட்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது கர்த்தர் அவருக்கு, தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக் கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாக கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" (யாத் 17:5,6) என்று சொல்லுகிறார்.

மோசே தினமும் இந்தக் கோலைத் தன்னோடு எடுத்துச் செல்கிறார். செங்கடலை இரண்டாகப் பிரித்த சம்பவத்தில் மோசே இந்தக் கோலை இதற்கு முன்பு கடைசியாகப் பயன்படுத்தினார் (யாத் 14:16).

ஓரேப் என்பது ஒரு சிறிய கன்மலை. இது 15அடி நீளமும், 10அடி அகலமும், 12அடி உயரமும் உடையது. மோசே இந்தக் கன்மலையை அடிக்கிறார். இந்தக் கன்மலையிலிருந்து இலட்சக்கணக்கான ஜனங்களுக்குத் தேவையான தண்ணீர் புறப்பட்டு வருகிறது. பின்பு இந்தத் தண்ணீர் நின்று போயிற்று. மறுபடியும் அற்புதம் செய்து கன்மலையிலிருந்து தண்ணீர் வரவேண்டியதாயிற்று. (எண் 20:8-11).

இஸ்ரவேலின் மூப்பர்கள் அவிசுவாசத்தோடு இருந்தாலும் இங்கு அற்புதம் நடைபெறுகிறது. தேவன் சூழ்நிலைகளினால் மட்டுப்படுகிறவர் அல்ல. இயேசு கிறிஸ்துவும் அவிசுவாசிகளுக்கு மத்தியில் அநேக அற்புதங்களைச் செய்தார்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயோடே வாதாடும்போது, அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கும்போது, மோசே அவர்களை விட்டு பயந்து ஓடிப்போய்விடக்கூடாது. அவர் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக நிற்கவேண்டும். இஸ்ரவேலின் மூப்பரில் சிலரை மோசே தன்னோடே கூட்டிக்கொள்ளவேண்டும். அவர் தன்னுடைய கையிலே கோலைப் பிடித்துக்கொண்டு ஜனங்களுக்கு முன்னே நடந்துபோகவேண்டும். மோசே ஜனங்களைப் பார்த்து பயந்து ஓடிப்போகாமல், ஜனங்களுக்கு விரோதமாக சண்டைபோடாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோகவேண்டும்.

மோசேயின் கையில் கோல் இருக்கிறது. மோசே இந்தக் கோலால் நதியை அடித்தார். எகிப்தியர்மீது வாதைகள் வருவதற்கு மோசே இந்தக் கோலை பயன்படுத்தினார். அதுபோல, தனக்கு விரோதமாக முறுமுறுக்கிற இஸ்ரவேல் புத்திரரை தண்டிப்பதற்காகவோ அல்லது அவர்கள்மீது வாதைகள் வரப்பண்ணுவதற்காகவோ, மோசே இப்போது தன் கையிலே கோலைப் பிடித்திருக்கவில்லை. ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் புறப்படப்பண்ணுவதற்காக மோசேயின் கையில் கோல் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கலககுணமுள்ளவர்களாகவும், கர்த்தர்மீது நம்பிக்கையில்லாதவர்களாகவும், கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை உடனே தண்டித்துப்போடாமல், அவர்கள்மீது நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார்.

ஆகார் வனாந்தரத்தில் தண்ணீர் தாகமாயிருந்தபோது, கர்த்தர் அவளுக்கு தண்ணீரைக் கொடுத்து, அவளுடைய தாகத்தைத் தீர்த்து வைத்தார். கர்த்தர் அதுபோல இப்போது இந்த வனாந்தரத்திலே, மோசேக்கு தண்ணீர் ஊற்றை காண்பித்திருந்தால், இஸ்ரவேல் புத்திரருக்கு குடிக்க தண்ணீர் கிடைத்திருக்கும். அவர்கள் எல்லோரும் அந்த ஊற்றண்டைக்குப்போய், தண்ணீரைக் குடித்து தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிற ரெவிதீமிலே தண்ணீர் ஊற்று எதுவுமில்லை. கர்த்தர் அவர்களுக்கு அங்கே தண்ணீர் ஊற்றைக் காண்பிக்கவில்லை. கர்த்தர் ஓரேபிலே கன்மலையின்மேல் நிற்கிறார். கன்மலைக்குள்ளே என்ன இருக்கிறது என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியாது. அவர்களுக்கு மோசேயோடே வாதாடவும், மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கவும் தெரியும். அவர்களுக்கு கர்த்தருடைய வல்லமையும், மகத்துவமும், மகிமையும் தெரியாது. கர்த்தர் தங்கள்மீது இரக்கமாயும், மனவுருக்கமாயும் இருக்கிறார் என்பதுகூட இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியாது.

கர்த்தர் மோசேக்கு ரெவிதீமிலே தண்ணீர் ஊற்றைக் காண்பிக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தம்முடைய வல்லமையையும், அவர்கள்மீது தாம் வைத்திருக்கிற கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்த விரும்புகிறார் கர்த்தர் அவர்களுக்கு ஒரு அற்புதத்தை நடப்பித்து, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த தீர்மானித்திருக்கிறார். கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

மோசே எங்கு போகவேண்டும் என்றும், அவர் தன்னோடு இஸ்ரவேலின் மூப்பரை அங்கே கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்றும் கர்த்தர் அவருக்கு கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் நடப்பிக்கிற அற்புதத்திற்கு, இஸ்ரவேலின் மூப்பர்கள் கண்ணாரக்கண்ட சாட்சிகளாயிருப்பார்கள். கர்த்தருடைய தெய்வீக பிரசன்னம் தங்கள் நடுவிலே இருக்கிறது என்பதை அவர்கள் பிரத்தியட்சமாய்ப் பார்த்து, கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பார்கள்.

கர்த்தர் நடப்பிக்கிற அற்புதம் ஏதோ ஒரு மூலையில் இரகசியமாய் நடைபெறுகிற சம்பவமல்ல. கர்த்தர் தம்முடைய அற்புத வல்லமையை இஸ்ரவேலின் மூப்பருக்கு முன்பாக வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர்மீது நம்பிக்கை வரவேண்டும். கர்த்தர் தங்கள் நடுவிலிருக்கிறார் என்னும் நிச்சயம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேலின் மூப்பரில் சிலரை தன்னோடே கூட்டிக்கொண்டு போகும்போது, கர்த்தர் ஓரேபிலே, மோசேக்கு முன்பாக, கன்மலையிலே நிற்பதாக வாக்குப்பண்ணுகிறார். அப்பொழுது மோசே அந்தக் கன்மலையை, தன் கையில் பிடித்திருக்கிற கோலால் அடிக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாக, கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரம், கன்மலையை அடிக்கிறார். அப்பொழுது அந்தக் கன்மலையிலிருந்து, ஜனங்கள் குடிப்பதற்கு தண்ணீர் புறப்பட்டு வருகிறது. அங்கிருந்து திரளான தண்ணீர் புறப்பட்டு வருகிறது. இதுவரையிலும் அங்கே ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லாதிருந்தது. இப்போதோ கன்மலையிலிருந்து, ஜனங்கள் குடிப்பதற்கு ஏராளமான தண்ணீர் புறப்பட்டு வருகிறது.

கன்மலையிலிருந்து புறப்பட்டு வருகிற தண்ணீர், "தண்ணீர் தடாகம்" என்று அழைக்கப்படுகிறது. "அவர் கன்மலையைத் தண்ணீர்த்தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்" (சங் 114:8).

கன்மலையிலிருந்து புறப்படும் தண்ணீர், தேனும் எண்ணெயும் என்று அழைக்கப்படுகிறது. "பூமியிலுள்ள உயர்ந்தஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்; வயலில் விளையும் பலனை அவனுக்குப் புசிக்கக் கொடுத்தார்; கன்மலையிலுள்ள தேனையும், கற்பாறையிலிருந்து வடியும் எண்ணெயையும் அவன் உண்ணும்படி செய்தார்" (உபா 32:13).

ரெவிதீமிலே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் தண்ணீர் தவனமாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தாகத்திற்கு தேனையும், எண்ணெயையும் தாராளமாய்க் கொடுக்கிறார். கன்மலையிருந்து புறப்பட்டு வருகிற தண்ணீர் இஸ்ரவேல் புத்திரருக்கு தேனைப்போலவும், எண்ணெயைப்போலவும் இருக்கிறது. இது அவர்களுக்கு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் கொடுக்கிறது.

பொதுவாக கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரும் என்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். நாம் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கும்போது, நாம் எதிர்பார்க்காத திசையிலிருந்து, நமக்கு நன்மைகள் வரும். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களின் ஊற்றுக்களை நமக்காக திறந்துகொடுத்து, நம்முடைய தேவைகளை சந்திப்பார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகிறார்.

"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், காட்டுமிருகங்களும், வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும் என்னைக் கனம்பண்ணும்" (ஏசா 43:19,20).

நாம் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணினாலும், கர்த்தர் நமக்கு உண்டுபண்ணின வழியிலே பிரயாணம் பண்ணவேண்டும். நாம் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தரையே நோக்கிப் பார்த்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி பிரயாணம்பண்ண வேண்டும். கர்த்தர் நம் நடுவிலிருக்கிறார் என்றும், அவர் நம்முடைய தேவைகளை சந்தித்து நமக்கு உதவிசெய்வார் என்றும் நாம் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளும் ஆறுதல்களும் ஜீவத்தண்ணீருள்ள நதிகளுக்கு ஒப்பாக சொல்லப்பட்டிருக்கிறது.

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" *(யோவா 7:38,39)*

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" *(யோவா 4:14).*

ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. கிறிஸ்துவனாவரே மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் அடிக்கப்பட்ட கன்மலையாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் கொடுக்கும் ஜீவத்தண்ணீர் மாத்திரமே ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும். ஜீவத்தண்ணீர் மாத்திரமே நம்முடைய ஆத்துமாவின் தாகத்தை தணிக்கும்.

கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரவேண்டுமென்றால், ஊற்று திறக்கப்படவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, திறக்கப்பட்ட நீரூற்றாகயிருக்கிறார். கன்மலையாகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து புறப்பட்டு வரும் ஜீவத்தண்ணீர் பரிசுத்தமானதாகவும், தெளிவானவதாகவும், நம்முடைய ஆத்துமாவின் தாகத்தை தீர்க்கக்கூடியதாகவும், நமக்கு சந்தோஷத்தையும், ஆறுதலையும், கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே மோசேக்கு விரோதமாக வாதாடினார்கள். கர்த்தர் தங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று, இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே கர்த்தரை பரீட்சை பார்த்தார்கள். மோசே இந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் புதிய பேரிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களையும், முறுமுறுப்புக்களையும் நினைவுகூரவேண்டும். மாசா என்னும் பெயருக்கு பரீட்சை அல்லது சோதனை என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே கர்த்தரை பரீட்சை பார்த்தார்கள். மேரிபா என்னும் பெயருக்கு வாதாடுதல் என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் இந்த ஸ்தலத்திலே மோசேயோடு வாதாடினார்கள்.

"மாசா" என்னும் பெயருக்கு "சோதனை அல்லது கர்த்தரைப் பரீட்சை பார்ப்பது" என்று பொருள்.

"மேரிபா" என்னும் பெயருக்கு "வாதாடுதல்" என்று பொருள். தண்ணீருக்காக ஜனங்கள் மோசேயோடு வாதாடினார்கள். *(யாத் 17:2-4,7).*

"கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா" என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக பேசுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார். கர்த்தர் தினமும் அவர்களை அக்கினிஸ்தம்பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்துகிறார். இவ்வளவு காரியம் நடைபெற்ற பின்பும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று கேட்பது கர்த்தரைக் கோபமூட்டும் செயலாகும். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் காணப்படும் அவிசுவாசம் அவர்களைத் தேவனுடைய கிருபையிலிருந்து விலக்கிப்போடும். *(எண் 14:1-35; யூதா 1:5).*

## அமலேக்கியரோடு யுத்தம்
## யாத் 17:8-16

**யாத் 17:8. அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்.**

**யாத் 17:9. அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.**

**யாத் 17:10. யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள்.**

**யாத் 17:11. மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான்.**

**யாத் 17:12. மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறுபக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது.**

**யாத் 17:13. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.**

**யாத் 17:14. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார்.**

**யாத் 17:15. மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு,**

**யாத் 17:16. அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான்.**

இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்களில், அமலேக்கியர் முதலாவதாக யுத்தம்பண்ண வருகிறார்கள். "மேலும், அவன் அமலேக்கைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: அமலேக்கு முந்தியெழும்பினவன்; ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான் என்றான்" *(எண் 24:20).*

அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணுகிறார்கள் *(யாத் 17:8).*

இஸ்ரவேலர்கள் பலவீனமாக களைத்துப்போய் இருக்கிறார்கள். வனாந்தரத்தில் அலைந்து திரிந்து தண்ணீர் இல்லாமல் தாகத்தோடு இருக்கிறார்கள். இவ்வாறு பலவீனமாக இருக்கும் இஸ்ரவேலரை அமலேக்கியர் பாளயத்தின் பின்புறமாக வந்து தாக்கி, அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்லுகிறார்கள். அமலேக்கியரின் கோழைத்தனமான காரியத்திற்காக தேவன் அவர்களைச் சங்காரம் பண்ணுகிறார் *(ஆதி 36:12, யாத் 17:8,14; உபா 25:17-19).*

அமலேக்கியர் ஏசாவின் சந்ததியை சேர்ந்தவர்கள். ஏசா யாக்கோபை பகைத்தார். ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை அசட்டை செய்து, அதை யாக்கோபுக்கு விற்றுப்போட்டார். அவர்களுடைய தகப்பனாராகிய ஈசாக்கை யாக்கோபு வஞ்சித்து, ஏசாவுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். இதனால் ஏசாவுக்கு பூர்வகாலம் முதலாகவே யாக்கோபின்மீது பகை இருக்கிறது.

அமலேக்கியர் ஏசாவின் சந்ததியை சேர்ந்தவர்கள். இப்போது ஏசாவின் சந்ததியாருக்கும், யாக்கோபின் சந்ததியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் பூர்வ பகை தொடருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் இளைத்து விடாய்த்திருக்கிறார்கள். அவர்களுடைய பாளயத்தில் பலவீனரெல்லாம், பின்னால் வருகிறார்கள். அமலேக்கியரோ, இஸ்ரவேல் புத்திரரின் பின்பாளயத்திலுள்ள பலவீனரை வெட்டிப்போடுகிறார்கள். அவர்கள் இளைத்து விடாய்த்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரை கொன்றுபோடுகிறார்கள்.

"எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு" (உபா 25:17,18).

இளைத்து விடாய்த்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரால், அமலேக்கியரின் பட்டயத்திற்கு தப்பிக்க முடியவில்லை. அவர்களால் அமலேக்கியருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணவும் முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரரால் தங்கள் ஜீவனை பாதுகாத்துக்கொள்ள தப்பித்தும் ஓடமுடியவில்லை. இது அமலேக்கியர்மீது வந்த பெரும் பாவமாகவும், பழியாகவும் இருக்கிறது.

அமலேக்கியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் இஸ்ரவேல் புத்திரரின் பாளயங்களை பாதுகாக்கிறார். ஆனால் அமலேக்கியரோ, தாங்கள் யாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறோம் என்பது தெரியாமலேயே, இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறார்கள்.

அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி, "நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன்" (யாத் 17:9) என்று சொல்லுகிறார்.

பல அற்புதங்களைச் செய்வதற்குத் தேவனுடைய கோல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கு தேவனுடைய கோல் யுத்தத்தில் வெற்றியைத் தருகிறது.

இந்த வசனத்தில்தான் யோசுவாவைப்பற்றி முதன் முறையாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். மோசே மரித்துப்போன பின்பு, யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு வழிநடத்த வேண்டும். அதற்கான பயிற்சிகளை மோசே இப்போதே யோசுவாவுக்கு கொடுக்க ஆரம்பிக்கிறார்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்தில், மோசேயும் யோசுவாவும் பங்குபெறுகிறார்கள். அவர்கள் இருவரும் வெவ்வேறு ஸ்தலங்களில், வெவ்வேறு விதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். மோசே மலைஉச்சியில் தேவனுடைய கோலை தன் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறார். யோசுவா அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே வெட்டி முறியடிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, மோசே கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுகிறார். யோசுவா பட்டயத்தைப் பிடித்து அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். மோசேயின் கையிலுள்ள கோல் இஸ்ரவேல் புத்திரருக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது.

மோசேயின் கையில் தேவனுடைய கோல் இருக்கிறது. அவர் அந்தக் கோலை தேவனுக்கு நேராக ஏறெடுக்கிறார். அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். அமலேக்கியருக்கு விரோதமாக நடைபெறுகிற இந்த யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கவேண்டும் என்றும், அமலேக்கியர் முறியடிக்கப்படவேண்டும் என்றும் மோசே கர்த்தருடைய சமுகத்திலே மன்றாடி ஜெபம்பண்ணுகிறார்.

யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணுகிறார். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறுகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள்; மோசே தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொள்கிறான் (யாத் 17:10,11).

ஊர் என்பவன் யூதா கோத்திரத் தானான காலேபின் குமாரன். (1நாளா 2:19-20). அவன் மோசேயோடும், ஆரோனோடும் நெருங்கிய தொடர்புடையவன். (யாத் 17:10-12; யாத் 24:14; யாத் 31:2; யாத் 35:30; யாத் 38:22). யோசபஸ் இவனைப் பற்றி எழுதும்போது, இவன் மிரியாமின் கணவன் என்றும், மோசே ஆரோன் ஆகியோரின் மைத்துனன் என்றும் எழுதியிருக்கிறார்.

மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள். தன்னுடைய கரங்களினால் மோசே தேவனுடைய கோலை உயரப்பிடித்திருக்கும்போது, இஸ்ரவேலர்கள் ஜெயம்பெறுகிறார்கள். (யாத் 17: 11-13). மோசே தன் கையைத் தாழ்த்துகையில் இஸ்ரவேலர்கள் தோல்வியுறுகிறார்கள்.

மோசேயின் கைகள் அசைந்து போயிற்று. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். ஆனாலும் யோசுவாவின் கைகள் அசந்துபோயிற்று என்றும் எங்கும் சொல்லப்படவில்லை. ஆனால் மோசேயோ கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தன்னுடைய கைகளை ஏறெடுத்திருக்கிறார். ஆனாலும் அவருடைய கைகள் அசந்துபோயிற்று.

நாம் இந்த உலகத்தில் பலவிதமான வேலைகளை செய்தாலும், ஆவிக்குரிய ஊழியத்தில் அதிகமான சோர்வுகளும், மிகுதியான அசதிகளும் வரும். ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் சீக்கிரத்தில் சோர்ந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் விசுவாசிககளாகிய நாம் சோர்ந்துபோகாமல், விழித்திருந்து ஊழியம் செய்யவேண்டும். அசந்துபோகாமல் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும்.

மோசேயின் கையில் தேவனுடைய கோல் இருக்கிறது. மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொள்கிறார்கள். தன்னுடைய கைகள் அசந்துபோனபோது, மோசே தன் கையை தாழவிடுகிறார். அப்போது அமலேக்கு மேற்கொள்கிறான். மோசே தன் கையை தாழவிடும்போது, இஸ்ரவேல் புத்திரரும் தாழ்ந்துபோகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுக்கும்போது, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர் தன் கையை தாழவிடும்போது, அவர் தன் ஜெபத்தில் அசந்துபோகிறார்.

மோசே மலை உச்சியில் நிற்கிறார். அவருடைய கைகள் அசந்துபோயிற்று. மோசேயோடுகூட ஆரோனும், ஊர் என்பவனும் மலை உச்சியில் ஏறி வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் அசந்து போயிருக்கிற மோசேயின் கைகளை தாங்குகிறார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொள்வதை ஆரோனும் ஊரும் பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் மோசேயின் கைகளை தாங்கி, அவர் தன் கையை ஏறெடுப்பதற்கு ஆதரவாயிருக்கிறார்கள்.

மோசேயின் கைகள் அசந்துபோனபோது ஆரோனும் ஊரும் ஒரு கல்லைக் கொண்டுவந்து மோசேயின் கீழே வைக்கிறார்கள்; மோசே அதின்மேல் உட்காருகிறார்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறுபக்கத்திலும் இருந்து, மோசேயின் கைகளைத் தாங்குகிறார்கள்; இவ்விதமாய் மோசேயின் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருக்கிறது (யாத் 17:12).

மோசேயால் மலை உச்சியில் நிற்கக்கூட முடியவில்லை. ஆரோனும் ஊரும் மோசேயை ஒரு கல்லின்மேல் உட்கார வைக்கிறார்கள். மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு அவர்கள் இருவரும் உதவி செய்கிறார்கள். அவர்கள் அசந்துபோயிருக்கிற மோசேயின் கைகளை தாங்கிப் பிடித்துக்கொள்கிறார்கள்.

மோசே தேவனுடைய மனுஷன். ஆரோன் மோசேயின் சகோதரர். ஊர் என்பவன் மிரியாமின் கணவனாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மிரியாம் மோசேயின் சகோதரி. மோசேயும் ஆரோனும், ஊரும் ஒருவருக்கொருவர் உறவினர்களாகயிருக்கிறார்கள். மோசே அவர்களுடைய உதவிகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் இருவரும் அசந்துபோயிருக்கிற மோசேயின் கைகளை தாங்கிப் பிடிக்கிறார்கள். இவ்விதமாக சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் மோசே தன் கைகளை ஏறெடுக்கிறார்.

அமலேக்கியரோடு யுத்தம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர், ஏறெடுக்கப்பட்டிருக்கிற மோசேயின் கைகளை பார்க்கிறார்கள். அவர்களுடைய மனதிலே தெம்பும், உற்சாகமும் உண்டாயிற்று. யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அமலேக்கையும் அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். மோசே மலையின்மீது உட்கார்ந்து, தன்னுடைய கைகளை ஏறெடுக்கிறார். இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே, கிறிஸ்துவானவரே நமக்கு யோசுவாவைப் போலவும், மோசேயைப்போலவும் இருக்கிறார். யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார். நாம் மேற்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய போராட்டங்களில், கிறிஸ்துவானவர் நமக்காக போராடுகிறார்.

மோசே மலையின்மீது தம்முடைய கைகளை ஏறெடுத்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பரலோகத்திலே, தம்முடைய பிதாவின் வலது பாரிசத்திலே அமர்ந்து, நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இதனால் நம்முடைய விசுவாசத்தில் நாம் தோற்றுப்போகாமல் நிலைத்திருக்கிறோம்.

அமலேக்கியர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ண வந்தார்கள். இந்த யுத்தத்திலே அமலேக்கியர் தோற்றுப்போகிறார்கள். யோசுவா அவர்களை முறியடிக்கிறார். யோசுவாவோடுகூட இஸ்ரவேல் புத்திரர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பயிற்சி பெற்ற யுத்தவீரர்கள் என்று சொல்லமுடியாது. அவர்களிடத்தில் சரியான யுத்த ஆயுதங்களும் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தார் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமை வேலை செய்தவர்கள். அவர்கள் முறுமுறுக்கும் சுபாவமுள்ளவர்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரை இந்த யுத்தத்திலே பயன்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தம் முடிவு பெறுகிறது. அப்போது மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிடுகிறார் (யாத் 17:15). யோசுவா அமலேக்கையும், அவனுடைய ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறியடிக்கிறார். மோசே தனக்கு சொன்ன பிரகாரம், யோசுவா அமலேக்கியரோடே யுத்தம்பண்ணுகிறார். இந்த யுத்தத்தில் யோசுவாவின் பங்கு மிகவும் பெரியது.

யோசுவா அமலேக்கியரை முறியடித்ததற்காக, மோசே அவருக்கு ஒரு வெற்றி தூணை நிறுத்தவில்லை. மோசே யோசுவாவுக்கு பதக்கங்களையோ, பரிசுகளையோ கொடுத்து, அவரை கனம்பண்ணவில்லை. மோசே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்கட்டி, கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். அந்த பலிபீடத்திற்கு யேகோவாநிசி என்று பேரிடுகிறார். யேகோவாநிசி என்றும் பெயருக்கு "கர்த்தர் நமது ஜெயக்கொடி" என்று பொருள்.

மோசே மலையின் உச்சியில் கர்த்தருடைய கோலை உயர்த்துகிறார். கர்த்தருடைய கோல் அவருடைய ஜெயக்கொடியாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய ஜெயக்கொடியை உயர்த்துகிறார். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று.

யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். யுத்தம் பண்ணுகிற களத்திலே கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய வல்லமையும் வெளிப்படுகிறது. கர்த்தர் ஜெயக்கொடியாக அவர்கள் மத்தியிலே உயர்த்தப்பட்டிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியரின் பலத்தையும், அவர்களுடைய யுத்த ஆயுதங்களையும் நோக்கிப் பார்க்காமல், தங்கள் ஜெயக்கொடியாகிய கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தரை நோக்கிப் பார்க்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று. இந்த ஜெயம் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ உண்டாகவில்லை. கர்த்தருடைய வல்லமையினாலேயே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமும், அமலேக்கியருக்கு தோல்வியும் உண்டாயிற்று. மோசே கர்த்தரை கனம்பண்ணுகிறார். அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு யேகோவாநிசி என்று பேரிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தருடைய ஜெயக்கொடியை நோக்கிப் பார்த்து, கர்த்தர் தங்களுக்கு ஜெயம் கொடுப்பார் என்று நம்பி, யுத்தக்களத்திலே சிதறிப்போகாமல், சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய வல்லமை இஸ்ரவேல் புத்திரரை ஒரே சேனையாக கூட்டிச் சேர்த்திருக்கிறது.

கர்த்தர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணிய இந்த சம்பவத்தை, இஸ்ரவேல் புத்திரருடைய பின்சந்ததியாருக்கும் அறிவிக்க வேண்டும். இதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி, "இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன்" (யாத் 17:14) என்று சொல்லுகிறார்.

மோசே எழுதும் புஸ்தகம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும். மோசே இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற செய்தியை யோசுவாவின் செவி கேட்கும்படி வாசிக்கவேண்டும். தான் கேட்டதை யோசுவா இஸ்ரவேலின் பின்சந்ததியாருக்கு அறிவிக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை எழுத ஆரம்பிக்கிறார். அவர்களுடைய அன்றாட நாளாகமத்தை, மோசே ஒரு புஸ்தகத்தில் எழுதுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் புஸ்தகத்தின் சரித்திரத்தை பரிசுத்த வேதாமகத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் தம்முடைய கட்டளையை கற்பலகைகளில் எழுதி, அந்தப் பலகைகளை மோசேக்கு கொடுத்தார். அதன்பின்புதான், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை ஒரு புஸ்தகத்தில் எழுதுமாறு சொன்னார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுவார் என்பதை இஸ்ரவேல் புத்திரரின் பின்சந்ததியாரும் அறிந்திருக்கவேண்டும். கர்த்தர் தங்கள் முற்பிதாக்களுக்கு செய்த நன்மையான காரியங்கள் எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நினைவுகூரவேண்டும்.

கர்த்தர் அமலேக்கை வானத்தின்கீழ் எங்கும் இராதபடிக்கு நாசம்பண்ணுவார். கர்த்தர் அமலேக்கியருக்கு கொடுக்கும் தண்டனை சவுலின் காலத்தில் ஓரளவு நிறைவேறிற்று (1சாமு 15-ஆவது அதிகாரம்). தாவீதின் ஆட்சிக்காலத்தில், கர்த்தர் அமலேக்கியரை மொத்தமாய் நாசம்பண்ணினார். அமலேக்கியருக்கு சர்வநாசமும், சர்வசங்காரமும் உண்டாயிற்று. (1சாமு 30-ஆவது அதிகாரம்). இந்த சம்பவத்திற்கு பின்பு அமலேக்கியரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

கர்த்தர் அமலேக்கியரை வானத்தின் கீழேங்கும் இராதபடிக்கு முற்றிலுமாய் நாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். அதுவரையிலும் தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும். அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்திற்கு விரோதமாயிருந்தபடியினால், அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடைபெறுகிறது.

அமலேக்கியரோடு இஸ்ரவேல் புத்திரர்கள் தொடர்ந்து யுத்தம் பண்ணி வந்திருக்கிறார்கள். ஏகூத் (நியா 3:13-15); பாராக் (நியா 5:15); கிதியோன் (நியா 6:3); சவுல் (1சாமு 15); சாமுவேல் (1சாமு 15:32-33); தாவீது (1சாமு 27:8; 1சாமு 30: 1-17; 2சாமு 8:12); எசேக்கியாவின் நாளில் சிமியோனியர் (1நாளா 4:42-43) ஆகியோர் அமலேக்கியரோடு யுத்தம்பண்ணினார்கள்.

அமலேக்கியருக்கு விரோதமாக சொல்லப்படும் இந்தக் காரியங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் அமலேக்கியரோடு எக்காலத்திலும் உடன்படிக்கை பண்ணக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தம்.

## 18 அதிகாரம்

மோசேயைப்பற்றியும் அவருடைய குடும்பத்தாரைப்பற்றியும் இந்த அதிகாரத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மோசேயின் மாமனாகிய எத்திரோ, மோசேயின் மனைவியாகிய சிப்போராளையும், மோசேயின் இரண்டு குமாரரையும், மோசே பாளயமிறங்கியிருக்கிற வனாந்தரத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறார் (யாத் 18:1-6).

மோசே தன்னுடைய மாமனாகிய எத்திரோவை வரவேற்று, அவருக்குரிய மரியாதை செலுத்துகிறார் (யாத் 18:7). மோசேயும் எத்திரோவும் தங்கள் சுகசெய்தியை விசாரித்துக்கொள்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த நன்மையான காரியங்களை மோசே எத்திரோவுக்கு சொல்லுகிறார் (யாத் 18:8-11). எத்திரோ கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியையும், மற்ற பலிகளையும் செலுத்துகிறார் (யாத் 18:12).

மோசே இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கிறார். ஜனங்களை நியாயம் விசாரிப்பது சம்பந்தமாக எத்திரோ மோசேக்கு ஒரு சில ஆலோசனைகளை சொல்லுகிறார் (யாத் 18:13-23). மோசே தன் மாமன் சொல் கேட்டு, அவருடைய ஆலோசனையின்படி செய்கிறார் (யாத் 18:24-26). அதன் பின்பு எத்திரோ மீதியான் தேசத்திற்கு திரும்பிப்போகிறார் (யாத் 18:27).

### மோசேயின் மாமனாகிய எத்திரோ யாத் 18:1-6

**யாத் 18:1. தேவன் மோசேக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த யாவையும், கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும், மீதியானில் ஆசாரியனாயிருந்த மோசேயின் மாமனாகிய எத்திரோ கேள்விப்பட்டபோது,**

**யாத் 18:2. மோசேயின் மாமனாகிய எத்திரோ, மோசேயினாலே திரும்பி அனுப்பிவிடப்பட்டிருந்த அவன் மனைவியாகிய சிப்போராளையும்,**

**யாத் 18:3. அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு பிரயாணப்பட்டான். நான் அந்நிய தேசத்திலே பரதேசியானேன் என்று மோசே சொல்லி, ஒரு மகனுக்குக் கெர்சோம் என்று பேரிட்டிருந்தான்.**

**யாத் 18:4. என் பிதாவின் தேவன் எனக்குத் துணைநின்று பார்வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்புவித்தார் என்று சொல்லி, மற்றவனுக்கு எலியேசர் என்று பேரிட்டிருந்தான்.**

**யாத் 18:5. மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயின் குமாரரோடும் அவன் மனைவியோடுங்கூட, அவன் பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வந்து:**

**யாத் 18:6. எத்திரோ என்னும் உம்முடைய மாமனாகிய நானும், உம்முடைய மனைவியும், அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உம்மிடத்திற்கு வந்திருக்கிறோம் என்று மோசேக்குச் சொல்லியனுப்பினான்.**

யாத்திராகமம் 18-ஆவது அதிகாரம் ஒரு இணைப்புப் பகுதியாகும். இது எண் 10:10 ஆவது வசனத்திற்கும், எண் 10:11 ஆவது வசனத்திற்கும் இடையில் வரவேண்டும். இதற்கான காரணங்கள்

1. இஸ்ரவேலர்கள் சீனாயில் இன்னும் பாளயமிறங்கவில்லை. (யாத் 19:1-2) ஆனால் எத்திரோ மோசேயைப் பார்க்க வந்தபோது, அவர்கள் ஏற்கெனவே சீனாயில் இருக்கிறார்கள். (யாத் 18:5).

2. உபா 1:6-15 ஆவது வசனத்தின் வரலாற்றின் பிரகாரம் இஸ்ரவேலர்கள் சீனாயிலிருந்து புறப்பட ஆயத்தமாக இருக்கும்பொழுது, மோசே தன்மீது விழுந்திருக்கும் பாரத்தைப் பற்றி முறையிடுகிறார். மோசே எத்திரோவிடம் பேசுவதிலிருந்து இது தெரியவருகிறது. (யாத் 18:13-26; எண் 11:10-18).

3. இஸ்ரவேலர்கள் சீனாயிலிருந்து புறப்படும்போது, எத்திரோ இன்னும் அவர்களோடு கூட இருக்கிறார். அவ்வேளையில் எத்திரோ தன் வீட்டிற்குத் திரும்பிப் போவதற்காக அவர்களை விட்டுப் பிரிகிறார் (யாத் 18:24-27; எண் 10:11-36).

4. சீனாயைவிட்டுப், புறப்பட்டுப் போனபின்பு, ஆரோனும், மிரியாமும் மோசேயின் மனைவிக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். (எண் 12) இந்த நிகழ்ச்சி எத்திரோ அவர்களைவிட்டுப் புறப்பட்டுப் போனவுடன் நடைபெறுகிறது.

5. தேவன் இஸ்ரவேலருக்குப் பிரமாணத்தைக் கொடுத்தபின்பு, எத்திரோ மோசேயைப் பார்க்க வருகிறார் (யாத் 20-24, யாத் 18:16-26). யாத் 20-40 ஆகிய அதிகாரங்களில் மோசே இந்தப் பிரமாணங்களைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். இதற்கு முன்பாக மோசே தன்னுடைய குடும்பத்தைப் பற்றிய செய்தியை எழுதி இந்தப் பகுதியில் இணைத்திருக்கலாம்.

எத்திரோ மீதியானிலே ஆசாரியராயிருக்கிறார். இவர் மோசேயினுடைய மாமனார். மோசேயின் மனைவியும், அவர்களுடைய இரண்டு குமாரர்களும் எத்திரோவோடுகூட மீதியானிலே தங்கியிருக்கிறார்கள்.

எத்திரோ மோசேயின் மாமன். இந்த வாக்கியத்தில் மாமன் என்பதற்கான எபிரெய வார்த்தை "காத்தான்" என்பதாகும். இந்த வார்த்தைக்கு திருமணம் செய்து கொடுத்தவர் திருமணத்தின் மூலமாக உறவினர் என்று பொருள். எத்திரோ இப்பொழுது மோசேயின் மனைவியையும், அவருடைய குமாரரையும் மோசேயிடம் திரும்ப அழைத்து வருகிறார் (யாத் 18:1-27).

தேவன் மோசேக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த யாவையும், கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும், மீதியானில் ஆசாரியனாயிருந்த மோசேயின் மாமனாகிய எத்திரோ கேள்விப்படுகிறார் (யாத் 18:1).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த நன்மைகளை நினைத்து எத்திரோ சந்தோஷப்படுகிறார். மோசேயையும், இஸ்ரவேல் புத்திரரையும் விசாரிப்பதற்காகவும், அவர்களுடைய சுகசெய்திகளை அறிந்துகொள்வதற்காகவும், இஸ்ரவேல் புத்திரரோடு கர்த்தருக்குள் சந்தோஷமாய் மகிழ்ந்து களிகூருவதற்காகவும், எத்திரோ மோசேயை பார்க்க வருகிறார்.

மோசேயின் மனைவியைப்பற்றி இங்கு சொல்லும்போது, அவள் "மோசேயினாலே திரும்பி அனுப்பிவிடப்பட்டிருந்த அவன் மனைவியாகிய சிப்போராள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மோசே தன் மனைவியை ஏன் திருப்பி அனுப்பி விட்டார் என்று தெரியவில்லை (யாத் 4:24-26). எகிப்தில் தான் சந்திக்க வேண்டிய ஆபத்திலிருந்து தன் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது தன் மனைவி தன்னுடைய ஊழியத்திற்கு இடையூறாக இருப்பாள் என்று மோசே நினைத்தாலோ, ஏதோ ஒரு காரணத்திற்காக மோசே தன் மனைவியைத் தன் மாமனாகிய எத்திரோவிடம் திரும்ப அனுப்பிவிட்டார். இஸ்ரவேல் ஜனத்தாரை விடுவித்த பின்பு, தன் மனைவியோடு சேர்ந்து வாழலாம் என்று மோசே நினைத்திருக்கலாம்.

எத்திரோ மீதியான் தேசத்தைச் சேர்ந்தவர். அவர் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர். எத்திரோவுக்கு வாக்குத்தத்த தேசமாகிய கானானிலே பங்கு இல்லை. கானான் தேசத்தில் எத்திரோவுக்கு சுதந்தரம் இல்லாவிட்டாலும், கர்த்தர் இஸ்ரவேலுக்காக செய்த நன்மைகளை நினைத்து, எத்திரோவும் சந்தோஷப்படுகிறார்.

எத்திரோ இஸ்ரவேல் ஜனத்தார்மீது அன்பாயும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மீது பக்தியுள்ளவராயும் இருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பலத்த புயத்தினால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். எத்திரோ கர்த்தருடைய மகத்துவமான கிரியைகளைக் கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறார்.

எத்திரோ மோசேயைப் பார்க்க வரும்போது, மோசேயின் மனைவியையும், அவர்களுடைய இரண்டு குமாரர்களையும் தன்னோடு அழைத்துக்கொண்டு வருகிறார். மோசே அவர்களை தன் மாமனாருடைய வீட்டிற்கு ஏற்கெனவே அனுப்பி வைத்திருக்கிறார். மகளும், பேரப்பிள்ளைகளும் தன்னோடு கூடயிருப்பது எத்திரோவுக்கு சந்தோஷமாயிருக்கும். ஆனாலும் அவர்கள் மோசேயோடு கூடயிருப்பதுதான் முறையானது.

எத்திரோ மோசேயையும், மோசேயின் மனைவியாகிய சிப்போராளையும் பிரித்து வைக்க விரும்பவில்லை. அவர்கள் எல்லோரும் குடும்பமாக இணைந்து, சேர்ந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார். கணவனையும் மனைவியையும் நீண்டநாட்களுக்கு பிரித்து வைப்பது நல்லதல்ல. அதுபோலவே, பெற்றோரையும் அவர்களுடைய பிள்ளைகளையும் நீண்டநாட்களுக்கு பிரித்து வைக்கக்கூடாது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராயிருக்கிறார். அவர் கர்த்தருடைய நாமத்தினால் இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்கிறார். இஸ்ரவேலுக்கு அதிபதியாயிருக்கிற மோசே, ஜனங்களுக்கு முன்பாக நல்ல எடுத்துக்காட்டாக ஜீவிக்கவேண்டும். மோசே தன்னுடைய குடும்பத்தை நன்றாய் நடத்தவேண்டும்.

கண்காணிப்பை விரும்புகிறவன், "தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1தீமோ 3:4,5).

மோசே இப்போது இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு வழிநடத்திக்கொண்டு போகிறார். அவருக்கு அதிகமான பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், மோசேயின் மனைவி அவரோடு கூடயிருப்பது, அவருக்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும். சிப்போராள் மோசேக்கு பல விஷயங்களிலும் உதவியாயிருப்பாள். அவள் மோசேயின் பாரத்தை பகிர்ந்துகொள்வாள்.

மோசேக்கும் சிப்போராளுக்கும் இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். மூத்த குமாரனுக்கு கெர்சோம் என்று பெயர். இந்தப் பெயருக்கு "பரதேசி" என்று பொருள். மோசேயின் இரண்டாவது குமாரனுக்கு எலியேசர் என்று பெயர். இந்தப் பெயருக்கு "தேவன் எனக்கு துணை" என்று பொருள்.

"நான் அந்நிய தேசத்திலே பரதேசியானேன்" என்று மோசே சொல்லி, ஒரு மகனுக்குக் கெர்சோம் என்று பேரிட்டிருந்தார். "என் பிதாவின் தேவன் எனக்குத் துணைநின்று பார்வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்புவித்தார்" என்று சொல்லி, மோசே மற்றவனுக்கு எலியேசர் என்று பேரிட்டிருந்தார் (யாத் 18:3,4).

"கெர்சோம்" என்னும் பெயருக்கு பரதேசி என்று பொருள் (யாத் 18:3; யாத் 2:22; 1நாளா 23:15-16; 1நாளா 26:24).

"எலியேசர்" என்னும் பெயருக்கு தேவன் எனக்குத் துணை நிற்கிறவர் என்று பொருள். (1நாளா 23:15-17). வேதாகமத்தில் மேலும் பத்து பேருக்கு எலியேசர் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் ஆபிரகாமின் வேலைக்காரனாகிய எலியேசர் மிகவும் முக்கியமானவன். (ஆதி 15:2; ஆதி 24).

மோசேயின் மாமனாகிய எத்திரோ, மோசேயினாலே திரும்பி அனுப்பிவிடப்பட்டிருந்த மோசேயின் மனைவியாகிய சிப்போராளையும், அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு பிரயாணப்படுகிறார் (யாத் 18:2,3).

மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயின் குமாரரோடும், மோசேயின் மனைவியோடுங்கூட, மோசே பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வருகிறார் (யாத் 18:5).

"அவன் பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதம்" என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யாத் 18 ஆவது அதிகாரம் ஒரு இணைப்புப் பகுதி என்பதை இது விளக்குகிறது. இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே சீனாயில் பாளயமிறங்கி இருக்கிறார்கள். ரெவிதீமை விட்டுப் புறப்படும் வரையிலும் அவர்களால் சீனாயில் பாளயமிறங்கியிருக்க முடியாது *(யாத் 19:1-2)*.

எத்திரோ நற்குணமுள்ளவர். பரிசுத்த வேதாகமத்தில் எத்திரோவின் நல்ல சுபாவத்தைப் பற்றி பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பக்திமான் *(யாத் 2:16; யாத் 3:1; யாத் 18:1-12)*
2. குடும்பஸ்தர் *(யாத் 2:16; யாத் 18:1-7)*
3. ஐசுவரியவான். *(யாத் 2:16-3:1)*
4. சூழ்நிலைகளைக் கவனிக்கிறவர். *(யாத் 2:18; யாத் 18:1-12)*
5. விருந்தினரை உபசரிக்கிறவர் *(யாத் 2:20)*.
6. புரிந்து கொண்டு பாராட்டுகிறவர் *(யாத் 2:20; யாத் 18:1-12)*.
7. நற்குணமுடையவர் *(யாத் 2:21; யாத் 18:1-12)*.
8. சமாதானத்தை விரும்புகிறவர் *(யாத் 4:18; யாத் 18:1-12)*.
9. சுயநலமில்லாத பரந்த மனமுடையவர் *(யாத் 18:1-12)*.
10. ஞானமுள்ளவர் *(யாத் 18: 13-27)*.

எத்திரோ தன் மருமகனாகிய மோசேயைப் பார்க்க வந்திருக்கிறார். மோசே பாளயமிறங்கியிருந்த இடத்திற்கு வந்தபோது, தன்னுடைய வருகையைப்பற்றி மோசேக்கு செய்தி சொல்லியனுப்புகிறார். "எத்திரோ என்னும் உம்முடைய மாமனாகிய நானும், உம்முடைய மனைவியும், அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உம்மிடத்திற்கு வந்திருக்கிறோம்" *(யாத் 18:6)* என்று எத்திரோ மோசேக்குச் சொல்லியனுப்புகிறார்.

## மோசேயும் எத்திரோவும் யாத் 18:7-12

**யாத் 18:7. அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டுபோய், அவனை வணங்கி, முத்தஞ்செய்தான்; ஒருவரை ஒருவர் சுகசெய்தி விசாரித்துக் கொண்டு, கூடாரத்துக்குள் பிரவேசித்தார்கள்.**

**யாத் 18:8. பின்பு மோசே கர்த்தர் இஸ்ரவேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்த எல்லாவற்றையும், வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும், கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும் தன் மாமனுக்கு விவரித்துச் சொன்னான்.**

**யாத் 18:9. கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அவர்களுக்குச் செய்த சகல நன்மைகளையுங்குறித்து எத்திரோ சந்தோஷப்பட்டு:**

**யாத் 18:10. உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**யாத் 18:11. கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார் என்று சொல்லி;**

**யாத் 18:12. மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்கதகனபலியையும் மற்றப் பலிகளையும் தேவனுக்குக் கொண்டுவந்து செலுத்தினான். பின்பு ஆரோனும் இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் வந்து, மோசேயின் மாமனுடனே தேவசமுகத்தில் போஜனம் பண்ணினார்கள்.**

தன்னுடைய மாமனும், மனைவியும், இரண்டு பிள்ளைகளும் தன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்னும் செய்தியை மோசே கேள்விப்படுகிறார். அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டுபோய், அவரை வணங்கி, முத்தஞ்செய்கிறார்; ஒருவரை ஒருவர் சுகசெய்தி விசாரித்துக் கொண்டு, கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறார்கள் (யாத் 18:7).

மோசேக்கு கர்த்தருடைய கண்களில் விசேஷித்த கிருபையும் தயவும் கிடைத்திருக்கிறது. கர்த்தர் மோசேயை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அதிகமாய் உயர்த்தியிருக்கிறார். ஆனாலும் மோசே தன்னுடைய குடும்ப கடமைகளை நிறைவேற்ற தவறவில்லை. அவர் தன்னை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்கவேண்டும். மோசே தன்னுடைய மாமனையும் நேசிக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை செய்கிறார். அதே வேளையில், மோசே தன்னுடைய குடும்பத்தின் காரியங்களையும் கவனிக்கிறார்.

ஒருவரையொருவர் எதிர்கொண்டுபோய் வரவேற்பது, அவர்களை வரவேற்கும் வண்ணமாக வணக்கம் செலுத்துவது, அவர்களுடைய சுகசெய்திகளை விசாரிப்பது ஆகியவையெல்லாமே நல்ல பழக்க வழக்கங்கள். ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் உயர்ந்த நிலையில் வளரும்போது, அவர் நல்ல பண்புகளை விட்டு விலகி வரவேண்டும் என்னும் அவசியமில்லை. கர்த்தருடைய உபதேசங்கள் நல்ல பண்புகளுக்கு ஒருபோதும் விரோதமாயிராது.

கர்த்தர் இஸ்ரவேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்த எல்லாவற்றையும், வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும், கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும் மோசே தன் மாமனுக்கு விவரித்துச் சொல்லுகிறார் (யாத் 18:8).

மோசே சொல்லுகிற சரித்திர செய்திகளைக் கேள்விப்பட்டு எத்திரோ மிகவும் சந்தோஷப்படுகிறார். கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அவர்களுக்குச் செய்த சகல நன்மைகளையுங்குறித்து எத்திரோ சந்தோஷப்படுகிறார் (யாத் 18:9).

மற்றவர்கள் நன்றாயிருப்பதைப் பார்த்து நாம் சந்தோஷப்படவேண்டும். மற்றவர்களை ஆசீர்வதிக்கிறவர்கள் சுயநலமில்லாதவர்களாயிருப்பார்கள். எல்லோரும் நன்றாயிருக்கவேண்டும் என்பதும், எல்லோரும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பதும் நல்லவர்களின் விருப்பமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். முறுமுறுப்பதும், கலகம்பண்ணுவதும், முரட்டாட்டம் பண்ணுவதும் இஸ்ரவேல் புத்திரருடைய பொதுவான சுபாவம். ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்கிறார். எத்திரோ மீதியான் தேசத்தவராயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் செய்த நன்மைகளை கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறார்.

எத்திரோ கர்த்தரை துதிக்கிறார். "உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (யாத் 18:10) என்று சொல்லி எத்திரோ கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு ஸ்தோத்திரம்பண்ணி துதிக்கிறார்.

எத்திரோ கர்த்தரை விசுவாசிக்கிறார். இப்போது எத்திரோவின் விசுவாசம் ஸ்திரப்படுகிறது. அவர் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் அறிக்கை செய்கிறார். "கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (யாத் 18:11) என்று எத்திரோ சொல்லுகிறார்.

எத்திரோ விசுவாசமான வார்த்தைகளை பேசுகிறார். இந்த உலகத்திலே ஏராளமான விக்கிரகங்களும், கள்ள தெய்வங்களும் இருக்கிறது. ஒரு சில தெய்வங்கள் தங்களை தெய்வங்கள் என்று சொல்லி மாய்மாலம் பண்ணுகிறது. அப்படிப்பட்ட எல்லா தேவர்களைப் பார்க்கிலும் கர்த்தர் பெரியவர் என்பதை எத்திரோ இப்போது அறிந்திருக்கிறார்.

எத்திரோ தன்னுடைய நம்பிக்கையை உறுதிபண்ணுகிறார். "நான் இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று திட்டமாகவும், தெளிவாகவும் சொல்லுகிறார். கர்த்தர் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்னும் சத்தியம் எத்திரோவுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. அவர் இந்த சத்தியத்தை ஏற்கெனவே அறிந்திருக்கிறார். ஆனால் இப்போதோ எத்திரோவின் விசுவாசம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. கர்த்தரே எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்னும் சத்தியத்தை எத்திரோ முழுநிச்சயத்தோடு நம்புகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்கு தப்புவித்த சம்பவமும், அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த சகல நன்மைகளையும் குறித்த காரியங்களும் எத்திரோவின் விசுவாசத்தை பலப்படுத்தியிருக்கிறது. இந்த புதிய ஆதாரங்களின் அடிப்படையில் எத்திரோ இப்போது, "கர்த்தர் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று முழுநிச்சயத்தோடு சொல்லுகிறார்.

எத்திரோ கர்த்தரைப்பற்றி தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யும்போது, "அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார்" என்று சொல்லுகிறார். எகிப்தியரின் மந்திரவாதிகள் மந்திரவித்தை என்னும் பெயரில் மாய்மாலம்பண்ணினார்கள். எகிப்து தேசத்தின் விக்கிரகங்கள் ஒன்றுமில்லாமல் போயிற்று. இருதயத்தில் பெருமையோடிருந்த பார்வோன் தாழ்த்தப்பட்டான். பார்வோனுடைய வல்லமை முறிக்கப்பட்டது.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும், எகிப்து தேசத்து மந்திரவாதிகளும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக கிரியை செய்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றாய்க் கூட்டுச்சேர்ந்து கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக இடும்பு செய்தார்கள். அவர்கள் அனைவரும் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்க நினைத்தார்கள். கர்த்தரோ தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணினார். கர்த்தருடைய பலத்த புயம் எகிப்தியரின் கரங்களைவிட வல்லமையுள்ளது. பார்வோனுடைய வல்லமையைவிடவும், எகிப்து தேசத்து மந்திரவாதிகளின் வல்லமைகளை விடவும், எகிப்து தேசத்திலுள்ள விக்கிரகங்களின் வல்லமைகளைவிடவும் கர்த்தருடைய வல்லமை பெரியது.

எத்திரோவும், மோசேயும் ஆரோனும், இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த சகல நன்மையான காரியங்களுக்காக, அவர்கள் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். எத்திரோவும் அவர்களுடைய சந்தோஷத்தில் பங்குபெறுகிறார். அவர்கள் கர்த்தருக்கு பலிசெலுத்தியும், கர்த்தருடைய சமுகத்திலே போஜனம்பண்ணியும் தங்களுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்கதகனபலியையும் மற்றப் பலிகளையும் தேவனுக்குக் கொண்டுவந்து செலுத்துகிறார். பின்பு ஆரோனும் இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் வந்து, மோசேயின் மாமனுடனே தேவசமுகத்தில் போஜனம் பண்ணுகிறார்கள் (யாத் 18:12).

பூர்வ காலங்களிலிருந்து தேவனுடைய பிள்ளைகள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினார்கள். வரப்போகிற மீட்பர்மீது தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தின் அடையாளமாக அவர்கள் பலிசெலுத்தினார்கள் (ஆதி 4:1-8; ஆதி 8:20; ஆதி 22:2-13; யாத் 10:25).

எத்திரோவின் ஒவ்வொரு செயலும் அவர் தேவனிடத்தில் மெய்யாகவே விசுவாசம் வைத்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்திற்று. எத்திரோ ஆபிரகாமின் சந்ததியில் வந்தவர். பலிசெலுத்துவதைப் பற்றி இவருக்கு சிறுவயதிலிருந்து கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கலாம் (ஆதி 25:1-6).

இந்த வசனத்தில் மற்ற பலிகள் என்று பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. சர்வாங்க தகனபலிகளும் பலிகளே. ஆயினும் இவ்விரண்டு பலிகளுக்கும் வித்தியாசம் உள்ளது (யாத் 20:24; லேவி 1:3-17). எல்லா பலிகளும் சர்வாங்க தகனபலிகளாகாது. தேவனுக்காக எதைச் செலுத்தினாலும் அது பலியாகவே கருதப்படும்.

கர்ப்பந்திறந்து பிறக்கும் முதலாவது ஆண்பிள்ளைகள் (யாத் 13:15); துதி (சங் 107:22; சங் 116:17; எபி 13:15); நொருங்குண்டதும், நருங்குண்டதுமான ஆவியும், இருதயமும் (சங் 51:17); சிலுவையில் இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே அர்ப்பணித்தது (2கொரி 5:7); ஆகியவையெல்லாமே பலிகளாகும்.

"இஸ்ரவேல் மூப்பர்" என்னும் வாக்கியம் கோத்திரங்களின் தலைவர்களையும், இஸ்ரவேலின் சேனைகளையும் பொதுவாக குறிக்கிறது. (யாத் 3:16,18; யாத் 4:29; யாத் 12:21; யாத் 17:5-6,24-25; உபா 5:23; உபா 21:2-6).

எத்திரோ மீதியான் தேசத்தை சேர்ந்தவராகயிருந்தாலும், அவரும் மோசேயோடும் இஸ்ரவேலின் மூப்பர் அனைவரோடும் ஐக்கியமாயிருக்கிறார். எத்திரோவும் அவர்களோடு தேவசமுகத்திலே போஜனம்பண்ணுகிறார். மோசேயைப்போலவே எத்திரோவும் ஆபிரகாமின் குமாரனாகயிருக்கிறார்.

எத்திரோ கர்த்தருக்கு சர்வாங்கதகனபலியையும், மற்ற பலிகளையும் செலுத்துகிறார். கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து எத்திரோ கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார். அவர் மீதியான் தேசத்திலே ஆசாரியராயிருக்கிறார். மேலும் அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கிறார். ஆகையினால் கர்த்தருக்கு பலிகளை செலுத்தும்போது, எத்திரோவே அந்த பலிகளை செலுத்தியிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

எத்திரோ கர்த்தருக்கு பலிசெலுத்திய பின்பு, அவரும் ஆரோனும், இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் தேவசமுகத்தில் போஜனம்பண்ணுகிறார்கள். எத்திரோ கர்த்தருக்கு செலுத்தின பலியை அவர்கள் அனைவரும் கர்த்தருடைய சமுகத்திலே புசிக்கிறார்கள்.

## நியாயம் விசாரிப்பு யாத் 18:13-27

**யாத் 18:13. மறுநாள் மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்கார்ந்தான்; ஜனங்கள் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் மோசேக்கு முன்பாக நின்றார்கள்.**

**யாத் 18:14. ஜனங்களுக்கு அவன் செய்த யாவையும் மோசேயின் மாமன் கண்டு: நீர் ஜனங்களுக்குச் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்கவும், ஜனங்கள் எல்லாரும் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் உமக்கு முன்பாக நிற்கவும் வேண்டியது என்ன என்றான்.**

**யாத் 18:15. அப்பொழுது மோசே தன் மாமனை நோக்கி: தேவனிடத்தில் விசாரிக்கும்படி ஜனங்கள் என்னிடத்தில் வருகிறார்கள்.**

**யாத் 18:16. அவர்களுக்கு யாதொரு காரியம் உண்டானால், என்னிடத்தில் வருகிறார்கள்; நான் அவர்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து, தேவகட்டளைகளையும் அவருடைய பிரமாணங்களையும் தெரிவிக்கிறேன் என்றான்.**

**யாத் 18:17. அதற்கு மோசேயின் மாமன்: நீர் செய்கிற காரியம் நல்லதல்ல:**

**யாத் 18:18. நீரும் உம்மோடே இருக்கிற ஜனங்களும் தொய்ந்துபோவீர்கள்; இது உமக்கு மிகவும் பாரமான காரியம்; நீர் ஒருவராய் அதைச் செய்ய உம்மாலே கூடாது.**

**யாத் 18:19. இப்பொழுது என் சொல்லைக் கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன்; தேவனும் உம்மோடுகூட இருப்பார், நீர் தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இரும்; விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோய்;**

**யாத் 18:20. கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி; அவர்கள் நடக்கவேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும்.**

**யாத் 18:21. ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும்.**

**யாத் 18:22. அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம்விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும்.**

**யாத் 18:23. இந்தப்பிரகாரம் நீர் செய்வதும், இப்படித் தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், உம்மாலே தாங்கக் கூடும்; இந்த ஜனங்கள் எல்லாரும் தாங்கள் போகும் இடத்துக்குச் சுகமாய்ப் போய்ச் சேரலாம் என்றான்.**

**யாத் 18:24. மோசே தன் மாமன் சொல்கேட்டு, அவன் சொன்னபடியெல்லாம் செய்தான்.**

**யாத் 18:25. மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்து கொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறு பேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஜனங்கள்மேல் தலைவராக்கினான்.**

**யாத் 18:26. அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்தார்கள்; வருத்தமான காரியங்களைமாத்திரம் மோசேயினிடத்தில் கொண்டுவந்தார்கள்; சிறிய காரியங்களையெல்லாம் தாங்களே தீர்த்தார்கள்.**

**யாத் 18:27. பின்பு மோசே தன் மாமனை அனுப்பிவிட்டான்; அவன் திரும்பத் தன் தேசத்துக்குப் போய்விட்டான்.**

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியாயாதிபதியாகவும் இருக்கிறார். மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்காருகிறார்; ஜனங்கள் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் மோசேக்கு முன்பாக நிற்கிறார்கள் (யாத் 18:13).

மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்காருகிறார். மோசே ஜனங்கள் மத்தியில் உண்டாயிருக்கும் கருத்து வேறுபாடுகளைக் கேட்டு, அவர்களை நீதியாக நியாயம் விசாரித்து வருகிறார் (யாத் 18:15-16).

ஜனங்கள் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் மோசேக்கு முன்பாக நிற்கிறார்கள் வழக்குகள் விசாரிக்கப் படுவதற்காக ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள். எல்லா வழக்குகளையும் மோசே விசாரிக்கிறார். மோசே ஒருவராக எல்லா வேலைகளையும் செய்ய முடியாது. ஆகையினால் வழக்குகளை விசாரிப்பதற்கு இஸ்ரவேலரில் திறமையுள்ள மனுஷரைக் கண்டு, அவர்களைப் பயன்படுத்துமாறு எத்திரோ மோசேக்கு ஆலோசனை கூறுகிறார் (யாத் 18:14-27).

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை மீட்பதற்கு, கர்த்தர் மோசேயை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். இப்போது மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஒரு நியாயாதிபதியாகவும் ஊழியம் செய்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் வந்து கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்து விசாரிக்கிறார்கள். அவர்கள் ஓய்வுநாளைக் குறித்தும், மன்னாவை சேகரிப்பது, அதைப் புசிப்பது சம்பந்தமாகவும் மோசேயிடம் விளக்கம் கேட்க வருகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொடுக்கிறார். ஜனங்கள் கர்த்தரிடத்தில் ஏதாவது காரியத்தைக் குறித்து விசாரிக்கவேண்டுமென்றால் அவர்கள் அதை கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படியாகவும் மோசேயினிடத்தில் வருகிறார்கள் (யாத் 18:15). மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, கர்த்தர் தனக்கு கொடுக்கும் வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லுவார்.

மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்காரும்போது, அவர்கள் காலமே துவக்கி சாயங்காலம் மட்டும் அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். மோசே ஜனங்களுக்கு செய்த யாவையும் அவருடைய மாமன் கண்டு, அவரை நோக்கி, "நீர் ஜனங்களுக்குச் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்கவும், ஜனங்கள் எல்லாரும் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் உமக்கு முன்பாக நிற்கவும் வேண்டியது என்ன" (யாத் 18:14) என்று கேட்கிறார்.

மோசே தன் மாமனுக்கு பிரதியுத்தரமாக, "தேவனிடத்தில் விசாரிக்கும்படி ஜனங்கள் என்னிடத்தில் வருகிறார்கள். அவர்களுக்கு யாதொரு காரியம் உண்டானால், என்னிடத்தில் வருகிறார்கள்; நான் அவர்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து, தேவகட்டளைகளையும் அவருடைய பிரமாணங்களையும் தெரிவிக்கிறேன்" (யாத் 18:15,16) என்று சொல்லுகிறார்.

நியாயப்பிரமாணத்தை எழுதுவது மோசேயின் வேலையல்ல. தேவகட்டளைகளையும், அவருடைய பிரமாணங்களையும் ஜனங்களுக்கு தெரிவிப்பதே மோசேயின் ஊழியம். மோசே கர்த்தருடைய ஊழியக்காரராயிருக்கிறார். அவர் கர்த்தருக்கு சமமான எஜமானராகயில்லை.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பலவிதமான வழக்குகள் இருக்கிறது. மோசே அந்த வழக்குகளை விசாரித்து, நியாயந்தீர்க்கிறார். அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போடும்போது, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையிலிருப்பதினால், அவர்கள் மத்தியிலே ஏராளமான வழக்குகள் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. தங்களுடைய வழக்குகளை தீர்த்து வைப்பதற்காக ஜனங்கள் மோசேயினிடத்தில் வருகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலைபண்ணி, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போவது, மோசேயின் ஊழியம். இந்த ஊழியத்தை செய்வதற்காகவே கர்த்தர் மோசேயை அழைத்திருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை மோசே கருத்தாய் செய்கிறார். அவர் ஜனங்கள்மீது அன்பாயும் கரிசனையாயும் இருக்கிறார். ஆகையினால் ஜனங்களும் காலமே துவக்கி சாயங்கால மட்டும் மோசேக்கு முன்பாக நிற்கிறார்கள். மோசே ஓய்வு எடுக்காமல், தன்னுடைய சொந்தக்காரியங்களை கவனிக்காமல், இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்கார்ந்திருக்கிறார்.

மோசே ஜனங்களை நியாயந்தீர்ப்பதை, அவருடைய மாமனாகிய எத்திரோ கரிசனையோடு கவனித்துப் பார்க்கிறார். மோசேக்கு ஊழியத்திலே உதவி செய்வதற்கு வேறு ஒருவரும் நியமிக்கப்படவில்லை. அவர் ஒருவராகவே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறார். அவர் மோசேயை நோக்கி, "நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்கவும், ஜனங்கள் எல்லாரும் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் உமக்கு முன்பாக நிற்கவும் வேண்டியது என்ன" (யாத் 18:14) என்று கேட்கிறார்.

மோசே ஒன்றியாய் உட்கார்ந்து ஜனங்கள் எல்லோரையும் நியாயம் விசாரிப்பது எத்திரோவுக்கு பிடிக்கவில்லை. எத்திரோ தன் மருமகன் மோசேயோடு உரிமையோடு பேசக்கூடியவர். எத்திரோ தன் மனதில் பட்டதை மறைக்காமல் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

எத்திரோ மோசேயை நோக்கி, "நீர் செய்கிற காரியம் நல்லதல்ல: நீரும் உம்மோடே இருக்கிற ஜனங்களும் தொய்ந்துபோவீர்கள்; இது உமக்கு மிகவும் பாரமான காரியம்; நீர் ஒருவராய் அதைச் செய்ய உம்மாலே கூடாது" (யாத் 18:17,18) என்று மிகுந்த கரிசனையோடு சொல்லுகிறார்.

மோசேயால் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் நியாயம் விசாரிக்க முடியாது. அவர் ஒன்றியாய் நியாயம் விசாரித்தால், மோசேயும், அவருக்கு முன்பாக நிற்கிற இஸ்ரவேல் புத்திரரும் தோய்ந்து போவார்கள். ஒரு சிலர் நல்ல காரியங்களை செய்வார்கள். ஆனாலும் அதை அளவுக்கு அதிகமாக செய்துவிடுவார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாக மாறும். நற்காரியங்களை செய்கிறவர்கள், தங்களுடைய சரீர ஆரோக்கியத்தையும், கவனிக்கவேண்டும். பொதுவாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள், தாங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நாம் எதைச் செய்தாலும் நிதானமாக செய்யவேண்டும். செல்லும் செலவை கணக்குப் பார்க்கவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம்.

நியாயவிசாரிப்பு காரியங்களில் மோசே என்ன செய்யவேண்டுமென்று எத்திரோ அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார். எத்திரோ மோசேயை நோக்கி, "இப்பொழுது என் சொல்லைக் கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன்; தேவனும் உம்மோடுகூட இருப்பார், நீர் தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இரும்; விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோய்; கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி; அவர்கள் நடக்கவேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும்" (யாத் 18:19,20) என்று சொல்லுகிறார்.

மோசே தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இருக்கவேண்டும். மோசே தேவனுடைய சமுகத்தில் ஜனங்களுக்காக விசாரிக்கவேண்டும். ஜனங்களுக்கு கர்த்தருடைய பிரமாணங்களை வெளிப்படுத்தி, அவர்கள் செய்ய வேண்டிய காரியத்தை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இது மாத்திரமே மோசேயின் பிரதான ஊழியமாயிருக்கவேண்டும். இந்த ஊழியத்திற்கு மோசேயை தவிர, இஸ்ரவேல் புத்திரரில் வேறு யாரும் அழைக்கப்படவில்லை. கர்த்தர் இந்த ஊழியத்தை மோசேக்கு விசேஷமாய்க் கொடுத்திருக்கிறார். ஆகையினால் மோசே இந்த மகத்தான ஊழியத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளக்கூடாது.

"அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்" (எண் 12:6-8).

இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பொதுவாக சொல்லவேண்டிய செய்தியை, மோசே நேரடியாக அவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். ஜனங்களுடைய வழக்குகளை நியாயம் விசாரிப்பதற்கு, மோசே தனக்கு கீழே அதிபதிகளை ஏற்படுத்த வேண்டும்.

எத்திரோ அதிபதிகளை ஏற்படுத்துவதுபற்றி மோசேக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர் மோசேயை நோக்கி, "ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும்" என்றும்,

"அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்" என்றும் சொல்லுகிறார் (யாத் 18:21,22).

இதற்கு முன்பாக இஸ்ரவேலர்கள் எவ்வாறு வகுப்பு வகுப்பாக பிரிக்கப்பட்டிருந்தார்கள் என்று வேதாகமத்தில் கூறப்படவில்லை. ஆனாலும் அவர்களிடத்தில் ஒரு சமுதாய அமைப்பு முறை ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும் என்பது யாத் 17:9-13 ஆகிய வசனங்கள் மூலமாகத் தெரிய வருகிறது.

அதிபதிகள் ஜனங்களை நியாயம் விசாரிப்பார்கள். பெரிய காரியங்களை மோசே நியாயம் விசாரிப்பார். சிறிய காரியங்கள் அனைத்தையும் அதிபதிகள் நியாயம் விசாரிப்பார்கள். இவ்வாறாக அவர்கள் மோசேயோடுகூட, ஜனங்களை விசாரிக்கும் பாரத்தை சுமக்கவேண்டும் என்று எத்திரோ ஆலோசனை சொல்லுகிறார்.

அதிபதிகளிடத்தில் காணப்படவேண்டிய தகுதிகளைப்பற்றியும் எத்திரோ மோசேக்கு ஆலோசனையாக சொல்லுகிறார். அவர்கள் ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதராயிருக்கவேண்டும். மோசே இப்படிப்பட்ட தகுதியுள்ளவர்களை மாத்திரமே தனக்கு கீழே அதிபதிகளாய் தெரிந்துகொள்ளவேண்டும்.

அதிபதிகள் தேவனுக்கு பயந்தவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் திறமையுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். இவ்விரண்டு தகுதிகளையும் பெற்றிருப்பவர்கள் மாத்திரமே, ஜனங்களை நியாயம் விசாரிப்பதற்கு தகுதியானவர்கள். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கும். இவர்கள் இரகசியத்தைக் காத்துக்கொள்வார்கள். உண்மையுள்ளவர்கள் வீண்வார்த்தைகளை அலப்பமாட்டார்கள்.

அதிபதிகள் திறமையுள்ள மனிதராயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் தெளிந்த சிந்தனையும், உறுதியான மனமும் இருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு பயந்து, வழக்குகளை விசாரித்து, நீதியான தீர்ப்புக்களை சொல்லவேண்டும். உண்மையுள்ளவர்களிடத்தில் ஒழுக்கமும் கண்ணியமும் இருக்கும்.

வழக்குகளை விசாரிக்கிற அதிபதிகள் பொருளாசையை வெறுக்கிறவர்களாக இருக்கவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. வழக்குகளிலே தீர்ப்பு சொல்லுகிறவர்கள், பரிதானம் வாங்கி, அநியாயமான தீர்ப்பை சொல்லிவிடக்கூடாது. அதிபதிகள் உலகப்பொருளுக்கு ஆசைப்பட்டு நியாயத்தைப் புரட்டக்கூடாது.

எத்திரோ மோசேக்கு தன்னுடைய ஆலோசனையை சொல்லுகிறார். தன்னுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் மோசேயை கட்டாயம் பண்ணவில்லை. அவர் மோசேயை நோக்கி, "இந்தப்பிரகாரம் நீர் செய்வதும், இப்படித் தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், உம்மாலே தாங்கக் கூடும்; இந்த ஜனங்கள் எல்லாரும் தாங்கள் போகும் இடத்துக்குச் சுகமாய்ப் போய்ச் சேரலாம்" (யாத் 18:23) என்று சொல்லுகிறார்.

"தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால்" என்று எத்திரோ மோசேக்கு ஆலோசனை கூறுகிறார். தேவனுடைய சித்தத்திற்கு முதலாவதாகக் கீழ்ப்படியுமாறு எத்திரோ மோசேயை வலியுறுத்துகிறார்.

மோசே தன் மாமன் சொல்கேட்டு, அவர் சொன்னபடியெல்லாம் செய்கிறார். மோசே தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்கிறார் (எண் 11:17). எழுபது மூப்பர்கள் இஸ்ரவேல் புத்திரருக்குப் பொதுவான தலைவர்களாக இருக்கிறார்கள். மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்து கொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறு பேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஜனங்கள்மேல் தலைவராக்குகிறார் (யாத் 18:25).

அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரிக்கிறார்கள்; வருத்தமான காரியங்களைமாத்திரம் மோசேயினிடத்தில் கொண்டுவருகிறார்கள்; சிறிய காரியங்களையெல்லாம் தாங்களே தீர்க்கிறார்கள் (யாத் 18:26). அதிபதிகள் மோசேயோடேகூட ஜனங்களை நியாயம் விசாரிக்கிற பாரங்களை சுமக்கிறார்கள். இதனால் மோசே சுமக்க வேண்டிய பாரம் இலகுவாயிருக்கிறது.

பின்பு மோசே தன் மாமனை அனுப்பிவிடுகிறார்; எத்திரோ திரும்பத் தன் தேசத்துக்குப் போய்விடுகிறார் (யாத் 18:27). மோசே தன் மாமனை அதிகமாக நேசிக்கிறார். தன்னுடைய குடும்பத்தையும் மோசே நன்றாகப் பராமரிக்கிறார் (எபி 3:2) எத்திரோவைத் தன்னோடு தங்கியிருக்குமாறு மோசே கேட்டுக் கொண்டார் (எண் 10:29-32) மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை எவ்வித பாரபட்சமில்லாமல் சுயநலமில்லாமல் நியாயம் விசாரிக்கிறார். தன்னுடைய சொந்த மகன்களுக்குக்கூட மோசே எந்தவிதமான விசேஷித்த சலுகைகளையும் காண்பிக்கவில்லை.

மோசே இஸ்ரவேலரின் வரலாற்றில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு தலைவர். இஸ்ரவேல் ஜனத்தையெல்லாம் எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு வழிநடத்துவதற்கு மோசே தேவனால் பயன்படுத்தப்பட்டவர். மோசேயின் வாழ்க்கையில் யாரும் எந்தக் குற்றமும் காணமுடியாது. ஆனாலும் அவருடைய வாழ்க்கையில் தேவனுக்குக் கீழ்ப்படியாத ஒரு சிறிய சம்பவம் நடைபெற்றது. இதற்காக தேவன் மோசேயை வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கவில்லை. (எண் 20)

வனாந்தரத்தில் மோசே பல பிரச்சனைகளைச் சந்தித்தார். சில பிரச்சனைகள் புறஜாதியாரால் வந்தவை. அநேக பிரச்சனைகள் தன்னுடைய சொந்த இஸ்ரவேல் ஜனத்தின் மூலமாக வந்தவை. இவையெல்லாவற்றிலும் மோசே தேவனையே நோக்கிப் பார்த்து ஜெயம் பெற்றார்.

கேனியர்கள் எத்திரோவின் சந்ததியை சேர்ந்தவர்கள். கேனியர்கள் இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களுக்கு நன்மை செய்ததினால், இஸ்ரவேலின் பின்சந்ததியார்கள் அவர்களை விசேஷமாய்ப் பாதுகாக்கிறார்கள்.

"மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடேகூடப் பேரீச்சமரங்களின் பட்டணத்திலிருந்து ஆராத்திற்குத்தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்து,ஜனங்களோடே குடியேறினார்கள்" (நியா 1:16).

"சவுல் கேனியரை நோக்கி: நான் அமலேக்கியரோடேகூட உங்களையும் வாரிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போங்கள்; இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது, நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயவுசெய்தீர்கள் என்றான்; அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனார்கள்" (1சாமு 15:6).

## 19 அதிகாரம்

கர்த்தர் சீனாய் மலையிலே இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கட்டளைகளை சொல்லுகிறார். இந்த சம்பவத்தின் ஆரம்பம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் சீனாய் மலையில் இறங்கி வருகிறார். அவர் இறங்கி வரும் காலமும் ஸ்தலமும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது *(யாத் 19:1,2).*

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே பொதுவான உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது *(யாத் 19:3-6).* இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய சம்மதிக்கிறார்கள்.

கர்த்தர் கார்மேகத்தின்மேல் வருவதாக வாக்குப்பண்ணுகிறார். அவர் வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே, அவருடைய வருகையைக் குறித்து இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னறிவிக்கப்படுகிறது *(யாத் 19:9).* இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை வரவேற்பதற்கு தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும் *(யாத் 19:10-13).* மோசே இஸ்ரவேல் புத்திரரை பரிசுத்தப்படுத்துகிறார் *(யாத் 19:14,15).*

மூன்றாம் நாள் விடியற்காலத்தில் கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்குகிறார் *(யாத் 19:16-20).* கர்த்தர் மோசேயோடு பேசுகிறார். அவர் தனக்கு சொன்னதை மோசே ஜனங்களுக்கு சொல்லுகிறார் *(யாத் 19:21-25).*

### கர்த்தருடைய உடன்படிக்கை யாத் 19:1-8

**யாத் 19:1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாளிலே, சீனாய் வனாந்திரத்தில் சேர்ந்தார்கள்.**

**யாத் 19:2. அவர்கள் ரெவிதீமிலிருந்து பிரயாணம் புறப்பட்டு, சீனாய் வனாந்திரத்தில் சேர்ந்து, அந்த வனாந்திரத்தில் பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கு எதிராக பாளயமிறங்கினார்கள்.**

**யாத் 19:3. மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால்,**

**யாத் 19:4. நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள்.**

**யாத் 19:5. இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது.**

**யாத் 19:6. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்.**

**யாத் 19:7. மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான்.**

**யாத் 19:8. அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்.**

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாளிலே, சீனாய் வனாந்திரத்தில் சேருகிறார்கள். அவர்கள் ரெவிதீமிலிருந்து பிரயாணம் புறப்பட்டு, சீனாய் வனாந்திரத்தில் சேர்ந்து, அந்த வனாந்திரத்தில் பாளயமிறங்குகிறார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கு எதிராக பாளயமிறங்குகிறார்கள். *(யாத் 19:1,2).*

சீனாய் வனாந்தரத்தில் சீனாய் மலையே உயர்ந்த பர்வதமாகும். இந்த வனாந்தரம் முழுவதும் மலைப்பகுதியாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திற்கு வந்து சேர்ந்த காலம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சீனாய் வனாந்தரம் முழுவதும் முட்செடிகள் திரளாய் வளர்ந்திருக்கிறது. முட்செடிகள் வனாந்தரம் முழுவதையும் மூடியிருக்கிறது.

கர்த்தர் சீனாய் மலையிலிருந்து மோசேயைக் கூப்பிடுகிறார். கர்த்தர் சீனாய் மலையிலே தம்மை இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்மை வெளிப்படுத்துவதற்கு, பெரிய நகரங்களையோ, அரசருடைய மாளிகைளைகளையோ அல்லது பிரமாண்டமான கட்டடங்களையோ அல்லது மிகப்பெரிய மைதானங்களையோ தெரிந்துகொள்ளவில்லை. கர்த்தர் சீனாய் மலையிலிருந்து தம்மை இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று சித்தங்கொள்கிறார். சீனாய் மலையும், அதைச் சுற்றிலுமுள்ள சீனாய் வனாந்தரமும் முள் புதர்களாகயிருந்தாலும், இந்த மலையில் தம்மை வெளிப்படுத்துவது கர்த்தருக்கு பிரிமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள தீர்மானித்திருக்கிறார். தம்முடைய உடன்படிக்கையை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, மோசே சீனாய் மலையிலே தேவனிடத்திற்கு ஏறிப்போகிறார். அந்த மலையிலிருந்து கர்த்தர் மோசேயைக் கூப்பிடுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது" *(யாத் 19:3)* என்று சொல்லி, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டிய தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

மோசே எட்டுமுறை, கர்த்தர் இருந்த சீனாய் மலைக்கு ஏறி இறங்கியிருக்கிறார். அந்த சம்பவங்களெல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஏறிப்போனது *(யாத் 19:3-6)*; இறங்கி வந்தது *(யாத் 19:7-8)*
2. ஏறிப்போனது *(யாத் 19:8-13)*; இறங்கி வந்தது *(யாத் 19:14-19)*
3. ஏறிப்போனது *(யாத் 19:20-24)*; இறங்கி வந்தது *(யாத் 19:25)*
4. ஏறிப்போனது *(யாத் 20:21)*; இறங்கி வந்தது *(யாத் 24:3)*
5. ஏறிப்போனதும், இறங்கி வந்ததும் *(யாத் 24:9-11)*
6. ஏறிப்போனது (மலையின்மீது முதலாவது நாற்பது நாட்கள்) *(யாத் 24:12-32:14; உபா 9:9)*; இறங்கி வந்தது *(யாத் 32:15-30)*
7. ஏறிப்போனது *(யாத் 32:30-33)*; இறங்கி வந்தது *(யாத் 32:24)*
8. ஏறிப்போனது (மலையின்மீது இரண்டாவது நாற்பது நாட்கள் *(யாத் 34:1-28; உபா 10:10)*; இறங்கி வந்தது *(யாத் 34:29)*

கர்த்தர் தாமே இந்த உடன்படிக்கையின் ஸ்தாபகர். அவரே இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணவேண்டுமென்று முதலாவதாக தீர்மானிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கைபண்ணுவது கர்த்தருக்கு பிரியமானதாயிருக்கிறது.

கர்த்தர் நமக்கு ஏராளமான நன்மைகளை செய்கிறார். அவருடைய நன்மையான ஈவுகள் நமக்கு ஆசீர்வாதமாக கொடுக்கப்படுகிறது. நாம் கர்த்தரை எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறோம் என்பதன் அடிப்படையில், நாம் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. கர்த்தர் நம்மை தெரிந்து வைத்திருப்பதினால், அவர் தம்முடைய ஆசீர்வாதங்களை நமக்கு கொடுக்கிறார்.

நாம் கர்த்தரை முதலாவதாக தெரிந்துகொள்ளவில்லை. நாம் கர்த்தரைத் தெரிந்துகொள்வதற்கு முன்பாகவே, கர்த்தர் நம்மை முதலாவதாக தெரிந்துகொள்கிறார். நாம் தேவனால் அறியப்பட்டவர்களாயிருக்கிறோம்.

"இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?" *(கலா 4:9).*

கர்த்தருடைய உடன்படிக்கை கிருபையும், இரக்கமும், அன்பும் நிரம்பியது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கைபண்ணுவது அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இது அவர்களுடைய பாக்கியம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணுவதினால், அவர்களுக்கு ஏராளமான நன்மைகளும், சிலாக்கியங்களும் உண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு முன்பாக, தாம் அவர்களுக்கு இதுவரையிலும் செய்திருக்கிற நன்மையான காரியங்களை நினைவுபடுத்துகிறார். "நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள்" *(யாத் 19:4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது மிகுந்த அன்பாயும், கரிசனையாயும் இருக்கிறார். கர்த்தருடைய கரிசனையை விவரிப்பதற்கு, கழுகு தன் குஞ்சுகளை தன் செட்டைகளின்மேல் சுமந்து போவது உவமையாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உவமை உபாகமம் புஸ்தகத்தில் இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது.

"கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை" *(உபா 32:11,12).*

கழுகு அதிவேகமாக பறக்கக்கூடிய பறவை. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தினால் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை மீட்டுக்கொள்வதற்காக, கழுகைப்போல அதிவேகமாக விரைந்து வந்தார்.

கழுகு தன்னுடைய செட்டைகளின்மேல் தன் குஞ்சுகளை சுமந்துகொண்டு பறக்கும். கழுகு வேகமாகவும் பறந்து வரும். அது தன் குஞ்சுகளை பாதுகாப்பாகவும் சுமந்துகொண்டு பறக்கும். கர்த்தர் கழுகைப்போல வேகமாக வந்து, இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார்.

கழுகு தன் குஞ்சுகளை தன் செட்டைகளில் சுமந்துகொண்டு பறப்பதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு சுமந்துகொண்டு போகிறார். கர்த்தருடைய ஒவ்வொரு கிரியையிலும், பலமும் வேகமும் இருக்கிறது இதற்கு அடையாளமாக, கழுகு இங்கு உவமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எகிப்து தேசம் இருப்பு காளவாயைப்போல இருக்கிறது. இந்த தேசம் கழுகின் கூட்டிற்கு அடையாளம். கழுகு இந்தக்கூட்டில்தான் தன் குஞ்சுகளை பொரித்தது. கர்த்தர் எகிப்து தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரரை ஒரு தேசமாக உருவாக்கினார். கழுகின் குஞ்சுகள் அதின் கூட்டிலிருந்ததுபோல, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் ஆரம்ப காலத்திலே எகிப்து தேசத்திலே இருந்தார்கள்.

கழுகின் குஞ்சுகள் அதின் கூட்டில் வளரும். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே வளருகிறார்கள். அவர்கள் திரளான எண்ணிக்கையில் பலுகிப் பெருகுகிறார்கள். தன் குஞ்சுகள் வளர்ந்து பெரிதாகும்போது, கழுகு அந்தக் குஞ்சுகளை கூட்டைவிட்டு வெளியேற்றும். கழுகு தன் கூட்டை கலைத்துவிட்டு, தன் குஞ்சுகளை தன்னுடைய செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு பறக்கும்.

ஒரு சில பறவைகள் தங்கள் குஞ்சுகளை, தங்களுடைய அலகினால் கவ்விக்கொண்டு போகும். அவ்வாறு செய்வது குஞ்சுகளுக்கு பாதுகாப்பாயிராது. கழுகுகளோ தன் குஞ்சுகளை, தங்கள் செட்டைகளின்மேல் மிகவும் பாதுகாப்பாக, சுமந்து செல்கிறது. வேடன் கழுகை வேட்டையாடும்போது, தாய் கழுகை கொல்லாமல், அதன் குஞ்சுகளை வேட்டையாட முடியாது. குஞ்சுகள் கழுகின் செட்டைகளுக்குள்ளே பாதுகாப்பாயிருக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, கழுகு தன் குஞ்சுகளை செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போவதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தைவிட்டு சுமந்துகொண்டு போகிறார். கர்த்தர் அவர்களை தம்மண்டையில் சேர்த்துக்கொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலையோடிருக்கிறார்கள். அவர்களுக்கு விடுதலையோடு கர்த்தருடைய கிருபையும் கிடைத்திருக்கிறது. அது மாத்திரமல்ல அவர்கள் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவும், அவரோடு ஐக்கியமாயிருக்கவும், அவர்களுக்கு இப்போது சிலாக்கியம் உண்டாயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு கிடைத்திருக்கிறது. நம்முடைய இரட்சராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனோடு ஐக்கியமாயிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

"ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1பேது 3:18).

கர்த்தருடைய ஜனம் அவரோடு மறுபடியும் சேர்க்கப்படுவதும், அவரோடு ஐக்கியமாயிருப்பதும் அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணி அவரை விட்டுப் பிரிந்துபோனார்கள். கர்த்தரோ தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், மனவுருக்கத்தினாலும் தம்முடைய ஜனத்தை மீட்டுக்கொண்டு, தம்மண்டையிலே சேர்த்துக்கொள்கிறார்.

நாம் கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போனாலும், மறுபடியும் கர்த்தருடைய சமுகத்திற்கு வரவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் மாத்திரமே நமக்கு மெய்யான சந்தோஷமும், சமாதானமும், ஆறுதலும் உண்டு.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, கழுகு தன் செட்டைகளில் சுமந்துகொண்டு வருவதுபோல, எகிப்து தேசத்திலிருந்து அவர்களை சுமந்துகொண்டு வந்தார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கும், கர்த்தருக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தை விவரிப்பதற்கு கழுகு உவமையாக சொல்லப்படவில்லை. கோழி தன் குஞ்சுகளை சேர்த்துக்கொள்வதுபோல, கர்த்தர் நம்மை சேர்த்துக்கொண்டார் என்று உவமையாக சொல்லப்பட்டிருக்கிறது.

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" (மத் 23:37).

கோழி மிகவும் அமைதியான பறவை. அது யாருக்கும் தீங்கு செய்யாது. அது தன் குஞ்சுகள்மீது மிகுந்த அன்பாயும் பாசமாயும் இருக்கும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய கிருபையின் காலத்தில் இருக்கிறோம் என்பதற்கு இது அடையாளம். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்டுக்கொண்ட கர்த்தர், கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவர் மனத்தாழ்மையுள்ளவர். நமக்காக பாடுகளை அனுபவித்தவர். கல்வாரி சிலுவையிலே நமக்காக வேதனைகளை அனுபவித்து, தம்முடைய திருஇரத்தத்தையே, நம்மை மீட்பதற்கு மீட்பின் கிரயமாக செலுத்தியவர்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளவேண்டும். அப்போது அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமுண்டாகும். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையைப்பற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்போது, "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது" (யாத் 19:5) என்று சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தரே நம்மை இரட்சித்தவர். நம்முடைய இரட்சகர் நம்மை ஆளுகை செய்யவேண்டும் என்று சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து தம்மண்டையிலே சேர்த்துக்கொண்டார். அவர்கள் தம்முடைய உடன்படிக்கையை கைக்கொள்ளவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வாக்கை உள்ளபடி கேட்டு, அவருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளும்போது, அவர்கள் சகல ஜனங்களிலும், கர்த்தருக்கு சொந்த சம்பத்தாயிருப்பார்கள். அதினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கனமும் மேன்மையும் உண்டாகும்.

"பூமியெல்லாம் என்னுடையது" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சர்வஆளுகையுள்ளவர். கர்த்தரே சர்வசிருஷ்டிகர். எல்லா ஜீவராசிகள்மீதும் கர்த்தருக்கு ஆளுகையுள்ளது. இந்தப் பூமியிலுள்ள அனைத்தும் கர்த்தருக்கு சொந்தம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளும்போது, அவர்கள் கர்த்தருக்கு சொந்த சம்பத்தாயிருப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய சொந்த ஜனமாக ஏற்றுக்கொள்வார். அவர்கள் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருப்பார்கள். இந்த சிலாக்கியம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கிடைக்கவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளும்போது, அவர்கள் கர்த்தருக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய் இருப்பார்கள் (யாத் 19:6). கர்த்தர் தம்முடைய தெய்வீக வெளிப்பாடுகளை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பார். அவர்களுக்கு தம்முடைய தெய்வீக நியமனங்களை ஸ்தாபனம்பண்ணுவார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை கைக்கொள்ளும்போது, கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான வாக்குத்தத்தங்களை கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நித்திய ஜீவனை வாக்குப்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளும்போது, கர்த்தர் அவர்கள் மத்தியிலே தீர்க்கதரிசிகளை அனுப்புவார். கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய பரிசுத்த ஆவியானவரை ஊற்றுவார்.

இஸ்ரவேல் புத்திரர் மற்ற ஜனங்களைவிட வித்தியாசமானவர்களாகவும், வேறுபிரிக்கப்பட்டவர்களாகவும், விசேஷமானவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் கர்த்தருக்கு சொந்த சம்பத்தாயிருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாயிருப்பார்கள். கர்த்தர் மோசேக்கு இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி, இதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லுமாறு, மோசேக்கு கட்டளை கொடுக்கிறார்.

மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொல்லுகிறார் (யாத் 19:7). மோசே கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு, உள்ளதை உள்ளபடி, உண்மையாய்ச் சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருடைய முகத்திற்கு முன்பாக சொல்லுகிறார். அவர்களுடைய மனச்சாட்சியில் பதியும் வண்ணமாக மோசே அவர்களோடு பேசுகிறார். மோசேயின் வார்த்தைகளுக்கு இஸ்ரவேல் புத்திரர் செவிகொடுக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள் (யாத் 19:8).

இது மோசே சீனாய் மலைக்கு இரண்டாம் முறையாக ஏறிச் சென்ற சம்பவம் ஆகும் (யாத் 19:3). தேவனுடைய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதாகவும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாகவும், இஸ்ரவேல் புத்திரர்கள் வாக்குப்பண்ணுகிறார்கள் (யாத் 24:3,7).

மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராக ஊழியம் செய்கிறார். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவிக்கிறார். கிறிஸ்துவானவர் தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார். அவர் ஒரு தீர்க்கதரிசியாக, தேவனுடைய தெய்வீக சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் ஒரு ஆசாரியராக, நம்முடைய ஆவிக்குரிய பலிகளை, தேவனுடைய சமுகத்தில் செலுத்துகிறார்.

"எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே" (யோபு 9:33) என்று யோபு சொல்லுகிறார்.

## கார்மேகத்தில் கர்த்தர்
## யாத் 19:9-15

**யாத் 19:9. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தருக்குச் சொன்னான்.**

**யாத் 19:10. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து,**

**யாத் 19:11. மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்; மூன்றாம் நாளில் கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகச் சீனாய்மலையின்மேல் இறங்குவார்.**

**யாத் 19:12. ஜனங்களுக்குச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்; மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான்.**

**யாத் 19:13. ஒரு கையும் அதைத் தொடலாகாது; தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாக வேண்டும்; மிருகமானாலும் சரி, மனிதனானாலும் சரி, உயிரோடே வைக்கப்படலாகாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்றார்.**

**யாத் 19:14. மோசே மலையிலிருந்து இறங்கி, ஜனங்களிடத்தில் வந்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்தினான்; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தார்கள்.**

**யாத் 19:15. அவன் ஜனங்களை நோக்கி: மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருங்கள், மனைவியினிடத்தில் சேராதிருங்கள் என்றான்.**

கர்த்தர் கார்மேகத்தில் சீனாய் மலையின்மீது இறங்கி வருகிறார் (யாத் 19:9). கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக சீனாய் மலையின்மேல் இறங்கி வருவார் (யாத் 19:11). கர்த்தர் தம்முடைய பரிசுத்த பிரசன்னத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு பிரத்தியட்சமாய் வெளிப்படுத்துவதற்கு ஒரு தெய்வீக நோக்கமுள்ளது.

கர்த்தர் தம்முடைய நோக்கத்தை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்" (யாத் 19:9) என்று சொல்லுகிறார். கர்த்தர் கார்மேகத்தின் மேல் மோசேயினிடத்தில் வருவதற்கு இதுவே காரணம்.

தேவன் இறங்கிவந்து, தம்முடைய ஜனத்திடம் வருவதாக வாக்குப்பண்ணுகிறார். ஜனங்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் ஜனங்களை எச்சரித்துக் கூறுகிறார். மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான் என்பது தேவனுடைய எச்சரிப்பின் சத்தமாகும். மோசே தேவனுடைய கட்டளைகளைப் பெற்றுக் கொண்டு, இஸ்ரவேல் ஜனத்தாரிடம் வந்து, அவர்கள் தேவனுடைய சமூகத்திற்கு வரவும், அவருடைய சத்தத்தைக் கேட்கவும் அவர்களை ஆயத்தப்படுத்துகிறார் (யாத் 19:9-13).

தேவன் மோசேயைத் தமது வல்லமையோடு அனுப்பியிருக்கிறார். இதை ஜனங்கள் விசுவாசிக்க வேண்டும். தம்முடைய சப்தத்தைக் கேட்கும்போது ஜனங்கள் மோசேயை விசுவாசிப்பார்கள் என்பது தேவனுடைய திட்டம். தேவன் இதை அற்புதங்கள் மூலமாகவும், வேறு ஏதாவது அதிசயங்கள் மூலமாகவும் செய்யாமல், தமது சப்தத்தை ஜனங்கள் கேட்பதன் மூலமாகச் செய்ய விரும்புகிறார். தேவனுடைய சப்தத்திற்கு வல்லமையுண்டு.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பிரத்தியட்சமாக சீனாய் மலையின்மேல் இறங்கி வருகிறார். கர்த்தருடைய தெய்வீக பிரசன்னம் அவர்கள் மத்தியிலே இருக்கிறது. ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தருக்கு சொல்லுகிறார். கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று ஜனங்கள் பிரத்தியுத்தரம் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தம்முடைய உடன்படிக்கையை கைக்கொள்ளவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஏகமாய் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ண சித்தமுள்ளவராயிருக்கிறார். இந்த உடன்படிக்கையின் முதலாவது பகுதி இப்போது நிறைவேறுகிறது. கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே மோசேயின் மூலமாக சம்பாஷணை நடைபெறுகிறது. கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரத்தியட்சமாக இறங்கி வருவதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் தம்முடைய மகிமையான பிரசன்னத்தை, இஸ்ரவேல் புத்திருக்கு முன்பாக பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தி, அவர்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது. உடன்படிக்கையின் ஆரம்பத்தில், கர்த்தருடைய பிரத்தியட்சமான பிரசன்னம் வெளிப்படுகிறது. இதன் பின்பு, கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகள் மோசேயின் மூலமாக அமைதியாக நிறைவேற்றப்படுகிறது.

உடன்படிக்கையின் ஆரம்பம் ஆரவாரமாயிருக்கிறது. உடன்படிக்கை நிறைவேறுவதோ அமைதியாக நடைபெறுகிறது. இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது புறாவின் ரூபங்கொண்டு பிரத்தியட்சமாய் இறங்கி வந்தார். அப்போது வானத்திலிருந்து உண்டான சத்தத்தை எல்லோரும் தெளிவாக கேட்டார்கள்.

"அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (மத் 3:17).

இந்த சம்பவத்திற்கு பின்பு இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம், இதுபோல பிரத்தியட்சமாக வெளிப்படவில்லை. ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்காக, கிறிஸ்துவானவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலே, இதுபோன்ற அற்புதம் நடந்தது.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள்மீது வந்து இறங்கியபோது, ஆரம்பத்தில் இதுபோல பிரத்தியட்சமான அற்புதங்கள் உண்டாயிற்று.

"அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது" (அப் 2:3).

இந்த சம்பவத்திற்கு பின்பு, அப்போஸ்தலருடைய ஊழியத்தில் இதுபோன்ற அற்புதங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஜனங்கள் அப்போஸ்தலர்கள்மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களுடைய ஊழியத்தின் ஆரம்பகாலத்தில், இதுபோன்ற அற்புதத்தை நடப்பித்தார்.

இதுபோலவே ஜனங்கள் மோசேயை என்றென்றைக்கும் விசுவாசிக்கவேண்டும் என்பதற்காக, அவருடைய ஊழியத்தின் ஆரம்பகாலத்தில், கர்த்தர் கார்மேகத்தில் அவரிடத்திற்கு வந்தார். கர்த்தர் சர்வஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக சீனாய் மலையின்மேல் இறங்கினார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இறங்கி வரும்போது, அவருடைய பிரசன்னத்தை தரிசிப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர் தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும். இதற்காக அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்" (யாத் 19:10,11) என்று சொல்லுகிறார். மூன்றாம் நாளில் கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகச் சீனாய்மலையின்மேல் இறங்குவார் என்று மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

இந்த வசனத்தில் பரிசுத்தப்படுத்துதல் என்பது பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதைக் குறிப்பிடாது. தேவனுடைய சப்தத்தைக் கேட்பதற்காகவும், அவருடைய கற்பனைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இஸ்ரவேல் புத்திரர் தங்களை மூன்று நாட்களுக்கு மட்டும் பரிசுத்தப்படுத்திக் கொள்கிறார்கள் (யாத் 19:10-11, 14-15). அவர்களுடைய பாவங்கள் சுத்திகரிக்கப்படவில்லை. ஜனங்கள் மூன்று நாட்களுக்குத் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்கிறார்கள் (யாத் 19:14). மலை பரிசுத்தப்படுத்தப்படுகிறது. ஆசாரியர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்கிறார்கள் (யாத் 19:22).

ஜனங்கள் மலையைக் காணலாம், கர்த்தருடைய சப்தத்தைக் கேட்கலாம். ஆனால் மலையைத் தொடக்கூடாது (யாத் 19:16; எபி 12:18-21).

மோசே இஸ்ரவேல் ஜனங்களை பரிசுத்தப்படுத்தவேண்டும். அவர்களை பரிசுத்தப்படுத்துவதற்கு கர்த்தர் இரண்டு நாட்களை நியமிக்கிறார். இந்த நாட்களில் அவர்கள் உலகப்பிரகாரமான வேலைகளை விட்டுவிட்டு, ஜெபத்திலும், கர்த்தரை தியானிப்பதிலும் தரித்திருக்கவேண்டும். அவர்கள் இந்த இரண்டு நாட்களிலும் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சீனாய் மலையின்மேல் பிரத்தியட்சமாய் இறங்கி வரும்போது, அவர் தம்முடைய கட்டளைகளை அவர்களுக்கு கொடுப்பார். கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளைக் கேட்பதற்கு, இஸ்ரவேல் புத்திரர் தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும். அவர்கள் மிகுந்த பரிசுத்தத்தோடும், பயபக்தியோடும் கர்த்தருடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் "மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்" (யாத் 19:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய சிந்தனைகளை அங்கும் இங்குமாக அலைபாய விடக்கூடாது. அவர்களுடைய இருதயத்தில் அசுத்தமான சிந்தனைகள் எதுவும் இருக்கக்கூடாது. உலகப்பிரகாரமான ஆசைகளும், மாம்சத்தின் இச்சைகளும் அவர்களை விட்டு அகற்றப்படவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்தில் நிற்கும்போது, அவர்களுடைய இருதயத்தில் உலகப்பிரகாரமான கவலைகள் நிரம்பியிருக்கக்கூடாது. அவர்கள் கர்த்தரை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரரை பரிசுத்தப்படுத்தவேண்டும். அதற்கு அடையாளமாக அவர்கள் தங்கள் வஸ்திரங்களை தோய்க்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 19:10). இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரமாக, தங்கள் வஸ்திரங்களை தோய்க்கிறார்கள் (யாத் 19:16).

கர்த்தர் நம்முடைய வஸ்திரங்களுக்கு ஒருபோதும் முக்கியத்துவம் கொடுக்கமாட்டார். மனுஷனுடைய வஸ்திரங்களைப் பார்த்து கர்த்தர் பட்சபாதம்பண்ணவுமாட்டார். ஆனாலும் அவர்கள் தங்கள் வஸ்திரங்களை தோய்த்து, அதிலுள்ள அழுக்கை நீக்குவது, தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்பி, தங்கள் ஆத்துமாக்களை சுத்தப்படுத்துவதற்கு அடையாளமாயிருக்கிறது.

நம்முடைய சமுதாய வாழ்க்கையில், பெரியவர்களையும் முக்கியஸ்தர்களையும் சந்திக்கப்போகும்போது, நாம் சுத்தமான வஸ்திரங்களை நேர்த்தியாக உடுத்திக்கொண்டு போகிறோம். நாம் பரிசுத்தமான கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது, நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். அவன் மனுஷனுடைய வெளித்தோற்றத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். கர்த்தர் நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளை ஆராய்ந்து பார்க்கிறார்.

கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக சீனாய் மலையின்மேல் இறங்கப்போகிறார். அப்போது இஸ்ரவேல் புத்திரர் தம்மை சந்திப்பதற்கு தங்களை எப்படி ஆயத்தம்பண்ணவேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஜனங்களுக்குச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்; மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான். ஒரு கையும் அதைத் தொடலாகாது; தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாக வேண்டும்; மிருகமானாலும் சரி, மனிதனானாலும் சரி, உயிரோடே வைக்கப்படலாகாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள்" (யாத் 19:12,13) என்று சொல்லுகிறார்.

மரண தண்டனை இரண்டு விதமாகக் கொடுக்கப்படுகிறது. கல்லெறிதல் மூலமாகவோ அல்லது அம்பினால் ஊடுருவ எய்யப்படுவதன் மூலமாகவோ மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது (எபி 12:20).

மோசே சீனாய் மலையைச் சுற்றிலும் ஒரு எல்லையைக் குறிக்கவேண்டும். ஒருவேளை மோசே சீனாய் மலையின் அடிவாரத்தில், மலையைச் சுற்றிலும் எல்லைக்கோடு வரைந்திருக்கலாம். அல்லது அந்த மலையைச் சுற்றிலும் அகழிபோல பள்ளம் தோண்டியிருக்கலாம். இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரும் இந்த எல்லையைத்தாண்டி, சீனாய் மலைக்கு அருகாமையில் வரக்கூடாது. அவர்கள் சீனாய் மலையில் ஏறாதபடிக்கும், அந்த மலையின் அடிவாரத்தை தொடாதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாய்க் கொல்லப்படுவான் என்று கர்த்தர் எச்சரிப்பாய் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய மகிமையான பிரசன்னத்திற்கு முன்பாக தங்களை வெகுவாய்த் தாழ்த்தவேண்டும். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தர்மீது பயமும் பக்தியும் நிரம்பியிருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமல்ல, விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நிற்கும்போது, மிகுந்த பரிசுத்தத்தோடும், பயபக்தியோடும் நிற்கவேண்டும். கர்த்தரை தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும், பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 19:13). அவர்கள் மலையின் அடிவாரத்திற்கு வந்து, கர்த்தருடைய பாதபடியிலே பயபக்தியோடு நிற்க வேண்டும். கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக சீனாய் மலையின்மீது இறங்குவார்.

இஸ்ரவேல் புத்திரர் மனுஷனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்காக சீனாய் மலையின் அடிவாரத்தில் கூடிவரவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்காக அங்கே கூடிவருகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மனுஷரைப் பார்ப்பதற்காக தங்களை பரிசுத்தப்படுத்தவில்லை. அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்தை பிரத்தியட்சமாய்ப் பார்ப்பதற்காக, தங்களை பரிசுத்தப்படுத்தி ஆயத்தமாயிருக்கிறார்கள்.

மோசே மலையிலிருந்து இறங்கி, ஜனங்களிடத்தில் வந்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார்; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கிறார்கள். மோசே ஜனங்களை நோக்கி, "மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருங்கள், மனைவியினிடத்தில் சேராதிருங்கள்" (யாத் 19:14,15) என்று சொல்லுகிறார். புருஷனும், மனைவியும் குடும்ப உறவில் ஈடுபடாமல் விலகியிருக்க வேண்டும் (2கொரி 7:5).

எபிரெயர்கள் ஸ்நானம் பண்ணும்போது தங்கள் வஸ்திரங்களைத் தோய்ப்பது வழக்கம். யெகோவா தேவனைச் சந்திப்பதற்கு ஸ்நானம்பண்ணி, வஸ்திரங்களைத் தோய்ப்பது அவசியமென்று இஸ்ரவேல் புத்திரர் கருதுகிறார்கள்.

## கர்த்தருடைய மகிமை
## யாத் 19:16-25

**யாத் 19:16. மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள்.**

**யாத் 19:17. அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள்.**

**யாத் 19:18. கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்து; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது.**

**யாத் 19:19. எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார்.**

**யாத் 19:20. கர்த்தர் சீனாய் மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கினபோது, கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனான்.**

**யாத் 19:21. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்து போகாதபடிக்கும், நீ இறங்கிப்போய், அவர்களை உறுதியாக எச்சரி.**

**யாத் 19:22. கர்த்தரின் சமூகத்தில் வருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி, தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.**

**யாத் 19:23. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து, அதைப் பரிசுத்தப்படுத்துங்கள் என்று தேவரீர் எங்களை உறுதியாக எச்சரித்திருக்கிறீர்; ஆகையால், ஜனங்கள் சீனாய்மலையின்மேல் ஏறிவரமாட்டார்கள் என்றான்.**

**யாத் 19:24. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்; ஆசாரியர்களும் ஜனங்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணாதபடிக்கு, எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதிருக்கக்கடவர்கள் என்றார்.**

**யாத் 19:25. அப்படியே மோசே இறங்கி ஜனங்களிடத்தில் போய், அதை அவர்களுக்குச் சொன்னான்.**

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் பயபக்தியோடு எதிர்பார்த்த அந்த பரிசுத்தநாளை காணும் சிலாக்கியம் அவர்களுக்கு கிடைக்கிறது. அவர்கள் கர்த்தருடைய பிரசங்கச் செய்தியை கேட்கவேண்டுமென்று பரிசுத்தத்தோடும், ஆயத்தத்தோடும் காத்திருக்கிறார்கள். கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலே கூடியிருக்கிற இஸ்ரவேல் சபையாருக்கு மத்தியிலே பிரசங்கம்பண்ணுகிறார். இதுபோன்ற பிரசங்கச் செய்தியை அவர்கள் இதுவரையிலும் கேட்டதே இல்லை.

கர்த்தர் தாமே இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுகிறார் (யாத் 19:20). கர்த்தர் சீனாய் மலையிலுள்ள கொடுமுடியில் இறங்குகிறார். அவர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்குகிறார் (யாத் 19:18). கர்த்தருடைய மகிமையை விளக்குவதற்கு, "ஷேக்கைனா" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஷேக்கைனா மகிமை சகல இஸ்ரவேல் புத்திரருக்கும் பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது.

மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்குகிறார்கள் (யாத் 19:16).

எக்காளம் நெடுந்தொனியாய் தொனிக்கையில் இஸ்ரவேல் புத்திரர் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்று கர்த்தர் சொன்னார். இப்போது மலையின்மேல் கார்மேகமும், மகாபலத்த எக்காள சத்தத்தமும் உண்டாயிற்று. ஆனால் எக்காள சத்தத்தைக் கேட்டு இஸ்ரவேல் புத்திரர் மலையின் அடிவாரத்திற்கு வரவில்லை. பாளயத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் நடுங்குகிறார்கள்.

அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணுகிறார்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நிற்கிறார்கள் (யாத் 19:17). மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சீனாய் வனாந்தரத்திற்கு வழிநடத்தி வந்திருக்கிறார். இப்போது அவர் இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தருடைய கட்டளைகளை கேட்பதற்காக, சீனாய் மலையில் அடிவாரத்திற்கு அழைத்து வருகிறார்.

மலையின் அடிவாரம் வரைக்கும் அவர்கள் வருகிறார்கள். இதற்குமேல் அவர்கள் மலையில் ஏறக்கூடாது. (யாத் 19: 12-13, 17, 21, 23-24). இஸ்ரவேல் புத்திரர் பாளத்திற்கு புறம்பே, மலையின் அடிவாரத்தில் நிற்கிறார்கள்.

பரிசுத்தவேதாகமத்தில் பாளத்திற்கு புறம்பே நடைபெற்ற ஒரு சில காரியங்களை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. தேவன் இஸ்ரவேலரைச் சந்தித்த இடம். (யாத் 19:17).

2. முதலாவது ஆசரிப்புக்கூடாரம். (மோசே சீனாய் வனாந்தரத்தில் உண்டு பண்ணியதல்ல) எல்லா பலிகளும், ஆராதனைகளும் (யாத் 29:14; யாத் 33:7-11; லேவி 4:12,21; லேவி 6:11; லேவி 8:17; லேவி 9:11; லேவி 10:4-5; லேவி 16:23-28; எபி 13:11).

3. பலிகளைச் செலுத்துதல் (எண் 19:3,9).

4. குஷ்டரோகிகள் (லேவி 13:45-46; லேவி 14:3,8; எண் 5:2-4; எண் 12:14-15).

5. மரணதண்டனை நிறைவேற்றுதல் (எண் 15:35-36).

6. சுத்திகரித்தல். (எண் 31:23-24; உபா 23:10-11).

7. கிறிஸ்து தம்மைத்தாமே பலியாகச் செலுத்தியது. (எபி 13:13).

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையின் அடிவாரத்தில் நிற்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நின்றுகொண்டு ஆராதிக்கிறார்கள். ஜனங்கள் கர்த்தரை நின்றுகொண்டு ஆராதித்த ஒரு சில சம்பவங்கள் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தேவனுடைய சமுகத்தில் ஆபிரகாம் (ஆதி 18:22; ஆதி 19:27)

2. சீனாயில் தேவனுடைய பிரசன்னத்தில் இஸ்ரவேலர்கள். (யாத் 19:17)

3. சீனாய் மலையில் தேவனுடைய பிரசன்னத்தில் மோசே. (யாத் 34:5)

4. சீனாயில் தேவனுடைய பிரசன்னத்தில் இஸ்ரவேலர்கள். (லேவி 9:5)

5. எஸ்றாவிற்கு முன்பாக இஸ்ரவேலர்கள். (நெகே 8:4-9:4)

6. கிறிஸ்துவிற்கு முன்பாக திரளான ஜனங்கள். (மத் 13:2)

7. வாசிப்பதற்குக் கிறிஸ்து எழுந்து நின்றார். (லேவி 4:16)

8. சமமான பூமியில் திரளான ஜனங்கள். (லூக்கா 6:17)

9. இயேசுவிற்கு முன்பாக பாவியான ஸ்திரீ. (லூக்கா 7:38)

10. பரிசேயரும், ஆயக்காரரும் (லூக்கா 18:11)

11. பரலோகத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாக இரட்சிக்கப் பட்டவர்கள். (வெளி 7:9)

12. தேவனுடைய பிரசன்னத்தில் தூதர்கள். (வெளி 7:11)

13. பரலோகத்திலுள்ள பலிபீடத்தில் தூதர்கள். (வெளி 8:3)

14. பரலோகத்தில் 144,000 பேர் (வெளி 14:1)

இஸ்ரவேலர் திரளான எண்ணிக்கையில் சீனாய் மலையின் அடிவாரத்திற்கு புறப்பட்டு வருகிறார்கள். அவர்கள் பலத்த சேனையைப்போல திரளாயிருக்கிறார்கள். மோசே அவர்களுக்கு சேனையின் அதிபதியைப்போல இருக்கிறார். இஸ்ரவேல் சபையார் கர்த்தரை ஆராதிப்பதற்காக மலை அடிவாரத்தில் கூடிவந்திருக்கிறார்கள். மோசே இஸ்ரவேல் சபையாருக்கு தலைவராயிருக்கிறார்.

கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக சீனாய் மலையின்மேல் இறங்குகிறார். அது விடியற்காலை வேளையாயிருக்கிறது. அப்பொழுது இடிமுழக்கங்களும், மின்னல்களும், மகாபலத்த எக்காள சத்தமும் உண்டாயிற்று. இடியும் மின்னலும் இயற்கையில் உண்டாகும் காரியங்கள். ஆனாலும், தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துவதற்காக, சீனாய் மலையிலே, விடியற்காலத்திலே, இடிமுழக்கங்களும், மின்னல்களும் உண்டாயிற்று. பாளயத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இந்த பலத்த சத்தத்தைக் கேட்டு நடுங்குகிறார்கள். அவர்களுடைய இருதயத்திற்குள் பயமுண்டாயிற்று.

சீனாய் மலையிலே இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டானபோது, மலையின்மேல் கார்மேகமும், மகாபலத்த எக்காள சத்தமும் உண்டாயிற்று. எக்காள சத்தம் வர வர மிகவும் பலமாய்த் தொனிக்கிறது (யாத் 19:19). மோசே கர்த்தருடைய ஊழியக்காரராக, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக நிற்கிறார். அவர் கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் நடுவே மத்தியஸ்தராக ஊழியம் செய்கிறார். அப்பொழுது மோசே பேசுகிறார். கர்த்தர் மோசேக்கு தம்முடைய வாக்கினால் மறுமொழி கொடுக்கிறார் (யாத் 19:19).

கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்குகிறார். ஆகையால் அது முழுவதும் புகைக்காடாய் இருக்கிறது. (யாத் 19:9=யாத் 19:16). எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனிக்கிறது. தேவனோ அல்லது தேவதூதரோ எக்காளத்தைப் பலமாய்த் தொனிக்கச் செய்கிறார்கள். தேவன் மோசேயோடு தம்முடைய வாக்கினால் அவர் கேட்கும் பிரகாரமாகப் பேசுகிறார்.

இடிமுழக்கங்களின் சத்தத்தையும், மகா பலத்த எக்காள சத்தத்தையும் கேட்டு, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நடுங்கும்போது, மோசேயும் அவர்களோடு கூட நடுங்குகிறார். மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் உண்டானதைப்பார்த்து, மோசேயும் பயப்படுகிறார். கர்த்தர் மோசேயின் நடுக்கத்தையும் பயத்தையும் அவரை விட்டு நீக்குகிறார். கர்த்தர் அவருக்கு விசேஷித்த கிருபைகளை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் சீனாய்மலையிலுள்ள கொடுமுடியில் இறங்குகிறார். அப்போது, கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைக்கிறார்; மோசே சீனாய் மலையிலுள்ள கொடுமுடிக்கு ஏறிப்போகிறார் (யாத் 19:20). கர்த்தரே மோசேயை தம்மிடத்தில் வரவழைக்கிறார். அவர் மோசேயின் விசுவாசத்தையும், தைரியத்தையும் சோதித்துப் பார்ப்பதற்காக, மோசேயை தம்மிடத்தில் வரவழைக்கிறார்.

கர்த்தர் சீனாய்மலையிலுள்ள கொடுமுடியில் இறங்குகிறார். கர்த்தர் அக்கினிஸ்தம்பத்திலிருந்தோ, அல்லது மேகஸ்தம்பத்திலிருந்தோ அல்லது பரலோகத்திலிருந்தோ சீனாய் மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கி வந்திருக்கலாம். கர்த்தர் இதுபோன்று ஏற்கெனவே இறங்கி வந்திருக்கிறார். ஆதாம் (ஆதி 3:8-19); பாபேல் (ஆதி 11:5); ஆபிரகாம் (ஆதி 18:1-8,33); இஸ்ரவேலர் (யாத் 14:24-25).

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சீனாய் மலையின் அடிவாரத்தில் நிற்கிறார்கள். அவர்கள் மலையின் அடிவாரத்தைத் தொடக்கூடாது. மோசே அந்த மலையைச் சுற்றிலும் ஒரு எல்லையைக் குறித்திருக்கிறார். அவர்கள் அந்த எல்லையைத் தாண்டி சீனாய் மலையின்மேல் ஏறக்கூடாது. இது இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற உறுதியான கட்டளை. இதை ஒருவரும் மீறக்கூடாது. இஸ்ரவேல் புத்திரருடைய கைகள் சீனாய் மலையைத் தொட்டால், அவர்கள் சாகவேண்டும்.

கர்த்தர் ஏற்கெனவே சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகளை இங்கு மறுபடியுமாக சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்து போகாதபடிக்கும், நீ இறங்கிப்போய், அவர்களை உறுதியாக எச்சரி. கர்த்தரின் சமூகத்தில் வருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி, தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்" (யாத் 19:21,22) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு மத்தியஸ்தராகயிருந்து அவர்களுக்காக பரிந்து பேசுகிறார். சீனாய் மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான் என்பதை இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், மலையின்மேல் உண்டான கார்மேகத்தைப் பார்ப்பதற்கு, அந்த மலையின் அடிவாரத்தில் குறிக்கப்பட்டிருக்கிற எல்லையைத் தாண்டி, கர்த்தரிடத்தில் வரக்கூடாது. கர்த்தர் இதை மோசேயிடம் மறுபடியுமாக எச்சரித்து சொல்லுகிறார். அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி, "மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து, அதைப் பரிசுத்தப்படுத்துங்கள் என்று தேவரீர் எங்களை உறுதியாக எச்சரித்திருக்கிறீர்; ஆகையால், ஜனங்கள் சீனாய்மலையின்மேல் ஏறிவரமாட்டார்கள்" (யாத் 19:23) என்று சொல்லுகிறார்.

மலையைச் சுற்றிலும் குறிக்கப்பட்டிருக்கிற எல்லையைத் தாண்டி வருவதற்கு ஆசாரியருக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் அனுமதியில்லை. ஆனாலும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் தம்மிடத்தில் வரச்சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி: "நீ இறங்கிப்போ; பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்; ஆசாரியர்களும் ஜனங்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணாதபடிக்கு, எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதிருக்கக்கடவர்கள்" (யாத் 19:24) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் கனம்பண்ணுவதில் பிரியப்படுகிறார். ஜனங்கள் கர்த்தருடைய சமுகத்திலே இருக்கும்போது மிகுந்த பயபக்தியோடு இருக்கவேண்டும். கர்த்தர் பிரத்தியட்சமாக இறங்கி வந்திருக்கிற சீனாய் மலையின்மீது ஏறிப்போகவேண்டும் என்று ஜனங்கள் ஆசைப்படக்கூடாது. கர்த்தர் நம்முடைய ஆசைகளையும், ஆர்வங்களையும் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கக்கூடாது. நாமே கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய விருப்பத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய விருப்பங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றவில்லையென்றாலும், நம்முடைய தேவைகளை நிச்சயமாய் சந்திப்பார் என்று கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் கர்த்தர் நமக்கு ஒரு எல்லையைக் குறித்திருக்கிறார். அந்த எல்லையை கடந்து மீறி வருவது நமக்கு ஆசீர்வாதமாயிராது. நமக்கு ஆசைகள் இருக்கலாம். ஆர்வங்களும் இருக்கலாம். நம்முடைய ஜீவியத்தில், ஆசைகளுக்கும் ஆர்வங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு எதை அனுமதிக்கிறாரோ அதை மாத்திரமே செய்யவேண்டும். அவர் நமக்கு எதை அனுமதிக்கவில்லையோ, அதை செய்வதற்கு பிரயாசப்படக்கூடாது. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை செய்யாமலிருப்பதும் பாவம். கர்த்தர் நமக்கு தடைபண்ணியிருக்கிற காரியங்களை செய்வதும் பாவம்.

மோசே சீனாய் மலையிலுள்ள கொடுமுடியிலிருந்து இறங்கி ஜனங்களிடத்தில் வருகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சீனாய் மலையின் அடிவாரத்தில் நிற்கிறார்கள். அவர்களில் ஒருவரும் குறிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி வரவில்லை. கர்த்தர் அவர்களுக்கு சொன்ன வார்த்தைகளை மோசே அவர்களிடத்தில் பயபக்தியோடு சொல்லுகிறார் (யாத் 19:25).

## 20 அதிகாரம்

கர்த்தர் சீனாய் மலையிலிருந்து தம்முடைய பத்துக்கட்டளைகளை சொல்லுகிறார் (யாத் 20:1-17). ஜனங்கள் எல்லாரும் இடி முழக்கங்களையும், மின்னல்களையும், எக்காள சத்தத்தையும், மலைபுகைகிறதையும் காண்கிறார்கள். மோசே தங்களோடு பேசவேண்டும் என்றும், தேவன் தங்களோடு பேசாதிருப்பாராக என்றும் சொல்லுகிறார்கள் (யாத் 20:18-21).

கர்த்தர் மோசேக்கு தனிப்பட்ட முறையில் ஒரு சில கட்டளைகளை சொல்லுகிறார். இவை கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமான கட்டளைகளாகும். மோசே கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும்.

### பத்துக்கட்டளைகள்
### யாத் 20:1-17

**யாத் 20:1. தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன:**

**யாத் 20:2. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.**

**யாத் 20:3. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.**

**யாத் 20:4. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;**

**யாத் 20:5. நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.**

**யாத் 20:6. என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.**

**யாத் 20:7. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.**

**யாத் 20:8. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;**

**யாத் 20:9. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக;**

**யாத் 20:10. ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்.**

**யாத் 20:11. கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.**

**யாத் 20:12. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.**

**யாத் 20:13. கொலை செய்யாதிருப்பாயாக.**

**யாத் 20:14. விபசாரம் செய்யாதிருப்பாயாக.**

**யாத் 20:15. களவு செய்யாதிருப்பாயாக.**

**யாத் 20:16. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.**

**யாத் 20:17. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.**

தேவன் இஸ்ரவேல் புத்திரருக்கு பத்துக்கட்டளைகளைக் கொடுக்கிறார். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் "தேவன் பேசிச்சொல்லிய சகல வார்த்தைகளுமாவன" (யாத் 20:1) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தரே இந்தக் கட்டளைகளை இயற்றியவர். கர்த்தரே இந்தக் கட்டளையின் வார்த்தைகளை சொல்லுகிறவர்.

தேவன் பத்துக் கட்டளைகளை சொல்லுகிறார். அதன்பின்பு, தேவனுடைய சப்தத்தைத் தாங்கள் கேட்டால் செத்துப்போவோம் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். (உபா 5:22-29) அதன் பின்பு, தேவன் மோசேயிடம் மட்டுமே பேசுகிறார். கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு மற்ற கற்பனைகளைக் கொடுக்கிறார். மோசே பத்துக் கட்டளைகளையும் மற்ற கட்டளைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி, அதை மிருகங்களின் இரத்தத்தினால் உறுதிபண்ணுகிறார். (யாத் 24:3-8) தேவன் சகல வார்த்தைகளையும் சொல்லுகிறார். மோசே அந்த வார்த்தைகள் எல்லாவற்றையும் எழுதுகிறார் (யாத் 20:1=யாத் 24:3-4).

பரிசுத்த வேதாகமத்தில் பத்துக்கட்டளைகள் அல்லது பத்து கற்பனைகளைப்பற்றிய சத்தியம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பத்துக் கற்பனைகள் என்னும் வாக்கியம் வேதாகமத்தில் மூன்று முறைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 34:28; உபா 4:13; உபா 10:4).

2. மோசேயின் மொத்த பிரமாணத்திற்கும், பத்து கற்பனைகள் ஓர் அடிப்படையாகும். இயேசு கிறிஸ்து மத் 22:35-40 ஆகிய வசனங்களில் "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" என்று கூறியிருப்பது போன்று, பத்துக் கற்பனைகளில் மோசேயின் மொத்த பிரமாணமும் அடங்கியிருக்கிறது.

3. மோசேயின் பிரமாணத்தில் இந்தப் பகுதியை மட்டுமே கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் செவிகளில் தொனிக்கும் படியாகக் கூறினார். (உபா 5:22; உபா 10:4).

4. ஆதாமுக்குப் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரியாது. அவருக்கு ஒரு கட்டளை மட்டுமே கொடுக்கப்பட்டது. அவர் அதற்குக் கீழ்ப்படியாமல் போனதினால் மனுக்குலம் முழுவதற்கும் அவர் மூலமாக பாவம் வந்தது (ஆதி 2:17; ரோமர் 5:12-21). தன் தாயையும், தகப்பனையும் கனம்பண்ணுவதற்கு ஆதாமிற்குப் பெற்றோர் யாருமில்லை. அதுபோலவே விபசாரம் பண்ணாதிருப்பாயாக, பிறர்பொருளை இச்சியாதிருப்பாயாக என்னும் பிரமாணங்களும் ஆதாமும், ஏவாளும் மட்டும் இருந்த காலத்தில் அவர்களுக்குப் பொருந்தாது.

5. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சீனாய் வனாந்தரத்திற்கு இஸ்ரவேலர் வருவதற்கு முன்பாக இருந்த அவர்களுடைய முற்பிதாக்கள் ஆகியோருக்குப் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரியாது. (உபா 5:2-3). ஆபிரகாமிற்கும், அவர் சந்ததிக்கும் தேவன் பதினான்கு கட்டளைகளைக் கொடுத்தார். (ஆதி 12:1; ஆதி 26:5) இவை தவிர, நோவாவின் மூலமாக மனுஷரைக் குறித்த சில பிரமாணங்களும் மனுக்குலத்திற்குக் கொடுக்கப்பட்டது. (ஆதி 9:1-18). தேவன் இஸ்ரவேலருக்குச் சீனாய்மலையில் பத்துக் கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்பாக மோசேக்கு ஏற்கெனவே 184 கற்பனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யாத் 16:28)

6. சீனாய் வனாந்தரத்திற்கு வருவதற்கு முன்பாக இஸ்ரவேலருக்கும் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரியாது. (உபா 4:7-8; உபா 5:2-3; நெகே 9:13-14).

7. மோசேயின் பிரமாணத்தில் மட்டுமே பத்துக் கற்பனைகள் காணப்படுகிறது. (யாத் 20; உபா 5). மோசேயின் பிரமாணத்தில் இவை சேர்க்கப்படவில்லையென்றால், இஸ்ரவேலருக்குப் பத்துக் கற்பனைகளைப் பற்றித் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் தேவன் பத்துக் கற்பனைகளை எழுதிய கற்பலகைகள் இப்பொழுது எங்குள்ளது என்று தெரியவில்லை. ஒருசிலர் மோசேயின் பிரமாணத்தைப் பத்துக் கட்டளையிலிருந்து வேறுபிரித்து அதைத் தேவனுடைய பிரமாணம் என்று கூறுகிறார்கள். ஆனால் இது தவறான உபதேசம். மோசேயின் பிரமாணத்தில் ஒரு பகுதியே பத்துக் கற்பனைகளாகும்.

8. மோசேயின் பிரமாணத்தில் பத்துக் கற்பனைகளோடு மேலும் 203 கட்டளைகள் இடம் பெற்றுள்ளன. இவை சீனாய் மலையில் தேவன் மோசேயிடம் பத்துக் கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்பாகக் கொடுக்கப் பட்டவையாகும். மோசே பத்துக் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டபோது, மேலும் 155 கற்பனைகளைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார் (யாத் 20:18-23:33). இந்தக் கற்பனைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டபின்பு, நியாயப் பிரமாணப் புஸ்தகம் மிருகங்களின் இரத்தத்தினால் உறுதிபண்ணப்பட்டது. (யாத் 24:1-8). இதன்பின்பு, மோசேயின் பிரமாணப் புஸ்தகத்தில் மேலும் 2,345 கற்பனைகள் சேர்க்கப்பட்டன. (யாத் 24-உபா 34).

9. பத்துக் கற்பனைகள் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. சீனாய் வனாந்தரத்தில் தேவனுக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அஸ்திபாரம் பத்துக்கட்டளையாகும். (யாத் 34:28; உபா 4:13). பத்துக் கட்டளைகள் மட்டுமே தேவனுடைய பிரமாணம் என்றோ, மோசேயின் பிரமாணம் என்றோ கூறமுடியாது. இவை தேவன் உரைத்த பிரமாணத்தின் முதற்பகுதியாகும். (உபா 5:22) பத்துக் கற்பனைகள் கொடுத்தவுடன், பிரமாணம் முடிந்துபோகவில்லை. தேவனுடைய சப்தத்தை இனிமேல் தங்களால் கேட்க முடியாது என்று இஸ்ரவேலர்கள் முறையிட்டார்கள். தேவன் அவர்களுடைய முறையீட்டைக் கேட்டு, அவர்களோடு நேரடியாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டார். (உபா 5:23-29; எபி 12:18-21).

10. பத்துக் கற்பனைகளும், தேவனுடைய இதர பிரமாணங்களும், மோசேயின் முழுப் பிரமாணமும் இஸ்ரவேல் புத்திரருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டவை (யாத் 24:7-8; யாத் 34:27-28; லேவி 26:9,44-45; 1இராஜா 8:53; அப் 3:25; ரோமர் 2:14-29; ரோமர் 3:1-2; ரோமர் 9:4-5) புறஜாதியாருக்கும், பத்துக் கற்பனைகளுக்கும் சம்பந்தம் எதுவுமில்லை. புறஜாதியார் இஸ்ரவேல் தேசத்தில் அங்கம் வகிக்க விரும்பும்போது அவர்கள் மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். (யாத் 12:24; எண் 15:16,29).

11. ஆதித்திருச்சபையில் இருந்த விசுவாசிகள் பத்துக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து ஜீவித்தார்கள் என்று சிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் இது தவறான உபதேசம். புதிய ஏற்பாட்டுச் சபையில் பத்துக் கற்பனைகளில் ஒன்பது கற்பனைகளை மட்டுமே விசுவாசிகள் கடைபிடித்தார்கள். ஒய்வுநாள் பிரமாணம் முழுவதுமாக ஒதுக்கி வைக்கப்பட்டது. யூதருடைய ஒய்வுநாள் பிரமாணத்தை ஆசரிக்க வேண்டிய அவசியம் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு நியமிக்கப்படவில்லை. ஆகையினால் ஆதித் திருச்சபையின் விசுவாசிகள் யூதருடைய ஒய்வுநாளை ஆசரிக்கவில்லை. மற்றவர்களையும், இதை ஆசரிக்குமாறு உபதேசம் பண்ணவும் இல்லை.(ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17). அவர்கள் வாரத்தின் முதலாம் நாளை ஒய்வுநாளாக ஆசரித்து அதைப் பரிசுத்தப்படுத்தினார்கள்.

12. சீனாய் மலையில் தேவன் மோசேயிடம் பத்துக்கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்பாக இவை செவி வழிசெய்தியாகப் பல சந்ததிகளுக்குக் கடந்து வந்திருக்கிறது என்று ஒருசிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். ஆனால் இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

13. மோசேயின் பிரமாணத்தின் இந்தப் பகுதி மட்டுமே இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டது (உபா 4:13; உபா 9:9-15; உபா 10:4). அதே சமயத்தில் அப்போஸ்தலர் பவுல் மோசேயின் பிரமாணத்தில் இந்தப் பகுதி மட்டுமே ஒழிந்துபோயிற்று என்று வலியுறுத்திக் கூறுகிறார் (2கொரி 3:6-15, கொலோ 2:14-17).

14. சடங்காச்சார பிரமாணங்கள் (ceremonial laws) கொடுக்கப்பட்ட அதே சமயத்தில் பத்துக் கற்பனைகளும் கொடுக்கப் பட்டிருக்கிறது (யாத் 19:1-23; யாத் 24:12-18; யாத் 25:40; யாத் 26:30; யாத் 27:8; யாத் 31:18; யாத் 32:1-19; யாத் 33:6; யாத் 34:1-32; லேவி 7:38; லேவி 25:1; லேவி 26:46; லேவி 27:34; எண் 3:1; எண் 15:22-23; எண் 28:6; எபி 8:5).

15. பத்துக் கற்பனைகளை மோசேயின் பிரமாணம் என்றும், தேவனுடைய பிரமாணம் என்றும் வேதாகமம் அங்கீகரிக்கிறது. தேவனுடைய பிரமாணம் இல்லையென்றால், அது மோசேயின் பிரமாணமாகவும் இராது. பிரமாணத்திற்கு வேதாகமத்தில் பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

16. கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் பத்துக் கற்பனைகளை மோசேயினுடைய பிரமாணத்தின் ஒரு பகுதியாகக் கூறியிருக்கிறார்கள். இதை தேவனுடைய பிரமாணம் என்று கூறும்போது அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு இது மாற்று உபதேசமாக இருக்கிறது (மத் 22:36-40=யாத் 20:1-6; மாற்கு 7:10= யாத் 20:12; ரோமர் 2:21-22; ரோமர் 7:7-16= யாத் 20:12-17, யோசு 7:11; யாத் 20:15)

17. வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்களை எழுதியிருக்கும் ஆசிரியர்கள் பத்துக் கற்பனைகளை மோசேயினுடைய பிரமாணத்தின் ஒரு பகுதி என்று அறிவித்திருக்கிறார்கள். (யோசு 1:8-9; நியா 3:4; 1இராஜா 2:3; 2இராஜா 18:6; 2இராஜா 21:8; 2இராஜா 23:25; 2நாளா 35:12; நெகே 1:7; நெகே 8:1; நெகே 10:29; மல் 4:4). ஒய்வுநாள் பிரமாணத்தை மோசேயே கொடுத்தார் என்று நெகேமியாவில் கூறப்பட்டிருக்கிறது. (நெகே 9:14).

18. தேவன் மோசேயோடும், இஸ்ரவேல் புத்திரரோடும் செய்துகொண்ட உடன்படிக்கையே பத்துக் கற்பனைகள் என்னும் உபதேசமும் உள்ளது. (யாத் 34:28; 2நாளா 5:10). மோசே உடன்படிக்கை புஸ்தகத்தை எடுத்து, அதைப் பிரதிஷ்டை பண்ணினார். இதில் பத்துக் கற்பனைகளும், மேலும் 115 கட்டளைகளும் உள்ளன (யாத் 24:7-8).

19. தேவனுடைய பிரமாணமும், மோசேயின் பிரமாணமும் நீதிநெறி பிரமாணம் **(moral law)** என்றும், சல்காச்சார பிரமாணம் **(ceremonial law)** என்றும் பிரிக்கப்படவில்லை. பத்துக் கற்பனைகள் கற்பலகைகளில் எழுதப்பட்டது. மற்றவை புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏற்ற வேளையில் மோசேயின் புஸ்தகத்தில் பத்துக் கற்பனைகளும், மற்ற எல்லாக் கட்டளைகளும் எழுதப்பட்டிருக்கிறது.

நீதிநெறி பிரமாணத்தில் வாழவேண்டிய முறையைப் பற்றி யாத் 20:18-23:33 ஆகிய வசனங்களில் பதினான்கு கட்டளைகள் உள்ளன. (யாத் 20:26; யாத் 21:2-11,22-23; யாத் 22:16-17,19)

பத்துக் கற்பனைகளில் மூன்று கற்பனைகள் மனுஷன் தேவனோடு வைத்திருக்க வேண்டிய ஐக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. யாத் 20:18-23:33 ஆகிய வசனங்களில் இதுபோன்று 35 கட்டளைகள் உள்ளன. (யாத் 20:23-26; யாத் 22:20,28-31; யாத் 23:13-19, 21-22,24-25,32-33). மோசேயின் பிரமாணத்தில் தெய்வீகச் சட்டங்கள் **(statutes)**, பிரமாணங்கள் **(judgments)**, நியமங்கள் **(ordinances)** ஆகியவை அடங்கியுள்ளன. மார்க்கச் சம்பந்தமான நியமங்களும் (யாத் 12:14; யாத் 13:10; எசே 46:14; 2கொரி 11:2) வாழும்முறை நியமங்களும் **(civil laws)** (யாத் 15:25-26; லேவி 18:1-30; லேவி 22:1-9; யோசு 24:20-25; 1சாமு 30:25; ஏசா 58:2) மோசேயின் பிரமாணங்களில் உள்ளன.

20. வேதாகமத்தில் கற்பனை என்று கூறப்பட்டிருப்பது பத்துக் கற்பனைகளை மட்டும் குறிக்காமல், அநேக கற்பனைகளைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் பத்துக் கற்பனைகள் என்னும் வாக்கியம் எல்லாக் கற்பனைகளையும் குறிப்பதில்லை. (யாத் 15:26; ஆதி 26:5; லேவி 4:2,13,22; லேவி 22:31; லேவி 27:34)

மத் 5:19; யோவான் 14:15-21; யோவான் 15:10; அப் 1:2; 2கொரி 7:19; 2கொரி 14:37; 1யோவான் 2:3-4; 1யோவான் 3:22-24; 1யோவான் 5:2-6; 2யோவான் 1:6; வெளி 12:17; வெளி 14:12; வெளி 22:14 ஆகிய வசனங்களில் கற்பனைகள் என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டின் கற்பனைகள் அனைத்தையும் குறிக்கும். இது பத்துக் கற்பனைகளைக் குறிப்பதில்லை.

புதிய ஏற்பாட்டிலுள்ள கற்பனைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பத்துக் கற்பனைகளில் ஒன்பது கற்பனைகள் புதிய ஏற்பாட்டில் அங்கிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஓய்வுநாள் கற்பனை மட்டும் அங்கீகரிக்கப்படவில்லை. (ரோமர் 14:5-6; கொலோ 2:14-17).

புறஜாதி தேசத்தார் மோசேயின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டும் என்று வேதாகமத்தில் எங்கும் உபதேசம்பண்ணப்படவில்லை. புறஜாதியார் ஒரு சில காரியங்களில் பங்குபெறக்கூடாது என்று மோசேயின் பிரமாணத்தில் அவர்கள் தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளாமல் பஸ்காவைப் புசிக்கக்கூடாது (யாத் 12:43,45)

2. பரிசுத்தமானவைகளைப் புசிக்கக் கூடாது. (யாத் 29:33; லேவி 22:10-13).

3. பரிசுத்த அபிஷேக எண்ணெயினால் அபிஷேகம் பண்ணிக்கொள்ளக்கூடாது. (யாத் 30:33).

4. ஆசரிப்புக்கூடார வேலையில் பங்குபெறக் கூடாது. அதற்கு அருகிலும் வரக்கூடாது. (எண் 1:51).

5. ஆசாரிய ஊழியம் செய்யக்கூடாது. (எண் 3:10,38).

6. தூபம் காண்பிக்கக்கூடாது (எண் 16:40).

7. ஆசாரியருடைய ஊழியத்தில் அவர்களுக்கு அருகில் போகக்கூடாது. (எண் 18:4,7).

8. இஸ்ரவேலருக்கு ராஜாவாக இருக்கக் கூடாது. (உபா 17:15).

9. வட்டி கொடுப்பதிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (உபா 23:20).

10. இஸ்ரவேலிலுள்ள விதவைகளைத் திருமணம் செய்யக்கூடாது (உபா 25:5).

புறஜாதி தேசத்தார் மோசேயின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று வேதாகமம் எங்கும் உபதேசம் பண்ணவில்லை. மோசேயின் பிரமாணத்தில் அந்நியர் என்னும் வார்த்தை 80 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மோசேயின் பிரமாணத்தில் இஸ்ரவேல் புத்திரரும், அந்நியரும் சமமானவர்கள் என்று எங்கும் கூறப்படவில்லை. தேவன் புறஜாதியாரைப் பழைய பிரமாணத்தின் பிரகாரம் நியாயந்தீர்க்கிறார். (ஆதி 2:17; ரோமர் 5:12-21)

புதிய ஏற்பாட்டிலுள்ள கிருபையின் பிரமாணம் மோசேயின் பிரமாணத்தில் ஒரு பகுதியல்ல. புதிய பிரமாணத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் எல்லோருமே இரட்சிக்கப்படுகிறார்கள் (ரோமர் 4; கலா 3:3-16; எபி 4:1-2; எபி 11:1-40). புறஜாதியார் நோவாவின் உடன்படிக்கைக்கும், (ஆதி 9) ஆபிரகாமின் உடன்படிக்கைக்கும் (ஆதி 12:1-3; ரோமர் 4) கீழ்ப்பட்டிருக்கிறவர்கள். இவர்கள் மோசேயின் உடன்படிக்கைக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

இஸ்ரவேலரின் பிரமாணங்களில் புறஜாதியாருக்கு பங்கில்லை. இதன் விவரம் வருமாறு :

1. இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தபோது, அவர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் மட்டுமே சென்றார். (மத் 10:5-6; மத் 15:24)

2. யூதர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தார்கள். ஆகையினால் இயேசு கிறிஸ்து யூதரிடமிருந்து தேவனுடைய ராஜ்ஜியத்தை எடுத்து அதைப் புறஜாதியாருக்குக் கொடுத்தார். மோசேயின் பிரமாணத்தைப் புறஜாதியாருக்குக் கொடுக்கவில்லை. (மத் 21:33-46; யோவான் 10:16).

3. புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்தினால் புறஜாதியாரும் இஸ்ரவேலரோடு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். மோசேயின் பிரமாணத்தினால் புறஜாதியார் ஆசீர்வதிக்கப்படவில்லை. (யோவான் 3:16; ரோமர் 1:16; ரோமர் 11:1-25; 2கொரி 12:13; கலா 3:28-29; எபே 3:1-6; கொலோ 3:11).

4. புறஜாதியார் விசுவாசத்தினால் யூதராக முடியாது. (ரோமர் 2:28-29; ரோமர் 9:6-7).

5. மோசேயினுடைய பிரமாணத்தின் பிரகாரம் புறஜாதியார்மீது இஸ்ரவேலருக்கு அநேக சிலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. (ரோமர் 2:17-29; ரோமர் 3:1-2; ரோமர் 9:4-5). புதிய ஏற்பாட்டிலும், சுவிசேஷத்திலும் பட்சபாதம் எதுவுமில்லை. (ரோமர் 10:9-21; ரோமர் 11:1-25; 2கொரி 12:13; கலா 3:28; கொலோ 3:11).

6. புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருக்கவில்லை என்று பவுல் கூறியிருக்கிறார். (ரோமர் 2:12-16).

7. இஸ்ரவேலின் வாக்குத்தத்தங்களுக்கும், உடன்படிக்கைகளுக்கும் புறஜாதியார் அந்நியராகவும், பரதேசிகளாகவும் இருப்பதாக அப்போஸ்தலர்கள் உபதேசம் பண்ணியிருக்கிறார்கள் (எபே 2:12,19).

முதலாவது ஆலோசனைச் சங்கம் கூடியபோது, புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டாமென்றும், ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டாமென்றும், மோசேயின் பிரமாணத்தில் எதிலும் பங்குபெற வேண்டியதில்லையென்றும் அப்போஸ்தலர்கள் தீர்மானம் பண்ணினார்கள். (அப் 15:1-41).

பரிசுத்த வேதாகமத்தில் பிரமாணத்திற்கு வேறு சில மாற்றுப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஒரு நியாயப்பிரமாணம் "a law" (உபா 33:2-4; சங் 78:5)

2. நியாயப்பிரமாணம் "the law" (யோசு 1:7-8; யோசு 8:31-35; யோசு 22:5; 2இராஜா 17:13; மத் 5:17; மத் 7:12; மத் 11:13; மத் 23:23; யோவான் 1:17; எபி 7:11-10:28);

3. என் (தேவனுடைய) போதகம் "My (God's) law" (சங் 89:30-31; நீதி 3:1; நீதி 7:2; எசே 22:26; ஓசி 8:12-13);

4. கர்த்தருடைய வேதம் "the law of the Lord" (எஸ்றா 7:10; லூக்கா 2:22-39);

5. தேவனுடைய கர்த்தரின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் "the book (not stones) of the law of God" (யோசு 24:25-26; 2கொரி 17:6-9; நெகே 8:1-13; நெகே 9:3; நெகே 10:29);

6. மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் "the book of the law of Moses" (யோசு 8:30; யோசு 23:6; 2இராஜா 14:6; 2நாளா 34:14-19; நெகே 8:1)

7. தேவனுடைய நியாயப்பிரமாணமும், மோசேயின் நியாயப்பிரமாணமும் "the law of God and the law of Moses" (யோவான் 1:17; யோவான் 7:19; யோவான் 8:5; அப் 6:11,14; அப் 13:39; அப் 15:5; ரோமர் 7:22-25; எபி 10:28)

8. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம், "the law of commandments and the hand writing of ordinances" (எபே 2:15; கொலோ 2:14-17)

9. நியாயப்பிரமாணமும், கற்பனையும் "the law and commandment" (2இராஜா 17:34)

10. திட்டங்களும், முறைமைகளும், நியாயப்பிரமாணங்களும், கற்பனைகளும் "the statutes, and the ordinances, and the law, and the commandment" (2இராஜா 17:37)

11. நியாயப்பிரமாணத்தின்படி என் (தேவனுடைய) கற்பனைகளும், என் கட்டளைகளும் "My (God's) commandments, and My statutes, according to all the law" (2இராஜா 17:13; 2இராஜா 21:8)

12. நியாயப்பிரமாணம் முழுவதும் **"the whole law"** *(கலா 5:3)*

13. மோசே **"Moses"** *(லூக்கா 16:29,31; லூக்கா 24:27,44; அப் 15:21; அப் 26:22; அப் 28:23)*

14. பழைய ஏற்பாடு **"the old testament"** *(2கொரி 3:6-15; எபி 8: 6-9:10).*

மோசேயின் பிரமாணத்தில் கற்பனைகள், தெய்வீகக்கட்டளைகள், நியமங்கள் ஆகியவை அடங்கியிருக்கின்றன. *(2கொரி 33:8)* நியாயப்பிரமாணம் ஒழிக்கப்பட்டபோது இவையெல்லாமே ஒழிந்துபோயிற்று. *(2கொரி 3:6-15; கலா 3:19-25; கலா 4:21-31; எபி 7:11-10:18).* கீழே சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் நியமங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

1. லேவி 1-29 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் திருமணம், பாலியல் உறவு ஆகியவற்றின் கட்டளைகள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன *(லேவி 18:30)*

2. தீட்டுக்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவது தொடர்பான சரீர ஆரோக்கிய பிரமாணங்கள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன *(லேவி 22:8-9)*

3. மார்க்கக் கட்டளைகள் - பத்துக் கற்பனைகளில் முதலாம் கற்பனையும், இரண்டாம் கற்பனையும் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. *(யோசு 24:20-25)*

4. யுத்தத்தில் வெற்றி பெறும்போது கொள்ளைப் பொருட்களைப் பங்கிடுவது தொடர்பான நியமங்கள் *(1சாமு 30:21-26)*

5. நீதியின் சட்டங்கள் நீதியின் பிரமாணங்கள் என்று அழைக்கப் படுகின்றன. *(ஏசா 58:2)*

6. தேவனுடைய ஆலயத்திற்குக் கொடுப்பது சம்பந்தமான மார்க்கக் கட்டளைகள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. *(நெகே 10:32)*

7. மார்க்கத்தோடு தொடர்பில்லாத அரசாங்கத்தின் சட்டங்கள் நியமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. *(ரோமர் 13:2; கொலோ 2:14,20; 1பேதுரு 2:13)*

பிரமாணங்கள் **"Judgments"** என்னும் வார்த்தையும், கற்பனைகள் **"commandments,"** என்னும் வார்த்தையும் ஒரே பொருளைக் கொடுக்கக்கூடியவை. யாத் 20:1-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்துக் கற்பனைகளுக்கும், யாத் 21:1-23:33; யாத் 24:3; லேவி 18:4-5,26 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத் தீர்ப்புக்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

எபிரெய மொழியில் நியாயத்தீர்ப்பு என்பதற்கான எபிரெய வார்த்தை "மிஸ்பத்" **(mishpat)** என்பதாகும். வேதாகமத்திலுள்ள நியாயத் தீர்ப்புக்களைக் கற்பனைகளைப் போன்றே பாவிக்க வேண்டும் *(லேவி 18:4-5,26; லேவி 19:37; லேவி 20:22; லேவி 25:18)* மற்ற கற்பனைகளைப் போன்றே நியாயத்தீர்ப்புக்களும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது *(உபா 7:11; 1இராஜா 8:58).*

தெய்வீகக் கட்டளைகளும் **(Statutes)** அதிகாரப்பூர்வமான நியமங்களாகும். தேவனுடைய பிரமாணங்களை வலியுறுத்திக் கூறுவதற்குத் தெய்வீகக் கட்டளைகள் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(யாத் 15:26; யாத் 18:16; லேவி 10:11; லேவி 18:5,26).* ஒரு கற்பனையைக் குறிப்பதற்கு நியமங்கள் என்னும் வார்த்தையும், தெய்வீகக் கட்டளை என்னும் வார்த்தையும் மாறிமாறி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(லேவி 26:46; உபா 4:1,5,8; உபா 5:1, உபா 5:31; உபா 6:1-2; உபா 7:11)*

எல்லாக் கற்பனைகளும் கட்டளைகளாகக் கூறப்பட்டிருக்கிறது. (உபா 4:13; உபா 6:25; உபா 27:1); உடன்படிக்கையும் கட்டளையிடப் பட்டிருக்கிறது (உபா 4:13); தெய்வீகக் கட்டளையும் கட்டளையிடப் பட்டிருக்கிறது. (உபா 4:14; உபா 6:17); பிரமாணங்களும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. (உபா 4:14; உபா 6:20); சாட்சிகளும் கட்டளையிடப் பட்டிருக்கிறது. (உபா 6:17,20); நியமங்களும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. (எண் 19:2; எண் 31:21); கர்த்தருடைய எல்லா வார்த்தைகளும் கட்டளைகளாகவே கூறப்பட்டிருக்கிறது. (யாத் 35:1).

சீனாய் மலையிலும், ஆசரிப்புக் கூடாரத்திலும், மற்றும் பல இடங்களிலும் கூறப்பட்ட சட்டங்கள் அனைத்துமே கற்பனைகளாகும். (யாத் 34:32; லேவி 7:38; லேவி 25:1; லேவி 26:46; லேவி 27:34).

கர்த்தர் மனுபுத்திரரோடு பல வழிகளில் பேசுகிறார். "தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருந்துகிறவரல்லவே" (யோபு 33:14). அவர் பத்துக்கட்டளைகளை கொடுக்கும்போது பேசியதுபோல, மற்ற சந்தர்ப்பங்களில் அதுபோல பேசியதில்லை.

கர்த்தர் மனுஷருக்கு பத்து கட்டளைகளை கொடுப்பதற்கு முன்பாகவே, இந்தக் கட்டளைகளின் வார்த்தைகளெல்லாம் மனுஷருடைய இருதயங்களில் இயற்கையாகவே எழுதப்பட்டிருந்தது. ஆனால் மனுஷனுடைய பாவசுபாவத்தினால், இந்த வார்த்தைகள் மனுஷருடைய இருதயத்தில் மங்கிப்போயிற்று. இந்த வார்த்தைகளில் பல அழிந்தும் போயிற்று.

கர்த்தர் மனுக்குலத்திற்கு கொடுத்திருக்கிற பத்துக்கட்டளைகள், நம்முடைய நன்மைக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை நமக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். ஆனால் மனுஷருடைய பாவம், பிரயோஜனமாயிருக்கிற பத்துக்கட்டளைகளை அழித்துப்போடுகிறது. ஆகையினால் கர்த்தர் இந்தக் கட்டளைகளை மனுப்புத்திரருக்கு மறுபடியும் கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பத்துக்கட்டளைகளை கொடுப்பதற்கு முன்பாக, "உன் தேவனாகிய கர்த்தர் நானே" (யாத் 20:2) என்று தம்மைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தரே பத்துக்கட்டளைகளின் ஆசிரியர். அவரே இந்தக் கட்டளைகளை இயற்றியவர். கர்த்தருக்கு பத்துக்கட்டளைகளின்மீது தெய்வீக அதிகாரமுள்ளது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர்" என்று சொல்லுகிறார். இந்த நிகழ்ச்சி வேதாகமத்தில் மிகவும் முக்கியமானதாகும். பஞ்சாகமத்தில் மட்டும் 44 தடவைகள் இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தர் நானே **(I am the Lord) (Jehovah)** (ஆதி 15:7; யாத் 6:2; லேவி 11:45; எண் 3:13; 1இராஜா 20:13; ஏசா 42:8; எரே 9:24; எசே 6:7; மல் 3:6).

2. நான் சர்வ வல்லமையுள்ள தேவன் **(I am the Almighty God)** (ஆதி 17:1).

3. நான் ஆபிரகாமுடைய தேவன் **(I am the God of Abraham)** (ஆதி 26:24; ஆதி 28:13).

4. பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே. **(I am the God of Bethel)** (ஆதி 31:13).

5. நான் சர்வவல்லமையுள்ள தேவன் **(I am God Almighty)** (ஆதி 35:11).

6. நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன் **(I am God, the God of thy father)** (ஆதி 46:3; யாத் 3:6).

7. நான் இருக்கிறவராக இருக்கிறேன் **(I am that I am)** (யாத் 3:14).

8. நான் இருக்கிறேன் (I am) (யாத் 3:14).

9. உங்கள் தேவனாகிய கர்த்தர் (I am the Lord your God) (யாத் 6:7; லேவி 11:44; எண் 10:10; நியா 6:10; எசே 20:5; யோவே 2:27).

10. உன் தேவனாகிய கர்த்தர் நானே (I am the Lord thy God) (யாத் 20:2; உபா 5:6; சங் 81:10; ஏசா 43:3; ஓசி 13:4).

11. நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர் (I am the Lord their God) (லேவி 26:44; எசே 28:26; சக 10:6).

12. நான் நானே அவர் (I am He) (உபா 32:39; ஏசா 41:4; ஏசா 43:10).

13. நானே தேவன் (I am God) (சங் 46:10; ஏசா 43:12; ஏசா 45:22; ஓசி 11:9).

14. நான் உன் தேவன் (I am thy God) (ஏசா 41:10).

15. நான் உங்கள் பரிசுத்தராகிய கர்த்தர் (I am the Lord, your Holy One) (ஏசா 43:15).

16. நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே (I am the first, and I am the last) (ஏசா 44:6; ஏசா 48:12).

17. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் (I am the Lord thy God, the Holy One of Israel) (ஏசா 43:3).

18. கர்த்தரும், யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும், உன் மீட்பரும் (I the Lord am thy Saviour and thy Redeemer, the mighty One of Jacob) (ஏசா 49:26).

19. நானே சாட்சி (I am a witness) (எரே 29:23).

20. நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் (I am the Lord, the God of all flesh) (எரே 32:27).

21. கர்த்தராகிய ஆண்டவர் (I am the Lord God) (எசே 13:9; எசே 23:49; எசே 24:24; எசே 28:24; எசே 29:16).

22. நான் உங்கள் தேவன் (I am your God) (எசே 34:31).

23. நான் மகத்துவமான ராஜா (I am a Great King) (மல் 1:14).

24. நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன். (I am the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob) (மத் 22:31; மாற்கு 12:26).

25. நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன். (I am the God of thy fathers, the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob) (அப் 7:32).

புதிய ஏற்பாட்டில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி சொன்ன பல்வேறு சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. ஜீவஅப்பம் நானே (I am the bread of life) (யோவான் 6:35,48).

2. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம் (I am the living bread) (யோவான் 6:51).

3. நான் உலகத்தின் ஒளி (I am the light of the world) (யோவான் 8:12).

4. நானே அவர் (I am He) (யோவான் 8:24,28; யோவான் 13:19).

5. நான் இருக்கிறேன் (I am) (யோவான் 8:58).

6. நானே ஆடுகளுக்கு வாசல் (I am the door of the sheep) (யோவான் 10:7).

7. நானே வாசல் (I am the door) (யோவான் 10:9).

8. நானே நல்ல மேய்ப்பன் (I am the good shepherd) (யோவான் 10:11,14).

9. நானே தேவனுடைய குமாரன் (I am the Son of God) (யோவான் 10:36).

10. நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன் (I am the resurrection, and the life) (யோவான் 11:25).

11. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் (I am the way, the truth, and the life) (யோவான் 14:6).

12. நான் மெய்யான திராட்சச்செடி (I am the true vine) (யோவான் 15:1).

13. இயேசு நானே (I am Jesus) (அப் 9:5; அப் 22:8; அப் 26:15).

14. நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் (I am Alpha and Omega, the beginning and the ending) (வெளி 1:8; வெளி 21:6; வெளி 22:13).

15. நான் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன் (I am the first and the last) (வெளி 1:11,17; வெளி 22:13).

16. சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் (I am He that liveth) (வெளி 1:18).

17. நான் தாவீதின் வேரும், சந்ததியுமாயிருக்கிறேன் (I am the root and offspring of David) (வெளி 22:16).

18. நான் பிரகாசமுள்ள விடிவெள்ளியாய் இருக்கிறேன். (I am the bright and morning star) (வெளி 22:16).

பத்துக்கற்பனைகளைப்பற்றி புதிய உடன்படிக்கையிலும், பழைய உடன்படிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. யாத் 20:3 ஆவது வசனத்தை மத் 22:37; மாற்கு 12:30; லூக்கா 10:27 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

2. யாத் 20:4-6 ஆகிய வசனங்களை அப் 15:20,29; அப் 21:25; ரோமர் 1:18-32; ரோமர் 2:22; 2கொரி 10:7,14; கலா 5:20; கொலோ 3:5; 1யோவான் 5:20 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

3. யாத் 20:7 ஆகிய வசனத்தை மத் 12:31-32; மாற்கு 3:28-29; மாற்கு 7:22; லூக்கா 12:10; கொலோ 3:8 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

4. யாத் 20:8-11 ஆகிய வசனங்களை ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

5. யாத் 20:12 ஆகிய வசனங்களை மத் 15: 4; மத் 19:19; மாற்கு 7:10; மாற்கு 10:19; லூக்கா 18:20; எபே 6:2; கொலோ 3:20; 2தீமோ 3:2 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

6. யாத் 20:13 ஆகிய வசனங்களை மத் 5:21; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9; யாக் 2:11; 1பேதுரு 4:15; 1யோவான் 3:15 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

7. யாத் 20:14 ஆகிய வசனங்களை மத் 5:27-32; மத் 19:9,18; மாற்கு 10:11-12, 19; லூக்கா 16:18; லூக்கா 18:20; ரோமர் 2:22; ரோமர் 13:9; கலா 5:19; யாக் 2:11 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

8. யாத் 20:15 ஆகிய வசனங்களை மத் 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 2:21; ரோமர் 13:9; எபே 4:28 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

9. யாத் 20:16 ஆகிய வசனங்களை மத் 15:19; மத் 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

10. யாத் 20:17 ஆகிய வசனங்களை மாற்கு 7:22; லூக்கா 12:15; ரோமர் 1:29; ரோமர் 7:7; ரோமர் 13:9; 2கொரி 6:10; எபே 5:3-5; கொலோ 3:5; 1தீமோ 3:3; 1தெச 2:5; எபி 13:5 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே" (யாத் 20:2) என்று சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" (யாத் 20:3) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெளிவாகச் சொல்லுகிறார்.

பத்துக்கட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகளும் கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமானது. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருடைய தேவனாகயிருக்கிறார். ஆகையினால் அவர் மாத்திரமே இஸ்ரவேல் ஜனத்தாருடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும், ஆராதனைகளுக்கும் பாத்திரராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். தம்முடைய கட்டளைகளுக்கெல்லாம், இஸ்ரவேல் ஜனத்தார் கீழ்ப்படிய வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். அவர்கள் கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு தண்டனை கிடைக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இதன் மூலமாக அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உடன்படிக்கையின் தேவனாகயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், ஞானஸ்நானத்தின் மூலமாக, நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்துகொள்கிறோம். இயேசுகிறிஸ்துவானவரே நம்முடைய கர்த்தர் என்பதை, நம்முடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அங்கீகரித்து, அறிக்கை செய்கிறோம்.

நாம் கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருக்கிறோம். அவருடைய உபதேசத்திற்கு விசுவாசிகளாகிய நாம் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், நாம் கிறிஸ்துவானவருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை என்றும், நாம் கிறிஸ்துவோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறிவிட்டோம் என்றும் அர்த்தமாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். கர்த்தரே அவர்களை மீட்டுக்கொண்டவர். ஆகையினால் அவர்களை ஆளுகை செய்யும் உரிமையும் அதிகாரமும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு உண்டு.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதினால், அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் இனிமேல் எகிப்தியருக்கு அடிமைகளல்ல. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகைகளாகிய நம்மை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு இரட்சித்திருக்கிறார். ஆகையினால் நாம் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவேண்டும். அவரை ஆராதிக்கவேண்டும்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளையும் இரண்டு கற்பலகைகளில் எழுதியிருக்கிறார். முதல் நான்கு கட்டளைகளும் முதலாவது பலகையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த நான்கு கட்டளைகளும், நாம் கர்த்தரை ஆராதிக்கவேண்டிய முறைகளைப்பற்றி சொல்லுகிறது.

நம்முடைய உற்றார் உறவினர்கள், அயல் வீட்டுக்காரர்கள் ஆகியோரை நாம் நேசிப்பதற்கு முன்பாக, நம்மை சிருஷ்டித்த கர்த்தரை நாம் நேசிக்கவேண்டும். கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டியது நம்முடைய கடமை. நம்முடைய நீதிகளையும், பிறருக்கு நாம் செய்யும் உதவிகளையும், கர்த்தருக்கு கீழ்ப்படிந்து செய்யவேண்டும். கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் நம்மால் எந்த நல்ல காரியத்தையும் செய்ய முடியாது. நாம் எதைச் செய்தாலும் கர்த்தரை கனம்பண்ணும் வண்ணமாகவே செய்யவேண்டும். அப்போதுதான் நம்முடைய நற்கிரியைகள் கர்த்தருடைய சமுகத்தில் அங்கீகரிக்கப்படும்.

நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லையென்றால், நம்முடைய சகோதரர்களுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கமாட்டோம். தாங்கள் கர்த்தருக்கு பொய்யர்களாக இருப்போமென்றும், ஆனாலும் தங்கள் சகோதரருக்கு தாங்கள் உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்றும் ஒருசிலர் சொல்லுகிறார்கள். இவர்களுடைய வார்த்தைகளில் உண்மையில்லை. இது மாய்மாலமான வார்த்தை. கர்த்தர்மீது அன்புகூராமல், மனுஷர்மீது மெய்யான அன்பு கூரமுடியாது.

**முதலாவது கட்டளை :** நாம் யாரை ஆராதிக்கவேண்டுமென்று பத்துக்கட்டளைகளில் முதலாவது கட்டளை தெளிவாக சொல்லுகிறது. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" (யாத் 20:3) என்பதை கர்த்தர் தம்முடைய முதலாவது கட்டளையாக இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலும், அந்த தேசத்திற்கு அருகாமையிலுள்ள மற்ற தேசங்களிலும் ஏராளமான தெய்வங்கள் இருக்கிறது. அவர்கள் சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு விநோதமான தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள். இவையெல்லாம் நூதன தெய்வங்களாக இருக்கிறது. இவை மனுஷரால் உண்டாக்கப்பட்டவை.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவரே நம்மை சிருஷ்டித்தவர். நம்முடைய துதி கனம், மகிமை அனைத்தையும் கர்த்தருக்கு மாத்திரமே செலுத்தவேண்டும். ஆனால் மனுஷனோ கர்த்தருக்கு செலுத்த வேண்டிய மகிமையை, ஒரு சில சிருஷ்டிகளுக்கு செலுத்தி விடுகிறான். இது கர்த்தருக்கு விரோதமான பாவம்.

மனுஷனுடைய மனதிலே பெருமை இருக்கிறது. அவனுடைய பெருமையே அவனுக்கு ஒரு விக்கிரகமாக மாறிவிடுகிறது. மனுஷனுடைய குணத்திலே பேராசை இருக்கிறது. மனுஷனுடைய பேராசை பணத்தை அவனுக்கு தெய்வமாக ஆக்குகிறது. ஒரு சிலர் போஜனபிரியராயிருக்கிறார்கள். போஜனம் அவர்களுக்கு தெய்வமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும் மகிமையையும், தங்களுடைய இருதயத்தின் பெருமைக்கும், பண ஆசைக்கும், பெருந்தீனிக்கும் கொடுக்கிறார்கள்.

பொருளாசைக்காரருக்கு, கர்த்தரைவிட உலகப்பிரகாரமான பொருட்களே பெரிதாயிருக்கும். அவர்கள் கர்த்தரை நம்புவதற்கு பதிலாக தங்கள் ஐசுவரியத்தை நம்புவார்கள். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதற்கு பதிலாக, தங்களுடைய ஐசுவரியத்திலே சந்தோஷமாயிருக்கவேண்டுமென்று முயற்சி செய்வார்கள்.

நாம் கர்த்தரை மாத்திரமே அதிகமாய் நேசிக்கவேண்டும். அவருக்கு மாத்திரமே பயப்படவேண்டும். அவரை மாத்திரமே சேவிக்கவேண்டும். நாம் கர்த்தரில் மாத்திரமே சந்தோஷமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரை மாத்திரமே சார்ந்து ஜீவிக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு பயப்படாமல், வேறு எதற்காவது அதிகமாக பயப்பட்டால், அதுவே நமக்கு விக்கிரகமாகயிருக்கும். நாம் கர்த்தரை நேசிக்காமல், கர்த்தரைவிட வேறு எதையாவது அதிகமாய் நேசித்தால் அதுவும் நமக்கு விக்கிரகமாகயிருக்கும்.

புறஜாதி ஜனங்கள் கல்லினாலும், மண்ணினாலும், மரத்தினாலும் விக்கிரகங்களை செய்கிறார்கள். கர்த்தருடைய ஜனம் ஒருவேளை இப்படிப்பட்ட விக்கிரகங்களை செய்யாமலிருக்கலாம். ஆனாலும் அவர்கள் தங்களுடைய மனதிற்குள்ளே பெருமை, பேராசை, பொருளாசை போன்ற விக்கிரகங்களை செய்து, அவற்றை ஆராதிப்பார்கள். கர்த்தரை ஆராதியாமல் இப்படிப்பட்ட காரியங்களை ஆராதிக்கும்போது, இவர்களும் புறஜாதியாரைப்போல, விக்கிரகாராதனைக்காரராகவே இருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய முதலாவது கட்டளையை "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்று தெளிவாகவும், திட்டமாகவும் சொல்லுகிறார். நாம் கர்த்தருக்கு தெரியாமல், மறைவாக, இரகசியமாக எந்த விக்கிரகத்தையும் ஆராதிக்க முடியாது. கர்த்தருக்கு தெரியாத இரகசியம் எதுவுமில்லை. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் சகலவற்றையும் அறிந்திருக்கிறவர். கர்த்தர் மனுஷருடைய இருதயங்களின் நினைவுகளையும் அறிந்திருக்கிறார்.

மனுஷன் கர்த்தரையல்லாமல் வேறே தேவர்களை ஆராதிக்கும்போது, அவன் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். கர்த்தர் நம்முடைய பாவங்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடமாட்டார். மனுஷருடைய பாவங்களெல்லாம் கர்த்தருடைய பார்வையில் பிரத்தியட்சமாயிருக்கும்.

**இரண்டாவது கட்டளை :** கர்த்தர் இரண்டாவது கட்டளையாக தம்மை ஆராதிக்கும் பிரமாணங்களை சொல்லுகிறார். நாம் கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பது இரண்டாவது கட்டளையில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தரை ஆராதிப்பதற்காக, ஒரு விக்கிரகத்தை செய்து, அதை ஆராதிக்கக்கூடாது.

"மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" (யாத் 20:4,5) என்று கர்த்தர் தம்முடைய இரண்டாவது கட்டளையை சொல்லுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் நாம் ஆராதிக்கக்கூடாது என்று ஒரு சில காரியங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மரம், கல், உலோகம் ஆகியவற்றால் செதுக்கப்பட்ட விக்கிரகம் (யாத் 20:4; உபா 4:15-16)

2. ஆண் அல்லது பெண்ணுக்கு ஒப்பாயிருக்கும் சொரூபம். (யாத் 20:4; உபா 4:16)

3. மிருகத்தின் சொரூபம். (உபா 4:17)

4. பறவைகளின் சொரூபம் (உபா 4:17)

5. தரையில் ஊரும்பிராணிகளின் சொரூபம் (உபா 4:18; ரோமர் 1:23)

6. பூமியின்கீழ் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான சொரூபம் (யாத் 20:4)

7. தண்ணீரில் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான மச்சத்தின் சொரூபம் (யாத் 20:4; உபா 4:18)

8. வானத்தில் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான சொரூபம் (யாத் 20:4; ரோமர் 1:23)

9. சூரியன் (உபா 4:19; எசே 8:16)

10. சந்திரன் (உபா 4:19)

11. நட்சத்திரங்கள் ( உபா 4:19)

12. பரலோகத்தின் சேனைகள் (யாத் 20:4; உபா 4:19; 2இராஜா 17:16; 2இராஜா 21:3; 2நாளா 33:3)

கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார். கர்த்தர் எரிச்சலுள்ள தேவன் என்று வேதாகமத்தில் 10 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யாத் 20:5; யாத் 34:14; உபா 4:24; உபா 5:9; உபா 6:15; யோசு 24:19; எசே 39:25; யோவே 2:18; சக 1:14; சக 8:2). எரிச்சலில் பக்தியுள்ள எரிச்சல் என்றும் **(godly jealousy)** (2கொரி 11:2), பக்தியற்ற எரிச்சல் **(ungodly)** (நீதி 6:34; உன் 8:6) என்றும் வேறுபாடு உள்ளது.

கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது நமக்கு ஆசீர்வாதமும், அவருடைய கட்டளைகளை மீறும்போது நமக்கு தண்டனைகளும் கொடுக்கப்படும். கர்த்தருடைய பத்துக்கட்டளைகளில், அந்தக் கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையைக் குறித்து எச்சரிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த எச்சரிப்புக்களின் விவரம் வருமாறு :

1. என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (யாத் 20:5)

2. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார் (யாத் 20:7)

3. ஆயுசுநாட்கள் குறைந்துபோகும். (யாத் 20:12)

பத்துக்கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளின் விவரம் வருமாறு :

1. வேறே தேவர்களை ஆராதிக்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:3; லேவி 18:21-29; லேவி 20:1-6; உபா 13; உபா 17: 2-7; உபா 18:20-22; உபா 30:15-19). இந்தப் பாவம் செய்கிறவர்களுடைய பெயர்களைத் தேவன் தம்முடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவார். (யாத் 32:30-33).

2. விக்கிரகங்களைச் செய்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:4-6; உபா 13; உபா 17:2-7; உபா 18:20-22; உபா 27:15; உபா 30:15-19; கலா 5:19-21). இந்தப் பாவம் செய்கிறவர்களுடைய பெயர்களைத் தேவன் தம்முடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவார். (யாத் 32:30-33; **cp.** சங் 69: 25-28; 2கொரி 6:9-10; கலா 5:19-21; கொலோ 3:5-6; வெளி 3:5; வெளி 22:18-19).

3. தேவதூஷணம் சொல்லுகிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:7; லேவி 24:10-16,23; எண் 15: 30-31; மத் 12:31-32; எபி 10:29).

4. ஒய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்குகிறவர்களுக்கும், ஒய்வுநாளில் வேலை செய்கிறவர்களுக்கும் மரண தண்டனை (யாத் 20: 8-11; யாத் 31:14-15; யாத் 35:2-3; எண் 15:33-36). புதிய ஏற்பாட்டில் இதற்குத் தண்டனை கொடுக்கப்பட வில்லை. (ரோமர் 14:5-6)

5. பெற்றோரைக் கனம்பண்ணாதோருக்கு மரணதண்டனை. (யாத் 20:12; யாத் 21:15,17; லேவி 20:9; உபா 21:18-23; உபா 27:16; ரோமர் 1:29-32; எபே 6: 2-3).

6. கொலைசெய்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:13; யாத் 21:12, 14-15,23; லேவி 24:17,21; உபா 27:24-25; மத் 5:21-22; கலா 5:19-21; 1யோவான் 3:15).

7. விபசாரம் செய்கிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:14; லேவி 18:20; லேவி 20:10-22; உபா 22:20-30; உபா 27:20-23; ரோமர் 1:29-32; கலா 5:19-21).

8. களவுசெய்கிறவர்களுக்கு மரண தண்டனை (உபா 24:7); யாத் 20:15; யாத் 22:1-12; 2கொரி 6:8-10).

9. பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களுக்கு மரண தண்டனை (யாத் 20:16) உபா 19:16-21, வெளி 21:8,27; வெளி 22:15)

10. இச்சிக்கிறவனுக்கு மரணதண்டனை என்று கூறப்படவில்லை. (யாத் 20:17) ஆனாலும் யோசு 7:21-26 ஆகிய வசனங்களில் இச்சித்ததின் விளைவாக மரணதண்டனை கிடைத்தது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். தாயாருடைய அக்கிரமம் என்று இங்கு கூறப்படவில்லை. ஏவாளின் அக்கிரமம் அல்ல. ஆதாமின் அக்கிரமமே மனுக்குலத்திற்குப் பாவத்தைக் கொண்டுவந்தது. தகப்பன் என்பவன் தனி மனுஷன் மட்டுமல்ல. அவன் தன் சந்ததிக்குப் பிரதிநிதியாக இருக்கிறான்.

தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினால் சாபமும், அவனுக்கும், அவன் சந்ததிக்கும் வரும். (ஆதி 2:17; ஆதி 3:1-24; ரோமர் 5:12-21; 2கொரி 15:21-22,45-48). தந்தையின் மூலமாகவே பாவம் தொடரும் என்றும், தாயாரின் மூலமாக பாவம் தொடராது என்றும் வேதம் கூறுகிறது. (யாத் 20:5; யாத் 34:7; லேவி 26:39-40; எண் 14:18; உபா 5:9) ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து கன்னிமரியாளின் வயிற்றில் பிறந்தார். பத்துக் கற்பனைகளைப் பற்றி கூறப்பட்டிருக்கும் இரண்டு அட்டவணைகளிலும், இந்த வாக்கியம் கூறப்பட்டிருக்கிறது (யாத் 20:5; உபா 5:9).

கர்த்தர் தம்முடைய கட்டளைகளை சொல்லும்போது, ஒரு சில பிரதான அறிவிப்புக்களையும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (யாத் 20:5; யாத் 34:7; எண் 14:18; உபா 5:9)

2. ஏதோமியர், எகிப்தியர் ஆகியோரின் பிள்ளைகளில் மூன்றாம் தலைமுறை வரைக்கும் கர்த்தருடைய சபைக்குட்படலாகாது (உபா 23:7-8).

3. வேசிப்பிள்ளையும் கர்த்தருக்கு சபைக்கு உட்படலாகாது. அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. (உபா 23:2)

4. அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. (உபா 23:3)

5. யெகூவின் சந்ததியார் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள். (2இராஜா 10:30; 2இராஜா 15:12)

இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, இந்தக் கட்டளைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். அவர்களில் அநேகர் அதுவரையிலும் கர்த்தருக்கு ஒப்பாக விக்கிரகங்களை செய்து, சித்திரங்களை வரைந்து, அவற்றை ஆராதித்தார்கள். யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, கர்த்தருக்கு ஒப்பாக தாங்கள் செய்திருந்த விக்கிரகங்களையும், தாங்கள் வரைந்திருந்த சித்திரங்களையும் அழித்துப்போட்டார்கள்.

ரோமப்பேரரசின் படைவீரர்கள் இராயனுடைய உருவத்தை தங்களுடைய மார்புகளிலும், வஸ்திரங்களின் தோள்பட்டைகளிலும் பதக்கங்களாக அணிந்திருப்பார்கள். இவையெல்லாம் இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்புக்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" (மத் 24:15,16).

விக்கிரகங்கள் பொய்யை உபதேசிக்கும். அவை சத்தியத்தை பொய்யாக மாற்றும். "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்" (ரோம 1:25).

நாம் ஆராதிக்கிற தேவனுக்கு எந்த ஒரு உருவத்தையும் கொடுக்க முடியாது. கர்த்தர் ஆவியாயிருக்கிறார்.

"சித்திரக்காரனுக்கு அவன் செய்த சுரூபமும், ஊமையான தெய்வங்களை உண்டுபண்ணித் தான் உருவாக்கின சுரூபத்தை நம்பினவனுக்கு வார்க்கப்பட்டதும் பொய்ப்போதகம் பண்ணுகிறதுமான விக்கிரகமும் என்னத்துக்கு உதவும்?" (ஆப 2:18).

மனுஷன் தன்னுடைய மனதின் கற்பனையின்படி தேவனுக்கு ஒரு விக்கிரகத்தை செய்கிறான். அவன் மனுஷனாகயிருப்பதினால், தேவனை மனுஷரூபத்திலே விக்கிரகமாக உண்டுபண்ணுகிறான். நம்முடைய ஆராதனை ஆவிக்குரியதாக இருக்கவேண்டும். விக்கிரகங்கள் நம்முடைய ஆராதனையை ஆளுகை செய்யக்கூடாது. நம்முடைய ஆராதனையை விசுவாசத்தின் வல்லமை ஆளுகை செய்யவேண்டும். நம்முடைய கற்பனையின் வல்லமை ஆராதனையை ஆளுகை செய்யக்கூடாது. மனுஷருடைய கற்பனையின் வல்லமையினால் விக்கிரகங்கள் செய்யப்படுகிறது.

மனுஷன் ஏன் விக்கிரகத்தை உண்டாக்கக்கூடாது என்பதற்கும் கர்த்தர் காரணத்தை சொல்லுகிறார். "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஆராதனையில் எரிச்சலுள்ள தேவனாகயிருக்கிறார். அவர் வைராக்கியமுள்ளவர். கர்த்தர் விக்கிரகாராதனைக்காரருக்கு தண்டனைகளை நியமித்திருக்கிறார். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் கர்த்தரைப் பகைக்கிறார்கள். கர்த்தர் விக்கிரகாராதனைக்காரருடைய அக்கிரமங்களை, அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிப்பதாக சொல்லுகிறார்.

பெற்றோர் விக்கிரகாராதனைக்காரராயிருக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை தண்டிப்பார் என்று இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லக்கூடாது. பெற்றோர் விக்கிரகாராதனைக்காரராயிருந்து, அவர்களுடைய பிள்ளைகளும் விக்கிரகாராதனைக்காரர்களாயிருப்பார்களென்றால், கர்த்தர் பெற்றோரின் அக்கிரமங்களை அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிப்பார்.

பெற்றோர் விக்கிரகாராதனைக்காரராயிருந்து, அவர்களுடைய பிள்ளைகள் விக்கிரகங்களை ஆராதிக்காமல், கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பார்களென்றால், கர்த்தர் அவர்களுடைய பெற்றோரின் அக்கிரமங்களை, இந்தப் பிள்ளைகளிடத்தில் விசாரிக்கமாட்டார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, "அப்பா பிதாவே" என்று அழைக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவானவரே நம்முடைய பரமதகப்பனாகயிருக்கிறார். அவரிடத்தில் பாவமோ, அக்கிரமமோ இல்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம்.

நமக்கு மாம்சப்பிரகாரமான பெற்றோர் இருந்தாலும், அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்து, கர்த்தரைப் பகைத்து, அக்கிரமங்களை செய்தவர்களாகயிருந்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நமக்கு ஆவிக்குரிய பிதாவாகயிருக்கிறார். கிறிஸ்துவினிடத்தில் பாவமோ, அக்கிரமமோ, தேவனை பகைக்கும் சுபாவமோ இல்லை. கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்தவர். கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் அவருடைய ஆசீர்வாதத்திற்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம்.

பெற்றோர் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, அவர்கள் ஒருவேளை தங்கள் அறியாமையினால் இந்தப் பாவத்தை செய்திருக்கலாம். அவர்களுக்கு மெய்த்தேவனாகிய கர்த்தரைப்பற்றிய அறிவும், வெளிப்பாடும் இல்லாதிருக்கலாம்.

கர்த்தரோ அப்படிப்பட்ட பெற்றோரை உடனே தண்டித்துவிடமாட்டார். விக்கிரகாராதனைக்காரர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்று கர்த்தர் நீடியபொறுமையோடு காத்திருக்கிறார்.

ஒருவேளை விக்கிரகாராதனைக்காரர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் மரித்துப்போனால், அவர்களுடைய பிள்ளைகள் விக்கிரகங்களை ஆராதியாமல் தம்மை ஆராதிப்பார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஒருவேளை பிள்ளைகளும் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிப்பார்களென்றால், கர்த்தர் அப்போதும் அவர்களை தண்டியாமல், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று நீடிய பொறுமையோடு காத்திருப்பார்.

பிள்ளைகளுடைய மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும், அவர்களுடைய அக்கிரமங்களை விசாரியாமல் கர்த்தர் பொறுமையோடு காத்திருக்கிறார். அவர்களுடைய அக்கிரமத்தின் அளவு பூரணமாகும்போது, கர்த்தர் அவர்களை விசாரியாமல் விட்டுவிடமாட்டார். கர்த்தர் தம்மைப் பகைத்து, விக்கிரகங்களை ஆராதிக்கிற பிதாக்களுடைய அக்கிரமத்தை, பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பார் (யாத் 20:5).

கர்த்தர் விக்கிரகாராதனைக்காரர்களை உடனே தண்டியாமல் பொறுமையோடிருந்தாலும், அவர் நித்திய காலமாக அவர்கள்மீது பொறுமையோடிருக்கமாட்டார். ஏற்ற காலம் வரும்போது கர்த்தர் அவர்களை தண்டிக்க ஆரம்பிப்பார். விக்கிரகங்களை ஆராதியாமல், கர்த்தரை ஆராதிக்கிறவர்களுக்கு, அவருடைய ஆசீர்வாதம் கிடைக்கும்.

"என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய முதலாவது கட்டளை, நம்முடைய உள்ளான ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியினாலும் உண்மையினாலும் ஆராதிக்கவேண்டும். நம்முடைய உள்ளான ஆராதனையில் நமக்கு கர்த்தருக்குள் சந்தோஷம் இருக்கும். கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் ஆர்வம் நமக்குள் நிரம்பியிருக்கும். கர்த்தரை ஆராதிக்கும்போது நம்முடைய இருதயத்தில் சந்தோஷம் நிரம்பியிருக்கும். நாம் கர்த்தரை நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் ஆராதிப்போம். நம்முடைய உள்ளான ஆராதனையில், நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், ஸ்தோத்திரங்களும் புறப்பட்டு வரும்.

கர்த்தருடைய இரண்டாவது கட்டளை, நம்முடைய வெளிப்படையான ஆராதனையோடு தொடர்புடையது. நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகளும், ஜெபவார்த்தைகளும், விண்ணப்பங்களின் வார்த்தைகளும் நம்முடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும். கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கவனமாய்ச் செவிகொடுப்போம்.

கர்த்தரை உண்மையாய் நேசிக்கிறவர்கள் அவருடைய கற்பனைகளை எப்போதும் காத்து நடப்பார்கள். அதிலும் விசேஷமாக கர்த்தரை ஆராதிக்கும் விஷயத்திலே, அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவார்கள். கர்த்தரை நேசித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள், கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள அவருடைய கிருபைகள் நமக்கு உதவி செய்யும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறோம். கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல், நம்மால் கர்த்தரை உண்மையாய் ஆராதிக்க முடியாது.

தம்மை பகைக்கிறவர்களுடைய அக்கிரமத்தை கர்த்தர் விசாரிக்கிறார். தம்மிடத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய கற்பனைகளை கைக்கொள்கிறவர்களுக்கோ கர்த்தர் ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறார். கர்த்தரை உண்மையாய் ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய இரக்கம் நமக்கு தேவையாயிருக்கிறது. கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது அவசியமாயிருக்கிறது.

**மூன்றாவது கட்டளை :** நாம் கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பது பற்றி மூன்றாவது கட்டளை விளக்குகிறது. "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" *(யாத் 20:7)* என்பது மூன்றாவது கட்டளையாகும். கர்த்தருடைய நாமம் பரிசுத்தமானது. அந்த நாமத்தை வீணிலே வழங்கும்போது, நாம் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கிறோம்.

பொய்யாணையிடுதல், தேவதூஷணம் கூறுதல், தேவனுடைய நாமத்தைத் தேவையில்லாமல் பயன்படுத்துதல் ஆகியவற்றை இந்தக் கற்பனை குறிப்பிடுகிறது. தேவனுடைய நாமத்தைப் பில்லிசூனியம், குறிசொல்லுதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தக்கூடாது. ஜெபம், துதி, தீர்க்கதரிசனம் உரைத்தல், உபதேசம் பண்ணுதல், ஆராதனை செய்தல் ஆகிய பக்திவிருத்தியான காரியத்திற்கு மட்டுமே தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தவேண்டும். *(மல் 3:16).*

"கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இதற்கு என்ன தண்டனை கொடுக்கப்படும் என்று இந்த வசனத்தில் கூறப்படாவிட்டாலும், லேவி *24:10-16,23;* எண் *15:30-31* ஆகிய வசனங்களில் அதற்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஒரு சிலர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாக சொல்லுகிறார்கள். அவர்கள் தேவனுடைய நாமத்தினால் ஊழியம் செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஜீவியம் பரிசுத்தமாயிராது. அவர்கள் பிரசங்கம்பண்ணுவதும், அவர்கள் ஜீவிப்பதும் முரண்பட்டிருக்கும். இது மாய்மாலமான ஊழியம். இவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியமாட்டார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்கள் கர்த்தருடைய நாமத்தை தாராளமாய்ப் பயன்படுத்துவார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நாம் பயன்படுத்தும்போது, நாம் அவருடைய உபதேசங்களுக்கு கீழ்ப்படியவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக பற்றிக்கொள்வோமென்றால், நாம் பாவங்களையும், அசுத்தங்களையும், அக்கிரமங்களைவிட்டு விலகிப் போய்விடவேண்டும். இயேசுகிறிஸ்துவையும் பற்றிக்கொண்டு, பாவத்திற்கும் பங்காளிகளாயிருப்பது என்பது மாய்மாலம். இது கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிற காரியம்.

கர்த்தர் நம்மோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். நாம் உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையை மீறக்கூடாது. கர்த்தருக்கு பொருத்தனை செய்த காரியங்களை நாம் நிறைவேற்றவேண்டும். கர்த்தருக்கு பொருத்தனை செய்வதை நிறைவேற்றாமலிருப்பது, அவருடைய நாமத்தை வீணிலே வழங்குகிற காரியம்.

"ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத் 5:23,24).

ஒரு சிலர் தங்களுடைய வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்காக தேவனுடைய பெயரிலே ஆணையிடுகிறார்கள். அவர்களுக்கு தேவன்மீது பக்தியும் இருக்காது. மரியாதையும் இருக்காது. ஆனாலும் தேவனுடைய பெயரை தங்கள் இஷ்டம்போல பயன்படுத்துவார்கள். தங்களுடைய வார்த்தைகள் பொய்வார்த்தைகளாகயிருந்தாலும், அதை மெய்வார்த்தைகளாக மாற்றவேண்டும் என்பதற்காக, இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நாமத்தினாலே ஆணையிடுவார்கள். இவர்களுக்கு கர்த்தர்மீது பயம் இருக்காது. இவர்கள் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குகிறார்கள்.

யூதர்கள் தங்களுடைய வார்த்தைகளை மெய்ப்பிப்பதற்காக கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுவது வழக்கம். "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவருடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடுவாயாக" (உபா 10:20).

ஆனாலும் ஒரு சிலர் பொய்யாணையிடுகிறார்கள். தங்களுடைய பொய்யை உண்மையென்று நிரூபிப்பதற்காக, கர்த்தருடைய ஆணையினால் ஆணையிட்டு தங்களுக்கு ஆதாயம் தேடப்பார்க்கிறார்கள். இதுவும் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிற காரியமாகும்.

கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்கள் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தமாட்டார்கள். அவர்கள் கர்த்தரை கனம்பண்ணமாட்டார்கள். தங்களுடைய மாய்மாலத்திற்கும், பொய்வார்த்தைகளுக்கும் கர்த்தருடைய நாமம் துணையாகயிருக்கும் என்று நினைத்து, கர்த்தருடைய நாமத்தை இவர்கள் வீணிலே வழங்குகிறார்கள். கர்த்தர் ஒருபோதும் பாவத்தை அங்கீகரிக்கமாட்டார். அவர் எக்காலத்திலும் பாவத்திற்கு துணைபோகவும் மாட்டார்.

தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களை கர்த்தர் தண்டிப்பார். "கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்" (யாத் 20:7). மனுஷர் மத்தியிலே ஏற்படுகிற வழக்குகளை நியாயாதிபதிகள் விசாரிப்பார்கள். அவர்கள் குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை கொடுப்பார்கள். உலகப்பிரகாரமான நியாயாதிபதிகளின் பார்வையில், கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவது, மிகப்பெரிய குற்றமாகவோ அல்லது பாதகமாகவோ அவர்களுக்கு தெரியாது. ஏனென்றால் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவதினால், எந்த மனுஷருக்கும் இரத்த சேதாரம் ஏற்படுவதில்லை. இதனால் யாருடைய தனிப்பட்ட சொத்துக்கும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை.

ஒருவன் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவதினால், மனுஷர் மத்தியில் காணப்படுகிற அமைதி குலைந்துபோவதுமில்லை. இப்படிப்பட்ட பாவத்தினால் மனுஷருக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை. ஆகையினால் ஒருவன் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கும்போது, உலகப்பிரகாரமான நியாயாதிபதிகள், அவனைத் தண்டியாமல் விட்டுவிடுகிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார். அவனை நிச்சயமாகவே தண்டிப்பார்.

கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவன் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். அவன் ஜீவனுள்ள தேவனுக்கு விரோதமாக பேசுகிறான். கர்த்தருடைய கைகளில் விழுவது மிகவும் பயங்கரமானதாகயிருக்கும் என்பதை பாவிகள் அறிந்துகொள்வார்கள். உலகப்பிரகாரமான நியாயாதிபதி தண்டிப்பதைவிட, சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கிற தெய்வீக நியாயாதிபதியாகிய கர்த்தர், தண்டிக்கும்போது, அவருடைய தண்டனை மிகவும் பயங்கரமாயிருக்கும்.

**நான்காவது கட்டளை :** நாம் கர்த்தரை ஆராதிக்கும் வேளைகளைக் குறித்து இந்தக் கட்டளை விளக்குகிறது. நாம் கர்த்தரை எல்லா நாளிலும் ஆராதனை செய்யவேண்டும். அவரை எல்லா நாளிலும் கனப்படுத்தவேண்டும். ஆனாலும் கர்த்தர் ஏழாவது நாளை தமக்கு பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். வாரத்தில் ஏழுநாட்கள் இருக்கிறது. அந்த ஏழுநாட்களில் ஒருநாள் கர்த்தருக்கு பரிசுத்தமானது. இந்த நாளில் நாம் கர்த்தரை விசேஷமாய்க் கனம்பண்ணவேண்டும். நாம் இந்த நாளை பரிசுத்தம்பண்ணவேண்டும். பரிசுத்தமான இந்த நாளில் உலகப்பிரகாரமான வேலைகள் எதையும் செய்யாமல் நாம் ஓய்ந்திருக்கவேண்டும். கர்த்தருக்கு பரிசுத்தமான ஓய்வுநாளிலே, நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

"ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத் 20:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். "ஏழாம் நாளோ உன் கர்த்தருடைய ஓய்வுநாள்" (யாத் 20:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த நாளிலே இஸ்ரவேல் புத்திரர் யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

இந்த வாக்கியம் ஆதி 2:2-3 ஆகிய வசனத்தைக் குறிப்பிடவில்லை. இது தேவனுடைய ஓய்வு. தேவன் தம்முடைய கிரியைகளை முடித்துவிட்டு, அவர் ஓய்ந்திருந்தார். இஸ்ரவேல் புத்திரர் யாத் 16:22-26 ஆகிய வசனங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளை ஓய்வுநாளாக ஆசரிக்க வேண்டும். அதைப் பரிசுத்தமாகவும் ஆசரிக்க வேண்டும்.

"ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்" (யாத் 20:9,10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷர் ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும். அதன் பின்பு ஒருநாள் ஓய்ந்திருக்க வேண்டும் என்னும் கட்டளை மோசேயின் பிரமாணத்தில் எட்டு தடவைகள் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 16:26; யாத் 20:9-10; யாத் 23:12; யாத் 31:15; யாத் 34:21; யாத் 35:2; லேவி 23:3; உபா 5:13) இது புதிய உடன்படிக்கையில் காணப்படவில்லை. பழைய உடன்படிக்கை ஒழிந்துபோயிற்று. கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களுடைய விருப்பம்போல் எந்த நாளையும் ஓய்வுநாளாக நியமித்துக் கொள்ளலாம். (அப் 20:7, ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17).

ஏழாம்நாள் எல்லா வருஷங்களிலும் யூதருக்கு ஒரே கிழமையில் வராது. "தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" என்பது தேவனுக்காகவும், அவருடைய கட்டளைகளுக்காகவும் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிற நாள்.

ஓய்வுநாளில் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுநாளில் ஒரு வேலையும் செய்யக்கூடாது. பெற்றோர், பிள்ளைகள், வேலைக்காரர்கள், மிருகஜீவன்கள், அந்நியர் ஆகியோர் யாரும் ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது. ஆனாலும், அந்த நாளில் சில அத்தியாவசியமான வேலைகளைச் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

லேவியர்கள் ஓய்வுநாளில் பலிகளைச் செலுத்த வேண்டும். (எண் 28:9-10; 1நாளா 9:32) அத்தியாவசியமான வேலைகளை ஓய்வுநாளில் செய்வது தடைபண்ணப்படவில்லை (லேவி 12:3 = யோவான் 7:22-23).

எஜமான்கள் தங்களுடைய வேலையாட்களையும், மிருகஜீவன்களையும் வேலைவாங்காமல், அவர்களுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும் (லேவி 23:7-8,21,25,35).

மிருகஜீவன்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் அதை ஓய்வுநாளில் செய்யலாம். (மத் 12:3-8,12; மாற்கு 2:27-28; மாற்கு 3:4; லூக்கா 3:15; லூக்கா 14:5).

வியாபாரம், தொழில் போன்ற அன்றாட நடைமுறை காரியங்களை ஓய்வுநாளில் செய்யக்கூடாது. (யாத் 16:23; யாத் 34:21; யாத் 35:3; எண் 15:32-36; நெகே 13:15; எரே 17:21)

கர்த்தர் ஆதியிலேயே ஏழாம் நாளை பரிசுத்தப்படுத்தி, அதை ஆசீர்வதித்திருக்கிறார். "தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (ஆதி 2:3).

கர்த்தர் இப்போது மறுபடியுமாய், "ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று கட்டளையிடுகிறார். கர்த்தர் ஏற்கெனவே இந்தக் கட்டளையை கொடுத்திருப்பதினால், இது புதிய கட்டளையாகாது. கர்த்தர் தம்முடைய பழைய கட்டளையை இப்போது மறுபடியும் புதுப்பிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம்நாள் அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அவர்கள் ஆறுநாளும் வேலை செய்து தங்கள் கிரியைகளையெல்லாம் நடப்பிக்கவேண்டும். ஆறு வேலைநாட்களுக்கு பின்பு வருகிற நாளே ஏழாம் நாள். அதுவே கர்த்தருக்கு ஓய்வுநாள். அந்த நாளை அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

ஓய்வுநாள் பிரமாணத்தைக் குறித்து வேதபண்டிதர்கள் பல்வேறுவிதமாக விளக்கம் சொல்லுகிறார்கள். ஏழாம் நாளை எப்படி கணக்கிடுவது என்பதுபற்றி வேதபண்டிதர்கள் மத்தியிலே வேறுபட்ட கருத்துக்கள் உள்ளது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுதலை பெற்ற நாள் முதலாவது நாள் என்றும், ஏழாம் நாளை அந்த நாளிலிருந்து கணக்கிடவேண்டும் என்றும், வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

வேறு சிலரோ ஏழாம் நாளை, ஆதிகாலத்திலிருந்தே கணக்கு பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் ஏழாம் நாளை கணக்கிடுவதில் தெளிவு இல்லாமல் குழப்பம் காணப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் நாள், அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அந்த நாளில் அவர்கள் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. உலகப்பிரகாரமான வேலைகள் எதையும் செய்யாமல் அவர்கள் ஒய்ந்திருக்கவேண்டும். ஏழாம் நாள் கர்த்தருக்கு பரிசுத்தமான நாள். பரிசுத்தமான கர்த்தரை கனம்பண்ணுவதற்காக, இந்த ஏழாம் நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். இந்த நாளிலே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை காரியங்கள், அவரை துதிக்கும் துதியின் காரியங்கள் போன்ற ஆவிக்குரிய காரியங்கள் அதிகமாய் நடைபெறவேண்டும்.

கர்த்தர் ஏழாம் நாளை ஆசீர்வதித்திருக்கிறார். ஆகையினால் இது பரிசுத்தமான நாளாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். இது கர்த்தருடைய ஓய்வுநாள். யாரெல்லாம் கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்றும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரும், அவர்களுடைய குமாரனும், அவர்களுடைய குமாரத்தியும், ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஓய்வுநாளை யாரெல்லாம் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்று சொல்லும்போது, இஸ்ரவேல் புத்திரரும், அவனுடைய குமாரனும், குமாரத்தியும் என்று மாத்திரமே இந்த வசனத்தில் சொல்லுகிறார். அவனுடைய மனைவியைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. மனைவி தன் புருஷனோடு இசைந்திருக்கிறாள். புருஷனும் மனைவியும் தங்கள் குடும்பத்தில் ஒன்றாயிருக்கிறார்கள். ஆகையினால் புருஷன் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்று சொல்லும்போது, அவனுடைய மனைவியும் அவனோடுகூட, ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்று பொருள்படும்.

ஓய்வுநாட்களிலே நாம் என்ன வேலைகளை செய்யவேண்டும் என்றும், என்ன வேலைகளை செய்யக்கூடாது என்றும் கர்த்தர் நமக்கு தெளிவாக சொல்லுகிறார். ஓய்வுநாளிலே நம்முடைய வேலைக்காரனும், வேலைக்காரியும், மிருகஜீவனும், நாம் வாசல்களிலிருக்கிற அந்நியனும் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. கர்த்தர் தம்முடைய ஓய்வுநாள் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வுநாள் பிரமாணத்தை ஏற்கெனவே ஸ்தாபனம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் பத்துக்கட்டளைகளில் நான்காவது கட்டளையாக, ஓய்வுநாளைப்பற்றிய கட்டளையை சொல்லுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரித்துக்கொண்டிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே பல வருஷங்களாக அடிமைகளாயிருந்தார்கள். அந்தக் காலத்திலே அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஓய்வுநாளை ஆசரிப்பதிலிருந்து அவர்கள் பின்வாங்கிப்போனார்கள். ஒருவேளை எகிப்தியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை ஓய்வுநாட்களிலும் கட்டாயப்படுத்தி வேலை செய்ய வைத்திருக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தாரோ அந்நிய தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்களால் எகிப்தியரின் ஆளோட்டிகளை மீறி, ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியாமல் போயிருக்கலாம்.

இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் மறுபடியும் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிடுகிறார்.

ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு முன்பு, அந்த நாளுக்காக நம்மை ஆயத்தம்பண்ணவேண்டும். ஒய்வுநாள் வருவதற்கு முன்பாகவே, நாம் ஒய்வுநாளைப்பற்றி நினைத்துப் பார்த்து, அதற்கு நம்மை ஆயத்தம்பண்ணவேண்டும். அப்போதுதான் ஒய்வுநாள் வரும் போது அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியும். ஒய்வுநாளுக்கு முந்தின நாளிலே, நாம் என்னென்ன காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று கர்த்தர் நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். நாம் வரப்போகிற ஒய்வுநாளை நினைத்துப் பார்த்து, அதற்காக நம்மை ஆயத்தம்பண்ணினால் மாத்திரமே, நம்மால் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியும். ஆகையினால் கர்த்தர் ஒய்வுநாளைப்பற்றிய கட்டளையை சொல்லும்போது, "ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஒய்வுநாளை ஏன் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்பதற்கான காரணத்தையும் கர்த்தர் சொல்லுகிறார். "கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஒய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஒய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (யாத் 20:11).

யாத் 20:11 ஆவது வசனத்திற்கு வேதபண்டிதர்கள் பலவிதமான விளக்கங்களை சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லும் பொதுவான விளக்கம் வருமாறு :

1. கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார். இஸ்ரவேல் புத்திரரும் வாரத்தில் ஆறுநாட்கள் வேலைசெய்ய வேண்டும். (யாத் 20: 8-11=ஆதி 1:3-31)

2. கர்த்தர் ஏழாம்நாளிலே ஒய்ந்திருந்தார். இஸ்ரவேல் புத்திரரும் வாரத்தில் ஆறுநாட்கள் வேலைசெய்த பின்பு, ஏழாம்நாளிலே ஒய்ந்திருக்க வேண்டும். (யாத் 20:8-11=ஆதி 2:2-3)

3. வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் கர்த்தர் ஆறுநாட்களில் சிருஷ்டித்தார். ஒரு நாள் என்பது 24 மணி நேரங்களைக் கொண்ட ஒரு காலமாகும் (யாத் 20:8-11=ஆதி 1:3-31)

4. கர்த்தர் ஒய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். அதுபோல இஸ்ரவேல் புத்திரரும் ஒருநாளை ஒய்வுநாளாக நியமித்து, அதைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் (யாத் 20:11= ஆதி 2:2-3; உபா 5:12)

கிறிஸ்துவில் உண்டாகும் இளைப்பாறுதலுக்கு ஒய்வுநாள் ஓர் அடையாளமாகும். (மத் 11:28-30; கொலோ 2:14-17). கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது, அடையாளமாக ஆசரிக்கப்பட்டு வந்த ஒய்வுநாள் பிரமாணம் அவசியமில்லாமல் போயிற்று. (கலா 3:19-25; கலா 4:21-31; எபி 7:11-10:18).

வாரத்திலே ஏழுநாட்கள் உள்ளது. நாம் ஆறுநாட்களும் வேலை செய்யவேண்டும். அந்த நாட்களிலே நம்முடைய கிரியைகளையெல்லாம் நடப்பிக்கவேண்டும். நம்முடைய வேலைகளையெல்லாம் செய்து முடிப்பதற்கு ஆறுநாட்கள் நமக்கு போதுமானது. ஏழாம் நாளோ நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஒய்வுநாள். அந்த நாளிலே நாம் யாதொரு வேலையும் செய்யாமல், அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். ஒய்வுநாளில் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். இந்த நாளிலே நாம் கர்த்தரை விசேஷமாய்க் கனம்பண்ணி, அவரை ஆராதிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு ஒய்வுநாள் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். ஏழாம் நாள் நாம் ஒய்ந்திருக்க வேண்டிய நாள். கர்த்தர் நம்மீது அன்பும், கிருபையும், இரக்கமும், மனதுருக்கமும் உள்ளவராகயிருப்பதினால், நாம் ஏழுநாட்களும் வேலை செய்யவேண்டும் என்று சொல்லாமல், ஆறுநாட்கள் நாம் வேலை செய்தால் போதும் என்றும், ஏழாம் நாளிலே யாதொரு வேலையும் செய்யாமல் ஒய்ந்திருக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழாம் நாள் கர்த்தருடைய நாள். இந்த நாள் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். கர்த்தரே நமக்கு ஓய்வுநாள் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த நாளை கர்த்தர் தமக்கு பரிசுத்தமான நாளாக நியமித்திருக்கிறார். ஆகையினால் ஏழாம் நாள் மனுஷருடைய ஓய்வுநாள் என்று அழைக்கப்படாமல், நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். கர்த்தர் இந்தப் பூமியையும், இந்தப் பூமியிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் சிருஷ்டித்தார். கர்த்தரே சர்வசிருஷ்டிகர் என்பதை நாம் நினைவுகூரும் வண்ணமாகவும், நம்முடைய சிருஷ்டிகரை கனம்பண்ணும் வண்ணமாகவும், அவரை மகிமைப்படுத்தும் வண்ணமாகவும், நாம் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

யூதர்கள் ஏழாம் நாளை ஓய்வுநாளாக அங்கீகரித்து, அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். இதன் மூலமாக கர்த்தரே இந்த உலகத்தை சிருஷ்டித்தார் என்பதை அவர்கள் நினைவுகூருகிறார்கள். சிருஷ்டிகரை மகிமைப்படுத்தும் வண்ணமாகவே யூதர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள்.

கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார். யூதர்களும் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். ஏழாம் நாள் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் என்பதை யூதர்கள் அங்கீகரித்து, அந்த நாளிலே அவர்கள் யாதொரு வேலையும் செய்யாமல், அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். அந்த நாளிலே இந்த உலகத்தை சிருஷ்டித்த கர்த்தரை கருத்தாய் ஆராதிக்கிறார்கள்.

யூதர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதினால், யூதாதேசத்தார் மற்ற தேசத்தாரிடமிருந்து தங்களை வேறுபடுத்தி காண்பிக்கிறார்கள். அந்நிய தேசத்தார் தாங்கள் உண்டாக்கின தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். யூதர்களோ வானத்தையும், பூமியையும், தங்களையும் சிருஷ்டித்த தங்கள் சிருஷ்டிகராகிய கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

புறஜாதி தேசத்தார் சிருஷ்டிகரை ஆராதியாமல் சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். யூதர்களோ சிருஷ்டிகளை ஆராதியாமல், சிருஷ்டிகரை ஆராதிக்கிறார்கள்.

நாம் எவ்வாறு ஓய்ந்திருக்கவேண்டும் என்பதற்கு கர்த்தர் ஒரு முன்மாதிரியைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் ஆறுநாட்களாக கிரியைகளை நடப்பித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். நாமும் ஆறுநாளும் வேலை செய்து நம்முடைய கிரியைகளையெல்லாம் நடப்பிக்கவேண்டும். ஏழாம் நாளிலே நாம் யாதொரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும்.

கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார். கர்த்தர் ஓய்வுநாளின்மீது தம்முடைய ஆசீர்வாதத்தை சொல்லுகிறார். நாம் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்போது, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஓய்வுநாளின் ஆசீர்வாதத்தில் நமக்கும் பங்கு இருக்கும். நாம் கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்போது, கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்ததுபோல நம்மையும் ஆசீர்வதிப்பார். இந்த நாள் கர்த்தர் உண்டுபண்ணின நாள். கர்த்தருடைய நாளை நாம் பரிசுத்தம்பண்ணவேண்டும்.

பத்துக்கட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகளும், கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமான கட்டளைகளாகும். இந்த நான்கு கட்டளைகளும் முதலாவது பலகையில் எழுதப்பட்டிருக்கிறது என்றும், மீதமுள்ள ஆறு கட்டளைகளும் இரண்டாவது பலகையில் எழுதப்பட்டிருக்கிறது என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

முதல் நான்கு கட்டளைகளும் கர்த்தரை ஆராதிப்பது சம்பந்தமானவை. மீதமுள்ள ஆறு கட்டளைகளிலும், நாம் நமக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும், நாம் மற்றவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் உள்ளது. நாம் நம்மை நேசிப்பதுபோல, பிறரையும் நேசிக்கவேண்டும்.

**ஐந்தாவது கட்டளை :** நம்முடைய உற்றார் உறவினருக்கு நாம் செலுத்தவேண்டிய மரியாதைகளைப்பற்றி ஐந்தாவது கட்டளையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் விசேஷமாக பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப்பற்றி, கர்த்தர் தம்முடைய ஐந்தாவது கட்டளையில் சொல்லுகிறார். "உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத் 20:12) என்பது ஐந்தாவது கட்டளையாகும்.

பத்துக் கற்பனைகளில் இந்தக் கற்பனையே வாக்குத்தத்தத்தோடு கூறப்பட்டிருக்கிறது. (எபே 6:2). மனுஷர் எந்த வயதில் மரிக்க வேண்டுமென்று கால அளவுஎதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. தன்னுடைய ஆயுசுகாலத்தின் அளவை மனுஷனே இந்தக் கட்டளையின் பிரகாரம் தீர்மானம் பண்ணிக் கொள்ளலாம். (சங் 91; 2கொரி 11:30).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு மதிப்பு கொடுக்கவேண்டும். பிள்ளைகளுடைய இருதயத்தில், தங்கள் பெற்றோர்மீது மதிப்பும் மரியாதையும் நிரம்பியிருக்க வேண்டும். அவர்கள் அந்த மரியாதையை தங்களுடைய வெளிப்படையான செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும்.

நம்முடைய பெற்றோருக்கு நாம் கர்த்தருக்குள் கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நியாயமான கட்டளைகளைக் கொடுக்கும்போது, பிள்ளைகள் அந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம்.

"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும். உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபே 6:1-3).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு அன்பினால் கீழ்ப்படியவேண்டும். ஒருவேளை பிள்ளைகள் ஆரம்பத்தில் பெற்றோருக்கு கீழ்ப்படியாவிட்டாலும், அதன் பின்பு அவர்கள் தங்களுடைய தப்பிதத்திற்கு மனந்திரும்பி, தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிய முன்வரவேண்டும். "அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்" (மத் 21:29).

பிள்ளைகள் தப்பு செய்யும்போது பெற்றோர் அவர்களை கண்டித்து திருத்துவார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகளை சொல்லுவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நன்மைகளுக்காகவே அவர்களைக் கண்டிக்கிறார்கள். பிரம்பைக் கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நிதானமாகவும், மென்மையாகவும் கண்டிப்பார்கள். தப்பு செய்கிற பிள்ளைகளை அவர்களுடைய பெற்றோர் கண்டித்து திருத்தவில்லையென்றால், அந்தப் பிள்ளைகள் பிற்காலத்தில் துன்மார்க்கராய் வளருவார்கள். பெற்றோர் கண்டிக்காத பிள்ளைகளை ஊரிலுள்ளவர்களும், காவல்துறையிலுள்ளவர்களும் கண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

பிள்ளைகளுடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணுவார்கள். பெற்றோர் தங்களைக் கடிந்துகொண்டாலும், தங்களுக்கு புத்திமதிகளை சொன்னாலும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவார்கள். பிள்ளைகளுடைய மனச்சாட்சி கர்த்தருக்கு முன்பாக சுத்தமாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிவார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணுவார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்கள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியமாட்டார்கள். கர்த்தரைக் கனம்பண்ணாதவர்கள் தங்கள் பெற்றோரையும் கனம்பண்ணமாட்டார்கள்.

பெற்றோர் வயது முதிர்ந்தவராயிருக்கும்போது, அவர்களுடைய பிள்ளைகள் அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். பெற்றோர் தங்கள் முதிர் வயதில் சந்தோஷமாய் ஜீவிப்பதற்கு பிள்ளைகள் அவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டும். பெற்றோருக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்வதற்கு பிள்ளைகள் முன்வரவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்முடைய உபதேசத்திலே ஐந்தாவது கட்டளையை விளக்கமாக சொல்லியிருக்கிறார்.

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்" (மத் 15:4-6).

பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கனம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களை விசேஷமாய் ஆசீர்வதிக்கிறார். பிள்ளைகள் தங்கள் தாயையும், தகப்பனையும் கனம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கிற தேசத்திலே, அவர்கள் நாட்கள் நீடித்திருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (யாத் 20:12).

ஐந்தாவது கட்டளை, இரண்டாவது கற்பலகையில் எழுதப்பட்டிருக்கிற முதலாவது கட்டளையாகும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வரப்போகிறார். கர்த்தர் கானான் தேசத்தை குறிக்கும் வண்ணமாக, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசம்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல்புத்திரர் கானான் தேசத்திலே வாசம்பண்ணும்போது, அவர்களுடைய ஆயுசுநாட்கள் நீடித்திருக்க வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணவேண்டும்.

**ஆறாவது கட்டளை :** இந்தக் கட்டளையில் கர்த்தர் நம்முடைய ஜீவனைப்பற்றியும், மற்றவர்களுடைய ஜீவனைப்பற்றியும் சொல்லுகிறார். "கொலை செய்யாதிருப்பாயாக" (யாத் 20:13) என்பது ஆறாவது கட்டளையாகும். நம்முடைய சொந்த சரீரத்திற்கோ அல்லது மற்றவர்களுடைய சரீரத்திற்கோ நாம் எந்த விதமான தீங்கும் செய்யக்கூடாது. யாருடைய சரீரத்திலும் காயங்களை ஏற்படுத்தக்கூடாது. சரீரத்தின் ஆரோக்கியத்தை கெடுத்துப்போடுகிற எந்தக் காரியத்தையும் நாம் செய்யக்கூடாது.

இந்தக் கற்பனை மரணதண்டனை நிறைவேற்றுவதையும், யுத்தத்தில் எதிரிகளைச் சங்காரம் பண்ணுவதையும் தடைபண்ணவில்லை. ஆனால் சுயநல நோக்கத்தோடு பிறரைக் கொலைபண்ணக்கூடாது. கோபம், பொறாமை, பழிவாங்குதல், ஆதாயத்திற்காகத் தாக்குதல் ஆகியவை நிமித்தமாகக் கொலைசெய்வது தடைபண்ணப்பட்டிருக்கிறது. (யாத் 21:12, யாத் 21:14, யாத் 21:18, லேவி 19:14,17, லேவி 19:18, உபா 22:8).

ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்கும் இடையே யுத்தம் நடைபெறும்போது, யுத்தவீரர்கள் தங்களைக் காத்துக்கொள்வதற்காக, எதிரி தேசத்து வீரர்களைக் கொன்றுபோடுகிறார்கள். இது யுத்தம்பண்ணுகிற பிரமாணம். கர்த்தர் இந்தப் பிரமாணத்திற்கு விரோதமாக தம்முடைய ஆறாவது கற்பனையில் ஒன்றும் சொல்லவில்லை.

நம்முடைய சமுதாய ஜீவியத்திலே, நாம் மற்றவர்களுடைய ஜீவனுக்கு அநியாயமாக தீங்கு செய்யக்கூடாது. நாம் கோபத்தினாலும், பொறாமையினாலும் நிறைந்து பிறரை கொன்றுபோடக்கூடாது. தன்னுடைய சகோதரனை பகைக்கிறவன், அவனைக்கொலைபண்ணுகிறவனாயிருப்பான். பழிவாங்கவேண்டும் என்னும் தீயஎண்ணம் ஒருவனுடைய மனதிலே வளர்ச்சி பெறும்போது, அவன் மற்றவனைக் கொலை செய்வதற்கும் துணிந்துவிடுகிறான்.

ஒரு சிலர் பிறர்மீது கோபப்பட்டு, அவசரத்திலும், ஆத்திரத்திலும் மற்றவர்களைக் கொன்றுபோடுகிறார்கள். ஒரு சிலர் தங்களுடைய வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளை சந்திக்க முடியாமல், மனம் வேதனைப்பட்டு, தற்கொலை செய்து கொள்கிறார்கள். "கொலை செய்யாதிருப்பாயாக" என்பது கர்த்தருடைய ஆறாவது கட்டளை. இந்தக் கட்டளையின் பிரகாரம் தற்கொலை செய்து கொள்வதும், பிறரை கொலை செய்வதும் பாவமாகும்.

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" *(மத் 5:22)*.

**ஏழாவது கட்டளை :** ஏழாவது கட்டளை நம்முடைய கற்போடும், மற்றவர்களுடைய கற்போடும் தொடர்புடையது. "விபசாரம் செய்யாதிருப்பாயாக" *(யாத் 20:14)* என்பது ஏழாவது கட்டளையாகும்.

மனுஷர்கள் பலுகிப்பெருக வேண்டும். ஆனாலும் தேவன் இதற்குச் சில நியதிகளை வகுத்திருக்கிறார். திருமணம் புனிதமானது. திருமண உறவின் மூலமாகவே சந்ததி பெருக வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இதற்கு விரோதமான பாலுறவுகள் வேதாகமத்தில் அங்கிகரிக்கப்படவில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தக் கட்டளையை, ஆறாவது கட்டளைக்கு முன்பாக சொல்லுகிறார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்" *(மாற் 10:19)*.

நம்முடைய ஜீவன் நமக்கு எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல நம்முடைய கற்பும் நமக்கு முக்கியமானதாயிருக்க வேண்டும். நம்முடைய சரீரத்தை தீட்டுப்படுத்தி, அதை அழித்துப்போடும் பாவமான காரியங்களுக்கு விரோதமாக நாம் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும்.

**எட்டாவது கட்டளை :** இந்தக் கட்டளை நம்முடைய சம்பத்தோடும், மற்றவர்களுடைய சம்பத்தோடும் தொடர்புடையது. இந்தக் கட்டளையில் நம்முடைய ஐசுவரியம், ஆஸ்தி, அதுபோலவே பிறருடைய ஐசுவரியம், ஆஸ்தி ஆகியவற்றைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "களவு செய்யாதிருப்பாயாக" *(யாத் 20:15)* என்பது எட்டாவது கட்டளையாகும்.

நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை நாம் பாவமான காரியங்களுக்கு செலவு பண்ணக்கூடாது. அவ்வாறு செலவு பண்ணுவது நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை நாமே களவு செய்வதற்கு சமம். நாம் பாவமான காரியங்களில் ஈடுபட்டு நம்முடைய ஆஸ்திகளை தொலைத்துவிடக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் வசதிகளையும், வாய்ப்புக்களையும் பரிசுத்தமாக பயன்படுத்தவேண்டும்.

நாம் மற்றவர்களுடைய ஐசுவரியங்களையும் களவு செய்யக்கூடாது. பிறருடைய எல்லைக்குறியை அநியாயமாக மாற்றிப்போடக்கூடாது. மற்றவர்களுடைய உரிமைகளில் தேவையில்லாமல் தலையிடக்கூடாது. மற்றவர்களுடைய பொருள்களையும், அவர்களுடைய நிலங்களையும், அவர்களுடைய வீடுகளையும் அநியாயமாக அபகரித்துக் கொள்ளக்கூடாது.

நாம் பிறரிடத்தில் கடன் வாங்கியிருந்தால் அதை முறைப்படி திரும்ப செலுத்தவேண்டும். கடன் தொகையை திரும்ப செலுத்தாமல், கடன்கொடுத்தவனை ஏமாற்றுவது பாவம். அது அவனுடைய பொருளை களவு செய்வதற்கு சமம். அதுபோலவே வீட்டின் சொந்தக்காரருக்கு வாடகை கொடுக்காமலேயே அதில் குடியிருப்பது, நம்மிடத்தில் வேலை செய்கிற வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்காமலேயே வேலை வாங்கி அவர்களை வஞ்சிப்பது ஆகியவையெல்லாமே களவு செய்வதற்கு சமமான பாவம்.

ஒரு சிலர் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தை செலுத்தாமல், களவு செய்கிறார்கள். ராயனுக்குரியதை ராயனுக்கும், கர்த்தருக்குரியதை கர்த்தருக்கும் செலுத்தவேண்டும். விசுவாசிகளில் சிலர் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய காணிக்கைகளை கொடுக்காமல், தாங்களே வைத்துக்கொள்கிறார்கள். இதுவும் கர்த்தருடைய பார்வையில் களவு செய்கிற காரியமாயிருக்கிறது.

**ஒன்பதாவது கட்டளை :** நாம் நம்முடைய நற்பெயரையும், மற்றவர்களுடைய நற்பெயரையும் கெடுத்துப்போடக்கூடாது. "பிறனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத் 20:16) என்பது ஒன்பதாவது கட்டளையாகும்.

மற்றவர்களுக்கு விரோதமாக துரோகமான வார்த்தைகளைப் பேசுவது, அவர்களுக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுவது, பொய்சொல்லுவது, மற்றவர்களை ஏமாற்றுவதற்காக கட்டுக்கதைகளை சொல்லுவது, பிறரை வஞ்சிப்பது ஆகியவையெல்லாமே இந்தக் கட்டளையின் பிரகாரம் தடைபண்ணப்பட்டிருக்கிறது.

மற்றவர்களுடைய நல்ல பெயரை கெடுக்கும் வண்ணமாக அல்லது களங்கப்படுத்தும் வண்ணமாக, அவர்களுக்கு விரோதமாக அநியாயமான காரியங்களை தூஷணமாய்ப் பேசுவது பாவமாகும்.

ஒரு சிலர் பிறருக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லுவார்கள். தங்களுக்கு ஒரு காரியத்தைப்பற்றி தெரியாவிட்டாலும், அதைப்பற்றி தங்களுக்கு நிச்சயமாய் தெரிந்திருப்பதுபோல பேசுவார்கள். சில வேளைகளில் இவர்களுக்கு ஒரு காரியத்தைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கும். ஆனாலும் இவர்கள் தங்களுக்கு தெரிந்த காரியத்தை மூடி மறைத்துவிட்டு, தங்களுக்கு அதுபற்றி தெரியாது என்று சாதிப்பார்கள்.

ஒரு சிலர் மற்றவர்களுக்கு விரோதமாக புரணி பேசுவார்கள். அவர்களைப்பற்றிய கட்டுக்கதைகளை திருப்பி சொல்லுவார்கள். தங்களால் மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட பாதிப்பு வரும் என்பதை யோசித்துப் பார்க்காமல், பிறர்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களையும், அவதூறான வார்த்தைகளையும் பேசுவார்கள். பிறர்மீது கட்டுக்கதைகளையும், அவதூறான வார்த்தைகளையும் பேசுகிறவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு இருக்காது. இவர்கள் மற்றவர்களுடைய மதிப்பையும் சேதப்படுத்துவார்கள்.

**பத்தாவது கட்டளை :** பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்பது பத்தாவது கட்டளையாகும். மற்றவர்களுக்கு தீங்கு உண்டாக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் நாம் பேசவும் கூடாது, செய்யவும் கூடாது. மற்றவர்களுக்கு விரோதமாக கிரியை செய்வது மாத்திரமல்ல, நம்முடைய மனதிலும் மற்றவர்களுக்கு விரோதமாக எந்தத் தீமையான எண்ணமும் ஏற்படக்கூடாது.

கர்த்தர் தம்முடைய பத்தாவது கட்டளையில், "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" (யாத் 20:17) என்று சொல்லுகிறார்.

நாம் பிறருடைய பொருட்கள்மீது ஆசைப்படக்கூடாது. கர்த்தர் அப்போஸ்தலர் பவுலை சந்தித்தபோது, பவுலின் கண்களிலிருந்து செதிள்கள் கீழே விழுந்தது. இதனால் அவருடைய பார்வை பரிசுத்தமாயிற்று.

நம்முடைய பார்வை பாவம் நிரம்பியதாயிருக்கும்போது, நம்முடைய சிந்தனைகளும் பாவம் நிரம்பியதாயிருக்கும். பாவமான சிந்தனைகள், பாவமான வார்த்தைகளாகவும், பாவமான கிரியைகளாகவும் வெளிப்படும். மனதின் ஆசையே எல்லா பாவங்களுக்கும் ஆதாரமாயிருக்கிறது. ஆகையினால் "பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" என்று கர்த்தர் திட்டமாக சொல்லுகிறார்.

## இடிமுழக்கங்களும் மின்னல்களும் யாத் 20:18-21

**யாத் 20:18. ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் மலை புகைகிறதையும் கண்டார்கள்; அதைக் கண்டு, ஜனங்கள் பின்வாங்கி, தூரத்திலே நின்று,**

**யாத் 20:19. மோசேயை நோக்கி: நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள்.**

**யாத் 20:20. மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார் என்றான்.**

**யாத் 20:21. ஜனங்கள் தூரத்திலே நின்றார்கள்; மோசே, தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய்ச் சேர்ந்தான்.**

கர்த்தர் தம்முடைய பத்து கட்டளைகளை சொல்லும்போது, ஜனங்கள் எல்லோரும் இடிமுழக்கங்களையும், எக்காள சத்தத்தையும், மலைபுகைகிறதையும் காண்கிறார்கள். கர்த்தருடைய மகிமை அங்கு வெளிப்படுகிறது. ஜனங்கள் பின்வாங்கி தூரத்திலே நிற்கிறார்கள். கர்த்தருடைய மகிமைக்கு முன்பாக, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை வெகுவாய்த் தாழ்த்துகிறார்கள்.

சுவிசேஷத்தின் மூலமாய் மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும். அது தெய்வீக ஆறுதல். ஜனங்கள் சுவிசேஷத்தின் மூலமாய் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய மகிமையையும் மகத்துவத்தையும் வெளிப்படுத்தி, அவர்களை ஆயத்தம்பண்ணுகிறார்.

மோசேயின் நியாயப்பிரமாணம் மனுஷரை தாழ்த்துகிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் கிருபையும் சத்தியமுமோ, மனுஷரை கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிசேரப்பண்ணுகிறது. கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளை வெளிப்படுத்தும்போதோ, ஜனங்கள் அதைக் கண்டு, பின்வாங்கி தூரத்திலே நிற்கிறார்கள் (யாத் 20:18).

நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட போது இடிமுழக்கங்களும், எக்காளச் சத்தமும் தொனிக்கிறது. ஜனங்கள் மின்னல்களையும், மலை புகைகிறதையும் காண்கிறார்கள். இதன் மூலமாகத் தேவனுடைய பரிசுத்தமும், அவருடைய பிரமாணத்தின் பரிசுத்தமும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வலியுறுத்தப்படுகிறது. ஜனங்கள் இதைக் கண்டும், கேட்டும் பயப்படுகிறார்கள். இதற்கு முன்பு இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் குறித்திருந்த எல்லையைக் கடந்து, அவிடத்தில் வர முயற்சி பண்ணினார்கள் (யாத் 19:17-25). ஆனால் இப்போதோ ஜனங்கள் பின்வாங்கிப்போய், தூரத்திலே நிற்கிறார்கள். இந்தக் காட்சி மோசே "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன்" என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு பயங்கரமாயிருந்தது. (எபி 12:21). தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியில் ஒரு மத்தியஸ்தர் தேவை என்பதை இந்த நிகழ்ச்சி வலியுறுத்துகிறது. (1தீமோ 2:4-5).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இடிமுழக்கங்களையும், மின்னல்களையும், எக்காள சத்தத்தையும், மலைபுகைகிறதையும் கண்டு மிகவும் பயப்படுகிறார்கள். அவர்கள் பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும், மோசேயை நோக்கி, "நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம்" (யாத் 20:19) என்று சொல்லுகிறார்கள்.

"எக்காளமுழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும் நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள்" (எபி 12:19).

இஸ்ரவேல் புத்திரர் மிகுந்த பயத்தினாலே தேவன் தங்களோடு பேசக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் மோசே தங்களோடு பேசவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இக்காலத்திலும் விசுவாசிகளில் சிலர் பரிசுத்த ஆவியானவர் தங்களோடே நேரடியாகப் பேசக்கூடாது என்றும், அவர் தங்களுக்கு பிடித்தமான ஊழியக்காரர் மூலமாக பேசவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

பயத்தோடும், நடுக்கத்தோடும் இருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு மோசே ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே ஜனங்களை நோக்கி, "பயப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார்" (யாத் 20:20) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பல சமயங்களில் சோதித்திருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. தேவன் அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்த போது. (யாத் 16:4; உபா 8:16).

2. தேவன் அவர்களோடு வானத்திலிருந்து பேசியபோது. (யாத் 20:20).

3. தேவன் அவர்களை வனாந்தரத்தில் வழிநடத்தியபோது. (உபா 8:2).

4. தேவன் அவர்களுக்குத் தாகத்தை அனுமதித்தபோது. (உபா 33:8).

5. அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை உபத்திரவம்பண்ண தேவன் அனுமதித்த போது. (நியா 2:22; நியா 3:1,4; ஆதி 22:1; 2நாளா 32:31; சங் 11:4; சக 13:9; யாக் 1:3)

தேவன் தம்முடைய பிள்ளைகளைச் சோதிக்கிறார். அதற்கு ஒரு நோக்கமுண்டு. கர்த்தரைப் பற்றிய பயம் ஜனங்கள் மத்தியில் இருக்க வேண்டும். பாவம் செய்வதினால் தங்களுக்குப் பாடுகள் உண்டு என்பதை ஜனங்கள் தெரிந்திருக்க வேண்டும். (உபா 4:40; உபா 7:12-24; உபா 8:3; உபா 11:13-32; உபா 28:1-68).

மனுஷர் பாவம் செய்யக்கூடாது என்னும் உபதேசம் புதிய ஏற்பாட்டிலும், (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; 1யோவான் 2:1-2) பழைய ஏற்பாட்டிலும் (யாத் 23:33; சங் 4:4; எசே 3:21) சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக எழுந்தருளியிருக்கிறார். கர்த்தருடைய மகிமை அவர்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் இடிமுழக்கங்களுக்கு மத்தியிலும், எக்காள சத்தத்திற்கு மத்தியிலும், மின்னல்களுக்கு மத்தியிலும் எழுந்தருளுவதற்கு ஒரு தெய்வீக நோக்கமுண்டு. இஸ்ரவேல் ஜனத்தாரை அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமல்ல. மின்னல்களும் அக்கினியும் இஸ்ரவேல் ஜனத்தாரை பட்சித்துப்போடாது. கர்த்தர் அவர்களை பட்சித்துப்போடுவதற்காக, மின்னல்களையும், இடிமுழக்கங்களையும் அவர்கள் மத்தியிலே அனுப்பவில்லை.

மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவாக மத்தியஸ்தராயிருக்கிறார். மத்தியஸ்தராகிய மோசே இல்லையென்றால், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு முன்பாக என்ன செய்வார்கள் என்பதையும், அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் கர்த்தர் சோதித்தறிய விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யக்கூடாது. அவர்களுடைய இருதயத்தில் கர்த்தரைப்பற்றும் பயம் இருக்கவேண்டும். அந்தப் பயம் அவர்களுடைய முகத்திற்கு முன்பாக எப்போதும் இருக்கவேண்டும். அவர்களிடத்தில் கர்த்தரைப்பற்றும் பயம் மாத்திரமே இருக்கவேண்டும் என்றும், வேறு எந்த பயமும் இருக்கக்கூடாது என்றும் கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

மோசே கர்த்தருடைய திட்டத்தை அறிந்திருக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "பயப்படாதிருங்கள்" என்று ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் பயத்தினால் நடுங்கினாலும், மோசே கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லாமல் மறைத்து வைக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்யக்கூடாது என்றும், கர்த்தரைப்பற்றும் பயம் அவர்கள் முகத்திற்கு முன்பாக இருக்கவேண்டும் என்றும் மோசே கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு முன்பாக நிற்கும்போது, நம்முடைய மனதில் ஆச்சரியத்தினால் உண்டாகும் பயமோ அல்லது அதிசயங்களைப் பார்ப்பதினால் உண்டாகும் பயமோ இருக்கக்கூடாது. கர்த்தருடைய மகிமையையும், அவருடைய மகத்துவத்தையும் பார்ப்பதினால் உண்டாகும் பரிசுத்தமான பயம் மாத்திரமே நமக்குள் காணப்படவேண்டும்.

நாம் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு முன்பாக நிற்கும்போது, அவருடைய தெய்வீக ஆளுகை நம்மை ஆளுகை செய்கிறது என்றும், நாம் அவருடைய ஆளுகைக்கு கீழ்ப்படியவேண்டும் என்றும் நம்முடைய மனதில் தீர்மானித்து, கர்த்தருக்கு முன்பாக பயபக்தியோடு நிற்கவேண்டும். கர்த்தரைப்பற்றும் பயம், நம்மை பாவம் செய்யாதபடிக்கு காத்துக்கொள்ளும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை செய்வதற்கும், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பதற்கும், கர்த்தருக்கு பயப்படும் பயம் நமக்கு உதவி செய்யும். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் மலை புகைகிறதையும் காண்கிறார்கள்; அதைக் கண்டு, ஜனங்கள் பின்வாங்கி, தூரத்திலே நிற்கிறார்கள். மோசே, தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய்ச் சேருகிறார் (யாத் 20:18,21). கர்த்தருடைய தூதனானவர் மோசேயை, கர்த்தர் இருந்த கார்மேகத்திற்கு சமீபமாக அழைத்துக்கொண்டு போகிறார் என்று, யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஜனங்கள் தேவனுடைய சமூகத்திலிருந்து தூரத்திலே நிற்கிறார்கள். கிருபையின் பிரமாணத்தின் பிரகாரம் ஜனங்கள் தேவனண்டையில் கிட்டிச் சேருகிறார்கள். (எபே 2:13,18; எபி 4:14-16; எபி 10:19-23; யாக் 4:8).

"தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய்ச் சேர்ந்தார்" என்பது மோசே சீனாய்மலைக்கு நான்காம் முறையாக ஏறிப்போன சம்பவமாகும். (யாத் 19:3).

## கர்த்தருக்கு ஆராதனை
## யாத் 20:22-26

**யாத் 20:22. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள்.**

**யாத் 20:23. நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்.**

**யாத் 20:24. மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக; நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்.**

**யாத் 20:25. எனக்குக் கல்லினால் பலிபீடத்தை உண்டாக்கவேண்டுமாகில், அதை வெட்டின கல்லுகளால் கட்டவேண்டாம்; அதின்மேல் உளியிட்டவுடனே, அதை அசுசிப்படுத்துவாய்.**

**யாத் 20:26. என் பலிபீடத்தின்மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்.**

கர்த்தர் கார்மேகத்திலே இருக்கிறார். மோசே கர்த்தர் இருக்கிற கார்மேகத்திற்கு சமீபமாய் சேர்ந்திருக்கிறார். அப்பொழுது கர்த்தர் மோசேயோடே பேசுகிறார். கர்த்தர் பேசுவது மோசேக்கு மாத்திரம் கேட்கிறது. கர்த்தருடைய வார்த்தைகள் ஜனங்களுக்கு கேட்கவில்லை. ஜனங்கள் ஏற்கெனவே, "தேவன் எங்களோடே பேசாதிருப்பார்களாக" என்றும், "பேசினால் நாங்கள் செத்துப்போவோம்" (யாத் 20:19) என்றும் பயத்தோடே சொன்னார்கள்.

கர்த்தர் ஜனங்களை பயமுறுத்தவில்லை. அவர் மோசேயோடு தனிப்பட்ட விதமாக, முகமுகமாகப் பேசுகிறார். இந்த அதிகாரத்திலிருந்து, யாத் 23-ஆவது அதிகாரம் வரையிலும் கர்த்தர் மோசேயோடு பேசின வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருடைய செவிகளும் கேட்கும் வண்ணமாக பேசினார். அப்பொழுது இடிமுழக்கங்களும், மின்னல்களும் எக்காள சத்தங்களும் உண்டாயிற்று. இப்போதோ கர்த்தர் மோசேயோடு தனிப்பட்ட முறையில், முகமுகமாகப் பேசுகிறார். தாம் ஏற்கெனவே சொன்ன பத்துக்கட்டளைகளை, கர்த்தர் மோசேக்கு விளக்கமாக சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய வாயினால், தம்முடைய வார்த்தைகளை மோசேக்கு சொல்லுகிறார். அதன் பின்பு கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எழுதுகிறார். தம்மை ஆராதிப்பது சம்பந்தமான பிரமாணங்களை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். அவர் கர்த்தர் சொன்ன வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள்" (யாத் 20:22) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஒப்பாக விக்கிரகங்களை செய்து, அதை ஆராதிக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய இரண்டாவது கட்டளையாக, இதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" (யாத் 20:4) என்பது கர்த்தருடைய இரண்டாவது கட்டளையாகும்.

கர்த்தர் மறுபடியுமாக இந்தக் கட்டளையை சொல்லுகிறார். "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்" (யாத் 20:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இருக்கிறது. கர்த்தருடைய தெய்வீக மகிமை அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால் கர்த்தருடைய மகிமை அவர்கள் மத்தியிலே பிரத்தியட்சமாய் வெளிப்படாதபோது, அவர்கள் கர்த்தருடைய மகிமைக்கு ஒப்பாக விக்கிரகங்களை உண்டாக்கக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஒப்பாக விக்கிரகங்களை செய்து அதை ஆராதிக்கும்போது, அது கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை ஆகாது. விக்கிரகாராதனை கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையாகாது. விக்கிரகம் கர்த்தருக்கு சத்துருவாயிருக்கிறது. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், கர்த்தருக்கு விரோதமான எதையோ ஆராதிக்கிறார்கள். கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாகயிருக்கிறார். அவர் தம்முடைய மகிமையை எந்த விக்கிரகத்தோடும் பகிர்ந்து கொள்ளமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதிக்கும்போது, அவருக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தவேண்டும். அதற்காக அவர்கள் கர்த்தருக்கு பலிபீடத்தை உண்டாக்கவேண்டும். தமக்கு எப்படிப்பட்ட பலிபீடம் உண்டாக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மண்ணினாலே பலிபீடத்தை உண்டாக்கி, அதின்மேல் தங்கள் ஆடுகளையும் தங்கள் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்த வேண்டும். தம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் கர்த்தர் அவர்களிடத்தில் வந்து, அவர்களை ஆசீர்வதிப்பார் (யாத் 20:24).

தேவனை ஆராதிக்கும் எந்த இடத்திலும் பலிசெலுத்துவதற்கு பலிபீடம் இருக்க வேண்டும். (லேவி 17:1-11). தேவனே அதற்குரிய இடத்தைத் தேர்வுசெய்கிறவர். (உபா 12:5,11,15,18,26). இஸ்ரவேலருடைய வரலாற்றில் பலியிடுவதற்கு மூன்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. அவையாவன: 1. சைலோ (எரே 7:12); 2. பெத்தேல் (1சாமு 10:3); சீயோன் (சங் 78:68).

கர்த்தருக்கு மண்ணினால் பலிபீடத்தை உண்டாக்குவது போதுமானது. அவர்கள் கல்லினால் கர்த்தருக்கு பலிபீடத்தை உண்டாக்கவேண்டுமென்றால், கர்த்தர் அதற்கு ஒரு சில நிபந்தனைகளை சொல்லுகிறார்.

"எனக்குக் கல்லினால் பலிபீடத்தை உண்டாக்கவேண்டுமாகில், அதை வெட்டின கல்லுகளால் கட்டவேண்டாம்; அதின்மேல் உளியிட்டவுடனே, அதை அசுசிப்படுத்துவாய். என் பலிபீடத்தின்மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்" (யாத் 20:25,26) என்று கர்த்தர் சொல்லுகிறார். மனுஷன் தன்னுடைய சொந்தக் கிரியைகளினால் இரட்சிக்கப்பட முடியாது என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது (எபே 2:8-9; தீத்து 3:5).

புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களின் உருவங்களை உயர்ந்த இடத்தில் வைத்து அங்கு ஏறிச்செல்வதற்குப் படிகளை அமைப்பார்கள். மற்ற தெய்வங்களைவிட தங்கள் தெய்வங்கள் உயர்ந்தவை என்பதைப் பெருமையோடு காண்பிக்கும் விதமாக உயர்ந்த பீடங்களைக் கட்டுவார்கள். உயர்ந்த மேடைகள் பாவமானவை. (லேவி 26:30) புறஜாதியாரின் பலிபீடங்களில் பலவிதமான விக்கிரகங்கள் இருக்கும். இது தேவனுடைய இரண்டாம் கற்பனைக்கு எதிரானது. (யாத் 20:4-6).

தம்முடைய ஜனத்தாரிடம் தேவன் கண்ணியமான சுபாவங்களை எதிர்பார்க்கிறார். (பிலி 4:5; 1தீமோ 2:9-10; 1பேதுரு 3:3).

தேவன் மனுக்குலத்தைத் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தினால் இரட்சிக்கும்படியாக சித்தம் கொண்டிருக்கிறார். தான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று மனுஷன் மேற்கொள்ளும் எந்த சுய முயற்சியும் தேவனுக்கு அசுசியாக இருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஒப்பாக வெள்ளியினால் தெய்வங்களையும், பொன்னினால் தெய்வங்களையும் உண்டாக்கக்கூடாது. கர்த்தருக்கு பலிசெலுத்த, மண்ணினால் உண்டாக்கப்பட்ட சாதாரண பலிபீடமே போதுமானது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு கல்லினால் பலிபீடத்தை உண்டாக்கும்போது, அந்தக் கல்லிலே கர்த்தருக்கு ஒப்பான விக்கிரகத்தை செய்வதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தருக்கு நேர்த்தியான பலிபீடத்தை கல்லினால் உண்டாக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு, இஸ்ரவேல் புத்திரர் உளியினால் அந்தக் கல்லை செதுக்குவார்கள். அந்தப் பலிபீடத்தை அழகுபடுத்தவேண்டும் என்பதற்காக, அதிலே சில உருவங்களையும் செதுக்கி வைப்பார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் அவர்களை விக்கிரகாராதனைக்கு நேராக வழிநடத்தும். ஆகையினால் கர்த்தர் தமக்கு கல்லினால் பலிபீடத்தை உண்டாக்கவேண்டாம் என்று தெளிவாக சொல்லுகிறார்.

கர்த்தருக்கு மண்ணினால் செய்யப்பட்ட சாதாரண பலிபீடமே போதுமானது. கர்த்தர் வெளிப்படையான ஆடம்பரத்தையும், அலங்காரத்தையும் ஒருபோதும் விரும்புவதில்லை. அவர் நம்முடைய இருதயத்தின் பரிசுத்தத்தையே விரும்புகிறார். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். அவரை பரிசுத்த அலங்காரத்துடனே தொழுதுகொள்ள வேண்டும். கர்த்தருடைய ஆராதனையில் உலகப்பிரகாரமான ஆடம்பரங்களுக்கும் அலங்காரங்களுக்கும் இடமில்லை. பரிசுத்தமே ஆலயத்தின் அழகு. பரிசுத்தத்தின் அழகுக்கு வர்ணம் பூசவேண்டிய அவசியமில்லை.

கர்த்தருக்கு உண்டாக்கப்படும் பலிபீடம் அதிக உயரமாக இருக்கக்கூடாது. அது தாழ்வாகயிருக்கவேண்டும். பலிபீடம் அதிக உயரமாகயிருக்குமென்றால், அந்தப் பலிபீடத்தின்மேல் ஏறுவதற்கு படிகள் கட்டப்பட்டிருக்கும். உயரமான பலிபீடத்தின்மேல் பலிகளை செலுத்துவதற்காக, அதன் பலிபீடத்தின்மேல் ஏறும்போது, அவர்களுடைய நிர்வாணம் அங்கே காணப்படும்.

கர்த்தர் உயர வானத்திலே இருக்கிறார். உயரமான பலிபீடம் கர்த்தருக்கு அருகாமையிலிருக்கும் என்று புறஜாதியார் நம்புகிறார்கள். ஆகையினால் புறஜாதி ஜனங்கள் தங்கள் விக்கிரகங்களுக்கு உயர்ந்த மேடைகளிலே பலிகளை செலுத்துகிறார்கள். கர்த்தரோ தம்முடைய பலிபீடம் உயரமாயிருக்கக்கூடாது என்றும், அது தாழ்வாயிருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பலிபீடம் உயரமாயிருக்கக்கூடாது. ஆனால் கர்த்தரை ஆராதிக்கிற ஜனங்களின் இருதயம் கர்த்தருக்கு நேராக உயர்த்தப்படவேண்டும். கர்த்தர் நாம் செலுத்துகிற பலிகளை நோக்கிப் பார்க்காமல், பலிசெலுத்துகிற நம்முடைய இருதயங்களை நோக்கிப் பார்க்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எங்கு பலிசெலுத்தினாலும், அவர்கள் கர்த்தருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தவேண்டும். "நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" (யாத் 20:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும், கர்த்தரை எல்லா இடங்களிலும் ஆராதிக்கலாம். நாம் கர்த்தருடைய நாமத்தினாலே அவரை ஆராதிப்பதற்காக கூடிவரும்போது, கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும். நாம் கர்த்தருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும்போது, கர்த்தர் நம்மிடத்தில் வந்து நம்மை ஆசீர்வதிப்பார். நாம் கர்த்தருடைய பலிபீடத்தை அழகுபடுத்த வேண்டிய அவசியமில்லை. நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தப்படுத்துவது மாத்திரமே அவசியமாயிருக்கிறது.

## 21 அதிகாரம்

ஐந்தாவது கட்டளையோடும், ஆறாவது கட்டளையோடும் தொடர்புடைய பிரமாணங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் நம்முடைய தேசிய அரசியல் அமைப்பு சட்டங்களில், இந்தப்பிரமாணம் பின்பற்றப்படவில்லை. இந்தப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற தண்டனைகளும் இக்காலத்தில் கொடுக்கப்படவில்லை.

கர்த்தர் இந்த அதிகாரத்தில் சொல்லியிருக்கிற பிரமாணங்களெல்லாம் நம்முடைய நீதிநெறி பிரமாணத்தோடு தொடர்புடையவை. நம்முடைய சமுதாயத்தில் நாம் நீதியான காரியங்களை செய்வதற்கும், நியாயமான காரியங்களை செய்வதற்கும் இந்தப் பிரமாணங்கள் நமக்கு உதவியாயிருக்கும்.

ஐந்தாவது கட்டளையும், ஆறாவது கட்டளையும் இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

அடிமைகளைப்பற்றிய பிரமாணம் (யாத் 21:1-11). கொலை செய்வதற்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:12-14). தன் தகப்பனையும், தாயையும் அடிக்கிறவனுக்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:15). மனிதனை திருடி விற்றுப்போடுகிறவனுக்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:16).

தன் தகப்பனையாவது, தன் தாயையாவது சபிக்கிறவனுக்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:17). சண்டை போடுவது, பிறரை அடிப்பது ஆகியவற்றிற்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:18,19). அடிமைகளைப்பற்றிய பிரமாணம் (யாத் 21:20,21). கர்ப்பவதியை அடிப்பதற்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:22,23). பழிவாங்குதல் சம்பந்தமான பிரமாணம் (யாத் 21:24,25). அடிமையானவனுடைய கண்ணை கெடுப்பதற்கு விரோதமான பிரமாணம் (யாத் 21:26,27).

மாடு முட்டுவதினால் காயமுண்டாவது சம்பந்தமான பிரமாணம் (யாத் 21:28-32). மூடாத குழியினால் உண்டாகும் ஆபத்துக்கள் சம்பந்தமான பிரமாணம் (யாத் 21:33,34). மாடுகள் ஒன்றுக்கொன்று முட்டி சண்டைபோட்டுக்கொள்வது சம்பந்தமான பிரமாணம் (யாத் 21:35,36).

### அடிமைகள்
### யாத் 21:1-11

**யாத் 21:1. மேலும், நீ அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய பிரமாணங்களாவன:**

**யாத் 21:2. எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்.**

**யாத் 21:3. ஒன்றிக்காரனாய் வந்திருந்தானானால், ஒன்றிக்காரனாய்ப் போகக்கடவன்; விவாகம்பண்ணினவனாய் வந்திருந்தானானால், அவன் பெண்ஜாதி அவனோடேகூடப் போகக்கடவள்.**

**யாத் 21:4. அவன் எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொடுத்தும், அவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாவது பெண்பிள்ளைகளையாவது பெற்றும் இருந்தால், அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அவள் எஜமானைச் சேரக்கடவர்கள்; அவன் மாத்திரம் ஒன்றியாய்ப் போகக்கடவன்.**

**யாத் 21:5. அந்த வேலைக்காரன்: என் எஜமானையும் என் பெண்ஜாதியையும் என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்; நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை என்று மனப்பூர்வமாய்ச் சொல்வானானால்,**

**யாத் 21:6. அவன் எஜமான் அவனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், அவனைக் கதவின் அருகேயாவது கதவுநிலையின் அருகேயாவது சேரப்பண்ணி, அங்கே அவன் எஜமான் அவன் காதைக் கம்பியினாலே குத்தக்கடவன்; பின்பு அவன் என்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக் கொண்டிருக்கக்கடவன்.**

**யாத் 21:7. ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால், வேலைக்காரன் விடுதலைபெற்றுப் போவதுபோல அவள் போகக்கூடாது.**

**யாத் 21:8. அவளைத் தனக்கு நியமித்துக் கொண்ட எஜமானின் பார்வைக்கு அவள் தகாதவளாய்ப் போனால், அவள் மீட்கப்படலாம்; அவன் அவளுக்குத் துரோகம்பண்ணி, அவளை அந்நியர் கையில் விற்றுப்போட அவனுக்கு அதிகாரம் இல்லை.**

**யாத் 21:9. அவன் தன் குமாரனுக்கு அவளை நியமித்திருந்தானானால், தன் குமாரத்திகளை நடத்துவதுபோல அவளையும் நடத்தக்கடவன்.**

**யாத் 21:10. அவன் வேறொரு பெண்ணைக் கொண்டானாகில், இவளுக்குரிய அன்னவஸ்திரவிவாகக்கடமை ஆகிய இவைகளில் குறைவுசெய்யாமல் இருப்பானாக.**

**யாத் 21:11. இம்மூன்றும் அவன் அவளுக்குச் செய்யாமற்போனால், அவள் பணங்கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவள்.**

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் மனுஷர் மத்தியிலே ஜீவனம்பண்ணுகிறோம். மனுஷர் ஒருவருக்கொருவர் அன்பாயும், ஆதரவாயும், சமாதானமாயும் ஜீவிக்கவேண்டும். நம்மை நேசிப்பதுபோல, நாம் பிறரையும் நேசிக்கவேண்டும். ஆனாலும் மனுஷர் மத்தியிலே பாவம் இருப்பதினால், அவர்கள் மத்தியிலே பிரச்சனைகளும் இருக்கிறது.

இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்து வரும் இரண்டு அதிகாரத்திலும் மனுஷரோடு சம்பந்தப்பட்ட காரியங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை பிரமாணங்கள் என்று அழைக்கப்படுகிறது. கர்த்தரே இந்தப் பிரமாணங்களை தம்முடைய தெய்வீக ஞானத்தினால் யோசித்து, திட்டமிட்டு, இயற்றியிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய பிரமாணங்களை மோசேக்கு தனிப்பட்ட முறையில் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசேயும் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். கர்த்தர் சொல்லுகிற முதலாவது பிரமாணம் அடிமைகளுக்கும், அவர்களுடைய எஜமான்களுக்கும் இடையே உள்ள தொடர்பை பற்றியது. எஜமான்கள் தங்கள் அடிமைகளுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும். அவர்களை கொடுமைப்படுத்தக்கூடாது.

முதலாவது பிரமாணம் ஆண் அடிமைகளைப்பற்றிய பிரமாணமாகும். இவர்களுடைய பெற்றோர் தங்கள் வறுமையினால், தங்கள் ஆண்பிள்ளைகளை அடிமைகளாக விற்றுப்போட்டிருக்கலாம். அல்லது பெற்றோர் ஏதாவது குற்றம் செய்ததினால், அந்தக் குற்றத்திற்கு தண்டனையாக, இவர்களுடைய ஆண்பிள்ளைகளை அடிமைகளாக கொடுத்துவிடவேண்டுமென்று நியாயாதிபதிகள் தீர்ப்பு சொல்லியிருக்கலாம்.

கர்த்தர் அடிமைகளைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். "எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்" (யாத் 21:2) என்பது கர்த்தருடைய பிரமாணமாகும்.

அந்த அடிமை ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன். ஆண் அடிமைகளைக் குறித்து பதினொரு பிரமாணங்கள் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 21:2-6). மிகவும் ஏழையான எபிரெயன் தான் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு வழியில்லாமல் இருப்பானானால் அவனை அடிமையாக விற்கலாம். (யாத் 21:1-6; லேவி 25:25-26, 39-40). ஒரு திருடனுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை அவனால் செலுத்த முடியவில்லையென்றால், அந்தத் திருடனை அடிமையாக விற்றுப்போடலாம். (யாத் 22:3).

அடிமையானவன் ஆறுவருஷம் அடிமை வேலை செய்யலாம். ஏழாம் வருஷத்தில் அவன் விடுதலை பெறவேண்டும். ஏழாம் வருஷம் ஒய்வு வருஷமாயிருக்கிறது. அடிமையானவன் ஒன்றிக்காரனாய் வந்திருந்தானானால், ஒன்றிக்காரனாய்ப் போகக்கடவன்; விவாகம்பண்ணினவனாய் வந்திருந்தானானால், அவன் பெண்ஜாதி அவனோடேகூடப் போகக்கடவள் (யாத் 21:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவன் எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொடுத்தும், அவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாவது பெண்பிள்ளைகளையாவது பெற்றும் இருந்தால், அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அவள் எஜமானைச் சேரக்கடவர்கள்; அவன் மாத்திரம் ஒன்றியாய்ப் போகக்கடவன் (யாத் 21:4) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அடிமையானவன் தன் எஜமானிடத்தில் ஆறுவருஷம் சேவித்த பின்பு, ஏழாவது வருஷத்தில் அவன் தன் எஜமானைவிட்டு விடுதலை பெற்று புறப்பட்டுப்போகவேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. அடிமையானவன் விரும்பினால், அவன் தொடர்ந்து தன் எஜமானை சேவிக்கலாம்.

வேலைக்காரன் தன் எஜமானை ஆறுவருஷம் சேவித்த பின்பு, அவனை நோக்கி "என் எஜமானையும் என் பெண்ஜாதியையும் என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்; நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை" என்று மனப்பூர்வமாய்ச் சொல்வானானால், அவன் எஜமான் அவனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக்கொண்டுபோகவேண்டும் (யாத் 21:5,6).

அந்த எஜமான் தன் வேலைக்காரனை கதவின் அருகேயாவது கதவுநிலையின் அருகேயாவது சேரப்பண்ணி, அங்கே அவன் எஜமான் அவன் காதைக் கம்பியினாலே குத்தக்கடவன்; பின்பு அவன் என்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக் கொண்டிருக்கக்கடவன் (யாத் 21:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அடிமையின் காதை கம்பியினால் குத்துவது என்பது கீழ்ப்படிதலுக்கும், அடிமைத்தனத்திற்கும் அடையாளம். அவனுடைய எஜமான் மரிக்கும் வரையிலும், அல்லது யூபிலி வருஷம் வரையிலும் அந்த அடிமை தன் எஜமானுக்கு அடிமை வேலைசெய்ய வேண்டும் (லேவி 25:40-46,55).

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறார். எபிரெயருடைய வேலைக்காரனும், அவனுடைய எஜமானும் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். வேலைக்காரன் அடிமையானவனாகயிருந்தாலும், எஜமான் அவனை சுயாதீனமுள்ளவனைப்போல நடத்தவேண்டும்.

வேலைக்காரன் எபிரெயனாகவும், அவனுடைய எஜமானும் எபிரெயனாகவும் இருக்கும்போது, இருவருமே கர்த்தருக்குள் சகோதரர்களாகயிருக்கிறார்கள். வேலைக்காரன் தன் எஜமானுக்கு அடிமையாகயிருந்தாலும் அவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்.

"கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்" (1கொரி 7:22,23).

எபிரெய எஜமான்கள் தங்களுடைய வேலைக்காரரை கொடுமைப்படுத்தக்கூடாது. அவர்கள் ஆறு வருஷம் தங்கள் எஜமான்களை சேவித்த பின்பு, எஜமான்கள் தங்கள் வேலைக்காரரை கர்த்தருடைய பிரமாணத்தின்படி விடுதலை செய்து விடவேண்டும். வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களை சேவிக்கும் வருஷங்களில், எஜமான்கள் அவர்களை மனிதாபிமானத்தோடு நடத்தவேண்டும்.

கர்த்தர் ஆண் வேலைக்காரனைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லியதுபோல, பெண் வேலைக்காரிகளைப்பற்றியும் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். வேலைக்காரிகளுடைய பெற்றோர், தங்களுடைய வறுமையினால், தங்கள் மகளை இளவயதிலேயே அடிமையாக விற்றுப்போட்டிருக்கலாம்.

கர்த்தர் வேலைக்காரிகளைப்பற்றிச் சொல்லும்போது, "ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால், வேலைக்காரன் விடுதலைபெற்றுப் போவதுபோல அவள் போகக்கூடாது. அவளைத் தனக்கு நியமித்துக் கொண்ட எஜமானின் பார்வைக்கு அவள் தகாதவளாய்ப் போனால், அவள் மீட்கப்படலாம்; அவன் அவளுக்குத் துரோகம்பண்ணி, அவளை அந்நியர் கையில் விற்றுப்போட அவனுக்கு அதிகாரம் இல்லை" (யாத் 21:7,8) என்று சொல்லுகிறார்.

"வேலைக்காரன் விடுதலைபெற்றுப் போவதுபோல அவள் போகக்கூடாது" என்னும் இந்த வாக்கியத்தில், "போவதுபோல" என்பதற்கு ஆண் அடிமை ஆறு வருஷம் வேலைசெய்து விடுதலை பெற்றுபோவதுபோல என்று பொருள் (யாத் 21:2). ஒவ்வொரு ஏழாவது வருஷமும் யூதருக்கு யூபிலி வருஷமாகும். யூபிலி வருஷத்தில் யூதர்கள் அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் யாரையும் நிரந்தரமாக அடிமையாக்கக்கூடாது. (2இராஜா 4:1)

வேலைக்காரிகள் சிறுவயதிலேயே தங்கள் எஜமானுக்கு வேலை செய்ய வந்துவிட்டதினால், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது, அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் பொறுப்பும் அவர்களுடைய எஜமான்களுக்கு உண்டு. எஜமான்கள் தங்கள் வேலைக்காரிகளுக்கு நன்மை செய்யவேண்டிய காலத்தில் அவர்களுக்கு நன்மை செய்யாமல், அவர்களை மிகவும் தந்திரமாக அந்நியர் கையிலே விற்றுப்போடக்கூடாது.

வேலைக்காரிகளுக்கு எஜமானுடைய வீட்டிலே ஏமாற்றம் ஏற்படக்கூடாது. அவர்கள் ஏமாறுவதற்கான சூழ்நிலை வரும்போது, எஜமான்கள் அதற்குரிய நிவாரணங்களை தங்கள் வேலைக்காரிகளுக்கு செய்யவேண்டும்.

எஜமான் தன் வேலைக்காரியை அந்நியர் கையில் விற்றுப்போடக்கூடாது. இவ்வாறு விற்றுப்போடுவதற்கு அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஒரு பெண் அடிமை தன்னுடைய எஜமானுக்கு மனைவியானால், அவள் விடுதலை பெற்றுப் போகக்கூடாது. அவளுடைய குடும்பத்தார் அவளை மீட்கலாம். இல்லையெனில் அவள் தன் எஜமானுக்கு மனைவியாக இருக்க வேண்டும். அவளைப் புறஜாதியாருக்கு விற்கக்கூடாது (யாத் 21:7-8).

எஜமான் தன் குமாரனுக்கு அவளை நியமித்திருந்தானானால், தன் குமாரத்திகளை நடத்துவதுபோல அவளையும் நடத்தக்கடவன் (யாத் 21:9). எஜமானின் குமாரன் வேறொரு பெண்ணைக் கொண்டானாகில், இவளுக்குரிய அன்னவஸ்திர விவாகக்கடமை ஆகிய இவைகளில் குறைவுசெய்யாமல் இருப்பானாக (யாத் 21:10). எஜமானின் குமாரன் இம்மூன்றும் அவளுக்குச் செய்யாமற்போனால், அவள் பணங்கொடாமல் விடுதலைபெற்றுப்போகக்கடவள் (யாத் 21:11).

கர்த்தர் வேலைக்காரிகளுக்கு செய்யவேண்டிய நிவாரண உதவிகளைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். "எஜமான் தன் குமாரனுக்கு அவளை நியமித்திருந்தானானால், தன் குமாரத்திகளை நடத்துவதுபோல அவளையும் நடத்தக்கடவன். அவன் வேறொரு பெண்ணைக் கொண்டானாகில், இவளுக்குரிய அன்னவஸ்திரவிவாகக்கடமை ஆகிய இவைகளில் குறைவுசெய்யாமல் இருப்பானாக. இம்மூன்றும் அவன் அவளுக்குச் செய்யாமற்போனால், அவள் பணங்கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவள்" *(யாத் 21:9-11)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## மரணதண்டனை
## யாத் 21:12-21

**யாத் 21:12. ஒரு மனிதனைச் சாகும்படி அடித்தவன், நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.**

**யாத் 21:13. ஒருவன் பதிவிருந்து கொல்லாமல், தேவச்செயலாய்த் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால், அவன் ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தை உனக்கு நியமிப்பேன்.**

**யாத் 21:14. ஒருவன் பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து, அவனைத் துணிகரமாய்க் கொன்றுபோட்டால், அவனை என் பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டு போய்க் கொலைசெய்யவேண்டும்.**

**யாத் 21:15. தன் தகப்பனையாவது தன் தாயையாவது அடிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.**

**யாத் 21:16. ஒருவன் ஒரு மனிதனைத் திருடி விற்றுப்போட்டாலும், இவன் அவன் வசத்திலிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.**

**யாத் 21:17. தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.**

**யாத் 21:18. மனிதர் சண்டைபண்ணி, ஒருவன் மற்றொருவனைக் கல்லால் எறிந்ததினாலாவது கையால் அடித்ததினாலாவது அவன் சாவாமல் கட்டில் கிடையாய்க் கிடந்து,**

**யாத் 21:19. திரும்ப எழுந்திருந்து வெளியிலே தன் ஊன்றுகோலைப் பிடித்துக்கொண்டு நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்; ஆனாலும், அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாய்க் குணமாக்குவிக்கக்கடவன்.**

**யாத் 21:20. ஒருவன் தனக்கு அடிமையானவனையாவது தனக்கு அடிமையானவளையாவது, கோலால் அடித்ததினாலே, அவன் கையால் இறந்துபோனால், பழிக்குப்பழி வாங்கப்படவேண்டும்.**

**யாத் 21:21. ஒரு நாளாவது இரண்டு நாளாவது உயிரோடிருந்தால், அவர்கள் அவனுடைய உடைமையாகையால், பழிவாங்கவேண்டியதில்லை.**

"கொலைசெய்யாதிருப்பாயாக" என்பது கர்த்தருடைய பத்துக்கட்டளைகளில் ஒரு கட்டளை. கர்த்தர் இந்தப் பிரமாணத்தில் பிறரை கொலை செய்கிறவனுக்கு தண்டனையை நியமித்திருக்கிறார். "ஒரு மனிதனைச் சாகும்படி அடித்தவன், நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்" *(யாத் 21:12)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கோபம், பொறாமை, பழிவாங்குதல் ஆகிய குணங்களினால் ஒருவனைக் கொன்றுபோடும், இந்தக் குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களில் மரண தண்டனை விதிக்கப்படுதல், யுத்தங்களில் எதிரிகளைச் சங்காரம் பண்ணுதல் ஆகியவற்றைத் தேவனுடைய பிரமாணம் தடைபண்ணவில்லை. *(யாத் 21:12-17; எண் 25:17; உபா 7:2; உபா 13:15; உபா 20:13).*

ஒருவனை வேண்டுமென்றே திட்டமிட்டு கொலை செய்தவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவன் பிறனுக்கு விரோதமாக சதிமோசம் செய்து, அவனை துணிகரமாய்க் கொன்றுபோடாமல், கைப்பிசகாய்க் கொன்றுபோட்டால், அவனுக்கு மரணதண்டனை நியமிக்கப்படவில்லை. "ஒருவன் பதிவிருந்து கொல்லாமல், தேவச்செயலாய்த் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால், அவன் ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தை உனக்கு நியமிப்பேன்" (யாத் 21:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவன் வேண்டுமென்றே கொல்லாமல், கைபிசகி ஒருவனைக் கொன்றுபோட்டால் அவன் அடைக்கலப் பட்டணத்திற்கு ஓடிப்போகக்கடவன். பூர்வகால வழக்கத்தின் பிரகாரம் மரித்தவனுடைய நெருங்கிய உறவுக்காரன் கொலைசெய்தவனைப் பழிவாங்குவான். வேதாகமத்தில் இவன் "பழிவாங்குகிறவன்" என்று அழைக்கப்படுகிறான். (எண் 35:12; உபா 19:6,12; யோசு 20:3-9). பழிசுமத்தப்பட்டவன் அடைக்கலப் பட்டணத்திற்கு ஓடிவந்து, அடைக்கலம் புகுந்துகொண்டால், நியாயாதிபதிகளுக்கு முன்பாக அவனுடைய வழக்கு தீர்க்கப்படும் வரையிலும் அவன் அங்கு பாதுகாப்பாக இருக்கலாம் (எண் 35; உபா 4:41-49; உபா 19:1-13).

"தேவச்செயலாய்த் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால்" என்பது எபிரெயருடைய வழக்குச்சொல்லாகும். ஒரு காரியம் நடைபெறுவதற்குத் தேவன் அனுமதித்திருக்கிறார் என்பது இதன் பொருள்.

பதிவிருந்து கொல்லாமல், சதிமோசம்பண்ணாமல், தேவச்செயலாய், கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டவன், தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள அடைக்கலப்பட்டணத்திற்கு ஓடிப்போக வேண்டும். இப்படிப்பட்டவர்களை பாதுகாப்பதற்காகவே கர்த்தர் கானான் தேசத்திலே அடைக்கலப்பட்டணங்களை நியமித்திருக்கிறார்.

"ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலம்" என்பது நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அடைக்கலப் பட்டணங்களை குறிப்பிடுகிறது (எண் 35; உபா 19). அடைக்கலப் பட்டணங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக, தேவனுடைய பலிபீடம் அடைக்கலம் பெறும் ஸ்தலமாக இருந்தது (1இராஜா 1:50-53; 1இராஜா 2:28-29).

இக்காலத்தில் நமக்கு அடைக்கலப்பட்டணங்கள் எதுவுமில்லை. நீதிமன்றமும், நியாயாதிபதிகளும் அடைக்கலப்பட்டணங்களைப்போல இருக்கிறார்கள். அவர்கள் மனுஷருடைய கொலை வழக்குகளை நீதியாய் நியாயம் விசாரித்து, கொலைக்குற்றவாளிகளுக்கு நீதியான தண்டனை கொடுப்பார்கள்.

"ஒருவன் பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து, அவனைத் துணிகரமாய்க் கொன்றுபோட்டால், அவனை என் பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டு போய்க் கொலைசெய்யவேண்டும்" (யாத் 21:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளில் ஒரு கட்டளையாக, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத் 20:12) என்று சொல்லியிருக்கிறார். தங்களுடைய பெற்றோரை கனம்பண்ணாமல், அவர்களை அடிக்கிறவர்களுக்கும், சபிக்கிறவர்களுக்கும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் தண்டனையை சொல்லியிருக்கிறார்.

"தன் தகப்பனையாவது தன் தாயையாவது அடிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்" (யாத் 21:15) என்றும், "தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்" (யாத் 21:17) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பெற்றோரை கனம்பண்ணாத பிள்ளைகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரை அடிப்பதினாலும், சபிப்பதினாலும், கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம் எல்லோருக்கும் பரமபிதாவாகயிருக்கிறார். பெற்றோரைக் கனம்பண்ணாதவர்களை மனுஷர் தண்டிக்காவிட்டாலும், நம்முடைய பரமபிதாவாகிய கர்த்தர் அவர்களை தண்டிக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார்.

மனிதனை திருடி விற்றுப்போடுகிறவனுக்கு கர்த்தருடைய பிரமாணத்தில் மரணதண்டனை நியமிக்கப்பட்டிருக்கிறது. "ஒருவன் ஒரு மனிதனைத் திருடி விற்றுப்போட்டாலும், இவன் அவன் வசத்திலிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்" (யாத் 21:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவன் மனிதனை திருடுவதுபோல, ஸ்திரீகளையோ பிள்ளைகளையோ திருடினாலும், இந்தப் பிரமாணத்தின்படி அவனுக்கு மரணதண்டனை கொடுக்கப்படும். மனிதனை திருடுகிறவன், அவனை புறஜாதியாரிடத்தில் விற்றுப்போடுவதற்காக திருடுகிறான். இஸ்ரவேல் புத்திரர் திருடப்பட்ட மனுஷனை கிரயத்திற்கு வாங்கமாட்டார்கள். புறஜாதியாரோ குறைந்த விலைக்கு எது கிடைத்தாலும் வாங்கிக்கொள்வார்கள். மனிதனைத் திருடுகிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷர் மத்தியிலே அவ்வப்போது வாக்குவாதங்களும் சண்டை சச்சரவுகளும் உண்டாகிறது. இதனால் கைகலப்புகளும், அடிதடிகளும் ஏற்படுகிறது. சண்டை போடுகிறவன் பிறனை கொலை செய்யும் அளவுக்கு துணியாமல், அடித்து காயப்படுத்திவிடுவான். அடிபட்டவனால் வேலைக்கு போக முடியாது. அவனுடைய அவயவங்களில் சேதாரமுண்டாகும். இப்படிப்பட்ட பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்காக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார்.

காயப்படுத்தினவன், காயம்பட்டவனுடைய காயத்தை ஆற்றுவதற்கும் செலவு பண்ணவேண்டும், அவன் காயம்பட்டதினால் வேலை செய்யமுடியாமல் போனதற்கான நஷ்டத்தையும் ஈடுசெய்யவேண்டும்.

"மனிதர் சண்டைபண்ணி, ஒருவன் மற்றொருவனைக் கல்லால் எறிந்ததினாலாவது கையால் அடித்ததினாலாவது அவன் சாவாமல் கட்டில் கிடையாய்க் கிடந்து, திரும்ப எழுந்திருந்து வெளியிலே தன் ஊன்றுகோலைப் பிடித்துக்கொண்டு நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்; ஆனாலும், அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாய்க் குணமாக்குவிக்கக்கடவன்" (யாத் 21:18,19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கொலைசெய்தவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது. (யாத் 21:12) ஆனால் அடிபட்டவன் சாவாமல் கட்டில் கிடையாகக் கிடப்பானானால், அடித்தவன் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாய்க் குணமாக்குவிக்கக்கடவன். (யாத் 21:18-19).

எஜமான் தன்னுடைய அடிமையை தண்டிக்கும்போது, அந்த அடிமை இறந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் என்ன செய்யவேண்டும் என்றும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். தன்னுடைய வேலைக்காரன் இறந்துபோகுமளவுக்கு அடித்து துன்பப்படுத்துகிற எஜமான் மகாபெரிய கொடூரனாகவும், மகாபெரிய பாவியாகவும் இருக்கிறான். அந்த எஜமானை பழிவாங்கவேண்டும் என்பதே கர்த்தருடைய பிரமாணமாயிருக்கிறது.

"ஒருவன் தனக்கு அடிமையானவனையாவது தனக்கு அடிமையானவளையாவது, கோலால் அடித்ததினாலே, அவன் கையால் இறந்துபோனால், பழிக்குப்பழி வாங்கப்படவேண்டும்" (யாத் 21:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அடிபட்ட அடிமை, ஒரு நாளாவது இரண்டு நாளாவது உயிரோடிருந்தால், அவர்கள் அவனுடைய உடைமையாகையால், பழிவாங்கவேண்டியதில்லை (யாத் 21:21) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

## ஜீவனுக்கு ஜீவன்
## யாத் 21:22-36

**யாத் 21:22. மனிதர் சண்டைபண்ணி, கர்ப்பவதியான ஒரு ஸ்திரீயை அடித்ததினால், அவளுக்கு வேறே சேதமில்லாமல் கர்ப்பம் விழுந்துபோனால், அடிபட்ட ஸ்திரீயின் புருஷன் அடித்தவன் மேல் சுமத்துகிறதற்குத்தக்கதாயும் நியாயாதிபதிகள் செய்யும் தீர்ப்பின்படியும் தண்டம் கொடுக்க வேண்டும்.**

**யாத் 21:23. வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன்.**

**யாத் 21:24. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,**

**யாத் 21:25. சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்.**

**யாத் 21:26. ஒருவன் தன் அடிமையானவன் கண்ணையாகிலும் தன் அடிமைப்பெண்ணின் கண்ணையாகிலும் அடித்ததினால் அதைக் கெடுத்தால், அவன் கண்ணுக்குப் பதிலாக அவனை விடுதலைபண்ணிவிட வேண்டும்.**

**யாத் 21:27. அவன் தன் அடிமையானவன் பல்லையாவது தன் அடிமைப்பெண்ணின் பல்லையாவது உதிர அடித்தால், அவன் பல்லுக்குப்பதிலாக அவனை விடுதலைபண்ணிவிடவேண்டும்.**

**யாத் 21:28. ஒரு மாடு ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது முட்டினதினால் சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியப்படவேண்டும், அதின் மாம்சம் புசிக்கப்படலாகாது; அப்பொழுது மாட்டின் எஜமான் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்.**

**யாத் 21:29. தன் மாடு வழக்கமாய் முட்டுகிற மாடாயிருந்து, அது அதின் எஜமானுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைக் கட்டி வைக்காததினால், அது ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது கொன்றுபோட்டால், மாடும் கல்லெறியப்படவேண்டும், அதின் எஜமானும் கொலை செய்யப்படவேண்டும்.**

**யாத் 21:30. அபராதம் கொடுக்கும்படி தீர்க்கப்பட்டதானால், அவன் தன் ஜீவனை மீட்கும்பொருளாக விதிக்கப்பட்ட அபராதத்தைக் கொடுக்கக்கடவன்.**

**யாத் 21:31. அது ஒருவன் மகனை முட்டினாலும் சரி, ஒருவன் மகளை முட்டினாலும் சரி, இந்தத் தீர்ப்பின்படியே அவனுக்குச் செய்யப்படவேண்டும்.**

**யாத் 21:32. அந்த மாடு ஒரு அடிமையானவனையாவது ஒரு அடிமைப்பெண்ணையாவது முட்டினால், அதற்கு உடையவன் அவர்களுடைய எஜமானுக்கு முப்பது சேக்கல் நிறையான வெள்ளியைக் கொடுக்கக்கடவன்; மாடு கல்லெறியப்படவேண்டும்.**

**யாத் 21:33. ஒருவன் ஒரு குழியைத் திறந்து வைத்ததினாலாவது, ஒரு குழியை வெட்டி அதை மூடாதேபோனதினாலாவது, அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால்,**

**யாத் 21:34. குழிக்கு உடையவன் அதற்கு ஈடாகப் பணத்தை மிருகத்தின் எஜமானுக்குக் கொடுக்கக்கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டும்.**

**யாத் 21:35. ஒருவனுடைய மாடு மற்றவனுடைய மாட்டை முட்டினதினால் அது செத்தால், உயிரோடிருக்கிற மாட்டை அவர்கள் விற்று, அதின் கிரயத்தைப் பங்கிட்டு, செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளக்கடவர்கள்.**

**யாத் 21:36. அந்த மாடு முன்னமே முட்டுகிற மாடென்று அதின் எஜமான் அறிந்திருந்தும், அதைக் கட்டிவைக்காதிருந்தால், அவன் மாட்டுக்கு மாட்டைக் கொடுக்கக்கடவன்; செத்ததோ அவனுடையதாக வேண்டும்.**

கர்த்தருடைய பிரமாணம் கர்ப்பவதியின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கர்ப்பவதி தன் சரீரத்தில் பலவீனமாயிருப்பாள். மனுஷர் கர்ப்பவதியோடு சண்டைபண்ணி, கர்ப்பவதிக்கோ அல்லது அவளுடைய கர்ப்பத்திற்கோ சேதம் ஏற்படுத்தும்போது, என்ன செய்யவேண்டும் என்று கர்த்தருடைய பிரமாணம் தெளிவுபடுத்துகிறது.

மனிதர் சண்டைபண்ணி, கர்ப்பவதியான ஒரு ஸ்திரீயை அடித்ததினால், அவளுக்கு வேறே சேதமில்லாமல் கர்ப்பம் விழுந்துபோனால், அடிபட்ட ஸ்திரீயின் புருஷன் அடித்தவன்மேல் சுமத்துகிறதற்குத்தக்கதாயும் நியாயாதிபதிகள் செய்யும் தீர்ப்பின்படியும் தண்டம் கொடுக்க வேண்டும். வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும் (யாத் 21:22-25) என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது.

ஒரு ஸ்திரீக்கு மற்றவர்கள் சண்டை போடும்போது அவளுடைய கர்ப்பம் கலைந்துபோனால், அடிபட்ட ஸ்திரீயின் புருஷன் அடித்தவன்மேல் தண்டம் வாங்கலாம். அந்த ஸ்திரீ இறந்துபோனால் ஜீவனுக்கு ஜீவன் கொடுக்கப்படவேண்டும் (யாத் 21:23-25).

"ஜீவனுக்கு ஜீவன்" என்னும் இப்படிப்பட்ட தண்டனை கொடுக்கும்போது ஜனங்கள் மத்தியிலே குற்றம் குறைந்து போகும். சிறைச்சாலைகள் அதிகமாகத் தேவைப்படாது. தண்டனையைக்குறித்து உண்மையான பயம் இல்லையென்றால், குற்றம் குறைவதற்கு வாய்ப்பில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இந்தப் பிரமாணத்தைப்பற்றி தம்முடைய உபதேசத்தில் சொல்லியிருக்கிறார். "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (மத் 5:38).

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. இந்தத் தண்டனையை, தனிமனிதர் தங்களுடைய கைகளில் எடுத்துக்கொண்டு, யாரையும் பழிவாங்கக்கூடாது. ஒருவரையும் பழிவாங்கமலிருப்பது நல்லது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யூதருடைய மூப்பர்கள், இந்தப் பிரமாணத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, தங்களுக்கு பிடிக்காதவர்களையெல்லாம் பழிவாங்கினார்கள்.

நாம் யாரையும் பழிவாங்காமல், எல்லோரிடத்திலும் அன்பாயிருக்கவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் உபதேசம். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத் 5:39).

கர்த்தர் தம்முடைய தெய்வீக பராமரிப்பினால், பிறருக்கு தீங்கு செய்தவர்களை தண்டிக்கிறார். கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக பாவிகளுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. பழிவாங்குதல் கர்த்தருக்குரியதாகயிருக்கும்போது, இந்தப் பிரமாணத்தை நம்முடைய கையில் எடுத்துக்கொண்டு, நம்முடைய இஷ்டம்போல யாரையும் பழிவாங்கக்கூடாது. பழிவாங்கும் பொறுப்பை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடவேண்டும்.

"அதோனிபேசேக் ஒடிப்போகையில், அவனைப் பின்தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள். அப்பொழுது அதோனிப்பேசேக்: எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின்கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான். அவனை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்; அங்கே அவன் செத்துப்போனான்" (நியா 1:6,7).

"கொள்ளையிடப்படாதிருந்தும், கொள்ளையிடுகிறவனும், துரோகம் பண்ணாதிருக்கிறவர்களுக்குத் துரோகம் பண்ணுகிறவனுமாகிய உனக்கு ஐயோ! நீ கொள்ளையிட்டு முடிந்தபின்பு கொள்ளையிடப்படுவாய்; நீ துரோகம் பண்ணித் தீர்ந்தபின்பு உனக்குத் துரோகம்பண்ணுவார்கள்" (ஏசா 33:1).

"இதோ, ஜனங்கள் அக்கினிக்கு இரையாக உழைத்து, ஜனங்கள் விருதாவாக இளைத்துப்போகிறது கர்த்தருடைய செயல் அல்லவோ?" (ஆப 2:13).

"அப்பொழுது, இயேசு அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" (மத் 26:52).

நியாயாதிபதிகள் இந்தப் பிரமாணத்தை மிகவும் கவனமாக பயன்படுத்தவேண்டும். நியாயாதிபதிகள் காயப்படுத்தியவர்களுக்கு தண்டனை கொடுக்கவேண்டும். காயம்பட்டவர்களுக்கோ நிவாரணம் கொடுக்கவேண்டும். நியாயாதிபதிகளிடத்தில் பட்சபாதம் இருக்கக்கூடாது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், ஒருவருக்கு ஏற்பட்ட காயத்தின் அளவுக்குத்தக்கதாக, அவரை காயப்படுத்தியவருக்கு தண்டனை கொடுப்பது வழக்கம். தண்டனையின் அளவும் வித்தியாசமாகயிருக்கும். குற்றம் செய்தவர்களுக்கு கிடைக்கும் தண்டனைகளை ஜனங்கள் பார்ப்பார்கள். தங்களுக்கு இதுபோன்ற தண்டனை கிடைக்கக்கூடாது என்று தீர்மானித்து, ஜனங்கள் குற்றம் செய்யாமல், குற்றத்திற்கு விலகி ஜீவிப்பார்கள்.

கர்த்தர் அடிமைகள்மீதும் கிருபையும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். எஜமான் தன் அடிமைகளுக்கு சரீர சேதாரம் உண்டாகும் வண்ணமாக, அவர்களை அடித்துப்போட்டால், அடிமைகளுக்கு நிவாரணம் கொடுக்கப்படவேண்டும்.

கர்த்தர் இதுபற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லும்போது, "ஒருவன் தன் அடிமையானவன் கண்ணையாகிலும் தன் அடிமைப்பெண்ணின் கண்ணையாகிலும் அடித்ததினால் அதைக் கெடுத்தால், அவன் கண்ணுக்குப் பதிலாக அவனை விடுதலைபண்ணிவிட வேண்டும். அவன் தன் அடிமையானவன் பல்லையாவது தன் அடிமைப்பெண்ணின் பல்லையாவது உதிர அடித்தால், அவன் பல்லுக்குப்பதிலாக அவனை விடுதலைபண்ணிவிடவேண்டும்" (யாத் 21:26,27) என்று சொல்லுகிறார்.

அடிமைகளிடத்தில் எஜமான் இரக்கமில்லாமல் நடந்து கொண்டால், தனக்கு அடிமை வேலை செய்கிறவர்களை அவன் இழந்துபோக வேண்டும் (யாத் 21:26-27). விடுதலை பண்ணப்பட்ட அடிமைகள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிப் போகலாம். அவர்கள் விரும்பினால் அந்தத் தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்குப் போகலாம்.

போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லும்போது, கர்த்தர் மாடுகளின்மீது மாத்திரமே கரிசனையோடிருக்கிறார் என்றும், அவர் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறார் என்றும் சொல்லுகிறார்கள். கர்த்தர் மனுஷருக்காகவே மாடுகளின்மீது கரிசனையாயிருக்கிறார்.

"போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ? நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது" (1கொரி 9:9,10).

இஸ்ரவேல் புத்திரர் ஆடுமாடுகளை வளர்க்கிற தொழிலை செய்கிறார்கள். மாடுகளில் சில முட்டுகிற மாடாகயிருக்கும். அது மனுஷரை முட்டி அவர்களுக்கு பலத்த காயத்தையோ அல்லது உயிர்ச்சேதத்தையோ உண்டுபண்ணிவிடும். கர்த்தர் இதுபற்றியும் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார்.

"ஒரு மாடு ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது முட்டினதினால் சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியப்படவேண்டும், அதின் மாம்சம் புசிக்கப்படலாகாது; அப்பொழுது மாட்டின் எஜமான் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்" என்றும்,

"தன் மாடு வழக்கமாய் முட்டுகிற மாடாயிருந்து, அது அதின் எஜமானுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைக் கட்டி வைக்காததினால், அது ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது கொன்றுபோட்டால், மாடும் கல்லெறியப்படவேண்டும், அதின் எஜமானும் கொலை செய்யப்படவேண்டும்" (யாத் 21:28,29) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"அபராதம் கொடுக்கும்படி தீர்க்கப்பட்டதானால், அவன் தன் ஜீவனை மீட்கும்பொருளாக விதிக்கப்பட்ட அபராதத்தைக் கொடுக்கக்கடவன்" என்றும்,

"அது ஒருவன் மகனை முட்டினாலும் சரி, ஒருவன் மகளை முட்டினாலும் சரி, இந்தத் தீர்ப்பின்படியே அவனுக்குச் செய்யப்படவேண்டும்" என்றும்,

"அந்த மாடு ஒரு அடிமையானவனையாவது ஒரு அடிமைப்பெண்ணையாவது முட்டினால், அதற்கு உடையவன் அவர்களுடைய எஜமானுக்கு முப்பது சேக்கல் நிறையான வெள்ளியைக் கொடுக்கக்கடவன்; மாடு கல்லெறியப்படவேண்டும்" (யாத் 21:30-32) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு மாடு முட்டியதினால், ஒருவருக்கு சாவு உண்டாகுமானால் அந்த மாடு கல்லெறியப்படவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த மாட்டின் எஜமான் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். மாட்டுக்கு தண்டனை கொடுக்கப்படவில்லையென்றால், மாடு முட்டியதினால் செத்துப்போன நபரின் வீட்டார், மாட்டின் எஜமானனை பழிவாங்க நினைப்பார்கள். மனுஷருடைய இருதயத்தில் பழிவாங்கும் எண்ணம் வரக்கூடாது என்பதற்காக, கர்த்தர் மாட்டுக்கு தண்டனை கொடுக்கிறார்.

ஒரு மாடு வழக்கமாய் முட்டுகிற மாடாயிருக்குமானால், அதன் எஜமான் அதை மிகவும் கவனமாய் வளர்க்கவேண்டும். அந்த மாடு முட்டியதினால் சாவு உண்டானால், அந்த மாடும் கல்லெறியப்படவேண்டும். அதன் எஜமானும் கல்லெறியப்படவேண்டும். மனுஷருக்கு பாதுகாப்பு கொடுக்கும் வண்ணமாக, கர்த்தர் மாட்டுக்கு தண்டனை கொடுக்கும்போது, மாட்டின் எஜமானுக்கும் தண்டனை கொடுக்கிறார். மாடுகளுக்கு எஜமானாயிருக்கிறவர்கள், தங்களுக்கு வரப்போகும் தண்டனைகளை நினைத்துப் பார்த்து, தங்களுடைய மாடுகளை மிகவும் கவனமாய் வளர்ப்பார்கள்.

கர்த்தர் மனுஷர்மீது கிருபையும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். மனுஷருடைய பிரயோஜனத்திற்காக கர்த்தர் மாடுகளையும் கழுதைகளையும் சிருஷ்டித்திருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, இந்த மிருகங்களே குடும்ப சொத்தாகயிருக்கிறது. இவை செத்துப்போகும்போது அவர்களுடைய குடும்பத்தின் சம்பத்தும் அழிந்துபோகிறது.

மனுஷருடைய கவனக்குறைவினால் மிருகங்கள் செத்துப்போவதற்கு வாய்ப்புள்ளது. இதனால் மிருகத்தின் எஜமான்களுக்கு இழப்பு உண்டாகும். யாருடைய கவனக்குறைவினால் இந்த மிருகங்களுக்கு இழப்பு உண்டாயிற்றோ அவன் மிருகத்தின் எஜமானுக்கு இழப்பீடு தரவேண்டும்.

"ஒருவன் ஒரு குழியைத் திறந்து வைத்ததினாலாவது, ஒரு குழியை வெட்டி அதை மூடாதேபோனதினாலாவது, அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால், குழிக்கு உடையவன் அதற்கு ஈடாகப் பணத்தை மிருகத்தின் எஜமானுக்குக் கொடுக்கக்கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டும்" (யாத் 21:33,34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சில வேளைகளில் ஒரு மாடு மற்றொரு மாட்டை முட்டுவதினால், அந்த மாட்டுக்கு மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் செத்துப்போன மாட்டின் எஜமானுக்கு நஷ்டமுண்டாகும். இந்த நஷ்டம் ஈடுசெய்யப்படவேண்டுமென்று கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார்.

"ஒருவனுடைய மாடு மற்றவனுடைய மாட்டை முட்டினதினால் அது செத்தால், உயிரோடிருக்கிற மாட்டை அவர்கள் விற்று, அதின் கிரயத்தைப் பங்கிட்டு, செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளக்கடவர்கள். அந்த மாடு முன்னமே முட்டுகிற மாடென்று அதின் எஜமான் அறிந்திருந்தும், அதைக் கட்டிவைக்காதிருந்தால், அவன் மாட்டுக்கு மாட்டைக் கொடுக்கக்கடவன்; செத்ததோ அவனுடையதாக வேண்டும்" (யாத் 21:35,36) என்பது கர்த்தருடைய பிரமாணமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கும்போது, அவர்களுடைய கூடாரங்கள் ஒன்றுக்கொன்று அருகாமையிலிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரும் நெருக்கமான இடங்களில் கூடாரம் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மிருகங்களும், அவர்களோடுகூட அவர்களுடைய கூடாரங்களுக்கு அருகாமையிலிருக்கும். இதனால் அவர்களுடைய மிருகங்களுக்கு இடையே முட்டுதல், மோதுதல், காயம் ஏற்படுதல் ஆகிய சம்பவங்கள் அதிகமாய் நடைபெறுகிறது. கர்த்தர் எல்லா காரியங்களையும் நோக்கிப் பார்த்து, தம்முடைய பிரமாணங்களில் ஒவ்வொரு சம்பவத்தையும் மிகவும் தெளிவாக சொல்லுகிறார்.

## 22 அதிகாரம்

"களவு செய்யாதிருப்பாயாக" என்பது எட்டாவது கட்டளையாகும். இந்தக் கட்டளையோடு தொடர்புடைய பிரமாணங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 2:1-4). மிருகஜீவன் பிறருடைய எல்லையைத் தாண்டிப்போய் மேய்வது (யாத் 2:5). அக்கினியினால் வயலுக்கு சேதமுண்டாவது (யாத் 2:6). நம்பிக்கை மோசம் பண்ணுவது (யாத் 2:7-13). இரவலாக வாங்கியது சேதமடைவது (யாத் 2:14,15). பணம் கடனாக வாங்குவது (யாத் 2:25-27).

ஏழாவது கட்டளையோடு தொடர்புடைய பிரமாணங்கள். கன்னிகையை மோசம் போக்குவது (யாத் 2:16,17). மிருகத்தோடே புணருவது (யாத் 2:19).

முதலாவது கற்பலகையில் எழுதப்பட்டிருக்கிற கட்டளைகளோடு தொடர்புடைய பிரமாணங்கள். சூனியக்காரிக்கு விரோதமான பிரமாணம் (யாத் 2:18). அந்நிய தேவர்களுக்கு விரோதமான பிரமாணம் (யாத் 2:20). முதற்கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்துவது (யாத் 2:29,30).

அந்நியரையும், விதவையையும், திக்கற்ற பிள்ளையையும் பற்றிய பிரமாணம் (யாத் 2:21-24). நியாயாதிபதிகளும், ஜனத்தின் அதிபதியும் சம்பந்தப்பட்ட பிரமாணம் (யாத் 2:28). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்த மனுஷராயிருக்கவேண்டும் (யாத் 2:31).

### திருடுதல்
### யாத் 22:1-6

**யாத் 22:1. ஒருவன் ஒரு மாட்டையாவது ஒரு ஆட்டையாவது திருடி, அதைக் கொன்றால், அல்லது அதை விற்றால், அவன் அந்த மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளையும் பதிலாகக் கொடுக்கக்கடவன்.**

**யாத் 22:2. திருடன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டுச் செத்தால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமராது.**

**யாத் 22:3. சூரியன் அவன்மேல் உதித்திருந்ததானால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமரும்; திருடன் பதில் கொடுத்துத் தீர்க்கவேண்டும்; அவன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தால், தான் செய்த களவுக்காக விலைப்படக்கடவன்.**

**யாத் 22:4. அவன் திருடின மாடாவது கழுதையாவது ஆடாவது உயிருடனே அவன் கையில் கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாய் அவன் கொடுக்கவேண்டும்.**

**யாத் 22:5. ஒருவன் பிறனுடைய வயலிலாவது திராட்சத்தோட்டத்திலாவது தன் மிருகஜீவனை மேயவிட்டால், அவன் தன் சுயவயலிலும் திராட்சத்தோட்டத்திலுமுள்ள பலனில் உத்தமமானதை எடுத்து, பதில் செலுத்தக்கடவன்.**

**யாத் 22:6. அக்கினி எழும்பி, முள்ளுக்களில் பற்றி, தானியப்போரையாவது, விளைந்த பயிரையாவது, வயலிலுள்ள வேறே எதையாவது எரித்துப்போட்டதேயானால், அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்திற்கு உத்தரவாதம்பண்ணவேண்டும்.**

களவு செய்யாதிருப்பாயாக என்பது கர்த்தருடைய எட்டாவது கட்டளை. ஒருவன் ஒரு மாட்டையாவது அல்லது ஒரு ஆட்டையாவது திருடினால் அவனுக்கு எப்படிப்பட்ட தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆடுகளும் மாடுகளும் பிரதான சம்பத்தாயிருக்கிறது. ஆடு மாடுகளின் எண்ணிக்கையை வைத்தே அவர்களுடைய ஐசுவரியம் கணக்கிடப்படுகிறது.

ஒருவன் திருடின மாடாவது கழுதையாவது ஆடாவது உயிருடனே அவன் கையில் கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாய் அவன் கொடுக்கவேண்டும் என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது (யாத் 22:4).

ஒருவன் ஒரு மாட்டையாவது ஒரு ஆட்டையாவது திருடி, அதைக் கொன்றால், அல்லது அதை விற்றால், அவன் அந்த மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளையும் பதிலாகக் கொடுக்கக்கடவன் (யாத் 22:1) என்றும் கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது.

திருடன் தான் திருடியதற்கு பதில் கொடுத்து தீர்க்கவேண்டும். பதிலாக கொடுப்பதற்கு அவன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தால், தான் செய்த களவுக்காக அவன் விலைப்படவேண்டும். அவன் அடிமையாகவேண்டும் (யாத் 22:3).

திருடன் இரவு வேளையில் வீட்டில் கன்னமிடுவது வழக்கம். திருடன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டுச் செத்தால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமராது. சூரியன் அவன்மேல் உதித்திருந்ததானால், அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமரும் (யாத் 22:2,3). திருடன் அடிக்கப்பட்டதினால் செத்துப் போனாலும், அவனுடைய இரத்தப்பழி யார் மீதும் சுமராது. மரணம் திருடனுக்கு கிடைக்கவேண்டிய தண்டனையாக கருதப்படும்.

ஆடு மாடுகளை மேய்க்கும்போது அவற்றை மிகவும் கவனமாக மேய்க்கவேண்டும். தங்களுடைய மிருகஜீவன்களை, தங்களுக்கு சொந்தமான வயல்வெளியில் மாத்திரமே மேய்க்கவேண்டும். ஒரு சிலர் தங்கள் மிருக ஜீவன்களை, தங்கள் வயல்வெளியில் மேயவிடாமல், பிறருடைய வயல்வெளியில் வேண்டுமென்றே மேயவிடுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு விரோதமாக கர்த்தருடைய பிரமாணத்தில் தண்டனை சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருவன் பிறனுடைய வயலிலாவது திராட்சத்தோட்டத்திலாவது தன் மிருகஜீவனை மேயவிட்டால், அவன் தன் சுயவயலிலும் திராட்சத்தோட்டத்திலுமுள்ள பலனில் உத்தமமானதை எடுத்து, பதில் செலுத்தக்கடவன் (யாத் 22:5) என்பது கர்த்தருடைய பிரமாணமாகும்.

சில சமயங்களில் வயல்வெளியிலே அக்கினி பற்றி எரிவதுண்டு. இது கைப்பிசகாக ஏற்பட்டிருக்கலாம். சில சமயங்களில் ஒரு சிலர் அக்கினியைக் கொளுத்தி கவனக்குறைவாக இருப்பார்கள். அந்த அக்கினி பரவி பெரிதாகி பிறருடைய தானியங்களையோ அல்லது வயல்வெளியையோ சேதப்படுத்திவிடும். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் கொளுத்தின அக்கினியினால் ஏற்படும் சேதத்திற்கு உத்திரவாதம் பண்ணவேண்டும்.

அக்கினி எழும்பி, முள்ளுக்களில் பற்றி, தானியப்போரையாவது, விளைந்த பயிரையாவது, வயலிலுள்ள வேறே எதையாவது எரித்துப்போட்டதேயானால், அக்கினியைக் கொளுத்ினவன் அக்கினிச் சேதத்திற்கு உத்தரவாதம்பண்ணவேண்டும் (யாத் 22:6) என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது. இந்த தண்டனை இவர்களுடைய கவனக்குறைவுக்காகவும், இவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்காகவும் கொடுக்கப்படுகிறது.

## நம்பிக்கை மோசம்
## யாத் 22:7-15

**யாத் 22:7. ஒருவன் பிறனுடைய வசத்தில் திரவியத்தையாவது, உடைமைகளையாவது அடைக்கலமாக வைத்திருக்கும்போது, அது அவன் வீட்டிலிருந்து திருடப்பட்டுப்போனால், திருடன் அகப்பட்டானாகில், அவன் அதற்கு இரட்டிப்பாகக் கொடுக்கவேண்டும்.**

**யாத் 22:8. திருடன் அகப்படாதேபோனால், அந்த வீட்டுக்காரன் தானே பிறனுடைய பொருளை அபகரித்தானோ இல்லையோ என்று அறியும்படி, நியாயாதிபதிகளிடத்தில் அவனைக் கொண்டுபோகவேண்டும்.**

**யாத் 22:9. காணாமற்போன மாடு, கழுதை, ஆடு, வஸ்திரம் முதலியவைகளில் யாதொன்றைப் பிறனொருவன் தன்னுடையது என்று சொல்லி குற்றஞ்சாற்றினால், இருதிறத்தாருடைய வழக்கும் நியாயதிபதிகளிடத்தில் வரக்கடவது; நியாயாதிபதிகள் எவனைக் குற்றவாளி என்று தீர்க்கிறார்களோ, அவன் மற்றவனுக்கு இரட்டிப்பாகக் கொடுக்கக்கடவன்.**

**யாத் 22:10. ஒருவன் தன் கழுதையையாவது மாட்டையாவது ஆட்டையாவது மற்ற யாதொரு மிருகஜீவனையாவது பிறன் வசத்தில் விட்டிருக்கும்போது, அது செத்தாலும், சேதப்பட்டுப்போனாலும், ஒருவரும் காணாதபடி ஓட்டிக்கொண்டு போகப்பட்டாலும்,**

**யாத் 22:11. அவன் தான் பிறனுடைய பொருளை அபகரிக்கவில்லையென்று கர்த்தர் பேரில் இடும் ஆணை அவர்கள் இருவருக்கும் நடுத்தீர்க்கக்கடவது; உடையவன் அதை அங்கிகரிக்கவேண்டும்; மற்றவன் பதிலளிக்கவேண்டுவதில்லை.**

**யாத் 22:12. அது அவன் வசத்திலிருந்து திருடப்பட்டுப்போயிற்றானால், அவன் அதின் எஜமானுக்கு அதற்காக உத்தரவாதம் பண்ணக்கடவன்.**

**யாத் 22:13. அது பீறுண்டுபோயிற்றானால், அதற்குச் சாட்சியை ஒப்புவிக்கவேண்டும். பீறுண்டதற்காக அவன் உத்தரவாதம் பண்ணவேண்டுவதில்லை.**

**யாத் 22:14. ஒருவன் பிறனிடத்தில் எதையாகிலும் இரவலாக வாங்கினதுண்டானால், அதற்கு உடையவன் கூட இராதபோது, அது சேதப்பட்டாலும், செத்துப்போனாலும், அவன் அதற்கு உத்தரவாதம்பண்ணவேண்டும்.**

**யாத் 22:15. அதற்கு உடையவன் கூட இருந்தானாகில், அவன் உத்தரவாதம் பண்ணவேண்டுவதில்லை; அது வாடகைக்கு வாங்கப்பட்டிருந்தால், அது அவன் வாடகைக்கு வந்த சேதம்.**

ஒரு சிலர் தங்களுடைய திரவியத்தை மற்றவர்களிடம் நம்பி ஒப்புவிக்கிறார்கள். அந்த திரவியங்கள் தங்களிடத்தில் இருப்பதைவிட, மற்றவர்களிடத்தில் இருப்பது பாதுகாப்பாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். பிறருடைய திரவியங்களையும் உடமைகளையும் பெற்றுக்கொள்கிறவர்கள், நம்பிக்கைக்கு பாத்திரவான்களாயிருக்கவேண்டும்.

ஒருவன் பிறனுடைய வசத்தில் திரவியத்தையாவது, உடைமைகளையாவது அடைக்கலமாக வைத்திருக்கும்போது, அது அவன் வீட்டிலிருந்து திருடப்பட்டுப்போனால், திருடன் அகப்பட்டானாகில், அவன் அதற்கு இரட்டிப்பாகக் கொடுக்கவேண்டும் (யாத் 22:7).

திருடன் அகப்படாதேபோனால், அந்த வீட்டுக்காரன் தானே பிறனுடைய பொருளை அபகரித்தானோ இல்லையோ என்று அறியும்படி நியாயாதிபதிகளிடத்தில் அவனைக் கொண்டுபோகவேண்டும் (யாத் 22:8).

திரவியத்தைப் பெற்றிருக்கிறவர்கள் அதை அபகரிக்கவில்லை. திருடன் வந்து அதை திருடிவிடுகிறான். ஆனாலும் திரவியத்தின் சொந்தக்காரனுக்கு அவன்மீது சந்தேகம் வரும். தன்னுடைய திரவியத்தை திருடன் திருடினானா அல்லது வீட்டுக்காரன் அபகரித்தானா என்பதை திரவியத்தின் சொந்தக்காரன் தெளிவுபடுத்த விரும்புவான். இதை அறியும்படியாக, திரவியத்தின் சொந்தக்காரன் வீட்டுக்காரனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக்கொண்டுபோய் நியாயம் விசாரிக்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் யாருக்கும் நம்பிக்கை மோசம்பண்ணக்கூடாது. நம்மிடத்தில் நம்பி ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற பொருட்களுக்கு நாம் உத்திரவாதம் பண்ணவேண்டும். பிறர் பொருளை நாம் அபகரிக்கும்போது நம்முடைய பெயரும் கெட்டுப்போகும். அதோடு சேர்ந்து, நாம் ஆராதிக்கிற தேவனுடைய பெயரும் தூஷிக்கப்படும்.

விசுவாசிகள் இந்த உலகத்தார் மத்தியிலே உண்மையுள்ளவர்களாகவும், கண்ணியம் மிகுந்தவர்களாகவும் ஜீவிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், நம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர்களாகவும், பிறருடைய நம்பிக்கைக்கு பாத்திரமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் நீதி நியாயத்திற்கு பயந்து உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் அநியாயம் செய்யமாட்டார்கள். நம்பிக்கை மோசம்பண்ணினால், தங்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று பயப்படுவார்கள்.

காணாமற்போன மாடு, கழுதை, ஆடு, வஸ்திரம் முதலியவைகளில் யாதொன்றைப் பிறனொருவன் தன்னுடையது என்று சொல்லி குற்றஞ்சாற்றினால், இருதிறத்தாருடைய வழக்கும் நியாயதிபதிகளிடத்தில் வரக்கடவது; நியாயாதிபதிகள் எவனைக் குற்றவாளி என்று தீர்க்கிறார்களோ, அவன் மற்றவனுக்கு இரட்டிப்பாகக் கொடுக்கக்கடவன் (யாத் 22:9). கர்த்தருடைய பிரமாணத்தில் குற்றவாளிக்கு இரட்டிப்பான தண்டனை கொடுக்கப்படுகிறது.

இந்த வசனத்தில், நியாயாதிபதிகள் என்பதற்கு எபிரெய மொழியில் "எலோஹிம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் நியாயம் தீர்க்கும் தேவனுடைய பிரதிநிதிகள் என்பது இதன் பொருள். ரோமர் 13:1-6 ஆகிய வசனங்களின்படி நியாயாதிபதிகள் தேவனுக்குப் பதிலாகத் தேவனுடைய சார்பில் கிரியை செய்கிறவர்கள்.

யாத் 18: 15-19; யாத் 21:6; யாத் 22:8,9 ஆகிய வசனங்களில் காணப்படும் "நியாயாதிபதிகள்" என்னும் வார்த்தைக்கு இவ்வாறே பொருள்கூறவேண்டும். (சங் 82:1,6; யோவான் 10:34-35) தேவன் நோவாவின் மூலமாக மனுஷருடைய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறார். இப்போது இஸ்ரவேல் தேசத்திற்கு மேலும் பல சட்டதிட்டங்களை வகுத்துக் கொடுக்கிறார். இதன் மூலமாக தேவனுடைய சித்தம் இன்னும் அதிகமாக நிறைவேறுகிறது. நியாயாதிபதிகளின் தீர்ப்பு திருப்தியில்லையென்றால் மேல்முறையீட்டிற்காக யாரும் மேல்நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாது. நியாயாதிபதிகளின் தீர்ப்பே இறுதியானது.

ஒருவன் தன் கழுதையையாவது மாட்டையாவது ஆட்டையாவது மற்ற யாதொரு மிருகஜீவனையாவது பிறன் வசத்தில் விட்டிருக்கும்போது, அது செத்தாலும், சேதப்பட்டுப்போனாலும், ஒருவரும் காணாதபடி ஓட்டிக்கொண்டு போகப்பட்டாலும், அவன் தான் பிறனுடைய பொருளை அபகரிக்கவில்லையென்று கர்த்தர் பேரில் இடும் ஆணை அவர்கள் இருவருக்கும் நடுத்தீர்க்கக்கடவது; உடையவன் அதை அங்கிகரிக்கவேண்டும்; மற்றவன் பதிலளிக்கவேண்டுவதில்லை (யாத் 22:10,11).

"கர்த்தர் பேரில் இடும் ஆணை" என்னும் வாக்கியத்திற்கு தேவனுடைய சமூகத்தில் இடப்படும் ஆணை என்று பொருள். இப்படிப்பட்ட ஆணைகள் புனிதமானது. தேவனுக்கு முன்பாக பொய்யாணையிட்டால் தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்னும் பயம் ஜனங்களுக்கு இருக்கிறது. ஒருவன் தேவன் பேரில் ஆணையிடும்போது, அவன் குற்றமற்றவன் என்று ஜனங்கள் புரிந்துகொள்வார்கள். தற்காலத்தில்எழுத்துபூர்வமாக ஒப்பந்தங்களை எழுதுவதைவிட பூர்வகாலத்தில் வாய்மொழியாகக் கர்த்தர்பேரில் இடும் ஆணை உறுதியாக இருந்தது.

பிறனுடைய மிருக ஜீவன் அவன் வசனத்திலிருந்து திருடப்பட்டுப் போயிற்றானால், அவன் அதின் எஜமானுக்கு அதற்காக உத்தரவாதம் பண்ணக்கடவன். அது பீறுண்டுபோயிற்றானால், அதற்குச் சாட்சியை ஒப்புவிக்கவேண்டும். பீறுண்டதற்காக அவன் உத்தரவாதம் பண்ணவேண்டுவதில்லை (யாத் 22:12,13).

குடும்பங்களிலும் சமுதாயங்களிலும் கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது. ஒரு சிலர் பிறருடைய பொருளை இரவலாக வாங்குகிறார்கள். இரவலாக வாங்கியதை உத்திரவாதத்தோடு திரும்பக் கொடுக்கவேண்டும்.

ஒருவன் பிறனிடத்தில் எதையாகிலும் இரவலாக வாங்கினதுண்டானால், அதற்கு உடையவன் கூட இராதபோது, அது சேதப்பட்டாலும், செத்துப்போனாலும், அவன் அதற்கு உத்தரவாதம்பண்ணவேண்டும் (யாத் 22:14) என்பது கர்த்தருடைய பிரமாணம்.

பொருளுக்கு உடையவன், இரவல் வாங்கினவனோடே கூடயிருந்தால், இரவல் வாங்கினவன் உத்திரவாதம் பண்ண வேண்டியதில்லை. அது வாடகைக்கு வாங்கப்பட்டிருந்தால், அது அவன் வாடகைக்கு வந்த சேதம் (யாத் 22:15).

## விவாகம்
## யாத் 22:16-19

**யாத் 22:16. நியமிக்கப்படாத ஒரு கன்னிகையை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரிசம்கொடுத்து, அவளை விவாகம்பண்ணக்கடவன்.**

**யாத் 22:17. அவள் தகப்பன் அவளை அவனுக்குக் கொடுக்கமாட்டேன் என்றானாகில், கன்னிகைகளுக்காகக் கொடுக்கப்படும் பரிச முறைமையின்படி அவன் பணத்தை நிறுத்துக்கொடுக்கவேண்டும்.**

**யாத் 22:18. சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம்.**

**யாத் 22:19. மிருகத்தோடே புணருகிறவன் எவனும் கொல்லப்படவேண்டும்.**

விவாகமஞ்சம் கனமுள்ளது. கர்த்தருடைய பிரமாணத்தின்படி விவாகம்பண்ணின புருஷனும் மனைவியும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடலாம்.

நியமிக்கப்படாத ஒரு கன்னிகையை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரிசம்கொடுத்து, அவளை விவாகம்பண்ணக்கடவன். அவள் தகப்பன் அவளை அவனுக்குக் கொடுக்கமாட்டேன் என்றானாகில், கன்னிகைகளுக்காகக் கொடுக்கப்படும் பரிச முறைமையின்படி அவன் பணத்தை நிறுத்துக்கொடுக்க வேண்டும் (யாத் 22:16,17).

ஒரு கன்னிகையைக் கெடுத்துப்போட்டால், அவன் அவளை விவாகம் பண்ண வேண்டும். அதற்குரிய பரிசமும் அவளுக்காகக் கொடுக்கவேண்டும். அவளுடைய பெற்றோருக்கு இந்த விவாகத்தில் சம்மதமில்லையென்றாலும், அவளுக்குப் பரிசம் கொடுக்க வேண்டும். விவாகம் பண்ண அவளுக்கு சம்மதமானால், விவாகம் நடைபெறும். அவளுக்குத் தள்ளுதற்சீட்டுக் கொடுத்து அவளை விலக்கி வைக்க முடியாது. (உபா 22:28-29).

"கன்னிகைகளுக்காகக் கொடுக்கப்படும் பரிச முறைமை" என்பது ஐம்பது சேக்கல் வெள்ளியை நிறுத்துக் கொடுப்பதாகும் (உபா 22:28-29).

பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொள்வது நல்லது. நியமிக்கப்படாத ஒரு கன்னிகையோடே சயனிப்பது அவளை மோசம் போக்குகிற செயல். சமுதாயத்தில் இப்படிப்பட்ட பாவங்கள் காணப்படக்கூடாது என்றால், ஜனங்கள் கர்த்தருக்கு பயந்து, அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம் (யாத் 22:18). மிருகத்தோடே புணருகிறவன் எவனும் கொல்லப்படவேண்டும் (யாத் 22:19) என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது. மிருகத்தோடே புணருகிறவன் மனுஷருடைய சாயலில் மிருகமாயிருக்கிறான். அப்படிப்பட்டவன் கொல்லப்படவேண்டும் என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது.

இஸ்ரவேல் தேசத்தில் ஒரு சூனியக்காரியும் உயிரோடு இருப்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அவர்களெல்லோரும் கொல்லப்படவேண்டும். (லேவி 19:31; லேவி 20:27; உபா 18:9-14). எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ இதனால்தான் சவுலைப் பார்த்து பயந்தாள். (1சாமு 28:3,7-25). பில்லிசூனியம் முரட்டாட்டமான பாவத்தைப் போன்றது. (1சாமு 15:23; 2இராஜா 9:22; 2நாளா 33:6; நாகூம் 3:4; கலா 5:20).

பிசாசுகள் மறைபொருளை எடுத்துக்கூறும் என்று சிலர் நம்புகிறார்கள். (ஏசா 8:19). சூனியக்காரிகள் ஜனங்களை வஞ்சிப்பார்கள். அவர்கள் ஜனங்களை தேவனிடமிருந்து வழிவிலகிப்போகச் செய்வார்கள். ஆகையினால் அவர்கள் கொல்லப்படவேண்டுமென்று மோசேயின் பிரமாணம் கூறுகிறது (உபா 13).

## விக்கிரகாராதனை யாத் 22:20

**யாத் 22:20. கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன்.**

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" என்றும்,

"நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" என்றும் (யாத் 20:3-5) கர்த்தர் தம்முடைய கட்டளையில் சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் விக்கிரகாராதனையை அருவருக்கிறார். நாம் கர்த்தருக்கு மாத்திரமே பலி செலுத்தவேண்டும். அந்நிய தேவர்களுக்கு பலிசெலுத்துகிறவர்கள் கொல்லப்படவேண்டுமென்று கர்த்தருடைய பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

## ஒடுக்குதல் யாத் 22:21-24

**யாத் 22:21. அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்தீர்களே.**

**யாத் 22:22. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக;**

**யாத் 22:23. அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும்போது, அவர்கள் என்னை நோக்கிமுறையிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் கேட்டு,**

**யாத் 22:24. கோபம்மூண்டவராகி, உங்களைப் பட்டயத்தினால் கொலைசெய்வேன்; உங்கள் மனைவிகள் விதவைகளும், உங்கள் பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாவார்கள்.**

நியாயாதிபதிகளும், அதிகாரிகளும் ஜனங்களை ஆளுகை செய்கிறார்கள். நியாயாதிபதிகளிடத்தில் நியாயம் இருக்கவேண்டும். அவர்கள் ஜனங்களுடைய வழக்குகளை நீதியாய் விசாரித்து நியாயமான தீர்ப்புகளை சொல்லவேண்டும். அவர்கள் அந்நியருக்கும், விதவைகளுக்கும், திக்கற்றபிள்ளைகளுக்கும் ஆதரவாயிருக்கவேண்டும்.

"அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்தீர்களே. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக" (யாத் 22:21,22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாரம்பரியத்தின் பெருமை, ஐசுவரியத்தின் பெருமை, கல்வியின் பெருமை, யுத்த வெற்றிகளின் பெருமை, மார்க்கங்களின் பெருமை ஆகியவை மனுஷருடைய பலவீனமாகும். இந்தப் பலவீனம் அதிகரிக்கும்போது மற்ற ஜனங்கள்மீது துவேஷமும், விரோதமும், போட்டியும், பொறாமையும் உண்டாகும். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தார்கள். அவர்கள் சிறுமைப்படுத்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தார்கள். ஆகையினால் தங்களுடைய வரலாற்றை இஸ்ரவேலர்கள் நினைத்துப் பார்த்து, அந்நியரைச் சிறுமைப்படுத்தவோ, ஒடுக்கவோ கூடாது.

நியாயாதிபதிகள் துன்மார்க்கரை தண்டிக்கவேண்டும். நியாயாதிபதிகள் துன்மார்க்கராயிருக்கும்போது கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். நியாயாதிபதிகள் வழக்குகளில் பட்சபாதம் காண்பிக்கக்கூடாது. நியாயவிசாரணையில் அவர்கள் சுயஆதாயத்தை எதிர்பார்க்கக்கூடாது.

நம்மை நேசிப்பதுபோல நாம் பிறரையும் நேசிக்கவேண்டும். தம்மை ஆராதிக்கிறவர்கள் மனிதாபிமானமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய ஜனத்தார் ஒருபோதும் அந்நியரை சிறுமைப்படுத்தக்கூடாது. அவர்களை ஒடுக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய ஜனங்களுக்கு அந்நியராகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை அறிந்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு அந்நியரல்ல. கர்த்தர் அவர்களையும் போஷித்து பராமரிக்கிறார்.

"பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்; துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார்" *(சங் 146:9).*

கர்த்தர் திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார். விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்குகிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவ்வாறு ஒடுக்குகிறவர்களை கர்த்தர் எச்சரிக்கிறார். அவர்கள்மீது கர்த்தர் கோபமூண்டாவராயிருக்கிறார்.

"விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் எவ்வளவாகிலும் ஒடுக்கும்போது, அவர்கள் என்னை நோக்கிமுறையிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் கேட்டு, கோபம்மூண்டவராகி, உங்களைப் பட்டயத்தினால் கொலைசெய்வேன்; உங்கள் மனைவிகள் விதவைகளும், உங்கள் பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாவார்கள்" *(யாத் 22:23,24)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒடுக்கப்படுகிறவர்கள் முறையிடுதலை கர்த்தர் நிச்சயமாய்க் கேட்பார். ஜனங்களை ஒடுக்கும்போது அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு நியாயாதிபதிகள் மூலமாக வருவதில்லை. தேவன் தாமே அவர்களை நியாயந்தீர்த்து விடுவார் *(யாத் 22:23-24).*

கர்த்தர் நம்மீது இரக்கமும் கிருபையும் மனதுருக்கமுமுள்ளவராயிருக்கிறார். கர்த்தரிடத்திலிருந்து இரக்கத்தைப் பெற்றிருக்கிற நாம், மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும். நாம் திக்கற்ற பிள்ளைகளுக்கும் விதவைகளுக்கும் உதவி செய்து ஆதரவாயிருக்கவேண்டும். அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். நாம் அவர்கள்மீது கரிசனை காண்பிக்கவேண்டும்.

நாம் விதவைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும் உதவி செய்து, அவர்களை பாதுகாக்கவேண்டும். நம்மால் முடிந்த வரையிலும் அவர்களுக்கு உபகாரம்பண்ணவேண்டும். நாம் அவர்களுக்கு ஒருபோதும் உபத்திரவம் பண்ணிவிடக்கூடாது.

விதவைகள், திக்கற்ற பிள்ளைகள் ஆகியோருடைய முறையிடுதலை கர்த்தர் நிச்சயமாய்க் கேட்கிறார். அவர்களுடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் நியாயாதிபதிகளும், அதிகாரிகளும் செவிகொடுத்து கேட்கவில்லையென்றாலும், கர்த்தர் அவர்களுக்கு செவிகொடுக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு நீதி செய்கிறார். கர்த்தர் அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறார். அவர்களுக்கு விரோதமாக எழும்புகிறவர்களை கர்த்தர் பட்டயத்தினால் கொலை செய்வதாக எச்சரிக்கிறார்.

## கடன்
## யாத் 22:25-27

**யாத் 22:25. உங்களுக்குள் சிறுமைப்பட்டிருக்கிற என் ஜனங்களில் ஒருவனுக்கு நீங்கள் பணம் கடனாகக் கொடுத்திருந்தால், வட்டிவாங்குகிறவர்கள்போல அவனிடத்தில் வட்டி வாங்கவேண்டாம்.**

**யாத் 22:26. பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், பொழுதுபோகு முன்னமே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்துவிடுவாயாக.**

**யாத் 22:27. அவன் போர்வை அதுதானே, அதுவே அவன் தன் உடம்பை மூடிக்கொள்ளுகிற வஸ்திரம்; வேறு எதினாலே போர்த்துப் படுத்துக்கொள்ளுவான்? அவன் என்னை நோக்கி முறையிடும்போது, நான் அவனுக்குச் செவிகொடுப்பேன், நான் இரக்கமுள்ளவராயிருக்கிறேன்.**

கர்த்தர் கடன் கொடுப்பது, கடன் வாங்குவது சம்பந்தமாக தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். இந்தப் பிரமாணம் யூதருடைய சமுதாயத்திற்கு விசேஷமாக சொல்லப்பட்டிருக்கும் பிரமாணமாகும். ஆனாலும் இந்தப் பிரமாணத்தில் மனுக்குலத்தார் எல்லோரும் பின்பற்றவேண்டிய பொதுவான நியமங்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் இரக்கமுள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். நம்மிடத்தில் பொருளாசை, பேராசை ஆகிய எதுவும் இருக்கக்கூடாது. போதும் என்கிற மனமே நமக்கு மிகுந்த ஆதாயம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கடன் கொடுப்பது பற்றி தம்முடைய பிரமாணத்தை சொல்லும்போது, "உங்களுக்குள் சிறுமைப்பட்டிருக்கிற என் ஜனங்களில் ஒருவனுக்கு நீங்கள் பணம் கடனாகக் கொடுத்திருந்தால், வட்டி வாங்குகிறவர்கள்போல அவனிடத்தில் வட்டி வாங்கவேண்டாம்" (யாத் 22:25) என்று சொல்லுகிறார்.

கடன்கொடுக்கிறவன் தன்னுடைய பணத்தை கஷ்டப்பட்டு சம்பாதித்திருக்கிறான். அவன் கடினமாக வேலை செய்து, தன்னுடைய பணத்தைசேமித்து வைத்து பிறருக்கு அதைக் கடனாக கொடுக்கிறான். அவன் பிறனுக்கு தன்னுடைய பணத்தை கடனாகக் கொடுக்கும்போது, அதற்குரிய வட்டி வாங்குவது, அவனுக்கு நியாயமானதாக தெரிகிறது.

கடன் கொடுக்கிறவன், தான் கொடுத்த கடனுக்கு, கடன் வாங்குகிறவனிடத்தில் சில பொருட்களை ஈடாக வாங்குகிறான். இதற்காக ஈடாக வாங்கப்படும் பொருட்களைப்பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார்.

"பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், பொழுதுபோகுமுன்னமே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்துவிடுவாயாக. அவன் போர்வை அதுதானே, அதுவே அவன் தன் உடம்பை மூடிக்கொள்ளுகிற வஸ்திரம்; வேறு எதினாலே போர்த்துப் படுத்துக்கொள்ளுவான்? அவன் என்னை நோக்கி முறையிடும்போது, நான் அவனுக்குச் செவிகொடுப்பேன், நான் இரக்கமுள்ளவராயிருக்கிறேன்" (யாத் 22:26,27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இந்த வசனத்தில் தம்மை இரக்கமுள்ள தேவனாக வெளிப்படுத்துகிறார். கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு ஆதரவாகவும், பெலனாகவும் இருக்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தர் தம்முடைய ஜனத்தாருக்கு இருக்கிற விதத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கேடகம் (ஆதி 15:1)
2. மகாபெரிய பலன் (ஆதி 15:1)
3. எரிச்சலுள்ள தேவன் (யாத் 20:5)
4. கிருபையுள்ளவர் (யாத் 22:27)
5. பரிசுத்தமுள்ளவர் (லேவி 11:44-45)
6. அவர்களுடைய பங்கு (எண் 18:20)
7. அவர்களுடைய சுதந்தரம் (எண் 18:20)

## மற்ற பிரமாணங்கள்
## யாத் 22:28-31

**யாத் 22:28. நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக.**

**யாத் 22:29. முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும் காணிக்கையாகச் செலுத்தத் தாமதிக்கவேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுப்பாயாக.**

**யாத் 22:30. உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படியே செய்வாயாக; குட்டியானது ஏழுநாள் தன் தாயோடே இருக்கட்டும்; எட்டாம் நாளிலே அதை எனக்குச் செலுத்துவாயாக.**

**யாத் 22:31. நீங்கள் எனக்குப் பரிசுத்த மனுஷராயிருக்கக்கடவீர்கள்; வெளியிலே பீறுண்ட மாம்சத்தைப் புசியாமல், அதை நாய்களுக்குப் போட்டுவிடுங்கள்.**

நமக்கு மேலான அதிகாரங்களுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். கர்த்தரே தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ராஜாக்களை சிங்காசனத்தில்மேல் அமரச்செய்கிறார். அதிகாரிகள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். "நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக" (யாத் 22:28) என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது.

நியாயாதிபதிகளும், ஜனத்தின் அதிபதிகளும் ஜனங்களுடைய வழக்குகளை நீதியாய் விசாரிக்கிறார்கள். ஜனங்கள் தங்கள் தேசத்தின் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். அதிபதிகள் தங்களுடைய கடமைகளை செய்யும்போது, ஜனங்களும் அவர்களுக்கு ஒத்துழைக்கவேண்டும். நியாயாதிபதிகளை தூஷிப்பதும், ஜனத்தின் அதிபதியை சபிப்பதும் கர்த்தருடைய பார்வையில் பாவமான காரியம்.

நம்முடைய முதற்கனிகள் கர்த்தருக்குரியது. முதற்கனிகளையும் முதல் ஈற்றுக்களையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணவேண்டும். இந்தப் பிரமாணம் யாத் 13-ஆவது அதிகாரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்தப் பிரமாணத்தை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும் காணிக்கையாகச் செலுத்தத் தாமதிக்கவேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுப்பாயாக" என்றும்,

"உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படியே செய்வாயாக; குட்டியானது ஏழுநாள் தன் தாயோடே இருக்கட்டும்; எட்டாம் நாளிலே அதை எனக்குச் செலுத்துவாயாக" (யாத் 22:29,30) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு நம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்மிடத்திலுள்ளவைகளையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணவேண்டும். பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, நம்முடைய பாவங்களை போக்கும் பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்.

முதல் பழுக்கும் பழத்தையும், முதல் வடியும் திராட்சரசத்தையும் கர்த்தருக்கு உடனே செலுத்திவிடவேண்டும். கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவதில் நாம் காலதாமதம்பண்ணக்கூடாது. வாலிபர்கள் தங்களுடைய வாலிபத்தின் பெலத்தையும், வாலிபகாலத்தையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுவதில் காலதாமதம் பண்ணக்கூடாது. வாலிப பருவத்தில் அவர்கள் கர்த்தரை நினைத்து, தங்களுடைய ஜீவியத்தை கர்த்தருடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கவேண்டும். வாலிபகாலமும், வாலிபத்தின் பெலமும் அவர்களுடைய முதற்கனிகளைப்போல இருக்கிறது.

மேலே கூறப்பட்டிருக்கும் பழைய ஏற்பாட்டுக்கால பிரமாணங்கள் எல்லாம் இஸ்ரவேலருக்கே உரியவை. புறஜாதியாருக்கு இதில் பங்கில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசு கிறிஸ்து விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராய் இருக்கிறார். (எபி 8:6) விசேஷித்த உடன்படிக்கையில் யூதரும், புறஜாதியாரும் சமமாக இருக்கிறார்கள். தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. ஆனாலும் அவர் இஸ்ரவேல் புத்திரருக்கும் புறஜாதி ஜனங்களுக்கும் வித்தியாசம் காண்பிக்கிறார். "நீங்கள் எனக்கு பரிசுத்த மனுஷராயிருக்கக்கடவீர்கள்" (யாத் 22:31) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வார்த்தைகளிலும், செய்கைகளிலும், போஜன விஷயங்களிலும், மார்க்க காரியங்களிலும், ஆராதனைகளிலும், கர்த்தருக்கு பரிசுத்தமானவர்களாயிருக்க வேண்டும். இந்த வசனப்பகுதியில், போஜன விஷயத்தைப்பற்றிய ஒரு சம்பவம் மாத்திரம், எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. "வெளியிலே பீறுண்ட மாம்சத்தைப் புசியாமல், அதை நாய்களுக்குப் போட்டுவிடுங்கள்" (யாத் 22:31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## 23 அதிகாரம்

கர்த்தர் மோசேக்கு சொன்ன பிரமாணங்களில் முதலாவது பகுதி இந்த அதிகாரத்திலும் தொடர்ந்து சொல்லப்பட்டு, அது இந்த அதிகாரத்தோடு நிறைவு பெறுகிறது. கர்த்தர் சீனாய் மலையின் மீதினிலே, மோசேக்கு தம்முடைய பிரமாணங்களை சொல்லுகிறார்.

"பிறனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாக" (யாத் 20:16) என்பது கர்த்தருடைய ஒன்பதாவது கட்டளை. இந்தக் கட்டளையோடு தொடர்புடைய பிரமாணங்களை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் பொய்ச்சாட்சி சொல்லக்கூடாது (யாத் 23:1).

இஸ்ரவேல் புத்திரருடைய நியாயாதிபதிகள் பொய்த்தீர்ப்பு சொல்லக்கூடாது. அவர்கள் நியாயமான தீர்ப்பு சொல்லவேண்டும் (யாத் 23:2,3,6-8). நம்மைப் பகைக்கிறவர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும் (யாத் 23:4,5). அந்நியரை ஒடுக்கக்கூடாது (யாத் 23:9).

யூதருக்கென்று பிரத்தியேகமான பிரமாணங்களும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஓய்வு வருஷம் (யாத் 23:10,11). யூதர்கள் ஒவ்வொரு வருஷமும் ஆசரிக்கவேண்டிய மூன்று பண்டிகைகள் (யாத் 23:14-17).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தர பாதை வழியாக வழிநடத்தி, கானான் தேசத்திற்கு கொண்டு போய்ச் சேர்ப்பார் (யாத் 23:20-24). அவர்கள் கர்த்தரையே சேவிக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் (யாத் 23:25,26).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள் (யாத் 23:27-31). அவர்கள் அந்நிய தேவர்களோடு உடன்படிக்கை பண்ணக்கூடாது (யாத் 23:32,33).

### நியாயவிசாரணை
### யாத் 23:1-9

**யாத் 23:1. அபாண்டமான சொல்லை ஏற்றுக்கொள்ளாயாக; கொடுமையுள்ள சாட்சிக்காரனாயிருக்க ஆகாதவனோடே கல்வாயாக.**

**யாத் 23:2. தீமைசெய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக; வழக்கிலே நியாயத்தைப் புரட்ட மிகுதியானவர்களின் பட்சத்தில் சாய்ந்து, உத்தரவு சொல்லாதிருப்பாயாக.**

**யாத் 23:3. வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக.**

**யாத் 23:4. உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக.**

**யாத் 23:5. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவிசெய்வாயாக.**

**யாத் 23:6. உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.**

**யாத் 23:7. கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக; குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைசெய்யாயாக; நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன்.**

**யாத் 23:8. பரிதானம் வாங்காதிருப்பாயாக; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்.**

**யாத் 23:9. அந்நியனை ஒடுக்காயாக; எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்த நீங்கள் அந்நியனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர்களே.**

நியாயாதிபதிகள் வழக்குகளை நீதியாய் விசாரிக்கவேண்டும். நியாயமான தீர்ப்பு சொல்லவேண்டும். நியாயம் விசாரிக்கும் காரியங்களில், நியாயாதிபதிகள் உண்மையுள்ளவர்களாகவும், கர்த்தருக்கு பயப்படுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் அபாண்டமான சொல்லை ஏற்றுக்கொள்ளக்கூடாது. கொடுமையுள்ள சாட்சிக்காரராக இருக்கக்கூடாது. அதற்காக அவர்கள் ஆகாதவர்களோடே கலக்கவும் கூடாது.

குற்றமில்லாத ஒருவனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லுவது பாவம். பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள், பிறருடைய பாவங்களுக்கு பங்காளிகளாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் உண்மை பேசவேண்டும். அவர்கள் மெய்ச்சாட்சிக்காரராயிருக்கவேண்டும். தங்களுக்கு தெரிந்ததை, உள்ளபடி சொல்லவேண்டும். தெரிந்ததை சொல்லாமலிருப்பதும் பாவம். பொய்யை உண்மை போல ஜோடித்து பேசுவதும் பாவம்.

“அபாண்டமான சொல்லை ஏற்றுக்கொள்ளாயாக; கொடுமையுள்ள சாட்சிக்காரனாயிருக்க ஆகாதவனோடே கலவாயாக” (யாத் 23:1) என்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது. பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள், திருடுகிறவர்களைப்போலவும், கொலைசெய்கிறவர்களைப்போலவும் குற்றவாளிகளாயிருக்கிறார்கள்.

பொய்ச்சாட்சிக்காரரால் குற்றம் செய்யாத நிரபராதிகளுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது. பொய்ச்சாட்சிக்காரர் பணத்திற்காக எதையும் பேசுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை குற்றவாளிகள் விலைக்கு வாங்கி, தங்களுடைய சுயலாபத்திற்காக அவர்களை பயன்படுத்துகிறார்கள். பொய்ச்சாட்சி சொல்லுவதுபோல, பிறருக்கு விரோதமாக புறங்கூறுவதும் பாவமாகும்.

பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள் மற்றவர்களுடைய நற்பெயரை எளிதாக கெடுத்துப்போடுவார்கள். அவர்கள் நிரபராதிகளை குற்றவாளிகளாக்கி களங்கப்படுத்திவிடுவார்கள். நியாயாதிபதிகள் வழக்குகளை நீதியாய் விசாரித்து, நியாயமான தீர்ப்பு சொல்லவேண்டும். நிரபராதிகளுக்கு தண்டனை கொடுக்கக்கூடாது. குற்றவாளிகள் தண்டனைக்கு தப்பிக்ககூடாது. நியாயாதிபதிகள் பொய்ச்சாட்சிக்காரருக்கு செவிகொடுத்தால், நியாயவிசாரணை நியாயமாக நடைபெறாது.

பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள் சத்தியப்பிரமாணத்திற்கு விரோதமாகப் பேசுகிறார்கள். அவர்கள் நீதியின் பிரமாணத்திற்கு விரோதமாக பொய்சொல்லுகிறார்கள். அவர்களுடைய பொய்ச்சாட்சியினால் நிரபராதிகளுக்கு ஏற்படும் எல்லா பாதிப்புகளுக்கும் அவர்களே காரணம். இதனால் பொய்ச்சாட்சிக்காரர்கள் குற்றவாளிகளின் பாவங்களுக்கு பங்காளிகளாயிருக்கிறார்கள்.

நியாயாதிபதிகள் வழக்குகளை மிகுந்த கவனத்தோடு விசாரிக்கவேண்டும். அவர்கள் நீதிக்கும் நியாயத்திற்கும், சத்தியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நியாயாதிபதிகள் வழக்குகளை விசாரிக்கும்போதும், வழக்குகளுக்கு தீர்ப்புகளைக் கொடுக்கும்போதும் நீதியை புரட்டி விடக்கூடாது.

“தீமைசெய்ய திரளானபேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக; வழக்கிலே நியாயத்தைப் புரட்ட மிகுதியானவர்களின் பட்சத்தில் சாய்ந்து, உத்தரவு சொல்லாதிருப்பாயாக” (யாத் 23:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அக்கிரமக்காரர் பக்கத்திலே அநேகர் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. அவர்களோடுகூட திரளான கூட்டத்தார் சேர்ந்திருக்கலாம். நியாயாதிபதிகள் நீதியைப் பின்பற்றவேண்டும். திரளான ஜனங்கள் எந்தப் பக்கத்திலிருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்களைப் பின்பற்றிப்போய்விடக்கூடாது. தீமை செய்கிறவர்கள்கூட பல சமயங்களில் திரளான பேர்களாக கூடியிருக்கலாம்.

திரளான ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதற்கோ, அல்லது அவர்கள் எப்படிப்பட்ட தீர்ப்பை எதிர்பார்க்கிறார்கள் என்பதற்கோ நியாயாதிபதிகள் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. அவர்கள் நீதிக்கும், நியாயத்திற்கும், சத்தியத்திற்கும் மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்களை பின்பற்றவேண்டுமென்று நாம் ஒருபோதும் தீர்மானம்பண்ணக்கூடாது. திரள் கூட்டத்தைப் பின்பற்றுகிறவர்கள், தாங்கள் எங்கே போகிறோம் என்பது தெரியாமலேயே, நரகத்தை நோக்கிப் போகிறார்கள். கேட்டுக்குப்போகிறவர்கள் அநேகர். நாம் மிகுதியானவர்களின் கூட்டத்தைப் பின்பற்றுவதற்கு பதிலாக, கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும்.

நியாயாதிபதிகள் விதவைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும், தரித்திருக்கும் ஆதரவு காண்பிக்கவேண்டும். அவர்களுக்கு நீதியும் நியாயமும் மறுக்கப்படக்கூடாது. ஆனாலும் அவர்கள் நியாயம் விசாரிக்கும்போது, வழக்காடுகிறவர்களுடைய அந்தஸ்து, ஐசுவரியம் ஆகியவற்றை நோக்கிப் பார்க்கக்கூடாது. வழக்கின் நியாயத்தை மாத்திரமே நோக்கிப் பார்க்கவேண்டும். "வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக" (யாத் 23:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவன் தரித்திரனாகயிருந்தாலும், அவன் குற்றம் செய்தவனாகயிருப்பானென்றால், அவனையும் குற்றவாளி என்றே தீர்க்கவேண்டும். நியாயாதிபதிகள் தரித்திரருக்கு சகாயம்பண்ணுவதாக நினைத்து, குற்றம் செய்த தரித்திரனை, நிரபராதி என்று சொல்லிவிடக்கூடாது. நீதியைப் புரட்டி தரித்திரனுக்கு உதவி செய்ய முன்வரக்கூடாது.

"கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக; குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைசெய்யாயாக; நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன்" (யாத் 23:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நியாயாதிபதிகள் இந்த உலகத்திலே வழக்குகளை விசாரிக்கிறார்கள். கர்த்தரே இந்த நியாயாதிபதிகளுக்கெல்லாம் மேலான பரம நீதிபரராயிருக்கிறார். அவரே பிரதான நியாயாதிபதி. இந்த உலகத்தில் நியாயம் விசாரிக்கிற நியாயாதிபதிகள் எல்லோரும், தங்கள் பரமநியாயாதிபதியாகிய கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

"அந்நியனை ஒடுக்காயாக; எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்த நீங்கள் அந்நியனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர்களே" (யாத் 23:9) என்றும், "உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக" (யாத் 23:6) என்றும், பரிதானம் வாங்காதிருப்பாயாக; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும் (யாத் 23:8) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

நம்மிடத்தில் அன்புகூருவதுபோல, நாம் பிறரிடத்திலும் அன்பு கூரவேண்டும். யாருக்கும் யாரும் சத்துருவாகயிருப்பதில்லை. ஆனாலும் நம்முடைய ஜென்ம சுபாவத்தினால், நாம் ஒரு சிலரை சிநேகிதராகவும், வேறு சிலரை சத்துருவாகவும் பாவிக்கிறோம். நம்முடைய சத்துருக்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும் என்பதே கர்த்தருடைய பிரமாணம்.

"உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவிசெய்வாயாக" (யாத் 23:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும் என்பது புதிய பிரமாணமல்ல. இது ஒரு பழைய பிரமாணம். இந்தப் பிரமாணம் பழைய பிரமாணமாக இருந்தாலும், இது எல்லா காலத்திற்கும் பொதுவான பிரமாணமாயிருக்கிறது.

"உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்" (நீதி 25:21,22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய சத்துருக்களுக்கும் நம்மைப் பகைக்கிறவர்களுக்கும், நாம் இதுபோல நன்மை செய்யும்போது, நம்முடைய சிநேகிதர்களுக்கு நாம் இதைவிட அதிகமான நன்மைகளை செய்வோம். தங்களுடைய சத்துருக்களுக்கு உதவி செய்கிறவர்கள், தங்களுடைய சிநேகிதருக்கு மிகவும் அதிகமான உதவிகளை செய்வார்கள்.

நம்முடைய சத்துருக்களின் உடமைகளுக்கு ஆபத்தோ அல்லது சேதமோ வரும்போது நாம் உதவி செய்யவில்லையென்றால், அது நம்மீது வந்த பாவமாகயிருக்கும். இதுவே நமக்கு பாவமாகயிருக்கும்போது, நம்முடைய சத்துருக்களுக்கு ஆபத்தோ அல்லது சேதமோ வரும்போது, நாம் அவர்களுக்கு உதவி செய்யாமற்போனால், அது நம்மீது வரும் மிகப்பெரிய பாவமாகயிருக்கும்.

சத்துருவுடைய மாடோ அல்லது கழுதையோ வழிதப்பிப்போகும்போது, அதை திரும்ப அவனிடத்தில் கொண்டு போய் விடும்போது, நம்முடைய சத்துருவுக்கு நாம் உதவிசெய்கிறோம். நம்முடைய சத்துரு கர்த்தருடைய பாதையை விட்டு விலகி, பாவமான பாதையிலே வழிதப்பிப்போகும்போது, அவனை மறுபடியும் கர்த்தருக்கு சித்தமான பாதையில் வழிநடத்தும்போது, நாம் அவனுக்கு மிகப்பெரிய உதவியை செய்கிறோம்.

"சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்" (யாக் 5:19,20).

ஒரு கழுதை சுமையோடு விழுந்து கிடக்க காணும்போது, அது நம்மைப் பகைக்கிறவனுடைய கழுதையாகயிருந்தாலும், நாம் அந்தக் கழுதைக்கு உதவி செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். விழுந்து கிடக்கிற கழுதைகளை தூக்கிவிட்டு உதவி செய்கிறவர்களைப்போல, பாவத்தில் விழுந்துகிடக்கிற ஆத்துமாக்களை தூக்கிவிட்டு உதவி செய்ய முன்வரவேண்டும். கழுதைகளைவிட மனுஷருடைய ஆத்துமா விலையேறப்பெற்றது.

## ஓய்வு வருஷம்
## யாத் 23:10-19

**யாத் 23:10. ஆறுவருஷம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்த்துக்கொள்.**

**யாத் 23:11. ஏழாம் வருஷத்தில் உன் ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்கவும், மீதியானதை வெளியின் ஜெந்துக்கள் தின்னவும், அந்த நிலம் சும்மா கிடக்க விட்டுவிடுவாயாக; உன் திராட்சத்தோட்டத்தையும் உன் ஒலிவத்தோப்பையும் அப்படியே செய்வாயாக.**

**யாத் 23:12. ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக.**

**யாத் 23:13. நான் உங்களுக்குச் சொன்னவைகள் யாவற்றிலும் சாவதானமாயிருங்கள். அந்நிய தேவர்களின் பேரைச் சொல்லவேண்டாம்; அது உன் வாயிலிருந்து பிறக்கக் கேட்கப்படவும் வேண்டாம்.**

**யாத் 23:14. வருஷத்தில் மூன்றுதரம் எனக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக.**

**யாத் 23:15. புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஆபீப் மாதத்தின் குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே, என் சந்நிதியில் வெறுங்கையாய் வரவேண்டாம்.**

**யாத் 23:16. நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக.**

**யாத் 23:17. வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்மக்கள் எல்லாரும் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதியில் வரக்கடவர்கள்.**

**யாத் 23:18. எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்தவேண்டாம், எனக்கு இடும் பலியின் கொழுப்பை விடியற்காலம்வரைக்கும் வைக்கவும் வேண்டாம்.**

**யாத் 23:19. உன் நிலத்தில் முதல் விளைச்சல்களில் முதற் கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருவாயாக; வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்.**

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வு வருஷ பிரமாணத்தை சொல்லுகிறார். "ஆறுவருஷம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்த்துக்கொள். ஏழாம் வருஷத்தில் உன் ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்கவும், மீதியானதை வெளியின் ஜெந்துக்கள் தின்னவும், அந்த நிலம் சும்மா கிடக்க விட்டுவிடுவாயாக; உன் திராட்சத்தோட்டத்தையும் உன் ஒலிவத்தோப்பையும் அப்படியே செய்வாயாக" (யாத் 23:10,11) என்பது கர்த்தருடைய ஓய்வு வருஷ பிரமாணமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்தில் ஆறுவருஷம் பயிரிடலாம். ஏழாவது வருஷத்தின் ஆரம்பத்தில் அவர்கள் தங்கள் நிலத்தை உழவோ அல்லது பயிரிடவோ கூடாது. கர்த்தருடைய பிரமாணத்தை மீறி அவர்கள் ஏழாம் வருஷத்தின் ஆரம்பத்தில் உழுது பயிரிட்டால், அந்த வருஷத்தின் முடிவிலே அவர்களுக்கு ஆசீர்வாதமான அறுவடை கிடைக்காது.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்தின் செழிப்பைப்பற்றிச் சொல்லுவதற்காக, கர்த்தர் ஒய்வு வருஷத்தைப்பற்றிச் சொல்லுகிறார். அவர்களுடைய நிலம் ஏழாம் வருஷத்திலே ஓய்வாகயிருந்தாலும், அவர்களுக்கு தானியம் குறைவுபடாது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியிருக்கும்போது, அந்த தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசமாகயிருந்தாலும், அவர்கள் தங்கள் போஜனத்திற்கு தங்கள் நிலத்தின்மீது நம்பிக்கை வைக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்தை சார்ந்து ஜீவிக்காமல், கர்த்தரையே சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

வானமும் பூமியும் கர்த்தருடையது. கர்த்தருடைய கிருபையினாலேயே பூமியில் விளைச்சல் உண்டாகிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வயலில் விதைத்த, தங்கள் பயிர் வேலைகளின் முதற்பலனை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தவேண்டும். கர்த்தரே மழையைப் பெய்யப்பண்ணுகிறவர். அவரே விளைச்சலைக் கொடுக்கிறவர்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வுவருஷ பிரமாணத்தைக் கொடுத்திருந்தாலும், பிற்காலத்தில் அவர்கள் இந்தப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், கர்த்தர் தங்களுக்கு வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களை இழந்துபோகிறார்கள்.

"கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க்கிடந்த நாளெல்லாம், அதாவது, எழுபதுவருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது" (2நாளா 36:21).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நிலத்திலே பயிரிட்டாலும், அந்த நிலத்திலே தானியம் விளைந்தாலும், கர்த்தரே அவர்களை போஷிக்கிறவர். தேவனுடைய தெய்வீக பராமரிப்பு அவர்களுக்கு இல்லையென்றால், அவர்களுக்கு போஜனமுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பயிர் நிலத்தை நம்பாமல், கர்த்தர்மீதும், கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பின்மீதும் நம்பிக்கை வைக்கவேண்டும்.

கர்த்தர் பத்துக்கட்டளைகளில் நான்காவது கட்டளையாக "ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத் 20:8) என்று சொல்லியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய நான்காவது கட்டளையை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக" (யாத் 23:12) என்பது கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணமாகும்.

ஏழாம்நாள் ஓய்வுநாளாக அனுசரிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாள் ஒருகிழமை பிந்திவரும். ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் கூடுதலாக ஒரு ஓய்வுநாள் அனுசரிக்கப்படும்.

அவர்களுடைய மாடும், அவர்களுடைய கழுதையும் இளைப்பாறவேண்டும். அவர்களுடைய அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருக்கவும் வேண்டும். ஓய்வுநாள் அனுசரிப்பதின் காரணம் இதுதான். ஒவ்வொரு சிருஷ்டியும் தாங்கள் செய்த வேலையின் களைப்பு தீர ஓய்வு எடுக்க வேண்டும். அடுத்த வேலை செய்வதற்கு ஓய்வெடுத்து ஆயத்தமாக இருக்க வேண்டும்.

மனுஷன் ஆறுநாட்கள் வேலைசெய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருக்க வேண்டுமென்பது தேவனுடைய பிரமாணம். பழைய ஏற்பாட்டில் தேவன் ஓய்வுநாளை மனுஷனுக்குத் தெரிந்தெடுத்தார். இது பழைய ஏற்பாட்டுப் பிரமாணம். புதிய ஏற்பாட்டில் தங்களுக்கு வசதியான ஓய்வுநாளை ஜனங்கள் தெரிந்துகொள்வதற்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. (ரோமர் 14:5-6; கொலோ 2:14-16). கிறிஸ்தவ விசுவாசிகள் வாரத்தின் முதலாம் நாளான ஞாயிற்றுக் கிழமையை ஓய்வுநாளாகத் தெரிந்தெடுத்து அதைப் பரிசுத்தப்படுத்துகிறார்கள்.

வேதபண்டிதர்களில் சிலர் கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்திற்கு புதிய விளக்கத்தை சொல்லுகிறார்கள். வாரத்தில் ஒரு நாளாகிய ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பதற்கு பதிலாக, எல்லா நாளையும் ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டும் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். வாரத்தில் ஏழாம்நாள் மாத்திரமல்ல, வாரத்தின் ஏழுநாட்களுமே பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டிய நாட்கள் ஆகும் என்பது இவர்களுடைய வியாக்கியானம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். அவர்கள் புறஜாதியாரின் அந்நிய தெய்வங்களையும், விக்கிரகங்களையும் விட்டு விலகியிருக்கவேண்டும். "நான் உங்களுக்குச் சொன்னவைகள் யாவற்றிலும் சாவதானமாயிருங்கள். அந்நிய தேவர்களின் பேரைச் சொல்லவேண்டாம்; அது உன் வாயிலிருந்து பிறக்கக் கேட்கப்படவும் வேண்டாம்" (யாத் 23:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் விக்கிரகாராதனைக்கு விரோதமாக பல காரியங்களை சொல்லியிருக்கிறார். கர்த்தர் அதுபற்றி அவர்களுக்கு சொன்ன எல்லா காரியங்களிலும் அவர்கள் சாவதானமாயிருக்கவேண்டும். விக்கிரகாராதனைக்கு விரோதமான உபதேசங்களிலே அவர்கள் மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும், ஜாக்கிரதையோடும் இருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷத்தில் மூன்று தரம் கர்த்தருக்கு பண்டிகையை ஆசரிக்கவேண்டும் (யாத் 23:14). பண்டிகை காலத்திலே, இஸ்ரவேல் ஜனத்தாரில் ஆண்மக்கள் எல்லோரும் சபையாக கூடிவரவேண்டும். பரிசுத்தமான சபை கூடுதலை அவர்கள் அசட்டைபண்ணக்கூடாது. "வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்மக்கள் எல்லாரும் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதியில் வரக்கடவர்கள்" (யாத் 23:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையாய் வரக்கூடாது (யாத் 23:15). அவர்கள் கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டும். உற்சாகமான காணிக்கைகளும், மனப்பூர்வமான காணிக்கைகளும் கர்த்தருக்கு பிரியமானவை. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே அவரை ஆராதிக்கிற வருகிறவர்கள், வெறுங்கையோடும் வரக்கூடாது, வெறும் இருதயத்தோடும் வரக்கூடாது. நம்முடைய இருதயத்தில் கர்த்தர்மீது பக்தி நிரம்பியிருக்கவேண்டும்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்களுடைய ஆத்துமாக்கள் கிருபை நிரம்பியதாகவும், பக்தி நிரம்பியதாகவும், கர்த்தர்மீது பரிசுத்தமான அன்பு நிரம்பியதாகவும், கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் பரிசுத்தமான வாஞ்சை நிரம்பியதாகவும் இருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய சமுகத்தில் அவரை ஆராதிக்கும்படியாக கூடிவரும்போது, நம்மையே ஜீவபலியாக அவருடைய பாதபடியிலே ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு, வருஷத்திற்கு மூன்று பண்டிகைகளை நியமித்திருக்கிறார். அவை இஸ்ரவேல் தேசத்தின் வசந்தகாலத்தில் ஒன்றும், கோடைகாலத்தில் ஒன்றும், அறுவடை காலத்தில் ஒன்றுமாக வருகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருக்கு மூன்றுதரம் பண்டிகை ஆசரிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் இந்த மூன்று பண்டிகைகளைப்பற்றியும் மிகவும் விரிவாகச் சொல்லுகிறார். இந்தப் பண்டிகைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டதுபோல, வேறு வசனப்பகுதிகள் எதிலும் விரிவாக சொல்லப்படவில்லை.

பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை, அறுப்புக்கால பண்டிகை ஆகியவை கர்த்தர் நியமித்திருக்கிற மூன்று பண்டிகைகளாகும்.

பஸ்கா பண்டிகையானது புளிப்பில்லா அப்பப்பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. கர்த்தர் இந்தப் பண்டிகையைப்பற்றிச் சொல்லும்போது, "புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஆபிப் மாதத்தின் குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே" (யாத் 23:15) என்றும்,

"எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்தவேண்டாம், எனக்கு இடும் பலியின் கொழுப்பை விடியற்காலம்வரைக்கும் வைக்கவும் வேண்டாம்" (யாத் 23:18) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேலருக்கு ஆபிப் மாதம் முதலாவது மாதமாகும். இது மார்ச் மாதத்தின் இறுதியிலிருந்து ஏப்ரல் மாதத்தின் துவக்கம் வரையிலுமுள்ள காலம் (யாத் 12:2,18; யாத் 13:4).

கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், கர்த்தர் அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக, அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரவேண்டும் (உபா 16:17).

பெந்தெகொஸ்தே பண்டிகை முதற்கனிகளின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் பெந்தெகொஸ்தே பண்டிகை காலத்தின்போது, தங்களுடைய நிலங்களின் விளைச்சலை அறுவடைசெய்ய ஆரம்பிக்கிறார்கள். அப்போது அவர்கள் தங்கள் நிலத்தின் முதல் விளைச்சல்களில், முதற்கனியை, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரவேண்டும் (யாத் 23:19). விளைச்சலின் முதற்கனியை கர்த்தருக்கு காணிக்கையாக படைக்கும்போது, அவர்களுடைய முழுவிளைச்சலும் ஆசீர்வதிக்கப்படும். கர்த்தர் அவர்களுடைய மொத்த அறுவடையையும் ஆசீர்வதிப்பார்.

இஸ்ரவேல் புத்திரர் சேர்ப்புகால பண்டிகையையும் ஆசரிக்கவேண்டும். "நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 23:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இந்த வருஷத்திலே தங்களுக்கு நல்ல அறுவடையைக் கொடுத்ததற்காக அவருக்கு நன்றி சொல்லும் வண்ணமாகவும், வரப்போகிற வருஷத்திலே கர்த்தர் தம்முடைய கிருபையினால் தங்களுக்கு நல்ல அறுவடையைக் கொடுப்பார் என்று கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பை நம்பும் வண்ணமாகவும், இஸ்ரவேல் புத்திரர் சேர்ப்புக்கால பண்டிகையை ஆசரிக்கிறார்கள்.

புறஜாதியார் தங்களுடைய அறுவடைக்கு கர்த்தரை நம்பாமல், அவர்கள் மாய்மாலங்களையும், விக்கிரகங்களையும் நம்புகிறார்கள். தங்களுடைய நிலங்களில் அறுவடை அதிகமாயிருக்கவேண்டும் என்பதற்காக புறஜாதியார் மந்திரங்களை ஓதுகிறார்கள். மந்திரங்களினாலோ, மாயாஜாலங்களினாலோ தானியம் விளைவதில்லை. அது கர்த்தருடைய தெய்வீக கிருபையினால் விளைகிறது. மனுஷன் நிலத்தை உழுது, விதை விதைத்து, தண்ணீர் பாய்ச்சினாலும், விளையச் செய்கிறவர் கர்த்தரே.

கர்த்தர் மூன்று பண்டிகைகளைப்பற்றிச் சொல்லும்போது, "வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கவேண்டாம்" (யாத் 23:19) என்றும் சொல்லுகிறார். புறஜாதியார் தங்களுடைய நிலத்திலே அறுவடை செய்த பின்பு, வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைப்பது வழக்கம். அவர்கள் தங்கள் நிலத்தின்மீது வெள்ளாட்டின் பாலை மந்திரவாதிகள் தெளிப்பதுபோல தெளிக்கிறார்கள். இவ்வாறு செய்தால் அடுத்த வருஷத்தில் தங்களுக்கு பெரிய அறுவடை கிடைக்கும் என்று நம்புகிறார்கள். வெள்ளாட்டின் பாலை தங்கள் நிலத்தில் தெளிப்பதினால், ஒருபோதும் பெரிய அறுவடை வரப்போவதில்லை. கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், அநுக்கிரகமும் இருந்தால் மாத்திரமே அறுவடை பெரிதாயிருக்கும்.

## வாக்குத்தத்தம்
## யாத் 23:20-33

**யாத் 23:20. வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.**

**யாத் 23:21. அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது.**

**யாத் 23:22. நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்.**

யாத் 23:23. என் தூதனானவர் உனக்குமுன் சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன்.

யாத் 23:24. நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக.

யாத் 23:25. உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.

யாத் 23:26. கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்.

யாத் 23:27. எனக்குப் பயப்படும் பயத்தை உனக்குமுன் செல்லும்படி செய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன்.

யாத் 23:28. உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன்.

யாத் 23:29. தேசம் பாழாய்ப்போகாமலும், காட்டு மிருகங்கள் உனக்கு விரோதமாய்ப் பெருகாமலும் இருக்கும்படி, நான் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உன் முன்னின்று துரத்திவிடாமல்,

யாத் 23:30. நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன்.

யாத் 23:31. சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம்வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன்; நான் அந்தத் தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய்.

யாத் 23:32. அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக.

யாத் 23:33. அவர்கள் உன்னை எனக்கு விரோதமாகப் பாவஞ் செய்யப்பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிருக்கவேண்டாம்; நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது உனக்குக் கண்ணியாயிருக்கும் என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய வாக்குக்கு செவிகொடுத்து, அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். அவர்கள் தமக்கு பிரியமானவர்களாயும், பரிசுத்தமுள்ளவர்களாயும் ஜீவிக்க வேண்டுமென்று கர்த்தர் அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். கர்த்தர் அவர்களுக்கு ஆயத்தம்பண்ணின தேசத்திற்கு வனாந்தரத்தின் வழியாய்ப் பிரமாணம் பண்ணுகிறார்கள். "இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்" (யாத் 23:20) என்றும், "என் தூதனானவர் உனக்கு முன் செல்லுவார்" (யாத் 23:23) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே தூதர்களையும் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தருடைய தூதர்கள் அவருடைய சித்தத்தின் பிரகாரமாக கிரியை செய்கிறார்கள். தம்முடைய தெய்வீக சித்தத்தையும், பராமரிப்பையும் நிறைவேற்றுவதற்கு, கர்த்தர் தம்முடைய தூதர்களை பயன்படுத்துகிறார்.

"வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்" (யாத் 23:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய தூதன் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்தைப் பாதுகாக்கிறார். அவர்கள் போகவேண்டிய தேசத்திற்கு கர்த்தருடைய தூதனானவர் அவர்களை வழிநடத்துகிறார்.

தூதன் என்பது திரித்துவத்தில் இரண்டாம் நபரைக் குறிக்கும் பெயர். இயேசு கிறிஸ்து மனுஷ அவதாரம் எடுப்பதற்கு முன்பாக, அவரைக் குறிப்பதற்கு இந்த பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவர் பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் சதாகாலங்களிலும் சம அந்தஸ்தில் இருக்கிறவர்.

தேவனுடைய நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. (யாத் 23:21). கர்த்தருடைய தூதனானவர் என்னும் வாக்கியத்தை மோசே 25 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். வேதாகமத்தில் இந்த நபர் தெய்வீக நபராக அறியப்பட்டிருக்கிறார். இவர் தேவன் என்றும், கர்த்தர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரைப் பார்த்து, "உன் சந்ததியை மிகவும் பெருகப் பண்ணுவேன்....கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டார்" (ஆதி 16:7-12; ஆதி 21:17-18) என்று கூறினார். அப்பொழுது ஆகார், என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்.

கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார். அவர் இதோ அடியேன் என்றார். அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் (ஆதி 22:11-12,15-17).

தேவதூதன் ஒருவர் சொப்பனத்தில் "யாக்கோபே" என்றார். நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே. இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார். (ஆதி 31:11-13).

யாக்கோபு "எல்லாத் தீமைக்கும் நீங்கலாகி என்னை மீட்ட தூதனானுமானவர். இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக" என்று கூறி யோசேப்பின் பிள்ளைகளை ஆசீர்வதித்தார் (ஆதி 48:16).

கர்த்தருடைய தூதனானவர் மோசேயிடம் தம்மை "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார்." (யாத் 3:2-4:28) வனாந்தரத்தில் இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் அக்கினிஸ்தம்பமாகவும், மேகஸ்தம்பமாகவும் தம்மை வெளிப்படுத்தினார். (யாத் 14:19,24-31; யாத் 23:20,23; யாத் 32:34; யாத் 33:2; எண் 20:16).

கர்த்தருடைய தூதனானவர் வழியிலே பிலேயாமுக்கு எதிராக நின்று, தம்மைக் கர்த்தராக வெளிப்படுத்தினார். (எண் 22:22-35).

தேவனுடைய தூதனானவர் யோசுவாவிடம் கர்த்தருடைய சேனையின் அதிபதியாக வந்தார் (யோசு 5:13-15).

கர்த்தருடைய தூதன் என்பது தேவகுமாரனைக் குறிக்கும் என்றும் இவரே உடன்படிக்கையின் தூதராகயிருக்கிறார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய தூதனானவர் அவருடைய ஸ்தானிகராகவும் இருக்கிறார். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, இந்த உலகத்தில் மனிதராக அவதரிப்பதற்கு முன்பாக, அவர் சபையின் மீட்பராகவும் இருந்தார். கிறிஸ்துவானவர் இந்த உலகத்தின் ஆரம்பத்திலிருந்தே அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாகவும் இருந்தார்.

கர்த்தருடைய ஆசீர்வதிக்கப்பட்ட தூதனானவர், இஸ்ரவேல் புத்திரரை, கானான் தேசத்திற்கு வழிநடத்திக்கொண்டு போவார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். அந்த தேசத்தை அவர்களுக்கு சுதந்தரமாக நியமித்திருக்கிறார்.

"என் தூதனானவர் உனக்குமுன் சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்" (யாத் 23:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே பாதுகாப்பாக குடியேறுவார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் சொல்லும்போது, அவர்களுக்கு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும் (யாத் 23:25).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னே ஒரு தூதனை அனுப்புகிறார். அவர்கள் அந்த தூதனானவருடைய சமுகத்தில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் அவருடைய வாக்குக்குச் செவிகொடுக்கவேண்டும். அவரைக் கோபப்படுத்தக்கூடாது; கர்த்தருடைய தூதனானவர் அவர்களுடைய துரோகங்களை பொறுப்பதில்லை; கர்த்தருடைய நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது (யாத் 23:21).

கர்த்தருடைய நாமம் அவருடைய தூதரின் உள்ளத்திலிருக்கிறது. தேவனுடைய பரிபூரண அதிகாரம் அவர்மீதும் அவரிலும் அவரைச் சுற்றிலும் அவருடைய இருதயத்திலும் அவருடைய சுபாவத்திலும் இருக்கிறது. கிறிஸ்துவைப் பற்றியும் இதைப் போன்ற வாக்கியம் கூறப்பட்டிருக்கிறது. (கொலோ 1:19; கொலோ 2:9). தேவதூதன் கர்த்தத்துவத்தின் பிரதிநிதியாக இருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நடுவிலிருந்து அவர்களை வழிநடத்திப் பாதுகாத்து, கானான் தேசத்திற்கு அழைத்து வருகிறார்.

"உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை" என்னும் வாக்கியத்திற்கு சமமான எபிரெய பாஷை வார்த்தைகளைப் பல்வேறு விதமாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். செப்துவஜிந்த் பதிப்பில் "என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறபடியால் உங்களைவிட்டு அவர் விலகிப்போகமாட்டார்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவதூதருக்குத் தெய்வீக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் தம்முடைய தெய்வீக பரிசுத்தத்தையும், தெய்வீக மகிமையையும் காத்துக் கொள்கிறார். தேவனுக்கு மட்டுமே மனுஷருடைய பாவத்தை மன்னிக்கும் அதிகாரமும், மன்னியாமல் இருக்கும் அதிகாரமும் உள்ளது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய தூதனானவரின் வாக்கை நன்றாய்க் கேட்டு, கர்த்தர் சொல்வதையெல்லாம் செய்யவேண்டும். அப்பொழுது கர்த்தர் அவர்களுடைய சத்துருக்களுக்குச் சத்துருவாயும், அவர்களுடைய விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பார் (யாத் 23:22).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். அப்பொழுது கர்த்தர் அவர்களுடைய அப்பத்தையும், தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். கர்த்தர் வியாதியை அவர்களிலிருந்து விலக்குவார் (யாத் 23:25). இஸ்ரவேல் புத்திரருக்கு சரீர ஆரோக்கியம் உண்டாயிருக்கும். அவர்களுடைய போஜனத்திற்கும் குறைவு இருக்காது.

அப்பமும், தண்ணீரும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தரும் பராமரிப்பாகும். தேவன் இதை ஆசீர்வதிக்கும்போது அப்பமும், தண்ணீரும் அளவில் குறைவாக இருந்தாலும் அது மனுஷருக்குத் திருப்தியாக இருக்கும்.

கர்த்தர் வியாதியை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து விலக்குவதாக வாக்குப்பண்ணுகிறார். தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றியிருக்கிறார். (சங் 105:37; சங் 107:20); இது தேவனுடைய நித்திய திட்டம். (சங் 91; ஏசா 58)

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய ஐசுவரியங்களை வர்த்திக்கப்பண்ணுவார். கர்ப்பம் விழுகிறதும் மலடும் அவர்களுடைய தேசத்தில் இருப்பதில்லை; கர்த்தர் அவர்களுடைய ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவார் (யாத் 23:26).

மனுஷர் இந்த வயதில்தான் மரிக்க வேண்டுமென்று எந்த வருஷமும் நியமிக்கப்படவில்லை. (சங் 91; 1பேதுரு 3:10-11). நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வாக்கை நன்றாய் கேட்டு அவர் சொல்லுவதையெல்லாம் செய்யும்போது, கர்த்தர் அவர்களுக்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிறைவேறும். அப்பொழுது, "எனக்குப் பயப்படும் பயத்தை உனக்குமுன் செல்லும்படி செய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன்" (யாத் 23:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலர்கள் தேவனோடு சரியான ஐக்கியத்தில் இருக்கும் போது, அவர் இஸ்ரவேலரின் விரோதிகள் எல்லோரையும் கலங்கடிப்பார். இஸ்ரவேலருக்காகக் கர்த்தர் யுத்தம் பண்ணுவார். யுத்தத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஜெயம் உண்டாகும் (எண் 31:49; யோசு 6; நியா 7)

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆயத்தம்பண்ணின கானான் தேசத்திலே ஏவியரும், கானானியரும், ஏத்தியரும் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை இஸ்ரவேல் புத்திரருடைய முகத்திற்கு முன்னின்று துரத்திவிடுவார். அதற்காக இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் குளவிகளை அனுப்புவார் (யாத் 23:28). குளவிகள் ஒரு அங்குல நீளமுள்ளது. ஒரு குதிரையை நான்கு குளவிகள் ஒரேவேளையில் கொட்டினால் அந்தக் குதிரை மரித்துப்போகும்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலிருக்கிற சத்துருக்களையெல்லாம் முறியடித்து, அங்கே சுகமாய்க் குடியேறுவார்கள். கர்த்தர் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அந்த தேசத்திலே சத்துருக்கள் இருந்தாலும், கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் அந்த சத்துருக்களை துரத்திவிடுவதாக வாக்குப்பண்ணுகிறார்.

"அவர்களை நான் அதம்பண்ணுவேன்" (யாத் 23:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். இங்கு ஆறு தேசத்தாரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் என்போராவர். ஆதி 15:19-21 ஆகிய வசனங்களில் பத்து தேசங்களைப் பற்றியும், உபா 7:1 ஆவது வசனத்தில் ஏழு தேசங்களைப் பற்றியும் யோசு 12 ஆவது அதிகாரத்தில் ஆறு தேசங்களையும், 31 இராஜாக்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

"தேசம் பாழாய்ப்போகாமலும், காட்டுமிருகங்கள் உனக்கு விரோதமாய்ப் பெருகாமலும் இருக்கும்படி, நான் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உன் முன்னின்று துரத்திவிடாமல், நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன்" (யாத் 23:29,30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேசம் பாழாய்போகக்கூடாது. காட்டுமிருகங்கள் தம்முடைய ஜனத்திற்கு விரோதமாய்ப் பெருகக்கூடாது. ஆகையினால் தேவன் அவைகளை ஒரே வருஷத்தில் துரத்திவிடமாட்டார். இஸ்ரவேலர்கள் விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் தம்முடைய பிள்ளைகள் முன்னின்று துரத்திவிடுவார். தேவன் தாம் செய்யும் எல்லாக் காரியங்களையும் நேர்த்தியாகவும், நடைமுறைக்கு உகந்ததாகவும் செய்கிறார். (2இராஜா 17:25)

குளவிகள் சாதாரண சிருஷ்டிகளாகயிருந்தாலும், கர்த்தர் அந்தக் குளவிகளையும் பயன்படுத்தி தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். ஏவியரும், கானானியரும், ஏத்தியரும் கர்த்தருடைய ஜனத்திற்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலிருந்து துரத்திவிடுவதற்காக, அவர்களுக்கு விரோதமாக குளவிகளை அனுப்புவார். குளவிகள் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும். கர்த்தர் விரும்பும்போது குளவிகள் கானானியரையும், தேசத்திலுள்ள சிங்கங்களையும் துரத்திவிடும்.

"எமோரியரின் இரண்டு ராஜாக்களையும் உங்கள் பட்டயத்தாலும் உங்கள் வில்லாலும் நீங்கள் துரத்தவில்லை; நான் உங்களுக்கு முன்பாக குளவிகளை அனுப்பினேன்; அவைகள் அவர்களை உங்கள் முன்னின்று துரத்திவிட்டது" (யோசு 24:12).

இஸ்ரவேல் புத்திரர் விருத்தியடைந்து கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். "சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம்வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன்; நான் அந்தத் தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய்" (யாத் 23:31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அங்கே இருக்கிற அந்நிய தேசத்தாரோடோ அல்லது அவர்களுடைய அந்நிய தேவர்களோடோ உடன்படிக்கை பண்ணக்கூடாது. அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது.

"நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக" (யாத் 23:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் அழிந்துபோவார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனைகளும், பாவமான பழக்க வழக்கங்களும் அவர்களை அழித்துப்போடும். புறஜாதியாரை அழித்துப்போடும் ஒரு சில காரியங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நெருங்கிய உறவினரைத் திருமணம் செய்துகொள்ளுதல் (லேவி 18:3-18,24; லேவி 20:11-23)
2. அசுத்தமான ஸ்திரீகளோடு உறவு வைத்துக் கொள்வது. (லேவி 18:19; லேவி 20:18,23)
3. விபசாரம் (லேவி 18:20,24-29; லேவி 20:10)
4. மனுஷரைப் பலியிடுதல் (லேவி 18:21, 24-29; லேவி 20:1-6,23)
5. ஓரினச்சேர்க்கை (லேவி 18:22-29; லேவி 20:13)
6. மிருகத்தோடு புணருவது (லேவி 18:23-29; லேவி 20:15-16)
7. பில்லிசூனியம் (லேவி 20:6,23-27; உபா 18:9-12)
8. பெற்றோரைச் சபிப்பது (லேவி 20:9,23)
9. விக்கிரகாராதனை (யாத் 23:24; உபா 7:4,16,25; உபா 12:2-3,29-31)
10. இஸ்ரவேலருக்குத் தடைபண்ணப்பட்டிருக்கும் எல்லாப் பாவங்களும் (உபா 9:4-5; உபா 23:17-18; உபா 29:18)

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் அந்நிய ஜாதியாரோடும், அவர்கள் தேவர்களோடும் உடன்படிக்கை பண்ணக்கூடாது (யாத் 23:32).

அந்நிய ஜாதியார் இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்யப்பண்ணாதபடிக்கு, அவர்கள் கானான் தேசத்திலே குடியிருக்கவேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது அவர்களுக்குக் கண்ணியாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 23:33).

இஸ்ரவேல் ஜனத்தாரைக் குறித்து, தேவன் கரிசனையோடு இருக்கிறார். அவர்கள் தண்ணீரைப்போன்று நிலையற்றவர்கள். அவர்கள் சிறிய பிரச்சனை வந்தாலும் தேவனுக்கு எதிராக முறுமுறுக்கிறவர்கள். ஆகையினால் இஸ்ரவேலர்கள் புறஜாதியாரோடும், அவர்களுடைய தேவர்களோடும் உடன்படிக்கை பண்ணக்கூடாது. (எண் 11; எண் 13-14; எண் 21)

பரிசுத்த வேதாகமத்தில் அந்நிய தேவர்களைப்பற்றியும், அவர்களை ஆராதிக்கிறவர்களைப்பற்றியும் ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. அந்நிய தேவர்களை ஆராதிக்கக்கூடாது. (யாத் 20:3)
2. அந்நிய தேவர்களை உருவாக்குதல். (யாத் 20:4; யாத் 32:4,20; உபா 4:23; ஏசா 40:19-20; ஏசா 44:9-17; ஆப 2:18; அப் 19:24-25)
3. அந்நிய தேவர்களை உருவாக்குவது தடைபண்ணப்பட்டிருக்கிறது (யாத் 20:4; யாத் 34:17)
4. அந்நிய தேவர்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள்.
   (1) பொன்னும் வெள்ளியும் (யாத் 32:3-4; சங் 115:4-7; சங் 135:15-17; ஏசா 2:20; ஏசா 30:22; ஏசா 31:7; ஓசி 8:4)
   (2) மரமும், கல்லும் (லேவி 26:1; உபா 4:28; 2இராஜா 19:18; ஏசா 37:19; ஏசா 44:13-19; ஏசா 45:20; எசே 20:32)
5. அந்நிய தெய்வங்களுக்கு பல பெயர்கள் உள்ளன.
6. விக்கிரகாராதனை முறைமைகள் வெவ்வேறாக இருக்கும்.
7. விக்கிரகங்களின் அளவும், ரூபமும் (ரோமர் 1:21-27; வெளி 9:20-21. உபா 4:15-16)
8. விக்கிரகங்களை ஆராதிப்போருக்கு வரும் முடிவு (2கொரி 6:9-11; கலா 5:19-21; வெளி 21:8; வெளி 22:15)

பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான அந்நிய தெய்வங்களைப்பற்றியும், அவைகளின் பெயர்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிற அதன் விவரம் வருமாறு :

1. மோளேகு - அம்மோனியரின் தேசிய தெய்வம். இது மோவாபியரின் காமோஸ் தெய்வத்தைப் போன்றது. (லேவி 18:21; லேவி 20: 2-5; 1இராஜா 11:5-7,33; 2இராஜா 23:10-13; எரே 32:35; ஆமோ 5:26; அப் 7:43).
2. பாகால் - மேற்கு ஆசியாவில் புறஜாதியார் மத்தியில் பிரபலமாக இருந்த தெய்வம். இது சூரிய தெய்வமென்றும் அழைக்கப்பட்டது. (எண் 22:41;நியா 2:13; நியா 6:25-32; 1இராஜா 16:31-32; 1இராஜா 18:19-26,40; 1இராஜா 19:18; 1இராஜா 22:53; 2இராஜா 3:2; 2இராஜா 10:18-28; 2இராஜா 11:18; 2இராஜா 17:16; 2இராஜா 21:3; 2இராஜா 23:4-5; 1நாளா 4:33; 1நாளா 5:5; 1நாளா 8:30; 1நாளா 9:36; 2நாளா 23:17; எரே 2:8; எரே 7:9; எரே 11:13,17; எரே 12:16; எரே 19:5; எரே 23:13,27; எரே 32:29,35; ஓசி 2:8; ஓசி 13:1; செப் 1:4; ரோமர் 11:4). பாகாலின் பலிபீடங்கள் உயர்ந்த மேடையில் இருக்கும். சூரிய உதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் காண்பதற்கு வசதியாக பாகாலின் கோவிலை மலையுச்சியில் கட்டினார்கள்.
3. பாகால்-பேரீத் சேகேமியரின் தெய்வம். பாகாலின் உடன்படிக்கை என்பது இதன் பொருள். (நியா 8:33; நியா 9:4)

4. பாகால்கள் - பாகாலின் பன்மைப்பெயர். (நியா 2:11; நியா 3:7; நியா 8:33; நியா 10:6,10; 1சாமு 7:4; 1சாமு 12:10; 1இராஜா 18:18; 2நாளா 17:3; 2நாளா 24:7; 2நாளா 28:2; 2நாளா 33:3; 2நாளா 34:4; எரே 2:23; எரே 9:14; ஓசி 2:13,17; ஓசி 11:2)

5. பாகால்சேபூப் - இந்த எபிரெய வார்த்தைக்கு வண்டுகளின் தெய்வம் என்று பொருள். இது எக்ரோனின் தேவன் என்றும் அழைக்கப்பட்டது. (2இராஜா 1:2-3,6,16) பாகால்சேபூப் வண்டுகளை உற்பத்தி செய்கிறவன். வண்டுகளுக்கு எதிராக இந்தத் தெய்வம் தங்களைப் பாதுகாக்கும் என்று எக்ரோனியர் நம்பினார்கள். வண்டுகளினால் கிழக்கு தேசத்தில் மிகப்பெரிய வாதைகள் வரும் என்பது ஜனங்களுடைய நம்பிக்கை. வண்டுகள் இந்தத் தெய்வத்தின் பிரதிநிதிகள் என்று நம்பினார்கள். மழை, இடி, மின்னல் ஆகிய இயற்கை தெய்வங்களைப் போன்று, பாகால்சேபூபும் ஒரு வல்லமையான தெய்வம் என்பது ஜனங்களுடைய நம்பிக்கை. ஆகையினால் அகசியா ராஜா பாகால்சேபூபிடம் தன் விண்ணப்பத்திற்குப் பதில் எதிர்பார்த்தான்.

6. பெயல்செபூல் - இது அசுத்த ஆவிகளுக்குத் தலைவன் என்று யூதர்கள் கருதினார்கள். (மத் 10:25; மத் 12:27); பரிசேயர்கள் பெயல்செபூலைப் பிசாசுகளின் தலைவன் என்று அழைத்தார்கள். (மத் 12:24; மாற்கு 3:22; லூக்கா 11:15); இயேசு இவனை சாத்தான் என்று கூறினார் (லூக்கா 11:18).

7. அஸ்தரோத் - கானானியருடைய பெண் தெய்வம். சந்திரனுடைய பெயர் இதற்கு வழங்கப்படுகிறது. (நியா 2:13; நியா 10:6; 1சாமு 7:3-4; 1சாமு 12:10; 1சாமு 31:10; 1இராஜா 11:5,33; 2இராஜா 23:13). இந்தத் தெய்வம் நிர்வாணமாக இருக்கும். இவளுடைய கண் புருவத்தில் சந்திரனின் பிறை வடிவம் இருக்கும். ஜன உற்பத்திக்கு உகந்த தெய்வமென்று ஜனங்கள் இதை வழிபட்டார்கள். புறாக்கள் இவளுடைய புனிதமான பறவைகளாகும்.

8. ஆசேரா - கானானியருடைய தெய்வம். பாகாலின் மனைவி.

9. பேல் - பாபிலோனியரின் தெய்வம். (ஏசா 46:1; எரே 50:2; எரே 51:44)

10. காமோஸ் - மோவாபியரின் தெய்வம். அம்மோனியருக்கு மோளேகைப் போன்றது. (நியா 11:24; 1இராஜா 11:7,33; 2இராஜா 23:13; எரே 48:7,13,46)

11. பொன் கன்றுக்குட்டி - இஸ்ரவேலரில் பின்வாங்கிப் போனவர்களுடைய தெய்வம் யாத் 32:4-35; உபா 9:16-21; நெகே 9:18; சங் 106:19)

12. பெத்தேல், தாண் ஆகியவற்றின் பொன் கன்றுக்குட்டி - இஸ்ரவேலரில் பின்வாங்கிப் போனவர்களுடைய தெய்வம். (1இராஜா 12:28-32; 2இராஜா10:29; 2இராஜா 17:16; 2நாளா 11:15; 2நாளா 13:8; ஓசி 8:5-6; ஓசி 10:5; ஓசி 13:2)

13. மெரொதாக் - பாபிலோனியரின் தெய்வம். (எரே 50:2)

14. நேபோ - பாபிலோனியரின் தெய்வம். (ஏசா 46:1)

15. நிகுஸ்தான் - வெண்கல சர்ப்பம். இஸ்ரவேலரில் பின்வாங்கிப் போனவர்களுடைய தெய்வம். (2இராஜா 18:4)

16. வலை, பறி - இஸ்ரவேலரில் பின்வாங்கிப் போனவர்களுடைய தெய்வம் (ஆப 1:15-17)

17. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் - இஸ்ரவேலரில் பின்வாங்கிப் போனவர்களுடைய தெய்வம். (உபா 4:19; 2இராஜா 17:16; 2இராஜா 21:3-5; 2நாளா 33:15-16; செப் 1:4-5; அப் 7:42)

18. சுக்கோத் - பெனோத் - (2இராஜா 17:30) பாபிலோனின் பெண்தெய்வம். பேலின் மனைவி.

19. நேர்கால் - கூத்தின் மனுஷருடைய தெய்வம். (2இராஜா 17:30). அசீரியர் மத்தியில் இந்தத் தெய்வம் பிரபலமானது.

20. ஆஷிமா - ஆமாத்தின் தெய்வம். ஆட்டின் ரூபமுடையது.

21. நிஸ்ரோக் - (2இராஜா 19:37) அசீரியரின் தெய்வம். நினிவேயில் இதன் கோவில் உள்ளது.

22. நிபேகாஸ் - ஏவியவரின் தெய்வம். (2இராஜா 17:31). இதன் தலை நாயின் உருவமுடையது.

23. தர்தாக் - ஏவியரின் மற்றொரு தெய்வம். (2இராஜா 17:31) இது கழுதை உருவமுடையது.

24. ரிம்மோன் - சீரியரின் தெய்வம். (2இராஜா 5:18)

25. அத்ரமலேக் - (2இராஜா 17:31) மோளேகைப் போன்றது. சேப்பார்வியரின் தெய்வம்.

26. அன்னமலேக் - (2இராஜா 17:31) சேப்பார்வியரின் மற்றொரு தெய்வம். குதிரையின் ரூபமுடையது. இதற்கு நரபலியிட்டார்கள்.

27. வார்ப்புக்கள் - (எண் 33:52; ஏசா 2:16; எசே 8:10)

28. எகிப்தியரின் தெய்வங்கள் - மிருகங்கள் (யாத் 12:12)

29. தேவர்களின் நட்சத்திர ராசி - (ஆமோஸ் 5:26) ரெம்பான் (அப் 7:43)

30. யூப்பித்தர் - கிரேக்கரின் பிரதான தெய்வம். (அப் 14:12-13; அப் 19:35)

31. மெர்கூரி - ரோமரின் வியாபார தெய்வம். (அப் 14:12)

32. அறியப்படாத தேவன் - கிரேக்கருடைய தேவன் (அப் 17:23)

33. தியானாள் - கிரேக்கருடைய தேவதை (அப் 19:24-25)

34. தாகோன் - பெலிஸ்தருடைய தேசிய தெய்வம். சிறிய மீன் வடிவத்தில் இருக்கும்.

35. மிருகத்தின் சொரூபம் (வெளி 13)

இவைதவிர, அந்நிய தெய்வங்கள், வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்கள், உளியால் செதுக்கப்பட்ட தெய்வங்கள் என்று பல தெய்வங்களைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலரின் பட்டணங்களின் இலக்கமும், அவர்களுடைய தேவர்களின் இலக்கமும் சரியென்று எரேமியா தீர்க்கதரிசி கூறியிருக்கிறார். (எரே 2:28). விக்கிரகங்களை ஆராதிப்பது பிசாசுகளின் ஆராதனை என்று கூறப்பட்டிருக்கிறது. (லேவி 17:7; உபா 32:17; 2நாளா 11:15; சங் 106:37; 2கொரி 10: 7-8,20-21; வெளி 9:20-21).

புறஜாதி ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது என்னென்ன செய்கிறார்கள் என்பது பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. விக்கிரகங்களிடம் ஜெபம் பண்ணுகிறார்கள் (நியா 10:14; 1இராஜா 18:25-29; ஏசா 16:12; ஏசா 44:17; ஏசா 45:20; ஏசா 46:7; யோனா 1:5)

2. மனுஷரைப் பலியிடுகிறார்கள் (லேவி 18:21; லேவி 20:2-5; உபா 12:31; உபா 18:10; 2இராஜா 3:26-27; 2இராஜா 16:3; 2இராஜா 17:17-18; 2இராஜா 21:6; 2இராஜா 23:10; 2நாளா 28:3; 2நாளா 33:6; சங் 106:37-38; ஏசா 57:5; எரே 7:31; எரே 19:4-7; எரே 32:35; எசே 16:20-21; எசே 20:26-31; எசே 23:37-39; மீகா 6:7)

3. மரித்தோருக்காக சடங்குகளை செய்கிறார்கள் (உபா 14:1)

4. அநீதியான கிரியைகள் நடப்பிக்கிறார்கள். (யாத் 32:6,25; எண் 25:1-3; 1இராஜா 14:24; 1இராஜா 15:12; 2இராஜா 17:30; 2இராஜா 23:7; எசே 16:17; எசே 23:1-44; ஓசி 4:12-14; ஆமோ 2:8; மீகா 1:7; ரோமர் 1:18-32; 2கொரி 10:7-8; 1பேதுரு 4:3-4; வெளி 2:14-22; வெளி 9:20-21; வெளி 14:8; வெளி 17:1-6)

5. விலங்குகளைப் பலியிடுகிறார்கள் (யாத் 32:6; 1இராஜா 18:26; அப் 14:13)

6. இரத்தபான பலிகளை செலுத்துகிறார்கள். (உபா. 32:38; சங் 16:4; ஏசா 57:6; ஏசா 65:11; எரே 7:18; எரே 19:13; எரே 32:29; எரே 44:17-25; எசே 20:28; சக. 9:7)

7. போஜனபலிகளை செலுத்துகிறார்கள் (ஏசா 57:6; எசே 16:19)

8. சமாதான பலிகளை செலுத்துகிறார்கள் (யாத் 32:6)

9. தூபவர்க்கங்களைக் காண்பிக்கிறார்கள் (1இராஜா 12:33; 2நாளா 30:14; 2நாளா 34:25; ஏசா 65:3; எரே 1:16; எரே 11:12,17; எரே 44:3; எரே 48:35; எசே 16:18; எசே 23:41)

10. விக்கிரகங்களைத் துதிக்கிறார்கள். (நியா 16:24; தானி 5:4)

11. விக்கிரகங்களுக்கு முன்பு ஆடிப்பாடுகிறார்கள் (யாத் 32:18)

12. விக்கிரகங்களுக்கு வாத்தியங்களை இசைக்கிறார்கள் (தானி 3:5-7)

13. தங்கள் சரீரங்களைக் கீறிக்கொள்ளுகிறார்கள் (1இராஜா 18:28)

14. முழங்கால்படியிட்டு விக்கிரங்களை முத்தம் செய்கிறார்கள் (1இராஜா 19:18; 2இராஜா 5:18; யோபு 31:27; ஓசி 13:2)

15. தசமபாகங்களும், காணிக்கைகளும் செலுத்துகிறார்கள் (2இராஜா 23:11; தானி 11:38; ஆமோ 4:4-5)

16. விக்கிரகங்களுக்கு பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள் (1இராஜா 12:32; எசே 18:6,11-15; எசே 22:9; தானி 3:2-3)

விக்கிரகங்கள் மனுஷருடைய கிரியைகளாகும். (ஏசா 2:8; ஏசா 40:19-20; எரே 10:1-9; ஓசி 8:6; ஓசி 13:2; ஆமோ 5:26). விக்கிரகாராதனை வீணானது. (உபா 4:16; ஓசி 4:12; ஏசா 44: 9-10).

## 24 அதிகாரம்

மோசே சீனாய் மலையில் கர்த்தருடைய பிரமாணங்களைப் பெற்றுக்கொண்டு, அங்கே இருந்து ஜனங்கள் இருக்கிற இடத்திற்கு கீழே இறங்கி வருகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு அறிவிக்கிறார். கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று ஜனங்கள் பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள் (யாத் 24:1-3).

மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எழுதி வைக்கிறார். மோசே கர்த்தருடைய உடன்படிக்கையின் புஸ்தகத்தை ஜனங்களுடைய காதுகள் கேட்க வாசிக்கிறார். ஜனங்களும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பதாக சொல்லுகிறார்கள் (யாத் 24:4-7).

ஜனங்கள் கர்த்தருக்கு சமாதான பலிகளாக காளைகளை பலியிடுகிறார்கள். மோசே அந்த இரத்தத்தை எடுத்து ஜனங்களின் மேல் தெளிக்கிறார் (யாத் 24:5,6,8).

கர்த்தர் தம்முடைய சமுகத்திலிருந்து மோசேயை அனுப்பியபோது, அவர் மறுபடியும் தம்மிடத்தில் திரும்பி வரவேண்டும் என்று சொல்லியிருந்தார். அப்போது மோசேயோடுகூட ஆரோனும், நாதாபும் அபியூவும், இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேரும் தம்மிடத்தில் ஏறிவரவேண்டுமென்று கர்த்தர் சொல்லியிருந்தார் (யாத் 24:1,2).

அதன் பிரகாரமாக மோசேயும், ஆரோனும், நாதாபும், அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் கர்த்தரிடத்திலே ஏறிப்போகிறார்கள் (யாத் 24:9-11).

கர்த்தர் மோசேயை மலையின்மேல் தம்மிடத்திற்கு ஏறிவருமாறு சொல்லுகிறார். மோசே தேவபர்வதத்தில் ஏறிப்போகிறார் (யாத் 24:12,13). மோசே தங்களிடத்தில் திரும்பி வருமட்டும், அவரோடு கூடப்போனவர்கள், அவருக்காக காத்திருக்கவேண்டும் (யாத் 24:14).

கர்த்தருடைய மகிமை சீனாய் மலையின்மேல் தங்கியிருக்கிறது. அந்த மகிமை இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்கு பட்சிக்கிற அக்கினியைப்போல இருக்கிறது (யாத் 24:15-17). மோசே சீனாய் மலையின்மேல் இரவும் பகலும் நாற்பது நாள் இருக்கிறார் (யாத் 24:18).

### உடன்படிக்கையின் புஸ்தகம் யாத் 24:1-8

**யாத் 24:1. பின்பு அவர் மோசேயை நோக்கி: நீயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் மூப்பரில் எழுபதுபேரும் கர்த்தரிடத்தில் ஏறிவந்து, தூரத்திலிருந்து பணிந்துகொள்ளுங்கள்.**

**யாத் 24:2. மோசே மாத்திரம் கர்த்தரிடத்தில் சமீபித்து வரலாம்; அவர்கள் சமீபித்து வரலாகாது; ஜனங்கள் அவனோடேகூட ஏறிவரவேண்டாம் என்றார்.**

**யாத் 24:3. மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்.**

**யாத் 24:4. மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்து, மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டி, இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினான்.**

**யாத் 24:5. இஸ்ரவேல் புத்திரரின் வாலிபரை அனுப்பினான்; அவர்கள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிட்டார்கள்.**

**யாத் 24:6. அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து,**

**யாத் 24:7. உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.**

**யாத் 24:8. அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்.**

ஆரோனும், அவருடைய குமாரரில் இரண்டுபேரும், இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேரும் தம்மிடத்தில் அழைத்து வரப்படவேண்டுமென்று கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். அவர்கள் கர்த்தருடைய மகிமைக்கு சாட்சிகளாயிருப்பார்கள். கர்த்தருடைய மகிமையைக் கண்டவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்கு, அவர்களுக்கு சாட்சி பகருவார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் மூப்பரில் எழுபதுபேரும் கர்த்தரிடத்தில் ஏறிவந்து, தூரத்திலிருந்து பணிந்துகொள்ளுங்கள்" (யாத் 24:1) என்று சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக மிகுந்த பயபக்தியோடு வரவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு அருகாமையில் வரக்கூடாது. அவர்கள் தூரத்திலிருந்தே கர்த்தரைப் பணிந்து கொள்ளவேண்டும்.

நாதாபும் அபியூவும் ஆரோனின் இரண்டு மூத்த குமாரர்கள். இவர்கள் குடித்து வெறித்திருந்ததற்காகவும், ஆசரிப்புக் கூடாரத்தில் அந்நிய அக்கினியைச் செலுத்தியதற்காகவும் கர்த்தர் இவர்களைக் கொன்றுபோட்டார். (லேவி 10).

இஸ்ரவேலின் மூப்பரில் எழுபதுபேரும் கர்த்தரிடத்தில் ஏறி வருகிறார்கள். கர்த்தர் தமது ஆவியை ஊற்றுவதற்காக இவர்களைத் தெரிந்தெடுத்தார் (எண் 11:16-25).

கர்த்தர் தம்முடைய திட்டத்தை மோசேயிடத்தில் சொல்லுகிறார். "மோசே மாத்திரம் கர்த்தரிடத்தில் சமீபித்து வரலாம்; அவர்கள் சமீபித்து வரலாகாது; ஜனங்கள் அவனோடேகூட ஏறிவரவேண்டாம்" (யாத் 24:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசே மாத்திரம் கர்த்தரிடத்தில் சமீபித்து வரலாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது சீனாய் மலையில் எழுபதுபேரும் தேவனோடு புசித்துக் குடித்தபின்பு, கூறப்பட்ட சம்பவமாகும் (யாத் 24:9-11).

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டு அது உறுதிபண்ணப்படுகிறது. மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்து இஸ்ரவேல் புத்திரரை சந்திக்கிறார். மோசே கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவிக்கிறார்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: "கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம்" (யாத் 24:3) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

யாத் 24:3 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற "வார்த்தைகள் யாவையும்" என்னும் வாக்கியம் பத்துக் கற்பனைகளைக் குறிக்கும். (யாத் 20:1-17). பத்துக் கற்பனைகள் தேவனுடைய பிரமாணம் என்றும், மற்றவையெல்லாம் மோசேயின் பிரமாணம் என்றும் கூறுவது தவறானது. இந்த வாக்கியத்தில் "வார்த்தை" என்பதற்கான எபிரெய வார்த்தை "தபார்" என்பதாகும். இதற்குக் கட்டளை அல்லது கற்பனை என்று பொருள்.

பத்துக் கட்டளைகளைப் பற்றி பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் இடங்களில் "தபார்" என்னும் வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 34:28; உபா 4:13; உபா 10:4). இதன் அடிப்படையில் யாத் 24:3 ஆவது வசனத்தை இவ்வாறு மொழிபெயர்க்கலாம். "மோசே வந்து, கர்த்தருடைய கற்பனைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தார்".

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். எல்லா வார்த்தைகளும் என்பதில் பத்துக் கற்பனைகளும், (யாத் 20:1-17) பிரமாணங்களும் (யாத் 20:18-23:33) அடங்கும்.

பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய பிரமாணத்தையும், மோசேயின் பிரமாணத்தையும் பற்றி பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சடங்காச்சார பிரமாணமும், நீதிநெறி பிரமாணமும் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது. (யாத் 19; யாத் 24:12-18; யாத் 25:40; யாத் 26:30; யாத் 27:8; யாத் 31:18; யாத் 32;34; லேவி 7:38; லேவி 25:1; லேவி 26:46; லேவி 27:34; எண் 3:1; எண் 15:22).

2. பத்துக் கற்பனைகள் மோசேயின் பிரமாணம் என்று கூறப்பட்டிருக்கிறது. (மத் 22:36-40; ரோமர் 2:21-22; ரோமர் 7:7-16; யாத் 20; உபா 5).

3. தேவனுடைய பிரமாணம் புஸ்தகத்திலும், கற்பலகைகளிலும் எழுதப்பட்டது. (யோசு 24:25-26).

4. "கர்த்தர்...சொன்னார்", "தேவன்.... சொன்னார்" என்னும் வார்த்தைகள் பஞ்சாகமத்தில் பல தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் - 46 தடவைகள், லேவியராகமம் - 36 தடவைகள், எண்ணாகமம் - 72 தடவைகள், உபாகமம் 50 தடவைகள். சடங்காரச்சாரபிரமாணமும், நீதிநெறி பிரமாணமும் ஒரே பிரமாணம் என்பதை இது வலியுறுத்துகிறது. (யாத் 12:49; லேவி 24:22; எண் 15:16,29).

5. பிரமாணத்தைக் குறிக்கும் பல மாற்றுப்பெயர்கள் தேவனுடைய பிரமாணத்தையும், மோசேயின் பிரமாணத்தையும் குறிக்கும். கற்பலகைகளில் எழுதப்பட்டது மட்டுமே தேவனுடைய பிரமாணம் என்று கூறினால் இப்பொழுது நம்மிடம் தேவனுடைய பிரமாணமே இராது. 2500 வருஷங்களுக்கு முன்பாகவே கற்பலகைகள் உடன்படிக்கைப் பெட்டியோடு காணாமற் போய்விட்டது.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்தார் என்று யாத் 24:4 ஆவது வசனம் கூறுகிறது. ஆகையினால் மோசே பத்துக் கற்பனைகளையும், கர்த்தருடைய மற்ற வார்த்தைகளையும் எழுதியிருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவார்களா அல்லது கீழ்ப்படியமாட்டார்களா என்பதை மோசே அறிந்துகொள்ள விரும்புகிறார். ஜனங்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின் படியும் செய்வதாக வாக்குப்பண்ணுகிறார்கள். அவர்களுடைய மனதிலே கீழ்ப்படியாமை காணப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதமும், கீழ்ப்படியாவிட்டால் அவர்களுக்கு சாபமும் வரும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள்.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைக்கிறார். அவர் அதிகாலமே எழுந்து, மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். மோசே இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார் (யாத் 24:4).

மோசே சீனாய் மலையின் அடியில் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார். இந்தப் பலிபீடம் தவிர மோசே மேலும் சில பலிபீடங்களையும் கட்டியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

1. ரெவிதீமில் இஸ்ரவேலர்கள் அமலேக்கியரை முறியடித்தபோது ஒரு பலிபீடத்தை கட்டினார். மோசே இந்தப் பலிபீடத்தை யெகோவா-நிசி என்று அழைத்தார். (யாத் 17:13-16)

2. நியாயப்பிரமாணப் புஸ்தகம் பிரதிஷ்டை பண்ணப்பட்டு, இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டபோது கட்டப்பட்ட பலிபீடம். (யாத் 24:4-8)

3. ஆசரிப்புக் கூடாரமும் அதன் பணிமுட்டுகளும் கட்டப்பட்டபோது ஒருபலிபீடம். அப்போது சித்தீம் மரத்தினால் மோசே ஒரு பலிபீடத்தைச் செய்து அதை வெண்கலத் தகட்டினால் மூடினார். இதில் எப்போதும் தொடர்ந்து பலிசெலுத்தப்படும். (யாத் 27:1-8; யாத் 38:1-7)

4. மோசே சித்தீம் மரத்தினால் தூபபலிபீடத்தைச் செய்தார். இதைப் பொன் தகட்டால் மூடி, பரிசுத்த ஸ்தலத்தில் வைத்தார் (யாத் 30:1-10; யாத் 37:25-28; யாத் 40:5,26)

மோசே இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார். பன்னிரண்டு தூண்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரைக் குறிக்கும். பலிபீடம் தேவனிடத்தில் கிட்டிச்சேரும் சிலாக்கியத்தைக் குறிக்கும். இங்கு தேவனும், இஸ்ரவேல் ஜனத்தாரும் உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

தேவன் உடன்படிக்கையைக் கூறுகிறார். தம்முடையபிரமாணத்தை ஏற்றுக் கொண்டால் இஸ்ரவேலருக்கு ஆசீர்வாதம் எனவும், அவற்றை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இஸ்ரவேலருக்கு சாபம் எனவும் தேவன் அறிவிக்கிறார். இஸ்ரவேலர்கள் தேவனுடைய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதாக வாக்குப் பண்ணுகிறார்கள். (யாத் 19:5-8; யாத் 24:3,7).

இதன்பின்பு, இது மிருகஜீவன்களின் இரத்தத்தினால் உறுதிப்பண்ணப்படுகிறது. உடன்படிக்கையை மீறுகிறவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும். இது வரப்போகிற மேசியாவின்மீது இஸ்ரவேல் ஜனத்தார் வைத்திருக்கும் நம்பிக்கையையும், வெளிப்படுத்துகிறது (யாத் 24:5-8; எபி 9:18-23).

பன்னிரண்டு தூண்களும் உளியினால் செதுக்கப்படாத கற்களாகும். பலிபீடத்திற்கு ஆதரவாக இவைகள் நிறுத்தப்பட்டிருக்கலாம். (யாத் 20:25) இவை பலிபீடத்தைச் சுற்றிலும் நிறுத்தப்பட்டிருப்பதினால் இஸ்ரவேல் தேசத்தார் அனைவரும் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதற்கு இது அடையாளமாக இருக்கலாம்.

மோசே நியாயப்பிரமாண புஸ்தகத்தை எழுதுகிறார். அதை இரத்த உடன்படிக்கையினால் முத்திரையிடுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களோடு, ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கை இரத்தத்தினால் உறுதிபண்ணப்படுகிறது. "பலியினாலே என்னோடேகூட உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங் 50:5).

மனுஷன் பாவம் செய்து தேவமகிமையை இழந்துபோனான். அவன் கர்த்தருடைய சிலாக்கியங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் தூரமாய் விலகிப்போய்விட்டான். கர்த்தருக்கும் மனுஷனுக்கும் இடையே உள்ள ஐக்கியமும் முறிந்துபோயிற்று. கர்த்தர் மனுஷனோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு முன்பாக, மனுஷனுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. பலிசெலுத்துவதன் மூலமாக மனுஷனுக்கு பாவநிவாரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்கு, அவர்கள் தங்களை ஆயத்தம்பண்ண வேண்டும். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பலிகள் செலுத்தப்படவேண்டும். இதற்காக மோசே மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். தேவனுடைய நாமமகிமைக்காக இந்தப் பலிபீடம் கட்டப்படுகிறது.

கர்த்தருடைய உடன்படிக்கையில் முதலாவது பகுதியாக, கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டப்படுகிறது. இந்தப் பலிபீடம் எல்லா பலிபீடங்களுக்கும் அடையாளமாயிருக்கிறது. உடன்படிக்கையை இரத்தத்தினால் உறுதிபண்ணவேண்டும்.

மோசே இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்டுகளை நிறுத்துகிறார். இந்தத் தூண்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். உடன்படிக்கை பண்ணுகிறவர் கர்த்தர். உடன்படிக்கை பண்ணப்படுகிறவர்கள் இஸ்ரவேல் புத்திரர்.

மோசே கட்டின பலிபீடத்தின் ஒரு பக்கத்தில் கர்த்தரும், அதன் மற்றொரு பக்கத்தில் இஸ்ரவேல் புத்திரரும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாக மோசே பன்னிரண்டு தூண்களை நிறுத்தியிருக்கிறார். மோசேயோ கர்த்தருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராய் நிற்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பன்னிரண்டு கோத்திரங்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தையும் குறிப்பதற்கு ஒவ்வொரு தூண் வீதமாக, மோசே பன்னிரண்டு தூண்களை நிறுத்துகிறார். ஒவ்வொரு கோத்திரத்தாரும், தங்களுடைய கோத்திரத்திற்குரிய தூணை அறிந்திருக்கிறார்கள். அந்தந்த கோத்திரத்தின் மூப்பர்கள், தங்களுடைய கோத்திரத்தின் தூணுக்கு அருகாமையில் நிற்கிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் வாலிபரை அனுப்புகிறார்; அவர்கள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார்கள். அவர்கள் கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிடுகிறார்கள் (யாத் 24:5).

மோசே அனுப்புகிற வாலிபர்கள் ஆரோனின் குமாரர்களாக இருக்கலாம். கர்த்தருடைய ஊழியம் செய்வதற்காக இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். (யாத் 27:21; யாத் 28:1). எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு, பதினொன்றரை மாதங்களுக்குப்பின்பு, ஒரு கோத்திரம் முழுவதும் ஆசாரிய ஊழியம் செய்வதற்காக வேறுபிரித்து, பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது. (யாத் 40:1; எண் 1:1; எண் 3:1-13).

அவர்கள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிடுகிறார்கள். பலிகள் சம்பந்தமான பிரமாணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. (லேவி 1-7) ஆனாலும் ஆதாமின் காலத்திலிருந்து எதைப் பலியிடவேண்டும் என்று ஜனங்களுக்குத் தெரிந்திருக்கிறது. (ஆதி 4:3-7; ஆதி 8:20-21; ஆதி 12:7; ஆதி 13:4; ஆதி 15:9-12; ஆதி 22:13; ஆதி 26:25; ஆதி 31:54; ஆதி 35:7; யாத் 8:26; யாத் 10:9,26; யாத் 12:1-13).

மோசே கர்த்தருக்கு பலிகளை செலுத்தி, இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுகிறார். அதற்காக மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார் (யாத் 24:6).

மோசே அந்த இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார். பலிபீடத்தின்மேல் தெளிக்கப்படும் இரத்தம் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிவதற்கு அடையாளமாகும். மோசே நியாயப்பிரமாணம் முழுவதையும் வாசிக்கிறார். (யாத் 20:1-23:33) உடன்படிக்கையில் எந்த மாற்றமும் செய்யப்படாது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாக இஸ்ரவேல் ஜனத்தார் வாக்குப்பண்ணுகிறார்கள் (யாத் 24:7).

அவர்கள் வாக்குப்பண்ணிய பின்பு, மோசே மீதமுள்ள இரத்தத்தை எடுத்து அதை ஜனங்களின்மேல் தெளிக்கிறார். இந்த உடன்படிக்கைக்கு அவர்கள் உடன்பட்டவர்கள் என்பதற்கு அடையாளமாக இது உடன்படிக்கையின் இரத்தமாக இருக்கிறது. *(யாத் 24:7-8; எபி 9:15-23; 1பேதுரு 1:2).*

பலியிடப்பட்ட காளைகளின் இரத்தத்தில், பாதி இரத்தம் பலிபீடத்தின்மேல் தெளிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களையும், தங்களுடைய ஜீவனையும், தங்களுடைய உடமைகளையும் கர்த்தருக்கு அற்பணிக்கிறார்கள் என்பதற்கு இது அடையாளம். அவர்கள் கர்த்தரை கனம்பண்ணும் வண்ணமாக தங்களை அற்பணிக்கிறார்கள்.

பலியிடப்பட்ட காளைகளின் இரத்தத்தை கர்த்தர் அங்கீகரிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணும் கிரயமாக, கர்த்தர் இந்த இரத்தத்தை ஏற்றுக்கொள்கிறார். இதற்கு அடையாளமாக மோசே அந்த இரத்தத்தை எடுத்து, அதை ஜனங்களின் மேல் தெளிக்கிறார் *(யாத் 24:8).*

புதிய உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாயிருக்கிறது *(மத் 26:28; எபி 9:11-15; எபி 10:9-23).*

மோசே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோர் மேலும் இரத்தத்தை தெளிப்பதற்கு வாய்ப்பில்லை. அவர் பன்னிரண்டு தூண்கள் மேலும் இரத்தத்தை தெளிக்கிறார். இந்தத் தூண்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாயிருக்கிறது. இதன் மூலமாக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். அவர்களோடு உடன்படிக்கை பண்ண ஆயத்தமாயிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மோசே, கர்த்தருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருந்தார். அவர் கிறிஸ்துவுக்கு அடையாளமானவர். மோசே கர்த்தருக்கு சமாதானபலிகளாக காளைகளை பலியிட்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, கல்வாரி சிலுவையிலே, தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மனுஷருடைய பாவங்களை போக்கும் பாவநிவாரண இரத்தமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உடன்படிக்கையின் இரத்தம். கிறிஸ்துவானவர் நமக்காக பிதாவோடு பரிந்துபேசும்போது, தம்முடைய திருஇரத்தத்தை பலிபீடத்தின்மீது தெளிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சபையிலுள்ள விசுவாசிகள் மீதும் தெளிக்கப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தையின் மூலமாகவும், அவருடைய நியமங்கள் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் மூலமாகவும், கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் மூலமாகவும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சபையிலுள்ள விசுவாசிகள்மீது தெளிக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் விசுவாசிகள் எல்லோரும் கர்த்தருக்குள் முத்திரையிடப்பட்டிருக்கிறோம்.

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" *(எபி 9:11,12).*

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் புதிய உடன்படிக்கையின் இரத்தமாயிருக்கிறது. "எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார்மேலும் தெளித்து: தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான்" *(எபி 9:19,20).*

மோசே மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். அந்தப் பலிபீடத்திலே இஸ்ரவேல் புத்திரரின் வாலிபர்கள், கர்த்தருக்கு சர்வாங்கதகனபலிகளை செலுத்துகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு சமாதான பலிகளாக காளைகளை பலியிடுகிறார்கள்.

அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார். மோசே உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசிக்கிறார். அவர்கள் "கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்" (யாத் 24:6,7) என்று சொல்லுகிறார்கள்.

அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, "இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" (யாத் 24:8) என்று சொல்லுகிறார்.

கர்த்தரே பத்துக்கட்டளைகளையும், பிரமாணங்களையும் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் எழுதி வைக்கிறார். மோசே இந்த வார்த்தைகளை எழுதியதினால் இது மோசேயின் பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. ஆனாலும் கர்த்தரே இந்தப் பிரமாணத்திலுள்ள வார்த்தைகளை சொன்னவர். ஆகையினால் இது மோசேயின் பிரமாணமல்ல. இது கர்த்தருடைய பிரமாணமாகவே இருக்கிறது.

## தரிசனம்
## யாத் 24:9-11

**யாத் 24:9. பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய்,**

**யாத் 24:10. இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின் கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது.**

**யாத் 24:11. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள்.**

மோசேயோடுகூட இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதிகள் சீனாய் மலையின்மேல் ஏறிப்போகிறார்கள். அவர்கள் எல்லோருமே அங்கே தேவனை தரிசிக்கிறார்கள். தேவனுடைய விசேஷித்த சிலாக்கியங்களுக்கு அடையாளமாக, அவர்கள் தேவனுடைய மகிமையை தரிசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னதிற்கு மிகவும் அருகாமையில் கிட்டிச்சேரக்கூடாது. ஆனாலும் இவர்கள் எதிர்பார்த்ததைவிட, கர்த்தர் இவர்களுக்கு தமது கிருபையை அதிகமாய் வெளிப்படுத்துகிறார். இவர்கள் எல்லோரும் இஸ்ரவேலின் தேவனை தரிசிக்கும் வண்ணமாக, கர்த்தர் தம்மை அவர்களுக்கு பிரத்தியட்சமாய் வெளிப்படுத்துகிறார்.

மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய், இஸ்ரவேலின் தேவனைத் தரிசிக்கிறார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருக்கிறது (யாத் 24:9,10).

"இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேர்" என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சம்பவத்தில் யோசுவா மோசேயோடு போயிருந்தால், மொத்தம் 75 பேர் மலையின்மேல் ஏறிப்போகிறார்கள் (யாத் 24:13; யாத் 32:17).

இஸ்ரவேலின் மூப்பர்கள் தேவனுடைய மகிமையை பூரணமாய் தரிசிக்கவில்லை. அவருடைய மகிமையின் ஒரு பகுதியை மாத்திரமே அவர்கள் தரிசிக்கிறார்கள்.

"அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக ஆமென்" (1தீமோ 6:15,16).

அவர்கள் இஸ்ரவேலின் தேவன் நிற்கிற பரிசுத்த ஸ்தலத்தை தரிசிக்கிறார்கள் என்று செப்துவஜிந்த் பதிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருப்பதை அவர்கள் தரிசிக்கிறார்கள்.

சீனாய் மலையின்மேல் ஏறிப்போனவர்கள் தங்கள் கண்களால் தேவனைத் தரிசிக்கிறார்கள். அவரோடு அங்கு புசித்துக் குடிக்கிறார்கள் (யாத் 24:10-11).

"புசித்துக் குடித்தார்கள்" என்னும் வாக்கியத்திற்கு கர்த்தரும், தூதரும், மூப்பரும் புசித்துக் குடித்தார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள் (ஆதி 18:8; ஆதி 19:3; சங் 78:25; லூக்கா 22:18,30; வெளி 19:6-10).

"அவருடைய பாதத்தின்கீழே" என்னும் வாக்கியம் கர்த்தருக்கு ஒரு சரீரம் உண்டு என்பதை உறுதிபண்ணும் வாக்கியமாகும். கர்த்தருக்குக் கால்களும், பாதங்களும் உள்ளன. (வெளி 4:6; வெளி 15:2-4). தம்முடைய கையை அவர் நீட்டவில்லை. ஆகையினால் அவருக்குக் கைகளும் உள்ளன. தேவன் சீனாய்மலையில் இஸ்ரவேலின் மூப்பருக்கு விருந்து வைக்கிறார். அவர்கள் அங்கு புசித்துக் குடிக்கிறார்கள். அவர்கள் "தரிசித்தார்கள்" என்று யாத் 24:10-11 ஆகிய வசனங்களில் இரண்டு முறை கூறப்பட்டிருக்கிறது.

தரிசித்தல் என்பதற்கான எபிரெய வார்த்தை "காஜாஹ்" என்பதாகும். தரிசனங்களைப் பார்ப்பதற்கும், இதே வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எண் 24:4,16; ஏசா 1:1; ஏசா 2:1; ஆமோ 1:1); ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்வது (நீதி 24:32); தேவனை மாம்சத்திலும், கண்களாலும் காண்பது. (யாத் 24:11; யோபு 19:26-27; ஏசா 33:17); சூரியனைக் கண்களால் காண்பது. (சங் 58:8); தேவன் மனுஷனைத் தமது கண்களால் காண்பது (சங் 11:4,7); தேவனையும் அவருடைய கிரியைகளையும் காண்பது (சங் 17:15; சங் 27:4; சங் 46:8) ஆகிய அனைத்திற்கும் காஜாஹ் என்னும் எபிரெய வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

யாத் 24:10 ஆவது வசனத்தில் தரிசித்தல் என்பதற்கான எபிரெய வார்த்தை "ராஹ்" என்பதாகும். இதற்கும் கண்களால் காண்பது என்று பொருள்.

இஸ்ரவேலின் மூப்பர்கள் கர்த்தருடைய மகிமையை தரிசித்தாலும், கர்த்தர் அவர்களை பட்சித்துப்போடவில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை (யாத் 24:11). அவர்கள் கர்த்தரை தரிசித்த பின்பும் ஜீவனோடிருக்கிறார்கள். அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடிக்கிறார்கள். அவர்கள் மரித்துப்போகாமல் ஜீவனோடிருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக, "அவர்கள் புசித்து குடிக்கிறார்கள்" என்னும் வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை. தேவனைத் தங்கள் கண்களால் தரிசித்தால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் என்னும் தவறான நம்பிக்கை மனுஷர் மத்தியிலே இருக்கிறது. ஆனால் தேவனோ அவர்களுக்கு எதிராகத் தம்முடைய கையை நீட்டவில்லை. இதற்கு முன்பு அவர்கள் பர்வதத்தைத் தொட்டியிருந்தால் அவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் (யாத் 19:12-25; எபி 12:20).

இஸ்ரவேலின் மூப்பர் தேவனை தரிசித்த பின்பும், அவர்கள் தங்கள் ஜீவனைக் காத்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய மனதிலே ஆறுதலும், தெம்பும், உற்சாகமும் உண்டாயிருக்கிறது. தேவனை தரிசிக்கும்போது, அவர்களுடைய இருதயத்திலே திகிலும், நடுக்கமும், பயமும் ஏற்பட்ட போதிலும், அவர்கள் கர்த்தருக்குள் திடநம்பிக்கையாயும் சந்தோஷமாயும் இருக்கிறார்கள். கர்த்தர்மீது அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கையும், பயபக்தியும் இப்போது அதிகரித்திருக்கிறது.

## கர்த்தருடைய மகிமை
## யாத் 24:12-18

**யாத் 24:12. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன் என்றார்.**

**யாத் 24:13. அப்பொழுது மோசே தன் ஊழியக்காரனாகிய யோசுவாவோடே எழுந்து போனான். மோசே தேவ பர்வதத்தில் ஏறிப்போகையில்,**

**யாத் 24:14. அவன் மூப்பரை நோக்கி: நாங்கள் உங்களிடத்தில் திரும்பிவருமட்டும், நீங்கள் இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள்; ஆரோனும் ஊரும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; ஒருவனுக்கு யாதொரு காரியம் உண்டானால், அவன் அவர்களிடத்தில் போகலாம் என்றான்.**

**யாத் 24:15. மோசே மலையின்மேல் ஏறினபோது, ஒரு மேகம் மலையை மூடிற்று.**

**யாத் 24:16. கர்த்தருடைய மகிமை சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது; மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தது; ஏழாம்நாளில் அவர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்.**

**யாத் 24:17. மலையின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போல் இருந்தது.**

**யாத் 24:18. மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, மலையின்மேல் ஏறி, இரவும் பகலும் நாற்பதுநாள் மலையில் இருந்தான்.**

மோசே கர்த்தருடைய உடன்படிக்கையின் புஸ்தகத்தை ஜனங்களின் காது கேட்க வாசிக்கிறார். அவர்களும் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்போம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள். மோசே கர்த்தருக்கு பலியிட்ட காளைகளின் இரத்தத்தை எடுத்து ஜனங்கள்மேல் தெளிக்கிறார். கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இரத்தத்தினால் முத்திரையிடப்படுகிறது. இந்த சம்பவங்களெல்லாம் நிறைவேறி முடிந்த பின்பு, கர்த்தர் மறுபடியும் மோசேயை தம்மிடத்திற்கு ஏறிவந்து அங்கே இருக்குமாறு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி: "நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன்" *(யாத் 24:12)* என்று சொல்லுகிறார்.

தேவனோடு புசித்துக் குடித்த பின்பு, மோசே மூப்பர்களோடு சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வந்திருக்க வேண்டும். இப்பொழுது தேவன் மோசேயை மலையின்மேல் ஏறிவருமாறு கூறுகிறார். அங்கு தாம் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கர்த்தர் கொடுப்பார். *(யாத் 24:9-11)*

மோசே கர்த்தருக்கு மிகவும் அருகாமையில் கிட்டிச் சேராமல், அவர் சீனாய் மலையின்மேல், கர்த்தருக்கு அருகாமையில் இருக்கவேண்டும். அங்கே அவர் ஆறு நாட்களுக்கு இருக்கவேண்டும். மோசே சீனாய் மலையின்மேல் ஏறிப்போகும்போது, இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பதற்கும் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுவதற்கும், அவர்களை வழிநடத்துவதற்கும், ஜனங்களின் அதிபதிகள் தேவைப்படுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரரோடு இல்லாமல், கர்த்தரிடத்தில் போவதற்காக, மலையின்மேல் ஏறும்போது, இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பதற்காக, இஸ்ரவேலின் மூப்பர்களை நியமிக்கிறார்.

மோசே இஸ்ரவேலின் மூப்பரை நோக்கி, "நாங்கள் உங்களிடத்தில் திரும்பிவருமட்டும், நீங்கள் இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள்; ஆரோனும் ஊரும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; ஒருவனுக்கு யாதொரு காரியம் உண்டானால், அவன் அவர்களிடத்தில் போகலாம்" (யாத் 24:14) என்று சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இல்லாதபோது, இஸ்ரவேலின் மூப்பர், ஜனங்கள் மத்தியிலே ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், சமாதானத்தையும் நிலைப்படுத்துகிறார்கள்.

மோசே சீனாய் மலையின்மேல் கர்த்தரிடத்தில் ஏறிப்போகும்போது, தனியாகப்போகாமல் தன்னுடைய ஊழியக்காரனாகிய யோசுவாவையும் தன்னோடுகூட அங்கே அழைத்துக்கொண்டு போகிறார். மோசே தேவபர்வதத்தில் ஏறிப்போகையில், அவரோடுகூட யோசுவாவும், ஒரு குறிப்பிட்ட தூரம் வரையிலும் போகிறார் (யாத் 24:13).

யோசுவா மோசேயின் ஊழியக்காரர். மோசே தேவபர்வதத்திலே ஆறுநாட்களுக்கு காத்திருக்கவேண்டும். அப்போது யோசுவா மோசேயோடு கூடயிருப்பார். மோசே யோசுவாவை தன்னோடுகூட அழைத்துக்கொண்டு, தேவபர்வதத்தில் ஏறிப்போனதினால், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே யோசுவாவுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாயிருக்கும்.

மோசே இஸ்ரவேலின் மூப்பரை தன்னோடு தேவபர்வதத்திற்கு கூட்டிக்கொண்டு போகாமல், யோசுவாவைக் கூட்டிக்கொண்டு போகிறார். இதனால் யோசுவா இஸ்ரவேலின் எழுபது மூப்பரை விடவும் உயர்ந்தவராயிருக்கிறார் என்று இஸ்ரவேல் ஜனங்கள் நினைப்பார்கள்.

மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு வழிநடத்தி அழைத்துக்கொண்டு போகவேண்டும். அந்த மேன்மையான ஊழியத்திற்காக மோசே இப்பொழுதே யோசுவாவை ஆயத்தம்பண்ணுகிறார். மோசே அவருக்கு ஊழியப்பயிற்சிகளைக் கொடுக்கிறார்.

யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகயிருக்கவேண்டுமென்றால், அவர் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க வேண்டும். யோசுவாவுக்கு கர்த்தரோடு ஐக்கியம் ஏற்படவேண்டும் என்பதற்காக, கர்த்தர் மோசேயை மலையின்மேல் தம்மிடத்திற்கு ஏறி வருமாறு சொல்லுகிறார். அப்போது மோசே அங்கே தனியாகப் போகாமல், தன் ஊழியக்காரனாகிய யோசுவாவோடே எழுந்து போகிறார். மோசேயோடு தேவபர்வதத்தில் ஏறிப்போகும் சிலாக்கியம் யோசுவாவுக்கு கிடைக்கிறது.

மோசே மலையின்மேல் ஏறினபோது, ஒரு மேகம் மலையை மூடிற்று. கர்த்தருடைய மகிமை சீனாய் மலையின்மேல் தங்கியிருக்கிறது; மேகம் ஆறுநாள் அதை மூடியிருக்கிறது; ஏழாம்நாளில் கர்த்தர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிடுகிறார் (யாத் 24:15,16).

மலையை மூடுகிற மேகம் கர்த்தருடைய விசேஷித்த பிரசன்னத்திற்கு அடையாளம். கர்த்தருடைய மகிமை சீனாய் மலையின்மேல் தங்கியிருக்கிறது. மேகம் ஆறுநாள் அதை மூடியிருக்கிறது. மோசே அந்த பரிசுத்த பர்வதத்தில், யோசுவாவோடேகூட, ஆறுநாட்களாக தங்கியிருக்கிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் ஏழாம் நாளில், மோசேயை, மேகத்தின் நடுவிலிருந்து கூப்பிடுகிறார். இந்த ஏழாம் நாள் என்பது கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளாயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஏழாம்நாள் பிரமாணம் பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்டது. இது இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்ட ஐம்பதாவது நாளாகும். இந்த நாள் ஏழாவது ஓய்வுநாளுக்குப் பின்பு வரும் முதலாவது நாளாகும் (லேவி 23:15-22).

கர்த்தர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டபோது, மலையின் கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், கர்த்தருடைய மகிமையின் ஒரு பகுதியை தரிசிக்கிறார்கள். மலையின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போல் இருக்கிறது (யாத் 24:17). மலையை மூடியிருக்கிற மேகத்தை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே பார்க்கிறார்கள். அந்த மேகத்தின் நடுவிலிருந்து கர்த்தருடைய மகிமை வெளிப்படுவதையும் இஸ்ரவேல் புத்திரர் தரிசிக்கிறார்கள்.

கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போல் இருக்கிறது. மனுஷருடைய கண்களால் காணும்போது தேவனுடைய மகிமை எவ்வாறு இருக்கும் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது. அவருடைய மகிமை பட்சிக்கிற அக்கினியைப்போல இருக்கும்.

மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, மலையின்மேல் ஏறி, இரவும் பகலும் நாற்பதுநாள் மலையில் இருக்கிறார் (யாத் 24:18). மோசே மலையின்மேல் ஏறிப்போகும்போது, தன்னோடுகூட யோசுவாவைக் கூட்டிக்கொண்டு போகவில்லை. அவர் யோசுவாவை அங்கேயே விட்டு விட்டுப்போகிறார்.

மலையின்மேல் ஏறிப்போன மோசே அங்கே இரவும் பகலும் நாற்பது நாள் இருக்கிறார். யோசுவாவோ, தான் மோசேயோடுகூட இதற்கு முன்பு ஆறுநாட்களாக தங்கியிருந்த இடத்திலே, தனிமையாகயிருக்கிறார். அவர் மோசேயின் வருகைக்காக நாற்பது நாள் இரவும் பகலும் காத்துக்கொண்டிருக்கிறார்.

மோசே நாற்பது நாளாக புசிக்காமல், பானம்பண்ணாமல் உபவாசம் பண்ணுகிறார். (உபா 9:9-17). இதற்குப் பின்பு, மோசே மேலும் இரண்டு முறை நாற்பது நாள் உபவாசம் பண்ணியிருக்கிறார். (யாத் 34:28; உபா 9:18,25; உபா 10:10).

மோசே பரிசுத்த பர்வதத்தில், கர்த்தருடைய பிரசன்னத்தில் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசத்தோடு காத்திருந்தார் என்றும், அந்த நாற்பது நாட்களிலும், யோசுவாவுக்கு புசிப்பதற்கு போஜனம் கிடைத்திருக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

## 25 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபிப்பது சம்பந்தமாகவும், ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கவேண்டிய பரிசுத்த பணிமுட்டுகள் சம்பந்தமாகவும் கர்த்தர் மோசேக்கு தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், அவரை கனம்பண்ணும் வண்ணமாகவும் அவருக்கு ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்படுகிறது.

ஆசரிப்புக்கூடாரத்திற்காகவும், அதில் பயன்படுத்தவேண்டிய பணிமுட்டுகளை செய்வதற்காகவும் மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடமிருந்து காணிக்கைகளை வாங்கவேண்டும் *(யாத் 25:1-9)*.

உடன்படிக்கைப்பெட்டி சம்பந்தமான பிரமாணம் *(யாத் 25:10-22)*. சமுகத்தப்ப மேஜை சம்பந்தமான பிரமாணம் *(யாத் 25:23-30)*. பொன்குத்துவிளக்கு சம்பந்தமான பிரமாணம் *(யாத் 25:31-40)*.

### ஆசரிப்புக்கூடாரம் யாத் 25:1-9

**யாத் 25:1. கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 25:2. இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக.**

**யாத் 25:3. நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய காணிக்கையாவன, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும்,**

**யாத் 25:4. இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும்,**

**யாத் 25:5. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும்,**

**யாத் 25:6. விளக்கெண்ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும்,**

**யாத் 25:7. ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக் கற்களும் இரத்தினங்களுமே.**

**யாத் 25:8. அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.**

**யாத் 25:9. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக.**

மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து மலையின்மேல் ஏறுகிறார். அவர் சீனாய் மலையில் இரவும் பகலும் நாற்பதுநாள் இருக்கிறார். அந்த நாட்களில் அவர் கர்த்தருடைய மகிமையான காரியங்களைப் பார்த்திருப்பார் என்றும், மேலும் அவர் அந்த நாட்களிலே கர்த்தருடைய மகிமையான காரியங்களை தன்னுடைய செவிகளால் கேட்டிருப்பார் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனாலும் இந்த சம்பவங்கள் எதுவும் பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. கர்த்தருடைய இரகசியங்கள் ஒருவேளை சொல்லக்கூடாததாகயிருக்கலாம். அல்லது அதைப்பற்றி சொல்லுவது கர்த்தருடைய பிரமாணத்திற்கு முரண்பட்டதாகயிருக்கலாம். ஆகையினால் அந்த இரகசியம் பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாத மறைபொருளாகயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணவேண்டுமென்று சித்தமுள்ளவராயிருக்கிறார். அதற்காக தமக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குமாறு கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார் *(யாத் 25:8)*.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தமக்கு சொந்த ஜனமாக தெரிந்துகொண்டார். கர்த்தரே அவர்களுக்கு ராஜாவாயிருக்கிறார். அவர்களை ஆளுகை செய்வதற்கு கர்த்தர் தம்முடைய பிரமாணங்களையும் ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்றும், அவர்கள் ஆவிக்குரிய ஆராதனைகளை எவ்வாறு நடத்தவேண்டும் என்றும் கர்த்தர் அவர்களுக்கு பிரமாணங்களாக சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறார். அவர் வாசம்பண்ணுவதற்காக அவருக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கவேண்டும். இந்த ஸ்தலம் கர்த்தருடைய பரிசுத்த அரண்மனையாகயிருக்கும்.

"எங்கள் பரிசுத்த ஸ்தானம் ஆதிமுதற்கொண்டு உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமாயிருக்கிறது" (எரே 17:12).

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் மாதிரியை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிற பிரகாரமாக அதிலுள்ள தட்டுமுட்டுகளையெல்லாம் செய்யவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின் படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின் படியும் அதைச் செய்வீர்களாக" (யாத் 25:9) என்று சொல்லுகிறார்.

"இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல" (எபி 9:10).

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்படுகிறது. "அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது" (எபி 9:1).

கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலே வாசம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருடைய பிரசன்னம் பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது. அவருடைய பரிசுத்த ஸ்தலம், அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தேவனாகிய கர்த்தரும், அவர்கள் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் இனிமேல், "கர்த்தர் எங்களோடு இருக்கிறாரா" என்று சந்தேகத்தோடு கேள்வி கேட்கவேண்டிய அவசியமில்லை.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கூடாரங்களிலே தங்கியிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் மத்தியிலே ஆசரிப்புக்கூடாரத்திலே தங்கியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் வனாந்தரத்திலே, கூடாரங்களில் தங்கியிருக்கும்போது, கர்த்தர் தாம் வாசம்பண்ணுவதற்கு மிகப்பெரிய அரண்மனை வேண்டும் என்று கேட்கவில்லை. வனாந்தரத்தில் ஆசரிப்புக்கூடாரமே கர்த்தருடைய வாசஸ்தலமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போதெல்லாம், கர்த்தருடைய கூடாரமும் அவர்களோடு கூட பிரயாணம் பண்ணும். அவர்கள் பாளயமிறங்கியிருக்கும் இடத்திலே கர்த்தருக்கு கூடாரம் போடவேண்டும். அவர்கள் தங்கள் கூடாரங்களை எடுத்துக்கொண்டு வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணும்போது, ஆசரிப்புக்கூடாரத்தையும் பேர்த்தெடுத்து தங்களோடுகூட எடுத்துக்கொண்டு போகவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எங்கே இருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே கர்த்தரும் வாசம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே வந்து அவரை ஆராதிக்கவேண்டும். அங்கே அவருக்கு காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கவேண்டும். அங்கே அவர்கள் பண்டிகைகளை ஆசரிக்கவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் ஏகமாய் ஆராதிக்கவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரம் மனுஷருடைய கைகளினால் செய்யப்படுகிறது. இது மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமாயிருக்கிறது. "அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" (எபி 9:24).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, தம்முடைய திருஇரத்தத்தையே, பாவநிவாரண கிரயமாக செலுத்தினார். கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்திலே வாசம்பண்ணுகிறார். கிறிஸ்துவானவர் வார்த்தையாகயிருக்கிறார். அவர் மாம்சமாகி நம் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம்பண்ணியதுபோல, கிறிஸ்துவானவர் நம் மத்தியிலே வாசம்பண்ணுகிறார்.

கிறிஸ்துவின் சபையாகிய விசுவாசிகள் கர்த்தருக்கு பரிபூரணமான ஆசரிப்புக்கூடாரமாயிருக்கிறோம்.

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி 9:11,12).

கர்த்தரே தம்முடைய வாசஸ்தலத்தின் மாதிரியை மோசேக்கு காண்பிக்கிறார். அதிலுள்ள எல்லா தட்டுமுட்டுகளின் மாதிரியையும் கர்த்தர் மோசேக்கு காண்பிக்கிறார். கர்த்தர் தனக்கு காண்பித்த மாதிரியின்படியே மோசே ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கு பணம் தேவைப்படும். இதற்காக ஆகும் செலவை சேகரிப்பதற்காக, மோசே இஸ்ரவேல் ஜனத்தாரிடமிருந்து கட்டாயமாய் வரிவசூலிக்கக்கூடாது. அவர்களிடத்தில் சுயாதீனமான காணிக்கைகளை வாங்கலாம்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக" (யாத் 25:1,2) என்று சொல்லுகிறார். நாம் கர்த்தரை சார்ந்து ஜீவிக்கிறோம். ஆகையினால் நாம் கர்த்தருக்காக ஜீவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு மனப்பூர்வமாயும், உற்சாகமாயும் காணிக்கைகளை செலுத்தவேண்டும். கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கவேண்டுமென்று அவர்களை யாரும் கட்டாயம்பண்ணக்கூடாது. பொதுவாக "நாம் என்ன செய்யவேண்டும்" என்று கேட்போம். கர்த்தருடைய பிள்ளைகளோ, "நாம் கர்த்தருக்காக என்ன செய்யவேண்டும்" என்று தங்களுக்குத் தாங்களே எப்போதும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரிடத்தில், தமக்காக என்னென்ன காணிக்கைகளை வாங்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். "நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய காணிக்கையாவன, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும், விளக்கெண்ணையும், அபிஷேகதைலத்துக்குப் பரிமள வர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும், ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக் கற்களும் இரத்தினங்களுமே" (யாத் 25:3-7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரு சில பணிமுட்டுக்கள் பொன்னாலும், வெள்ளியாலும், வெண்கலத்தினாலும் செய்யப்படுகிறது. ஆனால் ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள எந்தப் பொருளும் இரும்பினால் செய்யப்படவில்லை. இரும்பு இராணுவத்திலே பயன்படுத்தப்படும் உலோகம். கர்த்தருடைய வாசஸ்தலம் யுத்தம்பண்ணுகிற யுத்தகளமல்ல. அது சமாதான ஸ்தலம். கர்த்தர் சமாதான கர்த்தராயிருக்கிறார். அவருடைய வாசஸ்தலமும் சமாதானத்தின் வாசஸ்தலமாயிருக்கிறது.

கர்த்தர் தாமே தம்முடைய வாசஸ்தலத்தின் மாதிரியை மோசேக்கு சொல்லுகிறார். அந்த மாதிரியின்படியே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வாசஸ்தலத்தையும், அதிலுள்ள எல்லா தட்டுமுட்டுகளையும் செய்யவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தில் பல்வேறு விதமான பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:

1. பொன்
2. வெள்ளி
3. வெண்கலம்
4. இளநீலநூல்
5. இரத்தாம்பரநூலும், தூபவர்க்கமும்
6. சிவப்புநூல்
7. மெல்லிய பஞ்சுநூல்
8. வெள்ளாட்டுமயிர்
9. தகசுத்தோல்
10. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல்
11. சீத்திம் மரம்
12. விளக்கெண்ணெய்
13. அபிஷேகதைலத்துக்குப் பரிமள வர்க்கங்கள்
14. கோமேதக்கற்கள்
15. ரத்தினங்கள் (யாத் 28:15-29)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்திற்குக் காணிக்கையை மனப்பூர்வமாய் கொண்டுவரவேண்டும். காணிக்கை என்பது கட்டாயமாகச் செலுத்தப்படும் வரியல்ல. எகிப்தியரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஐசுவரியங்களிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் காணிக்கை செலுத்த வேண்டும். (யாத் 12:35-36) தங்கள் பிதாக்களிடமிருந்து சுதந்தரமாகப் பெற்றுக் கொண்ட பொருட்களிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் காணிக்கை செலுத்த வேண்டும். (ஆதி 13:2; ஆதி 25:5). தேவனுக்குச் செலுத்தப்படும் காணிக்கையை இருதயத்தின் நிறைவினால் செலுத்த வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும் காணிக்கையாக வாங்கலாம். நான்குவிதமான நூலைப்பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. அவை இளநீலம், இரத்தாம்பரம், சிவப்பு, மெல்லிய பஞ்சு (வெண்மை) ஆகிய நூல்களாகும்.

இரத்தாம்பரமும், சிவப்பும் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதோடு தொடர்புடையது. (மத் 27:28; யோவான் 19:2). வெண்மை இந்த வசனத்திலும், வெளி 19:13-14 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இளநீலத்தை ஒருவிதமான சங்குகளிலிருந்தும், இரத்தாம்பரத்தை ஒருவிதமான மீன்களிலிருந்தும் சிவப்புநூலை புழுவிலிருந்து தயாரித்தார்கள். (அப் 16:14) ஸ்திரீகள் பஞ்சை நூற்று, அதற்குச் சாயம்போடுவார்கள். ஆடை நெய்வது, சித்திரத்தையலாடை செய்வது ஆகியவற்றை அகோலியாபும், அவனுடைய ஆட்களும் செய்தார்கள் (யாத் 35:25,34-35)

வெள்ளாட்டுமயிர் என்பது கம்பளி நூலைக் குறிக்கும். ஆசியா தேசத்தில் வெள்ளாடுகளின் ரோமம் நீளமாகவும், அழகாகவும் இருக்கும். பட்டுபோல மென்மையாக இருக்கும். இது உயர்ந்த கம்பளி நூலாகும்.

சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலை காணிக்கையாக வாங்கலாம். சில ஆட்டுக்கடாக்களின் தோல்கள் சிவப்பு நிறத்தில் அழகாக இருக்கும். இதற்கு அதிக சாயம் பூசத்தேவையில்லை.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் தகசுத்தோலையும் காணிக்கையாக வாங்கலாம். ஆசரிப்புக் கூடாரத்தை மூடுவதற்கும், பணிமுட்டுக்கள், பாதரட்சைகள் ஆகியவற்றைச் செய்வதற்கும் தகசுத்தோலைப் பயன்படுத்துகிறார்கள். பிரயாணம் பண்ணும்போது தகசுத்தோல் பாதத்திற்குப் பாதுகாப்பாக இருக்கும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சீத்திம் மரத்தையும், விளக்கெண்ணெயையும் காணிக்கையாக வாங்கலாம் என்று சொல்லுகிறார். எகிப்துதேசத்திலும், சீனாய் வனாந்தரத்திலும் சீத்திம் மரம் ஏராளமாக உள்ளன. இந்த மரத்தின் கட்டைகள் அழகானவை, நீடித்த நாள் உழைக்கக்கூடியவை.

ஒலிவஎண்ணெயே விளக்கெண்ணெய் என்று அழைக்கப்படுகிறது (யாத் 27:20; யாத் 30:24; லேவி 24:2; உபா 8:8; உபா 24:20). பாலஸ்தீன தேசத்தில் ஒலிவமரம் ஏராளமாக உள்ளன. (உபா 6:11; உபா 28:40).

அபிஷேக தைலம் தயாரிக்கும்போது பரிமள வர்க்கங்களும், (யாத் 30:22-33) சுகந்தவர்க்கங்களும் (யாத் 37:29) பயன்படுத்தப்படுகிறது.

ஏபோத்தில் இரண்டு கோமேதகக் கற்கள் இருக்கும். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் பெயர்கள் அதில் பதிக்கப்பட்டிருக்கும். (ஆதி 2:12, யாத் 28:6-14). மார்ப்பதக்கத்தில் பன்னிரண்டு இரத்தினங்கள் இருக்கும். அவற்றில் இஸ்ரவேல் கோத்திரத்தாரின் பெயர்கள் பதிக்கப்பட்டிருக்கும் (யாத் 28:15-29).

**உடன்படிக்கைப்பெட்டி.**
**யாத் 25:10-22**

**யாத் 25:10. சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியைப் பண்ணக்கடவர்கள்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக.**

**யாத் 25:11. அதை எங்கும் பசும்பொன் தகட்டால் மூடுவாயாக; நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதினால் மூடி, அதின்மேல் சுற்றிலும் பொன்னினால் திரணையை உண்டாக்கி,**

**யாத் 25:12. அதற்கு நாலு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு மூலைகளிலும் போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும், மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி தைத்து,**

**யாத் 25:13. சீத்திம் மரத்தால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,**

**யாத் 25:14. அந்தத் தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படி, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்.**

**யாத் 25:15. அந்தத் தண்டுகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கவேண்டும்.**

**யாத் 25:16. நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை அந்தப் பெட்டியிலே வைப்பாயாக.**

**யாத் 25:17. பசும்பொன்னினாலே கிருபாசனத்தைப் பண்ணுவாயாக; அது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கக்கடவது.**

**யாத் 25:18. பொன்னினால் இரண்டு கேருபீன்களைச் செய்வாயாக; பொன்னைத் தகடாய் அடித்து, அவைகளைச் செய்து, கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் வைப்பாயாக.**

**யாத் 25:19. ஒரு புறத்து ஓரத்தில் ஒரு கேருபீனையும் மறுபுறத்து ஓரத்தில் மற்றக் கேருபீனையும் பண்ணிவை; அந்தக் கேருபீன்கள் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏகவேலையாயிருக்கும்படி, அவைகளைப் பண்ணக்கடவாய்.**

**யாத் 25:20. அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாய் இருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருப்பதாக.**

**யாத் 25:21. கிருபாசனத்தைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டிக்குள்ளே நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை வைப்பாயாக.**

**யாத் 25:22. அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்.**

சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியை பண்ணுமாறு கர்த்தர் சொல்லுகிறார். இது கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி. கர்த்தருடைய பத்துக்கட்டளைகள் எழுதப்பட்டிருக்கிற இரண்டு கற்பலகைகளும் இந்தப் பெட்டியில் வைக்கப்படவேண்டும். இதை மிகுந்த கனத்தோடும், பரிசுத்தத்தோடும், கவனத்தோடும் வைக்கவேண்டும். இந்தப் பெட்டியின் நீளமும், அகலமும், உயரமும் எவ்வளவு இருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியைப் பண்ணக்கடவர்கள்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக" (யாத் 25:10) என்று சொல்லுகிறார். ஒரு முழம் என்பது இக்கால அளவின்படி ஒன்றரை அடியாகும். ஒரு முழம் என்பது இருபத்தொரு அங்குலம் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இந்தப்பெட்டியின் உட்புறமும் வெளிப்புறமும் பசும்பொன்தகட்டினால் மூடப்படவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "அதை எங்கும் பசும்பொன்தகட்டால் மூடுவாயாக; நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதினால் மூடி, அதின்மேல் சுற்றிலும் பொன்னினால் திரணையை உண்டாக்கு" (யாத் 25:11) என்று சொல்லுகிறார்.

அந்தப் பெட்டிக்கு வளையங்களும், தண்டுகளும் செய்யப்படவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "அதற்கு நாலு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு மூலைகளிலும் போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும், மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி தைத்து, சீத்திம் மரத்தால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அந்தத் தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படி, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்" (யாத் 25:12-14) என்றும்,

"அந்தத் தண்டுகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கவேண்டும். நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை அந்தப் பெட்டியிலே வைப்பாயாக" (யாத் 25:15,16) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பத்துக்கட்டளைகள் எழுதப்பட்டிருக்கிற கற்பலகைகள் சாட்சி பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. இந்த பிரமாணத்தில் கர்த்தர் தம்முடைய சித்தத்தை சாட்சியாக எழுதியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும் சாட்சி என்று அழைக்கப்படுகிறது.

"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" (மத் 24:14).

பத்துக்கட்டளைகளும் எழுதப்பட்டிருக்கிற கற்பலகைகள் உடன்படிக்கைப்பெட்டியிலே வைக்கப்பட்டு, பாதுகாக்கப்படவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை நமக்கு உபதேசம் பண்ணுவதற்காகவும், கர்த்தருடைய கட்டளைகள் நம்முடைய இருதயங்களில் தங்கியிருக்கவேண்டும் என்பதற்காகவும், இரண்டு கற்பலகைகளும் உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி, ஆசரிப்புக்கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பாதுகாக்கப்பாக வைக்கப்பட வேண்டும். கர்த்தருடைய கட்டளைகள் நம்முடைய இருதயத்தின் ஆழத்திலே பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும். இதற்கு அடையாளமாக, இது மகாபரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்படுகிறது.

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாகயிருக்கிறது. நம்முடைய இருதயத்தில் கர்த்தருடைய கட்டளையைப் பதியவைத்து, அவருடைய பிரமாணங்களுக்கு நாம் கீழ்ப்படியும்போது, கர்த்தருடைய கிருபையும் சிலாக்கியமும் நமக்கு கிடைக்கும். இதற்கு அடையாளமாகவே, கர்த்தருடைய பத்துக்கட்டளைகளும், உடன்படிக்கைப்பெட்டியிலே வைக்கப்பட்டு, அது ஆசரிப்புக்கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைக்கப்படுகிறது.

கர்த்தருடைய பிரமாணம் யாரை ஆளுகை செய்கிறதோ அவர்களை கர்த்தரும் ஆளுகை செய்கிறார். கர்த்தர் அவர்கள் மத்தியிலே வாசம்பண்ணுகிறார்.

"அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எபி 8:10).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போதெல்லாம், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் தங்களோடு சுமந்துகொண்டு போகிறார்கள். அவர்கள் அவ்வாறு பிரயாணம்பண்ணும்போது, கர்த்தருடைய பத்துக்கட்டளைகளையும் தங்களோடு கூட சுமந்து செல்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணம் இஸ்ரவேல் புத்திரரோடுகூட எல்லா இடங்களுக்கும் பிரயாணம் பண்ணுகிறது. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவர்களோடுகூட எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பதற்கு, அவருடைய உடன்படிக்கைப்பெட்டி அடையாளமாகயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், எங்கு போனாலும், இயேசுகிறிஸ்துவின் அன்பையும், அவருடைய சுவிசேஷத்தையும் சுமந்து செல்கிறவர்களாயிருக்கவேண்டும்.

மோசே உடன்படிக்கைப்பெட்டியை பண்ணும்போது, கிருபாசனத்தையும் பண்ணவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "பசும்பொன்னினாலே கிருபாசனத்தைப் பண்ணுவாயாக; அது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கக்கடவது" (யாத் 25:17) என்றும், "கிருபாசனத்தைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டிக்குள்ளே நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை வைப்பாயாக" (யாத் 25:21) என்றும் சொல்லுகிறார்.

கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் கேருபீன்களை வைக்கவேண்டும். அந்தக் கேருபீன்களை பொன்னினால் செய்யவேண்டும் என்றும், அந்தப் பொன்னை தகடாய் அடித்து, கேருபீன்களை செய்து, அந்தக் கேருபீன்களை கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் வைக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 25:18).

கேருபீன்கள் கர்த்தருடைய பரிசுத்த தூதர்களுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய மகிமை ஷேக்கைனா மகிமை என்று அழைக்கப்படுகிறது. இது கர்த்தருடைய தெய்வீக மகிமையாகும். கர்த்தருடைய மகிமை வெளிப்படும் பரிசுத்த ஸ்தலத்திலே, அவருடைய பரிசுத்த தூதர்கள் அவரை சேவிக்கிறார்கள்.

கேருபீன்கள் கர்த்தருடைய பரிசுத்த தூதர்களுக்கு அடையாளமாகயிருந்தாலும், இவை தூதர்களின் உருவத்தில் செய்யப்படவில்லை. தூதர்கள் இந்த உருவத்தில்தான் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. தூதர்களை விக்கிரகங்களாக செய்து, அவற்றை கிருபாசனத்தின் ஓரங்களில் வைக்கவில்லை.

எசேக்கியேல் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற நான்கு முகங்கள், கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கும் கேருபீன்களுக்கு ஒப்பாயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"அவைகளுடைய முகங்களின் சாயலாவது, வலதுபக்கத்தில் நாலும் மனுஷமுகமும் சிங்கமுகமும், இடதுபக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிருந்தன. அவைகளுடைய முகங்கள் இப்படியிருக்க, அவைகளுடைய செட்டைகள் மேலே பிரிந்திருந்தன, ஒவ்வொன்றுக்குமுள்ள இரண்டிரண்டு செட்டைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தன; மற்ற இரண்டிரண்டு செட்டைகள் அவைகளுடைய உடல்களை மூடின. அவைகள் ஒவ்வொன்றும் தன்தன் திசைக்கு நேர்முகமாய்ச் சென்றது; ஆவிபோகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; போகையில் அவைகள் திரும்பிப்பார்க்கவில்லை" (எசே 1:10-12).

கேருபீன்களை செய்யவேண்டிய விதத்தைப்பற்றியும் கர்த்தர் மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "பொன்னினால் இரண்டு கேருபீன்களைச் செய்வாயாக; பொன்னைத் தகடாய் அடித்து, அவைகளைச் செய்து, கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் வைப்பாயாக" என்றும்,

"ஒரு புறத்து ஓரத்தில் ஒரு கேருபீனையும் மறுபுறத்து ஓரத்தில் மற்றக் கேருபீனையும் பண்ணிவை; அந்தக் கேருபீன்கள் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏகவேலையாயிருக்கும்படி, அவைகளைப் பண்ணக்கடவாய்" என்றும்,

"அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாய் இருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருப்பதாக" (யாத் 25:18-20) என்றும் சொல்லுகிறார்.

"அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன; இவைகளைக் குறித்து விவரமாய்ப்பேச இப்பொழுது சமயமில்லை" (எபி 9:5).

கர்த்தர் கேருபீன்களின் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். "இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்; கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும்" (சங் 80:1).

கர்த்தர் பிற்காலத்திலே, இந்தப் பரிசுத்த ஸ்தலத்திலே மோசேயை சந்திப்பதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்" (யாத் 25:22) என்று சொல்லுகிறார்.

கிருபாசனமானது கிருபையின் சிங்காசனத்திற்கு அடையாளமாயிருக்கிறது. நாம் கர்த்தருடைய கிருபாசனத்தண்டையிலே தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபி 4:16).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லாமல், கர்த்தருடைய கிருபையின் கீழ் இருக்கிறோம். கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து நம்மை வரவேற்கிறது. கர்த்தருடைய செட்டையின் கீழே நாம் அடைக்கலம்பெறும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" *(ரூத் 2:12).*

கேருபீன்களைப் பொன்னைத் தகடாய் அடித்துச் செய்ய வேண்டும். கிருபாசனத்தையும் இதுபோலவே பொன்னைத் தகடாய் அடித்துச் செய்ய வேண்டும். இதில் வேறு உலோகங்களின் கலப்பு எதுவும் இருக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தாரோடு தேவன் கொண்டிருக்கும் ஐக்கியத்தில் எந்த விதமான மாய்மாலமும் இருக்கக்கூடாது என்பதை இது உணர்த்துகிறது. *(யாத் 25:17-22; யாத் 37:6-9).*

உடன்படிக்கைப் பெட்டி தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமாகும். பத்துக் கற்பனைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளும் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. தேவனுக்கும், இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையை இது தொடர்ந்து நினைவுபடுத்தும். *(யாத் 25:16,21)* உடன்படிக்கைப் பெட்டியில் மன்னா வைக்கப்பட்டிருக்கும் கலசமும் உள்ளது. பரலோகத்திலிருந்து வந்த தேவனுடைய அப்பத்திற்கு மன்னா ஓர் அடையாளம். *(யாத் 16:33; யோவான் 6; எபி 9:4).* ஆரோனின் கோலும் உடன்படிக்கைப் பெட்டிற்குள் பிற்காலத்தில் வைக்கப்பட்டது. தேவன் தெரிந்தெடுத்திருக்கும் ஆசாரியத்துவத்திற்கு ஆரோனின் கோல் சாட்சி பகருகிறது. *(எண் 17:10; எபி 9:4).*

"நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணம்" என்று கர்த்தர் சொல்லுகிறார். மோசே இன்னும் பத்துக் கற்பனைகள் எழுதப்பட்டுள்ள கற்பலகைகளைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. *(யாத் 32:15).*

"அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்" என்றும் கர்த்தர் மோசேயிடம் சொல்லுகிறார். தேவன் தாம் நியமித்திருக்கும் ஸ்தலத்தில் தம்முடைய பிள்ளைகளைச் சந்திக்கிறார். *(யாத் 23:14-17; யாத் 29:42-46; யாத் 34:22-24; யாத் 40:33-35)*

"உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். தேவனைச் சந்தித்து, அவரோடு ஒப்புரவாகும்போது தேவனுடைய சப்தத்தைத் தெளிவாகக் கேட்க முடியும். *(2கொரி 10:16; 2கொரி 6:14; 2கொரி 13:14).*

பரிசுத்த வேதாகமத்தில் உடன்படிக்கைப் பெட்டிக்கு வேறு சில பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பெட்டி *(யாத் 25:10)*
2. தேவனுடைய பெட்டி *(1சாமு 4:11-22; 2சாமு 6:2-12)*
3. கர்த்தராகிய தேவனுடைய பெட்டி *(1நாளா 13:6)*
4. நமது தேவனுடைய பெட்டி *(1நாளா 13:3)*
5. இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டி *(1சாமு 5:7-6:3)*
6. கர்த்தருடைய பெட்டி *(1சாமு 6:1-7:1)*
7. கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி *(1இராஜா 2:26)*
8. உங்கள் தேவனாகிய கர்த்தரின் பெட்டி *(யோசு 4:5)*
9. சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டி *(யோசு 3:13)*
10. உடன்படிக்கைப்பெட்டி *(யோசு 3:6)*
11. தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி *(நியா 20:27; 1நாளா 16:6)*
12. கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி *(எண் 10:33; உபா 31:9)*

13. உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி (உபா 31:26; யோசு 3:3)

14. சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி (யோசு 3:11)

15. சேனைகளின் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி (1சாமு 4:4)

16. சாட்சிப்பெட்டி (யாத் 25:22; யாத் 26:33,34)

17. உமது வல்லமை விளங்கும் பெட்டி (2நாளா 6:41; சங் 132:8)

18. பரிசுத்தப்பெட்டி (2நாளா 35:3)

உடன்படிக்கைப் பெட்டி "சாட்சிப்பெட்டி" என்று அழைக்கப் படுகிறது. ஏனெனில் இதற்குள் இருக்கும் பிரமாணத்தைக் குறித்து இது எப்போதும் சாட்சி பகருகிறது. இந்தப் பெட்டி "உடன்படிக்கைப் பெட்டி" என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் தேவனுக்கும், இஸ்ரவேலருக்கும் நடுவில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் மோசேயின் உடன்படிக்கையை இது அறிவிக்கிறது.

உடன்படிக்கைப் பெட்டி "உமது வல்லமை விளங்கும் பெட்டி" எனவும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இஸ்ரவேல் ஜனத்தாரை ஆசீர்வதிப்பதிலும், இஸ்ரவேலரைப் பொறுத்த அளவில் தேவனுடைய வல்லமை எப்படிப்பட்டது என்பதையும் இந்தப் பெட்டி விளக்கிக் கூறுகிறது. உடன்படிக்கைப் பெட்டி "பரிசுத்தப்பெட்டி" என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்தப் பெட்டி புனிதமானது, பரிசுத்தமானது.

## சமுகத்தப்ப மேஜை யாத் 25:23-30

**யாத் 25:23. சீத்திம் மரத்தால் ஒரு மேஜையையும் பண்ணுவாயாக; அது இரண்டு முழநீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமாய் இருக்கக்கடவது.**

**யாத் 25:24. அதைப் பசும் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்னினால் திரணையை உண்டாக்கி,**

**யாத் 25:25. சுற்றிலும் அதற்கு நாலு விரற்கடையான சட்டத்தையும், அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னினால் திரணையையும் உண்டாக்கி,**

**யாத் 25:26. அதற்கு நாலு பொன்வளையங்களைப் பண்ணி, அவைகளை அதின் நாலு கால்களுக்கு இருக்கும் நாலு மூலைகளிலும் தைக்கக்கடவாய்.**

**யாத் 25:27. அந்த வளையங்கள் மேஜையைச் சுமக்கும் தண்டுகளுக்கு இடங்களாயிருக்கும்படி, சட்டத்தின் அருகே இருக்கவேண்டும்.**

**யாத் 25:28. அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தினால் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்; அவைகளால் மேஜை சுமக்கப்படவேண்டும்.**

**யாத் 25:29. அதற்குரிய தட்டுகளையும், தூபக்கரண்டிகளையும், கிண்ணங்களையும், பானபலி கரகங்களையும் பண்ணக்கடவாய்; அவைகளைப் பசும்பொன்னினால் பண்ணக்கடவாய்.**

**யாத் 25:30. மேஜையின்மேல் நித்தமும் என் சந்நிதியில் சமுகத்தப்பங்களை வைக்கக்கடவாய்.**

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் சமுகத்தப்ப மேஜை வைக்கப்பட்டிருக்கும். இதை உண்டுபண்ண வேண்டிய மாதிரி வடிவத்தை கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "சீத்திம் மரத்தால் ஒரு மேஜையையும் பண்ணுவாயாக; அது இரண்டு முழநீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமாய் இருக்கக்கடவது. அதைப் பசும் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்னினால் திரணையை உண்டாக்கி, சுற்றிலும் அதற்கு நாலு விரற்கடையான சட்டத்தையும், அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னினால் திரணையையும் உண்டாக்கி, அதற்கு நாலு பொன்வளையங்களைப் பண்ணி, அவைகளை அதின் நாலு கால்களுக்கு இருக்கும் நாலு மூலைகளிலும் தைக்கக்கடவாய்" (யாத் 25:23-26) என்று சொல்லுகிறார்.

சமுகத்தப்ப மேஜை சீத்திம் மரத்தால் செய்யப்பட்டாலும், அது பசும்பொன் தகட்டால் மூடப்பட்டிருக்கிறது. மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டி மாத்திரமே வைக்கப்பட்டிருக்கும். சமுகத்தப்ப மேஜை பொன்தகட்டால் மூடப்பட்டிருந்தாலும், அது மகாபரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்படுவதில்லை. சமுகத்தப்ப மேஜை ஆசரிப்புக்கூடாரத்திலே, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே உள்ள, பரிசுத்த ஸ்தலத்திலே வைக்கப்பட்டிருக்கும்.

"எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும். இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது" (எபி 9:2,3).

சமுகத்தப்ப மேஜையின் நாலு மூலைகளிலுமுள்ள நாலுகால்களும் தைக்கப்பட்டிருக்கிறது. "அந்த வளையங்கள் மேஜையைச் சுமக்கும் தண்டுகளுக்கு இடங்களாயிருக்கும்படி, சட்டத்தின் அருகே இருக்கவேண்டும்" என்றும், "அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தினால் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்; அவைகளால் மேஜை சுமக்கப்படவேண்டும்" (யாத் 25:27,28) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சமுகத்தப்ப மேஜைக்குரிய தட்டுகளையும், தூபக்கரண்டிகளையும், கிண்ணங்களையும், பானபலி கரகங்களையும் பண்ணவேண்டும்; அவைகளைப் பசும்பொன்னினால் பண்ணவேண்டும் (யாத் 25:29).

சமுகதப்ப மேஜை எப்போதும் விரிக்கப்பட்டதாகயிருக்கவேண்டும். "மேஜையின்மேல் நித்தமும் என் சந்நிதியில் சமுகத்தப்பங்களை வைக்கக்கடவாய்" (யாத் 25:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேஜையின்மேல் பன்னிரண்டு சமுகதப்பங்கள் வைக்கப்பட்டிருக்கும். இஸ்ரவேலின்பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு அடையாளமாக, பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. அவை இரண்டு வரிசைகளாக வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வரிசையிலும் ஆறு சமுகத்தப்பங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

"அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து,ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து, ஞாபகக்குறியாகக் கர்த்தருக்கேற்ற தகனபலியாயிருக்கும்" (லேவி 24:6,7).

அப்பத்தை நித்திய உடன்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, ஓய்வுநாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கக்கடவன். அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவர்கள்; நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் என்றார்" (லேவி 24:8,9).

ஆசரிப்புக்கூடாரம் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம். இது ராஜாவின் அரண்மனை. கர்த்தர் தம்முடைய பரிசுத்தஸ்தலத்தில் வாசம்பண்ணுகிறார். ராஜாவின் அரண்மனையிலே, அவர் போஜனம்பண்ணுவதற்கு, ராஜாவின் அந்தஸ்துக்குரிய மேஜை அழகுபடுத்தப்பட்டிருக்கும். ஆசரிப்புக்கூடாரத்திலே, சமுகதப்ப மேஜை நேர்த்தியாக பண்ணப்பட்டு, அங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

உடன்படிக்கைப்பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வாசம்பண்ணுகிறார் என்பதற்கு உடன்படிக்கைப்பெட்டி அடையாளமாகயிருக்கிறது. சமுகத்தப்ப மேஜையிலே வைக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு சமுகத்தப்பங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், தங்களை கர்த்தருக்கு அற்பணித்திருப்பதற்கு இந்தப் பன்னிரண்டு அப்பங்களும், அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களுக்கு அன்றாட போஜனத்தைக் கொடுக்கிறார். அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது கர்த்தர் அவர்களுக்கு மன்னாவை புசிக்கக்கொடுக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணினாலும் கர்த்தர் அவர்களுக்கு அங்கேயும் ஒரு பந்தியை ஆயத்தம்பண்ணுகிறார். அதற்கு அடையாளமாக கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே, சமுகதப்ப மேஜை வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கானான் தேசத்தில் குடியேறும்போது, அந்த தேசத்தின் தானியத்தை புசிப்பார்கள். அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறபோதோ வானத்திலிருந்து பெய்யும் மன்னாவை புசிக்கிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஜெபம்பண்ண கற்றுக்கொடுக்கிறார். கர்த்தர் தாமே நமக்கு அன்றன்றுள்ள அப்பத்தை புசிக்க கொடுக்கவேண்டும். நம்முடைய அன்றாட போஜனத்தை கர்த்தரிடத்திலிருந்து ஜெபித்து பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் போஜனத்திற்காக நாம் அவருக்கு நன்றி சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கும், அவரோடு சம்பாஷணை பண்ணுவதற்கும் சமுகத்தப்ப மேஜை அடையாளமாயிருக்கிறது. சமுகத்தப்ப மேஜையிலே வைக்கப்பட்டிருக்கும் அப்பங்கள் எந்த தானியத்தினால் செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த தானியத்தினால் செய்த அப்பத்தையே இஸ்ரவேல் ஜனத்தாரும் புசிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கூடாரங்களில் புசிக்கும் அப்பத்திற்கும், ஆசரிப்புக்கூடாரத்தில் சமுகத்தப்ப மேஜையிலே வைக்கப்பட்டிருக்கும் சமுகத்தப்பங்களுக்கும் வித்தியாசமில்லை. இவை இரண்டும் ஒரே மாவினால் செய்யப்பட்டவை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு சிநேகமாகவும், ஐக்கியமாகவும் இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, சமுகத்தப்பங்களும், இஸ்ரவேல் புத்திரரின் கூடாரத்து அப்பங்களும் வித்தியாசமில்லாமல் ஒன்றுபோலிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடுகூட போஜனம் பண்ணுகிறார் என்பதற்கும், அவர்களும் கர்த்தரோடுகூட போஜனம்பண்ணுகிறார்கள் என்பதற்கும் சமுகத்தப்பங்கள் அடையாளமாகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தர் தம்முடைய சபையை போஷிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கப்படுகிறது. நாம் கர்த்தருக்கு ஆசாரியர்களாயிருக்கிறோம். நம்முடைய பிதாவின் வீட்டிலே நமக்கு தேவையான அப்பங்களும் உள்ளது. ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் பகிர்ந்துகொடுக்கும் அளவுக்கு, கர்த்தருடைய சபையிலே இன்னும் மீதமான அப்பங்களும் இருக்கிறது.

தட்டுகள், தூபக்கரண்டிகள், கிண்ணங்கள், பானபலிகரகங்கள் ஆகியவை பசும் பொன்னினால் பண்ணப்படவேண்டும். (யாத் 25:29; யாத் 37:16) இவை மேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கும். மேஜையின்மேல் நித்தமும் சமுகத்தப்பங்கள் வைக்கப்படவேண்டும். (யாத் 25:30; லேவி 24:5-9). மொத்தம் பன்னிரண்டு அப்பங்கள் சுடப்படும். அவை மேஜையின்மீது இரண்டு அடுக்காக அடுக்கி வைக்கப்படும். பன்னிரண்டு அப்பங்கள் பன்னிரண்டு கோத்திரத்தாரைக் குறிக்கும். தட்டுகள் மாவு பிசைவதற்கு ஏற்றாற்போன்று, அளவில் பெரியதாக இருக்கும். தூபக்கரண்டிகள் அளவில் சிறியவை. கிண்ணங்களில் பலிகள், காணிக்கைகள் ஆகியவற்றின் இரத்தம் இருக்கும் (யாத் 25:29; யாத் 37:16; எண் 4:7).

சமுகத்தப்ப மேஜையின்மேல் நீலத்துப்பட்டி விரிக்கப்பட்டிருக்கும். அதன்மேல் தட்டுகளும், தூபக்கரண்டிகளும், கிண்ணங்களும், மூடுகிற தட்டுகளும் இருக்கும். (எண் 4:7). மேஜை வாசஸ்தலத்தின் வடக்குப் பக்கமாக வைக்கப்பட்டிருக்கும். (யாத் 26:35) இது பரலோகத்தின் திசை. (ஏசா 14:12-14; சங் 75:6-7). உடன்படிக்கைப் பெட்டியை வெளியில் சுமந்து செல்லும்போது மேஜையின் மேல் சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதை தகசுத்தோல் மூடியால் மூடவேண்டும்.

தேவனுடைய சமுகத்தில் சமுகத்தப்பங்கள் எப்போதும் போஜனபலியாக வைக்கப்பட்டிருக்கும். வாரத்தின் முடிவில் அப்பங்கள் மாற்றப்படும். அவற்றை ஆசாரியர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் போஜனமாகப் புசிக்கலாம். (லேவி 24:5-9; மத் 12:3-5).

## குத்துவிளக்கு
## யாத் 25:31-40

**யாத் 25:31. பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்படவேண்டும்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும்.**

**யாத் 25:32. ஆறு கிளைகள் அதின் பக்கங்களில் விடவேண்டும்; குத்துவிளக்கின் மூன்றுகிளைகள் அதின் ஒரு பக்கத்திலும், குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் மறுபக்கத்திலும் விடவேண்டும்.**

**யாத் 25:33. ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான மூன்று மொக்குகளும், ஒரு பழமும், ஒரு பூவும் இருப்பதாக; குத்துவிளக்கிலிருந்து புறப்படும் ஆறு கிளைகளிலும் அப்படியே இருக்கவேண்டும்.**

**யாத் 25:34. விளக்குத்தண்டிலோ, வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகளும், பழங்களும், பூக்களும் இருப்பதாக.**

**யாத் 25:35. அதிலிருந்து புறப்படும் இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும் இருப்பதாக; விளக்குத்தண்டிலிருந்து புறப்படும் ஆறு கிளைகளுக்கும் அப்படியே இருக்கவேண்டும்.**

**யாத் 25:36. அவைகளின் பழங்களும் அவைகளின் கிளைகளும் பொன்னினால் உண்டானவைகளாயிருப்பதாக; அவையெல்லாம் தகடாய் அடித்த பசும்பொன்னால் செய்யப்பட்ட ஒரே வேலையாயிருக்கவேண்டும்.**

**யாத் 25:37. அதில் ஏழு அகல்களைச் செய்வாயாக; அதற்கு நேரெதிராய் எரியும்படிக்கு அவைகள் ஏற்றப்படக்கடவது.**

**யாத் 25:38. அதின் கத்தரிகளும் சாம்பல் பாத்திரங்களும் பசும்பொன்னினால் செய்யப்படுவதாக.**

**யாத் 25:39. அதையும் அதற்குரிய பணிமுட்டுகள் யாவையும் ஒரு தாலந்து பசும்பொன்னினால் பண்ணவேண்டும்.**

**யாத் 25:40. மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு.**

ஆசரிப்புக்கூடாரம் கர்த்தருடைய வாசஸ்தலம். அது கர்த்தருடைய அரண்மனை. இந்த அரண்மனையிலே மிகவும் நேர்த்தியான குத்துவிளக்கு வைக்கப்படுகிறது. இந்த விளக்கு பசும்பொன்னினால் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்படவேண்டும்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும்" (யாத் 25:31) என்று சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தில் பொன்குத்துவிளக்கு மிகுந்த அலங்காரமாயிருக்கிறது. இந்தக் குத்துவிளக்கிலே ஆறுகிளைகள் உள்ளன. பொன்குத்துவிளக்கின் மாதிரி வடிவத்தை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

"பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்படவேண்டும்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும். ஆறு கிளைகள் அதின் பக்கங்களில் விடவேண்டும்; குத்துவிளக்கின் மூன்றுகிளைகள் அதின் ஒரு பக்கத்திலும், குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் மறுபக்கத்திலும் விடவேண்டும்" (யாத் 25:31,32).

குத்துவிளக்கின் மொக்குகளில், விளக்குகள் எரிவதற்கு தேவையான எண்ணெய் சேகரிக்கப்பட்டிருக்கும். அதிலுள்ள பழமும் பூவும் குத்துவிளக்கின் அலங்காரத்திற்காக செய்யப்பட்டிருக்கிறது.

குத்துவிளக்கிலே மொக்குகளையும், பழங்களையும், பூக்களையும் எவ்வாறு உண்டுபண்ணவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

"விளக்குத்தண்டிலோ, வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகளும், பழங்களும், பூக்களும் இருப்பதாக. அதிலிருந்து புறப்படும் இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும் இருப்பதாக; விளக்குத்தண்டிலிருந்து புறப்படும் ஆறு கிளைகளுக்கும் அப்படியே இருக்கவேண்டும்" (யாத் 25:34,35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பொன்குத்துவிளக்கு மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கிறது. இந்த விளக்கிலிருந்து புறப்படும் வெளிச்சம் ஆசரிப்புக்கூடாரம் முழுவதற்கும் வெளிச்சம் கொடுக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்திற்குள் புகை, சாம்பல் ஆகிய எதுவும் தங்கியிருக்காதவாறு, கூடாரம் சுத்தமாயிருக்கிறது. குத்துவிளக்கை சுத்தம்பண்ணுவதற்கு கத்திரிகளும், சாம்பல் பாத்திரங்களும் செய்யப்பட்டிருக்கிறது. அவை பசும்பொன்னினால் செய்யப்பட வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 25:38).

குத்துவிளக்கின் பழங்களும், அவைகளின் கிளைகளும் பொன்னினால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் தகடாய் அடித்த பசும்பொன்னால் செய்யப்பட்ட ஒரே வேலையாயிருக்கிறது (யாத் 25:36). குத்துவிளக்கில் ஏழு அகல்கள் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அகல்களும் நேர் எதிராய் எரியும்படிக்கு அவைகள் ஏற்றப்பட்டிருக்கிறது (யாத் 25:36).

ஆசரிப்புக்கூடாரத்தில் பொன்குத்துவிளக்கு வைக்கப்பட்டிருப்பது மிகவும் விசேஷமான காரியம். ஆசரிப்புக்கூடாரத்தில் ஜன்னல்கள் எதுவும் இல்லை. பகல்வேளையிலே சூரிய வெளிச்சம் வெளியிலிருந்து ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வருவதற்கு வாய்ப்பில்லை. பொன்குத்துவிளக்கே பகல் வேளையிலும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

கர்த்தருடைய கட்டளையும், பிரமாணமும் இல்லையென்றால் நாம் ஆவிக்குரிய காரியங்களில் இருளிலிருப்போம். கர்த்தர் நம்மை இருளிலே தவிக்க விட்டுவிடவில்லை. அவர் நமக்கு ஆவிக்குரிய வெளிச்சத்தைக் கொடுக்கிறார். கர்த்தருடைய கட்டளையே நமக்கு விளக்காக இருக்கிறது. கர்த்தருடைய வேதமே நமக்கு வெளிச்சமாகயிருக்கிறது.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் குத்துவிளக்கில் உண்டாக்கப்பட்டிருக்கிற கிளைகளைப்போல இருக்கிறார்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டுக்காலத்து சபையாருக்கு, பல வருஷங்களாக ஆவிக்குரிய வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரம், ஜன்னல் இல்லாமல் இருளிலிருந்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையும் இருளிலிருக்கிறது. பரலோகத்தின் வெளிச்சத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பூமியிலுள்ள சபையானது பிரகாசமில்லாததாகவும், வெளிச்சம் மங்கியதாகவும் இருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்து சபைக்கு கர்த்தருடைய வார்த்தையே விளக்காக இருக்கிறது.

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேது 1:19).

கர்த்தருடைய வசனம் எந்த தேசத்தில் இல்லையோ அந்த தேசம் இருளுள்ள தேசமாகவே இருக்கும். கர்த்தருடைய வார்த்தை இருளை அகற்றி வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக ஏழு அக்கினி தீபங்கள் எரிந்துகொண்டிருக்கிறது. இவை கர்த்தருடைய ஆவியானவருக்கும் அவருடைய பல்வேறு வரங்களுக்கும், கிருபைகளுக்கும் அடையாளம்.

"அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன" (வெளி 4:5).

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபைகள் பொன்குத்துவிளக்குகளுக்கு அடையாளமாயிருக்கிறது. இவை இந்த உலகத்திற்கு ஆவிக்குரிய வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

"நான் வீணாக ஓடினதும் வீணாகப்பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (பிலி 2:14-16).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அகல்களை ஏற்றுகிறவர்களாகவும், அவற்றின் திரிகளை தீண்டிவிடுகிறவர்களாகவும், எரிகிற அகல்களுக்கு எண்ணெய் வார்க்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். அகல்கள் எரியும்படிக்கு அவைகள் ஏற்றப்படவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 25:37). கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பரிசுத்த வேதாகமத்திலுள்ள வசனங்களை ஜனங்களுக்கு போதித்து, அவர்களுடைய அகல்களை ஏற்றுகிறார்கள், அவைகளை பிரகாசமாக எரியப்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அதையும் அதற்குரிய பணிமுட்டுகள் யாவையும் ஒரு தாலந்து பசும்பொன்னினால் பண்ணவேண்டும். மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு" (யாத் 25:39,40) என்று சொல்லுகிறார்.

குத்துவிளக்கைப் பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய் உண்டாக்க வேண்டும். (யாத் 37:17; எண் 8:4) அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும். ஆறு கிளைகள் அதின் பக்கங்களில் விடவேண்டும்; குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் ஒரு பக்கத்திலும், குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் மறுபக்கத்திலும் விடவேண்டும். ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான மூன்று மொக்குகளும், ஒரு பழமும், ஒரு பூவும் இருக்கவேண்டும்.

குத்துவிளக்கிலிருந்து புறப்படும் ஆறு கிளைகளிலும் அப்படியே இருக்கவேண்டும். விளக்குத்தண்டிலோ, வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகளும், பழங்களும், பூக்களும் இருக்க வேண்டும். அதிலிருந்து புறப்படும் இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும் இருக்க வேண்டும். விளக்குத்தண்டிலிருந்து புறப்படும் ஆறு கிளைகளுக்கும் அப்படியே இருக்க வேண்டும்.

அவைகளின் பழங்களும் அவைகளின் கிளைகளும் பொன்னினால் உண்டானவைகளாயிருக்க வேண்டும். அவையெல்லாம் தகடாய் அடித்த பசும்பொன்னால் செய்யப்பட்ட ஒரே வேலையாயிருக்கவேண்டும். அதில் ஏழு அகல்களைச் செய்ய வேண்டும்; அதற்கு நேரெதிராய் எரியும்படிக்கு அவைகள் ஏற்றப்பட வேண்டும். வாசஸ்தலத்தின் தென்புறமாகக் குத்துவிளக்கை வைக்கவேண்டும். (யாத் 26:35)

மேஜை வடபுறமாக வைக்கப்பட்டிருக்கும். இவ்விரண்டும், எதிரெதிராக இருப்பதினால் மேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கும் அப்பங்களின்மீது எப்போதும் வெளிச்சம் பட்டுக் கொண்டிருக்கும். குத்துவிளக்கு எப்போதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும். சாயங்காலத்திலும், காலையிலும் விளக்கில் எண்ணெய் ஊற்றுதல், திரியைச் சரிசெய்தல் போன்ற வேலைகள் செய்யப்பட வேண்டும். (யாத் 27:21; லேவி 24:1-4)

எப்போதும் விளக்கு எரிந்து கொண்டிருப்பதற்கு ஏதுவாக எண்ணெய் வைக்கப்படும் பகுதி அளவில் பெரியதாக இருக்கிறது. பிரயாணத்தின் போது இளநீலத் துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்குத் தண்டையும், அதின் அகல்களையும், அதன் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும் அதற்குரிய எண்ணெய் பாத்திரங்களையும் மூடவேண்டும்.

"மூன்று மொக்குகள்" என்பது மூன்று விளக்குகளைக் குறிக்கும். (யாத் 25:34) விளக்குத்தண்டில் வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகள் இருக்கிறது (யாத் 25:33-34).

குத்துவிளக்கிற்கு இரண்டு பக்கங்கள் இருக்கிறது. ஒரு பக்கத்தில் மூன்று கிளைகளும், மறுபக்கத்தில் மூன்று கிளைகளும் இருக்கிறது. நடுப்பக்கத்தில் விளக்குத்தண்டும் அதே உயரத்தில் இருக்கிறது. இவையெல்லாம் சேர்ந்து ஏழு அகல்களாகும். ஏழு அகல்கள் பரலோகத்திலுள்ள மாதிரியின் படியே செய்யப்பட்டிருக்கிறது (யாத் 25:40; சக 4:2)

விளக்குத்தண்டில் ஏன் ஏழு அகல்கள் உள்ளன என்பதற்கான காரணம் தெரியவில்லை. சக 4:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு அகல்கள் கர்த்தருடைய கண்களுக்கு அடையாளமாகும். (சக. 4:10) வெளி 1:12-13; வெளி 2:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஏழு விளக்குத்தண்டுகள் ஏழு சபைகளைக் குறிக்கும். (வெளி 1:20). வெளி 4:5 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு அக்கினி தீபங்கள் தேவனுடைய ஏழு ஆவிகளையும் அல்லது பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும் குறிக்கும் (வெளி 5:6) ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள ஏழு அகல்கள் கர்த்தருடைய கண்களை அடையாளமாகக் குறிக்கலாம். (யாத் 25:40; சக 4:2,10; எபி 8:5; எபி 9:23).

வேதாகமத்தில் பல இடங்களில் பலவிதமான எண்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை அனைத்திற்கும் ஆவிக்குரிய அர்த்தம் கூறமுடியாது. சான்றாக ஒன்று என்பது ஒற்றுமையைக் குறிக்கும். (ஆதி 2:24; ஆதி 11:6; யோவான் 10:30; யோவான் 17:21-23) ஆனாலும், ஒன்று என்னும் எண் பயன்படுத்தப்பட்டிருக்கும் எல்லா வசனங்களும் ஒற்றுமையைக் குறிப்பதில்லை. (ஆதி 2:21; ஆதி 4:19; ஆதி 14:13; ஆதி 19:9; யோசு 12:9-24; யோவான் 1:23, 26,40)

அகல்களைக் காலையிலும், மாலையிலும் பராமரிக்க வேண்டும். திரிகளை மாற்றுவதற்கு சாம்பல் பாத்திரங்களில் திரிகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். (யாத் 30:7-8; லேவி 24:3-4).

ஒரு தாலந்து பசும்பொன் என்பது சுமார் 60 கிலோ எடையுள்ளது. கர்த்தர் மோசேக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியையும், அதிலுள்ள பரிசுத்த பணிமுட்டுகளைப் பற்றிய கட்டளைகளையும் கொடுக்கிறார். கர்த்தர் தனக்கு சொன்ன மாதிரியின்படி மோசே ஒவ்வொரு காரியத்தையும் செய்வதற்கு கவனமாயிருக்கவேண்டும்.

## 26 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரத்தின் உட்புறத்தில் பயன்படுத்தப்படும் மூடுதிரைகளைப்பற்றியும், காதுகளைப்பற்றியும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார் *(யாத் 26:1-6)*.

ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப்புறத்தில் பயன்படுத்தப்படும் மூடுதிரைகள் ஆட்டுமயிரினால் செய்யப்படுகிறது. உட்புறத்து மூடுதிரைகளைவிட, வெளிப்புறத்து மூடுதிரைகள் அதிக பலமுள்ளதாகயிருக்கிறது *(யாத் 26:7-13)*.

ஆசரிப்புக்கூடாரத்திற்கு சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோலினால் ஒரு மூடியும், தகசுதோலால் ஒரு மூடியும் உண்டுபண்ணப்படுகிறது *(யாத் 26:14)*.

வாசஸ்தலத்திற்கு நிமிர்ந்து நிற்கும் பலகைகள் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பலகைகளின் அளவுகளும், இவை இசைக்கப்படும் விதமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது *(யாத் 26:15-30)*.

மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையில் பிரிவினை உண்டாகும் திரைச்சீலை *(யாத் 26:31-35)*. கூடாரத்தின் வாசலில் பயன்படுத்தப்படும் தொங்குதிரை *(யாத் 26:36,37)*.

### மெல்லிய நூல் மூடுதிரைகள் யாத் 26:1-6

**யாத் 26:1. மேலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலினாலும் இளநீலநூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்புநூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விசித்திரவேலையாய்க் கேருபீன்களைச் செய்யக்கடவாய்.**

**யாத் 26:2. ஒவ்வொரு மூடுதிரையும் இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருப்பதாக; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்கவேண்டும்.**

**யாத் 26:3. ஐந்து மூடுதிரை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும்; மற்ற ஐந்து மூடுதிரைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.**

**யாத் 26:4. இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் இளநீலநூலால் காதுகளை உண்டுபண்ணு; இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் கடைஓரத்திலும் அப்படியே செய்வாயாக**

**யாத் 26:5. காதுகள் ஒன்றோடொன்று இணையும்படி ஒரு மூடுதிரையில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 26:6. ஐம்பது பொன் கொக்கிகளையும் பண்ணி, மூடுதிரைகளை ஒன்றோடொன்று அந்தக் கொக்கிகளால் இணைத்துவிடுவாயாக. அப்பொழுது அது ஒரே வாசஸ்தலமாகும்.**

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் கூடாரமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிரசன்னத்தை இஸ்ரவேல் புத்திரர் மத்தியில், இந்தக் கூடாரத்தில் வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பாளயமிறங்கும்போது அவர்கள் கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். கர்த்தரும் வனாந்தரத்திலே தம்முடைய ஆசரிப்புக்கூடாரத்தில் வாசம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில், ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பிரயாணம்பண்ணும்போது தங்களுடைய கூடாரங்களை பிரித்தெடுத்து தங்களோடுகூட கொண்டுபோவார்கள். அதுபோலவே அவர்கள் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தையும் பேர்த்தெடுத்து, தாங்கள் பிரயாணம்பண்ணும்போது சுமந்துகொண்டு போவார்கள்.

வனாந்தரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆசரிப்புக்கூடாரம், இந்த உலகத்தில் கர்த்தருடைய சபைக்கு அடையாளமாயிருக்கிறது.

"கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?" (சங் 15:1).

விசுவாசிகளாகிய நமக்கு இந்த உலகத்தில் நிலையான நகரம் எதுவுமில்லை. நாம் இந்தப் பிரபஞ்சத்திற்கு அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் இருக்கிறோம். நாம் பரமகானானை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம். நாம் பரலோகத்தில் போய்ச்சேரும் வரையிலும், நம்முடைய பிரயாணம் முடிவு பெறுவதில்லை. இஸ்ரவேல் புத்திரரும், கானான் தேசத்திற்கு போய்ச்சேரும் வரையிலும், வனாந்தரத்திலே தொடர்ந்து பிரயாணம் பண்ணவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தை செய்வதற்கு மூடுதிரைகள் பயன்படுத்தப்படுகிறது. இந்த மூடுதிரைகள் திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும், இளநூலினாலும், இரத்தாம்பர நூலினாலும், சிவப்பு நூலினாலும் நெய்யப்பட்டிருக்கிறது. இந்த நூல்கள் எல்லாமே விலையேறப்பெற்றவை. இளநீலம், இரத்தாம்பரம், சிவப்பு ஆகிய வர்ணங்களெல்லாம் கண்ணுக்கு இனிமையானவை. மூடுதிரைகள் நேர்த்தியான நூல்களால் நெய்யப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "மேலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலினாலும் இளநீலநூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்புநூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விசித்திரவேலையாய்க் கேருபீன்களைச் செய்யக்கடவாய்" (யாத் 26:1) என்று சொல்லுகிறார்.

பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக என்று கர்த்தர் சொல்லுகிறார். பத்து என்னும் எண்ணிற்கு விசேஷித்த அடையாளம் எதுவுமில்லை. தீர்க்கதரிசனங்களிலும், "பத்து" என்று கூறப்பட்டிருக்கிற எண் "பத்து" என்னும் எண்ணை மட்டுமே குறிக்கும். (தானி 7:7,20,24; வெளி 12:3; வெளி 13:1; வெளி 17:3,7,17).

மூடுதிரைகள் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் நெய்யப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரம், பலிகள், காணிக்கைகள், சடங்குகள் ஆகியவை வேதாகமத்தில் அடையாளங்களாக கூறப்பட்டிருக்கின்றன. (கொலோ 2:14-17; எபி 10:1). மெல்லிய பஞ்சுநூல் என்பது நீதியையும், பரிசுத்தத்தையும் குறிக்கலாம். (வெளி 19:8)

கேருபீன்கள் பரலோகத்தின் சிருஷ்டிகள். இவை தேவனுடைய பிரசன்னத்தில் வாசம்பண்ணுகிறது. இவற்றிற்கு சில கடமைகள் உண்டு. அவையாவன:

1. தேவன் மனுஷனை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார். அதன் பின்பு ஜீவவிருட்சத்திற்குப் போகும் வழியைக் காவல் செய்வதற்குத் தேவன் கேருபீன்களை வைத்தார். (ஆதி 3:24)

2. கர்த்தர் கேருபீன்களின்மேல் ஏறி, வேகமாகச் செல்லுகிறார். (2சாமு 22:11; சங் 18:10)

3. இவை தேவனுடைய சிங்காசனத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தூக்கிச் செல்லும். (எசே 1; எசே 9:3; எசே 10:1-20; எசே 11:22)

கிருபாசனம் தேவனுடைய பிரசன்னத்தைக் குறிக்கிறது. பரலோகத்தில் கேருபீன்கள் தேவனுடைய பிரசன்னத்தில் வாசம்பண்ணுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தில் விசித்திரவேலையாகக் கேருபீன்கள் செய்யப்பட்டிருப்பது, தேவனுடைய பிரசன்னம் அங்கு இருப்பதை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உறுதிபண்ணுகிறது. சாதாரண தூதர்களுக்கு "கேருப்" என்று பெயர் (எசே 28:11-17)

மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்க வேண்டும். ஒரு முழம் என்பது 18 அங்குலமாகும். ஒவ்வொரு மூடுதிரையும் 6 X 42 அடி அளவுள்ளது. ஒரு மூடுதிரையில் ஐம்பது காதுகளை உண்டுபண்ணவேண்டும். ஐம்பது காதுகளும் மூடுதிரைகளை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது (யாத் 26:6).

மூடுதிரைகளில் கேருபீன்கள் விசித்திர வேலையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய தூதர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள் என்பதற்கு இது அடையாளம்.

"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங் 34:7).

ஒவ்வொரு மூடுதிரையும் இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருப்பதாக; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்கவேண்டும் என்றும், ஐந்து மூடுதிரை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும்; மற்ற ஐந்து மூடுதிரைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் (யாத் 26:2,3) கர்த்தர் சொல்லுகிறார்.

மூடுதிரைகளின் ஓரத்தில் காதுகள் உண்டுபண்ணப்படவேண்டும். அந்தக் காதுகள் ஒன்றோடொன்று இணைந்திருக்கவேண்டும். இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் இளநீலநூலால் காதுகளை உண்டுபண்ணு என்றும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் கடைஓரத்திலும் அப்படியே செய்வாயாக என்றும், காதுகள் ஒன்றோடொன்று இணையும்படி ஒரு மூடுதிரையில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணுவாயாக என்றும் (யாத் 25:4,5) கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்திற்கு பத்து மூடுதிரைகள் நெய்யப்படுகிறது. அவை இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து மூடுதிரைகள் ஒன்றோடொன்று இணைக்கப்படுகிறது. மூடுதிரைகளை இணைப்பதற்கு காதுகள் பயன்படுத்தப்படுகிறது. மொத்தம் நூறு காதுகள் தேவைப்படுகிறது. ஒவ்வொரு மூடுதிரையிலும் ஐம்பது காதுகள் வீதமாக உண்டுபண்ணப்படுகிறது.

காதுகள் ஒன்றோடொன்று இணைக்கப்படும்போது, மூடுதிரைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, கூடாரத்தின் வடிவத்தைப் பெறுகிறது. "ஐம்பது பொன் கொக்கிகளையும் பண்ணி, மூடுதிரைகளை ஒன்றொடொன்று அந்தக் கொக்கிகளால் இணைத்துவிடுவாயாக. அப்பொழுது அது ஒரே வாசஸ்தலமாகும்" (யாத் 26:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய சபையில் அவருடைய பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவராகயிருந்தாலும், அவர்கள் எல்லோரும் ஏகோபித்து கர்த்தருடைய சபையாகயிருக்கிறார்கள். மூடுதிரைகள் காதுகளால் ஒன்றோடொன்று இணைக்கப்படுவதுபோல, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பரிசுத்தமான அன்பினால் இசைவாய்க் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள்.

கர்த்தருடைய சபையிலே அவருடைய பரிசுத்தவான்கள் அநேகராயிருந்தாலும் அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தினால் ஒன்றுகூடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக கட்டியெழுப்பப்படுகிறார்கள்.

"அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே 2:21,22).

"அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது" (எபே 4:16).

## ஆட்டுமயிர் மூடுதிரைகள் யாத் 26:7-14

**யாத் 26:7. வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப்போடும்படி ஆட்டுமயிரால் பதினொரு மூடுதிரைகளை உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 26:8. ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழநீளமும் நாலு முழ அகலமுமாய் இருக்கவேண்டும்; பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருக்கவேண்டும்.**

**யாத் 26:9. ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைக்கவேண்டும்; ஆறாம் மூடுதிரையைக் கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப்போடுவாயாக.**

**யாத் 26:10. இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணி,**

**யாத் 26:11. ஐம்பது வெண்கலக் கொக்கிகளைச் செய்து, கொக்கிகளைக் காதுகளில் மாட்டி, ஒரே கூடாரமாகும்படி அதை இணைத்துவிடுவாயாக.**

**யாத் 26:12. கூடாரத்தின் மூடுதிரைகளில் மிச்சமான பாதி மூடுதிரை வாசஸ்தலத்தின் பின்புறத்தில் தொங்கவேண்டும்.**

**யாத் 26:13. கூடாரத்தினுடைய மூடுதிரைகளின் நீளத்திலே மீதியானதில், இந்தப்புறத்தில் ஒரு முழமும் அந்தப்புறத்தில் ஒரு முழமும் வாசஸ்தலத்தை மூடும்படி அதின் பக்கங்களிலே தொங்கவேண்டும்.**

**யாத் 26:14. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாரத்திற்கு ஒரு மூடியையும், அதின்மேல் தகசுத்தோலால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக.**

ஆசரிப்புக்கூடாரத்திற்கு இரட்டிப்பான மூடுதிரைகளைப்போடுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். கூடாரம் மழையில் தாக்குப்பிடிக்கவேண்டும். மழைத்தண்ணீர் கூடாரத்திற்குள் ஒழுகக்கூடாது. இதற்காக ஆட்டுமயிரால் மூடுதிரைகளை செய்து வாசஸ்தலத்தின்மேல் போடுமாறு கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப்போடும்படி ஆட்டுமயிரால் பதினொரு மூடுதிரைகளை உண்டுபண்ணுவாயாக. ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழநீளமும் நாலு முழ அகலமுமாய் இருக்கவேண்டும்; பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருக்கவேண்டும்" (யாத் 26:7,8) என்று சொல்லுகிறார்.

ஆட்டுமயிர் மூடுதிரைகள் வலுவாகவும், கனமுள்ளதாகவும் இருக்கிறது. மெல்லிய நூலால் நெய்யப்பட்ட மூடுதிரைகளைவிட ஆட்டுமயிரால் உண்டுபண்ணப்பட்ட மூடுதிரைகள் அளவில் பெரியவை. மெல்லிய நூல் மூடுதிரையின் நீளம் இருபத்தெட்டு முழம். ஆட்டுமயிர் மூடுதிரையின் நீளம் முப்பது முழம்.

ஆட்டுமயிர் மூடுதிரைகளின் எண்ணிக்கையும், மெல்லிய நூல் மூடுதிரைகளின் எண்ணிக்கையைவிட அதிகமாயிருக்கிறது. மெல்லிய நூல் மூடுதிரைகள் பத்து. ஆட்டுமயிர் மூடுதிரைகளோ பதினொன்று.

கூடாரத்திற்குள்ளே மெல்லிய நூல் மூடுதிரைகள் போடப்பட்டிருக்கிறது. ஆட்டுமயிர் மூடுதிரைகளோ, வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாக போடப்படுகிறது. ஆகையினால் இவை அளவிலும் எண்ணிக்கையிலும் அதிகரித்திருக்கிறது. ஆட்டுமயிர் மூடுதிரைகள், கூடாரத்தின் வெளிப்புறத்தை மூடுகிறது.

பதினொரு ஆட்டுமயிர் மூடுதிரைகளையும் எவ்வாறு இணைக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைக்கவேண்டும்; ஆறாம் மூடுதிரையைக் கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப்போடுவாயாக" (யாத் 26:9) என்பது கர்த்தருடைய கட்டளையாகும்.

பதினொரு ஆட்டுமயிர் மூடுதிரைகளையும் இணைப்பதற்கு ஐம்பது காதுகளையும், ஐம்பது வெண்கல கொக்கிகளையும் உண்டுபண்ண வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணவேண்டும். ஐம்பது வெண்கலக் கொக்கிளைச் செய்து, கொக்கிகளைக் காதுகளில் மாட்டி, ஒரே கூடாரமாகும்படி அதை இணைத்துவிடவேண்டும் (யாத் 26:10,11).

ஆட்டுமயிர் மூடுதிரைகளால் போடப்பட்ட கூடாரத்திற்கு, மேலும் இரண்டு மூடிகள் போடப்படுகிறது. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாரத்திற்கு ஒரு மூடியும், அதின்மேல் தகசுத்தோலால் ஒரு மூடியும் போடப்படுகிறது (யாத் 26:14).

சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோல் என்பது கம்பளி தோலைக் குறிக்கலாம். தகசுதோல் என்பது பாதரட்சைகளை செய்வதற்கு பயன்படுத்தப்படும், பாடம்பண்ணப்பட்ட கடினமான தோலைக் குறிக்கலாம்.

“சித்திரத்தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்ந்த பாதரட்சைகளை உனக்குத் தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக்குக் கொடுத்தேன்” (எசே 16:10).

ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப்பகுதி கனமானதாகவும், மழுமழுப்பில்லாமல் சுரசுரப்பாகவும் இருக்கிறது. கூடாரத்தின் உட்பகுதியோ மழுமழுப்பாகவும் அழகாகவும் இருக்கிறது. கர்த்தர் இந்த ஆசரிப்புக்கூடாரத்தில் வாசம்பண்ணுகிறார். இந்தக் கூடாரத்தின் வெளிப்பகுதி பார்வைக்கு அழகாகயில்லாவிட்டாலும், அது கூடாரத்திற்கு அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

கர்த்தர் விசுவாசிகளாகிய நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார். நாமே கர்த்தருக்கு ஆலயமாகயிருக்கிறோம். கர்த்தர் நமக்குள்ளே வாசம்பண்ணுவதினால் நாம் கர்த்தருடைய கூடாரமாகயிருக்கிறோம். கர்த்தர் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறவரல்ல. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிறார்.

கர்த்தர் நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார். நாம் கூடாரத்தின் வெளிப்புறத்திலிருக்கிற ஆட்டுமயிர் மூடுதிரைகளைப்போலவும், சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலைப்போலவும், தகசுதோலைப்போலவும் வெளிப்பார்வைக்கு அழகில்லாமல் சுரசுரப்பாகயிருந்தாலும், கர்த்தர் வாசம்பண்ணுகிற அவருடைய கூடாரத்திற்கு பிரயோஜனமான ஊழியத்தை செய்யவேண்டும்.

விசுவாசிகளாகிய நம்மிடத்தில் அழகும், ஆடம்பரமும், ஐசுவரியமும் இல்லாவிட்டாலும், நாம் தகசு தோலைப்போல சாதாரணமானவர்களாகயிருந்தாலும், மெல்லிய நூல் மூடுதிரைகளைப்போல அழகாயிராமலும் ஆட்டுமயிர் மூடுதிரைகளைப்போல சாதாரண ஜனங்களாயிருந்தாலும், நாமும் கர்த்தருக்கு பிரயோஜனமுள்ளவர்களாகயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும்.

நம்முடைய உள்ளான மனுஷன் கர்த்தருக்குள் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படவேண்டும். நம்முடைய மெய்யான அழகு, நம்முடைய இருதயத்தில் மறைந்திருக்கிற நல்ல குணமேயாகும்.

“அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது” (1பேது 3:4).

கூடாரத்தின் மூடுதிரைகளில் மிச்சமான பாதி மூடுதிரை வாசஸ்தலத்தின் பின்புறத்தில் தொங்கவேண்டும் என்றும், கூடாரத்தினுடைய மூடுதிரைகளின் நீளத்திலே மீதியானதில், இந்தப்புறத்தில் ஒரு முழமும் அந்தப்புறத்தில் ஒரு முழமும் வாசஸ்தலத்தை மூடும்படி அதின் பக்கங்களிலே தொங்கவேண்டும் (யாத் 26:12,13) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்த ஸ்தலத்தை மூடும் இரண்டாவது மூடி ஆட்டு மயிரினால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. கூடாரத்திற்குள் தண்ணீர் ஒழுகாமல் இது பாதுகாக்கும். பிரயாணத்தின்போதும் பிய்ந்து போகாமல், நீண்டநாள் உழைக்கக்கூடியது.

பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருக்க வேண்டும். ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழநீளமும் அதாவது 45 அடி நீளமும், நாலு முழ அகலமும் அதாவது 6 அடி அகலமும் இருக்கவேண்டும். மெல்லிய பஞ்சுநூலினால் செய்யப்பட்ட மூடுதிரையைவிட இது அளவில் பெரியது. முதலாவது திரையை விட இரண்டாவது மூன்றடி நீளமும், 6அடி அகலமும் அதிகமானது. (யாத் 26:1-6)

ஆறாம் மூடுதிரை கூடாரத்திற்கு இரண்டாம் மூடுதிரையாக இருக்கும். இதைக் கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப் போடவேண்டும். மடித்துப்போடும் அளவிற்கு இது அளவில் பெரியதாக இருக்கும்.

மெல்லிய நூலினால் செய்யப்பட்ட பத்து திரைகளைப்போல (யாத் 26:1-6), இவற்றிலும் ஐம்பது காதுகள் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. பொன்னுக்குப் பதிலாக இந்தக் கொக்கிகளும், காதுகளும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கிறது.

மிச்சமான பாதி மூடுதிரை வாசஸ்தலத்தின் பின்புறத்தில் தொங்கவேண்டும். பதினொறாவது மூடுதிரையின் பாதி 3 அடி நீளமுடையதாக இருக்கும். முன்புறத்தில் தொங்குவதுபோல பின்புறத்திலும் 3 அடி நீளத்தில் மூடுதிரை தொங்கும் (யாத் 26:9,12). ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு புறத்திலும் மூடுதிரைகள் 18 அங்குலம் ஒன்றுக்குமேல் ஒன்று பொருந்தியிருக்கும்.

கூடாரத்திற்கு இரண்டு மூடிகள் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. மெல்லிய நூலினால் செய்யப்பட்டிருக்கும் மூடுதிரைக்கு மேல் (யாத் 26:1-6) இவை இரண்டும் மூடப்படும். (யாத் 26:7-14). முழுக் கூடாரத்தையும் மூடும் அளவிற்கு இந்த மூடுதிரைகள் அளவில் பெரியதாயிருக்கும். மூன்றாம் மூடுதிரை சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அதன்மேல் மூடப்படும் நான்காம் திரை தகசுத்தோலால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது.

குளிரிலும், மழையிலும், வெயிலிலும் தகசுத்தோல் கூடாரத்தைப் பாதுகாக்கிறது. தேவனுடைய வாசஸ்தலத்திற்கு நான்கு மூடிகள் ஏன் போடப்பட்டது என்று தெரியவில்லை. யூதேயாவில் அடிக்கடி ஏற்படும் பருவ மழையிலிருந்தும், கோடைக்காலத்து வெயிலிலிருந்தும் வாசஸ்தலத்தைப் பாதுகாப்பதற்காக அதற்கு நான்கு மூடிகள் போடப்பட்டிருக்கலாம்.

## பலகைகள்
## யாத் 26:15-30

**யாத் 26:15. வாசஸ்தலத்துக்கு நிமிர்ந்துநிற்கும் பலகைகளையும் சீத்திம் மரத்தால் உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 26:16. ஒவ்வொரு பலகையும் பத்து முழநீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கவேண்டும்.**

**யாத் 26:17. ஒவ்வொரு பலகைக்கும் ஒன்றோடொன்று ஒத்து இசைந்திருக்கும் இரண்டு கழுந்துகள் இருக்கவேண்டும்; வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் இப்படியே செய்வாயாக.**

**யாத் 26:18. வாசஸ்தலத்துக்காகச் செய்யப்படுகிற பலகைகளில் இருபது பலகை தெற்கே தென்திசைக்கு எதிராக நிற்கக்கடவது.**

**யாத் 26:19. அந்த இருபது பலகைகளின்கீழே வைக்கும் நாற்பது வெள்ளிப் பாதங்களை உண்டுபண்ணுவாயாக; ஒரு பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களும், மற்றப் பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 26:20. வாசஸ்தலத்தின் மறுபக்கமாகிய வடபுறத்திலும் இருபது பலகைகளையும்,**

**யாத் 26:21. அவைகளின்கீழ் நாற்பது வெள்ளிப்பாதங்களையும் உண்டுபண்ணுவாயாக; ஒரு பலகையின்கீழ் இரண்டு பாதங்களும், மற்றப் பலகையின்கீழ் இரண்டு பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 26:22. வாசஸ்தலத்தின் மேற்புறத்திற்கு ஆறுபலகைகளையும்,**

**யாத் 26:23. வாசஸ்தலத்தின் இருபக்கத்திலுமுள்ள மூலைகளுக்கு இரண்டு பலகைகளையும் உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 26:24. அவைகள் கீழே இசைக்கப்பட்டிருக்கவேண்டும்; மேலேயும் ஒரு வளையத்தினால் இசைக்கப்பட்டிருக்கவேண்டும்; இரண்டு மூலைகளுக்கும் அப்படியே இருக்கவேண்டும்; அவைகள் இரண்டு மூலைகளுக்காகும்.**

**யாத் 26:25. அந்தப்படி எட்டுப் பலகைகள் இருக்கவேண்டும்; ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டு இரண்டு பாதங்களாகப் பதினாறு வெள்ளிப் பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 26:26. சீத்திம் மரத்தால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,**

**யாத் 26:27. வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மேற்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணுவாயாக.**

**யாத் 26:28. நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதொடங்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தில் உருவப் பாய்ச்சப்பட்டிருக்கவேண்டும்.**

**யாத் 26:29. பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினால் பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன் தகட்டால் மூடக்கடவாய்.**

**யாத் 26:30. இவ்விதமாக மலையின்மேல் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே வாசஸ்தலத்தை நிறுத்துவாயாக.**

ஆசரிப்புக்கூடாரத்திற்கு தேவையான பலகைகளை செய்யவேண்டும். இவற்றை சீத்திம் மரத்தில் உண்டுபண்ணவேண்டும். ஒவ்வொரு பலகையும் பத்து முழநீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கவேண்டும் (யாத் 26:15,16).

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து" (ஏசா 54:2).

இந்தப் பலகைகளை உண்டுபண்ணுவது பற்றியும், அதன் அளவுகளைப்பற்றியும், அவை ஒன்றோடொன்று இசைக்கப்பட வேண்டிய விதம் பற்றியும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். "ஒவ்வொரு பலகைக்கும் ஒன்றோடொன்று ஒத்து இசைந்திருக்கும் இரண்டு கழுந்துகள் இருக்கவேண்டும்; வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் இப்படியே செய்வாயாக" (யாத் 26:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வாசஸ்தலத்துக்காகச் செய்யப்படுகிற பலகைகளில் இருபது பலகை தெற்கே தென்திசைக்கு எதிராக நிற்கக்கடவது என்றும், அந்த இருபது பலகைகளின்கீழே வைக்கும் நாற்பது வெள்ளிப் பாதங்களை உண்டுபண்ணுவாயாக என்றும், ஒரு பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களும், மற்றப் பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களும் இருக்கவேண்டும் என்றும் (யாத் 26:18,19) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"வாசஸ்தலத்தின் மறுபக்கமாகிய வடபுறத்திலும் இருபது பலகைகளையும், அவைகளின்கீழ் நாற்பது வெள்ளிப் பாதங்களையும் உண்டுபண்ணுவாயாக; ஒரு பலகையின்கீழ் இரண்டு பாதங்களும், மற்றப் பலகையின்கீழ் இரண்டு பாதங்களும் இருக்கவேண்டும். வாசஸ்தலத்தின் மேற்புறத்திற்கு ஆறுபலகைகளையும், வாசஸ்தலத்தின் இருபக்கத்திலுமுள்ள மூலைகளுக்கு இரண்டு பலகைகளையும் உண்டுபண்ணுவாயாக" (யாத் 26:20-23) என்றும்,

"பலகைகள் கீழேயும் மேலேயும் இசைக்கப்படவேண்டும். அவைகள் கீழே இசைக்கப்பட்டிருக்கவேண்டும்; மேலேயும் ஒரு வளையத்தினால் இசைக்கப்பட்டிருக்கவேண்டும்; இரண்டு மூலைகளுக்கும் அப்படியே இருக்கவேண்டும்; அவைகள் இரண்டு மூலைகளுக்காகும்" (யாத் 26:24) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒவ்வொரு பலகையின் கீழும் இரண்டு பாதங்கள் இருக்கவேண்டும். அந்தப்படி எட்டுப் பலகைகள் இருக்கவேண்டும்; ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டு இரண்டு பாதங்களாகப் பதினாறு வெள்ளிப் பாதங்களும் இருக்கவேண்டும் (யாத் 26:25).

ஒவ்வொரு பலகையும் 27 அங்குலம் அகலமும், 45 அடி நீளமும் உடையது. வாசஸ்தலத்தின் மேற்புறத்தில் ஆறு பலகைகள் இருக்கும். (யாத் 26:22) வாசஸ்தலத்தின் இருபக்கத்திலுமுள்ள மூலைகளுக்கு இரண்டு பலகைகள் இருக்கும்.

வாசஸ்தலத்தில் மொத்தம் எட்டு பலகைகள் இருக்கும். வாசஸ்தலத்தின் அகலம் 18 அடி (யாத் 26:22-25). நான்கு மூலைகளிலுமுள்ள பலகைகள் மேலும், கீழும் பொன் வளையங்களால் இணைக்கப்பட்டிருக்கும் (யாத் 26:23-24).

பலகைகளில் பண்ணவேண்டிய தாழ்ப்பாள்களைப்பற்றியும் கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். "சீத்திம் மரத்தால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மேற்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணுவாயாக" (யாத் 26:26,27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதொடங்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தில் உருவப் பாய்ச்சப்பட்டிருக்கவேண்டும் என்றும், பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினால் பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன் தகட்டால் மூடக்கடவாய் என்றும், கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 26:28,29).

மரப்பலகைகளை ஒன்றாக இணைப்பதற்குத் தாழ்ப்பாள்கள் பயன்படுத்தப்படுகிறது. பொன்வளையங்களால் பலகைகளும், தாழ்ப்பாள்களும் இணைக்கப்படுகிறது. நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதொடங்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தில் உருவப் பாய்ச்சப்பட்டிருக்கவேண்டும் (யாத் 26:26-28).

கர்த்தர் மோசேயை நோக்கி, "இவ்விதமாக மலையின்மேல் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே வாசஸ்தலத்தை நிறுத்துவாயாக" (யாத் 26:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## திரைச்சீலை
## யாத் 26:31-35

**யாத் 26:31. இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமான இவற்றால் ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணக்கடவாய்; அதிலே விசித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்படவேண்டும்.**

**யாத் 26:32. சீத்திம் மரத்தினால் செய்து, பொன்தகட்டால் மூடப்பட்ட நாலு தூண்களிலே அதைத் தொங்கவிடு; அந்தத் தூண்கள் நாலு வெள்ளிப் பாதங்கள்மேல் நிற்கவும், அவைகளின் கொக்கிகள் பொன்னினால் செய்யப்படவும் வேண்டும்.**

**யாத் 26:33. கொக்கிகளின்கீழே அந்தத் திரைச்சீலையைத் தொங்கவிட்டு, சாட்சிப்பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைக்கக்கடவாய்; அந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும்.**

**யாத் 26:34. மகா பரிசுத்த ஸ்தலத்திலே சாட்சிப்பெட்டியின்மீதில் கிருபாசனத்தை வைப்பாயாக;**

**யாத் 26:35. திரைக்குப் புறம்பாக மேஜையையும், மேஜைக்கு எதிரே வாசஸ்தலத்தின் தென்புறமாகக் குத்துவிளக்கையும் வைத்து, மேஜையை வடபுறமாக வைப்பாயாக.**

மோசே இரண்டு திரைச்சீலைகளை செய்யவேண்டும். ஒரு திரைச்சீலை மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவிலே தொங்கவிடப்படுகிறது. மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனைத்தவிர வேறு யாரும் பிரவேசிக்க கூடாது. அது மாத்திரமல்ல பரிசுத்த ஸ்தலத்திலோ அல்லது வெளிப்பிரகாரத்திலோ இருக்கிறவர்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே நோக்கிப் பார்க்கவும் கூடாது. அதற்காகவே மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருக்கிறது.

இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமான இவற்றால் ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணக்கடவாய்; அதிலே விசித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்படவேண்டும் என்றும்,

சீத்திம் மரத்தினால் செய்து, பொன்தகட்டால் மூடப்பட்ட நாலு தூண்களிலே அதைத் தொங்கவிடு; அந்தத் தூண்கள் நாலு வெள்ளிப் பாதங்கள்மேல் நிற்கவும், அவைகளின் கொக்கிகள் பொன்னினால் செய்யப்படவும் வேண்டும் என்றும்,

கொக்கிகளின்கீழே அந்தத் திரைச்சீலையைத் தொங்கவிட்டு, சாட்சிப்பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைக்கக்கடவாய் என்றும், (யாத் 26:31-33) கர்த்தர் சொல்லுகிறார்.

அந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும் (யாத் 26:33).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தேவனுடைய கிருபை தாராளமாய்க் கிடைக்கவில்லை. திரைச்சீலை மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும் ஜனங்களுக்கும் பிரிவை உண்டாக்கியதுபோல, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபைக்கு தூரமாய் விலகியிருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ கர்த்தருடைய கிருபாசனத்தண்டையிலே கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக்கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2கொரி 3:18).

"அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்" (எபி 9:8,9).

இயேசுகிறிஸ்துவின் மரணத்தின்போது, தேவாலயத்தில், மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே பிரிவை உண்டாக்கிய திரைச்சீலை இரண்டாய்க் கிழிந்தது.

"அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது" (மத் 27:51).

விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தின் வல்லமையினால், கர்த்தருடைய மகாபரிசுத்த ஸ்தலத்திலே தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். ஆனாலும் நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக மிகுந்த பயபக்தியோடும், மனத்தாழ்மையோடும், பணிவோடும் நிற்கவேண்டும்.

மகாபரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தலத்திற்கு வெளியே திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருக்கிறது. இது மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்குகிறது.

திரைச்சீலைக்கு புறம்பாக உள்ள பரிசுத்த ஸ்தலத்தில் மேஜையும், மேஜைக்கு எதிரே வாசஸ்தலத்தின் தென்புறமாகக் குத்துவிளக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. மேஜை வடபுறமாக வைக்கப்பட்டிருக்கிறது *(யாத் 26:35).*

## தொங்குதிரை
## யாத் 26:36,37

**யாத் 26:36. இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமாகிய இவற்றால் சித்திரத் தையல் வேலையான ஒரு தொங்குதிரையும் கூடாரத்தின் வாசலுக்கு உண்டாக்கி,**

**யாத் 26:37. அந்தத் தொங்குதிரைக்குச் சீத்திம் மரத்தால் ஐந்து தூண்களைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளுக்குப் பொன் கொக்கிகளை உண்டாக்கி, அவைகளுக்கு ஐந்து வெண்கலப் பாதங்களை வார்ப்பிக்கக்கடவாய்.**

மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருப்பதுபோல ஆசரிப்பு கூடாரத்தின் வாசலில் தொங்குதிரை தொங்கவிடப்பட்டிருக்கிறது.

முதலாவது திரைச்சீலை வழியாக ஆசாரியர்கள் ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஸ்தலத்திலே ஊழியம் செய்வதற்கு பிரவேசிப்பார்கள். ஆனாலும் பொதுஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது.

"இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்" *(எபி 9:6).*

கூடாரத்தின் வாசலுக்கு உண்டாக்கப்பட்டிருக்கும் தொங்குதிரையோ, கூடாரத்தின் பாதுகாப்புக்காக செய்யப்பட்டிருக்கிறது. ஆசாரிப்புக்கூடாரத்திற்குள் திருடர்கள் நுழைந்துவிடக்கூடாது. ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள விலையுயர்ந்த பணிமுட்டுக்களை யாரும் திருடிச்சென்றுவிடக்கூடாது. ஆசரிப்புக்கூடாரம் மூடப்படாமல் திறந்தபடியே இருப்பதினால், கள்ளர்கள் கூடாரத்திற்குள் எளிதாக பிரவேசித்து கூடாரத்திலுள்ள விலையுயர்ந்த பொருட்களை எளிதாக திருடிச்சென்றுவிடக்கூடிய ஆபத்துள்ளது.

ஆசரிப்புக்கூடாரத்தின் பாதுகாப்புக்காக தொங்குதிரையை செய்யுமாறு கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமாகிய இவற்றால் சித்திரத் தையல் வேலையான ஒரு தொங்குதிரையும் கூடாரத்தின் வாசலுக்கு உண்டாக்கி, அந்தத் தொங்குதிரைக்குச் சீத்திம் மரத்தால் ஐந்து தூண்களைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளுக்குப் பொன் கொக்கிகளை உண்டாக்கி, அவைகளுக்கு ஐந்து வெண்கலப் பாதங்களை வார்ப்பிக்கக்கடவாய்" *(யாத் 25:36,37)* என்று சொல்லுகிறார்.

வாசஸ்தலத்தின் முதலாவது மூடியாகிய பத்து திரைகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருட்களே இங்கும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. *(யாத் 25:4; யாத் 26:1).* உள்திரை *(யாத் 26:31),* வெளித்திரை *(யாத் 26:36),* பிரகாரத்தின் வாசல்திரை *(யாத் 27:16).*

வெளித்திரையும், வாசல்திரையும் சித்திரத்தையல் வேலையால் செய்யப்பட்டிருக்கிறது *(யாத் 27:16).* உள்திரை விசித்திர வேலையாகச் செய்யப்பட்டிருக்கிறது. *(யாத் 26:1,31)* யாத் *35:35* ஆவது வசனத்தில் இது விசித்திர நெசவுவேலை என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்தின் நுழை வாசலில் கதவுகள் இல்லை. அதற்கு பூட்டுகளோ அல்லது தாழ்ப்பாள்களோ போடப்படவில்லை. ஆசரிப்புக்கூடாரத்தில் ஏராளமான ஐசுவரியங்கள் அங்கங்கே இருக்கிறது. அவை எல்லோருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாய்த் தெரிகிறது.

ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு பூட்டுகள் இல்லாததினால், ஆசரிப்புக்கூடாரத்தை காவல் காக்கிற லேவியரும், அதிலே ஊழியம் செய்கிறவர்களும் மிகவும் எச்சரிப்பாயிருக்க வேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த பணிமுட்டுக்களை கவனமாய்ப் பாதுகாக்கவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தைப்போலவே, இந்தப் பூமியிலுள்ள கர்த்தருடைய சபையும் பாதுகாப்பு இல்லாமல் பலவீனமாயிருக்கிறது. சத்துரு சபைக்குள்ளே எளிதாக பிரவேசித்து, சபையை சேதப்படுத்துவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளது. மனுஷருடைய முயற்சியினால் சபையை பாதுகாக்க முடியாது. கர்த்தரே தம்முடைய சபையை பாதுகாத்து பராமரிக்கிறார்.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தைப் பாதுகாப்பதற்கு சாதாரண தொங்குதிரை போதுமானதாயிருக்கிறது. மெய்யான பாதுகாப்பு கர்த்தர் மூலமாக வருகிறது. இரும்பு கதவுகளினாலும், இரும்பு தாழ்ப்பாள்களினாலும் கொடுக்க முடியாத பாதுகாப்பை கர்த்தர் தம்முடைய கிருபையினால் கொடுக்கிறார்.

## 27 அதிகாரம்

சர்வாங்க தகனபலிகளை செலுத்துவதற்கு வெண்கல பலிபீடத்தை செய்வது சம்பந்தமான பிரமாணத்தை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார் (யாத் 27:1-8). ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பிரகாரத்தைப்பற்றிய பிரமாணமும் தொங்குதிரைகளைப்பற்றிய பிரமாணமும் (யாத் 27:9-19). எரிகிற குத்துவிளக்கு சம்பந்தமான பிரமாணம் (யாத் 27:20,21).

### வெண்கல பலிபீடம்
### யாத் 27:1-8

**யாத் 27:1. ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமுமாக சீத்திம் மரத்தால் பலி பீடத்தையும் உண்டுபண்ணுவாயாக; அது சதுரமும் மூன்று முழ உயரமுமாயிருப்பதாக.**

**யாத் 27:2. அதின் நாலு மூலைகளிலும் நாலு கொம்புகளை உண்டாக்குவாயாக; அதின் கொம்புகள் அதனோடே ஏகமாய் இருக்கவேண்டும்; அதை வெண்கலத் தகட்டால் மூடவேண்டும்.**

**யாத் 27:3. அதின் சாம்பலை எடுக்கத்தக்க சட்டிகளையும் கரண்டிகளையும் கிண்ணிகளையும் முள்துறடுகளையும் நெருப்புச்சட்டிகளையும் உண்டாக்குவாயாக; அதின் பணிமுட்டுகளையெல்லாம் வெண்கலத்தால் பண்ணுவாயாக.**

**யாத் 27:4. வலைப்பின்னல்போன்ற ஒரு வெண்கலச் சல்லடையைப் பண்ணி, அந்தச் சல்லடையின் நாலு மூலைகளிலும் நாலு வெண்கல வளையங்களை உண்டாக்கி,**

**யாத் 27:5. அந்தச் சல்லடை பலி பீடத்தின் பாதியுயரத்தில் இருக்கும்படி அதைத் தாழப் பலிபீடத்தின் சுற்றடைப்புக்குக் கீழாக வைப்பாயாக.**

**யாத் 27:6. பலிபீடத்துக்குச் சீத்திம் மரத்தால் தண்டுகளையும் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்டால் மூடுவாயாக.**

**யாத் 27:7. பலிபீடத்தைச் சுமக்கத்தக்கதாக அந்தத் தண்டுகள் அதின் இரண்டு பக்கங்களிலும் வளையங்களிலே பாய்ச்சப்பட்டிருக்கவேண்டும்.**

**யாத் 27:8. அதை உள் வெளிவிட்டுப் பலகைகளினாலே பண்ணவேண்டும்; மலையில் உனக்குக் காண்பிக்கப்பட்டபடியே அதைப் பண்ணக்கடவர்கள்.**

ஆசரிப்புக்கூடாரத்தில், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தம்முடைய பிரசன்னம் விளங்கவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்து, அங்கே கர்த்தரை ஆராதிப்பார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்திலே, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான உடன்படிக்கைப்பெட்டி இருக்கிறது. ஆனால் இந்த மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே ஆசாரியர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். இஸ்ரவேல் புத்திரரில் பொதுஜனங்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க அனுமதியில்லை.

ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்னால் ஒரு பிரகாரத்தை உண்டுபண்ணவேண்டும் என்பதும், அந்தப் பிரகாரத்தில் ஒரு வெண்கல பலிபீடத்தை செய்து வைக்கவேண்டும் என்பதும், அந்தப் பலிபீடத்தில் ஜனங்கள் தமக்கு பலிகளை செலுத்த வேண்டும் என்பதும் கர்த்தருடைய திட்டமாயிருக்கிறது. கர்த்தர் வெண்கல பலிபீடத்தைப்பற்றிய தம்முடைய பிரமாணத்தை மோசேக்கு சொல்லுகிறார்.

வெண்கல பலிபீடம் சதுரமாயிருக்க வேண்டும். அதில் நாலுமூலைகளிலும் நாலுகொம்புகள் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தக் கொம்புகள் பலிபீடத்தின் அலங்காரத்திற்காகவும், பலிசெலுத்துவதற்கு பிரயோஜனமாகவும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. பலிபீடத்திலுள்ள கொம்புகளிலே, பலியிடுவதற்காக கொண்டுவரப்படும் மிருகஜீவன்களை, கயிற்றினால் கட்டி வைத்திருப்பார்கள். குற்றம் செய்தவர்கள் அடைக்கலப்பட்டணத்திற்கு ஓடிவந்து அடைக்கலம் பெறுவதற்கு அடையாளமாக, பலிபீடத்தின் கொம்புகளில், பலிசெலுத்தப்படும் மிருகங்கள் கட்டி வைக்கப்படுகிறது.

சீத்திம் மரத்தால் பலிபீடத்தை உண்டுபண்ணவேண்டும் என்றும், அதை வெண்கல தகட்டால் மூடவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமுமாக சீத்திம் மரத்தால் பலிபீடத்தையும் உண்டுபண்ணுவாயாக; அது சதுரமும் மூன்று முழ உயரமுமாயிருப்பதாக. அதின் நாலு மூலைகளிலும் நாலு கொம்புகளை உண்டாக்குவாயாக; அதின் கொம்புகள் அதனோடே ஏகமாய் இருக்கவேண்டும்; அதை வெண்கலத் தகட்டால் மூடவேண்டும்" *(யாத் 27:1,2)* என்று சொல்லுகிறார்.

வெண்கல பலிபீடத்திலே, பலியாக செலுத்தப்படும் மிருகஜீவன்கள் தகனிக்கப்படுகிறது. அதின் சாம்பலை எடுக்கத்தக்க சட்டிகளையும் கரண்டிகளையும் கிண்ணிகளையும் முள்துறடுகளையும் நெருப்புச்சட்டிகளையும் உண்டாக்கவேண்டும் என்றும்; அதின் பணிமுட்டுகளையெல்லாம் வெண்கலத்தால் பண்ணவேண்டும் என்றும் *(யாத் 27:3)* கர்த்தர் சொல்லுகிறார்.

சர்வாங்க தகனபலிகளை செலுத்துவதற்கு பிரயோஜனமாயிருக்கும் எல்லா பொருட்களையும் செய்யவேண்டும் என்றும் அவற்றை வெண்கலத்தால் செய்யவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "வலைப்பின்னல்போன்ற ஒரு வெண்கலச் சல்லடையைப் பண்ணி, அந்தச் சல்லடையின் நாலு மூலைகளிலும் நாலு வெண்கல வளையங்களை உண்டாக்கி, அந்தச் சல்லடை பலிபீடத்தின் பாதியுயரத்தில் இருக்கும்படி அதைத் தாழப் பலிபீடத்தின் சுற்றடைப்புக்குக் கீழாக வைப்பாயாக" *(யாத் 27:4,5)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தையும் பேர்த்தெடுத்துக்கொண்டு, அதை சுமந்து கொண்டு போவார்கள். பலிபீடத்தையும் சுமக்கத்தக்கதாக உண்டுபண்ணவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பலிபீடத்துக்குச் சீத்திம் மரத்தால் தண்டுகளையும் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்டால் மூடவேண்டும் என்றும், பலிபீடத்தைச் சுமக்கத்தக்கதாக அந்தத் தண்டுகள் அதின் இரண்டு பக்கங்களிலும் வளையங்களிலே பாய்ச்சப்பட்டிருக்கவேண்டும் என்றும், அதை உள் வெளிவிட்டுப் பலகைகளினாலே பண்ணவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் *(யாத் 27:6,7)*.

கர்த்தர் வெண்கல பலிபீடத்தின் மாதிரியை மோசேக்கு காண்பித்திருக்கிறார். அந்தப் பலிபீடத்தை கர்த்தர் மோசேக்கு மலையில் காண்பித்தபடியே, இஸ்ரவேல் புத்திரர் அதை பண்ணவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார் *(யாத் 27:8)*.

வெண்கல பலிபீடம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் நம்முடைய பாவங்களுக்கு நிவாரணம் செய்வதற்காக கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவிகள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தருடைய நீதியும், நியாயத்தீர்ப்பும் பாவிகளை பின்தொடரும்போது, அவர்கள் பலிபீடத்திலுள்ள கொம்புகளை பிடித்துக்கொண்டு, கர்த்தரிடத்தில் அடைக்கலம் பெறவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துவார்.

கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு வெண்கல பலிபீடத்தின் மாதிரியைக் காண்பிக்கிறார். வெண்கல பலிபீடம் பண்ணுவது சம்பந்தமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. சீத்திம் மரத்தால் பலிபீடத்தை உண்டு பண்ணுவாயாக *(யாத் 27:1)*.
2. ஐந்து முழ நீளம் - 7.5 அடி
3. ஐந்து முழ அகலம் - 7.5. அடி
4. பலிபீடம் சதுரமாக இருக்க வேண்டும்.
5. மூன்று முழ உயரம் - 4.5 அடி
6. பலிபீடத்தின் நாலு மூலைகளிலும் நாலு கொம்புகளை உண்டாக்குவாயாக *(யாத் 27:2)*.
7. பலிபீடத்தை வெண்கலத் தகட்டால் மூடுவாயாக.
8. பலிபீடத்தின் சாம்பலை எடுக்கத்தக்க சட்டிகளையும் கரண்டிகளையும் உண்டாக்குவாயாக. *(யாத் 27:3)*.
9. இரத்தத்திற்கும், தண்ணீருக்கும் கிண்ணிகளை உண்டாக்குவாயாக.
10. மாம்சத்திற்கு முள்துறடுகளை உண்டாக்குவாயாக.
11. நெருப்புக்கு நெருப்புச்சட்டிகளை உண்டாக்குவாயாக.
12. பலிபீடத்தின் பணிமுட்டுகளையெல்லாம் வெண்கலத்தால் பண்ணுவாயாக. *(யாத் 27:4)*.
13. வலைப்பின்னல்போன்ற ஒரு வெண்கலச் சல்லடையைப் பண்ணுவாயாக.
14. சல்லடையின் நாலு மூலைகளிலும் நாலு வெண்கல வளையங்களை உண்டாக்குவாயாக.
15. சல்லடை பலிபீடத்தின் பாதியுயரத்தில் இருக்கும்படி அதைத் தாழப் பலிபீடத்தின் சுற்றடைப்புக்குக் கீழாக வைப்பாயாக. *(யாத் 27:5)*.
16. பலிபீடத்துக்குச் சீத்திம் மரத்தால் தண்டுகளைப் பண்ணுவாயாக. *(யாத் 27:6)*.
17. தண்டுகளை வெண்கலத்தகட்டால் மூடுவாயாக.
18. பலிபீடத்தைச் சுமக்கத்தக்கதாக அந்தத் தண்டுகளை அதின் இரண்டு பக்கங்களிலும் வளையங்களிலே பாய்ச்சுவாயாக.*(யாத் 27:7)*.
19. பலகைகளை உள் வெளிவிட்டுப் பலகைகளினாலே பண்ணுவாயாக. *(யாத் 27:8)*.
20. மலையில் காண்பிக்கப்பட்டபடியே பலிபீடத்தைப் பண்ணுவாயாக. *(யாத் 27:8; யாத் 25:40; யாத் 26:30; எபி 8:5)*.

சீத்திம் மரத்தால் பலிபீடத்தை உண்டுபண்ணவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது வெண்கல பலிபீடம் என்று அழைக்கப்படுகிறது. *(யாத் 38:30; யாத் 39:39)*. இது தகனத்தைக் கொழுத்தும் பலிபீடம்என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் எல்லாப் பலிகளும் அக்கினியினால் இங்குத் தகிக்கப்படுகிறது.

இது தேவனுடைய பலிபீடம் *(சங் 43:4)* என்றும், கர்த்தருடைய பலிபீடம் *(மல் 2:13)* என்றும் அழைக்கப்படுகிறது. ஆசாரியர்கள் பலிபீடத்தைச் சுற்றிலும் ஆசாரிய ஊழியம் செய்யும்போது அவர்கள் விசேஷித்த வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ள வேண்டும். *(யாத் 28:43)* ஆசாரியர்கள் மதுபானம் பண்ணி வெறித்திராமல், தெளிவுடன் இருக்க வேண்டும் *(லேவி 10:1-10)* அவர்கள் எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். *(யாத் 30:18-21)*.

பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாகும். *(யாத் 29:37)*. பலிபீடத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பாக அதைச் சுத்தி செய்து, அபிஷேகம் பண்ண வேண்டும். *(யாத் 29:36-44; யாத் 30:26-28; யாத் 40:10; எண் 7)*. பலிபீடத்தின் மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கவேண்டும். அது ஒருபொழுதும் அவிந்துபோகலாகாது *(லேவி 6:13)*.

பலிபீடத்தின் நாலு மூலைகளிலும் நாலுகொம்புகள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இவை பலிபீடத்தின்மேல் நான்கு மூலைகளிலும் மேல்நோக்கி நீட்டிக் கொண்டிருக்கும் பகுதி. இது காளையின் கொம்புபோன்ற வடிவமுடையது. பலிகளைக் கொம்புகளில் கட்டி வைத்திருப்பார்கள். *(சங் 118:27)* பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொள்வது என்பது தேவனிடமிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்கு அடையாளம் *(யாத் 21:14; 1இராஜா 1:50).*

பலிபீடத்தில் பலிகளைச் செலுத்துவதற்கு முள்துறடுகள் பயன்படுத்தப்படுகிறது *(1சாமு 2:13).* நெருப்புச் சட்டிகளுக்குப் பல பயன்பாடுகள் உள்ளன. பலிபீடத்தைச் சுத்தி செய்யும்போது பலிபீடத்தின் மீது எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் அக்கினி நெருப்புச்சட்டிகள்மீது எரியும். நெருப்புச்சட்டிகளுக்குச் சாம்பல் பாத்திரங்கள் *(யாத் 25:38; யாத் 37:23)* தூபகலசங்கள் *(லேவி 10:1; லேவி 16:12; எண் 4:14; எண் 16:6)* என்றும் பெயர்கள் உள்ளன.

பலிபீடத்தின் சுற்றடைப்பு என்பது பலிபீடத்தைச் சுற்றிலுமுள்ள பகுதி. இது பலிபீடத்தின் மேற்பகுதிக்கும், கீழ்ப்பகுதிக்கும் நடுவிலுள்ளது. பலிபீடத்தில் ஆசாரியர்கள் ஆசாரிய ஊழியம் செய்யும்போது, பலிபீடத்தின் சுற்றடைப்பு வழியாக நடந்து செல்வார்கள் *(லேவி 9:22)* பலிபீடத்தில் படிகள் கட்டப்படுவது தடைபண்ணப்பட்டிருக்கிறது. *(யாத் 20:26)* பலிபீடத்தின் சுற்றடைப்புப் பகுதியிலிருந்து தரைக்கு இறங்குவதற்குச் சாய்வாக மண்ணினால் ஏதாவது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உள் வெளி என்பது பலிபீடத்தின் பலகைகளுக்குள்ளே இருக்கும் துவாரத்தை குறிக்கிறது. பலிபீடத்தைத் தூக்கிச் செல்லும்போது அதனுள்ளே துவாரம் இருப்பதினால் அது சுமப்பதற்கு இலகுவாக இருக்கும். *(யாத் 38:7).*

## பிரகாரம்
## யாத் 27:9-19

**யாத் 27:9. வாசஸ்தலத்துக்குப் பிராகாரத்தையும் உண்டுபண்ணுவாயாக; தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்.**

**யாத் 27:10. அவைகளுக்கு வெண்கலத்தினாலே இருபது தூண்களும், இருபது பாதங்களும் இருக்கவேண்டும்; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும்.**

**யாத் 27:11. அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கும் நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்கு இருபது தூண்களும், அவைகளுக்கு இருபது பாதங்களும் வெண்கலமாயிருக்கவேண்டும்; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும்.**

**யாத் 27:12. பிரகாரத்தின் மேற்பக்கமான அகலத்திற்கு ஐம்பது முழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்குப் பத்துத் தூண்களும், அவைகளுக்குப் பத்துப் பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 27:13. சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்தின் பிராகாரம் ஐம்பதுமுழ அகலமாயிருக்கவேண்டும்.**

**யாத் 27:14. அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான தொங்குதிரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 27:15. மறுபுறத்துக்குப் பதினைந்து முழ நீளமான தொங்குதிரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 27:16. பிராகாரத்தின் வாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல் வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்குதிரையும் அதற்கு நாலு தூண்களும், அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும்.**

**யாத் 27:17. சுற்றுப் பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண்கட்டப்பட்டிருக்கவேண்டும்; அவைகளின் கொக்கிகள் வெள்ளியினாலும் அவைகளின் பாதங்கள் வெண்கலத்தினாலும் செய்யப்பட்டிருக்க வேண்டும்.**

**யாத் 27:18. பிராகாரத்தின் நீளம் நூறுமுழமும், இருபுறத்து அகலம் ஐம்பது ஐம்பது முழமும், உயரம் ஐந்து முழமுமாயிருப்பதாக; அதின் தொங்கல்கள் திரித்த மெல்லிய பஞ்சுநூலினால் செய்யப்பட்டு, அதின் தூண்களின் பாதங்கள் வெண்கலமாயிருக்கவேண்டும்.**

**யாத் 27:19. வாசஸ்தலத்துக்கடுத்த சகல பணிவிடைக்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும், அதின் எல்லா முளைகளும், பிராகாரத்தின் எல்லா முளைகளும் வெண்கலமாயிருக்கவேண்டும்.**

ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக பிராகாரத்தை உண்டுபண்ணவேண்டும் என்றும், அந்தப் பிராகாரத்தின் எல்லைகள் தொங்குதிரைகளினால் மூடி மறைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "வாசஸ்தலத்துக்குப் பிராகாரத்தையும் உண்டுபண்ணுவாயாக; தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்" என்றும், "அவைகளுக்கு வெண்கலத்தினாலே இருபது தூண்களும், இருபது பாதங்களும் இருக்கவேண்டும்; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும்" என்றும் *(யாத் 27:9,10)* சொல்லுகிறார்.

கர்த்தர் தொங்குதிரைகளின் அளவுகளையும் மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கும் நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்கு இருபது தூண்களும், அவைகளுக்கு இருபது பாதங்களும் வெண்கலமாயிருக்கவேண்டும்; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும்" என்றும்,

"பிரகாரத்தின் மேற்பக்கமான அகலத்திற்கு ஐம்பது முழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்குப் பத்துத் தூண்களும், அவைகளுக்குப் பத்துப் பாதங்களும் இருக்கவேண்டும் என்றும், சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்தின் பிராகாரம் ஐம்பதுமுழ அகலமாயிருக்கவேண்டும்" *(யாத் 27:11-13)* என்றும் சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தப்படும் மெல்லிய பஞ்சுநூலே, தொங்குதிரைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பிரகாரத்தின் நீளம் சுமார் ஐம்பது கெஜமாகும். அதன் அகலம் சுமார் இருபத்தைந்து கெஜமாகும்.

பிரகாரங்களில் ஆங்காங்கே தூண்கள் நிறுத்தப்படுகிறது. தூண்கள் வெண்கலத்தினால் செய்யப்படுகிறது. அந்தத் தூண்களின் கொக்கிகளும், பூண்களும் வெள்ளியினால் செய்யப்படுகிறது.

பிரகாரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் எத்தனை தொங்குதிரைகள் தொங்கவிடப்படவேண்டும் என்றும், அந்த தொங்குதிரைகளின் அளவுகள் எவ்வளவு இருக்கவேண்டும் என்றும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான தொங்குதிரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும் என்றும், மறுபுறத்துக்குப் பதினைந்து முழ நீளமான தொங்குதிரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும் *(யாத் 27:14,15)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

வெளிப்பிரகாரம் உண்டுபண்ணுவது சம்பந்தமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. வாசஸ்தலத்துக்குப் பிராகாரத்தை உண்டு பண்ணுவாயாக (யாத் 27:9).

2. தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட தொங்கு திரைகள் இருக்கவேண்டும்.

3. தொங்குதிரைகளின் நீளம் 150 அடி.

4. தொங்குதிரைகளின் அகலம் 75 அடி (யாத் 27:12)

5. வெளிப்பிராகாரத்திற்கு வெண்கலத்தினாலே இருபது தூண்களும், இருபது பாதங்களும் இருக்கவேண்டும். (யாத் 27:10).

6. தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்பட வேண்டும்.

7. வடபக்கத்தின் நீளத்திற்கு நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்க வேண்டும். (யாத் 27:11).

8. தொங்குதிரைகளுக்கு இருபது தூண்களும், அவைகளுக்கு இருபது வெண்கலப் பாதங்களும் பண்ண வேண்டும்.

9. தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும்.

10. பிரகாரத்தின் மேற்பக்கமான அகலத்திற்கு ஐம்பது முழ நீளமான (75 அடி) தொங்குதிரைகள் இருக்க வேண்டும்;

11. பிராகாரத்தின் கடைசியில் பத்துத் தூண்களும், அவைகளுக்குப் பத்துப் பாதங்களும் இருக்கவேண்டும். (யாத் 27:12).

12. சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்தின் பிராகாரம் ஐம்பதுமுழ (75 அடி) அகலமாயிருக்கவேண்டும். (யாத் 27:13).

13. ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான (22.5அடி) தொங்குதிரைகள் இருக்க வேண்டும். (யாத் 27:14).

14. தொங்குதிரைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும்.

15. மறுபுறத்துக்குப் பதினைந்து முழ நீளமான (22.5 அடி) தொங்குதிரைகள் இருக்க வேண்டும். (யாத் 27:15).

16. தொங்குதிரைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும்.

வாசஸ்தலத்தின் பிராகாரம் 75 X 150அடி அளவுள்ளது. இதில் 60 தூண்களும், 60 பாதங்களும் உள்ளன. தூண்களைத் தாங்கி நிறுத்துவதற்காக 120 கொக்கிகள் உள்ளன. வெண்கலத் தூண்களுக்கு வெள்ளிப்பூண்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. (யாத் 38:17) பிராகாரத்தின் வாயில் அளவு 30 அடி. தொங்கல்களின் உயரம் 7.5 அடி. (யாத் 27:18; யாத் 38:18). தூண்களின் ஒவ்வொரு புறமும் குமிழ்களைத் தாங்கும் தகடுகள் வெண்கலத்தால் ஆனவை (யாத் 38:19).

தூண்களுக்கும், வெண்கலப் பாதங்களுக்கும் இடையே தூண்களின் கொக்கிகளும், அவைகளின் பூண்களும் உள்ளன. இவை வெள்ளியினால் செய்யப்பட்டவை. இவை தொங்குதிரைகளைத் தாங்கி பிடிக்கும். (யாத் 27:10-11).

நூறுமுழ நீளமான தொங்குதிரைகளை உண்டாக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு முழம் என்பது 18 அங்குலம். நூறு முழம் என்பது 150 அடியாகும். ஐம்பது முழ நீளம் என்பது" 75 அடியாகும். பதினைந்து முழம் என்பது 22.5 அடியாகும்.

பிரகாரத்தின் வாசலில் போடப்பட்டிருக்கிற தொங்குதிரையானது, மற்ற தொங்குதிரைகளைவிட மிகவும் மென்மையானதாயிருக்கிறது. பிராகாரத்தின் வாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்குதிரையும் அதற்கு நாலு தூண்களும், அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும் (யாத் 27:16) என்பது கர்த்தருடைய பிரமாணமாகும்.

பிரகாரத்தின் தூண்களையும் அவைகளின் கொக்கிகளையும், பாதங்களையும் எவ்வாறு செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். சுற்றுப் பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண்கட்டப்பட்டிருக்க வேண்டும்; அவைகளின் கொக்கிகள் வெள்ளியினாலும் அவைகளின் பாதங்கள் வெண்கலத்தினாலும் செய்யப்பட்டிருக்க வேண்டும் (யாத் 27:17).

பிரகாரத்தின் வாசல்களும், தூண்களும் செய்யப்படவேண்டிய விதத்தைப்பற்றியும் கர்த்தர் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. பிராகாரத்தின் வாசல் 30 அடி அகலம். (யாத் 27:16).
2. பிராகாரத்தின் வாசலுக்கு இளநீல நூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல் வேலையாய்ச் செய்யப்பட்ட தொங்குதிரையை உண்டுபண்ணவேண்டும்.
3. பிராகாரத்தின் வாசலுக்கு நாலு தூண்களை உண்டுபண்ண வேண்டும்.
4. பிராகாரத்தின் தூண்களுக்கு நாலு பாதங்கள் இருக்கவேண்டும் (யாத் 27:16,17).
5. சுற்றுப் பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண்கட்டப்பட்டிருக்க வேண்டும் (யாத் 27:17).
6. அவைகளின் கொக்கிகள் வெள்ளியினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
7. அவைகளின் பாதங்கள் வெண்கலத்தினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

தொங்குதிரை சித்திரத் தையல்வேலையினால் செய்யப்பட்டிருக்கிறது. பிராகாரத்தின் வாசலுடைய தொங்குதிரை இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலையாய்ச் செய்யப்பட்டிருக்க வேண்டும். இது வாசஸ்தலத்தின் மூடுதிரையைப் போன்று செய்யப்பட்டிருக்கும். (யாத் 26:36).

பிரகாரத்தில் மொத்தம் 69 தூண்கள் உள்ளன. அவை பிரகாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கர்த்தர் சொன்ன பிரகாரமாக வைக்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:

1. பிராகாரத்தின் தென்பகுதியில் 20 தூண்கள் (யாத் 27:9-10)
2. பிராகாரத்தின் வடக்கு பகுதியில் 20 தூண்கள் (யாத் 27:11)
3. பிராகாரத்தின் மேற்குபகுதியில் 10 தூண்கள் (யாத் 27:12)
4. பிராகாரத்தின் கிழக்கு அல்லது வாயில் பகுதியில் 10 தூண்கள் (யாத் 27:14-16)
5. உள் மூடுதிரையில் 4 தூண்கள் (யாத் 26:32)
6. வெளி மூடுதிரையில் 5 தூண்கள் (யாத் 26:37)

வெளிப்பிரகாரத்திலுள்ள 60 தூண்களும் அளவில் ஒன்றுபோல் இருக்கும். மூடுதிரையிலுள்ள 9 தூண்கள் அளவில் பெரியவை. ஆசரிப்புக்கூடாரத்தின் மேல்பகுதி உயரமாக இருக்க வேண்டும் என்பதற்காக 9 தூண்களும் மற்ற 60 தூண்களைவிட உயரமாக இருக்கலாம்.

பிரகாரத்தின் நீளமும், அகலமும், உயரமும் எத்தனை முழமாயிருக்கவேண்டும் என்றும், தூண்களின் பாதங்களும், பணிமுட்டுகளும், முளைகளும் எப்படிப்பட்ட உலோகத்தினால் செய்யப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பிராகாரத்தின் நீளம் நூறுமுழமும், இருபுறத்து அகலம் ஐம்பது ஐம்பது முழமும், உயரம் ஐந்து முழமுமாயிருப்பதாக; அதின் தொங்கல்கள் திரித்த மெல்லிய பஞ்சுநூலினால் செய்யப்பட்டு, அதின் தூண்களின் பாதங்கள் வெண்கலமாயிருக்கவேண்டும் (யாத் 27:18).

வாசஸ்தலத்துக்கடுத்த சகல பணிவிடைக்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும், அதின் எல்லா முளைகளும், பிராகாரத்தின் எல்லா முளைகளும் வெண்கலமாயிருக்கவேண்டும் (யாத் 27:19).

பிராகாரத்தின் நீளம் 150 அடி, அகலம் 75 அடி, உயரம் 7.5 அடி ஆகும்

"வாசஸ்தலத்துக்கடுத்த சகல பணிவிடைக்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும்" என்பது வெண்கலப் பலிபீடத்தின் பணிமுட்டுகளைக் குறிக்கும்.

உடன்படிக்கைப் பெட்டியில் பயன்படுத்தப்படும் பொருட்கள், தூபபீடம், சமுகத்தப்ப மேஜை, அதன் பணிமுட்டுகள், குத்துவிளக்கு, அதன் பாத்திரங்கள் எல்லாம் பொன்னால் செய்யப்பட்டவை.

வளையங்கள், தாழ்ப்பாள்கள், பலகைகள், மூடுதிரையின் தூண்கள் ஆகியவை பசும்பொன்னால் மூடப்பட்டிருக்கின்றன (யாத் 26:28)

பீடங்கள், அதன் கொக்கிகள் ஆகியவை வெண்கலத்தால் செய்யப்படாமல், வெள்ளியால் செய்யப்பட்டிருக்கின்றன (யாத் 26:19-25; யாத் 27:11).

வெளிப்பிராகாரத்தின் பீடங்கள், தொங்குதிரைகளின் தூண்கள், அதன் பணிமுட்டுகள் எல்லாம் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கின்றன (யாத் 27:2-6,10-11,17-19; யாத் 38:8).

பிராகாரத்தின் முளைகள் வெண்கலத்தால் ஆனவை. இவை பொன், வெள்ளியைவிட பூமியில் நன்றாகப் பதியக்கூடியவை.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசரிப்புக்கூடாரத்தில், பிரகாரத்தின் எல்லைகளெல்லாம் தொங்குதிரைகளினால் மூடப்பட்டிருக்கிறது. பிரகாரத்திற்குள்ளே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வந்தால், அங்கே அவர்கள் எல்லோருக்கும் இடம் இருக்காது. ஆனாலும் அவர்கள் பிரகாரத்திற்குள்ளே வந்தால்தான் கர்த்தரை ஆராதிக்க முடியும். அவர்கள் பிரகாரத்திற்குள்ளே பிரவேசிக்க காத்திருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் பாக்கியவான்கள். இப்போது கர்த்தருடைய பிரகாரத்தின் எல்லை மூடப்படவில்லை. கர்த்தருடைய பிரசன்னம் எல்லா இடத்திலும் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் அவரை ஆராதிப்பதற்காக எங்கே கூடிவருகிறார்களோ அங்கே கர்த்தர் இருக்கிறார். நாம் எங்கே இருந்தாலும், நாம் இருக்கும் இடத்திலிருந்து, நம்மால் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ண முடியும்.

## எரிகிற குத்துவிளக்கு யாத் 27:20,21

**யாத் 27:20. குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக.**

**யாத் 27:21. ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சி சந்நிதிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்த விளக்கை எரியவைக்கக்கடவர்கள்; இது இஸ்ரவேல் புத்திரருக்கு தலைமுறை தலைமுறையாக நித்திய கட்டளையாயிருக்கக்கடவது.**

ஆசரிப்புக்கூடாரத்தில் குத்துவிளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும். விளக்கு எரிந்தால்தான் வெளிச்சம் கிடைக்கும். எரியாத குத்துவிளக்கு பிரயோஜனமில்லாதது. அது தண்ணீரில்லாத துரவுக்கும், மழையில்லாத மேகத்திற்கும் சமமானது.

"குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவஎண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக" (யாத் 27:20) என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

குத்துவிளக்கை எரியவைப்பதற்கு இஸ்ரவேல் ஜனங்களே ஒலிவ எண்ணெயை கொண்டு வரவேண்டும். அந்த எண்ணெயும் இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயாயிருக்கவேண்டும். ஆசரியர்கள் விளக்கை எரியவைக்கவேண்டும்.

குத்துவிளக்கு இரவும், பகலும் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். (லேவி 24:2,4) மாலையிலிருந்து காலைவரை மட்டுமே விளக்கு எரிய வேண்டுமென்று யாத் 27:21, லேவி 24:3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளதாக பொருள் கொள்ளக்கூடாது. விளக்கிலுள்ள எண்ணெயைக் காலையிலும், மாலையிலும் சரிசெய்வதை இந்த வசனங்கள் குறிப்பிடுகிறது.

"ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சி சந்நிதிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்த விளக்கை எரியவைக்கக்கடவர்கள்; இது இஸ்ரவேல் புத்திரருக்கு தலைமுறை தலைமுறையாக நித்திய கட்டளையாயிருக்கக்கடவது" (யாத் 27:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தில் விளக்கை எரியவைக்கப்பண்ணுவது ஆசாரியருடைய ஊழியம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வேதவாக்கியங்களை ஜனங்களுக்கு பிரசங்கம்பண்ணவேண்டும். வேதத்தின் இரகசியங்களை அவர்களுக்கு போதிக்கவேண்டும். பரிசுத்த வேதாகமம் விளக்குக்கு ஒப்பாகயிருக்கிறது. அதன் வெளிச்சம் தெரியவதற்காக, ஊழியக்காரர்கள், வேதவாக்கியங்களை ஜனங்களுக்கு போதிக்கவேண்டும். கர்த்தருடைய சபை, இந்தப் பூமியிலே அவருடைய ஆசரிப்புக்கூடாரமாயிருக்கிறது.

இந்தப் பகுதியோடு ஆசரிப்புக் கூடாரத்தை உண்டுபண்ணும் முதலாவது பகுதி நிறைவு பெறுகிறது. (யாத் 25:1-27:21) ஆசரிப்புக் கூடாரம் உண்டுபண்ணுவது சம்பந்தமான கூடுதல் செய்திகள் யாத் 31:1-11 ஆகிய வசனங்களிலும், மறுபடியும் யாத் 35:4-38:31 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்தை நிறுவுவது பற்றிய செய்திகள் யாத் 40:1-38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

## 28 அதிகாரம்

பரிசுத்த ஸ்தலத்திலே ஊழியம் செய்கிற ஆசாரியர்களைப்பற்றி இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்து வரும் அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. தமக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்களை கர்த்தர் நியமனம் பண்ணுகிறார் *(யாத் 28:1)*. ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே, பரிசுத்த ஸ்தலத்திலே ஊழியம் செய்கிறவர்கள். அவர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்தின் மகிமையிலே, கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்களுக்கு மகிமையும் அலங்காரமுமாயிருக்கும் பொருட்டு பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணவேண்டுமென்று கர்த்தர் சித்தங்கொள்கிறார் *(யாத் 28:2-5)*.

பிரதான ஆசாரியனுக்கு விசேஷித்த வஸ்திரங்கள் செய்யப்படுகிறது. ஏபோத்து *(யாத் 28:6-14)*. நியாயவிதி மார்ப்பதக்கம் *(யாத் 28:15-29)*. ஊரீம் தும்மீம் *(யாத் 28:30)*. ஏபோத்தின் கீழ் அங்கி *(யாத் 28:31-35)*. பாகை *(யாத் 28:36-39)*.

பிரதான ஆசாரியனுக்கு கீழ் பணிபுரியும் மற்ற ஆசாரியர்களுக்கு வஸ்திரங்கள் *(யாத் 28:40-43)*. இவையெல்லாம் வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

### ஆசாரிய ஊழியம்
### யாத் 28:1-5

**யாத் 28:1. உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரராகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக்கொள்வாயாக.**

**யாத் 28:2. உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமையும் அலங்காரமுமாய் இருக்கும் பொருட்டு, பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 28:3. ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யத்தக்கதாக அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி, அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கும்பொருட்டு, நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக.**

**யாத் 28:4. அவர்கள் உண்டாக்கவேண்டிய வஸ்திரங்களாவன; மார்ப்பதக்கமும், ஏபோத்தும், அங்கியும், விசித்திரமான உள்சட்டையும், பாகையும், இடைக்கச்சையுமே. உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணவேண்டும்.**

**யாத் 28:5. அவர்கள் பொன்னும் இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் மெல்லிய பஞ்சுநூலும் சேகரிப்பார்களாக.**

கர்த்தர் ஆரோனையும் அவருடைய நான்கு குமாரர்களையும் தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு நியமிக்கிறார். மோசே இதுவரையிலும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்து வந்தார். ஆகையினால் "கர்த்தருடைய ஆசாரியரில் மோசேயும், ஆரோனும்" *(சங் 99:6)* என்று மோசேயைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார்" *(சங் 99:6)*.

மோசே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக விசாரித்தார். அவர் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லும் தீர்க்கதரிசியாக ஊழியம் செய்தார். மேலும், மோசே இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்து அவர்களுக்கு அதிபதியாகவும் ஆளுகை செய்தார்.

கர்த்தர் இப்போது மோசேயின் சகோதரனாகிய ஆரோனை தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு நியமிக்கிறார். மோசே ஆரோனுடைய இளைய சகோதரர். ஆரோன் இதுவரையிலும் தன் இளைய சகோதரனாகிய மோசேக்கு தீர்க்கதரிசியாக ஊழியம் செய்து வந்தார். ஆரோனுடைய மனதிலே பெருமை எதுவுமில்லை. அவர் மிகுந்த மனத்தாழ்மையோடு மோசேக்கு தீர்க்கதரிசியாக இருந்தார்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: பார், உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்; உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான்" (யாத் 7:1) என்று சொன்னார்.

ஆரோன் இதுவரையிலும் மோசேக்கு தீர்க்கதரிசியாகயிருந்தார். கர்த்தர் ஆரோனை உயர்த்துகிறார். ஆரோன் இனிமேல் கர்த்தருக்கு பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்வார்.

கர்த்தருடைய பலிபீடத்திலே ஊழியம் செய்கிறவர்கள், தங்களை முற்றிலுமாக கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். எல்லோராலும் கர்த்தருடைய ஆசாரிய ஊழியத்தை செய்ய முடியாது. கர்த்தர் யாரை தமக்கு ஆசாரிய ஊழியம் செய்வதற்கு தெரிந்தெடுக்கிறாரோ, அவர்கள் மாத்திரமே கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும்.

உலகப்பிரகாரமான வேலைகளை யார் வேண்டுமானாலும் செய்யலாம். கர்த்தருடைய ஆசாரிய ஊழியத்தை எல்லோராலும் செய்ய முடியாது. கர்த்தர் யாரை நியமிக்கிறாரோ அவர்கள் மாத்திரமே, கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும். கர்த்தர் தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு ஆரோனைத் தெரிந்தெடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஆசாரியரின் குடும்பத்தில், தமக்கு சித்தமான ஒருவரை, தமக்கு ஆசாரிய ஊழியம் செய்ய கர்த்தர் தெரிந்தெடுக்கிறார். ஆரோன் நான்கு குமாரருக்கு தகப்பனாராயிருக்கிறார். ஆரோனுடைய சந்ததியில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசாரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமாகயிருக்கிறது.

கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, ஆரோனும், அவருடைய சந்ததியில் வருகிறவர்களும் கர்த்தருக்கு ஆசாரியர்களாயிருக்கிறார்கள். ஆரோனுடைய சந்ததியாரின் ஆசாரிய ஊழியத்தைப்பற்றி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரராகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமர் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக்கொள்வாயாக" (யாத் 28:1) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தமக்கு ஆசாரிய ஊழியம் செய்கிற ஆரோனுக்கு விசேஷித்த வஸ்திரங்களை உண்டுபண்ணுமாறு சொல்லுகிறார். இவை ஆரோனுக்கு மகிமையும் அலங்காரமுமாயிருக்கும். ஆரோன் பரிசுத்தமான ஊழியம் செய்கிறார். ஆரோனுக்கு நியமிக்கப்படும் வஸ்திரங்களும் பரிசுத்த வஸ்திரங்களாயிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமையும் அலங்காரமுமாய் இருக்கும் பொருட்டு, பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக. ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யத்தக்கதாக அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கும்பொருட்டு, நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக" (யாத் 28:2,3) என்று சொல்லுகிறார்.

ஆசாரியர்களின் வஸ்திரங்கள் துக்க வஸ்திரங்களைப் போன்று இருக்கக்கூடாது. அவை தேவனுடைய மகிமையின் அடையாளம். ஆகையினால் அவை பல வர்ணங்களில் இருக்கலாம். ஆசாரியர்கள் தேவனுக்குப் பிரதிநிதிகளாக இருப்பதினால், அவர்கள் தேவனுடையமகிமையையும், அலங்காரத்தையும் தங்கள் வஸ்திரங்களின் மூலமாகவும் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும்.

ஆசாரியருடைய பரிசுத்த வஸ்திரங்களில் மார்ப்பதக்கம், ஏபோத்து, அங்கி, விசித்திரமான உள்சட்டை, பாகை, இடைக்கச்சை ஆகியவை இடம் பெறுகிறது. இவற்றை உண்டாக்கவேண்டிய விதம் பற்றியும் கர்த்தர் மோசேக்கு எடுத்து சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய ஞானத்தின் ஆவியினால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரும் ஆசாரியருக்கு வஸ்திரங்களை உண்டாக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு, ஒரு சிலரை ஞானத்தின் ஆவியால் நிரப்புகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், மனுஷர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் என்பதற்கும், அவர்கள் ஆவிக்குரிய வரங்களில் சிலவற்றைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதற்கும் இந்த வாக்கியம் ஒரு சான்றாகும்.

தேவனுடைய வாசஸ்தலத்தின் ஒருசில பகுதிகளை உண்டு பண்ணுவதற்கும், ஆசாரிய வஸ்திரங்களையும், ஆசரிப்புக்கூடாரத்தின் மற்ற திரைகளையும் செய்வதற்கும், தேவனை ஆராதிப்பதற்குத் தேவையான பணிமுட்டுகளைச் செய்வதற்கும் தேவன் ஒருசில மனுஷரைத் தெரிந்தெடுத்து அவர்களை ஞானத்தின் ஆவியினால் நிரப்பி, அந்த வேலைக்காக அவர்களைத் தகுதிப்படுத்திப் பயன்படுத்தினார்.

ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரு சில விசேஷித்த வேலைகளை செய்வதற்கு கர்த்தர் அவர்களை தம்முடைய ஞானத்தின் ஆவியினால் நிரப்புகிறார். அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. நெசவுவேலை செய்கிறவர்கள்
2. உலோக உருக்குவேலை செய்கிறவர்கள்
3. தட்டார்
4. பொற்கொல்லர்
5. சித்திரத்தையல்வேலைக்காரர்
6. தச்சர்
7. மரக்கொத்துவேலை செய்கிறவர்
8. திட்டமிடுகிறவர்
9. திரைச்சீலை செய்கிறவர்
10. வெட்டு வேலைசெய்கிறவர்

கர்த்தர் மோசேயை நோக்கி, "அவர்கள் உண்டாக்கவேண்டிய வஸ்திரங்களாவன; மார்ப்பதக்கமும், ஏபோத்தும், அங்கியும், விசித்திரமான உள்சட்டையும், பாகையும், இடைக்கச்சையுமே. உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணவேண்டும். அவர்கள் பொன்னும் இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் மெல்லிய பஞ்சுநூலும் சேகரிப்பார்களாக" (யாத் 28:4,5) என்று சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசாரியருடைய பரிசுத்த வஸ்திரங்கள் விலையேறப்பெற்ற நூலாலும், பொன்னாலும் செய்யப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருக்கு ஆசாரியர்களாயிருக்கிறோம். கர்த்தர் நமக்கு பொன்வஸ்திரங்களை கட்டளையிடவில்லை. அதற்கு பதிலாக கர்த்தர் நமக்கு இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தி, நீதியின் சால்வையை தரிக்கிறார்.

"கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (ஏசா 61:10).

"உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக" (சங் 132:9). "அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்; அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்" (சங் 132:16)

## ஏபோத்து
## யாத் 28:6-14

**யாத் 28:6. ஏபோத்தைப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் விசித்திரவேலையாய்ச் செய்யக்கடவர்கள்.**

**யாத் 28:7. அது ஒன்றாக இணைக்கப்படும் பொருட்டு, இரண்டு தோள்த்துண்டுகளின் மேலும் அதின் இரண்டுமுனைகளும் சேர்க்கப்படவேண்டும்.**

**யாத் 28:8. அந்த ஏபோத்தின்மேல் இருக்க வேண்டிய விசித்திரமான கச்சை அந்த வேலைக்கு ஒப்பாகவே, பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணப்பட்டு, அதனோடே ஏகமாயிருக்கவேண்டும்.**

**யாத் 28:9. பின்னும் நீ இரண்டு கோமேதகக்கற்களை எடுத்து, இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை அவைகளில் வெட்டுவாயாக.**

**யாத் 28:10. அவர்கள் பிறந்த வரிசையின்படியே, அவர்களுடைய நாமங்களில் ஆறு நாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறு நாமங்கள் மறு கல்லிலும் இருக்க வேண்டும்.**

**யாத் 28:11. இரத்தினங்களில் முத்திரை வெட்டுகிறவர்கள் செய்யும் வேலைக்கு ஒப்பாக அந்த இரண்டு கற்களிலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி, அவைகளைப் பொன் குவளைகளில் பதிப்பாயாக.**

**யாத் 28:12. ஆரோன் கர்த்தருக்கு முன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக்குறியாகச் சுமந்துவர, அந்த இரண்டு கற்களையும் ஏபோத்து தோள்களின்மேல் அவர்களை நினைக்கும்படியான கற்களாக வைக்கக்கடவாய்.**

**யாத் 28:13. பொன்னினால் வளையங்களைப் பண்ணி,**

**யாத் 28:14. சரியான அளவுக்குப் பின்னல்வேலையான இரண்டு சங்கிலிகளையும் பசும் பொன்னினால் உண்டாக்கி, அந்தச் சங்கிலிகளை அந்த வளையங்களில் பூட்டுவாயாக.**

பிரதான ஆசாரியனுடைய வெளிவஸ்திரம் ஏபோத்து என்று அழைக்கப்படுகிறது. பிரதான ஆசாரியனுக்கு கீழே ஊழியம் செய்கிற, மற்ற ஆசாரியர்கள் சணல் நூல் ஏபோத்தை தரித்திருப்பார்கள்.

"அப்பொழுது ராஜா தோவேக்கை நோக்கி: நீ போய் ஆசாரியர்களைக் கொன்றுபோடு என்றான்; ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்மேல் விழுந்து, சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கும் எண்பத்தைந்துபேரை அன்றையதினம் கொன்றான்" (1சாமு 22:18).

சாமுவேல் சிறுபிள்ளையாண்டானாயிருந்தபோதே சணல்நூல் ஏபோத்தை தரித்து கர்த்தருக்கு முன்பாக பணிவிடை செய்தார். "சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான்" (1சாமு 2:18).

தாவீது ராஜா கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடனம்பண்ணியபோது சணல்நூல் ஏபோத்தை தரித்திருந்தார். "தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினார்" (2சாமு 6:14).

பிரதான ஆசாரியனுக்கு மாத்திரம் ஏபோத்து பொன்னினால் செய்யப்படுகிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "ஏபோத்தைப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் விசித்திரவேலையாய்ச் செய்யக்கடவர்கள். அது ஒன்றாக இணைக்கப்படும் பொருட்டு, இரண்டு தோள்த்துண்டுகளின்மேலும் அதின் இரண்டு முனைகளும் சேர்க்கப்படவேண்டும்" என்றும், (யாத் 28:6,7).

"அந்த ஏபோத்தின்மேல் இருக்க வேண்டிய விசித்திரமான கச்சை அந்த வேலைக்கு ஒப்பாகவே, பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணப்பட்டு, அதனோடே ஏகமாயிருக்கவேண்டும்" (யாத் 28:8) என்றும் சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியனுக்கு இரண்டு விசேஷித்த கற்களை செய்து, அவற்றை ஏபோத்து தோள்களின்மேல் வைக்கவேண்டும். இந்தக் கற்களில் இஸ்ரவேல் புத்திரருடைய பன்னிரண்டு கோத்திரத்தாரின் நாமங்களும் வெட்டி எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இதுபற்றி மோசேக்கு சொல்லும்போது, "பின்னும் நீ இரண்டு கோமேதகக்கற்களை எடுத்து, இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை அவைகளில் வெட்டுவாயாக" என்றும்,

"அவர்கள் பிறந்த வரிசையின்படியே, அவர்களுடைய நாமங்களில் ஆறு நாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறு நாமங்கள் மறு கல்லிலும் இருக்க வேண்டும்" என்றும்,

"இரத்தினங்களில் முத்திரை வெட்டுகிறவர்கள் செய்யும் வேலைக்கு ஒப்பாக அந்த இரண்டு கற்களிலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி, அவைகளைப் பொன் குவளைகளில் பதிப்பாயாக" என்றும் (யாத் 28:9-11) சொல்லுகிறார்.

ஆரோன் கர்த்தருக்கு முன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக்குறியாகச் சுமந்துவரவேண்டும். அதற்காக அந்த இரண்டு கற்களையும் ஏபோத்து தோள்களின்மேல் அவர்களை நினைக்கும்படியான கற்களாக வைக்கவேண்டும் (யாத் 28:12).

பொன்னினால் வளையங்களைப் பண்ணி, சரியான அளவுக்குப் பின்னல்வேலையான இரண்டு சங்கிலிகளையும் பசும் பொன்னினால் உண்டாக்கி, அந்தச் சங்கிலிகளை அந்த வளையங்களில் பூட்டவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 28:13,14).

புறஜாதியார் விக்கிரகாராதனையில் ஏபோத்தைப் பயன்படுத்தினார்கள். மெய்யான தேவனாகிய கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கிறவர்கள் ஏபோத்தைப் பயன்படுத்தினார்கள். விக்கிரகாராதனைக்காரர்கள் இதைத் தங்களுக்கும் மாய்மாலமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். (நியா 8:27; நியா 17:5; நியா 18:14-20).

ஏபோத்தை செய்வதற்கு பொன்னும், இளநீலநூலும் இரத்தாம்பர நூலும் சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும் பயன்படுத்தப்படுகிறது. பொன்னை இழைத்து, மெல்லிய நூல்போலாக்கி, பொன்னால் இரத்தாம்பரம், சிவப்பு, நீலம், வெண்மை ஆகிய வண்ணங்களில் பொன் நூலை உண்டுபண்ணுகிறார்கள். ஏபோத்தில் வைக்கப்படும் மாதுளம்பழங்களை இழைக்கப்பட்ட இந்த நூல்களால் செய்கிறார்கள் (யாத் 28:5-6,8,33-35,39; யாத் 39:22-26).

ஏபோத்து பிரதான ஆசாரியருக்குரிய விசேஷித்த வஸ்திரம். இதில் நியாய விதி மார்ப்பதக்கம் இணைக்கப்பட்டிருக்கிறது (யாத் 28:15,25-28)

கைகளுக்குக் கீழே, இடுப்புக்கு மேலே விசித்திரமான கச்சையால் இரண்டு துண்டுகள் இருக்கும். (யாத் 28:8). இரண்டு தோள்துண்டுகளில் இரண்டு கோமேதகக்கற்கள் இருக்கும். அவற்றில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்களின் பெயர்களும் முத்திரை வெட்டாக வெட்டப்பட்டிருக்கும். (யாத் 28:9-11). இந்தக் கற்கள் பொன்குவளைகளில் வைக்கப்பட்டு, அவை தோள்துண்டுகளில் பொருத்தப்பட்டிருக்கும் (யாத் 28:11).

ஏபோத்தின்மீது மார்ப்பதக்கம் வைக்கப்பட்டிருக்கும். மார்ப்பதக்கத்தில் பன்னிரண்டு கற்கள் இருக்கும். அந்தக் கற்களில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் பெயர்கள் முத்திரை வெட்டாக வெட்டப்பட்டிருக்கும். ஏபோத்தின் தோள்துண்டுகளில் இது பசும்பொன் சங்கிலிகளால் இணைக்கப்பட்டிருக்கும் (யாத் 28:14,25).

எபிரெய மொழியில் "விசித்திரவேலையாய்ச் செய்தல்" என்பதற்கு பல எபிரெய வார்த்தைகள் உள்ளன. அவை "காஸாப்" "மக்அசாபேத்" "கேசேப்" என்பனவாகும்.

விசித்திர கச்சை ஏபோத்தை முன்னும் பின்னுமாகத் தாங்கிக் கொள்ளும். ஏபோத்து இடுப்புக்கு மேலும், மார்ப்பதக்கத்துக்குக் கீழும் இருக்கும்.

ஆரோன் கர்த்தருக்கு முன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை ஞாபகக்குறியாகச் சுமந்துவர வேண்டும். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக சமஸ்த இஸ்ரவேலரின் எல்லாப் பொறுப்புக்களையும் ஆரோன் தன் தோள்களின்மீது சுமந்து கொண்டிருக்கிறார். தன்னுடைய ஆசாரிய கடமையில் ஆரோன் தவறிவிட்டால், இஸ்ரவேல் தேசம் முழுவதும் அழிந்துபோகும். இஸ்ரவேலருடைய எல்லாப் பாவங்களுக்காகவும் ஆரோன் மட்டுமே வருஷத்திற்கு ஒருமுறை பாவநிவர்த்தி செய்கிறவர் (லேவி 16).

ஏபோத்தில் பொன்னினால் வளையங்கள் பண்ணி வைக்கப்படுகிறது. இரத்தினக்கற்களை நிறைய பதிப்பதற்காகப் பொன் வளையங்கள் செய்யப்படுகிறது (யாத் 28:17).

## நியாயவிதி மார்ப்பதக்கம் யாத் 28:15-29

**யாத் 28:15. நியாயவிதி மார்ப்பதக்கத்தையும் விசித்திர வேலையாய்ச் செய்வாயாக; அதை ஏபோத்து வேலைக்கு ஒப்பாகப் பொன்னினாலும் இளநீல நூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்வாயாக.**

**யாத் 28:16. அது சதுரமும் இரட்டையும், ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாய் இருக்கவேண்டும்.**

**யாத் 28:17. அதிலே நாலு பத்தி இரத்தினக்கற்களை நிறையப் பதிப்பாயாக; முதலாம் பத்தி பத்மராகமும் புஷ்பராகமும் மாணிக்கமும்,**

**யாத் 28:18. இரண்டாம் பத்தி மரகதமும் இந்திரநீலமும் வச்சிரமும்,**

**யாத் 28:19. மூன்றாம் பத்தி கெம்பும் வைடூரியமும் சுகந்தியும்,**

**யாத் 28:20. நாலாம் பத்தி படிகப்பச்சையும் கோமேதகமும் யஸ்பியுமாய் இருப்பதாக; இவைகள் அந்தப் பத்தியில் பொன்னினாலே பதித்திருக்க வேண்டும்.**

**யாத் 28:21. இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்கள் அவைகளில் வெட்டப்பட்டவைகளுமாய் இருக்க வேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரைவெட்டாய் வெட்டியிருக்க வேண்டும்.**

**யாத் 28:22. மார்ப்பதக்கத்திற்கு அதின் பக்கங்களிலே பின்னல்வேலையான பசும்பொன் சங்கிலிகளையும் பண்ணி,**

**யாத் 28:23. அந்த மார்ப்பதக்கத்திற்கு இரண்டு பொன் வளையங்களையும் பண்ணி, அந்த இரண்டு வளையங்களையும் மார்ப்பதக்கத்தின் இரண்டு பக்கங்களிலே வைத்து,**

**யாத் 28:24. பொன்னினால் செய்த அந்த இரண்டு பின்னல் வேலையான சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் பக்கங்களில் இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டி,**

**யாத் 28:25. அவ்விரண்டு பின்னல் வேலையான சங்கிலிகளின் இரண்டு நுனிகளை ஏபோத்துத் தோள்த்துண்டின்மேல் அதின் முன்புறத்தில் இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டுவாயாக.**

**யாத் 28:26. நீ இரண்டு பொன்வளையங்களைப் பண்ணி, அவைகளை ஏபோத்தின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தினுடைய மற்ற இரண்டு பக்கங்களிலும் அதினுடைய ஓரத்திற்குள்ளாக வைத்து,**

**யாத் 28:27. வேறே இரண்டு பொன்வளையங்களைப் பண்ணி, அவைகளை ஏபோத்தின் முன்புறத்து இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,**

**யாத் 28:28. மார்ப்பதக்கம் ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், அது ஏபோத்திலிருந்து நீங்காதபடிக்கும், அதை அதின் வளையங்களால் ஏபோத்து வளையங்களோடே இளநீலநாடாவினால் கட்ட வேண்டும்.**

**யாத் 28:29. ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது, இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைத் தன் இருதயத்தின்மேலிருக்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்திலே கர்த்தருடைய சந்நிதானத்தில் ஞாபகக்குறியாக எப்பொழுதும் தரித்துக்கொள்ளக்கடவன்.**

பிரதான ஆசாரியருக்கு நியாயவிதி மார்ப்பதக்கம் மிகவும் விசேஷமானது. "நியாயவிதி மார்ப்பதக்கத்தையும் விசித்திரவேலையாய்ச் செய்வாயாக; அதை ஏபோத்து வேலைக்கு ஒப்பாகப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்வாயாக" (யாத் 28:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அது சதுரமும் இரட்டையும், ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாய் இருக்கவேண்டும். அதிலே நாலு பத்தி இரத்தினக்கற்களை நிறையப் பதிக்க வேண்டும். முதலாம் பத்தி பத்மராகமும் பஷ்பராகமும் மாணிக்கமும், இரண்டாம் பத்தி மரகதமும் இந்திரநீலமும் வச்சிரமும், மூன்றாம் பத்தி கெம்பும் வைடூரியமும் சுகந்தியும், நாலாம் பத்தி படிகப்பச்சையும் கோமேதகமும் யஸ்பியுமாய் இருக்கவேண்டும். இவைகள் அந்தப் பத்தியில் பொன்னினாலே பதித்திருக்க வேண்டும் (யாத் 28:16-20).

இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்கள் அவைகளில் வெட்டப்பட்டவைகளுமாய் இருக்க வேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரைவெட்டாய் வெட்டியிருக்க வேண்டும் (யாத் 28:21).

பிரதான ஆசாரியனுடைய வஸ்திரத்திலே பொன்வளையங்கள் செய்யப்பட்டிருக்கிறது. மார்ப்பதக்கத்திற்கு அதின் பக்கங்களிலே பின்னல்வேலையான பசும்பொன் சங்கிலிகளையும் பண்ணவேண்டும். அந்த மார்ப்பதக்கத்திற்கு இரண்டு பொன் வளையங்களையும் பண்ணி, அந்த இரண்டு வளையங்களையும் மார்ப்பதக்கத்தின் இரண்டு பக்கங்களிலே வைக்கவேண்டும் (யாத் 28:22,23).

பொன்னினால் செய்த அந்த இரண்டு பின்னல் வேலையான சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் பக்கங்களில் இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டி, அவ்விரண்டு பின்னல் வேலையான சங்கிலிகளின் இரண்டு நுனிகளை ஏபோத்துத் தோள்த்துண்டின்மேல் அதின் முன்புறத்தில் இருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டவேண்டும் (யாத் 28:24,25).

இரண்டு பொன்வளையங்களைப் பண்ணி, அவைகளை ஏபோத்தின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தினுடைய மற்ற இரண்டு பக்கங்களிலும் அதினுடைய ஓரத்திற்குள்ளாக வைக்கவேண்டும் (யாத் 28:26).

வேறே இரண்டு பொன்வளையங்களைப் பண்ணி, அவைகளை ஏபோத்தின் முன்புறத்து இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாகவும் வைக்கவேண்டும் (யாத் 28:27).

மார்ப்பதக்கம் ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், அது ஏபோத்திலிருந்து நீங்காதபடிக்கும், அதை அதின் வளையங்களால் ஏபோத்து வளையங்களோடே இளநீலநாடாவினால் கட்ட வேண்டும் (யாத் 28:28).

ஏபோத்து ஊழியத்திற்கு அடையாளம். நியாயவிதி மார்ப்பதக்கம் மகிமைக்கு அடையாளம். இவை இரண்டையும் வெவ்வேறாக பிரிக்கக்கூடாது. நியாயவிதி மார்ப்பதக்கத்தில் பன்னிரண்டு கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கல்லும் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கு அடையாளம்.

ஆரோன் நியாயவிதி மார்ப்பதக்கத்தை தன்னுடைய ஆசாரிய வஸ்திரத்தில் அணிந்துகொண்டு, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நிற்கவேண்டும். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு அடையாளமான கற்கள் ஆரோனுடைய நியாயவிதி மார்ப்பதக்கத்தில் பதிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் கிடைக்கவேண்டும் என்று ஆரோன் கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது, இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைத் தன் இருதயத்தின்மேலிருக்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்திலே கர்த்தருடைய சந்நிதானத்தில் ஞாபகக்குறியாக எப்பொழுதும் தரித்துக்கொள்ளக்கடவன்" (யாத் 28:29) என்று சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்திலே, பிரதான ஆசாரியனைத் தவிர இஸ்ரவேல் ஜனங்களில் வேறு யாரும் பிரவேசிக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக மிகவும் அருகாமையில் கிட்டிச் சேரக்கூடாது. ஆனாலும் பிரதான ஆசாரியனுடைய வஸ்திரத்தில் பதிக்கப்பட்டிருக்கிற நியாயவிதி மார்ப்பதக்கமானது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு அடையாளமாயிருக்கிறது. இதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், இந்தப் பூமியிலிருந்து கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஜெபத்தின் மூலமாக நாம் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கிறோம். அது மாத்திரமல்ல. விசுவாசிகளாகிய நாம் விசுவாசத்தினாலே பரலோகத்திலே கிறிஸ்துவோடுகூட உட்கார்ந்திருக்கவும் செய்கிறோம்.

"கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடே கூட உட்காரவும் செய்தார்" (எபே 2:6,7).

பிரதான ஆசாரியனுடைய நியாயவிதி மார்ப்பதக்கத்திலே பன்னிரண்டு கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே விலையேறப்பெற்ற கற்கள். கர்த்தருடைய பார்வையில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் விலையேறப்பெற்றவர்கள் என்பதற்கு அடையாளமாக, மார்ப்பதக்கத்திலே விலையேறப்பெற்ற கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ கர்த்தருடைய பார்வையிலே விலையேறப் பெற்றவர்களாயிருக்கிறோம். "நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்" (ஏசா 43:4).

"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல் 3:1).

பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை தன்னுடைய தோள்பட்டையிலும், தன்னுடைய இருதயத்தின் மேலிருக்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்திலும் கர்த்தருடைய சந்நிதானத்திலே தரித்துகொண்டிருக்கிறார்.

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக, நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள். தோள்பட்டை என்பது வல்லமைக்கு அடையாளம். இருதயம் அன்புக்கு அடையாளம். பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை தன்னுடைய தோள்பட்டையிலும், இருதயத்திலும் தரித்திருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நம்முடைய நாமங்களை, தம்முடைய தோள்பட்டையிலும், இருதயத்திலும் தரித்திருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையும், அன்பும் நமக்கு கிடைத்திருக்கிறது என்பதற்கு இது அடையாளம். கிறிஸ்துவானவர் தம்முடைய சர்வவல்லமையினாலே, தம்முடைய தோளிலே நம்மை சுமந்து செல்கிறார். அவர் நம்மை தம்முடைய இருதயத்திலும் சுமந்து செல்கிறார்.

"மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசா 40:11).

ஏபோத்து, கச்சை ஆகியவற்றைப் போல் நியாயவிதி மார்ப்பதக்கமும், பொன், இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்புநூல், மெல்லிய பஞ்சுநூல் ஆகியவற்றால் செய்யப்பட்டிருக்கிறது. (யாத் 28:5-6,8,15). ஆரோன் இஸ்ரவேல் ஜனத்தாருடைய பிரதிநிதியாகத் தேவனுடைய சமுகத்தில் வந்து நிற்கிறார். ஆகையினால் இது நியாயவிதி மார்ப்பதக்கம் என்று அழைக்கப்படுகிறது. (யாத் 28:29-30).

நியாயவிதி மார்ப்பதக்கம் சதுரமும் இரட்டையும், ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாய் இருக்க வேண்டும். அதில் பதிக்கப்பட்டிருக்கும் இரத்தினக்கற்களில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் பெயர்களும் முத்திரையாக வெட்டப்பட்டிருக்கும். (யாத் 28:16-21). மார்ப்பதக்கம் ஏபோத்தோடு இணைக்கப் பட்டிருக்கும். (யாத் 28:22-29).

மார்ப்பதக்கம் இரட்டையாக இருக்கும். ஊரீம், தும்மீம் ஆகியவற்றை வைப்பதற்கு வசதியாக இவை இரட்டையாக உள்ளது. (யாத் 28:16,30). ஒருசாண் அளவு என்பது சுமார் 9 அங்குலங்கள்.

நியாயவிதி மார்ப்பதக்கத்தில், பன்னிரண்டு கற்கள் பதிக்கப்படுகிறது. ஒவ்வொரு பத்தியிலும் மூன்று கற்கள் வீதமாக, நான்கு பத்திகளில் அவை பதிக்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:

முதலாம் பத்தி (யாத் 28:17)

1. பத்மராகமம் **(Sardius)** - ரூபன் (ஆதி 29:32)
2. புஷ்பராகம் **(Topaz)** - சிமியோன் (ஆதி 29:33).
3. மாணிக்கம் **(Carbuncle)** - லேவி (ஆதி 29:34).

இரண்டாம் பத்தி (யாத் 28:18)

4. மரகதம் (Emerald) - யூதா (ஆதி 29:35).

5. இந்திரநீலம் (Sapphire) - தாண் (ஆதி 30:6).

6. வச்சிரம் (Diamond) - நப்தலி (ஆதி 30:8).

மூன்றாம் பத்தி (யாத் 28:19)

7. கெம்பு (Ligure) - காத் (ஆதி 30:11).

8. வைடூரியம் (Agate) - ஆசேர் (ஆதி 30:13).

9. சுகந்தி (Amethyst) - இசக்கார் (ஆதி 30:18).

நான்காம் பத்தி (யாத் 28:20)

10. படிகப்பச்சை (Beryl) - செபுலோன் (ஆதி 30:20).

11. கோமேதகம் (Onyx) - யோசேப்பு (ஆதி 30:24).

12. யஸ்பி (Jasper) - பென்யமீன் (ஆதி 35:16-19).

மார்ப்பதக்கத்தின் நான்கு மூலைகளிலுமுள்ள நான்கு வளையங்கள். மார்ப்பதக்கம் ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாக இருக்க வேண்டும். அது ஏபோத்திலிருந்து நீங்கக்கூடாது. ஆகையினால் அதை அதின் வளையங்களால் ஏபோத்து வளையங்களோடே இளநீலநாடாவினால் கட்ட வேண்டும்.

## ஊரீம் தும்மீம்

## யாத் 28:30

**யாத் 28:30. நியாயவிதி மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளை வைப்பாயாக; ஆரோன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும்போது, அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்கவேண்டும்; ஆரோன் தன் இருதயத்தின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய நியாயவிதியைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் எப்பொழுதும் தரித்துக்கொள்ளவேண்டும்.**

ஊரீமும், தும்மீமும் ஆரோனின் இருதயத்தின்மேல் எப்போதும் இருக்கும். இது இஸ்ரவேல் புத்திரருடைய நியாயவிதியை வெளிப்படுத்துகிறது. கர்த்தருடைய தீர்மானம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ஆரோன் இவற்றை எப்பொழுதும் தரித்துக் கொண்டிருக்கிறார்.

ஊரீம் என்பதற்கு விளக்கு, வெளிச்சம், அக்கினி என்று பொருள். இது ஒரு எபிரெய வார்த்தை. ஊரீம் பன்மை வார்த்தையாகும். இதன் ஒருமை "ஊர்" என்பதாகும். இந்தச் சொல் "ஓர்" என்னும் வேர்ச்சொல்லிருந்து வந்திருக்கிறது. இதற்கு "வெளிச்சமாக்கு" என்று பொருள்.

தும்மீம் என்பது ஒரு எபிரெய வார்த்தை. இது "தூம்" என்னும் எபிரெய வார்த்தையின் பன்மைச் சொல்லாகும். இதற்கு பூரணம் என்று பொருள். "தாமாம்" என்னும் வேர்ச்சொல்லிருந்து "தூம்" என்னும் சொல் வந்திருக்கிறது. இதற்கு "பூரணப்படுத்துதல்" என்று பொருள்.

ஊரீம், தும்மீம் ஆகிய இரண்டு வார்த்தைகளும் வேதாகமத்தில் ஐந்து இடங்களில் சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 28:30; லேவி 8:8; உபா 33:8; எஸ்றா 2:63; நெகே 7:65). ஊரீம் மட்டும் தனியாக இரண்டு இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (எண் 27:21; 1சாமு 28:6). இவ்விரண்டு வார்த்தைகளும் பலவிதமாகப் பல்வேறு பதிப்புக்களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. விளக்குகள், பரிபூரணம், ஒளி, சத்தியம், பரிசுத்தச்சீட்டுகள் ஆகியவை இவற்றின் மொழிபெயர்ப்புக்களில் சிலவாகும்.

பரிசுத்த வேதாகமத்தில் ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப்பற்றி ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இவற்றைச் செய்யுமாறு தேவன் மோசேக்கு எந்தக் கட்டளையும் கொடுக்கவில்லை. நியாயவிதி மார்ப்பதக்கத்தில் இவற்றை வைக்குமாறு தேவன் மோசேக்குக் கூறியிருக்கிறார். (யாத் 28:16,30).

2. ஆரோனுக்கு ஆசாரிய வஸ்திரம் தரிக்கப்பட்ட போது, மோசே ஊரீம், தும்மீம் ஆகியவற்றை நியாயவிதி மார்ப்பதக்கத்தில் வைத்தார். ஆகையினால், இவை ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கவேண்டும் (லேவி 8:8).

3. தேவனுடைய செய்தியைக் கூறுவதற்கும், அவருடைய நியாயத்தீர்ப்பை அறிவிப்பதற்கும் நியாயவிதி மார்ப்பதக்கத்திலிருக்கும் ஊரீம், தும்மீம் ஆகியவை பயன்படுத்தப்பட்டது. ஒன்றில் "ஆம்" என்றும், மற்றொன்றில் "இல்லை" என்றும் எழுதப்பட்டிருக்கலாம் என்பது சிலருடைய கருத்து. இதன் வாயிலாகப் பிரதான ஆசாரியர் தேவனிடமிருந்து பதிலைப் பெற்றுக்கொண்டார்.

4. ஊரீம், தும்மீம் ஆகியவற்றைச் செய்தது மோசேயா, தேவனா அல்லது அவர்களுடைய காலத்திற்கு முன்பே இவை வழக்கத்தில் இருந்ததா என்பது தெரியவில்லை.

5. யோசுவாவிற்குத் தேவனுடைய ஆலோசனையைக் கொடுப்பதற்காகப் பிரதான ஆசாரியர் ஊரீமைப் பயன்படுத்தினார். (எண் 27:18-23).

6. பிரதான ஆசாரியர் ஊரீம், தும்மீம் ஆகியவற்றை எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்று லேவிக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. இக்கட்டான சமயங்களில் இவற்றைப் பயன்படுத்தலாம். (உபா 33:8).

7. பாபிலோன் சிறையிருப்பிற்குப் பின்பு, ஊரீம், தும்மீம் ஆகியவை பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (எஸ்றா 2:63; நெகே 7:65).

8. இவை கற்களாக இருக்கலாம். மார்ப்பதக்கமும் இவையும் வெவ்வேறானவை. (யாத் 28:30).

9. ஊரீம், தும்மீம் ஆகியவை மூலமாகத் தேவனுடைய பதிலைப் பெறுவதற்கு "சீட்டுப்போடுதல்" (லேவி 16:8; யோசு 18:6-10; 1சாமு 14:42; 1நாளா 24:31; 1நாளா 25:8; 1நாளா 26:13-14) என்னும் வாக்கியமும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சீட்டுப் போடும்பொழுது சீட்டு "விழுந்தது" என்று வரும்போது அது தேவனுடைய பதிலைக் குறிக்கிறது. (யோசு 18:11; யோசு 19:10) விழுந்தது என்பதற்கு ஆங்கிலத்தில் பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. (யோசு 18:11; யோசு 19:1, யோசு 19:24,32,40; யோசு 21:4)

நீதிமொழிகள் புஸ்தகத்தில் ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. "சீட்டு மடியிலே போடப்படும். காரியசித்தியோ கர்த்தரால் வரும்" (நீதி 16:33, நீதி 18:18)

சீட்டு என்பதற்கான எபிரெய வார்த்தை "கோரல்" என்பதாகும். இதற்கு கல், சீட்டு, பங்கு என்று பொருள். சீட்டுப்போட்டு தேர்ந்தெடுப்பதைத் தேவனுடைய சித்தமாகவே கருதினார்கள். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக பிரதான ஆசாரியர் ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தேவனுடைய செய்தியைப் பெற்றுக் கொண்டு, அதை இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கூறினார்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஊரீம் தும்மீம் ஆகியவை மூலமாக தேவனுடைய செய்தியை பல சந்தர்ப்பங்களில் பெற்றிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. கானான் தேசத்திற்குள் யோசுவா இஸ்ரவேல் ஜனத்தாரை வழிநடத்தினார். அப்போது ஊரீம், தும்மீம் ஆகியவை அவருடைய செயல்களை வழிநடத்திற்று (எண் 27:18-24).

2. ஆகானுடைய விஷயத்தில் யோசுவா இவற்றைப் பயன்படுத்தினார். (யோசு 7:14-18) கிபியோனுடைய விஷயத்தில் இதைப் பயன்படுத்தவில்லை (யோசு 9).

3. கானான் தேசத்தைக் கோத்திரத்தாருக்குப் பங்கு பிரித்துக் கொடுப்பதில்இவை பயன்படுத்தப்பட்டன. (எண் 34:17, யோசு 17:4). சில குறிப்பிட்ட பகுதிகளை யார் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் விசேஷ கட்டளைகளும் இவற்றின் மூலமாகவே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வெளிப்படுத்தப்பட்டது. (யோசு 18:4-10). சீட்டுப்போட்டு தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொண்ட சம்பவங்கள் வேதாகமத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (எண் 26:55-56; எண் 33:54; எண் 34:13; எண் 36:2-3; யோசு 13:6; எண் 14:2; எண் 15:1; எண் 16:1; எண் 17:1-2,14-17; எண் 18:11, 18; எண் 19:1,10,17,24,32,40,51; எண் 21: 4-10,20,40; நியா 1:3; நியா 20:9)

4. லேவியருக்கு சில பட்டணங்களைத் தெரிந்தெடுப்பதற்கு இவை பயன்படுத்தப்பட்டன. (1நாளா 6:54, 61-65)

5. ஆசாரியத்துவத்தின் முறைமைகளில் வந்த பிரச்சனைகள் இவற்றின் மூலமாகத் தீர்த்து வைக்கப்பட்டன. (1நாளா 24:5-7; 1நாளா 26:9)

6. யோசுவாவிற்குப் பின்பு, கர்த்தரிடம் விசாரிப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் இவற்றைப் பயன்படுத்தினார்கள். (நியா 1:1-2; நியா 20:18,26-28)

7. இவற்றின் மூலமாகச் சவுல் ராஜாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (1சாமு 10:20-22)

8. யுத்தத்தில் இவற்றின் மூலமாகத் தேவனிடம் விசாரித்து சவுல் பதிலைப் பெற்றுக் கொண்டார். (1சாமு 14:36-46)

9. சவுல் பாவம் செய்த பின்பு, இவற்றின் மூலமாகத் தேவன் அவருக்குப் பதில் தரவில்லை. (1சாமு 28:6)

10. தாவீது இவற்றின் மூலமாகத் தேவனை விசாரித்து பதிலைப் பெற்றுக் கொண்டார். (1சாமு 22:10-15; 1சாமு 30:8; 2சாமு 2:1; 2சாமு 5:19,23-25; 1நாளா 14:10,14-17)

11. தேவனிடத்தில் விசாரிப்பதற்குத் தாவீது ஒருபோதும் பயப்படவில்லை. (1நாளா 21:30)

தாவீதின் நாட்களுக்குப் பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் ஊரீம், தும்மீம் ஆகியவற்றின் மூலமாகத் தேவனிடத்தில் விசாரித்ததாகக் குறிப்பு எதுவுமில்லை. பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பின்பு, ஆசாரிய ஊழியம் யாருக்கு வரவேண்டும் என்பதைத் தீர்மானம் பண்ணும் விஷயத்தில் இஸ்ரவேலர்கள் ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள். (எஸ் 2:63; நெகே 7:65)

சாமுவேலின் நாட்களில் ஆசாரியர்கள் கடடக்காரர்களாக இருந்தார்கள் (1சாமு 2:12-17) தம்முடைய ஜனத்துடன் பேசுவதற்கு ஆசாரியருக்குப் பதிலாகத் தீர்க்கதரிசிகளைத் தேவன் தெரிந்தெடுத்தார். சாமுவேலின் காலத்திற்குப் பின்பு, தேவன் ஆசாரியர்களைவிட தீர்க்கதரிசிகள் மூலமாக ஜனங்களிடம் அதிகமாகப் பேசினார் (1சாமு 9:9; 1இராஜா 22:5-8; 2இராஜா 3:11; 2இராஜா 8:8)

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏதாவது ஒரு காரியத்தில் சந்தேகம் வரும்போது, அதிலே தேவனுடைய சித்தத்தை உறுதிபண்ணிக்கொள்வதற்காக ஊரீமும் தும்மீமும் பயன்படுத்தப்படுகிறது. இவை இரண்டும் மார்ப்பதக்கத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த மார்ப்பதக்கம் நியாயவிதி மார்ப்பதக்கம் என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தர் ஊரீமைப்பற்றியும் தும்மீமைப்பற்றியும் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நியாயவிதி மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளை வைப்பாயாக; ஆரோன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும்போது, அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்கவேண்டும்; ஆரோன் தன் இருதயத்தின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய நியாயவிதியைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் எப்பொழுதும் தரித்துக்கொள்ளவேண்டும்" (யாத் 28:30) என்று சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோனுக்கு கர்த்தருடைய சித்தமும் அவருடைய மனதும் தெரிந்திருக்கவேண்டும். இஸ்ரவேல் தேசத்தாருடைய ஆவிக்குரிய காரியங்களிலும், அவர்களுடைய தேசத்து ஆளுகையின் காரியங்களிலும், பல விஷயங்களில் சந்தேகம் வரலாம். இந்த சந்தேகங்களை தீர்த்து வைப்பதற்கு கர்த்தருடைய சித்தம் என்ன என்பது தெரியவேண்டும். கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளும்போது, இஸ்ரவேல் புத்திரருடைய சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்படும்.

இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தரே ஆளுகை செய்கிறார். அவரே ராஜாதி ராஜாவாயிருக்கிறார். பிரதான ஆசாரியன், ராஜாவாகிய கர்த்தருக்கு கீழே இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்கிறான். கர்த்தருடைய மந்திரி சபையில் ஊரீமும் தும்மீமும் இருக்கிறது. இவை இரண்டும் கர்த்தருடைய சித்தத்தை பிரதான ஆசாரியனுக்கு வெளிப்படுத்துகிறது.

பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்திலே, மோசே ஊரீம், தும்மீம் ஆகிய இரண்டு வார்த்தைகளை எழுதியிருக்கலாம். அல்லது பின்னல் வேலையாக தைத்திருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஊரீமும் தும்மீமும் பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்தில் தைக்கப்பட்டிருக்கிறது. ஆரோன் கர்த்தருடைய சமுகத்திலே பிரவேசிக்கும்போது, தன் இருதயத்தின்மேல், இஸ்ரவேல் புத்திரருடைய நியாயவிதியை கர்த்தருடைய சந்நிதானத்தில் எப்பொழுதும் தரித்துக்கொண்டிருக்கிறார்.

கர்த்தர் ஊரீம், தும்மீம் ஆகியவை மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆலோசனைகளை இதன் மூலமாக இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார். ஒருவேளை பரலோகத்திலிருந்து கர்த்தருடைய சத்தம் இஸ்ரவேல் புத்திரருக்கு பிரத்தியட்சமாக வெளிப்படலாம்.

பிரதான ஆசாரியனுடைய மனதிலே, கர்த்தருடைய சித்தமானது வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம். பிரதான ஆசாரியன் தன்னுடைய ஆசாரிய வஸ்திரத்தில், நியாயவிதி மார்ப்பதக்கத்தை தரித்திருக்கிறான். ஆகையினால் பிரதான ஆசாரியனுடைய மனதில் தோன்றுகிற எண்ணமும், கர்த்தருடைய சித்தமும் ஒன்றாயிருக்கும் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நம்புகிறார்கள்.

பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரருடைய நியாயவிதியை தன் இருதயத்தின்மேல் தரித்துக் கொண்டிருப்பதினால், கர்த்தருடைய சித்தமும் திட்டமும் அவனுடைய இருதயத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. ஊரீம் தும்மீம் ஆகியவற்றின் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சித்தத்தையும், வார்த்தையையும், வாக்கையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யோசுவா ஊரீம் தும்மீம் ஆகியவற்றின் மூலமாக கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொண்டார்.

"அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கக்கடவன்; அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டியது என்றார்" *(எண் 27:21).*

யோசுவாவுக்கு பின்பு வந்த நியாயாதிபதிகளும், ஊரீம் தும்மீம் ஆகியவற்றை பயன்படுத்தி, கர்த்தருடைய சித்தத்தை விசாரித்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்புக்குப்போன காலத்தில், ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்திலே தைக்கப்பட்டிருந்து ஊரீம் தும்மீமும் காணமல் போயிற்று. அதன் பின்பு அவை கண்டுபிடிக்கப்படவில்லை. இப்பொழுது ஊரீம் தும்மீமும் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை.

ஊரீமும் தும்மீமும் வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளமாகும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே வார்த்தையாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே, இந்தக் கடைசி நாட்களில் கர்த்தர் தம்மையும், தம்முடைய சித்தத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறார்.

"இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி 1:2).

"தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோவா 1:18).

தெய்வீக வெளிப்பாடுகள் எல்லாமே இயேசுகிறிஸ்துவை மையமாக கொண்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நமக்கு தெய்வீக வெளிப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகிறது.

## ஏபோத்தின் கீழ் அங்கி யாத் 28:31-39

**யாத் 28:31. ஏபோத்தின் கீழ் அங்கியை முழுவதும் இளநீலநூலால் உண்டாக்கக்கடவாய்.**

**யாத் 28:32. தலை நுழைகிற அதின் துவாரம் அதின் நடுவில் இருக்கவும், அதின் துவாரத்துக்கு நெய்யப்பட்ட வேலையான ஒரு நாடா சுற்றிலும் இருக்கவும் வேண்டும்; அது கிழியாதபடிக்கு மார்க்கவசத்தின் துவாரத்துக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.**

**யாத் 28:33. அதின் கீழோரங்களில் இளநீலநூல் இரத்தாம்பரநூல் சிவப்புநூல் வேலையால் செய்யப்பட்ட மாதளம்பழங்களையும், அவைகளுக்கு இடையிடையே சுற்றிலும் பொன்மணிகளையும் அதின் ஓரங்களில் சுற்றிலும் தொங்கும்படி பண்ணிவைக்கவேண்டும்.**

**யாத் 28:34. அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமும், ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவதாக.**

**யாத் 28:35. ஆரோன் ஆராதனை செய்யக் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போதும், வெளியே வரும்போதும், அவன் சாகாதபடிக்கு, அதின் சத்தம் கேட்கப்படும்படி அதைத் தரித்துக்கொள்ளவேண்டும்.**

**யாத் 28:36. பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி,**

**யாத் 28:37. அது பாகையிலிருக்கும்படி அதை இளநீல நாடாவினால் பாகையின் முகப்பிலே கட்டுவாயாக.**

**யாத் 28:38. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பரிசுத்த காணிக்கைகளாகப் படைக்கும் பரிசுத்தமானவைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கும்படி, அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருப்பதாக; கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் அங்கிகரிக்கப்படும்படி, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருக்க வேண்டும்.**

**யாத் 28:39. மெல்லிய பஞ்சுநூல் விசித்திரமான உள்சட்டையையும், மெல்லிய பஞ்சுநூலால் பாகையையும் உண்டாக்கி, இடைக்கச்சையைச் சித்திரத்தையல் வேலையாகப் பண்ணுவாயாக.**

ஏபோத்தின் கீழ் அங்கியை எவ்வாறு செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். ஏபோத்தின் கீழ் அங்கியை முழுவதும் இளநீலநூலால் உண்டாக்க வேண்டும். தலை நுழைகிற அதின் துவாரம் அதின் நடுவில் இருக்கவும், அதின் துவாரத்துக்கு நெய்யப்பட்ட வேலையான ஒரு நாடா சுற்றிலும் இருக்கவும் வேண்டும்; அது கிழியாதபடிக்கு மார்க்கவசத்தின் துவாரத்துக்கு ஒத்ததாக இருக்க வேண்டும் (யாத் 28:31,32).

அதின் கீழ்ஓரங்களில் இளநீலநூல் இரத்தாம்பரநூல் சிவப்புநூல் வேலையால் செய்யப்பட்ட மாதளம்பழங்களையும், அவைகளுக்கு இடையிடையே சுற்றிலும் பொன்மணிகளையும் அதின் ஓரங்களில் சுற்றிலும் தொங்கும்படி பண்ணிவைக்கவேண்டும் (யாத் 28:33).

அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமும், ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்கவேண்டும். ஆரோன் ஆராதனை செய்யக் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போதும், வெளியே வரும்போதும், அவன் சாகாதபடிக்கு, அதின் சத்தம் கேட்கப்படும்படி அதைத் தரித்துக்கொள்ளவேண்டும் (யாத் 28:34,35).

ஏபோத்து பிரதான ஆசாரியனுடைய வெளிவஸ்திரமாகும். ஏபோத்தின் கீழ் அங்கி ஏபோத்துக்குள்ளே இருக்கிறது. இது பிரதான ஆசாரியனுடைய முழங்கால் வரையிலும் இருக்கும். ஏபோத்தின் கீழ் அங்கியில் தொங்கிக்கொண்டிருக்கும் மாதளம் பழம் அதன் அழகுக்காக செய்யப்பட்டிருக்கிறது.

அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் ஒரு பொன்மணி தொங்குகிறது. பிரதான ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் பிரவேசிக்கும்போது, பொன்மணியின் சத்தம் கேட்கும். மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே இஸ்ரவேல் ஜனத்தார் இருப்பார்கள். பிரதான ஆசாரியன் மாத்திரமே கர்த்தருடைய சந்நிதிக்குள் பிரவேசித்து அவருக்கு ஆராதனை செய்வான். அவன் மகாபரிசுத்த ஸ்தலத்தில் அங்கும் இங்கும் நடக்கும்போது, அவனுடைய அங்கியில் தொங்கிக்கொண்டிருக்கும் பொன்மணியின் சத்தம், வெளியே இருக்கிறவர்களுடைய செவிகளில் கேட்கும். இந்த சத்தத்தைக் கேட்கிறவர்கள், மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரதான ஆசாரியன் உயிரோடிருக்கிறான் என்பதை உறுதிபண்ணிக்கொள்வார்கள்.

ஏபோத்தின் கீழ் அங்கியில் தொங்கிக்கொண்டிருக்கும் பொன்மணிக்கு வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். இந்தப் பொன்மணியானது இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கு அடையாளம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசித்ததுபோல, நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்காக கர்த்தருடைய சந்நிதியிலே பிரவேசித்திருப்பதற்கு இது அடையாளம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் மேலும் ஒரு விளக்கத்தை சொல்லுகிறார்கள்.

அங்கியின் ஓரங்களில் ஒரு மாதுளம்பழம் தொங்கிக்கொண்டிருக்கிறது. இது நறுமணம் கொடுக்கும் பழமாகும். இந்தப் பழத்தின் நறுமணம் சுவிசேஷத்தின் நறுமணத்திற்கு அடையாளம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி, அது பாகையிலிருக்கும்படி அதை இளநீல நாடாவினால் பாகையின் முகப்பிலே கட்டுவாயாக" (யாத் 28:36,37) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் பரிசுத்தர். அவருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியர்களும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஆரோன் இந்த சத்தியத்தை எப்போதும் நினைவுகூரவேண்டும் என்பதற்காக, "கர்த்தருக்கு பரிசுத்தம்" என்று முத்திரைவெட்டாக வெட்டப்பட்ட பட்டத்தை, தன் நெற்றியிலே அணிந்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பரிசுத்த காணிக்கைகளாகப் படைக்கும் பரிசுத்தமானவைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கும்படி, அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருக்கவேண்டும்; கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் அங்கிகரிக்கப்படும்படி, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருக்க வேண்டும் (யாத் 28:38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வசனத்தில் "பரிசுத்தமானவைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கும்படி" என்னும் வாக்கியம் ஒருவன் தன்னுடைய பாவத்திற்கு அனுபவிக்க வேண்டிய தண்டனையைக் குறிக்கலாம். (யாத் 28:43; லேவி 5:1,17; லேவி 17:16; லேவி 26:41) அல்லது ஒருவர் மற்றவர்களுடைய பாவங்களைச் சுமப்பதைக் குறிக்கலாம் (லேவி 10:17; லேவி 16:22; ஏசா 53:4-6; மத் 8:17; 1பேதுரு 2:24).

பிரதான ஆசாரியர் தேவனுக்கும், இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் நடுவில் பாவநிவாரணம் செய்யும் மத்தியஸ்தராக இருக்கிறார். கர்த்தருடைய சந்நிதியில் இஸ்ரவேல் புத்திரர்கள் அங்கிகரிக்கப்படும்படி, பாகை எப்பொழுதும் பிரதான ஆசாரியனுடைய நெற்றியின்மேல் இருக்க வேண்டும். (யாத் 28:38,43).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சந்நிதியில் அங்கீகரிக்கப்படவேண்டும். பிரதான ஆசாரியன் கர்த்தருக்கும், இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். அவர் கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்துபேசுகிறார். பிரதான ஆசாரியன், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் பிதாவாகிய தேவனுக்கும், மனுஷருக்கும் நடுவே மகாபிரதான மத்தியஸ்தராயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் தேவனுடைய சமுகத்திலே கிட்டிச் சேருகிற சிலாக்கித்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே கர்த்தருடைய சந்நிதியில் நாம் அங்கீகரிக்கப்படுகிறோம்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தரை ஆராதிக்கிறோம். அந்த ஆராதனையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படலாம். ஆனாலும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக, கர்த்தர் நம்முடைய ஆராதனையின் குறைபாடுகளை மன்னிக்கிறார். கர்த்தருக்காக நாம் செய்ய வேண்டிய ஊழியத்திலும் நாம் குறைவுபட்டவர்களாயிருக்கிறோம். பரிசுத்தமான காரியங்களில் நாம் பாவம் செய்தவர்களாயிருக்கிறோம். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்முடைய பாவங்களை மன்னித்து, தம்முடைய பரிசுத்தமான சந்நிதியில், நம்மை தம்முடைய ஜனமாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு படைத்த பரிசுத்தமானவைகளின் தோஷத்தை ஆரோன் சுமந்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் சிலுவையிலே சுமந்தார். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்ததினால், அவர் மூலமாய் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது.

கிறிஸ்துவானவர் பிதாவுடைய சமுகத்திலே நமக்காக பரிந்து பேசுகிறார். அவரே நமக்கும் தேவனுக்கும் நடுவில் மத்தியஸ்தராயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக, பிதாவாகிய தேவன் நம்மை அங்கீகரிக்கிறார். கிறிஸ்துவின் மூலமாகவே நம்முடைய ஆராதனைகளும், ஊழியங்களும் கர்த்தருடைய சந்நிதியில் அங்கீகரிக்கப்படுகிறது. கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசவில்லையென்றால், கர்த்தருடைய சந்நிதியில் நாம் அங்கீகரிக்கப்படுவதற்கு வேறு வாய்ப்புக்கள் எதுவுமில்லை.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1பேது 2:5).

"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபி 4:14-16).

பிரதான ஆசாரியனுக்கு உண்டு பண்ண வேண்டிய பரிசுத்தமான வஸ்திரத்தின் மற்ற பகுதிகளைப்பற்றியும் கர்த்தர் இங்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "மெல்லிய பஞ்சுநூல் விசித்திரமான உள்சட்டையையும், மெல்லிய பஞ்சுநூலால் பாகையையும் உண்டாக்கி, இடைக்கச்சையைச் சித்திரத்தையல் வேலையாகப் பண்ணுவாயாக" (யாத் 28:39) என்று சொல்லுகிறார்.

## ஆரோனுடைய குமாரர் யாத் 28:40-43

**யாத் 28:40. ஆரோனுடைய குமாரருக்கும், மகிமையும் அலங்காரமுமாயிருக்கும் பொருட்டு, அங்கிகளையும், இடைக்கச்சைகளையும் குல்லாக்களையும் உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 28:41. உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகஞ்செய்து, அவர்களைப் பிரதிஷ்டைபண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக.**

**யாத் 28:42. அவர்களுடைய நிர்வாணத்தை மூடும்படிக்கு, இடுப்புத்தொடங்கி முழங்கால்மட்டும் உடுத்த சணல்நூல் சல்லடங்களையும் உண்டுபண்ணுவாயாக.**

**யாத் 28:43. ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும் பலிபீடத்தண்டைக்குச் சேரும்போதும், அக்கிரமம் சுமந்து அவர்கள் சாகாதபடிக்கு, அவைகளைத் தரித்திருக்க வேண்டும்; இது அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய கட்டளை.**

ஆரோனுடைய குமாரருக்கு உண்டுபண்ணவேண்டிய பரிசுத்தமான வஸ்திரங்களைப்பற்றியும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனுடைய குமாரருக்கும், மகிமையும் அலங்காரமுமாயிருக்கும் பொருட்டு, அங்கிகளையும், இடைக்கச்சைகளையும் குல்லாக்களையும் உண்டுபண்ணுவாயாக" (யாத் 28:40) என்று சொல்லுகிறார்.

இடைக்கச்சை ஆசாரியருடைய சரீரத்தைச் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கும். இதன் கடைசிப்பகுதி ஆசாரியருடைய கால்களில் தொங்கும். ஆசாரிய ஊழியம் செய்யும்போது ஆசாரியர் இடைக்கச்சையை தன்னுடைய தோள்களின்மீது போட்டுக் கொள்வார்.

கிழக்கு தேசங்களில் பழங்காலத்து ராஜாக்கள் கிரீடங்களையும், குல்லாக்களையும் தங்கள் சிரசின்மீது அணிந்துகொள்வது வழக்கம். கிறிஸ்துவானவர் ராஜாதி ராஜாவாயிருக்கிறார் என்பதற்கு இந்தக் குல்லா அடையாளமாயிருக்கிறது. ஆரோன் பிரதான ஆசாரியராகவும், அவருடைய குமாரர்கள் அவருக்கு கீழே கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள். அங்கிகள், இடைக்கச்சைகள், குல்லாக்கள் ஆகியவை ஆரோனுடைய குமாரருக்கு உண்டுபண்ணப்படுகிறது. இவை அவர்களுக்கு மகிமையாகவும், அலங்காரமாகவும் இருக்கிறது.

பிரதான ஆசாரியனுக்கு, பரிசுத்தமான வஸ்திரங்கள் எப்படிப்பட்ட நூல்களில் செய்யப்படுகிறதோ, அதே நூல்களிலே மற்ற ஆசாரியருக்கும் செய்யப்படுகிறது. இவை ஆசாரியருக்கு மகிமையாகவும் அலங்காரமாகவும் இருக்கிறது. ஆசாரியருடைய விசேஷித்த வஸ்திரங்கள் அவர்களுக்கு மகிமையாக இருந்தாலும், தேவனுடைய தெய்வீக மகிமைக்கு முன்பாக, அவை மங்கிப்போனவையாயிருக்கும்.

பரிசுத்தமே மெய்யான அலங்காரம். ஆசாரியருடைய பரிசுத்தமான வஸ்திரங்கள், பரிசுத்தத்திற்கு அடையாளமாயிருக்கிறது. பிரதான ஆசாரியருக்கும், மற்ற ஆசாரியர்களுக்கும், பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, அவர்களை அபிஷேகம் செய்து, அவர்களை பிரதிஷ்டைபடுத்தி, அவர்களை பரிசுத்தப்படுத்தவேண்டும். இதுவே கர்த்தருடைய பிரமாணம்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகஞ்செய்து, அவர்களைப் பிரதிஷ்டைபண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக" *(யாத் 28:41)* என்று சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியருக்கு கீழே கர்த்தருக்கு ஊழியம் செய்கிற மற்ற ஆசாரியர்களுக்கு சணல் நூல் சல்லடங்கள் உண்டுபண்ணப்படுகிறது. அவர்களுடைய நிர்வாணத்தை மூடும்படிக்கு, இடுப்புத்தொடங்கி முழங்கால்மட்டும் உடுத்த சணல்நூல் சல்லடங்களையும் உண்டுபண்ணவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் *(யாத் 28:42)*.

சணல்நூல் சல்லடங்கள் ஆசாரியருடைய நிர்வாணத்தை மூடும் விதமாக இடுப்புத் தொடங்கி, முழங்கால் மட்டும் இருக்கும். புறஜாதியாருடைய ஆசாரியர்கள் தங்கள் தெய்வங்களுக்கு நிர்வாணமாக ஆராதனை செய்வார்கள்.

ரோமருடைய பாக்கூஸ் என்னும் தெய்வத்திற்கு இவ்வாறு நிர்வாணமாக ஆராதனை செய்யும் வழக்கம் இருந்தது *(யாத் 20:26)*. இஸ்ரவேலின் மெய்யான தேவனுடைய சமுகத்தில் ஆசாரியர் நிர்வாணமாக ஆசாரிய ஊழியம் செய்தால் அவர்கள்மீது அக்கிரமம் சுமத்தப்பட்டு, அவர்கள் செத்துப்போவார்கள் *(யாத் 28:42-43; யாத் 20:26)*.

பிரதான ஆசாரியரும், மற்ற ஆசாரியர்களும், கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது மாத்திரம் பரிசுத்தம் பண்ணப்பட்டால் போதுமானது. மற்ற வேளைகளில் அவர்களை பரிசுத்தப்படுத்த வேண்டியதில்லை.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும் பலிபீடத்தண்டைக்குச் சேரும்போதும், அக்கிரமம் சுமந்து அவர்கள் சாகாதபடிக்கு, அவைகளைத் தரித்திருக்க வேண்டும்; இது அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய கட்டளை" *(யாத் 28:43)* என்று சொல்லுகிறார்.

ஆசாரியருடைய பரிசுத்தமான வஸ்திரங்களுக்கு வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். இந்த வஸ்திரம் கிறிஸ்துவினுடைய நீதிக்கு அடையாளம். இயேசுகிறிஸ்துவின் நீதியை நாம் தரித்துக்கொள்ளவில்லையென்றால், கர்த்தருடைய சந்நிதியில் நாம் நிற்கும் பொழுது, நம்முடைய அக்கிரமத்தை நாம் சுமந்து, நாம் மரித்துப்போகவேண்டியது வரும்.

ஆசாரியருடைய பரிசுத்தமான வஸ்திரமானது தேவனுடைய சர்வாயுதவர்க்கத்திற்கு அடையாளம் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்" *(எபே 6:13)*.

## 29 அதிகாரம்

ஆசாரியரை பரிசுத்தப்படுத்துவது சம்பந்தமாகவும், பலிபீடத்தை பரிசுத்தப்படுத்துவது சம்பந்தமாகவும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 29:1-37). நித்திய சர்வாங்க தகனபலி (யாத் 29:38-41). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் செலுத்தும் பலிகளையும், அவர்களுடைய ஆராதனையையும் அங்கீகரித்து, அவர்களுக்கு தம்முடைய கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை சொல்லுகிறார் (யாத் 29:42-46).

### ஆசாரியரை பரிசுத்தப்படுத்துதல் யாத் 29:1-9

**யாத் 29:1. அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களைப் பரிசுத்தப்படுத்தும்பொருட்டு, நீ அவர்களுக்குச் செய்ய வேண்டியதாவது: ஒரு காளையையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொள்வாயாக.**

**யாத் 29:2. புளிப்பில்லாத அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் கோதுமையின் மெல்லிய மாவினால் பண்ணி,**

**யாத் 29:3. அவைகளை ஒரு கூடையிலே வைத்து, கூடையோடே அவைகளையும் காளையையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து,**

**யாத் 29:4. ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் முன்பாகச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினால் கழுவி,**

**யாத் 29:5. அந்த வஸ்திரங்களை எடுத்து, ஆரோனுக்கு உள்சட்டையையும், ஏபோத்தின் கீழ் அங்கியையும், ஏபோத்தையும், மார்ப்பதக்கத்தையும் தரித்து, ஏபோத்தின் விசித்திரமான கச்சையையும் அவனுக்குக் கட்டி,**

**யாத் 29:6. அவன் தலையிலே பாகையையும் வைத்து, பரிசுத்த கிரீடத்தைப் பாகையின்மேல் தரித்து,**

**யாத் 29:7. அபிஷேக தைலத்தையும் எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகஞ்செய்வாயாக.**

**யாத் 29:8. பின்பு அவன் குமாரரைச் சேரப்பண்ணி, ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்திய கட்டளையாக இருக்கும்படி, அவர்களுக்கும் அங்கிகளை உடுத்துவாயாக,**

**யாத் 29:9. ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இடைக்கச்சைகளைக் கட்டி, அவன் குமாரருக்குக் குல்லாக்களையும் தரித்து, இப்படியே ஆரோனையும் அவன் குமாரரையும் பிரதிஷ்டைபண்ணுவாயாக.**

ஆரோனையும் அவருடைய குமாரரையும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவர்களை பரிசுத்தப்படுத்த வேண்டும். இதற்கு முன்பு எந்த ஆசாரியரையும் ஆசாரிய ஊழியத்திற்காக இதுபோல பரிசுத்தப்படுத்தவில்லை. ஆகையினால் ஆசாரியரை பரிசுத்தப்படுத்துவது சம்பந்தமாக கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை கவனமாகக் கேட்டு, அதன்படி செய்யவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றுவதில் குறைவு எதுவும் இருக்கக்கூடாது.

தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி கர்த்தர் யாரை தெரிந்துகொள்கிறாரோ, அவர்களை மாத்திரமே பரிசுத்தம்பண்ணி ஆசாரிய ஊழியத்திற்காக பிரதிஷ்டை பண்ணவேண்டும். பிரதிஷ்டைபண்ணப்பட்ட ஆசாரியர்கள், கர்த்தருக்கு ஊழியம் செய்ய தங்களை முழுவதுமாய் அர்ப்பணிக்கவேண்டும். கர்த்தர் ஆசாரியரையும், அவர்களுடைய ஊழியங்களையும் அங்கீகரிப்பதாக சொல்லுகிறார்.

ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. ஒருவரும் தங்களுடைய சுயவிருப்பத்தினால் ஆசாரியராவதில்லை. கர்த்தரால் அழைக்கப்படுகிறவர்கள் மாத்திரமே அவருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும்.

"மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்" *(எபி 5:4,5).*

கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் எல்லோரும், கர்த்தருக்கு பரிசுத்தப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். பரிசுத்தமானவர்கள் மாத்திரமே கர்த்தருக்கு பரிசுத்தமான ஊழியத்தை செய்வார்கள். கர்த்தர் ஒருவருடைய ஊழியத்தை அங்கீகரிப்பதற்கு முன்பாக, ஊழியம் செய்கிற அந்த நபரை அங்கீகரிக்கவேண்டும். பரிசுத்தம் இல்லாமல் தேவனுக்கு ஊழியம் செய்வது இயலாத காரியம். பரிசுத்தமில்லாத ஊழியத்தை தேவன் அங்கீகரிக்கமாட்டார்.

நாம் கர்த்தருக்காக எவ்வளவுதான் ஊழியம் செய்தாலும், ஊழியக்காரியங்களைக் குறித்து எப்படித்தான் திட்டம் போட்டாலும், நம்மிடத்தில் பரிசுத்தம் இல்லையென்றால், நம்முடைய ஊழியம் எல்லாம் வீணாய்ப்போகும். கர்த்தர் அங்கீகரியாத ஊழியம் அவருக்கு மகிமையாயிராது.

தமக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்களை, பரிசுத்தப்படுத்தும் வேலையை கர்த்தர் மோசேயினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். தேவனுடைய விசேஷித்த நியமனத்தினால், மோசே ஆசாரியராக நியமிக்கப்படுகிறார். மோசே ஆசாரியரை பரிசுத்தம்பண்ணவேண்டும். அதற்காக கர்த்தர் நியமித்த பலிகளை அவர் செலுத்தவேண்டும். மோசே கர்த்தருக்கு பலி செலுத்தும்போது, அவர் கர்த்தரால் நியமிக்கப்பட்ட ஆசாரியராகயிருப்பதினால், பலியின் ஒரு பாகம் மோசேயின் பங்காகயிருக்கிறது.

"ஆரோனுடைய பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்காயிருக்கும்" *(யாத் 29:26)* என்று கர்த்தர் மோசேக்குச் சொல்லுகிறார்.

மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களை பரிசுத்தப்படுத்தவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தின் வாசல் முன்பாக அவர்களை பரிசுத்தப்படுத்த வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் கூடாரத்தின் வாசலை காவல்காக்க வேண்டிய ஊழியத்தை செய்கிறவர்கள். அவர்களுக்கு எந்த இடத்தில் ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த இடத்தில் அவர்கள் பரிசுத்தம் பண்ணப்படுகிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் முன்பாகச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினால் கழுவு" *(யாத் 29:4)* என்று சொல்லுகிறார்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய பாத்திரங்களை சுமக்கவேண்டியவர்கள். ஆகையினால் அவர்கள் தண்ணீரினால் கழுவப்பட்டு, சுத்தமாயிருக்கவேண்டும்.

"புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்" *(ஏசா 52:11).*

நம்முடைய மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக்கொள்வதே மெய்யான பரிசுத்தமாகுதல்.

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்குஉண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" *(2கொரி 7:1)*.

"உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்" *(ஏசா 1:16)*.

"நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்" *(ஏசா 1:17)*.

"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" *(ஏசா 1:18)*.

மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் தண்ணீரினால் கழுவி, அவர்களுக்கு பரிசுத்த வஸ்திரங்களை தரிக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனையும் அவருடைய குமாரரையும் தண்ணீரினால் கழுவி, அந்த வஸ்திரங்களை எடுத்து, ஆரோனுக்கு உள்சட்டையையும், ஏபோத்தின் கீழ் அங்கியையும், ஏபோத்தையும், மார்ப்பதக்கத்தையும் தரித்து, ஏபோத்தின் விசித்திரமான கச்சையையும் அவனுக்குக் கட்டி, அவன் தலையிலே பாகையையும் வைத்து, பரிசுத்த கிரீடத்தைப் பாகையின்மேல் தரிக்கவேண்டும்" *(யாத் 29:5,6)* என்று சொல்லுகிறார்.

மேலும், "ஆரோனுடைய குமாரரைச் சேரப்பண்ணி, ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்திய கட்டளையாக இருக்கும்படி, அவர்களுக்கும் அங்கிகளை உடுத்துவாயாக, ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இடைக்கச்சைகளைக் கட்டி, அவன் குமாரருக்குக் குல்லாக்களையும் தரித்து, இப்படியே ஆரோனையும் அவன் குமாரரையும் பிரதிஷ்டைபண்ணுவாயாக" *(யாத் 29:8,9)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரிய ஊழியம் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் நித்திய கட்டளையாகயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதுபோல வேறு சில காரியங்களும் கர்த்தருடைய நித்திய கட்டளையாயிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பஸ்கா *(யாத் 12:14,24)*
2. புளிப்பில்லா அப்பப்பண்டிகை *(யாத் 12:17)*
3. நித்திய விளக்கு *(யாத் 27:21; லேவி 24:3)*
4. ஆசாரியருடைய நிர்வாணம் மூடப்படுதல் *(யாத் 28:43)*
5. ஆசாரியத்துவம் *(யாத் 29:9; யாத் 40:15)*
6. ஏறெடுத்துப் படைக்கும் படைப்பு *(யாத் 29:28; லேவி 10:15; எண் 18:8, 11, 19)*
7. பலிகள் *(யாத் 29:42)*
8. தூபம் எரிதல் *(யாத் 30:9)*
9. பலிபீடத்தில் பாவநிவாரண பலி *(யாத் 30:10)*
10. ஊழியம் செய்வதற்கு முன்பாகச் சரீரங்களைக் கழுவுதல் *(யாத் 30:21)*
11. பரிசுத்த அபிஷேகத்தைலம் *(யாத் 30:31)*
12. தேவனுக்கும், இஸ்ரவேலருக்கும் நடுவில் ஓய்வுநாள் நித்திய உடன்படிக்கையின் அடையாளம். *(யாத் 31:16-17)*

13. கொழுப்பையும், இரத்தத்தையும் புசிக்கக்கூடாது. (லேவி 3:17)

14. பீடத்தின்மேல் அக்கினி (லேவி 6:13)

15. போஜனபலிகள் (லேவி 6:18-20)

16. ஆசாரியருடைய சொந்த பலிகள் (லேவி 6:22)

17. ஆசாரியருடைய பங்குகள் (லேவி 7:34-36)

18. தேவனுடைய சமுகத்தில் ஊழியம் செய்யும்போது மதுஅருந்தி வெறித்திருக்கக் கூடாது. (லேவி 10:9)

19. பாவநிவாரண நாள் (லேவி 16: 29-34)

20. பிசாசுகளை ஆராதிக்கக்கூடாது. (லேவி 17:7)

21. தேவனுக்கு முதற்கனியின் பலன்கள் (லேவி 23:14)

22. பெந்தெகொஸ்தே நாளை ஆசாரிப்பது. (லேவி 23:21)

23. கூடாரங்களின் பண்டிகை (லேவி 23:41)

24. சமுகத்தப்பம் (லேவி 24:6-9)

25. லேவியரின் பங்குவீதங்கள் (லேவி 25:34)

26. எக்காளங்களின் பண்டிகை (லேவி 10:8)

27. இஸ்ரவேல் தேசத்தில் சுதேசிக்கும், பரதேசிக்கும் ஒரே பிரமாணம். (எண் 15:15)

28. உப்பின் உடன்படிக்கை (எண் 18:19)

29. லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தில் சேவை செய்ய வேண்டும். (எண் 18:23; உபா 18:5)

30. கிடாரியின் சாம்பலைப் பற்றிய பிரமாணங்கள். (எண் 19:10)

31. ஆசாரிய ஊழியத்திற்குப் பின்பு வஸ்திரங்களைத் தோய்த்தல். (எண் 19:21)

32. பினெகாசிற்கு நித்திய ஆசாரிய பட்டம். (எண் 25:13)

33. கட்டளைகள் (உபா 7:9; உபா 29:29)

இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய பிரமாணத்திற்கு முழுவதுமாகக் கீழ்ப்படிய வேண்டும். புதிய உடன்படிக்கையில் பழைய பிரமாணங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. மோசேயின் பிரமாணத்தில் ஒரு பகுதி மட்டுமே புதிய பிரமாணத்தில் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. (எசே 40-48; சக 14:16-21)

பிரதான ஆசாரியனை அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் செய்யவேண்டும். "அபிஷேக தைலத்தையும் எடுத்து, ஆரோனுடைய தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகஞ்செய்வாயாக" (யாத் 29:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆரோனையும் அவருடைய குமாரரையும் அபிஷேகம் பண்ணியதுபோல, வேறு சில நபர்களையும், பொருட்களையும் அபிஷேகம்பண்ணியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. பிரதான ஆசாரியனாக ஆரோன். (யாத் 28:41; யாத் 29:7; யாத் 30:30; யாத் 40:13; சங் 133:2)

2. ஆசாரியர்களாக ஆரோனுடைய குமாரர்கள். (யாத் 28:41; யாத் 29:29; யாத் 30:30; யாத் 40:15)

3. அடைகள் (யாத் 29:2; லேவி 2:4; எண் 6:15)

4. அதிரசங்கள் (லேவி 7:12)

5. வெண்கல பலிபீடம் (யாத் 29:36; யாத் 40:10; லேவி 8:11; எண் 7:1)

6. வாசஸ்தலம் (யாத் 30:26; யாத் 40:9; லேவி 8:10; எண் 7:1)

7. வெண்கலத்தொட்டி (யாத் 40:11)

8. வாசஸ்தலத்தின் பணிமுட்டுகள் (எண் 7:1)

9. மேசியா (1சாமு 2:10,35; சங் 2:2; சங் 45:7; ஏசா 61:1; லூக்கா 4:18; அப் 10:38)

10. சவுல் (1சாமு 9:16; 1சாமு 10:1; 1சாமு 15:1)

11. தாவீது (1சாமு 16:3-13; 2சாமு 2:4; 2சாமு 5:3)

12. அப்சலோம் (2சாமு 19:10)

13. சாலொமோன் (1இராஜா 1:34-45; 1இராஜா 5:1)

14. ஆசகேல் (1இராஜா 19:15)

15. எலிசா (1இராஜா 19:16)

16. யெகூ (2இராஜா 9:3-6,12; 2நாளா 22:7)

17. யோவாஸ் (2இராஜா 11:2,12; 2நாளா 23:11)

18. யோவாகாஸ் (2இராஜா 23:30)

19. கோரேசு (ஏசா 45:1)

20. லூசிபர் (எசே 28:14)

21. ஏனோக்கும், எலியாவும் (சக 4:14)

22. பவுல் (2கொரி 1:21)

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் பாவத்தின் அசுசிகளை தங்களைவிட்டு நீக்கினால் மாத்திரம் போதாது. அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளையும் தரித்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நீதியின் வஸ்திரத்தை தரித்துக்கொள்வது அவசியமாயிருக்கிறது.

"உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக" (சங் 132:9).

அபிஷேக தைலத்தை ஆரோனுடைய தலையின்மேல் வார்த்து, அவரை அபிஷேகம் செய்வது, பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி அவர்மீது ஊற்றப்படுவதற்கு அடையாளம். கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் சபையின்மீது ஊற்றப்படும்போது, ஆவியானவரின் நறுமணமும், அவருடைய ஆளுகையும் அங்கே நிரம்பியிருக்கும். ஆரோனுடைய தலையின்மீது அபிஷேக தைலம் வார்க்கப்பட்டு, அவர் அபிஷேகம் செய்யப்படுகிறார். இதன் மூலமாக தமக்கு ஆசாரிய ஊழியம் செய்ய கர்த்தர் ஆரோனை தகுதிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கைகள் பலியினால் உறுதிபண்ணப்படுகிறது. ஆரோனும் அவருடைய குமாரரும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவர்களை பரிசுத்தப்படுத்தும்போது, கர்த்தருக்கு பலிகள் செலுத்தப்படவேண்டும். தமக்கு பலிசெலுத்தும் பிரமாணத்தையும் கர்த்தரே மோசேக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களைப் பரிசுத்தப்படுத்தும்பொருட்டு, நீ அவர்களுக்குச் செய்ய வேண்டியதாவது: ஒரு காளையையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொள்வாயாக" (யாத் 29:1) என்றும்,

"புளிப்பில்லாத அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் கோதுமையின் மெல்லிய மாவினால் பண்ணி, அவைகளை ஒரு கூடையிலே வைத்து, கூடையோடே அவைகளையும் காளையையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கொண்டுவரவேண்டும்" (யாத் 29:2,3) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆரோனையும் அவருடைய குமாரரையும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களை பரிசுத்தப்படுத்தும்போது, பாவநிவாரணபலி, சர்வாங்க தகனபலி, சமாதானபலி ஆகிய பலிகள் கர்த்தருக்கு செலுத்தப்படுகிறது.

## பாவநிவாரணபலி
## யாத் 29:10-14

**யாத் 29:10. காளையை ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளையினுடைய தலையின்மேல் வைக்கக்கடவர்கள்.**

**யாத் 29:11. பின்பு நீ அந்தக் காளையை ஆசரிப்புக் கூடாரத்து வாசலண்டையிலே கர்த்தருடைய சந்நிதானத்தில் அடித்து,**

**யாத் 29:12. அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, உன் விரலினால் பலி பீடத்தின் கொம்புகள்மேல் இட்டு, மற்ற இரத்தம் முழுவதையும் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி,**

**யாத் 29:13. குடல்களை மூடிய கொழுப்பு யாவையும், கல்லீரலின் மேலுள்ள சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலுள்ள கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேல் தகித்துப்போட்டு,**

**யாத் 29:14. காளையின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்; இது பாவநிவாரணபலி.**

ஆரோனையும் அவருடைய குமாரரையும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களை பரிசுத்தப்படுத்தும்போது பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் செலுத்தும் மற்ற பாவநிவாரண பலிகளைப்போலவே, இந்தப் பலியும் செலுத்தப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் பாவநிவாரண பலியை செலுத்தும்போது, பலியாக செலுத்தப்படும் மிருகஜீவனுடைய மாம்சத்தின் ஒரு பாகத்தை ஆசாரியர்கள் புசிப்பார்கள்.

"அதின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே கொண்டுவரப்படவில்லையே; நான் கட்டளையிட்டபடி நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டியதாயிருந்ததே என்றான்" (லேவி 10:18).

ஆசாரியர்களை பரிசுத்தப்படுத்தும் பொருட்டு செலுத்தப்படும் பாவநிவாரண பலியின் மாம்சத்தை ஆசாரியர்கள் புசிக்கக்கூடாது. பலியாக செலுத்தப்படும் மிருகத்தின் மொத்த மாம்சமும் பாளயத்திற்கு புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கப்படவேண்டும் (யாத் 29:14).

ஆசாரியரை பரிசுத்தப்படுத்தும் பொருட்டு செலுத்த வேண்டிய பாவநிவாரண பலியைக் குறித்து கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். அவர் மோசேயை நோக்கி, "காளையை ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளையினுடைய தலையின்மேல் வைக்கக்கடவர்கள்" என்றும்,

"பின்பு நீ அந்தக் காளையை ஆசரிப்புக் கூடாரத்து வாசலண்டையிலே கர்த்தருடைய சந்நிதானத்தில் அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, உன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகள்மேல் இட்டு, மற்ற இரத்தம் முழுவதையும் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி, குடல்களை மூடிய கொழுப்பு யாவையும், கல்லீரலின் மேலுள்ள சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலுள்ள கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேல் தகித்துப்போட்டு, காளையின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்; இது பாவநிவாரணபலி " (யாத் 29:10-14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆரோனும் அவருடைய குமாரரும் தங்கள் கைகளைக் காளையினுடைய தலையின்மேல் வைக்கக்கடவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். காளையின்மேல் கைகளை வைப்பது தங்களுடைய பாவங்களைக் காளையின்மீது சுமத்தி, பாவநிவாரண பலி செய்வதற்கு அடையாளமாகும். காளை கொல்லப்படும்போது அது அவர்களுடைய பாவங்களுக்கு நிவாரணமாக இருக்கும். இது பதிலீடு உபதேசத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. (எபி 2:9-18; 1பேதுரு 2:24).

பாவநிவாரண பலியின் மாம்சம் பாளயத்துக்குப் புறம்பே அழிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து பாவநிவாரண பலியை ஊருக்கு வெளியே செலுத்தினார் (எபி 13:11-13).

## சர்வாங்க தகனபலி
## யாத் 29:15-18

**யாத் 29:15. பின்பு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.**

**யாத் 29:16. அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,**

**யாத் 29:17. ஆட்டுக்கடாவைச் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் கழுவி, அவைகளை அந்தத் துண்டங்களின்மேலும் அதின் தலையின்மேலும் வைத்து,**

**யாத் 29:18. ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் தகித்துவிடுவாயாக; இது கர்த்தருக்குச் செலுத்தும் சர்வாங்க தகனபலி; இது சுகந்த வாசனையும் கர்த்தருக்குச் செலுத்தும் தகனபலியுமாய் இருக்கும்.**

ஆசாரியரை பரிசுத்தப்படுத்துவதற்கு ஒரு ஆட்டுக்கடா சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படுகிறது. ஆட்டுக்கடா முழுவதும் பலிபீடத்தின்மேல் தகனிக்கப்படுகிறது. கர்த்தரை கனம்பண்ணுவதற்காகவும், ஆசாரியர்கள் தங்களை கர்த்தருடைய ஊழியத்திற்கு முழுவதுமாய் அற்பணித்திருப்பதற்கு அடையாளமாகவும், ஆட்டுக்கடா பலிபீடத்தின்மேல் முழுவதுமாய் தகனிக்கப்படுகிறது.

ஆசாரியர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்காக தங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவருடைய அக்கினியினால் அனல் மூட்டி எழுப்பிவிடப்படுகிறார்கள். பலிபீடத்தின்மேல் எரியும் அக்கினி தழல்கள் பரிசுத்தமான அன்புக்கு அடையாளமாயிருக்கிறது. ஆசாரியருடைய இருதயத்திலும் பரிசுத்தமான அன்பு நிரம்பியிருக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாக ஆட்டுக்கடா பலிபீடத்தின்மேல் முழுவதுமாய் தகனிக்கப்படுகிறது.

கர்த்தர் சர்வாங்க தகனபலியை செலுத்தும் பிரமாணம் பற்றி மோசேக்கு சொல்லுகிறார். அவர் மோசேயை நோக்கி, "பின்பு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்" என்றும்,

"அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து, ஆட்டுக்கடாவைச் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் கழுவி, அவைகளை அந்தத் துண்டங்களின் மேலும் அதின் தலையின்மேலும் வைத்து, ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் தகித்துவிடுவாயாக; இது கர்த்தருக்குச் செலுத்தும் சர்வாங்க தகனபலி; இது சுகந்த வாசனையும் கர்த்தருக்குச் செலுத்தும் தகனபலியுமாய் இருக்கும்" (யாத் 29:15-18) என்றும் சொல்லுகிறார்.

## சமாதான பலி
## யாத் 29:19-34

**யாத் 29:19. பின்பு மற்ற ஆட்டுக்கடாவையும் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.**

**யாத் 29:20. அப்பொழுது அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனின் வலதுகாது மடலிலும், அவன் குமாரரின் வலதுகாது மடலிலும், அவர்கள் வலதுகையின் பெருவிரலிலும், அவர்கள் வலதுகாலின் பெருவிரலிலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,**

**யாத் 29:21. பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேகதைலத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனுடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி, அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவனுடைய குமாரர் மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் தெளிப்பாயாக.**

யாத் 29:22. அந்த ஆட்டுக்கடா பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவானதால், அதிலுள்ள கொழுப்பையும் வாலையும் குடல்களை மூடிய கொழுப்பையும் கல்லீரலின்மேலுள்ள சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலுள்ள கொழுப்பையும் வலதுபக்கத்து முன்னந்தொடையையும்,

யாத் 29:23. கர்த்தருடைய சந்நிதானத்தில் வைத்திருக்கிற புளிப்பில்லா அப்பங்களுள்ள கூடையில் ஒரு அப்பத்தையும் எண்ணெயிட்ட அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுத்து,

யாத் 29:24. அவைகள் எல்லாவற்றையும் ஆரோனின் உள்ளங்கைகளிலும் அவன் குமாரரின் உள்ளங்கைகளிலும் வைத்து, அவைகளைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டி,

யாத் 29:25. பின்பு அவைகளை அவர்கள் கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியோடு வைத்து, கர்த்தருடைய சந்நிதானத்தில் சுகந்த வாசனையாகத் தகிக்கக்கடவாய்; இது கர்த்தருக்குச் செலுத்தப்படும் தகனபலி.

யாத் 29:26. ஆரோனுடைய பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்காயிருக்கும்.

யாத் 29:27. மேலும், ஆரோனுடைய பிரதிஷ்டைக்கும் அவன் குமாரருடைய பிரதிஷ்டைக்கும் நியமித்த ஆட்டுக்கடாவில் அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப் படைக்கப்படுகிற முன்னந்தொடையையும் பரிசுத்தப்படுத்துவாயாக.

யாத் 29:28. அது ஏறெடுத்துப் படைக்கிற படைப்பானதினால், இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிறவைகளில் அவைகளே நித்திய கட்டளையாக ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்வதாக; இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏறெடுத்துப் படைக்கிற சமாதானபலிகளில் அவைகளே ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாயிருக்கவேண்டும்.

யாத் 29:29. ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்கள், அவனுக்குப்பின், அவனுடைய குமாரரைச் சேரும்; அவர்கள் அவைகளை உடுத்திக்கொண்டு, அபிஷேகம்பண்ணப்பட்டுப் பிரதிஷ்டையாக்கப்படுவார்கள்.

யாத் 29:30. அவனுடைய குமாரரில் அவன் பட்டத்திற்கு வருகிற ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்வதற்கு ஆசரிப்புக் கூடாரத்தில் பிரவேசிக்கும்போது, அவைகளை ஏழுநாள்மட்டும் உடுத்திக் கொள்ளக்கடவன்.

யாத் 29:31. பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்து, அதின் மாம்சத்தைப் பரிசுத்த இடத்தில் வேவிப்பாயாக.

யாத் 29:32. அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தையும், கூடையிலிருக்கிற அப்பத்தையும், ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலே புசிக்கக்கடவர்கள்.

யாத் 29:33. அவர்களைப் பிரதிஷ்டைபண்ணிப் பரிசுத்தப்படுத்தும் பொருட்டு, அவைகளால் பாவநிவிர்த்தி செய்யப்பட்டபடியால், அவைகளை அவர்கள் புசிக்கக்கடவர்கள்; அந்நியனோ அவைகளைப் புசிக்கலாகாது; அவைகள் பரிசுத்தமானவைகள்.

**யாத் 29:34. பிரதிஷ்டையின் மாம்சத்திலும் அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலம் மட்டும் மீந்திருந்ததனால், அதை அக்கினியாலே சுட்டெரிப்பாயாக; அது புசிக்கப்படலாகாது, அது பரிசுத்தமானது.**

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனையும் அவருடைய குமாரரையும் பரிசுத்தம் படுத்தும் பொருட்டு கர்த்தருக்கு ஆட்டுக்கடா சமாதானபலியாக செலுத்தப்படுகிறது. இது பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா என்றும் அழைக்கப்படுகிறது.

கர்த்தருக்கு பாவநிவாரண பலியையும், சர்வாங்க தகனபலியையும் செலுத்தும்போது ஆசாரியர்கள் பரிசுத்தம்பண்ணப்படுகிறார்கள். கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்தும்போது, ஆசாரியர்கள் ஊழியத்திற்காக பிரதிஷ்டை பண்ணப்படுகிறார்கள். ஆகையினால் சமாதானபலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடா பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்தும்போது ஆசாரியருடைய ஊழியத்தினால் கர்த்தர் மகிமைப்படுகிறார். கர்த்தருக்கு சமாதான பலியை செலுத்தும்போதோ, ஆசாரியருக்கு ஆறுதலும் சமாதானமும் உண்டாகிறது. தேவனுக்கும் ஆசாரியருக்கும் நடுவே உடன்படிக்கை பண்ணப்படுவதற்கு சமாதானபலி அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பின்பு மற்ற ஆட்டுக்கடாவையும் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்" *(யாத் 29:19)* என்று சொல்லுகிறார்.

சமாதான பலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடாவின் இரத்தம் கர்த்தருக்கும் ஆசாரியருக்கும் இடையே பங்கிடப்படுகிறது.

அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனின் வலதுகாது மடலிலும், அவன் குமாரரின் வலதுகாது மடலிலும், அவர்கள் வலதுகையின் பெருவிரலிலும், அவர்கள் வலதுகாலின் பெருவிரலிலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலி பீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கவேண்டும் *(யாத் 29:20).*

வலதுகாது, வலதுகை, வலதுகால் ஆகியவை ஆசாரியருடைய முழு ஆத்துமாவிற்கும், ஆவிக்கும், சரீரத்திற்கும் அடையாளமாக இருக்கிறது. தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு முன்பாக ஆசாரியர்கள் தங்களைச் சுத்திகரித்து, பிரதிஷ்டை பண்ணிக் கொள்ள வேண்டும். இதற்காக ஆசாரியர்கள் வலதுகாதின் மடலிலும், வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் அடிக்கப்பட்ட கடாவின் இரத்தத்தில் கொஞ்சத்தை எடுத்து இட்டுக் கொள்கிறார்கள்.

கேட்பது, கைகளால் வேலைசெய்வது, நடப்பது ஆகியவற்றிற்கு அடையாளமாகச் சரீரத்தின் இந்த உடல் உறுப்புக்கள் பிரதிஷ்டை பண்ணப்படுகிறது. ஆசாரியர்கள் தேவனுடைய சப்தத்தைக் கேட்க வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டும். ஆசாரிய ஊழியத்தில் தங்களுடைய கைகளைப் பயன்படுத்த வேண்டும். ஆசாரியர்கள் தேவனுடைய வழிகளில் நடக்க வேண்டும்.

வேதாகமத்தில் எட்டு இடங்களில் காதுமடல், கையின் பெருவிரல், காலின் பெருவிரல் ஆகியவற்றில் இரத்தம் தெளிப்பது சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. *(யாத் 29:20; லேவி 8:23-24; லேவி 14:14,17,25,28; லூக்கா 16:24).*

பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேகதைலத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவருடைய வஸ்திரங்களும் அவருடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி, அவர்மேலும் அவர் வஸ்திரங்கள்மேலும் அவருடைய குமாரர் மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் தெளிக்கவேண்டும் *(யாத் 29:21).*

வெண்கலக் கிண்ணங்களில் இந்த இரத்தத்தைச் சேகரித்து, ஆசாரியர்மீது தெளிப்பதற்காகப் பயன்படுத்துவார்கள். வாசஸ்தலத்தின் பிரகாரத்தில் அபிஷேக எண்ணெய் கிண்ணங்களில் சேமிக்கப்பட்டிருக்கும்.

ஆரோன்மேலும், அவருடைய குமாரர்கள்மேலும், அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் இரத்தமும், அபிஷேக எண்ணெயும் தெளிக்கப்படுகிறது. (சங் 133:2) இந்தச் சடங்கிற்கு முன்பாகவும், பின்பாகவும் அவர்கள் தங்களைக் கழுவிக் கொள்ள வேண்டும் (யாத் 30:18-21; எண் 19:21). அவர்களுடைய சரீரங்கள்மீதும், வஸ்திரங்கள்மீதும் இரத்தம் தெளிக்கப்படுவது அவர்களுடைய பாவங்களின் பயங்கரத்தையும், பாவத்திற்குரிய தண்டனையையும் வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு முறை பலியிடும்போதும், மனுஷருடைய பாவத்திற்கு நிவாரணமாகப் பாவமில்லாத ஒரு உயிர் பதிலீடாகப் பலியிடப்படுகிறது.

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல் அல்லது உள்ளான மனுஷனைக் களைந்துபோடுதல் என்று பொருள்கூறுவதைவிட, ஒரு பரிசுத்தமான காரியத்திற்காக வேறுபிரிக்கப்படுதல் என்று பொருள்கூற வேண்டும்.

சமாதானபலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடாவினுடைய இரத்தத்தின் ஒரு பகுதி பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கப்படுகிறது. அந்த இரத்தத்தின் ஒரு பகுதி ஆசாரியர் மேலும், அவர்களுடைய சரீரங்களின்மேலும், அவர்களுடைய வஸ்திரங்களின் மேலும் தெளிக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மீது இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுகிறது. அந்த இரத்தம் பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளுக்கு அடையாளம். விசுவாசிகளுக்கு பரிசுத்தமே மெய்யான அழகு. நம்மீது இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படும்போது, நம்முடைய பரிசுத்தத்தின் அழகு பூரணமாயிருக்கிறது.

சமாதான பலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடாவின் மாம்சம் கர்த்தருக்கும் ஆசாரியருக்கும் பங்கிடப்படுகிறது. ஆசாரியர்கள் கர்த்தரோடு ஐக்கியமாகவும் சிநேகமாகவும் இருக்கிறார்கள். கர்த்தரோடு ஒப்புரவாகாதவர்களால் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியாது. சமாதான பலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடாவின் மாம்சத்தை கர்த்தரும், அவருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிற ஆசாரியர்களும் பங்கிட்டு புசிக்கிறார்கள்.

சமாதான பலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடாவின் மாம்சத்தை ஆசாரியரும் புசிப்பது அவர்கள் பாவநிவாரணம் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாகும்.

"அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (ரோம 5:11).

பாவநிவாரண பலியினால் வரும் ஆசீர்வாதங்கள் ஆசாரியருக்கு கிடைத்திருக்கிறது. அதற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, அந்த மாம்சத்தின் ஒரு பகுதியை புசிக்கிறார்கள். ஆசாரியர்கள் சமாதானபலியின் மாம்சத்தைப் புசிப்பது, அவர்கள் கர்த்தரோடு சந்தோஷமான ஐக்கியத்திலிருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம்.

கர்த்தருக்கு சமாதானபலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடா பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவாகயிருக்கிறது. இதை கர்த்தருடைய சந்நிதியில் தகனபலியாக செலுத்தவேண்டும். இந்த பலியை செலுத்தும் விதம் பற்றியும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அந்த ஆட்டுக்கடா பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவானதால், அதிலுள்ள கொழுப்பையும் வாலையும் குடல்களை மூடிய கொழுப்பையும் கல்லீரலின் மேலுள்ள சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலுள்ள கொழுப்பையும் வலதுபக்கத்து முன்னந்தொடையையும், கர்த்தருடைய சந்நிதானத்தில் வைத்திருக்கிற புளிப்பில்லா அப்பங்களுள்ள கூடையில் ஒரு அப்பத்தையும் எண்ணெயிட்ட அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுக்கவேண்டும்" என்றும்,

"அவைகள் எல்லாவற்றையும் ஆரோனின் உள்ளங்கைகளிலும் அவன் குமாரரின் உள்ளங்கைகளிலும் வைத்து, அவைகளைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டி, பின்பு அவைகளை அவர்கள் கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியோடு வைத்து, கர்த்தருடைய சந்நிதானத்தில் சுகந்த வாசனையாகத் தகிக்க வேண்டும் என்றும், இது கர்த்தருக்குச் செலுத்தப்படும் தகனபலி" என்றும் *(யாத் 29:22-25)* சொல்லுகிறார்.

ஆட்டுக்கடாவின் வாலைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விசேஷமாக சொல்லப் பட்டிருக்கிறது. கிழக்குத் தேசங்களிலுள்ள ஆடுகளுடைய வால்பகுதி கொழுப்பு மிகுந்ததாக இருக்கும் *(யாத் 29:22; லேவி 3:9; லேவி 7:3; லேவி 8:25; லேவி 9:19).*

இஸ்ரவேல் புத்திரரின் அன்றாட தேவைகளைத் தேவன் தாராளமாகப் பராமரித்துக் கொடுக்கிறார். இதற்கு அடையாளமாக அவர்கள் அப்பம், அதிரசம், அடை ஆகிய பல்வேறு விதமான போஜனபதார்த்தங்களைக் காணிக்கையாகப் படைக்கிறார்கள். பல்வேறு விதமான அப்பங்களும் ஆட்டுக்கடாவின் எல்லாப் பகுதிகளும் தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக ஆசாரியர்களால் அசைவாட்டப்படுகிறது. தேவனுடைய கர்த்தத்துவத்தை அங்கீகரிப்பதற்காகத் தேவனுக்கு முன்பாக பலிகளைச் செலுத்துகிறார்கள்.

பலிபீடத்தில் செலுத்தப்படும் பலிகளும், பாளயத்திற்குப் புறம்பே செலுத்தப்படும் பலிகளும் அக்கினியினால் தகிக்கப்பட்டு, தேவனுக்குச் செலுத்தப்படவேண்டும். இவை "சுகந்த வாசனையான காணிக்கை" என்று அழைக்கப்படுகிறது *(லேவி 1-7).*

கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் படைப்பு எப்படியிருக்கவேண்டும் என்றும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனுடைய பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்காயிருக்கும்" என்றும்,

"மேலும், ஆரோனுடைய பிரதிஷ்டைக்கும் அவன் குமாரருடைய பிரதிஷ்டைக்கும் நியமித்த ஆட்டுக்கடாவில் அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப் படைக்கப்படுகிற முன்னந்தொடையையும் பரிசுத்தப்படுத்துவாயாக" என்றும்,

"அது ஏறெடுத்துப் படைக்கிற படைப்பானதினால், இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிறவைகளில் அவைகளே நித்திய கட்டளையாக ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்வதாக; இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏறெடுத்துப் படைக்கிற சமாதானபலிகளில் அவைகளே ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாயிருக்கவேண்டும்" *(யாத் 29:26-28)* என்றும் சொல்லுகிறார்.

ஆட்டுக்கடாவின் மார்க்கண்டமும், முன்னந்தொடையும் அக்கினியினால் தகிக்கப்படவில்லை. இவை ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும் உரிய பங்காகும். *(யாத் 29:26-28).*

தேவனுடைய சமுகத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையும், ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையும் இஸ்ரவேலின் சமாதான பலிகளாகும்.

ஆரோனுடைய பரிசுத்த வஸ்திரத்தைப்பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்கள், அவனுக்குப்பின், அவனுடைய குமாரரைச் சேரும்; அவர்கள் அவைகளை உடுத்திக்கொண்டு, அபிஷேகம் பண்ணப்பட்டுப் பிரதிஷ்டையாக்கப்படுவார்கள். அவனுடைய குமாரரில் அவன் பட்டத்திற்கு வருகிற ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்வதற்கு ஆசரிப்புக் கூடாரத்தில் பிரவேசிக்கும்போது, அவைகளை ஏழுநாள்மட்டும் உடுத்திக் கொள்ளக்கடவன்" *(யாத் 29:29,30)* என்று சொல்லுகிறார்.

ஆசாரியர்கள் ஏழுநாட்களுக்கு ஆசரிப்புக்கூடாரத்தை விட்டு வெளியே வரக்கூடாது *(லேவி 8:33).*

பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவினுடைய மாம்சத்தை ஆசாரியரும் புசிக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்து, அதின் மாம்சத்தைப் பரிசுத்த இடத்தில் வேவிப்பாயாக. அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தையும், கூடையிலிருக்கிற அப்பத்தையும், ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலே புசிக்கக்கடவர்கள்" *(யாத் 29:31,32)* என்பது கர்த்தருடைய பிரமாணமாகும்.

பரிசுத்த இடம் என்பது ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலுள்ள வெண்கல பலிபீடமாகும். ஆசாரியர்கள் பிரதிஷ்டை பண்ணப்படுகிறபோது, ஏழுநாட்களுக்கு இந்தப் பலிபீடம் பிராயச்சித்தம் செய்யப்படுகிறது. *(யாத் 29:29-37; லேவி 8:31-32).*

பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா மாம்சத்தை ஆசாரியர்கள் ஏன் புசிக்கவேண்டும் என்றும், அந்நியர்கள் அதை ஏன் புசிக்கக்கூடாது என்றும் கர்த்தர் காரணம் சொல்லுகிறார்.

ஆசாரியர்களைப் பிரதிஷ்டைபண்ணிப் பரிசுத்தப்படுத்தும்பொருட்டு, அவைகளால் பாவநிவிர்த்தி செய்யப்பட்டபடியால், அவைகளை அவர்கள் புசிக்கக்கடவர்கள்; அந்நியனோ அவைகளைப் புசிக்கலாகாது; அவைகள் பரிசுத்தமானவைகள்" *(யாத் 29:33).*

பாவநிவிர்த்தி என்பதற்கான எபிரெய வார்த்தை "கபார்" என்பதாகும். முதன்முறையாக இங்கு இந்த வார்த்தை "பாவநிவிர்த்தி செய்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் 73 இடங்களில் "கபார்" என்னும் எபிரெய வார்த்தை பாவநிவிர்த்தி செய்தல் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

"கபார்" என்னும் வினைச்சொல்லின் பெயர் வடிவம் "கிப்பூர்" என்பதாகும். இது பன்மையில் மட்டும் வரும். "பாவநிவாரண பலிகள்" என்று இதை மொழிபெயர்க்கலாம். *(யாத் 30:10)* இந்த வார்த்தை *யாத் 29:36; யாத் 30:16; லேவி 23:27-28; லேவி 25:9; எண் 5:8; எண் 29:11* ஆகிய வசனங்களிலும் இவ்வாறே மொழிபெயர்க்கப்படவேண்டும்.

சில வசனங்களில் "கப்பார், கப்பூர்" ஆகிய இரண்டு வார்த்தைகளும் சேர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(யாத் 29:36; யாத் 30:10,16; லேவி 23:28; எண் 5:8).*

வேதாகமத்தில் முதன்முதலாக "கப்பார்" என்னும் வார்த்தை ஆதி 6:14 வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "தேவன் நோவாவிடம் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாக கீல்பூசு" என்று கூறினார். இந்த வசனத்தில் "கப்பார்" என்னும் எபிரெய வார்த்தை "கீல்பூசு" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பேழைக்குள் தண்ணீர் புகுந்து பேழையிலுள்ளவர்கள் தண்ணீரில் மூழ்கி மரித்துப்போகக்கூடாது. அவர்களுடைய ஜீவன்கள் பாதுகாக்கப்படுவதற்காக அங்கு கீல்பூசப்படவேண்டும்.

"கப்பார்" என்னும் வார்த்தையிலிருந்து "கப்போரத்" என்னும் எபிரெய வார்த்தை வந்திருக்கிறது. இதற்குக் "கிருபாசனம்" என்று பெயர். இதற்கு உடன்படிக்கைப் பெட்டியின் மூடி என்று பொருள்.

பிரதிஷ்டையின் மாம்சத்திலும் அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலம் மட்டும் மீந்திருந்ததனால், அதை அக்கினியாலே சுட்டெரிக்கவேண்டும்; அது புசிக்கப்படலாகாது, அது பரிசுத்தமானது *(யாத் 29:34).*

இது ஆசரிப்புக்கூடாரம் நிறுவப்பட்ட பிறகு நடைபெறும் சம்பவம். *(யாத் 29:34,37)* ஆசாரியர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு ஆசாரிய ஊழியத்தை ஆரம்பிக்கிறார்கள். இந்த ஏழு நாட்களில் இரவிலும், பகலிலும் ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் இருக்கிறார்கள் *(லேவி 8:33-36).*

## ஏழுநாளளவும் பிரதிஷ்டை
## யாத் 29:35,36

**யாத் 29:35. இந்தப் பிரகாரம் நான் உனக்குக் கட்டளையிட்டபடி, எல்லாவற்றையும் நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் செய்வாயாக; ஏழுநாளளவும் நீ அவர்களைப் பிரதிஷ்டைபண்ணி,**

**யாத் 29:36. பாவநிவிர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு, பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்தபின், அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்யவேண்டும்;அதைப் பரிசுத்தப்படுத்தும்படி அதை அபிஷேகம்பண்ணக்கடவாய்.**

மோசே ஆரோனையும் இஸ்ரவேல் புத்திரரையும் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபண்ணவேண்டும். "இந்தப் பிரகாரம் நான் உனக்குக் கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் செய்வாயாக; ஏழுநாளளவும் நீ அவர்களைப் பிரதிஷ்டைபண்ணவேண்டும்" (யாத் 29:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியரை பரிசுத்தப்படுத்துகிற சம்பிரதாயங்களெல்லாம் முதல் நாளிலேயே செய்யப்படுகிறது. ஆனாலும் அவர்களை பிரதிஷ்டைபண்ணுகிற வைபவம் முதல் நாளிலேயே நிறைவுபெறவில்லை. அவர்கள் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள்.

ஆசாரியர்கள் பிரதிஷ்டைபண்ணப்படுவதற்கு முன்பாக இருந்ததற்கும், அவர்கள் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபண்ணப்பட்ட பின்பு இருப்பதற்கும் வித்தியாசமுண்டு. கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்ய ஆரோனும் அவருடைய குமாரரும் தெரிந்தெடுக்கப்பட்டாலும், அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் நாளிலேயே ஆசாரிய ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்துவிடவில்லை. ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. அது மிகவும் மகிமையானது. ஆசாரிய ஊழியத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக, ஆசாரியர்கள் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள். அதன் பின்பே அவர்கள் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

ஆசாரியர்கள் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபண்ணப்படும்போது, ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையாக பாவநிவாரண பலியாக செலுத்தப்படுகிறது. "பாவநிவிர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு, பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்தபின், அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்யவேண்டும்; அதைப் பரிசுத்தப்படுத்தும்படி அதை அபிஷேகம்பண்ணக்கடவாய்" (யாத் 29:36) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியர்களை பரிசுத்தம்பண்ணும்போது, முதல் நாளிலேயே பாவநிவாரண பலி செலுத்தப்படுகிறது. அந்த பலியின் மூலமாக வரும் ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆசாரியர்கள் பாவநிவாரண பலியினால் கர்த்தருடைய சமுகத்திலே சமாதானத்தையும் ஆறுதலையும் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய இருதயத்திலே பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும் என்னும் உணர்வும், தங்கள் பாவங்களை மறுபடியும் மறுபடியுமாக அறிக்கை செய்யவேண்டும் என்னும் தாகமும் அவர்களிடத்தில் காணப்படவேண்டும்.

ஆசாரியர்களை பிரதிஷ்டைபண்ணுவதற்காக, ஏழுநாளளவும், ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு காளையாக பாவநிவாரண பலியாக செலுத்தப்படுகிறது. அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பாவநிவாரணம் உண்டாகிறது. ஆனாலும் அந்தக் காளைகளால் ஆசாரியர்களை பூரணப்படுத்த முடியாது. காளைகளின் இரத்தம் ஆசாரியர்களுடைய பாவங்களை முற்றிலுமாய் நிவாரணம்பண்ண போதுமானதல்ல. ஆசாரியர்கள் பாவம் செய்ய செய்ய, பாவநிவாரண பலிகளும் தொடர்ந்து செலுத்தப்படவேண்டும்.

"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?" (எபி 10:1,2).

ஆசாரியர்களை பிரதிஷ்டைபண்ணுவதற்கு, காளைகள் பாவநிவாரண பலியாக செலுத்தப்படும்போது, அவர்கள் வரப்போகிற மேன்மையான காரியங்களில் நம்பிக்கை வைப்பார்கள். ஆசாரியர்களை பிரதிஷ்டைபண்ணுவது, வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் பரிசுத்த வஸ்திரங்களை தரித்திருக்கிறார். கிறிஸ்துவானவர் காளைகளின் இரத்தத்தினாலோ அல்லது ஆட்டுக்கடாக்களின் இரத்தத்தினாலோ பரிசுத்தம் பண்ணப்படவில்லை. அவர் தம்முடைய சொந்த இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அவரை பூரணப்படுத்தியிருக்கிறது.

"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" *(எபி 9:12).*

கிறிஸ்துவானவர் தாம் அனுபவித்த உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டிருக்கிறார். "ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" *(எபி 2:10).*

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் எல்லோரும் ஆவிக்குரிய ஆசாரியர்களாயிருக்கிறோம். நாம் கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளை செலுத்தவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படவேண்டும்.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" *(1பேது 2:5).*

இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தினால் நாம் கழுவப்பட்டிருப்பதினால், கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு நாம் தகுதியுள்ளவர்களாயிருக்கிறோம்.

## பலிபீடத்திற்காக பிரயாச்சித்தம் யாத் 29:36,37

**யாத் 29:36. பாவநிவிர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு, பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்தபின், அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்யவேண்டும்; அதைப் பரிசுத்தப்படுத்தும்படி அதை அபிஷேகம்பண்ணக்கடவாய்.**

**யாத் 29:37. ஏழுநாளளவும் பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ் செய்து, அதைப் பரிசுத்தமாக்கக் கடவாய்; பலிபீடமானது மகாபரிசுத்தமாயிருக்கும்; பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாகும்.**

ஆசாரியர்கள் பிரதிஷ்டைபண்ணப்படும்போது, பலிபீடமும் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "பாவநிவிர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு, பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்தபின், அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்யவேண்டும்; அதைப் பரிசுத்தப்படுத்தும்படி அதை அபிஷேகம்பண்ணக்கடவாய்" *(யாத் 29:36)* என்றும்,

"ஏழுநாளளவும் பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய்; பலிபீடமானது மகா பரிசுத்தமாயிருக்கும்; பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாகும்" *(யாத் 29:37)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பலிபீடத்தின்மீது ஏழுநாளளவும், ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளை, பாவநிவாரண பலியாக செலுத்தப்படும்போது, பலிபீடமும் பரிசுத்தமாக்கப்படுகிறது. இந்தப் பலிபீடம் கர்த்தருடைய ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்படுகிறது. இந்தப் பலிபீடத்தின்மீது செலுத்தப்படும் பலிகளை, இது பரிசுத்தமாக்குகிறது.

"மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?" (மத் 23:19).

கிறிஸ்துவானவரே நம்முடைய பலிபீடமாகயிருக்கிறார். அவர் நமக்காக தம்மைத்தாமே பரிசுத்தப்படுத்துகிறார். கர்த்தருக்காக நாம் செய்யும் ஊழியம் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்பதற்காகவும், நம்முடைய ஊழியங்களையெல்லாம் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும் என்பதற்காகவும், கிறிஸ்துவானவர் தம்மைத் தாமே பரிசுத்தப்படுத்துகிறார்.

"அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவா 17:19).

ஒவ்வொரு நாளும் பலிபீடத்தில் நடைபெறும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. கர்த்தருடைய சந்நிதானத்தில் அடிக்கப்படும் காளை மரிக்கும் இடம். (யாத் 29:10-11, 36).
2. கர்த்தருடைய சந்நிதானத்தில் அடிக்கப்படும் காளையின் இரத்தத்தில் ஒருபகுதி பலிபீடத்தின் கொம்புகள்மீது இடப்படும். (யாத் 29:12).
3. கர்த்தருடைய சந்நிதானத்தில் அடிக்கப்படும் காளையின் இரத்தத்தில் ஒருபகுதி போக, மற்ற இரத்தம் முழுவதும் பலிபீடத்தின் அடியிலே ஊற்றப்படும்.
4. காணிக்கையாகச் செலுத்தப்படும் காளையின் பகுதிகள் பலிபீடத்தின்மேல் தகித்துப்போடப்படும். (யாத் 29:13).
5. கடாவை அடித்து அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க வேண்டும். (யாத் 29:16).
6. ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின் மேல் தகித்துவிடவேண்டும். (யாத் 29:17-18).
7. இரண்டாவது ஆட்டுக்கடா அடிக்கப்பட்டு, அதின் இரத்தம் ஆரோன்மீதும், அவனுடைய குமாரர்மீதும் அவர்களுடைய வலதுகாது மடல், வலதுகையின் பெருவிரல், வலதுகாலின் பெருவிரல் ஆகியவற்றில் இடப்பட்டு, மற்ற இரத்தம் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கப்பட வேண்டும். (யாத் 29:19-21).
8. காணிக்கைகளைப் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியோடு வைத்து, கர்த்தருடைய சந்நிதானத்தில் சுகந்த வாசனையாகத் தகிக்கவேண்டும். (யாத் 29:25)
9. பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவின் மாம்சத்தைப் பலிபீடத்தல் வேவித்து, அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே ஆரோனும், அவனுடைய குமாரரும் புசிக்க வேண்டும். (யாத் 29:31-33).
10. இரத்தம், சாம்பல் ஆகியவற்றிலிருந்து பலிபீடத்தைச் சுத்தி செய்ய வேண்டும். (யாத் 29:36).
11. பலிபீடத்தைப் பரிசுத்தப்படுத்தும்படி, அதை அபிஷேகம் பண்ண வேண்டும்.
12. புசிக்கப்படாத மீந்திருக்கும் பிரதிஷ்டையின் மாம்சம் மறுநாளில் பலிபீடத்தின்மீது சுட்டெரிக்கப்பட வேண்டும். (யாத் 29:34).

ஏழுநாட்களுக்குப் பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தம் செய்த பின்பு, அதை வேறுபிரித்து பரிசுத்தமாக்க வேண்டும் (யாத் 29:36-37). இதன் பின்பு, ஒவ்வொரு நாளும் பலியிட வேண்டியவைகள் ஆரம்பமாகிறது (யாத் 29:38-42; எபி 9:9; எபி 10:1-2).

**நித்திய சர்வாங்க தகனபலி**
**யாத் 29:38-46**

**யாத் 29:38. பலிபீடத்தின்மேல் நீ பலியிட வேண்டியது என்னவெனில்; இடைவிடாமல் ஒவ்வொருநாளிலும் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட வேண்டும்.**

**யாத் 29:39. ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும், மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலும் பலியிடுவாயாக.**

**யாத் 29:40. ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும், இடித்துப் பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும், பானபலியாகக் கால்படி திராட்சரசத்தையும், ஒரு ஆட்டுக்குட்டியுடனே படைப்பாயாக.**

**யாத் 29:41. மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலே பலியிட்டு, காலையிலே செலுத்தின போஜனபலிக்கும் பானபலிக்கும் ஒத்தபிரகாரம் அதைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகப் படைக்கக்கடவாய்.**

**யாத் 29:42. உன்னுடனே பேசும்படி நான் உங்களைச் சந்திக்கும் இடமாயிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசலாகிய கர்த்தருடைய சந்நிதியிலே, உங்கள் தலைமுறைதோறும் செலுத்தப்படவேண்டிய நித்திய சர்வாங்க தகனபலி இதுவே.**

**யாத் 29:43. அங்கே இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்பேன்; அந்த ஸ்தலம் என்னுடைய மகிமையினால் பரிசுத்தமாக்கப்படும்.**

**யாத் 29:44. ஆசரிப்புக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் நான் பரிசுத்தமாக்குவேன்; எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, ஆரோனையும் அவன் குமாரரையும் பரிசுத்தப்படுத்தி,**

**யாத் 29:45. இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணி, அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்.**

**யாத் 29:46. தங்கள் நடுவே நான் வாசம்பண்ணும்படி, தங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அவர்கள் அறிவார்கள்; நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர்.**

பலிபீடத்தின்மேல் பலியிடவேண்டிய நித்திய சர்வாங்கதகனபலியைக் குறித்து கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "பலிபீடத்தின்மேல் நீ பலியிடவேண்டியது என்னவெனில்; இடைவிடாமல் ஒவ்வொருநாளிலும் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட வேண்டும். ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும், மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலும் பலியிடுவாயாக" (யாத் 29:38,39) என்று சொல்லுகிறார்.

மூலஎபிரெயபாஷையில் யாத் 29:38 ஆவது வசனம் "இப்பொழுது" என்று ஆரம்பமாகிறது. "தெய்வீக ஊழியங்களுக்காக ஆசாரியரும், பலிபீடமும் பூரணமாகப் பரிசுத்தமாக்கப்பட்ட பின்பு" என்பது இதன் பொருளாகும். (யாத் 29:1-38).

"இடைவிடாமல் ஒவ்வொரு நாளிலும் ஒரு வயதாக இரண்டு ஆட்டுக்குட்டிகளை பலியிடவேண்டும்" (யாத் 29:38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேம் கிபி. 70 ஆம் ஆண்டில் அழிந்தது. ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றிய பிரமாணம் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து கிபி. 70 வரையிலும் உள்ள காலம் சுமார் 1,718 வருஷங்களாகும். இந்த வருஷங்களில் 627,499 நாட்கள் உள்ளன. ஒரு நாளைக்கு இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட்டால் மொத்தம் 12,54,998 ஆடுகளைப் பலியிட்டிருக்க வேண்டும். அதுபோலவே, இத்தனை நாட்களுக்கு ஏராளமான மெல்லிய மாவும், ஏராளமான இடித்துப் பிழிந்த எண்ணெயும், ஏராளமான திராட்சரசமும் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாள் காலையில் ஒரு ஆட்டுக்குட்டியும், ஒவ்வொரு மாலையிலும் ஒரு ஆட்டுக்குட்டியுமாக, ஒவ்வொரு நாளிலும் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளை பலியிடவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த ஆட்டுக்குட்டிகள் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படவேண்டும்.

காலையிலும் மாலையிலும் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் ஆட்டுக்குட்டியோடே, படைக்கவேண்டிய மற்ற பொருட்களைப்பற்றியும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும், இடித்துப் பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும், பானபலியாகக் கால்படி திராட்சரசத்தையும், ஒரு ஆட்டுக்குட்டியுடனே படைப்பாயாக" என்றும்,

"மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலே பலியிட்டு, காலையிலே செலுத்தின போஜனபலிக்கும் பானபலிக்கும் ஒத்தபிரகாரம் அதைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகப் படைக்கக்கடவாய்" *(யாத் 29:40,41)* என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு நித்திய சர்வாங்க தகனபலி செலுத்தப்படுகிறது. காலையில் ஒரு ஆட்டுக்குட்டியும், மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியும் பலிபீடத்தின்மேல் பலியிடப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவின் சமுகத்திலே நமக்காக எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தத்தினால், அவருடைய சபையும் பரிசுத்தமாக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் சபையானது தொடர்ந்து பரிசுத்தமாக்கப்பட்டு வருகிறது.

கிறிஸ்துவானவர் தம்மை ஒரு தரம் மாத்திரமே பலியாக செலுத்தினார். அவர் கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒரே ஒரு தரம் மாத்திரம் ஒப்புக்கொடுத்தாலும், அவருடைய பலியானது நித்திய பலியாக இருக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு நம்முடைய துதிகளின் பலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் தொடர்ந்து செலுத்தவேண்டும். நம்முடைய ஜெபத்தின் மூலமாகவும், துதிகளின் மூலமாகவும், நாம் கர்த்தருக்கு ஆவிக்கேற்ற பலிகளை தொடர்ந்து செலுத்தவேண்டும். நாம் கர்த்தரை சார்ந்து ஜீவிக்கிறோம் என்பதையும், கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இல்லையென்றால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் நாம் கர்த்தருடைய சமுகத்தில் அங்கீகரிக்கவேண்டும்.

ஒரு ஆட்டுக்குட்டியை காலையிலும், மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலும் நித்திய சர்வாங்க தகனபலியாக செலுத்தியதுபோல, விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய ஆவிக்கேற்ற பலிகளை செலுத்துவதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தினுடைய வாசலாகிய கர்த்தருடைய சந்நிதி பரிசுத்தமான ஸ்தலமாகயிருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "உன்னுடனே பேசும்படி நான் உங்களைச் சந்திக்கும் இடமாயிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசலாகிய கர்த்தருடைய சந்நிதியிலே, உங்கள் தலைமுறைதோறும் செலுத்தப்படவேண்டிய நித்திய சர்வாங்க தகனபலி இதுவே. அங்கே இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்பேன்; அந்த ஸ்தலம் என்னுடைய மகிமையினால் பரிசுத்தமாக்கப்படும்" *(யாத் 29:42,43)* என்று சொல்லுகிறார்.

தேவன் கிருபாசனத்தில் ஜனங்களைச் சந்தித்து அவர்களோடு பேசுகிறார் *(யாத் 25:21-22)*. "உங்கள் தலைமுறைதோறும்" என்னும் வாக்கியத்திற்கு நித்திய காலமாக என்று பொருள். இஸ்ரவேல் தேசம் நித்திய தேசமாகும். இயேசு கிறிஸ்து நித்திய காலமாக ஆட்சி புரிவார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை, மிகவும் விசேஷமான வாக்குத்தத்தங்களையும் சொல்லுகிறார். கர்த்தர், "ஆசரிப்புக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் நான் பரிசுத்தமாக்குவேன்; எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, ஆரோனையும் அவன் குமாரரையும் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணி, அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்" *(யாத் 29:44,45)* என்று சொல்லுகிறார்.

"ஆசரிப்புக் கூடாரத்தையும் பலிபீடத்தையும் நான் பரிசுத்தமாக்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இவற்றில் பாவம் இல்லாதபோதும், இவை பரிசுத்தமாக்கப்படுகிறது. இவை தேவனுக்காக வேறுபிரிக்கப்படுகிறது.

"இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்குத்தத்தங்கள் ஓரளவு நிறைவேறியுள்ளன. புதிய பூமியில் தேவன் தம்முடைய தலைநகரத்தைப் புதிய எருசலேமில் ஸ்தாபிக்கும்போது, அவர் மனுஷர் மத்தியிலே பிரத்தியட்சமாய் வாசம் பண்ணுவார். *(வெளி 21:1-22:5)*. இதற்கு முன்பு கிறிஸ்துவானவர் மனுஷர் மத்தியிலே ஆயிரம் வருஷம் ஆட்சி புரிவார். *(வெளி 20:1-10)*.

நாம் கர்த்தருக்காக செய்ய வேண்டிய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யும்போது, கர்த்தர் நமக்காக செய்ய வேண்டியதை நிச்சயமாக செய்வார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய ஆசீர்வாதமான வார்த்தைகளையும் வாக்குத்தத்தங்களையும் சொல்லும்போது, "தங்கள் நடுவே நான் வாசம்பண்ணும்படி, தங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அவர்கள் அறிவார்கள்; நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர்" *(யாத் 29:46)* என்று சொல்லுகிறார்.

## 30 அதிகாரம்

கர்த்தர் மோசேக்கு மேலும் சில பிரமாணங்களை சொல்லுகிறார். தூபபீடம் (யாத் 30:1-10). இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது, அவர்கள் கர்த்தருக்கு மீட்கும் பொருளை கொடுக்கவேண்டும் (யாத் 30:11-16).

வெண்கலத்தால் ஒரு தொட்டி (யாத் 30:17-21). பரிசுத்த அபிஷேக தைலம் உண்டுபண்ணும் விதம் (யாத் 30:22-33). தூபவர்க்கத்தை செய்யவேண்டிய முறை (யாத் 30:34-38).

### தூபபீடம்
### யாத் 30:1-10

**யாத் 30:1. தூபங்காட்டுகிறதற்கு ஒரு தூபபீடத்தையும் சீத்திம் மரத்தினால் உண்டாக்குவாயாக.**

**யாத் 30:2. அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமான சதுரமும், இரண்டு முழ உயரமுமாய் இருக்கவேண்டும், அதின் கொம்புகள் அதனோடே ஏகமுமாயிருக்க வேண்டும்.**

**யாத் 30:3. அதின் மேற்புறத்தையும் சுற்றுப்புறத்தையும் அதின் கொம்புகளையும் பசும் பொன் தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டுபண்ணி,**

**யாத் 30:4. அந்த திரணையின் கீழே அதின் இரண்டு பக்கங்களிலும் அதைச் சுமக்கும் தண்டுகளின் இடங்களாகிய அதின் இரண்டு பக்கத்து இரண்டு மூலைகளிலும் இரண்டு பொன் வளையங்களை உண்டாக்குவாயாக.**

**யாத் 30:5. அந்தத் தண்டுகளையும் சீத்திம் மரத்தால் பண்ணி, அவைகளையும் பொன்தகட்டால் மூடக்கடவாய்.**

**யாத் 30:6. சாட்சிப்பெட்டிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கும், நான் உன்னைச் சந்திக்கும் இடமாகிய சாட்சி சந்நிதியின் மேலுள்ள கிருபாசனத்துக்கும் முன்பாக அதை வைக்கக்கடவாய்.**

**யாத் 30:7. ஆரோன் காலைதோறும் அதின்மேல் சுகந்த தூபங்காட்ட வேண்டும்; மாலையில் விளக்கேற்றும்போதும் அதின்மேல் தூபங்காட்டக்கடவன்; விளக்குகளை விளக்கும்போதும் அதின்மேல் தூபங்காட்டவேண்டும்.**

**யாத் 30:8. உங்கள் தலைமுறைதோறும் கர்த்தருடைய சந்நிதியில் காட்டவேண்டிய நித்திய தூபம் இதுவே.**

**யாத் 30:9. அதின்மேல் அந்நிய தூபத்தையாகிலும், தகனபலி யையாகிலும், போஜனபலியையாகிலும் படைக்க வேண்டாம்; அதின்மேல் பானபலியை ஊற்றவும்வேண்டாம்.**

**யாத் 30:10. வருஷத்தில் ஒருமுறை ஆரோன் பாவநிவாரணபலியின் இரத்தத்தினால் அதின் கொம்புகளின்மேல் பிராயச்சித்தம் பண்ணுவானாக; உங்கள் தலைமுறைதோறும் வருஷத்தில் ஒருமுறை அதின்மேல் பிராயச்சித்தம் பண்ணுவானாக; அது கர்த்தருக்கு மகா பரிசுத்தமானது என்றார்.**

தூபபீடம் உண்டாக்கும் முறையை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். தூபபீடம் சீத்திம் மரத்தினால் உண்டாக்கப்படுகிறது. அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமான சதுரமும், இரண்டு முழ உயரமுமாய் இருக்கவேண்டும், அதின் கொம்புகள் அதனோடே ஏகமுமாயிருக்க வேண்டும் (யாத் 30:1,2).

பொன்பலிபீடம் சதுரமாக இருக்கிறது. வெண்கல பலிபீடமும் சதுரமாகவே இருக்கிறது. தூபபீடம் 18 அங்குலம் சதுரமானது. வெண்கல பீடமோ 7.5 அடி சதுரமானது. (யாத் 27:1). தூபபீடத்தின் உயரம் 3 அடி. வெண்கல பீடத்தின் அடி 4.5 அடி. வெண்கல பீடத்தைப் போலவே தூபபீடத்திலும் கொம்புகளின் எண்ணிக்கையும், அமைப்பும் ஒன்றுபோல் உள்ளது. (யாத் 30:3; யாத் 27:2). வெண்கல பீடம் வெண்கலத்தால் மூடப்பட்டிருக்கிறது. தூபபீடம் பொன்னால் மூடப்பட்டிருக்கிறது.

தூபகலசத்தைப் பற்றி இங்கு எதுவும் கூறப்படவில்லை. தூபகலசமும் பொன்னால் செய்யப் பட்டிருக்கலாம். பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலுமுள்ள எல்லாப் பாத்திரங்களும், பணிமுட்டுகளும் பொன்னால் செய்யப்பட்டிருக்கின்றன. (யாத் 25:11-13,17-18, 24-29,31,36-39). ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிராகாரத்திலுள்ள பலிபீடம், தொட்டி, பணிமுட்டுகள் ஆகியவை வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. (யாத் 27:2-6; யாத் 30:17-21; யாத் 38:8).

கர்த்தர் மோசேயை நோக்கி, "அதின் மேற்புறத்தையும் சுற்றுப்புறத்தையும் அதின் கொம்புகளையும் பசும் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டுபண்ணி, அந்த திரணையின் கீழே அதின் இரண்டு பக்கங்களிலும் அதைச் சுமக்கும் தண்டுகளின் இடங்களாகிய அதின் இரண்டு பக்கத்து இரண்டு மூலைகளிலும் இரண்டு பொன் வளையங்களை உண்டாக்குவாயாக. அந்தத் தண்டுகளையும் சீத்திம் மரத்தால் பண்ணி, அவைகளையும் பொன்தகட்டால் மூடக்கடவாய்" (யாத் 30:3-5) என்று சொல்லுகிறார்.

எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட தேவாலயத்தில் ஒரு தூபபீடம் இருக்கிறது. அந்த தூபபீடத்தின் அளவுகள், கர்த்தர் இங்கு சொல்லும் அளவுகளைவிட இரண்டு மடங்கு அதிகமாயிருக்கிறது.

"மரத்தினால் செய்யப்பட்ட பலிபீடத்தின் உயரம் மூன்று முழமும், அதின் நீளம் இரண்டு முழமுமாயிருந்தது; அதின் கோடிகளும் அதின்விளிம்புகளும் அதின் பக்கங்களும் மரத்தினால் செய்யப்பட்டிருந்தது; அவர் என்னை நோக்கி: இது கர்த்தருடைய சந்நிதியிலிருக்கிற பீடம் என்றார்" (எசே 41:22).

எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட தூபபீடம், மரத்தினால் செய்யப்பட்ட பலிபீடம் என்று அழைக்கப்படுகிறது. அந்த பலிபீடத்தில் பொன் பயன்படுத்தப்படவில்லை. அதில் பொன்னைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவுமில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலம் சுவிசேஷத்தின் காலமாகும். இந்தக் காலத்தில் தூபம் என்பது ஆவிக்குரியதாகயிருக்கவேண்டும். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய ஆராதனை. ஆவிக்குரியதாகவும், எளிமையானதாகவும் இருக்கிறது.

எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட தூபபீடம் அளவில் பெரியதாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தரை ஆராதிப்பது, எல்லா தேசங்களிலும் விரிவாக பரவியிருக்கிறது.

கர்த்தர் மோசேயை சாட்சி சந்நிதியின் மேலுள்ள கிருபாசனத்தண்டையில் சந்திக்கிறார். சாட்சிப்பெட்டிக்கு முன்னால் திரைச்சீலை இருக்கிறது. தூபபீடம் திரைச்சீலைக்கும், கிருபாசனத்திற்கும் முன்பாக வைக்கப்படவேண்டும் (யாத் 30:6).

பலிபீடத்தில் ஊழியம் செய்கிறவர்களால் கிருபாசனத்தை பார்க்க முடியாது. கிருபாசனத்திற்கு முன்னிருக்கும் திரைச்சீலை, கிருபாசனத்தை பார்க்கக்கூடாதபடிக்கு மறைக்கும். ஆனாலும் தூபபீடத்தில் ஊழியம் செய்கிறவர் கிருபாசனத்தை நோக்கி நிற்பார். அவர் சாட்சிப்பெட்டிக்கு நேராக தூபங்காட்டுவார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மாலும், கர்த்தருடைய கிருபாசனத்தை, நம்முடைய சரீரப்பிரகாரமான கண்களால், பிரத்தியட்சமாக பார்க்க முடியாது. ஆனாலும் விசுவாசத்தினால், நம்முடைய ஜெபத்தின் மூலமாக, நாம் கிருபாசனத்திற்கு முன்பாக நிற்கிறோம். நம்முடைய ஜெபத்தை கிருபாசனத்தை நோக்கி ஏறெடுக்கிறோம். நம்முடைய விசுவாசக்கண்களால் கர்த்தருடைய கிருபாசனத்தை நோக்கிப் பார்க்கிறோம்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோன் காலைதோறும் அதின்மேல் சுகந்த தூபங்காட்ட வேண்டும்; மாலையில் விளக்கேற்றும்போதும் அதின்மேல் தூபங்காட்டக்கடவன்; விளக்குகளை விளக்கும்போதும் அதின்மேல் தூபங்காட்டவேண்டும்" (யாத் 30:7) என்று சொல்லுகிறார்.

கூடாரத்திற்கு வெளியே வெண்கல பலிபீடத்தில் காளைகளும், ஆட்டுக்கடாக்களும் அன்றாடம் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படுகிறது. தகனபலியின் வாசனை ஆசரிப்புக்கூடாரம் முழுவதும் நிரம்பியிருக்கும். ஆரோன் காலையிலும் மாலையிலும் தூபங்காட்டும்போது, சர்வாங்க தகனபலியின் வாசனை ஆசரிப்புக்கூடாரத்தை விட்டு அகன்றுபோகும்.

கர்த்தருடைய சாட்சிப்பெட்டிக்கு முன்பாக ஆரோன் காலையிலும் மாலையிலும் தூபங்காட்டவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் ஆராதனைகளை அங்கீகரிக்கிறார் என்பதற்கு இது அடையாளம்.

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்யும்போது கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். பாவம் செய்கிறவர்கள் கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்கிறார்கள். அவர்கள் வெண்கல பலிபீடத்தில் சர்வாங்க தகனபலிகளை செலுத்தும்போது, அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படுகிறது.

ஆரோன் தூபபீடத்தின்மேல் தூபம்காட்டும்போது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய ஜனமாக அங்கீகரிக்கிறார். அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்திபண்ணப்பட்டிருக்கிறது என்பதை கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார்.

கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்தால் மாத்திரம் போதாது. அவர் நம்மை தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளவும்வேண்டும். இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்பதற்காக, வெண்கல பலிபீடத்தில், சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார்கள். கர்த்தருடைய பார்வையில் தாங்கள் நீதிமான்களாக காணப்படவேண்டும் என்பதற்காகவும், கர்த்தர் தங்களை தம்முடைய சொந்த ஜனமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் கர்த்தருடைய சாட்சி பெட்டிக்கு முன்பாக தூபம் காட்டுகிறார்கள்.

தூபபீடம் ஆவிக்குரிய இரண்டு காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அவையாவன: 1. தூபபீடம் இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்திற்கு அடையாளம். 2. தூபபீடம் பரிசுத்தவான்களின் பக்திக்கு அடையாளம்.

வெண்கல பலிபீடம் வெளிப்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பூமியின்மீது நமக்காக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்ததற்கு இது அடையாளம்.

பரிசுத்த ஸ்தலத்தில் பொன்பீடம் இருக்கிறது. கிறிஸ்துவானவர் பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் நமக்காக பரிந்து பேசுவதற்கு இது அடையாளம்.

தூபபீடம் கிருபாசனத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அது எப்போதுமே கிருபாசனத்திற்கு அருகாமையிலிருக்கிறது. கிறிஸ்துவானவர் நமக்காக தேவனுடைய சந்நிதியில் எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1யோவா 2:1).

கிறிஸ்துவானவர் நமக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுவது நற்கந்தத்திற்கு அடையாளம். தூபபீடத்தின்மேல் நற்கந்தம் ஏற்றப்படுகிறது.

தூபபீடத்தின் மேற்புறத்திலும் சுற்றுப்புறத்திலும் உள்ள பொருட்கள் ராஜாவின் கிரீடத்திற்கு ஒப்பாகயிருக்கிறது. கிறிஸ்துவானவர் ராஜாதி ராஜாவாக, பிதாவின் சமுகத்திலே நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

தூபபீடமானது கர்த்தருடைய பரிசுத்தவான்களின் பக்திக்கு அடையாளம். ஆசாரியர்கள் தூபம் காட்டும்போது, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணிக் கொண்டிருப்பார்கள். நம்முடைய ஜெபமே மெய்யான தூபமாகயிருக்கிறது.

"தூபங்காட்டுகிற வேளையிலே ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்" (லூக் 1:10).

ஆசாரியர் தூபம்காட்டும்போது, விளக்குகளும் ஏற்றப்படும். இரண்டும் பணிவிடைகளும் ஒரே வேளையில் நடைபெறுகிறது. பரிசுத்த வேதாகமம் நமக்கு தீபமாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறது. நாம் கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானிக்கவேண்டும். ஆசாரியர் காலையிலும் மாலையிலும் தூபங்காட்டுவதுபோல, நாம் அன்றாடம் கர்த்தருடைய வேதத்தை வாசித்து அதைத் தியானிக்கவேண்டும். நம்முடைய வேதவாக்கிய தியானத்தோடு, ஜெபமும் துதியும் சேர்ந்துகொள்ளவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் நம்மோடு என்ன பேசுகிறார் என்பதை கவனித்து கேட்கவேண்டும். கர்த்தர் சொல்லுவதை செவிகொடுத்து கேட்காமல், நாம் மாத்திரம் பேசிக்கொண்டிருந்தால், நம்முடைய சம்பாஷணை முழுமையான சம்பாஷணையல்ல.

நாம் கர்த்தருடைய சமுகத்திலே நிற்கும்போது நம்முடைய இருதயமும் ஜீவயமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் பரிசுத்தம் இல்லையென்றால் நாம் கர்த்தருக்கு அருவருப்பானவர்களாயிருப்போம். நம்முடைய தூபம்காட்டுதலும் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கும்.

"இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பையும், ஒய்வுநாளையும், சபைக்கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்" (ஏசா 1:13).

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கக்கூடாது. கர்த்தருக்கு தூபங்காட்டுகிறவர்கள் விக்கிரகங்களை ஸ்தோத்திரிக்கிறவர்களாயிருக்கக்கூடாது.

"மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாகவும் இருக்கிறான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்துகொள்ளுகிறார்கள்; இவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புக்களின்மேல் விருப்பமாயிருக்கிறது" (ஏசா 66:3).

கர்த்தர் மோசேயை நோக்கி, "உங்கள் தலைமுறைதோறும் கர்த்தருடைய சந்நிதியில் காட்டவேண்டிய நித்திய தூபம் இதுவே. அதின்மேல் அந்நிய தூபத்தையாகிலும், தகனபலியையாகிலும், போஜனபலியையாகிலும் படைக்கவேண்டாம்; அதின்மேல் பானபலியை ஊற்றவும்வேண்டாம்" என்றும்,

"வருஷத்தில் ஒருமுறை ஆரோன் பாவநிவாரணபலியின் இரத்தத்தினால் அதின் கொம்புகளின்மேல் பிராயச்சித்தம் பண்ணுவானாக; உங்கள் தலைமுறைதோறும் வருஷத்தில் ஒருமுறை அதின்மேல் பிராயச்சித்தம் பண்ணுவானாக; அது கர்த்தருக்கு மகா பரிசுத்தமானது" (யாத் 30:8-10) என்றும் சொல்லுகிறார்.

தூபபீடத்தின்மேல் எரிக்க வேண்டுமென்று கட்டளையிடப்படாத மற்ற தூபங்களெல்லாம் அந்நிய தூபங்கள் எனப்படும். (யாத் 30:9,34-38). தூபகலசத்தில் தூபம் செலுத்தப்படும். (லேவி 10:1; லேவி 16:12-13; எண் 16:6-7,17-18,35-47) தெய்வீக ஆராதனையில் தூபவர்க்கங்களை எரிப்பது ஒரு முக்கியமான சடங்கு. இவை வரப்போகிற காரியங்களுக்கு அடையாளம். புறஜாதியாரும் இந்த ஆராதனை முறையைப் பின்பற்றி, விக்கிரகங்களுக்குத் தூபம் காட்டுகிறார்கள்.

ஆசாரியர்கள் மட்டுமே தூபம் காட்டலாம். (2நாளா 26:16-19). பலிகளின் சுகந்த வர்க்கமும், ஜெபங்களும் தூபங்களாகக் கருதப்படுகின்றன. (சங் 66:15; சங் 141:2; வெளி 5:8; வெளி 8:3-4) தேவனுக்காக அன்றாடம் செலுத்தப்படுவது சுகந்த வாசனையான தூபவர்க்கமாகும். (யாத் 30:7-8,34-38). ஒவ்வொரு நாளும் தூபம் காட்டுதல் நித்திய கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யாத் 30:6-8). பரலோகத்தில் தூபம் படைக்கப்படும். (வெளி 8:3-4).

ஆரோன் வருஷத்தில் ஒருமுறை தூபபீடத்தின்மேல் பிராயச்சித்தம் பண்ணவேண்டும் அது "மகா பாவநிவாரண நாள்" என்று அழைக்கப்படுகிறது (லேவி 16: 16-18,27-34; எண் 29:7).

## மீட்கும் பொருள்
## யாத் 30:11-16

**யாத் 30:11. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 30:12. நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படி கணக்குப்பார்க்கும் பொருட்டு, அவர்களை எண்ணும்போது, அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்.**

**யாத் 30:13. எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே சேருகிற ஒவ்வொருவனும் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச்சேக்கல் கொடுக்கவேண்டும்; ஒரு சேக்கலுக்கு இருபது கேரா; கர்த்தருக்குச் செலுத்தப்படுவது அரைச் சேக்கல்.**

**யாத் 30:14. எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே சேருகிற இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் அதைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டும்.**

**யாத் 30:15. உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்திப் பண்ணும்படி, நீங்கள் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தும்போது, ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம்.**

**யாத் 30:16. அந்தப் பாவநிவிர்த்தி பணத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்குக் கொடுப்பாயாக; அது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக் குறியாயிருக்கும் என்றார்.**

ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்கு பணம் தேவைப்படுகிறது. மோசே இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றும்போது அவர்களிடத்திலிருந்து வரிவசூலிக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படி கணக்குப்பார்க்கும் பொருட்டு, அவர்களை எண்ணும்போது, அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்" (யாத் 30:12) என்று சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது, அவர்களிடத்திலிருந்து இந்த மீட்கும் பொருளை பெற்றுக்கொள்ளவேண்டும்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை முதன்முதலாக எண்ணித் தொகையேற்றியபோது மாத்திரமே, அவர் இஸ்ரவேல் புத்திரரிடமிருந்து மீட்கும் பொருளை பெற்றுக்கொண்டார் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ, மீட்கும் பொருளை வாங்குவது சம்பந்தமாக வேறுவிதமாக விளக்கம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலோ அல்லது தேவாலயத்திலோ அவசரமான தேவைகள் ஏற்படும்போது, அந்த தேவைகளை சந்திக்கும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரரை எண்ணியபோதெல்லாம், மீட்கும்பொருள் திரும்ப திரும்ப வசூலிக்கப்பட்டது என்பது ஒரு சிலர் சொல்லும் விளக்கமாகும்.

இஸ்ரவேல் புத்திரரை ஒவ்வொரு வருஷமும் எண்ணித்தொகையேற்றுவதும், அப்போது வருஷந்தோறும் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய ஆத்துமாக்களுக்காக கர்த்தருக்கு மீட்கும் பொருளை கொடுப்பதும் வழக்கமாக நடைபெறுகிற காரியம் என்று யூதமார்க்கத்தின் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் இந்த வரியை செலுத்தியிருக்கிறார். "ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப்போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்" (மத் 17:27).

இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொருவரும் தன் தன் ஆத்துமாவுக்கு மீட்கும்பொருளாக அரைச்சேக்கலை கொடுக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே சேருகிற ஒவ்வொருவனும் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச்சேக்கல் கொடுக்கவேண்டும்; ஒரு சேக்கலுக்கு இருபது கேரா; கர்த்தருக்குச் செலுத்தப்படுவது அரைச் சேக்கல். எண்ணப்படுகிறவர்களின் தொகையிலே சேருகிற இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் அதைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டும்" (யாத் 30:13,14) என்று சொல்லுகிறார்.

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் ஒரே தொகையே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாக கொடுக்கவேண்டாம். தரித்திரன் அரைச்சேக்கலுக்கு குறைவாக கொடுக்கக்கூடாது. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (அப் 10:34). எல்லா ஆத்துமாக்களும் கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக இருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, " உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்திப் பண்ணும்படி நீங்கள் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தும்போது, ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம்" (யாத் 30:15) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு மற்ற காணிக்கைகளை செலுத்தும்போது, ஒவ்வொருவரும் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், உதாரத்துவமாகவும் செலுத்தவேண்டும். இது இஸ்ரவேல் புத்திரர் தங்கள் ஆத்துமாவை மீட்கும்பொருளாக செலுத்தும் காணிக்கை. கர்த்தர் எல்லா ஆத்துமாக்களையும் பட்சபாதமில்லாமல் ஒன்றுபோல பாவிப்பதினால், அவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் ஒன்றுபோலவே இந்த வரியை நியமித்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ஒரு வாதையும் உண்டாகாமலிருப்பதற்கு, அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை மீட்கும்பொருளை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தவேண்டும் (யாத் 30:12).

இந்தப் பணம் ஆசரிப்புக்கூடாரத்தின் திருப்பணிக்கு செலவுபண்ணப்படும். கர்த்தர் மோசேயை நோக்கி, "அந்தப் பாவநிவிர்த்தி பணத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்குக் கொடுப்பாயாக; அது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக் குறியாயிருக்கும்" (யாத் 30:16) என்று சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தின் பராமரிப்புக்கு பணம் தேவைப்படுகிறது. கர்த்தருடைய பலிபீடத்திலே ஒவ்வொரு நாளும் பலிகள் செலுத்தப்படவேண்டும். அதற்காக காளைகளும், ஆட்டுக்கடாக்களும், மெல்லிய மாவும், தூபவர்க்கங்களும், ஒலிவஎண்ணெயும், திராட்சரசமும், விறகுகளும், உப்பும் தேவைப்படுகிறது. இவை தவிர ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம் செய்கிற ஆசாரியர்களுக்கு விசேஷித்த வஸ்திரங்களை உண்டுபண்ணவேண்டும். இதற்கெல்லாம் பணம் தேவைப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும், தன் தன் ஆத்துமாவுக்காக, மீட்கும் பொருளை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்துகிறார்கள். அந்தப் பணம் பாவநிவிர்த்தி பணம் என்று அழைக்கப்படுகிறது. இது ஆசரிப்புக்கூடாரத்தின் திருப்பணிக்கு செலவுபண்ணப்படுகிறது.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறவர்கள், அதன் பராமரிப்பு செலவுகளுக்கும் காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய ஆலயத்திலே கூடிவந்து அவரை ஆராதிக்கிறோம். ஆலயத்தின் பராமரிப்பு செலவுகளை ஒவ்வொரு விசுவாசியும், தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், மனப்பூர்வமாகவும் சந்திக்க முன்வரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தன்தன் ஆத்துமாவுக்காக கர்த்தருக்கு மீட்கும்பொருளைக்கொடுக்கவேண்டும். பாவநிவர்த்திப்பணம் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சேகரிக்கப்படும் விசேஷித்த வரிப்பணமாகும். மோசேயின் பிரமாணத்தின்படி இஸ்ரவேல் புத்திரருக்கு இருக்கும் கடமைகளையும், அவர்களுடைய மீட்பையும் நினைவு கூருவதற்காகப் பாவநிவிர்த்திப்பணம் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கப்படுகிறது. (யாத் 30:16).

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ஒரு வாதையும் உண்டாகாதபடிக்கு, மீட்கும்பொருள் வாங்கப்படுகிறது. ஜனங்கள் எண்ணப்படும் போது, அவர்களுக்கு வாதை உண்டாகாது என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார். தேவனுடைய பாதுகாப்பு, தேவன் இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது ஆகியவற்றை நினைவு கூருவதற்காகவே இஸ்ரவேல் புத்திரர் மீட்கும்பொருளைக் கொடுக்கிறார்கள்.

இருபது வயதுமுதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் தங்கள் ஆத்துமாவை மீட்கும்பொருளை கர்த்தருக்கு கொடுக்கவேண்டும். இருபதுவயது என்பது இஸ்ரவேலில் ராணுவச்சேவை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் வயது. ஞாபகக்குறியாய் இருக்கும் பாவநிவிர்த்திப் பணம் இஸ்ரவேல் தேசத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு பதிவுக் கட்டணமாகச் சேகரிக்கப்படுகிறது.

ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய்க் கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் அதற்குக் குறைவாகக் கொடுக்கவும் வேண்டாம். தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. தேவனுடைய சமுகத்தில் ஐசுவரியவானும், ஏழையும் ஒன்றுபோல் நடத்தப்படுவார்கள். ஐசுவரியவானும், ஏழையும் எந்தவித பொருளாதாரப் பாகுபாடுமில்லாமல் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

ஆத்துமாவை மீட்கும்பொருள் "பாவநிவிர்த்திப் பணம்" என்று அழைக்கப்படுகிறது. பணம் ஒரு மனுஷனுடைய ஆத்துமாவை ஒருபோதும் இரட்சிக்காது. காளைகளின் இரத்தமோ, ஆட்டுக்கடாக்களின் இரத்தமோ, மனுஷருடைய ஆத்துமாவை இரட்சிக்காது. (எபி 10:4; 1பேதுரு 1:18-23) இவைகளின் இரத்தம் இனிமேல் பாவநிவாரண பலியாகச் செலுத்தப்போகிற மேசியாவின் இரத்தத்திற்கு அடையாளமாகும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைக்கும்போது நமது ஆத்துமாவிற்கு இரட்சிப்பு உண்டாகிறது.

இந்த வசனப்பகுதியில் ஆத்துமா என்பதற்கான எபிரெய வார்த்தை “நெபேஷ்” என்பதாகும். (யாத் 30:12,15-16). இது ஜீவன், உயிர் எனவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. வாதையினால் உண்டாகும் மரணத்திலிருந்து உயிரைக் காப்பது என்பது இதன் பொருள். அரைச்சேக்கல் என்பது கீழ்ப்படிதலுக்கு ஓர் அடையாளம். வாதையிலிருந்தும், மரணத்திலிருந்தும் தேவன் தங்களைப் பாதுகாப்பார் என்பதை இஸ்ரவேலர்கள் அங்கிகரிப்பதை இது குறிக்கிறது. தேவனுடைய பிரமாணத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் கீழ்ப்படியவில்லையென்றால் வாதை அவர்கள்மீது வரும் (லேவி 26; உபா 28).

ஆத்துமாவை இரட்சிப்பதற்கோ, பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கோ பணத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை. இந்த வசனத்தில் பாவநிவிர்த்தி என்பது ஆவிக்குரிய ஜீவனைக் குறிக்காமல், சரீரப்பிரகாரமான ஜீவனையே குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே மனுஷருடைய பாவங்களை மன்னித்து, ஆத்துமாவிற்கு இரட்சிப்பை உண்டுபண்ணும்.

பாவத்திற்கும், வியாதிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும் போது தேவனுடைய ஆசீர்வாதமும், சரீர ஆரோக்கியமும் வருகிறது.

பாவநிவாரணத்தைப் பொறுத்தளவில் ஐசுவரியவான், தரித்திரன் என்னும் வித்தியாசம் எதுவுமில்லை. தேவனுக்கு முன்பாக எல்லோரும் சமம். (அப் 10:34-35; ரோமர் 3:22-25; ரோமர் 10:9-14).

அரைச்சேக்கல் என்பது வெள்ளியைக் குறிக்கும். வெளிப்பிராகாரத்தின் பாதங்கள், முளைகள் ஆகியவை வெள்ளியினால் செய்யப்பட்டிருக்கும். (யாத் 26:19,21,25,32; யாத் 27:10-11,17; யாத் 38:25-28).

## வெண்கலத் தொட்டி
## யாத் 30:17-21

**யாத் 30:17. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 30:18. கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக.**

**யாத் 30:19. அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்.**

**யாத் 30:20. அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலி பீடத்தினிடத்தில் ஆராதனைசெய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவக்கடவர்கள்.**

**யாத் 30:21. அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக் கடவர்கள்; இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்.**

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் எப்போதும் சுத்தமாகயிருக்கவேண்டும். ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவி சுத்தமாயிருக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியர்கள் தங்களுடைய கைகளையும் கால்களையும் கழுவுவதற்கு தண்ணீர் அதிகமாய்த் தேவைப்படும். அதற்காக ஒரு வெண்கலத் தொட்டியை செய்யுமாறு கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, “கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக” (யாத் 30:18) என்று சொல்லுகிறார்.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலி பீடத்தினிடத்தில் ஆராதனைசெய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவவேண்டும் (யாத் 30:20).

ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் பிரவேசிக்கும்போதும், அங்கே கர்த்தருக்கு ஆராதனை செய்யும்போதும், தண்ணீரினால் தங்களை கழுவாவிட்டால், அவர்கள் மரித்துப்போவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்; இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும்" (யாத் 30:21) என்று சொல்லுகிறார்.

ஆசாரியர்கள் கர்த்தருக்காக செய்யும் எல்லா ஊழியங்களிலும் பரிசுத்தம் காணப்படவேண்டும். அவர்களுடைய கைகளும் சுத்தமாயிருக்கவேண்டும். அவர்களுடைய இருதயமும் சுத்தமாயிருக்கவேண்டும்.

"யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே" (சங் 24:3,4).

ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் அநுதினமும் பிரவேசிப்பார்கள். அவர்கள் அநுதினமும் தங்கள் கைகளையும் கால்களையும் தண்ணீரினால் கழுவி சுத்தப்படுத்தவேண்டும். நாம் கர்த்தருடைய சமுகத்திலே அநுதினமும் ஜெபம்பண்ணுகிறோம். அப்போது நாம் கர்த்தருடைய கிருபாசனத்தண்டையிலே கிட்டிச்சேருகிறோம். விசுவாசிகளாகிய நாம் ஆவிக்குரிய ஆசாரியர்களாகவும் இருக்கிறோம். கர்த்தருடைய சமுகத்திலே வந்து நிற்கிற நாம், நம்மை சுத்தம்பண்ணுவது அவசியமாயிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசாரியர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் கைகளையும் கால்களையும் தண்ணீரினால் கழுவி தங்களை சுத்தம்பண்ணியதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து, நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, நம்முடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டு கர்த்தரை ஆராதிக்கவேண்டும்.

"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (யாக் 4:8).

வெண்கலத்தொட்டி ஸ்திரீகளின் தர்ப்பணங்களினால் செய்யப்படுகிறது (யாத் 38:8). வெண்கலக் கண்ணாடிகள் எகிப்து தேசத்தில் மிகவும் பிரபல்யமானவை. வெண்கலத் தொட்டியின் அளவும், அமைப்பும் தெரியவில்லை. சாலொமோனின் தேவாலயத்திலுள்ள தொட்டியைப்பற்றி வேதாகமத்தில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள வெண்கலத் தொட்டியின் மாதிரியின்படியே சாலொமோனும் செய்திருக்கவேண்டும். (1இராஜா 7:23-39)

வெண்கலத் தொட்டியில் எப்பொழுதும் போதுமான அளவு தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கும். ஆசாரியர்கள் தங்கள் கைகளையும், கால்களையும் கழுவுவதற்கும், சில சமயங்களில் ஸ்நானம் பண்ணுவதற்கும் இந்தத் தண்ணீர் பயன்படும். (யாத் 29:4; யாத் 40:12; லேவி 16:4,24) பலிகளை இந்தத் தண்ணீரிலேயே கழுவுகிறார்கள் (யாத் 29:17; லேவி 1:9,13; லேவி 9:14). ஓடுகிற தண்ணீரில் கூட சில பலிகளைக் கழுவி சுத்தம்பண்ணுகிறார்கள் (லேவி 14:4-6,50-52).

## பரிசுத்த அபிஷேக தைலம் யாத் 30:22-38

**யாத் 30:22. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:**

யாத் 30:23. மேன்மையான சுகந்தவர்க்கங்களாகிய சுத்தமான வெள்ளைப்போளத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி ஐந்நூறு சேக்கல் இடையையும், சுகந்த கருவாப்பட்டையிலே அதில் பாதியாகிய இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், சுகந்த வசம்பில் இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும்,

யாத் 30:24. இலவங்கப்பட்டையில் ஐந்நூறு சேக்கல் இடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு குடம் எண்ணெயையும் எடுத்து,

யாத் 30:25. அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமளதைலமாகிய சுத்தமான அபிஷேக தைலத்தை உண்டுபண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக்கடவது.

யாத் 30:26. அதினாலே ஆசரிப்புக் கூடாரத்தையும், சாட்சிப்பெட்டியையும்,

யாத் 30:27. மேஜையையும், அதின் பணிமுட்டுகள் எல்லாவற்றையும், குத்துவிளக்கையும், அதின் கருவிகளையும், தூபபீடத்தையும்,

யாத் 30:28. தகன பலிபீடத்தையும், அதின் பணிமுட்டுகள் எல்லாவற்றையும், தொட்டியையும், அதின் பாதத்தையும் அபிஷேகம்பண்ணி,

யாத் 30:29. அவைகள் மகா பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பரிசுத்தப்படுத்துவாயாக; அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கும்.

யாத் 30:30. ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக.

யாத் 30:31. இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: உங்கள் தலைமுறைதோறும் இது எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்க வேண்டும்.

யாத் 30:32. இது மனிதருடைய சரீரத்தின்மேல் வார்க்கப்படலாகாது; இது செய்யப்பட்ட முறையின்படி அவர்கள் வேறொரு தைலத்தைச் செய்யவுங்கூடாது; இது பரிசுத்தமானது, இது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

யாத் 30:33. இந்த முறையின்படியே தைலங்கூட்டுகிறவனும், அதில் எடுத்து அந்நியன் மேல் வார்க்கிறவனும், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவன் என்று சொல் என்றார்.

யாத் 30:34. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: சுத்த வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினுமாகிய கந்தவர்க்கங்களையும் சுத்தமான சாம்பிராணியையும் நீ சமநிறையாக எடுத்து,

யாத் 30:35. தைலக்காரன் செய்கிறதுபோல அதற்கு பரிமளமேற்றி, துப்புரவான பரிசுத்த தூபவர்க்கமாக்கி,

யாத் 30:36. அதில் கொஞ்சம் எடுத்துப் பொடியாக இடித்து, நான் உன்னைச் சந்திக்கும் ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் சாட்சி சந்நிதியில் வைப்பாயாக; அது உங்களுக்கு மகா பரிசுத்தமாயிருக்கக் கடவது.

யாத் 30:37. இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்ய வேண்டிய முறையின்படி உங்களுக்காகச் செய்து கொள்ளலாகாது; இது கர்த்தருக்கென்று உனக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

யாத் 30:38. இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டுபோகக்கடவன் என்றார்.

பரிசுத்தமான அபிஷேக தைலத்தை கூட்டுகிற விதத்தைப்பற்றி கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். இந்த அபிஷேக தைலம் ஆசரிப்புக்கூடாரத்திலே பயன்படுத்தப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "மேன்மையான சுகந்தவர்க்கங்களாகிய சுத்தமான வெள்ளைப்போளத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி ஐந்நூறு சேக்கல் இடையையும், சுகந்த கருவாப்பட்டையிலே அதில் பாதியாகிய இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், சுகந்த வசம்பில் இருநூற்று ஐம்பது சேக்கல் இடையையும், இலவங்கப்பட்டையில் ஐந்நூறு சேக்கல் இடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு குடம் எண்ணெயையும் எடுத்து, அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமளதைலமாகிய சுத்தமான அபிஷேக தைலத்தை உண்டுபண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக்கடவது" (யாத் 30:23-25) என்று சொல்லுகிறார்.

இதைச் செய்யும்பணி பெசலெயேலிடம் ஒப்படைக்கப்படுகிறது. (யாத் 37:1,29) அவனுக்குப் பின்பு எலியேசரும் (எண் 4:16), ஆசாரியரின் குமாரரும் (1நாளா 9:30) இந்தப் பணியைச் செய்கிறார்கள். இஸ்ரவேலரின் தலைமுறைதோறும் இது கர்த்தருக்குரிய பரிசுத்த அபிஷேகத்தைலமாய் இருக்க வேண்டும். ஆசாரியர் மட்டுமே இதைப் பயன்படுத்தலாம். (யாத் 30:31, யாத் 30:32; யாத் 29:7, 21; லேவி 10:7). இந்தத் தைலத்தைப்போல வேறு யாரும் செய்யக்கூடாது. (யாத் 30:33)

பரிசுத்த அபிஷேக தைலத்தினால் ஆசரிப்புக்கூடாரமும், அதிலுள்ள சகல பணிமுட்டுக்களும் அபிஷேகம்பண்ணப்படவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பரிசுத்த அபிஷேக தைலத்தினாலே ஆசரிப்புக் கூடாரத்தையும், சாட்சிப்பெட்டியையும், மேஜையையும், அதின் பணிமுட்டுகள் எல்லாவற்றையும், குத்துவிளக்கையும், அதின் கருவிகளையும், தூபபீடத்தையும், தகன பலிபீடத்தையும், அதின் பணிமுட்டுகள் எல்லாவற்றையும், தொட்டியையும், அதின் பாதத்தையும் அபிஷேகம்பண்ணி, அவைகள் மகா பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பரிசுத்தப்படுத்துவாயாக; அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கும். ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக" (யாத் 30:26-30) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் ராஜாவை அபிஷேக தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்கள். "ஆசாரியனாகிய சாதோக்கு தைலக்கொம்பைக் கூடாரத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய், சாலொமோனை அபிஷேகம்பண்ணினான்; அப்பொழுது எக்காளம் ஊதி, ஜனங்களெல்லாரும் ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தினார்கள்" (1இராஜா 1:39).

இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்திலே, அவர்களுடைய ராஜாக்களில் சிலரும், பிரதான ஆசாரியர் எல்லோரும் பரிசுத்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள்.

கிறிஸ்து என்னும் பெயருக்கு "அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்று பொருள். பரிசுத்த அபிஷேக தைலம் அவருடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவர் அபிஷேகம்பண்ணப்பட்டவராயிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் நற்கீர்த்தியினாலும், நல்ல சுபாவங்களினாலும் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களாயிருக்க வேண்டும். "பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாளும் நல்லது" (பிர 7:1).

பரிசுத்த அபிஷேக தைலத்தை எவ்வாறு உண்டுபண்ணவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "சுத்த வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினுமாகிய கந்தவர்க்கங்களையும் சுத்தமான சாம்பிராணியையும் நீ சமநிறையாக எடுத்து, தைலக்காரன் செய்கிறதுபோல அதற்கு பரிமளமேற்றி, துப்புரவான பரிசுத்த தூபவர்க்கமாக்கி, அதில் கொஞ்சம் எடுத்துப் பொடியாக இடித்து, நான் உன்னைச் சந்திக்கும் ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் சாட்சி சந்நிதியில் வைப்பாயாக; அது உங்களுக்கு மகா பரிசுத்தமாயிருக்கக் கடவது" (யாத் 30:34-36) என்று சொல்லுகிறார்.

கந்தவர்க்கங்களில் சுத்தமான சாம்பிராணி அதிக நறுமணமானது. (உன் 3:6; உன் 4:6,14). யூதருடைய சடங்குகளில் சாம்பிராணி தனியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லேவி 2:1-2,15-16; லேவி 6:15; லேவி 24:7; எண் 5:15; 1நாளா 9:29; நெகே 13:5,9). சாஸ்திரிகள் இயேசு கிறிஸ்துவிற்குக் கொண்டுவந்த வெகுமதிகளில் இதுவும் ஒன்று. (மத் 2:11) வருங்கால பாபிலோனில் இதன் வியாபாரம் நடைபெறும். (வெளி 18:13).

பரிசுத்த அபிஷேக தைலம் உண்டுபண்ணுவது சம்பந்தமான தம்முடைய பிரமாணங்களையும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். அபிஷேக தைலம் மனுஷருடைய சரீரத்தின்மேல் வார்க்கப்படக்கூடாது. பரிசுத்த அபிஷேக தைலம் எந்த முறைமையின்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த முறைமையின்படி வேறு எந்த தைலத்தையும் செய்யக்கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இது மனிதருடைய சரீரத்தின்மேல் வார்க்கப்படலாகாது; இது செய்யப்பட்ட முறையின்படி அவர்கள் வேறொரு தைலத்தைச் செய்யவுங்கூடாது; இது பரிசுத்தமானது, இது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக. இந்த முறையின்படியே தைலங்கூட்டுகிறவனும், அதில் எடுத்து அந்நியன் மேல் வார்க்கிறவனும், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவன் என்று சொல்" (யாத் 30:32,33) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லுகிற அபிஷேக தைலம் பரிசுத்தமானது. இது பரிசுத்தமான தூபவர்க்கம். இந்த அபிஷேக தைலத்தை மனுஷர் செய்தாலும், அவர்கள் அதை தங்களுடைய சுயஇஷ்டத்தின் பிரகாரம் செய்யக்கூடாது. இந்த தைலத்தை எந்த முறையில் செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறாரோ, அந்த முறையிலேயே செய்யவேண்டும்.

அபிஷேக தைலம் கர்த்தருக்கு விசேஷமானது. இதை மனுஷர் தங்களுக்காக செய்துகொள்ளக்கூடாது. இது கர்த்தருக்கு தூபவர்க்கமாயிருக்கிறது. கர்த்தர் மாத்திரமே பரிசுத்த அபிஷேக தைலத்தின் நறுமணத்தை முகரவேண்டும் என்று விரும்புகிறார். இது மனுஷர் முகருவதற்காக செய்யப்படும் தைலமல்ல.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்ய வேண்டிய முறையின்படி உங்களுக்காகச் செய்து கொள்ளலாகாது; இது கர்த்தருக்கென்று உனக்குப் பரிசுத்தமாயிருப்பதாக. இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டுபோகக்கடவன்" (யாத் 30:37,38) என்று சொல்லுகிறார்.

## 31 அதிகாரம்

மோசே பரிசுத்த பர்வதத்தில், நாற்பதுநாள் இரவும் பகலும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக இருக்கிறார். கர்த்தர் மோசேயோடு சொன்ன வார்த்தைகளெல்லாம் இந்த அதிகாரத்திலும், இதற்கு முந்திய ஆறு அதிகாரங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேயோடு மேலும் சில காரியங்களை சொல்லியிருப்பதற்கு வாய்ப்புள்ளது. அவை பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்படவில்லை.

ஆசரிப்புக்கூடாரத்தை செய்வதற்கும், அதிலுள்ள பணிமுட்டுக்களை செய்வதற்கும் கர்த்தர் ஒரு சிலரை விசேஷமாய்த் தெரிந்தெடுக்கிறார் (யாத் 31:1-11).

கர்த்தர் ஓய்வுநாள் பிரமாணத்தை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார் (யாத் 31:12-17). கர்த்தர் மோசேயிடம் சாட்சியின் இரண்டு பலகைகளைக் கொடுக்கிறார் (யாத் 31:18).

### பெசலெயேலும் அகோலியாபும் யாத் 31:1-11

**யாத் 31:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 31:2. நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,**

**யாத் 31:3. விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,**

**யாத் 31:4. இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும்,**

**யாத் 31:5. மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்.**

**யாத் 31:6. மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபையும் அவனோடே துணையாகக் கூட்டினதுமன்றி, ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன்; நான் உனக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் செய்வார்கள்.**

**யாத் 31:7. ஆசரிப்புக் கூடாரத்தையும் சாட்சிப் பெட்டியையும் அதின்மேலுள்ள கிருபாசனத்தையும், கூடாரத்திலுள்ள சகல பணிமுட்டுகளையும்,**

**யாத் 31:8. மேஜையையும் அதின் பணிமுட்டுகளையும், சுத்தமான குத்துவிளக்கையும் அதின் சகல கருவிகளையும், தூபபீடத்தையும்,**

**யாத் 31:9. தகனபலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும்,**

**யாத் 31:10. ஆராதனை வஸ்திரங்களையும், ஆசாரிய ஊழியம் செய்வதற்கான ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்தவஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,**

**யாத் 31:11. அபிஷேக தைலத்தையும், பரிசுத்த ஸ்தலத்துக்குச் சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, அவர்கள் செய்ய வேண்டும் என்றார்.**

ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரு சில வேலைகளை மிகவும் நுணுக்கமாக செய்யவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்திற்காக ஜனங்கள் பொருட்களை காணிக்கையாக கொண்டு வருகிறார்கள். அந்தப் பொருட்களை வைத்து ஆசரிப்புக்கூடாரத்தையும், பரிசுத்த பணிமுட்டுக்களையும் செய்யவேண்டும்.

மோசே எகிப்து தேசத்தில் பார்வோனுடைய அரண்மனையில் நாற்பது வருஷங்களாகயிருந்தார். மோசே எகிப்தியரின் சாஸ்திரங்களையெல்லாம் கற்று அறிந்திருந்தார். ஆனாலும் அவருக்கு மெல்லிய நூலினால் பின்னுகிற வேலையோ அல்லது வெண்கல வேலைகளோ, பொன்னிலே கற்களை பதிக்கும் வேலைகளோ தெரியாது.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விநோதமான வேலைகளை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தவர்கள். அங்கே அவர்களுக்கு மண் மிதிக்கும் வேலையும், செங்கல் செய்யும் வேலையும் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு பொன்வேலையோ, இரும்பு வேலையோ செய்யத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஆனாலும் அவர்களில் சிலர் ஞானஇருதயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு பொன்னாலும், வெள்ளியாலும், வெண்கலத்தாலும் நூதன வேலைகளை செய்வதற்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தபோது, அவர்கள் மத்தியிலே பொற்கொல்லர்களோ, மரத்தச்சர்களோ, இரும்பு வேலை செய்கிற கொல்லர்களோ ஒருவருமில்லை. அவர்கள் எல்லோரும் செங்கல் வேலைகளையும், கட்டிடம் கட்டுகிற வேலைகளையும் செய்கிறவர்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு விநோதமான வேலைகளை செய்ய தெரியாவிட்டாலும், கர்த்தர் சர்வஞானமுள்ளவராகயிருக்கிறார். அவர் இந்த வேலைகளை செய்வதற்கு போதுமானவராயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரில் ஒரு சிலரை விநோதமான வேலைகளை செய்வதற்கு தெரிந்தெடுத்து அவர்களுடைய இருதயத்திலே ஞானத்தை அருளுகிறார். அவர்கள் கர்த்தருக்கு சித்தமான வேலைகளை நேர்த்தியாய்ச் செய்கிறார்கள்.

கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைக்கிறார் (யாத் 31:2).

கர்த்தர் பெசலெயேலை விநோதமான வேலைகளை யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்புகிறார் (யாத் 31:3-5).

பெசலெயேல் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவன். யூதாகோத்திரத்தார் கர்த்தருக்கு பிரியமானவர்கள். அந்த கோத்திரத்தாரை உயர்த்துவதும், மேன்மைப்படுத்துவதும் கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது. பெசலெயேல் ஊருடைய பேரன்.

இஸ்ரவேல் ஜனத்தார் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். மோசேயின் கை தாழ்ந்துவிடாதவாறு ஆரோனும், ஊரும் அவருடைய கையை தாங்கிப்பிடித்துக்கொண்டிருந்தார்கள் (யாத் 17-ஆவது அதிகாரம்). பெசலெயேலின் தாத்தாவாகிய ஊரும், மோசேயின் கையை தாங்கிப்பிடித்த ஊரும் ஒரே நபராக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இவர் மோசேயின் சகோதரியாகிய மிரியாமின் கணவர் என்று யோசபஸ் என்னும் சரித்திர ஆசிரியர் சொல்லுகிறார்.

ஆசரிப்புக் கூடாரத்தை தம்முடைய திட்டத்தின்படி செய்வதற்குத் தேவன் ஒருசிலரைத் தெரிந்தெடுத்து அவர்களைத் தம்முடைய ஆவியினால் நிரப்புகிறார். (யாத் 31:3-6; யாத் 28:3; யாத் 35:31). பெசலெயேலை உலோக வேலை, கல்வேலை, மரவேலை ஆகியவற்றைச் செய்வதற்கும், (யாத் 31:1-5; யாத் 37:1,29), அகோலியாபை துணி நெசவு சம்பந்தமான வேலை செய்வதற்கும் (யாத் 31:6; யாத் 35:35; யாத் 38:23) தேவன் தம்முடைய ஆவியினால் நிரப்புகிறார்.

கர்த்தர் விநோதமான வேலைகளை செய்வதற்கு அகோலியாபையும் தெரிந்தெடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபையும் அவனோடே துணையாகக் கூட்டினதுமன்றி, ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன்; நான் உனக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் செய்வார்கள்" (யாத் 31:6) என்று சொல்லுகிறார்.

அகோலியாப் தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் தாண் கோத்திரத்தார் மிகவும் சாதாரணமானவர்கள். இவர்கள் யூதாகோத்திரத்தையும், லேவி கோத்திரைத்தையும்போல மிகவும் முக்கியமான கோத்திரத்தார் அல்ல. ஆனாலும் கர்த்தர் தாண் கோத்திரத்திலுள்ள அகோலியாபை, விநோதமான வேலைகளை செய்வதற்கு தெரிந்தெடுக்கிறார்.

சாலொமோன் தேவாலயம் கட்டியபோது ஈராம் என்பவன், சகல வேலைகளுக்கும் தலைவனாயிருந்தான். ஈராமும் தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

"அவன் தாணின் குமாரத்திகளில் ஒரு ஸ்திரீயின் குமாரன்; அவன் தகப்பன் தீருதேசத்தான்; அவன் பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும், இரும்பிலும், கற்களிலும், மரங்களிலும், இரத்தாம்பரநூலிலும் இளநீலநூலிலும் மெல்லிய நூலிலும், சிவப்பு நூலிலும் வேலைசெய்யவும், சகலவிதக் கொத்துவேலை செய்யவும், என்னென்ன செய்யவேண்டுமென்று அவனுக்குச் சொல்லப்படுமோ, அவைகளையெல்லாம் உம்மிடத்திலுள்ள நிபுணரோடும், உம்முடைய தகப்பனாகிய தாவீது என்னும் என் ஆண்டவனின் நிபுணரோடுங்கூட யூகித்துச் செய்யவும் அறிந்தவன்" (2நாளா 2:14).

கர்த்தர் பெசலெயேலை பெயர் சொல்லி அழைத்து, அகோலியாபை அவனுக்கு துணையாக கூட்டினதுபோல, விநோதமான வேலைகளை செய்வதற்கு மேலும் சிலரையும் பயன்படுத்துகிறார். கர்த்தர் ஞானஇருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளுகிறார். கர்த்தர் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் செய்கிறார்கள் (யாத் 31:6).

தம்முடைய விசேஷித்த ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் யாரை தெரிந்தெடுக்கிறாரோ அவர்களை தம்முடைய ஆவியினால் நிரப்புகிறார். அவர்களுடைய இருதயங்களிலே ஞானத்தை அருளுகிறார்.

ஒரு சிலருக்கு ஒரு சில கலைகளில் விசேஷித்த திறமையிருக்கும். கர்த்தரே அந்த திறமைகளை தம்முடைய கிருபையினால் பயன்படுத்துகிறார். கர்த்தர் அவர்களுடைய இருதயத்தில் ஞானத்தை அருளுகிறார். அப்போது அவர்களுடைய விசேஷித்த திறமைகள் வெளிப்படுகிறது.

நாம் கர்த்தரிடத்திலிருந்துதான் ஞானத்தையும், அறிவையும், விசேஷித்த திறமைகளையும் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தருடைய தயவினால் நம்முடைய ஞானமும் அறிவும், திறமையும் வளம் பெறுகிறது.

கர்த்தர் தொழில் செய்கிறவர்களுக்கு, அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை போதிக்கிறார். அதுபோலவே, கர்த்தர் விவசாய வேலைகளை செய்கிறவர்களுக்கும், விசேஷித்த பயிற்சி கொடுக்கிறார்.

"அவன் அதை மேலாக நிரவின பின்பு, அததற்கேற்ற இடத்தில் உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும் கம்பையும் விதைக்கிறான் அல்லவோ? அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து, அவனை உணர்த்துகிறார்" (ஏசா 28:25,26).

கர்த்தர் தம்முடைய வரங்களை, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக மனுபுத்திரருக்கு பகிர்ந்து கொடுக்கிறார். கர்த்தர் ஒரு சிலருக்கு ஒரு சில வரங்களையும், வேறு சிலருக்கு வேறு வரங்களையும் கொடுக்கிறார். இந்த வரங்கள் எல்லாமே கர்த்தருடைய சபையின் நன்மைக்காகவும், மனுக்குலத்தின் பொதுவான நன்மைக்காகவும் பிரயோஜனமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்வதற்கு மோசே தகுதியானவர். ஆனாலும் பெசலெயேலே ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கு விசேஷித்த ஞானத்தைப் பெற்றிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக யாரை அழைக்கிறாரோ, அவர்களை அந்த ஊழியத்தை செய்வதற்கு தகுதிப்படுத்தவும் செய்கிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணம் செய்கிறார்கள். அங்கே கர்த்தருக்கு வாசஸ்தலமாக ஒரு கூடாரம் போடவேண்டும் என்பதும், அந்தக் கூடாரத்தில் பரிசுத்த பணிமுட்டுக்களை செய்து வைக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆசரிப்புக் கூடாரத்தையும் சாட்சிப் பெட்டியையும் அதின்மேலுள்ள கிருபாசனத்தையும், கூடாரத்திலுள்ள சகல பணிமுட்டுகளையும், மேஜையையும் அதின் பணிமுட்டுகளையும், சுத்தமான குத்து விளக்கையும் அதின் சகல கருவிகளையும், தூபபீடத்தையும், தகனபலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும், செய்யவேண்டும்" *(யாத் 31:7-9)* என்றும்,

"ஆராதனை வஸ்திரங்களையும், ஆசாரிய ஊழியம் செய்வதற்கான ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும், அபிஷேக தைலத்தையும், பரிசுத்த ஸ்தலத்துக்குச் சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, அவர்கள் செய்ய வேண்டும்" *(யாத் 31:10,11)* என்றும் சொல்லுகிறார்.

பொன்வேலைகளை செய்பவர்களும், வெள்ளி வேலைகளை செய்கிறவர்களும், வெண்கல வேலைகளை செய்கிறவர்களும் கர்த்தருக்கு பரிசுத்தமான பணிமுட்டுகளை செய்கிறார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய ஆவியினால் நிரப்புகிறார். அவர்களுடைய இருதயத்தில் ஞானத்தை அருளுகிறார். அவர்கள் கர்த்தர் செய்ய சொன்ன வேலைகளை நேர்த்தியாய்ச் செய்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய அப்போஸ்தலர்களை சுவிசேஷ ஊழியத்திற்காக அனுப்பியபோது, அவர்கள்மீது தம்முடைய பரிசுத்த ஆவியானவரை ஊற்றினார். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை மனுஷர் மத்தியிலே பிரசங்கிக்கவேண்டும்.

கர்த்தருடைய மகிமையான காரியங்களை அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளினால் பேசி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். சுவிசேஷத்தின் கூடாரத்தை கட்டியெழுப்பும் ஊழியமே அப்போஸ்தலரின் ஊழியம். அவர்கள் இரும்பினாலோ, பொன்னினாலோ, வெள்ளியினாலோ சுவிசேஷத்தின் கூடாரத்தை கட்டியெழுப்பாமல், மனுஷருடைய இருதயங்களில், சுவிசேஷத்தின் கூடாத்தை கட்டியெழுப்பினார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய ஊழியக்காரர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வரங்களை பகிர்ந்துகொடுக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற வரங்களை அவருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும்.

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" *(எபி 9:11,12)*.

## ஓய்வுநாள்
## யாத் 31:12-17

**யாத் 31:12. மேலும், கர்த்தர் மோசேயினிடத்தில்:**

**யாத் 31:13. நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.**

**யாத் 31:14. ஆகையால், ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக: அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்கக்கடவன்; அதிலே வேலைசெய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்.**

**யாத் 31:15. ஆறுநாளும் வேலைசெய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது; ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படவேண்டும்.**

**யாத் 31:16. ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள்.**

**யாத் 31:17. அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.**

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டும். அது அவர்களுக்கு பரிசுத்தமானது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மற்ற பிரமாணங்களை கொடுப்பதற்கு முன்பாகவே, ஓய்வுநாள் பிரமாணத்தை பற்றி சொல்லியிருக்கிறார். இந்தப் பிரமாணத்தை அவர்கள் பரிசுத்தமாய் ஆசரிப்பதற்கு கர்த்தர் அவர்களை இதுவரையிலும் ஆயத்தம் செய்து வந்திருக்கிறார்.

"அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றார்" *(யாத் 16:23).*

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன நீதிநெறியின் பிரமாணத்திலும் ஓய்வுநாளை பற்றிய பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு சொன்ன பத்துக்கட்டளைகளில் ஓய்வுநாளைப்பற்றிய கட்டளை நான்காவது கட்டளையாகும்.

"ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம்நாளிலே உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக" *(யாத் 23:12).*

கர்த்தர் இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு ஆராதனை சம்பந்தமான பிரமாணத்தைச் சொல்லுகிறார். ஆராதனையின் ஒரு பகுதி ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்பதாகும்.

கர்த்தர் மோசேயினிடத்தில், "நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்" *(யாத் 31:11,12)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்காதவர்களுக்கு கர்த்தர் தண்டனையும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆகையால், ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக: அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்கக்கடவன்; அதிலே வேலைசெய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். ஆறுநாளும் வேலைசெய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது; ஓய்வுநாளில் வேலை செய்கிறவன் எவனும் கொலைசெய்யப்பட வேண்டும்" *(யாத் 31:14,15)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் வேலைகளை நியமித்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுத்த வேலைகளை அவர்கள் நேர்த்தியாகவும், விரைவாகவும் செய்யவேண்டும். ஒருவரும் சோம்பேறியாகயிருக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் அதிவேகமாக, அவசரப்பட்டு எந்த வேலையையும் செய்வது கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தர் நியமித்திருக்கிற வேகத்திற்குட்பட்டு அவர்கள் வேலை செய்யவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆறுநாளும் வேலை செய்யவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம். அவர்கள் ஏழாம் நாளிலே வேலை செய்யவேண்டியதில்லை. அந்த நாள் அவர்களுக்கு பரிசுத்தமான நாள். அவர்கள் ஏழாம் நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஆசரிப்புக்கூடாரத்தை உண்டுபண்ணுகிறார்கள். இது கர்த்தருடைய ஊழியம். ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்களும், அதில் பயன்படுத்தப்படும் பணிமுட்டுக்களை செய்கிறவர்களும் ஆறுநாட்களுக்கு வேலை செய்தால் போதுமானது. ஏழாம் நாளிலே அவர்கள் வேலை செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும். அந்த ஓய்வுநாளை அவர்கள் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

கர்த்தர் ஓய்வுநாளைப்பற்றி மோசேக்கு சொல்லும்போது, "இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக் கடவர்கள். அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்" (யாத் 31:16,17) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஓய்வுநாளை பரிசுத்தப்படுத்தி அதைக் கனம்பண்ணுகிறார். கர்த்தர் பரிசுத்தப்படுத்தும் ஓய்வுநாள் நமக்கும் பரிசுத்தமானதாயிருக்கிறது. கர்த்தர் பரிசுத்தமாக்கின ஓய்வுநாளை நாம் பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. கர்த்தர் மோசேயிடம் ஓய்வுநாளைப்பற்றி பல காரியங்களை சொல்லுகிறார்.

ஓய்வுநாள் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கிறது (யாத் 31:13,17). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மற்ற ஜாதியாரிடமிருந்து வேறுபிரித்து, அவர்களை தமக்கு சொந்த ஜனமாக அங்கீகரித்து, அவர்களை மேன்மைப்படுத்தியிருக்கிறார்.

ஓய்வுநாள் மற்ற நாட்களிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு கர்த்தருக்கு பரிசுத்தநாளாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் மற்ற ஜாதியாரிடமிருந்து வேறுபிரிக்கப்பட்டு கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பரிசுத்தப்படுத்தி, தம்மை சேவிப்பதற்காக அவர்களை வேறுபிரித்திருக்கிறார். இவையெல்லாவற்றிற்கும் ஓய்வுநாள் அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வுநாள் பரிசுத்தமானது (யாத் 31:14). இஸ்ரவேல் ஜனத்தாருடைய நன்மைக்காகவும், தம்முடைய மகிமைக்காகவும் கர்த்தர் ஏழாம் நாளை ஓய்வுநாளாக பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். ஓய்வுநாள் மனுஷருக்காக நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வுநாள் கர்த்தருக்கு பரிசுத்தமானது. இந்த நாள் மற்ற நாட்களிலிருந்து வேறுபட்டிருக்கிறது. ஓய்வுநாளிலே நாம் உலகப்பிரகாரமான வேலைகளில் ஈடுபடாமல், கர்த்தரை கனம்பண்ணுவதிலும், அவருக்கு சேவை செய்வதிலும் நம்முடைய நேரத்தை செலவு செய்து, அதை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை தங்கள் தலைமுறைதோறும் நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கவேண்டும் (யாத் 31:16). அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் முன்பாகவே கர்த்தர் அவர்களுக்கு ஓய்வுநாள் பிரமாணத்தைக் கொடுக்கிறார். அவர்களுடைய பின்சந்ததியார், கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பும், அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

ஒரு பொக்கிஷத்தை நாம் பத்திரமாக வைத்திருப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டும் (யாத் 31:13,14,16). கர்த்தர் ஓய்வுநாள் பிரமாணத்தை, ஒரு பொக்கிஷத்தை ஒப்படைப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பத்திரமாக ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக அதிகாரத்தினால் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கட்டளைகளை கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய கட்டளைக்கு தாங்கள் ஏன் கீழ்ப்படியவேண்டும் என்று அவர்கள் கர்த்தரிடத்தில் விவாதம்பண்ணவும் கூடாது. விளக்கம் கேட்கவும் கூடாது. ஆனாலும் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதில், கர்த்தரே அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறார். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் (யாத் 31:17).

ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு கர்த்தர் தண்டனை கொடுப்பதாகவும் சொல்லுகிறார். ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவன் கொலையுண்கக்கடவன் என்றும், அதிலே வேலைசெய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்றும் (யாத் 31:14) கர்த்தர் சொல்லுகிறார். மேலும் ஓய்வுநாளிலே வேலை செய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 31:15).

கர்த்தர் ஓய்வுநாளைப்பற்றி சொல்லியிருக்கிற பிரமாணம் இஸ்ரவேல் புத்திரரோடு தொடர்புடையது. கர்த்தர் ஓய்வுநாள் பிரமாணத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு பிரத்தியேகமாக சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

1. நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி கூறுவாயாக. (யாத் 31:13).

2. நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்.

3. இது எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.

4. இது உங்கள் தலைமுறைதோறும் அடையாளமாயிருக்கும்.

5. உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி இதை ஆசரிக்க வேண்டும்.

6. உங்களைக் கர்த்தர் பரிசுத்தப்படுத்தியிருக்கிறார்.

7. நீங்கள் ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக. (யாத் 31:14).

8. அது உங்களுக்குப் பரிசுத்தமானது.

9. இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும். (யாத் 31:16).

10. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்க வேண்டும்.

11. அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும். (யாத் 31:17).

மேலே கூறப்பட்டிருக்கும் வசனங்கள் அனைத்தும் இஸ்ரவேல் புத்திரரோடு தொடர்புடையது. இதன் மூலமாக ஓய்வுநாள் பிரமாணத்திற்கும், புறஜாதியாருக்கும், புதிய ஏற்பாட்டுச் சபையாருக்கும், சம்பந்தமில்லை என்று தெரியவருகிறது.

ஓய்வுநாள் தேவனுக்கும், இஸ்ரவேலுக்கும் ஓர் அடையாளம் என்று நான்கு முறை கூறப்பட்டிருக்கிறது. (யாத் 31:13,17; எசே 20:12,20). பழைய உடன்படிக்கை ஒழிந்துபோனபோது, அதன் அடையாளமும் ஒழிந்துபோயிற்று. தேவன் இதை முன்னறிவித்து, (ஏசா 1:13; ஓசி 2:11) இயேசு கிறிஸ்துவில் நிறைவேற்றினார். (ரோமர் 10:4; 2கொரி 3:6-15; கலா 3:19-25; கலா 4:21-31; எபே 2:14-16; கொலோ 2:14-17; எபி 7:10).

ஒய்வுநாள் உடன்படிக்கையின் அடையாளம் மட்டுமல்ல. புறஜாதியாருக்கு இது சாட்சியாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு வேறுபிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த உலகத்திற்குள் மேசியா வருவதற்கு இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியாக இருக்கிறார்கள். இந்த வாக்கியத்தில் பரிசுத்தப்படுத்துதல் என்பதற்கு தேவனுடைய அழைப்பிற்காக வேறுபிரிக்கப்படுதல் என்று பொருள்.

"ஒய்வுநாளை ஆசரிப்பீர்களாக" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். ஒருகுறிப்பிட்ட நாளை ஓய்வுநாளாக ஆசரிக்க வேண்டுமென்று புறஜாதியாருக்கோ, அல்லது புதிய ஏற்பாட்டுச் சபையாருக்கோ கட்டளை கொடுக்கப்படவில்லை (ரோமர் 14:5-6; கலா 4:9-11). புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தில் யூதரும், புறஜாதியாரும் எல்லா நாட்களையும் பாவம் செய்யாமல், பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும். எந்தவொரு குறிப்பிட்ட நாளும் யாரையும் பாவியாக்காது. ஒருவனுடைய பாவகிரியையே அவனைப் பாவியாக்குகிறது. (1யோவான் 3:4).

"அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணக்கடவன்" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். ஓய்வுநாளில் விறகு பொறுக்குகிறவன் கல்லெறிந்து கொல்லப்படக்கடவன். (எண் 15:32-36) புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தில் எல்லா நாளிலும் வேலை செய்யலாம். எல்லா நாளிலும் கர்த்தரை ஆராதிக்கலாம். (ரோமர் 14:4-5; கலா 4:9-11; கொலோ 2:14-17).

"ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார். புதிய ஏற்பாட்டில் ஓய்வுநாள் பிரமாணம் கட்டளையாகக் கூறப்படவில்லை. ஓய்வுநாளைப் பற்றிக் கூறப்பட்டாலும், ஒரே கிழமை எல்லா வருஷத்திலும் ஓய்வுநாளாக வராது. தேவன் சனிக்கிழமையில் ஓய்ந்திருந்தார் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. (ஆதி 2:3-4). தேவன் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார் என்று மட்டுமே வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அது என்ன கிழமையில் என்று கூறப்படவில்லை.

புதிய ஏற்பாட்டுச்சபையில் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையைக் கிறிஸ்தவ விசுவாசிகள் ஓய்வுநாளாக ஆசரித்து, அதைப் பரிசுத்தப் படுத்தி, அன்றைய தினத்தில் சபையாகக் கூடிவந்து, கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

"அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்" (யாத் 31:17) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்தில் "என்றைக்கும்" என்று கூறப்பட்டிருப்பதினால் இந்தப் பிரமாணம் "இன்றைக்கும்" புதிய ஏற்பாட்டுச் சபையாரைக் கட்டுப்படுத்தும் என்று பொருள்கூறக்கூடாது. மோசேயின் பிரமாணம் நித்தியமானது என்றும், ஆகையினால் அதைப் புதிய ஏற்பாட்டுச் சபையாரும் கடைபிடிக்க வேண்டுமென்றும் கூறுவது தவறான உபதேசம்.

மோசே ஓய்வுநாள் பிரமாணத்தை மட்டுமல்ல, அவர்கள் பலிகளைப் பற்றியும் கூறியிருக்கிறார். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் விசுவாசிகள் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டுமென்றால், மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் இப்போதும் பலிகளைச் செலுத்தி, பல்வேறு சடங்குகளையும் நிறைவேற்ற வேண்டியது வரும். மோசேயின் பிரமாணம் ஒழிந்து போயிற்று. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவின் புதிய பிரமாணம் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார். (ஆதி 1:1-2) கர்த்தருடைய சிருஷ்டிப்பின் கிரியை நிறைவேறிற்று. ஆகையினால், அவர் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார். அவருடைய கிரியைகள் நிறைவேறவில்லையென்றால், அவர் ஏழாம் நாளிலும்கூட கிரியை செய்திருப்பார். தம்முடைய குமாரனாகிய கிறிஸ்து மூலமாக கர்த்தர் ஓய்வுநாளைப் பற்றி தெளிவாக உபதேசம் பண்ணியிருக்கிறார். (மத் 12:1-8; மாற்கு 2:23-3:5; லூக்கா 13:10-17; யோவான் 5:1-16; யோவான் 9:1-41). கர்த்தர் ஓய்வுநாளில் பூரித்தார் (யாத் 31:17= யாத் 23:12; 2சாமு 16:14).

## சாட்சியின் இரண்டு பலகைகள் யாத் 31:18

**யாத் 31:18. சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்.**

சீனாய்மலையில் மோசே நாற்பது நாள் உபவாசம்பண்ணி முடிந்தபின்பு. (யாத் 24:12-18; உபா 9:9-18) ஆசரிப்புக் கூடாரம் (யாத் 25:1-27:21; யாத் 30:1-21) ஆசாரியத்துவம், வஸ்திரங்கள், ஊழியங்கள் (யாத் 28:1-29:46), அபிஷேகத்தைலம், தூபவர்க்கங்கள் (யாத் 30:22-38), விசித்திரவேலை செய்கிறவர்கள் (யாத் 31:1-11), ஓய்வுநாளைப் பற்றிய புதிய கட்டளைகள் (யாத் 31:12-18) ஆகியவற்றைப் பற்றிய வெளிப்பாடுகளைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்பு. சீனாய் மலையிலிருந்து ஆறாம் முறையாகக் கீழே இறங்கி வருவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். (யாத் 19:3).

மோசே சீனாய் மலையிலே, கர்த்தருடைய சமுகத்திலே நாற்பதுநாள் இரவும் பகலும் இருக்கிறார். கர்த்தர் மோசேயோடு பேசி முடித்த பின்பு, இரண்டு பலகைகளை அவரிடத்தில் கொடுக்கிறார். இவை தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளாகும்.

கர்த்தர் சொன்ன பத்துக்கட்டளைகள் இந்தப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் சீனாய் மலையிலிருந்து பத்துக்கட்டளைகளை சொன்னபோது, அதை இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கேட்டார்கள். தாம் சொன்ன பத்துக்கட்டளைகளை, கர்த்தர் இப்போது தம்முடைய விரலினால் இரண்டு கற்பலகைகளில் எழுதி, அதை மோசேயினிடத்தில் கொடுக்கிறார்.

எழுதப்பட்டது சீக்கிரத்தில் அழிந்துபோகாமல் நிலைத்திருக்கும். கர்த்தர் தம்முடைய கட்டளைகளை காகிதத்தில் எழுதாமல் கற்பலகைகளில் எழுதியிருக்கிறார். கர்த்தருடைய கட்டளைகளெல்லாமே இஸ்ரவேல் புத்திரருக்கு நித்திய கட்டளைகளாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறை தோறும், கர்த்தருடைய கட்டளைகளை நினைவுகூர்ந்து, அவற்றை கைக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் பத்துக்கட்டளைகளையும் இரண்டு கற்பலகைகளில் எழுதியிருக்கிறார். காகிதத்தில் எழுதப்பட்டதைவிட, கற்பலகைகளில் எழுதப்பட்டது நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும்.

யாத் 24:12 ஆவது வசனத்தில் தேவன் மோசேயை நோக்கி "நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு. நான் உனக்குக் கற்பலகைகளைக் கொடுப்பேன்" என்று கூறினார்.

கர்த்தர் தம்முடைய கட்டளைகளை எழுதுவதற்கு எழுத்தாணியை பயன்படுத்தவில்லை. கர்த்தருடைய கட்டளைகள் தேவனுடைய விரலினால் எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய சித்தத்தினாலும் வல்லமையினாலும், தம்முடைய கட்டளைகளை, கற்பலகைகளில் எழுதியிருக்கிறார்.

"தேவனுடைய விரல்" என்னும் வாக்கியம் மிகவும் விசேஷமானது. தானி 5:5,24; யோவான் 8:6 ஆகிய வசனங்களைப் போல இதைப் பிரத்தியட்சமான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இது தேவனுடைய வல்லமையைக் குறிக்கும் என்று இதற்கு உருவகப் பொருள் கூறுவதற்கு வாய்ப்பில்லை. (யாத் 8:19; லூக்கா 11:20). தேவன் தம்முடைய விரலினால் இந்தக் கற்பலகைகளை எழுதினார். தேவனுக்குக் கைகளும், விரல்களும் உள்ளன (யாத் 24:12; யாத் 31:18; யாத் 32:14-15; யாத் 34:27-28; உபா 5:22; உபா 9:10; 2கொரி 3:6).

கர்த்தருடைய ஆவியானவரே, தம்முடைய கட்டளைகளை மனுஷருடைய இருதயங்களில் எழுதுகிறார்.

"ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது. நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம்" *(2கொரி 3:3,4).*

கர்த்தர் தம்முடைய பத்துக்கட்டளைகளையும் ஒரே பலகையில் எழுதாமல், இரண்டு பலகைகளில் எழுதியிருக்கிறார். நாம் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதும், மனுஷர்மீது அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதும் இதற்கு அடையாளம். நாம் கர்த்தருக்கு செய்ய வேண்டிய ஊழியத்தையும் செய்யவேண்டும். மனுஷருக்கு செய்யவேண்டிய கடமைகளையும் செய்யவேண்டும்.

கர்த்தர் மோசேயிடம் கொடுத்த பலகைகள் சாட்சியின் பலகைகள் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பலகைகளில் கர்த்தருடைய சித்தம் சாட்சியாக எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது அன்பாகயிருக்கிறார் என்பதற்கும், கர்த்தர் அவர்களுக்கு நன்மை செய்வார் என்பதற்கும் கற்பலகைகளில் எழுதப்பட்டிருக்கிற வாக்கியங்கள் சாட்சியாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் இந்தப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கிற கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அந்த வார்த்தைகள் அவர்களுக்கு விரோதமாக சாட்சியாயிருக்கும். ஆகையினால் தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளும், சாட்சியின் பலகைகள் என்று அழைக்கப்படுகிறது.

# 32 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்து வருகிறார். கர்த்தர் அவர்கள் மத்தியிலே அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துகிறார். அவர்களை ஆளுகை செய்வதற்காக கர்த்தர் தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரப்பாதையின் வழியாக கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, கர்த்தரோடு சமாதானமாயிருக்கிறார்கள்.

மோசே சீனாய் மலையில் நாற்பது நாட்கள் இரவும் பகலும் கர்த்தருடைய சமுகத்திலே உபவாசத்தோடிருக்கிறார். அந்த நாற்பது நாட்கள் நிறைவுபெறுகிறது. கர்த்தர் மோசேயின் கையிலே தம்முடைய விரலால் எழுதின இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறார். மோசே அந்தக் கற்பலகைகளை பெற்றுக்கொண்டு, சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வர தன்னை ஆயத்தப்படுத்துகிறார்.

சீனாய் மலைக்கு கீழே இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் தன்னை அன்போடு வரவேற்பார்கள் என்றும், கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லும்போது, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு சந்தோஷமாய்க் கீழ்ப்படிவார்கள் என்றும் மோசே எதிர்பார்க்கிறார். சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வந்தவுடன், இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை போடவேண்டும் என்னும் திட்டமும் மோசேயின் மனதிலிருக்கிறது.

ஆனால் மோசே எதிர்பார்த்த பிரகாரம், சீனாய் மலைக்கு கீழே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக காத்திருக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களை பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும், விக்கிரகாராதனைக்கும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். மோசே அந்த ஸ்தலத்திலே இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தருடைய பிரமாணங்களை சொன்னார். அவர்களும், கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணினார்கள். இப்போதோ அவர்கள் அதே ஸ்தலத்தில், கர்த்தரை ஆராதியாமல், ஒரு பொன்கன்றுக்குட்டியை செய்து, அதை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போகிறார். கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் அவர்களை விட்டு விலகிப்போகிறது. கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே பரிசுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களோ அந்த உடன்படிக்கையை மீறி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்களிடத்தில் ஆவிக்குரிய வேசித்தனம் காணப்படுகிறது. இதனால் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே இருக்கிற உடன்படிக்கையும், ஐக்கியமும் முறிந்துபோயிற்று. முறிந்துபோன ஐக்கியத்தை மறுபடியும் ஒன்றாய் இணைப்பது மிகவும் கடினமான காரியம்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பொன்கன்றுக்குட்டியை செய்து அதைத் தங்கள் தெய்வமாக ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தில் ஆரோனுக்கும் பங்கு இருக்கிறது (யாத் 32:1-6).

இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையைப்பற்றி கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். மோசே இப்போது கர்த்தரோடு சீனாய் மலையிலிருக்கிறார் (யாத் 32:7,8). இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் எழும்பியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறார் (யாத் 32:9,10).

மோசே சீனாய் மலையிலே, இஸ்ரவேல் புத்திரருக்காக, கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார் (யாத் 32:14). மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார். இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை செய்து அதை ஆராதித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனைக்கு மோசே கண்ணாரக்கண்ட சாட்சியாயிருக்கிறார் (யாத் 32:15-19).

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய விக்கிரகாராதனையைக் கண்டபோது கோபமூண்டவராகி, தன் கையிலிருக்கிற கற்பலகைகளை உடைத்துப்போடுகிறார் (யாத் 32:19) இஸ்ரவேல் ஜனத்தார் உண்டுபண்ணின பொன்கன்றுக்குட்டியை அக்கினியில் சுட்டெரித்துப்போடுகிறார் (யாத் 32:20).

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகத்தை ஆராதிப்பது பற்றி, மோசே ஆரோனிடத்தில் விசாரிக்கிறார் (யாத் 32:21-24). இஸ்ரவேல் ஜனத்தாரை விக்கிரகாராதனைக்கு நேராக வழிநடத்தின தலைவர்களுக்கு மோசே மரணதண்டனை கொடுக்கிறார் (யாத் 32:25-29).

மோசே மறுபடியும் சீனாய் மலையில் ஏறிப்போய், இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபிக்கிறார் (யாத் 32:30-32). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய கோபம் குறையவேண்டும் என்பதே மோசேயின் பிரதான ஜெபமாகும். கர்த்தர் மோசேயின் ஜெபத்திற்கு கிருபையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்துக்கு அழைத்துக்கொண்டு போகுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார் (யாத் 32:33-35).

## பொன்கன்றுக்குட்டி
## யாத் 32:1-6

**யாத் 32:1. மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள்.**

**யாத் 32:2. அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான்.**

**யாத் 32:3. ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டு வந்தார்கள்.**

**யாத் 32:4. அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள்.**

**யாத் 32:5. ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்.**

**யாத் 32:6. மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலி களைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்.**

மோசே சீனாய்மலையில் நாற்பது நாட்களுக்கு உபவாசித்து ஜெபிக்கிறார். இந்தச் சம்பவம் அவருடைய உபவாசத்தின் 38 அல்லது 39 ஆவது நாளில் நடைபெற்ற சம்பவமாக இருக்கலாம். யாத் 32:5 ஆவது வசனத்தில் "நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை" என்று ஆரோன் கூறுகிறார். ஆரோன் கன்றுக்குட்டியை வார்த்துச் செய்திருக்கிறார். ஒரே நாளில் பொன்னையெல்லாம் உருக்கி, கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார். பண்டிகை நாளில் மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார் (யாத் 32:5-28).

மோசே சீனாய் மலையிலே கர்த்தருடைய சமுகத்திலே இரவும் பகலும் நாற்பது நாட்களாக இருக்கிறார். கர்த்தர் மோசேயின் கையிலே தம்முடைய விரலினால் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறார். அப்போது இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சீனாய் மலைக்கு கீழே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் அங்கே கர்த்தரைப்பற்றியும், அவர் ஏற்கெனவே தங்களுக்கு சொன்ன பிரமாணங்களைப்பற்றியும் தியானிக்கலாம். ஆனால் அவர்களோ கர்த்தரைப்பற்றியும் அவருடைய வார்த்தைகளைப்பற்றியும் தியானிக்காமல், கர்த்தருக்கு விரோதமான நூதன காரியங்களைப்பற்றி யோசிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அவர்களும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களில் சிலர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல், கர்த்தருக்கு விரோதமாக எவ்வாறு கலகம்பண்ணுவது என்று யோசிக்கிறார்கள்.

மோசே சீனாய் மலையில் கர்த்தருடைய சமுகத்திலே நாற்பது நாட்களாகயிருக்கிறார். அவர் அங்கே இருந்த முப்பத்தொன்பதாவது நாளிலே, மலைக்கு கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரில் சிலர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்தை எவ்வாறு மீறலாம் என்று அவர்கள் ஆலோசனை செய்கிறார்கள்.

மோசேயின் சகோதரனாகிய ஆரோன் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே இருக்கிறார். மோசே சீனாய் மலையின்மீது கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரோடு இருக்க முடியாத இந்த நாட்களிலே, மோசேயின் ஸ்தானத்திலே ஆரோன் அவர்களை ஆளுகை செய்கிறார். மோசே மலையிலிருந்து இறங்கி வர தாமதமாகிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள்.

சீனாய் மலையின்கீழே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு பொறுமையில்லை. அவர்கள் தங்களுக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிற ஆரோனிடத்தில் கூட்டங்கூடி வருகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஆரோனை நோக்கி, "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" (யாத் 32:1) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங் கூடுகிறார்கள். எகிப்து தேசத்திற்குத் திரும்பிப் போகவேண்டுமென்றும் தங்களுக்குத் தெய்வங்களை உண்டுபண்ண வேண்டுமென்றும் இஸ்ரவேல் புத்திரர் தீர்மானமாக இருக்கிறார்கள். (யாத் 32:1,22; அப் 7:39-40). மோசே அவர்கள் மத்தியில் இல்லை. ஆரோனால் அவர்களைத் தைரியமாக வழிநடத்த இயலவில்லை. ஜனங்களுடைய விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து, ஆரோனும் ஒரு தெய்வத்தைச் செய்து, அவர்களோடு எகிப்திற்குத் திரும்பிப்போகச் சம்மதிக்கிறார் (யாத் 32:1-6).

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம் "நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொல்லுகிறார்கள். பத்துக் கற்பனைகளில் முதல் இரண்டு கற்பனைகளை இஸ்ரவேல் புத்திரர் மீறுகிறார்கள். தேவனுக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவோம் என்று அவர்கள் ஆணையிட்டதை மீறிவிடுகிறார்கள் (யாத் 20:3-6; யாத் 24:3,7).

"மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" என்றும் இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம் சொல்லுகிறார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசே இஸ்ரவேல் புத்திரரை விடுவித்து, வனாந்தரத்தின் வழியாக வழிநடத்திக் கொண்டு வருகிறார். தேவன் மோசேயின் மூலமாகப் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். எகிப்தின் தெய்வங்களுக்கு வல்லமையில்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது. ஆனாலும் தங்களுக்கு ஒரு தெய்வத்தை உண்டுபண்ண வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம் கூறுகிறார்கள். மோசே விக்கிரகாராதனையைத் தடைபண்ணியிருக்கிறார். (யாத் 20:3-6). இஸ்ரவேலரின் தூஷணமான இந்தச் செய்கையை மோசே உபா 9:8-21,25-29; உபா 10:1-11 ஆகிய வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலைக்கு கீழே பாளயமிறங்கியிருக்கிறார்கள். மோசே இப்போது அவர்கள் மத்தியிலே இல்லை. அவர் சீனாய் மலையின்மேலே கர்த்தருடைய சமுகத்திலிருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இல்லாதபோது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக சிந்திக்கிறார்கள். அவர்களுடைய மனது கெட்டுப்போயிற்று. அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரால் மோசே வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்க முடியவில்லை. அவர்கள் திரளான ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே கோபமும், வாக்குவாதங்களும், முரட்டாட்டங்களும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை நோக்கி பிரயாணம் பண்ணுகிறார்கள். அந்த தேசம் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ வாக்குத்தத்த தேசத்திற்கு போக பொறுமையில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் காத்திருப்பதினால் களைப்படைந்துபோயிருக்கிறார்கள். கானான் தேசத்திற்கு உடனே போய்ச்சேர வேண்டுமென்று அவசரப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, தங்களோடுகூட கர்த்தருடைய வார்த்தைகளையும் கொண்டுபோகவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற இந்த நாட்களிலே, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும், வார்த்தைகளையும் ஒவ்வொன்றாக வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைகளை, அவருடைய சமுகத்திலே பொறுமையோடு காத்திருந்து பெற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. அவர்கள் பொறுமையில்லாமல் அவசரப்படுகிறார்கள்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நாம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, நாம் கர்த்தருடைய பிரமாணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காத்திருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களோடு ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை பொறுமையோடு கேட்டால்தான், அவர் சொல்லுகிற நிபந்தனைகள் என்ன என்பது நமக்கு தெரியவரும். கர்த்தருடைய சமுகத்திலே காத்திருப்பதினால் நமக்கு நன்மையே உண்டாகும். காத்திருக்கும் காலம் ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் சீனாய் மலையின்கீழே பாளயமிறங்கியிருக்கிறார்கள். மோசே ஏற்கெனவே சீனாய் மலைக்கு மேலே ஏறிப்போயிருக்கிறார். மோசே மலையிலிருந்து இறங்கி வருவதற்காக ஜனங்கள் மலைக்கு கீழே காத்திருக்கிறார்கள். மோசே மலையிலிருந்து இறங்கிவர தாமதமாயிற்று. அவர்கள் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" (யாத் 32:1) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, மரியாதையில்லாமல் "அந்த மோசே" என்று மரியாதை குறைவான வார்த்தையை சொல்லுகிறார்கள். மோசே அவர்கள்மீது அன்பாகவும், கரிசனையாகவும் இருக்கிறார். அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு கர்த்தருடைய கருவியாகப் பயன்பட்டவர்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, மோசே இதுவரையிலும் தங்களுக்கு செய்த உதவிகளை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் மோசேக்கு நன்றியுள்ளவர்களாகயில்லை. மோசே அவர்களுக்காகத்தான் சீனாய் மலைக்குமேல் ஏறிப்போயிருக்கிறார். மோசே அவர்களுக்காகத்தான் கர்த்தருடைய சமுகத்திலே நாற்பதுநாள் இரவும் பகலும் உபவாசத்தோடு இருக்கிறார்.

மோசே சீனாய் மலையிலிருக்கும்போது கர்த்தர் அவரோடு கூட பேசுகிறார். மோசே மலையிலிருந்து இறங்கிவர தாமதமாகிறது என்றால், கர்த்தர் அவரோடுகூட பேசவேண்டியது ஏராளமாயிருக்கிறது என்று பொருள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் நன்மைக்காகவே மோசேயினிடத்தில் தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தைகளை அதிகமாய்ப் பெற்றுக்கொண்டால், இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான நன்மை உண்டாகும்.

மோசே சீனாய் மலையின்மேல் தனக்காகவோ அல்லது தன்னுடைய சொந்த குடும்பத்திற்காகவோ ஏறிப்போகவில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதியாக சீனாய் மலையின்மேல் ஏறி, கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறார். அவர் நாற்பது நாள் இரவும் பகலும் அந்த மலையின்மீது இருந்தாலும், அவர் ஒன்றும் புசியாமல் உபவாசத்தோடு கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறார்.

மோசே மலையின்மேல் ஏறிப்போயிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தைகளை பெற்றுக்கொண்ட பின்பு, அவர் நிச்சயமாய் மலைக்கு கீழே இறங்கிவருவார். மோசே போன காரியம் முடிந்துவிட்டால், அவர் மலையின் மேலேயே தங்கிவிடமாட்டார். கர்த்தர் மோசேயோடு பேசுவதற்கு நாற்பது நாட்களை எடுத்துக்கொள்கிறார். இதனால்தான் மோசே மலையிலிருந்து இறங்கி வர தாமதமாயிற்று.

ஆனால் மலையின் கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரோ, மோசே மலையிலிருந்து இறங்கி வர தாமதமானதை, தங்களுடைய துன்மார்க்கமான யோசனைக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள். சகலமும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய வேளையிலும் நடைபெறும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு மறுபடியும் வருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் தமக்கு சித்தமான வேளையிலே மறுபடியும் வருவார். அவர் வருவதற்கு தாமதமாகும்போது, அந்த தாமதத்திற்கு தப்பிதமாக வியாக்கியானம் பண்ணக்கூடாது. கர்த்தருடைய வேளை வரும் வரையிலும் நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். தப்பிதமான வியாக்கியானங்கள் நம்மை தவறான பாதையில் வழிநடத்தும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்போது பரலோகத்திலே தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அங்கே அவர் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய சரீரப்பிரகாரமான கண்களால், கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் பரிந்துபேசுவதை, நம்மால் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியாது. பரலோகத்தின் இரகசியங்கள் நமக்கு மறைவாயிருக்கிறது. ஆனாலும் நாம் தரிசித்து ஜீவிக்காமல், கர்த்தரை விசுவாசித்து ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருக்காக காத்திருப்பதில் நாம் ஒருபோதும் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தருடைய சமுகத்திலே பொறுமையோடு காத்திராதவர்கள் பல்வேறு விதமான சோதனைகளிலே சிக்கிக்கொள்கிறார்கள். கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கிறவர்களோ புதுபெலன் பெறுகிறார்கள்.

மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வர ஆயத்தமாயிருக்கிறார். மலைக்கு கீழே இருக்கிற இஸ்ரவேல் புத்திரர், இன்னும் ஒரு நாள் காத்திருந்தால், மோசே அவர்கள் மத்தியிலே வந்துவிடுவார். அப்போது மோசேக்கு என்ன சம்பவித்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளலாம். ஆனால் அவர்களோ பொறுமையில்லாதவர்களாக, அவசரப்பட்டு, "அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தெய்வீக ஆராதனையை ஸ்தாபனம்பண்ணுகிறார். அவர்களுக்கு தம்முடைய தெய்வீக பிரமாணங்களையும் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய தெய்வீக பிரமாணங்களை பெற்றுக்கொள்ள காத்திருப்பதிலே சோர்ந்துபோயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இந்த மலையிலே கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஆனால் அவர்கள் விரும்பிய பிரகாரம், அவர்களால் கர்த்தரை உடனே ஆராதிக்க முடியவில்லை. தமக்கு பரிசுத்த ஸ்தலத்தை ஸ்தாபிப்பதற்கான கட்டளைகளை கர்த்தர் மோசேக்கு சொல்லியிருக்கிறார். அந்தக் கட்டளைகளை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும் முன்பாகவே, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சுயயோசனையின் பிரகாரமாக ஒருவிக்கிரகத்தை செய்து அதை ஆராதிக்கிறார்கள்.

தாங்கள் செய்த விக்கிரகம் தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம் என்று அவர்கள் தங்களுக்கு தாங்களே நினைத்துக்கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனையில் சந்தோஷப்படுகிறார்கள். தாங்கள் உண்டுபண்ணின பொன்கன்றுக்குட்டியை நினைத்து அவர்கள் பெருமைப்படவும் செய்கிறார்கள். தங்கள் கைகளால் உண்டுபண்ணின விக்கிரகத்தை அவர்கள் ஆராதனை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு பொன்கன்றுக்குட்டியை செய்து அதை தெய்வமாக ஆராதிக்கிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்திலே இருந்தபோது, எகிப்தியர்கள் கன்றுக்குட்டியை தங்கள் தெய்வமாக ஆராதனை செய்ததை, இஸ்ரவேல் ஜனத்தார் பார்த்திருப்பார்கள். எகிப்தியர்கள் கன்றுக்குட்டியை மாத்திரமல்ல, மேலும் பல தெய்வங்களையும் ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் மாத்திரமே தேவனாயிருக்கிறார். கர்த்தர் ஒருவரே. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ ஆரோனை நோக்கி, "தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே பல தெய்வங்களை ஆராதிக்கும் எண்ணம் இருக்கிறது. தங்களுக்கு எத்தனை தெய்வங்கள் வேண்டும் என்பது அவர்களுக்கே தெரியாது. கர்த்தர் மாத்திரமே அவர்களுக்கு போதுமானவராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரோ தங்களுடைய தேவனாகிய கர்த்தரை மறந்துவிட்டு, தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை தங்களுக்காக உண்டுபண்ணும் என்று ஆரோனிடம் சொல்லுகிறார்கள். அவர்கள் எத்தனை தெய்வங்களை உண்டுபண்ணினாலும், அவை மெய்யான தெய்வமல்ல. கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன். அவரே சர்வசிருஷ்டிகர். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, சிருஷ்டிகராகிய கர்த்தரை ஆராதியாமல், தாங்கள் உண்டுபண்ணின சிருஷ்டியாகிய பொன்கன்றுக்குட்டியை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம், "நீர் எழுந்து, எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொல்லுகிறார்கள். அதற்கு ஆரோன், "உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" (யாத் 32:2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடம், "தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொன்னபோது, ஆரோன் அவர்களுடைய யோசனையை மறுத்ததாக தெரியவில்லை. அவர்களுடைய வார்த்தைகளை நிராகரித்ததாகவோ அல்லது அவர்களுடைய யோசனைக்கு எதிர்ப்பு சொன்னதாகவோ இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. அவர்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம், அவர்களுக்காக தெய்வங்களை உண்டுபண்ண ஆரோன் ஆயத்தமாயிருக்கிறார். ஆரோன் அவர்களுடைய கோரிக்கையை அங்கீகரிக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இல்லாதபோது, ஆரோன் அவர்களுடைய ஆவிக்குரிய காரியங்களை கவனிக்கவேண்டும். ஆரோன் அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியத்தை உபதேசம்பண்ணவேண்டும். ஆனால் ஆரோனோ, இஸ்ரவேல் புத்திரருக்கு மறுப்பு வார்த்தை ஒன்றும் சொல்லாமல், அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ண சம்மதிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்காக தெய்வங்களை உண்டுபண்ண வேண்டும் என்று கேட்பது அவர்களுடைய மதியீனமான காரியம். அவர்கள் ஆரோனிடத்தில் கேட்டது ஒருவேளை ஆரோனுக்கு நகைப்பாகவும், ஏளனமாகவும் இருந்திருக்கலாம் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ஆரோன் அவர்களுக்கு வேடிக்கையான ஒரு பொருளை செய்து, அதை அவர்களுடைய தெய்வம் என்று சொல்ல நினைத்திருப்பார் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய மதியீனத்தை அவர்களுக்கு விளக்கி சொல்ல ஆரோன் முன்வந்தார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய ஸ்திரீகளுக்கு காதுகளிலிருக்கிற பொன்னணிகள் மிகவும் விசேஷமானது. அவை தங்களுக்கு அலங்காரமானது என்றும், முக்கியமானது என்றும் இஸ்ரவேல் ஸ்திரீகள் நினைக்கிறார்கள். அவர்களுடைய ஸ்திரீகள் தங்கள் காதுகளில் இருக்கிற பொன்னணிகளை கழற்றமாட்டார்கள் என்று ஆரோன் எதிர்பார்த்திருப்பார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஸ்திரீகள் தங்கள் பொன்னணிகளை கழற்றி ஆரோனிடத்தில் கொடுப்பதற்கு பதிலாக, தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணவேண்டாம் என்று சொல்லுவார்கள் என்று ஆரோன் எதிர்பார்த்தார் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆரோன் இஸ்ரவேல் புத்திரருடைய மதியீனமான யோசனையை அழித்துப்போட முயற்சி பண்ணுகிறார். அவர்கள் எல்லோரும் பொன்னாபரணங்கள்மீது பேராசையுள்ளவர்கள். பொன்னாபரணங்களை கழற்றி கொடுத்துவிட்டால் தங்களுக்கு பெருத்த நஷ்டம் உண்டாகும் என்று நினைத்து, தங்கள் பொன்னணிகளை கழற்றிக்கொடுக்கமாட்டார்கள் என்றும், தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணவேண்டாம் என்று சொல்லுவார்கள் என்றும் ஆரோன் எதிர்பார்த்தார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"பையிலிருக்கிற பொன்னைக்கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலிபொருத்திக்கொள்ளுகிறார்கள்; அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்; அதை வணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள்" (ஏசா 46:6).

இஸ்ரவேல் புத்திரரோ, தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை தங்களுக்காக உண்டுபண்ணவேண்டும் என்பதில் உறுதியாயிருக்கிறார்கள். தங்களுடைய பொன்னணிகளை ஆரோனிடத்தில் கொடுப்பதினால், தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், தங்களுக்கு தெய்வங்கள் உண்டுபண்ணப்படவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு தங்கள் பொன்னணிகளைவிட, விக்கிரகங்களே முக்கியமானதாகயிருக்கிறது. இஸ்ரவேலின் ஸ்திரீகள், தங்கள் பொன்னணிகளினால் தங்களை அலங்கரித்து பெருமைப்படுவதற்கு பதிலாக, தங்களுக்கு விக்கிரகங்களை செய்து, அந்த விக்கிரகங்களில் பெருமைப்படுகிறார்கள்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம், ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, அவரிடத்தில் கொண்டு வருகிறார்கள் (யாத் 32:3).

முதல் முறையாகக் காதணிகளையும், பொன்னணிகளையும் இஸ்ரவேல் புத்திரர் கொடுக்கிறார்கள். (யாத் 32:2-6). ஆசரிப்புக்கூடாரத்தைப் பண்ணும்போது அவர்கள் மறுபடியுமாகத் தங்கள் பொன்னணிகளைக் கொடுக்கிறார்கள். (யாத் 35:22-29).

கிழக்குத் தேசங்களில் ஸ்திரீகளைப்போல புருஷர்களும் காதணிகளையும், வளையங்களையும், மூக்குத்திகளையும் அணிந்திருந்தார்கள். பொன்னணிகள் பொதுவாக ஸ்திரீகளுக்கே உரியவை. (யாத் 35:22; எண் 31:50; ஏசா 3:19-21; எசே 16:11-12). ஒட்டகங்களும் பொன்சரப்பணிகளைத் தரித்திருந்தன. (நியா 8:26).

ஆரோனிடத்தில் ஆவிக்குரிய பின்மாற்றம் காணப்படுகிறது. அதைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஜனங்கள் மோசேயைப் பற்றித் தவறாகக் கூறியதை ஆரோன் கவனித்துக் கேட்கிறார் (யாத் 32:1).
2. திரளான ஜனங்கள் விக்கிரகாராதனை செய்ய வேண்டுமென்று கூறியபோது, ஆரோனும் சம்மதம் தெரிவித்து, தன்னுடைய பெயர், புகழை ஸ்தாபிக்க விரும்புகிறார் (யாத் 32:1,22).
3. ஒரு விக்கிரகத்தைச் செய்வதற்கு ஆரோனும் ஜனங்களோடு சம்மதம் தெரிவிக்கிறார் (யாத் 31:2).
4. விக்கிரகத்தை வார்ப்பிக்க ஜனங்களிடத்திலிருந்து பொன்னணிகளைப் பெற்றுக் கொள்கிறார் (யாத் 31:4).
5. ஆராதனை செய்வதற்கு ஜனங்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார்.
6. பொன்கன்றுக்குட்டிக்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார் (யாத் 31:5).
7. கன்றுக்குட்டிக்கு ஒரு பண்டிகையை நியமித்து, கன்றுக்குட்டியைக் கர்த்தரோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.
8. கன்றுக்குட்டிக்குச் சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதான பலிகளைச் செலுத்துகிறார்(யாத் 31:6).
9. கன்றுக்குட்டியை ஆராதிக்கும்போது ஜனங்களைப் புசிக்கவும், குடிக்கவும், உட்கார்ந்து விளையாடவும் அனுமதிக்கிறார் (யாத் 32:6,19).
10. கன்றுக்குட்டியைப் பணிந்து கொள்கிறார் (யாத் 31:8).
11. இஸ்ரவேலரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த தெய்வங்கள் இவைகளே என்று விக்கிரகங்களைக் குறித்துக் கூறுகிறார்.
12. ஆரோன் தான் செய்த பாவத்தை மற்றவர்கள்மீது சுமத்துகிறார் (யாத் 32:21-23).
13. கன்றுக்குட்டி அக்கினியிலிருந்து தானாக வந்தது என்று பொய்கூறுகிறார் (யாத் 31:24).

14. தேவனுடைய கோபத்திற்கு முன்பாக ஜனங்களை நிறுத்திவிடுகிறார் *(யாத் 32: யாத் 11-14,25).*

ஆரோன் அவர்கள் கையிலிருந்து அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார். அப்பொழுது அவர்கள்: "இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" *(யாத் 32:4)* என்று சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் கன்றுக்குட்டி பிரதான தெய்வமாக இருக்கிறது. அதற்கு "ஆபீஸ்" என்று பெயர். கோசேன் பகுதிக்கு அருகில் மெம்பீஸ் பட்டணத்தில் எகிப்தியர் கன்றுக்குட்டியை வழிபட்டார்கள். இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தில் விக்கிரகங்களை ஆராதனை செய்தார்கள். *(யோசு 24:14; எசே 20:8; யாத் 23:3-8).*

"உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" என்று ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரும் கன்றுக்குட்டியைத் தெய்வங்கள் என்று கூறுகிறார்கள். இந்த வசனத்தில் தெய்வங்கள் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "எலோஹிம்" என்பதாகும். தேவனுடைய பெயரைக் கன்றுக்குட்டிக்குக் கொடுக்கிறார்கள் *(யாத் 32:1,4,8,23,31).*

இஸ்ரவேல் புத்திரர், "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று கேட்டபோது ஆரோன் அவர்களுடைய யோசனையை மறுக்கவில்லை. தெய்வங்களை உண்டுபண்ணக்கூடாது என்று அவர்களிடத்தில் சொல்லாமல், பொன்னணிகளை கழற்றி தன்னிடத்தில் கொண்டு வருமாறு சொன்னார். அவர்களும் ஆரோன் சொன்ன பிரகாரம் தங்கள் காதுகளிலிருந்த பொன்னணிகளை கழற்றி ஆரோனிடத்தில் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஸ்திரீகளுக்கு காதுகளிலிருக்கிற பொன்னணிகள் மிகவும் விசேஷமானது. அது அவர்களுக்கு மேன்மையானது. ஸ்திரீகளுக்கு அவர்களுடைய காதுகளிலிருக்கிற பொன்னணிகளே மிகுந்த அலங்காரமானது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மிகவும் பிரியமான பொன்னணிகளினால், அவர்களுக்கு விக்கிரகங்களை செய்யும்போது, அவர்கள் அந்த விக்கிரகத்திற்கு அதிக மதிப்பு கொடுப்பார்கள் என்று ஆரோன் நினைத்திருக்கலாம். மரத்தாலும், இரும்பாலும், வெண்கலத்தாலும் செய்யப்படுகிற விக்கிரகத்தைவிட, பொன்னால் செய்யப்படுகிற விக்கிரகத்திற்கு ஜனங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று ஆரோன் நினைத்திருக்கலாம்.

ஆரோன் அவர்கள் கையிலிருந்து பொன்னணிகளை வாங்கி உருக்குகிறார். அதை சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார். கன்றுக்குட்டியின் வார்ப்பு வடிவம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. அந்த வார்ப்பிலே உருக்கப்பட்ட பொன்னை ஊற்றுகிறார். அந்த பொன் ஒரு கன்றுக்குட்டியாக வார்ப்பிக்கப்படுகிறது. ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரும் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியைப் பார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியைப் பார்த்து, மற்ற ஜனங்களை நோக்கி, "இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" *(யாத் 32:4)* என்று சொல்லுகிறார்கள்.

ஆரோனுடைய மனதிலே ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பிக்கவேண்டும் என்னும் எண்ணம் இருந்தது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கன்றுக்குட்டியானது தேவனுடைய தெய்வீக பிரசன்னத்திற்கு அடையாளம் என்று ஆரோன் நினைக்கிறார். கன்றுக்குட்டிக்கு தலையும் கொம்புகளும் உள்ளது. இவை தேவனுடைய வல்லமைக்கு அடையாளம் என்று ஆரோன் நினைத்திருக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆடுமாடுகளும், கன்றுக்குட்டிகளும் ஏராளமாயிருக்கிறது. அவர்கள் தங்கள் மத்தியிலே திரளாயிருக்கிற கன்றுக்குட்டியைப்போன்ற உருவமுள்ள, இந்தப் பொன்கன்றுக்குட்டியை, தங்களுடைய தெய்வமாக நினைத்து, அதை ஆராதிக்கமாட்டார்கள் என்று ஆரோன் நினைத்திருக்கலாம். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ அந்தக் கன்றுக்குட்டியைப் பார்த்து, "உங்கள் தெய்வங்கள் இவைகளே" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பல வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தவர்கள். எகிப்தியர்கள் கன்றுக்குட்டிகளையும், காளைகளையும் தங்கள் தெய்வங்களாக ஆராதிக்கிறவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்த காலத்தில், அவர்கள் கன்றுக்குட்டியை ஆராதிக்க கற்றுக்கொண்டிருப்பார்கள்.

"அவர்களோ, என் சொல்லைக் கேட்க மனதில்லாமல் எனக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள்; அவரவர் தங்கள் கண்களால் நோக்கின அருவருப்புகளைத் தள்ளிப்போடாமலும், எகிப்தின் நரகலான விக்கிரகங்களை விடாமலும் இருந்தார்கள்; ஆதலால் எகிப்து தேசத்தின் நடுவிலே என் கோபத்தை அவர்களிலே தீர்த்துக்கொள்ளும்படிக்கு என் உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றுவேன் என்றேன்" (எசே 20:8).

ஆரோன் ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தபோது, அதைப் பார்த்த உடனேயே, இஸ்ரவேல் புத்திரர் அதைத் தங்கள் தெய்வமாக அங்கீகரிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் இன்னும் விக்கிரகாராதனையிலிருந்து விடுவிக்கப்படவில்லை. அவர்கள் எகிப்தின் விக்கிரகங்களை விட்டு விலகி வரவில்லை.

"தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவர்கள் அவளுடைய வாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னிமையின் கொங்கைகளைத் தொட்டு, அவளிடத்தில் தங்கள் வேசித்தனத்தை நடப்பித்தார்கள்" (எசே 23:8).

ஆரோன் வார்ப்பித்த கன்றுக்குட்டியை இஸ்ரவேல் புத்திரர் பார்க்கிறார்கள். அதை தங்கள் தெய்வம் என்று சொல்லி, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய மதியீனத்தை வெளிப்படுத்துகிறார்கள். "தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்" (சங் 106:20).

இஸ்ரவேல் புத்திரர் ஓரேபிலே கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார்கள். அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை ஆராதிக்கிறார்கள். "அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்" (சங் 106:19).

தான் வார்ப்பித்த கன்றுக்குட்டியைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரர் சந்தோஷப்படுவதையும், அவர்கள் அதை தங்கள் தெய்வமாக அங்கீகரிப்பதையும் ஆரோன் பார்க்கிறார். ஆரோனுடைய மனதிலும் அதை பார்த்து சந்தோஷமுண்டாயிற்று. ஆரோன் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சந்தோஷத்தை அதிகப்படுத்தும் வண்ணமாக, தான் வார்ப்பித்த கன்றுக்குட்டியைப் பார்த்து அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்.

ஆரோன் பலிபீடத்தை கட்டிய பின்பு "நாளைக்கு கர்த்தருக்கு பண்டிகை" (யாத் 32:5) என்றும் சொல்லுகிறார். இந்தப் பண்டிகையானது ஆரோன் கட்டின பலிபீடத்தை பிரதிஷ்டைபண்ணும் பண்டிகையாகும். இந்தப் பலிபீடம் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு முன்பாக கட்டப்பட்டிருக்கிறது. இது விக்கிரத்தின் பலிபீடம். ஆனால் ஆரோனோ இதைப்பற்றிச் சொல்லும்போது, "இது கர்த்தருக்கு பண்டிகை" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரே நாளில் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போகிறார்கள். தேவன் நடப்பித்த அற்புதங்களையெல்லாம் கன்றுக்குட்டி தங்களுக்குச் செய்ததாகக் கூறுகிறார்கள். இந்த வசனத்தில் கன்றுக்குட்டியைக் கர்த்தர் என்று அழைக்கிறார்கள். இதற்கு ஆரோன் பயன்படுத்தும் எபிரெய வார்த்தை "யெகோவா" என்பதாகும். கன்றுக்குட்டியைத் தெய்வம் என்றவர்கள், இப்பொழுது அதைக் கர்த்தர் என்றே கூறிவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பார்வையிலே, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியானது ஒரு தெய்வமாக தெரிகிறது. ஆரோனுடைய பார்வையிலே, அந்தக் கன்றுக்குட்டி, கர்த்தருக்கு ஒப்பானதாக தெரிகிறது. இந்தக் கன்றுக்குட்டியின் மூலமாக கர்த்தரை ஆராதிக்கலாம் என்று ஆரோன் நினைக்கிறார். கர்த்தர் வேறு, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டி வேறு. ஆரோன் அதை வேறுபிரிக்காமல், அந்தக் கன்றுக்குட்டியையும், அதற்காக கட்டப்பட்ட பலிபீடத்தையும் பிரதிஷ்டைபண்ணும் வண்ணமாக, ஒரு பண்டிகையை ஆசரிக்கிறார். அந்தப் பண்டிகையை "கர்த்தருக்கு பண்டிகை" என்று சொல்லுகிறார்.

ஆரோனுடைய வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்துகிறார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்திருக்கிறார்கள் (யாத் 32:6).

இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டிக்குச் செய்த ஆராதனையில் சிலவற்றை அவர்களுடைய மெய்யான தேவனாகிய கர்த்தருக்கே செய்ய வேண்டும். ஆனால் இப்போதோ அவர்கள் கன்றுக்குட்டியைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலிசெலுத்துகிறார்கள். ஆடிப்பாடுகிறார்கள். கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். மெய்யான ஆவிக்குரிய அனுபவம் விசுவாசிகளிடத்தில் வளர வேண்டும் (2தீமோ 3:5).

ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்திருக்கிறார்கள். விளையாடுதல் என்பதற்கு இங்கு பயன்படுத்தப் பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "ட்சாக்காக்" என்பதாகும். இதற்குப் பலமாகச் சிரித்தல், பரியாசம் பண்ணுதல், வேசிமார்க்கத்தாரோடு விளையாடுதல் என்று பொருள். இந்த வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. விளையாடுதல் என்பது பொதுவாக விபசாரத்தைக் குறிக்கிறது. ஆதி 39:14 ஆவது வசனத்தில் இது பரியாசம் பண்ணுதலைக் குறிக்கிறது.

சில விக்கிரகங்களுக்கு ஸ்திரீகளை அர்ப்பணம் செய்யும் வழக்கமும் இருந்தது. தேவதாசிகள் என்று அழைக்கப்படும் இவர்கள் வேசித்தனத்தில் பயன்படுத்தப்பட்டார்கள். விக்கிரகாராதனையில் வேசித்தனமும் கலந்திருந்தபடியினால் இந்த ஆராதனைகளெல்லாம் தோப்புக்களிலும், உயர்ந்த மேடைகளாகிய மறைவிடங்களிலும் நடைபெற்றன.

இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டியைப் பணிந்து கொண்டபோது, "தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்" என்று கர்த்தர் அவர்களைக் குறித்து கூறுகிறார் (யாத் 32:7) அவர்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். அதை வீணாகப் பயன்படுத்துகிறார்கள். பெற்றோரைக் கனப்படுத்தாமல் அவமதிக்கிறார்கள். விபசாரம் பண்ணுகிறார்கள். பொய்கூறுகிறார்கள். பிறர்பொருளை இச்சிக்கிறார்கள். தேவனுடைய எல்லாக் கற்பனைகளையுமே இஸ்ரவேல் புத்திரர்கள் மீறிவிடுகிறார்கள். (யாத் 20:1-17)

மோசே இஸ்ரவேல் புத்திரரோடு இல்லாத சமயத்தில் அவர்கள் தேவனை விட்டு வழிவிலகி, விக்கிரகாராதனைக்கே சென்று விடுகிறார்கள். தேவன் அவர்கள்மீது கோபம்கொண்டு, அவர்களை அழிக்க ஆயத்தமாகிறார். மோசேயின் சந்ததியின் மூலமாக ஒரு புதிய தேசத்தை உண்டுபண்ணப்போவதாகக் கர்த்தர் கூறுகிறார். ஆனால் மோசேயோ கர்த்தரிடத்தில் தன்னுடைய ஜனங்களுக்காகப் பரிந்துபேசி, கெஞ்சிப் பிரார்த்திக்கிறார். கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரர்மீது இரக்கம் காண்பிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பூர்வகாலத்து வழக்கத்தின் பிரகாரமாக, பண்டிகையை சந்தோஷமாய் ஆசரிக்க தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் ஆரோன் கட்டின பலிபீடத்திலே வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டிக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும் செலுத்துகிறார்கள். அவர்கள் பலியாக செலுத்தப்பட்ட மிருகத்தின் மாம்சத்தையும் புசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய காதுகளிலிருந்த பொன்னணிகளெல்லாம் இப்போது வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியாகவும், அந்தக் கன்றுக்குட்டிக்கு முன்பாக கட்டப்பட்ட பலிபீடமாகவும், அந்தக் கன்றுக்குட்டிக்காக செலுத்தப்பட்ட சர்வாங்க தகனபலிகளாகவும், சமாதான பலிகளாகவும் ஆயிற்று. இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு சொந்தமான மிருகங்களை, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு பலியிட்டு, அந்த விக்கிரகத்தை மேன்மைப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு பொன்னாபரணங்களையும், ஆடுமாடுகளையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற ஐசுவரியத்திற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். தங்களுடைய பொன்னாலும், மற்ற உடமைகளாலும் அவர்கள் கர்த்தரை ஆராதித்து அவரை மகிமைப்படுத்த வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற பொருளாதார ஆசீர்வாதங்களை, விக்கிரகங்களை மகிமைப்படுத்த பயன்படுத்துகிறார்கள்.

சீனாய் மலையின் கீழே இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு பலிகளை செலுத்தி, புசித்து குடித்து வெறித்திருக்கிறார்கள். இதே ஸ்தலத்திலே, ஒரு சில நாட்களுக்கு முன்பாக கர்த்தர் அக்கினியிலே, அவர்களுக்கு மத்தியிலே வெளிப்பட்டார். அவர்கள் எல்லோரும் தங்களோடு பேசுகிற கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில், "உங்களுக்கு வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை உண்டுபண்ண வேண்டாம்" என்று சொன்னார். அவர்களும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவரோடு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். கர்த்தர் தங்களுக்கு சொன்ன எல்லா பிரமாணங்களுக்கும் தாங்கள் கீழ்ப்படிவதாக அவர்கள் உறுதிபண்ணினார்கள்.

"உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்" *(யாத் 24:7).*

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓரேபிலே தம்முடைய கட்டளைகளை கொடுத்தார். கர்த்தர் எந்த ஓரேபிலே தம்முடைய கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்தாரோ, அந்த ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பிக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜனங்கள் மத்தியிலே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. கர்த்தருடைய சுவிசேஷம் விக்கிரகாராதனைக்காரருக்கும் சொல்லப்படுகிறது. ஜனங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பெற்றுக்கொண்டபோது, தங்கள் விக்கிரகாராதனையைவிட்டு உடனே வெளியேறி வருகிறார்கள்.

"ஏனெனில், அவர்கள் தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே" *(1தெச 1:9,10).*

இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இந்த விக்கிரகாராதனையிலே ஆரோனுக்கும் பங்கு இருக்கிறது. ஆரோனே விக்கிரகத்தை வார்ப்பித்தார். அவரே அந்த விக்கிரகத்திற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக்கட்டி, "நாளைக்கு கர்த்தருக்கு பண்டிகை" என்று சொன்னார்.

இதே ஆரோன் இதற்கு முன்பு மோசேயோடுகூட சீனாய் மலைக்கு ஏறிப்போனவர். கர்த்தருடைய பிரசன்னத்தை மோசே தரிசித்ததுபோல, ஆரோனும் அவரோடுகூட கர்த்தருடைய பிரசன்னத்தை பிரத்தியட்சமாய்ப் பார்த்தவர்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்; ஆசாரியர்களும் ஜனங்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணாதபடிக்கு, எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதிருக்கக்கடவர்கள் என்றார்" (யாத் 19:24).

"பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய், இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது" (யாத் 24:9,10).

கர்த்தருடைய மகிமை எப்படியிருக்கும் என்பது ஆரோனுக்கு தெரியும். அந்த மகிமையை வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியின் மகிமையோடு ஒப்பிடமுடியாது என்பதும் ஆரோனுக்கு தெரியும். வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு ஜீவனுமில்லை மகிமையுமில்லை. ஆனாலும் ஆரோன் அந்தக் கன்றுக்குட்டிக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். கர்த்தருடைய பெயரினால் அந்தக் கன்றுக்குட்டிக்கு பண்டிகையை ஆசரிக்கிறார்.

கர்த்தருடைய மகிமையை தரிசித்த ஆரோனால், ஒரு பொன்கன்றுக்குட்டியை எவ்வாறு ஆராதிக்க முடிகிறது என்று வேதபண்டிதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஆரோன் தெளிந்த புத்தியில்லாமல், புத்திமயக்கத்தினால் இந்தக் காரியங்களை செய்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். அவர்கள் வெகுஜனமாக ஆரோனிடத்தில் வந்து, "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று அதிகாரத்தோடு கேட்கிறார்கள். ஆரோன் அவர்களுடைய திரளான எண்ணிக்கையும், அவர்களுடைய கோபத்தையும் பார்த்து, பயந்து, அவர்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்தார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இந்த சம்பவத்தைப்பற்றி யூதருடைய பாரம்பரிய சரித்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஆரோனை நோக்கி, "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" என்று சொன்னபோது, ஆரோனுக்கு அருகிலிருந்த ஊர் என்பவன், இஸ்ரவேல் புத்திரரை எதிர்த்தார் என்றும், அவர்களுடைய கோரிக்கையை ஊர் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், இதனால் இஸ்ரவேல் புத்திரர் ஊரின்மீது கோபப்பட்டு, அவரை கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

ஆரோன் ஊரின் மரணத்தைப் பார்த்து பயந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்துக் கொடுத்தார் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. பரிசுத்த வேதாகமத்திலும் இந்த சம்பவத்திற்கு பின்பு ஊரைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஊர் என்பவர், ஆரோன், மோசே ஆகியோரின் சகோதரியாகிய மீரியாமின் கணவர் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

## மோசேயின் பிரார்த்தனை யாத் 32:7-14

**யாத் 32:7. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்.**

**யாத் 32:8. அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்.**

**யாத் 32:9. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்.**

**யாத் 32:10. ஆகையால், என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.**

**யாத் 32:11. மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன?**

**யாத் 32:12. மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும்.**

**யாத் 32:13. உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப் பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக் கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான்.**

**யாத் 32:14. அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்.**

மோசே சீனாய் மலையின்மேலே கர்த்தருடைய சமுகத்திலிருக்கும்போது, சீனாய் மலையின்கீழே இஸ்ரவேல் புத்திரருடைய பாளையத்திலே நடைபெறுகிற சம்பவங்களை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள்" *(யாத் 32:7,8)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் தங்களை கெடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்லுகிறார். பாவம் மனுஷருடைய ஆத்துமாவைக் கெடுத்துப்போடும்.

கர்த்தர் அவர்களுடைய பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, தாம் அவர்களுக்கு விதித்த வழியை அவர்கள் விட்டு விலகிப்போகிறார்கள் என்றும் சொல்லுகிறார். நம்முடைய ஜீவியத்தின் பாதையில் பாவம் ஒரு குறுக்கு வழியாக இருக்கிறது. நாம் நேர் வழியில் செல்லாதவாறு பாவம் நம்மை வழிவிலகிப்போகப்பண்ணுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களைக் கொடுத்தபோது, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கெல்லாம் கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணினார்கள். இப்போதோ அவர்கள் தங்களுடைய வார்த்தையை மீறி, கர்த்தருடைய பிரமாணத்தை விட்டு விலகிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்தாலும், கர்த்தர் இந்த வசனப்பகுதியில் அவர்கள் செய்கிற ஒரு பாவத்தை விசேஷமாகச் சொல்லுகிறார். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்கு பலியிடுகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய பாவங்களை நாம் எப்படித்தான் மூடி மறைத்து வைத்தாலும், அது கர்த்தருக்கு முன்பாக வெளியரங்கமாகயிருக்கும். கர்த்தர் மனுஷருடைய இருதயத்தின் அந்தரங்க இரகசியங்களையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார். நம்முடைய மீறுதல்கள் எல்லாம் கர்த்தருக்கு பிரத்தியட்சமாய்த் தெரியும். கர்த்தர் நம்முடைய பாவங்களுக்கு தக்கபடி நம்மை தண்டிக்காமல், தம்முடைய கிருபையை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

நம்முடைய பாவங்களுக்காக கர்த்தர் நம்மை உடனே தண்டிக்கவில்லையென்றால், அந்தப் பாவத்தைப்பற்றி கர்த்தருக்கு ஒன்றும் தெரியாது என்றும், நாம் அந்தப் பாவத்தை கர்த்தருக்கு தெரியாமல் மறைத்து ஒளித்து வைத்துவிடலாம் என்றும் நினைக்கக்கூடாது. கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமே இல்லை. கர்த்தர் தம்முடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும், மனதுருக்கத்தினாலுமே, நம்முடைய பாவங்களுக்குத்தக்கபடி நம்மைத் தண்டியாமல், விட்டு வைத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், அவர்கள் தமக்கு பிரியமான ஜனமாயிருக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது. ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு விலகிப்போகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்து கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போவதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை தங்கள் தேவனாயிராதபடிக்கு புறக்கணிப்பதினால், கர்த்தரும் அவர்களை தம்முடைய ஜனமாயிராதபடிக்கு புறக்கணிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் சொல்லும்போது, "எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்" (யாத் 32:7) என்று சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை "தம்முடைய ஜனம்" என்று சொல்லுவதற்கு பதிலாக, "உன் ஜனங்கள்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப்பணிந்துகொண்டு, அதற்கு பலியிட்டு தங்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே அவமானப்படுத்துகிறார்கள். அவர்கள் தங்களை வெட்கப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய விக்கிரகாராதனையினால் தங்களுக்கு அவமானத்தை உண்டுபண்ணுகிறார்கள். கர்த்தரும் அவர்களைப்பற்றி நினைக்கும்போதும், அவர்கள்மீது தாம் அன்பாயிருந்ததை எண்ணிப் பார்க்கும்போதும் வெட்கப்படுகிறார்.

கர்த்தர் மோசேயை சீனாய் மலையிலிருந்து, இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு சீக்கிரமாய் இறங்கிப்போகுமாறு அவசரப்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கோபமாயிருக்கிறார். அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாக, கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூளுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால், என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்" (யாத் 32:9,10) என்று சொல்லுகிறார்

தேவன் இஸ்ரவேல் புத்திரர்மீது இரக்கம் காண்பிக்க மறுத்துவிட்டு, கோபம் கொள்கிறார். இஸ்ரவேல் புத்திரரைப் பற்றி தேவன் கூறிய காரியங்கள் மோசேக்கு இன்னும் தெரியவில்லை. இஸ்ரவேலரின் பாவங்களை மோசே கண்டபோது, அவர்களில் 3,000 பேரை கொன்றுபோடுகிறார். (யாத் 32:26-28). தம்மைவிட்டுப் பாவத்திற்குத் திரும்பிப்போகும் ஜனங்களைத் தேவன் அழித்துப்போடுவார்.

"உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்" என்று தேவன் மோசேயிடம் கூறுகிறார். தேவன் ஆபிரகாமிடம் கூறியதுபோல, மோசேயிடமும் இப்பொழுது கூறுகிறார். மோசே சுயநலமுள்ளவராக இருந்திருந்தால், தேவனுடைய வார்த்தையை அங்கிகரித்திருப்பார். இஸ்ரவேலரோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் நிறைவேற வேண்டுமானால், அவர்கள் தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரருடைய உண்மையான சுபாவத்தை கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தையும், நீதியையும் பார்க்கிறார். நாம் என்ன செய்கிறோம் என்பதை மாத்திரமல்ல, நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், நம்முடைய சுபாவம் எப்படிப்பட்டது என்பதையும் கர்த்தர் நோக்கிப் பார்க்கிறார். கர்த்தருடைய பார்வையில், வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை ஆராதிக்கிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூளுகிறது. நம்முடைய பாவம் கர்த்தருடைய கோபத்திற்கு முன்பாக நம்மை நிறுத்தும். கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவருடைய கோபம் தணியவில்லையென்றால், நாம் அவருடைய கோபத்திற்கு முன்பாக எரிந்து பொசுங்கிப்போவோம்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்மிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுவார் என்பது கர்த்தருக்கு தெரியும். மோசே அவர்களுக்காக ஜெபம்பண்ணுவதை கர்த்தர் தடைபண்ணுவதுபோல பேசுகிறார். "நீ என்னை விட்டு விடு" என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் நிமித்தமாக, அவர்களை அழித்துப்போடவேண்டும் என்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணினால், கர்த்தருடைய கோபம் குறையும்.

மோசே வணங்காக் கழுத்துள்ள இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபிக்கவேண்டாம் என்பதுபோலவும், அவர் தம்மை தனியே விட்டுவிடவேண்டும் என்றும் தாம் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடப்போவதாகவும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இந்த வார்த்தைகளின் மூலமாக ஜெபத்தைக் கனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால், மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசி ஜெபிக்கவேண்டும். கர்த்தருடைய கோபத்தை குறைப்பதற்கு, அவருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணுவதைவிட வேறு உபாயம் எதுவுமில்லை. கர்த்தர் மோசேயை பெரிய ஜாதியாக்குவதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய கோபத்தினால் அழிந்துபோனபின்பு, தான் ஒரு பெரிய ஜாதியாகவேண்டும் என்னும் விருப்பம் மோசேயினிடத்தில் இல்லை. கர்த்தருடைய கோபம் தணியவேண்டும் என்றும், இஸ்ரவேல் புத்திரர் அழிவுக்கு தப்பிக்கவேண்டும் என்றும் மோசே விரும்புகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தேவனுடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார்.

மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி, "கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன?" (யாத் 32:11) என்று ஜெபம்பண்ணுகிறார்.

தேவன் பொதுவாக ஜனங்களை அமைதிப் படுத்துவார். ஆனால் இங்கு மனுஷன் கர்த்தரை அமைதிப்படுத்துகிறான். (யோனா 4:1-9). தேவன் கோபிப்பதில் தாமதிக்கிறவர். (சங் 103:9; சங் 145:8) மனுஷன் தேவனுக்கு எரிச்சலூட்டும் காரியங்களைச் செய்யும்போது அவர் கோபம் கொள்கிறார். (உபா 4:25; உபா 9:18; உபா 31:29; உபா 32:16,21; எண் 14:22).

மோசே இஸ்ரவேல் ஜனங்களை "உம்முடைய ஜனங்கள்" என்று தேவனிடம் கூறுகிறார். தேவனே எகிப்து தேசத்திலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று அங்கிகரிக்கிறார். யாத் 32:7 ஆவது வசனத்தில் தேவன் மோசேயிடம் "எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள்" என்று இஸ்ரவேல் புத்திரரைப் பற்றிக் கூறுகிறார். இஸ்ரவேல் புத்திரரைத் தேவனும், தம்முடைய ஜனமாக அங்கீகரிக்கவில்லை. மோசேயும் அவர்களை தன்னுடைய ஜனமாக அங்கீகரிக்கவில்லை. இப்பொழுது அவர்கள் வனாந்தரத்தில் அனாதைகளைப் போல இருக்கிறார்கள்.

மோசே தேவனாகிய கர்த்தரை, "கர்த்தாவே, தேவரீர்" என்று அழைக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை புறக்கணித்து ஒதுக்கி தள்ளிவிட்டார். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாகயிராவிட்டாலும், அவர் தன்னுடைய தேவனாக இருக்கவேண்டும் என்று விரும்பி, மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "கர்த்தாவே, தேவரீர்" என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை பார்த்து "நீ என்னை விட்டு விடு" என்று சொன்னார். கர்த்தர் இந்த வார்த்தையை சொல்லும்போது, மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்மிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுவதை விரும்பாதது போல தெரிகிறது. ஆனால் மெய்யாகவே, மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக தம்மிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுமாறு, கர்த்தர் மோசேயை உற்சாகப்படுத்துகிறார். விசுவாசத்தோடு ஏறெடுக்கப்படும் ஜெபம் வல்லமையுள்ளது.

கர்த்தர் தம்முடைய நீதியினாலேயே இஸ்ரவேல் புத்திரர்மேல் கோபங்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய கோபம் அநீதியானதல்ல. கர்த்தர் தேவையில்லாமல், நியாயமில்லாமல், நீதியில்லாமல் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபங்கொண்டிருக்கிறார் என்று, மோசே அவர் மீது குற்றம் சொல்லவில்லை. ஆனாலும் கர்த்தருடைய கோபம் மிகவும் அதிகமாயிருக்கிறது என்றும், அவருடைய கோபம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக பற்றியெரிகிறது என்றும் மோசே மிகுந்த வேதனையோடு கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்துபேசுகிறார்.

மோசேயின் வாயில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும் வார்த்தைகள் நிரம்பியிருக்கிறது. அவர் கர்த்தரோடு விவாதம்பண்ணுவதுபோல தெரிகிறது. தன்னுடைய சாதுரிய வார்த்தைகளினால் கர்த்தரை அசைக்க முடியாது என்பது மோசேக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் விசுவாசமுள்ள ஜெபம் ஜெயத்தைக் கொடுக்கும் என்று மோசே நம்பிக்கையோடிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்பட்டு, மோசேயியினிடத்தில் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டு வந்த உன் ஜனங்கள்" (யாத் 32:7) என்று சொன்னார். கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன இந்த வார்த்தைகளை, மோசே கர்த்தரிடத்தில் மிகுந்த பணிவோடு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்கள்" (யாத் 32:11) என்று மோசே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருடைய தேவனாயிருக்கிறார். மோசே கர்த்தருடைய ஊழியக்காரர் மாத்திரமே. மோசே அவர்களை எகிப்து தேசத்திலிருந்து நடத்திக்கொண்டு வரவில்லை. கர்த்தரே அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். மோசே கர்த்தருடைய கரத்திலே பயன்படுத்தப்படும் ஒரு கருவியாக மாத்திரமே இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். கர்த்தருடைய உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு எந்த விதமான தகுதியுமில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். அவர்கள் எகிப்தியரின் தெய்வங்களை ஆராதித்தாலும், கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும், அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

"கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசு 24:15).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே கர்த்தருக்கு விரோதமாக என்ன பாவம் செய்தார்களோ, அதே மாதிரியான பாவத்தையே இப்போது வனாந்தரத்திலேயும் சீனாய் மலையின் கீழே செய்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்ததுபோலவே, இப்போதும் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். கர்த்தர் தமது கிருபையினால் அவர்களுக்கு எகிப்து தேசத்தில் உதவி செய்ததுபோல, இப்போதும் உதவி செய்யவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசும்போது, "உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன" என்று கேட்கிறார். மோசே கர்த்தரிடத்தில் மேலும் ஜெபம்பண்ணும்போது, "மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும்" (யாத் 32:12) என்றும் ஜெபம்பண்ணுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய மகிமையை முன் வைத்து, அவர்களுக்காக பரிந்து பேசுகிறார். "மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்?" என்று மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

எகிப்தியர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தூஷிப்பதை மோசே கேட்க விரும்பவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினால், கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் தண்டிக்கிறார். ஆனால் எகிப்தியர்களோ, கர்த்தருடைய நீதியைப்பற்றி அறியாதவர்களாக கர்த்தரை தூஷிப்பதற்கு வாய்ப்புள்ளது. எகிப்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பேசும் தூஷண வார்த்தைகளை மோசேயால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "கர்த்தாவே, எகிப்தியர்கள் உமக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளை சொல்லுவானேன்" என்று மோசே கர்த்தரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். கர்த்தர் மிகவும் அற்புதமாக இஸ்ரவேல் புத்திரரை இரட்சித்தார். அவர்கள் எவ்வளவு வேகமாக இரட்சிக்கப்பட்டார்களோ, அவ்வளவு வேகமாக அழிந்துபோனால், இந்த உலகம் அவர்களை வேடிக்கைப் பார்க்கும். எகிப்தியர்கள் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரர்மீதும், அவர்களுடைய தேவனாகிய கர்த்தர்மீதும் கோபமாகவும் விரோதமாகவும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அழிந்துபோவதை எகிப்தியர்கள் பார்க்கும்போது, அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை தூஷிப்பார்கள். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரின் இரட்சிப்பை ஆரம்பித்து வைத்தவர். ஆரம்பித்த கர்த்தரால் அவர்களுடைய இரட்சிப்பை நிறைவேற்றிக்கொடுக்க முடியவில்லை என்று எகிப்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளை சொல்லுவார்கள்.

கர்த்தரே எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை புறப்படப்பண்ணினவர். ஆனால் அவரால் அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகமுடியவில்லை. மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும் பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவார்கள்.

கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும், வல்லமையுள்ள கையினாலும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். ஆனால் கர்த்தருடைய வல்லமை குறைவுள்ளது என்றும், அவருடைய பலமும் குறைவானது என்றும், ஆகையினால் கர்த்தரால் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு கொண்டு போய் சேர்க்க முடியவில்லை என்றும் எகிப்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாக குற்றம் சொல்லுவார்கள்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். நாம் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டியவர்கள். நம்முடைய வார்த்தையின் மூலமாகவோ, செய்கையின் மூலமாகவோ அல்லது நம்முடைய ஜீவியத்தின் மூலமாகவோ கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் காரணமாயிருக்கக்கூடாது.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லியிருக்கிறார். வாக்குத்தத்தம்பண்ணிய கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் வாக்குமாறாதவர். மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் இஸ்ரவேலரின் முற்பிதாக்களுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தையும், மோசே கர்த்தருக்கு முன்பாக சொல்லி பிரார்த்திக்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்; உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப் பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக் கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே" *(யாத் 32:13)* என்று கெஞ்சிப் பிரார்த்திக்கிறார்.

நாமும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, மோசேயைப்போல, கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை, நம்முடைய வேண்டுதல்களிலும், விண்ணப்பங்களிலும் பயன்படுத்தவேண்டும். கர்த்தர் மோசேயின் பரிந்து பேசும் ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொள்கிறார் *(யாத் 32:14)*.

ஜெபம் வல்லமையுள்ளது. நாம் கர்த்தருடைய சமுகத்தில் மிகுந்த பணிவோடு ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் நமக்கு இரக்கம் காண்பிக்கிறார். மோசே கர்த்தரிடத்தில் கெஞ்சி பிரார்த்தனை செய்கிறார். கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரருக்கு தாம் செய்ய நினைத்த தீங்கை செய்யாதபடிக்கு, அவர்கள்மீது பரிதாபங்கொள்கிறார். கர்த்தர் பாவிகள்மீது கிருபையும், இரக்கமும், மனதுருக்கமுமுள்ளவர். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு கர்த்தர் கிருபை பெருத்தவர்.

## மோசேயின் கோபம்
## யாத் 32:15-20

**யாத் 32:15. பின்பு மோசே மலையிலிருந்து இறங்கினான்; சாட்சிப்பலகைகள் இரண்டும் அவன் கையில் இருந்தது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது.**

**யாத் 32:16. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது.**

**யாத் 32:17. ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதை யோசுவா கேட்டு, மோசேயை நோக்கி: பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்றான்.**

**யாத் 32:18. அதற்கு மோசே: அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது என்றான்.**

**யாத் 32:19. அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப் போட்டு;**

**யாத் 32:20. அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்.**

கர்த்தர் மோசேக்கு தம்முடைய விசேஷித்த கிருபைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் மோசேயின்மீது நம்பிக்கை வைத்து, அவருடைய கையிலே இரண்டு சாட்சிப்பலகைகளைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பலகைகள் சாதாரண கல்லிலே எழுதப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய கட்டளைகள் இந்தக் கல்லிலே எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் சாட்சிப்பலகைகள் இரண்டும் மிகவும் விசேஷமானவை ஆகும். ஆரோனுடைய மார்ப்பதக்கத்திலே விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. மோசேயின் கையிலிருக்கிற சாட்சிப்பலகைகள் இரண்டும், ஆரோனின் மார்ப்பதக்கத்திலுள்ள கற்களைவிட மிகவும் விலையேறப்பெற்றது.

மோசே மலையிலிருந்து இறங்கி வருகிறார். சாட்சிப்பலகைகள் இரண்டும் அவருடைய கையில் இருக்கிறது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருக்கிறது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருக்கிறது (யாத் 32:15,16).

மோசே சீனாய் மலையின்மேல் ஏறிப்போனபோது யோசுவாவும் அவரோடுகூட ஏறிப்போனார். மோசே தேவபர்வதத்திலே கர்த்தருடைய சமுகத்திலிருந்தபோது, யோசுவாவோ மோசேயோடு கூடயிருக்கவில்லை. அவர் அதே பர்வதத்தில், மோசே அவருக்கு நியமித்திருந்த வேறொரு இடத்தில் தனியாகயிருந்தார்.

மோசே கர்த்தர் கொடுத்த சாட்சிப்பலகைகளைப் பெற்றுக்கொண்டு மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார். அவர் யோசுவா இருக்கிற இடத்திற்குப்போய் அவரையும் அழைத்துக்கொண்டு, இருவருமாக மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார்கள். யோசுவா ஒரு இராணுவ வீரர். மிகுந்த கட்டுப்பாடு உடையவர். மோசே அவரை எந்த இடத்திலே தங்கியிருக்கவேண்டும் என்று சொன்னாரோ, அந்த இடத்திலே இந்த நாற்பது நாட்களும் தங்கியிருக்கிறார்.

சீனாய் மலைக்கு கீழே இஸ்ரவேல் புத்திரர் பொன்னால் ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதற்கு பலிகளை செலுத்தி, புசித்து குடித்து விளையாடுகிறார்கள். அவர்கள் ஆரவாரம்பண்ணுகிறார்கள். பொன்கன்றுக்குட்டிக்கு முன்பாக பாடல்களைப்பாடி நடனமாடுகிறார்கள். யோசுவா அந்த சத்தத்தைக் கேட்டு, பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்று நினைக்கிறார் (யாத் 32:17). இஸ்ரவேல் புத்திரருடைய பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் கேட்கப்படும்போது, யுத்தவீரராகிய யோசுவாவும் அங்கே இருக்கவேண்டுமென்று பிரியப்படுகிறார்.

பாளயத்தில் எப்படிப்பட்ட இரைச்சல் உண்டாயிருக்கிறது என்பது மோசேக்கு தெரியும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய விக்கிரகாராதனையைப்பற்றி மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். மோசேக்கு யுத்த இரைச்சலுக்கும், பாடலின் சத்தத்திற்கும் வித்தியாசம் தெரிகிறது.

ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதை யோசுவா கேட்டு, மோசேயை நோக்கி, "பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது" என்று சொல்லுகிறார். அதற்கு மோசே, "அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது" (யாத் 32:17,18) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி அதை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையினிமித்தமாக மோசே அவர்கள்மீது கோபமூண்டவராயிருக்கிறார். மோசேயின் கோபம் நீதியானது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகத்தை ஆராதித்து தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு சமீபமாய் வருகிறார்கள். அங்கே அவர்கள் வார்ப்பித்த கன்றுக்குட்டியையும், அதற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் நடனம்பண்ணுவதையும் மோசே காண்கிறார். அதைக் கண்டபோது மோசே மிகுந்த கோபமூண்டவராகிறார். அவர் தன் கையிலிருக்கிற சாட்சிப்பலகைகள் இரண்டையும் மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போடுகிறார் (யாத் 32:19).

மோசேக்குக் கோபம் இல்லாதபோது, அவர் தேவனைச் சமாதானப்படுத்த முயற்சி பண்ணுகிறார் (யாத் 32:11). ஜனங்களுடைய பாவமான காரியங்களை மோசே தன் கண்களால் கண்டபோது தேவனுடைய நீதியைக் காண்கிறார், கோபங்கொள்கிறார். அவர் 3,000 பேரைக் கொன்று போடுகிறார் (யாத் 32:19-28).

மோசே தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப் போடுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையைக் காண்கிறார். மோசே தேவனிடம் கெஞ்சிப் பிரார்த்திக்கவில்லை என்றால், தேவன் அவர்களை அழித்துப் போட்டிருப்பார். தேவனே கற்பலகைகளை எறிந்து உடைத்துப்போட்டிருப்பார். தேவன் செய்ய வேண்டிய காரியத்தை இங்கு மோசே செய்கிறார் (யாத் 32:10).

மோசே சாந்தகுணமுள்ளவர். ஆனாலும் அவர் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியையும், அதற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் நடனம்பண்ணுவதையும் பார்க்கிறபோது, அவருக்கு கோபமுண்டாகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சாந்தகுணமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவசரப்பட்டு கோபப்படக்கூடாது. கோபப்படுவதற்கு தாமதம்பண்ணவேண்டும். ஆனால் மோசேயோ, சாந்தகுணமுள்ளவராகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையை கண்டபோது, கோபமூண்டவராயிருக்கிறார்.

மோசேயின் கோபம் நீதியானது. அவர் துன்மார்க்கருடைய அக்கிரமத்தைப் பார்த்து கோபப்படுகிறார். மோசே கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாயிருக்கிறார். அவர் சாந்தகுணமுள்ளவராகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வதை பார்க்கும்போது, அவருடைய மனதிலே நீதியான கோபம் உண்டாயிற்று. இது பக்தி வைராக்கியத்தினால் ஏற்படுகிற கோபம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவர்கள் தேவனுடைய கிருபையை இழந்துபோயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய மகாபெரிய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு தேவனால் எழுதப்பட்ட சாட்சியின் பலகைகள் கொடுக்கப்பட்டிருப்பது, அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இதற்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரை ஆராதியாமல், ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி அதை ஆராதிக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். மோசே பொன்கன்றுகுட்டியையும், அதற்கு முன்பாக அவர்கள் நடனம்பண்ணுவதையும் பார்த்து, அவர்கள் மீது கோபப்பட்டு, தன் கையிலிருக்கிற சாட்சியின் பலகைகள் இரண்டையும் மலையின் அடியிலே எரிந்து உடைத்துப்போடுகிறார்.

மோசேயின் கோபமான முகத்தை இஸ்ரவேல் புத்திரர் பார்க்கிறார்கள். அவர் சாட்சியின் பலகைகளை எரிந்து உடைத்துப்போட்டதைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரர் குழப்பமடைகிறார்கள். தாங்கள் எவ்வளவு பெரிய சிலாக்கியத்தை இழந்துபோயிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்து மிகுந்த மனவேதனைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை முறித்துப்போட்டு கன்றுக்குட்டியை ஆராதிக்கிறார்கள். மோசே அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறார். அவர் தன்னுடைய கையிலிருக்கிற சாட்சிப்பலகைகளை உடைத்துப்போடுவது மாத்திரமல்ல, அவர், அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்கிறார் (யாத் 32:20).

மோசே வார்ப்பிக்கப்பட்ட தங்கக் கன்றுக்குட்டியை மறுபடியுமாக உருக்கி, பொடியாக அரைத்து, அதைத் தண்ணீரின்மீது தூவுகிறார். தங்கத்தின் தூள் தண்ணீரில் மிதக்கும். அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்கிறார் (உபா 9:21).

தாங்கள் வார்ப்பித்த கன்றுக்குட்டியை தங்களுக்கு முன்செல்லும் தெய்வம் என்று இஸ்ரவேல் புத்திரர் நினைத்தார்கள். ஆனால் அந்தக் கன்றுக்குட்டி இப்போது அக்கினியிலே எரிந்துகொண்டிருக்கிறது. அந்த விக்கிரகத்தால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. மோசே வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எந்தக் கன்றுக்குட்டியை தங்களுடைய தெய்வம் என்று நம்பினார்களோ, அந்த கன்றுக்குட்டி, இப்போது சுட்டெரிக்கப்பட்டு, பொடியாக அரைக்கப்பட்டு, தண்ணீரின்மேல் தூவப்பட்டிருக்கிறது.

மோசே சுட்டெரிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியின் தூசியை தண்ணீரின்மேல் தூவுவதை இஸ்ரவேலின் பாளயத்திலுள்ளவர்கள் எல்லோரும் பார்க்கிறார்கள். மோசே பொன்கன்றுக்குட்டியின் பொடியை தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்கிறார். விக்கிரகத்திற்கு ஜீவனும் பெலனும் இல்லை என்பதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்.

"விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்" (1கொரி 8:4).

## ஆரோனின் பாவம்
## யாத் 32:21-24

**யாத் 32:21. பின்பு, மோசே ஆரோனை நோக்கி: நீ இந்த ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச் சுமத்துகிறதற்கு, இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள் என்றான்.**

**யாத் 32:22. அதற்கு ஆரோன்: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளாதிருப்பதாக; இது பொல்லாத ஜனம் என்று நீர் அறிந்திருக்கிறீர்.**

**யாத் 32:23. இவர்கள் என்னை நோக்கி: எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டு பண்ணும்; எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்றார்கள்.**

**யாத் 32:24. அப்பொழுது நான்: பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித் தரக்கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது என்றான்.**

மோசே தன்னுடைய கோபத்தை இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் மீது முதலாவதாக காண்பிக்கிறார். மோசே கோபமூண்டவராகி தன் கையிலுள்ள சாட்சிப்பலகைகளை உடைத்துப்போடுகிறார். அவர்கள் உண்டுபண்ணின பொன்கன்றுக்குட்டியை அக்கினியில் சுட்டெரித்துப்போடுகிறார். இப்போது மோசேயின் கோபம், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரர்மீது திரும்புகிறது. பாவிகள் தங்கள் பாவங்களைக் குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும். மோசே கர்த்தருடைய பிரதிநிதியாக இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக நிற்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களைக் குறித்து கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிப்பதுபோல, மோசேக்கும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை விசாரிக்கிறார். அவர் பாவத்தைப்பற்றியவிசாரணையை முதலாவதாக ஆரோனிடத்தில் ஆரம்பிக்கிறார். கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே பாவத்தைக் குறித்து ஆதாமிடத்தில் முதலவதாக விசாரித்ததுபோல, மோசே ஆரோனிடத்தில் முதலாவதாக விசாரிக்கிறார்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராயிருக்கிறார். அவர் முதலாவதாக பாவம் செய்யவில்லை. இஸ்ரவேல் புத்திரரே முதலாவதாக பாவம் செய்தவர்கள். மீறுதல் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆரம்பமாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் ஆரோனிடத்தில், "நீர் எழுந்து எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும்" (யாத் 32:1) என்று கேட்டார்கள். ஆரோன் அவர்களுக்கு ஆவிக்குரிய தலைவர். அவர் ஆரம்பத்திலேயே இஸ்ரவேல் புத்திரரின் வேண்டுகோளை நிராகரித்திருக்கவேண்டும். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லி, அவர்கள் பாவம் செய்யாதவாறு அவர்களை தடுத்து நிறுத்தியிருக்கவேண்டும்.

ஆனால் ஆரோன் இஸ்ரவேல் புத்திரரை பாவம் செய்வதிலிருந்து தடுப்பதற்கு பதிலாக, அவர்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்துக்கொடுத்து, அவர்களுடைய விக்கிரகாராதனைக்கு துணைபோகிறார். இதனால் மோசே ஆரோன்மீது கோபப்பட்டு, அவரை முதலாவதாக விசாரிக்கிறார்.

மோசே ஆரோனை நோக்கி, "நீ இந்த ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச் சுமத்துகிறதற்கு, இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள்" (யாத் 32:21) என்று கேட்கிறார். மோசே ஆரோனை நீதியாகவும் நியாயமாகவும் கடிந்துகொள்கிறார். ஆரோன் தன்னுடைய பாவத்தினால் அழிந்துபோகக்கூடாது. அவர் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்ப வேண்டும். ஆரோன் தேவனுடைய கிருபையை இழந்துபோகக்கூடாது. ஆரோன் தன்னுடைய பாவத்தை உணர்ந்து, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களுக்கு ஆரோன் பொறுப்பானவர். ஆரோன் தன்னுடைய ஸ்தானத்தில் ஸ்திரமாக இருந்து, விக்கிரகாராதனையைத் தடுத்திருக்க வேண்டும். ஜனங்களுடைய பேச்சைக் கேட்டு, ஆரோன் அவர்கள் சொன்னதையெல்லாம் செய்கிறார். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக ஜனங்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்கிறார் (யாத் 32:22-23). கன்றுக்குட்டி தானாக வந்தது என்று பொய்கூறுகிறார் (யாத் 32:24).

ஆரோன் தன்னுடைய பாவத்தை உணரவேண்டும் என்பதற்காக, மோசே அவரை நோக்கி, "நீ இந்த ஜனங்கள்மேல் இந்த பெரும்பாதகத்தை சுமத்தினாய்" என்று சொல்லி அவரைக் குற்றப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனங்களே பாவம் செய்வதற்கு முதலாவதாக முன்வந்தவர்கள். ஆனால் மோசேயோ இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தை, ஆரோனிடத்தில் விசாரிக்கிறார். ஆரோன் இஸ்ரவேல் ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தை சுமத்தியதாக அவரைக் குற்றப்படுத்துகிறார்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதியாகவும் இருக்கிறார். தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணவேண்டும் என்று அவர்கள் ஆரோனிடத்தில் கேட்டபோது, ஆரோன் அவர்களுடைய கோரிக்கைகளை அங்கீகரிக்க மறுத்திருக்கவேண்டும். அவர்களுடைய பாவமான யோசனைகளை ஆரம்பத்திலேயே அழித்துப்போட்டிருக்க வேண்டும். ஆனால் ஆரோனோ இஸ்ரவேல் புத்திரருடைய கோரிக்கையை அங்கீகரித்து, அவர்களுடைய பாவத்திற்கு துணை போகிறார்.

ஆரோன் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களைக் கடினப்படுத்துகிறார். அவர்களுடைய கைகளை பெலப்படுத்துகிறார். பொன்கன்றுக்குட்டிகளை செய்வதற்கு, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளினால், தங்கள் காதுகளில் இருக்கிற பொன்னணிகளை கழற்றி கொடுக்கிறார்கள். ஆரோனோ தன்னுடைய கைகளினால் அந்தப் பொன்னணிகளைப் பெற்றுக்கொண்டு, ஒரு விக்கிரகத்தை வார்ப்பிக்கிறார். ஆரோனுடைய கைகளும், இஸ்ரவேல் புத்திரருடைய கைகளும் பாவத்திற்கு உடன்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், அவர்கள் கர்த்தருடைய கிருபையை இழந்துபோவார்கள். கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இல்லையென்றால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. அவர்கள் பொன்கன்றுக்குட்டிக்கு பலிகளை செலுத்தி அதை ஆராதித்து, தேவனுடைய கிருபைகளை இழந்தவர்களாயிருக்கிறார்கள். ஆரோனே இந்த ஜனங்கள்மேல் இப்படிப்பட்ட பெரும் பாதகத்தை சுமத்தியிருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கிருபையை இழந்துபோனதற்கு ஆரோனே காரணம் என்று மோசே அவர்மீது குற்றம் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள்மேல் இந்த பெரும்பாதகத்தை சுமத்துகிறதற்கு, "இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள்" என்று மோசே ஆரோனிடத்தில் கேட்கிறார்.

மனுஷர் நம்மை பாவம் செய்யுமாறு சோதிக்கலாம். நம்மை பாவம் செய்யத் தூண்டலாம். ஆனாலும் எந்த மனுஷனாலும் நம்மை பாவம் செய்யுமாறு கட்டாயம்பண்ண முடியாது. மனுஷர் நம்மை பயமுறுத்தலாம். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய அனுமதியில்லாமல், அவருடைய சித்தமில்லாமல், நமக்கு யாரும் தீங்கு செய்ய முடியாது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

மோசே ஆரோனுடைய பாவத்தின் நிமித்தமாக அவரைக் குற்றப்படுத்துகிறார். ஆனால் ஆரோனோ தான் பாவம் செய்ததாக அங்கீகரிக்கவில்லை. தான் செய்த தப்பிதத்திற்கு இஸ்ரவேல் புத்திரரே காரணம் என்று ஆரோன் சாக்குபோக்குகளை சொல்லுகிறார். ஆரோன் மோசேயை நோக்கி, "என் ஆண்டவனுக்கு கோபம் மூளாதிருப்பதாக" (யாத் 32:22) என்று சொல்லுகிறார். ஆரோன் மோசேயின் கோபத்திற்கு பயப்படுகிறார். அவர் மெய்யாகவே கர்த்தருடைய கோபத்திற்கு பயப்பட வேண்டும். பாவம் செய்கிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள்மீது தேவனுடைய கோபம் மூளும்.

ஆரோனோ கர்த்தருடைய கோபத்திற்கு பயப்படவில்லை. தன்னுடைய பாவத்தினிமித்தமாய் கர்த்தர் தன்மீது கோபமாயிருக்கிறார் என்னும் குற்றவுணர்வும் ஆரோனிடத்தில் காணப்படவில்லை. அவர் மோசேயின் கோபத்தை மாத்திரமே பார்க்கிறார். மோசேயின் கோபம் குறையவேண்டும் என்று எதிர்பார்த்து, அவர் மோசேயை நோக்கி, "என் ஆண்டவனுக்கு கோபம் மூளாதிருப்பதாக" என்று சொல்லுகிறார்.

தன்னுடைய பாவத்திற்கு இஸ்ரவேல் புத்திரரே காரணம் என்று சொல்லி, ஆரோன் பழியை ஜனங்கள் மீது திருப்பிப்போடுகிறார். "இது பொல்லாத ஜனம் என்று நீர் அறிந்திருக்கிறீர்" (யாத் 32:22) என்று ஆரோன் தன்னுடைய விவாதத்தின் முன்னுரையாக மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

ஆரோன் மோசேயை நோக்கி, "இவர்கள் என்னை நோக்கி: எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும்; எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்றார்கள்" (யாத் 32:23) என்று சொல்லுகிறார்.

ஆரோனைப்போலவே மனுஷர்கள் பொதுவாக தாங்கள் செய்த பாவத்தை அங்கீகரிப்பதில்லை. தாங்கள் செய்த தப்பிதத்திற்காக மனுஷர் மற்றவர்களை குற்றப்படுத்துகிறார்கள். இது மனுஷருடைய பொதுவான சுபாவம். பாவம் ஒரு தீட்டான பொருள். அதை யாருமே தன்னுடையது என்று சொந்தம் கொண்டாட விரும்புவதில்லை.

தன்னுடைய பாவத்திற்கு ஆரோன் மோசேயின்மீது குற்றம் சொல்லவில்லை. மோசே சீனாய் மலையின்மீது நாற்பது நாட்களாகயிருந்தார். இஸ்ரவேல் புத்திரர் இதைக் காரணமாக சொல்லி, தங்களுக்கு ஒரு தெய்வத்தை உண்டுபண்ண வேண்டுமென்று ஆரோனிடம் கேட்டுக்கொண்டார்கள். ஆரோன் இதே காரணத்தை மோசேயினிடத்தில் சொல்லி, அவரைக் குற்றப்படுத்தவில்லை.

இஸ்ரவேல் புத்திரரே, தங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்று சொன்னதாக ஆரோன் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். ஆரோனுடைய வார்த்தைகள் சாதுரியமான வார்த்தைகளாயிருக்கிறது. அவர் தன்னுடைய பாவங்களை மூடி மறைக்கிறார். வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கும், தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாததுபோலவும், தான் ஒரு குற்றமில்லாத நிரபராதி என்பது போலவும் ஆரோன் மோசேயினிடத்தில் பேசுகிறார்.

ஆரோன் மோசேயை நோக்கி, "அப்பொழுது நான்: பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித் தரக்கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது" (யாத் 32:24) என்று சொல்லுகிறார்.

ஆரோனுடைய வார்த்தைகள் சிறுபிள்ளைகள் பேசும் வார்த்தைகளைப்போல இருக்கிறது. பொன்னை அக்கினியில் போட்டால், அதிலிருந்து கன்றுக்குட்டி தானாக வராது. ஆரோன் கன்றுக்குட்டியை வார்ப்பிப்பதற்காக தான் செய்த வேலைகளை மூடி மறைக்கிறார். அவர்சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்தார் (யாத் 32:4).

ஆனால் ஆரோனோ தான் செய்த இந்த வேலைகளைப்பற்றி மோசேயினிடத்தில் ஒன்றும் சொல்லவில்லை. "பொன்னை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது" என்று ஆரோன் பொதுவாக சொல்லுகிறார்.

## ஜனங்கள்மீது நியாயத்தீர்ப்பு யாத் 32:25-29

**யாத் 32:25. ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான். அவர்கள் நிர்வாணமாயிருக்கிறதை மோசே கண்டு,**

**யாத் 32:26. பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்.**

**யாத் 32:27. அவன் அவர்களை நோக்கி: உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.**

**யாத் 32:28. லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்; அந்நாளிலே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள்.**

**யாத் 32:29. கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி, இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள் என்று மோசே சொல்லியிருந்தான்.**

மோசே முதலாவதாக ஆரோனை நியாயம் விசாரிக்கிறார். அதன் பின்பு அவர் இந்தப் பெரும்பாதகத்தினிமித்தமாக இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு சமீபமாய் வரும்போது, அவர்கள் தாங்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டிக்கு முன்பாக நடனமாடிக்கொண்டிருக்கிறார்கள். மோசேயைப் பார்த்தபோது, அவர்களுடைய நடனம் நடுக்கமாக மாறிற்று.

இஸ்ரவேல் புத்திரர் ஆரோனை எளிதாக வஞ்சித்து, அவரை தங்களுடைய பாவத்திற்கு பங்களாகளாக மாற்றுகிறார்கள். ஆனால் அவர்களால் மோசேயின் முகத்தை தைரியமாய்ப் பார்க்கமுடியவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய பாவஉணர்வு அவர்களைக் குற்றப்படுத்துகிறது. மோசே கர்த்தர்மீதுள்ள பக்தி வைராக்கியத்தினால், பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டிக்கு முன்பாக நடனமாடுகிறார்கள். ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருக்கிறார். அவர்கள் நிர்வாணமாயிருக்கிறதை மோசே காண்கிறார் *(யாத் 32:24).*

இஸ்ரவேல் புத்திரருடைய காதுகளிலே பொன்னணிகள் இல்லை. அவர்கள் தங்களுடைய கண்ணியத்தை இழந்தவர்களாயிருக்கிறார்கள். விக்கிரகத்தை ஆராதிக்கிற அவர்கள், தங்களுடைய மேன்மையையும், கண்ணியத்தையும், மகிமையையும், அந்த விக்கிரகத்திற்கு ஒப்பாக மாற்றியிருக்கிறார்கள். கன்றுக்குட்டியை ஆராதிக்கிற இஸ்ரவேல் புத்திரர், அந்தக் கன்றுக்குட்டியைப்போலவே நிர்வாணமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டிக்கு முன்பாக நடனமாடும்போது, அந்தக் கன்றுக்குட்டியைப்போலவே தங்கள் சரீரங்களில் வஸ்திரங்கள் இல்லாமல் நிர்வாணமாயிருக்கிறார்கள். புறஜாதியாரும், இஸ்ரவேலின் பகைஞரும், அவர்கள் நிர்வாணமாயிருப்பதைப் பார்த்து, வெட்கப்படுகிறார்கள். ஆனாலும் தாங்கள் நிர்வாணமாயிருப்பதைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரருக்கு வெட்கமோ, அவமானமோ ஏற்படவில்லை. அவர்கள் நிர்வாணமாயிருக்கிறதை மோசே காண்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படுகிற பாவத்தின் நிந்தையை அகற்றிப்போடவேண்டுமென்று மோசே தீர்மானமாயிருக்கிறார். அவர்களுடைய பாவங்களை மூடி மறைப்பதினால், அவர்களுடைய நிந்தை அவர்களை விட்டு நீங்காது. அவர்களை தண்டிப்பதினாலேயே, அவர்களுடைய நிந்தை அவர்களை விட்டு நீங்கும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்தவர்களுக்கு தண்டனை கொடுக்கும்போது, அந்தத் தண்டனை அவர்களுடைய பாவத்திற்கு விரோதமாக சாட்சியாயிருக்கும்.

பாவம் செய்தவர்களை தண்டிக்க வேண்டுமென்று மோசே விரும்புகிறார். பாவிகளை கர்த்தரும் தண்டிக்கிறார். நாதாபும் அபியுவும் கர்த்தருக்கு அந்நிய அக்கினியை காண்பித்தபோது, கர்த்தருடைய கரம் அவர்களைக் கொன்றுபோட்டது.

இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திலிருக்கிற அநேகர் கன்றுக்குட்டிக்கு முன்பாக தங்களை நிர்வாணப்படுத்தி நடனமாடுகிறார்கள். கர்த்தருடைய கரம் இவர்களைத் தண்டிப்பதற்கு பதிலாக, மனுஷருடைய பட்டயம் இவர்களைத் தண்டிக்கவேண்டும் என்று மோசே விரும்புகிறார். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம் என்பதை இஸ்ரவேல் புத்திரர் உணரவேண்டும். இஸ்ரவேலின் நியாயாதிபதிகள், விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை தண்டிக்கவேண்டும்.

"இதுவும் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும்; அதினால் உன்னதத்திலிருக்கிற தேவனை மறுதலிப்பேனே" *(யோபு 31:28).*

"உன்னைச் சுற்றிலும் உனக்குச் சமீபத்திலாகிலும் உனக்குத் தூரத்திலாகிலும், தேசத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களில், நீயும் உன் பிதாக்களும் அறியாத அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாய் உன்னை ஏவிவிட்டால், நீ அவனுக்கு சம்மதியாமலும், அவனுக்குச் செவிகொடாமலும், உன் கண் அவன்மேல் இரக்கங்கொள்ளாமலும், அவனைத் தப்பவிடாமலும், அவனை ஒளித்து வைக்காமலும், அவனைக் கொலைசெய்துபோடவேண்டும்; அவனைக் கொலைசெய்வதற்கு, முதல் உன் கையும் பின்பு சகல ஜனத்தின் கையும் அவன்மேல் இருக்கக்கடவது" (உபா 13:7-9).

பாவம் செய்யாதவர்கள் பாவம் செய்தவர்களை தண்டிக்கவேண்டுமென்று மோசே தீர்மானிக்கிறார். வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியை ஆராதிக்காதவர்கள், கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பட்சத்திலிருக்கிறார்கள். மோசே பாவம் செய்யாத இவர்களைக் கொண்டு, பாவம் செய்த விக்கிரகாராதனைக்காரரை தண்டிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறார்.

மோசே பாளயத்தின் வாசலில் நின்று, "கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள்" என்று கூப்பிடுகிறார். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் மோசேயினிடத்தில் கூடிவருகிறார்கள் (யாத் 32:26).

மோசேயின் விண்ணப்பத்திற்கு லேவியின் புத்திரர்கள் உடனடியாகச் செவிகொடுக்கிறார்கள். கர்த்தர் பக்கமாக இருக்க வேண்டுமென்று அவர்கள் தெரிந்தெடுக்கிறார்கள். தங்களுடைய உற்றார் உறவினர்களில் கன்றுக்குட்டியை வணங்கி, தேவனுக்கு எதிராகப் பாவம் செய்தவர்களை அவர்கள் கொன்றுபோடுகிறார்கள். லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்கிறார்கள்; அந்நாளிலே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுகிறார்கள் (யாத் 32:26-28).

மோசே அவர்களை நோக்கி, "உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (யாத் 32:27) என்று சொல்லுகிறார்.

லேவியர்கள் மோசேயின் பட்சத்தில் பக்திவைராக்கியதோடு கூடிவருகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள். மோசேயைப்போலவே லேவியரும் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டிக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். பாவிகள் பாவிகளின் பட்சத்தில் சேருவார்கள். பரிசுத்தவான்களோ கர்த்தருடைய பட்சத்தில் கூடிவருவார்கள்.

பாவிகளுக்கு தங்கள் பாவத்தின் மீது பிரியமும் ஆர்வமும் இருக்கும். பரிசுத்தவான்களுக்கோ சத்தியத்திலும் பரிசுத்தத்திலும் ஆர்வம் இருக்கும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கர்த்தருக்கும், பிசாசுக்கும் நடுவிலே ஒப்புரவாகமாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய பட்சத்திலே தீர்மானமாக சேர்ந்துகொள்வார்கள். கர்த்தருக்கும் பிசாசுக்கும் இடைப்பட்ட நடுநிலை என்று எதுவுமில்லை. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் பிசாசுகளை ஆராதிக்கமாட்டார்கள்.

மோசே தன்னிடத்தில் கூடிச்சேர்ந்திருக்கிற லேவியின் புத்திரரை நோக்கி, "பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன்" என்று சொல்லுகிறார்.

"தன் தன் சகோதரன், தன் தன் சிநேகிதன், தன் தன் அயலான்" என்னும் வாக்கியம், அறிமுகமான நபர்களைக் குறிக்கிறது. தங்களுக்கு தெரிந்து யாரெல்லாம் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியை ஆராதித்தார்களோ, அவர்களையெல்லாம் லேவியர்கள் தங்கள் பட்டயத்தால் கொன்றுபோடவேண்டும். விக்கிரகாராதனைக்காரர்கள் மோசேயினிடத்தில் சேர்ந்துகொண்ட லேவியருக்கு உற்றார் உறவினராகவும், சிநேகிதராகவும், அயலகத்தாராகவும் இருந்தாலும், அவர்கள்மீது பட்சபாதம் காண்பிக்காமல், லேவியர்கள் அவர்களை தங்கள் பட்டயத்தினால் கொன்றுபோட வேண்டும்.

மோசேயினிடத்தில் சேர்ந்து கொண்ட லேவியர்கள், தங்கள் பட்டயத்தைப் பயன்படுத்தும்போது, மிகவும் கவனமாக பயன்படுத்தவேண்டும். அவர்கள் விக்கிரகாராதனையில் ஈடுபட்டவர்களை மாத்திரம் கொன்றுபோடவேண்டும். இதற்காக லேவியர்கள் பாளயமெங்கும் உள்ளும் புறம்பும், வாசலுக்கு வாசல் போகவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியை ஆராதியாமல், பாளயத்திலே தங்கள் கூடாரத்திற்குள்ளே தங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டிக்கு முன்பாக வஸ்திரமில்லாமல் நிர்வாணமாய் நடனம்பண்ணுவதை பார்க்க மனதில்லாமல், இவர்கள் வெட்கமும் வேதனையும் அடைந்து, தங்கள் கூடாரத்திற்குள்ளே இருந்துகொண்டு கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுகிறார்கள். மோசேயோடு கூடயிருக்கிற லேவியர்கள் கூடாரத்திற்குள்ளே ஜெபித்துக் கொண்டிருக்கிறவர்களை கொன்றுபோடக் கூடாது. கூடாரத்திற்கு வெளியே, கன்றுக்குட்டியை ஆராதிக்கிறவர்களை மாத்திரம் அவர்கள் கொன்று போடவேண்டும்.

லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்கிறார்கள்; அந்நாளிலே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுகிறார்கள் (யாத் 32:28). வார்ப்பிக்கப்பட்ட பொன்கன்றுக்குட்டியை மூவாயிரத்திற்கும் அதிகமானோர் ஆராதித்தார்கள். ஆனாலும் மூவாயிரம் பேருக்கு மாத்திரமே தண்டனை கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை இந்த மூவாயிரம் பேரும், ஜனங்களை பாவம் செய்யத் தூண்டின தலைவர்களாகயிருக்கலாம். தங்கள் கூடாரங்களில் சும்மாயிருந்தவர்களை, இவர்கள் வெளியே அழைத்து வந்து, அவர்களை கன்றுக்குட்டியை ஆராதிக்குமாறு வழிநடத்தியிருக்கலாம்.

லேவியர்கள் அப்படிப்பட்ட விக்கிரகாராதனைக்காரர்களை பாளயமெங்கும் உள்ளும் புறம்பும், வாசலுக்கு வாசல் போய் தேடிப்பார்த்து, அவர்களை தங்கள் பட்டயங்களால் கொன்றுபோடுகிறார்கள். விக்கிரகாராதனைக்காரருக்கு வந்த சங்காரத்தைப் பார்த்து, மற்ற இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே பயமும், நடுக்கமும், திகிலும் உண்டாயிற்று.

"கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி, இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள்" (யாத் 32:29) என்று மோசே லேவியருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

இந்த வாக்கியத்தில் "பிரதிஷ்டை பண்ணுதல்" என்னும் வார்த்தைக்கு இரண்டு எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன: "மலே" "யாத்"என்பனவாகும். இவ்விரண்டு எபிரெய வார்த்தைகளுக்கும் சேர்த்து "உங்கள் கைகளை நிரப்புங்கள்" என்று பொருள் கூறலாம்.

ஆசாரியர்கள் தங்களுடைய கைகளில் பிரதிஷ்டையின் காணிக்கைகளை நிறைய வைத்திருக்க வேண்டும். அந்தநாளுக்கு அவர்கள் ஆசாரியர்களாக பிரதிஷ்டை பண்ணப்பட வேண்டும். (யாத் 29:1-35) தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிற சகோதரரையும், குமாரரையும் சங்காரம் பண்ணுவதற்கு அவர்கள் கைகளில் பட்டயங்கள் இருக்க வேண்டுமென்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

**மோசேயின் பரிந்துபேசும் ஜெபம்**
**யாத் 32:30-35**

**யாத் 32:30. மறுநாளிலே மோசே ஜனங்களை நோக்கி: நீங்கள் மகா பெரிய பாவஞ்செய்தீர்கள்; உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக் கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப் போகிறேன் என்றான்.**

**யாத் 32:31. அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்.**

**யாத் 32:32. ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்.**

**யாத் 32:33. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்.**

**யாத் 32:34. இப்பொழுது நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக் கொண்டுபோ; என் தூதனானவர் உனக்குமுன் செல்லுவார்; ஆகிலும், நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன் என்றார்.**

**யாத் 32:35. ஆரோன் செய்த கன்றுக்குட்டியை ஜனங்கள் செய்வித்ததின் நிமித்தம் கர்த்தர் அவர்களை உபாதித்தார்.**

பொன்கன்றுக்குட்டிக்கு பலியிட்டு, அதற்கு ஆராதனை செய்த விக்கிரகாராதனைக்காரரில் பிரதானமானவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படுகிறது. இதற்கு பின்பு மோசே கர்த்தருடைய சமுகத்திலே மீதமுள்ள இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார். அவர்கள் விக்கிரகத்தை ஆராதித்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

லேவியின் புத்திரர் ஏறக்குறைய மூவாயிரம்பேரை தங்கள் பட்டயத்தால் வெட்டிக்கொன்றுபோடுகிறார்கள். செத்துப்போகாமல், உயிரோடிருக்கிறவர்கள் தங்களிடத்தில் பாவமில்லை என்று நினைத்து, இறுமாப்பாயிருக்கக்கூடாது. அவர்களும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் அவர்கள் மரணத்திற்கு தப்பித்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய பாவம் அவர்களிடத்தில் இன்னும் இருக்கிறது.

மோசே ஜனங்களை நோக்கி, "நீங்கள் மகாபெரிய பாவம் செய்தீர்கள்" (யாத் 32:30) என்று சொல்லுகிறார். தங்களிடத்தில் பாவம் இல்லையென்று அவர்கள் நினைத்து விடக்கூடாது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாக கர்த்தரும் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். அவர்கள் தங்கள் பாவத்திற்கு மனந்திரும்ப வேண்டுமென்றால், முதலாவதாக தங்களிடத்தில் பாவம் இருக்கிறது என்பதை அவர்கள் அங்கீகரிக்கவேண்டும். மோசே அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு உணர்த்துகிறார். "நீங்கள் மகாபெரிய பாவம் செய்தீர்கள்" என்று அவர்களுக்கு சொல்லுகிறார்.

யாத் 32:30 ஆவது வசனம் "மறுநாளிலே" என்று ஆரம்பமாகிறது. இந்த வார்த்தைக்கு, சீனாய் மலையில் நாற்பது நாட்களுக்கு உபவாசம் இருந்த பின்பு, பொன்கன்றுக்குட்டியின் அனுபவத்திற்குப் பின்பு என்று பொருள் (யாத் 32:1-29).

"நீங்கள் மகா பெரிய பாவஞ்செய்தீர்கள்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு தேவன் இஸ்ரவேல் புத்திரரை மன்னிப்பாரா அல்லது மன்னிக்கமாட்டாரா என்னும் நிச்சயம் இல்லாத அளவிற்குப் பெரிய பாவம் என்று பொருள். எந்தப் பாவமும் அதற்குரிய பாவநிவிர்த்தி செய்யப்படாமல் மன்னிக்கப்படுவதில்லை. (மத் 26:28; எபி 9:22).

பாவத்தின் சம்பளம் மரணம். ஆனாலும் இப்போது உயிரோடிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள், பாவம் செய்தவர்களாயிருந்தாலும், மரித்துப்போகாமல், மரணத்திற்கு தப்பித்திருக்கிறார்கள். பட்டயத்தினால் செத்துப்போன மூவாயிரம் பேரைப்போல, தாங்களும் செத்துபோவோமோ என்னும் பயம் அவர்களுடைய மனதிலே இருக்கிறது.

மோசே உயிரோடிருக்கிற ஜனங்களை பயமுறுத்தவில்லை. அவர்கள் மகாபெரிய பாவம் செய்தவர்களாயிருந்தாலும், மோசே அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே அவர்களை நோக்கி, "உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக் கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப் போகிறேன்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவம் நிவிர்த்தி செய்யப்படுமா என்னும் நிச்சயம் மோசேயினிடத்தில் இல்லை. ஆகையினால் மோசே அவர்களுடைய பாவநிவிர்த்தியைப்பற்றி சந்தேகமாக சொல்லுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கும் தேவனுக்கும் நடுவே, மகாபிரதான மத்தியஸ்தராயிருக்கிறார். அவர் பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசுகிறார். கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசும்போது, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்னும் நிச்சயம் நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவானவருக்கும் நமக்கும் உண்டு.

நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவின் வலதுபாரிசத்திலே அமர்ந்திருக்கிறார். தேவனுடைய தெய்வீக ஆலோசனைகளெல்லாம் அவருக்கு தெரியும். கிறிஸ்துவானவர் நமக்காக பரிந்து பேசும்போது, பிதாவானவர் அதை தமக்காக செய்வார் என்னும் நிச்சயத்தோடு, கிறிஸ்துவானவர், பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்.

மோசே தேவனுடைய சமுகத்திலே அவருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் கெஞ்சி மன்றாடுகிறார். மோசே கர்த்தரிடத்திற்கு திரும்பிப்போகிறார். அவர் ஆசரிப்புக்கூடாரத்தைப்பற்றி இன்னும் அதிகமான விவரங்களை விசாரிப்பதற்காக கர்த்தரிடத்திற்கு திரும்பிப்போகவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படுமா என்பதை அறிந்துகொள்வதற்காக மோசே கர்த்தரிடத்திற்கு திரும்பிப்போகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் ஜனங்களுக்காக பரிந்து பேசும்போது, "ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்" (யாத் 32:31) என்று ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தைக் குறித்து, ஏற்கெனவே மோசேக்கு சொல்லியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். தேவனுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும் காரியங்களை மோசே மறுபடியுமாகத் தன்னுடைய ஜெபத்தில் அறிக்கை செய்கிறார் (யாத் 32:8,31).

"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்" (யாத் 32:7,8) என்று சொன்னார்.

கர்த்தர் தன்னிடத்தில் சொன்னதை, மோசே இப்போது கர்த்தரிடத்தில் திரும்ப சொல்லுகிறார். மோசேயின் வார்த்தையில் நடுக்கமும், வேதனையும் நிரம்பியிருக்கிறது. அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கவலையோடும், கண்ணீரோடும் கர்த்தரிடத்திலே பரிந்து பேசுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வாரா என்னும் நிச்சயம் மோசேயினிடத்தில் இல்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை அறிந்திருக்கிறார். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கவேண்டும் என்றோ அல்லது அவர்களை பாவத்திற்கான தண்டனையிலிருந்து விடுவிக்கவேண்டும் என்றோ மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போதே, "அவர்கள் மகாபெரிய பாவம் செய்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார். அவர்களுடைய பாவத்திற்கு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்பது மோசேயின் விருப்பம்.

மோசே கர்த்தரை நோக்கி, "தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்" (யாத் 32:32) என்று ஜெபம்பண்ணுகிறார். இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் ஒருபோதும் குறுகிப்போவதில்லை. கர்த்தரால் இரட்சிக்க முடியாதபடிக்கு, எந்தப் பாவமும் கர்த்தருடைய பார்வையில் பெரிய பாவமும் இல்லை. ஆகையினால் கர்த்தர் நிச்சயமாகவே இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தை மன்னிப்பார் என்று மோசே நம்புகிறார்.

"நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" என்று மோசே ஜெபம்பண்ணியதைப் போல அப்போஸ்தலர் பவுலும் கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபித்திருக்கிறார். (ரோமர் 9:3)

தேவனுடைய புஸ்தகத்தைப் பற்றிய முதலாவது குறிப்பு இந்த வசனத்தில் வருகிறது. நீதிமான்களின் பெயர்கள் இதில் எழுதப்பட்டிருக்கும். வேதாகமத்தில் இந்தப் புஸ்தகத்திற்குப் பல்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: "உம்முடைய புஸ்தகம்" "என் புஸ்தகம்" (யாத் 32:32-33); "ஜீவபுஸ்தகம்" (சங் 69:28); "புஸ்தகம்" (தானி 12:1); "ஜீவபுஸ்தகம்" (பிலி 4:3; வெளி 3:5; வெளி 13:8; வெளி 17:8; வெளி 20:11-15; வெளி 22:18-19); "ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகம்" (வெளி 21:27) என்பனவாகும்.

எல்லா இடங்களிலும் ஜீவபுஸ்தகம் என்னும் பெயர் காணப்படாதபடியினால், அவை வேறு புஸ்தகங்கள் என்று பொருள்கூறக்கூடாது. பெயர்கள் மாறினாலும், புஸ்தகம் ஒன்றே.

வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தைக்குப் பல்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: "பரிசுத்த வேதஎழுத்துக்கள்" (ரோமர் 1:2; 2தீமோ 3:15); "தேவனுடைய வாக்கியங்கள்" (ரோமர் 3:2; எபி 5:12; 1பேதுரு 4:11); "தேவனுடைய வசனம்" (மாற்கு 7:13; ரோமர் 10:17; எபி 4:12); "ஆவியின் பட்டயம்" (எபே 6:17) இந்தப் பெயர்கள் எல்லாமே பரிசுத்த வேதாகமத்தையே குறிக்கும்.

ஒருவன் நித்திய ஆக்கினைக்கு ஏதுவாகப் பாவம் செய்யும்போது அவனுடைய பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போடப்படும். (யாத் 32:33). யூதாசுடைய பெயர் தேவனுடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப்போடப்படும் என்று சங்கீதக்காரர் முன்னறிவித்திருக்கிறார். (சங் 69:20-28). பாவத்திலிருந்து ஜெயம் பெறாதவர்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப் போடப்படும் என்று கிறிஸ்து எச்சரித்துக் கூறியிருக்கிறார்.
(வெளி 3:5; வெளி 22:18-19).

பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய புஸ்தகத்தைப்பற்றி பல்வேறு சம்பவங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் (யாத் 32:32).

2. எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன். (யாத் 32:33).

3. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக. நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக. *(சங் 69:28; சங் 109:13).*

4. அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படும் உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். *(தானி 12:1).*

5. உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப் படுங்கள். *(லூக்கா 10:20).*

6. அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. *(பிலி 4:3).*

7. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என்பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். *(வெளி 3:5).*

8. ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள். *(வெளி 13:8; வெளி 17:8).*

9. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. *(வெளி 20:11-12).*

10. ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். *(வெளி 20:15).*

11. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். *(வெளி 21:27).*

12. ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார். *(வெளி 22:18-19).*

கர்த்தருடைய ஜீவப்புஸ்தகத்தில் ஆரோனின் பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அதற்காக அவர்கள் கூறும் காரணங்களின் விவரம் வருமாறு :

1. ஆரோன் மறுபடியும் பிறந்திருக்கிறார் *(உபா 32:18).*

2. ஆரோன் பரிசுத்தமானவர் *(யாத் 19:6; யாத் 22:31; லேவி 11:44-45; லேவி 21:6-8).*

3. ஆரோனின் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருந்தது. *(யாத் 32:32-33).*

4. ஆரோன் ஒரு தீர்க்கதரிசி. *(யாத் 7:1).*

5. ஆரோன் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார் *(யாத் 7:1-17; யாத் 8:6,16; யாத் 11:10; யாத் 12:1; சங் 77:20).*

6. பொன்கன்றுக்குட்டியைச் செய்யும் வரையிலும் தேவனுடைய கிருபை ஆரோனோடு கூட இருந்தது. *(யாத் 24:14; யாத் 32:1).*

7. சீனாய் மலையில் ஆரோன் தேவனைத் தரிசித்து அவரோடு புசித்துக் குடித்தவர் *(யாத் 24:1-11).*

ஆரோன் பாவம் செய்தார். ஆதலால் ஆரோனுடைய பெயர் தேவனுடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்பட்டிருக்கும். *(யாத் 32:1-6, 21-24,30, 32-33)* ஆரோன் தேவனுடைய கோபத்திற்கு ஆளாகிவிட்டார் *(உபா 9:20).* ஆரோன் பாவம் செய்தார் என்று தேவனும், மோசேயும் அறிக்கையிட்டிருக்கிறார்கள் *(யாத் 32:7-10, 30-33).*

ஆனாலும் மோசே ஆரோனுக்காகவும், இஸ்ரவேல் புத்திரருக்காகவும் தேவனிடத்தில் பரிந்துபேசி ஜெபிக்கிறார். கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, ஆரோனையும், மற்ற இஸ்ரவேல் புத்திரரையும் மன்னிக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, பாவநிவிர்த்தி செய்கிறார்கள் (யாத் 32:11-14, 30-33; உபா 9:12-21). தேவன் தம்முடைய புஸ்தகத்திலிருந்து ஆரோனுடைய பெயரைக் கிறுக்கிப்போட்டு, மறுபடியுமாக அவருடைய பெயரை எழுதுகிறார். இதற்குப் பின்பும், ஆரோன் 38 வருஷங்களுக்குப் பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்கிறார் (யாத் 39; லேவி 6:9; லேவி 8:1-36; லேவி 13:1; லேவி 16:1-23).

பரிசுத்த வேதாகமத்தில், "அகற்றுதல்" என்னும் வார்த்தை பல சம்பவங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சாபங்கள் (எண் 5:23)
2. வானத்தின் கீழுள்ள பெயர்கள் (உபா 9:14; உபா 29:20; 2இராஜா 14:27)
3. அமலேக்கைப் பற்றிய நினைவு (உபா 25:19)
4. மீறுதல்கள் (சங் 51:1; ஏசா 43:25; ஏசா 44:22)
5. அக்கிரமங்கள் (சங் 51:9)
6. பாவங்கள் (அப் 3:19)
7. மோசேயின் பிரமாணம் (கொலோ 2:14-17)

தமக்கு விரோதமாகப் பாவம் செய்தவன் எவனோ அவனுடைய பெயரை கர்த்தர் தம்முடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக மகாபெரிய பாவம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்கள் கர்த்தருடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடவேண்டிய பெயர்களாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய பாவத்தை மன்னித்தால், அவர்களுடைய பெயர்களை தம்முடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே மகாபெரிய பாவம் செய்திருக்கிறார்கள். மோசே மாத்திரமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யாதவர். கர்த்தர் பாவம் செய்த எல்லோருடைய பெயரையும் கிறுக்கிப்போடும்போது, அவருடைய புஸ்தகத்தில் மோசேயின் பெயர் மாத்திரமே கிறுக்கிப்போடப்படாமல், எழுதப்பட்டதாகயிருக்கும். கர்த்தருடைய புஸ்தகத்திலே எல்லோருடைய பெயர்களும் கிறுக்கிப்போடப்பட்டு, தன்னுடைய பெயர் மாத்திரம் கிறுக்கிப்போடப்படாமல் எழுதப்பட்டிருப்பதை மோசே விரும்பவில்லை. எல்லோரும் அழிந்துபோகும்போது, தான் மாத்திரம் பிழைத்திருப்பது மோசேயின் விருப்பமல்ல.

மோசே கர்த்தரை நோக்கி, "தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" (யாத் 32:32) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், தங்களுடைய பாவத்தின் நிமித்தமாக அழிந்துபோகும்போது, மோசேயும் அவர்களோடுகூட அழிந்துபோக ஆயத்தமாயிருக்கிறார். கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் வாக்குத்தத்த தேசமாகயிருக்கவேண்டும் என்று மோசே விரும்புகிறார். மோசே அழிந்துபோகாமல் உயிரோடிருப்பதினால், கானான் தனக்கு மாத்திரம் வாக்குத்தத்த தேசமாயிருப்பது மோசேயின் விருப்பமல்ல.

மோசே இஸ்ரவேல் ஜனத்தார்மீது பிரியமும், அன்பும், கரிசனையும் உள்ளவராயிருக்கிறார். நல்ல மேய்ப்பர் தன்னுடைய ஆடுகளுக்காக தன் ஜீவனையே கொடுப்பார். மோசே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிற நல்ல மேய்ப்பராயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் அழிந்துபோகவேண்டிய சூழ்நிலை வரும்போது, மோசேயும் அவர்களோடுகூட அழிந்துபோக ஆயத்தமாயிருக்கிறார்.

"நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோவா 10:11).

"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்" *(ஏசா 53:6-8).*

"அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது" *(தானி 9:26).*

மோசே ஒரு சுயநலக்காரரல்ல. அவர் இஸ்ரவேல் ஜனத்தாருடைய பொதுவான நன்மைகளை விரும்புகிறவர். கர்த்தரிடத்திலும் அநீதியோ, அநியாயமோ இல்லை. கர்த்தர் நீதிபரர். கர்த்தர் ஒருபோதும் பாவம் செய்யாதவர்களை தண்டிக்கமாட்டார். அவர் பாவம் செய்யாதவர்களின் பெயரை தம்முடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடவும் மாட்டார்.

"நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பெயரை கிறுக்கிப்போடும்" என்று மோசே ஜெபம்பண்ணினாலும், மோசேயினிடத்தில் பாவம் இல்லையென்றால், கர்த்தர் அவருடைய பெயரை தம்முடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடமாட்டார். மோசே விருப்பப்பட்ட பிரகாரம் அவருடைய ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுக்கமாட்டார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்" *(யாத் 32:33)* என்று சொல்லுகிறார். இதுவே கர்த்தருடைய நீதி. கர்த்தர் மோசேயின் பரிந்து பேசும் ஜெபத்திற்கு தம்முடைய நீதியான பிரதியுத்தரத்தை சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக மகாபெரிய பாவம் செய்தவர்களாயிருந்தாலும், கர்த்தர் மோசேயின் பரிந்துபேசும் ஜெபத்தைக் கேட்டு, அவர்களை உடனே தண்டிக்காமல் விட்டுவிடுகிறார். கர்த்தர் அவர்களுடைய பெயர்களை தாம் எழுதின தம்முடைய புஸ்தகத்திலிருந்து உடனே கிறுக்கிப்போடவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இப்பொழுது நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக் கொண்டுபோ; என் தூதனானவர் உனக்குமுன் செல்லுவார்; ஆகிலும், நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்" *(யாத் 32:34)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக் கொண்டுபோ" என்று சொல்லுகிறார். மோசே ஏழாம் முறையாகச் சீனாய் மலையிலிருந்து இறங்கி வரும் சம்பவம் *(யாத் 19:3).* கற்பலகைகள் உடைக்கப்பட்ட பின்பு, மோசேயின் பழைய ஊழியம் மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறது. *(யாத் 32:1-33)* இஸ்ரவேல் புத்திரரைக் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்லும் பொறுப்பைத் தேவன் மறுபடியும் ஏற்றுக் கொள்கிறார். *(யாத் 32:7-14).*

"நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவன் இஸ்ரவேல் புத்திரரை அழிக்காமல் விட்டுவிட்டாலும், அவர்களுக்குத் தண்டனை தருகிறார். வனாந்தரத்தில் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை *(எண் 14:28-35).*

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தவர். அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அந்த தேசத்தில் குடியேற்றவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், வாக்குத்தத்தத்திலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது. தம்முடைய தூதனானவர் மோசேக்கு முன்செல்வார் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக மகாபெரிய பாவம் செய்தவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை உடனே தண்டிக்காவிட்டாலும், தமக்கு சித்தமான வேளை வரும்போது, அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார். "ஆகிலும் நான் விசாரிக்கும் நாளில், அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்" *(யாத் 32:34)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய மற்ற பாவங்களை விசாரிக்கும்போது, அவர்கள் இப்போது செய்த மகாபெரிய பாவங்களுக்கும் கர்த்தர் தண்டனை கொடுப்பார். தங்களிடத்தில் பாவமும் அக்கிரமும் இல்லையென்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னாலும், பொன்கன்றுக்குட்டியை அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவப்பட்டதைப் பருகியிருக்கிறார்கள். அது அவர்களுடைய வயிற்றில் எப்போதும் இருக்கும்.

ஸ்தேவான் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களைப்பற்றி பிரதான ஆசாரியனிடத்திலும், தேவாலயத்தின் அதிகாரிகளிடத்திலும் சொல்லும்போது, அவர்கள் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலியிட்டு, அதை ஆராதித்ததைப்பற்றி சொல்லுகிறார்.

"அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார். அதைக்குறித்து: இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷம்வரையில் காணிக்கைகளையும் பலிகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ என்றும், பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகினுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே; ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே" *(அப் 7:41-43)*.

இஸ்ரவேல் புத்திரர் கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதை ஆராதித்ததினால், கர்த்தர் அவர்களை விக்கிரகாராதனைக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்திலே, அவர்களுடைய விக்கிரகாராதனையும் ஒரு அங்கமாகயிருக்கிறது. பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்று திரும்பி வரும் வரையிலும், இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனையிலிருந்து முழுமையாக விடுதலை பெறவில்லை.

"அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்" *(ரோம 1:22-25)*.

ஆரோன் செய்த கன்றுக்குட்டியை ஜனங்கள் செய்வித்ததின் நிமித்தம் கர்த்தர் அவர்களை உபாதிக்கிறார் (யாத் 32:35). ஆரோன் இந்த உபாதைக்கு தப்பிக்கிறார். ஆரோன் அறியாமல் இந்தப் பாவத்தை செய்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரோ, துணிகரமாய் இந்தப் பாவத்தை செய்திருக்கிறார்கள்.

கர்த்தர் அவர்களை உபாதிக்கிறார். ஏற்கெனவே 3,000 பேர் செத்துப்போனார்கள். இதோடு கர்த்தருடைய உபாதையும் சேர்ந்து வருகிறது. இதில் எத்தனைபேர் மரித்தார்கள் என்று தெரியவில்லை (யாத் 32:28).

## 33 அதிகாரம்

மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக தொடர்ந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். மோசேயின் மத்தியஸ்த ஊழியத்தைப்பற்றி இந்த அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே ஐக்கியத்திலே ஒரு பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிளவு இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினால் உண்டாயிற்று.

மோசே கர்த்தருடைய சமுகத்திலிருந்து செய்தியைப் பெற்றுக்கொண்டு, அதை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சொல்லுகிறார் (யாத் 32:1-3,5). கர்த்தருடைய செய்தியைக் கேட்ட இஸ்ரவேல் ஜனத்தார் தங்களை வெகுவாகத் தாழ்த்துகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள் (யாத் 32:4,6).

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே ஐக்கியம் மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறது (யாத் 32:7-11). மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார்.

தம்முடைய பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (யாத் 32:12-17). மோசே கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார் (யாத் 32:18-23).

### வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள் யாத் 33:1-6

**யாத் 33:1. கர்த்தர் மோசேயை நோக்கி: நீயும், எகிப்து தேசத்திலிருந்து நீ அழைத்துக் கொண்டு வந்த ஜனங்களும் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள்.**

**யாத் 33:2. நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன்.**

**யாத் 33:3. ஆனாலும், வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்றார்.**

**யாத் 33:4. துக்கமான இவ்வார்த்தைகளை ஜனங்கள் கேட்டபோது, ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக் கொள்ளாமல் துக்கித்துக் கொண்டிருந்தார்கள்.**

**யாத் 33:5. ஏனென்றால், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷத்தில் உங்கள் நடுவில் எழும்பி, உங்களை நிர்மூலம் பண்ணுவேன்; ஆகையால், நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போடுங்கள்; அப்பொழுது நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அறிவேன் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல் என்று கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தார்.**

**யாத் 33:6. ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் மலையருகே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போட்டார்கள்.**

கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய செய்தியை சொல்லியனுப்புகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுபாவங்களை நன்றாய் அறிந்திருக்கிறார். கர்த்தர் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் "வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்" (யாத் 33:3,5) என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய நீதியினாலும், நியாயத்தினாலும், இஸ்ரவேல் ஜனங்களுக்கு இந்த அவப்பெயரைக் கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பிரமாணத்தின் நுகத்திற்கு கீழே கொண்டு வர விரும்புகிறார். தம்முடைய உடன்படிக்கையை அவர்கள்மீது சுமத்தவேண்டும் என்று கர்த்தர் பிரியப்படுகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாருடைய கழுத்தோ வணங்காக்கழுத்தாகயிருக்கிறது. கர்த்தருடைய பிரமாணங்களையும், அவருடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளையும் இஸ்ரவேல் ஜனத்தாருடைய கழுத்துக்கள் சுமக்க மறுக்கிறது. அவர்களுடைய கழுத்துக்கள் வளைய மறுக்கும் வணங்காக்கழுத்தாகயிருக்கிறது.

கர்த்தர் மனுபுத்திரரை அவர்களுடைய கிரியையின்படி நியாயந்தீர்ப்பதுபோல, அவர்களுடைய மனதின் நினைவுகளின்படியும் நியாயந்தீர்க்கிறார். மனுஷன் என்ன செய்கிறான் என்பது நமக்கு தெரியும். கர்த்தரோ மனுஷன் எப்படிப்பட்டவன் என்பதையும், அவனுடைய சுபாவம் எப்படிப்பட்டது என்பதையும் அறிந்திருக்கிறார்.

மனுஷனுடைய வாயிலிருந்து எப்படிப்பட்ட வார்த்தைகள் புறப்பட்டு வருகிறது என்பதும், அவனுடைய கைகள் எப்படிப்பட்ட கிரியைகளை செய்கிறது என்பதும் நமக்கு தெரியும். கர்த்தரோ மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகளையெல்லாம் அறிந்திருக்கிறார். மனஷன் ஒரு வார்த்தையை பேசுவதற்கு முன்பாகவே, கர்த்தர் அவன் பேசப்போவதை அறிந்திருக்கிறார். அதுபோலவே, மனுஷன் ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பாகவே, அவன் செய்யப்போகிற காரியத்தைப்பற்றியும் கர்த்தர் அறிந்திருக்கிறார்.

கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. அவர் மனுஷர் மீது பிரியமாயிருக்கிறார். ஆனாலும் மனுஷருடைய வணங்காக்கழுத்து கர்த்தருக்கு பிரியமானதல்ல. அவர் நம்முடைய கீழ்ப்படிதலை விரும்புகிறார். வணங்காக்கழுத்துள்ளவர்கள் கர்த்தருக்கு விரோமாகக் கலகம்பண்ணுகிறவர்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வணங்காக்கழுத்துள்ள ஜனமாயிருப்பதினால், அவர்கள் கர்த்தருடைய அன்புக்கும், கிருபைக்கும், இரக்கத்திற்கும் பாத்திரவான்களாயிராமல், அவருடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கும், தண்டனைக்கும், கோபத்திற்கும் பாத்திரவான்களாயிருக்கிறார்கள். வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள், தங்களுடைய பாவத்தினிமித்தமாக, அழிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாக தண்டித்திருப்பாரென்றால், அவர்கள் ஏற்கெனவே நிர்மூலமாகியிருப்பார்கள். அவர்கள் இதுவரையிலும் அழிந்து போகாமலும், நிர்மூலமாகாமலுமிருப்பது, கர்த்தருடைய சுத்தக்கிருபை.

இஸ்ரவேல் ஜனத்தார் வணங்காக்கழுத்துள்ள ஜனமாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை மொத்தமாக கைவிட்டுவிடவில்லை. கர்த்தர் அவர்களைவிட்டு முழுவதுமாக விலகிப்போய்விடவுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குப் போகவேண்டும் என்பதே கர்த்தருடைய திட்டமாகயிருந்தது. அந்தத் திட்டத்தில் மாற்றம் எதுவுமில்லை. அவர்கள் கானான் தேசத்திற்குப்போக வேண்டும் என்றே கர்த்தர் இப்போதும் விரும்புகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயும், எகிப்து தேசத்திலிருந்து நீ அழைத்துக் கொண்டு வந்த ஜனங்களும் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள்" *(யாத் 33:1)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை, ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் வாக்குமாறாதவர். அவருடைய வாக்குத்தத்தமும் மாறவில்லை. ஆனாலும் தம்முடைய பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரரோடு இருப்பதை கர்த்தர் இப்போது விரும்பவில்லை.

கர்த்தர் மோசேயை நோக்கி, "வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்" (யாத் 33:3) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரை கர்த்தர் வழிநடத்தமாட்டார். தமக்கு பதிலாக கர்த்தர் ஒரு தூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்புவார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன்" (யாத் 33:2) என்று சொல்லுகிறார்.

கர்த்தரே இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாரோடு கூட வந்தார். இப்பொழுது கானான் தேசத்திற்கு அவர்களை வழிநடத்த ஒரு சாதாரண தூதனை அனுப்புவதாகக் கூறுகிறார். இஸ்ரவேலர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையினால் தேவன் தம்முடைய கோபத்தினால் அவர்களை வழியிலே நிர்மூலம் பண்ணிவிடுவார். (யாத் 33:2-3). கர்த்தர் அவர்களோடு வராமல் தமது தூதனை அனுப்புவதாகக் கூறுகிறார்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்துகிறார்கள். தேவனிடத்தில் ஜெபிக்கிறார்கள் (யாத் 33:4-10) மோசே தேவனிடத்தில் தம்முடைய ஜனங்களுக்காகப் பரிந்து பேசுகிறார். கர்த்தர் மறுபடியுமாகத் தம்முடைய மனதை மாற்றி, அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்துகிறார் (யாத் 23:20, யாத் 33:11-17).

இஸ்ரவேல் ஜனத்தார் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை அழிப்பதற்கு தம்முடைய சங்காரதூதனை உடனே அனுப்பவில்லை. அவர்களை வழிநடத்துவதற்காகவும், சத்துருக்களிடமிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகவும், சத்துருக்களை அவர்களைவிட்டு துரத்துவதற்காகவும் கர்த்தர் தம்முடைய தூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் நிமித்தமாக, கர்த்தருடைய நீதி அவர்களை அழித்துப்போடவேண்டும் என்று சொல்லுகிறது. ஆனால் கர்த்தருடைய கிருபையும் இரக்கமுமோ அவர்களை கைவிட மறுக்கிறது. "இஸ்ரவேலே நான் உன்னை எப்படி கைவிடுவேன்" என்று கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் சொல்லுகிறார்.

"எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப்போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" (ஓசி 11:8).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி சொல்லும்போது, "நீங்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்" என்றும், "ஆகையினால் நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன்" என்றும் சொன்னார். துக்கமான இவ்வார்த்தைகளை ஜனங்கள் கேட்டபோது, ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக் கொள்ளாமல் துக்கித்துக் கொண்டிருக்கிறார்கள் (யாத் 33:4).

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களுக்காக மோசே அவர்களைக் கடிந்து கொள்கிறார். அதன்பின்பு, ஜனங்கள் துக்கித்துக் கொண்டிருக்கிறார்கள் (யாத் 33:4-6).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷத்தில் உங்கள் நடுவில் எழும்பி, உங்களை நிர்மூலம் பண்ணுவேன்; ஆகையால், நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போடுங்கள்; அப்பொழுது நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அறிவேன் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்" (யாத் 33:5) என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு சொன்ன இந்த வார்த்தைகளை, இஸ்ரவேல் ஜனத்தார் கேட்டபோது மிகவும் துக்கப்படுகிறார்கள்.

"நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களை கழற்றிப்போடுங்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "உங்கள் பாவத்திற்கு மனந்திரும்புங்கள், மனந்திரும்புதலுக்கு அடையாளமாக உங்கள் ஆபரணங்களை கழற்றிப்போடுங்கள்" என்று பொருள். ஆபரணங்களை அணிந்துகொள்வது சந்தோஷத்திற்கு அடையாளம். ஆபரணங்களை கழற்றிப்போடுவது துக்கத்திற்கு அடையாளம்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் ஆபரணங்களை கழற்றிப்போட்டு, தங்கள் பாவங்களுக்காக துக்கப்பட்டு, மனந்திரும்பும்போது, கர்த்தர் அவர்களுக்கு செய்யவேண்டியதை அறிவார். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய இரக்கத்தைக் காண்பிப்பார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அவருடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக கிரியை செய்யும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக துக்கப்பட்டு, மனந்திரும்பவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, நம்முடைய பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்புவதை தவிர வேறு வழி எதுவுமில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக்கித்துக்கொண்டிருக்கிறார்கள் *(யாத் 33:4)*. அவர்கள் தங்கள் பாவங்களுக்காக துக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவத்தின் நிமித்தமாக, கர்த்தருக்கு அவர்கள்மீது கோபமுண்டாயிற்று. கர்த்தரும் தம்முடைய கோபத்தினால், அவர்கள் நடுவே செல்ல மறுத்துவிடுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, வணங்காக்கழுத்துள்ள ஜனங்களாகயிருப்பார்களென்றால், கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை நிர்மூலம்பண்ணிப்போடுவார்.

கர்த்தரோ இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவத்தினிமித்தமாக அவர்களை உடனே நிர்மூலம்பண்ணிப்போடவில்லை. கர்த்தர் அவர்கள் நடுவிலே செல்ல மறுக்கிறார். இது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கொடுக்கப்படும் பெரிய தண்டனை. கர்த்தர் சொல்லும் இந்த துக்கமான வார்த்தைகளை ஜனங்கள் கேட்டு மிகவும் துக்கப்படுகிறார்கள்.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னத்தைவிட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போகிறார். பாவிகள் தங்கள் பாவத்திற்காக துக்கப்படவேண்டும். மனம் வேதனைப்படவேண்டும். தங்களுடைய பாவத்தினிமித்தமாக, கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னம் தங்களைவிட்டு விலகிப்போனதை நினைத்து, பாவிகள் அதிகமாக மனம் வேதனைப்படவேண்டும். அதிகமாய் துக்கப்படவேண்டும். நாம் பாவம் செய்யும்போது கர்த்தர் நம்மை விட்டுவிலகிப்போவது, நமக்கு கொடுக்கப்படும் மிகப்பெரிய தண்டனையாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினிமித்தமாக துக்கமும், மனவேதனையும், அவமானமும் அடைந்திருக்கிறார்கள். துக்கப்படுகிறவர்கள் தங்கள் ஆபரணங்களை போட்டுக்கொள்ளமாட்டார்கள். அவமானப்படுகிறவர்கள் தங்களுக்கு ஆபரணங்களைப்போட்டு தங்களை அழகுபடுத்தமாட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று தேவன் இன்னும் முடிவு பண்ணவில்லை. அவர்களை உடனடியாக நிர்மூலம் பண்ண வேண்டாம் என்று மோசே கர்த்தரிடத்தில் கெஞ்சிப் பிரார்த்திக்கிறார் *(யாத் 32:7-14)*. அவர்கள் செய்த பாவத்தின் நிமித்தம் தேவன் அவர்கள்மீது இன்னும் கோபமாகவே இருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர்களுக்குத் தேவன் தங்களை மன்னித்து விட்டாரா, அல்லது இன்னும் மன்னிக்க வில்லையா என்னும் நிச்சயம் இல்லை. எல்லோரும் ஒரு பரீட்சார்த்த நிலையில் இருக்கிறார்கள்.

தேவனுடைய கோபத்திற்கு ஆளாகியிருக்கும்போது, யாரும் ஆபரணங்களை அணிந்து, தங்களை அழகு படுத்திக்கொள்ளமாட்டார்கள் (யாத் 33:4-6). அக்காலத்தில் ஸ்திரீகளும், புருஷரும் ஆபரணங்களை அணிந்திருந்தார்கள். (யாத் 32:3-4,24; யாத் 35:22).

இஸ்ரவேல் புத்திரர் ஒரேப் மலையருகே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போடுகிறார்கள் (யாத் 33:6). ஒரு சில மூலஎபிரெய பாஷை பதிப்புக்களில், "இஸ்ரவேல் புத்திரர் ஒரேப் மலையைவிட்டு தூரத்திலே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போடுகிறார்கள்" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

ஆயக்காரன் தூரத்திலே நின்று தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தியதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரும் ஒரேப் மலைக்கு தூரத்திலே நின்று, தங்களுடைய ஆபரணங்களைக் கழற்றிப்போட்டு, தங்களுடைய பாவங்களுக்காக துக்கப்படுகிறார்கள்.

"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்" (லூக் 18:13).

## ஆசரிப்புக் கூடாரம்
## யாத் 33:7-11

**யாத் 33:7. மோசே கூடாரத்தைப் பெயர்த்து, அதைப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்டு, அதற்கு ஆசரிப்புக் கூடாரம் என்று பேரிட்டான். கர்த்தரைத் தேடும் யாவரும் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போவார்கள்.**

**யாத் 33:8. மோசே கூடாரத்துக்குப் போகும் போது, ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்றுகொண்டு, அவன் கூடாரத்துக்குள் பிரவேசிக்குமட்டும், அவன் பின்னே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.**

**யாத் 33:9. மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் இறங்கி, கூடார வாசலில் நின்றது; கர்த்தர் மோசேயோடே பேசினார்.**

**யாத் 33:10. ஜனங்கள் எல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கக்கண்டார்கள்; ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில்பணிந்துகொண்டார்கள்.**

**யாத் 33:11. ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்; பின்பு, அவன் பாளயத்துக்குத் திரும்பினான்; நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான்.**

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய மனதிலே பாவத்தைக்குறித்த துக்கமும், வேதனையும் அவமானமும் ஏற்படவேண்டும் என்று மோசே எதிர்பார்க்கிறார். அவர்களுடைய மனவேதனையை கூட்டும் வண்ணமாக, மோசே பாளயத்திற்கு நடுவிலே இருக்கிற கூடாரத்தைப் பெயர்த்து அதை பாளயத்திற்கு புறம்பே தூரத்திலே போடுகிறார். மோசே அதற்கு ஆசரிப்புக்கூடாரம் என்று பேரிடுகிறார் (யாத் 33:7).

தேவன் இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் கூடாரத்தில் வாசம்பண்ணினார். தேவன் அவர்கள் நடுவில் தொடர்ந்து வாசம்பண்ணுவாரா என்னும் நிச்சயமில்லாத தன்மை உண்டாயிற்று. மோசே கூடாரத்தைப் பெயர்த்துப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்தில் போட்டுவிடுகிறார் (யாத் 33:3-11; எபி 13:13). இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் கொடூரத்தை இது விளக்குகிறது. இஸ்ரவேல் புத்திரருக்குத் தேவனோடு ஐக்கியம் இருக்கிறதா அல்லது தேவன் அவர்களை அழிப்பதற்கு ஆயத்தமாகிவிட்டாரா என்று யாருக்கும் தெளிவாகத் தெரியவில்லை. எபிரெயருடைய வரலாற்றின் பிரகாரம் பாளயத்திலிருந்து 3,000 அடி தூரத்துக்கு அப்பால் கூடாரம் போடப்பட்டது என்று இதைப்பற்றிக் கூறுகிறார்கள்.

யாத் 25:1-27:21; யாத் 36:1-40:38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆசரிப்புக் கூடாரம் இன்னும் நிறுவப்படவில்லை. ஆகையினால் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கூடாரம் பலிகளைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தற்காலிகக் கூடாரமாக இருக்கலாம்.

எபிரெயமொழியில் "ஆசரிப்புக்கூடாரம்" என்பதற்கு இரண்டு எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன: "ஒஹேல்" "மிஷ்கான்" என்பனவாகும். இவ்விரண்டு வார்த்தைகளும் சீனாய் வனாந்தரத்தில் போடப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தையே குறிக்கும்.

மிஷ்கான் என்னும் எபிரெய வார்த்தை மோசேயின் கூடாரத்தையும், சாலொமோனின் தேவாலயத்தையும் குறிக்கும். மனுஷர் மத்தியிலே தேவன் வாசம்பண்ணும் இடம் என்பது இதன் பொதுவான பொருள். இந்த எபிரெய வார்த்தை தேவாலயம் என்றோ, வீடு என்றோ எங்கும் மொழிபெயர்க்கப்படவில்லை. இந்த வார்த்தை வாசம்பண்ணுதல் என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தேவன் இங்கு வாசம்பண்ணுகிறார் என்பதே "மிஷ்கான்" என்னும் எபிரெய வார்த்தையின் பொருளாகும்.

பரிசுத்த வேதாகமத்தில் மோசேயின் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வேறு சில மாற்றுப்பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஆராதனை செய்யும் ஆசரிப்புக் கூடாரம் (யாத் 27:21; யாத் 28:43; யாத் 29:4,10-11)

2. ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலம் (யாத் 39:32; யாத் 40:2,6,29)

3. வாசஸ்தலம் (யாத் 40:28; எண் 1:50)

4. கர்த்தருடைய வாசஸ்தலம் (லேவி 17:4)

5. சாட்சியின் வாசஸ்தலம் (எண் 1:50-53)

6. சாட்சியின் கூடாரம் (எண் 17:7)

7. கர்த்தருடைய வாசஸ்தலம் (யோசு 22:19)

8. தேவனுடைய ஆலயமாகிய வாசஸ்தலம் (1நாளா 6:48)

வெளிப்பிராகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் ஆகியவை எல்லாமே ஆசரிப்புக் கூடாரம் என்று அழைக்கப்படுகிறது. எபி 9:1-8 ஆகிய வசனங்களில் பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் முதலாம்கூடாரம் எனவும், இரண்டாம் கூடாரம் எனவும் அழைக்கப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய கூடாரத்திலே இஸ்ரவேல் ஜனத்தாரை சந்திக்கிறார். அங்கே அவர்கள் தம்மிடத்தில் ஏறெடுக்கும் வேண்டுதல்களுக்கும், விண்ணப்பங்களுக்கும் கர்த்தர் பதில் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே, கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள். இதுவரையிலும் கர்த்தருடைய கூடாரம் அவர்களுடைய பாளயத்திற்கு நடுவிலே இருந்தது. இப்போதோ மோசே பாளயத்திற்கு நடுவிலே இருக்கிற கூடாரத்தைப் பெயர்த்து, பாளயத்திற்கு புறம்பே போடுகிறார். இந்தக் கூடாரம் பாளயத்திற்கு புறம்பே சற்று தூரத்திலே போடப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாகயிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான கூடாரம் அவர்களை விட்டு தூரத்திலே போடப்படுகிறது. கர்த்தருடைய சமுகத்திற்கு அருகாமையிலிருக்க இஸ்ரவேல் ஜனத்தார் அபாத்திரராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரோடு ஒப்புரவாகி சமாதானமாயிருக்கவேண்டும். இல்லையென்றால் அவர்களால் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அருகாமையில் வரமுடியாது. அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், அவர்கள் தம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரோடு ஒப்புரவாவதற்கு, இன்னும் ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளது.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் பாளயத்திற்கு புறம்பே தூரத்திலே போடப்பட்டாலும், கர்த்தரைத் தேடும் யாவரும், அந்த ஆசரிப்புக்கூடாரத்திற்குப் போகலாம். அங்கே அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரோடு ஒப்புரவாகலாம். கர்த்தருடைய கூடாரம் பாளயத்திற்கு புறம்பே போடப்பட்டாலும், கர்த்தரை தேடுகிற யாவரும், அவருடைய சமுகத்திலே வரவேற்கப்படுகிறார்கள் (யாத் 33:7).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்திலே வந்து ஜெபிப்பதற்காக, பாளயத்திற்கு புறம்பே ஒரு ஸ்தலம் ஆயத்தம்பண்ணப்படுகிறது. அந்த ஸ்தலத்திலே கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தரைத் தேடுகிற இஸ்ரவேல் ஜனத்தார், ஆசரிப்புக்கூடாரத்திற்குப்போய், கர்த்தருடைய இரக்கத்திற்காகவும், கிருபைக்காகவும் மன்றாடி ஜெபம்பண்ணுகிறார்கள்.

மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் இறங்கி, கூடார வாசலில் நிற்கிறது; கர்த்தர் மோசேயோடே பேசுகிறார் (யாத் 33:9). மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார். அவர் கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் நடுவிலே மத்தியஸ்த ஊழியம் செய்கிறார். இதற்காக அவர் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறார்.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேல் புத்திரருக்கும் ஓரேப் மலைக்கும் நடுவிலே போடப்பட்டிருக்கிறது. மோசே கூடாரத்துக்குப் போகும் போது, ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்றுகொண்டு, மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்குமட்டும், அவர் பின்னே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (யாத் 33:8). அப்போது மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள். அவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆனாலும் அவர்கள் இப்போது தங்கள் பாவத்திற்கு மனம் வருந்துகிறார்கள். கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுடைய மனம் மனந்திரும்புதலுக்கு நேராக புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கையில், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும், தங்கள் கூடார வாசலில் நின்றுகொண்டு, மோசேயின் பின்னே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்த போது அவர்கள் மோசேயை மதிக்கவில்லை. ஆனால் இப்போதோ அவர்கள் மோசேக்கு மதிப்பு கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வணங்காக்கழுத்துள்ள ஜனங்களாக, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, அவர்கள் மோசேயின் மத்தியஸ்த ஊழியத்தை மதிக்கவில்லை. இப்போதோ அவர்கள் மோசேயின் மத்தியஸ்த ஊழியத்தை மதித்து, அதை சார்ந்து நிற்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும், அவருடைய மத்தியஸ்த ஊழியத்திற்கும் மதிப்பு கொடுக்கும் வண்ணமாக, அவர் கூடாரத்திற்குள் பிரவேசிக்கையில், அவர்கள் எல்லோரும் மோசேயின் பின்னே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் வானத்திலிருந்து இறங்கி, கூடார வாசலில் நிற்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு தூரத்திலே நின்று, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பம் வானத்திலிந்து இறங்கி, கூடாரவாசலில் நிற்பதைப் பார்க்கிறார்கள். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் பணிந்து கொள்கிறார்கள் (யாத் 33:10).

மோசேயைச் சந்திக்கத் தேவன் இறங்கி வருகிறார். தேவன் மோசேயை அங்கிகரித்திருக்கிறார் என்பதை ஜனங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தேவன் கூடார வாசலுக்கு வந்திருக்கலாம்.

கர்த்தர் மோசேயோடே பேசுகிறார். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசுகிறார். (யாத் 33:9-11). கர்த்தர் மோசேயோடு நேரடியாகப் பேசவில்லை என்றும், மோசேயின் உள்ளத்தில் உணர்த்தினார் என்றும் சிலர் கூறுகிறார்கள். இது தவறான கருத்து. "என் முகமோ காணப்படாது" (யாத் 33:23) என்று கர்த்தர் மோசேயிடம் கூறியதை வைத்து இவ்வாறு கூறுகிறார்கள். இந்த வசனத்தில் முகம் என்பது தேவனுடைய அளவற்ற மகிமையைக் குறிக்கும். அவர் வாசம்பண்ணும் ஒளியைக் குறிக்கும். அந்த ஒளியின் பூரணத்தை யாரும் பார்த்ததில்லை, பார்க்கவும் முடியாது. (1தீமோ 6:16). தேவன் வாசம்பண்ணும் ஒளிக்கு வெளியில் அவருடைய முகத்தை மனுஷர் தரிசிக்கலாம். (யாத் 33:18-23)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதிக்கும்போது, தங்களுடைய கூடாரங்களுக்குள்ளே யாருக்கும் தெரியாமல் மறைவாகவோ, இரகசியமாகவோ ஆராதிக்கவில்லை. அவர்கள் தங்கள் தங்கள் கூடார வாசலில் கர்த்தரை பணிந்துகொள்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் இதற்கு முன்பு, வெட்கமும், அவமானமும் இல்லாமல் எல்லோருக்கும் முன்பாக, தங்கள் கூடாரங்களுக்கு வெளியே பொன்கன்றுக்குட்டிக்கு பலிகளை செலுத்தி, அதை ஆராதித்தார்கள். அவர்கள் கன்றுக்குட்டியை ஆராதித்தபோது வெட்கப்படவில்லை.

அதே இஸ்ரவேல் ஜனங்கள் இப்போது தங்கள் தங்கள் கூடாரவாசலிலே கர்த்தரைப் பணிந்துகொள்கிறார்கள். கர்த்தரை கனம்பண்ணவும், மோசேக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவும் இஸ்ரவேல் புத்திரர் இப்போது வெட்கப்படவில்லை. எல்லா ஜனங்களுக்கும் முன்பாக பொன்கன்றுக்குட்டியை ஆராதித்த இஸ்ரவேல் ஜனத்தார், இப்போது கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் கூடாரத்திற்குள்ளே இருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார். கர்த்தரும் மோசேயோடே பேசுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு ஒப்புரவாகவும், அவர்களோடு சமாதானமாயிருக்கவும் விருப்பம் தெரிவிக்கிறார்.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம், அவருடைய உடன்படிக்கையின் ஸ்தலமாகயிருக்கிறது. கர்த்தர் அந்த பரிசுத்த ஸ்தலத்திலே மோசேயை சந்திக்கிறார். நம்முடைய இருதயம் எப்போதும் கர்த்தருக்கு நேராக திரும்பியிருக்கவேண்டும். கர்த்தரை தேடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிப்பார்கள். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலே நம்மை சந்திக்கிறார்.

மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கையில், கர்த்தர் மோசேயோடே பேசுகிறார். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடே முகமுகமாகப் பேசுகிறார் (யாத் 33:11). இந்த வாக்கியத்திற்கு கர்த்தர் தம்மை மோசேக்கு பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார் என்று பொருள் சொல்லலாம்.

இதுவரையிலும் ஆரோன் மோசேயோடு கூடவே இருந்தார். ஆரோன் பாவம் செய்தபின்பு, அவர் மோசேயோடு காணப்படவில்லை. (யாத் 32:21-25). மோசே தேவனிடத்தில் பரிந்து பேசியதற்குப் பின்பு, அவர் மறுபடியும் தன்னுடைய ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறார் (யாத்32:30-33:23) ஆரோன் இதற்குப் பின்பு, வனாந்தரத்தில் 38 வருஷங்களாகப் பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்துவருகிறார் (யாத் 39:1-43; லேவி 1:1- எண் 20:29).

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய சத்திய வார்த்தைகளை தெளிவாகவும், ஆதாரங்களோடும் வெளிப்படுத்துவதுபோல, மோசேக்கும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மோசேயோடே முகமுகமாகப் பேசும்போது, அவருடைய அன்பும் கிருபையும் மோசேக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளை பெற்றுக்கொண்ட பின்பு அவர் பாளயத்திற்கு திரும்புகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரருடைய பாளயத்திற்கு அவசரமாக திரும்பிப்போக வேண்டி இருப்பதினால், ஆசரிப்புக்கூடாரத்திலே யோசுவாவை விட்டு விட்டு செல்கிறார். நூனின் குமாரனாகிய யோசுவா மோசேக்கு பணிவிடைக்காரனாயிருக்கிறார். யோசுவா ஒரு வாலிபர்.

கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தர் தங்கியிருக்கும்போது, அங்கே ஒருவருமில்லாமல், கர்த்தரை மாத்திரம் தனியாக விட்டுவிட்டு, கூடாரத்தை காலியாக விட்டு விட்டுப்போவது நல்லதல்ல.

கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கிறது. அது வானத்திலிருந்து இறங்கி வந்திருக்கிறது. மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கும் வரையிலும், கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னமும் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருக்கும். மேகஸ்தம்பம் மறுபடியும் கூடாரவாசலிலிருந்து எழும்பி வானத்திற்கு ஏறிப்போகும் வரையிலும், மோசே யோசுவாவை ஆசரிப்புக்கூடாரத்திலே விட்டு விட்டு போகிறார். யோசுவாவும் அதுவரையிலும் ஆசரிப்புக்கூடாரத்தை விட்டு பிரியாதிருக்கிறார் (யாத் 33:11).

## கர்த்தருடைய சமுகம் யாத் 33:12-17

**யாத் 33:12. மோசே கர்த்தரை நோக்கி: தேவரீர் இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டு போ என்று சொன்னீர்; ஆகிலும், என்னோடேகூட இன்னாரை அனுப்புவேன் என்பதை எனக்கு நீர் அறிவிக்கவில்லை; என்றாலும், உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றும், என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது என்றும், தேவரீர் சொன்னதுண்டே;**

**யாத் 33:13. உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான்.**

**யாத் 33:14. அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.**

**யாத் 33:15. அப்பொழுது அவன் அவரை நோக்கி: உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்.**

**யாத் 33:16. எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்; நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான்.**

**யாத் 33:17. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ சொன்ன இந்த வார்த்தையின் படியே செய்வேன்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்.**

மோசே மறுபடியுமாய் ஆசரிப்புக்கூடாரத்தில் பிரவேசிக்கிறார். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக மோசே தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். மோசே கர்த்தரிடத்தில் இரண்டு முக்கியமான விண்ணப்பங்களை சொல்லுகிறார். அவையாவன: 1. கர்த்தருடைய சமுகம் தனக்கு முன்பாக செல்லவேண்டும். 2. கர்த்தர் தம்முடைய மகிமையை தனக்கு காண்பித்தருளவேண்டும். இவை இரண்டும் மோசேயின் முக்கியமான விண்ணப்பங்களாகும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயும், எகிப்து தேசத்திலிருந்து நீ அழைத்துக் கொண்டு வந்த ஜனங்களும் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள்" (யாத் 33:1) என்று சொல்லுகிறார்.

ஆனால் மோசேயோ கர்த்தரை நோக்கி, "உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்" (யாத் 33:15) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, வணங்காக்கழுத்துள்ள ஜனமாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திலே குடியேற்ற சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே செல்ல விரும்பவில்லை. மோசேயோ கர்த்தருடைய சமுகம் தங்களோடே கூட செல்ல வேண்டுமென்று விரும்புகிறார். அதற்காக மோசே கர்த்தரிடத்தில் மிகுந்த பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "தேவரீர் இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டு போ என்று சொன்னீர்; ஆகிலும், என்னோடேகூட இன்னாரை அனுப்புவேன் என்பதை எனக்கு நீர் அறிவிக்கவில்லை; என்றாலும், உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றும், என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது என்றும், தேவரீர் சொன்னதுண்டே" (யாத் 33:12) என்று தன்னுடைய வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் ஆரம்பிக்கிறார்.

கர்த்தரே மோசேயை நோக்கி, "இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டு போ" என்று சொன்னார். கர்த்தரே மோசேக்கு இந்த ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் மோசேயை பேர் சொல்லி அழைத்திருக்கிறார். கர்த்தருடைய கண்களில் மோசேக்கு கிருபை கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய கிருபை தனக்கு கிடைத்திருப்பதற்கு அடையாளமாக, கர்த்தர் தம்முடைய வழியை தனக்கு அறிவிக்கவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும்" (யாத் 33:13) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடவர மறுத்துவிடுகிறார். தம்முடைய தூதனை அனுப்பி, அவர்களைக் கானான் தேசத்திற்கு வழிநடத்துவதாகக் கூறுகிறார். மோசேயோ தேவனுடைய சமுகத்தில் கெஞ்சிப் பிரார்த்தித்து, உம்முடைய வழியை எனக்கு அறிவியும் என்று விண்ணப்பம் பண்ணுகிறார்.

கானான் தேசத்திற்குள் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துவதற்குக் கர்த்தர் உதவி புரிய வேண்டுமென்று மன்றாடுகிறார். உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும் என்று கூறுகிறார். கர்த்தர் தங்களை மன்னித்து, தங்களுடைய பாளயத்துக்கு வந்து, தம்முடைய பிரசன்னத்தினால் இதற்கு முன்பு, தங்களை வழிநடத்தியதுபோல மறுபடியும் வழிநடத்துமாறு மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம் செய்கிறார் (யாத் 33:13-17).

ஆரோன், இஸ்ரவேல் புத்திரர் ஆகியோரின் பாவங்களினால் (யாத் 32:7-28) தேவன் தம்முடைய கூடாரத்தைப் பாளயத்திற்கு வெளியே போட்டு விடுகிறார். (யாத் 33:7-11) பாவியான இஸ்ரவேல் ஜனங்களோடு தேவன் உடன்செல்ல மறுத்துவிடுகிறார். (யாத் 33:1-3) தேவன் மோசேமீது வைத்துள்ள அன்பினால், மனமிறங்கி, மறுபடியும் பாளயத்திற்கு வந்து, இஸ்ரவேல் புத்திரரோடுகூட இருக்கிறார் (யாத் 33:14-17).

மற்ற தேசங்களிலிருந்து இஸ்ரவேல் ஜனம் வேறுபிரிந்து இருக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாகும். (யாத் 33:1; எண் 23:9). தாம் நேசிக்கிற தம்முடைய பிள்ளைகளுக்கும், தம்மைப் பிரியப்படுத்துகிற தம்முடைய பிள்ளைகளுக்கும் தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.

"உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன்" என்னும் வாக்கியம் இரண்டு முறை கூறப்பட்டிருக்கிறது (யாத் 33:12,17). மோசேயின் அழைப்பையும், தேவனோடு மோசே வைத்திருக்கும் நெருங்கிய ஐக்கியத்தையும் இந்த வாக்கியம் உறுதிபண்ணுகிறது.

மோசே கர்த்தரைப்பற்றிக் கொள்ள விரும்புகிறார். கர்த்தர் மோசேயை அறிந்திருக்கிறார். மோசேக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருக்கிறது. கர்த்தர் அவருக்கு நன்மை செய்ய விரும்புகிறார். கர்த்தர் தனக்கு ஏதாவது நன்மை செய்ய விரும்பினால், அந்த நன்மையை அவர் இஸ்ரவேல் புத்திரருக்காக செய்யவேண்டும் என்று மோசே கர்த்தரிடத்தில் மன்றாடுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், பிதாவின் சமுகத்திலே நமக்காக பரிந்து பேசும்போது, மோசேயைப்போலவே விண்ணப்பம்பண்ணுகிறார். பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் எப்போதும் பிரியமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் பிதாவின் பிரியத்தை, நமக்கு சாதகமாக பெற்றுக்கொடுக்க விரும்புகிறார். கிறிஸ்துவானவர் பிதாவின் கிருபையையும் இரக்கத்தையும் நமக்கு பெற்றுத்தருகிறார். இதனால் நாம் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம்.

"பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" (எபே 1:5,6).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து அவருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் அபாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இன்னும் கர்த்தருடைய ஜனமாகவே இருக்கிறார்கள் என்று மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். "இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும்" (யாத் 33:13) என்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்காகவே மீட்டுக்கொண்டார். அவர் இஸ்ரவேல் ஜனத்திற்காக மிகப்பெரிய காரியங்களையெல்லாம் செய்திருக்கிறார். எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்த இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் விடுவித்து, மீட்டுக்கொண்டார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய ஜனமாக அங்கீகரித்து, அவர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆகையினால், "இந்த ஜாதி உம்முடைய ஜனம் என்று நினைத்தருளும்" என்றும், "அவர்களை உம்முடைய சமுகத்திலிருந்து துரத்திவிடாதிரும்" என்றும் மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, கர்த்தர் மோசேயை நோக்கி, "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" (யாத் 33:14) என்று சொல்லுகிறார். "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்" என்று கர்த்தர் தனக்கு சொன்ன வாக்கியம், மோசேக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. கர்த்தர் தனக்கு சொன்ன இந்த வாக்கியத்தை ஆதாரமாக வைத்து, மோசே அவரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக இன்னும் அதிகமாய் பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்" (யாத் 33:15) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய சமுகம் தன்னோடு இல்லையென்றால், மோசேயால் ஜீவனோடிருக்க முடியாது. அவரால் எங்கும் அசையமுடியாது. ஆகையினால் கர்த்தருடைய சமுகம் தன்னோடே கூடவரவில்லையென்றால், தன்னையும், இஸ்ரவேல் புத்திரரையும் இவ்விடத்திலிருந்து எங்கும் கொண்டுபோகவேண்டாம் என்று மோசே சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது" (யாத் 33:12) என்று சொன்னார். மோசேயோ கர்த்தரை நோக்கி, "எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்" (யாத் 33:16) என்று கேட்கிறார்.

கர்த்தருடைய கண்களில் தனக்கு கிருபை கிடைத்திருக்கிறது என்பது எதினால் அறியப்படும் என்றும் மோசே கர்த்தரிடத்தில் மிகுந்த பணிவோடு சொல்லுகிறார். "நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும்" (யாத் 33:16) என்று மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கண்களில் மோசேக்கு மாத்திரமே கிருபை கிடைத்திருக்கிறது. அவர் மோசேயை மாத்திரமே பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறார். "என் சமுகம் உனக்கு முன்பாக செல்லும்" என்றும், "நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" (யாத் 33:14) என்றும் கர்த்தர் மோசேக்கு மாத்திரமே சொன்னார். கர்த்தர் தனக்கு மாத்திரம் சொன்ன ஆசீர்வாதமான வார்த்தைகளை, மோசே இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பொதுவானதாக்குகிறார்.

"நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கர்த்தர் மோசேக்கு வாக்குப்பண்ணினாலும், மோசே கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். தாம் சொன்ன பிரகாரமாகவே கர்த்தர் மோசேக்கு இளைப்பாறுதலைத் தருகிறார்.

"நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்" (தானி 12:13).

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நல்ல தலைவராயிருக்கிறார். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனையும் கொடுப்பான். கர்த்தர் தன்னை ஆசீர்வதிப்பதாக சொல்லும்போது, அந்த ஆசீர்வாதம், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்று மோசே விரும்புகிறார்.

மோசேயைப்போலவே, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்களும், மற்றவர்களுடைய ஆத்துமாக்களுக்கு உத்திரவாதம்பண்ணி ஊழியம் செய்கிறார்கள். தாங்கள் மாத்திரம் பரலோகத்திற்கு போனால் போதாது என்றும், தங்களோடுகூட திரளான ஆத்துமாக்களையும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும் என்றும் பிரயாசப்பட்டு ஊழியம் செய்கிறார்கள்.

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு தொடர்ந்து செவிகொடுக்கிறார். கர்த்தருடைய கண்களிலே தனக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் கிருபை கிடைத்திருக்கிறது என்பதை அறிந்துகொள்வதற்கு, கர்த்தர் தங்களுக்கு நன்மையான காரியங்களை செய்யவேண்டும் என்று மோசே விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தரும் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுத்து, அவர் சொன்ன வார்த்தையின்படி செய்வதற்கு சம்மதிக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ சொன்ன இந்த வார்த்தையின் படியே செய்வேன்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன்" (யாத் 33:17) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய ஜெபம் மிகவும் வல்லமையுள்ளது. அது ஜீவனுள்ளது. நமது ஜெபம் நமக்கு ஜெயம் தரும். கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம் செய்திருக்கிறார். நாம் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபிக்கிறவர்களாயிருக்க வேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவின் சமுகத்திலே, நமக்காக எப்போதும் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய நீதியினால், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. நம்முடைய சுயநீதியினாலோ, சுயபரிசுத்தத்தினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை. கர்த்தருடைய நீதியினாலும், அவருடைய திருஇரத்தத்தினாலுமே, நாம் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

மோசேக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்திருப்பதினால், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் கர்த்தருடைய கண்களிலே தயவு கிடைக்கிறது. கர்த்தருடைய தயவு மோசேக்கு கிடைத்திருப்பதினால், மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார்.

மோசேயின் பணிவான ஜெபத்தின் மூலமாக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பம், வானத்திலிருந்து இறங்கி கூடாரத்தின் வாசலில் நிற்கிறது. கர்த்தர் மறுபடியுமாய் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் வாசம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் தங்களுடைய பாவங்களை விட்டு விலகி, கர்த்தரையே ஆராதிக்கிறார்கள்.

இந்த சம்பவத்திற்கு பின்பு, இஸ்ரவேல் ஜனத்தார் பொன்கன்றுக்குட்டிக்கு பலிகளை செலுத்தியதாகவோ, அதை ஆராதித்ததாகவோ, பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

## கர்த்தருடைய மகிமை
## யாத் 33:18-23

**யாத் 33:18. அப்பொழுது அவன்: உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான்.**

**யாத் 33:19. அதற்கு அவர்: என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்; எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன் மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் என்று சொல்லி,**

**யாத் 33:20. நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்.**

**யாத் 33:21. பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு.**

**யாத் 33:22. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்;**

**யாத் 33:23. பின்பு, என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார்.**

கர்த்தருடைய சமுகம் தன்னோடேகூட செல்லவேண்டும் என்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினார். கர்த்தரும் மோசேயின் விண்ணப்பத்தை ஏற்று, அவருடைய வார்த்தையின்படியே செய்வதாக சொல்லுகிறார். இதன்பின்பு மோசே கர்த்தரிடத்தில், "உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும்" (யாத் 33:18) என்று விண்ணப்பம் பண்ணுகிறார்.

மோசே தேவனுடைய முகத்தைப் பூரண மகிமையோடு காண விரும்புகிறார். இதற்கு முன்பு மோசே தேவனுடைய முகத்தைப் பார்த்திருக்கிறார். (யாத் 33:11). ஆனால் பூரண மகிமையோடு மோசே கர்த்தருடைய முகத்தைப் பார்க்கவில்லை (யாத் 16:10; யாத் 24:16-17). ஆகையினால்தான் இது வரையிலும் பார்த்திராத ஒரு காரியத்தைப் பார்க்க வேண்டுமென்று மோசே இப்போது தேவனிடம் விண்ணப்பம்பண்ணுகிறார் (யாத் 33:9).

கர்த்தர் மோசேயின் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதில் கொடுத்து கொண்டிருக்கிறார். மோசேக்கு ஜெபத்திலே ஜெயமுண்டாயிருக்கிறது. அவருக்கு கர்த்தருடைய கிருபை ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் மோசேயினிடத்தில், "என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது" என்று சொல்லுகிறார். மோசேயும் கர்த்தருடைய கிருபையை ஒவ்வொன்றாய்ப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் ஒவ்வொரு விண்ணப்பமாகக் கேட்கும்போது, கர்த்தர் அவருடைய ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதில் கொடுக்கிறார். மோசே கர்த்தரிடத்தில் கேட்கும்போது பெற்றுக்கொள்கிறார். அவர் கர்த்தரிடத்தில் அதிகமாய்க் கேட்கும்போது, கர்த்தருடைய கிருபையை அதிகமாய்ப் பெற்றுக்கொள்கிறார்.

மோசே இதுவரையிலும் கர்த்தருடைய வார்த்தைகளை தன்னுடைய செவிகளால் கேட்டார். இப்போது அவர் கர்த்தருடைய மகிமையை தன்னுடைய கண்களால் காணவேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தர் தம்முடைய மகிமையை மோசேக்கு காண்பிக்கும்போது, மோசே அதை தன்னுடைய கண்களால் பிரத்தியட்சமாய்க் காண்பார்.

கர்த்தரைத் தரிசிக்கிறவர்கள், தங்களுடைய மனக்கண்களால் விசுவாசத்தோடு தரிசிக்கவேண்டும் என்பது மோசேக்கு நன்றாய்த் தெரியும். கர்த்தரை மாம்சப்பிரகாரமான கண்களால் பார்க்க முடியாது. இதுவும் மோசேக்கு தெரியும். மோசே இதுவரையிலும் கர்த்தருடைய வார்த்தைகளை, தன்னுடைய சரீரப்பிரகாரமான செவிகளால் கேட்டார்.

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்தில், மேகஸ்தம்பத்தின் நடுவிலிருந்து மோசேயோடு பேசினார். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார். கர்த்தருடைய வார்த்தைகளை தன் காதுகளால் கேட்ட மோசே, இப்போது கர்த்தருடைய மகிமையை தன் கண்களால் காணவேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தர் தன்னுடைய விண்ணப்பத்திற்கு சாதகமான பதிலைக் கொடுப்பார் என்னும் நம்பிக்கை மோசேயின் மனதிலிருக்கிறது.

மோசே இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசினார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை மன்னித்து, அவர்களோடு ஒப்புரவாகியிருக்கிறார். கர்த்தருடைய ஒப்புரவாதலுக்கு அடையாளமாக, மோசே கர்த்தருடைய மகிமையைக் காண விரும்புகிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

தம்முடைய பரிசுத்த பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும் என்னும் நம்பிக்கை மோசேயின் இருதயத்தில் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக கர்த்தர் தம்முடைய மகிமையை தனக்கு காண்பித்தருவேண்டுமென்று மோசே எதிர்பார்க்கிறார். ஆனாலும் மோசே கர்த்தரிடத்தில், தான் என்ன கேட்கிறோம் என்பதை அறியாமலேயே இவ்வாறு கேட்கிறார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு தம்முடைய கிருபையுள்ள பிரதியுத்தரத்தை சொல்லுகிறார். மோசே கர்த்தரிடத்தில், "உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணினார். கர்த்தரோ மோசேயை நோக்கி, "நீ என் முகத்தை காணமாட்டாய்" *(யாத் 33:20)* என்று சொல்லுகிறார்.

தேவனுடைய மகிமைப் பிரகாசத்தை யாரும் காணமுடியாது. அதைக் கண்ட எந்தமனுஷனும் உயிரோடு இருக்கவும் கூடாது. *(யாத் 33:20,22; 1தீமோ 6:16)*. மோசே இதுவரையிலும் தேவனுடைய மகிமையின் ஒரு பகுதியை மட்டுமே கண்டிருக்கிறார் *(யாத் 33:11)*. மோசேயைப்போல மேலும் அநேகரும் தேவனை இவ்வாறு தரிசித்திருக்கிறார்கள். தேவனைக் கண்டவன் மரித்துப்போவான் என்பது எபிரெயருடைய பொதுவான நம்பிக்கை *(ஆதி 32:30; உபா 5:24; நியா 13:22; ஏசா 6:5; வெளி 1:16-18)*.

மோசேயின் விண்ணப்பம் கர்த்தருடைய சமுகத்திலே ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஆகையினால் கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு சாதகமான பதிலை சொல்லாமல், அவருடைய விண்ணப்பத்தை நிராகரித்துவிடுகிறார். கர்த்தருடைய முகத்தை மோசேயால் காணமுடியாது. "ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய மகிமை பூரணமாய் வெளிப்படும்போது, அதைத் தாங்கிக்கொள்ளக்கூடிய பெலன் மனுஷரிடத்தில் இல்லை. கர்த்தருடைய மகிமையை மனுஷன் பார்த்தால் அவன் மரித்துப்போவான். கர்த்தருடைய மகிமையைப் பார்த்து உயிரோடிருக்குமளவுக்கு மோசேயினிடத்திலும் விசேஷித்த பெலன் இல்லை. அவரும் கர்த்தருடைய முகத்தைக் கண்டால், மரித்துப்போவார்.

கர்த்தரைப்பற்றிய ஒரு சில இரகசியங்கள் இன்னும் நமக்கு வெளிப்படுத்தப்படாமல் மறைவாகவே இருக்கிறது. நாம் பரலோகத்திற்குபோன பின்புதான், கர்த்தரைப்பற்றிய அந்த இரகசியம் நமக்கு வெளிப்படுத்தப்படும். அதுவரையிலும் நாம் இந்தப் பிரபஞ்சத்தில் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நாம் பரலோகத்திற்கு போனபின்பு, கர்த்தர் இருக்கிற வண்ணமாகவே, நாம் அவரை தரிசிப்போம்.

"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" *(1யோவா 3:2).*

நாம் இப்போது இந்தப் பூமியிலிருக்கும் காலத்திலும், கர்த்தரைப்பற்றிய ஒரு சில வெளிப்பாடுகள் மாத்திரமே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் எந்த அளவுக்கு கர்த்தரை அறிந்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு கர்த்தரைக் கனம்பண்ண வேண்டும். கர்த்தரைப்பற்றி நமக்கு வெளிப்படுத்தப்படாத காரியங்களைக் குறித்து நாம் குழப்பமடையக்கூடாது. அறிவிக்கப்படாத இரகசியங்கள் கர்த்தருக்கே உரியது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ என் முகத்தை காணமாட்டாய்" என்று சொன்னாலும், அவர் மோசேக்கு ஆறுதலான பிரதியுத்தரமும் சொல்லுகிறார். "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்" *(யாத் 33:19)* என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

மோசே கன்மலை வெடிப்பில் மறைந்திருக்கும்போது தேவன் தம்முடைய நாமத்தை மோசேக்கு முன்பாகக் கூறுகிறார். கர்த்தரே மோசேக்கு முன்பாகக் கடந்து போகும்போது தம்முடைய நாமத்தை அவருக்குக் கூறுகிறார். ஆகையினால் இந்த நாமத்தைத் தூதன் யாரும் கூறவில்லை, தேவனே கூறுகிறார் என்னும் நிச்சயம் மோசேக்கு உண்டாயிருக்கும். தேவன் மோசேயைக் கடந்துபோகும் மட்டும், தம்முடைய கரத்தினால் அவரை மூடுகிறார். அதன் பின்பு, தேவன் தமது கரத்தை எடுத்த போது, மோசே கர்த்தருடைய பின்பக்கத்தைக் காண்கிறார் *(யாத் 33:19,22).*

தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் மனுஷன் தன்னுடைய சொந்த முயற்சியினால் சம்பாதிக்க முடியாது. தேவன் தம்முடைய சொந்தச் சித்தத்தின் பிரகாரம் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் மனுஷரை ஆசீர்வதிக்கிறார். தேவன் நல்லவர். கிருபையுள்ளவர். இரக்கமுள்ளவர். ஆகையினால், தேவன் தமது சொந்த விருப்பத்தின் பிரகாரம் மனுஷரை ஆசீர்வதிக்கிறார். மனுஷரை ஆசீர்வதிப்பது தேவனுக்குப் பிரியமான காரியம். *(யாத் 34:5-7; ரோமர் 9:15; எபே 1:5,11; வெளி 4:11).*

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதை மோசே உறுதிபண்ண விரும்புகிறார். அதற்கு அடையாளமாகவே, "உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும்" என்று மோசே கர்த்தரிடத்தில் கேட்டார். கர்த்தர் தம்முடைய மகிமையை மோசேக்கு காண்பிக்காவிட்டாலும், அவர் தம்முடைய தயையை எல்லாம் மோசேக்கு முன்பாக கடந்துபோகப்பண்ண சித்தமுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கு, கர்த்தருடைய தயை அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய தயை இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு நீரோடையைப்போல தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது. கர்த்தர் மோசேக்கு தம்முடைய தயையை எல்லாம் அவருக்கு முன்பாக கடந்துபோகப்பண்ணுகிறார். கர்த்தருடைய தயையை எண்ணி முடியாது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கு இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது.

மோசே கர்த்தரிடத்தில் "உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும்" என்று கேட்டார். கர்த்தர் "என்னுடைய தயையை உனக்கு காண்பிப்பேன்" என்று மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தருடைய தயையே அவருடைய மகிமை. கர்த்தருடைய மகிமையை அவருடைய மகத்துவத்திலும் நாம் காணலாம். அதே வேளையில் அவருடைய மகிமையை நாம் அவருடைய இரக்கத்திலும் காணலாம். இரக்கத்தில் வெளிப்படும் மகிமை, மகத்துவத்தில் வெளிப்படும் மகிமையைவிட அதிகமாயிருக்கும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன் மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன்" (யாத் 33:19) என்று சொல்லுகிறார். இந்த வசனப்பகுதியில் கர்த்தர் தம்முடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் எவன் மேல் கோபமாயிருக்க சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கோபமாயிருப்பேன்" என்று சொல்லவில்லை. கர்த்தருடைய கோபம் எப்போதுமே நீதியானதாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்கும். கர்த்தருடைய கிருபையோ நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படும் ஈவு. ஆகையினால் கர்த்தர், "நான் எவன் மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் யாரையும் குற்றப்படுத்தாமல், அந்தக் கிருபையினால் நம்மை இரட்சிக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ என் முகத்தைக் காணமாட்டாய்" என்று சொல்லிவிடுகிறார். கர்த்தரை கண்டு ஒரு மனுஷனும் உயிரோடிருக்கக்கூடாது. தம்மை முழுமையாகக் காணாமல், எந்த அளவுக்கு கண்டால், மனுஷனால் உயிரோடிருக்க முடியும் என்பதும் கர்த்தருக்கு தெரியும். கர்த்தர் மனுஷனுடைய பலத்தையும் அறிந்திருக்கிறார், அவனுடைய பலவீனத்தையும் அறிந்திருக்கிறார்.

கர்த்தர் மோசேயினிடத்தில் கன்மலையின் வெடிப்பைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்" (யாத் 33:21,22) என்று சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே கன்மலையாகயிருக்கிறார். நம்முடைய கன்மலையாகிய கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே, நாம் தேவனுடைய மகிமையைப்பற்றிய அறிவையும் ஞானத்தையும் பெற்றுக்கொள்கிறோம்.

"எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" (1கொரி 10:4).

மோசே கன்மலையின் வெடிப்பிலே பாதுகாப்பாயிருக்கவேண்டும். அப்போதுதான் அவரால் கர்த்தருடைய மகிமையைக் காணமுடியும். கர்த்தர் இந்தப் பூமியிலிருப்பவர்களுக்கு தம்முடைய மகிமையை ஓரளவு வெளிப்படுத்துகிறார். பரலோகத்திலிருக்கிறவர்களுக்கு கர்த்தருடைய மகிமை முழுவதுமாக வெளிப்படுத்தப்படும்.

மோசேக்கு கர்த்தருடைய மகிமை, இந்தப் பூமியில் பொதுவாக வெளிப்படுத்தப்படுவதைவிட அதிகமாகவும், பரலோகத்தில் அவருடைய மகிமை வெளிப்படுத்தப்படுவதைவிட குறைவாகவும், வெளிப்படுத்தப்படுகிறது. இந்தப் பூமியில் நாம் கர்த்தரைப்பற்றி அறிந்து கொள்கிற அறிவு குறைவாகவே இருக்கும். நாம் பரலோகத்திற்குப் போகும்போது இந்தக் குறைவு நம்மை விட்டு நீங்கும். அங்கே நாம் கர்த்தரை, அவர் இருக்கிற வண்ணமாகவே காண்போம்.

கர்த்தர் மோசேயை கன்மலையின் வெடிப்பிலே வைக்கிறார். அப்போது கர்த்தர் மோசேயைக் கடந்துபோகிறார். ஆனாலும் மோசேயால் கர்த்தரை காணமுடியவில்லை. கர்த்தர் மோசேயை கடந்துபோகுமட்டும், தம்முடைய கரத்தினால், மோசேயை மூடுகிறார். கர்த்தர் மோசேயை கடந்துபோனபின்பு, தம்முடைய கரத்தை எடுக்கிறார். அப்பொழுது மோசே கர்த்தரை காண்கிறார்.

ஆனால் மோசேயால் கர்த்தருடைய முகத்தை காணமுடியவில்லை. மோசே கர்த்தருடைய பின்பக்கத்தை மாத்திரமே காண்கிறார். கர்த்தருடைய முகம் மோசேயை கடந்து போகும்போது, அவருடைய கரம், மோசேயின் கண்களை மூடியிருக்கிறது. ஆகையினால் மோசேயால் கர்த்தருடைய முகத்தை காணமுடியவில்லை.

கர்த்தர் மோசேக்கு தம்மை வெளிப்படுத்தியதுபோலவே, நமக்கும் தம்மை வெளிப்படுத்துகிறார். நம்மாலும் கர்த்தருடைய முகத்தை காணமுடியாது. அவருடைய பின்பக்கத்தைத்தான் காணமுடியும். கர்த்தருடைய முகம் என்பது, இனிமேல் வரப்போகிற நாட்களில், கர்த்தர் செய்யப்போகிற கிரியைகளை குறிக்கிறது. கர்த்தருடைய பின்பக்கம் என்பது, அவர் இதுவரையிலும் செய்து முடித்திருக்கிற கிரியைகளைக் குறிக்கிறது.

நாம் பரிசுத்த வேதாகமத்தின் மூலமாகவும், நம்முடைய சொந்த அனுபவத்தின் மூலமாகவும், மற்றவர்களுடைய ஜீவயங்களில் நடைபெறும் சம்பவங்கள் மூலமாகவும், கர்த்தர் இதுவரையிலும் செய்து முடித்திருக்கிற கிரியைகளை மாத்திரமே காண்கிறோம். இவையெல்லாம் கர்த்தருடைய பின்பக்கத்திற்கு ஒப்பாகயிருக்கிறது. இவையெல்லாம் கர்த்தர் கடந்துபோன பின்பு, நாம் காண்கிற சம்பவங்கள்.

நம்முடைய ஜீவியத்திலும், மற்ற மனுஷருடைய ஜீவியத்திலும், இனிமேல் சம்பவிக்கப்போகும் காரியங்களைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அது நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. கர்த்தர் மாத்திரமே வரப்போகிற காரியங்களை அறிந்து வைத்திருக்கிறார்.

இனிமேல் நமக்கு முன்பாக நடைபெறப்போகிற காரியங்கள் எல்லாமே, கர்த்தருடைய முகத்திற்கு ஒப்பாகயிருக்கிறது. அவை நமக்கு மறைக்கப்பட்ட இரகசியமாயிருக்கிறது. மறைவான காரியங்கள் கர்த்தருக்கே உரியது.

மோசே கர்த்தருடைய முகத்தைக் காணாமல், அவருடைய பின்பக்கத்தை மாத்திரம் கண்டார். கர்த்தர் மோசேயை நோக்கி, "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாக கடந்துபோகப்பண்ணுவேன்" என்று சொன்னார். மோசே கர்த்தருடைய பின்பக்கத்தைப் பார்த்தபோது, அவர் கர்த்தருடைய தயையை எல்லாம் பார்க்கிறார். கர்த்தருடைய பின்பக்கமே, அவருடைய முழுதயையையும் வெளிப்படுத்துவதற்கு போதுமானதாகயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய தயையை மோசேக்கு வெளிப்படுத்தியதுபோல, நமக்கும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் இதுவரையிலும் செய்த காரியங்களெல்லாம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் அதை நோக்கிப் பார்த்து, இனிமேல் வரப்போகிற நன்மையான காரியங்களுக்காக, விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும்.

நம்முடைய காலங்களின் பிரகாசமும் மகிமையும் நமக்கு சீக்கிரத்தில் வெளிப்படுத்தப்படும். கர்த்தருடைய பின்பகுதியை பார்த்த நமக்கு, அவருடைய முகத்தைப் பார்க்கும் சிலாக்கியம் கிடைக்கும். உள்ளவன் எவனோ அவனுக்கு கொடுக்கப்படும். கர்த்தருடைய தயவுகளை இதுவரையிலும் பார்த்திருக்கிற நமக்கு, அவருடைய புதிய தயவுகளை பார்க்கக்கூடிய சிலாக்கியம் கிடைக்கும்.

தேவனுடைய ஆவிக்குரிய சரீரத்தில் முன்பகுதியும், பின்பகுதியும் மற்ற சரீர உறுப்புக்களும் உள்ளன. (யோவான் 4:24).

பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய சரீர உறுப்புக்களாக நாம் ஒரு சில காரியங்களை வாசிக்கிறோம். அதன் விவரம் வருமாறு;

4. சித்தம் (ரோமர் 8:27; ரோமர் 9:19)

5. வல்லமை (எபே 1:19; எபே 3:7,20; எபி 1:3)

6. சத்தியம் (சங் 91:4)

7. விசுவாசமும், நம்பிக்கையும் (ரோமர் 12:3; 1கொரி 13:13)

8. நீதி (சங் 45:4)

9. உண்மை (1கொரி 10:13)

10. அறிவும், ஞானமும் (ஏசா 11:2; 1தீமோ 1:17)

11. சிந்தனை (ஏசா 1:18)

12. பகுத்தறிவு (எபி 4:12)

13. மாறாத தன்மை (எபி 6:17)

தேவன் தம்மைச் சரீரப்பிரகாரமாகப் பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். (ஆதி 18; ஆதி 32:24-30; யாத் 24:9-11; யோசு 5:13-15; ஏசா 6; தானி 7:9-13; எசே 1; அப் 7:56-59; வெளி 4-5) மனுஷன் தேவனுடைய ரூபமாகவும், தேவனுடைய சாயலாகவும் இருக்கிறான். தேவனைக் காணமுடியாது. தேவனுடைய ரூபமாகவும், சாயலாகவும் இருக்கும் மனுஷன் மூலமாக நாம் தேவனை விளங்கிக்கொள்ள வேண்டும் (ரோமர் 1:20).

## 34 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவான சம்பவம் யாத் 33-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் அதை நிரூபிக்கும் வண்ணமாக, கர்த்தர் ஒரு சில வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு தம்முடைய உடன்படிக்கையை உறுதிபண்ணுகிறார். கர்த்தர் அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். கர்த்தர் மோசேயை சீனாய் மலையின்மேல் ஏறிவருமாறு சொல்லுகிறார் (யாத் 34:1-4). கர்த்தர் சீனாய் மலையில், ஒரு மேகத்தில் இறங்கி, மோசேக்கு அருகே நின்று தம்முடைய நாமத்தை கூறுகிறார் (யாத் 34:5-9).

மோசே கர்த்தருடைய சமுகத்தில் நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசத்தோடிருக்கிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை மோசேக்கு சொல்லுகிறார் (யாத் 34:10-28).

மோசே சீனாய் மலையிலிருந்து இறங்குகிறபோது அவருடைய முகம் பிரகாசமாயிருக்கிறது (யாத் 34:29-35). மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். கர்த்தர் மோசேயை ஒரு தனிநபராக பார்க்காமல், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பொதுவான பிரதிநிதியாக பாவித்து அவரோடு பேசுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தேவனுக்கும் நமக்கும் நடுவே பிரதான மத்தியஸ்தராயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மோசே கிறிஸ்துவானவருடைய மத்தியஸ்த ஊழியத்திற்கு அடையாளமாகயிருக்கிறார்.

## இரண்டு கற்பலகைகள்
## யாத் 34:1-4

**யாத் 34:1. கர்த்தர் மோசேயை நோக்கி: முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள்; நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்.**

**யாத் 34:2. விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமுகத்தில் வந்து நில்.**

**யாத் 34:3. உன்னோடே ஒருவனும் அங்கே வரக்கூடாது; மலையிலெங்கும் ஒருவனும் காணப்படவுங்கூடாது; இந்த மலையின் சமீபத்தில் ஆடுமாடு மேயவுங்கூடாது என்றார்.**

**யாத் 34:4. அப்பொழுது மோசே முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து, அதிகாலமே எழுந்திருந்து, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே அவ்விரண்டு கற்பலகைகளையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு, சீனாய்மலையில் ஏறினான்.**

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு சீனாய் மலையின் அடிவாரத்திலே உடன்படிக்கை பண்ணினார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய உடன்படிக்கையை மீறினார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி அதை ஆராதித்தார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கும், கர்த்தருக்கும் இடையே இருந்த உடன்படிக்கையும், ஐக்கியமும் முறிந்துபோயிற்று.

கர்த்தர் இப்போது இஸ்ரவேல் புத்திரரோடு மறுபடியுமாய் ஒப்புரவாகியிருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை மீறியதினால், கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருந்தார். மோசே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். இதனால், கர்த்தர் தம்முடைய கோபத்தைக் குறைத்து, இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே மறுபடியும் ஐக்கியமும், சமாதானமும் புதுப்பிக்கப்படுகிறது. எல்லாவற்றையும் மறுபடியுமாய் புதிதாய் ஆரம்பிக்க வேண்டியதாயிருக்கிறது. மோசே மறுபடியுமாய் இரண்டு கற்பலகைகளை இழைக்கிறார். இஸ்ரவேல் புத்திரர்மீது ஏற்பட்ட கோபத்தினால், மோசே முந்தின கற்பலகைகள் இரண்டையும் உடைத்துப்போட்டார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள்; நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்" *(யாத் 34:1)* என்று சொல்லுகிறார்.

முதல் இரண்டு கற்பலகைகளும் தேவன் செய்தவை. *(யாத் 32:16)* மோசே அவற்றை உடைத்துப்போட்டார். ஆகையினால் இப்பொழுது மோசே வேறு இரண்டு கற்பலகைகளை இழைத்து தேவனிடத்தில் கொடுக்க வேண்டும். அவர் முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவார் *(யாத் 34:1-2)*.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை முதலாவதாக எழுதியபோது, அதை மனுஷருடைய இருதயத்தில் எழுதினார். கர்த்தரே கற்பலகைகளை உண்டுபண்ணி, அதிலே தம்முடைய விரலினால், தம்முடைய கட்டளைகளை எழுதினார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து தங்களைக் கெடுத்துப்போட்டார்கள். இதனால் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே ஏற்பட்டிருந்த உடன்படிக்கை முறிந்துபோயிற்று.

கர்த்தர் மோசேயின் கையிலே இரண்டு கற்பலகைகளை கொடுத்தார். இஸ்ரவேல் ஜனத்தார் கன்றுக்குட்டியை ஆராதனை செய்தார்கள். மோசே அவர்களுடைய விக்கிரகாராதனையைப் பார்த்து, கோபமடைந்து, கர்த்தர் கொடுத்த கற்பலகைகளை உடைத்துப்போட்டார்.

தேவனுடைய தெய்வீக பிரமாணம் இப்போது வேதவாக்கியங்களில் பாதுகாப்பாக எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்திலுள்ள வேதவசனங்களை கர்த்தர் தம்முடைய விரலினால் எழுதவில்லை. தம்முடைய வார்த்தைகளை எழுதுவதற்கு கர்த்தர் மனுஷரைப் பயன்படுத்துகிறார். இப்போது கர்த்தருடைய வார்த்தையை எழுதும் ஊழியத்தில், மோசே முதன் முதலாக பயன்படுத்தப்படுகிறார்.

தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் கற்பலகைகளை இழைக்கிறார்கள். அந்தப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள் இன்னும் கர்த்தருடைய வார்த்தையாகவே இருக்கிறது. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்திலுள்ள வார்த்தைகளை மனுஷர் எழுதினாலும், அவர்கள் அந்த வார்த்தைகளை சுயமாக எழுதவில்லை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையினாலும், அவருடைய வழிநடத்துதலினாலும் ஏவப்பட்டு, வேதவாக்கியங்களை எழுதியிருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகுகிறார். உடைந்துபோன கற்பலகைகளுக்கு பதிலாக, புதிதாக வேறே பலகைகளை செய்யுமாறு கர்த்தர் கட்டளையிடுகிறார். மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள்ள வேண்டும். உடைத்துப்போட்ட முந்தின கற்பலகைகளிலிருந்த வார்த்தைகளை, மோசே இந்தப் புதிய கற்பலகைகளில் எழுதுவார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, இயேசுகிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஊழியத்தின் மூலமாய், தேவனோடு ஒப்புரவாதலும், சமாதானமும் உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய நீதிநெறி பிரமாணத்திற்கு விசுவாசிகள் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மலைப்பிரசங்கத்தில், நீதிநெறி பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரின் கீழ்ப்படியாமையினாலும், முரட்டாட்டத்தினாலும் முதலாவது கற்பலகைகள் உடைந்துபோயிற்று. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் வேதபாரகர், பரிசேயர் ஆகியோருடைய மீறுதல்களினாலும் அக்கிரமங்களினாலும், கர்த்தருடைய நீதிநெறி பிரமாணம் உடைந்துபோயிற்று.

"ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" (மத் 5:19).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, உடைந்துபோன நீதிநெறி பிரமாணத்தை திரும்பவும் புதுப்பிக்கிறார். கர்த்தருடைய நீதிநெறி பிரமாணத்திற்கு ஆரம்பத்திலிருந்த முக்கியத்துவத்தை கிறிஸ்துவானவர் மறுபடியும் கொடுக்கிறார். வேதபாரகரும் பரிசேயரும், கர்த்தருடைய நீதிநெறி பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதை புறக்கணித்து விட்டார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சுவிசேஷத்தின் பிரமாணம், மனுஷருடைய இருதயங்களில் எழுதப்படுகிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதும், நமக்கு தேவனோடு சமாதானம் ஏற்பட்டிருப்பதும், சுவிசேஷத்தின் பிரமாணம் நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டிருப்பதற்கு அடையாளமாகும்.

கர்த்தரே தம்முடைய பிரமாணத்தை நம்முடைய இருதயங்களில் எழுதுகிறார். கர்த்தருடைய பிரமாணம் நம்முடைய இருதயங்களில் எழுதப்படவேண்டுமென்றால், கர்த்தருடையபிரமாணத்தை ஏற்றுக்கொள்வதற்கு நம்முடைய இருதயத்தை நாம் ஆயத்தம் பண்ணவேண்டும்.

கர்த்தர் மோசேயை மறுபடியுமாய் சீனாய் மலையின்மேல் ஏறி வரச்சொல்லுகிறார். அங்கே மோசேயை தவிர வேறு யாரும் ஏறி வரக்கூடாது என்பதும் கர்த்தருடைய கட்டளையாயிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமுகத்தில் வந்து நில். உன்னோடே ஒருவனும் அங்கே வரக்கூடாது; மலையிலெங்கும் ஒருவனும் காணப்படவுங்கூடாது; இந்த மலையின் சமீபத்தில் ஆடுமாடு மேயவுங்கூடாது" (யாத் 34:2,3) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். மோசே முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து, அதிகாலமே எழுந்திருந்து, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே அவ்விரண்டு கற்பலகைகளையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு, சீனாய்மலையில் ஏறுகிறார் (யாத் 34:4).

கர்த்தரைத் தேடுகிறவர்கள் அதிகாலையிலே அவரைத் தேடவேண்டும். அதிகாலை வேளையே, கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற வேளை. அதிகாலை வேளையில் உலகம் அமைதியாயிருக்கும். அந்த வேளையில் உலகத்தின் சந்தடிகளும், ஆரவாரங்களும் அதிகமாயிருக்காது. அமைதியான சூழ்நிலையில் கர்த்தரோடிருப்பதும், கர்த்தரைப்பற்றி தியானிப்பதும் நமக்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும்.

## கர்த்தருடைய நாமம்
## யாத் 34:5-9

**யாத் 34:5. கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.**

**யாத் 34:6. கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன்.**

**யாத் 34:7. ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்.**

**யாத் 34:8. மோசே தீவிரமாகத் தரைமட்டும் குனிந்து பணிந்துகொண்டு:**

**யாத் 34:9. ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருள வேண்டும்; இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள்; நீரோ, எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக் கொள்ளும் என்றான்.**

மோசே சீனாய் மலையில் ஏறுகிறார். அப்பொழுது கர்த்தர் ஒரு மேகத்தின்மேல் இறங்கி, அங்கே மோசேயின் அருகே நிற்கிறார். கர்த்தருடைய பிரசன்னம் மோசேக்கு முன்பாக பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது. கர்த்தர் தம்முடைய மகிமையிலே மோசேக்கு முன்பாக நிற்கிறார். கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி வருகிறார் என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 34:5).

மோசே மலையின்மீது ஏறிப்போகிறார். கர்த்தரோ மோசேயை சந்திப்பதற்கு இறங்கி வருகிறார். (யாத் 34:2,4,5). கர்த்தர் அங்கே மோசேயின் அருகே நிற்கிறார். இருவரும் நேர்முகமாக இருக்கிறார்கள் (யாத் 33:11,21-23). தேவன் மோசேக்குப் பிரத்தியட்சமாகக் காட்சி தருகிறார்.

மேகம் கர்த்தருக்கு ஒரு வாகனம் போல இருக்கிறது. கர்த்தர் தம்மைப்பற்றிய காரியங்களை நமக்கு அதிகமாக வெளிப்படுத்தினாலும், அவரைப்பற்றிய காரியங்களில் அநேகம் இன்னும் நமக்கு மறைவாகவே இருக்கிறது. கர்த்தர் தம்மைப்பற்றி நமக்கு எவ்வளவு வெளிப்படுத்துகிறாரோ அவ்வளவு மாத்திரமே நம்மால் அவரைப்பற்றி அறிந்துகொள்ள முடியும்.

கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே மோசேயின் அருகே நின்று, தம்முடைய நாமத்தை மோசேக்கு கூறுகிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தை மோசேக்கு முன்பாக கடந்துபோகிறபோது கூறுகிறார் (யாத் 34:5,6). கர்த்தர் ஓரிடத்தில் தரித்து நிற்பதை மோசேயால் பார்க்க முடியவில்லை. கர்த்தரை இருக்கும் வண்ணமாக தரிசிப்பது, அவருடைய பூரண மகிமையைக் காண்பது ஆகியவையெல்லாம் இனிமேல் வரப்போகிற காலத்தில் நமக்கு வெளிப்படுத்தப்படும். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் வரையிலும், கர்த்தரை நமக்கு முன்பாக கடந்து போகிறவராகவே நம்மால் காணமுடியும்.

தம்முடைய மகிமை மோசேயை கடந்து போகும் என்று, கர்த்தர் ஒரு நாளுக்கு முன்பதாக அவருக்கு வாக்குப்பண்ணினார். அந்த வாக்குத்தத்தம் இப்போது நிறைவேறுகிறது.

"என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்" (யாத் 33:22).

கர்த்தர் மோசேக்கு அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறுகிறார். கர்த்தர் மோசேக்கு முன்பாக கடந்துபோகிறபோது, கர்த்தருடைய நாமத்தைக் கூறுகிறார். கர்த்தரே தம்முடைய பரிசுத்தமான நாமத்தை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே தம்முடைய நாமத்தை மோசேக்கு சொல்லியிருக்கிறார். அப்போது கர்த்தர் தம்முடைய நாமத்தை "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று சொன்னார். கர்த்தர் தம்மை எப்போதும் இருக்கிறவராகவும், எல்லாவற்றிற்கும் போதுமானவராகவும் மோசேக்கு வெளிப்படுத்தினார்.

இப்போது கர்த்தர், தம்முடைய கிருபை, சாந்தம், தயவு, சத்தியம் ஆகியவற்றின் மூலமாக தம்முடைய பரிசுத்த நாமத்தை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் மனுஷருக்கு வெளிப்படுவதற்கு முன்பாகவே, அவருடைய நாமத்தில், அவருடைய கிருபையும் இரக்கமும் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. நாம் கர்த்தரைப்பற்றித் தியானிக்கும்போது, அவருடைய கிருபையையும், இரக்கத்தையும், தயவையும் பற்றித் தியானிக்கவேண்டும்.

கர்த்தருடைய நாமத்தில் அவருடைய மகிமையும், மகத்துவமும் நன்மையும் வெளிப்படுகிறது. கர்த்தர் தம்முடைய நாமத்தை சொல்லுவதற்கு, இங்கு பல வார்த்தைகளை பயன்படுத்துகிறார். இந்த வார்த்தைகள் எல்லாம் மொத்தமாக சேர்ந்து, கர்த்தர் நல்லவர் என்பதை நமக்கு உறுதிபண்ணுகிறது.

கர்த்தர் இரக்கமுள்ளவர். அவர் மனுபுத்திரர்மீது மனதுருக்கமுள்ளவர். ஒரு தகப்பன் தன் பிள்ளைகள்மீது இரக்கமாயிருப்பதுபோல கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது இரக்கமாயிருக்கிறார்.

கர்த்தர் கிருபையுள்ளவர். கர்த்தருடைய இரக்கமே அவருடைய கிருபை. கர்த்தருடைய கிருபை நமக்கு இலவச ஈவாக கொடுக்கப்படுகிறது. கர்த்தர் நமக்காக பரிதாபப்படுகிறவர் மாத்திரமல்ல. அவர் நமக்காக மனவுருக்கமுள்ளவராகவும் இருக்கிறார். அவர் நம்மீது அன்பும், கரிசனையும் உள்ளவராயிருக்கிறார்.

"மேலும் நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்" (1பேது 3:8).

கர்த்தர் நீடிய சாந்தமுள்ளவர். அவர் கோபப்படுவதில் தாமதிக்கிறவர். கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்புகளை உடனே நிறைவேற்றாமல், அவற்றை தாமதம்பண்ணுகிறார். கர்த்தர் பாவிகளை உடனே தண்டித்துவிடாமல், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்று, கர்த்தர் நீடிய சாந்தத்தோடு பொறுமையாய்க் காத்திருக்கிறார். கர்த்தர் இரக்கம் காண்பிப்பதை உடனே நிறுத்திவிடாமல், அவர் தொடர்ந்து இரக்கம் காண்பிக்கிறார்.

கர்த்தர் மகாதயையும் சத்தியமுமுள்ள தேவன். தயையும் சத்தியமும் கர்த்தருடைய நாமத்தில் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தினால் நமக்கு தயவு காண்பிக்கிறார். அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர். கர்த்தருடைய வார்த்தைகள் எல்லாமே சத்தியமாயிருக்கிறது.

கர்த்தர் ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைப் காக்கிறவர். அவர் அக்கிரமத்தையும், மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர். கர்த்தருடைய மன்னிக்கும் கிருபை இங்கு விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிருபையினாலேயே நமக்கு ஆவிக்குரிய எல்லா வரங்களும் கொடுக்கப்படுகிறது. இவையெல்லாவற்றிற்கும் கர்த்தருடைய மன்னிக்கும் கிருபையே மிகவும் பிரதானமானது. கர்த்தர் தமது கிருபையினால் நம்மை மன்னிக்கவில்லையென்றால், நம்மால் கர்த்தருடைய மற்ற ஈவுகளை பெற்றுக்கொள்ள முடியாது.

கர்த்தர் மோசேக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர் மோசேயை நோக்கி, "கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்" (யாத் 34:6,7) என்று கூறுகிறார்.

கர்த்தர் தம்முடைய பத்து நாமங்களைச் சொல்லும்போது, தம்முடைய குணாதிசயங்களையும் சொல்லுகிறார்.

1. கர்த்தர்
2. தேவனாகிய கர்த்தர்
3. இரக்கமுள்ளவர்
4. கிருபையுள்ளவர்
5. நீடிய சாந்தமுள்ளவர்
6. மகா தயையுள்ளவர்
7. சத்தியமுள்ளவர்
8. இரக்கத்தைக் காக்கிறவர்
9. அக்கிரமத்தையும், பாவத்தையும், மீறுதலையும் மன்னிக்கிறவர்.
10. அக்கிரமத்தை விசாரிக்கிறவர்

யெகோவா என்னும் நாமத்திற்கு இவ்வளவு பொருள்களையும் கூறவேண்டும். ஆகையினால் அவர் எல்லா ஜனங்களுக்கும் எல்லாமுமாக இருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய நாமத்தைப்பற்றிச் சொல்லும்போது, "குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்" என்றும் சொல்லுகிறார்.

ஒருவன் தான் செய்த குற்றத்திற்குக் கர்த்தரிடத்தில் மனந்திருந்தி வந்து, பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பாவம் செய்தவன் மனந்திருந்தி வரும்போது தேவன் அவனுடைய பாவத்தை மன்னிப்பதற்குக் கிருபையும், இரக்கமும் உள்ளவர். குற்றவாளியைத் தேவன் ஒருபோதும் குற்றமற்றவனாக விடுவதில்லை.

"விசாரிக்கிறவர்" என்னும் வார்த்தை வேதாகமத்தில் நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 20:5; யாத் 34:7; எண் 14:18; உபா 5:9).

மோசே கர்த்தருடைய நாமத்தைக் கேட்டவுடனே தீவிரமாக தரைமட்டும் குனிந்து பணிந்துகொள்கிறார் (யாத் 34:8).

மோசே தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கேட்டார் (யாத் 33:14,17). அவர் தேவனுடைய மகிமையைக் கண்டார் (யாத் 32:18-23). தேவன் தம்முடைய நாமத்தை அறிவித்ததைக் கேட்டார் (யாத் 33:18-34:7). உடனடியாக மோசே தரைமட்டும் குனிந்து கர்த்தரைப் பணிந்து கொள்கிறார். இஸ்ரவேலரின் பாவங்களை மன்னிப்பதற்குத் தேவன் கிருபையும், இரக்கமும் உள்ளவராக இருக்கிறார் என்பதை அறிந்தவுடன் கர்த்தருடைய பாதத்தில் மோசே விழுந்து பணிந்து கொள்கிறார்.

மோசே சிறிதும் தாமதம்பண்ணாமல் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபிக்க ஆரம்பிக்கிறார். அவர் கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருள வேண்டும்; இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள்; நீரோ, எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக் கொள்ளும்" (யாத் 34:9) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபிக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம், அவருடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, இந்த வனாந்தரத்தில் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னமே இஸ்ரவேல் புத்திரருக்கு பாதுகாப்பையும், ஜெயத்தையும் கொடுக்கிறது. ஆகையினால், கர்த்தர் தங்கள் நடுவில் எழுந்தருளவேண்டும் என்று மோசே ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். அவர்கள் பாவத்தில் தொடர்ந்து இருப்பார்களென்றால் கர்த்தர் அவர்கள் நடுவிலே எழுந்தருளமாட்டார். ஆகையினால் மோசே கர்த்தரிடத்தில், "எங்கள் அக்கிரமத்தையும், எங்கள் பாவத்தையும் மன்னித்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு சுதந்தரமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு சொந்தமானவர்கள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவரை விட்டு விலகிப்போய்விட்டார்கள். கர்த்தரும் தம்மைவிட்டு விலகிப்போய்விடுகிறவர்களை, விட்டு விலகிப்போய்விடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்களாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை புறம்பே தள்ளிவிடுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களும் பாவங்களும், அவர்களை கர்த்தரிடமிருந்து பிரித்துவிடுகிறது.

கர்த்தர் தங்களுடைய அக்கிரமங்களையும், பாவத்தையும் மன்னித்து, தங்களை தமக்கு சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று, மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிற இந்தக் காரியங்களை, இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுப்பதாக கர்த்தர் ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். இப்போது கர்த்தர் மோசேக்கு அதைப்பற்றிய நிச்சயத்தை உறுதிபண்ணுகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த வாக்குத்தத்தங்கள் தங்களுக்கு நிறைவேறவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர் என்பதும், அவர் வாக்குமாறாதவர் என்பதும் மோசேக்கு தெரியும். மோசே கர்த்தரை நம்புகிறார். அவர் கர்த்தரையோ, அவருடைய வார்த்தையையோ சந்தேகப்படவில்லை.

ஆனாலும் மோசே கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை உறுதிபண்ணிக்கொள்ள விரும்புகிறார். ஏனெனில் இஸ்ரவேல் ஜனங்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணியிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டு, கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நாமத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்" *(யாத் 34:6,7)* என்று சொன்னார். கர்த்தர் தம்முடைய மன்னிக்கும் கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களையும், பாவங்களையும் மன்னிக்கவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் தொடர்ந்து ஜெபம்பண்ணுகிறார். அவர்களுக்கு கிடைத்திருக்கிற பாவமன்னிப்பு புதுப்பிக்கப்படவேண்டும். அவர்களுடைய ஆத்துமாக்கள் பாவமில்லாமல் சுத்தமாயிருக்கவேண்டும்.

மோசே கர்த்தருடைய சமுகத்தில் தனக்காக ஜெபம்பண்ணுவதற்கு பதிலாக, இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபம்பண்ணுகிறார். அவர் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருந்து, இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இனிமேல் பிறக்கப்போகிற பிள்ளைகளுக்காகவும், மோசே கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய சுபாவம் மோசேக்கும் தெரியும். அவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்களாயிருப்பதினால், கர்த்தர் அவர்களோடுகூட செல்ல மறுத்துவிடுகிறார்.

"ஆனாலும், வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்றார்" *(யாத் 33:3)*.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள் என்று சொன்னதை மோசேயும் மறுக்கவில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தையை அங்கீகரிக்கிறார். மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக ஜெபம்பண்ணும்போது, "இந்த ஜனங்கள் வணங்காக்கழுத்துள்ளவர்கள்" என்று சொல்லி ஜெபிக்கிறார். அவர்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாகயிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய கிருபையும் அவர்களுக்கு அதிகமாய்த் தேவைப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் அக்கிரமங்களும் பாவங்களும் அதிகமாயிருக்கிறது. கர்த்தரோ தம்முடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும், நீடிய சாந்தத்தினாலும், தயையினாலும் அவர்களுடைய அக்கிரமத்தையும், மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவராயிருக்கிறார். நோயாளிகளுக்கு வைத்தியர் தேவைப்படுவதுபோல, பாவிகளுக்கு அவர்களுடைய பாவங்களை மன்னிக்க இரட்சகர் தேவைப்படுகிறார்.

கர்த்தருடைய பிரசன்னமும் அவருடைய கிருபையும் வணங்காக்கழுத்துள்ள இஸ்ரவேல் ஜனத்தாரை ஒழுங்குபடுத்தும். அவர்களுக்கு கர்த்தருடைய கிருபை அதிகமாய்க் கிடைக்கும்போது, அவர்களுடைய வணங்காத கழுத்துக்கள், கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும், பிரமாணங்களுக்கும் வணங்கும்.

## கர்த்தருடைய உடன்படிக்கை யாத் 34:10-17

**யாத் 34:10. அதற்கு அவர்: இதோ, நான் ஒரு கர்த்தருடைய பண்ணுகிறேன்; பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்.**

**யாத் 34:11. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறதைக் கைக்கொள்; எமோரியனையும், கானானியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், எபூசியனையும் உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறேன்.**

**யாத் 34:12. நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; பண்ணினால் அது உன் நடுவில் கண்ணியாயிருக்கும்.**

**யாத் 34:13. அவர்களுடைய பலி பீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடுங்கள்.**

**யாத் 34:14. கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே; ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்து கொள்ளவேண்டாம்.**

**யாத் 34:15. அந்தத் தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணுவாயானால், அவர்கள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, தங்களுடைய தேவர்களுக்குப் பலியிடுவார்கள்; ஒருவன் உன்னை அழைக்கையில், நீ போய், அவன் பலியிட்டதிலே புசிப்பாய்;**

**யாத் 34:16. அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுவதும் அல்லாமல், உன் குமாரரையும் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றும்படி செய்வார்கள்.**

**யாத் 34:17. வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்க வேண்டாம்.**

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஏற்கெனவே உடன்படிக்கை பண்ணியிருந்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், உடன்படிக்கையை மீறி அதை முறித்துப்போட்டார்கள். கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையினால் அவர்களோடு ஒப்புரவாகி, அவர்களோடு தாம் செய்து கொண்ட உடன்படிக்கையை புதுப்பிக்கிறார். கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே சிநேக உடன்படிக்கை மறுபடியும் புதுப்பிக்கப்பட்டு, உறுதிபண்ணப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் ஓரேபிலே பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதற்கு பலிகளை செலுத்தி, அதை ஆராதித்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருக்கு விரோதமான பாவமும், மீறுதலும், அக்கிரமமும் அதிகரித்திருக்கிறது. கர்த்தரோ தம்முடைய மன்னிக்கும் கிருபையினால் அவர்களுடைய அக்கிரமத்தையும், பாவத்தையும் மன்னிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்கு சுதந்தரமாக மறுபடியும் ஏற்றுக்கொள்கிறார். அவர்களை தமக்கு விசேஷமான ஜனங்களாக மறுபடியும் அங்கீகரிக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய விசேஷித்த கிருபைகளையும், சிலாக்கியங்களையும் கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய ஆசீர்வாதத்தை சொல்லும்போது, "இதோ" என்னும் வார்த்தையை பயன்படுத்துகிறார். "இதோ, நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் "இதோ" என்னும் வார்த்தையை பயன்படுத்தியிருப்பதினால், அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய வார்த்தைகளை கட்டளையாக சொல்லுகிறார். மேலும் கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் வார்த்தையாகவும் இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். இந்த உடன்படிக்கையில் கர்த்தருடைய பகுதியுமுள்ளது. இதில் இஸ்ரவேல் புத்திரருடைய பகுதியுமுள்ளது. கர்த்தர் இந்த உடன்படிக்கையில், தம்முடைய பகுதியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார்.

"இதோ, நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன்; பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்" (யாத் 34:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இது கர்த்தர் செய்யும் காரியமாகும். இந்த உடன்படிக்கையில், இஸ்ரவேல் புத்திரர் செய்ய வேண்டிய காரியமுமுள்ளது. கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிடுகிறதை அவர்கள் கைக்கொள்ளவேண்டும் (யாத் 34:11). இதுவே இஸ்ரவேல் புத்திரர் செய்ய வேண்டிய காரியம்.

யாத் 34:10-28 ஆகிய வசனங்களில் தேவன் மோசேயோடும், இஸ்ரவேலரோடும் பண்ணிய உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. மோசேயின் விண்ணப்பத்திற்கு ஏற்ற பிரகாரமாக (யாத் 34:9) இந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி பொன்கன்றுக்குட்டியைச் செய்து, அதைப் பணிந்து கொண்டார்கள் (யாத் 32:1-6,21-25). இப்போது தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னித்து அவர்களோடு தமது உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்கிறார் (யாத் 34:12-17).

தேவன் தம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். கர்த்தர் மனுஷருக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார். உடன்படிக்கையில் தேவன் தம்முடைய பங்கை எப்போதும் சரியாகச் செய்கிறவர். மனுஷன் தான், கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போய் உடன்படிக்கையைக் காத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறான். உடன்படிக்கையில் மனுஷன் தன்னுடைய பங்கை நிறைவேற்றும்போது தேவன் தம்முடைய பங்கை நிச்சயமாய் நிறைவேற்றுவார். தேவனுடைய வரங்களும், அவருடைய அழைப்புக்களும் மாறாதவைகள். (ரோமர் 11:29).

கர்த்தர் இந்த உடன்படிக்கையின் பிரகாரமாக அதிசயங்களை செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். "பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும் செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இப்படிப்பட்ட அதிசயங்களை இஸ்ரவேல் ஜனத்தாரோ அல்லது புறஜாதி ஜனத்தாரோ இதுவரையிலும் பார்த்திருக்கமாட்டார்கள். இந்த அதிசயங்களுக்கு ஒப்பான சம்பவங்கள் இதற்கு முன்பு இந்தப் பூமியெங்கிலும் நடைபெறவுமில்லை.

கர்த்தர் செய்யும் அதிசயமான காரியங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். அந்த அதிசயங்கள் அவர்களுடைய விசுவாசத்தை உறுதிபண்ணும். "உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்" என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும். கர்த்தர் செய்யும் காரியங்களை இஸ்ரவேல் புத்திரரும் ஆச்சரியத்தோடும், அதிர்ச்சியோடும், பயத்தோடும் பார்ப்பார்கள். "எமோரியனையும், கானானியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், எபூசியனையும் உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறேன்" (யாத் 34:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு உடன்படிக்கை பண்ணுகிறார். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாம் செய்யப்போகிற காரியங்களை கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர். இந்த உடன்படிக்கை இஸ்ரவேல் புத்திரருக்கு சித்திக்கவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். "இன்று நான் உனக்கு கட்டளையிடுகிறதை கைக்கொள்" என்று கர்த்தர்இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவருடைய வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்கள் நமக்கு கிடைக்காது. கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் அவருடைய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பே இல்லை.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கு மாத்திரமே துதியையும் கனத்தையும், மகிமையையும் செலுத்தவேண்டும். அவர்கள் தங்களுக்கு ஒரு விக்கிரகத்தை செய்து, அதை கர்த்தருக்கு ஒப்பாக மாற்றக்கூடாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும்.

"கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே; ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்து கொள்ளவேண்டாம்" (யாத் 34:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அசேரே என்னும் தோப்பு விக்கிரகத்தைப் பற்றி கூறப்படும் இடத்தில் கர்த்தர் தம்மை எரிச்சலுள்ளவராகக் காண்பிக்கிறார். வேதாகமத்தில் இந்த வசனத்தில் மட்டுமே கர்த்தருடைய பெயர் எரிச்சலுள்ளவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனைக்காரரோடு சிநேகமாயிருக்கக்கூடாது. "நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; பண்ணினால் அது உன் நடுவில் கண்ணியாயிருக்கும்" (யாத் 34:12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தங்கள்மீது அன்பாயும், கிருபையாயும் இருக்கிறார் என்னும் நிச்சயம் இஸ்ரவேல் புத்திரருக்கு இருக்குமென்றால், அவர்கள் கானான் தேசத்தை விட்டு கானானியரை துரத்திவிடவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்து குடிகளோடு சமாதான உடன்படிக்கை பண்ணக்கூடாது. கர்த்தர் மாத்திரமே தங்களுக்கு போதுமானவர் என்னும் நிச்சயம் இஸ்ரவேல் புத்திரருக்கு இருக்கும்போது, அவர்கள் புறஜாதி தெய்வங்களின் உதவியை நாடக்கூடாது.

கானான் தேசத்து குடிகளோடே உடன்படிக்கை பண்ணவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களோடு உடன்படிக்கை பண்ணும்போது, இஸ்ரவேல் புத்திரருக்கு என்னென்ன தீங்குகள் வரும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"அந்தத் தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணுவாயானால், அவர்கள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, தங்களுடைய தேவர்களுக்குப் பலியிடுவார்கள்; ஒருவன் உன்னை அழைக்கையில், நீ போய், அவன் பலியிட்டதிலே புசிப்பாய்" (யாத் 34:15) என்றும்,

"அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுவதும் அல்லாமல், உன் குமாரரையும் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றும்படி செய்வார்கள்" (யாத் 34:16) என்றும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

அந்நிய தெய்வங்களை ஜனங்கள் சோரமார்க்கமாகப் பின்பற்றுகிறார்கள். வேசித்தனமும், விபசாரமும் அந்நிய தெய்வங்களின் ஆராதனையோடு கலந்திருக்கிறது.

புறஜாதியார் தங்களுடைய தேவர்களுக்குப் பலியிடுகிறார்கள். அவர்கள் பிசாசுகளுக்குப் பலியிடுகிறார்கள். பாவமான காரியங்களைச் செய்யுமாறு பிசாசுகள் ஜனங்களைத் தூண்டுகின்றன. (உபா 32:17; 2கொரி 10:20).

கர்த்தருடைய ஜனம் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கக்கூடாது (யாத் 34:16). புதிய ஏற்பாட்டிலும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. (2கொரி 8:1-13; 2கொரி 10:16-33).

இஸ்ரவேல் புத்திரர் வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை தங்களுக்கு உண்டாக்கக்கூடாது (யாத் 34:17). "அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடுங்கள்" (யாத் 34:13) என்றும் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார்.

விக்கிரகாராதனை தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமானது. (யாத் 20:1-6) இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனை செய்து தேவனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். (யாத் 32) தேவன் தமது உடன்படிக்கையை இங்கு புதுப்பிக்கிறார். (யாத் 34:12-17)

"தோப்புக்கள்" என்பதற்கான எபிரெய வார்த்தை "அசேரா" என்பதாகும். இதற்கு மரத்தினால் செய்த சிலை அல்லது மரத்தூண் என்று பொருள். பாகாலின் சிலையோடு அசேராவையும் வைத்திருப்பார்கள். இது பாகாலின் மனைவியாகக் கருதப்படுகிறது. வேதாகமத்தின் மொழிபெயர்ப்புக்களில் அசேரா "தோப்புக்கள்" என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

அசேரா என்னும் வார்த்தை "யசார்" என்னும் வினைச்சொல்லிருந்து வந்திருக்கிறது. இதற்கு நேராக இருத்தல், நிமிர்ந்திருத்தல், நிறுத்துதல் என்று பொருள்.

இந்தத் தூண் தரையிலிருந்து ஒரு கொடிமரம்போல இருக்கும். இது தளிர்த்த மரமாகவும் இருக்கலாம். மரத்தின் உயரமான உச்சிப்பகுதி வெட்டப்பட்டிருக்கும். மரத்தின் தண்டில் ஒரு உருவம் செதுக்கப்பட்டிருக்கும். (உபா 16:21). இந்தத் தூணானது ஒரு உருவமாகவும் இருக்கும். இது தரையில் நேராக நிறுத்தப்பட்டிருக்கும். (1இராஜா 14:15; 1இராஜா 16:33; ஏசா 17:8).

பொதுவாக இந்தத் தூண் மரத்தினால் செய்யப்பட்டிருக்கும். (நியா 6:26) சில சமயங்களில் இது கல்லாலும் செய்யப்பட்டிருக்கும். இந்தத் தூணைத்தான் வெட்டிப்போட வேண்டுமென்று தேவன் கட்டளை கொடுக்கிறார். (யாத் 34:13) அதைப் பிடுங்கிப்போடவேண்டும். (மீகா 5:14) அது சுட்டெரிக்கப்படவேண்டும். (உபா 12:3) அதை உடைக்கவேண்டும். (2நாளா 34:4). தோப்புக்கள் என்பது காடுகளிலுள்ள அடர்ந்த மரங்களல்ல. (2இராஜா 17:10) இவற்றைப் பச்சைமரத்திற்குக் கீழும் வைக்கமாட்டார்கள். மரத்தை ஜீவனுக்கு அடையாளமாகக் கருதி, புறஜாதியார் அதைத் தெய்வமாக ஆராதிக்கிறார்கள்.

மரங்களை ஆராதிக்கும் வழக்கம் கானானிய தேசத்தில் ஆரம்பித்து, அதன் பின்பு பல தேசங்களுக்கும் பரவிற்று. தேவன் தம்முடைய மகிமையை மரத்திற்குக் கொடுக்கமாட்டார். வேறு எந்த விக்கிரகத்தோடும் அவர் தமது மகிமையைப் பகிர்ந்து கொள்வதில்லை. கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பதாகும் (யாத் 34:13-14; 1இராஜா 14:15; 1இராஜா 15:13; 1இராஜா 16:32-33; 2நாளா 36:14).

கானானியர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையினால் அழிந்து போனார்கள். தோப்பு விக்கிரகாராதனையைப் பற்றி எரே 5:7; எரே 7:30-31; எரே 19:4-5; எரே 32:34-35; ஓசி 4:12-14; ஆமோ 2:7-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமக்காக வேறுபிரித்திருக்கிறார். இதற்கான காரணங்கள் வருமாறு:

1. இது தேவனுடைய திட்டம். (உபா 32:8; அப் 17:26) மேசியா வரும்போது, தேவனுடைய இந்தத் திட்டம் நித்திய காலமாக அமுல் செய்யப்படும். (ஏசா 11:11-12; எசே 37; எசே 48; தானி 7:13-14; சக 14:16-21).

2. தேவன் ஆபிரகாமிடம் அவருடைய சந்ததி பெரிய ஜாதியாகும் என்று வாக்குப்பண்ணினார். இந்த உடன்படிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (ஆதி 12:1-3).

3. கானான் தேசம் ஆபிரகாமின் சந்ததியாருக்கு நித்திய சுதந்தரமாகக் கொடுக்கப்படும் என்று தேவன் வாக்குப்பண்ணினார். இந்த உடன்படிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (ஆதி 15:18-21; ஆதி 17:8).

4. ஸ்திரீயின் வித்து, தன்னை நசுக்கிப் போடும் என்பது சாத்தானுக்குத் தெரியும். ஆகையினால் ஆதாமின் சந்ததியில் இராட்சதருடைய சந்ததியைச் சாத்தான் கலந்து, ஸ்திரீயின் வித்தை மாசுபடுத்தினான். மாசுபட்ட இந்தச் சந்ததியிலிருந்து தேவன் தம்முடைய ஜனத்தை வேறுபிரித்தார்.

5. கானானியருடைய ஜாதிகளை அவர்களுடைய துன்மார்க்கத்தின் நிமித்தமாகக் கர்த்தர் அழித்தார் என்பதை உலகத்துக்குக் காண்பிப்பதற்காகத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (உபா 7:1-24; உபா 9:5).

6. ஆதாமின் சந்ததியை மாசுபடாமல் பாதுகாத்து, அந்த சந்ததியின் வழியில் மேசியா வரவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும். தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (ஆதி 3:15; ரோமர் 9:3-5).

7. மனுஷனுக்குத் தேவனுடைய வெளிப்பாட்டைத் தெரியப்படுத்துவதற்குத் தேவன் இஸ்ரவேலரை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். இதற்காகத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (ரோமர் 3:2; ரோமர் 9:3-5).

8. இஸ்ரவேல் தேசத்தை எல்லா தேசங்களுக்கும் நித்திய தலையாக ஏற்படுத்தினார். இதற்காகத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (உபா 15:16; உபா 28:13).

9. தேசங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகத் தேவன் இஸ்ரவேலை வேறுபடுத்தினார். (ஆதி 12:1-3; ஏசா 2:1-4; ஏசா 52:7; ஏசா 66:19-21; சக 8:23; சக 14:16-21).

10. மெய்யான ஆராதனையில் தேவனை ஆராதிக்கும் ஆசாரியக்கூட்டமாக ஆக்குவதற்குத் தேவன் இஸ்ரவேலரை வேறுபிரித்தார். (யாத் 19:6)

11. பரிசுத்த ஜாதியாகவும், தேவனுடைய விசேஷித்த ஜனமாகவும் தேவனுடையகிருபை, ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் பெற்றிருக்கும் ஜனமாகவும், உலகத்தாருக்கு இஸ்ரவேலைக் காண்பிப்பதற்காக அதை வேறுபிரித்தார். (யாத் 19:6; உபா 7:6-8).

12. விக்கிரகாராதனையினாலும், பாவங்களினாலும் எல்லா தேசங்களுக்கும் வரும் தண்டனையை உலகத்தாருக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காகத் தேவன் இஸ்ரவேலை வேறுபிரித்தார். (யாத் 20:1-6; யாத் 32:21-25; யாத் 34:15-17; உபா 7:1-6; உபா 13:1-8; உபா 18:9-14).

## கர்த்தருடைய பிரமாணம் யாத் 34:18-27

**யாத் 34:18. புளிப்பில்லா அப்பப்பண்டிகையை நீங்கள் கைக்கொண்டு, நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, ஆபீப் மாதத்தில் குறித்த காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள்; ஆபீப் மாதத்திலே எகிப்திலிருந்து புறப்பட்டாயே.**

**யாத் 34:19. கர்ப்பந்திறந்து பிறக்கிற யாவும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றான ஆண்கள் யாவும் என்னுடையவைகள்.**

**யாத் 34:20. கழுதையின் தலையீற்றை ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக் கொள்வாயாக; அதை மீட்டுக் கொள்ளாதிருந்தால் அதின் கழுத்தை முறித்துப்போடு; உன் பிள்ளைகளில் முதற்பேறானவைகளையெல்லாம் மீட்டுக் கொள்ள வேண்டும். வெறுங்கையோடே என் சந்நிதியில் ஒருவனும் வரக்கூடாது.**

**யாத் 34:21. ஆறுநாள் வேலைசெய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருப்பாயாக; விதைப்புக் காலத்திலும் அறுப்புக்காலத்திலும் ஓய்ந்திருப்பாயாக.**

**யாத் 34:22. கோதுமை அறுப்பின் முதற்பலனைச் செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டிகையையும், வருஷமுடிவிலே சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக.**

**யாத் 34:23. வருஷத்தில் மூன்று தரம் உங்கள் ஆண்மக்கள் எல்லாரும் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வரக்கடவர்கள்.**

**யாத் 34:24. நான் புறஜாதிகளை உங்கள் முன்னின்று துரத்திவிட்டு, உங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்குவேன்; வருஷத்தில் மூன்றுதரம் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாகக் காணப்படப் போயிருக்கும்போது ஒருவரும் உங்கள் தேசத்தை இச்சிப்பதில்லை.**

**யாத் 34:25. எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்த வேண்டாம்; பஸ்கா பண்டிகையின் பலியை விடியற்காலம்வரைக்கும் வைக்கவும் வேண்டாம்.**

**யாத் 34:26. உங்கள் நிலத்தில் முதல் முதல் விளைந்த முதற்பலத்தை உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்துக்குக் கொண்டுவாருங்கள். வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்க வேண்டாம் என்றார்.**

**யாத் 34:27. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த வார்த்தைகளை நீ எழுது; இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கைபண்ணினேன் என்றார்.**

இஸ்ரவேல் புத்திரர் ஒரு சில பண்டிகைகளை கைக்கொள்ளவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிடுகிறார். அவர்கள் ஓரேபிலே பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்தபோது, அந்த விக்கிரகத்தை கனம்பண்ணும் வண்ணமாக அதற்கு பண்டிகை கொண்டாடினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இனிமேல் விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருக்காக பண்டிகைகளை ஆசரிக்கவேண்டும். பண்டிகை காலம் சந்தோஷமான காலம். புறஜாதியாரின் மார்க்கத்தில் சந்தோஷம் இருக்கிறது என்றும், கர்த்தருடைய மார்க்கத்தில் சந்தோஷமில்லாமல் சோகமும் துக்கமும் மாத்திரமே இருக்கிறது என்றும் கர்த்தருடைய பிள்ளைகள் நினைத்துவிடக்கூடாது.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஏராளமான ஆசீர்வாதங்களையும், சந்தோஷங்களையும் நியமித்து வைத்திருக்கிறார். கர்த்தர் கொடுக்கிற சந்தோஷமே மெய்யான சந்தோஷம். இந்த சந்தோஷம் மாத்திரமே நிலையான சந்தோஷம். புறஜாதியாரின் மார்க்க ஆராதனையில் காணப்படுகிற சந்தோஷம் மாயையானது. அது தற்காலிகமானது. அந்த சந்தோஷம் சீக்கிரத்தில் மறைந்துபோகும்.

இஸ்ரவேல் புத்திரர் வாரத்தில் ஒரு நாள் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும். "ஆறுநாள் வேலை செய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருப்பாயாக; விதைப்புக் காலத்திலும் அறுப்புக்காலத்திலும் ஓய்ந்திருப்பாயாக" *(யாத் 34:21)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் விதைப்புக்காலத்திலும், அறுப்புக்காலத்திலும் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். ஆனாலும் இந்தக் காலத்திலும் அவர்கள் ஓய்ந்திருக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் அறுப்புக்காலத்தில் ஓய்ந்திருக்கும்போது, அவர்களுடைய அறுவடை ஆசீர்வாதமாகவும் தாராளமாகவும் இருக்கும். கர்த்தருடைய நியமத்திற்கு கீழ்ப்படிந்து விதைக்கும் போது, அந்த விதைகள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். அவை நன்றாய் வளர்ந்து அதிக பலன் தரும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வருஷத்தில் மூன்றுதரம் கர்த்தருக்கு பண்டிகையை ஆசரிக்கவேண்டும். "வருஷத்தில் மூன்று தரம் உங்கள் ஆண்மக்கள் எல்லாரும் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வரக்கடவர்கள்" *(யாத் 34:23)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் ஆண்மக்கள் எல்லாரும் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வருஷத்தில் மூன்று தரம் வரக்கடவர்கள்.

முதலாவது கூடிவருதலில் (எட்டுநாட்கள் - லேவி 23:1-14). பஸ்கா பண்டிகை, முதற்பலன்களின் பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆகியவை ஆசரிக்கப்படும்.

இரண்டாம் கூடிவருதலில் பெந்தெகொஸ்தே பண்டிகை ஆசரிக்கப்படும். இது முதற்பலன்களின் பண்டிகையிலிருந்து 50 நாட்களுக்குப் பின்பு வரும் *(லேவி 23:15-22)*.

மூன்றாம் கூடிவருதலில் மூன்று பண்டிகைகள் ஆசரிக்கப்படும். எக்காளங்களின் பண்டிகை, பாவநிவாரண மகாநாள், கூடாரங்களின் பண்டிகை. இவை மூன்று வாரங்கள் நடைபெறும் *(லேவி 23:23-44)*.

இஸ்ரவேல் புத்திரர்கள் எல்லாப் பண்டிகைகளுக்கும் வரவேண்டும். அதிலும் சிறப்பாக கூடாரங்களின் பண்டிகைக்குத் தவறாமல் வரவேண்டும். *(யாத் 34:23; யாத் 23:17 ; உபா 16:16)*

"வாரங்களின் பண்டிகை" என்பது பெந்தெகொஸ்தே பண்டிகை ஆகும். இது ஏழு வாரங்களுக்குப் பின்பு வரும் ஐம்பதாவது நாள். முதற்பலன்களில் பண்டிகையிலிருந்து இதைக் கணக்கிட வேண்டும் *(லேவி 23:15-22)*.

முதற்பலன்களின் பண்டிகை பஸ்கா பண்டிகையோடும், புளிப்பில்லா அப்பப் பண்டிகையோடும் ஆசரிக்கப்படும். *(லேவி 23:4-14)*. சேர்ப்புக்கால பண்டிகை என்பது கூடாரங்களின் பண்டிகையாகும். *(யாத் 23:14; லேவி 23:33-44; உபா 16:13-17)*.

இஸ்ரவேல் ஜனத்தில் ஆண்மக்கள் எல்லோரும், கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதியில் வரும்போது, அவர்களுடைய கூடாரங்களில் ஆண்மக்கள் யாரும் இருக்கமாட்டார்கள். ஆண்மக்கள் எல்லோரும் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதியிலே கூடிவருவார்கள். அவர்களுடைய கூடாரங்களில் ஸ்திரீகளும், சிறுபிள்ளைகளும், வயதான முதியவர்களும், வியாதியஸ்தர்களும் மாத்திரமே இருப்பார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

இஸ்ரவேல் ஜனத்தாரில் ஆண்மக்கள் எல்லோரும் கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வரும்போது, சத்துருக்கள் அவர்களுடைய கூடாரங்களை கொள்ளையிட வருவதற்கு வாய்ப்புள்ளது. கூடாரங்களிலுள்ளவர்களுக்கு ஆண்மக்களின் பாதுகாப்பு இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாதுகாப்புக்கு கர்த்தரையே நம்பவேண்டும்.

"வருஷத்தில் மூன்றுதரம் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாகக் காணப்படப் போயிருக்கும்போது ஒருவரும் உங்கள் தேசத்தை இச்சிப்பதில்லை" (யாத் 34:24) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தை கொள்ளையிடவேண்டும் என்று சத்துருக்கள் முயற்சி மேற்கொள்ளமாட்டார்கள். அது மாத்திரமல்ல, இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆண்மக்கள் கர்த்தருடைய சந்நிதியில் வரும்போது, சத்துருக்கள் அவர்களுடைய தேசத்தை இச்சிக்கவும் மாட்டார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதே, நமக்கு மெய்யான பாதுகாப்பு. கர்த்தருடைய வழியில் போவதே நமக்கு பாதுகாப்பான வழி.

"நான் புறஜாதிகளை உங்கள் முன்னின்று துரத்திவிட்டு, உங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்குவேன்" (யாத் 34:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மூன்று பண்டிகைகளை நியமிக்கிறார். அந்தப் பண்டிகை நாட்களில், இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆண்மக்கள் எல்லோரும், இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வரவேண்டும். கர்த்தர் இந்த மூன்று பண்டிகைகளைப் பற்றிச் சொல்லும்போது, அந்தப் பண்டிகையோடு ஒரு சில பிரமாணங்களை இணைத்து சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கவேண்டும். இது புளிப்பில்லா அப்பப்பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டதை நினைவுகூரும் வண்ணமாக, அவர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கவேண்டும்.

கர்த்தர் பஸ்கா பண்டிகையைப்பற்றிய நியமத்தை சொல்லும்போது, தலையீற்றை மீட்டுக்கொள்வது சம்பந்தமான தம்முடைய பிரமாணத்தையும் அதோடு இணைத்து சொல்லுகிறார்.

"புளிப்பில்லா அப்பப்பண்டிகையை நீங்கள் கைக்கொண்டு, நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, ஆபீப் மாதத்தில் குறித்த காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள்; ஆபீப் மாதத்திலே எகிப்திலிருந்து புறப்பட்டாயே" (யாத் 34:18) என்று கர்த்தர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை பற்றிச் சொல்லுகிறார்.

இந்தப் பண்டிகை யாத் 12:13-ஆவது வசனத்தில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பண்டிகையைப்பற்றி யாத் 23:15-ஆவது வசனத்தில் மறுபடியுமாக வலியுறுத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

"நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும் போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்" (யாத் 12:13).

"புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஆபிப் மாதத்தின் குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே, என் சந்நிதியில் வெறுங்கையாய் வரவேண்டாம்" (யாத் 23:15).

தலையீற்றை மீட்டுக்கொள்வது சம்பந்தமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை இவ்வாறு சொல்லுகிறார். "கர்ப்பந்திறந்து பிறக்கிற யாவும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றான ஆண்கள் யாவும் என்னுடையவைகள். கழுதையின் தலையீற்றை ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக் கொள்வாயாக; அதை மீட்டுக் கொள்ளாதிருந்தால் அதின் கழுத்தை முறித்துப்போடு; உன் பிள்ளைகளில் முதற்பேறானவைகளையெல்லாம் மீட்டுக் கொள்ள வேண்டும். வெறுங்கையோடே என் சந்நதியில் ஒருவனும் வரக்கூடாது" (யாத் 34:19,20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் வாரங்களின் பண்டிகையைப்பற்றியும் சொல்லுகிறார். இது பெந்தெகொஸ்தே பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. பஸ்கா பண்டிகைக்கு ஏழுவாரங்களுக்கு பின்பு பெந்தெகொஸ்தே பண்டிகை ஆசரிக்கப்படும். இந்தப் பண்டிகையோடு முதற்கனிகளின் பிரமாணம் இணைக்கப்பட்டிருக்கிறது.

"உங்கள் நிலத்தில் முதல் முதல் விளைந்த முதற்பலத்தை உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்துக்குக் கொண்டுவாருங்கள்" (யாத் 34:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷத்தின் முடிவிலே சேர்ப்புக்கால பண்டிகையை ஆசரிக்கவேண்டும். இது கூடாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது.

"கோதுமை அறுப்பின் முதற்பலனைச் செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டிகையையும், வருஷமுடிவிலே சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 34:22).

கர்த்தர் அறுப்புக்கால பண்டிகையைப்பற்றி யாத் 23:16-ஆவது வசனத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 23:16).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பண்டிகைகளைப்பற்றி தம்முடைய நியமத்தை சொல்லும்போது, அதை ஆசரிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் சொல்லுகிறார். "எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்த வேண்டாம்; பஸ்கா பண்டிகையின் பலியை விடியற்காலம்வரைக்கும் வைக்கவும் வேண்டாம்" (யாத் 34:25) என்றும், "வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்க வேண்டாம்" (யாத் 34:26) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்கவேண்டிய பண்டிகைகளைப்பற்றி கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அதை இங்கு மறுபடியுமாக சொல்லுகிறார். கர்த்தருடைய எழுத்து ஒருபோதும் அழிந்துபோகாது என்பதற்கு இது அடையாளம். அவருடைய எழுத்து மாத்திரமல்ல, அந்த எழுத்தின் ஒரு உறுப்புகூட அழிந்துபோகாது.

தாம் சொன்ன வார்த்தைகளையெல்லாம் எழுதவேண்டும் என்று கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்த வார்த்தைகளை நீ எழுது; இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கைபண்ணினேன்" (யாத் 34:27) என்று சொல்லுகிறார்.

புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையை மோசே எழுதுகிறார். (யாத் 34:10-28) இது முதலில் கொடுக்கப்பட்ட கற்பனைகளைப் போன்றது. (யாத் 20:1-23:33; யாத் 24:3-8). இவை மோசேயின் பிரமாணத்தின் ஒரு பகுதியாகும். யாத் 20:1-உபா 34:12 ஆகிய வசனங்கள் வரையிலும் இதோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையைப் பிரதிஷ்டை பண்ணவில்லை. (யாத் 24:3-9)

கர்த்தருடைய வார்த்தைகள் எழுதப்படும்போது, அந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அடிக்கடி வாசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். கர்த்தருடைய வார்த்தைகள் எழுதப்படுவதினால், இஸ்ரவேல் ஜனத்தாருடைய பின்சந்ததியாரும், கர்த்தருடைய வார்த்தைகளை வாசித்து பயனடைவதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நம்முடைய கரங்களில் பரிசுத்த வேதாகமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கர்த்தருடைய வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய எழுதப்பட்ட வார்த்தைக்காக நாம் அவருக்கு எந்நாளும் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கர்த்தர் இந்த வார்த்தைகளின்படியே இஸ்ரவேலோடு உடன்படிக்கை பண்ணுவதாக சொல்லுகிறார். ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேலோடு உடனே உடன்படிக்கை பண்ணாமல், முதலாவதாக மோசேயோடும், அதன்பின்பு இஸ்ரவேலோடும் உடன்படிக்கை பண்ணுகிறார். மோசே தேவனுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே மத்தியஸ்தராக ஊழியம் செய்கிறார்.

## மோசேயின் முகப்பிரகாசம் யாத் 34:28-35

**யாத் 34:28. அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பதுநாள் கர்த்தரோடே இருந்தான்; அவன் பத்துக்கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான்.**

**யாத் 34:29. மோசே சாட்சிப் பலகைகள் இரண்டையும் தன் கையில் எடுத்துக் கொண்டு, சீனாய் மலையிலிருந்து இறங்குகிறபோது, தன்னோடே அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந்தான்.**

**யாத் 34:30. ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயைப் பார்க்கும் போது, அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு, அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள்.**

**யாத் 34:31. மோசே அவர்களை அழைத்தான்; அப்பொழுது ஆரோனும் சபையிலுள்ள பிரபுக்கள் யாவரும் அவனிடத்திற்குத் திரும்பிவந்தார்கள்; மோசே அவர்களோடே பேசினான்.**

**யாத் 34:32. பின்பு இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் சேர்ந்தார்கள்; அப்பொழுது அவன் சீனாய்மலையில் கர்த்தர் தன்னோடே பேசினவைகளையெல்லாம் அவர்களுக்குக் கற்பித்தான்.**

**யாத் 34:33. மோசே அவர்களோடே பேசி முடியுமளவும், தன் முகத்தின்மேல் முக்காடு போட்டிருந்தான்.**

**யாத் 34:34. மோசே கர்த்தருடைய சந்நிதியில் அவரோடே பேசும்படிக்கு உட்பிரவேசித்ததுமுதல் வெளியே புறப்படுமட்டும் முக்காடு போடாதிருந்தான்; அவன் வெளியே வந்து தனக்குக் கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்போது,**

**யாத் 34:35. இஸ்ரவேல் புத்திரர் அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டார்கள். மோசே அவரோடே பேசும்படிக்கு உள்ளே பிரவேசிக்கும்வரைக்கும், முக்காட்டைத் திரும்பத் தன் முகத்தின்மேல் போட்டுக்கொள்ளுவான்.**

கர்த்தர் மோசேயை சீனாய் மலையில் ஏறி வருமாறு சொன்னார். மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் சீனாய் மலையில் ஏறினார். அப்போது கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே மோசேயின் அருகே நின்று, அவருக்கு தம்முடைய வார்த்தைகளை கூறுகிறார்.

மோச அங்கே அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பதுநாள் கர்த்தரோடே இருக்கிறார்; மோசே பத்துக்கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதுகிறார் (யாத் 34:28).

"இரவும் பகலும் நாற்பதுநாள்" என்பது மோசே சீனாய்மலையில் இரண்டாம் முறையாக இருந்த நாற்பதுநாள் ஆகும் (யாத் 34:28= யாத் 24:18; உபா 9:9,11,18,25; உபா 10:10). மோசே இரண்டு முறை நாற்பது நாள் இரவும், பகலும் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் கர்த்தரோடே இருந்தார் என்று தெரியவருகிறது. (உபா 9:9-21).

மருத்துவ ரீதியாக ஒருவர் 80 நாட்களுக்கு தண்ணீர் குடிக்கவில்லையென்றால், அவர் பிழைப்பது கடினம். மோசே தேவகிருபையினால் உபவாசம் பண்ணுகிறார். (மத் 4:2). தேவனுடைய மகிமையை மோசே அனுபவிக்கிறார். உபவாசம் பண்ணியபின்பு, அவருடைய முகம் பிரகாசிக்கிறது. (யாத் 34:28-35).

மோசே பத்துக்கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதுகிறார். உபா 10:1-2 ஆகிய வசனங்களில் இரண்டாம் கற்பலகைகளில் கர்த்தர் எழுதுவதாகக் கூறியிருக்கிறார். (யாத் 34:28; யாத் 24:12; யாத் 31:18; யாத் 32:15; யாத் 34:1; உபா 9:10; உபா 10:1-2; 2கொரி 3:6-18). பத்துக் கற்பனைகள் மொத்தப் பிரமாணத்தின் சாரம்சமாகும். எல்லாப் பிரமாணங்களுக்கும் இவையே ஆதாரமானது.

நாம் கர்த்தருடைய சமுகத்திலே நீண்டநேரம் அமர்ந்திருந்து ஜெபம்பண்ணும்போதும், கர்த்தரைத் துதிக்கும்போதும் சோர்ந்துபோகிறோம். மோசேயோ கர்த்தருடைய சமுகத்தில் நாற்பதுநாள் இரவும் பகலும் இருக்கிறார். அவர் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் கர்த்தரோடே இருக்கிறார். அந்த நாட்களில் மோசே நித்திரை செய்வதற்கும் வாய்ப்பில்லை. ஆனாலும் மோசே சோர்ந்து போகவில்லை.

கர்த்தருடைய வல்லமையே மோசேயை தாங்குகிறது. அவருடைய கிருபை மோசேயை பலப்படுத்துகிறது. மோசே கர்த்தருடைய சமுகத்திலிருந்த நாற்பது நாட்களில், அவருக்கு அப்பமும் தண்ணீரும் தேவைப்படவில்லை. கர்த்தருடைய வார்த்தையே அவருக்கு போஜனமாயிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதும் மோசேக்கு புசிக்கும் அப்பமாகவும், குடிக்கும் தண்ணீராகவும் இருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தருடைய வார்த்தை ஆவிக்குரிய போஜனமாயிருக்கிறது. இது உலகம் அறியாத போஜனம்.

மோசே கர்த்தருடைய சமுகத்தில் நாற்பது நாள் இரவும் பகலும் இருக்கும்போது, கர்த்தர் அவரை போஷித்து பராமரிக்கிறார். கர்த்தர் மோசேக்கு புசிக்க அப்பமும், குடிக்க தண்ணீரும் கொடுத்து அவரை போஷிக்கவில்லை. அப்பமும் தண்ணீரும் சரீரப்பிரகாரமான போஜனம். கர்த்தர் மோசேக்கு ஆவிக்குரிய போஜனத்தைக் கொடுக்கிறார்.

மோசே கர்த்தருக்கு முன்பாக நாற்பதுநாள் இரவும் பகலும் இருந்தபோது, கர்த்தர் அவருக்கு தம்முடைய வெளிச்சத்தையும், பிரமாணத்தையும், அன்பையும், தம்மைப்பற்றிய அறிவையும், தம்முடைய சித்தத்தைப்பற்றிய ஞானத்தையும் கொடுக்கிறார். மோசேயைப்போலவே, தீர்க்கதரிசியாகிய எலியாவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம்பண்ணியிருக்கிறார்கள்.

மோசே நாற்பது நாள் இரவும் பகலும் கர்த்தரோடு இருந்த பின்பு, அவர் சாட்சிப் பலகைகள் இரண்டையும் தன் கையில் எடுத்துக் கொண்டு, சீனாய்மலையிலிருந்து இறங்குகிறார். கர்த்தர் மோசேயோடே பேசினதினாலே, மோசேயின் முகம் பிரகாசித்திருக்கிறது. ஆனாலும் தன் முகம் பிரகாசித்திருப்பதை மோசே அறியாதிருக்கிறார் (யாத் 34:29).

இது மோசே எட்டாம் முறையாக சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்த சம்பவம். இதுவே கடைசி சம்பவமுமாகும். (யாத் 19:3).

"சாட்சி" என்பது பிரத்தியட்சமாகக் காணக்கூடியது. தேவனுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவில் சாட்சிப் பலகைகள் பிரத்தியட்சமாகக் காணக்கூடிய சாட்சியாக அமைந்துள்ளது. (யாத் 25:16,21; யாத் 27:21; யாத் 30:36; யாத் 31:18; யாத் 32:15; யாத் 40:20). உடன்படிக்கைப்பெட்டி சாட்சிப் பெட்டி என்று அழைக்கப்படுகிறது. (யாத் 25:22; யாத் 26:33-34; யாத் 30:6,26; யாத் 31:7; யாத் 39:35; யாத் 40:3,5,21) அதுபோலவே ஆசரிப்புக்கூடாரம் சாட்சியின் கூடாரம் என்று அழைக்கப்படுகிறது. (யாத் 38:21; எண் 1:50-53; எண் 10:11)

கர்த்தர் மோசேயை ஆசீர்வதித்ததுபோல, நம்மையும் ஆசீர்வதிக்கும்போது, மோசேயினிடத்தில் மனத்தாழ்மை காணப்பட்டதுபோல, நம்மிடத்திலும் மனத்தாழ்மை காணப்படவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் தகுதியானவர்களல்ல என்னும் மனத்தாழ்மை நம்மிடத்தில் இருக்கவேண்டும்.

நம்மிடத்தில் குறைபாடுகளும், குற்றம் குறைகளும் இருந்தாலும், கர்த்தர் அவற்றை நோக்கிப் பார்க்காமல், தம்முடைய கிருபையினால் நம்மை ஆசீர்வதிக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் அபாத்திரராயிருந்தாலும், கர்த்தருடைய கிருபை நம்மை ஆசீர்வதிக்கிறது. கர்த்தர் மோசேயோடு பேசினதினால், மோசேயின் முகம் பிரகாசமாயிருக்கிறது. ஆனால் தன்னுடைய முகம் பிரகாசமாயிருப்பதை மோசே அறியவில்லை. மோசே அதைக்குறித்து பெருமைப்படவுமில்லை. மோசே அதைப்பற்றி மற்றவர்களிடத்தில் பெருமையாகப் பேசவுமில்லை.

தன் முகம் பிரகாசித்திருப்பதை மோசே அறியாதிருக்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் இதுபோல அறியாதிருந்த ஒரு சில காரியங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. மன்னாவைப் பற்றி இஸ்ரவேல் புத்திரர் அறியாதிருந்தார்கள் (யாத் 16:15).

2. தன் முகம் பிரகாசித்திருப்பதை மோசே அறியாதிருந்தார் (யாத் 34:29).

3. கர்த்தர் தன்னை விட்டு அகன்றுபோனதை சிம்சோன் அறியாதிருந்தான் (நியா 16:20).

4. என்ன சொல்ல வேண்டுமென்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். (மாற்கு 9:6; மாற்கு 14:40; லூக்கா 2:49; யோவான் 5:13)

5. தான் விடுவிக்கப்பட்டதை பேதுரு அறியாதிருந்தார் (அப் 12:9).

பிரகாசித்தல் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "காரான்" என்பதாகும். இதற்குத் தள்ளுதல், கொம்புபோல வளருதல், மகிமை வெளிப்படுதல் என்று பொருள். தேவனுடைய மகிமை மோசேயின் முகத்தில் ஒளிக்கதிர்களாகப் பிரகாசிக்கிறது. மோசே தேவனுடைய பிரசன்னத்தில் அதிக நாட்கள் இருந்தார். ஆகையினால், அவருடைய கண்கள் அவருடைய முகம் பிரகாசித்ததைக் காணவில்லை. சூரிய ஒளியைப் பார்த்தால், கண் கூசும். அப்போது சிறிய மெழுகுவர்த்தியின் வெளிச்சம் தெரியாது. அதுபோல மோசேக்குத் தன்னுடைய முகம் பிரகாசித்ததும் தெரியவில்லை (2கொரி 3:7-10).

தன்னுடைய முகம் பிரகாசமாயிருப்பது மோசேக்கு தெரியவில்லை. ஆனாலும் அவருடைய முகத்தின் பிரகாசம் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தெரிகிறது. ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயைப் பார்க்கும் போது, மோசேயின் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு, மோசேயின் சமீபத்தில் சேரப் பயப்படுகிறார்கள் (யாத் 34:30).

மோசேயின் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரும் பயப்படுகிறார்கள். மோசேயின் முகப்பிரகாசம் கர்த்தருடைய சந்தோஷத்திற்கும், அவருடைய கிருபைக்கும் அடையாளமா அல்லது அது கர்த்தருடைய கோபத்திற்கு அடையாளமா என்று இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்கள் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதற்கு பலிகளை செலுத்தி அதை ஆராதனை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பாவம் அவர்களைக் குற்றப்படுத்துகிறது. அவர்களுடைய இருதயத்தில் குற்றவுணர்வு நிரம்பியிருக்கிறது. ஆகையினால் அவர்கள் மோசேயின் முகப்பிரகாசத்தைப் பார்த்து, தங்களுடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்றும், மோசேயின் முகப்பிரகாசம் கர்த்தருடைய கோபத்திற்கு அடையாளம் என்றும் நினைத்து, அவர்கள் மோசேக்கு சமீபத்தில் சேரப்பயப்படுகிறார்கள்.

ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரும் மோசேயின் சமீபத்தில் சேரப்பயப்பட்டாலும், மோசே அவர்களை தன்னிடத்தில் அழைக்கிறார். அப்பொழுது ஆரோனும் சபையிலுள்ள பிரபுக்கள் யாவரும் மோசேயினிடத்திற்குத் திரும்பிவருகிறார்கள்; மோசே அவர்களோடே பேசுகிறார். பின்பு இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயினிடத்தில் சேருகிறார்கள்; அப்பொழுது மோசே சீனாய்மலையில் கர்த்தர் தன்னோடே பேசினவைகளையெல்லாம் அவர்களுக்குக் கற்பிக்கிறார் (யாத் 34:31,32).

மோசேயின் முகத்தில் பிரகாசத்தைக் கண்டபோது இஸ்ரவேல் புத்திரர்கள் மோசேயை விட்டு ஓடிப்போகிறார்கள். மோசே அவர்களை அழைத்தபோது, அவர்கள் அவரிடத்திற்குத் திரும்பிவருகிறார்கள்.

ஆரோனும், மூப்பர்களும் மோசேயிடம் வருகிறார்கள். அதன்பின்பு எல்லோரும் மோசேயினிடத்தில் சேருகிறார்கள் (யாத் 34:31-32). மோசே அவர்களுக்குப் புதிய கற்பனைகளைக் கூறுகிறார். தேவனுடைய மன்னிக்கும் சுபாவம், புதிதாக்கப்பட்ட உடன்படிக்கை, அவர்கள் பாவம் செய்வதற்கு முன்பாகத் தேவன் அவர்களை வழிநடத்தியதுபோன்று, மறுபடியும் வழிநடத்துவார் என்னும் நிச்சயம் ஆகியவற்றைப் பற்றி மோசே இஸ்ரவேல் புத்திரரிடம் எடுத்துக் கூறுகிறார் (யாத் 34:10-28).

தன்னுடைய முகம் பிரகாசித்திருப்பதை மோசேயும் காண்கிறார். ஆகையினால் மோசே அவர்களோடே பேசி முடியுமளவும், தன் முகத்தின்மேல் முக்காடு போட்டிருக்கிறார் (யாத் 34:33). மோசே ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே வந்து, கர்த்தர் தனக்கு கற்பித்ததை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அப்போது இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் முகம் பிரகாசித்திருப்பதைக் காண்கிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரரோடு பேசும்போதெல்லாம் தன் முகத்தில் முக்காட்டை போட்டுக்கொள்வார் (யாத் 34:35).

மோசே இஸ்ரவேல் புத்திரரோடு பேசும்போது தன் முகத்தின்மேல் முக்காடு போட்டிருக்கிறார். (யாத் 34:33-34) ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய சன்னதியில் மோசே பிரவேசித்த போது, முக்காடு போடாதிருக்கிறார் (2கொரி 3:6-15; மத் 17:2).

யாத் 36-40 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் ஆசரிப்புக்கூடாரம் இன்னும் நிறுவப்படவில்லை. மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் தேவனிடத்தில் திரும்பி வரும்போது, அவர்களுடைய இருதயங்களிலுள்ள முக்காடுகள் அகற்றப்படும் (2கொரி 3:13-18).

மோசே கர்த்தருடைய ஊழியக்காரர். அவரிடத்தில் மிகுந்த மனத்தாழ்மை இருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் கண்ணியமாகவும், மிகுந்த பணிவோடும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். மோசே தன் முகத்தின் பிரகாசத்தை எல்லோருக்கும் முன்பாக காண்பித்து, பெருமைப்பட விரும்பவில்லை.

மோசே கர்த்தருடைய சந்நிதியில் அவரோடே பேசும்படிக்கு உட்பிரவேசித்ததுமுதல் வெளியே புறப்படுமட்டும் முக்காடு போடாதிருக்கிறார் (யாத் 34:34). மோசே ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய சமுகத்தில் பேசும்போது அவருக்கு முக்காடு தேவைப்படவில்லை. நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது நமக்கும் முக்காடு தேவைப்படாது. நாம் கர்த்தரிடத்தில் எதையும் மூடி மறைக்கவும் முடியாது. நம்முடைய அந்தரங்க இரகசியங்களெல்லாம் கர்த்தருக்கு முன்பாக வெளியரங்கமாகயிருக்கிறது.

"அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்." (2கொரி 3:16). நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது, நம்முடைய பாவங்களை மூடி மறைக்க முயற்சி பண்ணக்கூடாது. பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

## 35 அதிகாரம்

மோசே சீனாய் மலையிலிருந்து முதல் முறையாக இறங்கி வந்த போது, அவர் எதை சொல்லியிருக்கவேண்டுமோ, அதை இப்பொழுது சொல்லுகிறார். இப்பொழுது மோசே சீனாய் மலையிலிருந்து இரண்டாம் முறையாக இறங்கி வருகிறார். மோசே இதற்கு முன்பு என்ன செய்திருக்கவேண்டுமோ அதை இப்பொழுது செய்கிறார்.

மோசே சீனாய் மலையிலிருந்து முதல் முறையாக இறங்கி வந்தபோது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். தேவனுக்கும் அவர்களுக்கும் நடுவே இருந்த ஐக்கியமும், உடன்படிக்கையும் முறிந்துபோயிற்று. இப்பொழுது மோசே இரண்டாம் முறையாக சீனாய் மலையிலிருந்து இறங்கி வரும்போது, தேவனுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே ஒப்புரவாதல் ஏற்பட்டிருக்கிறது. அவர்களிடையே முறிந்துபோன ஐக்கியம் இப்போது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

மோசே கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட கட்டளைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அவர்கள் காலதாமதம்பண்ணாமல் கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு செய்ய சொல்லியிருக்கிற காரியங்களை உடனே செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

ஓய்வுநாளைப்பற்றிய பிரமாணம் (யாத் 35:1-3). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளைப்பற்றிய பிரமாணம் (யாத் 35:4-9). ஆசரிப்புக்கூடாரத்தைப் போடுவதற்கு இந்தக் காணிக்கைகள் பயன்படுத்தப்படும். ஆசரிப்புக்கூடாரத்தையும் அதிலுள்ள பணிமுட்டுக்களையும் பற்றிய பிரமாணம் (யாத் 35:10-19).

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்திற்கும் காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள் (யாத் 35:20-29). மோசே ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளுக்கு தலைவர்களை நியமிக்கிறார் (யாத் 35:30-35).

### கர்த்தருக்கு செலுத்த வேண்டிய காணிக்கை
### யாத் 35:1-19

**யாத் 35:1. மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி:**

**யாத் 35:2. நீங்கள் ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும், ஏழாம் நாளோ உங்களுக்குப் பரிசுத்த நாளாய் இருப்பதாக; அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு நாள்; அதிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படக்கடவன்.**

**யாத் 35:3. ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாக என்னும் இவ்வார்த்தைகளைக் கைக்கொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்டார் என்றான்.**

**யாத் 35:4. பின்னும் மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் நோக்கி:**

**யாத் 35:5. உங்களுக்கு உண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையைக் கொண்டு வந்து செலுத்துங்கள்; மனமுள்ளவன் எவனோ, அவன் அதைக் கொண்டுவரட்டும்; கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்னவென்றால், பொன்னும் வெள்ளியும், வெண்கலமும்,**

**யாத் 35:6. இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டு மயிரும்,**

**யாத் 35:7. சிவப்புத்தீர்த்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும்,**

**யாத் 35:8. விளக்குக்கு எண்ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும்,**

**யாத் 35:9. ஆசாரியருடைய ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கத்தக்க கோமேதகம் முதலிய இரத்தினங்களுமே.**

**யாத் 35:10. உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து, கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக.**

**யாத் 35:11. வாசஸ்தலத்தையும், அதின் கூடாரத்தையும், அதின் மூடியையும், அதின் கொக்கிகளையும், அதின் பலகைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் பாதங்களையும்,**

**யாத் 35:12. பெட்டியையும், அதின் தண்டுகளையும், கிருபாசனத்தையும், மறைவின் திரைச்சீலையையும்,**

**யாத் 35:13. மேஜையையும், அதின் தண்டுகளையும், அதின் சகல பணிமுட்டுகளையும், சமுகத்தப்பங்களையும்,**

**யாத் 35:14. வெளிச்சங்கொடுக்கும் குத்துவிளக்கையும், அதின் கருவிகளையும், அதின் அகல்களையும், வெளிச்சத்துக்கு எண்ணெயையும்,**

**யாத் 35:15. தூபபீடத்தையும், அதின் தண்டுகளையும், அபிஷேகதைலத்தையும், சுகந்த தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசலுக்குத் தொங்குதிரையையும்,**

**யாத் 35:16. தகனபலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், அதின் தண்டுகளையும், அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும், அதின் பாதத்தையும்,**

**யாத் 35:17. பிராகாரத்தின் தொங்குதிரைகளையும், அதின் தூண்களையும், அதின் பாதங்களையும், பிராகாரத்து வாசலின் தொங்குதிரையையும்,**

**யாத் 35:18. வாசஸ்தலத்தின் முளைகளையும், பிராகாரத்தின் முளைகளையும், அவைகளின் கயிறுகளையும்,**

**யாத் 35:19. பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்வதற்குரிய வஸ்திரங்களையும், ஆசாரிய ஊழியஞ்செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் அவர்கள் செய்யக்கடவர்கள் என்றான்.**

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கூடாரம் செய்யும் வேலையை உடனே ஆரம்பிக்கவேண்டும். அவர்கள் அந்தக் கூடாரத்தில் பயன்படுத்தப்படும் பரிசுத்த பணிமுட்டுக்களையும் உடனே செய்ய ஆரம்பிக்கவேண்டும். கர்த்தர் மோசேயினிடத்தில் தம்முடைய கூடாரத்தை போடுவதுபற்றிய பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். மோசே கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். மோசேயின் வார்த்தை கர்த்தருடைய வார்த்தையாயிருக்கிறது.

மோசே கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லுவதற்காக, அவர் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் தன்னிடத்தில் கூடிவரச் செய்கிறார் (யாத் 35:1). கர்த்தர் தனக்கு கட்டளையிட்டு சொன்ன எல்லா வார்த்தைகளையும் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் மோசேயின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கர்த்தரும் மோசேயை நம்பி, தம்முடைய கட்டளைகளை அவருக்கு சொல்லியிருக்கிறார்.

மோசே கர்த்தருடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர். அதே வேளையில் அவர் கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரராகவும் இருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மோசே அடையாளமாயிருக்கிறவர். கிறிஸ்துவானவரும் பிதாவாகிய தேவனுக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆனாலும் கிறிஸ்துவானவர் பிதாவின் பணிவிடைக்காரராயிராமல், அவருடைய ஒரே பேறான குமாரனாயிருக்கிறார்.

"சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" *(எபி 3:5,6).*

மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் முதலாவதாக ஓய்வுநாள் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லுகிறார். மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும், ஏழாம் நாளோ உங்களுக்குப் பரிசுத்த நாளாய் இருப்பதாக; அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு நாள்; அதிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படக்கடவன். ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாக என்னும் இவ்வார்த்தைகளைக் கைக்கொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்டார்" *(யாத் 35:2,3)* என்று சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடார வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பாக மோசே இஸ்ரவேல் புத்திரரிடம் ஆறு வேலை நாட்களையும், ஒரு ஓய்வுநாளையும் நினைவுபடுத்துகிறார். ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவன் எவனும் கொலைசெய்யப்படக்கடவன் என்றும் எச்சரித்துக் கூறுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடார வேலையைச் செய்து கொண்டிருந்தபோதும் அவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்கிறார்கள் *(யாத் 34:2-3).*

இஸ்ரவேல் புத்திரர் வாரத்தின் ஆறுநாட்களும் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளை செய்யவேண்டும். ஏழாம் நாளிலோ அவர்கள் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் நாள் விசேஷித்த ஓய்வுநாளாயிருக்கிறது.

மோசே ஏழாம் நாளைப்பற்றிச் சொல்லும்போது, "ஏழாம் நாளோ உங்களுக்கு பரிசுத்த நாளாயிருப்பதாக" என்றும், "அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்" என்றும் சொல்லுகிறார். இந்த ஓய்வுநாள் மிகவும் விசேஷமானது. இது "ஓய்வுநாட்களின் ஓய்வுநாள்" என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு சில பண்டிகைகளைப்பற்றிய நியமத்தைக் கொடுத்திருக்கிறார். மற்ற பண்டிகைகளைவிட ஓய்வுநாள் மிகவும் விசேஷமானது. அது பரிசுத்தமுள்ளது. மற்ற பண்டிகைகளைவிட ஓய்வுநாள் கனமுள்ளது.

ஓய்வுநாள் பிரமாணத்திற்கு வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தர் சொல்லுகிற ஓய்வுநாள் ஆவிக்குரிய ஓய்வையும், நித்திய ஓய்வையும் குறிக்கும் என்பது இவர்களுடைய விளக்கமாகும்.

"ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது" *(எபி 4:9).*

யூதர்களில் சிலர் ஓய்வுநாளை "முழுஓய்வுநாள்" என்றும், "சிறிய ஓய்வுநாள்" என்றும் இரண்டாக பிரிக்கிறார்கள். சாதாரணமான ஓய்வுநாள் முழுஓய்வுநாள் என்று அழைக்கப்படுகிறது. ஓய்வுநாள் ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பும், ஓய்நாள் முடிவுபெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு பின்பும் வரும் காலம் சிறிய ஓய்நாளாகும்.

இஸ்ரவேல் புத்திரர் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்போது, சிறிய ஒய்வுநாளையும் பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். ஒய்வுநாள் ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே, அவர்கள் ஒய்வுநாளின் வருகையை சந்தோஷமாய் எதிர்பார்ப்பார்கள். அதுபோலவே ஒய்வுநாள் முடிந்து ஒரு மணி நேரத்திற்கு பின்பு வரையிலும், ஒய்வுநாள் முடிந்துபோயிற்றே என்று நினைத்து துக்கத்தோடிருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு ஒய்வுநாள் பரிசுத்தநாளாகவும், சந்தோஷமான நாளாகவும் இருக்கிறது.

நெருப்பு மூட்டுதல் சிறிய காரியம்தான். ஆனாலும் இதற்குக்கூட மரண தண்டனை வழங்கப் படுகிறது. சிறிய காரியங்களிலும், இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிய வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. (எண் 15:32-36) யூதர்கள் இந்தப் பிரமாணத்தை வேலை செய்வதற்குத் தேவையான நெருப்பை மூட்டுவதற்கு மட்டும் பயன்படுத்தினார்கள். விளக்கு ஏற்றுவதற்கோ அல்லது குளிர்காய்வதற்கோ நெருப்பு மூட்டுவது தடைபண்ணப்படவில்லை என்று நினைத்தார்கள். அதுமட்டுமல்லாமல், விளக்கு ஏற்றுவதற்கும், குளிர்காய்வதற்கும் புறஜாதியாரைத் தங்களுக்காக நெருப்பு மூட்டுமாறு கூறுவார்கள். ஏனெனில் புறஜாதியார் ஒய்வுநாள் பிரமாணத்திற்கு உடன்பட்டவர்கள் அல்லர்.

ஆசாரியத்துவத்தைப் பற்றியும், ஆசரிப்புக் கூடாரம் கட்டுவது பற்றியும் மோசே சீனாய் மலையிலிருந்த 80 நாட்களில் தேவனிடமிருந்து கட்டளையாகப் பெற்றுக் கொண்டார் (யாத் 24:18; யாத் 34:28). இவற்றை மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையாகக் கூறினார். மோசேயும் ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்ட ஆரம்பித்து, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார். வேதாகமத்தின் இந்த பகுதியை "மோசேயின் நடபடிகள்" என்று அழைக்கலாம். (யாத் 35:1-40:38).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆசரிப்புக்கூடாரம் போடுகிற வேலையை செய்யவேண்டும். மோசே ஆசரிப்புக்கூடார வேலையை செய்வது பற்றி இரண்டு காரியங்களை சொல்லுகிறார். அவையாவன: 1. கர்த்தருக்கு காணிக்கையை கொண்டுவர மனமுள்ளவர்கள் எல்லோரும் காணிக்கை செலுத்த வேண்டும். 2. ஞானஇருதயமுள்ள அனைவரும் ஆசரிப்புக்கூடார வேலையை செய்யவேண்டும்.

மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் நோக்கி, "உங்களுக்கு உண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையைக் கொண்டு வந்து செலுத்துங்கள்; மனமுள்ளவன் எவனோ, அவன் அதைக் கொண்டுவரட்டும்" (யாத் 35:4,5) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு காணிக்கையை கொண்டு வரவேண்டும் என்று மோசே யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. அவர்கள் மனப்பூர்வமாக காணிக்கையை கொடுக்கவேண்டும். காணிக்கை கொண்டு வர மனமுள்ளவன் எவனோ, அவன் மாத்திரம் காணிக்கையை கொண்டு வந்தால் போதுமானது என்று மோசே சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்கு மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையாருக்கு வரிவிதிக்கவில்லை. அவர்கள் கர்த்தருக்கு உதாரத்துவமான காணிக்கையை மனப்பூர்வமாய் கொடுக்கவேண்டும் என்று மோசே எதிர்பார்க்கிறார். கர்த்தர் ஒருபோதும் நம்மீது பாரமான நுகத்தை சுமத்தமாட்டார். கர்த்தருடைய நுகம் எப்போதும் மெதுவானதாகவும், இலகுவானதாகவும் இருக்கும்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். உதாரத்துவமான காணிக்கையே கர்த்தருக்கு பிரியமானது. நாம் மனப்பூர்வமாய்க் கொடுக்கும் காணிக்கைகளை மாத்திரமே கர்த்தர் அங்கீகரிக்கிறார். விசனமாய் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியப்படமாட்டார்.

"உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்" (சங் 110:3).

கர்த்தருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளைப்பற்றியும் மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையாருக்கு சொல்லுகிறார். கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்னவென்றால்: "பொன்னும் வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டு மயிரும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும், விளக்குக்கு எண்ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும், ஆசாரியருடைய ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கத்தக்க கோமேதகம் முதலிய இரத்தினங்களுமே" (யாத் 35:5-9).

இஸ்ரவேல் புத்திரரில் ஞானஇருதயமுள்ள அனைவரும் வந்து, கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்ய வேண்டும் (யாத் 35:10). கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் எல்லோருக்கும், தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக வரங்களை பகிர்ந்து கொடுக்கிறார்.

"அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்" (1பேது 4:10).

ஐசுவரியவான்கள் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளுக்கு பொருட்களை காணிக்கையாகக் கொண்டு வரவேண்டும். ஞானஇருதயமுள்ளவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளை செய்யவேண்டும். கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்வதற்கு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லோருமே தேவைப்படுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லோரையும் நோக்கி, "உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து, கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக என்றும், வாசஸ்தலத்தையும், அதின் கூடாரத்தையும், அதின் மூடியையும், அதின் கொக்கிகளையும், அதின் பலகைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் பாதங்களையும், பெட்டியையும், அதின் தண்டுகளையும், கிருபாசனத்தையும், மறைவின் திரைச்சீலையையும்" என்றும்,

"மேஜையையும், அதின் தண்டுகளையும், அதின் சகல பணிமுட்டுகளையும், சமுகத்தப்பங்களையும், வெளிச்சங்கொடுக்கும் குத்துவிளக்கையும், அதின் கருவிகளையும், அதின் அகல்களையும், வெளிச்சத்துக்கு எண்ணெயையும், தூபபீடத்தையும், அதின் தண்டுகளையும், அபிஷேகதைலத்தையும், சுகந்த தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசலுக்குத் தொங்குதிரையையும்" என்றும்,

தகனபலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், அதின் தண்டுகளையும், அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும், அதின் பாதத்தையும், பிராகாரத்தின் தொங்குதிரைகளையும், அதின் தூண்களையும், அதின் பாதங்களையும், பிராகாரத்து வாசலின் தொங்குதிரையையும், வாசஸ்தலத்தின் முளைகளையும், பிராகாரத்தின் முளைகளையும், அவைகளின் கயிறுகளையும்" என்றும்,

"பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்வதற்குரிய வஸ்திரங்களையும், ஆசாரிய ஊழியஞ்செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் அவர்கள் செய்யக்கடவர்கள்" (யாத் 35:10-19) என்றும் சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் கொரியந்தியருக்கு எழுதின நிருபத்தில் வரங்களைப்பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே" (1கொரி 12:4-6).

"ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது" (1கொரி 12:7-10).

"இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (1கொரி 12:11-13).

"சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது.காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? (1கொரி 12:14-17).

"தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே. கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது" (1கொரி 12:18-21).

## கர்த்தருக்கு செலுத்தப்பட்ட காணிக்கை

## யாத் 35:20-29

**யாத் 35:20. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேயின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்.**

**யாத் 35:21. பின்பு எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள்.**

**யாத் 35:22. மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகலவித பொன்னாபரணங்களையும் கொண்டு வந்தார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்தினான்.**

**யாத் 35:23. இளநீல்நூலையும் இரத்தாம்பரநூலையும் சிவப்புநூலையும் மெல்லிய பஞ்சுநூலையும் வெள்ளாட்டு மயிரையும் சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலையும் தகசுத்தோலையும் தங்களிடத்தில் வைத்திருந்த யாவரும் அவைகளைக் கொண்டுவந்தார்கள்.**

**யாத் 35:24. வெள்ளியையும் வெண்கலத்தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். பற்பல வேலைகளுக்கு உதவும் சீத்திம் மரத்தைத் தங்களிடத்தில் வைத்திருந்த யாவரும் அவைகளைக் கொண்டு வந்தார்கள்.**

**யாத் 35:25. ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும் இரத்தாம்பரநூலையும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டுவந்தார்கள்.**

**யாத் 35:26. எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு மயிரைத் திரித்தார்கள்.**

**யாத் 35:27. பிரபுக்கள் ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகம் முதலிய இரத்தினங்களையும்,**

**யாத் 35:28. பரிமளவர்க்கங்களையும், விளக்கெண்ணெயையும், அபிஷேகதைலத்துக்கும் சுகந்தவர்க்க தூபத்துக்கும் வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள்.**

**யாத் 35:29. செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்.**

ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கும் அதின் சகல ஊழியத்திற்கும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். அது பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "உங்களுக்கு உண்டானதை கர்த்தருக்கு ஒரு காணிக்கையைக் கொண்டு வந்து செலுத்துங்கள்" (யாத் 35:5) என்று சொன்னவுடன், இஸ்ரவேல் சபையார் எல்லோரும் காலதாமதம்பண்ணாமல், கர்த்தருக்கு காணிக்கையைக் கொண்டு வருவதற்காக, மோசேயின் சமுகத்தைவிட்டு புறப்படுகிறார்கள் (யாத் 35:20).

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேயின் சமுகத்தை விட்டுப் புறப்படுகிறார்கள். தேவனுடைய ஊழியத்திற்கு எதைக் கொடுக்க வேண்டும் என்னும் எண்ணம் அவர்களுடைய இருதயத்தில் இருக்கிறது. பொன்கன்றுக்குட்டியைச் செய்வதற்கு அவர்கள் தங்கள் பொன்னாபரணங்களைத் தாராளமாகக் கொடுக்கிறார்கள். இப்போது அவர்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டு, தேவனுடைய ஆசரிப்புக் கூடாரத்திற்காக மனப்பூர்வமாகக் கொடுக்கப் போகிறார்கள்.

கர்த்தருக்கு ஆசரிப்புக்கூடார வேலை செய்வதற்கு இதுவே ஏற்ற காலமாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருடைய ஆவி கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வருமாறு அவர்களை உற்சாகப்படுத்துகிறது.

எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவருகிறார்கள் (யாத் 35:21).

செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவருகிறார்கள் (யாத் 35:29).

கர்த்தருக்கு காணிக்கை செலுத்துகிற ஒவ்வொருவரும், தங்கள் காணிக்கைகளை மனப்பூர்வமாக செலுத்துகிறார்கள். மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகலவித பொன்னாபரணங்களையும் கொண்டு வருகிறார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிற ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள் (யாத் 35:22).

தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி, விக்கிரகாராதனை செய்யும்போது ஸ்திரீகளும், புருஷர்களும் ஒன்றுபோல பாவம் செய்தார்கள். இப்போது தேவனுடைய ஊழியத்திற்கு ஸ்திரீகளும், புருஷரும் மனப்பூர்வமாகக் கொடுத்து, தேவஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

கர்த்தர்மீது அன்பு செலுத்தாமல் உலகப்பிரகாரமான பொருட்களாகிய பொன்மீது அதிகமாய் அன்பு செலுத்துகிறவர்கள் கர்த்தருக்கு தங்கள் பொன்னை காணிக்கையாக கொடுக்கமாட்டார்கள். தாங்கள் அதிகமாய் நேசிக்கிற பொன்னை விட்டுப்பிரிய அவர்களுக்கு மனம் இருக்காது. இப்படிப்பட்ட பேராசைக்காரர்கள், ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளுக்கும் தங்களுடைய பொன்னை காணிக்கையாகக் கொடுக்கமாட்டார்கள்.

உலகப்பொருளை அதிகமாய் நேசிக்கிறவர்கள், கர்த்தருக்கு மிகவும் குறைவான காணிக்கையையே கொடுப்பார்கள். கர்த்தருக்கு கொடுப்பதினால் தங்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் வந்துவிடக்கூடாது என்பதில் இவர்கள் மிகவும் கவனமாயிருப்பார்கள். குறைந்த செலவில் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்பதே இவர்களுடைய நோக்கமாயிருக்கும்.

ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்திற்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வரவேண்டுமென்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அவர்கள் கொண்டு வரவேண்டிய காணிக்கையின் விவரத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய திராணிக்குத்தக்கவாறு கர்த்தருக்கு காணிக்கையை கொண்டு வரவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் ஸ்திரீகளும், புருஷரும், கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்த பொருட்களின் விவரம் வருமாறு:

1. அஸ்தகடகங்கள்
2. காதணிகள்
3. மோதிரங்கள்
4. ஆரங்கள்
5. சகலவித பொன்னாபரணங்கள்
6. இளநீலநூல் (யாத் 35:23)
7. இரத்தாம்பரநூல் (யாத் 35:27; யாத் 28:17-21)
8. சிவப்புநூல்
9. மெல்லிய பஞ்சு நூல்
10. வெள்ளாட்டு மயிர்
11. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல்
12. தகசுத்தோல்
13. வெள்ளி (யாத் 35:24)
14. வெண்கலம்
15. சீத்திம் மரம்
16. கோமேதக்கற்களும், மற்றக் கற்களும்
17. தூபவர்க்கங்கள் (யாத் 35:28)
18. அபிஷேகத்தைலம்

"அஸ்தகடகங்கள்" என்னும் ஆபரணத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "காக்" என்பதாகும். இதன் பொதுவான மொழிபெயர்ப்பு மூக்குத்தி. இந்த வசனத்தில் மட்டுமே இது வளையல் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பொதுவாக மற்ற வசனங்களில் கொக்கி, துறடு என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 2இராஜா 19:28;ஏசா 37:29; எசே 29:4; எசே 38:4. வேதாகமத்தில் வளையல் என்பதற்கான பொதுவான வார்த்தை "ட்சாமீட்" என்பதாகும். இந்த வார்த்தை தவிர ஆரம், வளையல், காப்பு ஆகியவற்றைக் குறிப்பதற்கு மேலும் சில எபிரெய வார்த்தைகள் உள்ளன.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பொன்னோ, விலையுயர்ந்த கற்களோ இல்லையென்றால், அவர்கள் வெள்ளாட்டு மயிரையும், சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோலையும், தகசுதோலையும் கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வரலாம். இரண்டு காசுகளை காணிக்கைப் பெட்டியில் போட்ட ஏழை விதவையைப்போல, நம்மிடத்திலுள்ளதை நாம் கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கவேண்டும்.

நாம் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வரும்போது, அவர் நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். அவர் காணிக்கை கொடுக்கிறவர்களின் இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, அவர்கள் கொடுக்கும் காணிக்கையை மதிப்பிடுகிறார்.

மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகலவித பொன்னாபரணங்களையும் கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வருகிறார்கள் (யாத் 35:22). புருஷரைப்போலவே, ஸ்திரீகளும் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வருகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பொன்னாபரணங்களுக்கும், விலையேறப்பெற்ற கற்களுக்கும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

"ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" (1தீமோ 2:9,10).

"மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" (1பேது 3:3,4).

பழையஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருடைய புருஷரிடத்திலும், ஸ்திரீகளிடத்திலும் பொன்னாபரணங்களும், விலையுயர்ந்த கற்களும் ஏராளமாயிருக்கிறது. இவையெல்லாம் இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தியரிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்ட பொருட்களாகும்.

எகிப்தியரின் ஐசுவரியம் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கு பயன்படுத்தப்படுகிறது.

"நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி 16:2).

கர்த்தர் ஒருவனை பொருளாதார ரீதியாக அதிகமாய் ஆசீர்வதிக்கும்போது, அவன் கர்த்தருக்கு அதிகமான காணிக்கைகளை கொடுக்கவேண்டும். எகிப்தியரிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்ட பொன்னை கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கு பயன்படுத்துவதில் தப்பிதம் ஒன்றுமில்லை. ஆனாலும் எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்த, எகிப்தியரின் தெய்வங்களை, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் வைத்து விடக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்காக தாங்கள் கொண்டு வரும் காணிக்கையில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்திற்கும் கொண்டு வந்த காணிக்கைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இளநீலநூலையும் இரத்தாம்பரநூலையும் சிவப்புநூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் வெள்ளாட்டு மயிரையும் சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலையும் தகசுத்தோலையும் தங்களிடத்தில் வைத்திருந்த யாவரும் அவைகளைக் கொண்டுவருகிறார்கள் (யாத் 35:23).

வெள்ளியையும் வெண்கலத்தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவருகிறார்கள். பற்பல வேலைகளுக்கு உதவும் சீத்திம் மரத்தைத் தங்களிடத்தில் வைத்திருந்த யாவரும் அவைகளைக் கொண்டு வருகிறார்கள் (யாத் 35:24).

இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஸ்திரீகளும் புருஷரும், கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வருவதோடு, அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளை செய்வதிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள்.

ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும் இரத்தாம்பரநூலையும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டுவருகிறார்கள். எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு மயிரைத் திரிக்கிறார்கள் (யாத் 35:25,26).

நாம் கர்த்தருக்கு நம்முடைய பொருளை காணிக்கையாக செலுத்தும்போது, கர்த்தர் நம்முடைய காணிக்கையை அங்கீகரிக்கிறார். நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது, கர்த்தர் நம்முடைய ஊழியத்தையும் அங்கீகரிக்கிறார். நாம் எதை செய்தாலும் அதை கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் ஊழியம் செய்யவேண்டும்.

பெசலெயேல், அகோலியாப் ஆகியோரைப்போல ஞானஇருதயமுள்ள ஸ்திரீகளையும், கர்த்தர் தம்முடைய ஆசரிப்புக்கூடாரத்தின் வேலையிலே பயன்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் கர்த்தர் தம்முடைய ஊழியத்தில் ஒரு சில ஸ்திரீகளை பயன்படுத்தியிருக்கிறார்.

மரியாள் விலையேறப்பெற்ற தைலத்தினால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிரசை அபிஷேகம்பண்ணினாள்.

"இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத் 26:13).

"அன்றியும், என் உத்தமகூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" (பிலி 4:3).

"கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்" (ரோம 16:3).

பிரபுக்கள் ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகம் முதலிய இரத்தினங்களையும், பரிமளவர்க்கங்களையும், விளக்கெண்ணெயையும், அபிஷேகதைலத்துக்கும் சுகந்தவர்க்க தூபத்துக்கும் வேண்டியவைகளையும் கொண்டுவருகிறார்கள் (யாத் 35:27,28).

ஐசுவரியமுள்ளவர்கள் தங்கள் ஐசுவரியத்தை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வரவேண்டும். ஐசுவரியமில்லாதவர்கள், கர்த்தருடைய ஊழியத்திலே ஏதாவது ஒரு வேலையை செய்யவேண்டும். ஒருவரிடத்தில் கர்த்தருக்கு கொடுக்க ஒன்றுமில்லையென்றாலும், அவர் தன்னுடைய உடல் உழைப்பை கர்த்தருக்கு கொடுக்க முன்வரவேண்டும். உதாரத்துவமாய் கொடுக்கப்படும் காணிக்கைகளை கர்த்தர் அங்கீகரிப்பதுபோல, அன்பினால் செய்யப்படும் வேலைகளையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார்.

செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவருகிறார்கள் (யாத் 35:29).

## விசேஷித்த வரங்கள்
## யாத் 35:30-35

**யாத் 35:30. பின்பு மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: பாருங்கள், கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,**

**யாத் 35:31. அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்யவும்,**

**யாத் 35:32. இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும்,**

**யாத் 35:33. அவனுக்கு ஞானத்தையும், புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி, தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்.**

**யாத் 35:34. அவன் இருதயத்திலும், தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும் அருளினார்.**

**யாத் 35:35. சித்திரவேலையையும் சிற்பவேலையையும், இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்புநூலாலும் மெல்லிய பஞ்சுநூலாலும் செய்யப்படும் விசித்திரத் தையல்வேலையையும், சகல விசித்திர நெசவு வேலைகளையும் விநோதமான வேலைகளை யூகிக்கிறவர்களும் செய்கிறவர்களும் நிறைவேற்றும் சகலவித வேலைகளையும் செய்யும்படிக்கு அவர்களுடைய இருதயத்தை ஞானத்தினால் நிரப்பினார் என்றான்.**

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்கிறவர்களுக்கு தலைமை ஊழியக்காரர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் விசேஷித்த திறமைகளும் தாலந்துகளும் உடையவர்கள். கர்த்தர் எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமமுமாக செய்கிறார். அவர் குழப்பத்தின் தேவனாயிராமல், ஒழுக்கத்தின் தேவனாயிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக யாரையெல்லாம் அழைக்கிறாரோ அவர்கள் எல்லோருக்கும், கர்த்தர் தம்முடைய ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் அருளுகிறார். அவர்கள் தம்முடைய ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்யுமாறு, கர்த்தர் அவர்களை தம்முடைய ஆவியினால் நிரப்புகிறார்.

கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்யவும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும், அவனுக்கு ஞானத்தையும், புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்புகிறார்" *(யாத் 35:30-33).*

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் இரகசியங்களையெல்லாம் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தி வந்திருக்கிறார். மனுஷரிடத்திலே காணப்படும் அநேக திறமைகள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தவையாகும். அறிவிலும், ஞானத்திலும் விருத்தியடைதல் ஆவியானவர் கொடுக்கும் ஈவாகும். இந்த வசனப் பகுதியில் ஆவிக்குரிய நான்கு வரங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. ஞானம் *(யாத் 35:31,35; யாத் 28:3)*
2. புத்தி
3. அறிவு *(யாத் 35:31; 2கொரி 12:1-11)*
4. திறமை *(யாத் 35:31; யாத் 36:1)*

கர்த்தர் பெசலெயேலை சகலவித வேலைகளையும் செய்யும்படி தம்முடைய ஆவியினாலே நிரப்புகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் பரிசுத்த ஆவியானவர் மனுஷரைத் தமது ஆவியினாலே நிரப்பினார். ஆவிக்குரிய வரங்கள் என்பது ஆன்மீகக் காரியங்களையும், தொழிலில் திறமைகள், ஞானம், அறிவு, ஆகியவற்றையும் குறிக்கும். (யாத் 35:31-35).

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவன் மனுஷருக்குத் தெய்வீகத் திறமைகளைக் கொடுக்கிறார். மனுஷருக்கு விசேஷித்த ஞானத்தையும், அறிவையும் அருளி, அவனுடைய திறமையை வளப்படுத்துகிறார். தனக்குத் தெரிந்ததைப் பிறருக்குப் போதிப்பது தேவனுடைய வரமாகும். கிறிஸ்து, தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியானவருடைய வரங்களைப் பெற்றுக் கொண்டு, திறமையோடு ஊழியம் செய்தார்கள்.

ஒரு சிலர் உலகப்பிரகாரமான வேலைகளையும் நேர்த்தியாய்ச் செய்கிறார்கள். அந்த திறமைகளும் அவர்களுக்கு பரத்திலிருந்தே வருகிறது.

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக் 1:17).

பெசலெயேலும், அகோலியாபும் ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தின் கூடாரத்தை கட்டியெழுப்புகிறார்கள். கர்த்தர் அவர்களையும், தம்முடைய ஆவியினாலும், ஞானத்தினாலும், புத்தியினாலும், அறிவினாலும் நிரப்புகிறார்.

கர்த்தர் பெசலெயேலையும் அகோலியாபையும் விநோதமான வேலைகளை செய்வதற்காக பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். அவர்கள் இருவரும் திட்டமிடுகிறவர்களாக மாத்திரமல்ல, அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வேலை செய்கிறவர்களாயும் இருக்கிறார்கள்.

பெசலெயேலும் அகோலியாபும் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளை செய்வதோடு, அந்த வேலைகளை எவ்வாறு செய்யவேண்டுமென்று மற்றவர்களுக்கு போதிக்கவும் செய்கிறார்கள்.

கர்த்தர் பெசலெயேலின் இருதயத்திலும், தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும் அருளுகிறார் (யாத் 35:34).

பெசலெயேலும் அகோலியாபும் தங்களுக்கு கீழே வேலை செய்கிறவர்களுக்கு கட்டளை கொடுக்கிறவர்கள் மாத்திரமல்ல, அவர்களுக்கு வேலைகளை கற்றுக்கொடுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றவர்களை ஆளுகை செய்கிறவர்கள், அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற ஞானத்தையும் புத்தியையும் அறிவையும், தலைவர்கள் தங்களுக்கு கீழே பணிபுரிகிறவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும். எல்லாவற்றையும் தாங்கள் மாத்திரமே வைத்துக்கொண்டு, அவற்றை தாங்களே மொத்தமாக அனுபவிக்கவேண்டும் என்று பேராசைப்படக்கூடாது.

பெசலெயேல் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன். (யாத் 31:2) அகோலியாப் தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவன். ஆசரிப்புக்கூடாரத்தைச் செய்யும் வேலைகளுக்கு இவர்கள் இருவரும் பிரதான மேற்பார்வையாளராக இருக்கிறார்கள். (யாத் 35:35; யாத் 36:1-2). பரிசுத்த ஆவியானவர் இவர்கள் இருவருக்கும் வரங்களை அருளுகிறார். இவர்களுக்குக் கீழ் பலர் ஆசரிப்புக் கூடாரத்து வேலைகளைச் செய்கிறார்கள். ஆவியானவர், அவர்களையும் தமது ஆவியினால் நிரப்பி, அவர்களுக்கு ஞானத்தையும், அறிவையும், விசேஷித்த தாலந்துகளையும் கொடுக்கிறார். (யாத் 36:1-2). தேவன் இவர்கள் எல்லோரையும் அழைத்திருக்கிறார். சித்திரத்தையல் வேலை செய்வது, கற்களை வெட்டிப் பதிப்பது ஆகியவை அகோலியாபின் விசேஷித்த வரங்களாகும். (யாத் 38:23).

கர்த்தர் சித்திரவேலையையும் சிற்பவேலையையும், இளநீலநூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்புநூலாலும் மெல்லிய பஞ்சு நூலாலும் செய்யப்படும் விசித்திரத் தையல்வேலையையும், சகல விசித்திர நெசவு வேலைகளையும் விநோதமான வேலைகளை யூகிக்கிறவர்களும் செய்கிறவர்களும் நிறைவேற்றும் சகலவித வேலைகளையும் செய்யும்படிக்கு அவர்களுடைய இருதயத்தை ஞானத்தினால் நிரப்புகிறார் (யாத் 35:35).

## 36 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரத்தின் வேலை ஆரம்பிக்கப்படுகிறது (யாத் 36:1-4). ஜனங்கள் கொண்டு வருகிற காணிக்கை நிறுத்தப்படுகிறது (யாத் 36:5-7). பத்து மூடுதிரைகள் உண்டுபண்ணப்படுகிறது (யாத் 36:8-13). ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு மூடுதிரைகள் உண்டுபண்ணப்படுகிறது (யாத் 36:14-19).

சீத்திம் மரத்தால் பலகைகள் செய்யப்படுகிறது (யாத் 36:20-30). தாழ்ப்பாள்கள் செய்யப்படுகிறது (யாத் 36:31-34). ஒரு திரைச்சீலை உண்டுபண்ணப்படுகிறது (யாத் 36:35,36). ஒரு தொங்குதிரை உண்டாக்கப்படுகிறது (யாத் 36:37,38).

### பரிசுத்தஸ்தலத்துத் திருப்பணிகள் யாத் 36:1-7

**யாத் 36:1. அப்பொழுது பரிசுத்தஸ்தலத்துத் திருப்பணிகளுக்கடுத்த சகல வேலைகளையும், கர்த்தர் கற்பித்தபடியெல்லாம், பெசலெயேலும் அகோலியாபும், செய்ய அறியும்படிக்குக் கர்த்தரால் ஞானமும் புத்தியும் பெற்ற விவேக இருதயமுள்ள மற்ற அனைவரும் செய்யத்தொடங்கினார்கள்.**

**யாத் 36:2. பெசலெயேலையும் அகோலியாபையும், கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலைகளைச் செய்யவரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும், மோசே வரவழைத்தான்.**

**யாத் 36:3. அவர்கள், இஸ்ரவேல் புத்திரர் திருப்பணிக்கடுத்த சகல வேலைகளுக்காகவும் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களையெல்லாம், மோசேயினிடத்தில் வாங்கிக் கொண்டார்கள். பின்னும் ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்.**

**யாத் 36:4. அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்து வேலைகளைச் செய்கிற விவேகிகள் யாவரும் அவரவர் செய்கிற வேலையின் காரியமாய் வந்து,**

**யாத் 36:5. மோசேயை நோக்கி: கர்த்தர் செய்யும்படி கற்பித்த வேலைக்கு வேண்டியதற்கு அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள் என்றார்கள்.**

**யாத் 36:6. அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான்; இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது.**

**யாத் 36:7. செய்யவேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது.**

ஆசரிப்புக்கூடாரத்தில் வேலைகளை செய்கிறவர்கள், தங்களுடைய வேலைகளை தாமதமில்லாமல் உடனே செய்ய தொடங்குகிறார்கள்.

பரிசுத்த ஸ்தலத்துத் திருப்பணிகளுக்கடுத்த சகல வேலைகளையும், கர்த்தர் கற்பித்தபடியெல்லாம், பெசலெயேலும் அகோலியாபும், செய்ய அறியும்படிக்குக் கர்த்தரால் ஞானமும் புத்தியும் பெற்ற விவேக இருதயமுள்ள மற்ற அனைவரும் செய்யத்தொடங்குகிறார்கள் (யாத் 36:1).

ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் விவேக இருதயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தரால் ஞானமும் அறிவும் பெற்றவர்கள். ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்வதற்கு கர்த்தரே இவர்களை தகுதிப்படுத்தியிருக்கிறார். கர்த்தரிடத்திலிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட ஞானத்தையும் புத்தியையும், இவர்கள் உடனே பயன்படுத்துகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கற்பித்தபடியெல்லாம் இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்கிறார்கள்.

பெசலெயேலையும் அகோலியாபையும், கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலைகளைச் செய்யவரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும், மோசே வரவழைக்கிறார் *(யாத் 36:2)*.

ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் எல்லோரும் கர்த்தரால் ஞானமடைந்தவர்கள். இவர்கள் எல்லோரும் ஞானஇருதயத்தாராயிருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்வதற்கு மோசே இவர்கள் எல்லோரையும் வரவழைக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, சுவிசேஷத்தின் கூடாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, தம்முடைய ஊழியக்காரர்களை அழைக்கிறார். அவர்களுக்கு தம்முடைய கிருபைகளையும் வரங்களையும் கொடுக்கிறார். கிறிஸ்துவானவர் அவர்களை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணி, அவர்களை தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரருக்கு ஊழியம் செய்யும் திறமையும் இருக்கவேண்டும். ஊழியம் செய்யவேண்டும் என்னும் ஆர்வமும் இருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டுமென்று தீர்மானித்திருக்கவேண்டும். இவ்விரண்டு தகுதிகளையும் உடையவர்களை கர்த்தர் தம்முடைய ஊழியத்திலே பயன்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் ஆசரிப்புக்கூடாரத்து வேலைக்காக மோசேயினிடத்தில் காணிக்கைகளைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் திருப்பணிக்கடுத்த சகல வேலைகளுக்காகவும் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களையெல்லாம், ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் மோசேயினிடத்தில் வாங்கிக் கொள்கிறார்கள். பின்னும் ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள் *(யாத் 36:3)*.

மனுஷருடைய விலையேறப்பெற்ற ஆத்துமாக்களினால், சுவிசேஷத்தின் ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படுகிறது. விசுவாசிகளாகிய நாம் ஆவிக்குரிய மாளிகையாக கட்டியெழுப்பப்படுகிறோம்.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" *(1பேது 2:5)*.

ஆவிக்கேற்ற மாளிகையாக கட்டப்படுவதற்கு, விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு, நம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும்.

"அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்பொருட்டு, தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே உங்களுக்கு ஞாபகப்படுத்தும்படிக்கு இவைகளை நான் அதிக தைரியமாய் எழுதினேன்" *(ரோம 15:15,16)*.

நம்முடைய ஜீவனை கர்த்தருடைய பாதத்திலே ஜீவபலியாக சமர்ப்பிக்கும்போது, கர்த்தர் நம்மை ஆவிக்கேற்ற மாளிகையாக கட்டியெழுப்புகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அந்த மாளிகையை கட்டியெழுப்புகிற வேலைகளை செய்கிறார்கள். அவர்கள் விசுவாசிகளுக்கு கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய சத்தியத்தையும் போதிக்கிறார்கள். நாம் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் வளர்ச்சி பெறுவதற்கு ஊழியக்காரர்கள் நமக்கு உதவியாயிருக்கிறார்கள்.

"அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" *(எபே 2:21,22)*.

"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்" *(எபே 4:12,13)*.

ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள். இந்தக் காணிக்கைகளெல்லாம் பரிசுத்த ஸ்தலத்து திருப்பணிக்கடுத்த சகல வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஜனங்கள் மோசேயினிடத்தில் கொண்டு வந்து கொடுக்கிற காணிக்கைகளை, ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் அவரிடத்தில் வாங்கிக்கொண்டு, ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளை செய்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் உண்மையும் கண்ணிமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். காணிக்கைப்பொருட்கள் ஏராளமாக வந்திருக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் ஜனங்கள் காணிக்கையாக கொண்டு வருகிறார்கள்.

ஜனங்கள் கொண்டு வருகிற காணிக்கை அதிகமாயிருக்கிறது. கர்த்தர் செய்யும்படி கற்பித்த வேலையை முடிப்பதற்கு எவ்வளவு பொருட்கள் வேண்டுமோ, அதைவிட அதிகமான காணிக்கைப் பொருட்கள் சேர்ந்திருக்கிறது. ஆகையினால் ஜனங்கள் காணிக்கை கொண்டு வருவதை நிறுத்த வேண்டும் என்று ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் விரும்புகிறார்கள்.

அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்து வேலைகளைச் செய்கிற விவேகிகள் யாவரும் அவரவர் செய்கிற வேலையின் காரியமாய் வந்து, மோசேயை நோக்கி, "கர்த்தர் செய்யும்படி கற்பித்த வேலைக்கு வேண்டியதற்கு அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள்" *(யாத் 36:4,5)* என்று சொல்லுகிறார்கள்.

பரிசுத்த ஸ்தலத்து வேலைகளை செய்கிற விவேகிகள் யாவரும் கண்ணியமானவர்களாகயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் உலகப்பிரகாரமான பொருள்கள்மீது பேராசை எதுவுமில்லை. அவர்கள் ஜனங்களை வஞ்சித்து அதிகமான காணிக்கைப் பொருட்களை பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஜனங்களை வஞ்சிப்பதே மிகப்பெரிய வஞ்சனை என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரோ கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்து திருப்பணிகளுக்கு காணிக்கைப் பொருட்களை தாராளமாய்க் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அவர்கள் உதாரத்துவமாயும், மனப்பூர்வமாயும் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். இதனால் தேவைக்கு அதிகமாக காணிக்கைப் பொருட்கள் வந்து சேர்ந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளுக்கு காணிக்கைகளை கொண்டு வந்து கொடுப்பது நிறுத்தப்படவேண்டும். இதுபற்றி அவர்களிடத்தில் யாராவது சொல்லவேண்டும். அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்து வேலைகளை செய்கிற விவேகிகள், தேவைக்கு அதிகமாக திரளான காணிக்கைப் பொருட்கள் சேர்ந்திருப்பதை, மோசேயினிடத்தில் வந்து சொல்லுகிறார்கள்.

அப்பொழுது மோசே, "இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம்" என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிடுகிறார்; இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்படுகிறது. செய்யவேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருக்கிறது (யாத் 36:6,7).

ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள். ஜனங்கள் தேவைக்கு அதிகமாகக் கொண்டுவந்த படியினால், அவர்கள் காணிக்கையாகக் கொண்டுவருவதை நிறுத்திக் கொள்ளுமாறு மோசே கூறுகிறார் (யாத் 36:3-7). சபையார் எல்லாரும் தேவனுடைய திருப்பணிகளுக்குத் தாராளமாகக் கொடுக்கும் போது, புதிய ஏற்பாட்டிலும் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்.

ஜனங்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும். காணிக்கைகளை உதாரத்துவமாய்க் கொடுப்பதற்கு ஜனங்களை உற்சாகப்படுத்த வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர் இந்த ஊழியத்தை பொறுப்பாய் செய்யவேண்டும். காணிக்கை அதிகமாய்ச் சேரும்போது, ஜனங்கள் காணிக்கை கொடுப்பதை குறைக்குமாறும் அல்லது நிறுத்துமாறும் சொல்லவேண்டும். இந்த ஊழியத்தையும் கர்த்தருடைய ஊழியக்காரர் செய்யவேண்டும்.

## மூடுதிரைகள்
## யாத் 36:8-13

**யாத் 36:8. வேலைசெய்கிறவர்களாகிய ஞான இருதயமுள்ள யாவரும் வாசஸ்தலத்தை உண்டாக்கினார்கள். அதற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும், விநோத நெசவுவேலையாகிய கேருபீன்களுள்ள பத்து மூடுதிரைகளைப் பண்ணினான்.**

**யாத் 36:9. ஒவ்வொரு மூடுதிரை இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருந்தது; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருந்தது.**

**யாத் 36:10. ஐந்து மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்து, மற்ற ஐந்து மூடுதிரைகளையும் ஒன்றோடொன்று இணைத்தான்.**

**யாத் 36:11. இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் ஓரத்தில் இளநீலநூலால் ஐம்பது காதுகளை உண்டுபண்ணி, அப்படியே இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்திலும் உண்டுபண்ணினான்.**

**யாத் 36:12. காதுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவைகளாயிருந்தது.**

**யாத் 36:13. ஐம்பது பொன் கொக்கிகளையும்பண்ணி, அந்தக் கொக்கிளால் மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்துவிட்டான். இவ்விதமாக ஒரே வாசஸ்தலமாயிற்று.**

வேலைசெய்கிறவர்களாகிய ஞான இருதயமுள்ள யாவரும் வாசஸ்தலத்தை உண்டாக்குகிறார்கள். கர்த்தருடைய வாசஸ்தலம் மரத்தினாலோ அல்லது கற்களினாலோ உண்டாக்கப்படவில்லை. இது மூடுதிரைகளினால் உண்டாக்கப்படுகிறது.

ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள், அதற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும், விநோத நெசவுவேலையாகிய கேருபீன்களுள்ள பத்து மூடுதிரைகளைப் பண்ணுகிறார்கள் (யாத் 36:8).

வனாந்தரத்தில் போடப்பட்ட ஆசரிப்புக்கூடாரம், புதிய ஏற்பாட்டுக்காலத்து சபைக்கு அடையாளமாகயிருக்கிறது. கர்த்தருடைய சபையானது மனுஷர் மத்தியிலே கட்டியெழுப்பப்படும் தேவனுடைய ராஜ்யமாகும். இது அலங்காரமாகவோ அல்லது ஆடம்பரமாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய வாசஸ்தலம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அது ஆடம்பரமில்லாமல் சாதாரணமானதாக இருக்கவேண்டும்.

மேய்ப்பர்கள் கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் மேய்ப்பராயிருக்கிறார். யுத்தவீரர்கள் கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். நம்முடைய கர்த்தரும் யுத்தமனுஷராகயிருக்கிறார். கர்த்தருடைய சபை சத்துருக்களின் கோட்டையை முறியடிக்கும் ஊழியத்தை செய்கிறது.

யுத்தக்களத்திலே யுத்தம்பண்ணுகிற போர்வீரர்கள் ஆடம்பரமான மாளிகைகளில் குடியிருக்கமாட்டார்கள். ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பர்களும் மிகப்பெரிய அரண்மனைகளில் வாசம்பண்ணமாட்டார்கள். அவர்கள் எல்லோருமே சாதாரணமான கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். கர்த்தர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார். ஆனாலும் அவர், வனாந்தரத்திலே சாதாரண கூடாரத்தில் வாசம்பண்ணவேண்டுமென்று சித்தமுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வாசம்பண்ணுவது கர்த்தருக்கு பிரியமானதாயிருக்கிறது.

இந்தப் பூமியின் ராஜாக்கள் கேதுரு மர மாளிகைகளில் உலாவுகிறார்கள். ஆனால், நம்முடைய கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியோ திரைகளுக்கு நடுவே வைக்கப்பட்டிருக்கிறது.

"நீ கேதுருமர மாளிகைகளில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப்பாயோ? உன் தகப்பன் போஜனபானம்பண்ணி, நியாயமும் நீதியுஞ்செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ?" (எரே 22:15).

கர்த்தருடைய வாசஸ்தலத்தை உண்டாக்குகிறவர்கள், அதை மூடுதிரைகளினால் உண்டுபண்ணுகிறார்கள். இதற்காக அவர்கள் பத்து மூடுதிரைகளை பண்ணுகிறார்கள். ஒவ்வொரு மூடுதிரை இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருக்கிறது; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்கிறது (யாத் 36:9).

மோசே ஐந்து மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்து, மற்ற ஐந்து மூடுதிரைகளையும் ஒன்றோடொன்று இணைக்கிறார். இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் ஓரத்தில் இளநீலநூலால் ஐம்பது காதுகளை உண்டுபண்ணி, அப்படியே இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்திலும் உண்டுபண்ணுகிறார் (யாத் 36:10,11).

காதுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவைகளாயிருக்கிறது. மோசே ஐம்பது பொன் கொக்கிகளையும்பண்ணி, அந்தக் கொக்கிகளால் மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்துவிடுகிறார். இவ்விதமாக பத்து மூடுதிரைகளும் ஒரே வாசஸ்தலமாயிற்று (யாத் 36:12,13).

மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்கிறது. அதன் நீளம் 42 அடி. அகலம் 6 அடி. (யாத் 26:1-6).

காதுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவைகளாயிருக்கிறது. மோசே ஐம்பது பொன் கொக்கிகளைப் பண்ணுகிறார். அந்தக் கொக்கிகளால் மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்துவிடுகிறார். இவ்விதமாக அந்த மூடுதிரைகள் ஒரே வாசஸ்தலமாயிற்று (யாத் 36:11-13).

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி திரைகளுக்கு நடுவே வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திரைகளில் ஆடம்பரமான அலங்காரம் எதுவுமில்லை. கர்த்தருடைய வாசஸ்தலத்தில் பரிசுத்தமே அதன் அழகாயிருக்கிறது. மூடுதிரைகளில் பின்னல் வேலைகள் செய்யப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சபையில் பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் கிருபைகளும் சபையை அழகுபடுத்துகிறது.

"சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்; அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்" (சங் 45:14).

## கூடாரம்
## யாத் 36:14-34

யாத் 36:14. வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு மூடுதிரைகளையும் பண்ணினான்.

யாத் 36:15. ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருந்தது. பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருந்தது.

யாத் 36:16. ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், மற்ற ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைத்து,

யாத் 36:17. இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டாக்கி,

யாத் 36:18. கூடாரத்தை ஒன்றாய் இணைத்துவிட ஐம்பது வெண்கலக் கொக்கிகளையும் உண்டாக்கினான்.

யாத் 36:19. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலினால் கூடாரத்துக்கு ஒரு மூடியையும் அதின்மேல் போடத் தகசுத்தோலினால் ஒரு மூடியையும் உண்டுபண்ணினான்.

யாத் 36:20. வாசஸ்தலத்துக்கு நிமிர்ந்துநிற்கும் பலகைகளையும் சீத்திம் மரத்தால் செய்தான்.

யாத் 36:21. ஒவ்வொரு பலகையும் பத்துமுழநீளமும் ஒன்றரை முழ அகலமுமாயிருந்தது.

யாத் 36:22. ஒவ்வொரு பலகைக்கும் ஒன்றுக்கொன்று சமதூரமான இரண்டு கழுந்துகள் இருந்தது; வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் இப்படியே செய்தான்.

யாத் 36:23. வாசஸ்தலத்திற்காகச் செய்யப்பட்ட பலகைகளில் தெற்கே தென்திசைக்கு இருபது பலகைகளை உண்டாக்கி,

யாத் 36:24. அந்த இருபது பலகைகளின் கீழே வைக்கும் நாற்பது வெள்ளிப் பாதங்களையும் உண்டுபண்ணினான்; ஒரு பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களையும், மற்றப் பலகையின்கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களையும் பண்ணிவைத்து;

யாத் 36:25. வாசஸ்தலத்தின் மறுபக்கமாகிய வடபுறத்தில் இருபது பலகைகளையும், அவைகளுக்கு நாற்பது வெள்ளிப் பாதங்களையும் செய்தான்.

யாத் 36:26. ஒரு பலகையின்கீழ் இரண்டு பாதங்களும், மற்றப் பலகையின்கீழ் இரண்டு பாதங்களும் செய்தான்.

யாத் 36:27. வாசஸ்தலத்தின் மேல்புறத்திற்கு ஆறு பலகைகளையும்,

யாத் 36:28. வாசஸ்தலத்தின் இருபக்கங்களிலுள்ள மூலைகளுக்கு இரண்டு பலகைகளையும் செய்தான்.

யாத் 36:29. அவைகள் கீழே இசைக்கப்பட்டிருந்தது, மேலேயும் ஒரு வளையத்தினால் இசைக்கப்பட்டிருந்தது; இரண்டு மூலைகளிலுமுள்ள அவ்விரண்டிற்கும் அப்படியே செய்தான்.

யாத் 36:30. அப்படியே எட்டுப் பலகைகளும், அவைகளுடைய ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டிரண்டு பாதங்களாகப் பதினாறு வெள்ளிப்பாதங்களும் இருந்தது.

யாத் 36:31. சீத்திம் மரத்தால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

யாத் 36:32. வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மேல்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணினான்.

**யாத் 36:33. நடுத்தாழ்ப்பாள் ஒரு முனை தொடங்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தில் உருவப்பாயும்படி செய்தான்.**

**யாத் 36:34. பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினால் பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடினான்.**

கர்த்தருடைய வாசஸ்தலம் கூடாரமாகப் போடப்படுகிறது. இது கற்களினால் செய்யப்பட்ட கட்டிடமாகவோ அல்லது கேதுருமரங்களினால் செய்யப்பட்ட மாளிகையாகவோ போடப்படவில்லை. கர்த்தருடைய வாசஸ்தலம் மூடுதிரைகளினால் கூடாரமாகப் போடப்படுகிறது.

மோசே வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு மூடுதிரைகளையும் பண்ணுகிறார். ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருக்கிறது. பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருக்கிறது *(யாத் 36:14,15)*.

மோசே ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், மற்ற ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைத்து, இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டாக்கி, கூடாரத்தை ஒன்றாய் இணைத்துவிட ஐம்பது வெண்கலக் கொக்கிகளையும் உண்டாக்குகிறார் *(யாத் 36:16-18)*.

மோசே பதினொரு மூடுதிரைகளை பண்ணி, மேலும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலினால் கூடாரத்துக்கு ஒரு மூடியையும் அதின்மேல் போடத் தகசுத்தோலினால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுகிறார் *(யாத் 36:19)*.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை ஆராதிக்க வருகிறார்கள். கர்த்தருடைய வாசஸ்தலத்திற்குள் வருகிற இஸ்ரவேல் ஜனங்கள் வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்கி பாதுகாப்பாயிருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அவர்கள்மீது புயல்காற்று வீசி அவர்களை சேதப்படுத்தக்கூடாது என்றும் கர்த்தர் அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறார்.

"பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும்" *(ஏசா 4:6)*.

கர்த்தருடைய வாசஸ்தலத்தில் தங்கியிருக்கிறவர்கள் பாதுகாப்பாயிருப்பார்கள். புயலோ, மழையோ அவர்களை சேதப்படுத்தாது. கர்த்தருடைய பலத்த கரத்திற்குள்ளே அடங்கியிருப்பதே விசுவாசிகளாகிய நமக்கு பாதுகாப்பானது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்தில் பாதுகாப்பாயிருக்கிறது.

கர்த்தருடைய வாசஸ்தலம் கூடாரமாகயிருந்தாலும், அது உறுதியானதாகவும், பலமுள்ளதாகவும், நிலைத்து நிற்கக்கூடியதாகவும் இருக்கிறது. மோசே ஆசரிப்புக்கூடாரத்தைப் பலப்படுத்துவதற்கு பலகைகளைப் பயன்படுத்துகிறார். அந்தப் பலகைகளை இணைப்பதற்கு தாழ்ப்பாள்களைப் போடுகிறார்.

மோசே வாசஸ்தலத்துக்கு நிமிர்ந்துநிற்கும் பலகைகளையும் சீத்திம் மரத்தால் செய்கிறார். ஒவ்வொரு பலகையும் பத்துமுழநீளமும் ஒன்றரை முழ அகலமுமாயிருக்கிறது. ஒவ்வொரு பலகைக்கும் ஒன்றுக்கொன்று சமதூரமான இரண்டு கழுந்துகள் இருக்கிறது; வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் மோசே இப்படியே செய்கிறார் *(யாத் 36:20-22)*.

மோசே வாசஸ்தலத்திற்காகச் செய்யப்பட்ட பலகைகளில் தெற்கே தென்திசைக்கு இருபது பலகைகளை உண்டாக்கி, அந்த இருபது பலகைகளின் கீழே வைக்கும் நாற்பது வெள்ளிப் பாதங்களையும் உண்டுபண்ணுகிறார்; ஒரு பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களையும், மற்றப் பலகையின்கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கும் இரண்டு பாதங்களையும் பண்ணிவைத்து; வாசஸ்தலத்தின் மறுபக்கமாகிய வடபுறத்தில் இருபது பலகைகளையும், அவைகளுக்கு நாற்பது வெள்ளிப் பாதங்களையும் செய்கிறார் *(யாத் 36:23-25)*.

மோசே ஒரு பலகையின்கீழ் இரண்டு பாதங்களும், மற்றப் பலகையின்கீழ் இரண்டு பாதங்களும் செய்கிறார். வாசஸ்தலத்தின் மேல்புறத்திற்கு ஆறு பலகைகளையும், வாசஸ்தலத்தின் இருபக்கங்களிலுள்ள மூலைகளுக்கு இரண்டு பலகைகளையும் செய்கிறார். அவைகள் கீழே இசைக்கப்பட்டிருக்கிறது, மேலேயும் ஒரு வளையத்தினால் இசைக்கப்பட்டிருக்கிறது; மோசே இரண்டு மூலைகளிலுமுள்ள அவ்விரண்டிற்கும் அப்படியே செய்கிறார். அப்படியே எட்டுப் பலகைகளும், அவைகளுடைய ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டிரண்டு பாதங்களாகப் பதினாறு வெள்ளிப்பாதங்களும் இருக்கிறது (யாத் 36:26-30).

மோசே சீத்திம் மரத்தால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மேல்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணுகிறார். நடுத்தாழ்ப்பாள் ஒரு முனை தொடங்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தில் உருவப்பாயும்படி செய்கிறார். மோசே பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினால் பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடுகிறார் (யாத் 36:31-34).

## திரைச்சீலை
## யாத் 36:35-38

**யாத் 36:35. இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்யப்பட்டதும், விசித்திரவேலையாகிய கேருபீன்களுள்ளதுமான ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணி,**

**யாத் 36:36. அதற்குச் சீத்திம் மரத்தினால் நாலு தூண்களைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளின் கொக்கிகளைப் பொன்னினால் பண்ணி, அவைகளுக்கு நான்கு வெள்ளிப்பாதங்களை வார்ப்பித்தான்.**

**யாத் 36:37. கூடாரவாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்த சித்திரத் தையல்வேலையான ஒரு தொங்குதிரையையும்,**

**யாத் 36:38. அதின் ஐந்து தூண்களையும், அவைகளின் வளைவாணிகளையும் உண்டாக்கி, அவைகளின் குமிழ்களையும் வளையங்களையும் பொன்தகட்டால் மூடினான்; அவைகளின் ஐந்து பாதங்களும் வெண்கலமாயிருந்தது.**

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தையும், மகாபரிசுத்த ஸ்தலத்தையும் பிரிப்பதற்கு ஒரு திரைச்சீலை போடப்பட்டிருக்கிறது. இதற்காக மோசே இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்யப்பட்டதும், விசித்திர வேலையாகிய கேருபீன்களுள்ளதுமான ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணுகிறார் (யாத் 36:35).

மோசே அதற்குச் சீத்திம் மரத்தினால் நாலு தூண்களைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளின் கொக்கிகளைப் பொன்னினால் பண்ணி, அவைகளுக்கு நான்கு வெள்ளிப்பாதங்களை வார்ப்பிக்கிறார் (யாத் 35:36).

மகாபரிசுத்த ஸ்தலம் திரைச்சீலையினால் மூடப்பட்டிருக்கிறது. ஆகையினால் அதற்குள் வெளிச்சம் அதிகமாயிராமல் அது இருளாகயிருக்கும். ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை ஆராதிக்கிற வருகிற ஜனங்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கக்கூடாது. அவர்கள் தூரத்திலிருந்தே கர்த்தரை ஆராதிக்கவேண்டும்.

BELLWETHER INTERNATIONAL

# யாத்திராகமம் - விரிவுரை
# EXODUS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தருடைய கிருபாசனத்தை கிட்டிச்சேருகிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளமாட்டார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிற எல்லோரையும் தம்மிடத்தில் வருமாறு கிறிஸ்துவானவர் அன்போடு அழைக்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய சமுகத்தில் இருளிலிருப்பதில்லை. கர்த்தருடைய வேதம் நமக்கு தீபமாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறது.

திரைச்சீலையே ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலாக செய்யப்பட்டிருக்கிறது. மோசே கூடாரவாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்த சித்திரத் தையல்வேலையான ஒரு தொங்குதிரையையும், அதின் ஐந்து தூண்களையும், அவைகளின் வளைவாணிகளையும் உண்டாக்குகிறார். அவைகளின் குமிழ்களையும் வளையங்களையும் பொன்தகட்டால் மூடுகிறார்; அவைகளின் ஐந்து பாதங்களும் வெண்கலமாயிருக்கிறது (யாத் 36:37,38).

ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை ஆராதிக்கிற வருகிற இஸ்ரவேல் புத்திரராகிய சபையார், மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கக்கூடாது. அதற்குள்ளே பிரவேசிப்பதற்கு அவர்கள் தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார், கர்த்தருடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வாசலாகயிருக்கும் திரைச்சீலைக்கு அருகே கூடிவருவார்கள். அந்த வாசலைத் தாண்டி அவர்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக, தேவனுடைய கிருபாசனத்தண்டையிலே தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

## 37 அதிகாரம்

பெசலெயேல் ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளை உற்சாகமாய்ச் செய்கிறார். அவர் உடன்படிக்கைப்பெட்டியை உண்டுபண்ணுகிறார். அவர் கிருபாசனத்தையும், கேருபீன்களையும் உண்டுபண்ணுகிறார் (யாத் 37:1-9).

பெசலெயேல் சீத்திம் மரத்தால் சமுகத்தப்ப மேஜையை உண்டுபண்ணுகிறார் (யாத் 37:10-16). அவர் பசும்பொன்னினால் குத்துவிளக்கையும் உண்டாக்குகிறார் (யாத் 37:17-24). தூபபீடத்தை சீத்திம் மரத்தால் உண்டாக்கி அதை பசும்பொன்தகட்டால் மூடுகிறார் (யாத் 37:25-28).

பெசலெயேல் பரிசுத்த அபிஷேக தைலத்தையும், தூபவர்க்கத்தையும் உண்டுபண்ணுகிறார் (யாத் 37:29).

### உடன்படிக்கைப் பெட்டி யாத் 37:1-9

**யாத் 37:1. பெசலெயேல் சீத்திம் மரத்தினால் பெட்டியை உண்டுபண்ணினான்; அதின் நீளம் இரண்டரை முழமும் அதின் அகலம் ஒன்றரை முழமும் அதின் உயரம் ஒன்றரை முழமுமானது.**

**யாத் 37:2. அதை உள்ளும் புறம்பும் பசும்பொன் தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டாக்கி,**

**யாத் 37:3. அதற்கு நான்கு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு மூலைகளிலும் போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி வைத்து,**

**யாத் 37:4. சீத்திம் மரத்தினால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,**

**யாத் 37:5. அந்தத் தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படி, அவைகளைப் பெட்டியின் பக்கங்களில் இருக்கும் வளையங்களிலே பாய்ச்சினான்.**

**யாத் 37:6. கிருபாசனத்தையும் பசும்பொன்னினால் பண்ணினான்; அது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமானது.**

**யாத் 37:7. தகடாய் அடிக்கப்பட்ட பொன்னினால் இரண்டு கேருபீன்களையும் உண்டாக்கி, கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலே,**

**யாத் 37:8. ஒருபுறத்து ஓரத்தில் ஒரு கேருபீனும் மறுபுறத்து ஓரத்தில் மற்றக் கேருபீனுமாக அந்தக் கேருபீன்களைக் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏக வேலைப்பாடாகவே பண்ணினான்.**

**யாத் 37:9. அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும், ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாயிருந்தது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்கிக் கொண்டிருந்தது.**

ஆசரிப்புக்கூடாரத்தில் செய்யவேண்டிய ஒவ்வொரு வேலையையும் கர்த்தர் மோசேக்கு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அந்த வேலைகளைப்பற்றி ஏற்கெனவே பல அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எழுதி வைத்திருக்கிறார். மற்ற அதிகாரங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள், இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே, பிரத்தியேகமாக இஸ்ரவேல் புத்திரருக்கே எழுதி வைத்திருக்கிறார். கர்த்தருடைய பிரமாணங்களை வாசிப்பதினாலும், அதை வாசிக்க கேட்பதினாலும் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான நன்மைகள் உண்டாகும். அவர்கள் தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டை இதன் மூலமாக பெற்றுக்கொள்வார்கள். கர்த்தர் தம்முடைய தெய்வீக காரியங்களையும், பரிசுத்தமான பொக்கிஷங்களையும், இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

ஆகையினால் கர்த்தருடைய வார்த்தை இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியும் மறுபடியுமாக சொல்லப்படுகிறது. கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் மகிமையையும், அவருடைய சுவிசேஷத்தின் மேன்மையையும், விசுவாசிகளாகிய நாம் அடிக்கடி தியானிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளே நமக்கு ஆவிக்குரிய போஜனமாயிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறுவதற்கும், நம்முடைய விசுவாசத்தில் நாம் உறுதியாய் நிலைத்து நிற்பதற்கும், கர்த்தருடைய வார்த்தைகளை அடிக்கடி தியானிப்பது, நமக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும்.

ஆசரிப்புக்கூடாரத்தை செய்ய வேண்டிய விதத்தைப்பற்றியும், அதில் செய்து வைக்கவேண்டிய பரிசுத்தமான பணிமுட்டுக்களைப்பற்றியும், கர்த்தர் மோசேக்கு தெளிவாக சொல்லியிருக்கிறார். கர்த்தர் மோசேக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியைக் காண்பித்தார். கர்த்தரிடத்திலிருந்து தான் கேட்ட செய்திகளை, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு அப்படியே சொல்லியிருக்கிறார்.

ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்கிறவர்கள், கர்த்தர் மோசேக்கு காண்பித்த மாதிரியின்படியே, அதை செய்யவேண்டும். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியை ஏற்கெனவே சொல்லியிருந்தாலும், அந்த மாதிரியின் பிரதியை இப்போது அவர்களுக்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். மோசே சொன்ன ஆசரிப்புக்கூடாரத்தின் இரண்டு மாதிரிகளையும் இஸ்ரவேல் புத்திரர் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். தாங்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்காக செய்த வேலைகள், கர்த்தர் சொன்ன மாதிரியின் பிரகாரம் இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்த்து, உறுதிபண்ணிக்கொள்ளலாம்.

மோசே தனக்கு சொன்ன பிரகாரம் பெசலெயேல் சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியை உண்டுபண்ணுகிறார். இது கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி. இந்த வசனப்பகுதியில், கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி செய்யப்பட்டிருக்கிற விதத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

பெசலெயேல் சீத்திம் மரத்தினால் பெட்டியை உண்டுபண்ணுகிறார்; அதின் நீளம் இரண்டரை முழமும் அதின் அகலம் ஒன்றரை முழமும் அதின் உயரம் ஒன்றரை முழமுமானது. அதை உள்ளும் புறம்பும் பசும்பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டாக்குகிறார் *(யாத் 37:1,2)*.

பெசலெயேல் அந்தப் பெட்டிக்கு நான்கு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு மூலைகளிலும் போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி தைத்து, சீத்திம் மரத்தினால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அந்தத் தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படி, அவைகளைப் பெட்டியின் பக்கங்களில் இருக்கும் வளையங்களிலே பாய்ச்சுகிறார் *(யாத் 37:3-5)*.

ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி மிகவும் விசேஷமானது. அது மேன்மையும் மகிமையுமானது. உடன்படிக்கைப் பெட்டியின்மீது கிருபாசனமும், கேருபீன்களும் வைக்கப்பட்டிருக்கிறது. பெசலெயேல் இவற்றை செய்த விதம்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

பெசலெயேல் கிருபாசனத்தையும் பசும்பொன்னினால் பண்ணுகிறார். அது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமானது *(யாத் 37:6)*.

பெசலெயேல் தகடாய் அடிக்கப்பட்ட பொன்னினால் இரண்டு கேருபீன்களையும் உண்டாக்கி, கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலே, ஒருபுறத்து ஓரத்தில் ஒரு கேருபீனும் மறுபுறத்து ஓரத்தில் மற்றக் கேருபீனுமாக அந்தக் கேருபீன்களைக் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏக வேலைப்பாடாகவே பண்ணுகிறார் (யாத் 37:7,8).

அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும், ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாயிருக்கிறது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்கிக் கொண்டிருக்கிறது (யாத் 37:9).

உடன்படிக்கைப்பெட்டியும், கிருபாசனமும், கேருபீன்களும் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறது. இவை பரிசுத்தமான தேவனுடைய மகிமைக்கு அடையாளம்.

## மேஜை

## யாத் 37:10-24

**யாத் 37:10. மேஜையையும் சீத்திம் மரத்தால் பண்ணினான்; அது இரண்டு முழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமானது.**

**யாத் 37:11. அதைப் பசும்பொன் தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டாக்கி,**

**யாத் 37:12. சுற்றிலும் அதற்கு நான்கு விரற்கடையான சட்டத்தையும், அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன் திரணையையும் உண்டுபண்ணி,**

**யாத் 37:13. அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு கால்களுக்கு இருக்கும் நாலு மூலைகளிலும் தைத்தான்.**

**யாத் 37:14. அந்த வளையங்கள் மேஜையைச் சுமக்கும் தண்டுகளைப் பாய்ச்சும் இடங்களாயிருக்கும்படி சட்டத்தின் அருகே இருந்தது.**

**யாத் 37:15. மேஜையைச் சுமக்கும் அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தால் பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,**

**யாத் 37:16. மேஜையின் மேலிருக்கும் பாத்திரங்களாகிய அதின் பணிமுட்டுகளையும், அதின் தட்டுகளையும், தூபக்கரண்டிகளையும், அதின் பானபலி கரகங்களையும், மூடுகிறதற்கான அதின் கிண்ணங்களையும் பசும்பொன்னினால் உண்டாக்கினான்.**

**யாத் 37:17. குத்துவிளக்கையும் பசும்பொன்னினால் அடிப்புவேலையாய் உண்டாக்கினான்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது.**

**யாத் 37:18. குத்துவிளக்கின் ஒரு பக்கத்தில் மூன்று கிளைகளும் அதின் மறுபக்கத்தில் மூன்று கிளைகளுமாக அதின் பக்கங்களில் ஆறு கிளைகள் செய்யப்பட்டது.**

**யாத் 37:19. ஒவ்வொரு கிளையிலே வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான மூன்று மொக்குகளும் ஒரு பழமும் ஒரு பூவும் இருந்தது; குத்துவிளக்கில் செய்யப்பட்ட ஆறு கிளைகளிலும் அப்படியே இருந்தது.**

**யாத் 37:20. விளக்குத்தண்டில் வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகளும் பழங்களும் பூக்களும் இருந்தது.**

**யாத் 37:21. அதில் செய்யப்பட்ட இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும் இருந்தது; விளக்குத்தண்டில் செய்யப்பட்ட ஆறுகிளைகளுக்கும் அப்படியே இருந்தது.**

**யாத் 37:22. அவைகளின் பழங்களும் அவைகளின் கிளைகளும் பசும்பொன்னினால் ஒரே அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டது.**

**யாத் 37:23. அதின் ஏழு அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும் பசும்பொன்னினால் செய்தான்.**

**யாத் 37:24. அதையும் அதின் பணிமுட்டுகள் யாவையும் ஒரு தாலந்து பசும்பொன்னினால் செய்தான்.**

பெசலெயேல் சமுகத்தப்பங்களை வைப்பதற்காக ஒரு மேஜையை உண்டுபண்ணுகிறார். இந்த மேஜையில் சமுகத்தப்பங்கள் எப்போதும் வைக்கப்பட்டிருக்கும். கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாதுகாத்து பராமரிக்கிறவர். கர்த்தருடைய வீட்டிலே, அவருடைய பந்தியிலே எப்போதும் போஜனம் வைக்கப்பட்டிருக்கும்.

இந்தப் பிரபஞ்சம் கர்த்தருடைய கூடாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் கர்த்தர் தமது தெய்வீக பராமரிப்பினால் போஷிக்கிறார். இந்த உலகம் முழுவதிலும், எல்லா ஜீவராசிகளும் போஜனம் பண்ணுவதற்காக, கர்த்தருடைய பந்தி ஆயத்தமாயிருக்கிறது. அவர் மாம்சமான யாவருக்கும் போஜனம் கொடுக்கிறார்.

கர்த்தருடைய சபையானது, அவருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய கிருபை எல்லா விசுவாசிகளுக்கும் போதுமானதாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய சபையிலே கிருபையின் பந்தியை ஆயத்தமாய் வைத்திருக்கிறார். கர்த்தருடைய மேஜையில் விசுவாசிகளுக்கு ஜீவஅப்பம் ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் சுவிசேஷத்தின் காலத்திலிருக்கிறோம். பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் நியாயப்பிரமாணத்தின் காலத்தில் இருந்தார்கள். அக்காலத்தில், ஆசரிப்புக்கூடாரத்திலும், தேவாலயத்திலும் மேஜை விரிக்கப்பட்டிருந்தது. அதிலே சமுகத்தப்பங்கள் வைக்கப்பட்டிருந்தது. மேஜையிலுள்ள அப்பங்கள் பார்ப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒருவரும் புசிக்கக்கூடாது. இந்த அப்பங்கள் மேஜையிலிருந்து எடுக்கப்பட்ட பின்பு, ஆசாரியர் மாத்திரம் இதைப் புசிக்கலாம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு பந்தியை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். புதிய உடன்படிக்கையின் பிரகாரமாக விசுவாசிகள் எல்லோரும் கர்த்தருடைய பந்தியில் போஜனம்பண்ணும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். தம்முடைய பந்தியில் போஜனம்பண்ண வருமாறு கர்த்தர் நம்மை அன்போடு அழைக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், நியாயப்பிரமாணத்தின்படி, மேஜையில் சமுகத்தப்பம் வைக்கப்பட்டிருந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் அந்த அப்பத்தை தூரத்திலிருந்து பார்த்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், சுவிசேஷத்தின் பிரகாரம், விசுவாசிகளாகிய நாம், கர்த்தருடைய பந்தியை தூரத்திலிருந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. நாம் கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறலாம். தம்மோடு போஜனம்பண்ண வருமாறு கர்த்தரும் நம்மை அன்போடு அழைக்கிறார்.

ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்படும் மேஜை செய்யப்படுகிற விதம்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பெசலெயேல் பெட்டியை சீத்திம் மரத்தால் பண்ணியதுபோல, மேஜையையும் அந்த மரத்தால் பண்ணுகிறார். அது இரண்டு முழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமானது (யாத் 37:10).

பெசலெயேல் அந்த மேஜையை பசும்பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டாக்கி, சுற்றிலும் அதற்கு நான்கு விரற்கடையான சட்டத்தையும், அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன் திரணையையும் உண்டுபண்ணி, அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு கால்களுக்கு இருக்கும் நாலு மூலைகளிலும் தைக்கிறார் (யாத் 37:11-13).

அந்த வளையங்கள் மேஜையைச் சுமக்கும் தண்டுகளைப் பாய்ச்சும் இடங்களாயிருக்கும்படி சட்டத்தின் அருகே இருக்கிறது. பெசலெயேல் மேஜையைச் சுமக்கும் அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தால் பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, மேஜையின் மேலிருக்கும் பாத்திரங்களாகிய அதின் பணிமுட்டுகளையும், அதின் தட்டுகளையும், தூபக்கரண்டிகளையும், அதின் பானபலி கரகங்களையும், மூடுகிறதற்கான அதின் கிண்ணங்களையும் பசும்பொன்னினால் உண்டாக்குகிறார் (யாத் 37:14-16).

பெசலெயேல் குத்துவிளக்கையும் பசும்பொன்னினால் அடிப்புவேலையாய் உண்டாக்குகிறார்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்பட்டிருக்கிறது (யாத் 37:17).

விசுவாசிகளாகிய நமக்கு பரிசுத்த வேதாகமமே பசும்பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்குக்கு ஒப்பாயிருக்கிறது. "அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது" (சங் 19:10).

ஆசரிப்புக்கூடாரத்தில் குத்துவிளக்கின் வெளிச்சம், கூடாரம் முழுவதற்கும் வெளிச்சத்தைத் தரும். குத்துவிளக்கின் ஒரு பக்கத்தில் மூன்று கிளைகளும் அதின் மறுபக்கத்தில் மூன்று கிளைகளுமாக அதின் பக்கங்களில் ஆறு கிளைகள் செய்யப்படுகிறது. ஒவ்வொரு கிளையிலே வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான மூன்று மொக்குகளும் ஒரு பழமும் ஒரு பூவும் இருந்தது; குத்துவிளக்கில் செய்யப்பட்ட ஆறு கிளைகளிலும் அப்படியே இருக்கிறது (யாத் 37:18,19).

விளக்குத்தண்டில் வாதுமைக்கொட்டைக்கு ஒப்பான நாலு மொக்குகளும் பழங்களும் பூக்களும் இருக்கிறது. அதில் செய்யப்பட்ட இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு பழமும் இருக்கிறது; விளக்குத்தண்டில் செய்யப்பட்ட ஆறுகிளைகளுக்கும் அப்படியே இருக்கிறது (யாத் 37:20,21).

அவைகளின் பழங்களும் அவைகளின் கிளைகளும் பசும்பொன்னினால் ஒரே அடிப்பு வேலையாய்ச் செய்யப்படுகிறது. பெசலெயேல் அதின் ஏழு அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும் பசும்பொன்னினால் செய்கிறார். அவர் அதையும் அதின் பணிமுட்டுகள் யாவையும் ஒரு தாலந்து பசும்பொன்னினால் செய்கிறார் (யாத் 37:22-24).

## தூபபீடம்
## யாத் 37:25-28

**யாத் 37:25. தூபபீடத்தையும் சீத்திம் மரத்தினால் உண்டாக்கினான்; அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமான சதுரமும் இரண்டு முழ உயரமுமாய் இருந்தது; அதின் கொம்புகள் அதனோடே ஏகவேலைப்பாடாயிருந்தது.**

**யாத் 37:26. அதின் மேற்புறத்தையும், அதின் சுற்றுப்புறத்தையும், அதின் கொம்புகளையும், பசும்பொன் தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன் திரணையை உண்டுபண்ணி,**

**யாத் 37:27. அந்தத் திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களில் இருக்கும் இரண்டு மூலைகளிலும் இரண்டு பொன்வளையங்களைப் பண்ணி, அதைச் சுமக்கும் தண்டுகளைப் பாய்ச்சும் இடங்களாகத் தைத்து,**

**யாத் 37:28. சீத்திம் மரத்தால் அந்தத் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடினான்.**

தூபபீடத்தில் அன்றாடம் சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க்கம் ஏற்றப்படும். இது பரிசுத்தவான்களின் ஜெபங்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுவதற்கும் அடையாளமாயிருக்கிறது.

பெசலெயேல் தூபபீடத்தையும் சீத்திம் மரத்தினால் உண்டாக்குகிறார்; அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமான சதுரமும் இரண்டு முழ உயரமுமாய் இருக்கிறது; அதின் கொம்புகள் அதனோடே ஏகவேலைப்பாடாயிருக்கிறது (யாத் 37:25).

தூபபீடம் 18 அங்குலம் சதுரமானது. இதன் உயரம் 36 அங்குலம். ஒவ்வொரு முனையிலும் ஒவ்வொரு கொம்பாக நான்கு கொம்புகள் இருக்கும். அது அமைப்பில் பெரிய வெண்கலப் பலிபீடத்தைப் போன்றிருக்கும். (யாத் 27:1-8).

பெசலெயேல் அதின் மேற்புறத்தையும், அதின் சுற்றுப்புறத்தையும், அதின் கொம்புகளையும், பசும்பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டுபண்ணி, அந்தத் திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களில் இருக்கும் இரண்டு மூலைகளிலும் இரண்டு பொன்வளையங்களைப் பண்ணி, அதைச் சுமக்கும் தண்டுகளைப் பாய்ச்சும் இடங்களாகத் தைத்து, சீத்திம் மரத்தால் அந்தத் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடுகிறார் (யாத் 37:26-28).

தூபபீடம், அதின் கொம்புகள், திரணை, வளையங்கள், தண்டுகள் ஆகியவையெல்லாம் பொன்னால் செய்யப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பயன்படுத்தப்படும் பரிசுத்தமான பணிமுட்டுக்களாகும். பொதுவாக மகாபரிசுத்த ஸ்தலத்திலே பயன்படுத்தப்படும் பணிமுட்டுக்கள் பசும்பொன்னாலும், மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே பயன்படுத்தப்படும் பணிமுட்டுக்கள் வெண்கலத்தாலும் செய்யப்பட்டிருக்கிறது.

## அபிஷேக தைலம்
## யாத் 37:29

**யாத் 37:29. பரிசுத்த அபிஷேகதைலத்தையும், சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், தைலக்காரன் வேலைக்கு ஒப்பாக உண்டுபண்ணினான்.**

தூபபீடத்தில் தூபவர்க்கம் ஏற்றப்படும். அபிஷேக தைலத்தையும், தூபவர்க்கத்தையும் உண்டுபண்ணவேண்டிய விதத்தைப்பற்றி கர்த்தர் மோசேக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே பெசலெயேலுக்கு சொல்லியிருக்கிறார். பெசலெயேல் கர்த்தருடைய பிரமாணத்தின்படி அபிஷேக தைலத்தையும், தூபவர்க்கத்தையும் உண்டுபண்ணுகிறார் (யாத் 37:29).

## 38 அதிகாரம்

தகனபலிபீடத்தை உண்டாக்குவதுபற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 38:1-7). பெசலெயேல் வெண்கலத்தொட்டியையும் அதின் வெண்கலப்பாதத்தையும் உண்டாக்குகிறார் (யாத் 38:8).

பெசலெயேல் தொங்குதிரைகளை செய்கிறார். இவை ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தை மூடுவதற்காக செய்யப்பட்டிருக்கிறது (யாத் 38:9-20).

ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளுக்கு காணிக்கையாக கொடுக்கப்பட்ட பொன், வெள்ளி வெண்கலம் ஆகியவற்றின் விவரம் (யாத் 38:21-31).

### தகனபலிபீடம்
### யாத் 38:1-7

**யாத் 38:1. தகனபலிபீடத்தையும் சீத்திம் மரத்தால் உண்டாக்கினான்; அது ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமும் சதுரவடிவும் மூன்று முழ உயரமுமானது.**

**யாத் 38:2. அதின் நாலு மூலைகளிலும் அதனோடு ஏகமாயிருக்கிற அதின் நாலு கொம்புகளையும் உண்டாக்கி, அதை வெண்கலத் தகட்டால் மூடி,**

**யாத் 38:3. அந்தப் பீடத்தின் சகல பணிமுட்டுகளாகிய சாம்பல் எடுக்கத்தக்க சட்டிகளையும், கரண்டிகளையும், கிண்ணிகளையும், முள்துறடுகளையும், நெருப்புச் சட்டிகளையும் உண்டாக்கினான்; அதின் பணிமுட்டுகளையெல்லாம் வெண்கலத்தினால் பண்ணினான்.**

**யாத் 38:4. வலைப்பின்னல்போன்ற ஒரு வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்திற்கு உண்டாக்கி, அதை அந்தப் பீடத்தின் சுற்றுக்குக் கீழே பாதி உயரத்தில் இருக்கத்தக்கதாக வைத்து,**

**யாத் 38:5. அந்த வெண்கலச் சல்லடையின் நாலு மூலைகளிலும் தண்டுகளைப் பாய்ச்சுகிறதற்கு நாலு வளையங்களை வார்ப்பித்து,**

**யாத் 38:6. அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தால் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்டால் மூடி,**

**யாத் 38:7. பலிபீடத்தை அவைகளால் சுமக்கத்தக்கதாக, அதின் பக்கங்களிலுள்ள வளையங்களில் பாய்ச்சினான்; பலிபீடத்தை உள்வெளிவிட்டுப் பலகைகளினால் செய்தான்.**

பெசலெயேல் பொன்வேலைகளையெல்லாம் செய்து முடிக்கிறார். இவை விலையேறப்பெற்றது. பொன்னால் செய்யப்பட்ட பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம், ஆசரிப்புக்கூடாரத்தில், மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரால் இந்தப் பணிமுட்டுக்களைப் பார்க்க முடியாது. அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரங்களில் இருப்பார்கள். மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே இருக்கும் பொன்னால் செய்யப்பட்ட பரிசுத்த பணிமுட்டுக்களை, அவர்கள் எட்டிப் பார்க்கவேண்டும். அவர்களால் அந்தப் பணிமுட்டுக்களுக்கு அருகாமையில் வரமுடியாது.

ஆசரிப்புக்கூடாரத்திலே, இஸ்ரவேல் புத்திரர் கூடிவரும் ஸ்தலமாகிய பிரகாரத்திலே, வைக்கவேண்டிய பணிமுட்டுக்களையும் பெசலெயேல் செய்கிறார். இவையெல்லாம் வெண்கலத்தினால் செய்யப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இந்தப் பணிமுட்டுக்களுக்கு அருகாமையில் வந்து, இவற்றைப் பார்க்கலாம்.

பெசலெயேல் தகனபலிபீடத்தையும், கடல் தொட்டியையும் வெண்கலத்தால் செய்கிறார். தகனபலிபீடத்தில் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது. பெசலெயேல் தகனபலிபீடத்தையும் சீத்திம் மரத்தால் உண்டாக்குகிறார்; அது ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமும் சதுரவடிவும் மூன்று முழ உயரமுமானது (யாத் 38:1).

பொன்பலிபீடத்தைப் போல வெண்கலப் பலிபீடமும் 7.5 அடி சதுரமானது. உயரம் 4.5 அடி. வெண்கலப் பலிபீடம் சதுரமாக இருக்கிறது. அதற்குள்ளே துவாரம் இருக்கிறது (லேவி 27:1-8).

பெசலெயேல் தகனபலிபீடத்தின் நாலு மூலைகளிலும் அதனோடு ஏகமாயிருக்கிற அதின் நாலு கொம்புகளையும் உண்டாக்கி, அதை வெண்கலத் தகட்டால் மூடுகிறார். அவர் அந்தப் பீடத்தின் சகல பணிமுட்டுகளாகிய சாம்பல் எடுக்கத்தக்க சட்டிகளையும், கரண்டிகளையும், கிண்ணிகளையும், முள்துறடுகளையும், நெருப்புச் சட்டிகளையும் உண்டாக்குகிறார்; அதின் பணிமுட்டுகளையெல்லாம் வெண் கலத்தினால்பண்ணுகிறார் (யாத் 38:2,3).

பெசலெயேல் வலைப்பின்னல்போன்ற ஒரு வெண்கலச் சல்லடையையும் பலி பீடத்திற்கு உண்டாக்கி, அதை அந்தப் பீடத்தின் சுற்றுக்குக் கீழே பாதி உயரத்தில் இருக்கத்தக்கதாக வைக்கிறார். அவர் அந்த வெண்கலச் சல்லடையின் நாலு மூலைகளிலும் தண்டுகளைப் பாய்ச்சுகிறதற்கு நாலு வளையங்களை வார்ப்பிக்கிறார் (யாத் 38:4,5).

பெசலெயேல் அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தால் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்டால் மூடி, பலிபீடத்தை அவைகளால் சுமக்கத்தக்கதாக, அதின் பக்கங்களிலுள்ள வளையங்களில் பாய்ச்சுகிறார்; பலிபீடத்தை உள்வெளிவிட்டுப் பலகைகளினால் செய்கிறார் (யாத் 38:6,7).

## தொட்டி
## யாத் 38:8

**யாத் 38:8. ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூட்டம் கூட்டமாய்க் கூடின ஸ்திரீகளின் தர்ப்பணங்களாலே, வெண்கலத் தொட்டியையும் அதின் வெண்கலப் பாதத்தையும் உண்டாக்கினான்.**

பெசலெயேல் ஒரு வெண்கல கடல்தொட்டியையும், அதின் வெண்கல பாதத்தையும் உண்டாக்குகிறார். தொட்டியில் தண்ணீர் சேகரிக்கப்பட்டிருக்கும். ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம் செய்ய பிரவேசிக்கும்போது, அவர்கள் தொட்டியிலுள்ள தண்ணீரினால் தங்களை கழுவிக்கொள்வார்கள்.

வெண்கலத்தொட்டி ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூட்டம் கூட்டமாய்க் கூடின ஸ்திரீகளின் தர்ப்பணங்களாலே செய்யப்பட்டிருக்கிறது. தர்ப்பணங்கள் என்னும் வார்த்தைக்கு கண்ணாடிகள் என்று பொருள். அக்காலத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியை நல்ல தரமான வெண்கலத்தில் செய்வது வழக்கம்.

ஸ்திரீகள் தங்களை அழகுபடுத்துவதற்கும், தங்களுடைய அழகைப் பார்த்து ரசிப்பதற்கும் தர்ப்பணங்களை பயன்படுத்தினார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் புருஷரைப்போல, ஸ்திரீகளும் கர்த்தரிடத்தில் பக்திவைராக்கியமாயிருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் புருஷர்கள் கூடிவருவதுபோல, ஸ்திரீகளும் கூட்டம் கூட்டமாய்க் கூடிவருகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், தேவாலயத்தில் தங்கியிருந்து இரவும் பகலும் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்த அன்னாளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்" (லூக் 2:36,37).

இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஸ்திரீகள் தங்கள் கைகளில் தர்ப்பணங்களை வைத்திருப்பது வழக்கம். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்து வேலைக்கு தங்களிடத்திலுள்ள தர்ப்பணங்களையே காணிக்கையாக கொடுக்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் பரிசுத்த பணிமுட்டுக்களை செய்வதற்கு வெண்கலம் தேவைப்படுகிறது. கூடாரத்தின் வாசலில் கூட்டம் கூடியிருக்கிற ஸ்திரீகள், தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக தர்ப்பணங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் திருப்பணிக்கு, தங்களுடைய தர்ப்பணங்களை காணிக்கையாகக் கொடுக்கிறார்கள்.

தர்ப்பணங்கள் இல்லாமல் தங்களை அழகுபடுத்துவது ஸ்திரீகளுக்கு மிகவும் கடினமாயிருக்கும். ஆனாலும் இந்த ஸ்திரீகளுக்கு தங்களுடைய சொந்த தேவையைவிட, ஆசரிப்புக்கூடாரத்தின் தேவையே மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. தர்ப்பணங்கள் அதிக தரமுள்ள வெண்கலத்தினால் செய்யப்பட்டவை. பெசலெயேல் ஸ்திரீகளின் தர்ப்பணங்களினால் வெண்கல தொட்டியையும், அதின் வெண்கல பாதத்தையும் உண்டாக்குகிறார்.

ஸ்திரீகளின் தர்ப்பணங்களெல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டு, வெண்கலத் தொட்டியாக உண்டாக்கப்பட்டிருக்கலாம். அல்லது பெசலெயேல் ஸ்திரீகளின் தர்ப்பணங்களை ஒன்றாய்ச் சேர்த்து, அவற்றை உருக்கி, ஒரு தொட்டியாக வார்த்திருக்கலாம்.

## தொங்குதிரைகள் யாத் 38:9-20

**யாத் 38:9. பிராகாரத்தையும் உண்டுபண்ணினான். தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் நெய்த நூறு முழ நீளமான தொங்குதிரைகளைச் செய்தான்.**

**யாத் 38:10. அவைகளின் தூண்கள் இருபது; அவைகளின் வெண்கலப் பாதங்கள் இருபது; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளி.**

**யாத் 38:11. வடபக்கத்துத் தொங்குதிரைகள் நூறு முழம்; அவைகளின் தூண்கள் இருபது; அவைகளின் வெண்கலப் பாதங்கள் இருபது; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளி.**

**யாத் 38:12. மேற்பக்கத்துத் தொங்குதிரைகள் ஐம்பது முழம்; அவைகளின் தூண்கள் பத்து; அவைகளின் பாதங்கள் பத்து; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளி.**

**யாத் 38:13. சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்துத் தொங்குதிரைகள் ஐம்பது முழம்.**

**யாத் 38:14. ஒருபுறத்துத் தொங்குதிரைகள் பதினைந்து முழம்; அவைகளின் தூண்கள் மூன்று; அவைகளின் பாதங்கள் மூன்று.**

**யாத் 38:15. பிராகாரவாசலின் ஒருபுறத்துக்குச் சரியாக மறுபுறத்திலும் தொங்குதிரைகள் பதினைந்து முழம்; அவைகளின் தூண்கள் மூன்று; அவைகளின் பாதங்கள் மூன்று.**

**யாத் 38:16. சுற்றுப்பிராகாரத்துத் தொங்குதிரைகளெல்லாம் மெல்லிய பஞ்சுநூலால் நெய்யப்பட்டிருந்தது.**

**யாத் 38:17. தூண்களின் பாதங்கள் வெண்கலம்; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளி; அவைகளின் குமிழ்களை மூடிய தகடும் வெள்ளி; பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளிப்பூண்கள் போடப்பட்டவைகளுமாயிருந்தது.**

**யாத் 38:18. பிராகார வாசலின் தொங்குதிரை இளநீல நூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்யப்பட்ட விசித்திரத்தையல் வேலையாயிருந்தது; அதின் நீளம் இருபது முழம், அதின் அகலமும் உயரமும் பிராகாரத்தின் தொங்குதிரைகளுக்குச் சரியாய் ஐந்து முழம்.**

**யாத் 38:19. அவைகளின் தூண்கள் நாலு; அவைகளின் வெண்கலப் பாதங்கள் நாலு; அவைகளின் கொக்கிகள் வெள்ளி; அவைகளின் குமிழ்களை மூடிய தகடும் அவைகளின் பூண்களும் வெள்ளி.**

**யாத் 38:20. வாசஸ்தலத்துக்கும் பிராகாரத்துக்கும் சுற்றிலும் இருந்த முளைகளெல்லாம் வெண்கலம்.**

ஆசரிப்புக்கூடாரத்திற்கு கற்களினாலோ அல்லது செங்கல்களினாலோ சுவர்கள் கட்டியெழுப்பப்படவில்லை. தொங்குதிரைகளே கூடாரத்திற்கு மறைவாயிருக்கிறது. பெசலெயேல் ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தையும் உண்டுபண்ணுகிறார்.

வாசஸ்தலத்திற்கு பிரகாரத்தை உண்டுபண்ணவேண்டுமென்று கர்த்தர் மோசேக்கு ஏற்கெனவே கட்டளை கொடுத்திருக்கிறார் (யாத் 27:9-18). கர்த்தர் தனக்கு சொன்ன மாதிரியை மோசே பெசலெயேலுக்கு சொல்லுகிறார். மோசே தனக்கு கட்டளையிட்ட பிரகாரம், பெசலெயேல் ஆசரிப்புக்கூடாரத்திற்கு பிரகாரத்தை உண்டுபண்ணுகிறார்.

பெசலெயேல் தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் நெய்த நூறு முழ நீளமான தொங்குதிரைகளைச் செய்கிறார் (யாத் 38:9).

வெளிப்பிராகாரத்தின் நீளம் 150 அடி. அகலம் 75 அடி. (யாத் 38:9,11-13). (யாத் 27:9-15). தொங்குதிரைகள் 22.5 அடி அகலம். (யாத் 38:14-15). (யாத் 27:9). பிராகார வாசலின் தொங்குதிரை (யாத் 27:16-17). நீளம் 30 அடியாகவும் உயரம் 7.5 அடியாகவும் இருக்கிறது.

தொங்குதிரைகளின் தூண்கள் இருபது; அவைகளின் வெண்கலப் பாதங்கள் இருபது; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளி. வடபக்கத்துத் தொங்குதிரைகள் நூறு முழம்; அவைகளின் தூண்கள் இருபது; அவைகளின் வெண்கலப் பாதங்கள் இருபது; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளி. மேற்பக்கத்துத் தொங்குதிரைகள் ஐம்பது முழம்; அவைகளின் தூண்கள் பத்து; அவைகளின் பாதங்கள் பத்து; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளி (யாத் 38:10-12).

சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்துத் தொங்குதிரைகள் ஐம்பது முழம். ஒருபுறத்துத் தொங்குதிரைகள் பதினைந்து முழம்; அவைகளின் தூண்கள் மூன்று; அவைகளின் பாதங்கள் மூன்று. பிராகாரவாசலின் ஒருபுறத்துக்குச் சரியாக மறுபுறத்திலும் தொங்குதிரைகள் பதினைந்து முழம்; அவைகளின் தூண்கள் மூன்று; அவைகளின் பாதங்கள் மூன்று (யாத் 38:13-15).

சுற்றுப்பிராகாரத்துத் தொங்குதிரைகளெல்லாம் மெல்லிய பஞ்சுநூலால் நெய்யப்பட்டிருந்தது. தூண்களின் பாதங்கள் வெண்கலம்; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளி; அவைகளின் குமிழ்களை மூடிய தகடும் வெள்ளி; பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளிப்பூண்கள் போடப்பட்டவைகளுமாயிருக்கிறது (யாத் 38:16,17).

பிராகார வாசலின் தொங்குதிரை இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்யப்பட்ட விசித்திரத்தையல் வேலையாயிருக்கிறது; அதின் நீளம் இருபது முழம், அதின் அகலமும் உயரமும் பிராகாரத்தின் தொங்குதிரைகளுக்குச் சரியாய் ஐந்து முழம் (யாத் 38:18).

பிரகார வாசலின் தொங்குதிரைகளின் தூண்கள் நாலு; அவைகளின் வெண்கலப் பாதங்கள் நாலு; அவைகளின் கொக்கிகள் வெள்ளி; அவைகளின் குமிழ்களை மூடிய தகடும் அவைகளின் பூண்களும் வெள்ளி. வாசஸ்தலத்துக்கும் பிராகாரத்துக்கும் சுற்றிலும் இருந்த முளைகளெல்லாம் வெண்கலம் (யாத் 38:19,20).

ஆசரிப்புக்கூடாரம் பழைய ஏற்பாட்டுக்காலத்து சபைக்கு அடையாளமாயிருக்கிறது. இது சுற்றிலும் வேலியடைக்கப்பட்ட ஒரு தோட்டம் போல இருக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை ஆராதிக்கிற வருகிறவர்கள், வாசஸ்தலத்தின் பிரகாரத்திலிருந்து கர்த்தரை ஆராதிப்பார்கள். அவர்கள் இருக்கிற பிரகாரத்தைச் சுற்றிலும் தொங்குதிரைகள் போடப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்து சபை இஸ்ரவேல் புத்திரராகிய சபையாருக்கு மாத்திரமே உரியது. இஸ்ரவேல் ஜாதியாரை தவிர, புறஜாதியாரெல்லாம், இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாக இருந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்கு அந்நியராயிருந்தார்கள். பழைய ஏற்பாட்டுக்காலம் ஆசரிப்புக்கூடாரத்தின் காலமாகும்.

ஆசரிப்புக்கூடாரம் நிலையானதல்ல. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பிரயாணம்பண்ணும்போது, தங்களோடுகூட ஆசரிப்புக்கூடாரத்தையும் பேர்த்தெடுத்துக்கொண்டு போவார்கள்.

காலம் நிறைவேறியபோது, புறஜாதியாரும் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை ஆராதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். அப்போது கூடாரத்தின் இடம் விசாலமாக்கப்பட்டது. வாசஸ்தலங்களின் தொங்குதிரைகள் விரிவாக்கப்பட்டது. கூடாரத்தின் கயிறுகள் நீளமாக்கப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்திலே புறஜாதியாருக்கும் இடம் இருக்கும் வண்ணமாக, ஆசரிப்புக்கூடாரத்தின் இடம் விசாலமாக்கப்பட்டது.

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்" (ஏசா 54:2,3).

## காணிக்கைப்பொருட்கள்
## யாத் 38:21-31

**யாத் 38:21. மோசேயின் கட்டளைப்படி ஆசாரியனான ஆரோனின் குமாரனாகிய இத்தாமாரின் கையிலே லேவியரின் ஊழியத்திற்கென்று எண்ணிக் கொடுக்கப்பட்ட சாட்சியின் வாசஸ்தலத்துப் பொருள்களின் தொகை இதுவே.**

**யாத் 38:22. யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் கர்த்தர் மோசேக்குக் கற்பித்ததை எல்லாம் செய்தான்.**

**யாத் 38:23. அவனோடேகூடத் தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் சித்திரக் கொத்துவேலைக்காரனும், விநோத வேலைகளைச் செய்கிற தொழிலாளியும், இளநீலநூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்புநூலாலும் மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலை செய்கிறவனுமாயிருந்தான்.**

**யாத் 38:24. பரிசுத்த ஸ்தலத்தின் வேலைகள் யாவற்றிற்கும் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டுச் செலவான பொன்னெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி இருபத்தொன்பது தாலந்தும் எழுநூற்று முப்பது சேக்கல் நிறையுமாய் இருந்தது.**

**யாத் 38:25. சபையில் எண்ணப்பட்டவர்கள் கொடுத்த வெள்ளி பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி நூறு தாலந்தும், ஆயிரத்தெழுநூற்று எழுபத்தைந்து சேக்கல் நிறையுமாய் இருந்தது.**

**யாத் 38:26. எண்ணப்பட்டவர்களின் தொகையில் சேர்ந்த இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர்களில் ஒவ்வொரு தலைக்கு பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி அரைச்சேக்கலாகிய பெக்கா என்னும் விழுக்காடு சேர்ந்தது.**

**யாத் 38:27. அந்த வெள்ளியில் நூறு தாலந்து வெள்ளியினால் பரிசுத்த ஸ்தலத்தின் பாதங்களும் திரையின் பாதங்களும் வார்ப்பிக்கப்பட்டது; பாதத்துக்கு ஒரு தாலந்து விழுக்காடு நூறு பாதங்களுக்கு நூறு தாலந்து செலவாயிற்று.**

**யாத் 38:28. அந்த ஆயிரத்தெழுநூற்று எழுபத்தைந்து சேக்கலால் தூண்களுக்குப் பூண்களைப் பண்ணி, அவைகளின் குமிழ்களைத் தகடுகளால் மூடி, அவைகளுக்குப் பூண்களை உண்டாக்கினான்.**

**யாத் 38:29. காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலமானது எழுபது தாலந்தும் இரண்டாயிரத்து நானூறுசேக்கல் நிறையுமாய் இருந்தது.**

**யாத் 38:30. அதினாலே ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவின் பாதங்களையும், வெண்கலப் பலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், பலிபீடத்தின் சகல பணிமுட்டுகளையும்,**

**யாத் 38:31. சுற்றுப் பிராகாரத்தின் பாதங்களையும், பிராகாரவாசல் மறைவின் பாதங்களையும், வாசஸ்தலத்தின் சகல முளைகளையும், சுற்றுப்பிராகாரத்தின் சகல முளைகளையும் பண்ணினான்.**

ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளுக்கும், அதன் பணிவிடைகளுக்கும் காணிக்கைகளை கொண்டுவருமாறு மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளை கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவரிடத்தில், கர்த்தருக்காக தங்கள் காணிக்கைகளை கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கொண்டுவரும் காணிக்கைகளைப் பெற்றுக்கொள்ளவும், அவற்றை கணக்கிட்டு பாதுகாப்பாக வைக்கவும் மோசே லேவியரை நியமிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளுக்கு பொன், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றை காணிக்கையாக கொண்டு வருகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளுக்காகவும், அதன் பணிவிடைகளுக்காகவும் கொடுக்கும் காணிக்கைப் பொருட்கள், "சாட்சியின் வாசஸ்தலத்து பொருட்கள்" என்று அழைக்கப்படுகிறது. மோசே ஆரோனின் குமாரனாகிய இத்தாமாரை, காணிக்கைகளை வாங்குவதற்கும், அவற்றை கணக்கில் வைத்திருப்பதற்கும் பொறுப்பானவராக நியமிக்கிறார்.

மோசேயின்கட்டளைப்படி ஆசாரியனான ஆரோனின் குமாரனாகிய இத்தாமாரின் கையிலே லேவியரின் ஊழியத்திற்கென்று எண்ணிக் கொடுக்கப்பட்ட சாட்சியின் வாசஸ்தலத்துப் பொருள்களின் தொகை இதுவே (யாத் 38:21).

பெசலெயேல், அகோலியாப் ஆகியோர் கூடாரத்தில் வேலை செய்கிறவர்களுக்கு தலைவர்களாகயிருக்கிறார்கள். மோசே தங்களுக்கு சொல்லுகிற பிரகாரமாக, இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளை செய்கிறார்கள். பெசலெயேலும், அகோலியாபும் தங்களுடைய கணக்குகளை கொண்டு வந்து கொடுக்கும்போது, இத்தாமார் அந்தக் கணக்கை சரிபார்த்து, மோசேயினிடத்தில் அதை ஒப்புவிக்கிறார்.

யூதாவின் கோத்திரத்தில் ஊரின் மகனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் கர்த்தர் மோசேக்குக் கற்பித்ததை எல்லாம் செய்கிறார் (யாத் 38:22).

பெசலெயேலோடேகூடகூடத் தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் சித்திரக் கொத்துவேலைக்காரனும், விநோத வேலைகளைச் செய்கிற தொழிலாளியும், இளநீலநூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்புநூலாலும் மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலை செய்கிறவருமாயிருக்கிறார் (யாத் 38:23).

ஆசரிப்புக்கூடாரத்தின் திருப்பணிகளுக்கு இஸ்ரவேல் புத்திரர் சுயாதீனமாகவும், மனப்பூர்வமாகவும் தங்கள் காணிக்கைகளை கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

பரிசுத்த ஸ்தலத்தின் வேலைகள் யாவற்றிற்கும் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டுச் செலவான பொன்னெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி இருபத்தொன்பது தாலந்தும் எழுநூற்று முப்பது சேக்கல் நிறையுமாய் இருக்கிறது (யாத் 38:24).

ஆசரிப்புக்கூடாரத்தின் திருப்பணிகளுக்கு தேவையான வெள்ளியை, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு வரியாக விதித்து, அதன் மூலமாகப் பெற்றுக்கொள்கிறார். இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையிடும்போது, ஒவ்வொருவரும் அரைச்சேக்கல் வெள்ளியை வரியாக செலுத்தவேண்டும்.

சபையில் எண்ணப்பட்டவர்கள் கொடுத்த வெள்ளி பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி நூறு தாலந்தும், ஆயிரத்தெழுநூற்று எழுபத்தைந்து சேக்கல் நிறையுமாய் இருக்கிறது (யாத் 38:25).

எண்ணப்பட்டவர்களின் தொகையில் சேர்ந்த இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர்களில் ஒவ்வொரு தலைக்கு பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி அரைச்சேக்கலாகிய பெக்கா என்னும் விழுக்காடு சேருகிறது (யாத் 38:26).

அந்த வெள்ளியில் நூறு தாலந்து வெள்ளியினால் பரிசுத்த ஸ்தலத்தின் பாதங்களும் திரையின் பாதங்களும் வார்ப்பிக்கப்படுகிறது; பாதத்துக்கு ஒரு தாலந்து விழுக்காடு நூறு பாதங்களுக்கு நூறு தாலந்து செலவாயிற்று (யாத் 38:27).

பெசலெயேல் அந்த ஆயிரத்தெழுநூற்று எழுபத்தைந்து சேக்கலால் தூண்களுக்குப் பூண்களைப் பண்ணி, அவைகளின் குமிழ்களைத் தகடுகளால் மூடி, அவைகளுக்குப் பூண்களை உண்டாக்குகிறார் (யாத் 38:28). தூண்களுக்கு வெள்ளிப்பூண்கள் போட்டு அழகுபடுத்தப்படுகிறது. குமிழ்களும் தகடுகளால் மூடப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளுக்கு தேவையான வெண்கலத்தை இஸ்ரவேல் புத்திரர் காணிக்கையாக செலுத்துகிறார்கள். காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலமானது எழுபது தாலந்தும் இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையுமாய் இருக்கிறது (யாத் 38:29).

பெசலெயேல் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலத்தினால், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவின் பாதங்களையும், வெண்கலப் பலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், பலி பீடத்தின் சகல பணிமுட்டுகளையும், சுற்றுப் பிராகாரத்தின் பாதங்களையும், பிராகாரவாசல் மறைவின் பாதங்களையும், வாசஸ்தலத்தின் சகல முளைகளையும், சுற்றுப்பிராகாரத்தின் சகல முளைகளையும் பண்ணுகிறார் (யாத் 38:30,31).

ஆசரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட உலோகங்களின் விவரம் வருமாறு :

1. பொன் - 87,730 சேக்கல்
2. வெள்ளி - 301,775 சேக்கல்
3. வெண்கலம் - 212,400 சேக்கல்

வெளிப்பிராகாரத்தின் பாதங்கள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கிறது. கூடாரத்தின் பாதங்கள் வெள்ளியினால் செய்யப்பட்டிருக்கிறது. (யாத் 38:27,30-31). வெளிப்பிராகாரத்திலுள்ள பலிபீடம், பணிமுட்டுகள், பாதங்கள், சல்லடைகள் ஆகியவை அனைத்தும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கிறது (யாத் 38:30-31).

பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியங்கள் உவமைகளாகவும், உருவகங்களாகவும், அடையாளங்களாகவும் கூறப்பட்டிருக்கின்றன. வேதாகமம் முழுவதுமே அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது என்று கூறுவதும், வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு நபரும் அடையாளமாகவே கூறப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுவதும் தவறான வியாக்கியானமாகும். எல்லாமே அடையாளம் என்று வியாக்கியானம் பண்ணும்போது, தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதில் குழப்பமே ஏற்படும். வேதாகமத்தில் மறைபொருட்கள் உள்ளன. அதே சமயத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கும் சத்தியங்களும் ஏராளமாய் உள்ளன.

பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கும் பல நிகழ்ச்சிகள் புதிய ஏற்பாட்டின் சத்தியங்கள் பலவற்றிற்கு அடையாளமாக உள்ளன. தேவன் தமது மீட்பின் திட்டத்தை வெளிப்படையாகவும், அடையாளமாகவும் கூறியிருக்கிறார். (கொலோ 2:17; எபி 8:5; எபி 10:1).

கிரேக்க மொழியில் ஐந்து வார்த்தைகள் "அடையாளம்" என்னும் பொருளைத் தருகிறது. அவையாவன: 1. சொரூபம், 2. ஒப்பனை 3. சாயல் 4. உவமை 5. நிழல்.

அடையாளங்களுக்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கலாம்.

1. அடையாளத்திற்கும் மெய்ப்பொருளுக்கும் ஒற்றுமை காணப்பட வேண்டும். (கொலோ 2:14-17; எபி 10:1).

2. அடையாளமும், மெய்ப்பொருளும் தீர்க்கதரிசனத்தினால் இணைக்கப்பட வேண்டும். (யோவான் 3:14; ரோமர் 5:14; கொலோ 2:14-17; எபி 8:5; எபி 9:23-24; எபி 10:1; 1பேதுரு 3:21).

3. அடையாளம் வரப்போகிற உண்மைக்கு நிழலாயிருக்கிறது. அடையாளம் மெய்ப்பொருளல்ல. (கொலோ 2:14-17; எபி 8:5; எபி 10:1).

4. அடையாளம் உலகத்திற்குரியது. மெய்ப்பொருளோ பரலோகத்திற்குரியது. (எபி 8:5; எபி 9:24; 1பேதுரு 3:21).

5. அடையாளமும், மெய்ப்பொருளும் சத்தியத்தை விளக்குவதற்காகத் தேவனால் முன்னறியப்பட்டிருக்கிறது. (ரோமர் 5:14; எபி 9:23-24; எபி 10:1-21).

அடையாளங்களில் நான்கு வகைகள் உள்ளன. அவையாவன:

1. அடையாள நபர்கள்

2. அடையாள நிகழ்ச்சிகள்

3. அடையாளச்செயல்கள்

4. அடையாள முறைமைகள்

1. அடையாள நபர்கள்

(1) ஆதாம் கிறிஸ்துவிற்கு அடையாளமாக இருந்தார். (ரோமர் 5:12-21; 2கொரி 15:45-49).

(2) மெல்கிசேதேக்கு கிறிஸ்துவின் நித்திய ஆசாரியத்துவதற்கு அடையாளமாக இருந்தார். (ஆதி 14:18-24; எபி 5:5-9; எபி 6:20; எபி 7:1-10,17); ஆசாரியத்துவத்திற்கும், ராஜரிகத்திற்கும் சேர்ந்து அடையாளமாக இருந்தார். (எபி 7:1-3=சக 6:12-13); நித்தியமானவருக்கு அடையாளமாக இருந்தார். (எபி 7:3,6= மீகா 5:1-2; யோவான் 1:1-3; எபி 1:8).

(3) ஆபிரகாம் தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடப்போனது தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பலியிடக் கொடுத்ததற்கு அடையாளமாகும். (ஆதி 22; யோவான் 3:16; எபி 11:17-19).

(4) ஈசாக்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளம். (ஆதி 22; எபி 11:19).

(5) மோசே தேவனுடைய தீர்க்கதரிசி (உபா 18:15-19; அப் 3:19-26), உண்மையுள்ளவர் (அப் 3:1-6) ஆகிய காரியங்களில் கிறிஸ்துவின் அடையாளமாக இருந்தார்.

(6) ஆரோன் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாக இருந்தார்.

(7) யோனா கிறிஸ்துவின் மரணம், அடக்கம் பண்ணப்படுதல், பாதாளத்திற்கு இறங்கிப் போதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு அடையாளமாக இருந்தார். (யோனா 2; மத் 12:40; எபே 4:8-10).

2. அடையாள நிகழ்ச்சிகள்

(1) ஜலப்பிரளயம் ஞானஸ்நானத்திற்கு அடையாளம். (1பேதுரு 3:20-21).

(2) வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரர் சந்தித்த நிகழ்ச்சிகள், கிறிஸ்தவ விசுவாசிகள் தங்கள் ஜீவியங்களில் சந்திக்கப்போகும் நிகழ்ச்சிகளுக்கு அடையாளம். (2கொரி 10:1-13).

(3) வனாந்தரத்தில் வெண்கலச் சர்ப்பம் உயர்த்தப்பட்டது இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கும், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டாகும் ஆசீர்வாதங்களுக்கும் அடையாளமாகும். (யோவான் 3:14; எண் 21).

3. அடையாளச்செயல்கள்

(1) யாத் 17 ஆவது அதிகாரத்தில் கற்பாறையை அடிப்பது இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் படுவதற்கும், ஜனங்களுக்காக அடிக்கப்படுவதற்கும் அடையாளமாகும். (2கொரி 10:4).

(2) இரண்டாம் முறையாகக் கற்பாறையிடம் பேசுவதற்குப் பதிலாகக் கற்பாறையை அடிப்பது கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைவதற்கு அடையாளமாகும். (எண் 20; 2கொரி 10:4; எபி 6:6).

(3) தலைக்கல்லாகிய மூலைக்கல்லைப் புறக்கணிப்பது இயேசுகிறிஸ்துவைப் புறக்கணிப்பதற்கு அடையாளமாகும். (ஏசா 28:16; மத் 21:42).

(4) ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரியருடைய பல்வேறு பணிவிடைகள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும் மீட்பிற்கு அடையாளமாகும். மிருகஜீவன்களைக் கொல்லுதல், இரத்தம் சிந்துதல், இரத்தத்தைத் தெளித்தல், தூபபீடத்தில் தூபம் ஏற்றுதல், சமுகத்தப்பம், விளக்குகளை ஏற்றுதல், வருஷாந்திர பண்டிகைகள் ஆகியவை அனைத்துமே அடையாளச் செயல்களாகும். இவை கிறிஸ்துவிலும், அவருடைய மீட்பின் கிரியையிலும் நிறைவேறிற்று. (எபி 7:11-28; எபி 8:1-6; எபி 9:1-28; எபி 10:1-22).

4. அடையாள முறைமைகள்

(1) பலிசெலுத்துதல், ஆராதனை செலுத்துதல் சம்பந்தமான மோசேயின் முறைமைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் பலிமரணத்திற்கும், அவருடைய மீட்பின் கிரியைக்கும் அடையாளமாகும். தேவனை உண்மையோடு தொழுது கொள்வதற்கும், இதை அடையாளமாகச் சொல்லலாம். (யாத் 12-13; யாத் 25:1-40:38; எபி 7-10).

(2) ஆரோனின் ஆசாரியத்துவம், ஆசாரியர்களின் வஸ்திரங்கள், ஊழியம் சம்பந்தமான பிரமாணங்கள் ஆகியவை அனைத்தும், கிறிஸ்துவிற்கும் அவருடைய மீட்பின் கிரியைக்கும் அடையாளமாகும். (யாத் 28-29; எபி 7-10).

(3) இஸ்ரவேல் புத்திரரின் ஓய்வுநாள் ஆசரிப்பு இரட்சிக்கப்பட்டவர்களுக்கு இயேசு கிறிஸ்துவில் உண்டாகும் நித்திய ஓய்விற்கு அடையாளம். (யாத் 20:8-11; யாத் 31:12-18; உபா 5:15; எபி 4).

(4) இஸ்ரவேல் புத்திரரின் பண்டிகைகள் கிறிஸ்துவின் மூலமாக வரும் மீட்பின் கிரியைகளுக்கு அடையாளம். (யாத் 12; லேவி 23; 2கொரி 5:7; எபி 5-10).

(5) தேவாலயம், அதில் கடைப்பிடிக்கப்பட்ட ஆராதனை முறைமைகள் ஆகியவை அனைத்துமே மெய்யான தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பதற்கு அடையாளமாகும்.

(6) ஆசரிப்புக்கூடாரம், தேவாலயம், அதின் பணிமுட்டுக்கள் ஆகியவை பரலோகத்தின் தேவாலயத்திற்கு அடையாளமாகும். (எபி 8:1-5; எபி 9:1-10,23-24).

அடையாளங்களை வியாக்கியானம் பண்ணும்போது மிகவும் கவனமாக வியாக்கியானம் பண்ணவேண்டும். அதன் விவரம் வருமாறு:

1. அடையாளத்திற்கும், மெய்ப்பொருளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையை மட்டும் வலியுறுத்த வேண்டும். உபதேசத்திற்கு அடையாளம் அடிப்படையாக இருக்கக் கூடாது.

2. அடையாளங்களை அவற்றின் மெய்ப்பொருளோடு தொடர்புபடுத்தியே வியாக்கியானம் பண்ண வேண்டும்.

3. தெளிவான வரலாற்று நிகழ்ச்சிகளை அடையாளங்களாகக் கருதக்கூடாது.

4. அடையாளமும், மெய்ப்பொருளும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகவேண்டும். அவை வேதவாக்கியத்திற்கு முரண்படக்கூடாது.

5. வேதாகமத்தின் வரலாற்றுச் செய்திகளுக்கு அடையாளத்தின் அடிப்படையில் வியாக்கியானம் பண்ணி, வரலாற்றின் உண்மைகளை மாற்றிவிடக்கூடாது.

## 39 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரத்து வேலைகள் முடிவுபெறுகிறது. ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரங்கள் செய்யப்படுகிறது. ஏபோத்தும் விசித்திரமான கச்சையும் (யாத் 39:1-5). ஏபோத்து தோள்களின்மேல் வைக்கப்பட்டிருக்கிற கோமேதக கற்கள் (யாத் 39:6,7). மார்ப்பதக்கமும் அதில் பதிக்கப்பட்டிருக்கிற கற்களும் (யாத் 39:8-21). ஏபோத்தின் கீழ் அங்கி (யாத் 39:22-26). சாதாரண ஆசாரியருக்கு அங்கிகள், பாகை, குல்லாக்கள் சல்லடங்கள் (யாத் 39:27-29). பரிசுத்த கிரீடத்தின் பட்டம் (யாத் 39:30,31). ஆசரிப்புக்கூடாரம் (யாத் 39:32-43).

### பரிசுத்த வஸ்திரங்கள்
### யாத் 39:1-31

**யாத் 39:1. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்களையும், ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரங்களையும் செய்தார்கள்.**

**யாத் 39:2. ஏபோத்தைப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்தான்.**

**யாத் 39:3. அந்தப் பொன்னை, இளநீலநூலோடும் இரத்தாம்பரநூலோடும் சிவப்புநூலோடும் மெல்லிய பஞ்சுநூலோடும் சேர்த்து விசித்திரவேலையாய் நெய்யும்படிக்கு, மெல்லிய தகடுகயாய் அடித்து, அவைகளைச் சரிகைகளாகப் பண்ணினார்கள்.**

**யாத் 39:4. இரண்டு தோள்களின்மேலுள்ள அதின் இரண்டு முனைகளையும் சேர்த்தார்கள்; அது ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்தது.**

**யாத் 39:5. அந்த ஏபோத்தின்மேலிருக்கும் விசித்திரமான கச்சை, அந்த வேலைக்கு ஒப்பாகவே பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, செய்யப்பட்டது.**

**யாத் 39:6. இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை முத்திரை வெட்டுவேலையாகக் கோமேதகக் கற்களில் வெட்டி, அவைகளைப் பொன் குவளைகளில் பதித்தார்கள்.**

**யாத் 39:7. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவைகள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து ஞாபகக்குறிக் கற்களாயிருக்கும்படி ஏபோத்துத் தோள்களின்மேல் அவைகளை வைத்தான்.**

**யாத் 39:8. மார்ப்பதக்கத்தை ஏபோத்தின் வேலைக்கு ஒத்த விசித்திரவேலையாகப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்தான்.**

**யாத் 39:9. அந்த மார்ப்பதக்கத்தைச் சதுரமும் இரட்டையுமாய்ச் செய்து, ஒரு ஜாண் நீளமும் ஒரு ஜாண் அகலமுமாக்கி,**

**யாத் 39:10. அதிலே நாலு பத்தி ரத்தினக்கற்களைப் பதித்தார்கள்; முதலாம் பத்தி பத்மராகமும் புஷ்பராகமும் மாணிக்கமும்,**

**யாத் 39:11. இரண்டாம் பத்தி மரகதமும் இந்திர நீலமும் வச்சிரமும்,**

**யாத் 39:12. மூன்றாம் பத்தி கெம்பும் வைடூரியமும் சுகந்தியும்,**

யாத் 39:13. நாலாம் பத்தி படிகப்பச்சையும் கோமேதகமும் யஸ்பியுமானது. அவைகள் அந்தந்த இடங்களிலே பொன்குவளைகளில் பதிக்கப்பட்டிருந்தது.

யாத் 39:14. இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்களுள்ளவைகளுமாயிருந்தது; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொரு கோத்திரத்தின் நாமம் ஒவ்வொன்றில் முத்திரைவெட்டாய் வெட்டியிருந்தது.

யாத் 39:15. மார்ப்பதக்கத்துக்கு அதின் பக்கங்களிலே பின்னல் வேலையான பசும்பொன்சங்கிலிகளையும் பண்ணி,

யாத் 39:16. இரண்டு பொன்குவளைகளையும் இரண்டு பொன் வளையங்களையும் செய்து, அந்த இரண்டு வளையங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு பக்கத்திலும் வைத்து,

யாத் 39:17. பொன்னினால் செய்த பின்னல் வேலையான அந்த இரண்டு சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் பக்கங்களில் இருக்கிற இரண்டு வளையங்களிலும் மாட்டி,

யாத் 39:18. பின்னல் வேலையான அவ்விரண்டு சங்கிலிகளின் இரண்டு நுனிகளையும் ஏபோத்தின் தோள்புறத்துத் துண்டுகள்மேல் முன்புறத்தில் இருக்கிற இரண்டு குவளைகளிலும் மாட்டினார்கள்.

யாத் 39:19. பின்னும் இரண்டு வளையங்களைப் பண்ணி, அவைகளை ஏபோத்தின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தின் மற்ற இரண்டு பக்கங்களிலும் அதின் ஓரத்தில் வைத்து,

யாத் 39:20. வேறே இரண்டு பொன் வளையங்களையும் பண்ணி, அவைகளை ஏபோத்தின் முன்புறத்தின் இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

யாத் 39:21. மார்ப்பதக்கம் ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், ஏபோத்திலிருந்து நீங்கிப்போகாதபடிக்கும், அதை அதின் வளையங்களால் ஏபோத்தின் வளையங்களோடே இளநீல நாடாவினாலே, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, கட்டினார்கள்.

யாத் 39:22. ஏபோத்தின் கீழ் அங்கியை முழுவதும் இளநீல்நூலால் நெய்தான்.

யாத் 39:23. அங்கியின் நடுவில் மார்க்கவசத்துவாரத்துக்கு ஒப்பாக ஒரு துவாரமும், அது கிழியாதபடி அந்தத் துவாரத்தைச் சுற்றிலும் ஒரு நாடாவும் தைத்திருந்தது.

யாத் 39:24. அங்கியின் கீழ் ஓரங்களில் தொங்கத்தக்கதாகத் திரித்த இளநீல்நூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலுமான வேலையாக மாதளம்பழங்களைப் பண்ணி,

யாத் 39:25. பசும்பொன்னினால் மணிகளையும் பண்ணி, அந்த மணிகளை அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் மாதளம்பழங்களின் இடைஇடையே தொங்கவைத்தார்கள்.

யாத் 39:26. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே ஆராதனைக்குரிய அங்கியின் ஓரத்தைச் சுற்றிலும், ஒரு மணியும் ஒரு மாதளம்பழமும், ஒரு மணியும் ஒரு மாதளம்பழமுமாய் இருந்தது.

யாத் 39:27. ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சுநூலால் நெசவுவேலையான அங்கிகளையும்,

யாத் 39:28. மெல்லிய பஞ்சுநூலால் பாகைகளையும், அலங்காரமான குல்லாக்களையும், திரித்த மெல்லிய சணல்நூலால் சல்லடங்களையும்,

யாத் 39:29. திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் இளநீல்நூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் சித்திரத் தையல்வேலையான இடைக்கச்சையையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, செய்தார்கள்.

**யாத் 39:30. பரிசுத்த கிரீடத்தின் பட்டத்தையும் பசும்பொன்னினாலே பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் எழுத்துக்களை அதிலே முத்திரை வெட்டாக வெட்டி,**

**யாத் 39:31. அதை உயரப் பாகையின்மேல் கட்டும்படி, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, இளநீல நாடாவினால் கட்டினார்கள்.**

ஆசாரியருக்கு செய்ய வேண்டிய வஸ்திரங்களைப்பற்றி கர்த்தர் யாத் 28-ஆவது அதிகாரத்தில் ஏற்கெனவே கட்டளை கொடுத்திருக்கிறார். அதன் பிரகாரமாக மோசே ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை செய்கிறார்.

ஆசாரியரின் வஸ்திரங்கள் "பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்கள்" என்று அழைக்கப்படுகிறது (யாத் 39:1). தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக கர்த்தருடைய பரிசுத்தவான்கள் வெள்ளை அங்கி தரித்து, அவரை இரவும் பகலும் துதிப்பார்கள்.

"அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளி 7:13-15).

கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே இஸ்ரவேல் புத்திரர் ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும், பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்களையும், பரிசுத்த வஸ்திரங்களையும் செய்கிறார்கள். ஆசாரியருக்கு செய்யப்படும் விசேஷித்த வஸ்திரங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மூன்றாம் முறையாக ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்களைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. (யாத் 31:10; யாத் 35:19; யாத் 39:1,41). ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவது சம்பந்தமான கட்டளைகளில் இவற்றைப் பற்றிக் கூறப்படவில்லை (யாத் 25:1-30:38).

ஆசாரியரின் வஸ்திரங்கள் கடைசியில் செய்யப்படுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவது சம்பந்தமான கட்டளைகளில் ஆசாரியரின் வஸ்திரங்களைக் குறித்து கடைசியாகக் கூறப்பட்டிருக்கிறது (யாத் 25:1-30:38).

ஆசாரியருக்கு செய்யப்படும் பரிசுத்த வஸ்திரங்களெல்லாம் கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே செய்யப்படுகிறது. "கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே...... பரிசுத்த வஸ்திரங்களை செய்கிறார்கள்" என்னும் வாக்கியம் மறுபடியும் மறுபடியுமாக சொல்லப்பட்டிருக்கிறது (யாத் 39:1,5,7,21,26,29,31).

கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதினால், இந்த வாக்கியம் திரும்ப திரும்ப சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். அவர்களுடைய வாயின் வார்த்தைகளையும், கைகளின் கிரியைகளையும் கர்த்தருடைய வார்த்தை ஆளுகை செய்யவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய பிரமாணங்களைக் கைக்கொண்டு ஊழியம் செய்யவேண்டும். இதை உறுதிபண்ணும் வண்ணமாக "கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே, அவர்கள் ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரங்களை செய்தார்கள்" என்னும் வாக்கியம் மறுபடியும் மறுபடியுமாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்தில் ஏராளமான பணிமுட்டுக்கள் உள்ளன. இவை விலையுயர்ந்த பொன்னால் செய்யப்பட்டவை. பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் நேர்த்தியாகவும், அழகாகவும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணிமுட்டுக்களைப்போலவே ஆசாரியருடைய பரிசுத்த வஸ்திரங்களும் விலையுயர்ந்த பொருட்களினால், நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரின் சபை இப்பொழுது ஆரம்ப நிலையிலிருக்கிறது. ஆகையினால் உலகப்பிரகாரமான ஐசுவரியமும், ஆடம்பரமும் ஆசாரியருடைய வஸ்திரங்களிலும், ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த பணிமுட்டுக்களிலும் காணப்படுவதற்கு கர்த்தர் அனுமதி கொடுத்திருக்கிறார். சபையின் ஆரம்ப காலத்தில், உலகத்தாருக்கு எது மேன்மையாக காணப்பட்டதோ, அதுவே ஆசரிப்புக்கூடாரத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த பணிமுட்டுக்கள், ஆசரியாரின் பரிசுத்த வஸ்திரங்கள் ஆகியவையெல்லாமே, இனிமேல் வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே மெய்யானவர். சுவிசேஷத்தின் கிருபையே மெய்யான சத்தியம். பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் வெளிப்படுத்தப்படவில்லை. ஆசரிப்புக்கூடாரத்தின் ஆராதனைகளும், அதில் பயன்படுத்தப்பட்ட பரிசுத்தமான பணிமுட்டுக்களும், ஆசாரியரின் பரிசுத்தமான வஸ்திரங்களும், இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். கிறிஸ்துவானவர் ஊழிய வஸ்திரம் தரித்து, நம்முடைய இரட்சிப்புக்காக, நகரத்திற்கு வெளியே பாடுபட்டார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் மெய்யான விசுவாசிகள் எல்லோருமே ஆவிக்குரிய ஆசாரியர்களாயிருக்கிறோம். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு அவரை ஆராதிக்க வேண்டும்.

"சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" *(வெளி 19:8).*

கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்களையும், ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரங்களையும் செய்கிறார்கள் *(யாத் 39:1).*

மோசே ஏபோத்தைப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்கிறார் *(யாத் 39:2).*

பெசலெயேலும், அகோலியாபும் அந்தப் பொன்னை, இளநீலநூலோடும் இரத்தாம்பரநூலோடும் சிவப்புநூலோடும் மெல்லிய பஞ்சுநூலோடும் சேர்த்து விசித்திரவேலையாய் நெய்யும்படிக்கு, மெல்லிய தகடுகயாய் அடித்து, அவைகளைச் சரிகைகளாகப் பண்ணுகிறார்கள். அவர்கள் இரண்டு தோள்களின்மேலுள்ள அதின் இரண்டு முனைகளையும் சேர்க்கிறார்கள்; அது ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறது *(யாத் 39:3,4).*

சித்திரத்தையல் வேலைகளைச் செய்வதற்குப் பொன் சரிகைகளைப் பயன்படுத்துகிறார்கள். பொன்னை தகடுகளாக அடித்து, அதிலிருந்து சரிகைகளைத் தயாரிக்கிறார்கள்.

ஏபோத்தின்மேலிருக்கும் விசித்திரமான கச்சை, அந்த வேலைக்கு ஒப்பாகவே பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, செய்யப்படுகிறது. பெசலெயேலும் அகோலியாபும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை முத்திரை வெட்டுவேலையாகக் கோமேதகக் கற்களில் வெட்டி, அவைகளைப் பொன் குவளைகளில் பதிக்கிறார்கள் (யாத் 39:5,6).

கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவைகள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து ஞாபகக்குறிக் கற்களாயிருக்கும்படி ஏபோத்துத் தோள்களின்மேல் அவைகளை வைக்கிறார். மார்ப்பதக்கத்தை ஏபோத்தின் வேலைக்கு ஒத்த விசித்திரவேலையாகப் பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்கிறார் (யாத் 39:7,8).

மார்ப்பதக்கத்தைச் சதுரமும் இரட்டையுமாய்ச் செய்து, ஒரு ஜாண்நீளமும் ஒரு ஜாண் அகலமுமாக்கி, அதிலே நாலு பத்தி ரத்தினக்கற்களைப் பதிக்கிறார்கள்; முதலாம் பத்தி பத்மராகமும் புஷ்பராகமும் மாணிக்கமும், இரண்டாம் பத்தி மரகதமும் இந்திர நீலமும் வச்சிரமும், மூன்றாம் பத்தி கெம்பும் வைடூரியமும் சுகந்தியும், நாலாம் பத்தி படிகப்பச்சையும் கோமேதகமும் யஸ்பியுமானது. அவைகள் அந்தந்த இடங்களிலே பொன்குவளைகளில் பதிக்கப்பட்டிருக்கிறது (யாத் 39:9-13).

இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்களுள்ளவைகளுமாயிருக்கிறது; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொரு கோத்திரத்தின் நாமம் ஒவ்வொன்றில் முத்திரைவெட்டாய் வெட்டியிருக்கிறது (யாத் 39:14).

பெசலெயேலும் அகோலியாபும் மார்ப்பதக்கத்துக்கு அதின் பக்கங்களிலே பின்னல் வேலையான பசும்பொன் சங்கிலிகளையும் பண்ணி, இரண்டு பொன்குவளைகளையும் இரண்டு பொன் வளையங்களையும் செய்கிறார்கள். அந்த இரண்டு வளையங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு பக்கத்திலும் வைத்து, பொன்னினால் செய்த பின்னல் வேலையான அந்த இரண்டு சங்கிலிகளையும் மார்ப்பதக்கத்தின் பக்கங்களில் இருக்கிற இரண்டு வளையங்களிலும் மாட்டுகிறார்கள். பின்னல் வேலையான அவ்விரண்டு சங்கிலிகளின் இரண்டு நுனிகளையும் ஏபோத்தின் தோள்புறத்துத் துண்டுகள்மேல் முன்புறத்தில் இருக்கிற இரண்டு குவளைகளிலும் மாட்டுகிறார்கள் (யாத் 39:15-18).

பெசலெயேலும் அகோலியாபும் இரண்டு வளையங்களைப் பண்ணி, அவைகளை ஏபோத்தின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தின் மற்ற இரண்டு பக்கங்களிலும் அதின் ஓரத்தில் வைக்கிறார்கள். அவர்கள் வேறே இரண்டு பொன் வளையங்களையும் பண்ணி, அவைகளை ஏபோத்தின் முன்புறத்தின் இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாகவும் வைக்கிறார்கள். மார்ப்பதக்கம் ஏபோத்தின் விசித்திரமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், ஏபோத்திலிருந்து நீங்கிப்போகாதபடிக்கும், அதை அதின் வளையங்களால் ஏபோத்தின் வளையங்களோடே இளநீல நாடாவினாலே, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, கட்டுகிறார்கள் (யாத் 39:19-21).

மோசே ஏபோத்தின் கீழ் அங்கியை முழுவதும் இளநீலநூலால் நெய்கிறார். அங்கியின் நடுவில் மார்க்கவசத்துவாரத்துக்கு ஒப்பாக ஒரு துவாரமும், அது கிழியாதபடி அந்தத் துவாரத்தைச் சுற்றிலும் ஒரு நாடாவும் தைத்திருக்கிறது (யாத் 39:22,23).

பெசலெயேலும் அகோலியாபும் அங்கியின் கீழ் ஓரங்களில் தொங்கத்தக்கதாகத் திரித்த இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலுமான வேலையாக மாதளம்பழங்களைப் பண்ணி, பசும்பொன்னினால் மணிகளையும் பண்ணி, அந்த மணிகளை அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் மாதளம்பழங்களின் இடைஇடையே தொங்கவைக்கிறார்கள் (யாத் 39:24,25).

கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே ஆராதனைக்குரிய அங்கியின் ஓரத்தைச் சுற்றிலும், ஒரு மணியும் ஒரு மாதளம்பழமும், ஒரு மணியும் ஒரு மாதளம்பழமுமாய் இருக்கிறது (யாத் 39:26).

பெசலெயேலும் அகோலியாபும் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சுநூலால் நெசவுவேலையான அங்கிகளையும், மெல்லிய பஞ்சுநூலால் பாகையையும், அலங்காரமான குல்லாக்களையும், திரித்த மெல்லிய சணல்நூலால் சல்லடங்களையும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் சித்திரத் தையல்வேலையான இடைக்கச்சையையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, செய்கிறார்கள் (யாத் 39:27-29).

பெசலெயேலும் அகோலியாபும் பரிசுத்த கிரீடத்தின் பட்டத்தையும் பசும்பொன்னினாலே பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் எழுத்துக்களை அதிலே முத்திரை வெட்டாக வெட்டி, அதை உயரப் பாகையின்மேல் கட்டும்படி, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, இளநீல நாடாவினால் கட்டுகிறார்கள் (யாத் 39:30,31).

## ஆசரிப்புக் கூடாரம்
## யாத் 39:32-43

**யாத் 39:32. இப்படியே ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.**

**யாத் 39:33. பின்பு, வாசஸ்தலத்தை மோசேயினிடத்தில் கொண்டுவந்தார்கள்; கூடாரத்தையும், அதற்குரிய எல்லாப் பணிமுட்டுகளையும், அதின் துறடுகளையும், அதின் பலகைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் பாதங்களையும்,**

**யாத் 39:34. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல் மூடியையும், தகசுத்தோல் மூடியையும், மறைவின் திரைச்சீலையையும்,**

**யாத் 39:35. சாட்சிப்பெட்டியையும், அதின் தண்டுகளையும், கிருபாசனத்தையும்,**

**யாத் 39:36. மேஜையையும், அதின் எல்லாப் பணிமுட்டுகளையும், சமுகத்தப்பங்களையும்,**

**யாத் 39:37. சுத்தமான குத்துவிளக்கையும், வரிசையாய் ஒழுங்குபடுத்தப்பட்ட அதின் அகல்களையும், அதின் எல்லாப் பணிமுட்டுகளையும், வெளிச்சத்திற்கு எண்ணெயையும்,**

**யாத் 39:38. பொற்பீடத்தையும், அபிஷேக தைலத்தையும், சுகந்த தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசல் தொங்குதிரையையும்,**

**யாத் 39:39. வெண்கலப் பலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், அதின் தண்டுகளையும், அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும், அதின் பாதத்தையும்,**

**யாத் 39:40. பிரகாரத்தின் தொங்குதிரைகளையும், அதின் தூண்களையும், அதின் பாதங்களையும், பிராகாரத்து வாசல் மறைவையும், அதின் கயிறுகளையும், அதின் முளைகளையும், ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வேலைக்கடுத்த சகல பணிமுட்டுகளையும்,**

**யாத் 39:41. பரிசுத்த ஸ்தலத்திலே செய்யும் ஆராதனைக்கடுத்த வஸ்திரங்களையும், ஆசாரிய ஊழியஞ்செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் கொண்டுவந்தார்கள்.**

**யாத் 39:42. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலைகளையும் செய்தார்கள்.**

**யாத் 39:43. மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்தான்; கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள். மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.**

ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்கிறவர்கள் ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வேலையையெல்லாம் செய்து முடிக்கிறார்கள். கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்கிறார்கள் (யாத் 39:32). அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்து வேலையை ஆரம்பித்து, ஐந்துமாத காலத்திற்குள்ளாக, வாசஸ்தலத்தின் வேலையையெல்லாம் செய்து முடிக்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்கிறவர்கள், கர்த்தருடைய வார்த்தையின்படியே, அந்த வேலைகளை கவனமாய்ச் செய்கிறார்கள். கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்கிறார்கள். மோசேயின் வார்த்தையும் இஸ்ரவேல் புத்திரரின் வேலையும் முரண்படாமல் ஒன்றுபோலிருக்கிறது (யாத் 39:32,42).

இஸ்ரவேல் புத்திரர் வாசஸ்தலத்தை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள். மோசே அதைப் பார்வையிட்டு சோதித்துப் பார்க்கிறார். கர்த்தர் தனக்கு கற்பித்தபடியெல்லாம், இஸ்ரவேல் புத்திரர் செய்திருக்கிறார்களா என்பதை மோசே சோதித்தறிகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்கிறவர்கள் ஞானஇருதயமுள்ளவர்கள். அவர்களிடத்தில் விசேஷித்த தாலந்துகளும், விசேஷித்த திறமைகளும் இருக்கிறது. கர்த்தரும் அவர்களை தம்முடைய ஆவியினால் நிரப்பியிருக்கிறார். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்வதில், மோசேயைவிட, திறமையானவர்கள். ஆனாலும் அவர்கள் ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்தை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தை இஸ்ரவேல் புத்திரரைவிட மோசேக்கு நன்றாய்த் தெரியும். கர்த்தர் மோசேயினிடத்தில் ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரி வடிவத்தையும், அதன் அளவுகளையும் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் செய்து முடித்த வேலையை மோசேயால் மாத்திரமே சோதித்து பார்க்க முடியும். மோசேக்கு மாத்திரமே கர்த்தருடைய சிந்தையும் திட்டமும் தெரியும்.

தாங்கள் செய்து முடித்திருக்கிற ஆசாரிப்புக்கூடாரத்தை, மோசே சோதித்துப் பார்த்து, அதை அங்கீகரிக்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் செய்த வேலையைப் பார்த்து மோசே திருப்தியடைந்தால் மாத்திரமே இஸ்ரவேல் புத்திரருக்கும் திருப்தி உண்டாகும். தாங்கள் செய்த வேலையைப் பார்த்து மோசே சந்தோஷப்பட்டால் மாத்திரமே, இஸ்ரவேல் புத்திரருக்கும் சந்தோஷமுண்டாகும்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் கொண்டு வந்த பொருட்களின் அட்டவணை இந்த வசனப்பகுதியில் வரிசையாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கூடாரம்
2. அதற்குரிய எல்லாப் பணிமுட்டுகள்
3. அதின் துறடுகள்
4. அதின் பலகைகள்
5. அதின் தாழ்ப்பாள்கள்
6. அதின் தூண்கள்
7. அதின் பாதங்கள்
8. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல் மூடி
9. தகசுத்தோல் மூடி
10. மறைவின் திரைச்சீலை
11. சாட்சிப்பெட்டி
12. அதின் தண்டுகள்

13. கிருபாசனம்

14. மேஜை

15. அதின் எல்லாப் பணிமுட்டுகள்

16. சமுகத்தப்பங்கள்

17. சுத்தமான குத்துவிளக்கு

18. வரிசையாய் ஒழுங்குபடுத்தப்பட்ட அதின் அகல்கள்

19. அதின் எல்லாப் பணிமுட்டுகள்

20. வெளிச்சத்திற்கு எண்ணெய்

21. பொற்பீடம்

22. அபிஷேக தைலம்

23. சுகந்த தூபவர்க்கம்

24. வாசஸ்தலத்தின் வாசல் தொங்குதிரை

25. வெண்கலப் பலிபீடம்,

26. அதின் வெண்கலச் சல்லடை

27. அதின் தண்டுகள்

28. அதின் சகல பணிமுட்டுள்

29. தொட்டி

30. அதின் பாதம்

31. பிரகாரத்தின் தொங்குதிரைகள்

32. அதின் தூண்கள்,

33. அதின் பாதங்கள்

34. பிராகாரத்து வாசல் மறைவு

35. அதின் கயிறுகள்

36. அதின் முளைகள்

37. ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வேலைக்கடுத்த சகல பணிமுட்டுகள்

38. பரிசுத்த ஸ்தலத்திலே செய்யும் ஆராதனைக்கடுத்த வஸ்திரங்கள்

39. ஆசாரிய ஊழியஞ்செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்கள்

40. அவன் குமாரரின் வஸ்திரங்கள்.

மேலே சொல்லப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள். கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலைகளையும் செய்திருக்கிறார்கள் (யாத் 39:33-42).

ஆராதனைக்கடுத்த வஸ்திரங்களை ஆசாரியர்கள் ஆசாரிய ஊழியம் செய்யும்போது மட்டுமே தரித்துக் கொள்ள வேண்டும் (யாத் 28:1,43).

இஸ்ரவேல் புத்திரர் செய்த எல்லா வேலைகளையும் மோசே பார்க்கிறார். கர்த்தர் தனக்கு கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்திருக்கிறார்கள் என்பதை மோசே உறுதிபண்ணிக்கொள்கிறார். மோசே அவர்களுடைய வேலையில் குற்றம் குறை எதுவும் கண்டுபிடிக்கவில்லை.

ஒரு சிலர் மற்றவர்கள் செய்கிற வேலையில் திருப்தியடையமாட்டார்கள். அவர்கள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு கடினமாக வேலை செய்திருந்தாலும், அவர்களுடைய வேலைகளில் ஏதாவது குறைகளைக் கண்டுபிடித்து, குறை சொல்லுவார்கள். மோசேயினிடத்தில் குறை சொல்லும் சுபாவமில்லை.

இஸ்ரவேல் புத்திரர் செய்திருக்கிற சகல வேலைகளிலும், அங்கும் இங்கும் ஏதாவது ஒரு சில குறைகள் இருக்கலாம். ஆனால் மோசே அதை பெரிதுபடுத்தவில்லை. அவர்கள் செய்த வேலைகளை அங்கீகரிக்கிறார். மோசே அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஆசரிப்புக்கூடாரத்திற்காக இஸ்ரவேல் புத்திரர் செய்த எல்லா வேலைகளையும் மோசே பார்த்து சந்தோஷப்படுகிறார். மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபித்து அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

## 40 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியையும் அதற்குரிய இடத்தில் வைத்து, கர்த்தர் சொன்ன பிரகாரம் அதை இணைக்கவேண்டும் (யாத் 40:1-8). வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேக தைலத்தினால் அபிஷேகம்பண்ணவேண்டும் (யாத் 40:9-11). மோசே ஆசாரியரையும் அபிஷேகம்பண்ணி அவர்களை பரிசுத்தப்படுத்தவேண்டும் (யாத் 40:12-15).

கர்த்தர் தனக்கு கற்பித்தபடியெல்லாம் மோசே செய்கிறார் (யாத் 40:16-33). கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்புகிறது (யாத் 40:34-38).

### முதலாம் மாதம் முதல் தேதி யாத் 40:1-15

**யாத் 40:1. கர்த்தர் மோசேயை நோக்கி:**

**யாத் 40:2. நீ முதலாம் மாதம் முதல் தேதியில் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணு.**

**யாத் 40:3. அதிலே சாட்சிப்பெட்டியை வைத்து, பெட்டியைத் திரையினால் மறைத்து,**

**யாத் 40:4. மேஜையைக் கொண்டுவந்து, அதில் வைக்கவேண்டியதைக் கிரமமாய் வைத்து, குத்துவிளக்கைக் கொண்டுவந்து, அதின் விளக்குகளை ஏற்றி,**

**யாத் 40:5. பொன் தூபபீடத்தைச் சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைத்து, வாசஸ்தலத்து வாசலின் தொங்குதிரையைத் தூக்கிவைக்கக்கடவாய்.**

**யாத் 40:6. பின்பு, தகன பலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து,**

**யாத் 40:7. தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்த்து,**

**யாத் 40:8. சுற்றுப் பிராகாரத்தை நிறுத்தி, பிராகாரவாசல் தொங்குதிரையைத் தூக்கிவைத்து,**

**யாத் 40:9. அபிஷேக தைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, அதையும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளையும் பரிசுத்தப்படுத்துவாயாக; அப்பொழுது பரிசுத்தமாயிருக்கும்.**

**யாத் 40:10. தகனபலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப் பரிசுத்தப்படுத்துவாயாக; அப்பொழுது அது மகா பரிசுத்தமான பலிபீடமாயிருக்கும்.**

**யாத் 40:11. தொட்டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்துவாயாக,**

**யாத் 40:12. பின்பு ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரவாசலில் வரச்செய்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து,**

**யாத் 40:13. ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம் பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக.**

**யாத் 40:14. அவன் குமாரரையும் வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி,**

**யாத் 40:15. அவர்கள் எனக்கு ஆசாரியஊழியம் செய்யும்படி, அவர்களையும், அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடியே, அபிஷேகம் பண்ணுவாயாக; அவர்கள் பெறும் அந்த அபிஷேகம் தலைமுறைதோறும் நித்திய ஆசாரியத்துவத்துக்கு ஏதுவாயிருக்கும் என்றார்.**

மோசே ஆசரிப்புக்கூடாரத்து வேலைகளையெல்லாம் பார்க்கிறார். பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கிறது. கர்த்தர் கற்பித்தபடியே அவர்கள் அதை செய்திருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ண வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுக்களையெல்லாம், கர்த்தர் சொன்ன பிரகாரம் ஒன்றாய் இணைக்கவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுவதற்கு கர்த்தர் நாளையும் குறித்திருக்கிறார். அதை முதலாம் மாதம் முதல் தேதியிலே ஸ்தாபனம்பண்ணவேண்டும் (யாத் 40:2). வருஷத்தின் ஆரம்பத்தில், நல்ல வேலைகளை செய்ய ஆரம்பிப்பது மிகவும் நல்லது. புதிய வருஷம் ஆரம்பமாகும்போது, புதிய வேலைகளும் ஆரம்பமாகவேண்டும். அந்த வேலைகள் நல்ல வேலைகளாகவும் இருக்கவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுவது சம்பந்தமாக கர்த்தர் மோசேக்கு கொடுத்த கட்டளைகளின் விவரம் வருமாறு:

1. முதலாம் மாதம் முதல் தேதியில் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணு. (யாத் 40:2). எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்பட்டு இந்த நாளோடு பதினொன்றரை மாதம் ஆயிற்று (யாத் 12:40-41; எண் 33:1-3).

2. ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தில் சாட்சிப்பெட்டியை வைத்து, பெட்டியைத் திரையினால் மறைத்துவை. (யாத் 40:3).

3. மேஜையைக் கொண்டுவந்து, அதில் வைக்கவேண்டியதைக் கிரமமாய் வை. (யாத் 40:4).

4. குத்துவிளக்கைக் கொண்டு வந்து, அதின் விளக்குகளை ஏற்று.

5. பொன் தூபபீடத்தைச் சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைத்து, வாசஸ்தலத்து வாசலின் தொங்குதிரையைத் தூக்கி வை. (யாத் 40:5).

6. தகன பலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வை. (யாத் 40:6).

7. தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்த்துவை (யாத் 40:7).

8. சுற்றுப் பிராகாரத்தை நிறுத்தி, பிராகார வாசல் தொங்குதிரையைத் தூக்கிவை. (யாத் 40:8).

புதிய வருஷத்தின் ஆரம்பத்திலே விசுவாசிகளாகிய நாம், கர்த்தரையும் அவருடைய ராஜ்யத்தையும் தேடவேண்டும். தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்த காரியங்களைக் குறித்து நாம் தியானிக்கவேண்டும். எசேக்கியாவின் காலத்தில் தேவாலயம் முதலாம் மாதம், முதலாம் தேதியில் பரிசுத்தம்பண்ணப்பட்டது.

"முதல் மாதம் முதல் தேதியிலே அவர்கள் பரிசுத்தம் பண்ணத்துவக்கி, எட்டாந்தேதியிலே கர்த்தருடைய மண்டபத்திலே பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்தை எட்டுநாளில் பரிசுத்தம் பண்ணி, முதலாம் மாதம் பதினாறாம் தேதியில் அதை முடித்தார்கள்" (2நாளா 29:17).

மோசே முதலாவதாக ஆசரிப்புக்கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய கூடாரத்தில் வாசம்பண்ணுவார். ஆசரிப்புக்கூடாரத்திலே சாட்சிப்பெட்டியை வைக்கவேண்டும். அந்தப் பெட்டியை திரையினால் மறைக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (யாத் 40:3).

கர்த்தர் மோசேயை நோக்கி, "மேஜையைக் கொண்டுவந்து, அதில் வைக்கவேண்டியதைக் கிரமமாய் வைத்து, குத்துவிளக்கைக் கொண்டு வந்து, அதின் விளக்குகளை ஏற்றி, பொன் தூபபீடத்தைச் சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைத்து, வாசஸ்தலத்து வாசலின் தொங்குதிரையைத் தூக்கிவைக்கக்கடவாய்" (யாத் 40:4,5) என்றும் சொல்லுகிறார்.

பிரகாரத்தில் வெண்கல பலிபீடமும், தொட்டியும் இருக்கும். கர்த்தர் மோசேயை நோக்கி, "தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து, தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்க்கவேண்டும்" (யாத் 40:6,7) என்று சொல்லுகிறார். இதன் பின்பு மோசே சுற்றுப்பிரகாரத்தை நிறுத்தி, பிரகார வாசல் தொங்குதிரையை தூக்கி வைக்கவேண்டும் (யாத் 40:8).

மோசே அபிஷேக தைலத்தினால் வாசஸ்தலத்தையும், அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணவேண்டும். மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக அபிஷேகதைலத்தை கூட்டிச்சேர்த்திருக்கிறார் (யாத் 30:25).

கர்த்தர் மோசேயை நோக்கி, "அபிஷேக தைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, அதையும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளையும் பரிசுத்தப்படுத்துவாயாக; அப்பொழுது பரிசுத்தமாயிருக்கும். தகனபலி பீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப் பரிசுத்தப்படுத்துவாயாக; அப்பொழுது அது மகா பரிசுத்தமான பலிபீடமாயிருக்கும். தொட்டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்துவாயாக (யாத் 40:9-11) என்று சொல்லுகிறார்.

வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையையும் அபிஷேகம்பண்ணுவது சம்பந்தமாக கர்த்தர் மோசேக்கு கொடுத்த கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. அபிஷேக தைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, அதையும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளையும் பரிசுத்தப் படுத்துவாயாக. (யாத் 40:9).

2. தகனபலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப் பரிசுத்தப்படுத்துவாயாக (யாத் 40:10).

3. தொட்டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப் படுத்துவாயாக. (யாத் 40:11).

மோசே ஆரோனையும், அவனுடைய குமாரரையும் அபிஷேக தைலத்தினால் அபிஷேகம்பண்ணி, அவர்களை பரிசுத்தம்பண்ணவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரவாசலில் வரச்செய்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து, ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம் பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக. அவன் குமாரரையும் வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவர்களையும், அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடியே, அபிஷேகம்பண்ணுவாயாக; அவர்கள் பெறும் அந்த அபிஷேகம் தலைமுறைதோறும் நித்திய ஆசாரியத்துவத்துக்கு ஏதுவாயிருக்கும்" (யாத் 40:12-15) என்று சொல்லுகிறார்.

ஆசாரியரை பரிசுத்தம்பண்ணுவது சம்பந்தமாக கர்த்தர் மோசேக்கு கொடுத்த கட்டளைகளின் விவரம் வருமாறு:

1. ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரவாசலில் வரச்செய்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவிப்பாயாக. (யாத் 40:12).

2. ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம் பண்ணி, அவனைப் பரிசுத்தப் படுத்துவாயாக. (யாத் 40:13).

3. அவன் குமாரரை வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்துவாயாக. (யாத் 40:14).

4. அவர்கள் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவர்களையும், அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடியே, அபிஷேகம்பண்ணுவாயாக(யாத் 40:15).

ஒவ்வொன்றும் அதனதன் காலத்தில் அழகாயிருக்கும். அதுபோலவே ஒவ்வொன்றையும் அதனதன் ஸ்தலத்திலே ஸ்தாபனம்பண்ணும்போது, அது மிகவும் அழகாயும் நேர்த்தியாயும் இருக்கும்.

## வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்படுகிறது
## யாத் 40:16-33

யாத் 40:16. கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்தான்.

யாத் 40:17. இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வசாஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்டது.

யாத் 40:18. மோசே கூடாரத்தை எடுப்பித்தான்; அவன் அதின் பாதங்களை வைத்து, அதின் பலகைகளை நிறுத்தி, அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின் தூண்களை நாட்டி,

யாத் 40:19. வாசஸ்தலத்தின்மேல் கூடாரத்தை விரித்து, அதின்மேல் கூடாரத்தின் மூடியை, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே போட்டான்.

யாத் 40:20. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, சாட்சிப்பிரமாணத்தை எடுத்து, அதைப் பெட்டியிலே வைத்து, பெட்டியில் தண்டுகளைப்பாய்ச்சி, பெட்டியின்மேல் கிருபாசன மூடியை வைத்து,

யாத் 40:21. பெட்டியை வாசஸ்தலத்துக்குள்ளே கொண்டுபோய், மறைவின் திரைச்சீலையைத் தொங்கவைத்து, சாட்சிப் பெட்டியை மறைத்துவைத்தான்.

யாத் 40:22. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, மேஜையை ஆசரிப்புக் கூடாரத்தில் வாசஸ்தலத்தின் வடபுறமாய்த் திரைக்குப் புறம்பாக வைத்து,

யாத் 40:23. அதின்மேல் கர்த்தருடைய சமுகத்தில் அப்பத்தை வரிசையாக அடுக்கி வைத்தான்.

யாத் 40:24. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, குத்துவிளக்கை ஆசரிப்புக் கூடாரத்தில் மேஜைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைத்து,

யாத் 40:25. கர்த்தருடைய சந்நிதியில் விளக்குகளை ஏற்றினான்.

யாத் 40:26. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, ஆசரிப்புக் கூடாரத்தில் திரைக்கு முன்பாகப் பொற்பீடத்தை வைத்து,

யாத் 40:27. அதின்மேல் சுகந்தவர்க்கத்தினால் தூபங்காட்டினான்.

யாத் 40:28. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, வாசஸ்தலத்தின் தொங்குதிரையைத் தூக்கிவைத்து,

யாத் 40:29. தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து, அதின்மேல் சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் செலுத்தினான்.

யாத் 40:30. அவன் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே தொட்டியை வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான்.

யாத் 40:31. அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள்.

யாத் 40:32. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிறபோதும், பலிபீடத்தண்டையில், சேருகிறபோதும், அவர்கள் கழுவிக்கொள்ளுவார்கள்.

யாத் 40:33. பின்பு, அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றிப் பிரகாரத்தை நிறுத்தி, பிராகாரத்தின் தொங்குதிரையைத் தொங்கவைத்தான்; இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான்.

கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே, இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் சகல வேலைகளையும் செய்திருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுமாறு கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய பாளயத்திற்கு நடுவே, கர்த்தருடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபனம்பண்ணப்படுகிறது.

இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்படுகிறது. கர்த்தர் தனக்கு கற்பித்தபடியெல்லாம் மோசே செய்கிறார் (யாத் 40:16,17).

இந்த வசனத்தில் முதலாம் மாதம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் ஒரு வருஷம் பூரணமாய் நிறைவு பெறவில்லை. கடந்த வருஷம் இதே மாதம் பதினான்காம் தேதியில் இஸ்ரவேல் புத்திரர் முதலாவது பஸ்காவை ஆசரித்தார்கள் (யாத் 12:2-6,18).

இன்னும் பதினைந்து நாட்கள் சென்ற பின்பு, அவர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டு, ஒரு வருஷமாகும். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டு, பதினொன்றரை மாதங்கள் கழிந்த பின்பு, ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபனம்பண்ணப்படுகிறது.

இரண்டாம் வருஷம் இந்த மாதத்தில் பதினான்காம் தேதியில் அவர்கள் இரண்டாம் பஸ்காவை ஆசரிக்கிறார்கள் (எண் 9:1-3).

இரண்டாம் மாதம் முதல் தேதியில் இஸ்ரவேல் புத்திரரின் தொகை எண்ணப் படுகிறது. (எண் 1:1-2). இரண்டாம் மாதம் இருபதாம் தேதி ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபனம் பண்ணி, ஐம்பது நாள் ஆயிற்று. இஸ்ரவேல் புத்திரர்கள் ஆசரிப்புக் கூடாரத்தை எடுத்துக் கொண்டு, கானானை நோக்கி, தங்களுடைய பிரயாணத்தைத் தொடருகிறார்கள் (எண் 10:11-13).

இந்த ஐம்பது நாட்கள் காலத்தில் லேவியராகமம் புஸ்தகமும், எண் 1:1-10:10 ஆகிய வசனங்களும் எழுதப்படுகிறது.

மோசே கூடாரத்தை எடுப்பிக்கிறார்; அவர் அதின் பாதங்களை வைத்து, அதின் பலகைகளை நிறுத்தி, அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின் தூண்களை நாட்டி, வாசஸ்தலத்தின்மேல் கூடாரத்தை விரித்து, அதின்மேல் கூடாரத்தின் மூடியை, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே போடுகிறார் (யாத் 40:18,19).

மோசே கூடாரத்தை எடுப்பித்த விதம் பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. மோசே கூடாரத்தின் பாதங்களை வைக்கிறார்.
2. அதின் பலகைகளை நிறுத்துகிறார்.
3. அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சுகிறார்.
4. அதின் தூண்களை நாட்டுகிறார்.
5. வாசஸ்தலத்தின்மேல் கூடாரத்தை விரிக்கிறார் (யாத் 40:19).
6. அதின்மேல் கூடாரத்தின் மூடியைப் போடுகிறார்.

பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, சாட்சிப்பிரமாணத்தை எடுத்து, அதைப் பெட்டியிலே வைத்து, பெட்டியில் தண்டுகளைப்பாய்ச்சி, பெட்டியின்மேல் கிருபாசன மூடியை வைத்து, பெட்டியை வாசஸ்தலத்துக்குள்ளே கொண்டுபோய், மறைவின் திரைச்சீலையைத் தொங்கவைத்து, சாட்சிப் பெட்டியை மறைத்துவைக்கிறார் (யாத் 40:20,21).

மோசே பரிசுத்த ஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணிய விதம்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சாட்சிப்பிரமாணத்தை எடுத்து, அதைப் பெட்டியிலே வைக்கிறார்.
2. பெட்டியில் தண்டுகளைப்பாய்ச்சுகிறார்.
3. பெட்டியின்மேல் கிருபாசன மூடியை வைக்கிறார்.
4. பெட்டியை வாசஸ்தலத்துக்குள்ளே கொண்டுபோகிறார் (யாத் 40:21).

5. மறைவின் திரைச்சீலையைத் தொங்கவைக்கிறார்.

6. சாட்சிப் பெட்டியை மறைத்துவைக்கிறார்.

பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, மேஜையை ஆசரிப்புக் கூடாரத்தில் வாசஸ்தலத்தின் வடபுறமாய்த் திரைக்குப் புறம்பாக வைத்து, அதின்மேல் கர்த்தருடைய சமுகத்தில் அப்பத்தை வரிசையாக அடுக்கி வைக்கிறார் (யாத் 40:22,23).

பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, குத்துவிளக்கை ஆசரிப்புக் கூடாரத்தில் மேஜைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் விளக்குகளை ஏற்றுகிறார் (யாத் 40:24,25).

பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, ஆசரிப்புக் கூடாரத்தில் திரைக்கு முன்பாகப் பொற்பீடத்தை வைத்து, அதின்மேல் சுகந்தவர்க்கத்தினால் தூபங்காட்டுகிறார் (யாத் 40:26,27).

மோசே பரிசுத்த ஸ்தலத்தில் மேஜை, குத்துவிளக்கு, பொற்பீடம் ஆகிய பரிசுத்த பணிமுட்டுக்களை வைக்கிறார். அதுபற்றி இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மேஜையை ஆசரிப்புக் கூடாரத்தில் வாசஸ்தலத்தின் வடபுறமாய்த் திரைக்குப் புறம்பாக வைக்கிறார்.

2. மேஜையின்மேல் கர்த்தருடைய சமுகத்தில் அப்பத்தை வரிசையாக அடுக்கி வைக்கிறார் (யாத் 40:23).

3. குத்துவிளக்கை ஆசரிப்புக்கூடாரத்தில் மேஜைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைக்கிறார் (யாத் 40:24).

4. கர்த்தருடைய சந்நிதியில் விளக்குகளை ஏற்றுகிறார் (யாத் 40:25).

5. ஆசரிப்புக்கூடாரத்தில் திரைக்கு முன்பாகப் பொற்பீடத்தை வைக்கிறார் (யாத் 40:26).

6. பொற்பீடத்தின்மேல் சுகந்தவர்க்கத்தினால் தூபங்காட்டுகிறார் (யாத் 40:27).

பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, வாசஸ்தலத்தின் தொங்கு திரையைத் தூக்கிவைத்து, தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து, அதின்மேல் சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் செலுத்துகிறார் (யாத் 40:28,29).

மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே தொட்டியை வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்க்கிறார். அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவுகிறார்கள் (யாத் 40:30,31). கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிறபோதும், பலிபீடத்தண்டையில், சேருகிறபோதும், அவர்கள் கழுவிக்கொள்ளுவார்கள் (யாத் 40:32).

ஆசரிப்புக்கூடாரத்தில் எதை மறைத்து வைக்கவேண்டுமோ அது மறைத்து வைக்கப்படுகிறது. கர்த்தர் தனக்கு கற்பித்தபடியே, மோசே உடன்படிக்கைப் பெட்டியை வாசஸ்தலத்திற்குள்ளே கொண்டுபோய், மறைவின் திரைச்சீலையை தொங்கவைத்து சாட்சிப்பெட்டியை மறைத்து வைக்கிறார் (யாத் 40:21).

கர்த்தர் தனக்கு கற்பித்தபடியே மோசே ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார். ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபனம்பண்ணும் வேலையை கர்த்தர் மோசேயினிடத்தில் ஒப்புவிக்கிறார். ஆரோனும் அவருடைய குமாரரும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யுமாறு நியமிக்கப்பட்டிருந்தாலும், மோசேயே முதலாவதாக கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறார். மோசே ஆசாரிய ஊழியத்தை ஆரம்பித்து வைத்து, அதன் பின்பு அவர் அந்த ஊழியத்தை, ஆசரியாரிடத்தில் பொறுப்பாய் ஒப்புவிக்கிறார்.

மோசே ஆசரிப்புக்கூடாரத்தில் திரைக்கு முன்பாக பொற்பீடத்தை வைத்த உடனே, அதன்மேல் சுகந்த வர்க்கத்தினால் தூபங்காட்டுகிறார். அதுபோலவே மோசே குத்துவிளக்கை ஆசரிப்புக்கூடாரத்தில் வைத்த உடனே, கர்த்தருடைய சந்நிதியில் விளக்குகளை ஏற்றுகிறார். மேலும் மோசே தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்த உடனே, அதின்மேல் சர்வாங்க தகனபலியையும், போஜனபலியையும் செலுத்துகிறார்.

மோசே ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே தொட்டியை வைத்தவுடன், கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்க்கிறார். அந்தத் தண்ணீரிலே மோசேயும் தன்னுடைய கைகளையும் கால்களையும் கழுவுகிறார். மோசே ஆசரிப்புக்கூடாரத்தில் ஸ்தாபனம்பண்ணுகிற பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம், கர்த்தருடைய ஆராதனையில் உடனே பயன்படுத்துகிறார். மோசே ஆசாரியரை பரிசுத்தம்பண்ணும்போது, தன்னையும் பரிசுத்தம்பண்ணிக்கொள்கிறார்.

மோசே வெளிப்பிரகாரத்தை ஸ்தாபனம்பண்ணிய விதம்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. வாசஸ்தலத்தின் தொங்குதிரையைத் தூக்கிவைக்கிறார்.

2. தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைக்கிறார் (யாத் 40:29).

3. தகனபலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் செலுத்துகிறார்.

4. மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே தொட்டியை வைக்கிறார் (யாத் 40:30).

5. கழுவுகிறதற்குத் தொட்டியிலே தண்ணீர் வார்க்கிறார்.

6. மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிறபோதும், பலிபீடத்தண்டையில், சேருகிறபோதும், தன் கைகளையும் கால்களையும் கழுவிக் கொள்கிறார் (யாத் 40:31-32).

7. வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றிப் பிராகாரத்தை நிறுத்துகிறார் (யாத் 40:33).

8. பிராகாரத்தின் தொங்குதிரையைத் தொங்கவைக்கிறார்.

மோசேயும் ஆரோனும் அவர் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவுகிறார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே கழுவிக்கொள்கிறார்கள். இதைச் சிலர் ஞானஸ்நானத்திற்கு அடையாளமாகக் கூறுகிறார்கள். ஆனால் இங்கு இவர்களை யாரும் கழுவவில்லை. இவர்களே தங்களைக் கழுவிக்கொள்கிறார்கள்.

"இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான்" (யாத் 40:33) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபனம் பண்ணும் எல்லா வேலைகளையும் மோசே மேற்பார்வை செய்தகிறார். ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபனம் பண்ணி முடியும் வரையிலும் மோசே ஆசாரிய ஊழியம் செய்கிறார்.

தேவன் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி மோசேக்குக் கட்டளை கொடுத்தார். யாத் 40:18-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பவை மோசேயின் நடபடிகளாகும். ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியையும் எவ்வாறு செய்ய வேண்டுமென்று மோசே மற்றவர்களுக்குக் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய சந்நிதியில் மோசே முதலாவதாக விளக்குகளை ஏற்றுகிறார் (யாத் 40:25) பொற்பீடத்தின்மேல் மோசே முதலாவதாகச் சுகந்த வர்க்கத்தினால் தூபம் காட்டுகிறார். (யாத் 40:26-27) சர்வாங்க தகனபலியையும், போஜனபலியையும் செலுத்துகிறார் (யாத் 40:29) தொட்டியிலே தன் கைகளையும், கால்களையும் கழுவுகிறார் (யாத் 40:31) ஆசரிப்புக்கூடாரத்தையும், அதின் சகல பணிமுட்டுகளையும் மோசே அபிஷேகம் பண்ணி பரிசுத்தப்படுத்துகிறார். (யாத் 40:9-11)

மோசே பிரதான ஆசாரியனையும், மற்ற ஆசாரியரையும் ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப்படுத்துகிறார் (யாத் 40:12-15). கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபனம்பண்ணி, எல்லாப் பணிமுட்டுகளையும் அதற்குரிய இடங்களில் வைக்கிறார் (யாத் 40:20-33).

## கர்த்தருடைய மகிமை
## யாத் 40:34-38

**யாத் 40:34. அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.**

**யாத் 40:35. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது.**

**யாத் 40:36. வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள்.**

**யாத் 40:37. மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள்.**

**யாத் 40:38. இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது.**

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். கர்த்தர் இந்தப் பூமியை சிருஷ்டித்தபோது, இந்தப் பூமியை மனுப்புத்திரர் வாசம்பண்ணுகிற ஸ்தலமாகவே சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் மனுஷரை சிருஷ்டித்து, அவர்களை இந்தப் பூமியில் குடியமர்த்தினார். கர்த்தர் எதையும் யாருக்கும் பிரயோஜனமில்லாமல் செய்கிறவரல்ல. இந்தப் பூமியானது மனுஷருடைய வாசஸ்தலமாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

மோசே ஆசரிப்புக்கூடாரத்தை செய்து முடித்திருக்கிறார். இது கர்த்தருடைய வாசஸ்தலம். கர்த்தர் மனுஷர் மத்தியிலே வாசம்பண்ணவேண்டும் என்பதற்காகவே ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மோசே ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபனம்பண்ணியவுடன், கர்த்தர் அதிலே வந்து வாசம்பண்ணுகிறார்.

மனுஷருடைய ஆத்துமாவில் தேவனுடைய சிங்காசனமும், அவருடைய பலிபீடமும் இருக்கும்போது, அந்த ஆத்துமா ஜீவனுள்ள ஆலயமாகயிருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார்.

மோசே ஆசரிப்புக்கூடாரத்து வேலையை செய்து முடித்தபோது, ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடுகிறது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று (யாத் 40:34). மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்புகிறது (யாத் 40:35).

மேகம் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கிறது (யாத் 40:38).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் பாளயத்தின் கடைசியில் தங்கியிருந்தாலும், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பத்தையும் அக்கினி ஸ்தம்பத்தையும், தங்களுடைய கண்களால் பிரத்தியட்சமாகப் பார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் இதற்கு முன்பு கர்த்தர் தங்கள் மத்தியிலே தங்கியிருக்கிறாரா, இல்லையா என்று சந்தேகப்பட்டார்கள். "கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா, இல்லையா" என்று அவிசுவாசத்தோடு கேள்வி கேட்டார்கள். இனிமேல் அவர்கள் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கிறது.

கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடியிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வாசம்பண்ணினாலும், அவர் மேகத்தின்மேல் தங்கியிருக்கிறார்.

மோசே ஆசரிப்புக்கூடாரத்தைப் போடும்போது, அதற்கு தகசுதோலால் மூடிகளைப்போடுகிறார். இது ஆசரிப்புக்கூடாரத்திற்கு பாதுகாப்பாயிருக்கும். மழையும் வெயிலும், புயல்காற்றும் ஆசரிப்புக்கூடாரத்தை சேதப்படுத்தாது.

இப்போது கர்த்தர் தம்முடைய வாசஸ்தலமாகிய கூடாரத்திற்கு ஒரு மூடியைப்போடுகிறார். மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடுகிறது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்புகிறது. ஆசரிப்புக்கூடாரத்தை மூடியிருக்கிற மேகமே அதற்கு மெய்யான பாதுகாப்பைக் கொடுக்கிறது. தகசுத்தோல் மூடியினால் ஆசரிப்புக்கூடாரம் பாதுகாக்கப்படுவதைவிட, மேகத்தினால் பாதுகாக்கப்படுவது ஆசரிப்புக்கூடாரத்திற்கு மெய்யான பாதுகாப்பாயிருக்கும்.

கர்த்தருடைய கூடாரத்தில் தங்கியிருக்கிறவர்கள் பாதுகாப்பாயிருப்பார்கள். அவர்களுக்கு தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும்.

"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன். தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்" (சங் 27:4,5).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிற மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் அவர்களை வழிநடத்துகிறது.

வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள் (யாத் 40:36,37).

மேகம் வாசஸ்தலத்தின்மேல் தொடர்ந்து தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணமாட்டார்கள். அவர்கள் தங்கள் கூடாரங்களில் தங்கி ஓய்வெடுப்பார்கள். தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாகவே, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. அக்கினியும் வெளிச்சமும் கர்த்தருடைய மகிமைக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் ஒளியாகயிருக்கிறார். கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருக்கிறார் (யாத் 40:35).

ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடுகிறது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. தேவனுடைய பிரசன்னத்திற்கு மேகம் பிரத்தியட்சமான அடையாளமாக இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லா வேலைகளும் முடிந்த பின்பு, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. அதினால் மோசே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கக் கூடாமல் இருக்கிறார். (யாத் 40:35)

சாலொமோன் தேவாலயத்தைக் கட்டி முடித்தபோது, இதுபோன்று, தேவனுடைய மகிமையைத் தோன்றிற்று. (1இராஜா 8:10-11). இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கும் நடுவில் 650 வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் அனுபவித்திருக்கிறார்கள்.

வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுகிறார்கள். இஸ்ரவேலர்கள் பிரயாணம் பண்ண வேண்டுமா, பிரயாணம் பண்ணாமல் பாளயமிறங்கி தங்கியிருக்க வேண்டுமா என்பதை மேகமே அவர்களுக்கு வழிகாட்டிற்று. மேகம் மேலே எழும்பினால் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள் (யாத் 40:36-38; யாத் 13:21-22).